உ

கவிச்சக்கரவர்த்தி

கம்பர்

இயற்றிய

இராமாயணம்

யுத்த காண்டம்

(முதற் பாகம்)

அண்ணமலைப் பல்கலைக் கழகம்

1968

7 - 00

முதற் பதிப்பு, 1968

அச்சிட்டோர்: கமர்ஷியல் பிரிண்டிங் அண்டு பப்ளிஷிங் ஹவுஸ்,
46, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

உள்ளுறை

பதிப்புரை ... v—vi

நூல் :

கடவுள் வாழ்த்து ... ... 1—5

1. கடல்காண் படலம் ... ... 5—17
2. இராவணன் மந்திரப் படலம் ... ... 18—111
3. இரணியன் வதைப் படலம் ... ... 112—309
4. வீடணன் அடைக்கலப் படலம் ... ... 310—485
5. இலங்கை கேள்விப் படலம் ... ... 486—561
6. வருணனை வழிவேண்டு படலம் ... ... 562—652
7. சேதுபந்தனப் படலம் ... ... 653—706
8. ஒற்றுக்கேள்விப் படலம் ... ... 707—762
9. இலங்கைகாண் படலம் ... ... 763—819

பிற்சேர்க்கை :

ஒப்பு நோக்கப்பெற்ற சுவடிகளும் அச்சுப் பிரதிகளும், அவற்றின் குறியீடுகளும் ... ... i—iii

பாட வேறுபாடுகள் ... ... 1—364

பாட்டு முதற் குறிப்பகராதி ... ... 365—377

பிழையும் திருத்தமும் 378

கம்பராமாயணப் பதிப்பாசிரியர் குழு

———:o:———

தலைவர் :

பேராசிரியர், வித்துவான், திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்,
M.A., B.L.

உறுப்பினர்கள் :

பேராசிரியர், திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள்

திருவாளர், பி. ஸ்ரீ. ஆச்சாரியார் அவர்கள்

„ நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள்

„ **மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள்**

„ பு. ரா. புருஷோத்தம நாயுடு அவர்கள்

பதிப்புரை

குரைகடலை யடலம்பால் மறுகவெய்து
குலைகட்டி மறுகரையை யதனாலேறி
எரிநெடுவே லரக்கரொடும் இலங்கைவேந்தன்
இன்னுயிர்கொண் டவன்தம்பிக் கரசுமீந்து
திருமகளோ டினிதமர்ந்த செல்வன்றன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
அரசமர்ந்தா னடிசூடும் அரசையல்லால்
அரசாக வெண்ணேன்மற் றரசுதானே.

(பெருமாள் திருமொழி 10. 7)

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஏட்டுச் சுவடிகள் பலவற்றை ஒப்புநோக்கி ஆராய்ந்து வெளியிட்டு வரும் கம்பராமாயணப் பதிப்புப் பணி ஆறாவது காண்டமாகிய யுத்த காண்டத்துடன் இவ்வாண்டு நிறைவுபெறும் நிலையிலுளது. கம்பர் இயற்றிய இராமாவதாரத்தின் ஆறும் காண்டமாகிய யுத்த காண்டம் ஆறு பகுதிகளாக வெளிவர விருக்கின்றது. அவற்றுள் முதற் பகுதி இதுவாகும். இதன்கண் கடல்காண் படலம் முதல் இலங்கைகாண் படலம் வரை ஒன்பது படலங்கள் உள்ளன. கடல்காண் படலம், மந்திரப் படலம், ஒற்றுக் கேள்விப் படலம் ஆகியவற்றுக்குத் திரு. தி. கி. இராமாநுஜையங்கார் அவர்களும், இரணியன் வதைப் படலம், இலங்கைகாண் படலம் என்பவற்றுக்கு வித்துவான் திரு. க. வெள்ளைவாரணன் அவர்களும், வீடணன் அடைக்கலப் படலம், இலங்கை கேள்விப் படலம், வருணனை வழிவேண்டு படலம் ஆகியவற்றுக்கு வித்துவான் திரு. செ. வேங்கடராமச் செட்டியார் அவர்களும், சேதுபந்தனப் படலத்திற்கு வித்துவான் உ. பழநி, M.O.L., அவர்களும் உரை வரைந்துள்ளனர்.

தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் தலைமையில் சிரோமணி, வித்துவான் திரு. P. S. இராமாநுஜாச்சாரியார், திரு. ந. வீ. ஜெயராமன், M. A., புலவர் திரு. K. இராமச்சந்திரன், புலவர் திரு. S. கணபதிராமன் ஆகியோர் முப்பத்தேழு சுவடிகளை ஒப்புநோக்கித் தொகுத்த பாடவேறுபாடுகள் இதன்கண் பிற்சேர்க்கையாகத் தரப் பெற்றுள்ளன.

இப்பதிப்புக்கு வேண்டிய ஏட்டுச் சுவடிகளைக் கொடுத்துதவிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தார்க்கும், தஞ்சைச் சரசுவதி மகால் நூல்

நிலையத்தார்க்கும், சென்னை அரசாங்கக் கையெழுத்து நூல் நிலையத்தார்க்கும், திருப்பதி ஸ்ரீ வேங்கடேசுவரர் கீழ்த்திசைக் கல்லூரி நூல் நிலையத்தார்க்கும். ஈரோடு தமிழாசிரியர் திரு. தெய்வ சிகாமணிக் கவுண்டர் அவர்களுக்கும், தெங்கம்புதூர் சாத்தான் குட்டிப் பிள்ளை அவர்களுக்கும் பல்கலைக் கழகச் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தகைய தமிழ்த் தொண்டுகள் சிறப்பாக நிகழ்தற்கு வேண்டிய பொருளுதவியினைப் புரிந்து வரும் இந்தியப் பல்கலைக் கழக மானியக் குழுவினர்க்கு நமது நன்றியும் பாராட்டும் என்றும் உரியன வாகும்.

இங்ஙனம் சிறந்த தமிழ் நூல்கள் பல திருந்திய பதிப்பாக வெளி வரும் வண்ணம் இந்தியப் பேரரசும் தமிழக அரசும் வேண்டும் உதவி களைப் புரிந்து ஆதரித்து வரும் என நம்புகின்றேன்.

இதனை வனப்புற அச்சிட்டுதவிய சென்னைக் கமர்ஷியல் அச்சகத் தாரது பணி பாராட்டற்குரியதாகும்.

அண்ணாமலைநகர்
31—8—68

கோ. சுப்பிரமணியம்,
தலைவர், கம்பராமாயணப் பதிப்பாசிரியர் குழு
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

ஆருவது
யுத்த காண்டம்

கடவுள் வாழ்த்து

6186. ஒன்றே யென்னி னொன்றேயாம்
பலவென் றுரைக்கிற் பலவேயா
மன்றே யென்னி னன்றேயா
மாமே யென்னி னாமேயா
மின்றே யென்னி னின்றேயா
முளதென் றுரைக்கி லுளதேயா
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கிங் கென்னே பிழைப்பம்மா.

ஒன்றே என்னின் ஒன்றேயாம்,
பல என்று உரைக்கின் பலவேயாம்,
அன்றே என்னின் அன்றேயாம்,
ஆமே என்னின் ஆமேயாம்,
இன்றே என்னின் இன்றேயாம்,
உளது என்று உரைக்கில் உளதேயாம்,
நன்றே நம்பி குடிவாழ்க்கை!
நமக்கு இங்கு என்னே! பிழைப்பு? அம்மா!

பொ :—ஒன்றென்று கூறின் ஒன்ருகும்; பல என்று உரைக்கின் பலவாகும்; இன்னதன்மையுடையதன்று எனின் அவ்வாருகும்; இன்னதன்மையுடையது என்று கூறின் அத்தன்மையுடையதாகும்; இலது என்று உரைக்கின் இலதாகும்; உளதென்று கூறின் உளதாகும்; இவ்வியல்புடைய இறைநிலை பெரிது; ஆதலால் (சிற்றறிவுடைய) நாம் இவ்வுலகில் அதனை யறிந்து உய்தி பெறுமாறு யாது?

கு :—நம்பி - குணநிறைவுடையான்; இறைவன். நம்பி குடி வாழ்க்கை நன்று என மாறுக. நம்பி குடிவாழ்க்கை என்பது இறைவன்நிலை என்று பொருள்பட நின்றது. நன்று - பெரிது.

'நன்று பெரிதாகும்' (சொல் 337) என்பது தொல்காப்பியம். நன்று என்றது அறிதற்கரிது என்றவாறு. பிழைப்பு - உய்யும்நெறி. அம்மா வியப்பிடைச் சொல். ஒன்று என்றும், பல என்றும், அன்று என்றும், ஆம் என்றும், இன்று என்றும், உளது என்றும் பல படியாற் பேச நின்ற இறைநிலை நம் சிற்றறிவால் அறிதற்கரியது ஆதலால் நாம் அவ்விறைவன்ருள் வணங்கி உய்திபெறுதற்கு அவ் விறையருளே சாதனம் என்றவாறு. உலகத் தோற்ற வொடுக்கங் கட்கு மூலமான பரம்பொருள் ஒன்றே யாதலின் 'ஒன்றே யென்னின் ஒன்றேயாம்' என்றார். அவ்வொரு பொருளே 'திடவிசும்பு எரி வளி நீர் நிலம் இவைமிசைப்—படர்பொருள் முழுவதுமாய் அவை யவைதொறும்—உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துள்ள தாதலின், 'பலவென் றுரைக்கிற் பலவேயாம்' என்றார். 'ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற நன்றெழில் நாரணன்' (திருவாய்மொழி. 1-3-7) என்னும் அருளிச்செயலும் இங்கு நோக்கத்தகும். காணப்படாத பரம்பொருள் காணப்படும் பொருள்களின் வேறுபட்டது என்று (சூரியனன்று சந்திரனன்று என்று) சுட்டி அறிவிக்க வேண்டியிருத்தலின், 'அன்றே யென்னி னன்றே யாம்' என்றார். இனி அப் பரம்பொருளின் இயல்பைக் காணப்படும் பொருள்களில் ஒரு சிறிதமைந்ததன்மை கொண்டு (அதாவது சூரியனிடம் அமைந்த ஒளிபோல, மறையாத பல்கோடி சூரியர்களின் பேரொளியுடையது பரம்பொருள் என்று) சுட்டியறி விக்க வேண்டியதாயிருத்தலின், 'ஆமே என்னின் ஆமே யாம்' என்றார். பரம்பொருள் நம்கட்குப் புலனாகாமையின் இன்றே என்னின் இன்றேயாம் என்றார்; ஆராய்ச்சியானும் நூலறிவானும் அப் பரம்பொருளுண்மை தெளிதலின் 'உளதென்றுரைக்கில் உளதேயாம்' என்றார். இங்கே, 'உளனெனிலுளன் அவனுருவ மிவ்வுருவுகள், உளனலனெனில் அவன், அருவமிவ்வருவுகள்— உளனென இலனென இவை குணமுடைமையின்—உளன் இரு தகையோடு' (1-1-9) என்னும் திருவாய்மொழியும் நோக்கத்தகும். 'நன்றே நம்பி குடிவாழ்க்கை' என்பது, 'உணர்ந்துணர்ந்துணரி லும் இறைநிலை யுணர்வரிது' (திருவாய்மொழி 1-3-6) என்பதன் பொருளமைதியுடையதாகும்.

இக் கடவுள் வாழ்த்துச் செய்யுளின் முன், 23, 26, 43, 44- என்னும் சுவடிகளில்,

6186 (a) ஒருபூ விளையுந் திருவுந்தி
யுடன்கார் விளையுந் திருமேனி
இருபூ விளையுந் திருப்பவள
மென்றுந் திருமார் மருவிளையும்

வருபூ மகளு மண்மகளும்
வைகும் போக மவைமடங்கா
அருள்பூ விளையுந் திருநயன
மரிதாள் விளையு மடியவர்க்கே.

எனவும்

(b) நீலனளன் குமுதாக்கன் குமுதன் சாம்பன்
நீள்கவயன் கவயாக்கன் நெறிகூர் வென்றி
யாலுயருஞ் சுசேடணன்சீர் வசந்த னஞ்சா
வடற்றுமிந்தன் மைந்தன்கே சரியா நாமன்
சாலமிகும் பனசனுட னிடபன் ரேலாச்
சதவலியத் ததிமுகன்போர்ச் சாம்பன் சங்கன்
ஏலுமிவர் மூவாறு சேனை நாதர்
இராகவற்குப் போருதவிக் கிசைந்த பேரே.

எனவும்,

31, 42, 46-என்னும் பிரதிகளில்,

(c) மகிழ்மா றனைவழுத்து வாயென்றுனக்கு
நெகிழ்மா றனைநினைக்கு நேயம்—முகிழ்மா
முலைக்கமலை யேற்ற மொழிகா வியத்தால்
நிலைக்கமலை வேகவரு ணீ.

எனவும்,

31, 46-ஆம் பிரதிகளில்,

(d) கம்பர் வீட்டு ளொருசிறுபுன்
கட்டுத் தறியும் கவிசெயுமென்
றிம்பர் நாட்டு மன்பதைகூ
றிருஞ்சொல் புலவீர் கேட்டுவந்தாம்
சம்பு நீட்டு சடைத்தலைக்குத்
தகுவர் தலைக்குத் திருப்பாத
அம்பு நாட்டு மால்சரித
மன்னோர் பாட லதுவியப்பே.

எனவும் 4 மிகைப்பாடல்கள் உள்ளன.

ஸ்ரீ

1. கடல்காண் படலம்

இது, யுத்த காண்டத்தின் முதற்படலமாகும். சீதையை மீட்டற்கு இலங்கை நோக்கிச் சென்ற இராமன், தென்றிசைக் கடலைக் கண்டு, அதன் கரையில் எழுபது வெள்ளம் வானரப் படையொடும் தங்கியமை பேசுவது. இதனுள் அமைந்த பாடல் 11. சந்தம் 1. புகுந்த மிகைக்கவி 2.

வடதிசையில் மேருவும் நிலமும் கடலும் மேலெழத் தென் திசையில் மலைகளும் நிலமும் தாழப் பரவியெழுந்த எழுபது வெள்ளம் கவிப்படை தென் கடற்கரையிற் சென்று தங்கியது. சீதை பிரிவால் இரவில் துயில்நீங்கிய கண்களையுடைய இராமன், வானரப்படை தன்னைச் சூழ்ந்து நிற்கக் கடலைக் கண்டான். அந் நிலையில் காற்றினாற் கடலலை மடங்கி விரிந்து பரவிய தோற்றம், இராமனைக் கண்ட தென்றல், நெடுங்காலம் தன் பள்ளியிடமாகிய கடலினின்று நீங்கித் திரிந்த மாயன் வந்தான்; இனி உறங்குவான் என்று படுக்கையினை உதறி விரிப்பது போன்றிருந்தது. தென்றல் இராமன் மீது குறுந்திவலைகளைத் தூவியும், புன்னையின் நறுமணம் வாய்ந்த சுண்ணத்தினைப் பூசியும் வருத்தியது. கொடிப் பவளத்தை யும் முத்துக்களையும் கண்ட இராமன், சீதையின் வாயையும் பற்களை யும் நினைந்து வருந்துவானாயினன். அக்கடலின் தோற்றம், தன் மகளாகிய சீதை அரக்கர் சிறையில் தனித்துயருழத்தல் தகவோ? அத்துயர் நீக்கி மீட்டு அவளைக் காத்தருளவேண்டும் என்று மருக னாகிய இராமனடிகளில் கண்ணீர் பெருக விழுந்து முறையிடுவது போலவும், சீதையைப் பிரிந்தமையால் வெதும்பும் இராமன் திருமேனியில் அவ்வெப்பம் தீருமாறு அள்ளிப் பூசும்படி திரையாகிய கையால் நுரையாகிய கலவைச் சாந்தினை அரைப்பது போலவும், சீதையை மீட்டுத் தேவர் துயர் துடைத்தற்கு வில்லும் தூணியும் தாங்கி நீங்காத சினத்துடன் அரக்கர்மேற் செல்லும் இராமனைக் கண்டு மகிழ்ந்து வரவேற்பது போலவும் இருந்தது. இத்தன்மை யுடையதான பெரிய கடலினையடைந்து அதனினும் ஏழுமடங்கு தன் மானமும் துயரமும் காதலும் மிக, மேல்விளைவு எவ்வாறிருக்குமோ? என்ற நினைவுடன் இராமன் தங்கினான் என்பது இப்படலத்தின் நுவல் பொருளாகும்.

வான்மீகத்துள் இராமன் தென்றிசைக் கடலைக் கண்ட செய்தி யுத்தகாண்டத்தின் 4-ஆம் ஸர்க்கத்திினிடையே பேசப்படுகிறது.

முதல் மூன்று ஸர்க்கங்களில், இராமன் சீதை பிரிவால் வருந்தி இலக்குவனிடம் இரங்கியுரைத்தமையும், இலக்குவன் தேற்றத் தெளிந்து சுக்கிரீவன் முதலியவர்களுடன் ஆலோசித்தமையும், இலங்கையின் அரணமைப்பு படைவலி அரக்கர் வீரம் முதலிய வற்றை அனுமனிடம் வினவியறிந்தபின் வானரப் படைகளைத் தக்க பாதுகாப்புடன் இலங்கை நோக்கிச் செலுத்தியமையும் பேசப்பட்டன. சுக்கிரீவன், பிராட்டியிருக்குமிடம் தெரிந்த பின்னும் தாழ்த்தலாகாது என்று இராமனிடம் கூறிப் படைகளை விரைந்து தென்றிசை நோக்கிச் செல்லவிட்டமையும், வானர வீரர், இலங்கையின் அமைப்பு, காவல் மிகுதி, படைவளம் முதலியவற்றை அனுமன் கூற அறிந்து மகிழ்ந்து சென்று பன்னிரண்டு நாட்களில் தென்றிசைக் கடலைக் கண்ணுற்றமையும் சுந்தரகாண்டத்தின் இறுதியில் கம்பரால் பேசப்பட்டன. ஆதலால், வானரப்படை தென் கடற் கரையிற் றங்கியமையும் அக்கடலின் தோற்றமும் அதைக்கண்ட இராமன் நிலையும் மட்டும் இக்கடல்காண் படலத்துப் பேசப்பட்டன.

1. கடல்காண் படலம்

வானரப்படை தென்கடற்கரையிற் சென்று தங்குதல்

6187. ஊழி திரியுங் காலத்து
முலையா நிலைய வுயர்கிரியும்
வாழி வற்ரு மறிகடலு
மண்ணும் வடபால் வான்றேயப்
பாழித் தெற்குள் ளனகிரியு
நிலனுந் தாழப் பரந்தெழுந்த
வேழு பத்தின் பெருவெள்ள
மகர வெள்ளத் திறுத்ததால்.

ஊழி திரியும் காலத்தும் உலையாநிலைய உயர்கிரியும் வாழி வற்ரு மறிகடலும் மண்ணும் வடபால் வான்தோயப் பாழித் தெற்குள்ளன கிரியும் நிலனும் தாழப் பரந்து எழுந்த ஏழு பத்தின் பெருவெள்ளம் மகரவெள்ளத்து இறுத்ததால்.

பொ :—வடதிசையில் உலக முடிவுகாலத்தினும் குலையாத நிலையினையுடைய உயர்ந்த மேருமலையும், வற்ருத - அலை மடங்கி வருகின்ற கடலும் நிலமும் வானளாவ மேல் எழுமாறும், பெரிய தென் திசையிலுள்ள மலைகளும் நிலமும் தாழுமாறும், பரவியெழுந்த எழுபது வெள்ளம் என்னும் பேரெண் அளவினதாகிய குரங்குப் படை மீன்களையுடைய மிக்க நீராகிய தென்றிசைக் கடற் கரையில் தங்கியது.

கு :—ஆக்கந்தரும் நிலைநீங்கி அழிவுதலைத் தரும் ஊழியாதலின் ஊழிதிரியும் காலம் என்ருர். ஊழி - நெடுங்காலம். ஊழிதிரியும் காலத்தும் உலையா நிலைய உயர்கிரி என்றது மேருமலையினை. வாழி - உரையசை. பாழி - பெருமை. பெருந்திசையாதலின் பாழித்தெற்கு என்ருர். ஏழுபத்து - எழுபது. இன் சாரியை. வெள்ளம் - ஒரு பேரெண் ; சமுத்திரம் என்னும் பேரெண் எட்டுக் கொண்டது வெள்ளமாகும். வெள்ளம் என்பது ஆகுபெயராய்ப் படையை உணர்த்தியது. மகரவெள்ளம் என்றது இங்கே தென்கடற்கரையை உணர்த்தியது. இறுத்தல் - தங்குதல். (1)

இராமன் கடலைக் காணுதல்

6188. பொங்கிப் பரந்த பெருஞ்சேனை
புறத்து மகத்தும் புடைசுற்றச்
சங்கிற் பொலிந்த கையாளைப்
பிரிந்த பின்பு தமக்கினமாங்
கொங்கிற் பொலிந்த தாமரையின்
குழுவுந் துயில்வுற் றிதழ்குவிக்குங்
கங்குற் பொழுதுந் துயிலாத
கண்ணன் கடலைக் கண்ணுற்றான்.

பொங்கிப் பரந்த பெருஞ்சேனை
புறத்தும் அகத்தும் புடைசுற்றச்
சங்கின் பொலிந்த கையாளைப்
பிரிந்தபின்பு தமக்கு இனமாம்
கொங்கின் பொலிந்த தாமரையின்
குழுவும் துயில்வுற்று, இதழ் குவிக்கும்
கங்குல் பொழுதும் துயிலாத
கண்ணன் கடலைக் கண்ணுற்றான்.

பொ :—சங்க வளைகளால் விளங்கிய கைகளையுடைய சீதா பிராட்டியைப் பிரிந்தபின், தங்களுக்கு இனமாகிய தேன்மிக்க தொகுதியான தாமரைப் பூக்களும் உறங்கி இதழ் குவிக்கும் இரவுப் பொழுதும் உறங்காத கண்களையுடைய இராமன், மிக்குப்பரவிய பெரிய குரங்குப் படை புறத்தும் அகத்தும் பக்கத்தே சூழ்ந்து நிற்கத் தென்றிசைக் கடலைக் கண்டான்.

கு :—பொங்குதல் - மிகுதல். சேனை புறத்தும் அகத்தும் புடை சுற்ற என்றது வானரவீரர் இராமனுக்குப் பாதுகாப்பாக அவன் புறத்தே சூழ்ந்து நின்றதன்றித் தத்தம் உள்ளத்திலும் அவற்காவன சூழ்ந்து நிற்க என்றவாறு. சங்கு - சங்கினாலான வளை; 'சங்க வளைக்குயிலை' (1341) என்றார் முன்னும். 'சங்குதங்கு முன்கை நங்கை (திருச்சந்தவிருத்தம். 57) என்னும் அருளிச் செயலும் இங்கு நோக்கத்தகும். கண்களுக்கு உவமையாதலின் தமக்கினமாந்தாமரை என்றார். சீதை பிரிவால் எழுந்த காமநோயால் இராமன் இரவினும் உறங்காதவனாயினன். கங்குல் - இரவு. (2)

அலைப்பரப்பின் தோற்றம்

6189. சேய காலம் பிரிந்தகலத்
திரிந்தான் மீண்டுஞ் சேக்கையின்பான்
மாயன் வந்தா னினிவளர்வா
னென்று கருதி வருந்தென்ற
றூய மலர்போ னுரைத்தொகையு
முத்துஞ் சிந்திப் புடைசுருட்டிப்
பாய லுதறிப் படுப்பதே
யொத்த திரையின் பரப்பம்மா.

சேய காலம் பிரிந்து அகலத்
திரிந்தான், மீண்டும் சேக்கையின்பால்
மாயன் வந்தான், இனி வளர்வான்
என்றுகருதி, வரும் தென்றல்,
தூய மலர்போல் நுரைத் தொகையும்
முத்தும் சிந்திப் புடைசுருட்டிப்
பாயல் உதறிப் படுப்பதே
ஒத்த திரையின் பரப்பு; அம்மா!

பொ:—கடலலைகளின் பரப்புக்கள், 'பாயலினின்று நீங்கி நெடுங் காலம் நீளத்திரிந்த மாயன், மீண்டும் படுக்கையின்பால் வந்தான்; இனிக் கண் உறங்குவான்' என்று நினைந்து உலவும் தென்றற் காற்றானது, தூய மலரையொத்த வெள்ளிய நுரைத் தொகுதியினையும் முத்துக்களையும் சிந்திப் படுக்கையைச் சுருட்டிப் பக்கத்தே உதறி விரிப்பதை ஒத்தன.

கு:—மாயன் பிரிந்து சேயகாலம் அகலத் திரிந்தான், மீண்டும் சேக்கையின்பால் வந்தான் என இயைக்க. திரையின் பரப்பு, 'மாயன் வந்தான்; இனி வளர்வான்' என்று, தென்றல் நுரைத் தொகையும் முத்தும் சிந்திப் பாயல் உதறிப்படுப்பதே ஒத்த என முடிவுறும். சேக்கை பாயல் என்பவை படுக்கை என்னும் பொருளுடையன. மாயன் - திருமால்; இங்கே திருமாலின் அமிசமான இராமனைக் குறித்தது. வளர்தல் - கண்வளர்தல்; உறங்குதல். புடை - பக்கம். உதறிப்படுத்தல் - உதறி விரித்தல். அம்மா, வியப்புணர நின்றது. காற்றால் கிளர்ந்தெழுந்து மடங்கிப் பரவிய அலைப் பரப்பு, இராமன் தென்கடலருகுவரக் கண்டதென்றல், நெடுங்காலம் பிரிந்து நீளத்திரிந்த மாயன் மீண்டும் தன் படுக்கையிடத்து வந்தான் இனிக் கண்வளர்வானென்று படுக்கையை உதறி விரிப்பதுபோல விளங்கியது என்றவாறு. (3)

தென்றலால் இராமன் வருந்தல்

6190. வழிக்குங் கண்ணீ ரழுவத்து
வஞ்சி யழுங்க வந்தடர்ந்த
பழிக்குங் காமன் பூங்கணைக்கும்
பற்று நின்றான் பொற்றோளைச்
சுழிக்குங் கொல்ல னொல்லுலையிற்
றுள்ளும் பொறியிற் சுடுமன்னே
கொழிக்குங் கடலி னெடுந்திரைவாய்த்
தென்ற றூற்றுங் குறுந்திவலை.

வழிக்கும் கண்ணீர் அழுவத்து
வஞ்சி அழுங்க வந்து அடர்ந்த
பழிக்கும், காமன் பூங்கணைக்கும்
பற்றுநின்றான் பொன் தோளைச்
சுழிக்கும் கொல்லன் ஒல் உலையில்
துள்ளும் பொறியின் சுடும் அன்னே!
கொழிக்கும் கடலின் நெடுந்திரைவாய்த்
தென்றல் தூற்றும் குறுந்திவலை.

பொ :—வடிக்கும் கண்ணீர்க் கடலிடை வஞ்சிபோல்வாளான சீதை வருந்துதலால் வந்து பொருந்திய பழிக்கும் மன்மதனுடைய பூவாளிக்கும் இலக்காகி நின்ற இராமனுடைய அழகிய தோள்களை, ஆரவாரிக்கின்ற கடலின் பெரிய அலைகளினின்று கொண்டு, தென்றல் தூற்றும் நுண்ணிய நீர்த்துளிகள், சுழன்று எரிகிற கொல்லனுடைய ஊதுகின்ற உலையினின்றெழும் நெருப்புப் பொறி போலச் சுடும்.

கு :—தென்றல் தூற்றுங் குறுந்திவலை கொல்லன் ஊதுலையிற் பொறியின் இராமன் தோளைச் சுடும் என்க. வழித்தல் - வடித்தல். அழுவம் - கடல் ; மிகுதியும் ஆம். அழுங்குதல் - வருந்துதல். பற்று- இலக்கு. சுழித்தல் - சுழன்றெரிதல். கொழித்தல் - ஆர்த்தல். வஞ்சியழுங்க வந்தடுத்த பழியாவது மனையாளைப் பாதுகாக்கமாட் டாதவனாயினன் என்று உலகம் கூறும் நிந்தையாகும். (4)

6191. நென்னற் கண்ட திருமேனி
யின்று பிறிதாய் நிலைதளர்வான்
றன்னைக் கண்டு மிரங்காது
தனியே கதறுந் தடங்கடல்வாய்ப்

பின்னற் றிரைமேற் றவழ்கின்ற
பிள்ளைத் தென்றல் கள்ளுயிர்க்கும்
புன்னைக் குறும்பூ நறுஞ்சுண்ணம்
பூசா தொருகாற் போகாதே.

நென்னல் கண்ட திருமேனி
இன்று பிறிதுஆய், நிலைதளர்வான்
தன்னைக் கண்டும் இரங்காது
தனியே கதறும் தடம் கடல்வாய்ப்
பின்னல் திரைமேல் தவழ்கின்ற
பிள்ளைத் தென்றல், கள் உயிர்க்கும்
புன்னைக் குறும்பூ நறுஞ்சுண்ணம்
பூசாது ஒருகால் போகாதே.

பொ :—நேற்றுக்கண்ட திருவுடம்பு இன்று வேருகி நிலைதளர்பவனை இராமனைக் கண்டும் மனமிரங்காமல் தனியே நின்று பேரொலியெழுப்பும் பெரிய கடலின்கண், ஒன்ருேடொன்று இணைந்தியலும் அலைகளின்மேல் தவழ்ந்துவரும் சிறிய தென்றலானது தேனைப் பெருக்கும் புன்னையின் சிறிய பூவின் மணமுடைய சுண்ணத்தை இராமன்மீது ஒருகாலும் பூசாமற் போகாது. (பூசியே செல்லும்)

கு :—நென்னல் - நேற்று. நென்னல் இன்று என்பவை முன்னுள் வழிநாள் என்று பொருள்பட நின்றன. சீதை பிரிவால் வருந்தி மெலிந்து கணத்துக்குக் கணம் வேறுபட்ட திருவுடம்பொடு நிலைதளர்பவனுன் என்று இராமன் மெலிவுமிகுதி சுட்டியவாறு. கடலொலியும் தென்றலும் முதலியவை பிரிந்தார்க்குத் துன்பம் விளைப்பன. இராமன் நிலைகண்டும் கடல் முழங்குகின்றது; அதன் மேலும் தென்றலும் புன்னை மலரின் மகரந்தத்தை யளைந்துவந்து அவன்மேல் பூசி வருத்துகின்றதே. அந்தோ என்று கவி இரங்கிய வாறு. பிள்ளை என்றதற்கேற்பத் தவழ்தலாகிய வினையும் இணைத்துக் கூறிய நயம் நோக்கத்தகும். பிறர் துன்பம் நோக்காத சிறுமையுடைய தென்பார் பிள்ளைத் தென்றல் என்ருர். நிலைதளர்வான் றன்னைக் கண்டும் இரங்காத கடலலைவாய்த் தவழ்ந்தமையின், தென்றலும் அக்கடலின்றன்மை யுடையதாய் வருத்துவதாயிற்று என்பது புலப்பட, கடல்வாய்ப் பின்னற்றிரைமேல் தவழ்கின்ற தென்றல் என்ருர். ஒருகாலும் என உம்மை விரிக்க. ஒருகாலும் பூசாமற் போகாது என்க. தளர்வான்றன்னைக் கண்டும் இரங்காது தனியே கதறும் தடங்கடல் என்பதற்கு, தனக்கு மகள் முறையின

ளான சீதையைக் காவாதுவிட்ட குறை நினைந்து கடல் இராமன் நிலை கண்டு இரங்காது தனியே அழுவதாயிற்று என்று உரைத்தலும் ஆம். கதறுதல் - பேரொலி செய்தல், அழுதல் என்னும் இரு பொருளும்பட நின்றது. (5)

பவளம் தோன்றுதல்

6192. சிலைமேற் கொண்ட திருநெடுந்தோட்
குவமை மலையுஞ் சிறிதேய்ப்ப
நிலைமேற் கொண்டு மெலிகின்ற
நெடியோன் றன்முன் படியேழுந்
தலைமேற் கொண்ட கற்பினாண்
மணிவா யென்னத் தனிதோன்றிக்
கொலைமேற் கொண்டா ருயிர்குடிக்குங்
கூற்றங் கொல்லோ கொடிப்பவளம்.

சிலை மேல் கொண்ட திருநெடுந்தோட்கு
உவமை மலையும் சிறிது ஏய்ப்ப
நிலை மேற்கொண்டு மெலிகின்ற
நெடியோன்றன்முன் படி ஏழும்
தலை மேல் கொண்ட கற்பினாள்,
மணிவாய் என்னத் தனிதோன்றிக்
கொலைமேற் கொண்டு, ஆர்-உயிர் குடிக்கும்
கூற்றம் கொல்லோ கொடிப் பவளம்.

பொ :—கடற்கரையிலே படர்ந்துள்ள கொடிப்பவளம், வில்லைத் தன்மீது கொண்ட நீண்ட அழகிய தோளுக்கு மலையும் சிறிது உவமையாகும்படி நிற்கும் நிலையினை மேற்கொண்டு மெலிகின்ற நெடியோனை இராமன் முன், ஏழுலகத்தாரும் தலைமேற் கொண்டு போற்றும் கற்பினையுடையவளான சீதையின் அழகிய வாய்போலத் தனியே தோன்றிக் கொலைத் தொழிலை மேற்கொண்டு அவனுடைய அரிய உயிரை உண்ணும் எமனோ?

கு :—கொடிப்பவளம், நெடியோன்முன் கற்பினாள் மணிவாய் என்னத் தனி தோன்றி உயிர் குடிக்கும் கூற்றங்கொல் என இயையும். சீதையோடு கூடிய நிலையில் மகிழ்ச்சியால் மலையும் உவமையாகாத வாறு பூரித்து ஓங்கிய இராமன் தோள்கள், சீதை பிரிவால் நேர்ந்த துயரத்தால் மலையும் உவமையாகும்படி மெலிந்தன என்றவாறு.

மெலிவு கணந்தோறும் நிகழ்தலின் மெலிகின்ற என நிகழ்காலத்தாற் கூறினர். நெடியோன் என்றது இராமனை. கற்பினள் என்றது சீதாபிராட்டியை. சீதையின் வாய்க்குப் போலியான கொடிப்பவளம் இராமன்பால் சீதையின் நினைவை எழுப்பி வருத்துதலின் அதனை, ஆருயிர் குடிக்கும் கூற்றங்கொல் என்றார். (6)

முத்து வெளிப்படல்

6193. தூர மில்லை மயிலிருந்த
சூழ லென்று மனஞ்செல்ல
வீர வில்லி நெடுமானம்
வெல்ல நாளு மெலிவானுக்
கீர மில்லா நிருதரோ
டென்ன வுறவுண் டுனக்கேழை
மூரன் முறுவற் குறிகாட்டி
முத்தே யுயிரை முடிப்பாயோ.

தூரம் இல்லை மயில் இருந்த
சூழல் என்று மனம் செல்ல,
வீரவில்லி, நெடுமானம்
வெல்ல நாளும் மெலிவானுக்கு,
'ஈரம் இல்லா நிருதரோடு
என்ன உறவு உணடு உனக்கு' ஏழை
மூரல் முறுவல் குறி காட்டி,
முத்தே! உயிரை முடிப்பாயோ?

பொ :—முத்தே! மயில் போல்வாளான சீதை இருந்த இடம் அணித்தே என்று மனம் முற்படப் பெரிய மானம் வென்று மேம்பட நாளும் மெலிபவனாகிய வீர வில்லிக்குச் சீதாபிராட்டியின் புன்சிரிப்பு வெளிப்படும் பல்லின் இயலைக் காட்டி, அவனுயிரை முடிப்பாயோ? அன்பற்ற அரக்கரோடு உனக்கு என்ன உறவு உண்டு?

கு :—முத்தே! மெலிவானன வீர வில்லிக்கு ஏழை மூரல் முறுவற் குறி காட்டி (அவன்) உயிரை முடிப்பாயோ? நிருதரோடு உனக்கு என்ன உறவு உண்டு என இயைக்க. கடலைக் கண்ணுற்ற நிலையில் சீதை இருக்குமிடம் அணித்தாயிற்று என்று மனம் அவளைக் காணும் விழைவு மேற்கொள்ளத் தோள்வலி காட்டிப் பகைவலி துடைத்து அவளை மீட்டபின் அது மேற்கொள்ளத் தகும்

என்று மானம் அதனைத் தடைசெய்து அடக்க, நாளும் மெலிபவனாகிய வீர வில்லிக்கு என்க. வீர வில்லி என்றது இராமனை. மயில், ஏழை என்றது சீதையை. கடற்கரையில் சீதையின் பற்களுக்குப் போலியாகும் முத்தைக் கண்ட இராமன், சீதையின் முறுவலை நினைந்து வருந்துவானாயினன் என்றவாறு. இராமனை வருத்தலால் முத்தே நீயும் நிருதரோடு உறவுடையை போலும் என்று கவி இரங்குவாராயினர் என்க. (7)

கடலின் தோற்றம்

6194. இந்து வன்ன நுதற்பேதை
யிருந்தா ணீங்கா விடர்க்கொடியேன்
றந்த பாவை தவப்பாவை
தனிமை தகவோ வெனத்தளர்ந்து
சிந்து கின்ற நறுந்தரளக்
கண்ணீர் ததும்பத் திரைத்தெழுந்து
வந்து வள்ளன் மலர்த்தாளில்
வீழ்வ தேய்க்கு மறிகடலே.

இந்து அன்ன நுதல் பேதை
இருந்தாள் நீங்கா இடர்க் கொடியேன்
தந்த பாவை தவப்பாவை
தனிமை தகவோ? எனத் தளர்ந்து
சிந்துகின்ற நறுந்தரளக்
கண்ணீர் ததும்பத் திரைத்து எழுந்து
வந்து வள்ளல் மலர்த் தாளில்
வீழ்வது ஏய்க்கும், மறி கடலே.

பொ :—அலை மடங்கி வரும் கடலானது (கரைமீது மோதி மறிதல்), 'பிறைபோலும் நெற்றியினையுடைய சீதை ஒழியாத துன்பத்திடை யிருந்தாள்; கொடியேன் பெற்ற கண்மணிப் பாவை போல்பவளும் தவப்பயனுயுதித்தவளுமான அவள், (அரக்கரிடை) தனியே யிருந்து துன்புறல் தகுமோ' என்று சிந்துகின்ற நல்ல முத்துக்களாகிய கண்ணீர் பெருக அலை(களாகியகை)களை விரித்துக் கொண்டு எழுந்து வந்து வள்ளியோனான இராமனடிகளில் விழுந்து முறையிடுதலை ஒக்கும்.

கு :—கடலைக் கண்டு நின்ற இராமனடிகளில் மோதி வரும் அலைகள் மடங்கி வீழ்வது, தன் மகளாகிய சீதையின் தனிமை கருதி வருந்திய கடல், அத்தனிமை நீங்க நீ அவளை மீட்டுக் காத்தருள வேண்டும் என்று மருகனாகிய இராமனடிகளில் கண்ணீர் சிந்த விழுந்து முறையிடுவது போன்றிருந்தது என்றவாறு. சீதை முன்னை நிலையில் திருமகளாதலின், கடலின் கூற்றாற் கொடியேன் றந்த பாவை என்றார். திருமகள் பாற்கடலிற் றோன்றினமை முன் 503-ஆம் பாடலால் விளங்கும். உவர் நீர்க் கடல், சீதையைக் கொடியேன் றந்த பாவை என்றது கடல் என்ற பொதுமையால் என்க. தன் மகள் தனித்துயருழக்கக் கண்டும் தான் ஓராற்றானும் உதவ முடியாமையால் கொடியேன் என்று தன்னை நொந்து கூறியது. இந்து என்றது பிறைச் சந்திரனை. நுதல் - நெற்றி. தரளம்-முத்து. தரளக் கண்ணீர்-உருவகம். ஏய்க்கும்-ஒக்கும். (8)

6195. பள்ளி யரவிற் பேருலகம்
பசுங்கல் லாகப் பனிக்கற்றை
துள்ளி நறுமென் புனறெளிப்பத்
தூநீர்க் குழவி முறைசுழற்றி
வெள்ளி வண்ண நுரைக்கலவை
வெதும்பு மண்ண றிருமேனிக்
கள்ளி யப்பத் திரைக்கரத்தா
லரைப்ப தேய்க்கு மணியாழி.

பள்ளி அரவில் பேர் உலகம்
பசுங்கல் ஆகப் பனிக் கற்றை
துள்ளி நறு மென் புனல்தெளிப்பத்
தூநீர்க் குழவி முறை சுழற்றி,
வெள்ளி வண்ண நுரைக் கலவை
வெதும்பும் அண்ணல் திருமேனிக்கு
அள்ளி அப்பத் திரைக் கரத்தால்
அரைப்பது ஏய்க்கும் அணி ஆழி.

பொ :—அழகிய கடலானது, (சீதை பிரிவால்) வெதும்பும் இராமன் திருமேனியில் (அவ்வெம்மை தீருமாறு) அள்ளிப் பூசும்படி திருமாலின் பாயலாகிய பாம்பின் முடிமீது தங்கிய பெரிய உலகமே சந்தனம் அரைக்கும் கல்லாக, திரண்ட பனித் துளிகளாகிய நல்ல மெல்லிய நீரைத் தெளிக்க, தூய நீராகிய குழவியை முறையே

சுழற்றி வெண்மை நிறமுடைய நுரையாகிய சந்தனத்தைத் தன் அலைகளாகிய கைகளால் அரைப்பதை ஒத்துத் தோன்றும்.

கு:—கடல் சந்தனம் அரைப்பவனாகவும், அலைகள் கைகளாகவும், உலகம் சந்தனக் கல்லாகவும், பனி நீர் தெளிப்பவனாகவும், பனித் துளி நீர்த்துளியாகவும், மடங்கி வரும் கடல் நீர் குழவியாகவும், நுரை கலவைச் சந்தனமாகவும் உருவகிக்கலாயிற்று. பள்ளியரவு என்றது ஆதிசேடனை. ஆதிசேடன் உலகத்தைத் தாங்குவதாகக் கூறும் முறைகொண்டு பள்ளியரவிற் பேருலகம் என்றார். (9)

6196. கொங்கைக் குயிலைத் துயர்நீக்கி
விமையோர்க் குற்ற குறைமுற்ற
வெங்கைச் சிலையன் றூணியினன்
விடாத முனிவின் மேற்செல்லுங்
கங்கைத் திருநா டுடையானைக்
கண்டு நெஞ்சங் களிகூர
வங்கைத் திரைக ளெடுத்தோடி
யார்த்த தொத்த தணியாழி.

கொங்கைக் குயிலைத் துயர் நீக்கி,
இமையோர்க்கு உற்ற குறைமுற்ற,
வெம் கைச்சிலையன் தூணியினன்
விடாத முனிவின் மேல் செல்லும்
கங்கைத் திருநாடு உடையானைக்
கண்டு நெஞ்சம் களி கூர
அம் கைத் திரைகள் எடுத்து ஓடி,
ஆர்த்தது ஒத்தது அணி ஆழி.

பொ :—(அலைகளின் முழக்கத்தோடு கரையில் வந்து மோதும்) அழகிய கடல், கொங்கையினையுடைய குயில்போல்வாளான சீதையைத் துயர் நீக்குதலால், தேவர்கள் உற்ற குறை ஒழியும்படி கையின்கண் (மாற்றார்க்கு அச்சத்தை விளைக்கும்) கொடிய வில்லைத் தாங்கியவனாய் அம்பறாத் தூணியைத் தரித்தவனாய் நீங்காத சினத்தோடு பகையரக்கர் மேற்செல்லும், கங்கைநதி பாயும் கோசல நாட்டை யுடையவனான இராமனைக் கண்டு மனமகிழ்ச்சி மிக அலைகளாகிய அழகிய கைகளை யெடுத்து விரைந்து ஆரவாரித்து வந்து வரவேற்றலை ஒத்துத் தோன்றும்.

கு :—கொங்கைக் குயில் என்றது இங்கே சீதாபிராட்டியை. கோசலநாட்டின் தென்பகுதியிற் கங்கை நதி பாய்தலால் இராமனைக் 'கங்கைத் திருநாடுடையான்' என்றார். 'கங்கைத் தீம்புனலுடையான்' (409) என்றார் முன்னும். தேவர் சிறைத் துயர்தீரச் சீதாபிராட்டி சிறையிருந்தாளாதலின் இவள் துயர் நீக்கவே, தேவர் துயர் அகலும் என்னும் கருத்தால், 'குயிலைத் துயர் நீக்கி, (அதனால்) இமையோர் உற்ற குறை முற்ற' என்றார். நீக்கி என்னும் செய்தெனெச்சம் காரணப் பொருளது. அன்பு செய்து போற்றுதற்குரிய பெரியோர் வரக்கண்ட மாந்தர் மகிழ்ச்சி மிகக் கைகள் தலைமீது ஏற 'வருக வருக' என்று பெரு முழக்கத்தோடே எதிர்கொள்ளுஞ் செயலை இராமன் தன்னருகுவரக் கண்டு, மகிழ்ந்து, அலைகளாகிய கைகளை மேலெடுத்து நீட்டிப் பெரு முழக்கத்தோடு விரைந்தெதிர் கொண்டு, இராமனை வரவேற்றது என்று கடலின் மேலேற்றிக் கூறியவாறு. (10)

இராமன் மேல்வினைவெண்ணிக் கடற்கரையில் தங்குதல்

6197. இன்ன தாய கருங்கடலை
யெய்தி யதனுக் கெழுமடங்கு
தன்ன தாய நெடுமானந்
துயரங் காத லிவைதழைப்ப
வென்ன தாகு மேல்வினைவென்
றிருந்தா னிராம னிகலிலங்கைப்
பின்ன தாய காரியமு
நிகழ்ந்த பொருளும் பேசுவாம்.

இன்னது ஆய கருங்கடலை
எய்தி அதனுக்கு எழுமடங்கு
தன்னது ஆய நெடுமானம்
துயரம் காதல் இவை தழைப்ப
என்னது ஆகும் மேல்வினைவு? என்று
இருந்தான் இராமன்; இகல் இலங்கைப்
பின்னது ஆய காரியமும்
நிகழ்ந்த பொருளும் பேசுவாம்.

பொ :—இராமன், இத்தன்மையுடையதான பெரிய (தெற்குக்) கடற்கரையினையடைந்து, தன்னுடைய பெரிய மானமும் துயரமும் காதலும் ஆகிய இவை இக்கடலினும் ஏழு மடங்கு வளர, 'மேல்

நிகழும் செயல் எத்தன்மையுடையதாகும்?' என்று நினைந்து தங்கினான்; பகைப்புலமாகிய இலங்கையில் அனுமன் மீண்ட பின்னை நிகழ்ந்த செயலையும் அதன் பயனையும் இனிப் பேசுவோம்.

கு :—மானம் - குடிப்பிறந்தார்க்குரிய குணங்களுள் ஒன்று. அதாவது : எஞ்ஞான்றும் தம் நிலையில் தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாம். துயரம் - சீதை பிரிவினால் விளைந்த துன்பம். காதல் - சீதைமேற் செல்லும் விழைவு. இகல் - பகை. காரியம் - செயல்; இலங்கைப் பின்னதாய செயல் என்றது அனுமன் மீண்ட பின் இலங்கையை மறுபடி அமைத்தமையும் இராவணன் மந்திராலோசனை ஆகியவற்றையும். பொருள் - பயன்; அது, இராவணன் மந்திராலோசனையின் விளைவு; வீடணன் இராவணனை விட்டு வருதல். பொருள் என்னும் சொற்குப் பயன் என்னும் பொருள் உண்மை, 'மெய்ப்பொருள் காண்பதறிவு' (423) என்னும் திருக்குறட் பகுதிக்குப் பரிமேலழகர் வரைந்த வுரையால் அறியலாம். (11)

52-ல் இச்செய்யுளின் பின்,

6197 (a) மூன்றரைக் கோடியின் உகத்தோர் மூர்த்தியாய்த்
தான்றிகழ் தசமுகத் தவுணன் சாலவும்
ஆன்றதன் கருத்திடை அயனொ டேமயன்
தோன்றுற நினைதலும் அவரும் துன்னினர்.

(b) வந்திடுமவர் முகம் நோக்கி மன்னவன்
செந்தழல் படுநக ரனைத்துஞ் சீர்பெறத்
தந்திடும் கணத்திடை' யென்று சாற்றலும்
புந்திகொண் டவர்களும் புனைதல் மேயினர்.

என இரண்டு மிகைச் செய்யுட்கள் காணப்படுகின்றன.

கடல்காண் படலம் முற்றும்

2. இராவணன் மந்திரப் படலம்

இராவணன் தன் அமைச்சரோடு தான் மேல் நிகழ்த்த வேண்டியவற்றை ஆராய்ந்தமை பேசுதலின் இப்பகுதி இப்பெயர்த்தாயிற்று. பல பிரதிகளில் (19, 21, 23, 25, 27, 29, 40–44, 63, 65, 66 முதலியவற்றில்) இப்பகுதி மந்திரப் படலம் என்ற தலைப்புடன் வரையப்பட்டுள்ளது எனினும், அயோத்தியா காண்டத்தில் தசரதன் அமைச்சரோடு ஆராய்ந்தமை பேசும் பகுதியும் மந்திரப் படலம் என்றே பெயர் பெற்றமையின் அதனொடு இதனிடை வேற்றுமை தெரியுமாறு சில பிரதிகளில் (1, 10, 11, 18, 41, 52 முதலியவற்றில்) கண்டபடி இராவணன் மந்திரப் படலம் என்ற தலைப்பே இடப்பட்டது. இப்படலத்து அமைந்த பாடல்கள் 118.

அனுமனால் எரியுண்டபின், பிரமனுடன் வந்த தெய்வத் தச்சனால் இலங்கை புதுப்பிக்கப்படுகின்றது. அதன் அமைதி கண்ட இராவணன் பண்டையின் அழகுடைத்து என்று பாராட்டிப் பிரமனைப் பூசித்துத் தெய்வத் தச்சனுக்கும் பரிசில் நல்கி விடைதந்து அமைச்சரோடு மந்திர சாலையை அடைகிறான்; உடன்பிறந்தாரும் மக்களும் அல்லாத பிறரைப் புறத்தே போக்கி, வண்டொடு காற்றையும் வரவு மாற்றி வீரரைக் காவலமைத்துப் பின் தனக்கு நேர்ந்த இழிவு குறித்து வருந்தி யுரையாடுகிறான்; அதுகேட்ட சேனை காவலன், மகோதரன், வச்சிரதந்தன் துன்முகன், மகாபார்சுவன், பிசாசன், பானுகோபன், வேள்வியின் பகைவன், புகைக்கண்ணன் முதலியோர் நேர்ந்த பழி துடைக்கும் நெறியாகத் தத்தமக்குத் தோன்றியவற்றைக் கூறினர்; கும்பகருணன், 'சீதையைக் கவர்ந்தது முறையன்று; ஆயினும், இந்நிலையில் நாம் அவளை இராமன்பால் விடுவது நமக்குப் பழிவிளைக்கும்; பகைவரும் நம்மை மதியார்; பகைவர்க்குத் துணைவலி மிகுமுன் நாம் அவரைப் பொருது அழித்தலே தக்கது; ஆதலின், இப்பொழுதே. பகைவரை எதிர்த்துப் பொருதல் நலம்' என்கிறான். இராவணன், கும்பகருணன் கூறியதற்கு இசைந்து, 'நமர் படையொடும் போர்க்கு எழுக' எனலும், இந்திரசித்து இடைமறித்து, 'யான் ஒருவனே சென்று பகைவென்று வருவேன்; விடைதருக' என்கிறான். வீடணன் இந்திரசித்துக் கூறியதற்குச் சினந்து கடிந்து, சீதையின் கற்பும், இராமன் பேராற்றலும் நந்தி முதலியோரிட்ட சாபவரலாறும் கூறிச் சீதையை இராமன்பால் விடுதலே செய்யத்தக்கதென்கிறான். இராவணன் வீடணனைச் சினந்து, தன் புயவலியும் வர பலமும் கூறி, இராமனையும் வானரப் படைகளையும் பழித்துரைத்துப் போர்க்கெழ விரை

கிறன். வீடணன், தேவர் வேண்டலால், திருமாலே இராமனுகத் தோன்றியுள்ளமையும், அவனைப் பகைத்தலால் அரக்கர் குலம் அடியோடு அழியும் என்பதும் கூறிப் 'போர்க்கு எழலாகாது' என்று இராவணனடிகளில் விழுந்து இரந்து வேண்டுகிறன். இராவணன் திருமாலையும் தேவர்களையும் நிந்தித்து, மற்றையோரைப் போர்க் கெழுமாறு தூண்டி, வீடணனை நோக்கி, 'நீ அச்சமின்றி இந்நகரில் இன்புற்றிரு' எனலும், வீடணன், இராவணனை நோக்கி நின்னினும் பேராற்றலனுன இரணியனும், நெறிதிறம்பியமையால் அழிவுற்றான் என்று அவ்விரணியன் வரலாற்றைக் கூறத்தொடங்கினுன் என்பது இப்படலத்தின் நுவல்பொருட் சுருக்கம். வான்மீகத்துள் இராவணன் மந்திராலோசனை பல சருக்கங்களால் பேசப்படுகிறது.

இப்படலத்துள் வீடணன் பேச்சு ஒன்றே உறுதி யுரையாகத் தக்கது; ஏனையோர் பேசியவை இராவணன் கருத்தோடு இசைந்தனவாய் அவனுக்குத் தீங்கு பயப்பனவாயின. இடிப்பாரையில்லாத இராவணன் நிலை,

> " இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பா ரிலானும் கெடும் " (448)

என்னும் திருவள்ளுவர் கூற்றுக்கும்,

> " கடிக்கும் வல்லரவும் கேட்கும் மந்திரம் களிக்கின் றேயை
> அடுக்குமீ தடாதென் றுன்ற வேதுவோ டறிவு காட்டி
> இடிக்குந ரில்லை யுள்ளார் எண்ணிய தெண்ணி யுன்னை
> முடிக்குநர் என்றபோது முடிவன்றி முடிவ துண்டோ "
> (சுந்தர. காட்சிப். 136)

என்னும் பிராட்டி கூற்றுக்கும் எடுத்துக்காட்டாய் அமைந்தது.

2. இராவணன் மந்திரப் படலம்

அனுமனால் எரியுண்ட இலங்கை மயனால் புதுப்பிக்கப்படுதல்

6198. பூவரு மயனொடு புகுந்து பொன்னகர்
✱ மூவகை யுலகினு மழகு முற்றுற
வேவென வியற்றினன் கணத்தி னென்பராற்
றேவரு மருள்கொளத் தெய்வத் தச்சனே.

பூவரும் அயனொடு புகுந்து 'பொன்னகர்
மூவகை உலகினும் அழகு முற்றுற
ஏவு' என, இயற்றினன் கணத்தின் என்பர் ஆல்,
தேவரும் மருள்கொளத் தெய்வத் தச்சனே.

பொ :—"செறிந்த வீரக்கழலணிந்த அரசனாகிய இராவணன் திருமாலின் உந்தித் தாமரை மலரில் தோன்றிய பிரமனுடன் இலங்கையிற் புகுந்து, (பிரமனை நோக்கி,) 'அழகிய இலங்கை, மூன்றுலகங்களிலுமுள்ள நகரங்களினும் அழகு முழுதும் அமையும்படி கட்டளையிடுக' என்று கூற, (அப்பிரமன் கட்டளையால்) 'தெய்வத்தன்மையுள்ள தச்சனாகிய மயன் என்பவன், தேவர்களும் மயங்கும்படி நொடிப்பொழுதுள் செய்தமைத்தான்' என்று கூறுவர்."

கு :—மன்னன் என்பது பின்பாட்டிலிருந்து கொள்ளப்பட்டது. மன்னன் அயனொடும் புகுந்து, 'நகர் மூவகையுலகினும் அழகு முற்றுற ஏவு' எனத் 'தெய்வத் தச்சன், தேவரும் மருள்கொளக் கணத்தின் இயற்றினன்' என்பர் என இயையும். 'பொன்னகர் மூவகையுலகினும் அழகு முற்றுற ஏவு' என்பது இராவணன், பிரமனை நோக்கிக் கூறியது. 'தெய்வத் தச்சன்......இயற்றினன் என்பர்' என்பது கவிக்கூற்று. பூ என்றது திருமாலின் உந்தித் தாமரை மலரினை. மூவகை உலகு - கீழுலகு, மண்ணுலகு, விண்ணுலகு என்பவை. மூவகையுலகினும் என்பது மூன்றுலகங்களிலும் உள்ள நகரங்களினும் என்று பொருள்பட நின்றது. முற்றும் உற என உம்மை விரிக்க. நினைந்த மாத்திரையிற் படைத்தலால் தெய்வத் தச்சன் என்றார். தெய்வத் தச்சன் என்பதற்குத் தேவர் தச்சனான விசுவகருமன் என்றும் பொருள் கூறலாம். வான்மீகத்துள், இலங்கையை மீட்டும் அமைத்தமை கூறப்படவில்லை. (1)

இலங்கையின் அமைதிநோக்கிய இராவணன் சினம் நீங்குதல்

6199. பொன்னினு மணியினு மமைந்த பொற்புடை
நன்னகர் நோக்கினு னுக நோக்கினுன்
முன்னையி னழகுடைத் தென்று மொய்கழன்
மன்னனு முவந்துதன் முனிவு மாறினுன்.

பொன்னினும் மணியினும் அமைந்த பொற்புடை
நன்னகர் நோக்கினுன் நாக நோக்கினுன்
'முன்னையின் அழகு உடைத்து' என்று மொய்கழல்
மன்னனும் உவந்து, தன் முனிவு மாறினுன்.

பொ :—செறிந்த வீரக் கழலணிந்த இராவணன், பொன்னுலும் இரத்தினங்களாலும் அமைந்த அழகுடைய நல்ல நகராகிய இலங்கையை நோக்கி, விண்ணுலகிலுள்ள அமராவதியினையும் நோக்கி, முன்னை நிலையினும் இலங்கை அழகுமிக வுடையதாயிற்று என்று மகிழ்ந்து, சினம் நீங்கினுன்.

கு :—மொய்கழன் மன்னனும் நகர் நோக்கினுன், நாகநோக்கினுன் முன்னையின் அழகுடைத்து என்று உவந்து, முனிவு மாறினுன் ; என இயையும். மன்னன் என்றது இராவணனை. நோக்கினுன் என்னும் இரண்டும் முற்றெச்சம். நாகம் ஆகுபெயராய் அமராவதியை யுணர்த்தியது. நாகம் நோக்கியது அமராவதியொடு இலங்கைக்குள்ள மிகை குறை யறிதற்கு ; மூவகையுலகினும் அழகு முற்றுற ஏவு என்ருனுதலின். முனிவு - இலங்கை யெரியுண்டமையால் எழுந்த சினம். (2)

இலங்கையின் எழில் மிகுதிக்குக் காரணம்

6200. முழுப்பெருந் தனிமுத லுலகின் முந்தையோ
னெழிற்குறி காட்டிநின் றியற்றி யீந்தனன்
பழிப்பரு முலகங்க ளெவையும் பன்முறை
யழித்தழித் தாக்குவாற் கரிதுண் டாகுமோ.

முழுப் பெருந்தனி முதல் உலகின் முந்தையோன்
எழில் குறிகாட்டி நின்று இயற்றி ஈந்தனன்,
பழிப்பரும் உலகங்கள் எவையும் பல்முறை
அழித்து அழித்து ஆக்குவாற்கு அரிது உண்டாகுமோ.

பொ :—நிறைவுடைய பெரிய ஒப்பற்ற தலைவனும் உலகத் தோற்றத்துக்கு முன்னே தோன்றியவனும் ஆன பிரமன், அழகுக் குரியவரையறைகளை (மயனுக்கு) விளக்கி நின்று, (அவனால் இலங்கையை) மீட்டும் (அழகுற) அமைப்பித்து நல்கினன்; பழிப்பில்லாத உலகங்களை யெல்லாம் பலமுறை அழித்தழித்துப் படைப்பவனாகிய அப் பிரமனுக்கு அரியதும் உண்டோ? (இல்லை).

கு :—எழிற்குறி - அழகுக்குரிய வரையறை. உலகங்கள் அழியுந் தோறும் படைக்கவல்ல பிரமனுக்கு, அழிந்த இலங்கையை மீட்டும் அழகுற அமைப்பித்தல் அரியதொன்றன்று என்றவாறு. இது கவிக் கூற்று. (3)

"சில பிரதிகளில் இச்செய்யுள், 'அவ்வழி' (5) என்ற செய்யுளின் பின் காணப்படுகின்றது" என்பது 41ல் கண்ட குறிப்பு.

இராவணன் பிரமனைப் பூசித்தனுப்புதல்

6201. திருநகர் யாவையுந் திருந்த நோக்கிய
பொருகழ லிராவண னயற்குப் பூசனை
வரன்முறை யியற்றிநீ வழிக்கொள் வாயென்று
னரியன தச்சற்கு முதவி யாணையான்.

திருநகர் யாவையும் திருந்த நோக்கிய
பொரு கழல் இராவணன், அயற்குப் பூசனை
வரன்முறை இயற்றி, 'நீ வழிக் கொள்வாய்' என்றான்;
அரியன தச்சற்கும் உதவி ஆணையான்.

பொ :—அழகிய இலங்கை நகர் முழுவதையும் நன்கு நோக்கிய பொருந்திய வீரக்கழலணிந்த இராவணன், பிரமனை முறையாற் பூசித்து, மயனுக்கும் அரியபொருள்களை ஆணையால் வழங்கி, (பிரமனை நோக்கி) நீ உன்னிடத்துக்குச் செல்லுக என்றனன்.

கு :—நகர் நோக்கிய இராவணன், அயற்குப் பூசனை புரிந்து, தச்சற்கும் அரியன ஆணையால் உதவி (பிரமனை நோக்கி) 'நீ வழிக் கொள்வாய்' என்றான் என இயையும். ஆணை - கட்டளை. பொரு - பொருந்துதல்; "பொய் பொரு முடங்குகை" (15.50) என்னும் சிலப்பதிகாரத்துள் பொரு - பொருந்தல் என்னும் பொருளிற் பயின்றமை காணலாம். தச்சன் என்றது மயனை. வழிக் கொள்ளுதல் - செல்லுதல். (4)

இராவணன் ஆலோசனை மண்டபத்தில் சிங்காதனத்தில் வீற்றிருத்தல்

6202. அவ்வழி யாயிர மாயி ரம்மவிர்
செவ்வழிச் செம்மணித் தூண்கள் சேர்த்திய
வெவ்வமின் மண்டபத் தரிக ளேந்திய
வெவ்வழி யாசனத் தினிது மேவினான்.

அவ்வழி ஆயிரம் ஆயிரம் அவிர்
செவ்வழிச் செம்மணித் தூண்கள் சேர்த்திய
எவ்வம் இல் மண்டபத்து அரிகள் எந்திய
வெவ்வழி ஆசனத்து இனிது மேவினான்.

பொ :—அதன்பின் பல்லாயிரக் கணக்கில் விளங்குகின்ற செவ்வி மிக்க மாணிக்கத் தூண்கள் அமைத்த குற்றமற்ற மண்டபத்தில் சிங்கம் சுமந்த வெம்மை வெளிப்படுகின்ற ஆசனத்தில் (இராவணன்) இனிது வீற்றிருந்தான்.

கு :—இராவணன் என்னும் எழுவாய் முன் செய்யுளிலிருந்து கொள்ளப்பட்டது. அவ்வழி - அதன்பின். ‘அவ்வழி......உதித்த தன்றே’ (வருணச். 5) என்னும் கூர்ம புராணச் செய்யுளடியுள், அவ்வழி - என்பது அதன்பின் என்று பொருள்கொள்ள நின்றமை காணலாம். ‘அருஞ்சிறப்பமைவரும் துறவும் அவ்வழி - தெரிஞ்சுற வெனமிகும் தெளிவும்’ (1420) என்பதனுள், ஆசிரியர், அவ்வழி என்பதனை அதன்பின் என்னும் பொருள்பட ஆண்டிருப்பதும் நோக்கத்தகும். ஆயிரமாயிரம் தூணம், அவிர்தூணம், செம்மணித்தூணம் என்க. எவ்வம் - குற்றம். அரி - சிங்கம். ஏந்துதல் - தாங்குதல். சிங்கம் தாங்கிய ஆசனமாதலின் காண்பார்க்கு வெம்மை புலப்படலாயிற்று. (5)

இராவணன் அமைச்சர் முதலியோர் சூழ விளங்குதல்

6203. வரம்பறு சுற்றமு மந்தி ரத்தொழி
னிரம்பிய முதியருஞ் சேனை நீள்கடற்
றரம்பெறு தலைவருந் தழுவத் தோன்றினு
னரம்பையர் கவரியோ டாடுந் தாரினான்.

வரம்பு அறு சுற்றமும் மந்திரத் தொழில்
நிரம்பிய முதியரும் சேனை நீள் கடல்

தரம்பெறு தலைவரும் தழுவத் தோன்றினன்
அரம்பையர் கவரியோடு ஆடும் தாரினன்.

பொ :—தேவமாதர் (அசைக்கும்) கவரியோடு அசையும் மாலையினையுடைய இராவணன், எல்லையற்ற சுற்றத்தாரும், ஆலோசனையில் நிறைவுடைய பெரியோரும், படையாகிய பெருங்கடலில் மேன்மைபெற்ற தலைவரும் தன்னையடுத்திருக்க விளங்கினன்.

கு :—மந்திரம் - ஆலோசனை. தரம் - பெருமை. தாரினன் தோன்றினன் என இயையும். அரம்பையர் இராவணனையடுத்து நின்று அவனுக்குச் செய்யும் உபசார வகையுள் ஒன்ருகிய கவரி அசைத்தலைச் செய்ய, அக்கவரியின் அசைவோடு அதினின்றெழும் காற்றினல் இராவணன் மார்பிலணிந்த மாலையும் அசைவதாயிற்று. (6)

23, 26, 29, 43, 44, 64-ஆம் பிரதிகளில், இச்செய்யுளின்பின்,

6203 (a) 'மின்னவிர் குழைகளும் கலனும் வில்விடச்
சென்னியின் மணிமுடி யிருளைச் சீறிட
அன்னபே ரவையினுண் டிருந்த வாண்டகை
முன்னிய துணர்த்துவான் முறையின் நோக்கினன்'

என ஒரு மிகைச் செய்யுள் காணப்படுகிறது.

இராவணன் ஆலோசனை மண்டபத்திலிருந்து முனிவர் முதலியோரைப் போக்குதல்

6204. முனைவருந் தேவரு மற்று முற்றுளோ
ரெனைவருந் தவிர்கென வேய வாணையான்
புனைகுழன் மகளிரோ டிளைஞர்ப் போக்கினு
னினைவுறு காரிய நிகழ்த்து நெஞ்சினன்.

'முனைவரும் தேவரும் மற்றும் உற்றுளோர்
எனைவரும் தவிர்க' என, ஏய ஆணையான்,
புனைகுழல் மகளிரோடு இளைஞர்ப் போக்கினன்;
நினைவு உறு காரியம் நிகழ்த்தும் நெஞ்சினன்.

பொ :—எண்ணிய மந்திராலோசனையினை நடத்தும் மனமுடைய இராவணன், 'முனிவர்களும் தேவர்களும் மற்றும் அங்கு வந்துள்ளவரனைவரும் அம்மண்டபத்தினின்று நீங்குக' என்று கட்டளையிட்டவனய், அலங்கரித்த கூந்தலையுடைய மகளிரோடு இளைஞரையும் அங்கு நின்றும் போக்கினன்.

கு :—மற்றும் உற்றுளார் என்றது, கின்னரர் கந்தருவர் முதலி யோரை. தவிர்தல் - நீங்குதல். ஆணை - கட்டளை. முனிவர் முதலி யோர் அயலார்; மகளிரும் இளைஞரும் மந்திராலோசனையிற் கலந்து கொள்ளும் தகுதியற்றார்; ஆதலின் அவ்விருதிறத்தாரையும் நீக்கினான். (7)

இராவணன் அமைச்சரொடு தங்குதல்

6205. பண்டிதர் பழையவர் கிழவர் பண்பினர்
தண்டலின் மந்திரத் தலைவர் சார்கெனக்
கொண்டுட னிருந்தனன் கொற்ற வாணையான்
வண்டொடு காலையும் வரவு மாற்றினான்.

'பண்டிதர் பழையவர் கிழவர் பண்பினர்
தண்டல்இல் மந்திரத் தலைவர் சார்க எனக்
கொண்டு உடன் இருந்தனன்; கொற்ற ஆணையான்
வண்டொடு காலையும் வரவு மாற்றினான்.

பொ :—வெற்றிதரும் ஆணைச் சக்கரத்தையுடைய இராவணன், வண்டும் காற்றும் (அம்மண்டபத்துள்) வராதவாறு தடைவிதித்து, 'அறிஞரும் நெடுநாட் பழகியவரும் சுற்றத்தாரும், நற்பண்புடை யாரும் ஆகிய தவறுபடாத ஆலோசனையுடைய மேன்மைவாய்ந்த அமைச்சர் வருக' என்று அவர்களை உடன்கொண்டு தங்கினான்.

கு :—ஆணையான், மாற்றினான் கொண்டு இருந்தனன் என இயையும். ஆணையான் என்றது இராவணனை. தண்டல் இல் - தவறுதல் இல்லாத. கால் - காற்று. (8)

சுற்றத்தாருள் மக்களும் தம்பியருமல்லாதாரை மண்டபத்தினின்று போக்குதல்

6206. ஆன்றமை கேள்விய ரெனினு மாண்டொழிற்
கேன்றவர் நண்பின ரெனினும் யாரையும்
வான்றுணைச் சுற்றத்து மக்க டம்பியர்
போன்றவ ரல்லரைப் புறத்துப் போக்கினான்.

ஆன்று அமை கேள்வியர் எனினும், ஆண் தொழிற்கு
ஏன்றவர் நண்பினர் எனினும், யாரையும்

வான் துணைச் சுற்றத்து மக்கள் தம்பியர்
போன்றவர் அல்லரைப் புறத்துப் போக்கினன்.

பொ:—கொற்ற ஆணையானான இராவணன், சிறந்த துணைவராதற்குரிய தன் உறவினருள், நிரம்பியமைந்த நூலறிவும் கேள்வியறிவும் உடையரென்றாலும், ஆண்மைத்தொழில் புரிதற்கேற்றவராய் அன்பும் உடையரென்றாலும், தன் மைந்தரும் தம்பியரும் போன்றவரல்லாதவரை யாவரையும் (அம்மண்டபத்தினின்று) வெளியே போகச் செய்தான்.

கு:—ஆணையான் என்னும் எழுவாய் முன் செய்யுளின்று கொள்ளலாயிற்று. ஆணையான் வான்துணைச்சுற்றத்து, கேள்வியரெனினும் ஆண்டொழிற்கேன்றவர் அன்பினரெனினும் மக்கள் தம்பியர் போன்றவரல்லரை யாரையும் புறத்துப் போக்கினன் என இயைக்க. ஆன்று - நிரம்பி. நூலறிவும் கேள்வியறிவும் அடங்க ஆன்றமை கேள்வி என்றார். ஆண்தொழில் ஆண்மை தோன்றுதற்குரிய போர்த்தொழில். ஏன்றவர் - ஏற்றவர்; தக்கவர். யாவரையும் என்பது யாரையும் என விகாரமாயிற்று. (9)

மந்திரம் நிகழும் மண்டபத்தின் காவல் மிகுதி

6207. திசைதொறு நிறுவின னுலகு சேரினும்
பிசைதொழின் மறவரைப் பிறிதென் பேசுவ
விசையுறு பறவையும் விலங்கும் வேற்றவு
மசைதொழி லஞ்சின சித்தி ரத்தினே.

திசை தொறும் நிறுவினன், உலகு சேரினும்,
பிசைதொழில் மறவரை; பிறிது என் பேசுவ?
விசைஉறு பறவையும் விலங்கும் வேற்றவும்
அசை தொழில் அஞ்சின; சித்திரத்தினே.

பொ:—உலகத்துள்ளார் எல்லாரும் எதிர்த்து வந்தாலும் கைகளால் பிசைந்தழிக்கவல்ல போர்த்தொழிற்றிறமையுடைய வீரரைத் திசைதோறும் காவல்புரிய நிறுத்தினன்; (அதனால்) வேகம் மிக்க பறவையும் விலங்கும் மற்றவையும் சித்திரத்தில் உள்ளவற்றைப் போலப் புடைபெயர்தலை யஞ்சினவாய் ஒடுங்கின. அவர் காவல் திறமைபற்றி வேறு பேசுவது என்?

கு:—மறவரைத் திசைதொறும் நிறுவினன்; பறவையும் விலங்கும் வேற்றவும் அசைதொழில் அஞ்சின; பிறிது பேசுவது என்

என இயையும். உலகத்துள்ளாரனைவரும் திரண்டுவரினும் ஒரொருவரே வேறு துணைவலியும் படைவலியும் வேண்டாது வெறுங்கைகளால் பிசைந்தழித்து வெற்றி கொள்ளவல்ல வீரர் என்பார், உலகு சேரினும் பிசைதொழில் மறவர் என்றார். வேற்றவும் என்றது பறவையும் விலங்குமல்லாத மானுடம் முதலியவற்றை. பேசுவது என்பது பேசுவ என விகாரமாயிற்று. ஒருமை பன்மை மயக்கம். (10)

52-ல் இச்செய்யுளின்பின், பின்வரும் 3 மிகைச் செய்யுட்கள் உள்ளன.

6207 (a) மோதரன் முதலிய அமைச்சர் தம்கணக்கு
ஓதும்நூ றுயிர கோடி யோரொடும்
காதுவெஞ் சேனையின் காவ லோர்கணக்கு
ஓதிய வெள்ளநூ றவர்கள் தம்மொடும்?

(b) கும்பகம் மேவியோன் குறித்த வீடணத்
தம்பியர் தம்மொடும் தருக்கும் வாசவன்
வெம்புயம் பிணித்தபோர் வீர னுதியாம்
உம்பரும் போற்றுதற் குரிய மைந்தரும்.

(c) மாலிய வான்முதல் வரம்பில் முந்தையோர்
மேலவர் தம்மொடும் விளங்கு சுற்றமாம்
சால்வுறு கிளையொடும் தழுவி மந்திரத்து
ஏலுறு மிராவண னிசைத்தல் மேயினான்.

இராவணன் மந்திரக்கிழவரை நோக்கி வருந்தியுரைத்தல் 6208—6211

6208. *தாழ்ச்சியிங் கிதனின்மேற் றருவ தென்னினி*
மாட்சியோர் குரங்கினு லழிதல் மாலைத்தே
யாட்சியு மமைவுமென் னரசு நன்றெனுச்
சூழ்ச்சியின் கிழவரை நோக்கிச் சொல்லுவான்.

'தாழ்ச்சியிங்கு இதனின்மேல் தருவது என்? இனி,
மாட்சி, ஓர் குரங்கினல் அழிதல் மாலைத்தே?
ஆட்சியும் அமைவும் என் அரசும் நன்று' எனுச்
சூழ்ச்சியின் கிழவரை நோக்கிச் சொல்லுவான்.

பொ:—(கொற்ற ஆணையான் ஆன இராவணன்) 'என் பெருமை ஒரு குரங்கினல் அழியுந்தன்மைத்தோ? இப்பெருமையழிவினும் இங்கே இனித்தாழ்வு விளைப்பது யாது? என் ஆட்சித்

திறமையும், அது நன்கமைதற்குரிய என் குண நிறைவும் என் அரச பதவியும் நன்று ' என்று (இகழ்ச்சி தோன்றக்) கூறுவாஞயினன்.

கு :—கொற்ற ஆணையான் என்னும் எழுவாய் அதிகாரத்தால் கொள்ளலாயிற்று. ஆணையான், மந்திரக் கிழவனை நோக்கி, மாட்சி ஓர் குரங்கிஞல் அழிதன் மாலைத்தே? இங்கு இனி இதனின்மேல் தாழ்ச்சி தருவது என்? எனச் சொல்லுவான் என இயையும். ஆட்சி- ஆளும் திறன். அமைவு-ஆட்சி சிறத்தற்குரிய குண நிறைவு. அரசு - அரச பதவி. நன்று என்பது குறிப்பு மொழியாய் இகழ்ச்சி குறித்தது. சூழ்ச்சியின் கிழவர் - மந்திரக்கிழவர். (11)

6209. சுட்டது குரங்கெரி சூறை யாடிடக்
கெட்டது கொடிநகர் கிளையு நண்பரும்
பட்டனர் பரிபவம் பரந்த தெங்கணு
மிட்டதிவ் வரியணை யிருந்த தென்னுடல்.

சுட்டது குரங்கு; எரி சூறையாடிடக்
கெட்டது கொடிநகர்; கிளையும் நண்பரும்
பட்டனர்; பரிபவம் பரந்தது எங்கணும்;
இட்டது இவ் அரியணை இருந்தது என் உடல்.

பொ :—குரங்கு சுட்டது; நெருப்புக் கொள்ளை கொள்ள, கொடிகள் கட்டப்பட்ட இலங்கை நகர் அழிந்தது; சுற்றத்தாரும் நட்டாரும் இறந்தனர்; அவமானம் எங்கும் பரவியது; இடப்பட்ட இச்சிங்காசனத்தில் என் உடல் இருந்தது.

கு :—எரி - நெருப்பு. சூறையாடல் - கொள்ளை கொள்ளல். பரிபவம் - அவமானம். அரியணை - சிங்காசனம். அரியணையிருந்த தென்னுடல் என்றது இத்தீய விளைவுகளைத் தடுக்கமாட்டாமையால் நான் உயிரோடிருந்தும் உயிரற்றவனேன் என்றவாறு. முன்செய்யுளில் தன் மாட்சியழிந்தமைக்கு வருந்திய இராவணன், மாட்சியழிந்த வாற்றினை விரித்துரைத்தமை இச்செய்யுள் முதல் 14-ஆம் செய்யுள் வரை பேசப்பட்டது. (12)

6210. ஊறுகின் றனகிண றுதிர மொண்ணக
ராறுகின் றிலதழ லகிலு நாவியுங்
கூறுமங் கையர்நறுங் கூந்த லின்சுறு
நாறுகின் றதுநுகர்ந் திருந்த நாமெலாம்.

ஊறுகின்றன கிணறு உதிரம்; ஒள் நகர்
ஆறுகின்றில தழல்; அகிலும் நாவியும்
கூறும் மங்கையர்நறுங் கூந்தலின் சுறு
நாறுகின்றது; நுகர்ந்திருந்தம் நாம் எலாம்.

பொ :—கிணறுகள் உதிரம் ஊறுகின்றன ; ஒள்ளிய (இலங்கை) நகரில் நெருப்பு அவியவில்லை ; அகிலும் கத்தூரிக் குழம்பும் கமழ்வது என்று கூறும் மங்கையருடைய நல்ல கூந்தல் சுறுநாற்றம் நாறுகின்றது ; இங்ஙனமாகவும் நாமனைவரும் உண்டுடுத்து இன்பம் நுகர்ந்து மகிழ்ந்திருந்தோம் !

கு :—அனுமனாற் கொல்லப்பட்ட அரக்கருடலினின்று பெருகிய உதிரம் குளமாய்த் தேங்கி நின்று கசிதலால் கிணறுகளில் உதிரம் ஊறுவதாயிற்று. அவன் இட்ட நெருப்பு இலங்கையில் இன்னும் அவிந்ததில்லை என்றவாறு. கூந்தலின் என்பதனுள் இன் சாரியை. சுறு - மயிரில் நெருப்புப் பற்றுதலால் எழும் நாற்றம். நுகர்ந்திருந்தம் - நுகர்ந்திருந்தோம். (13)

6211. *மற்றில தாயினு மலைந்த வானர*
மிற்றில தாகிய தென்னும் வார்த்தையும்
பெற்றிலம் பிறந்தில மென்னும் பேறலான்
முற்றுவ தென்னினிப் பழியின் மூழ்கினேம்.

மற்று இலது ஆயினும், 'மலைந்த வானரம்
இற்று இலது ஆகியது' என்னும் வார்த்தையும்
பெற்றிலம்; பிறந்திலம் என்னும் பேறலால்
முற்றுவது என் இனிப் பழியின் மூழ்கினேம்.

பொ :—வேறு சிறந்த செயல் நம்மால் செய்யப்படவில்லையாயினும், இங்கு வந்து போர் செய்த குரங்கு இறந்தொழிந்தது என்னும் பேச்சும் கேட்டிலோம் ; ஆதலால், பழிக்கடலில் அழுந்திய நாம், (பிறந்தும்) பிறவாதவராயினேம் என்ற பெருமையைத் தவிர வேறு அடைவதென் ?

கு :—குரங்கினை ஏவிய நரர் இருக்குமிடத்தே சென்று அவர் வலியழித்து வெற்றிகொண்டு மீண்டிலோமாயினும் என்பான், மற்றிலதாயினும் என்றான். புகழ் இழந்தமையின் பிறந்திலம் என்னும் பேறலால் முற்றுவது என் என்றான். பேறு இங்கே குறிப்பு மொழியாய்த் தீய பேற்றினை யுணர்த்தியது. முற்றுதல் அடைதல். என் - யாது. (14)

படைத்தலைவன் கூறுதல் 6212—6218

6212. என்றவ னியம்பலு மெழுந்தி றைஞ்சினான்
கன்றிய கருங்கழற் சேனை காவல
னொன்றுள துணர்த்துவ தொருங்கு கேளெனா
நின்றன னிகழ்த்தினன் புணர்ப்பி னெஞ்சினான்.

என்று அவன் இயம்பலும் எழுந்து இறைஞ்சினான்;
கன்றிய கருங்கழல் சேனை காவலன்,
'ஒன்று உளது உணர்த்துவது, ஒருங்கு கேள்' எனா,
நின்றனன், நிகழ்த்தினன், புணர்ப்புஇல் நெஞ்சினான்.

பொ:—என்று இராவணன் சொல்லுதலும், அவன் பேச்சால் வருந்திய பெருமை பொருந்திய வீரக் கழலையணிந்த சூழ்ச்சித் திறமற்ற மனமுடைய படைத்தலைவன், எழுந்து, இராவணனை வணங்கி, 'நினக்கு யான் தெரிவிப்பது ஒன்று உண்டு; முழுதும் கேட்பாயாக' என்று நின்று சொல்லுவானாயினான்.

கு:—பகைதெறுஞ் செயலில் முன்னிற்பவன் படைத் தலைவனாதலின், அவனே முதலிற் பேசுவானாயினான். படைத் தலைவன் பெயர் பிரகத்தன் என்று வான்மீகம் கூறும். கன்றுதல் - வருந்துதல். கருமை - பெருமை. ஒருங்கு - முழுதும். புணர்ப்பு - சூழ்ச்சி. கவிக்கூற்றாதலின் புணர்ப்பினெஞ்சினான் என்பதற்குச் சூழ்ச்சித் திறமற்ற மனமுடையனென்று பொருள் கூறலாயிற்று. புணர்ப்பின் நெஞ்சினான் என்றுகொண்டு சூழ்ச்சித் திறமுடைய மனத்தினன் என்று பொருளுரைப்பாரும் உண்டு. (15)

6213. வஞ்சனை மனிதரை யியற்றி வாணுதற்
பஞ்சினன் மெல்லடி மயிலைப் பற்றுத
லஞ்சினர் தொழிலென வறிவித் தேனது
தஞ்செனு வுணர்ந்திலை யுணருந் தன்மையோய்.

வஞ்சனை மனிதரை இயற்றி வாள் நுதல்
பஞ்சின் நல் மெல் அடி மயிலைப் பற்றுதல்
அஞ்சினர் தொழில் என அறிவித்தேன், அது
தஞ்சு எனா உணர்ந்திலை; உணரும் தன்மையோய்.

பொ:—நன்று தீதறியும் தன்மையினையுடையோய்! மனிதரை வஞ்சித்து ஒளி பொருந்திய நெற்றியினையும் செம்பஞ்சுக் குழம்பு

தீற்றிய அழகிய மெல்லிய அடியிணையும் உடைய மயில் போன்றவளாகிய சீதையைக் கவர்தல், அஞ்சினோர் செயலாகும் என்று முன்னே கூறினேன். அதனை நீ கொள்ளத்தக்கதென்று உணர்ந்திலை.

கு :—' உணருந்தன்மையோய் !. மனிதரை வஞ்சனை இயற்றி மயிலைப் பற்றுதல் அஞ்சினர் செயல் ' என அறிவித்தேன் ; அது தஞ்செனவுணர்ந்திலை என இயையும். உணரும் தன்மையோய் என்பது படைத் தலைவன் இராவணனைத் தன்முகமாக்கிக் கொள்ளும் விளிக்கூற்று. மனிதரை என்றது இராமலக்குவரை. மனிதரை வஞ்சனையியற்றுதலாவது சீதைக்கு உதவிசெய்ய இயலாதபடி பொன் மாஞல் இராமலக்குவரைத் தனித்தனி நெடுந் தூரத்தே பிரித்தல். மயில் என்றது சீதாபிராட்டியை. தஞ்சு - கொள்ளத் தக்கது. பஞ்சினன் மெல்லடி மயில் என்பதனோடு ' பஞ்சின் மெல்லடிப் பாவை ' (பெரிய பு. தடுத்தாட். 159) எனும் சேக்கிழார் வாக்கும், ' பஞ்சிமென்றளிரடிப்பாவை ' (417) என்னும் ஆசிரியர் கூற்றும் நோக்கத்தகும். (16)

6214. கரன்முதல் வீரரைக் கொன்ற கள்வரை
விரிகுழ லுங்கைமூக் கரிந்த வீரரைப்
பரிபவஞ் செய்ஞ்ஞரைப் படுக்க லாதுநீ
யரசிய லழிந்ததென் றயர்தி போலுமால்.

கரன்முதல் வீரரைக் கொன்ற கள்வரை
விரிகுழல் உங்கை மூக்கு அரிந்த வீரரைப்
பரிபவம் செய்ஞ்ஞரைப் படுக்கலாது, நீ
அரசியல் அழிந்தது என்று அயர்திபோலும் ஆல்.

பொ :—கரன் முதலிய வீரரைக் கொன்ற கள்வரும், விரித்த கூந்தலுடையளான உன் தங்கை சூர்ப்பணகையின் மூக்கையறுத்த வீரரும், நமக்கு அவமானத்தை ஆக்கியவருமாகிய அம்மனிதரைக் கொன்றொழிக்காமல், நீ உன் அரசியலழிந்தது என்று சோர்வுறுவாய் போலும்.

கு :—முன் மூன்றடிகளால், இராமலக்குவர் இழைத்த குற்றம் ஒன்றினொன்று பெரிது என்று காட்டி, அவர் கொன்று ஒழிக்கப்படத் தக்கவரே என்று விளக்கியவாறு. வேடத்தோடு பொருந்தாத செயலுடையவரென்பான், கள்வர் என்றான். விரிகுழலுங்கை என்பதனால், சூர்ப்பணகை கணவனையிழந்தவள் என்பது பெறவைத்த

வாறு. கணவனை யிழந்து தனியிருந்தாளொருத்தியை உறுப்பறுத்து மிகை செய்தவரும் வீரராவரோ! என்பது தோன்ற விரிகுழல் உங்கை மூக்கரிந்த வீரர் என்ருன். உங்கை - உன் தங்கை, என்றது சூர்ப்பணகையினை. பரிபவம் - அவமானம். செய்ஞ்ஞர் - செய்வோர். படுக்கிலாது - கொல்லாமல். உன் தங்கையின் மூக்கினை யரிந்ததேயன்றி, உன் தம்பி கரன் முதலியோரையும் கொன்று மேலும் ஒரு குரங்கை ஏவி நம் காவற் சோலையினையும் அழித்து, உன் மகன் அக்கன் முதலியோரையும் கொன்று, இலங்கையையும் எரிவித்து உன்னை அவமதித்த அந்த மனிதரை, அவர் இருக்குமிடத்தே சென்று கொன்று ஒழித்தலைச் செய்யாது, அரசியலழிந்தது என்று நீ இரங்குவது தகாது என்றவாறு. (17)

6215. தண்டமென் றொருபொருட் குரிய தக்கரைக்
கண்டவர் பொறுப்பரோ வுலகங் காவலர்
வண்டம ரலங்கலாய் வணங்கி வாழ்வரோ
விண்டவ ருறுவலி யடக்கும் வெம்மையோர்.

தண்டம் என்று ஒரு பொருட் குரிய தக்கரைக்
கண்டவர் பொறுப்பரோ? உலகம் காவலர்,
வண்டு அமர் அலங்கலாய்! வணங்கி வாழ்வரோ?
விண்டவர் உறுவலி அடக்கும் வெம்மையோர்.

பொ:—வண்டுகள் தங்கிய மாலையினை அணிந்தவனே! தண்டம் என்ற ஒரு செயலுக்கே உரியரான கள்வரைக் கண்டவரான உலகங் காக்கும் அரசர், அவர்களைத் தண்டியாது பொறுத்தமைதலை மேற்கொள்ளார்; பகைவருடைய மிக்க வலியினை அடக்கும் ஆற்றலுடையார் பகைவர்க்கு அடங்கி வாழார்.

கு:—தண்டம் - தண்டனை. பொருள் - செயல். தக்கர் - திருடர்; என்றது, இராமலக்குவரை. 'கரன் முதல் வீரரைக்கொன்ற கள்வரை' என்ருர் முன்னும். அலங்கல் - மாலை. விண்டவர் - பகைவர். உறுவலி - மிக்க வலிமை. வெம்மை - ஆற்றல்; 'உலக மூன்றுமென் வெம்மையினுண்டது' (அதிகாயன் வதை. 4) என்பதனுள்ளும் வெம்மை ஆற்றல் என்னும் பொருளிற் பயின்றமை காணலாம். தண்டித்தற்குரிய இராமலக்குவரை இதுவரை தண்டிக்காது விட்டது தவறு; இனியும் அவ்வாறு விட்டிருப்பது நம்மாற்றலுக்கு இழுக்கினை விளைக்கும் ஆதலின் உடனே அவரிருப்பிடம் சென்று அவரைக் கொன்று மீள்வதே கருமம் என்றவாறு. (18)

6216. செற்றன ரெதிரெழுந்
தேவர் தானவர்
கொற்றமும் வீரமும்
வலியுங் கூட்டற
முற்றிமூன் றுலகுக்கு
முதல்வ ஞயது
வெற்றியோ பொறைகொலோ
விளம்ப வேண்டுமால்.

செற்றனர் எதிர் எழும் தேவர் தானவர்
கொற்றமும் வீரமும் வலியும் கூட்டு அற,
முற்றி, மூன்றுலகுக்கும் முதல்வன் ஆயது,
வெற்றியோ? பொறைகொலோ? விளம்பவேண்டுமால்.

பொ :—சினந்து எதிர்வந்த தேவரும் அசுரருமாகியவருடைய வெற்றியும் வீரமும் வலிமையும் ஒருங்கு அழியச்செய்து, நீ மூன்றுலகுக்கும் தலைவனானது (பகைமேற் சென்று பெற்ற) வெற்றியாலோ? பொறைமேற் கொண்டிருந்தமையாலோ விளம்புக.

கு :—செறுதல் - சினத்தல். தானவர் - தனுவின் வழிவந்தோர்; அசுரர். முற்றுதல் - முடித்தல். வெற்றியாலோ பொறையாலோ என மூன்றனுருபு விரிக்க. தேவர் முதலியோர் மேற்சென்று பெற்ற வெற்றியால் மூன்றுலகுக்கும் தலைவனான நீ, தண்டித்தற்குரியரான இராமலக்குவர் மேற்சென்று அவரைக் கொன்று களையாது பொறுத்திருப்பது தகாது என்று வலியுறுத்தியவாறு. (19)

6217. விலங்கின ருயிர்கெட விலங்கி மீள்கிலா
திலங்கையி னினிதிருந் தின்பந் துய்த்துமேற்
குலங்கெழு காவல குரங்கிற் றங்குமோ
வுலங்குநம் மேல்வர வொழிக்கற் பாலதோ.

விலங்கினர் உயிர்கெட விலங்கி, மீள்கிலாது
இலங்கையின் இனிது இருந்து இன்பம் துய்த்துமேல்,
குலம் கெழு காவல! குரங்கில் தங்குமோ?
உலங்கும் நம்மேல் வரவு ஒழிக்கற்பாலதோ?

பொ :—குலம் விளங்குமாறு தோன்றிய அரசே! சென்று மாறுபட்ட பகைவருடைய உயிர் அழியக் கொன்று திரும்பாது, இலங்கை

யில் நன்கு தங்கி இன்பம் நுகர்ந்துகொண்டிருப்போமாயின், குரங்கி னளவில் நிற்குமோ? கொசுவும் நம்மேல் வருதல் விலக்கும் பான்மைத்தோ?

கு :—விலங்கினர் - மாறுபட்டோர். விலங்கி - கொன்று. துய்த்தல் - நுகர்தல். கெழு - விளக்கம். உலங்கு - கொசு. வரவு - வருதல். பகைமேற் சென்றடர்த்தல் செய்யாது தங்கினேமாயின், குரங்கு வந்து பொழிலை அழித்து, ஊரை எரித்து, நம்மை அவமதித்துச் சென்றதொடு போகாது; அதனினும் இழிந்த கொசுவும் வந்து நம் பெருமையழிக்கத் தலைப்படும் என்றவாறு. (20)

6218. போயின குரங்கினைத் தொடர்ந்து போயவ
ணேயின ருயிர்குடித் தெவ்வந் தீர்கிலம்
வாயினு மனத்தினும் வெறுத்து வாழ்துமே
லோயுநம் வலியென வுணரக் கூறினான்.

போயின குரங்கினைத் தொடர்ந்துபோய், அவண்
ஏயினர் உயிர்குடித்து, எவ்வம் தீர்கிலம்;
வாயினும் மனத்தினும் வெறுத்து வாழ்துமேல்
ஓயும் நம் வலி என உணரக் கூறினான்.

பொ :—சென்ற குரங்கைத் தொடர்ந்து அங்கே சென்று அதை ஏவியவருயிரை உண்டு, நமக்கு வந்த இளிவரவு நீங்காதேமாய், சொல்லினும் நினைவினும் வெறுப்பைப் புலப்படுத்தி வாழ்வோமாயின், நம் வலி குன்றும் என்று விளங்கவுரைத்தான்.

கு :—அவண் போய் என மாறுக. அவண் என்றது இராமலக்குவர் தங்கிய இடத்தை. ஏயினருயிரை ஒழித்தல் எளிது என்பது பட ஏயினருயிர் குடித்து என்றான். எவ்வம் - இளிவரவு. தீர்கிலம் என்பது தீர்கிலேமாய் என எச்சப்பொருள் தந்தது. வாய் என்றது சொல்லினை. மனம் என்றது நினைவினை. நம் வலி ஓயும் என இயையும். ஓய்தல் - குன்றுதல். (21)

52-இல் இச் செய்யுளின் பின்

6218 (a) பின்னுமொன் றுரைத்தனன் பிணங்கு மானிட
ரன்னவ ரல்லர்மற் றரக்க ரென்பதற்
கிந்நிலை பிடித்தனை யிறைவ நீயெனு
முன்னிரு பக்கனீ துரைத்து முற்றினான்.

என்று ஒரு மிகைச் செய்யுள் உளது.

மகோதரன் கூறுதல் 6219—6227

6219. மற்றவன் பின்னுற மகோத ரப்பெயர்க்
கற்றடந் தோளின னெரியுங் கண்ணினன்
முற்றுற நோக்கினன் முடிவு மன்னதாற்
கொற்றவ கேளென வினைய கூறினான்.

மற்று அவன் பின் உற மகோதரப் பெயர்க்
கல்தடம் தோளினன், எரியும் கண்ணினன்,
முற்றுஉற நோக்கினன், முடிவும் அன்னது ஆல்
கொற்றவ கேள் என இனைய கூறினான்.

பொ :—அவன் பின் மகோதரன் என்னும் பெயர் பூண்ட மலை போன்ற பெரிய தோள்களையுடையான், சினத்தீ கொழுந்துவிட்டெரியுங் கண்ணினனாய், வெற்றிவேந்தே! கேட்பாயாக ; முழுதும் நன்கு ஆராய்ந்தேன் ; துணிபொருளும் (படைத் தலைவன் கூறிய) அதுவே,' என்று, மேலும் இவற்றைச் சொல்லுவானாயினன்.

கு :—அவன்பின், மகோதரப் பெயர்க் கற்றடந்தோளினன், எரியும் கண்ணினன், கொற்றவ கேள்! முற்றுற நோக்கினன் ; முடிவும் அன்னதே ; என இனைய கூறினான் : என இயையும். மற்று அசை. அவன் என்றது படைத் தலைவனை. கல் - மலை. முற்றும் உற நோக்கினன் என உம்மை விரிக்க. முடிவு-துணிபொருள். அன்னது- அது ; என்றது இராமலக்குவர் இருக்குமிடம் சென்று, அவரை அழித்து மீளுதலே செய்யத்தக்கது என்று படைத்தலைவன் கூறியதை. இனைய - இவை ; என்றது பின்வரும் கவிகளிற் கூறுவதனை. (22)

6220. தேவரு மடங்கின ரியக்கர் சிந்தினர்
தாவருந் தானவர் தருக்குத் தாழ்ந்தனர்
யாவரு மிறைவரென் றிறைஞ்சு மேன்மையர்
மூவரு மொதுங்கின ருனக்கு மொய்ம்பினோய்.

தேவரும் அடங்கினர், இயக்கர் சிந்தினர்
தாஅரும் தானவர் தருக்குத் தாழ்ந்தனர்,
யாவரும் இறைவர் என்று இறைஞ்சும் மேன்மையர்
மூவரும் ஒதுங்கினர் உனக்கு மொய்ம்பினோய்.

பொ :—பேராற்றலுடையாய்! தேவரும் உனக்குக் கீழ்ப்படிந்தனர்; இயக்கர் வலியழிந்தனர்; கேடற்ற அசுரரும் வலிமை ஒடுங்கினர்; கடவுளர் என்று எல்லாரும் வணங்கும் பெருமையுடைய மும்மூர்த்திகளும் நேர் நிற்க மாட்டாது விலகினர்.

கு :—தேவரும் இயக்கரும் தானவரும் இராவணன் திக்குவிசயஞ் செய்த காலத்துத் தோற்றடங்கினமை உத்தரகாண்டத்தால் அறியலாம். தருக்கு - வலிமை. மூவர் அரி அயன் அரன் என்போர். (23)

6221. ஏற்றமென் பிறிதினி யெவர்க்கு மின்னுயிர்
மாற்றுறு முறைமைசால் வலியின் மாண்பமை
கூற்றுவன் றன்னுயிர் கொள்ளுங் கூற்றெனத்
தோற்றுநின் னேவறன் றலையிற் சூடுமால்.

[ஏற்றம் என் பிறிது இனி? எவர்க்கும் இன் உயிர்
மாற்றுறும் முறைமை சால் வலியின் மாண்பு அமை
கூற்றுவன், தன் உயிர் கொள்ளும் கூற்று எனத்
தோற்று, நின் ஏவல் தன் தலையில சூடும் ஆல்.

பொ :—எத்தகைப் பெருமையுடையாரையும் உயிரைப் போக்கும் இயல்பு வாய்ந்த வலிமையின் சிறப்பமைந்த எமனும், நீ தன்னுயிர் கொள்ளும் எமனென்று கருதி, உனக்குத் தோற்று உன் கட்டளையைத் தன் தலைமேற்றாங்கி நின்று செய்வான்; இனி, இதனினும் பெருமை வேறு யாது?

கு :—கூற்றுவன் (உன்னைத்) தன் உயிர் கொள்ளுங் கூற்று என்று (கருதி, நினக்குத்) தோற்று நின் ஏவல் தன் தலையில் சூடும்; இனிப் பிறிது ஏற்றம் என்? என இயைக்க. கூற்றுவனும் என உம்மை விரிக்க. (24)

6222. வெள்ளியங் கிரியினை விடையின் பாகனோ
டள்ளிவிண் டொடவெடுத் தார்த்த வாற்றலாய்
சுள்ளியி லிருந்துறை குரங்கின் றோள்வலிக்
கெள்ளுதி போலுநின் புயத்தை யெம்மொடும்.

வெள்ளி அம் கிரியினை விடையின் பாகனோடு
அள்ளி விண் தொட எடுத்து ஆர்த்த ஆற்றலாய்!

சுள்ளியில் இருந்து உறை குரங்கின் தோள்வலிக்கு
எள்ளுதிபோலும் நின் புயத்தை எம்மொடும்.

பொ :—விடையினை ஊர்பவனுன சிவபிரானுடன் வெள்ளி மலையினையும் (எளிதாகக்) கைக்கொண்டு வானளாவ எடுத்து வெற்றி முழக்கஞ் செய்த பேராற்றலுடையாய்! சிறிய மரக்கிளையில் தங்கி வாழும் குரங்கின் தோளாற்றலுக்கு இழிந்தவை என்று நின் தோளாற்றலை எங்கள் ஆற்றலோடு இகழ்தலாகாது.

கு :—வெள்ளியங்கிரி - கயிலாயம். விடையின் பாகன் - ஏறூரும் இறைவனுன சிவபிரான். அள்ளுதல் - கைக்கொள்ளல். ஆர்த்தல் - முழங்குதல். சுள்ளி - மரத்தின் சிறுகிளை. புயம் என்றது தோள் வலியை. (25)

6223. மண்ணினும் வானினு மற்று முற்றுநின்
கண்ணினி னீங்கினர் யாவர் கண்டவர்
நண்ணரும் வலத்தினர் யாவர் நாயக
வெண்ணில ரிறந்தவ ரெண்ண லாவதோ.

மண்ணினும் வானினும் மற்றும் முற்றும் நின்
கண்ணினின் நீங்கினர் யாவர் ? கண்டவர்
நண்ணரும் வலத்தினர் யாவர் ? நாயக !
எண்ணிலர் இறந்தவர் எண்ணல் ஆவதோ ?

பொ :—தலைவனே ! மண்ணுலகினும் விண்ணுலகினும் மற்றுமுள்ள உலகம் முழுவதினும் காணப்படுவோருள் உன் கண்ணோட்டத்தினின்று விலகினுர் எவர்? நின்னுல் கிட்டுதற்கரிய வலிமையுடையார் எவர்? நின்னைமதியாமல் இறந்தோரை எண்ணுதல் இயலுவதோ ?

கு :—நாயக மண் விண் முதலிய எல்லாவுலகினுள்ளாரும் நின் கண்ணோட்டத்தால் வாழ்பவரே ! நின்னுல் கிட்டுதற்கரிய வலிமையுடையார் ஒருவருமில்லை. நின்னை மதியாமல் இறந்துபட்டோரை எண்ணுதல் இயலாது என்றவாறு. கண்டவருள் எனவும் இறந்தவரை எனவும் உருபு விரிக்க. கண் - கண்ணோட்டம். வலம்-வலிமை. எண்ணல் - மதித்தல். எண்ணிலராய் இறந்தவர் என்க. எண்ணல் - அளவிடல். (26)

இச்செய்யுளின்பின் 52-ஆம் பிரதியில்

6223 (a) எரிவிழி நுதலினன் இசையும் நின்தவத்து
அருமைகண் டளித்தனன் அழிவி லாததோர்
பெருவர மென்றிடின் பேதை மானிடர்
இருவரும் குரங்குமென் செய்ய லாவதே
என்று ஒருமிகைச் செய்யுள் காணப்படுகிறது.

6224. இடுக்கிவ ணியம்புவ தில்லை யீண்டெனை
விடுக்குவை யாமெனிற் குரங்கை வேரறுத்
தொடுக்கரு மனிதரை யுயிருண் டுன்பகை
முடிக்குவென் யானென முடியக் கூறினான்.

இடுக்கு இவண் இயம்புவது இல்லை; ஈண்டுஎனை
விடுக்குவையாமெனில், குரங்கை வேர் அறுத்து,
ஒடுக்கரு மனிதரை உயிர் உண்டு, உன் பகை
முடிக்குவென் யான்' என முடியக் கூறினான்.

பொ :—'இங்கே (இனிச்) சொல்லத்தக்க துன்பம் இல்லை; இப்பொழுதே என்னை அனுப்புவையேல், குரங்கை வேரோடழித்துக் கெடுத்தற்கரிய மனிதரை உயிர் குடித்து, உன் பகையை ஒழிப்பேன்' என்றுதான் கூறவேண்டியவற்றையெல்லாம் சொன்னான்.

கு :—இடுக்கு - துன்பம். ஈண்டு - இப்போது. (27)

வச்சிரதந்தன் கூறுதல் 6225-6227

6225. இச்சிரத் தவனுரைத் திறுக்கு மெல்லையின்
வச்சிரத் தெயிற்றவன் வல்லை கூறினா
னச்சிரத் தைக்கொரு பொருளின் றாயினும்
பச்சிரத் தம்பொழி பருதிக் கண்ணினான்.

இச் சிரத்தவன் உரைத்து இறுக்கும் எல்லையின்
வச்சிரத்து எயிற்றவன் வல்லை கூறினான்
அச் சிரத்தைக்கு ஒரு பொருள் இன்று, ஆயினும்,
பச்சிரத்தம் பொழி பருதிக் கண்ணினான்.

பொ :—தலைமை வாய்ந்த இந்த மகோதரன் கூறி முடிக்கும் நிலையில் புதிய இரத்தம் சிந்துகின்ற சூரியன் போன்ற கண்களை

யுடையனை வச்சிரதந்தன் என்போன், அந்த உறுதியுரைகளுக்கு ஒரு பயன் இல்லையாயினும், விரைந்து கூறுவானாயினன்.

கு :—இச் சிரத்தவன் உரைத்திருக்குமெல்லையில், பச்சிரத்தம் பொழி பருதிக் கண்ணினன் வச்சிரத்தெயிற்றவன், அச்சிரத்தைக்கு ஒரு பொருளின்றுயினும் வல்லை கூறினன் என இயையும். சிரத்தவன் - தலைமை வாய்ந்தவன். இ, சுட்டு. இச்சிரத்தவன் என்றது மகோதரனை. உரைத்திறுத்தல் - கூறிமுடித்தல். எல்லை - பொழுது. வச்சிரத்து எயிற்றுவன் - வச்சிரதந்தன். வல்லை - விரைவு. அ, சுட்டு. சிரத்தை - உறுதி; அது உறுதியுரையெனப் பொருள்பட நின்றது. சிரத்தை என்பது உறுதியென்னும் பொருளில் பயிலுதல், 'இச்சிரத்தையைத் தொலைப்பனென்று' (சுந்தர. பாசப். 40) என முன்னும் வழங்கப்பட்டமையாலும் அறியத்தகும். (28)

6226. போயினி மனிசரைக் குரங்கைப் பூமியிற்
றேயுமின் கைகளாற் றின்மி னென்றெமை
யேயினை யிருக்குவ தன்றி யென்னினி
யாயுமி தெம்வயி னயிர்ப்புண் டாங்கொலோ.

'போய், இனி, மனிசரைக் குரங்கைப் பூமியில்
தேயுமின் கைகளால், தின்மின்' என்று எமை
ஏயினை, இருக்குவது அன்றி, என் இனி
ஆயும் இது? எம் வயின் அயிர்ப்பு உண்டாங்கொலோ?

பொ :—'இப்பொழுதே சென்று, மனிதரையும் குரங்கையும் நிலத்தில் கைகளால் தேய் (த்துக் கொல்லு) மின்; தின்னுமின்' என்று எங்களை ஏவிவிட்டிருப்பதன்றி, மேலும் ஆராய்வது என்? எங்கள்மேல் ஐயப்பாடுண்டோ?

கு :—இனிப்போய் என மாறுக. இனி - இப்பொழுதே; 'கேளினி' (பத்துப். மலைபடு. 94) என்பதனுள் இனி இப்பொழுது என்னும் பொருளிற் பயின்றமை காணலாம். ஏயினை - ஏவி. 'இனி ஆயும் இது என்' என்க. மகோதரன் முதலியோரையும் உளப் படுத்தி, 'எம்வயின்' என்றுன். அயிர்ப்பு - ஐயம். பகைவரை யழிக்குமாறு எங்களை யேவுதலன்றி ஆராய்தற்கு ஒன்றும் இல்லை என்றவாறு. (29)

6227. எவ்வுல கத்துநின் னேவல் கேட்கிலாத்
தெவ்வினை யறுத்துனக் கடிமை செய்தயான்

றவ்வின பணியுள தாகத் தான்கொலோ
விவ்வினை யென்வயி னீக லாதென்றான்.

எவ்வுலகத்தும் நின் ஏவல் கேட்கிலாத்
தெவ்வினை அறுத்து உனக்கு அடிமை செய்த யான்
தவ்வின பணி உளதாகத்தான்கொலோ
இவ்வினை என்வயின் ஈகலாது என்றான்.

பொ :—'எந்த உலகத்தும் நின் கட்டளையினை யுணர்ந்து அதன் படி நடவாத பகைவரை யழித்து, உனக்கு அடிமை செய்த யான், தவறிய பணியுள்ளமையாலோ இப்பணியை என்னிடம் தரா தொழிந்தது'? என்றான்.

கு :—தெவ் - பகை. தவ்வுதல் - தவறுதல். இவ்வினை - இப்பணி; என்றது மனிதரையும் குரங்கினையும் அழித்து மீளுதலை. ஈகலாதது என்பது ஈகலாது என நின்றது விகாரம். மனிதரையும் குரங்கையும் அழித்து மீளும்படி என்னை ஏவுக என்றவாறு. (30)

துன்முகன் சொல்லுதல் 6228-6234

6228. நின்னிலென் றவன்றனை விலக்கி நீயிவை
யென்முனு மெளியர்போ லிறுத்தி யோவெனு
மன்முக நோக்கினன் வணங்கி வன்மையாற்
றுன்முக னென்பவ னினைய சொல்லினான்.

'நில் நில்' என்று அவன்றனை விலக்கி, 'நீ இவை
என்முனும் எளியர்போல் இறுத்தியோ ?' எனு
மன்முகம் நோக்கினன் வணங்கி வன்மையால்,
துன்முகன் என்பவன் இனைய சொல்லினான்.

பொ :—துன்முகன் என்பவன், 'நில் நில் என்று அவ்வச்சிர தந்தனை விலக்கி அரச(னை இராவண)னை நோக்கி வணங்கி, 'நீ சொற்களை என் எதிரிலும், எளியவர் போலப் பேசலாகுமோ' என்று இத்தகைய வுரைகளைச் சினத்தொடு கூறுவானாயினன்.

கு :—துன்முகன் என்பவன், அவன்றனை 'நில் நில்' என விலக்கி, மன்முக நோக்கினன் வணங்கி, 'நீ என்முனும், எளியர் போல் நீ இவை இறுத்தியோ?' என இனையன வன்மையால் சொல்லினான் என இயையும். அவன் என்றது வச்சிரதந்தனை. இறுத்தல் - சொல்லுதல். மன் என்றது இராவணனை. இனைய

என்றது பின்வருங் கவிகளில் கூறுவனவற்றை. வன்மை - சினம். பணியாளர் முன் தலைவன் தன் குறை தோன்றப் பேசல் தகாது என்பது தோன்ற, 'நீ என் முனும் எளியர்போல் இவை இறுத்தியோ?' என்றனன். (31)

6229. திக்கயம் வலியில தேவர் மெல்லியர்
முக்கணன் கயிலையு முரணின் றுயது
மக்களுங் குரங்குமே வலிய வாமெனி
னக்கட விராவணற் கமைந்த வாற்றலே.

திக்கயம் வலி இல; தேவர் மெல்லியர்;
முக்கணன் கயிலையும் முரண் இன்றுயது;
மக்களும் குரங்குமே வலியவாம் எனின்
அக்கட! இராவணற்கு அமைந்த ஆற்றலே.

பொ :—இராவண (வேந்த)ற்குத் திசையானைகளும் வலியில்லா தனவாயின; தேவர்களும் மென்மைத்தன்மையுடையராயினர்; மூன்று கண்களையுடைய சிவபெருமான், தங்கிய வெள்ளி மலையும் வலியிலதாயிற்று; மக்களும் குரங்கும் ஆகிய இவை மட்டும் வலிமையுடையவாயின எனின், அவ்வேந்தற்கு அமைந்த வலிமை அதிசயிக்கத்தக்கதே.

கு :—திக்கயம்-திசையானைகள். முக்கணன்-சிவபிரான். முரண்-வலிமை. மக்களும் குரங்கும் என உயர்திணையும் அஃறிணையும் விரவிச் சினத்தினுல் வலிய என அஃறிணை முடிபேற்றன. அக்கட என்பது அதிசயம் என்று பொருள் தருவதொரு திசைச்சொல் என்பர். திசையானைகளையும் தேவரையும் வெள்ளி மலையினையும் நிலைகுலைவித்து வென்ற இராவணன், மனிதரையும் குரங்கையும் மதித்து ஆலோசிக்க முற்பட்டது தகாது என்று பரிகசித்தவாறு. (32)

6230. பொலிவது பொதுவுற வெண்ணும் புன்றொழின்
மெலியவர் கடனமக் கிறுதி வேண்டுவார்
வலியின ரெனினவர்க் கொதுங்கி வாழ்துமோ
வொலிகழ லொருவநம் முயிருக் கன்பினுல்.

பொலிவது பொதுவுற எண்ணும் புன்தொழில்
மெலியவர் கடன்; நமக்கு இறுதி வேண்டுவார்
வலியினர் எனின், அவர்க்கு ஒதுங்கி வாழ்துமோ
ஒலிகழல் ஒருவ! நம் உயிருக்கு அன்பினுல்.

பொ :—ஒலிக்கின்ற வீரக் கழலணிந்த ஒப்பற்ற பெருந் தலைவனே! வருங்கால நிகழ்ச்சிகளை நடுநின்று ஆராயும் இழிதொழில் வலியற்ருர் கடமையாகும். நமக்கு அழிவை விரும்பும் பகைவர் ஆற்றலுடையரெனின், நம் உயிர்மேல் வைத்த அன்பினுல் அவர் திறத்து எதிர்ப்படாது மறைந்து வாழ்தலைச் செய்வேமோ?

கு :—ஒலிகழலொருவ! பொலிவது பொதுவுற எண்ணும் புன்தொழில் மெலியவர் கடன்; நமக்கு இறுதி வேண்டுவார், வலியினரெனின், நம் உயிருக்கு அன்பினுல் அவர்க்கு ஒதுங்கி வாழ்துமோ? என இயைக்க. ஒலிகழல் ஒருவ என்பது இராவணனைத் தன் முகமாக்கிக்கொள்ளும் துன்முகன் விளிக்கூற்று. பொலிவது - வருங்கால நிகழ்ச்சி. பொது - நடுநிலை. (33)

6231. கண்ணிய மந்திரக் கருமங் காவல
மண்ணியன் மனிசருங் குரங்கு மற்றுநா
முண்ணிய வமைந்தன வுணவுக் குட்குமேற்
றிண்ணிய வரக்கரிற் றீரர் யாவரே.

கண்ணிய மந்திரக் கருமம், காவல!
மண் இயல் மனிசரும் குரங்கும் மற்றும்; நாம்
உண்ணிய அமைந்தன, உணவுக்கு உட்குமேல்,
திண்ணிய அரக்கரில் தீரர் யாவரே.

பொ :—அரசே! நாம் கருதிய மந்திராலோசனையாகிய செயல், நிலத்தில் திரியும் மனிதரும் குரங்கும் பிறவும் பற்றி நிகழ்ந்தது; மனிதரும் குரங்கும் மற்றும் ஆகிய அவை, நாம் உண்ணுதற்கு அமைந்தவை; நாம் உண்ணும் உணவுப் பொருளுக்கு அஞ்சி ஆலோசிப்போமாயின், வலிய அரக்கராகிய நம்மினும் வீரர் எவர்?

கு :—கண்ணுதல் - கருதுதல். மந்திரக் கருமம் - மந்திரமாகிய செயல். மந்திரக் கருமம் மனிசரும் குரங்கும் மற்றும் பற்றி நிகழ்ந்தது என்க. மனிசரும் குரங்கும் மற்றும் என்பது இடைநிலை விளக்காய் முன்னும் பின்னும் இயைந்து பொருள்பட நின்றது. உண்ணிய - உண்ணும் பொருட்டு. உட்குதல் - அஞ்சுதல். மண்ணியல் மனிசர் என்றது, வானிலும் இயங்கவல்ல தம்மினும்,

நிலத்தின் மட்டும் இயங்கவல்ல மனிசரின் ஆற்றலிற் குறை தோன்றக் கூறியவாறு. அரக்கரில் தீரர் யாவரே? என்பது குறிப் பால் இகழ்ச்சி தோன்ற நின்றது. நாம் உண்ணும் உணவுக்கு அஞ்சி ஆலோசித்தல் தக்கதன்று என்றவாறு. (34)

6232. எரியுற மடுப்பது மெதிர்ந்து ளோர்படப்
பொருதொழில் யாவையும் புரிந்து போவதும்
வருவதுங் குரங்குநம் வாழ்க்கை யூர்கடந்
தரிதுகொ லிராக்கதர்க் காழி நீந்துதல்.

எரி உற மடுப்பதும், எதிர்ந்துளோர் படப்
பொரு தொழில் யாவையும் புரிந்து போவதும்,
வருவதும், குரங்கு ; நம் வாழ்க்கையூர் கடந்து
அரிதுகொல் இராக்கதர்க்கு ஆழி நீந்துதல்?

பொ :—நாம் தங்கிய இலங்கை நகர்க்கு வருவதும் ஊர் முழுதும் தீ மூட்டுவதும், எதிர்த்தவர் இறக்கும்படி போர்த்தொழிலெல்லாம் செய்து கடந்து போவதும் ஒரு குரங்கின் செயலாயிற்று. அரக்க ராகிய நமக்குக் கடலைக் கடத்தல் அரிதோ?

கு :—நம் வாழ்க்கை யூர் வருவதும், எரியுற மடுப்பதும், எதிர்ந் துளோர்படப் பொருதொழில் யாவையும் புரிந்து கடந்து போவதும் குரங்கு ; இராக்கதர்க்கு ஆழி நீந்துதல் அரிதுகொல் என இயைக்க. குரங்கினையும் மனிதரையும் நொந்து பொழுது கழித்தல் பழுதாகும். அம்மனிதரிருக்கு மிடஞ்சென்று அவரையும் குரங்கையும் கொன்று மீளுதலே செய்யத்தக்கது என்றவாறு. (35)

6233. வந்துந மிருக்கையு மரணும் வன்மையும்
வெந்தொழிற் றானையின் விரிவும் வீரமுஞ்
சிந்தையி னுணர்பவர் யாவ ரேசில
ருய்ந்துதம் முயிர்கொடிவ் வுலகத் துள்ளுளார்.

வந்து நம் இருக்கையும் அரணும் வன்மையும்
வெம் தொழில் தானையின் விரிவும் வீரமும்
சிந்தையின் உணர்பவர் யாவரே சிலர்
உய்ந்து தம் உயிர் கொடு இவ்வுலகத்துள் உளார்.

பொ :—நம் இலங்கை நகர்க்கு வந்து உன் மாளிகையையும் அதற்குரிய அரண்களையும் உன் வலிமையினையும் கொடிய போர்த் தொழில் வல்ல படையின் விரிவையும் அதன் ஆற்றலையும் மனத்திலே பதியக்கண்டு அறிபவர் எவர் சிலர்தாம் (அரண்களையும் ஆற்றலையும் படை வீரரையும் அவர்தம் வீரத்தையும் கடந்து) உயிர் கொண்டு இவ்வுலகத்துள் உள்ளவராயினர்? (ஒருவரும் இல்லை)

கு :—இதுவரை யாரும் நமக்கு அஞ்சினமையால், நம் இருக்கை முதலியவற்றை நினைத்தாரில்லை; அப்படி நினைந்தவர் இறந்தவராயினர்; அவ்வாறாகவும் ஒரு குரங்கு வந்து அறிந்து சென்று, மனிதர்க்குத் தெரிவித்ததெனின், அம்மனிதரையும் குரங்கினையும் இப்பொழுதே சென்று கொன்றொழிக்க வேண்டும் என்றவாறு. (36)

6234. ஒல்வது நினையினு முறுதி யோரினும்
வெல்வது விரும்பினும் வினையம் வேண்டினுஞ்
செல்வதங் கவருழைச் சென்று தீர்ந்தறக்
கொல்வது கருமமென் றுணரக் கூறினான்.

ஒல்வது நினையினும் உறுதி ஓரினும்
வெல்வது விரும்பினும் வினையம் வேண்டினும்,
செவ்வது, அங்கு; அவர் உழைச்சென்று, தீர்ந்து அறக்
கொல்வது கருமம் என்று உணரக் கூறினான்.

பொ :—பொருந்துமாற்றை எண்ணினும், நம் நன்மையினை நினையினும், வெற்றியடைவதை விரும்பினாலும், அவ்வெற்றிக்குரிய சூழ்ச்சியை விரும்பினாலும், அங்கே அவர் இருக்குமிடத்துக்குச் செல்வதும், சென்று அவர் இறந்தழியக் கொல்வதும் செய்யத்தக்க செயல் என்று விளங்கச் சொன்னான்.

கு :—ஒல்வது-பொருந்துவது. உறுதி-நன்மை. "புத்தேளாவதே யுறுதி யென்றான்" (சீவக சிந்தா. 1235) என்பதில் உறுதி - நன்மை என்ற பொருளிற் பயின்றமை காணலாம். வினையம் - சூழ்ச்சி. கருமம் - செய்யத்தக்க செயல். (37)

மகா பார்சுவன் கூறுதல் 6235-6238

6235. காவலன் கண்ணெதி ரவனைக் கைகவித்
தியாவதுண் டினிநமக் கென்னச் சொல்லினான்

கோவமும் வன்மையுங் குரங்குக் கேயெனு
மாபெரும் பக்கனென் றொருவன் வன்மையான்.

காவலன் கண் எதிர் அவனைக் கை கவித்து,
'யாவது உண்டு; இனி நமக்கு? என்னச் சொல்லினன்
'கோவமும் வன்மையும் குரங்குக்கே' என
மா பெரும் பக்கன், என்று ஒருவன் வன்மையான்.

பொ:—பெருமையுடைய மகா பார்சுவன் என்று பாராட்டப்படும் ஆற்றலுடையான் ஒருவன், இராவணன் கண்ணெதிர் அத் துன்முகனை நீ கூறியது போதும் என்று கை கவித்து அடக்கி, (ஒரு குரங்கின் செயலுக்கு நாம் வருந்தி மந்திராலோசனை செய்வதாயின்) இனி நமக்கு என்ன (பெருமை) உண்டு? எனவும், சினமும் ஆற்றலும் குரங்குக்கே தனியுரிமையோ? எனவும் கூறுவானாயினன்.

கு:—காவலன் - அரசன்; இராவணன். அவன் என்றது துன்முகனை. கை கவித்தல் - கையைக் கவிததுக் காட்டி மேலும் பேசாதவாறு அடக்குதல். பெரும் பக்கன் என்பது, மகா பார்சுவன் என்பதன் தமிழாக்கம். கோவம் - கோபம்; சினம். கோபம் என்பது எதுகை நோக்கிக் கோவம் என நின்றது. 'மாபெரும் பக்கன்' என்று வன்மையான் ஒருவன், அவனைக் கைகவித்து என்ன, எனச் சொல்லினன் என இயையும். ஒரு குரங்கின் செயலுக்கு வருந்தி நாம் மந்திராலோசனை செய்தல் தகாது; செய்தால் நமக்கு ஓராற்றானும் பெருமையின்றாகும். சினமும் ஆற்றலும் குரங்குக்கே தனியுரிமையாகா; நமக்கும் சினமும் ஆற்றலும் உண்டு; சினந்தெழுந்து சென்று குரங்கினையும் அதனை ஏவிய மனிதரையும் கொன்று தின்றொழித்தலே செய்யத்தகுவது என்றவாறு. (38)

6236. முந்தினர் முரணிலர் சிலவர் மொய்யமர்
நந்தினர் தம்மொடு நனிந டந்ததோ
வந்தொரு குரங்கிடு தீயின் வன்மையால்
வெந்ததோ விலங்கையோ டரக்கர் வெம்மையும்.

முந்தினர் முரண் இலர் சிலவர் மொய் அமர்
நந்தினர் தம்மொடு நனி நடந்ததோ?
வந்து ஒரு குரங்கு இடு தீயின் வன்மையால்
வெந்ததோ? இலங்கையோடு அரக்கர் வெம்மையும்.

பொ :—முற்பட்டுச் சென்றவரும் வலிமையற்றவரும் நெருங்கிய போரில் இறந்துபட்டவருமான அரக்கர் சிலரொடு மற்றை அரக்கராற்றலும் மிகவும் விலகிச் சென்று விட்டதோ? அன்றி, ஒரு குரங்கு வந்து இட்ட தீயின் வெம்மையால் இலங்கை நகரோடு அரக்கருடைய ஆற்றலும் வெந்தொழிந்ததோ ?

கு :—முரண்-வலிமை. சிலவர்-சிலர். நந்தல்-கேடு. வெம்மை-ஆற்றல். அரக்கர் வெம்மையும் என்பது, நந்தினர் தம்மொடு அரக்கர் வெம்மையும் நனிநடந்ததோ ? எனவும், இலங்கையோடு அரக்கர் வெம்மையும் வெந்ததோ? எனவும் ஈரிடத்துங் கூட்டிக் கொள்ள நின்றது. முன் குரங்கொடு பொருது இறந்தவரோடு அரக்கரனைவரும் இறந்துவிடவில்லை ; இலங்கையோடு அரக்கராற்றலும் வெந்தொழியவில்லை ; ஆதலால் நம் வலிகொண்டு அக் குரங்கினையும் அதனையேவிய மனிதரையும் அழித்தொழிப்போம் என்றவாறு. (39)

6237. மானிட ரேவுவார் குரங்குவந் திவ்வூர்
தானெரி மடுப்பது நிருதர் தானையே
யானவ ரதுகுறித் தழுங்கு வாரெனின்
மேனிகழ் தக்கன விளம்ப வேண்டுமோ.

மானிடர் ஏவுவார், குரங்கு வந்து இவ்வூர்-
தான் எரிமடுப்பது, நிருதர் தானையே
ஆனவர் அது குறித்து அழுங்குவார்—எனின்,
மேல் நிகழ்தக்கன விளம்ப வேண்டுமோ ?

பொ :—ஏவுவோர் மனிதர் ; (அவர் ஏவ) இந்த ஊரில் வந்து நெருப்பிடுவது குரங்கு ; அதனை எண்ணி வருந்துபவர் அரக்கர் படையின்கண் உள்ள வீரர்—என்றால் இனி நிகழத்தக்கவற்றைச் சொல்லவும் வேண்டுமோ ?

கு:—ஏவியவரோ வலி குறைந்த மானிடர், நமக்கு உணவாதற்கு உரியவர் ; அவரும் இருவரே. அவர் ஏவ வந்து இவ்வூரில் நெருப்பிட்டதும் ஒரு குரங்கு ; அதுபற்றி அரக்கர் படைவீரர் வருந்துதல் தகாது ; வருந்துவராயின், மேலும் பல தீங்குகள் விளையும் என்றவாறு. எரிமடுத்தல் - தீ வைத்தல். நிருதர் - அரக்கர். தானை-படை. அழுங்குதல் - வருந்துதல். ஏவுவார் மானிடர், இவ்வூர் வந்து எரிமடுப்பது குரங்கு; அதுகுறித்தழுங்குவார் நிருதர் தானையே யானவர் என இயைக்க. தான் அசை. (40)

52-ல் இச் செய்யுளின் பின்

6237. (a) கறைமிடற் றிறையன்று கமலத் தேவன்று
நிறைகடற் றுயில்பர னன்று நின்றுவாழ்
சிறுதொழிற் குரங்கொடு சிறிய மானிடர்
உறுதிறத் துணர்ச்சியி னுறுதி யாவதோ.

என்று ஒரு மிகைச்செய்யுளுள்ளது.

6238. நின்றுநின் றிவைசில விளம்ப நேர்கில
னன்றினி நரரொடு குரங்கை நாமறக்
கொன்றுதின் றல்லதோ ரெண்ணங் கூடுமோ
வென்றன னிகல்குறித் தெரியுங் கண்ணினான்.

நின்று நின்று இவை சில விளம்ப நேர்கிலன்,
'நன்று, இனி நரரொடு குரங்கை நாம் அறக்
கொன்று தின்று அல்லது ஓர் எண்ணம் கூடுமோ ?'
என்றனன் ; இகல் குறித்து எரியும் கண்ணினான்.

பொ :—பகையை நினைந்து சினக்கனல் கொழுந்துவிட்டெரி கின்ற கண்ணினனான மகா பார்சுவன், 'ஒருவர் பின் ஒருவராக நின்று நின்று இவைபோலும் சில சொற்களைச் சொல்ல வுடம் படேன் ; இனி, மனிதரையும் குரங்கையும் பெயரும் அழியக் கொன்று நன்றாக வுண்டபின் அன்றி வேறு எந்த நினைவும் தகாது என்றான்.

கு :—இனி, நரரொடு குரங்கை நாம் அறக் கொன்று நன்று தின்று என இயைக்க. நேர்தல் - இசைதல். இகல் - பகை. குறித்தல் - நினைத்தல். 'நாமம் என்பது நாம் என விகாரப்பட்டு நின்றது. நின்று நின்று இவை சில என்றது, தனக்கு முன் ஒருவர் பின் ஒருவராய் நின்று சொல்லியவற்றை. இவ்வாறு பேசிப் பேசிப் பொழுதைக் கழிப்பதை யான் இசையேன் ; மனிதரையும் குரங்கை யும் இப்பொழுதே அழிக்குஞ் செயலில் முற்படுவதே தகும் என்று மகா பார்சுவன் தன் கருத்துரைத்தவாறு. (41)

பிசாசன் பேசுதல்

6239. திசாதிசை போதுநா மரசன் செய்வினை
யுசாவின னுட்கின னொழிதும் வாழ்வென்றான்

பிசாசனென் றொருபெயர் பெற்ற பெய்கழ
னிசாசர னுருப்புணர் நெருப்பி னீர்மையான்.

'திசாதிசை போதும் நாம்; அரசன் செய்வினை
உசாவினன், உட்கினன்; ஒழிதும் வாழ்வு' என்றான்;
பிசாசன் என்று ஒரு பெயர் பெற்ற பெய்கழல்
நிசாசரன் உருப்புணர் நெருப்பின் நீர்மையான்.

பொ:—பிசாசன் என்று சொல்லப்படுகிற ஒரு பெயரைப் பெற்ற - அணிந்த வீரக் கழலையுடைய - அரக்கனுருவைப்பெற்ற நெருப்பின்றன்மையான், 'அரசன், (இலங்கை யெரியுண்டது முதலிய வற்றால்) நாணியவனாய்ச் செய்யத்தக்க செயல் எதுவென்று வினவுவானாயினன்; ஆதலால் நாம் வேறு வேறு திசைகளிற் செல்வோம்; சென்று நம் வாழ்வையும் ஒழிவோம்' என்று கூறுவானாயினன்.

கு:—வந்த குரங்கைத் தக்க வீரரையேவிக் கொன்றொழித்திருக்க வேண்டும்; அது செய்யாவிடினும், குரங்கையும் அதனை ஏவிய மனிதரையும் கொன்று மீளுமாறு நமக்குக் கட்டளையிட்டிருக்க வேண்டும்; அதுவும் செய்யாமல் நாணியவனாய் அமைச்சர் முதலியோரைக் கூட்டி அரசன் செய்வினை உசாவினமையின், நம் ஆற்றல் மதிக்கப்படவில்லை என்னும் கருத்தால், 'திசா திசை போதும், ஒழிதும் வாழ்வு' என்று மற்றையோரை நோக்கிப் பிசாசன் கூறுவானாயினன். திசா - திசை; வடசொல். உசாவுதல் - வினவுதல். உட்கு - நாண். நிசாசரன் - இரவில் இயங்குபவன்—அரக்கன். புணர்தல் - அடைதல். 'பிசாசன் என்று ஒரு பெயர்பெற்ற......... நெருப்பின் நீர்மையான், அரசன் உட்கினன், செய்வினை உசாவினன்; (ஆதலின்) நாம் திசாதிசை போதும்; வாழ்வு ஒழிதும்' என்றான் என இயைக்க. (42)

சூரியசத்துரு சொல்லுதல்

6240. ஆரியன் றன்மையீ தாயி னாய்வுறு
காரிய மீதெனிற் கண்ட வாற்றினாற்
சீரியர் மனிதரே சிறியம் யாமெனச்
சூரியன் பகைஞனென் றொருவன் சொல்லினான்.

'ஆரியன் தன்மை ஈது ஆயின், ஆய்வுறு
காரியம் ஈது எனின், கண்ட ஆற்றினால்,

சீரியர் மனிதரே; சிறியம் யாம்' எனச்
சூரியன்பகைஞன் என்று ஒருவன், சொல்லினன்.

பொ :—சூரிய சத்துரு என்று பெயர் பெற்ற ஒருவன், 'உயர்ந்தோனுன அரசன் இயல்பு (ஒரு குரங்கின் செயலுக்கு) இவ்வாறு வருந்துவதாயின், (அக்குரங்கையும் அதனையேவிய மனிதரையும் வெல்லுவது கருதி) இப்போது ஆராய்ச்சி நிகழ்வதாயின், இது கொண்டு ஆராயும் நெறியால் மனிதர் சிறந்தோராவர்; நாம் சிறுமையுடையோமாவோம்? என்று கூறினன்.

கு:—ஆரியன் - உயர்ந்தோன்; என்றது இராவணனை. குரங்கின் செயலை நினைந்து கவலுதலும் அதையும் அதை ஏவிய மனிதரையும் அழிக்க ஆலோசித்தலும் நம்மைத் தாழ்த்தி மனிதரையுயர்த்தும் என்பது புலப்படச் சீரியர் மனிதரே! சிறியம் யாம் என்முன். (43)

வேள்வியின் பகைவன் விளம்புதல்

6241 ஆள்வினை நிலைமையு மரக்க ராற்றலுந்
தாழ்வினை யிதனின்மேற் பகரத் தக்கதோ
சூழ்வினை மனிதராற் ருேன்றிற் ருமென
வேள்வியின் பகைஞனு முரைத்து வெள்கினன்.

'ஆள் வினை நிலைமையும் அரக்கர் ஆற்றலும்
தாழ்வினை இதனின் மேல் பகரத் தக்கதோ
சூழ்வினை மனிதரால் தோன்றிற்ரும்' என,
வேள்வியின் பகைஞனும் உரைத்து வெள்கினன்.

பொ :—வேள்வியின் பகைஞன் என்பானேரரக்கனும், 'இம் மந்திர கருமம் மனிதர் காரணமாக நிகழ்ந்ததாம்; நம் ஆட்சியின் உயர்ந்த நிலைமையும் அரக்கருடைய வலிமையும் இழிதற்குரிய செயல் இதன் மேலும் வேறு சொல்லத்தக்கது உண்டோ?' என்று கூறி, (அத்தாழ்வு குறித்து) நாணினன்.

கு :—வேள்வியின் பகைஞனும், சூழ்வினை மனிதரால் தோன்றிற்ரும்; ஆள்வினை நிலைமையும் அரக்கராற்றலும் தாழ்வினை இதனின் மேல் பகரத்தக்கதோ? என உரைத்து வெள்கினன்: என இயைக்க. தோன்றிற்ரும் என்பதனுள் ஆம் என்பது, மனிதரை வெல்லுதல் குறித்து மந்திராலோசனை செய்தல் வேள்வியின் பகைஞனுக்கு உடம்பாடன்று என்பது குறித்து நின்றது. 'ஓய்வான் இன்னுயிர் உய்வானும்', 'கைத்தோடுஞ் சிறை கற்போயை

வைத்தோன் இன்னுயிர் வாழ்வானும்' (சுந்தர. சூடா. 40, 41) என்பவற்றுள்ளும் ஆம் இப்பொருளிற் பயின்றமை காணலாம். வேள்வியின் பகைஞன் என்பது, வேள்வியை யழிப்பவன் என்னும் பொருளுடைய யஜ்ஞஹா என்னும் வடமொழிப் பெயரின் தமிழாக்கம். வான்மீகத்துள், இராவணனுடைய மந்திராலோசனையில் யஜ்ஞஹா என்னும் பெயருடைய அரக்கனொருவன் கலந்துகொண்டமை பேசப் பட்டதும் இங்கு நோக்கத்தகும். (44)

புகைநிறக் கண்ணன் புகலுதல்

6242. தொகைநிறக் குரங்குடை மனிதர்ச் சொல்லியென்
சிகைநிறச் சூலிதன் றிறத்துச் செல்லினுந்
தகைநிறத் தெண்ணலன் சமைத னன்றெனப்
புகைநிறக் கண்ணனும் புகன்று பொங்கினான்.

'தொகை நிறக் குரங்கு உடை மனிதர்ச் சொல்லி என்?
சிகை நிறச் சூலி தன் திறத்துச் செல்லினும்,
தகை நிறத்து எண்ணலன்; சமைதல் நன்று' எனப்
புகைநிறக் கண்ணனும் புகன்று பொங்கினான்.

பொ :—தூமிராட்சன் என்பவனும், 'தீக்கொழுந்துபோலும் நிறத்தினையுடைய சூலப்படையினனான சிவபிரான் மேற்செல்லினும், தக்க புகழின் பகுதியுடையதாக எண்ணேன்; ஆதலால், கூட்டமான நிறமுள்ள குரங்குகளையுடைய மனிதர் மேற் செல்லல் ஒண்ணாது என்பது பேசுதலால் பயனில்லை. (மனிதரும் குரங்குகளும் நம்மிடம் வரும்வரை) அமைந்திருத்தலே நல்லது' என்று கூறிக் கொதித்தான்.

கு :—புகைநிறக் கண்ணனும், சிகைநிறச் சூலிதன் திறத்துச் செல்லினும், தகைநிறத்து எண்ணலன்; தொகைநிறக் குரங்கு உடை மனிதர்ச் சொல்லி என்? சமைதல் நன்று' எனப் புகன்று பொங்கினான் என இயையும். பகைவர் பேராற்றலுடையராயினும், அவர் நம்மிடம் வரும்வரை பொறுத்திருப்பதே தகும்; நாம் அவர் மேற்செல்வது தகாது எனவே, வலியற்ற மானிடர் மேற்செல்வது தகாது என்பது சொல்லவேண்டா என்றவாறு. தொகை - கூட்டம். சிகை - தீக்கொழுந்து. சூலி - சூலப் படையுடையான்; சிவபிரான். சிவபிரான் செந்தீவண்ணமுடையராதலின் சிகை நிறச்சூலி என்றான். தகை - தகுதி. நிறம் - புகழ். சமைதல் - அமைதல். (45)

மற்றையோர் கூறுதல்

6243. மற்றவன் பின்னுற மற்றை யோர்களு
மிற்றிது வேநல மெண்ண மற்றிலென்
றுற்றன வுற்றன வுரைப்ப தாயினர்
புற்றுறை யரவெனப் புழுங்கு நெஞ்சினர்.

மற்று அவன்பின் உற மற்றையோர்களும்
'இற்று இதுவே நலம்; எண்ண மற்று இல்' என்று
உற்றன உற்றன உரைப்ப தாயினர்
புற்று உறை அரவு எனப் புழுங்கும் நெஞ்சினர்.

பொ:—அத்தூமிராட்சன் பின்னாக, மற்றும் உள்ள அரக்கவீரரும் புற்றில் தங்கிய பாம்புபோலக் கனலும் மனமுடையராய், 'இத் தன்மையான இம்முடிபே நலம்; நினைதற்கு வேறு இல்லை' என்று அவரவர் கருத்தில் தோன்றியவற்றைத் தோன்றியவற்றைக் கூறுவாராயினர்.

கு:—மற்றவன் பின்னுற மற்றையோர்களும், புழுங்கும் நெஞ்சினர், 'இதுவே நலம் எண்ணமற்று இல்' என்று உற்றன உற்றன உரைப்பதாயினர் என இயைக்க. இற்று இதுவே - இத்தன்மையான இம்முடிவே. (46)

கும்பகருணன் கூறுதல்

6244. வெம்பிக லரக்கரை விலக்கிவினை தேரா
★ நம்பிய ரிருக்கவென நாயகனை முன்னா
வெம்பியென கிற்கிலுரை செய்வலித மென்னாக்
கும்பகரு ணப்பெயரி னானிவை குறித்தான்.

வெம்பு இகல் அரக்கரை விலக்கி, 'வினை தேரா
நம்பியர் இருக்க' என, நாயகனை முன்னா
'எம்பி எனகிற்கில் உரை செய்வல் இதம்' என்னாக்
கும்பகருணப் பெயரினான் இவை குறித்தான்.

பொ:—கும்பகருணன் என்ற பெயரையுடையான், 'செயலறியாத இளையோர் பேசாது அமைக' என்று சினமும் வலிமையும் வாய்ந்த அரக்கரை விலக்கித் தலைவனை இராவணனைக் கிட்டி, "நீ 'என் உடன் பிறந்தான் இவன்' என்று அன்பு செய்தியாயின், நல்லது சொல்லுவேன்" என்று இவற்றைக் கூறினான்.

கு :—கும்பகருணப் பெயரினுன், 'வினைதேரா நம்பியர் இருக்க' என அரக்கரை விலக்கி, நாயகனை முன்னு, 'எம்பி எனகிற்கில் இதம் உரை செய்வல்' என்று இவை குறித்தான் என இயைக்க. வெம்புதல் - கொதித்தல், சினத்தல். இகல் - வலிமை. வினை - செய்யத் தக்க செயல். தேர்தல் - தெளிதல். 'நம்பியர் இருக்க' என்றது' கும்பகருணன் மேலும் பேச முற்பட்ட அரக்கரைப் பேசவிடாது அடக்கிக் கூறியது. முன்னுதல் - கிட்டுதல். எம்பி - என் தம்பி. எனகிற்கில் - என்று அன்பு செய்து இசைந்தால். இதம் - நன்மை. இவை என்றது பின் கும்பகருணன் கூற்ருய் வருவனவற்றை. குறித்தல் - சொல்லுதல். (47)

6245. நீயயன் முதற்குல மிதற்கொருவ னின்ரு
யாயிர மறைப்பொரு ளுணர்ந்தறி வமைந்தாய்
தீவினை நயப்புறுதல் செய்தனை தெரிந்தா
லேயின முறத்தகைய வித்துணைய வேயோ.

நீ அயன் முதல் குலம் இதற்கு ஒருவன் நின்ருய்,
ஆயிரம் மறைப்பொருள் உணர்ந்து அறிவு அமைந்தாய்;
தீவினை நயப்புறுதல் செய்தனை; தெரிந்தால்
ஏ! இனம் உறத்தகைய இத்துணையவேயோ.

பொ :—பிரமன் முதலாகவந்த இக்குலத்தில் நீ ஒருவனே நிலைத்தாய்; அளவற்றனவான வேதங்களின் பொருளையறிந்து திருந்திய அறிவு அமையப் பெற்ருய்; (அவ்வாறிருந்தும்,) கொடிய பாவச் செயலை விரும்பி மேற்கொண்டனை; ஆராயுமிடத்து, அந்தோ! இன்னும் நாம் அடையத்தக்க துன்பங்கள் இவ்வளவினவோ?

கு :—அயன் முதற்குலம் என்றது, பிரமனை முதல்வனுகக் கொண்டுவரும் புலத்தியன் வமிசத்தை. நீ ஒருவன் நின்ருய் என்பது இவ்வரக்கர்குலத்தில் வந்த அரசரெல்லாரும் இறந்தொழிந்தனராக, நீ ஒருவன் மட்டுமே தவத்தாலும் புயவலியாலும் வரபலத்தாலும் பகைவென்று நிலைத்தவனுனுய் என்றவாறு. ஒருவன் நின்ருய் என்பதற்கு ஒப்பற்றவனுய் நிலைத்தாய் என்று பொருள் கொள்ளலுமாம். ஆயிரம் என்பது அளவின்மையுணர்த்தி நின்றது. பெரியோர், 'வேதங்கள் அளவற்றன' (அநந்தாவை வேதா :) என்பராதலின். தீவினை என்றது பிறனில்விழைதலை. ஏ குறிப்புமொழி; இதனுல் இராவணற்கு வரும் ஏதம் கருதி இரங்கியவாறு. ஏ இரக்கங் குறித்து வருதல்; 'ஏ பாவம்' (திருவாய் மொழி. 2-2-2) என்னும் அருளிச் செயலாலும், 'ஏ எ பாவம்' (சீவக சிந்தாமணி. 290) என்னும் திருத்

தக்க தேவர் வாக்காலும், அறியத்தகும். இன்னம் என்பது இனமென்றுனது விகாரம். இனம் உறத்தகைய இத்துணையவேயோ என்றது இப்போது அடைந்துள்ள தீமையினும் பன்மடங்கான தீமைகளை இனி அடைவோம் என்றவாறு. தீவினை என்பதனுள்வகரம் இன வெதுகையாய் வந்தது. (48)

6246. ஓவிய மமைந்தநகர் தீயுண வுளைந்தாய்
கோவிய லழிந்ததென வேறொரு குலத்தோன்
தேவியை நயந்துசிறை வைத்தசெய னன்றோ
பாவிய ருறும்பழி யிதிற்பழியு முண்டோ.

ஓவியம் அமைந்த நகர் தீ உண உளைந்தாய்;
கோஇயல் அழிந்தது என, வேறு ஒரு குலத்தோன்
தேவியை நயந்து சிறை வைத்த செயல் நன்றோ?
பாவியர் உறும்பழி இதின் பழியும் உண்டோ!

பொ:—சித்திரங்கள் அமைந்த இலங்கை நகரத்தைத் தீ உண்ணுதலால் வருந்தினை; அரசியல் அழிந்ததென்று உலகங் கூறும்படி, நற்குடிப் பிறந்த அயலான் ஒருவனுடைய மனைவியை விரும்பி(க் கவர்ந்து) சிறைவைத்த உன் செயல் நல்லதோ? பாவச் செயலுடையார் அடையும் பழிகளுள், இதனினும் கொடிய பழியும் உண்டோ?

கு:—ஓவியம் - சித்திரம். நகர் என்றது இலங்கையை. உளைதல்-வருந்துதல். மகளிர் கற்பு மன்னவன் காவலால் அமைவதாகலின் அரசனுன இராவணன் சீதையை நயந்து சிறைவைத்தது, அரசியலழிந்ததென்று உலகம் கூற நின்றது என்பான், 'கோவியலழிந்தது என' என்ருன். நன்றோ? உண்டோ? என்பவற்றுள் ஓகாரம் எதிர்மறைப் பொருள் உணர்த்தியது. மகளிர் கற்பு மன்னவன் காவலால் அமைவது என்பது, 'மாதவர் நோன்பும் மடவார் கற்பும், காவலன் காவல் இன்றெனின் இன்றும்' (மணிமேகலை. 22. அடி 208-209) எனவும், 'அருந்திறலரசர் முறைசெயினல்லது, பெரும் பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது' (சிலப்பதிகாரம். 28. 207-208) எனவும் வரும் ஆன்ருேர் கூற்றுக்களால் அறியத்தகும். ஓவியம் அமைந்த நகர் தீயுணக் கோவியல் அழிந்தது என உளைந்தாய் என்று இயைத்து, 'சித்திரம்போல (மிக அழகாக) அமைந்திருந்த இலங்கா நகரத்தை நெருப்பு எரித்திட, "அரசியல் அழிந்திட்டதே!" என்று மனம் வருந்தினுய்' என்று பொருளுரைப்பாரும் உண்டு. கோ இயல்-அரசியல். இது என்றது முன்ருும் அடியிற் கூறிய தேவியை நயந்து சிறை வைத்ததனுல் விளைந்த பழியைச் சுட்டி நின்றது. இதினும்

பழி உண்டோ என்க. பெரும் பழி விளைக்கும் கொடுஞ் செயலான பிறன்மனை நயத்தலைச் செய்த நீ, அதன் விளைவான நகரழிவுக்கு வருந்துவது என் என்றவாறு. (49)

6247. நன்னக ரழிந்ததென நாணினை நயத்தா
லுன்னுயி ரெனத்தகைய தேவியர்க ளுன்மே
லின்னகை தரத்தர வொருத்தன்மனை யுற்றாள்
பொன்னடி தொழத்தொழ மறுத்தல்புகழ்போலாம்.

நல் நகர் அழிந்தது என நாணினை, நயத்தால்
உன் உயிர் எனத் தகைய தேவியர்கள் உன்மேல்
இன் நகை தரத்தர ஒருத்தன் மனை உற்றாள்
பொன் அடி தொழத் தொழ மறுத்தல் புகழ்போலாம்.

பொ :—அழகிய இலங்கை நகர் அழிந்ததென்று வெட்கமடைந்தாய்; உன் உயிரென்று சொல்லுமியல்புடைய மனைவிமார் உன்னிடம் விருப்பத்தோடு இனிய முறுவலைச் செய்து செய்து நின்னை நோக்கி நிற்க, அவர்களை நோக்காது நீ பிறன் மனையாளாகிய ஒருத்தியின் அழகிய அடிகளில் விழுந்து வணங்க வணங்க அவள் (நின்கருத்துக்கு இசையாது) மறுத்துரைக்கும் வகை உனக்குப் புகழ்போலும்.

கு :—நயம் - விருப்பம். 'நயத்தக்க நாகரிகம்' (திருக்குறள். 580) என்பதனுள் நயம் விருப்பம் என்னும் பொருளிற் பயின்றமை காணலாம். இலங்கை அழிந்ததற்கு நாணிய நீ, பிறன் மனையாளை நயந்து, அவளடியில் விழுந்து வணங்க வணங்க, அவள் நின் கருத்துக் கிசையாது கடிந்து வசை கூறி அவமதித்தமைக்கு நாணாததென் ? என்றவாறு. நான்காம் அடியுடன், 'குடிமை மூன்றுலகும் செயும் கொற்றத்தென், அடிமைகோடி யருளுதியாலென, முடியின் மீது முகிழ்த்துயர்கையினன், படியின்மேல் விழுந்தான் பழிபார்க்கலான் (சுந்தர. காட்சிப். 114-ஆம் செய்யுளும் அதன்பின் சீதாபிராட்டி கூற்றும் நோக்கத்தகும். (50)

6248. என்றொருவ னில்லுறை தவத்தியை யிரங்காய்
வன்றொழிலி னய்முறை துறந்துசிறை வைத்தா
யன்றொழிவ தாயின வரக்கர்புக ழையா
புன்றொழிலி னுமிசை பொறுத்தல் புலமைத்தோ.

என்று ஒருவன் இல், உறை தவத்தியை இரங்காய்,
வன் தொழிலினுய், முறை துறந்து, சிறை வைத்தாய்,
அன்று ஒழிவதாயின அரக்கர் புகழ்; ஐயா!
புன்தொழிலின் நாம் இசை பொறுத்தல் புலமைத்தோ!

பொ :—ஐயா! ஒருவன் மனையிற் றங்கிய தவவொழுக்கமுடையவளான **சீதையை**, மனம் இரங்காது கொடிய செயலையுடையையாய் அரச நீதியினைக் கைவிட்டு, என்று சிறை வைத்தாயோ அன்றே அரக்கர் புகழ்கள் அழிவனவாயின. நாம் தீய செய்கையால் புகழை அடைய நினைதல் அறிவுடைமையின்பாற்படுமோ?

கு :—ஐயா! தவத்தியை இரங்காய், வன்றொழிலினுய், முறை துறந்து என்று சிறைவைத்தாய் அன்று அரக்கர் புகழ்கள் அழிவதாயின; நாம் புன்றொழிலின் இசை பொறுத்தல் புலமைத்தோ? என இயைக்க. வன்றொழில் என்றது வஞ்சித்துக் கவர்தலை. முறை - அரச நீதி. மகளிர் கற்பைக் காத்தற்குரிய அரசனுகிய இராவணன், அதனை அழிக்க முற்பட்டமையின் முறை துறந்து என்றான். அன்றே ஒழிவதாயின என ஏகாரம் விரிக்க. புன்றொழில் என்றது பிறன்மனை நயத்தலை. பழிவிளைக்கும் செயலால் நாம் புகழையடைய நினைதல் பேதைமை என்றவாறு. இசை-புகழ். புகழ் ஒழிவதாயின எனவே பழி வந்தெய்தியது என்பது பெறப்படும். 'எளிதென இல்லிறப்பானெய்தும் எஞ்ஞான்றும் விளியாது நிற்கும் பழி' (145) என்பது பொய்யா மொழி. (51)

6249. ஆசில்பர தாரமவை யஞ்சிறை யடைப்பேம்
மாசில்புகழ் காதலுறு வேம்வளமை கூரப்
பேசுவது வீரமிடை பேணுவது காமங்
கூசுவது மானிடரை நன்றுநம கொற்றம்.

ஆசு இல் பரதாரம் அவை அம் சிறை அடைப்பேம்,—
மாசுஇல் புகழ் காதல் உறுவேம்; வளமை கூரப்
பேசுவது வீரம்,—இடை பேணுவது காமம்;
கூசுவது மானிடரை; நன்று நம கொற்றம்.

பொ :—குற்றமற்ற அயலார் மனைவியரை, அழகிய சிறையில் வைப்போம். அதற்குப் பயனுகக் குற்றமற்ற புகழை அடைய விரும்புவோம். சிறப்பு மிகும்படி நாம் பேசுவது வீரம்; அவ்வாறு பேசும் பொழுதே நாம் விரும்புவது காமம்; நாம் அஞ்சுவது வலிமையற்ற மனிதரை; நம் ஆற்றல் நன்று.

கு :—ஆசு, மாசு என்பவை குற்றம் என்று பொருள்படும். பர தாரம் - அயலார் மனைவியர். அஞ்சிறை - அழகிய சிறை; இது குறிப்பு மொழியாய்ச் சிறையின் கொடுமை புலப்படுத்தி நின்றது. கொற்றம் - வலிமை. செயலொடும் பேச்சொடும் பொருந்தாத விழை வும், அஞ்சத் தகாதார்க்கு அஞ்சுதலும் உடைய நம் ஆற்றல் நன்று என்றவாறு. நன்று என்பது குறிப்பு மொழியாய் இகழ்ச்சி குறித்தது. (52)

52-ல் இச்செய்யுளின்பின் பின்வரும் மிகைச் செய்யுட்கள் உள்ளன.

6249 (a) ஓதுப லருந்தவ முஞற்றலில தேனும்
கோதுறு குலச்சிறுமை கொண்டுடைய தேனும்
வாதுறு பகைத்திறம் மலிந்துடைய தேனும்
நீதியதி னின்றிடி னிலைக்கழிவு முண்டோ.

(b) உந்துதம ரோடுலகி னூடுபல காலம்
நந்துதலி லாதிறைவ னுயிட நயந்தோ
சிந்தையில் விரும்புதல்செய் மங்கையர் திறத்தோ
புந்திகொடு நீதவ முயன்றபொறை மேனாள்.

(c) ஆசைகொடு வெய்திவிரு மானிடரை யஞ்சிக்
காசிலொரு மங்கையவ ளைத்தனி கவர்ந்தும்
கூசியத னல்வினைய வும்பெறுதல் கூடாய்
வீசுபுகழ் வாழ்வுவெறி தேயழிவ தாமோ.

(d) நிரம்பிடுகி லொன்றதை நெடும்பகல் கழித்தும்
விரும்பிமுயல் வுற்றிடை விடாதுபெறல் மேன்மை
வரும்படி வருந்தினும் வராதபொரு ளொன்றை
நிரம்புமென வேநினை தல் நீசர்கட னையா.

(e) ஆசில்பல அண்டமுன தேயரச தாக
ஈசன்மு னளித்தது னிருந்தவ வியப்பால்
நீசர்தொழில் செய்ததனை நீங்கியிட லாமோ
வாசமல ரோன்மரபில் வந்தகுல மன்னு.

(f) ஆலமயில் கின்றவ னருஞ்சிலை முறித்து
வாலியை வதைத்தெழு மராமரமு முட்கக்
கோலவரி வில்பகழி கொண்டுடைய னென்றூர்
சீலமுறு மானிட னெனத்தெளிய லாமோ.

(g) ஆதிபர னுமவ னடித்துணை வணங்கிச்
சீதையை விடுத்தெளியர் செய்பிழை பொறுக்கென்
றோதல்கட னுமென வொருப்பட வுரைத்தான்
மூதுரைகொள் வோனுமது வேமுறைமை யென்றுன்.

(h) என்றவ னுரைத்திட இராவணனும் நெஞ்சம்
கன்றிநய னத்திடை பிறந்தன கடைத்தி
இன்றுமுடி வுற்றதுல கென்றெவரும் அஞ்சக்
குன்றுறழ் புயக்குவை குலுங்கிட நகைத்தான்.

(i) நகைத்திள வலேக்கடிது நோக்கிநவில் கின்றான்
பகைத்துடைய மானுடன் வலிச்செயல் பகர்ந்தாய்
திகைத்தனைகொ லாமெனது சேவக மறிந்தும்
வகைத்திற முரைத்திலை மதித்திலையென் எம்பி.

(j) புரங்களொரு மூன்றையும் முருக்குபுனி தன்றன்
வரங்களும ழிந்திடுவ தோமதியி லாதாய்
தரங்கொடிமை யோரெனது தாள்பரவ யானென்
சிரங்கொடு வணங்குவது மானுடன் திறத்தோ.

(k) பகுத்தபுவ னத்தொகை யெனப்பகர் பரப்பும்
மிகுத்ததிறல் வானவரும் வேதமுதல் யாவும்
வகுத்தரிய முத்தொழில்செய் மூவரு மடிந்தே
உகுத்தபொழு தத்தினுமெ னக்கழிவு முண்டோ.

(l) நிறந்தனில் மறந்தொலைய நீதுயில் விரும்பித்
துறந்தனை யருஞ்சமர மாதலினை சொன்னாய்
இறந்துபட வந்திடினும் இப்பிறவி தன்னில்
மறந்துமுளை தோசனகன் மங்கையை விடுத்தல்.

(m) எனக்கத மெழுந்தவ னுரைக்கவிளை யோனும்
நினைத்தனன் மனத்திடை நிறுத்துறுதி சொல்லச்
சினத்தொடு மறுத்திகழ்வு செய்தனனி தூழின்
வினைத்திற மெவர்க்குமது வெல்வதரி தன்றே.

(n) கறுத்தவ னுரைத்திடு கருத்தினிலை கண்டே
பொறுத்தருள் புகன்றபிழை யென்றடி வணங்கி
உறுத்துதல்செய் கும்பகரு ணத்திறலி னோனும்
மறுத்துமொரு வாய்மையிது கேளென வுரைத்தான்.

(o) ஏதில்கரு மச்செயல் துணிந்திடுத லெண்ணித்
தீதொடு துணிந்துபினு மெண்ணுதல் சிறப்போ
யாதுமினி யெண்ணியதி லென்னபய னையா
போதியது நம்மரசு பொன்றவரு காலம்.

6250. சிட்டர்செயல் செய்திலை குலச்சிறுமை செய்தாய்
மட்டவிழ் மலர்க்குழலி னளயினி மன்னு

விட்டிடுது மேலெளிய மாதுமவர் வெல்லப்
பட்டிடுது மேலதுவு நன்றுபழி யன்ருல்.

சிட்டர் செயல் செய்திலை; குலச்சிறுமை செய்தாய்;
மட்டு அவிழ் மலர்க் குழலினளை இனி மன்ன!
விட்டிடுது மேல் எளிய மாதும்; அவர் வெல்லப்
பட்டிடுது மேல் அதுவும் நன்று; பழி யன்ருல்.

பொ:—அரசே! மேன்மக்கள் செய்யும் நல்ல செயலைச் செய்தா யல்லை; நம் குடிக்கு இழுக்கு விளையும் செயலைச் செய்தாய்; தேன் ஒழுகும் பூக்களையணிந்த கூந்தலையுடைய சீதையை இனி இராமன் பால் விடுவோமாயின், நாம் வலிமையற்றவர்களாவோம். அந்த மானிடர்கள் வெல்ல நாம் இறந்துபடுவோமாயின், அதுவும் நல்லதே; பழியில்லை.

கு:—சிட்டர் - பெரியோர். மட்டு - தேன். அவிழ்தல் - ஒழுகுதல். அவர் என்றது இராம இலக்குவரை. படுதல் - இறத்தல். (53)

6251. மரன்படர் வனத்தொருவ னேசிலை வலத்தாற்
கரன்படை படுத்தவனை வென்று களைகட்டா
னிரம்பிடுவ தன்றதுவு நின்றதினி நம்பா
லுரம்படுவ தேயிதனின் மேலுறுதி யுண்டோ.

'மரன் படர் வனத்து ஒருவனே சிலை வலத்தால்
கரன் படை படுத்து அவனை வென்று களைகட்டான்;
நிரம்பிடுவதன்று அதுவும், நின்றது இனி நம்பால்
உரம் படுவதே; இதனின்மேல் உறுதி உண்டோ?'

பொ:—மரங்கள் மிக்க காட்டில் (இராமன்) ஒருவனே தன் வில் வலியால் கரன் படையினரான பதினாலாயிரம் வீரரையும் கொன்று, அக் கரனையும் வென்று, (முனிவராகிய நெற்பயிருக்குக்) களை(யாக வந்த அரக்கர்களைக்) களைந்தான். அவ்வாறு களை கடிதலும் முடிவடைந்ததில்லை. எஞ்சியிருப்பது இனி நம்மிடம் உள்ள வலிமை அழிதலேயாம். இவ்வாறு அவனால் வலியழிதலினும் மேலான நன்மை உண்டோ? (இல்லை).

கு:—மரன் - மரம்; போலி. உரம் - வலிமை. உறுதி - நன்மை; உறுதியென்பது குறிப்பு மொழி. இதனினும் உறுதியுண்டோ என்று பரிகசித்தவாறு (54)

6252. வென்றிடுவர் மானிடவ ரேனுமவர் தம்மே
னின்றிடை விடாதுநெறி சென்றுற நெருக்கித்
தின்றிடுதல் செய்கில மெனிற்செறுந ரோடு
மொன்றிடுவர் தேவருல கேழுமுட னென்றும்.

வென்றிடுவர் மானிடவரேனும், அவர் தம்மேல்
நின்று, இடைவிடாது நெறிசென்று, உற நெருக்கித்
தின்றிடுதல் செய்கிலம் எனின், செறுநரோடும்
ஒன்றிடுவர் தேவர்; உலகேழும் உடன் ஒன்றும்.

பொ :—மனிதர்கள் வெற்றி பெறுவராஞலும், நாம் அவர்மேல் அவர் வரும் நெறியிற் சென்று நிலேத்துச் சிறிது பொழுதும் நீங்காமல், மிகவும் துன்புறுத்தி, அவர்களுடைய வலியழியச் செய்யோமாயின், நம் பகைவராகிய அவரொடு தேவர்களும் சேருவர்; மேலும் ஏழுலகும் அவரோடு இணையும்.

கு :—அவர் தம்மேல் நெறிசென்று நிலேத்து உற நெருக்கித் தின்றிடுதல் செய்கிலம் எனின் என இயைக்க. நின்று - நிலேத்து. உற - மிகவும். நெருக்குதல் - வருத்துதல். தின்றிடுதல் என்பது வலியழித்தல் என்று பொருள்பட நின்றது. செறுநர் - பகைவர். உலகம் என்பது ஆகுபெயராய் உலகத்துள்ளாரை உணர்த்தியது. இதனல் பகை வலியதென்று மடிந்திராது செய்யத்தக்க செயல் கூறியவாறு. (55)

6253. ஊறுபடை யூறுவதன் முன்னமொரு நாளே
யேறுகட லேறிநரர் வானரரை யெல்லாம்
வேறுபெய ராதவகை வேரொடு மடங்க
நூறுவது வேகரும மென்பது நுவன்ருன்.

'ஊறு படை ஊறுவதன் முன்னம் ஒரு நாளே
ஏறு கடல் ஏறி நரர் வானரரை யெல்லாம்
வேறு பெயராதவகை வேரொடும் அடங்க
நூறுவதுவே கருமம்' என்பது நுவன்ருன்.

பொ :—'(பகைவர்க்கு) மிக்க படை பெருகுமுன்னே, நாம் ஒரே நாளில் பெரிய கடலேக் கடந்து, மனிதரும் குரங்குகளுமாகிய அவ ரனைவரையும் வேறிடஞ் செல்லாதபடி ஒருசேர அடியோடு அழிப் பதுவே செய்யத்தக்க செயல்' என்பதனேக் கூறினன்.

கு :—ஊறுதல் - மேலும் மேலும் மிகுதல். நூறுதல் - அழித்தல். நுவலுதல் - சொல்லுதல். பகைவர் வலி மிகுமுன் நாம் நம் படையுடன் ஒரே நாளிற் கடல் கடந்து சென்று தாக்கிப் பகைவருள் யாரும் உய்ந்து செல்லாதவாறு ஒருங்கு வளைத்து அடியோடழிப்பதே செய்யத்தக்கது என்றவாறு. (56)

இராவணன் கும்பகருணன் கூறியதற்கிசைந்து கூறுதல்

6254. நன்றுரைசெய் தாய்குமர
நானது நினைந்தே
னொன்றுமினி யாய்தல்பழு
தொன்னலரை யெல்லாங்
கொன்றுபெயர் வோநம
கொடிப்படையை யெல்லா
மின்றெழுக வென்கென
விராவண னிசைத்தான்.

நன்று உரை செய்தாய்! குமர! நான் அது நினைந்தேன்;
ஒன்றும் இனி ஆய்தல் பழுது; ஒன்னலரை யெல்லாம்
கொன்று பெயர்வோம்; நம கொடிப் படையை யெல்லாம்
'இன்று எழுக வென்க' என இராவணன் இசைத்தான்.

பொ :—இராவணன், (கும்பகருணனை நோக்கி,) 'குமர! நன்று சொன்னாய்! நானும், அதை எண்ணினேன்; இனிச் சிறிதும் ஆலோசித்தல் பிழையாகும்; பகைவரை யெல்லாம் அழித்து மீள்வோம்; நம்முடைய வெற்றிக்கொடி தாங்கிய படை முழுவதையும் இன்றே புறப்படுக என்று பறையறைந்து தெரிவித்திடுக' என்று கூறினான்.

கு :—பழுது - பிழை. நம - நம்முடைய. (57)

இந்திரசித்து இராவணனைத் தடுத்து யானே சென்று பகைவென்று வருவேன் எனல்

6255. என்றவ னியம்பியிடு மெல்லையினில் வல்லே
சென்றுபடை யோடுசிறு மானிடர் சினப்போர்
வென்றுபெயர் வாயரச நீகொலென வீர
நன்றுபெரி தென்றுமக னக்கிவை நவின்றான்.

என்று அவன் இயம்பியிடும் எல்லையினில் 'வல்லே
சென்று, படையோடு சிறு மானிடர் சினப்போர்
வென்று பெயர்வாய் அரச! நீ கொல்? என வீரம்
நன்று பெரிது' என்று மகன் நக்கு இவை நவின்றான்.

பொ:—என்று இராவணன் சொல்லிய அளவில், அவன் மகனான இந்திரசித்து, 'அரசே! நீயே படைகளோடு விரைந்து சென்று அற்ப மனிதருடைய சினம் உள்ள போரை வென்று மீளுவையோ? (நீ அவ்வாறு செய்வையேல்) என் வீரம் மிகவும் சிறக்கும்' என்று சிரித்து இவற்றைக் கூறினான்.

கு:—நன்று பெரிது என்பது குறிப்பு மொழியாய் இகழ்ச்சிப் பொருள் தந்தது. நக்கு - சிரித்து. (58)

6256. ஈசனருள் செய்தனவு மேடவிழ் மலர்ப்பே
ராசன முவந்தவ னளித்தனவு மாய
பாசமுதல் வெம்படை சுமந்துபலர் நின்றா
ரேசவுழல் வேனொருவன் யானுமுளெ னன்றே.

ஈசன் அருள் செய்தனவும் ஏடு அவிழ் மலர்ப் பேர்
ஆசனம் உவந்தவன் அளித்தனவும் ஆய
பாசம் முதல் வெம்படை சுமந்து, பலர் நின்றார்;
ஏச உழல்வேன் ஒருவன் யானும் உளென் அன்றே.

பொ:—சிவபெருமானால் அருளப்பெற்றனவும், இதழ்விரிந்த தாமரை மலராகிய சிறந்த ஆசனத்தை விரும்பியமர்ந்த பிரமதேவனால் அருளப்பெற்றனவுமான பாசம் முதலிய படைக்கலங்களைத் தாங்கிக்கொண்டு பலர் போர்க்கு ஆயத்தமாயுள்ளனர்; பிறர் பழி தூற்றுமாறு உழலுகிற ஒருவனாகிய யானும் உள்ளேனன்றே!

கு:—ஈசன் - சிவபிரான். ஏடு - இதழ். அவிழ்தல் - விரிதல். தன் அத்தை சூர்ப்பணகைக்கு இராம இலக்குவரால் நேர்ந்த பழி துடையாமை நினைந்து ஏச உழல்வேன் என்றான். அதுவரை படைக்கலங்களைப் பயன்படுத்தும் நிலை நேராமையின், சுமந்து என்றான். ஆற்றல் வாய்ந்த வீரர் பலரும் யானும் இருக்க எங்களை அனுப்பாது, நீ மானிடரோடு போர் புரியச் செல்வதுதகாது என்றவாறு. (59)

6257. முற்றுமுத லாயுலக மூன்றுமெதிர் தோன்றிச்
செற்றமுத லோரொடு செறுத்ததொர் திறத்தும்
வெற்றியுன தாகவிளை யாதொழியி னென்னைப்
பெற்றுமிலை யானெறி பிறந்துமிலெ னென்றான்.

'முற்றும் முதலாய் உலகம் மூன்றும் எதிர் தோன்றிச்
செற்ற முதலோரொடு செறுத்ததொர் திறத்தும்
வெற்றி உனது ஆக விளையாது ஒழியின் என்னைப்
பெற்றுமிலை; யான் நெறி பிறந்துமிலென்' என்றான்.

பொ :—'உலகம் மூன்றும் நிரம்பிய பொருள்வளமுடையவாய், முன்பே நம்மொடு பகைகொண்ட தம் தலைவரோடு (மனிதர்க்குத் துணையாய்) எதிர்வந்து சினந்து தடுத்ததொருநிலையிலும், வெற்றி உன்னுடையதாகச் செய்யாது தவறுவேனாயின், நீ என்னைப் பெற்ற தந்தையுமில்லை; யான் முறைப்படி நினக்குப் பிறந்த மகனுமில்லை' என்று கூறினான்.

கு :—இச்செய்யுள் இராவணனிடம் இந்திரசித்து உரைத்த சூளுரை. இதனால் போர்க்குத் தன்னையே அனுப்பும்படி இந்திரசித்து வற்புறுத்துதல் புலப்படும். முற்றுதல் - நிரம்புதல். முதல் - பொருள். செற்ற - பகைத்த. முதலோர் - தலைவர். செறுத்தல் - தடுத்தல்; சினத்தலும் ஆம். உலகம் மூன்றும் முற்றும் முதலாய், செற்ற முதலோரொடு எதிர்தோன்றிச் செறுத்ததொர்திறத்தும் என இயைக்க. பின்னிரண்டடியால், யான் உனக்குப் பிறந்த மகனாயின் வெற்றிபெறுவேன்; வெற்றிபெறேனேல் என் பிறப்பு ஐயப்படத்தக்கதாகும் என்றவாறு. (60)

6258. குரங்குபட மேதினி
குறைத்தலை படப்போ
ரரங்குபட மானிட
ரலந்தலை படப்பே
ரிரங்குபடர் சீதைபட
இன்றிருவர் நின்றார்
சிரங்குவ டெனக்கொணர்தல்
காணுதி சினத்தோய்.

குரங்கு பட, மேதினி குறைத்தலை படப் போர்
அரங்கு பட, மானிடர் அலந்தலை படப் பேர்

இரங்கு படர் சீதை பட, இன்று இருவர் நின்றார்
சிரம் குவடு எனக் கொணர்தல் காணுதி சினத்தோய்!

பொ:—சினமுடைய வேந்தே! குரங்குகள் சாக, தலையற்ற உடல்கள் கிடத்தலால் பூமி முழுதும் போர்க்களம்போல் தோன்ற, அதனால், மனிதர்கள் கலங்க, சீதை, கண்டோர் இரங்குதற்குரிய பெரிய துன்பம் அடைய, (நமக்குப் பகையாய்) நின்றவராகிய இருவருடைய தலைகளையும் மலைபோலே இன்று யான் கொணர்தலைக் காண்பாயாக.

கு:—படுதல் என்பது முறையே சாதல், பொருந்தல், ஒத்தல், அடைதல் என்னும் பொருளிற் பயின்றது. மேதினி - பூமி. குறைத்தலை - தலையற்றவுடல். போர் அரங்கு - போர்க்களம். மேதினி குறைத்தலைபடுதலால் போரரங்குபட என்க. அலந்தலை - மயக்கம். குறைத்தலைபடுதலால் பூமி முழுதும் போர்க்களம் போன்று தோன்ற அதனால் நிலமிசை மக்கள் மயங்குவாராயினர். படர் - துன்பம். சிரம் - தலை. குவடு - மலைச் சிகரம். (61)

6259. சொல்லிடை கழிக்கில சுருங்கிய குரங்கென்
கல்லிடை கிழிக்குமுரு மிற்கடுமை காணும்
வில்லிடை கிழித்தமிடல் வாளி வெருவித்தம்
பல்லிடை கிழித்திரிவ கண்டுபய னுய்ப்பாய்.

சொல் இடை கழிக்கில, சுருங்கிய குரங்கு, என்
கல் இடை கிழிக்கும் உருமின் கடுமை காணும்
வில் இடை கிழித்த மிடல்வாளி வெருவித்தம்
பல் இடை கிழித்து, இரிவ கண்டு, பயன் உய்ப்பாய்.

பொ:—முகஞ்சுருங்கிய குரங்குகள், மலையைப் பிளக்கும் இடியினும் கடுமை வாய்ந்த என்னுடைய வில்லினின்று பெயர்ந்த வலிய அம்புகளுக்கு அஞ்சி, ஒரு சொற்சொல்லும் நேரமும் தாழாதன வாய்த் தம் பல்லை இளித்துக்கொண்டு ஓடுவனவற்றைக் கண்டு, வெற்றியாலுளதாகிய பயனை நுகருக.

கு:—குரங்கு என் வாளி வெருவி, சொல்லிடை கழிக்கில, தம் பல்லிடை கிழித்து இரிவ கண்டு, பயன் உய்ப்பாய் என இயைக்க. கல் - மலை. கிழித்தல் என்பது, முறையே பிளத்தல் பெயர்தல், என்னும் பொருளிற் பயின்றது. உருமு - இடி, மிடல் — வலிமை. பல்லிடை கிழித்தல் - பல்லை யிளித்தல். இரிதல் - ஓடுதல்.

உய்த்தல் - நுகர்தல்; 'காதல காதலறியாமை யுய்க்கிற்பின்' (திருக்குறள். 440) என்பதனுள், உய்த்தல் - நுகர்தல் என்னும் பொருளிற் பயின்றமை காணலாம். (62)

6260. யானையிலர் தேர்புரவி யாதுமில ரேவுந்
தானையிலர் நின்றதவ மொன்றுமிலர் தாமோர்
கூனன்முது கின்சிறு குரங்குகொடு வெல்வா
ரானவரு மானிடர்நம் மாண்மையினி தன்றே.

யானை இலர், தேர் புரவி யாதும் இலர்; ஏவும்
தானை இலர், நின்ற தவம் ஒன்றும் இலர், தாம் ஓர்
கூனல் முதுகின் சிறு குரங்குகொடு வெல்வார்;
ஆனவரும் மானிடர் நம் ஆண்மை இனிதன்றே!

பொ: யானைப் படையில்லாதவரும், தேர்ப் படையும், குதிரைப் படையும் சிறிதும் இல்லாதவரும், செலுத்தும் படைக்கலங்கள் இல்லாதவரும் ஆகிய அவர்களும் (நமக்கு உணவாதற்குரிய) மனிதர்கள்; அவர்கள், அற்பமான வளைந்த முதுகினையுடைய சிறிய குரங்கைக்கொண்டு நம்மை வெல்லுவர் எனின், நம் வீரம் நன்று.

கு:—தானை - படைக்கலம். ஆனவர் - அவர். இனிது என்பது குறிப்பு மொழி; இகழத்தக்கதாகும் என்றவாறு. அன்று ஓ-அசை. (63)

6261. நீருநில னுந்நெடிய காலுநிமிர் வானும்
பேருலகி யாவுமொரு நாள்புடை பெயர்த்தே
யாருமொழி யாமனரர் வானரர்க ளென்பார்
வேருமொழி யாதவகை கொன்றலது மீளேன்.

நீரும், நிலனும், நெடிய காலும், நிமிர் வானும்
பேருலகு யாவும் ஒரு நாள் புடைபெயர்த்தே
யாரும் ஒழியாமல் நரர் வானரர்கள் என்பார்
வேரும் ஒழியாதவகை கொன்று அலது மீளேன்.

பொ:—நிலமும் நீரும் நெருப்பும் பெரிய காற்றும் பரவிய ஆகாயமும் பெரிய உலகம் யாவையும் ஒரு நாளில் நிலைமாறச் செய்து ஒருவரும் தப்பி உய்யாதவாறு நரரும் வானரரும் ஆகிய

அனைவரையும் வேரும் மிஞ்சாதபடி கொன்(று வென்)றல்லது திரும்பேன்.

கு :—நிலமும் நீரும் என மாறுக. நெருப்பும் உபலக்கணத்தால் கொள்ளலாயிற்று. நிமிர்தல் - பரவுதல். வேர் என்றது கருவிலுள்ள குழவியை. முன் செய்யுளால் பகைவரின் வலியின்மை கூறியவன் இச்செய்யுளால் தான் அவரை வென்றுவருதல் உறுதியென்று வற்புறுத்தியவாறு. (64)

இந்திரசித்து கூறியது கேட்டு வீடணன் சினந்து விளம்புதல்

6262. என்றடி யிறைஞ்சின னெழுந்துவிடை யீமோ
வன்றொழிலி ஞயெனலும் வாளெயிறு வாயிற்
றின்றனன் முனிந்துநனி தீவினையை யெல்லாம்
வென்றவரி னன்றுணரும் வீடணன் விளம்பும்.

என்று அடி இறைஞ்சினன், எழுந்து, ‘ விடை ஈமோ
வன் தொழிலிஞய் ’! எனலும், வாள் எயிறு வாயில்
தின்றனன், முனிந்து, நனி தீவினையை யெல்லாம்
வென்றவரின் நன்று உணரும் வீடணன் விளம்பும்.

பொ :—என்று கூறி, இந்திரசித்து இராவணன் காலில் விழுந்து வணங்கி, எழுந்து, ‘ வலிய பேராற்றலுடையாய் ! விடைதருக ’ என்று வேண்டுதலும், தீவினைகளையெல்லாம் வென்றவர் போல மெய்யுணர்வுடையஞன வீடணன் கூரிய பற்களைமென்று பெரிதும் சினந்து கூறுவாஞயினன்.

கு :—என்று அடி இறைஞ்சினன் எழுந்து, ‘வன்தொழிலிஞய் ! விடையீமோ ’ எனலும், தீவினையையெல்லாம் வென்றவரின் நன்று உணரும் வீடணன், எயிறு வாயில் தின்றனன் நனிமுனிந்து விளம்பும் என இயைக்க. இறைஞ்சினன், தின்றனன் என்பவை எச்சப் பொருளிற் பயின்றன. (65)

6263. நூலிஞ னுணங்கிய வறிவு நோக்கினர்
★ போலுமா லுறுபொருள் புகலும் பூட்சியோர்
காலமேல் விளைபொரு ளுணருங் கற்பிலாப்
பாலனீ யினையன பகரம் பாலையோ.

நூலினுல் நுணங்கிய அறிவு நோக்கினர்
போலும்! ஆல், உறு பொருள் புகலும் பூட்சியோர்
காலம் மேல் விளைபொருள் உணரும் கற்பு இலாப்
பாலன் நீ இனையன பகரற் பாலையோ.

பொ :—நூலறிவோடு நுணுகிய அறிவாலும் ஆராய்ந்து தெளிந்தோரே உயர்ந்த பொருள்களைச் சொல்லும் உறுதியுடையோராவர். காலமும் பின்நிகழும் செயல்களும் அறியும் கல்வியில்லாத இளையோனை நீ இத்தன்மையாயினவற்றைச் சொல்லக் கடவையோ ? (சொல்லலாகாது)

கு :—நூல் என்றது நூலறிவினை. நுணங்கிய அறிவால் என ஆல் உருபு பின்னும் கூட்டப்பட்டது. நுணங்கிய - நுணுகிய. நோக்குதல் - ஆராய்தல். 'நோக்கினரே' என ஏகாரம் விரிக்க. போலும் ஆல் என்பவை அசைநிலைகள். உறுபொருள் - மிக்க (மேம்பட்ட) பொருள். பூட்சி - உறுதி. காலமும் மேல் விளைவுகளும் என உம்மை விரிக்க. கற்பு - கல்வி. (66)

6264. கருத்திலான் கண்ணிலா
ஞெருவன் கைக்கொடு
திருத்துவான் சித்திர
மனைய செப்புவாய்
விருத்தமே தகையவர்
வினைய மந்திரத்
திருத்தியோ விளமையான்
முறைமை யெண்ணலாய்.

கருத்து இலான் கண் இலான் ஒருவன் கைக்கொடு
திருத்துவான் சித்திரம் அனைய செப்புவாய்
விருத்த மேதகையவர் வினைய மந்திரத்து
இருத்தியோ ? இளமையால் முறைமை எண்ணலாய்.

பொ :—இளமைப் பருவத்தால், அரச நீதியை நினையாமல், விவேகமற்றவனும் கண்ணில்லாதவனும் ஆகிய ஒருவன் கையால் செவ்விதாக்கப்புக்க சிறந்த சித்திரத்தைப் போலப் பொருந்தாத சொற்களைச் சொல்லுபவனே! வயது முதிர்ச்சியும் மேம்பாடும் உடையார் செய்தொழில் ஆராயுமிடத்து நீ இருப்பாயோ ? (இருக்கலாகாது).

கு :—இளமையால் முறைமை எண்ணலாய், கருத்திலான், கண் இலான் ஒருவன் கைக்கொடுதிருத்துவான் சித்திரமனைய செப்பு வாய்! மேதகையவர் வினைய மந்திரத்து இருத்தியோ? என இயைக்க. கருத்து - விவேகம். 'கருத்திலா இறைவன் தீமை கருதினல்' (கும்பகருணன் வதை. 157) என்பதிலும், கருத்து விவேகம் என்னும் பொருளிற் பயின்றமை காணலாம். சித்திரம் தீட்டுதற்குரிய கருத்து, கண், தூரிகை வண்ணக்குழம்பு முதலிய சாதனங்கள் இல்லாதான் ஒருவன் தன் கையினைக்கொண்டே சிறந்த சித்திரம் ஒன்றைத் திருத்தப்புக்கால் அச்சித்திரம் சிதைந்து பிறர் பரிகசிப்புக்கு இலக்காதல் போல, நுண்மதியும் நூலறிவும் அநுபவ முதிர்ச்சியும் இல்லாத உன் சொல்லும் பரிகசிக்கப்படும். இத்தகைய நீ மேதகையவர் வினைய மந்திரத்து இருத்தல் ஒண்ணாது என்றவாறு. விருத்தம் - முதுமை. மேதகையவர் என்றது, கல்வி கேள்வி, ஒழுக்கம் அனுபவம் முதலியவற்றால் உளதாய மேம்பாடுடையாரை. வினையம் - செய் தொழில். முறைமை - அரசநீதி. (67)

6265. தூயவர் முறைமையே
தொடங்குந் தொன்மையோ
ராயவர் நிற்கமற்
றவுண ராதியாந்
தீயவ ரறத்தினற்
றேவ ராயது
மாயமோ வஞ்சமோ
வன்மையே கொலோ.

தூயவர் முறைமையே தொடங்கும் தொன்மையோர்
ஆயவர் நிற்க; மற்று அவுணர் ஆதியாம்
தீயவர் அறத்தினல் தேவர் ஆயது
மாயமோ? வஞ்சமோ? வன்மையே கொல்ஓ?

பொ :—பரிசுத்தமுடையவரும் நற்செயலே செய்யும் முன்னேரு மான அவர் தேவரானது நிற்க; அசுரர் முதலான தீயவரும் தேவ ரானது அவர் மேற்கொண்ட அறச்செயலால்; (அவ்வாறன்றி அவர் தேவராயது) பொய்யாலோ? வஞ்சனையாலோ? தம் ஆற்ற லாலோ? (கூறுக).

கு :—தூயவர் - தூய மனம் மொழி மெய்களுடையார். முறைமை- நற்செயல். தொடங்குதல் - செய்தல். மற்று. அசைநிலை. அவுணர்

ஆதியாம் தீயவர் - அசுரர் அரக்கர் முதலியோர். மாயத்தாலோ வஞ்சத்தாலே வன்மையாலோ என ஆலுருபு விரிக்க. மாயம் - பொய். அவுணராதியர் தேவராயது அறநெறியாலாதலின், மறநெறி மேற்கொள்ளாது அறநெறி மேற்கொள்ளுக என்றவாறு. (68)

6266. அறந்துறந் தமரரை வென்ற வாண்டொழிற்
றிறந்தெரிந் திடினது தானுஞ் செய்தவம்
நிறந்திறம் பாவகை யியற்று நீர்மையால்
மறந்துறந் தவர்தரும் வரத்தின் வன்மையால்.

அறம் துறந்து, அமரரை வென்ற ஆண்டொழில்
திறம், தெரிந்திடின், அது தானும் செய்தவம்
நிறம் திறம்பாவகை இயற்றும் நீர்மையால்
மறம் துறந்தவர் தரும் வரத்தின் வன்மையால்.

பொ :—நீ அறநெறியைக் கைவிட்டுத் தேவரை வென்ற வீரச் செயலின்றன்மையை ஆராய்ந்தால், அதுவும், நல்ல தவத்தை அதன் பெருமை கெடாதவாறு நீ செய்த தன்மையால், வன்கண்மை நீங்கிய தேவர் உனக்குத் தந்த வரத்தின் வலியினுலாகும்.

கு :—ஆண்டொழில்—வீரச் செயல். நிறம் முன்னது தன்மை; பின்னது பெருமை. திறம்புதல்—கெடுதல். மறம்—வன்கண்மை. மறந்துறந்தவர் என்றது தேவரை; வரந்தருதற்குரியார் அவராதலின். (69)

6267. மூவரை வென்று மூன்றுலகு முற்றுறக்
காவலி னின்றுதங் களிப்புக் கைம்மிக
வீவது முடிவென வீந்த தல்லது
தேவரை வென்றவர் யாவர் தீமையோர்.

மூவரை வென்று, மூன்று உலகும் முற்றுறக்
காவலின் நின்று, தம் களிப்புக் கைம் மிக,
வீவது முடிவு என வீந்தது அல்லது
தேவரை வென்றவர் யாவர்? தீமையோர்!

பொ :—அத்தீயவர் திரிமூர்த்திகளையும் வென்று, மூன்றுலகங்களையும் முழுதும் ஆட்சிபுரியும் செயலை மேற்கொண்டும், தம் செருக்கு

எல்லை கடந்து பெருகுதலால், 'இவர் அழிவது உறுதி' என்னும்படி, அத்தீயவர் அழிந்ததல்லது, எவர் தேவரை வென்று கடைபோக வாழ்ந்தனர், (ஒருவரும் இல்லை).

கு :— களிப்பு-செருக்கு. கைம்மிகல்-அளவு கடத்தல். வீதல்-அழிதல். தீயவர் தாம் ஒரு காற் செய்த நல்வினையால், தேவரை வென்று, உலகமெல்லாம் ஆளும் நிலை எய்தினரேனும், அவர் நன்னெறியில் என்றும் நிலைத்து நில்லாது செருக்குற்று அழிந்தனர்; ஆதலால் என்றும் நன்னெறியே மேற்கொள்ள வேண்டும் என்ற வாறு. (70)

6263. வினைகளை வென்றுமேல் வீடு கண்டவ
ரெனைவரென் றியம்புகே னெவ்வந்தீர்க் கையான்
முனைவரு மமரரு முன்னும் பின்னரு
மனையவர் திறத்துளர் யாவராற் றினார்.

வினைகளை வென்று மேல் வீடு கண்டவர்
எனைவர் என்று இயம்புகேன், எவ்வம் தீர்க்கையால்,
முனைவரும் அமரரும் முன்னும் பின்னரும்
அனையவர் திறத்துளர் யாவர்? ஆற்றினார்.

பொ :—முக்காலத்திலும் பிற்காலத்திலும் முனிவர்களும் தேவர்களும் குற்றமான செயல்களைக் கைவிட்டமையால், நல்வினை தீவினைகளின் தளையைக் கடந்து, உயர்ந்த வீட்டுலகத்தையடைந்தவர் எவ்வளவினர் என்று சொல்லுவேன்; அந்த அவுணர் முதலியோருள் வீட்டு நெறி நின்றார் எவர் உளர்? (ஒருவரும் இல்லை)

கு :—முன்னும் பின்னரும் முனைவரும் அமரரும் எவ்வம் தீர்க்கையால், வினைகளை வென்று, மேல்வீடு கண்டவர் எனைவர் என்று இயம்புகேன்; அனையவர் திறத்து ஆற்றினார் எவர் உளர்? என இயைக்க. எவ்வம் என்றது குற்றமான செயல்களை. தீர்க்கை-விடுதல். எவ்வம் தீர்க்கையால் வினைகளை வெல்லுதலாவது, தீவினை செய்து அதன்கட்டில் அகப்படாமலும், உலகியலான பயன் கருதி நல்வினை செய்து அதன்கட்டில் அகப்படாமலும் கடத்தலாம். உலகியலான பயன் கருதிச் செய்யும் நல்வினையும் பிறவிக்குக் காரணமாதலின் எவ்வம் என்றான். எனைவர்-எவ்வளவினர். அனையவர் என்றது அவுணராதியரை. ஆறு-வீட்டுலகநெறி. அனையவர் என்பது முனிவரும் அமரரும் ஆகியவரை என்றுகொண்டு, 4-ஆம் அடிக்கு அவருள் தீமையாற்றினார் எவர் உளர்? ஒருவரும் இல்லை; என்று பொருளுரைப்பாரும் உளர். (71)

வீடணன் இராவணனை நோக்கிக் கூறுதல்

6269. பிள்ளைமை விளம்பினை பேதை நீயென
வொள்ளிய புதல்வனை யுரப்பி யென்னுரை
யெள்ளலை யாமெனி னியம்ப லாற்றுவென்
றெள்ளிய பொருளென வரசற் செப்பினான்.

'பிள்ளைமை விளம்பினை பேதை நீ' என
ஒள்ளிய புதல்வனை உரப்பி, 'என் உரை
எள்ளலை ஆம் எனின், இயம்பலாற்றுவென்
தெள்ளிய பொருள்;' என அரசற் செப்பினான்.

பொ :—'பிள்ளைத்தன்மையொடு பொருந்திய பேச்சுக்களைப் பேசுதலால் நீ அறிவிலியாயினை' என்று வலிமையுடைய மகனை இந்திரசித்தை நோக்கிச் சினந்து அதட்டி, 'என் பேச்சை இகழாது ஏற்றுக்கொள்ளுதியாயின், (நாம் மேற்கொள்ளத்தக்க) குற்றந் தீர்ந்த செயலைக் கூறுவேன்' என்று இராவணனுக்குக் கூறுவானாயினான்.

கு :—பிள்ளைமை-பிள்ளையின் தன்மை=விளைவறியாமை. ஒண்மை-வலிமை. உரப்புதல்-அதட்டுதல். எள்ளல்-இகழ்தல். இயம்பலாற்றுவென்-சொல்வேன். தெள்ளுதல்-கோது நீக்குதல். பொருள்-காரியம்=செயல். தெள்ளிய பொருள் இயம்பலாற்றுவென் என இயையும். அரசன் என்றது இராவணனை. (72)

6270. எந்தைநீ யாயுநீ யெம்மு னீதவம்
வந்தனைத் தெய்வநீ மற்று முற்றுநீ
யிந்திரப் பெரும்பத மிழக்கின் றாயென
நொந்தனெ னாதலி னுவல்வ தாயினேன்.

எந்தை நீ யாயும் நீ எம்முன் நீ தவம்
வந்தனைத் தெய்வம் நீ மற்றும் முற்றும் நீ
இந்திரப் பெரும்பதம் இழக்கின்றாய் என
நொந்தனென் ஆதலின் நுவல்வ தாயினேன்.

பொ :—என் தந்தையும் நீயே; தாயும் நீயே; தவமும் யான் வணங்கும் தெய்வமும் நீயே; மற்றும் உள்ள எல்லாமும் நீயே; இந்திரனுக்குரிய பெருமை வாய்ந்த மூன்றுலகமும் ஆளும் அரச பதவியை இழக்கின்றாய் என்று வருந்தினேனாதலின், சொல்லலுற்றேன்

கு :—இழப்பாய் என்றது இழக்கின்றாய் என்றது கால வழுவமைதி. (73)

6271. கற்றுறு மாட்சியென் கண்ணின் றாயினு
முற்றுறு பொருடெரிந் துணர்த லோயினுஞ்
சொற்றுறு சூழ்ச்சியின் றுணிவு சோரினு
முற்றுறக் கேட்டபின் முனிதி மொய்ம்பினோய்.

கற்று உறும் மாட்சி, என்கண் இன்றாயினும்,
உற்று உறு பொருள் தெரிந்து உணர்தல் ஓயினும்,
சொற்றுறு சூழ்ச்சியின் துணிவு சோரினும்,
முற்றுறக் கேட்டபின் முனிதி மொய்ம்பினோய்!

பொ :—பேராற்றலுடையாய்! உயர்ந்த நூல்களைக் கற்று அதனாற் பெற்ற சிறந்த அறிவு என்னிடம் இல்லையாயினும், பெரிய பொருளை நுழைந்து ஆராய்ந்து அறியும் ஆற்றல் என்னிடம் இல்லையாயினும் சொல்லப்படும் என் ஆராய்ச்சியின் முடிவு தவறுபடுமாயினும், யான் கூறுவதனைத்தையும் கேட்டபின் சினங் கொள்க.

கு :—கற்று உறும் மாட்சி என்றது நூலறிவினை. உற்று உறு பொருள் தெரிந்துணர்தல் என்றது நுண்மாண் நுழைபுலத்தினை. சூழ்ச்சியின் துணிவு-ஆராய்ச்சியின் முடிவு. சோர்தல்-தவறுபடுதல். (74)

52 ல் இச்செய்யுளின்பின்,

6271 (அ) என அவன் அடித்துணை யிறைஞ்சி வாய்புதைத்
தினியசித் திரமென ஏங்கி நின்றுதான்
நளைமலர்க் கண்கள்நீர் சொரிய நன்னெறி
வினைபயில் வீடணன் விளம்பல் மேயினான்.

என்னும் மிகைச் செய்யுள் காணப்படுகிறது.

6272. கோநகர் முழுவது நினது கொற்றமுஞ்
சானகி யெனும்பெய ருலகின் றம்மனை
யானவள் கற்பினால் வெந்த தல்லதோர்
வானரஞ் சுட்டதென் றுணர்தன் மாட்சியோ.

கோநகர் முழுவதும் நினது கொற்றமும்
சானகி எனும் பெயர் உலகின் தம்மனை
யானவள் கற்பினுல் வெந்ததல்லது ஓர்
வானரம் சுட்டது என்று உணர்தல் மாட்சியோ?

பொ :—நம் அரசிருக்கை நகரமாகிய இலங்கை முழுவதும் உன் வெற்றியும் சானகி என்னும் பெயர்பூண்ட உலகின் தாயானவளுடைய கற்பென்னும் நெருப்பினுல் வெந்தனவேயன்றி அவற்றை ஒரு அற்பக்குரங்கு எரித்தது என்று நினைதல் அறிவுடைமை யாகுமோ? (ஆகாது.)

கு :—கோநகர்-அரசிருக்கை நகரம். தம்மனை-தாய். (மணிமேகலை. 6-131) குரங்கின் வாலில் நாம் மூட்டிய தீ அக்குரங்கையோ அதன் வாலின் ஒரு பகுதியையோ சுட்டழிக்கவில்லை. அந்நெருப்புக்கு அருவப் பொருளைச் சுடும் ஆற்றலும் இல்லை. ஆகவே, அந்நெருப்பால் இலங்கையும் அருவப் பொருளாகிய உன்கொற்றமும் எரித்தழிக்கப்பட்டன என்பது பொருந்தாது. சீதையின் கற்பாகிய நெருப்பினுலேயே அவை வெந்தன; குரங்கின் வாலில் மூட்டிய நெருப்பினுல் வெந்தன என்பது வெறும் தோற்ற மாத்திரமே என்றவாறு. அருவப் பொருளாகிய உன் வெற்றியையும் சுட்டெரித்தது சீதையின் கற்பு என்று அக்கற்பின் ஆற்றல் விளக்கப்பட்டது. (75)

6273. எண்பொருட் டொன்றிநின்
றெவரு மெண்ணினுல்
விண்பொருட் டொன்றிய
வுயர்வு மீட்சியும்
பெண்பொருட் டன்றியும்
பிறிதுண் டாமெனின்
மண்பொருட் டன்றியும்
வரவும் வல்லவோ.

எண் பொருட்டு ஒன்றி நின்று, எவரும் எண்ணினுல்
'விண் பொருட்டு ஒன்றிய உயர்வும் மீட்சியும்
பெண் பொருட்டு' அன்றியும், பிறிது உண்டாம் எனின்
மண் பொருட்டு, அன்றியும் வரவும் வல்லவோ?

பொ :—யாரும் ஆராய்தற்கு மனம் ஒன்றி நின்று சிந்தித்தால் வானளாவ ஓங்கிய உயர்வும் தாழ்வும் பெண் காரணமாக நிகழும்;

அன்றியும், வேறு காரணத்தாலும் நிகழ்வதுண்டு எனின், மண்ணும் காரணமாகும்; இவையன்றியும் வேறு காரணத்தால் வருவன வாமோ? (ஆகா)

கு :—எண்–ஆராய்ச்சி. பொருட்டு-காரணம். எவரும் எண் பொருட்டு ஒன்றி நின்று என இயைக்க. மகளிர்திறத்துக் காதலாலும் பிறர் நிலம் தமதாக்கும் முயற்சியாலும் அரசர்க்கு உயர்வும் தாழ்வும் விளையும் எனினும் மகளிர்திறத்துக்காதலே சிறந்த காரணம் என்றவாறு. (76)

6274. மீனுடை நெருங்கட லிலங்கை வேந்தன்முன்
றானுடை நெடுந்தவந் தளர்ந்து சாய்வதோர்
மானுட மடந்தையா லென்னும் வாய்மொழி
தேனுடை யலங்கலா யின்று தீர்ந்ததோ?

மீன் உடை நெடுங்கடல் இலங்கை வேந்தன் முன்
தான் உடை நெடுந்தவம் தளர்ந்து சாய்வது, ஓர்
மானுட மடந்தையால் என்னும் வாய்மொழி
தேன் உடை அலங்கலாய்! இன்று தீர்ந்ததோ?

பொ :—தேன் ஒழுகும் மாலையணிந்த வேந்தே! மீன்களையுடைய நெடிய கடல் சூழ்ந்த இலங்கையரசனுடைய பெரிய தவம் வலியழிந்து கெடுவது ஒரு மானிட மகளால் என்னும் பழைய சாபமொழி இன்று நீங்கிவிட்டதோ (நீங்கவில்லையே?)

கு :—அலங்கலாய்! இலங்கை வேந்தன் நெடுந்தவம் தளர்ந்து சாய்வது, ஓர் மானுட மடந்தையால் என்னும் முன் வாய்மொழி இன்று தீர்ந்ததோ? என இயைக்க. வாய்மொழி – தவறாத சாபச் சொல். உலகம் கூறும் மொழி என்பாரும் உண்டு. (77)

6275. ஏறிய நெடுந்தவ மிழைத்த வெல்லைநா
ளாறிய பெருங்குணத் தறிவ னாணையாற்
கூறிய மனிதர்பாற் கொற்றங் கொள்ளலை
வேறினி யவர்வயின் வென்றி யாவதோ.

ஏறிய நெடுந்தவம் இழைத்த எல்லை நாள்,
ஆறிய பெருங்குணத்து அறிவன் ஆணையால்

கூறிய மனிதர்பால் கொற்றங் கொள்ளலை ;
வேறு இனி அவர்வயின் வென்றி ஆவதோ ?

பொ :—நீ உயர்ந்த பெரிய தவத்தை இயற்றிய காலமாகிய அந்நாளில், அமைதியுற்ற சிறந்த குணங்களையுடைய கடவுளாகிய பிரமன் கட்டளையால், உன்னால் இழித்துக் கூறப்பட்ட மனிதரிடம் வெற்றி பெறுதலை வேண்டிப் பெற்றாயில்லை ; இனி, அம்மனிதர்பால் தோல்வியின் வேறான வெற்றியுறுதல் நிகழுமோ ? (நிகழாது)

கு :—பல ஆண்டுகள் வருந்திச் செய்த தவமாதலின் நெடுந் தவம் என்றான். எல்லை-காலம். ஆறுதல்-அமைதியுறுதல். ஆறிய பெருங்குணத் தறிவன் என்றது பிரமனை. இராவணனுக்கு வரமளித் தவன் பிரமன் என்பது உத்தர காண்டத்தில் (இராவணன் பிறப்புப் படலம் 27) கூறப்பட்டது. அறிவன் - கடவுள். முன் பாட்டில் மானிட மகளால் உனக்குக் கேடு விளையும் என்றவன், இப்பாடலால் மானிட மகள் காரணமாக மனிதரால் நீ தோல்வியுறுவாய் என்று கூறியவாறு. (78)

6276. ஏயது பிறிதுணர்ந் தியம்ப வேண்டுமோ
நீயொரு தனியுல கேழு நீந்துவா
யாயிரந் தோளவற் காற்ற றோற்றனை
மேயினை யாமெனின் விளம்ப வேண்டுமோ.

ஏயது பிறிது உணர்ந்து இயம்ப வேண்டுமோ ?
நீ ஒரு தனி உலகு ஏழும் நீந்துவாய்,
ஆயிரம் தோளவற்கு ஆற்றல் தோற்றனை,
மேயினையாம், எனின் விளம்ப வேண்டுமோ ?

பொ :—நீ மனிதர்பால் தோல்வியுறுமாறு நேர்ந்ததனை, வேறு காரணத்தானும் ஆராய்ந்து கூறவேண்டுமோ? தன்னந் தனியனாய் ஏழுலகத்தாரையும் வென்று கடக்கவல்ல நீ, ஆயிரம் தோள்களை யுடைய கார்த்தவீரியனால் வலியழிந்து வந்தாய். அவனை வென்று மேம்பாடுற்றாயல்லை, என்றால் மேலும் கூறவேண்டுமோ?

கு :—ஏயது - நேர்ந்தது. ஒரு தனி - தன்னந்தனி. ஆயிரம் தோளவன் - கார்த்தவீரியார்ச்சுனன். ஆம் - அசை. நீ மானிடரால் தோல்வியுறுவாய் என்பதற்கு நீ கார்த்த வீரியனால் தோல்வியுற்ற தொன்றே போதிய ஏதுவாகும் என்றவாறு. இராவணன் கார்த்த வீரியார்ச்சுனன்பால் தோற்றமை உத்தரகாண்டத்திற் பேசப் பட்டது. (79)

6277. மேலுயர் கயிலையை யெடுத்த மேலைநா
ணாலுதோ ணந்திதா னவின்ற சாபத்தாற்
கூலவான் குரங்கினாற் குறுகுங் கோளது
வாலிபாற் கண்டனம் வரம்பி லாற்றலாய்.

'மேல் உயர் கயிலையை எடுத்த மேலை நாள்,
நாலு தோள் நந்திதான் நவின்ற சாபத்தால்,
கூல வான் குரங்கினால் குறுகும் கோளது,
வாலிபால் கண்டனம்; வரம்பு இல் ஆற்றலாய்'

பொ :—எல்லையற்ற வலிமைவாய்ந்த அரசே! மிகவுயர்ந்த கயிலாய மலையை நீ பெயர்த்தெடுத்த முற்காலத்தில், நான்கு தோள்களையுடைய நந்தி சொல்லிய சாபத்தால், வாலுள்ள பெரிய குரங்குகளால் (உனக்குக்) கேடு விளையும் என்னும் அதனை, வாலி பால் நீ தோல்வியுற்றதால் அறிந்தோம்.

கு :—நந்தி, சிவகணத் தலைவர். கூலம்-வால். கோள் குறுகும் அது என இயைக்க. கோள்-தீங்கு. இராவணன் வாலியால் தோற்றமை உத்தரகாண்டத்திற் பேசப்பட்டது. இச்செய்யுளால், குரங்குப் படையுடைய மனிதரான இராமலக்குவரால் நினக்குத் தீங்கு நேரும் என்று சுட்டியவாறு. (80)

6278 தீயிடைக் குளித்தவத் தெய்வக் கற்பினாள்
வாயிடை மொழிந்தசொன் மறுக்க வல்லமோ
நோயுனக் கியானென நுவன்று ளாளவ
ளாயவள் சீதைபண் டமுதிற் றோன்றினாள்.

தீயிடைக் குளித்த அத் தெய்வக் கற்பினாள்
வாயிடை மொழிந்த சொல் மறுக்க வல்லமோ?
'நோய் உனக்கு யான்' என நுவன்றுளாள் அவள்,
ஆயவள் சீதை பண்டு அமுதில் தோன்றினாள்.

பொ :-நெருப்பில் முழுகியவளும் தெய்வத்தன்மை வாய்ந்த கற்பினையுடையவளுமான வேதவதியென்பாள் வாயாற் சொல்லிய சொல்லின் விளைவைத் தடுக்க நாம் ஆற்றலுடையோமோ? அவள் உனக்கு யான் நோயாவேன் என்று கூறியுள்ளாள்; அவளே முன்பு பாற்கடலிற் பிறந்த திருமகளின் கூறான சீதையாவாள்.

கு :—தீயிடைக் குளித்த அத்தெய்வக் கற்பினள் என்றது வேதவதியை. தீயசொல் பயிலாத வாயாற் சொல்லிய சொல் பயனை ஊட்டுதல் தவறாது என்பது பெற வாயிடை மொழிந்த சொல் என்றான். நோய் போலத் துன்புறுத்திக் கொல்லுவேன் என்பதுபட நோயுனக்கியான் என்றாள். அவள் நுவன்றுளாள் என்க. ஆயவள் - அவள். அமிர்து என்றது பாற்கடலை. வேதவதி குசத்துவச முனிவர் புதல்வி; முனிவர் வேதம் ஓதுகையில் பிறந்தமையின் வேதவதி என்று பெயர் இடப்பட்டாள். அவளழகைக் கண்ட தேவர், அசுரர் முதலியோர் அவளை மணந்துகொள்ள விரும்பினர்; முனிவரும் தம் மகளுக்கு நாயகனாகத் தக்கான் திருமாலே யென்று துணிந்து, மணம் பேசி வந்தோர் கருத்துக்கு இணங்காதவராயினர். மணம் வேண்டி வந்தவருள் சம்பு என்னும் அரக்கன் முனிவரைக் கொன்று சென்றனன்; அது கண்டு முனிபத்தினியும் உயிர் நீத்தனள். வேதவதி தந்தையுரைப்படி திருமாலையே நாயகனாக அடைய எண்ணி, வனத்தில் தவம் புரிந்துகொண்டிருக்கும் நிலையில், திக்கு விசயம் செய்துவந்த இராவணன், அவளைக் கண்டு, அவள் அழகில் ஈடுபட்டு அவளிடம் தன்னை மணந்து கொள்ளும்படி வேண்டினன். அவள் அதற்கு இணங்காமையால் அவளை வலிதிற்றீண்டுவானாயினன். அதனாற் சினமுற்ற வேதவதி, 'பிரமனளித்த வரத்தின் வலிமையால் செருக்குற்று நீ என்னைத் தீண்டினமையால், யான் உனக்கும் உன் கிளைக்கும் இலங்கைக்கும் கேடு விளைப்பவளாகத் தோன்றுவேன்' என்று கூறி எரியிடை முழுகிப் பின் சீதையாகத் தோன்றினள் என்பது உத்தரகாண்டத்துத் திக்குவிசயப் படலத்திற் கண்டது. (81)

6279. சம்பரப் பெயருடைத் தானவர்க்
★ கிறைவனைத் தனுவ லத்தா
லம்பரத் தும்பர்புக் கமரிடைத்
தலைதுமித் தமர ருய்ய
வும்பருக் கிறைவனுக் கரசளித்
துதவினா னொருவ னேமி
யிம்பரிற் பணிசெயத் தயரதப்
பெயரினா னிசைவ ளர்த்தான்.

சம்பரப் பெயர் உடைத் தானவர்க்கு
இறைவனைத் தனு வலத்தால்
அம்பரத்து உம்பர் புக்கு அமரிடைத்
தலை துமித்து அமரர் உய்ய

உம்பருக்கு இறைவனுக்கு அரசு அளித்து
உதவினான் ஒருவன் நேமி
இம்பரில் பணி செயத் தயரதப்
பெயரினான் இசை வளர்த்தான்.

பொ :—தசரதன் என்னும் பெயரையுடைய அரசன், தன் ஆணையே இவ்வுலகில் அரச கருமங்களைப் புரியத் தான் விசும்பின் மீது தனியே சென்று தன் வில் வலியால் சம்பரன் என்னும் பெயருடைய அசுர வேந்தனைத் தலை தடிந்து, தேவர்கள் உய்யும் வண்ணம் அவர்கட்குத் தலைவனான இந்திரனுக்கு அரசு தந்து, தன் புகழ் ஓங்கச் செய்தான்.

கு :—தயரதப் பெயரினான், நேமி இம்பரில் பணி செய, அம்பரத்தும்பர் ஒருவன்புக்கு, தனுவலத்தால், சம்பரப் பெயருடைத் தானவர்க்கு இறைவனைத் தலைதுமித்து, அமரர் உய்ய, உம்பருக்கு இறைவனுக்கு அரசளித்து உதவினான், இசை வளர்த்தான்: என இயைக்க. தானவர்-அசுரர். தனு-வில். வலம்-வலிமை. அம்பரம்-ஆகாயம். உம்பர் - மேல். துமித்து-அறுத்து. உதவினான் முற்றெச்சம். நேமி - ஆணை. இம்பர்—இவ்வுலகம். பணி-அரசகருமம். முன் செய்யுள் வரை இராவணன்பால் அமைந்த பலவகைச் சிறுமைகளையும் கூறிய வீடணன், இராவணனுக்குப் பகைவரான இராமஇலக்குவர்பால் அமைந்த பலவகைப் பெருமைகளையும் உரைக்கப்புக்கு முன்னே மூன்று செய்யுட்களால் இராமஇலக்குவர்க்குத் தந்தையான தசரதன் பெருமை கூறுகின்றான். இது முதல் மூன்று பாடல்கள் ஒரு தொடர். தசரதன் விண் மீது சென்று பொருத காலத்தும் மண்ணுலகில் அவன் ஆணை நிகழ்ந்தது என்பான், நேமி இம்பரிற் பணிசெய என்றான். சம்பரன் என்பான் ஓர் அசுர வேந்தன். அவன் தன் பேராற்றலாற் செருக்குற்று விண்ணுலகு சென்று, தேவர்களையும் இந்திரனையும் வென்று விண்ணுலகாட்சியையும் மேற்கொண்டு அவர்களை வருத்துவானாயினன். அவனால் நலிந்த இந்திரன், தசரத சக்கரவர்த்தியிடம் சென்று முறையிட, அவன் கைகேயி தேரூரச் சென்று சம்பரனொடு பொருது, அவனை வென்று, இந்திரனுக்கு விண்ணுலகாட்சி நல்கி மீண்டான் என்பது இச்செய்யுளிற் குறித்த கதை. இக்கதை, 'இன்றளிர்க் கற்பக நறுந்தேன் இடைதுளிக்கும் நிழலிருக்கை யிழந்துபோந்து, நின்றளிக்குந் தனிக்குடையினிழலொதுங்கிக் குறையிரந்து நிற்ப நோக்கிக், குன்றளிக்குங் குலமணித்தோட் சம்பரனைக் குலத்தோடுந் தொலைத்து நீகொண் டன்றளித்த வரசன்றோ புரந்தரனின் றாள்கின்ற தரச வென்றான்' (பால. கையடைப். 8) என முன்னும் கூறப்பட்டது. (82)

6280. மிடல்படைத் தொருவனா யமரர்கோன்
விடையதாய் வெரிநின் மேலா
யுடல்படைத் தவுணரா யினரெலா
மடியவா ளுருவி னானு
மடல்படைத் தவனியைப் பெருவளந்
தருகவென் றருளி னானுங்
கடல்படைத் தவர்நெடுங் கங்கைதந்
தவன்வழிக் கடவுண் மன்னன்.

மிடல் படைத்து ஒருவனாய் அமரர்கோன்
விடையதாய் வெரிநின் மேலாய்
உடல் படைத்து, அவுணராயினரெலாம்
மடிய வாள் உருவினானும்
அடல் படைத்து அவனியைப் பெருவளம்
தருக என்று அருளினானும்
கடல் படைத்தவர் நெடுங் கங்கை
தந்தவன் வழிக் கடவுள் மன்னன்.

பொ :—அத் தசரதன், வலிமையைத் தனக்கே உரிமையாகக் கொண்டு, ஒப்பாரில்லாதவனாய், தேவர்க்கு அரசனான இந்திரன் விடையாக (நின்று தாங்க) அதன் இமிலில் தங்கி, (தேவரோடு) மாறுபாடு கொண்டமையால் அசுரரனைவரும் அழியும்படி தன் வாளினை உறையினின்றுருவிய ககுத்தனும், நிலமகளை வென்று, (எல்லா உயிர்களும் உய்யும்படி) 'நிறைந்த வளங்களையெல்லாம் தருக' என்று கருணை கூர்ந்த பிருதுவும், கடலை உண்டாக்கிய சகரரும் பெருமை வாய்ந்த கங்கையை நிலமிசைக் கொணர்ந்த பகீரதனும் ஆகியவர் வழியிலே வந்த தெய்வத் தன்மை பொருந்திய அரசனாவன்.

கு :—மிடல்-வலிமை. விடையதாய் என்பதனுள் ஆய் என்பதனை ஆக எனத் திரிக்க. வெரிந் என்றது முதுகில் உள்ள இமில் என்னும் உறுப்பினை. உடல்-மாறுபாடு. அடல்-வெற்றி. அவனியை அடல் படைத்து என மாறுக. 'பெருவளம் தருக' என்பது, நிலமகளை நோக்கிப் பிருது கூறியது. கடவுள்-தெய்வத்தன்மை. கடல் படைத்தவரும் கங்கை தந்தவனும் என உம்மை விரிக்க. அத் தயரதன், ககுத்தனும், பிருதுவும், சகரரும், பகீரதனும் ஆகியவர் வழியில் வந்த கடவுள் மன்னன் என்க. பிருது நிலமகளை வளஞ்

சுரக்கச் செய்த வரலாறும், ககுத்தன் அசுரரை வென்ற வரலாறும் பாலகாண்டம் குலமுறை கிளத்து படலத்து 1, 3-ஆம் செய்யுளால் அறியத்தகும். சகரர் கடல் படைத்ததும், பகீரதன் கங்கை கொணர்ந்ததும் (பால) அகலிகைப் படலத்து 37 முதல் 60 ஆம் பாடல்வரை பேசப்பட்டன. (83)

6281. பொய்யுரைத் துலகினிற் சினவினர்
குலமறப் பொருது தன்வே
னெய்யுரைத் துறையிலிட் டறம்வளர்த்
தொருவனாய் நெறியி னின்றான்
மையுரைத் துலவுகண் மனைவிபால்
வரமளித் தவைம றாதே
மெய்யுரைத் துயிர்கொடுத் தமரரும்
பெறுகிலா வீடு பெற்றான்.

பொய் உரைத்து உலகினில் சினவினர்
குலம் அறப் பொருது தன்வேல்
நெய் உரைத்து உறையில் இட்டு அறம் வளர்த்து
ஒருவனாய் நெறியில் நின்றான்
மை உரைத்து உலவு கண் மனைவிபால்
வரம் அளித்தவை மறாதே
மெய் உரைத்து உயிர் கொடுத்து அமரரும்
பெறுகிலா வீடு பெற்றான்.

பொ :—(அத் தயரதன்,) பொய் பேசிக் கொதித்தெழுந்தோர் குலம் உலகத்தில் அழியும்படி போர் செய்து, தன்வேற்படையை நெய் பூசி உறையில் இட்டு அறம் ஓங்கச் செய்து, ஒப்பாரில்லாதவனாய், அரச நீதியினின்றும் பிறழாதொழுகி, மைதீட்டப்பெற்றுலவுகின்ற கண்களையுடைய மனைவியாகிய கைகேயியிடம் இரண்டு வரம் கொடுத்து, அவற்றை மறுக்காமல் உண்மைபேசி உயிரையும் கொடுத்துத் தேவரும் அடையாத வீட்டுலகை அடைந்தான்.

கு :—சினவுதல்-கொதித்தெழுதல்; 'இருளுமுண்டோ ஞாயிறு சினவின்' (90) என்பது புறநானூறு. உரைத்தல் என்பது, பேசுதல் பூசுதல் தீட்டுதல் என்னும் பொருள்களில் பயின்றது. (84)

6282. அனையவன் சிறுவரெம் பெருமவுன்
பகைஞரன் னவரை யம்மா
வினையரென் றுணர்தியே யிருவரும்
மொருவரும் மெதிரி லாதார்
முனிவரும் மமரரும் முழுதுணர்ந்
தவர்களும் முற்று மற்று
நினைவருந் தகையர்நம் வினையினன்
மனிதரா யெளிதி னின்றார்.

அனையவன் சிறுவர் எம்பெரும! உன்
பகைஞர், அன்னவரை அம்மா!
இனையர் என்று உணர்தியேல், இருவரும்
ஒருவரும் எதிர் இலாதார்;
முனிவரும் அமரரும் முழுதுணர்ந்
தவர்களும் முற்றும் மற்றும்
நினைவருந் தகையர்; நம் வினையினால்
மனிதராய் எளிதின் நின்றார்.

பொ :—' எம்பெருமானே! அத்தசரதன் புதல்வர் உன் பகைவர்; அவரை இப்பெற்றியுடையவர் என்று தெரிந்துகொள்ள விரும்பினையாயின், அவ்விருவரும் ஒப்பாக ஒருவரும் இல்லாதவர்; முனிவர்களும் தேவர்களும் பொருள்களின் இயல்பு முழுதும் அறிந்தோரும் மற்றுள்ள உயிர்களும் முழுதும் அறிதற்கரிய குணங்களையுடையார்; நம் வினை காரணமாக மனிதவடிவுடையராய் எளிமையோடு நின்றனர்.

கு :—அனையவன் என்றது தயரதனை. சிறுவர் என்பது புதல்வர் என்னும் பொருளிற் பயின்றது. அம்மா, வியப்புணர்த்தியது. எதிர்—ஒப்பு. முற்றும் நினைவருந்தகையர் என இயைக்க. தகை—தன்மை. உயர்குடிப்பிறப்பும், பேராற்றலும், நிறையறிவும், அடைந்தோரைப் புரத்தலும், அறத்தாறொழுகலும், வாய்மையின் வழுவாமையும் முதலியவை இராமஇலக்குவர்க்குச் செயற்கையானன்றி இயற்கையாய்க் கருவிலே அமைந்தமை தோன்ற அவர்க்குத் தந்தையான தசரதன் முதலிய முன்னோர் பெருமை கூறி, இச்செய்யுளால் அவர் தம் பெருந்தகைமையும் தெய்வத்தன்மையும் விளக்கியவாறு. (85)

6283. கோசிகப் பெயருடைக் குலமுனித்
தலைவனக் குளிர்மலர்ப்பே
ராசனத் தவனொடெவ் வுலகமுந்
தருவனென் றமைய லுற்று
னீசனிற் பெறுபடைக் கலமிமைப்
பளவினெவ் வுலகும் யாவு
நாசமுற் றிடநடப் பனகொடுத்
தவைபிடித் துடையர் நம்பா.

கோசிகப் பெயர் உடைக் குலமுனித்
தலைவன் அக் குளிர் மலர்ப் பேர்
ஆசனத் தவனொடு எவ்வுலகமும்
தருவன் என்று அமையலுற்றான்
ஈசனில் பெறு படைக்கலம் இமைப்
பளவின் எவ்வுலகும் யாவும்
நாசம் உற்றிட நடப்பன கொடுத்தவை
பிடித்துடையர் நம்பா !

பொ :—நம்பா ! அந்தக் குளிர்ந்த தாமரை மலராகிய பெருமை வாய்ந்த ஆசனத்தையுடைய பிரமனோடு எல்லாவுலகுகளையும் படைப்பேன் என்று தொடங்கியவனாகிய கோசிகன் என்னும் பெயருடைய சிறந்த முனித் தலைவன், தான் சிவபிரானிடம் பெற்ற—இமைக்கும் நேரத்துள் எல்லாவுலகங்களும் அவற்றிலுள்ள எல்லாப் பொருளும் அழியும்படி செல்லும் படைக்கலம் கொடுத்தவைகளைக் கைக் கொண்டுள்ளனர்.

கு :—கோசிகன்-விசுவாமித்திரன். விசுவாமித்திரன், பிரமனோடு எல்லாவுலகங்களும் படைக்கத் தொடங்கிய செய்தி பாலகாண்டம் மிதிலைக் காட்சிப் படலத்து 117-ஆம் பாடலால் அறியத்தகும். ஈசன்-சிவபிரான். நம்பன்-விரும்பத்தக்கவன். விசுவாமித்திரன் இராமனுக்குப் படைக்கலங்கள் வழங்கினமை, பாலகாண்டம் வேள்விப் படலத்து 1, 2 பாடல்களிற் பேசப்பட்டது. இது முதல் நான்கு செய்யுட்கள் இராமஇலக்குவர் படைவலி பேசுவன. (86)

6284. எறுழ்வலிப் பொருவிறே ளவுணரோ
டமரர்பண் டிகல்செய் காலத்
துறுதிறற் கலுழன்மீ தொருவனின்
றமர்செய்தா னுடைய வில்லுந்

தெறுசினத் தவர்கண்முப் புரநெருப்
புறவுருத் தெய்த வம்புங்
குறுமுனிப் பெயரினு னிறைதவர்க்
கிறைதரக் கொண்டு நின்ருன்.

எறுழ்வலிப் பொருவில் தோள் அவுணரோடு
அமரர் பண்டு இகல் செய் காலத்து,
உறுதிறல் கலுழன்மீது ஒருவன் நின்று
அமர் செய்தான் உடைய வில்லும்,
தெறு சினத்தவர்கள் முப்புரம் நெருப்பு
உற, உருத்து எய்த அம்பும்
குறுமுனிப் பெயரினுன் நிறைதவர்க்கு
இறை தரக் கொண்டு நின்ருன்.

பொ :—மிக்க வலிமை வாய்ந்த ஒப்பற்ற தோள்களையுடைய அசுரரோடு தேவர்கள் முன் போர் செய்தபொழுது, மிக்க வலிமை வாய்ந்த கருடன்மேல் தங்கிப் போர் செய்த ஒப்பற்ற திருமாலுக்குரிய வில்லும், அழிக்கும் வெகுளியினையுடைய அசுரர் தங்கிய திரிபுரங்களும் நெருப்புப்பற்றும்படி (சிவபிரான்) சினந்து எய்த அம்பும், குறுமுனி என்னும் பெயரினையுடைய நிறைந்த தவத்தினர்க்குத் தலைவனை அகத்தியன் தரப் பெற்றுள்ளான்.

கு :—குறுமுனி-அகத்திய முனிவன். அகத்தியன் இராமனுக்கு வில்லும் அம்பும் வழங்கியமை, ஆரணியகாண்டம் அகத்தியப்படலத்து 55, 56-ஆம் பாடல்களிற் கூறப்பட்டது. (87)

6285. நாவினு லுலகைநக் கிடுவதிக்
களவிடற் குரிய நாளு
மேவுதீ விடமுயிர்ப் பனவெயிற்
பொழியெயிற் றனவவ் வீர
ராவமா மரியபுற் றுறைவமுற்
றறிவருக் கழிவு செய்யும்
பாவகா ரியருயிர்ப் பதமலா
திரைபெரு பகழி நாகம்.

நாவினல் உலகை நக்கிடுவ; திக்கு
அளவிடற்கு உரிய; நாளும்
மேவு தீவிடம் உயிர்ப்பன; வெயில்
பொழி எயிற்றன; அவ்வீரர்
ஆவமாம் அரிய புற்று உறைவ;
முற்றறிவருக்கு அழிவு செய்யும்
பாவ காரியர் உயிர்ப் பதமலாது
இரை பெரு; பகழி நாகம்.

பொ:—அவ்வீரருடைய அம்புகளாகிய பாம்புகள், அம்புக் கூடென்னும் நெருங்குதற்கரிய புற்றிலே உறைவன; நாக்கினல் உலகை நக்குவன; திசைகளை அளவிடுதற்குரியன; நாடோறும் பொருந்திய கொடிய நஞ்சினை வெளிவிடுவன; ஒளி வீசுகின்ற பற்களையுடையன; முழுதும் உணர்ந்தவரான பெரியோர்கட்குக் கேடு விளைக்கும் தீயோருடைய உயிராகிய இரையையல்லது வேறு இரையைக் கொள்ளாதன.

கு:—அவ்வீரர் பகழி நாகம், ஆவமாம் அரியபுற்று உறைவ; நாவினல் உலகை நக்கிடுவ; திக்கு அளவிடற்கு உரிய; மேவு தீவிடம் நாளும் உயிர்ப்பன; வெயில் பொழி எயிற்ற; இரை பெரு: என முற்றுவிக்க. உலகை நக்கிடுவ என்றது உலகத்தை நக்கியே கொல்லவல்லன என்றவாறு. உலகெங்கும் செல்லவல்லன என்பது படத் திக்களவிடற்குரிய என்ருன். அம்பைப் பாம்பாக உருவகித்தமைக் கேற்ப நாக்கும் பல்லும் முதலியனவும் கூறப்பட்டன. வெயில்-ஒளி. ஆவம் - அம்புக்கூடு. பாவகாரியர் - தீச்செயல் செய்வோர்; பாவிகள். பதம்-உணவு. (88)

6286. பேருமோ வொருவரா லவர்களா
லல்லதிஃ பெரிய வேனு
நாருமூ ரியுமரு நம்முடைச்
சிலேகள்போ னலிவ வாமோ
தாருவோ வேணுவோ தாணுவா
யுலகினைத் தழுவி நிற்கும்
மேருவோ மால்வரைக் குலமெலா
மல்லவோ வில்லு மன்னே.

பேருமோ ஒருவரால் அவர்களால்
அல்லது; இவ் பெரியவேனும்
நாரும் மூரியும் அரு; நம்முடைச்
சிலைகள் போல் நலிவவாமோ?
தாருவோ? வேணுவோ? தாணுவாய்
உலகினைத் தழுவி நிற்கும்
மேருவோ மால்வரைக் குலமெலாம்
அல்லவோ? வில்லு மன்னோ.

பொ:—(அவர்கள் கைக்கொண்ட) விற்கள், மரமோ? (அன்று) மூங்கிலோ? (அன்று) தூணாய் நின்று உலகினைத் தாங்கி நிற்கும் மேருவோ? (அன்று;) பின்னை எவையெனின், பெரிய மலைக் கூட்டங்களெல்லாம் சேர்ந்தியைந்தன வல்லவோ! இவை அவர்களால் அல்லது பிறர் ஒருவராலும் சிறிதும் அசையா; நம்முடைய விற்கள் போல நாணும் வலிமையும் ஒரு நாளும் அழியா; வலி குறைவன வாகா.

கு:—வில்லு, தாருவோ? வேணுவோ? தாணுவாய் உலகினைத் தாங்கி நிற்கும் மேருவோ? மால்வரைக் குலமெலாமல்லவோ? இவ், அவர்களால் அல்லது ஒருவரால் பேருமோ? நம்முடைச் சிலைகள் போல் நாரும் மூரியும் அரு நலிவவாமோ? என இயைக்க. நம்முடைச் சிலைகள் போல் என்பது இடைநிலை விளக்காய், நம்முடைச் சிலைகள் போல் நாரும் மூரியும் அரு, நம்முடைச் சிலைகள் போல் நலிவவாமோ? என இயையும். நார் - நாணி. மூரி - வலிமை. நலிதல்-வலி குறைதல். தாரு-மரம். வேணு-மூங்கில். தாணு-தூண். (89)

6287. உரமொருங் கியதுநீர் கடையும்வா
லியதுமார் புலகை மூடும்
மரமொருங் கியகரா தியர்விரா
தனதுமால் வரைகண் மானுஞ்
சிரமொருங் கினவினிச் செருவொருங்
குளதெனிற் றெவ்வ ரென்பார்
பரமொருங் குவதலாற் பிறிதொருங்
காததோர் பகையு முண்டோ.

உரம் ஒருங்கியது நீர்கடையும்
வாலியது மார்பு ; உலகை மூடும்
மரம் ஒருங்கிய, கராதியர் விராதனது
மால் வரைகள் மானும்
சிரம் ஒருங்கின ; இனிச் செரு ஒருங்
குளது எனில் தெவ்வர் என்பார்
பரம் ஒருங்குவது அலால் பிறிது
ஒருங்காதது ஓர் பகையும் உண்டோ ?

பொ :—இராமனேவிய அம்பால், கடல் கடைந்த வாலியின் மார்பு வலி ஒடுங்கிற்று; உலகத்தைக் கவிந்து நின்ற மராமரங்கள் அழிந்தன ; கரன் முதலியோர் விராதன் என்போருடைய பெரிய மலைகளையொத்த தலைகள், அற்றொழிந்தன ; போரில் திரண்டெழுவது உண்டென்றால், பகைவர் என்போருடைய தொகுதி அழிவதன்றி, வேறாக அழியாததொரு பகையும் இல்லை.

கு :—உரம்-வலிமை. ஒருங்குதல் என்பது, ஒடுங்குதல் அழிதல் ஒன்று கூடுதல் என்று பொருள் தந்தது. நீர் என்பது பாற்கடல் என்று பொருள்பட நின்றது. தேவரும் அசுரரும் அமுது வேண்டிப் பாற்கடல் தயிர்த் தாழியாக, மந்தரமலை மத்தாக, வாசுகி தாம்பாக, சந்திரன் அடைதறியாகக்கொண்டு கடைந்த காலத்து அவர் சோர்ந்த நிலையில், தெய்வ வழிபாட்டின் பொருட்டு அங்கு வந்த வாலி அவர்க்கு உதவியாக நின்று கடைந்து அமுது நல்கிய செய்தி, 'கழறுதேவரோ டமரர் கண்ணினின்று, உழலு மந்தரத் துருவுதேய முன், அழலுங் கோளரா அகடு தேய்விடச், சுழலும் வேலையைக் கடையும் தோளினான்' (கிட்கிந்தா. நட்புக். 38) 'மலையுடன் அரவு மற்று மதியமும் பலவும் தாங்கி, அலைகடல் கடையவேண்டின் ஆரினிக் கடைவரையா' (வாலிவதை. 144), 'நறிதா நல்லமிழ் துண்ண நல்கலின்' (வாலிவதை. 159) என்று முன்னும் கூறப் பட்டது. 'உலகம் மூடும் மரம்' என்றது ஏழு மராமரங்களை. பரம்-என்பது தொகுதி என்ற பொருளிற் பயின்றது. உண்டோ என்பதனுள் ஓகாரம் எதிர்மறை. (90)

6288. சொல்வரம் பெரியமா முனிவரென்
பவர்கடந் துணையி லாதா
ரொல்வரம் பெரியதோ ளிருவரே
யமரரோ டுலகம் யாவும்

வெல்வரென் பதுதெரிந் தெண்ணினர்
நிருதர்வேர் முதலும் வீயக்
கொல்வரென் றுணர்தலா லவரைவந்
தணைவதோ ரிசைவு கொண்டார்.

சொல் வரம் பெரிய மா முனிவர்
என்பவர்கள், தம் துணை இலாதார்
ஒல்வரம் பெரிய தோள் இருவரே
அமரரோடு உலகம் யாவும்
வெல்வர் என்பது தெரிந்து எண்ணினர்;
நிருதர்வேர் முதலும் வீயக்
கொல்வர் என்று உணர்தலால், அவரைவந்
தணைவதோர் இசைவு கொண்டார்.

பொ :—சிறப்பித்துப் பேசப்படும் வரத்தால் மேம்பட்ட உயர்ந்த முனிவர் என்று சொல்லப்படுவோர், தமக்கு நேரும் இடையூறுகளைப் போக்கிக் காக்கும் துணைவரை யில்லாதவராய்ப் பொருந்திய மேன்மை வாய்ந்த பெரிய தோள்களையுடைய (இராம இலக்குவ ராகிய) இருவரும், தேவர்களோடு எல்லாவுலகத்தாரையும் வெல்வார் என்பதனை நன்கு ஆராய்ந்து நினைந்து, அவ்விருவரும் அரக்கராகிய மரங்களின் அடிவேரும் அறும்படி அழிப்பார்கள் என்று துணிந்தமையால், அவரை வந்து கூடுவதாகிய பொருந்திய செயலை மேற்கொண்டனர்.

கு :—சொல்லுதல்-சிறப்பித்துப் பேசுதல். வரம்-தேவர் முதலிய உயர்ந்தோரால் பெறும்பேறு. தம் துணை இலாதார் என்பதனை இருவர்க்கு அடையாக்கி, ஒப்பாரிலாதவரான என்று பொருளுரைத் தலும் ஆம். வேர்முதல் - அடிவேர். வீதல் - அழிதல். இசைவு - பொருந்திய செயல். இது முதல் 4 செய்யுட்கள், ‘நம்மால் ஒறுக்கப் பட்ட தேவரும் முனிவரும் பிறரும் இராமலக்குவர் பேராற்றல்கண்டு, அவரால் நாம் அழிவது திண்ணம் என்று துணிந்து அவர்பால் சரண மடைந்து, அவரால் தலையளி செய்யப்பெற்றமையால் நமக்கு அஞ்சா ராயினர்’ என்று வலியுறுத்தும் வீடணன் கூற்றாய் அமைந்தன. (91)

6289. துஞ்சுகின் றிலர்களா லிரவுநன்
பகலுநிற் சொல்ல வொல்கி
நெஞ்சுநின் றயருமிந் நிருதர்பேர்
சனகியா நெடிய தாய

நஞ்சுதின் றவர்கடா நண்ணுவார்
நரகமென் றெண்ணி நம்மை
யஞ்சுகின் றிலர்கணின் னருளலாற்
சரணிலா வமர ரையா.

துஞ்சுகின்றிலர்களால் இரவும் நன்பகலும்,
நிற் சொல்ல ஒல்கி
நெஞ்சு நின்று அயரும் இந் நிருதர்;
'பேர் சனகியாம் நெடியது ஆய
நஞ்சு தின்றவர்கள் தாம் நண்ணுவார்
நரகம்' என்று, எண்ணி, நம்மை
அஞ்சுகின்றிலர்கள், நின் அருள் அலால்
சரண் இலா அமரர்; ஐயா!

பொ :—ஐயா! நின் அருளை அன்றிப் புகலில்லாத தேவர், சனகி என்று பெயர் வாய்ந்த பெரிய நஞ்சினை உட்கொண்டவர்கள் (இறந்து) நரகினை அடைவார்கள்' என்று நினைந்து, நமக்குச் சிறிதும் அஞ்சாராயினர்; அதனை நின்னிடம் சொல்லப் பயந்து, மனச் சோர்வுற்ற இவ்வரக்கர், இரவும் பகலும் உறங்காராயினர்.

கு :—ஐயா! அமரர் 'நஞ்சு தின்றவர் கள்தாம் நரகம் நண்ணு வார்' என்று எண்ணி, நம்மை அஞ்சுகின்றிலர்கள்; (இதனை) நிற் சொல்ல ஒல்கி நெஞ்சு நின்று அயரும் இந்நிருதர் இரவும் பகலும் துஞ்சுகின்றிலர்கள்! என இயைக்க. துஞ்சுதல் - உறங்குதல். ஒல்குதல் - அஞ்சுதல். எதிர் நின்ற அரக்க வீரரை இந்நிருதர் என்றான். சனகியாய நஞ்சு என்றது உருவகம். சனகியை இலங் கையிற் சிறை வைத்தது நஞ்சினையுட்கொண்டது போல் அழிவு தலைத்தரும் என்றவாறு. சரண்-புகலிடம். (92)

6290. புகன்மதித் துணர்கிலா மையினமக்
கெளிமைசால் பொறுமை கூர
நகன்மதிக் கிலமறுப் பொலியவா
ளொளியிழந் துதய நண்ணும்
பகன்மதிக் குவமையா யினவெலா
மிரவுகால் பருவ நாளி
னகன்மதிக் குவமையா யினதபோ
தனருளார் வதன மம்மா.

புகல் மதித்து உணர்கிலாமையின் நமக்கு
எளிமை சால்பொறுமை கூர
நகல் மதிக்கில, மறுப்பொலிய வாள்
ஒளி இழந்து உதயம் நண்ணும்
பகல் மதிக்கு உவமையாயினவெலாம்
இரவு கால் பருவ நாளின்
அகல் மதிக்கு உவமையாயின
தபோதனருளார் வதனம் அம்மா!

பொ :—(முன்பு) சென்று சேரும் அரணை இடத்தை ஆராய்ந்தறியாமையால் நம்மிடம் மிகவும் எளிமைப்பட்டு, அதனால் உளதாய பொறுமை மிக, மகிழ்ச்சியைக் கருதாதனவாய்க் களங்கம் விளங்க மிக்க ஒளியினை இழந்து, சூரியனுடைய தோற்றத்தொடு கூடிய பகற் காலத்து மதியினையொத்த தவச் செல்வராயுள்ளாருடைய முகமெல்லாம், (இப்போது) இரவில் வெளிப்பட்ட உவா நாளின் மதிக்கு உவமையாயின.

கு :—முன்பு பகல் மதிக்கு உவமையாயின தபோதனருளார் வதனம், (இப்போது) இரவு கால் பருவ நாளின் அகல் மதிக்கு உவமையாயின என இயைக்க. புகல்-புகுமிடம். நகல்-மகிழ்ச்சி. பருவ நாள்-பூரணை நாள். தபோதனர்-தவத்தைச் செல்வமாகவுடையவர். வதனம்-முகம். முன்பு நம் கொடுமையால் வருந்தி, அதனை நீக்கிக் காப்பாரை இன்றி ஒளியிழந்து, எளியராயிருந்த தவத்தினர், இப்போது இராமன் பேராற்றல் கண்டு, அவன்பால் அடைக்கலம் புகுந்து, அவனால் அரக்கரழிவு உறுதியென்று துணிந்தமையால், மகிழ்ந்து பூரிப்பாராயினர் என்றவாறு. (93)

இச்செய்யுள், 'உரமொருங்கியது' (6287) என்பதன்பின் சில பிரதிகளில் (19, 21, 25, 41, 62) காணப்படுகின்றது.

6291. சிந்துமுந் துலகினுக் கிறுதிபுக்
குருவொளித் துழறல் செய்வா
ரிந்துவின் றிருமுகத் திறைவிநம்
முறையுளா ளென்ற லோடு
மந்தகன் முதலினோ ரமரரும்
முனிவரும் பிறரு மஞ்சார்
வந்துதம் முலகமும் வானமுங்
கண்டுவந் தகல்வர் மன்னோ.

சிந்து முந்து உலகினுக்கு இறுதிபுக்கு
உரு ஒளித்து உழல்தல் செய்வார்
இந்துவின் திருமுகத்து இறைவி நம்
உறையுளாள் என்றலோடும்
அந்தகன் முதலினோர் அமரரும்
முனிவரும் பிறரும் அஞ்சார்
வந்துதம் உலகமும் வானமும்
கண்டு உவந்து அகல்வர் மன்னோ.

பொ :—(முன்பு நமக்கு அஞ்சித் தம் உலகம் விட்டுக்) கடல் கிளர்ந்தெழு(ந்துமோது)கின்ற உலகின் முடிவிடத்தில் சென்று தம் முருவிட்டு (வேற்றுருக்கொண்டு) சுழன்று திரிபவரான இயமன் முதலிய தேவரும் முனிவரும் பிறரும், சந்திரன் போன்ற அழகிய முகத்தினையுடைய தலைவியாகிய சீதை நம் நகரத்தில் (சிறையில்) உள்ளாள் என்று சொல்லக் கேட்ட அளவில் (அரக்கர் அழிதல் திண்ணம் என்று துணிந்து) அச்சம் நீங்கியவராய் வந்து தம் உலகத்தையும் வானுலகத்தையும் கண்டு மகிழ்ந்து செல்வாராயினர்.

கு :—உழறல் செய்வாரான அந்தகன் முதலினோர் அமரரும் முனிவரும் பிறரும், இறைவி நம் உறையுளாள் என்றலோடும் அஞ்சார் வந்து தம் உலகமும் வானமும் கண்டு உவந்து அகல்வர் என இயைக்க. சிந்து-கடல். முந்துதல் - கிளர்ந்தெழுதல். உலகினுக்கு இறுதி-உலகத்தின் முடிவிடம்; என்றது சக்கரவாளகிரிக்கும் அப்பாற்பட்ட நிலத்தினை. உழல்தல் - சுழலுதல். இந்து - சந்திரன். இறைவியென்றது சீதாபிராட்டியை. உறையுள் - உறையும் இடம். அந்தகன்-இயமன். மன்னும் ஓவும் அசைநிலை. (94)

6292. சொலத்தகாத் துன்னரிமித் தங்களெங்
கணும்வரத் தொடர்வ வொன்னார்
வெலத்தகா வமரரும் மவுணருஞ்
செருவில்விட் டனவி டாத
குலத்தகால் வயநெடுங் குதிரையும்
மதிர்குரற் குன்று மின்றும்
வலத்தகான் முந்துறத் தந்துநம்
மனையிடைப் புகுது மன்னோ.

சொலத் தகாத் துன்னிமித்தங்கள் எங்கணும்
வரத்தொடர்வ; ஒன்னார்
வெலத்தகா அமரரும் அவுணரும்
செருவில்விட்டன விடாத
குலத்தகால் வயநெடுங் குதிரையும்
அதிர்குரல் குன்றும் இன்றும்
வலத்த கால் முந்துறத்தந்து, நம்
மனையிடைப் புகுதும் மன்னோ!

பொ :—சொல்லத்தகாத தீய நிமித்தங்கள் எங்கும் தொடர்ந்து வருவனவாயின; நம் பகைவராய் நம்மை வெல்லமாட்டாத தேவரும் அசுரரும் போரில் கைவிட்ட நீங்காத சிறந்த காலின் வலிமையுடைய நெடிய குதிரைகளும், நடுங்கத்தக்க முழக்கத்தினையுடைய மலை போன்ற யானையும் இன்றும் நம் மனைகளில் தம் வலக்காலை முன் வைத்துப் புகும்.

கு :—குலம் - சிறப்பு. வயம் - வலிமை. வலத்தகால் - வலக்கால். யானை, குதிரை, பசு முதலியவை இடக்காலை முன்னே தூக்கி வைத்து வீட்டுள் புகுந்தால் நலம் விளையும்; வலக்காலை முன்னே தூக்கி வைத்து வீட்டுள் புகுந்தால் தீமை விளையும் என்பது உலக வழக்கு. சொலத்தகாத் துன்னிமித்தங்கள் தோன்றுகின்றன என்று தொகுத்துக் கூறி, இச்செய்யுளின் பின்னடிகளாலும் பின்வரும் செய்யுளாலும் அதனை விரித்துரைத்தவாறு. (95)

6293. வாயினும் பல்லினும் புனல்வறந்
துலறினார் நிருதர் வைகும்
பேயினும் பெரிதுபேய் நரிகளும்
புரிதரும் பிறவு மெண்ணிற்
கோயிலுந் நகரமும் மடநலார்
குழலுநங் குஞ்சி யோடுந்
தீயின்வெந் திடுமலா லொருநிமித்
தம்பெறுந் திறனு முண்டோ.

வாயினும் பல்லினும் புனல் வறந்து
உலறினார் நிருதர்; வைகும்
பேயினும் பெரிது பேய் நரிகளும்
புரிதரும்; பிறவும் எண்ணின்

கோயிலும் நகரமும் மடநலார்
குழலும் நம் குஞ்சியோடும்
தீயின் வெந்திடும்; அலால், ஒரு நிமித்தம்
பெறும் திறனும் உண்டோ?

பொ :—அரக்கர் வாயினும் பல்லினும் நீர் வற்றுதலால் பொலி வழிந்தனர்; அரண்மனையிலும் நம் இலங்கை நகரிலும் வற்றிய (உடம்புடைய) பேயைக் காட்டிலும், மிகவும் வெறிகொண்ட நரிகளும் பல்கும்; மற்றவற்றையும் நினையின் அரண்மனையும் இலங்கை நகரமும் இளைய மகளிர் கூந்தலும் நம் மயிர் முடியும் நெருப்பினுல் வெந்த(ழிந்து சுறு நாற்றம் உடையவாயி)ன; இவற்றையன்றி ஒரு நல்ல நிமித்தமேனும் பெறும் வகையும் இல்லை.

கு :—வறத்தல் – வறளுதல்; வற்றுதல். உலறுதல் – பொலி வழிதல். ‘கண்ணும் முகமும் உலறி’ (2966) என்பது சீவக சிந்தாமணி. வைகுதல் – வற்றுதல்; ‘காவிரி வைகிய காலத்தினும்’ என்பது தஞ்சைவாணன் கோவை (71). பேய்கள் வற்றிய வுடம்புடையன என்பது, ‘வெற்றெலும்பை நரம்பின் வலித்து மேல் வேய்ந்திலா இறப்பேய்ந்த உடம்பின’ (கலிங்கத்துப்பரணி பேய்களைப். 4) என்பதனுலும் அறியத்தகும். பெரிது – மிகவும். ‘கலங்குவள் பெரிது’ (கலித்தொகை. 27) என்பதனுள் பெரிது என்பது மிகவும் என்ற பொருளிற் பயின்றமை காணலாம். பேய் நரி – வெறி கொண்ட நரிகள். புரிதரல் – புரிதல்-மிகுதல்; ‘வனப்புப் புரிந்த தகையினன்’ (7-51) என்னும் பரிபாடலுள், புரிதல் மிகுதல் என்னும் பொருளிற் பயின்றது. கோயில் – அரசன் மாளிகை. குஞ்சி - ஆடவர் தலை மயிர் முடி. திறம் - வகை. கோயிலும் நகரமும் என்பது இடைநிலை விளக்காய், கோயிலும் நகரமும் பேயினும் பெரிது பேய் நரிகளும் புரிதரும் எனவும், கோயிலும் நகரமும் மடநலார் குழலும் நம் குஞ்சியோடும் தீயின் வெந்தன எனவும் முன்னும் பின்னும் இணைந்து நின்றது. (96)

6294. சிந்தமா நாகரைச் செருமுருக்
கியகரன் றிரிசிரத் தோன்
முந்தமா ளுயினன் வாலியே
முதலினேர் முடிவு கண்டா
லந்தமா னிடவனே டாழிமா
வலவனும் பிறரு மையா
விந்தமா னிடவரா மிருவரோ
டெண்ணலா மொருவர் யாரே.

சிந்த மா நாகரைச் செரு
முருக்கிய கரன், திரிசிரத்தோன்,
முந்தமான் ஆயினன், வாலியே
முதலினோர் முடிவு கண்டால்,
அந்த மான் இடவனோடு
ஆழிமா வலவனும் பிறரும், ஐயா!
இந்த மானிடவராம் இருவரோடு
எண்ணலாம் ஒருவர் யாரே?

பொ:—ஐயா! பெருமை வாய்ந்த தேவரைப் போரில் சிதறும்படி வலியழித்த கரனும் திரிசிரனும், முன்னே மான்வடிவுற்ற மாரீசனும், வாலியும் முதலிய இவர் இராமனால் அழிந்தமை நோக்கின், அந்த மானை இடக்கரத்தேந்திய சிவபிரானும் சக்கரப்படையை பெரிய வலக்கரத்தே தாங்கிய திருமாலும் பிரமன் முதலிய பிறரும் ஆகிய வருள், மானிடராகிய இவ்விருவருடன் எண்ணத்தக்க ஒருவர் எவர்? ஒருவரும் இல்லை.

கு:—சிந்தல் – சிதறுதல்—சிதறியோடுதல். நாகர் – தேவர். முருக்குதல் – அழித்தல். முந்த - முன்னே. முந்தமானாயினன் என்பது முந்து அ மான் ஆயினன் எனவும் பிரித்துக் கொள்ள நின்று, முன்னே அந்த மானுருவான மாரீசன் எனவும் பொருள் தரும்; அ உலகறி சுட்டு. அம்மான் என்பது, இடைக்குறையாய் அமான் என நின்றது என்று கொண்டு முன்னே உன் மாமனாயின மாரீசன் என்று பொருளுரைத்தலும் ஆம். அம்மான் - மாமன். முதலினோர் என்றமையால் விராதனும் கவந்தனும் அழிந்தமையும் கொள்ளத் தகும். இதனால், கரன் முதலியோரை வென்ற அம்மானிடர் பெருங் கடவுளர் மூவரினும் மிக்க பேராற்றலர்; அவர் நம்மையும் வெல்வர் என்பது பெறவைத்தவாறு. (97)

6295. இன்னமொன் றுரைசெய்வா னினிதுகே
ளெம்பிரா னிருவ ராய
வன்னவர் தம்மொடும் வானரத்
தலைவரா யணுகி நின்றார்
மன்னுநம் பகைஞராம் வானுளோ
ரவரொடும் மாறு கோடல்
கன்னமன் றிதுநமக் குறுதியென்
றுணர்தலுங் கரும மன்றால்.

இன்னம் ஒன்று உரைசெய்வான், ' இனிதுகேள்,
எம்பிரான்! இருவர் ஆய
அன்னவர் தம்மொடும் வானரத்
தலைவராய் அணுகி நின்றார்,
மன்னும் நம் பகைஞராம் வானுளோர்;
அவரொடும் மாறுகோடல்
கன்னம் அன்று; ' இது நமக்கு உறுதி ' என்று
உணர்தலும் கருமமன்றால்.

பொ:—வீடணன் மேலும் ஒரு செய்தி கூறுவானாய், ' எம்பெருமானே! நன்கு கேட்பாயாக. இருவராயுள்ள அந்த மனிதரோடு, குரங்கினத் தலைவராய் அணுகி நின்றவர்கள் நமக்கு நிலைத்த பகைவரான தேவராவர்; (ஆதலால்) அவர்களோடு மாறுபடுதல், பெருமையாகாது; இவ்வாறு மாறு கொள்ளுதல் நமக்கு நன்மை என்று துணிதலும் நம் கடமையான செயலாகாது.

கு:—இன்னம் ஒன்று உரை செய்வான் என்பது கவி கூற்று. இன்னம் ஒன்று உரை செய்வானாய் என எச்சமாக்கிப் பின்வரும் செய்யுளில் சொல்லினன் என்பது கொண்டு முற்றுவிக்க. கன்னம் - பெருமை (திசைச்சொல்). உறுதி – நன்மை; ' புத்தேளாவதே யுறுதி யென்றான் ' (சீவகசிந்தாமணி. 1235) என்பதனுள் உறுதி நன்மை என்னும் பொருளில் பயின்றமையும் இங்கு நோக்கத்தகும். கருமம் - கடமைச் செயல். 'கானப்பேர் கைதொழல் கருமமே' (தேவாரம். 897) என்னும் ஆன்றோர் பாசுரத்துள் கருமம், கடமையான செயல் என்ற பொருளில் வழங்கப்பட்டமை காணலாம். இதனுள் செயல் என்ற பொருளுடைய கன்மம் கருமம் என்னும் சொற்களை ஆண்டு, முறையே பொதுவும் சிறப்புமான செயல்களாகப் பொருள் கொள்ள வைத்த நயம் நோக்கத்தகும். நின் பகைவராகிய தேவர், அந்நிலையில் நின்னை வெல்லும் ஆற்றலின்றி, நின்னை வெல்லுமாறு நோக்கி, நின்னால் மதிக்கப்படாத குரங்குருவோடு தோன்றி, நின்னை வெல்லுதற்கே மானிடராகி வந்த அவ்விருவரோடு நண்பு பூண்டு வந்தனராதலின், அவரோடு மாறுகோடலாகாது என்றவாறு. இதனால் நம் புதிய பகைவரான ஒப்பார் மிக்காரை யில்லாத பேராற்றலுடைய மானிடர் இருவருடன், நம் பழம் பகைவரான தேவர் பலரும் நம்மை வெல்லுதற்கேற்ற உருவமும் ஆற்றலும் பெற்று வந்து இணங்கித் திரண்டெழுந்தனராதலின், இந்நிலையில் இவரொடு மாறுகொள்ளுதல் நன்மையாகாதென்று வீடணன் வலியுறுத்துவானாயினன். (98)

6296. இசையுஞ் செல்வமு முயர்குலத்
 தியற்கையு மெஞ்ச
வசையுங் கீழ்மையு மீக்கொளக்
 கிளையொடு மடியா
தசைவில் கற்பினவ் வணங்கைவிட்
 டருளுதி யிதன்மேல்
விசைய மில்லெனச் சொல்லின
 னறிஞரின் மிக்கான்.

இசையும் செல்வமும் உயர்குலத்து
 இயற்கையும் எஞ்ச
வசையும் கீழ்மையும் மீக்கொளக்
 கிளையொடும் மடியாது
அசைவில் கற்பின் அவ் அணங்கை
 விட்டருளுதி இதன்மேல்
விசையம் இல் எனச் சொல்லினன்
 அறிஞரின் மிக்கான்.

பொ :—அறிவாளிகளுள் சிறந்தோனாகிய வீடணன், புகழும் செல்வமும் உயர்ந்த நம்முடைய குலத்தின் நல்லியல்பும் தாழ, பழியும் கீழ்மக்க ளியல்பும் ஓங்கச் சுற்றத்தோடும் நீ இறந்துபடாமல் நிலைமாருத கற்பினையுடைய (சீதையாகிய) அந்தத் தெய்வத்தை இராமனிடம் விட்டருளுக; இவ்வாறு விடுவதினும் சிறந்த வெற்றி யில்லை என்று கூறினன்.

கு :—இசை - புகழ். எஞ்சுதல் - குறைதல்—தாழ்தல். 'எஞ்சா வின்னருள் நுண்டுளி கொள்ள' (3-76) என்பது திருவாசகம். மீக் கொளல்-மிகுதல்—மேலோங்குதல். அசைவு-நிலைமாற்றம். 'தெள்ளிய பொருள் இயம்பலாற்றுவன் (72) என்று தொடங்கிய வீடணன், மேலைச் செய்யுள் வரை வினை வலியும் தம் வலியும் மாற்ருர் வலியும் துணை வலியும் மிகை குறையின்றி விளக்கி, இச்செய்யுளால் முடிவாக இராவணன் மேற்கொள்ள வேண்டிய செயல், இராமனிடம் சீதையை விட்டு, சமாதானம் ஆவதே; அதனுல், புகழும் செல்வமும் நம் குலத்தின் நல்லியல்பும் ஓங்கும். இதனினும் சிறந்தனவாக வெற்றியால் எய்தும் பயன் வேறில்லையாதலால் இதனையே வெற்றி யாகக் கருதல் தகும். இவ்வாறு சமாதானமாகாமல் இராமனெடு போர் செய்தால், நமக்குப் பழி ஓங்கும்; நம் குலப்பெருமை அழியும்; நம்முடைய பெரிய சுற்றமும் அழியும் என்று வற்புறுத்திக் கூறிய வாறு. (99)

இராவணன் வீடணனைப் பரிகசித்துரைத்தல்

6297. கேட்ட வாண்டகை கரத்தொடு
கரதலங் கிடைப்பப்
பூட்டி வாய்தொறும் பிறைக்குலம்
வெண்ணிலாப் பொழிய
வாட்ட டந்தவ ழாரமும்
வயங்கொளி மார்புந்
தோட்ட டங்களுங் குலுங்கநக்
கிவையிவை சொன்னான்.

கேட்ட ஆண்தகை, கரத்தொடு கரதலம் கிடைப்பப்
பூட்டி, வாய்தொறும் பிறைக்குலம் வெண்ணிலாப் பொழிய,
வாள் தடம் தவழ் ஆரமும் வயங்கு ஒளி மார்பும்
தோள் தடங்களும் குலுங்க நக்கு, இவையிவை சொன்னான்.

பொ :—வீடணன் கூறியவற்றைச் செவிமடுத்த ஆண்மைக் குணமுடைய இராவணன் கையொடு கை பொருந்த அறைந்து விரல்களைக் கோத்து, வாய்தோறும் பிறைக்கூட்டத்தை நிகர்த்த கோரப் பற்கள் வெள்ளிய நிலாவைப் பொழிய, (தோளிலும் மார்பிலும் பகைவர்) வாள் (முதலிய) தாக்குதலால் உளவான விழுப்புண் தழும்புகளில் தவழ்கின்ற மாலையும் மிக்க ஒளியினையுடைய மார்பும் பெரிய தோள்களும் குலுங்கச் சிரித்து, இவையிவை கூறினான்.

கு :—கரம் - கை. பிறைக்குலம் என்றது கோரப் பற்களை. நகுதல் - சிரித்தல். இவை இவை யென்றது பின்வரும் பாடல்களுள் இராவணன் கூற்றாக உள்ளவற்றை. (100)

6298. இச்சை யல்லன வுறுதிக
ளிசைக்குவெ னென்றாய்
பிச்சர் சொல்லுவ சொல்லினை
யென்பெரு விறலைக்
கொச்சை மானிடர் வெல்குவ
ரென்றனை குறித்த
தச்ச மோவவர்க் கன்பினோ
யாவதோ வையா.

இச்சை யல்லன உறுதிகள் இசைக்குவென் என்றாய் !
பிச்சர் சொல்லுவ சொல்லினை ; என் பெரு விறலைக்
கொச்சை மானிடர் வெல்குவர் என்றனை ; குறித்தது
அச்சமோ ? அவர்க்கு அன்பினோ ? யாவதோ ? ஐயா !

பொ :—ஐய ! யான் விரும்பத்தகாத 'உறுதிப் பொருள்களைச் சொல்வேன்' என்று (தொடங்கிப்) பித்தர் கூறுவனவற்றைக் கூறினை ; என்னுடைய அளப்பரிய ஆற்றலை இழிந்த மனிதர் வெல்லுவர் என்றனை ; நீ அவ்வாறு சொல்லியது, உனக்கு அவர் பால் உள்ள அச்சத்தினாலோ ? அல்லது அன்பினாலோ ? வேறு எதனாலோ ? கூறுக.

கு :—'என் உரை எள்ளலையாமெனின் இயம்பலாற்றுவன் தெள்ளிய பொருள்' (72) என்று வீடணன் முன் கூறியதனை நினைந்து, "'உறுதிகள் இசைக்குவன்' என்றாய்" என்றான். பிச்சர்-பித்தர். விறல்-வலிமை. கொச்சை-இழிவு. குறித்தல் - சொல்லுதல், 'கொண்டு போதிநின்னிவுளியென்றுற்றதும் குறித்தான்' (பால. அகலிகைப். 41) என்பதனுள்ளும், குறித்தல் சொல்லுதல் என்னும் பொருளில் ஆசிரியரால் ஆளப்பட்டமை காணலாம். (101)

6299. ஈங்கு மானிடப் பசுக்களுக்
கிலைவர மென்றாய்
தீங்கு சொல்லினை திசைகளை
யுலகொடுஞ் செருக்காற்
றாங்கு மானையைத் தள்ளியத்
தழனிறத் தவனை
யோங்க றன்னொடு மெடுக்கவும்
வரங்கொண்ட துண்டோ.

' "ஈங்கு மானிடப் பசுக்களுக்கு இலைவரம்" என்றாய்
தீங்கு சொல்லினை ; திசைகளை உலகொடும் செருக்கால்
தாங்கும் ஆனையைத் தள்ளி, அத்தழல் நிறத்தவனை
ஓங்கல் தன்னொடும் எடுக்கவும் வரம் கொண்டது உண்டோ ?'

பொ :—'மனிதர்களாகிய பசுக்களை வெல்லுதற்கு வரம்பெற வில்லை' என்று என்பால் குறைகூறினை ; உலகத்தோடு எட்டுத் திசைகளையும் தம் ஆற்றலால் தாங்கும் திசையானைகளை விலகச் செய்து செந்தீவண்ணனை அச்சிவபிரானை வெள்ளிமலையோடு பெயர்த்தெடுக்கவும் நான் வரம்பெற்றதுண்டோ ? இல்லையே.

கு :—' கூறிய மனிதர்பாற் கொற்றங்கொள்ளலை' (78) என்று வீடணன் கூறியதை நினைந்து 'மானிடப் பசுக்களுக்கு இலை வரமென்றாய்' என்றான். ஈண்டு-இவ்விடம் = என்பால். மானிடப் பசுக்களுக்கு இலைவரம் என்றாயாய் ஈண்டுத் தீங்கு கூறினை என்க. ஆற்றலற்றோர் என்பது தோன்ற மானிடப் பசுக்கள் என்றான். தீங்கு – குற்றம்; குறை. செருக்கு-வலிமை. தள்ளுதல்-விலக்குதல். ஓங்கல் – மலை; கயிலை. திசை யானைகள் உலகைத் தாங்கி நிற்பவையாதலின், கயிலாயமலையைப் பெயர்க்கும் தன் செயலுக்கு அவை தடையாகாமல் விலக்கினான் என்க. வீடணன் கூறியவற்றைத் தனித்தனி மறுத்துக் கூறுபவன், இதனால் ஆற்றலுடையார் அரியன செய்யவல்லர் அதற்கு வரம்பெற்றிருக்க வேண்டுமென்பது இல்லை; யான் சிவபிரானோடு கயிலையையும் பேர்த்தெடுத்தற்கு யாரிடமும் வரம்பெறவில்லையே; அதுபோல மானிடரை வெல்லுதற்கும் வரம்பெற்றிருக்க வேண்டும் என்பது பொருந்தாது என்றவாறு.(102)

6300. மனக்கொ டன்றியும் வறியன
வழங்கினை வானோர்
சினக்கொ டும்படை செருக்களத்
தென்னையென் செய்த
வெனக்கு நிற்கமற் றென்னொடிங்
கொருவயிற் றுதித்த
வுனக்கு மானிடர் வலியராந்
தகைமையு முளதோ.

மனக்கொடு அன்றியும் வறியன வழங்கினை; வானோர்
சினக் கொடும் படை செருக்களத்து என்னை என் செய்த?
எனக்கு நிற்க; மற்று என்னொடு இங்கு ஒருவயிற்று உதித்த
உனக்கு மானிடர் வலியராந் தகைமையும் உளதோ?

பொ :—மனத்திற் கொண்டு சிந்தியாமல் பொருளற்ற சொற்களைக் கூறினை; போர்க்களத்தில் தேவருடைய சினம் வாய்ந்த கொடிய ஆயுதங்கள் என்னை என் செய்தன; மானிடர் எனக்கு வலியராகாமை நிற்க; இவ்வரக்கர் குடியில் என்னொடு ஒரு வயிற்றுதித்த உனக்கு அவர் வலியராந்தகைமையும் உண்டோ?

கு :—உன்னிலும் வலிகுறைந்த மானிடர் உன்னிலும் வலியனான என்னை வெல்வர் என்பது சிந்தியாது பேசியது என்று இகழ்ந்தவாறு. வறியன-பொருளற்ற சொற்கள். உடையாருடைய சினம் உடைமை

யாகிய படையின் மேலேற்றிக் கூறப்பட்டது. வழங்குதல்-சொல்லுதல். படை-ஆயுதங்கள். (103)

6301. சொல்லு மாற்றங்க டெரிந்திலை
பன்முறை தோற்று
வெல்லு மாற்றலு மொருமுறை
பொறுத்தனன் விண்ணைக்
கல்லு மாற்றலென் கிளையையு
மென்னையுங் களத்திற்
கொல்லு மாற்றல ருளரெனக்
கோடலுங் கோளோ.

சொல்லும் மாற்றங்கள் தெரிந்திலை; பன் முறை தோற்றும் வெல்லும் ஆற்றலும், ஒருமுறை பொறுத்தனன்; விண்ணைக் கல்லும் ஆற்றல் என் கிளையையும் என்னையும் களத்தில் கொல்லும் மாற்றலர் உளர் எனக் கோடலும் கோளோ ?

பொ :—சொல்லத்தக்க சொற்களை அறிந்தாயல்லை. அப்பகைவர், என்பால் பலமுறை தோல்வியுற்று, ஒருமுறையேனும் என்னை வெல்லும் வலிமைபடைத்தாரில்லை; ஆகாயத்தையும் கிளைக்கும் பெருவலியமைந்த என் சுற்றத்தாரையும் என்னையும் போர்க் களத்தில் கொல்லும் வீரர் உளர் என்று கொள்ளுதலும் கொள்கை யாகுமோ ?

கு :—மாற்றம்-பேச்சு. பலமுறை தோற்று, ஒரு முறையும் வெல்லும் ஆற்றல் பெறவில்லை என இயைக்க. கல்லுதல்-கிண்டுதல். வீடணனைப் பகைவரோடு சேர்ந்தவனாகக் கருதினனாதலின் நம் கிளை என்னாது என்கிளை என்றான். கோள்-கொள்கை. (104)

6302. தேவ ரிற்பெற்ற வரத்தின
தென்பெருஞ் செருக்கேன்
மூவ ரிற்பெற்ற முடையவன்
றன்னொடு முழுதுங்
காவ லிற்பெற்ற திகிரியோன்
றன்னையுங் கடந்த
தேவ ரிற்பெற்ற வரத்தினா
லியம்புதி யிளையோய்.

தேவரின் பெற்ற வரத்தினது என் பெருஞ் செருக்கேல்
மூவரில் பெற்றம் உடையவன் றன்னொடு முழுதும்
காவலின் பெற்ற திகிரியோன் தன்னையும் கடந்தது
ஏவரில் பெற்ற வரத்தினல்? இயம்புதி இளையோய்!

பொ :—இளையவனே! 'என் பேராற்றல், தேவர்பால் பெற்ற வரத்தின் பயனுயது' என்று சொல்லுவையாயின், திரிமூர்த்திகளுள், இடபத்தை (ஊர்தியாக) உடைய சிவனுடன், எல்லாவற்றையும் காத்தலால் மேற்கொண்ட சக்கரப் படையினையுடைய திருமாலையும் யான் வென்று மேம்பட்டது, எவர்பால் பெற்ற வரத்தினல்? இயம்புக.

கு :—செருக்கு–வலிமை, மூவர்-பிரமன் திருமால் சிவன் என் போர். பெற்றம்-காளை. என் பேராற்றலால் யாவரையும் வென் றேனேயன்றி வரபலத்தால் வென்றேனல்லேன், வரபலத்தால் எனின், திருமாலையும் சிவனையும் வெல்லுதற்கு எனக்கு வரம்தந்தார் எவர்? என்றவாறு. பிரமன் தன் குல முதல்வனும் தனக்குப் பல பெருவரங்கள் தந்தவனும் ஆதலின் அவனைக் கூருது விடுத்தான். அறிவு நிரம்பாதவன் என்பதும் பட இளையோய் என்ருன். (105)

6303. நந்தி சாபத்தி னமையடுங்
குரங்கெனி னம்பால்
வந்த சாபங்க ளெனைப்பல
வவைசெய்த வலியெ
னிந்தி யாதிக ளவித்தவர்
தேவர்நம் மிறுதி
சிந்தி யாதவர் யாரவை
நம்மையென் செய்த.

நந்தி சாபத்தின் நமை அடும் குரங்கு எனின், நம்பால்
வந்த சாபங்கள் எனைப்பல; அவை செய்த வலி என்?
இந்தியாதிகள் அவித்தவர் தேவர் நம் இறுதி
சிந்தியாதவர் யார்? அவை நம்மை என் செய்த?

பொ :—நந்தியிட்ட சாபத்தினல் நம்மைக் குரங்குகள் அழிக்கும் என்று கூறுவையாயின், நம்மிடம் வந்தடைந்த சாபங்கள் எத் துணையோபல; அவை நமக்கு விளைத்த துன்பம் யாது? (ஒன்றும் இல்லையே) பொறிகள் முதலியவற்றை அடக்கிய முனிவர்களும்

தேவரும் (ஆகியவருள்) நம் அழிவை நினையாதவர் ஒருவரும் இல்லை. அவர் நினைவுகள் நம்மை என்ன செய்து விட்டன ? (ஒன்றுஞ் செய்ய வில்லையே).

கு :—நந்தி-சிவகணத்தலைவன். சாபம்-வெகுண்டு கூறும் மொழி. இராவணன் குபேரனை வென்று புட்பக விமானத்தைக் கைப் பற்றி, அதன் மீதமர்ந்து இலங்கை நோக்கிச் செல்லுங்கால், கயிலை யின் மீது அவ்விமானம் தடைப்பட்டு நின்றது. இராவணன் விமா னம் செல்லாது நின்றமைக்குக் காரணம் யாது ? என்று சிந்தித்துக் கொண்டிருக்கையில் சிவகணநாதனுன நந்தி தோன்றிக் கயிலா யத்தின் பெருமைகளைக் கூறி, 'அதன் மீது செல்லலாகாது; விலகிச் செல்லுக என்று நல்லுரை கூற, அதனை உளங்கொளாது, அவன் குரங்குமுகமுடையாய் என்று அவரை அவமதிப்பானுயினன். அதனுல் சினம் உற்ற நந்திதேவர், 'நீ குரங்குமுகமுடையான் என்று என்னை இகழ்ந்தமையால், குரங்குகளே இலங்கையுள் புகுந்து உன் குலத்தோரை அழிக்கும்' என்று சபித்தனர் என்பது, உத்தரகாண் டத்து வரையெடுத்த படலம் 65 முதல் 67 முடியவுள்ள பாடல்களால் அறியத்தகும். வலி—துன்பம். இந்தியம்—பொறிகள். இந்திரியம் என்பது இந்தியம் என விகாரமாய் நின்றது. அவித்தவரும் தேவரும் என உம்மை விரிக்க. முன் பாடலால், தன் பேராற்றலுக்கும் வெற் றிக்கும் தேவர் முதலியோர் நல்கிய வரம் காரணமன்று என்றவன், இச்செய்யுளால் அவர் இட்ட சாபமும் தன்னை அழிக்கவல்லனவல்ல என்று கூறியவாறு. (106)

6304. அரங்கி லாடுவாற் கன்புபூண்
டுடைவர மறியே
னிரங்கி யானிற்ப வென்வலி
யவன்வயி னெய்த
வரங்கொள் வாலிபாற் றோற்றனென்
மற்றும்வே றுள்ள
குரங்கெ லாமெனை வெல்லுமென்
றெங்ஙனங் கோடி.

அரங்கில் ஆடுவாற்கு அன்பு பூண்டுடை வரம் அறியேன்,
இரங்கி யான் நிற்ப, என்வலி அவன்வயின் எய்த,
வரம் கொள் வாலிபால் தோற்றனென்; மற்றும் வேறு உள்ள
குரங்கெலாம் எனை வெல்லும் என்று எங்ஙனம் கோடி ?

பொ :—மன்றுள் நடம்புரியும் சிவபிரான்பக்கல் வாலி அன்பு பூண்டமையால் அவனுக்கு உரிமையாகிய (எதிர்த்தார்வலியிற் பாதி வாலியை யடையும் என்னும்) வரத்தை அறியேனும், யான் மனமழிந்து நிற்க, என் வலிமை அவனிடம் சேர்ந்தமையால், வரம் பெற்ற வாலிபால் தோற்றேன். அதனால் மற்றும் வேருக உள்ள குரங்குகளெல்லாம் என்னை வெல்லும் என்று எங்ஙனம் கொள்வாய்? (கொள்ளலாகாது)

கு :—'குரங்குகளால் நமக்குக் கேடுவரும் என்பது நீ வாலிபால் தோற்றமையால் அறியலாம்' என்று 80-ஆம் செய்யுளில் வீடணன் கூற்ருக வந்ததனை இச்செய்யுளால் இராவணன் மறுத்துரைத்தவாறு. சிவபூசை செய்யுங்கால் தியான நிலையிலிருந்த வாலியை நெருங்கிய இராவணன், 'இவனை வெல்ல இதுவே ஏற்ற தருணம்' என்று பற்றித் தாக்கப்புக, அதுகண்ட வாலி, அவனைத் தன் வாலிற் பிணித்தபடியே பூசையை முடித்து, அவன் வலியையும் அழித்தான் என்பது உத்தரகாண்டம் வாலி வாலாற் கட்டுண்ட படலத்துக் கண்டது. (107)

6305. நீல கண்டனு நேமியு
நேர்நின்று நேரி
னேலு மன்னவ ருடைவலி
யவன்வயி னெய்துஞ்
சாலு நல்வர நினைந்தவ
னெதிர்செல றவிர்ந்து
வாலி தன்னையம் மனிதனு
மறைந்துநின் றெய்தான்.

நீல கண்டனும் நேமியும் நேர்நின்று நேரின்,
ஏலும் அன்னவர் உடைவலி அவன்வயின் எய்தும்;
சாலும் நல்வரம் நினைந்து, அவன் எதிர்செலல் தவிர்ந்து,
வாலி தன்னைஅம் மனிதனும் மறைந்துநின்று எய்தான்.

பொ :— நீலகண்டனை சிவபிரானும் சக்கராயுதமுடைய திருமாலும் எதிர்நின்று எதிர்த்தாலும், எதிர்க்கின்ற அவர்களுடைய ஆற்றல் அவ்வாலிபால் சேரும்; நீ சொல்லும் அம்மனிதனும், மிக்க நல்ல அவ்வரத்தை நினைந்து, அவ்வாலியெதிர் செல்லாது மறைந்து நின்று கணை யேவினன்.

கு :—நேர்தல் ஏலுதல் என்பவை எதிர்த்தல் என்று பொருள் படும். நேரினும் என உம்மை விரிக்க. வாலி பெற்ற வரத்தின் பெருமையை விளக்கி, அவனை இராமன் மறைந்து நின்றெய்ததனை யும் பரிகசித்தவாறு. வாலியை எதிர்ந்தார் வலியிற் பாதி வாலிபால் எய்தும் என்பது, 'கிட்டினோர் பொரக்கிடைக்கினன்னவர், பட்ட நல்வலம் பாக மெய்துவான்' (கிட்கிந்தா, நட்புக். 40) என முன்னே கூறுதலாலும் அறியலாம். (108)

6306. ஊன வில்லிறுத் தோட்டைமா
மரத்துளம் போட்டிக்
கூனி சூழ்ச்சியா லரசிழந்
துயர்வனங் குறுகி
யானி ழைத்திட வில்லிழந்
தின்னுயிர் சுமக்கும்
மானி டன்வலி நீயலா
தாருளர் மதித்தார்.

ஊன வில் இறுத்து, ஓட்டை மாமரத்துள் அம்பு ஓட்டிக்
கூனி சூழ்ச்சியால் அரசு இழந்து உயர் வனம் குறுகி,
யான் இழைத்திட இல் இழந்து இன் உயிர் சுமக்கும்
மானிடன் வலி நீ அலாது ஆர் உளர்? மதித்தார்.

பொ :—குறையுடைய வில்லை ஒடித்து, இளைய மராமரத்தில் அம்பைச் செலுத்திக் கூனியின் சூழ்ச்சியால் அரச பதவி யிழந்து நெடிய காட்டையடைந்து, யான் சூழ்ச்சி செய்ய மனையாளைப் பறி கொடுத்து, இனிய உயிரைத் தாங்கிக் கொண்டுள்ள மனிதன் ஆற்றலை மதித்தார் உன்னையன்றி வேறு எவர் உளர்? (ஒருவரும் இல்லை)

கு :—ஊனம் – குறை. ஊனவில் - குறையுடைய வில்; என்றது, 'இந்த வில்லை வளைத்தவனே சீதைக்கு நாயகனுவன்' என்று சனகன் வைத்த வில்லை. ஓட்டை மா மரம் - இளைய (முற்றி வயிரம் ஏருத) பெரிய மராமரம். 'ஓட்டை மணவன்' (12-51) என்னும் பரிபாடலடிக்கு, 'இள நெஞ்சன்' என்று பொருள் வரையப்பட்டமை காணலாம். இராமன் ஒடித்த வில்லின் வலிமையும் தோற்றமும் பெருமையும், பாலகாண்டத்துக் கார்முகப் படலத்திலும், அவன் துளைத்த மராமரத்தின் தோற்றம் வலிமை பெருமை முதலியவை கிட்கிந்தா காண்டத்து மராமரப் படலத்திலும் பலபடியாக விரித்

துரைக்கப்பட்டிருக்கவும், அவற்றை முறையே ஊனவில் ஓட்டை மாமரம் என்றது இராவணன் கூற்றுதலின் தம்மால் விரும்பப்படாத வரை இழித்துரைப்போர், அவர் செய்த மதிக்கத்தக்க செயல்களையும் வெறுக்கத்தக்க செயல்களாகக் காட்டி இகழுவர்; அம்முறை தழுவியது இவ்விராவணன் கூற்றும். இராமன் வில்லிறுத்ததை யிழித்துரைக்கும் பரசுராமனும், இவ்வாறே, 'ஆனம் முடையுமை யண்ணலை யந்நாள் உறுசிலைதான் ஊனம்முளது' (பால. பரசு ராமப். 25) என்றமை காணலாம். 'உந்தை யுண்மையனுக்கி யுன்சிற்றவை, தந்த சொல்லைத் தலைக்கொண்டு தாரணி, வந்த தம்பிக்குதவிய வள்ளலே' (ஆரணிய. சடாயுகாண். 35) என்று பாராட்ட நின்ற இராமன் செயல், 'கூனி சூழ்ச்சியால் அரசிழந் துயர்வனம் குறுகி' என்று இழித்துரைக்கலாயிற்று. ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத், தாடகையெனும் பெயர்த் தையலாள் படக், கோடிய வரிசிலை யிராமன்' (அயோத்தியா. மந்தரை சூழ்ச்சி. 50) என்னும் கூனி கூற்றும் இங்கு நோக்கத்தகும். இனி, 'திரிபுரம் எரித்த தேவன் வரிசிலை இற்றதாக' (பரசுராமப். 29) என்று பரசு ராமன் குறித்த வரலாறும், 'முன் ஒருகால் இந்த ஏழு ஆச்சா மரங் களையும் தனித்தனியாகவும் எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் சேர்த்தும் அந்த வாலி பலமுறை தொளைத்திருக்கிறான்' (கிஷ்கிந்தா காண்டம். 16-ஆம் சர்க்கம் 72-ஆம் சுலோகம்) என்று வான்மீகி குறித்த வரலாறும் கொண்டு ஊனவில் என்றும் ஓட்டை மாமரம் என்றும் கூறினான் என்று கொள்ளலும் ஆம். இங்கு ஊனவில் - பழுதுபட்ட வில் என்றும் ஓட்டை மாமரம் – துளைபட்ட பெரிய மரா மரம் என்றும் பொருள்படும். இராமன் தோளாற்றலைப் பலபடியாக விரித்துரைத்த வீடணனை நோக்கி, அவனாற்றலாற் செய்த செயல் களுள் வில்லிறுத்தது மரந்துளைத்தது முதலிய செயல்கள் வீரர் நாணுதற்குரிய என்றும், அவற்றால் மானம் அழிந்த நிலையினும் அவன் உயிர் சுமந்திருந்தது வீரராயினார் செயலன்று எனவும் இராவ ணன் இகழ்ந்து கூறியவாறு. (109)

வீடணன் மீட்டும் உறுதியுரைத்தல்

6307. என்று தன்னுரை யிழித்துநீ
யுணர்விலி யென்றா
நன்று போதுநா மெழுகெனு
மரக்கனை நண்ணுகா

வொன்று கேளின முறுதியென்
றன்பின ளொழியான்
றுன்று தாரவன் பின்னரு
மிவையன சொன்னான்.

என்று தன் உரை இழித்து, 'நீ உணர்விலி' என்ற
'நன்று, போதும் நாம்; எழுக' எனும் அரக்கனை நணுகா,
'ஒன்று கேள் இனம் உறுதி' என்று அன்பினன் ஒழியான்
துன்று தாரவன், பின்னரும் இவையன சொன்னான்.

பொ :—என்று தன் உறுதியுரையை இகழ்ந்து, 'நீ அறிவிலி' என்று கூறி, 'நல்லது; நாம் (போர்க்குச்) செல்வோம்; புறப்படுக' என்று மற்றையோரை நோக்கிக் கூறிய அரக்க(னை இராவண)னை நெருங்கி (மலர்கள்) செறிந்த மாலைகளை யணிந்த வீடணன், ஒழியாது அன்புடையனாய், இன்னம் ஓர் உறுதியுரை கேள் என்று, மேலும் இவற்றைக் கூறினான்.

கு :—'நீ உணர்விலி' என்றது வீடணனை நோக்கி இராவணன் கூறியது. 'நன்று போதும் நாம் எழுக' என்றது மற்றையோரை நோக்கி இராவணன் கூறியது. துன்றுதல் - செறிதல். இவையன என்றது பின்வருவனவற்றை. (110)

6308. தன்னின் முன்னிய பொருளிலா
வொருதனித் தலைவ
னன்ன மானிட னாகிவந்
தவதரித் தமைந்தான்
சொன்ன நம்பொருட் டும்பர்தஞ்
சூழ்ச்சியின் றுணிவா
லின்ன மேகுதி போலுமென்
றடிதொழு திரந்தான்.

தன்னின் முன்னிய பொருள் இலா ஒருதனித் தலைவன்
அன்ன மானிடன் ஆகிவந்து, அவதரித்து அமைந்தான்
சொன்ன நம்பொருட்டு உம்பர்தம் சூழ்ச்சியின் துணிவால்
இன்னம் ஏகுதிபோலும்—என்று அடிதொழுது இரந்தான்.

பொ :—தன்னினும் மேலான பொருள் இல்லாத ஒப்பற்ற தனித் தலைவனை திருமால், தேவர்களுடை ஆராய்ச்சியின் முடிவால்

(யாவராலும் ஒருதலையாகத் தீயவர் என்று) சொல்லப்பட்ட நம்மைக் கொல்லுதற்கு அந்த மனிதனாக வந்து தோன்றி(த் தன் நோக்கம் முற்றுப்பெற வேண்டியவை யெல்லாம் ஒருங்கு) நிரம்பியவனானான். (இது தெரிந்தும்) மேலும், (அவனுடன் போர் செய்யச்) செல்வாய் போலும்? (அவ்வாறு செல்லுதல் தவிர்க) என்று இராவணனடிகளில் விழுந்து வணங்கி வேண்டினான்.

கு :—முன்னுதல் - சிறத்தல். அமைதல் - நிரம்புதல். துணிவு - முடிவு. தலைவன், உம்பர்தம் துணிவால் நம்பொருட்டு, மானிடனாகி வந்து அவதரித்து அமைந்தான்; இன்னும் ஏகுதி போலும்? என்று அடிதொழுது இரந்தான் என இயையும். (111)

இராவணன் மீட்டும், வீடணன் கூறியதை மறுத்துரைத்தல்

6309. அச்சொற் கேட்டவ னாழியா
னென்றனை யாயிற்
கொச்சைத் துன்மதி யெத்தனை
போரிடைக் குறைந்தா
னிச்சைக் கேற்றன யான்செய்த
வித்தனை காலம்
முச்சற் றுன்கொலம் முழுமுத
லோனென முனிந்தான்.

அச் சொல் கேட்டு அவன், ஆழியான் என்றனை யாயின்
கொச்சைத் துன்மதி எத்தனை போரிடைக் குறைந்தான்
இச்சைக்கு ஏற்றன யான் செய்த இத்தனை காலம்
முச்சு அற்றுன் கொல் அம் முழு முதலோன் என முனிந்தான்.

பொ :—(வீடணன் கூறிய) அம் மொழிகளைக் கேட்டு, (இராவணன்), அவ்விராமன், திருமால் என்று சொல்லினையாயின், இழிந்த கெடுமதியுடையனான அவன், எத்தனை போரில் (என்னுடன் எதிர்த்துத்) தோற்றனன்; என் விருப்பத்துக்கு இசைந்தவைகளையே யான் செய்த இவ்வளவு காலமும் (நீ சொல்லிய) ஒரு தனித் தலைவனான அவன் மூச்சற்றுக் கிடந்தானோ? என்று வெகுண்டான்.

கு :—இராமன் திருமால்; அவனை எதிர்த்தலாகாது என்ற வீடணன் கூற்றை மறுத்து, இராமன் திருமால் எனின் அவன் என்னொடு பொருது பலமுறை தோற்றவன்; அன்றியும், யான் விரும்பியவாறு செய்த அடாத செயல்களை யெல்லாம் அவன்

தடாமையால், அவன் ஆற்றலற்றவனுதல் வேண்டும்; அல்லது செத்தொழிந்தவனுதல் வேண்டும் என்று இராவணன் பரிகசித் துரைத்தவாறு. 'தன்னின் முன்னிய பொருளிலா வொருதனித் தலைவன்' என்று வீடணன் கூறியதை யுட்கொண்டு 'அம்முழுமுத லோன்' என்ருன். (112)

6310. இந்தி ரன்றனை யிருஞ்சிறை
யிட்டநா ளிமையோர்
தந்தி கோடிறத் தகர்த்தநாட்
டன்னையான் முன்னம்
வந்த போர்தொறுந் துரந்தநாள்
வானவ ருலகைச்
சிந்த வென்றநாட் சிறியன்கொ
னீசொன்ன தேவன்.

இந்திரன்றனை இருஞ்சிறை இட்டநாள், இமையோர்
தந்தி கோடு இறத் தகர்த்தநாள், தன்னை யான் முன்னம்
வந்த போர்தொறும் துரந்தநாள், வானவர் உலகைச்
சிந்த வென்றநாள் சிறியன்கொல்? நீ சொன்ன தேவன்.

பொ:—யான் இந்திரனைப் பெரிய சிறையில் வைத்த காலத்தும் தேவருடைய யானையான அயிராவதத்தின் கொம்பு ஒடிய முறித்த காலத்தும், அத்திருமாலை, அவன் என்மேல் வந்த போர்தொறும் முதுகிடும்படி அவனை யான் துரத்திய காலத்தும், தேவர்கள் என் னெதிர் நில்லாது சிதறியோடும்படி அவருலகை யான் வென்ற காலத்தும் நீ சொல்லிய அத்தேவன் சிறியவனோ!

கு:—நான் இந்திரனைச் சிறையில் வைத்தது முதலிய செயல் களைச் செய்த காலத்து நீ சொல்லிய அத்தேவன் எதிர்ந்து என்னைத் தடை செய்யாமையால் அப்போது அவன் சிறியனுயிருந்தான் போலும் என்று இகழ்ந்து நகையாடியவாறு. (113)

6311. சிவனு நான்முகத் தொருவனுந்
திருநெடு மாலா
மவனு மற்றுள வமரரு
முடனுறைந் தடங்கப்

புவன மூன்றுநா ளுண்டுள
தாண்டவப் பொருவி
லுவனி லாமையி லோவலி
யொதுங்கியோ வுரையாய்.

சிவனும் நான்முகத்து ஒருவனும் திருநெடு மாலாம்
அவனும் மற்று உள அமரரும் உடன் உறைந்து அடங்கப்
புவனம் மூன்றும் நான் ஆண்டு உளது ஆண்ட அப் பொருவில்
உவன் இலாமையிலோ? வலி ஒதுங்கியோ? உரையாய்.

பொ :—சிவனும், நான்கு முகங்களையுடைய ஒப்பற்றவனான பிரமனும், திருமகளோடு கூடிய நெடுமாலாகிய அவனும், மற்றும் உள்ள தேவரும் என்னாட்சியில் ஒருங்கு தங்கி அடங்கும்படி மூன்றுலகங்களையும் நான் ஆட்சி செய்தது, கைக்கொண்ட போர் செய்தற்குரிய வில்லையுடைய அத்திருமால் இல்லாமையாலோ? அல்லது அவன் வலி யொடுங்கியமையாலோ? கூறுக.

கு :—மும்மூர்த்திகளும் தன் ஆட்சியில் அடங்கியிருந்தனர். எனவே, தன் வலியினும் திருமால் வலி குறைந்தமை சுட்டி, மூவரையும் வென்று அடக்கிய யான் அவருள் ஒருவனுக்கு அஞ்சுவனோ என்று தன்னாற்றல் மிகுதி விளக்கியவாறு. (114)

6312. ஆயி ரம்பெருந் தோள்களு
மத்துணைத் தலையும்
மாயி ரும்புவி யுள்ளடி
யடக்குறும் வடிவுந்
தீய சாலவுஞ் சிறிதென
நினைந்துநாந் தின்னு
மோயு மானிட வுருவுகொண்
டனன்கொலா மொருவன்.

ஆயிரம் பெருந்தோள்களும், அத்துணைத் தலையும்,
மாயிரும் புவி உள்அடி அடக்குறும் வடிவும்,
தீய; சாலவும் சிறிது; என நினைந்து, நாம் தின்னும்
ஓயும் மானிட உருவு கொண்டனன் கொலாம்! ஒருவன்.

பொ :—நீ சொல்லிய ஒப்பாரிலாத அத்திருமால், பெரியனவான ஆயிரந் தோள்களும் அவ்வளவினவாகிய தலைகளும் குறைவுடை

யவை; மிகப் பெரிய உலக முழுவதையும் உள்ளங்காலில் அடக்கும் உடம்பும் மிகவும் சிறிது என்று எண்ணி நாம் தின்னும் வலி குறைந்த மனித வடிவு கொண்டனனே!

கு:—ஆயிரம் பெருந் தோள்களும் அத்துணைத் தலையும் தீய; மாயிரும்புவி உள்ளடி அடக்குறும் வடிவும் சிறிது; என இயைக்க. நாம் தின்னும் மானிடவுருவு, ஓயும் மானிடவுருவு என்க. தீய-குறை வுடையவை. ஓய்தல்-வலி குறைதல். தன்னின் முன்னிய பொருளிலா ஒரு தனித் தலைவன் என்று வீடணன் கூறியதனை நினைந்து நீ சொன்ன ஒருவன் என்றான். பத்துத் தலையும் இருபது தோள்களும் அவற்றுக்கு இயைந்த உடலும் உடைய என்னை, ஆயிரம் தலைகளும் அத்துணைத் தோள்களும் அவற்றுக்கு இயைந்த பேருடலும் உடைய நிலையில் வெல்ல மாட்டாத திருமால், மானிடனாக வந்து என்னை வெல்லல் எவ்வாறு கூடும்? என்று இகழ்ந்தவாறு. (115)

6313. பித்தனாகிய வீசனு மாலுமென்
பெயர் கேட்
டெய்த்த சிந்தைய ரேகுழி
யேகுழி யெல்லாங்
கைத்த வேற்றினுங் கடவிய
புள்ளினு முதுகிற்
றைத்த வாளிக ணின்றுள
குன்றின்வீழ் தடித்தின்.

பித்தன் ஆகிய ஈசனும் மாலும் என் பெயர் கேட்டு
எய்த்த சிந்தையர்; ஏகுழி ஏகுழி எல்லாம்
கைத்த ஏற்றினும் கடவிய புள்ளினும் முதுகில்
தைத்த வாளிகள் நின்றுள; குன்றின்வீழ் தடித்தின்.

பொ:—பித்தனாகிய சிவனும் மாலுடையவனாகிய திருமாலும் என் பெயரைக் கேட்ட அளவில் சோர்ந்த மனமுடையவராய்ச் சென்ற சென்ற இடமெல்லாம் அவர்கள் ஏறிச் செலுத்திய காளையிலும் ஊர்ந்த கருடப் பறவையிலும் முதுகில் தைத்த அம்புகள், மலையில் இடிவிழுந்த தடம்போல இன்றும் நிலைத்துள்ளன.

கு:—பித்தனாகிய ஈசனும் என்பதற்கு இசைய மாலாகிய மாலும் என்க. மால்-மயக்கம். எய்த்தல்-சோர்தல். கைத்தல்-செலுத்துதல்; 'இன்குரல்கைத்தெடுத்தலின்' என்னும் சீவகசிந்தாமணிப்பாடலுள் (2683) கைத்தல் செலுத்துதல் என்னும் பொருளிற் பயின்றமை

காணலாம். ஏறு-காளை. கடவுதல்-செலுத்துதல். புள்-பறவை; கருடன். தடித்து-இடி. மலையில் விழுந்த இடியால் உண்டாகிய சிதைவு அம்மலையில் நிலைத்திருத்தல்போல் என் வாளியால் உண்டாகிய வடுக்களும் ஏற்றின் முதுகிலும் கருடன் முதுகிலும் நிலைத்தன என்றவாறு. வாளிகள் என்றது வாளிகளால் உண்டாகிய வடுக்களை. சிவனும் திருமாலும் என்னொடு பொருத போரில் அவர்கள் தோல்வியேயுற்றனர்; அவர்கள் தோற்றமைக்கு அவர்கள் ஊர்ந்த ஏற்றின் முதுகிலும் கருடன் முதுகிலும் என் அம்புகள் தைத்தமையால் உண்டான வடுக்களே சான்று என இராவணன் தன் பேராற்றல் கூறி, இத்தகைய என்னை ஒரு மானிடன் வெல்வன் என்பது பொருந்தாதென்று காட்டியவாறு. (116)

இச்செய்யுளின் பின் 52-ல் காணப்படும் மிகைச் செய்யுட்கள் வருமாறு :—

6313 (a) ஈசன் றன்வயின் வரங்கொளும் முன்னம்யா னவனை
வீசும் வான்சுடர் வரையொடும் விசும்புற எடுத்தேன்
ஆசி லங்கது கண்டவ னரும்பதத் தூன்றக்
கூசி யென்வலி குறைந்திலென் பாதலத் தமர்ந்தேன்.

(b) அமர்ந்து நீங்குதற் கருமைகண் டவன்பத மகத்தே
சுமந்து நீதவம் புரிகெனச் சுக்கிர னுரைப்பத்
தமந்திரண் டுறும் புலப்பகை சிமிழ்த்திடத் தருக்கி
நிமிர்ந்து நின்றனெ னெடும்பக லருந்தவ நிலையில்.

(c) நின்றுபல் பகல் கழிந்திட நிமல னெஞ்சுருகி
நன்று நன்றென நயந்தெனை வரும்படி யழைத்து
ஒன்றி னுலுநீ அழிவிலா துகம்பல கழியச்
சென்று வாழுதி எனத்தந்த வரஞ்சிதைந்திடுமோ.

(d) கார்த்த வீரியன் வாலியென் றவர்வலி கடக்கும்
மூர்த்த மென்னிடத்தில்லெனக் கோடலை முதனுள்
சீர்த்த நண்பின ராயபின் சிவன்படையுவர்மேல்
கோத்து வெஞ்சமம் புரிந்திலே னெனதுளங் கூசி.

(e) இந்த மெய்ம்மைநிற் குரைப்பதென் இவ்வரம் எனக்குத்
தந்த தேவனுக் காயினு மென்வலி தவிர்த்துச்
சிந்த வொண்ணுமோ மானிடர் திறத்தெனக் கழிவு
வந்த தென்றுரைத் தாயிது வாய்மையோ மறவோய்.

(f) ஆயதாகமற் றந்தமா னுடவரோ டணுகும்
தீயவான்குரங் கனைத்தையுஞ் செறுத்தற நூறித்
தூய வானவர் யாரையுஞ் சிறையிடைத் தொடுத்துக்
காய்வெ னென்றுதன் கண்சிவந் தினையன கழறும்

6314. வெஞ்சி னந்தரு போரிலென்
னுடனெழ வேண்டா
விஞ்சி மாநக ரிடமுடைத்
தீண்டினி திருத்தி
யஞ்ச லஞ்சலென் றயலிருந்
தவர்முக நோக்கி
நஞ்சின் வெய்யவன் கையெறிந்
துருமென நக்கான்.

'வெம் சினம் தரு போரில் என்னுடன் எழ வேண்டா;
இஞ்சி மா நகர் இடம் உடைத்து, ஈண்டு இனிது இருத்தி;
அஞ்சல்! அஞ்சல்!' என்று அயல் இருந்தவர் முகம் நோக்கி
நஞ்சின் வெய்யவன், கை எறிந்து, உரு மென நக்கான்.

பொ :—நஞ்சினும் கொடியவனுன இராவணன், 'கொடிய சினத்தை விளைக்கின்ற போரில் நீ என்னுடன் புறப்பட வேண்டாம்; மதிலரணுடைய சிறந்த இலங்கை நகர் மிக்க இடப்பரப்புடையது; இங்கே நன்கு தங்குக. அஞ்சாதே! அஞ்சாதே! என்று வீடணனை நோக்கிக் கூறிப் பக்கத்திலிருந்தோர் முகத்தை நோக்கிக் கையொடு கையைத் தாக்கி இடிமுழக்கம்போல வெடிபடச் சிரித்தான்.

கு :—இஞ்சி-மதில். அயல்-பக்கம். நஞ்சினும் வெய்யவன் என உம்மை விரிக்க. சில சுவடிகளில் இப்பாடலுடன் இராவணன் மந்திரப் படலம் முற்றுப் பெறுகிறது. (117)

வீடணன் மீட்டும் கூறுதல்

6315. பின்னும் வீடண னையநின்
றரமலாப் பெரியோர்
முன்னை நாளிவன் முனிந்திடக்
கிளையொடு முடிந்தா
ரின்ன முண்டுநா னியம்புவ
திரணிய னென்பான்
றன்னை யுள்ளவா கேட்டியென்
றுரைசெயச் சமைந்தான்.

பின்னும் வீடணன், ஐய! நின் தரம் அலாப் பெரியோர்
முன்னை நாள், இவன் முனிந்திடக் கிளையொடு முடிந்தார்
இன்னம் உண்டு, நான் இயம்புவது, இரணியன் என்பான்
தன்னை உள்ளவா கேட்டி என்று உரைசெயச் சமைந்தான்.

பொ:—வீடணன், பின்னும், 'ஐய! நின் அளவினராகாத (அறிவும் ஆற்றலும் முதலியவற்றால் நின்னினும் மிக்க) நம் குலப் பெரியோர் முற்காலத்தே இத்திருமால் முனிதலால் சுற்றத்தோடு மாண்டனர்; நான் சொல்லும் உறுதியுரை மேலும் உண்டு; இரணியன் என்று மிகுத்துச் சொல்லப்படுபவனை(ப் பற்றிய வரலாற்றினை) உள்ளபடி கேள்' என்று கூறுதற்கு அமைந்தான்.

கு:—தரம்-அளவு. இயம்புவது-சொல்லுவதாகிய உறுதியுரை. உள்ளவாறு என்பது உள்ளவா என்றானது விகாரம். உள்ளவா-உள்ளபடி; மிகை குறையின்றி. சமைதல்-அமைதல். சில சுவடிகளில் இச்செய்யுளை முதற் பாடலாகக் கொண்டு இரணியன் வதைப் படலம் தொடங்குகிறது. (118)

இராவணன் மந்திரப் படலம் முற்றிற்று.

3. இரணியன் வதைப் படலம்

காத்தற் கடவுளாகிய திருமாலே தேவர்களது வேண்டுகோட் கிணங்கி அரக்கர்களை அழித்தற்பொருட்டு இராமனாக அவதரித்துள்ளான் ஆதலின் இராமனைப் பகைத்துப் போர்செய்ய முற்படுதல் கூடாது என்று கூறிய வீடணனை இராவணன் நோக்கி, 'உலகிற்கு ஒப்பற்ற முதல்வனாக நீ கூறிய திருமால், தன்னுடைய ஆயிரம் பெருந் தோள்களையும் அத்துணைத் தலைகளையும் கொண்டு மிகப் பெரிய பூமி முழுவதனையும் தன் பாதத்தினுள் அடக்கவல்ல அப் பெருவடிவினை விட்டுவிட்டு அரக்கராகிய நம்மனோர்க்கு உணவாகத் தக்க இழிந்த மானுட வடிவத்தினைக் கொண்டனனோ?' என இகழ்ந்து கூறி நகைத்தனன். அந்நிலையில் எவ்வாற்றானும் தன் தமையனாகிய இராவணனை நல்வழிப்படுத்தக் கருதிய வீடணன், திருமாலின் எல்லையற்ற பேராற்றலையும், அப்பெருமானைப் பகைத்தோர் எத்தகைய பெருவலி படைத்தோராயினும் விரைவில் அழிந்தொழிவர் என்பதனையும் இராவணனுக்குப் புலப்படுத்தும் நிலையில் திருமால் கொண்ட நரசிங்காவதாரத்தினால் இரணியன் என்ற கொடிய அசுரன் அழிந்தொழிந்த செய்தியைக் கூறும் முறையில் அமைந்தது, இரணியன் வதைப் படலம் என்னும் இப்படலமாகும். இது சில சுவடிகளில் இரணியன் கதைப் படலம் எனவும் குறிக்கப் பெற்றுளது. இப்படலம் 176 செய்யுட்களையுடையது.

இரணியன் என்பான், பிரமனுக்குப் பேரனும் மரீசியின் புதல்வனும் ஆகிய காசிப முனிவர்க்குத் திதி என்பவள் வயிற்றிற் பிறந்த அசுரனாவன். இவன் பொன்னிறத்தினனாக விளங்கினமையால் இரணியன் என்னும் பெயரைப் பெற்றான். இரணியம்—பொன். இரணியனுக்குத் தம்பி இரணியாட்சன் என்பான். திருமாலின் வாயில் காவலராகிய ஜய, விஜயர் என்பவர்களே ஒரு சாபத்தால் இவ்வாறு இரணியன், இரணியாட்சன் எனப் பிறந்தார்கள். இவ்விருவருள் இரணியனுடைய தம்பியாகிய இரணியாட்சன் என்பவன் திருமாலால் வராகாவதாரத்தில் முன்னரே கொல்லப்பட்டான்.

இரணியன், பிரமதேவரை நோக்கிப் பெருந்தவஞ் செய்து, தேவர், மனிதர், விலங்கு முதலிய எவ்வகை உயிர்களாலும் ஐம் பெரும் பூதங்களாலும் பல்வேறு படைக்கலங்களாலும் தனக்குச் சாதல் நேராதவாறு அளவற்ற வரங்களைப் பெற்றான். அசுர வேந்தனாகிய அவன், தேவர் முதலிய யாவர்க்கும் எல்லையற்ற துன்பமே விளைத்து வந்தான். உலகத்தார் யாவரும் இரணியனாகிய தன்னையே

தெய்வமாகக் கொண்டு போற்றும் வண்ணம் ஆணையிட்டான். அவனது கட்டளைக்குத் தேவர் முனிவர் முதலிய யாவரும் அஞ்சி அடங்கி யொழுகினர். அவனுடைய புதல்வன் பிரகலாதன் கல்வி பயிலும் பருவத்தை அடைந்தனன். இரணியன் தன் மைந்தனாகிய அவனை யழைத்து வேதம் ஓதும்படி குருவாகிய அந்தணன்பால் ஒப்படைத்தான். வேதியனாகிய ஆசிரியன் பிரகலாதனுக்கு வேதத்தைக் கற்பிக்கத் தொடங்கி, அவனை நோக்கி, 'அரசனாகிய உன் தந்தையை இறைஞ்சும் முறையில் இரணியாய நம என்பதனை முதலிற் சொல்லுக' எனப் பணித்தான். ஆசிரியன் கூறும் முறையற்ற அச்சொல்லினைக் கேட்டு வருந்திய பிரகலாதன், தன் இரு செவிகளையும் பொத்திக்கொண்டு, வேதங்கள் எல்லாவற்றுக்கும் முன்னரே ஓதத்தக்க நன்மொழியாகிய 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரத்தினை அன்புடன் உளங்குளிர ஓதிக் கண்ணீர் மல்கத் தியானித்திருந்தான். அவனது செயலைக் கண்டு அஞ்சி நடுங்கிய வேதியன், தன் மாணாக்கனாகிய அவனைக் கண்டித்து வேண்டும் அறிவுரை கூறினான். பிரகலாதன் குருவின் உரையினை ஏற்றுக் கொள்ளாமல் தான் உறுதியெனக் கொண்ட நாராயண மந்திரத்தின் பெருமையினையே மீட்டும் விரித்துக் கூறினான். அதனால் தனக்கு என்ன தீங்கு நேருமோ என்று அஞ்சிய வேதியன், விரைந்து ஓடி இரணியனை யடைந்து நடந்த செய்தியை நடுங்கி யுரைத்தான். இரணியன் பிரகலாதனை அழைத்து 'நீ கூறிய சொல் யாது?' என வினவினான். தந்தையை வணங்கிய பிரகலாதன் திருமால் திருநாமமாகிய அதன் பெருமையை விரித்துரைத்தான்.

அதுகேட்டு அளவிலாச் சினமுடையனாகிய இரணியன், தன்னுடைய அளவிலாற்றல்களையும் தானே உலகிற்கு ஒப்பற்ற தலைவன் என்பதனையும், தன் பெயரே முதற்கண் ஓதத்தக்கது என்பதனையும், திருமால் தனக்குத் தோல்வியுற்று அஞ்சி யோடியவன் என்பதனையும், அவன் அசுரர்களாகிய தன் குலத்தார்க்கு வழிவழிப் பகைவன் என்பதனையும் தன் மகனுக்கு அறிவுறுத்தி, 'சிறுபிள்ளையாகிய நீ அறியாது செய்த குற்றத்தினைப் பொறுத்துக்கொண்டேன். இனி நின் ஆசிரியன் பணித்தவண்ணமே ஓதுவாயாக' என்று கூறினான். அதுகேட்ட பிரகலாதன், வேதத்தில் விரித்துரைக்கப் படும் பரம் பொருளாவான் திருமாலே எனவும், அவனே உலகத் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் ஆதாரமாக விளங்குபவன் எனவும், இறைவனாகிய திருமாலை இகழ்ந்துரைத்தல் தீமை தருவதெனவும் தன் தந்தைக்கு எடுத்துரைத்தான். மைந்தனது சொற் கேட்டு வெகுண்ட இரணியன், தன் ஏவலராகிய வீரர்களை நோக்கி, 'என் சொல்வழி யடங்காத இப்பிரகலாதனைப் பலவாறு துன்புறுத்திக் கொல்லுமின்' எனப் பணித்தான்.

இரணியன் கட்டளையிட்டவாறு அவனுடைய ஏவலாளர்கள் பிரகலாதனை அழைத்துச் சென்று வாட்படையாலும் மழுப்படையாலும் தாக்கி வருத்தினர். எனினும் நாராயண மந்திரத்தை அன்பினால் இடைவிடாது ஓதும் இயல்பினனாகிய அப்பிரகலாதனை அப்படைகள் யாவும் எதுவும் செய்யமாட்டாதனவாயின. அச் செய்தியை ஏவலர் சொல்ல அறிந்த இரணியன், 'இவனைத் தீக் குழியில் தள்ளிக் கொல்லுங்கள்' என்றான். அவ்வாறே ஏவலாளர் பெருந் தீயினை மூட்டிப் பிரகலாதனை அத்தீயினுள்ளே தள்ளினர். தீ பிரகலாதனைச் சுடாது அவன் மேனிக்குக் குளிர்ச்சி தருவதாயிற்று. அதனையறிந்து வெகுண்ட இரணியன், அநந்தன் முதலிய எட்டுப் பாம்புகளை யேவிப் பிரகலாதனைக் கடிக்குமாறு செய்தான். அவ்வாறே பாம்புகள் எட்டும் பிரகலாதனைத் தீண்டிக் கடித்த அளவில் அவற்றின் பற்கள் சிதர்ந்து உதிர்ந்தன. அவன் மேனியில் பற்கள் பதிந்த இடந்தோறும் அமுத நீர் சுரந்தது. பின்னர் இரணியனது கட்டளைப்படி இந்திரனுடைய யானை, பிரகலாதனைக் கொல்லச் சென்று, அவனது தெய்வத்திறமுணர்ந்து அவனைத் தொழுது மீண்டது. அதன் செயல் கண்டு வெகுண்ட இரணியன், அந்த யானையைக் கொல்லுமின் என்றான். அதுகேட்டு அஞ்சிய யானை மீண்டும் பிரகலாதனையணுகித் தன் தந்தங்கள் அவனுடைய மார்பிற் பதியும்படி வெகுண்டு தாக்கியது. அவ்வளவில் அதன் தந்தங்கள் வாழைத் தண்டினைப் போன்று ஒடிந்து சிதைந்தன. சினமுற்ற இரணியன், 'இனி இவனை மலையுடன் பிணித்துக் கடலில் தள்ளுங்கள்' என்றான். ஏவலரும் அவ்வாறே செய்தனர்.

மலையுடன் பிணித்துக் கடலில் வீழ்த்தப்பட்ட பிரகலாதன், திருமால் திருப்பெயரை இடைவிடாது ஓதினமையால், அவனுக்கு அப்பெரிய கடல் சிறிய மடுவைப் போலவும், அவனுடன் பிணித்த மலை சிறிய மரக்கலம் போலவும் ஆயின. தன் கைகளைத் தலைமேற் கூப்பியவனாய்க் கருங்கடலில் மலையே மரக்கலமாகக் கொண்டு மிதக்கும் பிரகலாதன், ஊழிக்காலத்துப் பெருவெள்ளத்திலே ஆலிலையில் துயில் கொள்ளும் மாயோனை ஒத்து விளங்கினான்; பல வகை யிடையூறுகளினின்றும் தன்னை உய்வித்தருளிய திருமாலின் பெருஞ் சீர்த்திகளைப் பலவாறு எடுத்துரைத்துப் போற்றினான்.

தன் மைந்தன் பெருங் கடலுள் ஆழ்ந்து இறவாமல் பிழைத்தமை யறிந்த இரணியன், அவனைத் தன் முன்னர்க் கொணரச்செய்து கொடிய நஞ்சினை ஊட்டுமாறு பணித்தனன். பிரகலாதனும் அந் நஞ்சினை வாங்கியுண்டு எத்தகைய தளர்ச்சியுமின்றி மகிழ்ந்திருந்தான். அதுகண்டு வெகுண்ட கொடியோராகிய அசுரர்கள் பலரும் அவனைச் சம்மட்டிகளால் அடித்துத் துன்புறுத்தினர். அந்நிலையிற்

பிரகலாதன் இறைவனாகிய திருமால் ஆயிரந் திருக்கரங்களை யுடையான் என்பதனை யெண்ணி அம்முதல்வனுடைய பேருருவினையே தியானித்துக் கொண்டிருந்தான்.

இவ்வாறு தான் செய்த பலவகை யுபாயங்களாலும் தன் மகனாகிய பிரகலாதன் இறவாது பிழைத்திருத்தலை யறிந்து சீற்றங் கொண்ட இரணியன், 'இனி இவன் உயிரை யானே போக்குவேன்' என அவனை நெருங்கினான். தன்னைக் கொல்ல வந்த தந்தையைப் பிரகலாதன் வணங்கி நின்று, 'எந்தையே, எனது உயிர் உலகு தந்தானாகிய இறைவனுக்கு உரிய பொருள்; ஆதலின் உன்னாற் கொள்ளத்தக்கதன்று' என்றான். அதுகேட்ட இரணியன், 'உலகு தந்தார் யாவர்' என வினவினான். 'உலகும் உயிரும் தந்தவன், மலரில் மணமும் எள்ளில் எண்ணெயும் போன்று எங்கும் நீக்கமற நிறைந்த திருமால்' என்று சொல்லி அம்முதல்வனது இயல்பினைப் பிரகலாதன் விரித்துரைத்தான். 'அவன் எங்கும் உளனாயின் அவனை இத்தூணிடத்தே காட்டுக. காட்டாயாகில் உன்னைக் கொல்வேன்' என இரணியன் கூற, அறிவிற் சிறந்த பிரகலாதன் அவனை நோக்கி, 'என்னுயிர் உன்னாற் கொள்ளத்தக்க எளிமையுடையதன்று. யான் சொன்ன இறைவன் தொட்ட தொட்ட இடங்களிலெல்லாம் தோன்றானாயின், யான் அவனுக்கு உண்மையான அடியவன் ஆக மாட்டேன்' எனச் சூளுரைத்தான். இரணியன் அங்கிருந்த தூண் ஒன்றைத் தன் கையினால் அறைந்தான். அத்தூணினுள்ளிருந்து நரசிங்கம் பெருஞ் சிரிப்பொலியுடன் தோன்றியது. தான் குறித்த வண்ணம் இறைவன் தோன்றி உள்ளிருந்து சிரிக்கக்கண்ட பிரகலாதன் அளவிலா மகிழ்ச்சியுற்று ஆடிப் பாடினான்.

சிரிப்பொலி கேட்ட இரணியன், 'ஆரடா சிரித்தாய்' என்று செயிர்த்துரைத்துப் 'புறப்படு புறப்படு' என்று போருக்கு அறை கூவியழைத்தான். அந்நிலையில் நரசிங்கமூர்த்தி தூணிலிருந்து வெளிப்பட்டு அண்டத்தின் கீழும் மேலும் பிளக்குமாறு பேருருக் கொண்டு தோன்றி அளவற்ற கைகளால் அசுரர்களை அழித்துப் போக்கியது. அதுகண்ட இரணியன் மேருமலையினையொத்த பெருவடிவுடையவனாய் வாட்படையும் கேடகமும் கைக்கொண்டு நரசிங்கத்தை எதிர்த்து நின்றான். அப்பொழுது அவன் மைந்தனாகிய பிரகலாதன் அவனை அணுகி, 'சக்கரப் படையையுடைய திருமாலாகிய இத்தெய்வத்தை வணங்கி உய்தி பெறுவாயாக' என அன்புடன் வேண்டிக்கொண்டான். தனக்கு மேம்பட்டவராக யாரையும் வணங்க விரும்பாத இரணியன், தன் மைந்தனை இகழ்ந்து சிரித்து நரசிங்கமூர்த்தியை எதிர்த்தான். அந்நிலையில் நரசிங்கப்பிரான் இரணியனுடைய இரண்டு கால்களையும் தன் கையொன்றினாற் பற்றிச்

சுழற்றி அந்தி நேரத்தில் அவனுடைய அரண்மனை வாயிற்படியிலே நின்று அவனைத் தன் தொடையின்மேல் வைத்துக்கொண்டு தன்னுடைய கைந் நகங்களால் அவனது மார்பைப் பிளந்து உயிரைப் போக்கித் தேவர் முதலியோரது துன்பத்தை நீக்கியருளினான்.

இரணியனுக்கு அஞ்சி முன்பு ஓடி யொளிந்திருந்த பிரமன், உருத்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் நரசிங்கப்பிரான் இரணியனுயிரைக் கவர்ந்தமையறிந்து அங்கு வந்து கூடினார்கள். அன்னோர் நரசிங்கமூர்த்தியின் பேருருவைக்கண்டு அஞ்சி நடுக்க முற்றனர். பிரமதேவன் சிங்கப்பிரானாகிய திருமாலின் அளவிறந்த பெருமையினைத் துதித்துப் போற்றினான், நரசிங்கமூர்த்தியும் யாவராலும் தணிக்கவொண்ணாத பெருஞ் சீற்றத்தைத் தன்னுள்ளே யடக்கிக் கொண்டு, தேவர்களை நோக்கி 'அஞ்சாதீர்கள்' என்று அபயம் அளித்தருளினார்.

பிரமன் முதலிய தேவர்கள் பெரிய பிராட்டியாகிய திருமகளை வேண்டிப் போற்றி நரசிங்கமூர்த்தியின்பக்கல் அனுப்பினார். சிங்கப் பிரானும் தன்னருகில் வந்த திருமகளை அருட்குறிப்புடன் நோக்கி யருளினார். முனிவர் முதலாயினோர் அவ் இறைவனது பெரும் புகழை எடுத்துரைத்துப் போற்றினார்கள். பரஞ்சுடராகிய இறைவன் பல்வகையிடையூறுகளையும் பொறுத்துக்கொண்டு சிறிதும் மனங்கலங்காதிருந்த பிரகலாதனையே குறிக்கொண்டு நோக்கி, 'உன் தந்தையை உன் கண் முன்னே கொன்று போக்கிய என் செயலை நேரிற் கண்டிருந்தும் நீ என்பால் பேரன்பு வைத்தனை. நினக்கு யான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்? உனக்குச் செய்ய வேண்டிய உதவி யாதேனும் உளதாயின் கூறுக' எனக் கூறியருளினான். அது கேட்ட பிரகலாதன் 'புழுவாய்ப் பிறக்கினும் நின் திருவடிக்கண் அன்பினை அடியேற்கு அருள்புரிவாயாக' என இறைஞ்சி வேண்டினான். அம்மொழியினைக் கேட்டு மகிழ்ந்த சிங்கப்பிரான் பிரகலாதனை நோக்கி, 'ஐம்பெரும் பூதங்கள் அழியினும் நீ என்னைப் போன்று அழிவின்றி இருப்பாய். உலகவுயிர்களெல்லாம் என்னை வணங்கிப் பெறும் நற்பயன்களை உன்னை வணங்கித் துதித்தலால் எய்தி இன்புறுக. அசுரர்கட்கேயன்றித் தேவர்கட்கும் நீயே அரசன்' என்று வரம் கொடுத்தருளி, இந்திரன் முடிசூட்டுதற்கேற்ற பணிகளைப் புரியப் பிரமதேவன் வேள்விச் சடங்கு செய்ய முரசங்கள் முழங்கப் பிரகலாதனை மூவுலகங்கட்கும் வேந்தனாக முடிசூட்டியருளினான். இது முன் நிகழ்ந்த வரலாறாகும். எம்முடைய வேந்தனே! யான் கூறிய இம்மொழியினை ஏதோ பொருளுடையதென்று கருதாது இகழ்வாயாயின் அதனால் உனக்குத் தீங்கு விளைதல் நிச்சயம்'' என்று வீடணன் தன் தமையனாகிய இராவணனை நோக்கிக் கூறினான் என்பது இப்படலத்தின் பொருட் சுருக்கமாகும்.

இரணியனைப் பற்றிய இச்செய்தி முதல் நூலாகிய வான்மீகத்திற் பேசப்படவில்லை. திருவரங்கத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபத்தில் கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றி வரும்பொழுது இவ் இரணியன் வதைப் படலத்தை வாசிக்கக் கேட்ட புலவர் சிலர், 'ஆதிகாவியமாகிய வான்மீக ராமாயணத்தில் இரணியன் வதை கூறப்படாதிருக்க அதனை இங்கே கூறியது பொருந்தாது. இதுபற்றி ஏதேனும் தெய்வீகம் காட்டினால் இதனை ஏற்றுக்கொள்ளலாம்' எனக் கூறினார்கள் என்றும், கம்பர் இறைவனை நினைந்து இப்படலத்தை மேட்டழகிய சிங்கர் சந்நிதியில் வாசித்தாரென்றும், அப்பொழுது சிங்கப்பிரான் தன் திருக்கரங்களை நீட்டித் திருமுடியை அசைத்துப் பெருஞ்சிரிப்புச் சிரித்து ஆரவாரித்தருள அதுகண்டு அங்குள்ளோர் வியந்து கம்பரது இராமாவதார நூலைத் தெய்வத்தன்மையுடையதாக உவந்து ஏற்றுக்கொண்டார்கள் என்றும் இப்படலத்தைக் குறித்துச் செவிவழியாக ஒரு கதை வழங்குகிறது.

சீதையை இராமபிரானிடம் அனுப்பி உய்யும்படி இராவணனுக்கு அறிவுரை கூறும் வீடணன் தன் தமையனை நோக்கி, 'தேவரீர் சூரிய பகவானாலோ தேவதைகளாலோ பாதுகாக்கப்பட்டவராயினும் ஸ்ரீராமரிடமிருந்து மட்டும் உயிருடையராய்த் திரும்பமாட்டீர். இந்திரன் பக்கலிலோ அன்றி யமனுடைய மடிமீதோ அமர்ந்தவராயினும் உயிருடன் திரும்பமாட்டீர். ஆகாயத்திலும் தப்ப மாட்டீர். பாதாளத்திற் குடிபுகுந்தீராயினும் தப்பமாட்டீர்' என்று இராமனுடைய தெய்வ ஆற்றலை எடுத்துரைப்பதாக முதல் நூலில் வான்மீகி குறித்துள்ளார். இராமனிடம் அடைக்கலம் புகவந்த வீடணனைப் பகைவன் என எண்ணி அவனால் இராமபிரானுக்குத் தீங்கு நேரும் என்று அஞ்சிய சுக்கிரீவன், இராமபிரானையிறைஞ்சி, 'வீடணனை அடைக்கலமாக ஏற்றுக்கொள்ளுதல் கூடாது' எனத் தெரிவித்த பொழுது, இராமன் சுக்கிரீவனை நோக்கி, "குரக்கினத் தரசனே! உலகிற் பேய்களையும் அசுரர்களையும் இயக்கர்களையும் அந்த அரக்கர்களையும் எண்ணினால் (யான்) விரல் நுனியால் ஒழிக்க முடியும்" என்று எவராலும் தடுக்கவொண்ணாத தனது பேராற்றலை எடுத்துரைத்ததாக வான்மீக முனிவர் குறித்துள்ளார், 'விரல் நுனியால் ஒழிக்க முடியும்' என அவர் குறித்த தொடர், திருமாலின் அவதாரமாகிய இராமன் முன் நரசிங்காவதாரத்தில் இரணியனை விரல் நகங்களாற் பிளந்து கொன்ற செய்தியைக் குறிப்பாற் புலப்படுத்தும் நிலையில் அமைந்துளதென்றும், இவ்வாறு இராமன் கூற்றில் வைத்து முதல் நூலாசிரியர் சுக்கிரீவனுக்குக் குறிப்பால் அறிவுறுத்திய இரணியன் கதையினையே கம்பர் இராவணனுக்கு நல்லறிவு கொளுத்த முற்பட்டவீடணன் கூற்றில் வைத்து வெளிப்பட விரித்துக் கூறியுள்ளார் என்றும் அறிஞர் சிலர் கூறுவர்.

தமையனாகிய இராவணனுக்கு அறிவுரை கூறித் திருத்த முற்பட்ட வீடணன் செயலைத் தந்தையாகிய இரணியனைத் திருத்த முற்பட்ட பிரகலாதன் செயலோடு இணைத்து நோக்கிய இந் நூலாசிரியர், இராவணன் காலத்துக்கு முன் நிகழ்ந்த இரணியன் கதையினை வீடணன் இராவணனுக்கு எடுத்துரைக்கும் முகத்தால், இறைவனாகிய திருமாலை இகழ்ந்து உலகிற்குத் தீங்குபுரியும் கொடியோர் எத்துணை வரங்கள் பெற்றுடையராயினும் விரைவில் அழிந் தொழிவர் என்பதனையும் இறைவனைப் புகல் புகுந்தோர் எத் துணைப் பேரிடர்கள் அடுக்கிவரினும் அவற்றால் தாக்குண்ணாது என்றும் நிலைத்த பேரின்பத்தினை அடையப்பெறுவர் என்பதனை யும் இரணியன் அவன் மைந்தன் பிரகலாதன் ஆகிய இருவர் செயலில் வைத்து எடுத்துக்காட்டி இனிது விளக்கியுள்ளார்.

நரசிங்காவதாரச் செய்தியினைக் கடுவன் இளவெயினனார் என் னும் சங்கப் புலவர், தாம் திருமாலை முன்னிலைப்படுத்துப் பரவிப் போற்றிய நான்காம் பரிபாடலில்,

" செயிர்தீர் செங்கட் செல்வ நிற்புகழப்
புகைந்த நெஞ்சிற் புலர்ந்த சாந்திற்
பிருங்க லாதன் பலபல பிணிபட
வலந்துழி, மலர்ந்தநோய் கூம்பிய நடுக்கத்து
அலர்ந்த புகழோன் தாதை யாகலின்
இகழ்வோன் இகழா நெஞ்சினனாக நீயிகழா
நன்றுநட்ட அவன் நன்மார்பு முயங்கி
ஒன்றுநட்ட அவன் உறுவரை மார்பிற்
படிமதஞ் சாம்ப ஒதுங்கி
இன்னல் இன்னரொ டிடிமுரசியம்ப
வெடிபட ஓடிதூட் டடியொடு
தடிதடி பலபட வகிர்வாய்த்த உகிரினை " (வரி–10–21)

எனவரும் தொடர்களில் விரித்துக் கூறியுள்ளார். " கோபத்தால் அன்றி இயல்பாகவே சிவந்த கண்களையுடைய செல்வனே! (தன்மைந்தனாகிய) பிருங்கலாதன் திருமாலாகிய நின்னைப் புகழ்த லாலே, இரணியன் சினத் தீயாற் புகைந்த நெஞ்சோடும் புலர்ந்த சாந்தோடும் அவன் பல பல பிணிகள் படப் பிணித்தவழி, அம்மிக்க நோயால் ஒடுங்குதற்குக் காரணமான நடுக்கத்தையுடைய அப் பிருங்கலாதன் (தன்னை இவ்வாறு துன்புறுத்தியவன்) தன் தந்தை யாதலால் இகழப்படுதற்குரிய அவ்விரணியனை இகழாத மனத்தின னாகப் பொறுமையுடன் இருக்க (அப்பிருங்கலாதனால் வணங்கப்படுந் தெய்வமாகிய) நீ அவ் இரணியனை இகழ்ந்து, நின்பால் நன்றாக அன்பு செலுத்திய அப்பிருங்கலாதன் வருந்தாமல், அவன் நெஞ்சிற்

பொருந்தியிருந்து (முன்னர்) நின்னுடன் ஒன்றாக வரங்கொண்ட இரணியனது மிக்க மலைபோலும் திண்ணிய மார்பில் பகைவலிகெடச் சென்று துன்பத்தைக் காட்டும் உற்பாதங்களொடு பொருந்தி அவன் இடிமுரசு ஒலிப்ப நீ புறப்படுதலால் வெடித்து ஒடிந்த தூணின் பிளப்போடு ஒத்த நின்னால் தடியப்பட்ட ஊன்தடி பலபட அவன் உடம்பினைப் பிளத்தலைப் பொருந்திய நகங்களை யுடையாய்'' என்பது மேற்காட்டிய பரிபாடற் பகுதியின் பொருளாகும்.

திருமாலின் அவதாரங்களிற் சிறப்புடையதாகிய இராமாவதாரத்தினைப் போற்றும் நோக்குடன் இக்காப்பியத்தினை இயற்றிய கம்பர் என்னும் புலவர் பெருமான், தம் நூலில் இராமபிரானாகிய திருமாலின் ஏனைய அவதாரங்களின் சீர்த்தியினையும் வாய்ப்பு நேர்ந்துழி ஆங்காங்கே விரித்துக் கூறியுள்ளார். தீயோரை ஒறுத்து நல்லோரைப் பாதுகாத்தருளும் முறையில் திருமால் கொண்ட அவதாரங்களுள் வாமனாவதாரத்தினையும் திருவிக்கிரமாவதாரத்தினையும் பாலகாண்டம் வேள்விப் படலத்தில் விரித்துக் கூறிய ஆசிரியர், நரசிங்காவதாரத்தின் நோக்கத்தினையும் பயனையும் எடுத்துக் கூறுமுகமாக இராமாவதாரத்தின் நோக்கத்தினையும் எதிர்கால விளைவினையும் இராவணனுக்கு வீடணன் அறிவுறுத்தும் முறையில் இரணியன் வதைப் படலம் என்னும் இப்படலத்தை அமைத்துள்ளார்.

உலகவுயிர்களைப் படைத்துக் காத்து ஒடுக்கவல்ல ஆற்றல் வாய்ந்த தெய்வம் ஒன்று உண்டு என்னுந் தெளிவில்லாத இரணியன், தெய்வமுண்டெனத் தெளிந்த நல்லுணர்வுடைய மைந்தனாகிய பிரகலாதனைக் கொன்றொழித்தற்குக் கையாண்ட சூழ்ச்சிகளும் செயல்முறைகளும் பிரகலாதன் தனக்குச் செய்யப்பட்ட பேரிடர்களால் சிறிதும் வருந்தாது திருமாலின் திருப்பெயராகிய திரு எட்டெழுத்தினை ஓதி உய்ந்த திறமும், சிவநெறியில் ஊன்றிய சிந்தையினராகிய திருநாவுக்கரசர்க்கு அயல் மதத்தார் வஞ்சனையாற் செய்த இடர்களும், தமக்கு நேர்ந்த இடர்களை யெல்லாம் நாவுக்கரசர் திருவைந்தெழுத்தின் துணைகொண்டு கடந்து உய்ந்த திறமும் இங்கு ஒப்பு நோக்கி யுணரத்தக்கனவாகும்.

இப்படலத்தில் இரணியன் கூற்றாக அமைந்த உரையாடல்களும் அவற்றை மறுத்துப் பிரகலாதன் கூறுவனவாக அமைந்த வாய்மொழிகளும் சமயதத்துவ ஆராய்ச்சியில் கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கு உள்ள நுண்மாண் நுழைபுலத்தினை இனிது புலப்படுத்துவனவாகும்.

3. இரணியன் வதைப் படலம்

இரணியனது இயல்பும் ஆற்றலும் 6316–6333

6316. வேதங் கண்ணிய பொருளெலாம்
விரிஞ்சனே யீந்தான்
போதங் கண்ணிய வரமவன்
றரக்கொண்டு போந்தான்
காதுங் கண்ணுதல் மாலயன்
கடைமுறை காணுப்
பூதங் கண்ணிய வலியெலா
மொருதனி பொறுத்தான்.

வேதம் கண்ணிய பொருள் எலாம் விரிஞ்சனே ஈந்தான்;
போதம் கண்ணிய வரம் அவன் தரக் கொண்டு போந்தான்;
காதும் கண்ணுதல், மால், அயன், கடைமுறை காணுப்
பூதம் கண்ணிய வலி எலாம் ஒருதனி பொறுத்தான்.

பொ :—(இரணியனுகிய அவன்) வேதங்கள் கருதிய பொருள்களையெல்லாம் பிரமனே (குருவாக இருந்து) உபதேசிக்கப்பெற்ருன்; (தன் உயர்ந்த) ஞானத்திஞற் கருதிய வரங்களையெல்லாம் அப் பிரமனே அளிக்கப் பெற்றுக்கொண்டு வந்தான்; (எல்லாப் பொருள்களையும்) அழித்து ஒடுக்கும் நெற்றியிற் கண்ணுடையனுகிய உருத்திர மூர்த்தியும் (காத்தற் கடவுளாகிய) திருமாலும் (படைத்தற் கடவுளாகிய) நான்முகனும், முடிவுகாண ஒண்ணுத (ஐம்) பூதங்களும் கொண்டுள்ள மதிக்கத்தக்க வன்மைகளெல்லாவற்றையும் தானெருவனே (ஒரு சேரத்) தாங்குபவனுயினன்.

கு :—வேதம் கண்ணியபொருள்-வேதபுருடனுகிய தலைவன் தன் சொற்களின் துணைகொண்டு உயிர்களுக்கு அறிவிக்கக் கருதிய பொருள்; மறைகளின் உட்பொருள். கண்ணிய-கருதிய. விரிஞ்சன்-நான்முகன். விரிஞ்சனே என்புழி ஏகாரம், மறையோதுதலிலும் ஓதுவித்தலிலும் வல்ல அவனது சிறப்புணர நின்றது. வேதங்களை முதன் முதலில் ஓதியுணர்ந்த ஆதியந்தணனுகிய நான்முகனே

ஆசிரியனாக இருந்து அருமறைப் பொருள்களைத் தெளிவாக உபதேசிக்கப் பெற்றவன் இரணியன் என்பது புலப்படுத்துவார், 'வேதங்கண்ணிய பொருளெலாம் விரிஞ்சனே ஈந்தான்' என்றார். 'விரிஞ்சனே ஈந்தான்' என்புழி ஈந்தான் என்பது, 'ஒன்னார் வணங்கினான்' என்புழிப் போலச் செயப்பாட்டு வினையாய் நின்றது. காதுதல்-அழித்தல். கண்ணுதல்-நுதலிற் கண்ணுடையான்; என்றது உருத்திரமூர்த்தியை. கடைமுறை-இறுதியாகிய எல்லை. கண்ணுதலும் மாலும் அயனும் பூதமும் கண்ணிய வலியெலாம் என எண்ணும்மை விரித்துரைக்க. கடைமுறை காணாப் பூதம் என்றது, உருமாற்றப்படாமல் உலகங்களுக்கெல்லாம் முதற்காரணமாய் அருவநிலையில் அமைந்த நுண்ணிய ஐம்பூதங்களை. படைத்தளித்தழிக்கும் தொழிலுடைய மும்மூர்த்திகளிடத்தும் உருவறியவொண்ணாத நுண்ணிய ஐம்பூதங்களினிடத்தும் எத்துணை ஆற்றலும் வலிமையும் உண்டோ அத்துணை ஆற்றல்களையும் வலிமைகளையும் தானொருவனாகவே நின்று தாங்கிக்கொள்ளும் பெருவன்மை படைத்தவனாக இரணியன் விளங்கினான் என்பார், 'காதுங் கண்ணுதல் மால் அயன் கடைமுறை காணாப் பூதம் கண்ணிய வலியெலாம் ஒருதனி பொறுத்தான் என்றார். இரணியன் நான்முகக் கடவுளை யெண்ணிப் பெருந்தவம் புரிய அத்தவத்திற்கு மகிழ்ந்த பிரமதேவன் அவன்முன்னே வெளிப்பட்டு அவனுக்கு அருமறைப் பொருளை உபதேசித்தருள அதன் பயனாக ஞானம் கைவரப்பெற்று, அதன் பயனாகத் தனக்கு இன்றியமையாதனவாகத் தோன்றிய எல்லா வரங்களையும் நான்முகன்பால் வேண்டிப் பெற்றுக்கொண்டு இவ்வுலகில் வந்து ஆட்சி புரியத் தொடங்கினான் என்பார், 'போதம் கண்ணிய வரம் அவன் தரக்கொண்டு போந்தான்' என்றார். போதம் என்றது, ஆன்மாவினது இயற்கையுணர்வும் நூலறிவும் ஆகிய ஞானத்தினை. முன்னைப் படலத்தின் இறுதிச் செய்யுளிலுள்ள 'இரணியன் என்பான்' என்பதனை இச் செய்யுளிலும் எழுவாயாக வருவித்து, இரணியன் என்பான், விரிஞ்சனே ஈயப்பெற்றான், போந்தான், பொறுத்தான் என முடிக்க. (1)

படல முதற் செய்யுளாகிய இதன் முன்னர் 52-ஆம் எண்ணுள்ள சுவடியில் பின்வரும் மிகைப் பாடல் இடம் பெற்றுள்ளது:—

6316 (a) 'ஓது மாயிர கோடியின் உகத்தொரு முதலாய்த்
தாது லாவிய தொடைப்புயத் திரணியன் தமரோ
டாதி நாளவன் வாழ்ந்தனன் அவனருந் தவத்துக்
கேது வேறில்லை யாரவன் போல்தவம் இழைத்தார்.

6317. எற்றை நாளினு முளனெனு
மிறைவனு மயனுங்
கற்றை யஞ்சடைக் கடவுளுங்
காத்தளித் தழிக்கும்
ஒற்றை யண்டத்தி னளவனோ
வதன்புறத் துலவா
மற்றை யண்டத்துந் தன்பெய
ரேசொல வாழ்ந்தான்.

'எற்றை நாளினும் உளன் எனும் இறைவனும், அயனும்,
கற்றை அம் சடைச் கடவுளும் காத்து, அளித்து, அழிக்கும்
ஒற்றை அண்டத்தின் அளவனோ? அதன்புறத்து உலவா
மற்றை அண்டத்தும்—தன்பெயரே சொல—வாழ்ந்தான்.

பொ :—(இரணியனாகிய அவன்) எந்த (ஊழி)க் காலத்தும் (அழியாது) உள்ளவன் என (மறைகளாற் போற்ற)ப்படும் இறைவனாகிய திருமாலும் பிரமதேவனும் அழகிய சடைத் தொகுதியினையுடைய கடவுளாகிய உருத்திரனும் (முறையே) காத்துப் படைத்து அழிக்கும் இந்த அண்டப்பகுதி யொன்றின் எல்லையுள் மட்டும் அடங்கியவனோ? இந்த அண்டகோளத்தின் அப்புறத்தனவாய் எண்ணில் அடங்காத ஏனைய அண்டங்களிலும் (யாவரும் முழுமுதற் கடவுளாகிய இறைவன் பெயரைச் சொல்லுதல் தவிர்ந்து, இரணியன் என்னும்) தன் பெயரினை மட்டுமே சொல்லித் துதிக்கும் வண்ணம் வாழ்ந்திருந்தான்.

கு :—எற்றைநாளினும் - எக்காலத்தும் ; உலகெலாம் அழியும் ஊழிக்காலத்தும். இறைவன் என்ற சொல், யாண்டும் நீக்கமறத் தங்கியிருப்பவன் என்னும் பொருளுடையதாதலின், அச்சொல் தோற்றக்கேடுகளில்லாத முழுமுதற் கடவுள் ஒருவனையே குறித்து வழங்குவது என்பார், 'எற்றை நாளினும் உளன் எனும் இறைவனும்' என்றார். படைத்தளித்தழித்தல் என்னும் தொழில் வகையால் தன்னோடு ஒற்றுமையுடையராகிய ஏனையிருவரும் உருக்கரந்து தன்னோடு ஒன்றும் பேரூழிக்காலத்தும் தன்னிலை மாறாது உள்ள முதல்வன் என மறைகளாற் போற்றப்பெறும் முழுமுதற் கடவுள் என்றவாறு. இறைவனென்னும் பெயர், ஈண்டுக் காத்தற் கடவுளாகிய திருமாலைச் சுட்டி நின்றது. இரணியன் என்பதை ஈண்டும் எழுவாயாக வருவித்து, (இரணியன் என்பான்) ஒற்றை அண்டத்தின் அளவனோ? அதன்புறத்து உலவா மற்றை அண்டத்தும்-தன்பெயரே சொல-வாழ்ந்தான் என முடிக்க. யாவரும் தம் உயிர்க்

குயிராகிய இறைவன் திருப்பெயரைச் சொல்லுதல் தவிர்ந்து இவனது பெயரையே சொல்லித் துதிக்க என்பார், 'தன் பெயரே சொல' என்றார். தன் பெயரே சொல்லுதலாவது, 'இரணியாய நம' என இவனது பெயரையே சொல்லித் துதித்தல். 'தன் பெயரே' என்புழி ஏகாரம் பிரிநிலை. (2)

இச் செய்யுளை அடுத்து 52-ஆம் எண்ணுள்ள சுவடியில்

6317 (a) 'இந்த இந்திரன் இமையவர் அவனுக்கோர் பொருளோ
உந்தும் அண்டங்கள் அனைத்தினும் உள்ள இந்திரரும்
அந்த நான்முகர் உருத்திரர் அமரர்மற் றெவரும்
வந்தி வன்பதம் முறைமுறை வணங்கிட வாழ்ந்தான்'

என்ற செய்யுள் மிகைப் பாடலாகக் குறிக்கப்பெற்றுள்ளது.

6318. பாழி வன்றடந் திசைசுமந்
தோங்கிய பணைக்கைப்
பூழி வன்கரி யிரண்டிரு
கைகொடு பொருத்தும்
ஆழங் காணுதற் கரியவா
யகன்றபே ராழி
ஏழுந் தன்னிரு தாளள
வெனக்கடந் தேறும்.

'பாழி வன்தடந் திசை சுமந்து ஓங்கிய பணைக்கைப்
பூழி வன்கரி இரண்டு இருகை கொடு பொருத்தும்;
ஆழம் காணுதற்கு அரியவாய், அகன்ற பேர் ஆழி
ஏழும் தன் இருதாள் அளவு எனக் கடந்து ஏறும்.

பொ:—இடம் அகன்ற வலிய பெரிய திசைகளைச் சுமந்து கொண்டு உயர்ந்து நிற்பனவாகிய பருத்த துதிக்கையினையுடைய புழுதிபடிந்த வலிய யானைகள் இரண்டினை (த் தன்) இரண்டு கைகளாலும் பிணைத்து (ப் பொருது முட்டுமாறு) காண்பான். ஆழம் காண முடியாதனவாய்ப் பரவியுள்ள பெருங் கடல்கள் ஏழும் தன் இரண்டு கால்களின் அளவாய் அடங்கின என்னும்படி (அவற்றைக் கால்களாற்) கடந்து கரையேறுவான்.

கு:—பாழி-அகலம். பணை என்பது, பெருத்தல் என்னும் பொருளுடைய உரிச்சொல். பூழி-புழுதி. ஆழி-கடல். இடமகன்ற வலிய பெரிய பூமியை எட்டுத்திசைகளிலும் நின்று தாங்குவனவாகிய திசை

யானைகளை அவற்றின் வலிய துதிக்கையினைப் பற்றியீர்த்து இரண்டிரண்டாகப் பொருத்திக் காணுதலும், ஏழுகடல்களும் தன் காலளவில் அடங்குமாறு அவற்றுள் இறங்கிக் கடத்தலும் இரணியனுக்குரிய விளையாட்டாய் அமைந்தன என்பதாம். இங்ஙனங் கூறவே இரணியனுடைய தடக்கைகளின் நீட்சியும் வன்மையும் அவன் கால்களின் நெடுமையும் இவற்றை யங்கமாகக் கொண்ட அவனது வடிவினது பெருமையும் உயர்ச்சியும் ஒருங்கு புலப்படுத்தினாராயிற்று. "ஆசையங் கரிகள் தம்மை அங்கைகொண் டொன்றோடொன்று, பூசல் செய்விக்கும்" (கந்தபுராணம்-உற்பத்தி. திருவிளையாட்டுப் படலம்-25) எனவும், "பெரும்புறக் கடலைக் குளப்படி நீரெனக் கருதும்" எனவும் வரும் பகுதிகள் இங்கு ஒப்புநோக்கி யுணரத் தக்கனவாம். (3)

6319. வண்டற் றெண்டிரை யாற்றுநீர்
சிலவென்று மருவான்
கொண்டற் கொண்டநீர் குளிர்ப்பில
வென்றவை குடையான்
பண்டைத் தெண்டிரைப் பரவைநீ
ருவரென்று படியான்
அண்டத் தைப்பொதுத் தப்புறத்
தப்புன லாடும்.

'வண்டல் தெண்திரை ஆற்றுநீர்
சில என்று மருவான்;
கொண்டல் கொண்டநீர் குளிர்ப்பு இல
என்று அவை குடையான்;
பண்டைத் தெண்திரைப் பரவைநீர்
உவர் என்று படியான்;
அண்டத்தைப் பொதுத்து அப்புறத்து
அப் புனல் ஆடும்.

பொ:—வண்டலிட்டுப்பாயும் தெளிந்த அலைகளையுடைய ஆற்றுநீர் (தான் அமிழ்ந்து முழுகுதற்கேற்ற ஆழமற்றதாதலால்) அளவிற் சிறிது என்று கருதி அதனருகே செல்லான்; மேகத்தால் முகந்து கொள்ளப்பட்ட மழைநீர் குளிர்ச்சியுடையன அல்ல என்று அந் நீரிலும் குளித்தற்கு இசையான்; தொன்மையுடையதாய்த் தெளிந்த அலைகளையுடைய கடல்நீர் உப்பாகிய மாசுடையதென்று கருதி

(அக்கடலிலும்) நீராடான்; அண்டகோளத்தைப் பொள்ளல் செய்து அதற்கு அப்புறத்திலேயிருந்து (அத்துளை வழியே பாயும்) அப்பெரும் புறக் கடலின் நல்ல தண்ணீரிலே திருமஞ்சனம் ஆடுவான்.

கு :—வண்டல்-ஆற்றுநீரிற் கலந்துவரும் நுண்ணிய மண்துகள். 'சில' என்பது, 'சிறிது' என்னும் பொருளில் வழங்கும் உலக வழக்குச்சொல். "குடத்துள்ளும் பிற கலத்துள்ளும் இருந்த நீரைச் சிறிது என்னது சில என்றலும், அடுப்பின்கீழ்ப் புடையடுப்பை மீயடுப்பு என்றலும் பிறவும் வழக்காரும்" (தொல்-சொல்-கிளவி-சூ.17 உரை) எனச் சேனவரையர் கூறும் வழக்காறு "ஆற்றுநீர்சில வென்று மருவான்" என வரும் இத்தொடரில் இடம் பெற்றிருத்தல் அறியத்தக்கதாகும். கொண்டல்-மேகம். வாயினல் முகந்து கொள் ளப்படும் நிலையில் நீர் தனக்குரிய தண்மையாகிய குளிர்ச்சியிற் குறைந்து சிறிது வெப்பமடைதல் இயல்பாதலின், கொண்டலால் முகந்து கொள்ளப்பட்ட நீர் குளிர்ச்சியுடையன அல்ல என்று அதன் கண் குளித்தலைத் தவிர்ந்தான் என்பது இதன் இரண்டாமடியின் கருத்தாகும். பண்டைத் தெண்திரைப் பரவை என்றது, சகரர் களாற் புதியதாகத் தோண்டப்படுவதற்கு முன்னரே அமைந்துள்ள பழைய கடலினை. இப் பழங்கடலினைத் 'தொன்றுமுதிர் பௌவம்' (புறநானூறு-6) எனக் காரிகிழார் குறித்துள்ளமை இங்கு நோக்கத் தக்கதாகும். பரவை-கடல். உவர்-உப்பு. பொதுத்தல்-பொள்ளல் செய்தல்; துளையிடுதல். பேராற்றலும் பேருருவும் பெற்று இனிய வாழ்வினை விரும்பிய அசுரர் தலைவனாகிய இரணியன், ஆற்றுநீர் மழைநீர் கடல்நீர் என்னும் முந்நீரும் ஆழமும் தண்மையும் தூய் மையும் அற்றன என எண்ணி அவற்றில் நீராடுதலை விரும்பாது அண்டத்தின் அப்புறத்தேயமைந்த பெரும் புறக்கடலின் நல்ல நீரிலே திருமஞ்சனம் ஆடுதலை வழக்கமாகக் கொண்டான் என்பதாம். (4)

6320. சாரு மானத்திற் சந்திரன்
றனிப்பதஞ் சரிக்கும்
தேரின் மேவிநின் றிரவிதன்
பெரும்பதஞ் செலுத்தும்
பேரி னெண்டிசைக் காவலர்
கருமமும் பிடிக்கும்
மேரு மால்வரை யுச்சிமே
லரசுவீற் றிருக்கும்.

சாரும் மானத்தில், சந்திரன் தனிப்பதம் சரிக்கும்;
தேரின் மேவி நின்று இரவிதன் பெரும்பதம் செலுத்தும்;
பேரின் எண்திசைக் காவலர் கருமமும் பிடிக்கும்;
மேரு மால்வரை உச்சிமேல் அரசு வீற்றிருக்கும்.

பொ :—(விண்ணிடத்தே) இயங்கும் விமானத்தில் (அமர்ந்து) சந்திரனது ஒப்பற்ற அரச பதவியைச் செலுத்தி உலாவருவான்; (கடிது செல்லும்) தேரிற் பொருந்திநின்று சூரியனது பேரரசினைச் செலுத்துவான்; (தான் இருந்த இடத்திலிருந்து சிறிது) இடம் பெயர்தலாலேயே எண்திசைக் காவலர்களுடைய தொழில்களையும் (தான் ஒருவனே) கைக்கொண்டு நடத்துவான்; மிகப் பெரிய மேரு மலையின் சிகரத்தின்மேல் பேரரசனாகக் கொலுவீற்றிருப்பான்.

கு :—சார்தல்-இயங்குதல். மானம்-விமானம்; முதற்குறை. சரித்தல்-உலவுதல். சந்திரன் தனிப்பதம்-சந்திர மண்டலத்தின் தனியரசு. இரவிதன் பெரும்பதம்-சூரிய மண்டலத்தின் பேரரசு. இரவி-சூரியன். சந்திரனுக்கு விமானமும் சூரியனுக்குத் தேரும் ஊர்தியாதலின் அவர்க்குரிய அரச பதவியைச் செலுத்துங்கால் இரணியனும் அவற்றையே ஊர்தியாகக் கொண்டனன் என்க. பேரின்-பேர்தலால்; இன்உருபு ஏதுப்பொருளில் வந்தது. பேர்தல்-இடம்பெயர்தல். ஆற்றல் மிக்க அசுரர் தலைவனாகிய இரணியன் இவ் அண்டத்தினுள்ளே கொலுவீற்றிருத்தற்கு ஏற்ற உயர்ந்த இடமாக அமைந்தது மேருமலையின் உச்சியே யென்பார், 'மேருமால் வரையுச்சியின் அரசு வீற்றிருக்கும்' என்றார். எண்திசைக் காவலராவார் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என இவர். இவர்கள் எண்மரும் முறையே கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு ஆகிய எட்டுத்திசையிலும் இருந்து இவ்வுலகினைக் காக்குந் தொழிலினராவர். சந்திர சூரியர்களின் ஆட்சியினையும் எண்திசைக் காவலர்களின் காவற்றொழிலையும் தானொருவனே மேல் நின்று நடத்தும் பேராற்றலுடையவனாக இரணியன் விளங்கினான் என்பது இச் செய்யுளின் கருத்தாகும். (5)

6321. நிலனு நீரும்வெங் கனலொடு
காலுமாய் நிமிர்ந்த
தலனு ணீடிய வவற்றினத்
தலைவரை மாற்றி

உலவுங் காற்ருெடு கடவுளர்
பிறருமா யுலகின்
வலியுஞ் செய்கையும் வருணன்றன்
கருமமு மாற்றும்.

நிலனும், நீரும், வெங் கனலொடு காலும் ஆய், நிமிர்ந்த
தலனுள், நீடிய அவற்றின் அத் தலைவரை மாற்றி,
உலவும் காற்ருெடு கடவுளர் பிறரும் ஆய், உலகின்
வலியும் செய்கையும் வருணன்தன் கருமமும் ஆற்றும்.

பொ :—மண்ணும் நீரும் வெம்மையுடைய நெருப்புடன் காற்றும் ஆகிப் பரந்த (ஐம்பெரும் பூதங்களாலாகிய) அண்டத்தில் நிலைபெற்றுள்ள அவற்றின் தலைவராயுள்ளாரை விலக்கி, இயங்கும் இயல்பினதாகிய காற்றுடன் ஏனைய (பூதங்களின் அதிதெய்வங்களாகிய) தேவர்களும் ஆகத் தானே அமைந்து, உலகத்தின் வலிமையையும் செய்கையையும் வருணனது தொழிலையும் (தான் ஒருவனே) செய்வான்.

கு :—கனல் - நெருப்பு. கால் - காற்று. நிமிர்தல் - பரவுதல். 'நிமிர்ந்ததலன்' என்ற குறிப்பினால் நில முதலிய நான்கு பூதங்களும் தன்கண்ணே அடங்கப் பரந்து இடங்கொடுக்கும் ஆகாயமாகிய பூதமும் உடன் கொள்ளப்பட்டது. அவற்றின் அத் தலைவர் என்றது, அப்பூதங்களின் அதிதெய்வங்களாய் நின்று அவற்றை இயக்குவோரை. தலன்-தலம், இடம். நீடுதல்-நிலைபெறுதல். உலவுதல்-இயங்குதல். மாற்றி, ஆய் எனவரும் வினையெச்சங்கள் ஆற்றும் என்னும் வினைகொண்டு முடிந்தன. மாற்றுதல்-விலக்குதல். 'மாற்றி' என்பதற்கு ஒன்றிற்கு உரியாரை மற்ருென்றிற் செல்லுமாறு இடம் பெயர்த்து எனப் பொருளுரைத்தலும் உண்டு. இப்பொருளில்,

'பாதல நிலயத்துள்ள புயங்கரைப் படியிற் சேர்த்தி
பூதல நேமியெல்லாம் புகுந்திடப் பிலத்தி னுய்க்கும்
ஆதவ முதல்வன் றன்னை யவிர்மதிப் பதத்திலுய்க்கும்
சீதள மதியை வெய்யோன் சென்னெறிப் படுத்துச் செல்லும்.
(கந்தபுராணம்-உற்பத்தி-திருவிளையாட்டு-26)

எனவரும் பாடலை இங்கு ஒப்புநோக்குதல் பொருந்தும். உலகின் வலி என்றது, ஐம்பெரும்பூதங்களும் சிதைந்து கெடாத நிலையிற் கலந்த செறிவினை. செய்கை யென்றது அதன் இயக்கத்தை. வருணன் தன் கருமம் என்றது, உலகு குளிர மழைபொழிதலை.

ஆற்றுதல்-செய்தல். ஐம்பெரும் பூதங்களின் அதிதெய்வங்களையும் மாற்றித் தான் ஒருவனே இவ்வுலகினை நடத்தும் பேராற்றல் வாய்ந்தவனாக இரணியன் விளங்கினான் என்பதாம். (6)

6322. தாம ரைக்கண்ணன் றழற்கண்ணன்
பேரவை தவிர
நாமந் தன்னதே யுலகங்கள்
யாவையு நவிலத்
தூம வெங்கன லந்தணர்
முதலினர் சொரிந்த
ஓம வேள்வியு ளிமையவர்
பேறெலா முண்ணும்.

'தாமரைக் கண்ணன் தழல் கண்ணன் பேர் அவை தவிர,
நாமம் தன்னதே உலகங்கள் யாவையும் நவில,
தூம வெங் கனல் அந்தணர் முதலினர் சொரிந்த
ஓம வேள்வியுள் இமையவர் பேறு எலாம் உண்ணும்.

பொ :—செந்தாமரை மலர்போலும் கண்களையுடைய திருமாலும் (நுதலிடத்தே) தீயினைக் கண்ணாகவுடைய சிவபெருமானும் ஆகிய (இருபெருந்) தெய்வங்களுக்கு உரிய (எட்டெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆகிய) அத்திருப்பெயர்கள், (யாவராலும் ஓதப்பெறுதலை) ஒழியவும், எல்லாவுலகங்களும் (இரணியாயநம எனத்) தன் பெயரையே சொல்லித் துதிக்கவும், புகைபரந்த வெவ்விய தீயினிடத்தே முனிவர் முதலாயினோரால் சொரியப்பட்ட (நெய் முதலிய) ஓமப்பொருள்களையுடைய யாகத்தின் கண்ணே அளிக்கப்பெறும் தேவர்க்குரிய பேறாகிய அவியுணவினையெல்லாம் (தனக்கே அளிக்குமாறு செய்து) தானே நுகர்வான்.

கு :—தாமரைக் கண்ணன்-செந்தாமரைபோலும் கண்களையுடைய திருமால். தழற்கண்ணன்-தீயினைக் கண்ணாகவுடைய சிவபெருமான். அவ் இருபெருந் தெய்வங்களுக்குமுரிய திருப்பெயர்களாவன முறையே எட்டெழுத்தும் ஐந்தெழுத்தும் ஆகிய மந்திரங்கள். இம் மந்திரங்கள் இரண்டுமே தொன்றுதொட்டு வேதங்களாற் சிறப்பித் துரைக்கப்பட்டு மக்கள் தேவர் முதலிய யாவராலும் ஓதப்பெறும் பெருமை வாய்ந்தன என்பது,

"அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும்
வருமறை யெழுத்தின் மந்திரம் இரண்டும்
ஒருமுறையாக வுளங்கொண் டோதி"
(சிலப்-காடுகாண்-128-130)

என மாங்காட்டு மறையோன் கூற்றில் வைத்து இளங்கோவடிகள் கூறுதலால் இனிது விளங்கும். தவிர்தல்-நீங்குதல்; ஓதப்பெருது ஒழிதல். உலகங்கள் யாவையும் தன்னது நாமமே நவில என மாறிக் கூட்டுக. உலகங்கள் என்றது, ஓதவும் உணரவும் வல்லன வாய் அவற்றில் வாழும் உயிர்களை. நவிலுதல்-சொல்லித் துதித்தல். தவிர, நவில என்னும் செயவெனெச்சங்கள் உண்ணும் என்னும் பிற கருத்தாவின் வினையைக்கொண்டு முடிந்தன. எல்லாவுலகங் களும் கடவுளுக்குரிய திருப்பெயர்களைச் சொல்லி வழிபடுதலை விட்டுத் தன்னையே தனிமுதல்வனாகவும் தன் பெயரையே மந்திர மாகவும் கொண்டு எண்ணித் துதித்து வழிபடுதல் வேண்டும் எனவும், தேவர்களைக் குறித்துச் செய்யப்படும் வேள்விகள் யாவும் இனி இரணியனாகிய தன்னைக் குறித்தே செய்யப்பெறுதல் வேண்டும் எனவும் இரணியன் தன் ஆட்சியிலுள்ள அனைவர்க்கும் கட்டளை யிட்டுத் தேவர் முதலிய யாவரும் தனது ஆணைக்கு அஞ்சியடங்கி யொழுகுமாறு செய்து தேவர்க்குரிய அவியுணவுகளையும் தானே நுகர்ந்திருந்தான் என்றவாறு. இச் செய்யுட்பொருளை,

"அரணியன்ற னகல்வேள்வி யாகுதிசெய் புவியனைத்தும்
இரணியன தெனும்வார்த்தை யிந்நெடுநாட் கேட்டிலையோ

எட்டெழுத்தும் அஞ்செழுத்தும் ஈரேழு புவியனைத்தும்
கட்டுரைக்கை தவிர்த்தபெருங் கட்டாண்மை கேட்டிலையோ"
(இரணியவதைப் பரணி)

என வரும் தாழிசைகளில் இரணியவதைப் பரணியாசிரியர் எடுத் தாண்டுள்ளமை, இங்கு ஒப்புநோக்கி யுணர்தற்குரியதாகும். (7)

6323. காவல் காட்டுத றுடைத்தலென்
றித்தொழில் கடவ
மூவ ரும்மவை முடிக்கிலர்
பிடிக்கிலர் முறைமை
ஏவர் மற்றவர் யோகிய
ருறுபத மிழந்தார்
தேவ ரும்மவன் றளலா
லருச்சனை செய்யார்.

'காவல், காட்டுதல், துடைத்தல், என்று இத்தொழில் கடவ
மூவரும் அவை முடிக்கிலர், பிடிக்கிலர் முறைமை;
ஏவர் மற்றவர்? யோகியர் உறுபதம் இழந்தார்;
தேவரும் அவன் தாள் அலால் அருச்சனை செய்யார்.

பொ :—(உலகமனைத்தையும்) பாதுகாத்தலும் படைத்தலும் அழித்தலும் ஆகிய இத்தொழில்களைச் செய்தற்குரிய (அரி, அயன், அரன் என்னும்) மும்மூர்த்திகளும் அத்தொழில்களைச் செய்து முடிக்க மாட்டாதவர்களாய்த் தமது முறைமையினைக் கடைப்பிடிக்காமல் (நெகிழ) விட்டனர். (இம் மூவர் செயலே இவ்வாறாயின் தாம் விரும்பிய செயல்களைச் செய்து முடிக்கவல்ல ஆற்றலுடையார்) வேறு எவர்தாம் உளர்? (ஆற்றல் மிக்க) யோகியரும் (தம் தவ வன்மையால்) பெறுதற்குரிய பதவியினை இழந்தனர். (யாவராலும் தொழப்படும் பெருமையினையுடைய இந்திரன் முதலிய) தேவர்களும் (இரணியன் என்னும்) அவனுடைய பாதங்களையன்றி வேறொன்றையும் பூசிக்க மாட்டாதவராயினர்.

கு :—காவல் - காத்தற்றொழில். காட்டுதல் - படைத்தற்றொழில். துடைத்தல் - அழித்தற்றொழில். மும்மூர்த்திகளின் முத்தொழில்களையும் தானொருவனே கைக்கொண்டு எவ்வுலகத்தாரும் தன்னையே தெய்வமெனக் கொண்டு போற்ற இரணியன் விளங்கினன் என்பதாம். தாம் விரும்பியனவே செய்யும் சுதந்தரமுடைய தேவர்களும், உலகங்களைப் படைத்தளித் தழிக்கும் மும்மூர்த்திகளை வணங்கி வாழும் வழிபாட்டுரிமையினை எய்தப்பெறாது, இரணியனையே இறைவன் எனக்கொண்டு போற்றும் கடமையினையுடையராய் அவனுக்கு அஞ்சி வாழ்ந்தனர் என்பார், 'தேவரும் அவன் தாள் அலால் அருச்சனை செய்யார்' என்றார். தேவரும் என்புழி உம்மை உயர்வு சிறப்பு. (8)

இச் செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்,

ஓம் அரியாய நமவென ஒழிவுறுதோதும்
நாம நான்மறை விடுத்தவன் றனக்குள்ள நாமம்
காம மேமுதல் குறும்பெறிகடவுளர் முனிவர்
ஆம தோதுகில் அவன்றனக் கொப்பவர்யாரோ.

என்ற செய்யுள் மிகைப் பாடலாகக் குறிக்கப்பெற்றுளது.

6324. மரபின் மாபெரும் புறக்கடன்
மஞ்சன மருவி
அரவி ஞட்டிடை மகளிரோ
டின்னமு தருந்திப்
பரவு மிந்திரன் பதியிடைப்
பகற்பொழு தகற்றி
இரவி ேேலக்க நான்முக
னுலகத்து ளிருக்கும்.

**“மரபின், மா பெரும்புறக்கடல் மஞ்சனம் மருவி,
அரவின் நாட்டிடை மகளிரோடு இன் அமுது அருந்தி,
பரவும் இந்திரன் பதியிடைப் பகற்பொழுது அகற்றி
இரவின் ஓலக்கம் நான்முகன் உலகத்துள் இருக்கும்.**

பொ :—பெருமை வாய்ந்த பெரும் புறக்கடலிலே விதிப்படி திருமஞ்சனம் ஆடி, நாகருலகத்தில் நாக கன்னியருடன் இருந்து இனிய அமுதத்தை உண்டு, (யாவராலும்) போற்றப்பெறும் இந்திரனுலகத்தே பகற்பொழுதினை (இனிது) கழித்து, இரவுப்பொழுதிலே நான்முகனாகிய பிரமனது சத்தியலோகத்திற் கொலுவீற்றிருப்பான்.

கு :—மாபெரும் புறக்கடல் மரபின் மஞ்சனம் மருவி என இயையும். மரபின்-(மந்திர) விதிப்படி. மா-பெருமை. பெரும்புறக்கடல் என்பது, நாம் வாழும் இவ் அண்டத்தின்புறத்தே அமைந்த தூய நன்னீர்ப் பெருங்கடல். மேல், ‘அண்டத்தைப் பொதுத்து அப்புறத்து அப்புனல் ஆடும்’ என்றமை காண்க. அரவின்நாடு-நாகருலகம். அந்நாட்டிடை மகளிர் என்றது அங்கு வாழும் நாக கன்னியரை. இந்திரன் பதி-தேவலோகம். நான்முகன் உலகு-பிரமனுக்குரிய சத்தியலோகம். இரணியன் என்பான் நாள்தோறும் காலை, நண்பகல், இரவு ஆகிய மூன்று பொழுதுகளிலும் மூவுலகத்தும் பொழுது போக்கிய திறம் கூறியவாறு. (9)

இச் செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்,

திருமகட்கிறை யுலகினுஞ் சேண்படு புரமூன்
றெரிபடுத்திய ஈசன்றன் பொருப்பினு மேகிச்
சுரரெனப்படும் தூயவர் யாவரும் தொழுதாங்
கிரணியாயநம வென்று கொண்டேத்தல்கேட் டிருக்கும்.

என்ற செய்யுள் மிகைப்பாடலாகக் குறிக்கப்பெற்றுளது.

6325. பண்டு வானவர் தானவர்
யாவரும் பற்றித்
தெண்டி ரைக்கடல் கடைதர
வலியது தேடிக்
கொண்ட மத்தினைக் கொற்றத்தன்
குவவுத்தோட் கமைந்த
தண்டெ னக்கொள லுற்றது
நொய்தெனத் தவிர்ந்தான்.

'பண்டு வானவர் தானவர்
யாவரும் பற்றி,
தெண் திரைக் கடல் கடைதர,
வலியது தேடிக்
கொண்ட மத்தினைக் கொற்றத் தன்
குவவுத் தோட்கு அமைந்த
தண்டு எனக் கொளலுற்று, 'அது
நொய்து' எனத் தவிர்ந்தான்.

பொ :—முன்னாளிலே தேவர்களும் அசுரர்களும் ஆகிய எல்லோரும் தெளிந்த அலைகளையுடைய (பாற்) கடலை வலித்துக் கடைதற் பொருட்டு வலியுள்ளதாகத் தேடிக் கொணர்ந்த மத்தாகிய மந்தரமலையினை வெற்றித்திறன் வாய்ந்த தன்னுடைய தோளின் வன்மைக்கு ஒப்பப் பொருந்திய தண்டாயுதமாக எடுக்கத்தொடங்கி (அவ்வாறு எடுத்த அளவில் அது மிகவும் இலேசாகத் தோன்றியதனால்) அதனை அற்பமானது என்று நீக்கிவிட்டான்.

கு :—பற்றிக் கடைதர என இயைத்துரைக்க. பற்றிக் கடைதலாவது கயிற்றினை வலித்து இழுத்துக் கடைதல். 'கயிற்றினால் முறுக வாங்கிக்கடைய' (5-90-10) என்பது தேவாரம். பற்றிக் கடைதர வலியது தேடிக் கொண்ட மத்து என்க. மத்து என்றது மந்தர மலையினை. வன்மை வாய்ந்த மந்தரமலையும் இரணியனது தோள் வலியை யெண்ணுங்கால் அவன் கைக்கு வெறுந் தண்டெனக் கொள்ளுதற்கும் ஏற்ற தகுதியுடையதன்று என்றவாறு. (10)

6326. மண்ட லந்தரு கதிரவன்
வந்துபோய் மறையும்
எண்ட லந்தொடற் கரியன
தடவரை யிரண்டும்

கண்ட லம்பசும் பொன்னவன்
முன்னவன் காதிற்
குண்ட லங்கண்மற் றென்னினிப்
பெருவிறல் கூறல்.

'மண்டலம் தரு கதிரவன் வந்து போய் மறையும்
எண் தலம் தொடற்கு அரியன தடவரை இரண்டும்,
கண் தலம் பசும் பொன்னவன் முன்னவன் காதில்
குண்டலங்கள்; மற்று என், இனிப் பெருவிறல் கூறல்?

பொ :—மண்ணுலகத்து உயிர்களை (ஒளியாற்) புறந்தருகின்ற சூரியன் தோன்றி மறைதற்கு இடமாகிய, மனத்தாலும் எட்டித் தொடுதற்கு அரியனவாய் உயர்ந்த (உதயம், அத்தம் என்னும்) இரண்டு பெரிய மலைகளும் பொன்னிறக் கண்ணனுக்குத் தமையனாகிய இரணியனுக்குக் காதிலணியத்தக்க குண்டலங்களாம் (என்றால்) இனி அவனது பெரு வெற்றியைக் குறித்துக் கூற வேண்டியது வேறு யாதுளது?

கு :—மண் தலம்-பூமி. தருதல்-புறந்தருதல்; பேணிக்காத்தல். எண் தலம்-எண்ணுதற்குக் கருவியாகிய மனம். கண் தலம் பசும் பொன்னவன்-கண்ணினது இடம் பசிய பொன்னிறமாகப் பெற்றவன்; என்றது, பொற்கணன் ஆகிய இரணியாட்சனை. முன்னவன் என்றது, அவனுக்குத் தமையனாகிய இரணியனை. ஞாயிறு தோன்றி மறைதற்குரிய இடங்களாகிய உதயமலை, அத்தமலை என்னும் இப் பெருமலைகள் இரண்டும் இரணியனுக்குக் காதிலணியத்தக்க குண்டலங்களாம் என்றால், பேருருவும் பேராற்றலும் வாய்ந்த அவனது வெற்றித் திறத்தை விளக்குதற்கு வேறு சான்றும் கூற வேண்டுமோ? வேண்டா என்றவாறு. (11)

6327. மருக்கொ டாமரை நான்முகன்
முதலிய வானோர்
குருக்க ளோடுகற் றோதுவ
தவன்பெருங் கொற்றம்
சுருக்கி னன்மறை தொன்றுதொட்
டுரைதொறுந் தோன்றா
திருக்குந் தெய்வமு மிரணிய
னேநம வென்னும்.

'மருக்கொள் தாமரை நான்முகன்
முதலிய வானோர்
குருக்களோடு கற்று, ஓதுவது,
அவன் பெருங் கொற்றம்;
சுருக்கு இல் நான்மறை தொன்றுதொட்டு
உரைதொறும் தோன்றாது
இருக்கும் தெய்வமும் 'இரணியனே!
நம!' என்னும்.

பொ:—நறுமணத்தினைத் தன்னகத்தே கொண்ட தாமரை மலரில் தோன்றிய பிரமதேவன் முதலிய தேவர்கள் (தங்கள்) ஆசிரியரோடும் படித்து அறிந்து சொல்லித் துதிப்பது, அவ்விரணியனது பெருமை வாய்ந்த வெற்றித்திறமேயாகும். சுருங்குதல் இல்லாத (விரிந்த) நான்கு வேதங்களிலும் அநாதியே வெளிப்படாது மறைந்திருக்கின்ற (வேதபுருடனாகிய) தெய்வமும், 'இரணியனே நம' என (அவன் பெயரை முதற்கண் சொல்லி)த் துதிக்கும்.

கு:—மரு-நறுமணம். தாமரை என்றது, திருமாலின் உந்திக் கமலத்தினை. வானிடத்தே வாழும் தேவர்களேயன்றி அவர்களுக்கு அருமறைகளைச் செவியறிவுறுத்தும் கடமையினை மேற்கொண்ட அவருடைய ஆசிரியன் முதலியோரும் அசுரர் தலைவனாகிய அவ் இரணியனது கீர்த்தித் திறத்தையே விரித்துரைத்துப் போற்றுவாராயினர் என்பார், 'வானோர் குருக்களோடு கற்று ஓதுவது அவன் பெருங் கொற்றம்' என்றார். குருக்கள் என்றது தேவ குருவாகிய வியாழன் முதலியோரை. நால்வேதம் என்பன சொற்றிறத்தாலும் பொருள் வகையாலும் சுருங்காதனவாய் நவிலுந்தோறும் விரிந்து செல்லும் பெரு நூல்கள் என்பார், 'சுருக்கு இல் நான்மறை' என்றார். 'சுருங்காமறை நான்கினையும்' (7-97-1) என்பது தேவாரம். தொன்றுதொட்டு உரைதொறும் தோன்றாது இருக்கும் தெய்வம் என்றது, அநாதியே வேதங்களின் சொற்கள் தோறும் பிரிவின்றி மறைந்துள்ள வேத புருடனாகிய தெய்வத்தை. காலங்கடந்த பழம்பாடலாகிய வேதமும், கொடியோனாகிய இரணியனது ஆட்சிக்கு உட்பட்டு அடங்கி, அவனது பெயரையே முதற்கண் சொல்லித் துதிக்கும் எளிமை நிலையை எய்தியது என்பதாம். (12)

இச் செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்

'ஆலும் வெவ்வலி யவுணர்கோ னருந்தவப் பெருமை
ஏலு மோவெமக் கியம்பிட இறைவமற் றவன்பேர்
மூல மாமறை யிதுவென மூவுல குள்ளோர்
தாலமே மொழிந் திட்டது சான்றெனத் தகுமால்.

என்ற செய்யுள் மிகைப் பாடலாகக் குறிக்கப்பெற்றுளது.

6328. மயரு மன்னெடுஞ் சேவடி
மண்ணிடை வைப்பின்
அயரும் வாளெயிற் றாயிரம்
பணந்தலை யநந்தன்
உயரு மேலண்ட முகடுதன்
முடியுற வுயரும்
பெயரு மேனெடும் பூதங்க
ளைந்தொடும் பெயரும்.

'மயரும், மன் நெடுஞ் சேவடி மண்ணிடை வைப்பின்;
அயரும், வாள் எயிற்று ஆயிரம் பணந்தலை அநந்தன்;
உயருமேல், அண்ட முகடு தன்முடி உற உயரும்;
பெயருமேல், நெடும் பூதங்கள் ஐந்தொடும் பெயரும்.

பொ :—மன்னனாகிய இரணியன் (தன்) நெடிய சிவந்த கால்களை மண்ணிடத்தே (சிறிது அழுந்துமாறு) வைப்பானாயின் (பூமி பொறையாற்றாது) சோரும்; கூரிய பற்களையும் படத்துடன் பொருந்திய ஆயிரந் தலைகளையும் உடைய ஆதிசேடன் (பூமியைத் தாங்கலாற்றாது) தளர்வடைவான். (இனி, அவ் இரணியன்) எழுந்து நிற்பானாயின், அண்டகோளத்தின் மேல்முகடு தன் தலையிற் படும்படி உயர்வான்; (நின்ற இடத்தினைவிட்டுச் சிறிது) பெயர்ந்து செல்வானாயின், (தனது இயக்கத்தின் வேகத்தால்) ஐம்பெரும் பூதங்களும் ஈர்க்கப்பட்டுத் தன்னுடன் (ஒட்டித்) தொடரும்படி செல்வான்.

கு :—மன், நெடுஞ்சேவடி மண்ணிடை வைப்பின் (மண்) மயரும்; வாள் எயிற்று ஆயிரம் பணந்தலை அநந்தன் அயரும் என இயையும். மன்-அரசன்; என்றது இங்கு இரணியனை. மயர்தல்-மனம் சோர்வு அடைதல். அயர்தல்-தளர்தல். பணம்-பாம்பின்படம். அநந்தன்-ஆதிசேடன்.

'அடிபேரிற் பாதாளம் பேரும், அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும்—கடகம்
மறிந்தாடு கைபேரின் வான்திசைகள் பேரும்'
(அற்புதத்திருவந்தாதி-77)

என வரும் பகுதி இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும். (13)

6329. பெண்ணிற் பேரெழி லாணினி
னலியினிற் பிறிதின்
உண்ணிற் கும்முயி ருள்ளதி
னில்லதி னுலவான்
கண்ணிற் காண்பன கருதுவ
யாவினுங் கழியான்
மண்ணிற் சாகிலன் வானினுஞ்
சாகிலன் வரத்தால்.

**'பெண்ணின், பேர் எழில் ஆணினின், அலியினின், பிறிதின்,
உள் நிற்கும் உயிர் உள்ளதின், இல்லதின், உலவான்;
கண்ணின் காண்பன, கருதுவ, யாவினும் கழியான்;
மண்ணின் சாகிலன், வானினும் சாகிலன்;—வரத்தால்.**

பொ :—(இரணியனாகிய அவன் தான் பெற்றுள்ள) வரத்தின் ஆற்றலால், பேரழகு வாய்ந்த பெண்ணினாலும் (போரிற் கிளர்ந்தெழும் உள்ளக்கிளர்ச்சியினையுடைய) மாருத எழுச்சி மிக்க ஆணினாலும், (இவ்விரண்டும் அல்லாத) அலியினாலும், (இவ்வகைப் பால் வேறுபாடில்லாத) பிறிதொன்றாலும், (இவ்வாறு) உடம்பினுள்ளே நிலைபெற்ற உயிருடையவற்றாலும் உயிரில்லாத (அஃறிணைப்) பொருளாலும் இறந்தொழியான்; கண்களாற் காணப்படுவனவாகிய (படைக்கலங்கள் முதலிய) பருப் பொருள்களாலும், (மனத்தாற்) கருதியுணரப்படும் (மந்திரம் முதலிய) நுண்பொருள்கள் எல்லாவற்றாலும் இறக்கமாட்டான்; மண்ணாகிய கீழ்நிலத்தும் சாகமாட்டான்; விண்ணாகிய மேல்நிலத்தும் சாகமாட்டான்.

கு :—ஈற்றடியின் இறுதியிலுள்ள 'வரத்தால்' என்பதனை முன்னர்க் கூட்டிப் பொருளுரைக்க. வரம் என்றது, இரணியன் பல்லாண்டுகள் கடுந் தவம் புரிந்து நான்முகக் கடவுள்பாற் பெற்ற பெருவரத்தினை. 'பேரெழில்' என்பது இடைநிலை விளக்காய் நின்று, பேரெழிற் பெண், பேரெழில் ஆண் என ஈரிடத்தும் சென்றியைந்தது. எழில்-அழகு; மாருது வளரும் எழுச்சி. "எழிலாவது,

வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறியதன்றி இன்னும் வளரும் என்பது போன்று காட்டுதல்" என்பர் நச்சினார்க்கினியர். அலி என்றது, பெண் ஆண் என்னும் இருபால்களுள் ஒன்றினும் படாது இரண்டுங்கெட்ட நிலையில் அமைந்த உடம்புடையதனை. பிறிது என்றது, ஆண், பெண், அலி என்னும் இத்தகைய பாகு பாட்டிற்கேற்ற அங்கங்களைப் பெருத ஏனைய அஃறிணை யுயிர்வகை யினை. உயிரில்லது-சடப்பொருள். உலத்தல்-இறத்தல். இன்னுரு புகள் ஏதுப்பொருளன. இச் செய்யுளின் முன்னிரண்டடிகளிலும் இறப்பினைச் செய்யும் கருத்தாவகையனைத்தும் தொகுத்துச் சுட்டப் பட்டமையால், 'கண்ணிற் காண்பன கருதுவ' என மூன்ருமடியிற் சுட்டப்பட்டவை மாற்ருருயிரைப் போக்குதற்குரிய படைக்கலங்களும் மந்திரங்களும் ஆகிய கருவி வகைகள் என்பது உய்த்துணரப்படும். கழிதல்-இறத்தல். மண்ணின் வானின் என்புழி இன்சாரியை இடப் பொருளில் வந்தது. (14)

6330. தேவ ராயின ரேவருந் திரிதரு மியக்கர்
யாவ ராயினு மெண்ணவுந் துதிக்கவு மியன்ற
கோவை மாலயன் மானிடன் யாவருங் கொல்ல
ஆவி தீர்கில ஞற்றலுந் தீர்கில னனையான்.

'தேவர் ஆயினர் ஏவரும், திரிதரும் இயக்கர்
யாவர் ஆயினும், எண்ணவும் துதிக்கவும் இயன்ற
கோவை மால், அயன், மான் இடன், யாவரும் கொல்ல,
ஆவி தீர்கிலன்; ஆற்றலும் தீர்கிலன்—அனையான்.

பொ:—அத்தன்மையனுகிய இரணியன், தேவராயுள்ளார் யாவரும் (வானிடத்தே) திரியுமியல்பினராகிய இயக்கர்களாகிய யாவரும் தியானித்தற்கும் துதித்துப் போற்றுதற்கும் அமைந்த ஒரு தொடர்ச்சியினராகச் சொல்லப்படும் திருமால் பிரமன் சிவன் என்னும் மும்மூர்த்திகளாகிய யாவரும் (தன்னைக்) கொல்ல உயிர் நீங்கான்; தன் வலிமையினும் (சிறிதும்) நீங்கான்.

கு:—இது முதல் நான்கு செய்யுட்கள் இரணியன் தான் பெற்ற வரத்தின் ஆற்றலால் யாவராலும் எதனுலும் அழியாநிலையினன் ஆயின செய்தியை விரித்துரைப்பனவாகும். அனையான், யாவரும் கொல்ல, ஆவிதீர்கிலன் ஆற்றலும் தீர்கிலன் என முடிக்க. திருமால், பிரமன், சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் தொடர்ச்சியில் ஒரு முழுமுதற் பொருளே என்பது விளக்குவார், 'கோவை மால் அயன் மானிடன் மூவரும்' எனக் குறித்தார். கோவை-தொடர்ச்சி.

" ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானுஞ்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனர்
பேதித் துலகம் பிணங்குகின் றூர்களே "
(திருமந்திரம். 104)

என்ரூர் திருமூலதேவரும். " அவன் உருவம் மூன்று " (122) எனப் பின்வருவதும் இத்தொடர்ச்சி பற்றியதே. மானிடன் - மானை இடக்கையில் தரித்தவன் ; என்றது சிவபெருமானை. தேவர் இயக்கர் முதலியோரே யன்றி யாவராலும் தியானித்துப் போற்றப் பெறும் மும்மூர்த்திகளே இரணியனைக் கொல்வாராயினும் அவனது உயிரை நீக்க முடியாது ; அவனது ஆற்றலையும் குறைக்க முடியாது என்பதாம். (15)

6331. நீரிற் சாகில னெருப்பினுஞ்
சாகில னிமிர்ந்த
மாரு தத்தினு மண்ணின்மற்
றெவற்றினு மாளான்
ஓருந் தேவரு முனிவரும்
பிறர்களு முரைப்பச்
சாருஞ் சாபமு மன்னவன்
றனைச்சென்று சாரா.

'நீரின் சாகிலன்; நெருப்பினும் சாகிலன்; நிமிர்ந்த
மாருதத்தினும், மண்ணின் மற்று எவற்றினும், மாளான்;
ஓரும் தேவரும் முனிவரும் பிறர்களும் உரைப்பச்
சாரும் சாபமும், அன்னவன் தனைச் சென்று சாரா.

பொ :—(அவன்) தண்ணீரிற் சாகமாட்டான் ; தீயிலும் சாக மாட்டான் ; காற்றிலும் மண்ணிடத்தே மற்றை எந்தப் பொருள் களிலும் மாண்டொழியான். (முக்கால நிகழ்ச்சிகளையும்) ஆராய்ந் துணரவல்ல தேவர்களும் முனிவர்களும் ஏனையோரும் (வெகுண்டு) கூறச் சென்று பற்றவல்ல கடிய சாபங்களும் அவ் இரணியனைச் சென்று சாரமாட்டா.

கு :—ஐம்பெரும் பூதங்களில் நிலத்திலும் வானிலும் இரணியன் இறவாவரம் பெற்றவன் என்பது முன்னர்க் கூறப்பட்டது. நீர், நெருப்பு, காற்று என்னும் ஏனை மூன்று பூதங்களிலும் மண் ணிடத்தே யமைந்த மலை, காடு முதலிய பிறவற்றிலும் இறவாதவன்

என்பது இச் செய்யுளின் முதலிரண்டடிகளிலும் விரித்துரைக்கப் பட்டது. தேவர் முனிவர் முதலியோர் சினந்துரைக்கும் சாபமும் இரணியனைச் சென்றணுகா என அவனது அழியா நிலைமை இதன் பின்னிரண்டடிகளிற் குறிக்கப்பட்டது. (16)

6332. உள்ளிற் சாகிலன் புறத்தினு
முலக்கில னுலவாக்
கொள்ளைத் தெய்வவான் படைக்கலம்
யாவையுங் கொல்லா
நள்ளிற் சாகிலன் பகலிடைச்
சாகில னமனார்
கொள்ளச் சாகில னாரினி
யவனுயிர் கொள்வார்.

'உள்ளில் சாகிலன்; புறத்தினும்
உலக்கிலன்; உலவாக்
கொள்ளைத் தெய்வ வான் படைக்கலம்
யாவையும் கொல்லா;
நள்ளில் சாகிலன்; பகலிடைச்
சாகிலன்; நமனார்
கொள்ளச் சாகிலன்; ஆர் இனி
அவன் உயிர் கொள்வார்?

பொ :—(அவன், தான் வாழும் மாளிகை முதலியவற்றின்) உள்ளிடத்திலேயும் சாகமாட்டான்; புறமாகிய வெளியிடத்திலேயும் சாகமாட்டான்; மிகுதியான தெய்வத்தன்மை வாய்ந்த சிறந்த ஆயுதங்கள் யாவையும் (அவனைக்) கொல்லமாட்டா. (அவன்) நள்ளிரவிலும் சாகமாட்டான்; பகற் பொழுதிலும் சாகமாட்டான்; கூற்றுவன் வந்து தன்னுயிரைக் கவர்ந்து கொள்ளும் நிலையிலும் சாகமாட்டான் (என்றால்) இனி அவனது உயிரைக் கவர்ந்து செல்லவல்லார் யாருளர்?

கு :—உலக்கிலன்-இறக்கமாட்டான். உலத்தல்-அழிதல். நள்-இருள் செறிந்த இரவுப் பொழுது. நமனார்-கூற்றுவன்; யமன். இனி அவனுயிர் கொள்வார் ஆர் என இயைத்துரைக்க. (17)

6333. பூத மைந்தொடும் பொருந்திய
வுணர்வினிற் புணரா
வேத நான்கினும் விளம்பிய
பொருள்களால் விளியான்
தாதை தன்னைத்தான் றனிக்கொலை
சூழினுஞ் சாகான்
ஈத வன்னிலை யெவ்வுல
கங்கட்கு மிறைவன்.

'பூதம் ஐந்தொடும் பொருந்திய உணர்வினில் புணரா
வேதம் நான்கினும் விளம்பிய பொருள்களால் விளியான்;
தாதை தன்னைத்தான் தனிக்கொலை சூழினும் சாகான்;
ஈது அவன் நிலை; எவ்வுலகங்கட்கும் இறைவன்.

பொ :—பூதங்கள் ஐந்தோடும் பொருந்திய ஐம்புலவுணர்வினாற் புணர்க்கப்படாத நான்கு வேதங்களிலும் சொல்லப்பட்ட (மந்திரப்) பொருள்களால் இறந்தொழிவான் அல்லன்; (தன்னைப் பெற்று ஆளாக்கும் கடமையுடைய) தந்தையே தனித்துக் கொலை செய்யச் சூழ்ந்தாலும் சாகமாட்டான். (இவ்வாறு யாவராலும் எதனாலும் அழிக்கவொண்ணாத் தன்மையாகிய) இஃது அவ்விரணியனது அழியா நிலையாகும். (இத்தன்மையால் இவன்) எவ்வுலகங்கட்கும் இறைவனாயினான்.

கு :—பூதம் ஐந்தொடும் பொருந்திய உணர்வு என்றது, ஐம்பொறி வாயிலாகப் புறத்தே செல்லும் ஐம்புலவுணர்வினை. நால் வேதங்களிற் கூறிய நுண்பொருள்கள் யாவும் இப்புலனுணர்வுக்கு அகப்படாதனவாய், இறைவனருளிய மெய்யுணர்வினாலேயேயுணரத் தக்க அருமையுடையன என்பார், 'பூதம் ஐந்தொடும் பொருந்திய உணர்வினிற் புணரா வேதம் நான்கினும் விளம்பிய பொருள்கள்' என்றார். வேதம் நான்கினும் விளம்பிய பொருள்களாவன, ஒன்னாரை அழிக்கவும் உவந்தாரை ஆக்கவும் வல்ல ஆற்றல் மிக்க மந்திரங்கள். விளிதல்-இறத்தல். தன்னைப் பெற்று வளர்த்துப் பாதுகாக்கும் கடமையுடைய தந்தையே அன்பிற்கினிய தன் மகனைக் கொலை சூழ் வானாயின் அச்சூழ்ச்சியினை முன்னறிந்து விலக்கவல்லார் உலகத்து ஒருவருமிலர்; அந்நிலையில் தன் தந்தையே தன்னைக் கொலை சூழினும் இரணியனாகிய அவன் இறந்தொழிவானல்லன் என்பார், 'தாதை தன்னைத்தான் தனிக்கொலை சூழினும் சாகான்' என்றார்.(18)

இச்செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்

6333 (a) குனிப்பி லாதபல் லாயிர கோடி யண்டத்தின்
நுனிக்கும் வானவர் முதலிய உயிர்த்தொகை நோக்கில்
அனைத்து மன்னவ னேவலைத் தலைக்கொண்டங் கவன்பேர்
நினைத்து வாழ்த்திட மூவர்போல் ஒருதனி நின்றான்.

என்ற செய்யுள் மிகைப்பாடலாகக் குறிக்கப் பெற்றுளது.

இரணியன் மகன் பிரகலாதன் தன்மை

6334. ஆய வன்றனக் கருமக
னறிஞரி னறிஞன்
தூய ரென்பவர் யாரினு
மறையினுந் தூயன்
நாய கன்றனி ஞானிநல்
லறத்துக்கு நாதன்
தாயின் மன்னுயிர்க் கன்பின
னுளனொரு தக்கோன்.

'ஆயவன் தனக்கு அருமகன்,
அறிஞரின் அறிஞன்,
தூயர் என்பவர் யாரினும்
மறையினும் தூயன்,
நாயகன் தனி ஞானி,
நல் அறத்துக்கு நாதன்,
தாயின் மன்னுயிர்க்கு அன்பினன்,
உளன் ஒரு தக்கோன்.

பொ :—அவ் இரணியனுக்குப் பெறுதற்கு அரிய புதல்வன், அறிவுடையோர்க்கெல்லாம் மேம்பட்டு விளங்கும் பேரறிவுடையான்; தூயவர் எனச் சிறப்பித்துப் போற்றப் பெறுவார் எல்லாருள்ளும் வேதங்களினும் மிக்க தூய்மையுடையான். (எவ்வுயிர்க்கும்) தலைவனாகிய இறைவனை உணர்ந்து போற்றும் ஒப்பற்ற தத்துவஞானி; (இறைவனது அருள் வழி நின்று செய்தற்குரிய) நல்லறங்களுக்குத் தலைவன்; நிலைபெற்ற எல்லா உயிர்களிடத்தும் தாயைக் காட்டிலும் பேரன்புடையான் ஆகிய ஒப்பற்ற தகுதியுடையான் உளன்.

கு :—ஆயவன் தனக்கு அருமகன் ஒரு தக்கோன் உளன் என முடியும். ஆயவன்-மேற்குறித்த அவ்வியல்பினனாகிய இரணியன்.

அருமகன்-அவனுக்குப் பெறலரும் புதல்வனாகத் தோன்றிய பிரகலாதன். 'யாவதும் கற்றோர் அறியா அறிவினன்' (திருமுருகு.) என்பார், அறிஞரின் அறிஞன் என்றார். காமவெகுளி மயக்கங்களாகிய மாசினை நீக்கி வாய்மையால் தூயவராகிய எல்லாருள்ளும் தூய நற்செயல்களையே விரித்துணர்த்தும் வேதங்களினும் மேம்பட்ட தூய்மையுடையான் என்பார், 'தூயரென்பவர் யாரினும் மறையினுந் தூயன்' என்றார். ஆருயிர் நாயகனாகிய இறைவனால் அருளப்பட்ட மெய்யுணர்வு கைவரப் பெற்றவன் என்பார், நாயகன் தனி ஞானி என்றார். இறைவனது திருவருளை யெதிரேற்று அவ்வருளின் துணைகொண்டு நிகழ்த்தப்படுவதே நல்லறமாதலின், இறைவனருளால் நல்லறத்தினை வளர்க்கும் தலைவனாகத் தோன்றியவன் என்பார் நல்லறத்துக்கு நாதன் என்றார். கடவுளுக்குத் தொண்டராகிய மெய்யன்பர்கள் 'தகவெனும் அரிவையைத்தழீஇ மகவெனப் பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப்பார்க்கும்' (திருவிடைமருதூர் மும்மணிக்கோவை-7.) செல்வவாழ்வினராகத் திகழ்வர் என்பதற்கேற்ப, எவ்வுயிர்க்கும் இனிய அன்பினனாகத் திகழ்வோன் இவன் என்பார், 'தாயின் மன்னுயிர்க்கு அன்பினன் தக்கோன்' என்றார். இவ்வாறு பேரறிவும், தூய்மையும், இறைவனை இடைவிடாதுணரும் மெய்யுணர்வும், அறத்தினை நிலைநிறுத்தும் தலைமையும், எவ்வுயிர்க்கும் அன்புடைமையும் ஆகிய எல்லா நலங்களும் ஒருசேர நிரம்பப் பெற்று விளங்கும் ஒப்பற்ற தகுதியுடைய பெறலரும் புதல்வனாக இரணியனுக்குப் பிரகலாதன் பிறந்து உளனாயினன் என்பார், 'ஆயவன் தனக்கு அருமகன்,...உளன் ஒரு தக்கோன்' என்றார். (19)

இச்செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்

6334 (a) அன்ன வன்புகழ் சீலநல் லறந்தனி மெய்ம்மை
உன்னு நான்மறை யோடருள் நீதியும் பொறையும்
இன்ன யாவுமற் றுருவுகொண் டுளதென வுவந்தே
மன்னு யிர்த்தொகை மகிழ்ந்திட ஒருதனி வாழ்ந்தான்.

என்ற செய்யுள் மிகைப்பாடலாக குறிக்கப் பெற்றுளது.

இரணியன் தன் மகனை வேதம் ஓதுமாறு பணித்தல்

6335. வாழி யானவன் றனைக்கண்டு
மனமகிழ்ந் துருகி
ஆழி யையநீ யறிதியான்
மறையென வறைந்தான்

ஊழி யுங்கடந் துயர்கின்ற
வாயுளா னுலகம்
ஏழு மேழும்வந் தடிதொழ
வரசுவீற் றிருந்தான்.

'வாழியான்—அவன்தனைக் கண்டு,
மனம் மகிழ்ந்து உருகி,
"ஆழி ஐய! நீ அறிதியால் மறை"
என அறைந்தான்—
ஊழியும் கடந்து உயர்கின்ற
ஆயுளான், உலகம்
ஏழும் ஏழும் வந்து அடிதொழ,
அரசு வீற்றிருந்தான்.

பொ :—யுகமுடிவினையும் கடந்து நீட்டிக்கும் நிறைந்த வாழ்நாளுடையவனும், பதினான்கு உலகங்களில் வாழ்வாரும் வந்து தன் பாதங்களைப் பணிந்து போற்றப் பேரரசனாக வீற்றிருத்தலையுடையவனும் ஆகிய இரணியன், நல்வாழ்வுக்கு உரியவனாகிய அப்புதல்வனைக் கண்டு அகமகிழ்ந்து (அன்பினால்) நெஞ்சம் நெகிழ்ந்து உருகி, (எனது) ஆணைச் சக்கரத்திற்கு உரிமையுடைய மைந்தனே! (அரசியல் ஆட்சி முறைக்கு இன்றியமையாத) வேதங்களை (ஆசிரியன்பால்) கற்றறிவாயாக '' எனப் பணித்தான்.

கு :—உயர்கின்ற ஆயுளான், அரசு வீற்றிருந்தான், வாழியான் அவன்தனைக் கண்டு, மகிழ்ந்து, உருகி, 'ஆழி ஐய! நீ அறிதியால் மறை' என அறைந்தான் என வினை முடிவு செய்க. வாழியான்-நல் வாழ்வுக்குரிய நற்பேறுடையான்; என்றது, இரணியனுக்கு மகனாகிய பிரகலாதனை. 'எனது அரச பதவியாகிய ஆணைச் சக்கரத்தை மேற்கொண்டு செலுத்தும் உரிமையுடையவன் என் மகனாகிய நீயே' என்று அறிவுறுத்துவான், தன்மகனை 'ஆழியாய்' என அழைத்தான் இரணியன். ஆழி—சக்கரம்; அரசனது ஆணையினைச் சக்கரமாக உருவகித்தல் மரபு. (20)

இரணியனது ஏவலால் அந்தணனொருவன் பிரகலாதனுக்கு வேதம் ஓதுவிக்கத் தொடங்குதல்

6336. என்றொ ரந்தண னெல்லையி
லறிஞனை யேவி
நன்று நீயிவற் குதவுதி
மறையென நவின்றான்
சென்று மற்றவன் றன்னொடு
மொருசிறை சேர்ந்தான்
அன்று நான்மறை முதலிய
வோதுவா னமைந்தான்.

'என்று, ஓர் அந்தணன் எல்லையில்,
அறிஞனை ஏவி,
"நன்று நீ இவற்கு உதவுதி மறை"
என நவின்றான்,
சென்று மற்று அவன் தன்னொடும்
ஒருசிறை சேர்ந்தான்;
அன்று நான்மறை முதலிய
ஓதுவான் அமைந்தான்.

பொ :—என்று சொல்லி ஓர் அந்தணனிடத்தே (ஓதாதுணர்ந்த) அறிஞனாகிய பிரகலாதனை ஒப்புவித்து (அவ் அந்தணனை நோக்கி) 'நீ (என் புதல்வனாகிய) இவனுக்கு வேதத்தினை நன்றாகக் கற்பிப்பாயாக' எனக் கூறினான். அன்று (தந்தை பணித்தவண்ணம்) நான்கு வேதங்களையும் கற்றற்கு இசைந்த (மைந்தனாகிய) பிரகலாதன், (குருவாகிய) அவ்வேதியனொடும் சென்று (ஓதுதற்குத் தகுதியான) ஓரிடத்தினை அடைந்தான்.

கு :—என்று-(வேதங்களைக் கற்பாயாக) என்று சொல்லி. ஓர் அந்தணன் எல்லையில்-ஓர் ஆசிரியன் வசத்தில். கல்விப் பயிற்சி பெறுவதற்கு முன்னரே நல்லறிவு வாய்க்கப் பெற்றவன் பிரகலாதன் என்பது உணர்த்துவார் அவனை 'அறிஞன்' எனக் குறித்தார் ஆசிரியர். (இரணியன்) என்று, ஏவி, நவின்றான் எனவும், அன்று நான் மறை முதலிய ஓதுவான் அமைந்தான், மற்றவன் தன்னொடும் சென்று ஒரு சிறை சேர்ந்தான் எனவும் இரு தொடராக முடிக்க. ஓதுவான் அமைந்தான் என்றது, தந்தை பணித்தவண்ணம் அந்தணன்பாற் கல்வி கற்றற்கு இசைந்த பிரகலாதனை சிறை-பக்கம். (21)

ஆசிரியன் 'இரணியாயநம' என்று கூறுமாறு பணிக்கப் பிரகலாதன் 'ஓம் நமோநாராயணுய' என்று கூறுதல்

6337. ஓதப் புக்கவ னுந்தைபே
ருரையென லோடும்
போதத் தன்செவித் தொளையிரு
கைகளாற் பொத்தி
மூதக் கோயிது நற்றவ
மன்றென மொழியா
வேதத் துச்சியின் மெய்ப்பொருட்
பெயரினை விரித்தான்.

'ஓதப்புக்கு, அவன், "உந்தைபேர்
உரை" எனலோடும்,
போதத் தன் செவித்தொளை
இரு கைகளால பொத்தி,
"மூதக்கோய்! இது நல்தவம்
அன்று" என மொழியா,
வேதத்து உச்சியின் மெய்ப்பொருட்
பெயரினை விரித்தான்.

பொ :—(ஆசிரியனுடன் ஓதுமிடத்தைச் சேர்ந்த பிரகலாதன்) கல்வி பயிலத் தொடங்கி, அவ் ஆசிரியன் 'உன் தந்தை பெயரைச் சொல்வாயாக' எனப் பணித்த அளவில், (முறையற்ற அவ்வார்த்தையைக் கேட்கப்பொருதவனுகித்) தன் காதுகளின் துளைகளை இரண்டு கைகளாலும் நன்ருக மூடிக்கொண்டு, (அறன் அறிந்து) மூத்த அறிவுடைய பெரியோனே! (இறைவனை மறந்து நீ சொல்லிய வண்ணம் சொல்லுதலாகிய) இச்செயல் நல்ல தவமாகாது" என்று சொல்லி, வேத சிகையெனப்படும் உபநிடதங்களிற் போற்றப்பெறும் மெய்ப்பொருளாகிய முழுமுதற் கடவுளின் திருப் பெயரினை விரித்துரைத்துப் போற்றினுன்.

கு :—ஓதப்புக்கு, கைகளாற் பொத்தி, மொழியா என வரும் வினையெச்சங்கள் விரித்தான் என்னும் வினையைக் கொண்டு முடிந்தன. அவன் என்றது, ஓதுவிக்க வந்த ஆசிரியனை. 'உந்தைபேர் உரை' என்றது அவ்வேதியன் பிரகலாதனை நோக்கிக் கூறிய சொல். தகுதியற்ற அச்சொல்லைக் கேட்கப்பொருத பிரகலாதன் தன் காதுகளை இரு கைகளாலும் நன்ருகப் பொத்திக்கொண்டான் என்பார், 'அவன் 'உந்தைபேர் உரை' எனலோடும் தன் செவித்

தொளை இரு கைகளாற் போதப் பொத்தி' என்றார். போத-நன்றாக; இறுக. பொத்துதல் - மூடுதல். நூல்கள் பலவற்றையும் கற்றுத் துறைபோகிய ஆசிரியனாகிய நீ, கலைக்கெலாம் பொருளாகிய இறைவனது திருப்பெயரைக் கற்பித்தலாகிய நின் கடமையினை விடுத்து ஏனைய உயிர்வர்க்கத்துள் அடங்கிய என் தந்தையின் பெயரை வேதத்தின் முதற்கண் உரைக்கத்தக்க பெயராக என்னைச் சொல்லும்படி வற்புறுத்துவது நல்ல தவத்திற்கு மாறான அவச் செயலாம் என்பான், "மூதக்கோய் இது நற்றவம் அன்று" என மொழிந்தான். வேதத்து உச்சி - வேதத்தின் அந்தமாகிய உபநிடதங்கள். வேதாந்தத்தே விரித்துரைக்கப்பெறும் மெய்ப்பொருட் பெயர் என்றது, முழுமுதற் கடவுளின் திருப்பெயராகிய 'ஓம் நமோ நாராயணாய' என்னும் எட்டெழுத்து மந்திரத்தை. "வேதாந்த விழுப்பொருளின், மேலிருந்த விளக்கை விட்டுசித்தன் விரித்தனனே" (4-3-11) என வரும் பெரியாழ்வார் திருமொழி இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும். (22)

பிரகலாதனது திருமால் பத்தியைக் கண்டு ஆசிரியன் அஞ்சி நடுங்கி அவனைக் கடிந்துரைத்தல் 6338, 6339

6338. ஓந மோநாரா யணாயவென்
றுரைத்துள முருகித்
தான மைந்திரு தடக்கையுந்
தலையின்மேற் றாங்கிப்
பூநி றக்கண்கள் புனலுக
மயிர்புறம் பொடிப்ப
ஞான நாயக னிருந்தன
னந்தண னடுங்கி.

" "ஓம் நமோ நாராயணாய !" என்று
உரைத்து, உளம் உருகி,
தான் அமைந்து, இரு தடக்கையும்
தலையின்மேல் தாங்கி,
பூ நிறக் கண்கள் புனல்உக,
மயிர் புறம் பொடிப்ப,
ஞான நாயகன் இருந்தனன் ;
அந்தணன் நடுங்கி.

பொ :—ஞானத் தலைவனாகிய பிரகலாதன், 'ஓம் நமோ நாராயணாய' என்னும் திருமந்திரத்தை ஓதி நெஞ்சங் கசிந்துருகித் தான் (அசைவின்றி) அடங்கி, பெருமைவாய்ந்த இரு கைகளையும் தலைமேற் கூப்பி (வணங்கித்) தாமரை மலர்போலும் கண்களில் நீர் மல்கிச் சொரிய மெய்ம்மயிர் சிலிர்க்க(த் தியானத்தில்) அமர்ந்திருந்தான். (பிரகலாதன் வாயிலாக அத் திருப்பெயரினைக் கேட்ட) வேதியன் மனம் நடுங்கி,

கு :—பிரகலாதன் இளம் பருவத்திலேயே நன் ஞானம் கைவரப் பெற்றமையால் தத்துவ ஞானிகட்கெல்லாந் தலைவனாக விளங்குகின்றான் என்பார், அவனை 'ஞான நாயகன்' எனப் போற்றினார் ஆசிரியர். ஞான நாயகன், ஓம் நமோ நாராயணாய என்று உரைத்து, உளம் உருகி, கண்கள் புனல் உக, புறம் மயிர் பொடிப்ப இருந்தனன் என்க. இறைவனது திருப்பெயரை ஓதுங்கால் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுதல் வேண்டும் என்னும் நியமம் இதனாற் புலனாதல் அறியத்தக்கதாகும். 'அந்தணன் நடுங்கி' என்புழி நடுங்கி என்னும் வினையெச்சம், அடுத்த செய்யுளில் வரும் 'என்றான்' என்னும் வினையைக்கொண்டு முடியும். (23)

இச் செய்யுளையடுத்து 52 என்னும் எண்ணுள்ள சுவடியில்,

6338 (a) நடுங்கி யந்தணன் நாப்புலர்ந் தரும்புல னைந்தும்
ஒடுங்கி யுள்ளுயிர் சோர்ந்துடல் பதைத்துளம் வெருவி
அடங்கு மின்றுநம் வாழ்வென அயர்ந்தொரு படியாய்ப்
பிடுங்கு மெல்லுரை புதல்வனுக் கினையன பேசும்.

என்ற செய்யுள் மிகைப் பாடலாகக் குறிக்கப்பெற்றுளது.

6339. கெடுத்தொ ழிந்தனை யென்னையு
முன்னையுங் கெடுவாய்
படுத்தொ ழிந்தனை பாவியெத்
தேவரும் பகர்தற்
கடுத்த தன்றியே யயலொன்று
பகர நின் னறிவின்
எடுத்த தென்னிது வென்செய்த
வண்ண நீ யென்றான்.

" 'கெடுத்து ஒழிந்தனை, என்னையும்
உன்னையும் ; கெடுவாய் !
படுத்து ஒழிந்தனை ; பாவி !
எத்தேவரும் பகர்தற்கு
அடுத்தது அன்றியே அயல் ஒன்று
பகர, நின் அறிவின்
எடுத்தது என் இது? என் செய்த
வண்ணம் நீ?" என்றான்.

பொ :—'கெடுமதி படைத்தவனே (நீ சொல்லிய இச்சொல்லினால்) என்னையும் உன்னையும் கெடுத்து விட்டாய்; கொடியோய்! நம் இருவரையும் இறந்தொழியச் செய்துவிட்டாய். எத்தகைய தேவர்களும் ஓதுதற்குப் பொருந்திய (நின் தந்தையின்) பெயரையன்றி (அதற்கு மாறான) மற்றொரு பெயரைச் சொல்லுதற்கு நின் அறிவினால் மேற்கொண்டது என்ன துணிவு? நீ செய்த செயலின் தன்மை எவ்வளவு தவறானது' எனக் கடிந்துரைத்தான்.

கு :—கற்பிக்க வந்த ஆசிரியனாகிய என் செவியிற்பட நாடாளும் வேந்தனது ஆணைக்கு மாறுபட்ட மொழியைச் சொல்ல இடங் கொடுத்தமைபற்றி என்னையும், அம்மொழியைச் சொன்னமைபற்றி உன்னையும் வேந்தன் ஒறுத்தழித்தல் உறுதி என்பான், 'கெடுத் தொழிந்தனை என்னையும் உன்னையும் படுத்தொழிந்தனை' என்றான். பிறர்க்குக் கேடு விளைக்கும் கொடுமையுடையாரைப் பாவி என்னும் வழக்குப்பற்றிப் 'பாவி' என்றான். 'எத்தேவரும் பகர்தற்கு அடுத்தது' என்றது, இரணியனது ஆட்சிக்கு உட்பட்ட அண்டப் பகுதியில் தேவர் முதலிய எல்லோராலும் இன்றியமையாது ஓதுதற்குரியது என விதிக்கப்பெற்றிருந்த இரணியனது பெயரினை. அயல் ஒன்று – அதற்கு மாறான மற்றொரு பெயர்; என்றது இறைவன் திருப்பெயராகிய எட்டெழுத்து மந்திரத்தினை. அதனைத் தன் வாயால் வெளியிட்டுரைத்தலும் பெருங் குற்றமாம் என்று அஞ்சி நடுங்கி, 'அயல் ஒன்று' எனக் குறித்தான் வேதியன். (24)

இச் செய்யுளையடுத்து 52 என்னும் எண்ணுள்ள சுவடியில்,

6339 (a) என்றவ் வேதியன் இவையிவை யியம்பலு மிதுகேட்
டொன்று மெய்ப்பொரு ளுணர்ந்துள சிறுவனும் உரவோய்
நன்று நீயெனக் குரைத்ததென் றின்னகை புரிந்தாங்
கின்று கேளிதி னுறுதியென் றெடுத்திவை யுரைப்பான்.

என்ற செய்யுள் மிகைப் பாடலெனக் குறிக்கப்பெற்றுளது.

பிரகலாதன் குருவுக்கு ஏற்ற மறுமொழி கூறுதல்

6340. என்னை யுய்வித்தே னெந்தையை
யுய்வித்தே னினைய
உன்னை யுய்வித்திவ் வுலகையு
முய்விப்பா னமைந்து
முன்னை வேதத்தின் முதற்பெயர்
மொழிவது மொழிந்தேன்
என்னை குற்றநா னியம்பிய
தியம்புதி யென்றான்.

" 'என்னை உய்வித்தேன்; எந்தையை
உய்வித்தேன்; நினைய
உன்னை உய்வித்து, இவ்வுலகையும்
உய்விப்பான் அமைந்து,
முன்னை வேதத்தின் முதற்பெயர்
மொழிவது மொழிந்தேன்;
என்னை குற்றம் நான் இயம்பியது?
இயம்புதி" என்றான்.

பொ :—(இவ்வாறு தன்னை வேதியன் கடிந்துரைக்கக் கேட்ட பிரகலாதன் அவனை நோக்கி, 'ஐயனே! இறைவன் திருப்பெயரை யான் சொன்னமையால்), என்னை உய்யுமாறு செய்தேன்; என் தந்தையை உய்யுமாறு செய்தேன்; (இத்திருப்பெயரினை) நினைத லால் உன்னை உய்யுமாறு செய்து இவ்வுலக உயிர்களையும் உய்வித்தல் வேண்டித் தொன்மை வாய்ந்த வேதத்தின் முதற் பெயரின் பொருளாக அமைந்ததும் (யாவராலும்) ஓதத்தகுவதும் ஆகிய முழுமுதற் கடவுளின் திருப்பெயரைச் சொல்லித் துதித்தேன். நான் இதனைச் சொன்னமையால் வந்த குற்றம் யாது? சொல்வாயாக' என வினவினான்.

கு :—பெற்ற தாயினும் ஆயின செய்யும் நலந்தரும் சொல்லாகிய நாராயண மந்திரத்தை யான் ஓதினமையால் இம்மை மறுமை அம்மையாகிய மும்மை நலங்களையும் பெற்றுப் பிறவித் துயர் நீங்கி உய்ந்தேன் என்பான், 'என்னை உய்வித்தேன்' என்றான். மைந்தனாகிய யான் இத் திருப்பெயரைச் சொல்லி ஈட்டிய பெருஞ் செல்வப் பயன் எனக்கேயன்றி என்னைப் பெற்ற தந்தைக்கும் சென்று சேர்ந்து நற்பயன் விளைக்கும் என்பான், 'எந்தையை உய்வித்தேன்' என்றான். இத் திருப்பெயரை உன்முன் சொல்லி இதனை நீ

நினைக்கும்படி செய்தமையால் குருவாகிய உன்னையும் உய்யச்செய்து இவ்வுலக உயிர்களையும் உய்வித்தற்கு அமைந்தேன் என்பான், 'நினைய உன்னை உய்வித்து இவ்வுலகையும் உய்விப்பான் அமைந்து... மொழிந்தனன்' என்றான். என் தந்தை முதலானோர் தோன்றுதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்னரேயே திரிபின்றியுள்ள பழைய வேதத்தின் முதற் பெயர்ப்பொருளாக அமைந்து யாவராலும் அன்பினால் ஓதத்தகுவது ஆகிய திருப்பெயரையே யான் ஓதினேன் என்பான், 'முன்னை வேதத்தின் முதற்பெயர் மொழிவது மொழிந்தேன்' என்றான். வேதத்தின் முதற்பெயராவது பிரணவம். அதனால் மொழியப்படும் பொருளாவது முழுமுதற் கடவுளாகிய நாராயணன். ஆன்றோர்களால் நெடுங்காலமாக ஓதப்பெற்றுவரும் நாராயண நாமத்தைக் கூறினமையால் நான் செய்த குற்றம் யாது? அதனை விளங்கச் சொல்லுக என்பான், 'என்னை குற்றம் நான் இயம்பியது? இயம்புதி' என அவ்வேதியனை நோக்கி வினவினான் பிரகலாதன். (25)

அந்தணனாகிய குரு பிரகலாதனுக்கு அறிவுரை கூறுதல்

6341. முந்தை வானவர் யாவர்க்கு
முதல்வர்க்கு முதலோன்
உந்தை மற்றவன் றிருப்பெய
ருரைசெயற் குரிய
அந்த ணாளன்யா னென்னினு
மறிதியோ வையா
விந்த விப்பெய ருரைத்தெனைக்
கெடுத்திட லென்றான்.

" 'முந்தை வானவர் யாவர்க்கும்,
முதல்வர்க்கும் முதலோன்
உந்தை; மற்று அவன் திருப்பெயர்,
உரைசெயற்கு உரிய;
அந்தணாளன் யான்; என்னினும்
அறிதியோ? ஐயா!
இந்த! இப்பெயர் உரைத்து,
எனைக் கெடுத்திடல்" என்றான்.

பொ :—'உன் தந்தையாகிய இரணியன், முற்பட்ட பழையோராகிய தேவர்கள் எல்லார்க்கும் முதல்வராகிய மும்மூர்த்திகட்கும்

முதல்வன். அவனுடைய திருப்பெயர்களே (யாவராலும்) சொல்லித் துதித்தற்குரியன. (வேதங்களையறிந்த) வேதியன் யான். (ஆசிரியனாகிய) என்னைக்காட்டிலும் (நீ எல்லாவற்றையும்) அறிந்தவன் ஆவாயோ? நீ இப்பொழுது சொல்லிய இந்தப் பெயரினை (மீளவும்) சொல்லி என்னைக் கெடுத்துவிடாதே' என்று (பிரகலாதனை வேதியன்) வேண்டிக்கொண்டான்.

கு:—முந்தை வானவர் - பழமையுடையராகிய தேவர். முதல்வர் என்றது, உலகினைப் படைத்தளித்தழிக்கும் அயன், அரி, அரன் என்னும் மும்மூர்த்திகளை. உந்தை - உன் தந்தை; என்றது பிரகலாதனுக்குத் தந்தையாகிய இரணியனை. தேவர்க்கும் முதல்வர் மூவர்க்கும் மற்றை யாவர்க்கும் ஆற்றலால் மேற்பட்டு விளங்கும் வேந்தனாகிய அவ் இரணியனுக்குரிய செல்வ மிகுதியைப் புலப்படுத்தும் பெயர்களே யாவராலும் சொல்லிப் போற்றுதற்குரிய பெருமையுடையன என்பான், 'அவன் திருப்பெயர் உரைசெயற்கு உரிய' என்றான். 'வேதங்களை நன்கு கற்றுணர்ந்த ஆசிரியன் யான்; ஒன்றும் அறியாத இளஞ் சிறுவன் நீ; என் சொல்லை மறுத்துரைத்தற்கு என்னைக்காட்டிலும் அதிகங் கற்றனையோ' என வினவுவான், 'அந்தணாளன் யான், என்னினும் அறிதியோ' என்றான். அந்தணாளன் - வேதியன். என்னினும் - என்னைக்காட்டிலும். ஐய, என்பது பிரகலாதனை நோக்கி யெழுந்த விளி. என்பாற் கல்வி பயில வந்த மாணாக்கனாகிய நீ, மாறுபட்ட இப்பெயரைச் சொல்வாயாயின் இதனை உனக்குக் கற்பித்தவன் உன் குருவாகிய யானே என்பது ஏற்பட்டு என்னுயிர்க்கு இறுதி நேர்தல் உறுதியாதலின், நீ உன் வாயினால் இப்பெயரைச் சொல்லி எனக்குக் கேடு சூழாதே' என்பான், 'இந்த இப்பெயர் உரைத்து எனைக் கெடுத்திடல்' என இரந்து வேண்டினான். கெடுத்திடல் - கெடுக்காதே; அல்லீற்று எதிர்மறை. அப்பெயரைத் தன் வாயினால் வெளியிடுதலும் அரச துரோகமாம் என்று அஞ்சிய வேதியன், அதனை 'இப்பெயர்' எனச் சுட்டளவிற் குறித்தான். 'இந்த இப்பெயர்' என்றாற் போன்று 'இந்த விப்பிறவிக்கு' (சுந்தர - 64) என முன்னரும் வழங்கினமை காண்க. (26)

பிரகலாதன் குருவின் சொல்லை மறுத்து, வேதப்பொருளாய் விளங்கும் திருமாலின் பெருமையை விரித்துரைத்தல்

6342. வேத பாரக னவ்வுரை
விளம்பலும் விமலன்
ஆதி நாயகன் பெயரன்றி
யான்பிறி தறியேன்

ஓத வேண்டுவ தில்லையென்
னுணர்வினுக் கொன்றும்
போதி யாதது மில்லையென்
றிவையிவை புகலும்.

"வேத பாரகன் அவ் உரை
விளம்பலும், விமலன்,
"ஆதி நாயகன் பெயர் அன்றி,
யான் பிறிது அறியேன்;
ஓத வேண்டுவது இல்லை; என்
உணர்வினுக்கு ஒன்றும்
போதியாததும் இல்லை" என்று,
இவை இவை புகலும்.

பொ:—வேதங்கரைகண்டோனாகிய வேதியன் அவ்வார்த்தையைச் சொன்ன அளவில் (அதனைக்கேட்ட) தூயவனாகிய பிரகலாதன் 'முழுமுதற்கடவுளாகிய திருமாலின் திருப்பெயரையன்றிப் பிறிதொன்றையும் யான் சொல்லுதற்கு அறியேன். (அத்திருப்பெயரையன்றி) என்னால் ஓதத்தக்கது வேறொன்றுமில்லை. (அத்திருப்பெயரால்) என் அறிவினுக்கு உணர்த்தப் பெறாத அரும்பொருள் எதுவும் இல்லை என்று சொல்லி(ப் பின்வரும்) இந்த இந்த மொழிகளைக் கூறுவானாயினான்.

கு:—வேத பாரகன்-வேதங்களின் எல்லைகண்டவன்; வேதங்கரை கண்டவன் என்றவாறு. விமலன் - குற்றமில்லாதவன்; தூயோன்; என்றது பிரகலாதாழ்வாரை. ஆதிநாயகன்-எல்லார்க்கும் எல்லாவற்றுக்கும் முதலாகிய தலைவன்; என்றது, முழுமுதற் கடவுளாகிய திருமாலை. அவன் பெயராவது, நாராயணன் என்னும் திருநாமம். அறிதல்-சிறப்புடையதாக மதித்துத் துதித்தல், எல்லா நூற்பொருளுந் தன் பொருளுளேயாகத் திரண்ட அத்திருப்பெயரை அறிந்து ஓதிய அளவில் வேத முதலிய எல்லாக் கலைப்பொருள்களும் என் உணர்வினுக்குத் தெளிவாகப் புலனாயின ஆதலின், 'கற்பனவும் இனி அமையும் என்ற முடிவுக்கு வந்து விட்டேன்' என்பான், "ஓத வேண்டுவதில்லை, என் உணர்வினுக்குப் போதியாதது ஒன்றும் இல்லை" என்றான். போதியாதது—உணர்த்தப்படாத பொருள். போதித்தல்-உணர்த்துதல். (27)

6343. தொல்லை நான்மறை வரன்முறை
துணிபொருட் கெல்லாம்
எல்லை கண்டவ னகம்புகுந்
திடங்கொண்ட தென்னுள்
இல்லை வேறினிப் பெரும்பதம்
யானறி யாத
வல்லை யேலினி யோதுவி
நீதியின் வழாத.

" 'தொல்லை நான்மறை வரன்முறை
துணிபொருட்கு எல்லாம்
எல்லை கண்டவன் அகம் புகுந்து,
இடம் கொண்டது என் உள்;
இல்லை, வேறு இனிப் பெரும் பதம்;
யான் அறியாத,
வல்லையேல், இனி, ஓதுவி,
நீதியின் வழாத.

பொ:—பழமை வாய்ந்த நான்கு வேதங்கள் மரபு வழுவாது அறுதியிட்டுக் கூறிய எல்லாப் பொருள்கட்கும் முடிவு எல்லையாக அமைந்தவனாகிய இறைவன் உள்ளே புகுந்து தான் அமரும் கோயிலாகக் கொண்ட சிறப்புடையது எனது உள்ளமாகும். (உள்ளத்தில் எழுந்தருளிய இறைவனது திருப்பெயரையன்றி என்னால் சொல்லுதற்குரிய) பெரும் பெயர் இனி வேறொன்றுமில்லை. என்னால் அறியப் படாத அருமறைப் பொருள்களைக் கற்பிக்கவல்லாயாயின் அறநூல் முறைக்கு மாறுபடாதவற்றை இனிக் கற்பிப்பாயாக.

கு:—நான்மறை துணி பொருட்கு எல்லாம் எல்லைகாணுதலாவது, வேதத்துட் கூறப்படும் எல்லாப் பொருள்களும் தனக்குள் அடங்கத் தான் அவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டு விளங்குதல். எல்லாவற்றையும் கடந்து விளங்கும் முதல்வன் எனது சிறிய நெஞ்சத்துள்ளும் புகுந்து அதனை இடமாகக் கொண்டு எழுந்தருளியுள்ளான் என்பான், 'பொருட்கு எல்லாம் எல்லைகண்டவன் அகம் புகுந்து இடங்கொண்டது என் உள்' என்றான். அகம்-உள்; நெஞ்சம். இடங்கொள்ளுதல்—(தான் விரும்பியுறையும்) இடமாகக் கொண்டு அமர்தல். 'யான் அறியாதவல்லையேல், இனி நீதியின் வழாத ஓதுவி' என இயைத்துப் பொருள் கொள்க. வல்லையேல் என்றது, அத்தகைய வல்லமை நின்பால் இல்லையென்னும் குறிப்புப் பட நின்றது. ஓதுவி-கற்பிப்பாயாக. நீதியின் வழாமையாவது நீதி

யுருவினனாய், கலைக்கெலாம் பொருளாய் விளங்கும் இறைவனது பொருள் சேர் திருப்பெயரைக் கற்றல் கேட்டலுடையார் மறவாது சொல்லித் துதித்தலை. (28)

6344. ஆரைச் சொல்லுவ தந்தண
ரருமறை யறிந்தோர்
ஓரச் சொல்லுவ தெப்பொரு
ளுபநிட தங்கள்
தீரச் சொல்பொரு டேவரும்
முனிவருஞ் செப்பும்
பேரைச் சொல்லுவ தல்லது
பிறிதுமொன் றுளதோ.

" 'ஆரைச் சொல்லுவது அந்தணர்
அருமறை? அறிந்தோர்
ஓரச் சொல்லுவது எப்பொருள்?,
உபநிட தங்கள்,
தீரச் சொல்பொருள் ; தேவரும்
முனிவரும் செப்பும்
பேரைச் சொல்லுவது அல்லது
பிறிதும் ஒன்று உளதோ ?

பொ :—அந்தணர்களால் ஓதப்பெறும் அரிய வேதமானது யாரை(ப் பரம் பொருளாக)க் கூறுகின்றதோ ? (அவ்வேதத்தினைக்) கற்றறிந்தோர் இடைவிடாது ஓர்ந்துணரச் சொல்வது எந்தப் பொருளோ (அதுவே) மறைமுடிவாகிய உபநிடதங்கள் முடிந்த முடிபாகச் சொல்லும் முழுமுதற் பொருளாகும். தேவர்களும் முனிவர்களும் (அம்முழுமுதற் பொருளுக்கு உரியதாகச்) சொல்லித் துதிக்கும் திருப்பெயரைச் சொல்வதல்லது (என்னாற் சொல்லத்தக்கது) வேறொன்றும் உளதோ ? (இல்லை).

கு :—அருமறையாகிய வேதத்தை ஓதுதற்குச் சிறப்புரிமையுடையோர் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராதலின், ' அந்தணர் அருமறை ' என அடை புணர்த்து ஓதப்பட்டது. ' அந்தணர் அருமறை ' (களவியல். 1.) என்றார் இறையனாரும். அந்தணர் அருமறை ஆரைச் சொல்கின்றதோ ? அறிந்தோர் ஓரச் சொல்வது எந்தப் பொருளோ (அவரே) அதுவே உபநிடதங்கள் தீரச் சொல் பொருள் எனவும், (அப்பொருட்குத்) தேவரும்

முனிவரும் செப்பும் பேரைச் சொல்லுவதல்லது பிறிதும் ஒன்று உளதோ எனவும் இரு தொடராகக் கொண்டு பொருளுரைக்க. அறிவு நூல்களைக் கற்றுணர்ந்தோர், தோற்றக் கேடுகளின்றி என்றும் உள்ளதாகிய முழுமுதற் கடவுளையே இடைவிடாது சிந்தித்துணர்தல் வேண்டும் எனத் தம் அநுபவத்தை எல்லோர்க்கும் எடுத்துரைப்பர் என்பான், 'அறிந்தோர் ஓரச் சொல்வது எப்பொருள்' என்றான். ஓர்தல்–இடைவிடாது சிந்தித்தல்.

'ஓர்த்துள்ள முள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு' (திருக்குறள்-357.)

என்றார் தெய்வப் புலவரும். தீரச் சொல் பொருள்-ஐயத்திற்கிடனின்றி முடிந்த முடிபாகத் தெளிந்து கூறிய பொருள். (29)

6345. வேதத் தானுநல் வேள்வியி
னுமெய் யுணர்ந்த
போதத் தானுமப் புறத்துள
வெப்பொரு ளானும்
சாதிப் பார்பெறும் பெரும்பதந்
தலைக்கொண்டு சமைந்தேன்
ஓதிக் கேட்பது பரம்பொரு
ளின்னமொன் றுளதோ.

" 'வேதத்தானும், நல் வேள்வியினும்,
மெய் உணர்ந்த
போதத்தானும், அப்புறத்துள
எப் பொருளானும்,
சாதிப்பார் பெறும் பெரும்பதம்
தலைக்கொண்டு சமைந்தேன் ;
ஓதிக் கேட்பது பரம்பொருள் ;
இன்னம் ஒன்று உளதோ ?

பொ :—மறைகளாலும் (அவ்வேதங்களில் விதித்த வண்ணம் நிகழ்த்தப் பெறும்) யாகங்களாலும் மெய்யுணர்வு கைவரப் பெற்றமையால் உளதாகிய தத்துவஞானத்தாலும் மற்றும் அவற்றின்பாற்பட்டு அமைந்த தவம் பூசனை முதலிய எவ்வகை உபாயங்களாலும் முயன்று சித்திபெறும் பெரியோர்கள் பெறுதற்குரிய பெரும் பெயராகிய பொருளைச் சிரமேற்கொண்டு (ஓதுதற்குப்) பொருந்தினேன் ; (என்றால்) ஓதியும் கேட்டும் உணரத்தக்கது இறைவனது திருப்பெயரேயாகும் ;

(அதுவன்றி) மேலும் (ஓதிக்கேட்கத் தக்கதாக) வேறென்றுளதோ? (இல்லை என்றவாறு).

கு :—வேதம்-கலைஞானம். வேள்வி-வேத விதிப்படி செய்தற்குரிய நல்லறச் செயல்கள். மெய்யுணர்ந்த போதம்—மெய்யுணர்வின் வழிப்பட்ட தத்துவ ஞானம். அப்புறத்துள பொருளாவன, மேற்கூறிய வேதம், யாகம், தத்துவஞானம் ஆகிய அவற்றின்பாற் பட்டு நிகழும் தவம் செபம் பூசனை முதலியன. வேதம், வேள்வி, போதம் ஆகிய சாதனங்களாகவும் இவற்றின் வழிப்பட்ட ஏனை உபாயங்களாகவும் அமைந்து நின்று உயிர்களுக்கு அருள்சுரப்பவன் உயிர்க்குயிராகிய இறைவனே என்பான், 'வேதத்தானும் நல்வேள்வியினானும் மெய்யுணர்ந்த போதத்தானும் அப்புறத்துள எப்பொருளானும் சாதிப்பார் பெறும் பெரும் பதம்' என்றான். பெரும் பதமாவது பெரும் பெயர் எனப்படும் கடவுளின் திருப்பெயர். சாதித்தல்-உபாயங்களாற் செய்து நிறைவேற்றுதல். சமைதல்-உறுதியாகப் பொருந்தி அமைதல். ஓதிக் கேட்பது-ஓதியும் கேட்டும் உணர்தற்குரியது. பரம் பொருள்-மேலாகிய பொருள்; என்றது ஈண்டு அதன் திருப்பெயரை. இன்னம்-மேலும். (30)

6346. காடு பற்றியுங் கனவரை
பற்றியுங் கலைத்தோல்
மூடி முற்றியு முண்டித்து
நீட்டியு முறையால்
வீடு பெற்றவர் பெற்றதின்
விழுமிதென் றுரைக்கும்
மாடு பெற்றனென் மற்றினி
யென்பெற வருந்தி.

" 'காடு பற்றியும், கனவரை
பற்றியும், கலைத்தோல்
மூடி முற்றியும், முண்டித்தும்,
நீட்டியும், முறையால்
வீடு பெற்றவர், 'பெற்றதின்
விழுமிது' என்று உரைக்கும்
மாடு பெற்றனென், மற்று,
இனிஎன் பெற வருந்தி ?

பொ :—வனத்தினை இடமாகக் கொண்டும் பெரிய மலையினை இடமாகக் கொண்டும் கலைமானின் தோலைப் (போர்வையாகப்)

போர்த்து (இடையில் உடையாக) உடுத்தும், (தலைமயிரை) மழித்தும் (சடையாக) வளர்த்தும் முறைப்படி இயற்றிய தவத்தினால் வீடுபேற்றினை அடைந்த ஞானிகள் தாம் பெற்ற வீடு பேற்றினைக் காட்டிலும் சிறந்ததெனக் கொண்டு போற்றும் (இறைவனது திருநாமமாகிய) பெருஞ் செல்வத்தினைப் பெற்றேன். இதன் மேலும் யான் வருந்திப் பெறத்தக்க அரும்பொருளாக வேறு யாதுளது ?

கு :—கனவரை–பெரியமலை. மூடுதல்-(உடம்பு மறையுமாறு) போர்த்தல். முற்றுதல்-(இடுப்பில்) சுற்றியுடுத்தல். முண்டித்தல்–மழித்தல். நீட்டுதல்-(சடை) வளர்த்தல். இவை துறவுபூண்டு தவஞ் செய்வார்க்குரியன என்பது, 'மழித்தலும் நீட்டலும் வேண்டா' (திருக்குறள்–280.) என்பதனாற் புலனும். 'கடுந்தவம் மேற்கொண்டு பாசப்பிணிப்பினின்றும் நீங்கி வீடு பேற்றினையடைந்த ஞானிகள், தாம் பெற்ற நற்கதிப்பேறாகிய அதனைக் காட்டிலும் அப்பேற்றினை யடைதற்குரிய எளிய சாதனமாகவும் அப்பேற்றினைக் காட்டினும் மிக்க இன்பத்தினை நல்கும் அரும் பொருளாகிய பயனாகவும் அமைந்த இறைவனது திருப்பெயரையே பெருஞ் செல்வமெனக் கொண்டு அத்திருப் பெயரையே நற்றுணையாகப் பற்றி வாழும் பிரபத்தி நிலையினை வியந்து போற்றுவர். இவ்வாறு அறிஞர்களாற் போற்றப் பெறும் திருப்பெயர்ப் பொருளாகிய பெருஞ் செல்வம் எனக்கு எளிதிற் கிடைத்தது' என்பான், வீடுபெற்றவர் "பெற்றதின் விழுமிது என்றுரைக்கும், மாடு பெற்றனென்" என்றான். மாடு–செல்வம். மற்று இனி வருந்திப் பெற என் (உளது) என இயைத்துப் பொருள் கொள்க. (31)

6347. செவிக ளாற்பல கேட்கில
ராயினுந் தேவர்க்
கவிகொ ணான்மறை யகப்பொருள்
புறப்பொரு ளறிவார்
கவிக ளாகுவார் காண்குவார்
மெய்ப்பொருள் காலாற்
புவிகொ ளுயகற் கடியவர்க்
கடிமையிற் புக்கார்.

" 'செவிகளால் பல கேட்கிலர்
ஆயினும், தேவர்க்கு
அவிகொள் நான்மறை அகப்பொருள்
புறப்பொருள் அறிவார்;

கவிகள் ஆகுவார்; காண்குவார்,
மெய்ப்பொருள்; காலால்
புவிகொள் நாயகற்கு அடியவர்க்கு
அடிமையிற் புக்கார்.

பொ :—தன் திருவடியினால் இந்நிலவுலகம் முழுவதனையும் (ஓரடியாக அளந்து) கொண்ட இறைவனாகிய திருமாலின் அடியார்கட்கு அடித்தொண்டுபட்ட அன்பர்கள் பல நூல்களையும் (அறிந்தோர், சொல்லத்) தம் செவி வாயிலாகக் கேளாதவராயினும் வானோர்க்கு அவியுணவினையளிக்கும் மந்திரங்களைத் தன்னகத்தே கொண்ட நான்கு வேதங்களிலும் உள்ளுறையாகவும் வெளிப்படையாகவும் உணர்த்தப் பெறும் பொருளனைத்தையும் (பிறர் கற்பித்தலின்றித்) தாமே உணரப் பெறுவார்கள்; (வேதங்களை யொத்த தெய்வத் தன்மை வாய்ந்த) பாடல்களை இயற்றும் பெரும் புலவராவார்கள்; மெய்ப் பொருளாகிய இறைவனை(த் தம் கண்ணார)க் காணவல்லவராவார்கள்.

கு :—காலாற் புவிகொள் நாயகன் என்றது, மாவலிபால் மூவடி மண் இரந்து வேண்டித் தனது ஓரடியால் இந்நிலவுலக முழுவதும் அளந்துகொண்ட திருமாலின் கீர்த்தியை விளக்குவதாகும். இவ்வாறு இவ்வுலகம் திருமாலால் ஓரடியளவாகத் தாவி அளந்துகொள்ளப்பட்டது என்னும் செய்தியினை 'அடியளந்தான் தாஅயதெல்லாம்' (திருக்குறள்-610.) என வரும் தொடரில் ஆசிரியர் திருவள்ளுவர் குறித்துள்ளமை இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும். திருமால் நெடியோனாக வளர்ந்து உலக முழுவதனையும் தன்னடிக் கீழ்ப்படுத்தியதாக அமைந்த இவ்வரலாறு எல்லாவுயிர்களும் திருமாலுக்கு அடிமைப்பட்டன என்ற உண்மையை நன்கு விளக்குவதாகும். திருமால் அடியார்க்கு அடித்தொண்டராகிய அன்பர்கள், கல்வி கேள்வி இல்லாதவராயினும், நால் வேதங்களின் உள்ளுறை பொருளையும் வெளிப்படைப் பொருளையும் பிறர் துணையின்றித் தாமே, தெளிவாக அறிந்து கொள்ளவும் அரிய செய்யுட்களை இயற்றவும் வேதங்களாலும் இன்ன தன்மையன் என்று உரைக்க முடியாத பரம் பொருளைத் தம் சிந்தையுள் வைத்துத் தெளிந்துணர்தலேயன்றித் தம் கண்ணாரக் காணவும் வல்லவராவர் என்பதாம். 'காலாற்புவிகொள் நாயகற்கு அடியவர்க்கு அடிமையிற்புக்கார்' என்பது எழுவாய்; அஃது, அறிவார், ஆகுவர், காண்குவர் என்னும் பயனிலைகளைத் தனித்தனி கொண்டு முடிந்தது. அகப்பொருள்—உள்ளுறையாக அமைந்த பொருள். புறப்பொருள்-வெளிப்படையாக உணர்த்திய பொருள். 'அகப்பொருள் புறப்பொருளறிவார்' என வரும் இத்தொடர், தமிழ் மொழியில் அகம் புறம் என வழங்கும் பொருளிலக்கணப் பகுதிகளையும் குறிப்பாற் புலப்

படுத்தி நிற்றல் காணலாம். கவிகள்-கவிபாடும் புலவர்கள். மெய்ப் பொருள்-தோற்றக் கேடுகள் இன்றி என்றும் உள்ளதாகிய பரம் பொருள். காணுதல்-அகத்தே மனத்தால் நோக்குதலேயன்றிப் புறத்தே கண்களாலும் நேரே கண்டு மகிழ்தல். "பெண் ஆண் அலி யெனும் பெற்றியன் காண்க, கண்ணால் யானும் கண்டேன் காண்க" (திருவாசகம்-திருவண்டப்பகுதி) என அருளாளர் கூறும் இறையனு பவம் இங்கு நினைக்கத்தகுவதாகும். (32)

6348. எனக்கு நான்முகத் தொருவற்கும்
யாரினு முயர்ந்த
தனக்குந் தன்னிலை யறிவரு
மொருதனித் தலைவன்
மனக்கு வந்தனன் வந்தன
யாவையு மறையோய்
உனக்கு மின்னதி னல்லதொன்
றில்லென வுரைத்தான்.

" 'எனக்கும் நான்முகத்து ஒருவற்கும்,
யாரினும் உயர்ந்த
தனக்கும் தன்நிலை அறிவு அரும்
ஒரு தனித் தலைவன்,
மனக்கு வந்தனன்; வந்தன
யாவையும்; மறையோய்!
உனக்கும் இன்னதின் நல்லது
ஒன்று இல்" என உரைத்தான்.

பொ:—'வேதத்தில் வல்ல அந்தணனே! (சிறிதும் கல்விப் பயிற்சியில்லாத இளையோனாகிய) எனக்கும், (நான்கு வேதங்களையும் முழுதுணர்ந்த) ஒம்பற்றவனாகிய நான்முகக் கடவுளுக்கும், எல்லா ரினும் மேம்பட்ட இறைவனாகிய தனக்கும் தனது நிலைமை இன்ன தன்மைத்தென அறியவொண்ணாதபடியுள்ள ஒப்பற்ற தனி முதல்வ னாகிய திருமால், என் நெஞ்சத்திற் குடிபுகுந்தான். (அதனால், வேத நூற் பொருள்) யாவும் என் உள்ளத்திற்குப் புலனாயின. (ஆசிரிய னாகிய) உனக்கும் இதனைக் காட்டிலும் நலந்தரும் பொருள் பிறி தொன்றும் இல்லை' எனக் கூறினான் (பிரகலாதன்).

கு:—எனக்கும் என்புழி உம்மை இழிவு சிறப்பு. நான் முகத் தொருவற்கும் என்புழி உம்மை உயர்வு சிறப்பு. தனக்குவமையில்லா

தான் இறைவன் என்பான், 'யாரினும் உயர்ந்த தனக்கும்' எனக் குறித்தான். தன் என்றது இறைவனாகிய திருமாலை. தன் பெருமையினை எண்ணியறிதல் என்பது, சிறுமையும் பெருமையும் விரவியமைந்த உயிர்களுக்கேயன்றிச் சிறுமையேயில்லாத நற்குணக் கடலாகிய இறைவனுக்கில்லை யென்பான், 'யாரினும் உயர்ந்த தனக்கும் தன்னிலை அறிவரும் ஒரு தனித்தலைவன்' என்றான். 'தன்மை பிறரா லறியாத தலைவா' (திருவாசகம்-திருச்சதகம் 59.) எனவும், 'தன் பெருமை தானறியாத் தன்மையன்' (திருவாசகம் திருச்சாழல் 19.) எனவும், 'தனக்குந் தன்தன்மை யறிவரியானை' (திருவாய் மொழி-8-4-6) எனவும் வரும் ஆன்றோர் வாய்மொழிகள் ஈண்டு ஒப்பு நோக்குதற்குரியனவாகும். 'உயர்வறவுயர்ந்த தனி முதல்வனாகிய திருமால் என் உள்ளத்தில் எழுந்தருளினமையால் கற்றற்குரிய நூற்பொருள்களெல்லாவற்றையும் ஓதாமலேயுணரப்பெற்றேன்; கற்பனகற்ற ஆசிரியனாகிய உனக்கும் அவ் இறைவனது திருவருளையன்றி நலம் பயப்பது பிறிதொன்றுமில்லை' எனப் பிரகலாதன், தனக்கு மறையுணர்த்த வந்த குருவுக்கு அறிவுறுத்தினான் என்பதாம். (33)

குரு இரணியனையடைந்து நிகழ்ந்த செய்தியைக் கூறுதல்

6349. மாற்றம் யாதொன்று முரைத்திலன்
மறையவன் மறுகி
ஏற்ற மென்னெனக் கிறுதிவந்
தெய்திய தென்னா
ஊற்ற மில்லவ னோடினன்
கனகனை யுற்றான்
தோற்ற வந்ததோர் கனவுகண்
டானெனச் சொன்னான்.

'மாற்றம் யாது ஒன்றும் உரைத்திலன்,
மறையவன்; மறுகி,
"ஏற்றம் என்? எனக்கு இறுதிவந்து
எய்தியது" என்னா,
ஊற்றம் இல்லவன் ஓடினன்,
கனகனை உற்றான்;
தோற்ற வந்ததோர் கனவு கண்டான்
எனச் சொன்னான்:

பொ :—(பிரகலாதன் சொன்ன அவ்வார்த்தையைக் கேட்ட) வேதியன், எத்தகைய மறுமொழியும் கூறமாட்டாதவனாய் மனங் கலங்கி, 'எனக்கு ஆக்கம் யாதுளது? அழிவே வந்து சேர்ந்தது' என்று எண்ணி, மனத்திண்மையில்லாதவனாய் ஓடிச் சென்று இரணியனை அடைந்தான்; (பின் விளையவிருக்கும் இன்னலைப்) புலப்படுத்தும் நிலையில் வந்து தோன்றியதொரு (தீய) கனவினைக் கண்டவன் போன்று (வாய் வெருவிப் பின்வருமாறு) கூறினான்.

கு :—மறையவன், உரைத்திலன், மறுகி, என்னா, ஓடினன், உற்றான், சொன்னான் என முடிக்க. மறுகுதல்-மனங்கலங்குதல். ஊற்றம்-மனவெழுச்சி; நெஞ்சத் துணிவு. கனகன்-இரணியன். தோற்ற வந்ததோர் கனவு என்றது, பின் விளைய இருக்கும் தீமையை முன்னரே புலப்படுத்தும் நிலையில் தோன்றிய தீக்கனாவினை. கனவு கண்டானென-கனவு கண்டான்போன்று. தீக்கனாக்கண்டோர் வாய் வெருவி மொழியுமாறு போன்று வெருவி மொழிந்தான் என்றவாறு. இறைவனது திருப்பெயரை ஓதுவதனாலுளவாகும் நற்பயன்களைக் குறித்துப் பிரகலாதன் சொன்ன வாய்மொழியைக் கேட்ட மறையவன், அதனை மறுத்துரைக்கும் மதுகையில்லாதவனாய், 'என்னிடம் கல்வி பயிலவந்த இச்சிறுவன் இச்சொல்லை என் முன்னிலையிற் கூற யான் அதனைக் கேட்டிருந்தமை பற்றி இரணியன் எனக்கு எத்தகைய கடுந் தண்டனையினை விதிக்கப் போகின்றானோ?' எனக் கலங்கிய மனத்தினனாய், 'இச்சிறுவன் ஒவ்வாத மொழியைத் தான் சொல்லுமளவில் அமையாது ஆசிரியனாகிய என்னை நோக்கி, 'உனக்கும் இன்னதின் நல்லது ஒன்று இல்' என உபதேசிக்கின்றான். 'அவன் கூறுமாறு எனக்கு வரக்கடவ ஆக்கம் என்ன இருக்கிறது? அதற்கு மாறாக அழிவே வந்து சேர்ந்து விட்டது' என்று கருதி நெஞ்சத் துணிவில்லாதவனாய் விரைந்து ஓடி இரணியனையடைந்து, இறுதி விளைக்கும் தீக்கனாவைக் கண்டவன் போன்று வாய் வெருவிப் பின் வருமாறு கூறினான் என்பதாம். (34)

6350. எந்தை கேளெனக் கிம்மைக்கு
மறுமைக்கு மியம்பச்
சிந்தை யாலிறை நினைதற்கு
மடாதன செப்பி
முந்தை யேயுணர்ந் தேன்பொருள்
முற்றுமென் றுரைத்துன்
மைந்த னோதிலன் வேதமென்
றுரைத்தனன் வணங்கி.

" 'எந்தை! கேள்: எனக்கு இம்மைக்கும்
மறுமைக்கும் இயம்பச்
சிந்தையால் இறை நினைதற்கும்
அடாதன செப்பி,
'முந்தையே உணர்ந்தேன் பொருள் முற்றும்'
என்று உரைத்து, உன்
மைந்தன் ஓதிலன் வேதம்" என்று
உரைத்தனன், வணங்கி.

பொ:—என் தலைவனே! (யான் கூறுவதனைக்) கேட்பாயாக: உன் புதல்வனாகிய பிரகலாதன், எனக்கு இம்மை மறுமை நலங்களை யெண்ணி (வாயாற்) சொல்லுதற்கும் மனத்தால் நினைத்தற்கும் சிறிதும் ஒவ்வாத (தீய) சொற்களை யெடுத்துரைத்து, "வேதப் பொருள் முழுவதனையும் (ஓதாமல்) முன்னரே உணர்ந்து கொண்டேன்" என்று சொல்லி, (என்பால்) வேதத்தினை ஓதாதொழிந்தனன் என (இரணியனை) இறைஞ்சிக் கூறினன் (மறையவன்).

கு:—'எந்தை கேள்: உன் மைந்தன், அடாதன செப்பி, "பொருள் முற்றும் முந்தையே உணர்ந்தேன்" என்றுரைத்து வேதம் ஓதிலன்' என்று (மறையவன்) வணங்கி உரைத்தனன் என இயைத்துப் பொருள் கொள்க. எந்தை-அண்மை விளி. எனக்கு இம்மைக்கும் மறுமைக்கும் இயம்ப அடாதன, நினைதற்கு இறையும் அடாதன எனத் தனித்தனி இயைத்துரைக்க. (35)

இரணியன் குருவை நோக்கித் தன் மகன் கூறிய சொல்லைக் கூறுமாறு பணித்தல்

6351. அன்ன கேட்டவ னந்தண
வந்தணர்க் கடாத
முன்னர் யாவரு மொழிதரு
முறைமையிற் படாத
தன்ன துள்ளுறு முணர்ச்சியாற்
புதுவது தந்த
தென்ன சொல்லவ னியம்பிய
தியம்புதி யென்றான்.

'அன்ன கேட்டவன், "அந்தண!
அந்தணர்க்கு அடாத,
முன்னர் யாவரும் மொழிதரும்
முறைமையின் படாத,
தன்னது உள்ளுறும் உணர்ச்சியால்
புதுவது தந்தது,
என்ன சொல்? அவன் இயம்பியது
இயம்புதி" என்ருன்.

பொ :—(மறையவன் கூறிய) அச்சொற்களைக் கேட்ட இரணியன், (குருவாகிய அவனை நோக்கி,) வேதியனே! அருமறை யந்தணர்களுக்கு ஒவ்வாததும் யாவராலும் முன்பு சொல்லப் பெறும் முறைமையிற்படாததும் ஆக (என் மைந்தன்) தன் மனத்தின் கண்ணே பொருந்திய உள்ளுணர்ச்சியாற் புதுவதாகச் சொல்லியது என்ன சொல்? அவன் கூறியதனை (அவன் கூறியவண்ணமே) எடுத்துரைப்பாயாக எனக் கூறினன்.

கு :—அவன் இயம்பியது இயம்புதி-அவன் கூறியதனைக் கூறியவாறே மறைக்காமற் சொல்லுக. அவன் என்றது, தன் மைந்தனுகிய பிரகலாதனை. (36)

குரு 'அச் சொல்லைக் கூறின் நான் நரகம் எய்துவேன்' எனக் கூறுதல்

6352. அரச னன்னவை யுரைசெய
மறையவ னஞ்சிச்
சிரத லங்கரஞ் சேர்த்திடாச்
செவித்தொளை சேர்ந்த
உரக மன்னசொல் யானுனக்
குரைசெயி னுரவோய்
நரக மெய்துவெ னுவும்வெந்
துகுமென நவின்ருன்.

"அரசன் அன்னவை உரைசெய,
மறையவன் அஞ்சி,
சிரதலம் கரம் சேர்த்திடா,
"செவித்தொளை சேர்ந்த

உரகம் அன்ன சொல் யான்
உனக்கு உரைசெயின், உரவோய்!
நரகம் எய்துவென்; நாவும் வெந்து
உகும்" என நவின்ருன்.

பொ:—அசுரர் வேந்தனுகிய இரணியன் அம்மொழிகளைச் சொல்லிய அளவில் (குருவாகிய) வேதியன் அச்சமுடையனுய்த் தலையின் மேற் கைகுவித்து (வணங்கி,) 'திண்மை யுடையோனே! எனது செவித் துளையில் நுழைந்த பாம்பினை யொத்த (கொடுமை வாய்ந்த) அச்சொல்லினை நான் உனக்கு எடுத்துரைப்பேனுயின் (அத்தீவினையால்) நரகத்தை அடைவேன். (அச்சொல்லைச் சொல்லிய எனது, நாவும் வெந்தொழியும் எனக் கூறினுன்.

கு:—சிரதலம் கரம் சேர்த்தல்-தலையிடத்தே கைகளைச் சேர்த்தல்; தலைமேற் கைகுவித்து வணங்குதல். சேர்த்திடா-சேர்த்திட்டு. நின்புதல்வன் கூறிய அச்சொல், செவி கொடுத்துக் கேட்டாரைப் பாம்பு தீண்டினுற்போன்று வருத்தும் இயல்பினது என்பதனை என் அனுபவத்திற் கண்டேன். நஞ்சின் தன்மை வாய்ந்த அச்சொல்லை எனக்குத் தெய்வமாயமைந்த உன்பால் சொல்வேனுயின் அத்தீச் செயலால் நானும் நரகத்தையடைவேன்; அதனைச் சொல்லிய எனது நாவும் வெந்து சிதையும் என்று இரணியனை நோக்கி வேதியன் கூறினுன் என்பதாம். உரகம்-பாம்பு; மார்பினுல் ஊர்ந்து செல்வது என்னும் பொருளிற் பாம்பினைக் குறிக்கும் வடசொல். உரம்-திண்மை. உகுதல்-சிதைந்தழிதல். (37)

இரணியனது ஏவலால் அழைக்கப்பட்டுவந்த பிரகலாதன் தன் தந்தையை வணங்குதல்

6353. கொணர்கென் மைந்தனை வல்விரைந்
தென்றனன் கொடியோன்
உணர்வி னெஞ்சின னேவலர்
கடிதினி னேடிக்
கணனி னெய்தினர் பணியெனத்
தாதையைக் கண்டான்
துணையி லான்றனைத் துணையென
வுடையவன் ருெழுதான்.

"'கொணர்க என் மைந்தனை வல் விரைந்து"
என்றனன், கொடியோன்,
உணர்வு இல் நெஞ்சினன்; ஏவலர்
கடிதினின் ஓடி,
கணனின் எய்தினர், "பணி" என,
தாதையைக் கண்டான்;
துணை இலான்தனைத் துணை என
உடையவன் தொழுதான்.

பொ:—கொடுமையுடையவனும் நல்லுணர்வில்லாத மனத்தினனும் ஆகிய இரணியன், 'என் புதல்வனை மிக விரைந்து கொணர்க' எனப் பணித்தான். (அது கேட்ட) ஏவலாளர்கள் விரைந்து ஓடிக் கணப் பொழுதில் (பிரகலாதனை) அடைந்து உன் தந்தையின் கட்டளை (இதுவாகும்) என்று சொல்லத் தனக்கு ஒப்பில்லாதவனாகிய திருமாலை ஆருயிர்த் துணையெனக் கொண்டவனாகிய பிரகலாதன் தந்தையாகிய இரணியனைக் கண்டு வணங்கினான்.

கு:—கொடியோன் உணர்வு இல்நெஞ்சினன், 'என் மைந்தனைக் கொணர்க' என்றனன்: ஏவலர் கடிதினின் ஓடிக் கணனின் எய்தினர், 'பணி' என, துணையிலான்தனைத் துணையெனவுடையவன், தாதையைக் கண்டான்; தொழுதான் என முடிக்க. கொடியோன் உணர்வு இல் நெஞ்சினன் என்றது, இரணியனை. துணையிலான் என்றது, தன்னொப்பாரில்லாத இறைவனை. துணை-ஒப்பு. துணையிலான்தனைத் துணையென உடையவன் என்றது, இறைவனாகிய திருமாலையே ஆருயிர்த் துணையென உணர்ந்து போற்றும் பிரகலாதாழ்வானை. கணம் கணன் என மகரத்திற்கு னகரம் போலியாய் வந்தது. தன் தந்தையின் பணியெனக் கேட்டு ஏவலாளருடன் வந்த பிரகலாதன் தந்தையாகிய இரணியனைக் கண்டு அன்புடன் தொழுதான் என்பதாம். (38)

இரணியன் தன்னை வணங்கிய மைந்தனை மார்போடணைத்து அருகிருத்தி 'நீ குருவின்முன் சொல்லிய சொல்லினைக் கூறுக' எனப் பணித்தல்

6354. தொழுத மைந்தனைச் சுடர்மணி
மார்பிடைச் சுண்ணம்
எழுத வன்பினோ டிறுகுறத்
தழுவிமா டிருத்தி

முழுது நோக்கிநீ வேதியன்
கேட்கிலன் முனியப்
பழுது சொல்லிய தென்னது
பகருதி யென்றான்.

'தொழுத மைந்தனை, சுடர்மணி மார்பிடைச் சுண்ணம்
எழுத, அன்பினோடு இறுகுறத் தழுவி, மாடு இருத்தி,
முழுதும் நோக்கி, "நீ, வேதியன் கேட்கிலன் முனிய,
பழுது சொல்லியது என்? அது பகருதி" என்றான்.

பொ :—(தன்னை) வணங்கிய புதல்வனாகிய பிரகலாதனை (ப் பொன்னினது) ஒளியுடன் திகழும் (தனது) அழகிய மார்பினிடத்தே பூசப்பெற்றுள்ள நறுமணப் பொடியானது (அவனது மேனியிலே) படியும்படி (அன்போடு) இறுக அணைத்துத் தன் அருகில் அமரச் செய்து (அவனை) முழுவதும் உற்று நோக்கி 'மைந்தனே! நீ உன்னுடைய ஆசிரியன் கேட்டுப் பொறுத்தலாற்றாதவனாகி வெறுக்கும்படி தவறுடையதாகச் சொல்லிய சொல் யாது? (அதனைச்) சொல்வாயாக' எனப் பணித்தான்.

கு :—இரணியனது மேனி இயல்பாகவே பொன்வண்ணத்ததாதலால், 'சுடர்மணி மார்பு' எனப்பட்டது. சுண்ணம் - நறுமணப் பொடி. எழுதுதல் - பூசுதல்; படிதல் என்னும் பொருளில் இங்கு ஆளப்பெற்றது. மாடு - பக்கம்; அருகு. முனிதல் - வெறுத்தல். பழுது - குற்றம்; குற்றமுடைய சொல். (39)

இச்செய்யுளையடுத்து 52 என்னும் எண்ணுள்ள சுவடியில்,

6354 (a) என்னும் வாசகம் கேட்டலும் எழுந்துநின் றிறைவன்
பொன்னின் வார்கழல் பணிந்துவாய் புதைத்தரும் புதல்வன்
மன்னர் மன்னயான் பழுதொன்று முரைத்திலேன் மரபால்
உன்னு முண்மையை யுரைத்தனனென் கேளென வுரைப்பான்.

என்ற செய்யுள் மிகைப்பாடலாகக் குறிக்கப்பெற்றுளது.

பிரகலாதன் தான் சொல்லிய திருப்பெயரின் சிறப்பினைக் கூறுதல்

6355. சுருதி யாதியிற் றொடங்குறு
மெல்லையிற் சொன்ன
ஒருவன் யாவர்க்கு நாயகன்
றிருப்பெய ருணரக்

கருதக் கேட்ிடக் கட்டுரைத்
திடர்க்கடல் கடக்க
உரிய மற்றிதி னல்லதொன்
றில்லென வுரைத்தான்.

"'சுருதி ஆதியில் தொடங்குறும் எல்லையில் சொன்ன
ஒருவன், யாவர்க்கும் நாயகன், திருப்பெயர், உணரக்
கருதக் கேட்டிடக் கட்டுரைத்து இடர்க்கடல் கடக்க
உரிய மற்று இதின் நல்லது ஒன்று இல்" என உரைத்தான்.

பொ :—வேதமானது தான் முதற்கண் தொடங்கும் இடத்திலே சொல்லித் துதிக்கப்பெற்ற ஏகனும், (தேவர் முதலிய) யாவர்க்குந் தலைவனும் ஆகிய இறைவனது செல்வச் சிறப்பமைந்த பெயரானது, (அறிவினால்) ஆராய்ந்து உணரவும் (உள்ளத்தால்) நினைக்கவும் (செவியினால்) கேட்கவும் (நாவினால்) பொருள் விளங்கச் சொல்லித் துன்பக் கடலைக் கடக்கவும் உரியதாகும். இதனினும் பார்க்க (உயிர்கள் உய்தி பெறுதற்குரிய) நல்லதொரு சாதனம் பிறிதொன்றில்லை எனக் கூறினான் (பிரகலாதன்).

கு :—சுருதி - கேள்வி; வேதம். வேதம் ஆதியில் தொடங்கும் எல்லையாவது பிரணவம். அதனால் உணர்த்தப்படும்பொருள் ஏகனாகிய இறைவனே என்பான், 'சுருதி ஆதியில் தொடங்குறும் எல்லையிற் சொன்ன ஒருவன்' என்றான். ஒருவன் - ஏகன்; தனி முதற்பொருள். யாவர்க்கும் நாயகன் - எத்தகைய முதல்வர்களுக்கும் முதல்வனாகிய தலைவன். நாயகன் திருப்பெயர், உணர, கருத, கேட்டிட, கட்டுரைத்து இடர்க்கடல் கடக்க உரியது; மற்று இதின் நல்லது ஒன்று இல் என முடியும். உரியது என்பது உரிய எனக் கடைக்குறைந்து நின்றது. (40)

இரணியன், அப்பெயரைக் குறித்துக் கூறுக எனப் பணித்தல்

6356. தேவர் செய்கைய னங்ஙன முரைசெயத் தீயோன்
தாவில் வேதியன் றக்கதே யுரைசெயத் தக்கான்
ஆவ தாகுக வன்றெனி னறிகுவ மென்றே
யாவ தவ்வுரை யியம்புதி யியம்புதி யென்றான்.

'தேவர் செய்கையன் அங்ஙனம் உரைசெய, தீயோன்
"தா இல் வேதியன் தக்கதே உரைசெயத் தக்கான்;

ஆவது ஆகுக; அன்று எனின் அறிகுவம்" என்றே
"யாவது அவ் உரை? இயம்புதி இயம்புதி" என்றான்.

பொ:—(அசுரர் குலத்திற் பிறந்திருந்தும்) தேவர்க்குரிய ஒழுக லாற்றினை யுடையவனாகிய பிரகலாதன் அவ்வாறு சொல்லக் (கேட்ட) கொடியவனாகிய இரணியன், 'குற்றம் அற்ற அந்தணனாகிய குரு, தகுதியுடைய மொழியினையே சொல்லும் இயல்புடையான். (அச் சொல்) ஏற்புடையதாயின் ஆகுக. அங்ஙனம் அன்றாயின் அதனை (மைந்தன்பாற்) கேட்டறிவோம்' என்று கருதி, 'மைந்தனே! நீ சொல்லிய சொல் யாது? அதனைச் சொல்லுக சொல்லுக' எனக் கூறினான்.

கு:—பிரகலாதன் பிறப்பினால் அசுரர் குலத்தவனாயினும் தன் ஒழுகலாற்றால் வானோருள் ஒருவனாக வைத்து எண்ணப்பெறும் சிறப்புடையான் என்பது தோன்ற, அவனைத் 'தேவர் செய்கையன்' எனக் குறித்தார் ஆசிரியர். செய்கை - ஒழுகலாறு; அஃதாவது எவ்வுயிர்க்கும் இன்னா செய்யாதாராய், இறைவனை இடைவிடாது போற்றி 'இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை' என வாழும் வாழ்க்கை முறை. தீயோன் - இரணியன். தாஇல் வேதியன் - குற்றமில்லாத அந்தணன்; என்றது, பிரகலாதனுக்கு மறை ஓதுவிக்கும் கடமையினை மேற்கொண்ட ஆசிரியனை. 'தக்கதே யுரை செயத்தக்கான்' என்ற தொடர், எனது அரசியல் ஆணைக்கு உட்பட்டுத் தகுதியுடைய மொழியினையே மைந்தனுக்குப் பயிற்றும் இயல்பினன் எனவும், நிகழ்ந்தது கூறுதலாகிய மெய்ம்மொழியினையே பேசும் இயல்பினன் எனவும் பொருள்தந்து இரட்டுற மொழிதலாய் நின்றது. 'தாஇல் வேதியன் தக்கதே உரை செயத்தக்கான்; ஆவது ஆகுக, அன்று எனின் அறிகுவம்' என இரணியன் தன் மனத்துள் எண்ணிக்கொண்டு, தன் மைந்தனை நோக்கி, 'யாவது அவ்வுரை? இயம்புதி இயம்புதி' எனக் கூறினான் என்க. இயம்புதி இயம்புதி என்னும் அடுக்கு வெகுளிபற்றி வந்தது. (41)

பிரகலாதன் திருஎட்டெழுத்தின் பெருமையை விரித்துரைத்தல்

6357. காமம் யாவையுந் தருவது மப்பதங் கடந்தால்
சேம வீடுறச் செய்வதுஞ் செந்தழன் முகந்த
ஓம வேள்வியி னுறுபத முய்ப்பது மொருவன்
நாம மன்னது கேணமோ நாராய ணாய.

' "காமம் யாவையும் தருவதும், அப்பதம் கடந்தால்,
சேம வீடு உறச் செய்வதும், செந்தழல் முகந்த

ஓம வேள்வியின் உறுபதம் உய்ப்பதும், ஒருவன்
நாமம்; அன்னது கேள்: நமோ நாராயணாய.

பொ:—விரும்பிய எல்லா நலங்களையும் (குறைவின்றி) அளிப்பதும், (விழைவுறும் நிலையாகிய) அப்பதவிகளைக் கடந்த பின்னர் அழியாத பாதுகாப்புடைய வீட்டுலகத்தை அடையச் செய்வதும், செம்மை வாய்ந்த தீயினால் முகந்து கொள்ளப்படும் அவிப்பாகங்களையுடைய யாகத்தினால் அடையப்படும் (இந்திரன் முதலிய இமையவர்) பதங்களிற் செலுத்துவதும் (ஒப்பும் உயர்வும் இல்லாத) ஒருவனாகிய இறைவனது திருநாமமேயாகும். அதனை (இன்னதென்று சொல்ல)க் கேட்பாயாக: அது நமோ நாராயணாய என்பதாகும்.

கு:—காமம் - (உயிர்களால்) விரும்பப்படும் நற்பேறுகள்; இம்மையின்பங்கள். அப்பதம் - உயிர்களது விருப்ப வுணர்வுக்கு இடமாகிய அப்பதவிகள். அப்பதங் கடத்தலாவது, தாம் விரும்பிய நற்பேறுகளை யெல்லாம் ஆரத் துய்த்து அவற்றின்மேல் வைத்த பற்றினை அடியோடு விட்டொழித்துப் பேரின்பத்தினை வழங்கும் இறைவன் திருவடியினையே நாடுதல். சேமம் - பாதுகாப்பு. சேம வீடு - உயிர்கள் அவலக் கவலைக் கையாறுகளாகிய துன்பங்களின் நீங்கி என்றும் அந்தமில் இன்பமாகிய பேரின்பத்தினை நுகரும் வண்ணம் பாதுகாப்புடையதாய் அமைந்த பரமபதம். வேள்வியின் உறுபதமாவன, இந்திரன் முதலிய இமையவர் பதவிகள். ஒருவன் என்றது, தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தனி முதல்வனாகிய இறைவனை. 'தருவதும், உறச்செய்வதும், உய்ப்பதும் ஒருவன் நாமம்; அன்னது கேள், நமோ நாராயணாய' என முடியும். தான் மறையோதுதற்கு முன் சொல்லிய மந்திரம் திருமாலுக்குரிய எட்டெழுத்துத் திருப்பெயர் என்பதனைத் தன் தந்தையாகிய இரணியனுக்கு உணர்த்த எண்ணிய பிரகலாதன், 'சுருதி ஆதியில் தொடங்குறும் எல்லை' எனப் பிரணவத்தினை முதலிற் சுட்டி, அதன் பின்னர் அதன் விளக்கமாயமைந்த 'நமோ நாராயணாய' எனவரும் இம்மந்திரப் பகுதியைக் கூறினான் என்க. அன்புடைய அடியார்கள் உளங்கசிந்து உணர்ந்து ஓதுதற்குரிய இத் திருமந்திரமே அம் முதல்வனைக் குறித்து உலகத்தாரனைவரும் கூறுதற்குரிய திருப்பெயராகவும் அமைந்துளதென்பான், 'நாமம் அன்னது கேள் நமோ நாராயணாய' என்றான். 'உலகை ஈரடியால் நடந்த நம்பி நாமஞ் சொல்லின் நமோ நாராயணமே' (திவ். பெரிய திருமொழி 6-10) என்பது திருமங்கை ஆழ்வார் அருளிச் செயல். இறைவனது திருப்பெயராகிய இத்திருமந்திரம் இம்மை மறுமை அம்மை என்னும் மும்மை நலங்களையும் நல்கும் என்பதாம். (42)

6358. மண்ணி னின்றுமேன் மலரய னுலகுற வாழும்
எண்ணில் பூதங்க ணிற்பன திரிவன விவற்றின்
உண்ணி றைந்துள கரணத்தி னூங்குள வுணர்வும்
எண்ணு கின்றதிவ் வெட்டெழுத் தேபிறி தில்லை.

" 'மண்ணின் நின்று மேல் மலர் அயன் உலகு உற வாழும்
எண் இல் பூதங்கள், நிற்பன திரிவன, இவற்றின்
உள் நிறைந்துள, கரணத்தின் ஊங்கு உள உணர்வும்,
எண்ணுகின்றது, இவ் எட்டெழுத்தே; பிறிது இல்லை.

பொ :—மண்ணுலகம் முதலாக மேலே பிரமலோகம் வரை (உள்ள உலகங்களிற்) பொருந்த வாழும் எண்ணில்லாத உயிர்த் தொகைகளில் நிற்பன நடப்பனவாகிய இவற்றின் மனத்தகத்தே நிறைந்துள்ள உயிருணர்வும் (மனமுதலிய) கருவிகளைக் கடந்து தோன்றும் மெய்யுணர்வும் (இடைவிடாது) எண்ணிப் போற்றுவது திருஎட்டெழுத்தாகிய மந்திரமே; (இதுவன்றிப்) பிறிதில்லை.

கு :—மண் எனவே மண்ணுலகின் கீழுள்ளனவாகிய ஏழுலகங்களும் அடங்கின. மலர் அயன் உலகு - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமனது உலகம்; சத்தியலோகம். பூதங்கள் - உயிர்த்தொகுதிகள். 'பூதபரம்பரை பொலிய' (பெரிய-திருஞானசம்பந்தர்-1) என்பது பெரிய புராணம். நிற்பன - நிலைத்திணை. திரிவன - இயங்குதிணை. 'நிற்பன திரிவன இவற்றின் உள்நிறைந்துள (உணர்வும்) கரணத்தின் ஊங்கு உள உணர்வும், எண்ணுகின்றது, இவ் எட்டெழுத்தே; பிறிது இல்லை' என முடியும். இவற்றின் உள் நிறைந்துள உணர்வாவது, எவ்வுயிர்க்கும் மன முதலிய கருவிகளின் வழிப்பட்டு இயங்கும் உயிருணர்வு. கரணத்தின் ஊங்கு உள உணர்வாவது, பொறிபுலன்களின் போக்கினைத் தடுத்து மன முதலிய அகக் கருவிகளை ஒருவழிப்படுத்து உயிருணர்வின் மேலாக இறைவனருளால் தோன்றும் மெய்ஞ்ஞானம். அனைத்துயிர்களின் உள்ளுணர்விலும் கரணங் கடந்த மெய்யுணர்விலும் இடைவிடாது தியானிக்கப் பெறும் மறைமொழியாகத் திகழ்வது திரு எட்டெழுத்தாகிய மந்திரமே என்பதாம்.

(43)

6359. முக்கட் டேவனு நான்முகத் தொருவனு முதலா
மக்கட் காறுமிம் மந்திர மறந்தவர் மறந்தார்
புக்குக் காட்டுவ தரிதிது பொதுவுறக் காண்பார்
ஒக்க நோக்கின ரல்லவ ரிதனிலை யுணரார்.

'"முக்கண் தேவனும், நான்முகத்து ஒருவனும் முதலா,
மக்கள் காறும், இம் மந்திரம் மறந்தவர் மறந்தார்;
புக்குக் காட்டுவது அரிது இது; பொதுவுறக் காண்பார்
ஒக்க நோக்கினர் அல்லவர், இதன் நிலை உணரார்.

பொ:—மூன்று கண்களையுடைய மகாதேவனும், நான்கு முகங்களையுடைய ஒப்பற்றவனாகிய பிரமதேவனும் (முதலிய தேவர்கள்) முதலாக மக்கள் ஈறாக (உள்ளவர்களில்) இம் மந்திரத்தை மறந்தவர்கள் (யாவராயினும் அன்னோர் தமக்குரிய உறுதிப் பொருள்களை) மறந்தவராவர். இதன் பொருளை உட்புகுந்து நுணுகியறிந்து அறிவித்தல் என்பது (எத்திறத்தினர்க்கும்) எளிதின் இயலாததாகும். (காலம் இடம் முதலிய) வேற்றுமையற (மெய்ப்பொருளைப்) பொருந்தக்காணும் நல்லுணர்வுடைய ஞானிகளும் (அவர்களது கருத்தின் வழி) ஒன்றி உடன் இயைந்து நோக்கும் உள்ளமுடையவர்களும் அல்லாத ஏனையோர் இதன்கண் நிலைபெற்ற உண்மைப் பொருளை (உள்ளவாறு) உணரமாட்டார்கள்.

கு:—இது - திரு எட்டெழுத்தாகிய இம்மந்திரம். புக்குக் காட்டுதல் - பொருளியல்பினை உள்நுழைந்து அறிந்து தான் அறிந்ததனை ஏனையோரும் உணர அறிவித்தல். 'இது, புக்குக் காட்டுவது அரிது; பொதுவுறக் காண்பாரும் ஒக்க நோக்கினரும் அல்லவர் இதன்நிலை உணரார்' என இயையும். பொதுவுறக் காண்டலாவது. ஓரிடத்து ஒருகாலத்து இருந்தாங்கு இருந்தபடியே மூவிடத்தும் முக்காலத்தும் உள்ள பொருளை யோகக் காட்சியால் வேற்றுமையற ஒன்றிக் காணுதல். ஒக்க நோக்குதல் - நல்லறிஞர் காட்ட உடன் இயைந்து காணுதல். மெய்ப்பொருளை உள்ளவாறுணர்ந்து அதனைப் பிறரும் உணருமாறு எடுத்துரைக்கவல்ல நல்லாசிரியர்களும், அவர்கள் கூறும் மெய்ம்மொழிப் பொருளின் தகுதி யுணர்ந்து ஒன்றியிருந்து கேட்கும் நல்லியல்புடைய மாணாக்கர்களும் ஆகிய இரு திறத்தாரும் ஒருங்கிருந்து முறையே காட்டக் காணும் நிலையில் மெய்ப்பொருளை உணர்தல் இயலுமேயன்றிப் பக்குவமில்லாத ஏனையோரால் இத் திருமந்திரத்தின் பொருளை உள்ளவாறு உணர்த்தவும் உணரவும் இயலாதென்பதாம். (44)

6360. தோற்ற மென்னுமத் தொல்வினைத்
தொடுகடற் சுழிநின்
றேற்று நன்கல னருங்கலன்
யாவர்க்கு மினிய

மாற்ற மங்கல மாதவர்
வேதத்தின் வரம்பின்
தேற்ற மெய்ப்பொரு டெரிந்தமற்
றிதினில்லை சிறந்த.

'"தோற்றம் என்னும் அத் தொல்வினைத்
தொடுகடல் சுழிநின்று
ஏற்று நன்கலன், அருங்கலன்,
யாவர்க்கும் இனிய
மாற்ற மங்கலம், மாதவர்
வேதத்தின் வரம்பின்
தேற்ற மெய்ப்பொருள், தெரிந்த
மற்று இதின் இல்லை, சிறந்த.

பொ :—பிறவியென்னும் அந்த ஆழமான பெருங்கடலிற் பழவினைகளாகிய சுழியினின்றும் (உயிர்களை முத்தி யென்னும் கரையில்) ஏற்றும் நல்ல மரக்கலமாகவும், (யாவர்க்கும் கிடைத்தற்கு) அரிய அணிகலமாகவும், எத்திறத்தார்க்கும் இன்பத்தை விளைக்கும் மங்கல மொழியாகவும், பெருந்தவத்தோராற் போற்றிப் பயிலப் பெறும் வேதத்தின் முடிவில் தெளிந்துரைக்கப்படும் மெய்ப் பொருளாகவும் தெரிந்துணர்த்தப்பட்ட இம்மந்திரத்தினும் சிறந்த உறுதிப் பொருள் வேறொன்றுமில்லை.

கு :—தோற்றம் என்னும் அத்தொடுகடல் தொல்வினைச் சுழி நின்றும் ஏற்றும் நன்கலன் என மாற்றுக. தோற்றம்-பிறப்பு. தொடு கடல்-(ஆழமுடையதாகத்) தோண்டப்பட்ட கடல். தொடுதல்-தோண்டுதல். பிறவியைக் கடலாக உருவகித்தமைக்கேற்ப அதன் காரண காரியமாய்த் தொடருமியல்பினவாகிய பழவினைகளை அக் கடலிலுள்ள நீர்ச் சுழிகளாக உருவகஞ் செய்தார். ஏற்றுதல், கரை சேர்த்தல். நன்கலன்—நல்ல மரக்கலம். அருங்கலன்-கிடைத்தற்கு அரிய அணிகலன். யாவர்க்கும் இனிய மாற்றமாகிய மங்கலம் என விரியும். வேதத்தின் வரம்பு-வேதத்தின் எல்லை ; முடிவு. தேற்றம்-தெளியப் பட்ட பொருள். தெரிந்த இதனின் சிறந்த மற்று இல்லை என இயைத்துப் பொருள் கொள்க. (45)

6361. உன்னு யிர்க்குமென் னுயிர்க்குமிவ்
வுலகத்தி னுள்ள
மன்னு யிர்க்குமீ துறுதியென்
றுணர்வுற மதித்துச்

சொன்ன திப்பெய ரென்றன
னறிஞரிற் றூயோன்
மின்னு யிர்க்கும்வே லிரணியன்
றழலெழ விழித்தான்.

' "உன் உயிர்க்கும் என் உயிர்க்கும் இவ்வுலகத்தின் உள்ள
மன்னுயிர்க்கும் ஈது உறுதி என்று உணர்வுற மதித்துச்
சொன்னது இப்பெயர்" என்றனன், அறிஞரின் தூயோன்;
மின் உயிர்க்கும் வேல் இரணியன் தழல் எழ விழித்தான்.

பொ :—இத்திருப் பெயர் உன்னுடைய உயிருக்கும் என்னுடைய உயிருக்கும் இவ்வுலகத்தில் உள்ள நிலைபெற்ற எல்லாவுயிர்களுக்கும் இதுவே உறுதி விளைப்பதாகும் என்று (என்னுள்ளத்தே) உணர்வு தோன்ற (அதன் பயனாக) நன்கு ஆராய்ந்து சொல்லப்பெற்றதாகும் என்று கூறினான் அறிவுடையார் எல்லாருள்ளும் தூய்மையுடையவனாகிய பிரகலாதாழ்வான். (அம்மொழியினைக் கேட்ட அளவில்) ஒளி வீசும் வேற்படையையுடையவனாகிய இரணியன் (தன் கண்களில்) தீப்பொறி பறக்க (மகனை)ச் சினந்து நோக்கினான்.

கு :—இப்பெயர், சொன்னது என முடியும். சொன்னது-சொல்லப்பட்டது. ஈது உறுதி-இதுவே உறுதி விளைப்பது; உறுதி விளைப்பதனை உறுதி யென்றான். உணர்வு உற-உணர்வு தோன்ற. மதித்தல்-ஆராய்தல். இப்பெயர்-திரு எட்டெழுத்தாகிய இத்திரு நாமம். தழல் எழ விழித்தல்-கண்களில் தீப்பொறி தோன்ற உருத்து நோக்குதல். மின்-ஒளி. உயிர்த்தல்-வெளிப்படுத்துதல்; வீசுதல். (46)

இரணியன் பிரகலாதனை வெகுண்டுரைத்தல்

6362. அற்றை நாண்முதல் யானுள
நாள்வரை யப்பேர்
சொற்ற வாயையுங் கருதிய
மனத்தையுஞ் சுடுமென்
ஒற்றை யானைமற் றியாருனக்
கிப்பெய ருரைத்தார்
கற்ற தாரொடு சொல்லுதி
விரைந்தெனக் கனன்றான்.

'"அற்றை நாள்முதல், யான் உள நாள்வரை, அப்பேர்
சொற்ற வாயையும் கருதிய மனத்தையும் சுடும், என்
ஒற்றை ஆணை; மற்று, யார் உனக்கு இப்பெயர் உரைத்தார்?
கற்றது ஆரொடு? சொல்லுதி விரைந்து" எனக் கனன்றான்.

பொ :—(யான் இவ்வுலகில் முதல்வனாகிய) அந்த நாள் தொடங்கி உயிரோடு உள்ளவனாக (இனி) வாழும் நாள் வரையிலும் (நின்னாற் குறிக்கப்பட்ட) அந்தப் பெயரினைச் சொன்ன வாயையும் நினைத்த மனத்தையும் சுட்டொழிக்கும் எனது ஒப்பற்ற ஆணை. (அங்ஙனமாகவும் எனது ஆணையினைமதியாது) உனக்கு இந்தப் பெயரைச் சொன்னவர் யாவர்? (இதன் பொருளை நீ) கற்றுக்கொண்டது யாரிடத்தில்? விரைந்து சொல்வாயாக என வெகுண்டுரைத்தான்.

கு :—அற்றை நாள்-தவத்தின் ஆற்றலால் உலக முதல்வன் ஆகிய அந்த நாள். யான் உளநாள்-யான் வாழ்ந்த நாள் போக இனி எஞ்சியிருக்கும் வாழ்நாள். தன் மைந்தனாற் சொல்லப்பட்ட பெயரிடத்தே தனக்குள்ள வெறுப்புத் தோன்ற 'அப்பேர்' எனச் சுட்டினான். என்னால் வெறுக்கப்படும் அத்தீய பெயரினை உன் செவிக்குப் புலனாகச் சொல்லியவர் யாவர்? அப்பெயர்ப் பொருளை நீ யாரிடம் சென்று கற்றுணர்ந்தாய்? என வினவுவான், "யார் உனக்கு இப்பெயர் உரைத்தார்? ஆரொடு கற்றது?" என்றான். ஆரொடு - யாரிடத்தில்; உருபு மயக்கம். யார், ஆர் என்றாயிற்று. விரைந்து சொல்லுதி என இயையும். (47)

6363. முனைவர் வானவர் முதலினர் மூன்றுல கத்தும்
எனைய ருள்ளவர் யாவரு மென்னிரு கழலே
நினைவ தோதுவ தென்பெயர் நினக்கிது நேர
அனைய ரஞ்சுவர் மைந்தநீ யாரிடை யறிந்தாய்.

'"முனைவர் வானவர் முதலினர், மூன்று உலகத்தும்
எனைவர் உள்ளவர், யாவரும், என் இரு கழலே
நினைவது; ஓதுவது என்பெயர்; நினக்கு இது நேர
அனையர் அஞ்சுவர்; மைந்த! நீ யாரிடை அறிந்தாய்?

பொ :—முதல்வர்களாகிய மும்மூர்த்திகளும் தேவர் முதலியோரும் மூன்றுலகங்களிலும் உள்ளார் எத்துணை பேர்கள் அத்துணை பேர்களும் (மனத்தால்) நினைந்து போற்றுவது என்னுடைய வீரக்கழலணிந்த இரண்டு பாதங்களையுமே; (நாவினாற்) சொல்லித் துதிப்பது

(இரணியன் என்னும்) என்னுடைய பெயரையே. (இந்நடைமுறைக்கு மாருக) உனக்கு இப்(புதிய) பெயரை உடன்பட்டுச் சொல்லுதற்கு அன்னோர் யாவரும் அஞ்சுவார்கள். (ஆகவே) மகனே நீ இப் பெயரை யாரிடம் (கற்றுத்) தெரிந்து கொண்டாய்?

கு :—முனைவர் - முதல்வர்; என்றது, இவ்வுலகினைப் படைத் தளித்தழிக்கும் அயன் அரி அரன் என்னும் மும்மூர்த்திகளை. நேர்தல்-உடன்படுதல். (48)

6364. மறங்கொள் வெஞ்செரு மலைகுவான்
பன்முறை வந்தான்
கறங்கு வெஞ்சிறைக் கலுழன்றன்
கடுமையிற் கரந்தான்
பிறங்கு தெண்டிரைப் பெருங்கடல்
புக்கினம் பெயரா
துறங்கு வான்பெய ருறுதியென்
றுருனக் குரைத்தார்.

' "மறம்கொள் வெஞ்செரு மலைகுவான்
பல்முறை வந்தான்,
கறங்குவெஞ் சிறைக் கலுழன்தன்
கடுமையின், கரந்தான்;
பிறங்கு தெண்திரைப் பெருங்கடல்
புக்கு, இ(ன்)னம் பெயராது,
உறங்குவான் பெயர் உறுதி என்று
ஆர் உனக்கு உரைத்தார்?

பொ :—வீரம் மிக்க கொடிய போரினை (என்னுடன்) செய்தற் பொருட்டுப் பலமுறை எதிர்த்து வந்தவன் (என் முன் நிற்கலாற் ருது) சுழன்று பறக்கும் வெம்மை வாய்ந்த சிறகினையுடைய (ஊர்தி யாகிய) கருடனுடைய (பறத்தல்) வேகத்தால் (ஓடி) மறைந்தவனாய் (மேன்மேற்) பெருகிவரும் தெளிந்த அலைகளையுடைய பெரிய (பாற்) கடலிலே புகுந்து இந்நாள் வரை (அவ்விடத்தை விட்டுப்) பெய ராமல் (அக்கடலிலேயே) தூங்குகின்ருன். (அங்ஙனம் தூங்கிக் கிடப் பவனாகிய) அவனது பெயர், உறுதி விளைப்பதாகும் என்று உனக்குச் சொன்ன மடவோர் யாவர்?

கு :—கறங்குதல் - சுழலுதல்; சுழன்று பறத்தல் என்ற பொருளில் இங்கு ஆளப்பட்டது. கலுழன் - கருடன். கடுமை-வேகம். கரந்தான் - மறைந்தான். பிறங்குதல் - பெருகுதல்; 'பிறங்கி வந்து என்மேல் நிலைஇய நோய்' (கலித்-146) என்ற தொடர்க்கு, 'பெருகி வந்து என்மேல் நிலைபெற்ற காம நோய்' என நச்சினார்க்கினியர் எழுதிய உரை இங்கு நோக்கத் தக்கதாகும். நாள்தோறும் நாடி முறை செய்யும் வேந்தனாகிய எனது பெயர், என் கீழ் வாழுங் குடி மக்கள் யாவர்க்கும் நலந்தருவதாக அமைந்திருக்கவும், அப்பெயரைக் கூறாது, எனக்கு அஞ்சி ஓடி மறைந்து உறங்குவான் பெயரை உறுதி விளைக்கும் மந்திரமாகக் கொண்டு உனக்கு உபதேசித்த மடவோர் யாவர்? என இரணியன் தன் மகனை நோக்கி வெகுண்டு வினவினான் என்பதாம். (49)

6365. பரவை நுண்மண லெண்ணினு
மெண்ணரும் பரப்பிற்
குரவர் நங்குலத் துள்ளவ
ரவன்கொலக் குறைந்தார்
அரவி னாமத்தை யெலியிருந்
தோதின லதற்கு
விரவு நன்மையென் றுன்மதி
விளம்பென வெகுண்டான்.

' "பரவை நுண் மணல் எண்ணினும்
எண்ண அரும் பரப்பின்
குரவர் நம்குலத்து உள்ளவர்
அவன் கொ(ல்)லக் குறைந்தார்;
அரவின் நாமத்தை எலி இருந்து
ஓதினால், அதற்கு
விரவும் நன்மை என்? துன்மதி!
விளம்பு" என வெகுண்டான்.

பொ :—கடலினது நுண்ணிய மணலை (இவ்வளவின என்று) எண்ணி அளவிட்டாலும் எண்ணி அளவிட முடியாதவாறு பெருந் தொகையினராய் நம் (அசுர) குலத்தில் வாழ்ந்த முன்னோர்கள் (திருமால் ஆகிய) அவன் கொல்ல (இறந்துபோய்) அளவிற் சுருங்கினார்கள். எலியானது (தன் இனத்துக்குப் பகையாகிய) பாம்பினது

பெயரை அன்போடு இருந்து ஓதினுல் (அதனுல்) அந்த எலிக்கு வரும் நன்மை யாதுளது? கெட்டபுத்தி யுடையவனே சொல்வாயாக என (த் தன் மகனை)ச் சினந்துரைத்தான் (இரணியன்).

கு :—பரவை - கடல். குரவர் - முன்னோர். தன் குலப் பகைவனது பெயரை வெளியிட்டுரைத்தலும் பழியாம் என்பான், அவனது இயற் பெயர் கூருது 'அவன்' எனச் சுட்டினுன். அவன் என்றது, பிரகலாதனுற் சொல்லப்பட்ட 'நாராயணுய' என்னும் பெயருக்கு உரியவனுகிய திருமாலை. 'பாம்பும் எலியும் தீராக்குலப் பகையுடையனவாதல் போன்று தேவர் தலைவனுகிய அவனும் அசுரர்களாகிய நாமும் தீராப் பகையுடையோம் ஆகவும், என் மகனுகிய நீ அவனது பெயரை ஓதுவதால் உனக்கு யாதொரு நன்மையும் விளையாதென்பது மட்டுமன்று; அதற்கு மாருன தீமையே விளையும்' என்பான் 'அரவின் நாமத்தை எலி இருந்து ஓதினுல் அதற்கு விரவும் நன்மை என்' என வினவினுன் இரணியன். (50)

6366. வயிற்றி னுள்ளுல கேழினே
டேழையும் வைக்கும்
அயிர்ப்பி லாற்றலென் னனுசனை
யேனமொன் ருகி
எயிற்றி னுலெறிந் தின்னுயி
ருண்டவ னுமம்
பயிற்ற வோநினைப் பயந்தது
நானெனப் பகர்ந்தான்.

' "வயிற்றினுள் உலகு ஏழினேடு ஏழையும் வைக்கும்
அயிர்ப்பு இல் ஆற்றல் என் அனுசனை ஏனம் ஒன்று ஆகி
எயிற்றினுல் எறிந்து இன் உயிர் உண்டவன் நாமம்
பயிற்றவோ நினைப் பயந்தது நான்?" எனப் பகர்ந்தான்.

பொ :—(மேல்) ஏழும் (கீழ்) ஏழும் ஆகிய பதினுன்கு உலகங்களையும் (தனது) வயிற்றினுள்ளே அடக்கிவைக்கவல்ல ஐயுறப்படாத வன்மையினையுடைய என் தம்பி இரணியாட்சனை ஒரு பன்றியின் உருவாகித் தந்தத்தினுற் குத்தி (அவனது) இனிய உயிரைக் கொண்ட (பகைவனுகிய) திருமாலினது பெயரைப் பலமுறை ஓதுதற் பொருட்டோ யான் உன்னை (மகனுக)ப் பெற்றது? என்று (பின்வருமாறு) கூறினுன் (இரணியன்).

கு :—ஏழினோடு ஏழு உலகையும் வயிற்றினுள் வைக்கும் என் அனுசன், அயிர்ப்பு இல் ஆற்றல் என் அனுசன், எனத் தனித் தனி இயைத்துரைக்க. அயிர்ப்பு இல் ஆற்றல் - ஐயுறவிற்கு இடனில்லாத (தெளிந்த) வன்மை. அனுசன் - தம்பி; என்றது, இரணியனுடன் பிறந்தானாகிய இரணியாட்சனை. 'அயிர்ப்பிலாற்றலென் அண்ணலை' என்ற பாடங் கொண்டு, இரணியாட்சனை இரணியனுக்குத் தமையனாகக் கூறுவதும் உண்டு. "பொற்கணான் தம்பியென்றினைய போர்த் தொழில், விற்கணாண்பொருதவேதோளவுணர் வேறுளார்" (சுந்தரகாண்டம்-458) என இவ்வாசிரியர் கூறுதலும், கம்பராமாயண வசன ஆசிரியரும், இச்செய்யுட்கமைந்த இலங்கைக் குறிப்பும் இரணியாட்சனை இரணியனுக்குத் தமையன் என்றே தெளிவாகக் குறிப்பிட்டிருத்தலும், இச்செய்யுட் பொருளை அடியொற்றி,

"ஏனமொன்றென எழுந்து வந்தெம் ஐயன்
ஆவியுண்டவனை யின்று நீ
மானமின்றி யெதிரோதவோ வுனை
வளர்த்ததென்றிவை கிளர்த்தியே" (335)

என வரும் இரணியன் வதைப் பரணித் தாழிசையும் 'அயிர்ப்பிலாற்றலென் அண்ணலை' என்ற பாடத்தினை வலியுறுத்துவனவாகும். ஆயினும், வடமொழிப் பாகவதத்தில் இரணியன் தமையனாகவும் இரணியாட்சன் அவன் தம்பியாகவும் கூறப்பட்டிருத்தலால் அதற்கேற்ப இச்செய்யுளில் 'என் அனுசனை' என்ற பாடமே மூலத்திற் சேர்க்கப்பட்டது. ஏனம் - பன்றி. எறிதல் - குத்தித் தாக்குதல், பூமியைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு கடலில் மறைந்த பேராற்றல் வாய்ந்த தன் தம்பி இரணியாட்சனைத் திருமால் வராகவுருவாகிக் குத்திக் கொன்ற பகைமை நிகழ்ச்சியை எடுத்துரைத்துத் திருமால் தன் குலப் பகைவன் என்ற உண்மையைத் தன் மைந்தனுக்கு எடுத்துக் கூறி, பகைவன் பெயரைப் புகழ்ந்து ஓதுதற்கோ யான் உன்னை மகனாகப் பெற்றேன் என இரங்கினான் என்பதாம். (51)

6367. ஒருவன் யாவர்க்கு மெவற்றிற்கு
முலகிற்கு முதல்வன்
தருதல் காத்தவை தவிர்த்தலென்
றிவைசெயத் தக்கோன்
கருமத் தாலன்றிக் காரணத்
தாலுள்ள காட்சி
திருவி லீமற்றி தெம்மறைப்
பொருளெனத் தெரிந்தாய்.

'"ஒருவன், யாவர்க்கும் எவற்றிற்கும்
உலகிற்கும் முதல்வன்,
தருதல், காத்து, அவை தவிர்த்தல் என்று
இவை செயத் தக்கோன்,
கருமத்தால் அன்றிக் காரணத்தால்
உள்ள காட்சி
திருவிலீ ! மற்று இது எம்மறைப்
பொருள் எனத் தெரிந்தாய்?

பொ :—(மக்கள் தேவர் முதலிய) யாவர்க்கும் (அவரல்லாத) ஏனைய உயிர்களுக்கும் உலகத்திற்கும் முதல்வனாகவும், (உலகு உயிர்களைப்) படைத்தல் காத்தல் அழித்தல் என்னும் முத்தொழில்களைச் செய்யவல்ல தகுதி வாய்ந்தவனாகவும் உள்ளவன் (யான்) ஒருவனே. நற்பேறில்லாதவனே ! (இவ்வுண்மையினை இவ்வுலகில் வெளிப்பட நிகழும்) செயல்களாகிய காரியத்தைக் கொண்டு (கண்டு தெளிவது) அன்றி, (அனுமானித்து உணரத்தக்க) காரணத்தினால் காண முற்படுதலாகிய இவ்வுணர்வினை எந்த வேதத்தின் (முடிந்த) பொருளாகக் கண்டறிந்தாய் ?

கு :—யாவர்க்கும் எவற்றிற்கும் உலகிற்கும் முதல்வன், தருதல், காத்து. அவை தவிர்த்தல் என்று இவை செயத் தக்கோன் (யான்) ஒருவன்; திருவிலீ ! கருமத்தால் அன்றிக் காரணத்தால் உள்ள காட்சி இது எம்மறைப் பொருள் எனத் தெரிந்தாய் ? என மாற்றிப் பொருள் கொள்க. உலகத்திற்கும் அதன்கண் வாழும் உயர்திணை அஃறிணையாகிய உயிர்த் தொகுதிக்கும் தலைவனாகத் திகழ்பவன் (யான்) ஒருவனே என்பதனையும், இவ்வுலகினைப் படைத்துக் காத்து அழிக்கும் மூவகையாற்றல்களும் என்னிடமே அமைந்துள்ளன என்பதனையும், என்னுடைய செயல்களாகிய காரியத்தைக் கொண்டு நேரிற் காட்சியளவிற் கண்டறிதல் எளிதாகவும், அதனைக் காணாது கருதல் அளவையாகிய அநுமானப் பிரமாணத்தினைக் கொண்டு நின் தந்தையாகிய என்னினும் வேறாக இவ்வுலகிற்கு இறைவனொருவன் உளன் என்று கூறுதற்கு வேதம் சொல்லும் எந்தப் பொருளை நீ ஆதாரமாகக் கொண்டனை ? என இரணியன் தன் மகனை நோக்கி வினவினான் என்க. யாவர்க்கும் எவற்றிற்கும் தலைவனாக விளங்கும் என்னுடைய பெருஞ் செல்வமனைத்தும் என் மைந்தனாகிய உனக்கேயுரியனவாகவும் அவ்வுரிமை சிதையும்படி எனது பகைவனது பெயரைப் புகழ்ந்தோதி அச்செல்வங்களை யெல்லாம் வறிதே இழந்து போகின்றாயே என்பான், 'திருவிலீ' எனத் தன் மகனை நினைந்து இரங்கினான். (52)

6368. ஆதி யந்தங்க ளிதனின்மற்
றில்லைபே ருலகில்
வேத மெங்ஙன மங்ஙன
மவைசொன்ன விதியால்
கோதி னல்வினை செய்தவ
ருயர்குவர் குறித்துத்
தீது செய்தவர் தாழ்குவ
ரிதுமெய்ம்மை தெரியின்.

' " ஆதி அந்தங்கள் இதனின் மற்று
இல்லை, பேர் உலகில் ;
வேதம் எங்ஙனம், அங்ஙனம்
அவை சொன்ன விதியால்,
கோது இல் நல்வினை செய்தவர்
உயர்குவர் ; குறித்துத்
தீது செய்தவர் தாழ்குவர் ;
இது மெய்ம்மை, தெரியின்.

பொ :—மிகப் பெரியதாய் விரிந்த இவ்வுலகத்தில் (தொன்மையான) வேதங்கள் எவ்வாறு அறிவுறுத்துகின்றனவோ அவ்வாறு அவ் வேதங்கள் கூறிய விதிமுறைப்படி குற்றம் இல்லாத நற்செயலைச் செய்தவர்கள் (அறிவு ஆண்மை பெருமை ஆற்றல்களால் மேலும் மேலும்) உயர்வார்கள். தீய செயலை எண்ணிச் செய்தவர்கள் (தாம் இருந்த நிலையினை இழந்து) தாழ்வு அடைவார்கள். ஆராய்ந்து நோக்குங்கால் இதுவே உண்மையாகும். (வேதங்களின்) தொடக்கம் முதல் முடிவுவரை கூறப்பெற்றுள்ள பொருள்களில் (யான் கூறிய) இம் முடிபினையன்றி வேறொன்றும் இல்லை.

கு :—முதலடியினை இறுதியிற் கூட்டிப் பொருள்கொள்க. ஆதி-தொடக்கம். அந்தம்-முடிவு. வேதத்தின் தொடக்கம் முதல் முடிவு வரை கூறப்பட்ட அரும்பொருள்கள் 'ஆதியந்தங்கள்' என ஈண்டுத் தொகுத்துச் சுட்டப்பட்டன. கோது இல் நல்வினை-எண்ணிய நலங்களை எண்ணியவாறே அளிக்குந் திறத்தால் சிறிதும் குற்றம் இல்லாத நற்செயல். கோது-குற்றம். அறியாமையால் தீமை செய்தோரை அறிவுடையோர் பொறுத்தருளுதல் இயல்பு; அறிந்து தீமை செய்தோர் தம்மின் மிக்கோரால் ஒறுக்கப்பட்டுக் கீழ்நிலையில் தள்ளப்படுதல் உறுதி என்பான், 'குறித்துத் தீது செய்தவர் தாழ்குவர்' என்றான். குறித்தல்-மனத்திற்கருதுதல். வேதங்களில் விதிக்கப்பட்ட நற் கருமங்களைச் செய்தவர்கள் மேன்மேல் உயர்வர்

என்பதும், வேதங்களில் விலக்கப்பட்ட தீய செயல்களை மனத்தாற் கருதிச் செய்தவர்கள் தம் நிலையினின்றும் தாழ்ந்து கீழ்ப்படுவர் என்பதும் ஆகிய இதுவே, வேதங்களைத் தொடக்கம் முதல் முடிவு வரை ஆராய்வதனால் விளங்கும் உண்மையான முடிபென்றும், இதனின் வேறாக, உலகத்தைப் படைத்தளித்தழிக்கும் தனி முதல் வனாகிய இறைவனொருவன் உளன் என ஏற்றுக் கொள்ளவேண்டும் என்னும் நியதியில்லையென்றும், இரணியன் தன் மைந்தனுக்கு அறிவுறுத்தினான் என்பதாம். இரணியன் கொண்ட கொள்கையாகிய இம் முடிபு, வேதங்களை நன்குணர்ந்த சான்றோர்க்கு ஒப்ப முடிந்த தன்று என்பதனை,

'ஆதி யந்தம் அரியென யாவையும்,
ஓதினார் அலகில் லன உள்ளன;
வேதம் என்பன மெய்ந்நெறி நன்மையன்
பாதம் அல்லது பற்றலர், பற்றிலார்'
(கம்பர்-தற்சிறப்புப்பாயிரம்-3)

என வரும் பாடலில் இந்நூலாசிரியர் அறிவுறுத்தியிருத்தல் இங்கு ஒப்புநோக்கி யுளங்கொளத்தக்கதாகும். (53)

6369. செய்த மாதவ முடைமையி
னரியயன் சிவனென்
றெய்தி னார்பத மிழந்தனர்
யான்றவ மியற்றிப்
பொய்யி னாயகம் பூண்டபி
னினியது புரிதல்
நொய்ய தாகுமென் றாருமென்
காவலி னோலார்.

"செய்த மாதவம் உடைமையின்
அரி அயன் சிவன் என்று
எய்தினார் பதம் இழந்தனர்
யான் தவம் இயற்றிப்
பொய் இல் நாயகம் பூண்டபின்,
இனி அது புரிதல்
நொய்யது ஆகும் என்று,
ஆரும் என் காவலின் நோலார்.

பொ :—(முன்னை நாளிற்) செய்த பெருந் தவத்தினைத் தாம் பெற்றிருத்தலால் திருமால் பிரமன் சிவன் என்று (அவர்கள்) அப் பதவியை அடைந்தார்கள். யான் (அவர்களைக் காட்டிலும்) மிக்க தவத்தைச் செய்து என்றும் மாறாத தலைமையினை மேற்கொண்டமையால் (அம் மூவரும் தம் பதவிக்கு உரிய தலைமையினை) இழந்து தாழ்வுற்றனர். (தமது உயர்ச்சிக்குக் காரணமாகிய) அத் தவத்தினை எனது ஆட்சியில் இனி மேலும் மேற்கொண்டு செய்தல் என்பது வலியற்றதாய்ச் சிதைந்தொழியும் என்றுணர்ந்து அவருள் யாவரும் (எனது காவலின் வன்மையால்) தவத்தினைச் செய்ய மாட்டாதவர் ஆயினர்.

கு :—தவம் உடைமையின் அரி அயன் சிவன் என்று பதம் எய்தினர், யான் தவம் இயற்றி நாயகம் பூண்டபின் (பதம்) இழந்தனர்; இனி என் காவலின் அது புரிதல் நொய்யது ஆகும் என்று (என் காவலின்) ஆரும் நோலார் என இயைத்துப் பொருள் கொள்க. பொய் இல் நாயகம்-மாறுதல் இல்லாத தலைமை. பூண்டபின்-பூண்டமையால் ; 'பொய்த்தபின்' (திருக்குறள்-293) என்றாற் போன்று 'பின்' என்பதோர் வாய்பாடு பெற்ற வினையெச்சம். அஃது ஈண்டுக் காரணப் பொருட்டாய் நின்றது. 'பூண்டபின்' என்பதனை ஒரு சொல்லாகக் கொள்ளாது 'பூண்டபிறகு' என இரு சொல் தொடராகக் கொண்டு பொருளுரைப்பினும் அமையும். நொய்யது-திண்மையில்லாதது; வலியின்றிச் சிதையும் இயல்பினது. நோலார்-நோற்றலைச் செய்யார். அரி அயன் சிவன் என்னும் இம் மும்மூர்த்திகளும் உலகிற்குத் தலைவராகும் தகுதியினைத் தம் இயல்பால் மேற்கொண்டவரல்லர் எனவும், அன்னோர் தாம் செய்து போந்த முன்னைத் தவமுடைமையினாலேயே அவ் வுயர் பதவியினைப் பெற்றனர் எனவும், அவர்களினும் மேலாகத் தான் பெருந் தவம் இயற்றி அவர்கள் எல்லோர்க்குந் தலைவனாக விளங்கும் இந்நிலையில் அம் மூவரும் தாம் பெற்றிருந்த தலைமையினை இழந்து தாழ்வுற்றதுடன், தாம் உயர்வடைதற்கேற்ற தவத்தினை இனித் தாம் செய்தல் இயலாது என வுணர்ந்து தன் காவலின் வன்மையால் தவத்தினை மேற்கொள்ளுதற்கு இயலாதவராயினர் எனவும் இரணியன் தனது உயர்வறவுயர்ந்த தலைமைச் சிறப்பினைத் தன் மைந்தன் பிரகலாதனுக்கு எடுத்துரைத்தான் என்பதாம். (54)

6370. வேள்வி யாதிய புண்ணியந்
தவத்தொடும் விலக்கிக்
கேள்வி யாவையுந் தவிர்த்தனெ
னிவைகிளர் பகையைத்

தாழ்வி யாதன செய்யுமென்
றனையவர் தம்பால்
வாழ்வி யாதய லெவ்வழிப்
புறங்கொண்டு வாழ்வார்.

'"வேள்வி ஆதிய புண்ணியம்
தவத்தொடும் விலக்கி,
கேள்வி யாவையும் தவிர்த்தனென்,
'இவை கிளர்பகையைத்
தாழ்வியாதன செய்யும்' என்று;
அனையவர் தம்பால்
வாழ்வு யாது? அயல் எவ்வழிப்
புறங்கொண்டு வாழ்வார்?

பொ :—வேள்வி, தவம், நூற்கேள்வி முதலிய நற்செயல்களாகிய இவை (மாற்றார் உள்ளத்தே) பொங்கி மிதெழும் பகைமையுணர்வினை அடங்கச் செய்யாதனவாய் (அதனை)த் தூண்டி வளர்ப்பனவாகும் என்று கருதி (எனக்கு மாறுபட்டோர் செய்யும்) யாகம் முதலிய நற்கருமங்களையும் தவத்தினையும் தடுத்து (இவற்றுக்குக் காரணமாயமைந்த) நூற்கேள்வியினையும் (நிகழவொட்டாமல்) விலக்கினேன். (எனவே) எனது காவல் முறையாகிய ஆட்சியில் (மும்மூர்த்திகள் ஆகிய) அவர்கள்பால் அமைந்த நல் வாழ்வு யாது? (அன்னோர் எனக்கு) வேருகப் புறத்தே எங்ஙனம் துணை பெற்று வாழ்வார்கள்?

கு :—இவை, கிளர்பகையைத் தாழ்வியாதன செய்யும் என்று' வேள்வி ஆதிய புண்ணியம் தவத்தொடும் விலக்கிக் கேள்வி யாவையும் தவிர்த்தனென்; அனையவர் தம்பால் வாழ்வு யாது? அயல் எவ்வழிப் புறங்கொண்டு வாழ்வார்? என இயையும். இவை என்றது, முற்குறித்த வேள்வி முதலிய புண்ணியச் செயல்களை. கிளர்தல் - உள்ளிருந்து மூண்டு எழுதல். தாழ்வியாதன செய்தல் - அடங்கச் செய்யாதனவாய் மேல் எழத் தூண்டுதல். "அனையவர் தம்பால் வாழ்வியாது அயல் எவ்வழிப் புறங்கொண்டு வாழ்வார்" என வரும் தொடர்க்கு, "அந்தத் திரிமூர்த்திகள், தம்மை வாழ்வுறச் செய்யாது அயலாரை எப்படிப் பாதுகாத்து வாழ்வார்" எனப் பொருள்கூறி, "யாகம் முதலியன செய்தலால் என்னினும் மேம்பட ஒட்டாமல் அந்தத் திரிமூர்த்திகளையே அடக்கி வைத்திருக்கின்றேன். அப்படியிருக்க, அந்தத் திரிமூர்த்திகள் எப்படி உன்னைப் பாதுகாத்து வாழ்வார்" என இரணியன் மைந்தனை நோக்கி வினவியதாக விளக்கங் கூறுதலும் உண்டு. (55)

இச் செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்,

6370 (உ) அழிவில் வச்சிர யாக்கையென் அருந்தவத் தடைந்தேன்
ஒழிவில் ஆயிர கோடிகொள் உகம்பல கழியத்
தெளிவு பெற்றிறை பூண்டுளேன் யானலால் தெய்வம்
மொழியில் மூடரும் வேறுள தாமென்று மொழியார்.

என வரும் செய்யுள் மிகைப் பாடலாகக் குறிக்கப்பெற்றுளது.

6371. பேதைப் பிள்ளைநீ பிழைத்தது
பொறுத்தனென் பெயர்த்து
மேதில் வார்த்தைக ளினையன
விளம்பலை முனிவன்
யாது சொல்லின னவையவை
யிதமென வெண்ணி
ஓது போதியென் றுரைத்தன
னுலகெலா முயர்ந்தோன்.

'"பேதைப் பிள்ளை நீ; பிழைத்தது
பொறுத்தனென்; பெயர்த்தும்,
ஏதுஇல் வார்த்தைகள் இனையன
விளம்பலை; முனிவன்
யாது சொல்லினன், அவை அவை
இதம் என எண்ணி,
ஓது; போதி" என்று உரைத்தனன்—
உலகு எலாம் உயர்ந்தோன்.

பொ:—யாதும் அறியாத பிள்ளையாகிய நீ செய்த குற்றத்தைப் பொறுத்தேன். மீண்டும் (நின்னோடு எத்தகைய தொடர்பும் இல்லாத) பகைவனைப் போற்றிப் புகழும் இவை போலும் மொழிகளைப் பேசாதே. முனிவனாகிய ஆசிரியன் எதனை (உனக்கு)க் கற்பித் தானோ அந்த அந்த வார்த்தைகள் யாவும் நன்மைபயப்பன என்று எண்ணி (அவற்றை அவ்வாறே) ஓதுவாயாக. (இனி உன் ஆசிரியனுடன்) செல்க என்று (தன் மகனை நோக்கிக்) கூறினான்; உலகங்கள் எங்கும் உயர்வு பெற்று விளங்குபவனான இரணியன்.

கு:—இதனைச் செய்தால் இன்னது நேரும் என்னும் அறிவின்றிப் பின் விளைவறியாத பிள்ளைப் பருவத்தனாக நீ இருத்தலால் நீ செய்த இப் பெருங்குற்றத்திற்கு ஏற்ப நின்னை ஒறுத்தல் செய்

யாது பொறுத்தேன் என்பான், 'பேதைப் பிள்ளை நீ பிழைத்தது பொறுத்தனென்' என்றான். பேதைமை - நல்லது தீயது என்று யாதும் அறியாமை. பெயர்த்தும் - மீண்டும். ஏதில் வார்த்தைகள் - பகைவனைப் போற்றிப் புகழும் மொழிகள். ஏதின்மை - பகைமை; 'பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார் ஏதின்மை கோடி யுறும்' (திருக்குறள் - 816) என்புழிப் பரிமேலழகர் ஏதின்மை என்பதற்குப் பகைமை எனப் பொருள் கொண்டமை இங்கு நோக்கத்தக்கதாகும். இனி, 'ஏதில் வார்த்தைகள்' என்ற தொடரை, ஏது இல் வார்த்தைகள் எனப் பிரித்து, 'எத்தகைய பயனும் இல்லாத வீணான மொழிகள்' எனப் பொருள் கூறுதலும் பொருந்தும். இதம்-நன்மை. (56)

பிரகலாதன், தன் தந்தையாகிய இரணியனுக்குத் திருமாலாகிய பரம்பொருளின் இயல்பினை அறிவுறுத்தல்

6372. உரையுள துணர்த்துவ துணர்ந்து கோடியேல்
விரையுள வலங்கலாய் வேத வேள்வியின்
கரையுள தியாவருங் கற்குங் கல்வியின்
பிரையுள தென்பது மைந்தன் பேசினான்.

"“உரை உளது உணர்த்துவது; உணர்ந்து கோடியேல்;
விரை உள அலங்கலாய்!—வேத வேள்வியின்
கரை உளது; யாவரும் கற்கும் கல்வியின்
பிரை உளது” என்பது மைந்தன் பேசினான்.

பொ:—மணம் பொருந்திய மாலையை அணிந்தவனே! (யான் கூறுவதனை) உணர்ந்து ஏற்றுக்கொள்வாயானால் (உனக்கு என்னால்) உணர்த்துதற்குரிய வார்த்தையுளது. (அது) மறைகளுக்கும் யாகங்களுக்கும் முடிந்த எல்லையாக அமைந்தது; யாவராலும் கற்கப்படும் கல்வியாகிய பாலுக்கு உறைமோர்த் துளியாக உள்ளது என்னும் உண்மையை(ப் பிரகலாதனாகிய) மகன் (தன் தந்தையாகிய இரணியனுக்கு) எடுத்துரைத்தான்.

கு:—விரையுள அலங்கலாய்! உணர்ந்து கோடியேல் உணர்த்துவது உரை உளது; (அது) வேள்வியின் கரை (ஆக) உளது; யாவரும் கற்கும் கல்வியின் பிரை (ஆக) உளது என இயையும். விரை - நறுமணம். அலங்கல் - மாலை. யான் கூறும் இவ்வுரை வேத நூலறிவுக்கும் வேள்விப் பயனுக்கும் முடிவிடமாய் அமைந்த மெய்யுரை என்பான், 'வேத வேள்வியின் கரை உளது' என்றான்.

பிரை - பாலைத் தயிராக்குதற் பொருட்டுத் தெளிக்கப்பெறும் உறை மோர்த்துளி. அத் துளிதான் அளவிற் சிறிதாயினும் பால் முழுவதனையும் தன்னியல்பினதாக மாற்றிப் பாலிலிருந்து நெய்யாகிய பயனைக் கொள்ளுதற்குத் துணை செய்யுமாறு போன்று, யான்கூறும் இவ்வார்த்தையும் அளவிற் சுருங்கியதாயினும் பல நூல்களைக் கற்றோரது பரந்த கல்வியறிவினைத் தன்னியல்பினதாய் மாற்றி அவர் தம் கல்வியின் பயனைக் கொள்ளுதற்குத் துணைபுரியும் நல்லுரையாம் என்பான், 'யாவருங் கற்குங் கல்வியின் பிரையுளது' என்றான். 'பிரை சேர்பாலின் நெய்போல' (கோயில் மூத்த திருப்பதிகம்-5) என்பது திருவாசகம். உரையைப் பிரை என்று உருவகித்தமைக் கேற்பக் கல்வியைப் பாலாகக் கொள்ள வைத்தமையின் இஃது ஏக தேச வுருவகம். (57)

6373. வித்தின்றி விளைவதொன்
றில்லை வேந்தநின்
பித்தின்றி யுணர்தியே
லளவைப் பெய்குவன்
உய்த்தொன்று மொழிவின்றி
யுணர்தற் பாற்றெனக்
கைத்தொன்று நெல்லியங்
கனியிற் காண்டியால்.

' " வித்து இன்றி விளைவது ஒன்று இல்லை; வேந்த! நின்
பித்து இன்றி உணர்தியேல், அளவைப் பெய்குவன்;
' உய்த்து ஒன்றும் ஒழிவு இன்றி உணர்தற்பாற்று! என,
கைத்து ஒன்று நெல்லி அம் கனியின் காண்டியால்.

பொ :—மன்னனே! விதையில்லாமல் முளைப்பதொரு தாவர வகை இல்லை. நினது மயக்கவுணர்வினை விட்டு (உண்மையை) அறிவாயாயின் (இவ்வுலகம் தோன்றுதற்கு மூலமாயுள்ள முதற் பொருளை அறிதற்குரிய) பிரமாணத்தினை (நின் மனத்திற் படியும்படி) விளக்குவேன். (மெய்ப்பொருளாகிய அது) சிறிதும் இடைவிடாது தியானித்து உணரத்தக்க சிறப்புடையது என்று கையகத்ததாய்ப் பொருந்திய நெல்லிப் பழத்தினை ஒப்ப (விளங்க) அறிந்து கொள்வாய்.

கு :—யாவர்க்கும் எவற்றிற்கும் மூலகாரணமாயுள்ள முழுமுதற் பொருளையின்றி இவ்வுலகம் தோன்றி நிலைபெறுதல் இயலாது என்

பான், 'வித்தின்றி விளைவதொன்றில்லை' என உவமையின் வைத்துணர்த்தினன். பித்து - பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள்; மயக்கவுணர்வு. அளவு - பொருளுண்மை துணிதற்குக் கருவியாகிய பிரமாணம்; என்றது, கருதலளவையாகிய பிரமாணத்தினை. காணப்பட்ட உலகத்தால் காணப்படாத முதற் கடவுளது உண்மை கூறியவாறு. பெய்தல் - செறித்தல்; மனத்திற் பதியுமாறு விளக்குதல். ஒன்றும் ஒழிவின்றி உய்த்துணர்தற்பாற்று என இயையும். ஒரு பொருளை நேரிற் கண்டு உறுதியாக உணரும் முறைக்கு உள்ளங்கை நெல்லிக்கனியை உவமையாகக் கூறுதல் மரபு. 'தடக்கையின் நெல்லிக்கனி' (திருவாசகம்-3 : 162) எனவும், 'அங்கையுள் நெல்லி யதன்பயம்' (பு. வெ. கரந்தை. வெ. 13) எனவும் வரும் தொடர்கள் இங்கு ஒப்புநோக்கத்தக்கனவாகும். கைத்து - கையகத்தது. ஒன்றுதல் - பொருந்துதல். (58)

6374. தன்னுளே யுலகங்க ளெவையுந் தந்தவை
தன்னுளே நின்றுதா னவற்றுட் டங்குவான்
பின்னிலன் முன்னில னொருவன் பேர்கிலன்
தொன்னிலை யொருவராற் றுணியற் பாலதோ.

'"தன்னுளே உலகங்கள் எவையும் தந்து, அவை—
தன்னுளே நின்று, தான் அவற்றுள் தங்குவான்,
பின் இலன் முன் இலன், ஒருவன் ; பேர்கிலன் ;
தொல் நிலை ஒருவரால் துணியற் பாலதோ ?

பொ :—(தன்னொப்பாரில்லாத) ஒருவனாகிய இறைவன், எல்லா உலகங்களையும் தன்னுளிருந்து தோற்றுவித்து, உயிர்களாகிய அவை தனது வியாபகத்துக்குள்ளே அடங்கி நிற்பத் தான் அவற்றினுள்ளே (நீக்கமறத்) தங்கியிருப்பான்; தனக்கு மூலமாக எதுவும் இல்லாதவன்; தனக்குப்பின் எஞ்சி நிற்பது எதுவும் இல்லாதவன் (தன் நிலையினின்றும் சிறிதும்) மாறுபடாதவன். அவனது பழையதாகிய நிலைமை (இத்தன்மையதென்று) ஒருவரால் அறுதியிட்டுக் கூறும் எளிமையுடையதோ?

கு :—முன்னைச் செய்யுளில் கருதலளவையால் துணியப் பெற்ற முதற்கடவுளது இயல்பினை விரித்துரைக்கும் முறையில் அமைந்தது இச் செய்யுளாகும். இறைவன் உலகப் படைப்பிற்குப் பிறிதொரு முதற் காரணத்தினை வேண்டாது தன்னிடமிருந்தே உலகங்களைத் தோற்றுவிக்கின்றான் என்னும் வைணவ சித்தாந்தத்தினை அடியொற்றித் 'தன்னுளே உலகங்கள் எவையும் தந்து' என்றான்.

அவை என்றது உயிர்த்தொகுதியை. 'நிற்ப என்றது, நின்று எனத் திரிந்து நின்றது' (திருக்குறள்-11. பரிமேலழகர் உரை). "அவை தன் உள்ளே நிற்ப, தான் அவற்றுள் தங்குவான்" என்ற தொடர், 'உயிர்த் தொகுதிகளுக்குத் தான் நிலைக்களமானவன்; உயிர்கள் தோறும் அந்தரியாமியாய் நீக்கமறக் கலந்திருப்பவன்' என்னும் நாராயண மந்திரத்தின் இருவகைப் பொருளேயும் முறையே விளக்கி நின்றது. உலகத்திற்கு முன்னுள்ளோன் தானொருவனேயன்றித் தனக்கு மூலமாக எதனையும் இல்லாதவன் என்பான், 'முன் இலன்' என்றான். உலகமெல்லாம் அழிந்தொடுங்கும் ஊழிக்காலத்தும் தனக்குப் பின்னாக எஞ்சி நிற்பது எதுவும் இல்லாதவன் என்பான் 'பின் இலன்' என்றான். ஆதியும் அந்தமும் இல்லாதவன் என்றவாறு. முன்பின் என்பன ஆகுபெயர்கள். 'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே' என வரும் திருவாசகத் தொடர் இங்கு நினைக்கத் தக்கதாகும். (59)

6375. சித்தென வருமறைச் சிரத்திற் றேறிய
தத்துவ மவனது தம்மைத் தாமுணர்
வித்தக ரறிகுவர் வேறு வேறுணர்
பித்தரு முளர்சிலர் வீடு பெற்றிலார்.

' "சித்து என அருமறைச் சிரத்தின் தேறிய
தத்துவம் அவன்; அது தம்மைத் தாம் உணர்
வித்தகர் அறிகுவர்,; வேறு வேறு உணர்
பித்தரும் உளர் சிலர்; வீடு பெற்றிலார்.

பொ:—அரிய வேதங்களின் உச்சியிலே ஞானசொரூபம் என்று தெளிந்துரைக்கப்பெறும் பரதத்துவப் பொருளாக விளங்குபவன் அம் முதல்வன். தமது உண்மை நிலையை உணர்ந்த ஞானிகள் (அம் முதல்வனுக்குரிய) அத்தன்மையை நன்கு அறிவார்கள். (இவ்வாறன்றி) வேறு வேருகப் பிறழ உணர்கின்ற மயக்க வுணர்வினரும் சிலர் உள்ளார்கள். (அன்னோர் தம் பாசப் பிணிப்பினின்றும் நீங்கி) வீடுபேற்றினை அடைந்தாரல்லர்.

கு:—அருமறைச் சிரத்தின் 'சித்து' எனத் தேறிய தத்துவம் அவன்; 'தம்மைத் தாம் உணர் வித்தகர் அறிகுவர்' என இயையும். சித்து - முற்றறிவுடைய (முழுமுதற்) பொருள். அருமறைச் சிரம் - அரிய வேதங்களின் முடி; என்றது வேத நுண்பொருள்களை விளக்கும் உபநிடதங்களை. பித்தர் - மயக்கவுணர்வினோர். (60)

6376. அளவையா னளப்பரி தறிவி னப்புறத்
துளவையா யுபநிட தங்க ளோதுவ
கிளவியாற் பொருள்களாற் கிளக்கு ருதவன்
களவையா ரறிகுவார் மெய்ம்மை கண்டிலார்.

'' அளவையான் அளப்ப அரிது; அறிவின் அப்புறத்து
உளவை ஆய் உபநிடதங்கள் ஓதுவ;
கிளவியால் பொருள்களால் கிளக்குருதவன்
களவை யார் அறிகுவார்? மெய்ம்மை கண்டிலார்.

பொ:—(அம் முதல்வனது இயல்பு) காட்சி முதலிய பிரமாணங்களால் அளத்தற்கு அரியது; (உயிர்களது) அறிவுக்கு அப்பாற்பட்டுள்ள மறை பொருளை ஆராயும் உபநிடதங்கள் (அதனை) எடுத்துரைத்துப் போற்றுவன. சொல்லின் துணைகொண்டும் பொருளின் துணைகொண்டும் விளக்க ஒண்ணுதவனுகிய இறைவனது மாயத் தன்மையினை யார்தாம் அறியவல்லவர்? (அவனது) மெய்ம்மை நிலையினை (எவரும் உள்ளவாறு) காணப்பெற்றிலர்.

கு:—அளவை - பொருளின் உண்மையினை அளந்து துணிதற்குரிய பிரமாணம். அறிவு என்றது, கல்வி முதலியவற்றின் துணை கொண்டு உயிர்கள் பெற்ற அறிவினை. களவு - மாயம். (61)

6377. மூவகை யுலகுமாய்க் குணங்கள் மூன்றுமாய்
யாவையு மெவருமா யெண்ணில் வேறுபட்
டோவலி லொருநிலை யொருவன் செய்வினை
தேவரு முனிவரு முணரத் தேயுமோ.

'' மூவகை உலகும் ஆய், குணங்கள் மூன்றும் ஆய்,
யாவையும் எவரும் ஆய், எண் இல் வேறுபட்டு
ஓவல் இல் ஒரு நிலை ஒருவன் செய்வினை,
தேவரும் முனிவரும் உணரத் தேயுமோ?

பொ:—(மேல் கீழ் நடு என) மூவகைப்பட்ட உலகங்களாகியும், (சத்துவம், இராசதம், தாமதம் என்னும்) முக்குணங்களாகியும், (அஃறிணையாகிய) எல்லாப் பொருள்களும் (உயர்திணையாகிய) யாவரும் ஆகியும், எண்ணில்லாத வேறுபாட்டுடன் தோன்றியும் (யாண்டும் என்றும்) நீங்குதல் இல்லாத ஒரே நிலைமையினையுடைய

ஒப்பற்றவனாகிய இறைவன் செய்தருளும் செயல் தேவர்களும் முனிவர்களும் உணரும்படி (அத்துணை எளிமையுடையதாய்க்) குறையுமோ ?

கு :—உலகெலாம் ஆகியும் அவற்றிலுள்ள உயிருள்ளன இல்லனவாகிய எல்லாப் பொருள்களும் ஆகியும் இங்ஙனம் யாண்டும் பிரிவறக் கலந்து விளங்கும் இறைவன் செய்தருளும் தொழில், தேவர் முனிவர் முதலிய எத்தகைய அறிவாற்றல் படைத்தவர்களாலும் எளிதின் அறிந்து கொள்ளும் எல்லையிற்பட்டு அடங்கியதன்று என்பதாம். ஓவல் – ஒழிதல்; நீங்குதல். தேய்தல் - அளவிற்பட்டுச் சுருங்குதல். (62)

6378. சாங்கியம் யோகமென் றிரண்டு தன்மைய
வீங்கிய பொருளெலாம் வேறு காண்பன
ஆங்கவை யுணர்ந்தவர்க் கன்றி யன்னவன்
ஓங்கிய மேனிலை யுணரற் பாலதோ.

' " சாங்கியம், யோகம் என்று இரண்டு தன்மைய,
வீங்கிய பொருள் எலாம் வேறு காண்பன ;
ஆங்கு அவை உணர்ந்தவர்க்கு அன்றி, அன்னவன்
ஓங்கிய மேல் நிலை உணரற் பாலதோ ?

பொ :—பலவாய் மிகுந்துள்ள உலகப் பொருள்களை யெல்லாம் வெவ்வேறாகப் பகுத்துணர்த்துவனவாகிய நெறிகள் சாங்கியம் என்றும் யோகம் என்றும் இருவகைப்படுவன. அவற்றை உள்ளவாறு அறிந்தவர்க்கன்றி (ஏனையோர்க்கு) அம்முதல்வனது உயர்வற வுயர்ந்த சிறப்பியல்பு அறியும் இயல்பினதாகுமோ ?

கு :—தான் மற்றொன்றிற் றோன்றாததாய், உலகத் தோற்றத்திற்குத் தானே முதற் காரணமாயமைந்த மூலப் பகுதியும், அதன் கண் தோன்றிய மான் என்னும் தத்துவமும், அதன்கண் தோன்றிய அகங்காரமும், அதன்கண் தோன்றிய சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் தன் மாத்திரைகள் ஐந்தும், அவற்றின்கண் தோன்றிய மனமும், ஞானேந்திரியங்கள் ஐந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும், பூதங்கள் ஐந்தும், தான் ஒன்றிற் றோன்றாமலும் தன் கண் தோன்றுவன ஒன்றுமின்றியும் தனித்தமைந்த புருடனும் எனத் தத்துவங்கள் இருபத்தைந்தின் இயல்பினையும் உள்ளவாறு விரித்து விளக்குவது சாங்கிய நெறியாகும். இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி என்

னும் எண் வகை யோகப் பயிற்சியினையும் வழுவாது மேற்கொண்டு மனத்தைப் பொறிவழி போகாது தடுத்து இறைவனிடத்தே நிறுத்துவது யோக நெறியாகும். முறையே இவ்விருவகை நெறியினையும் நன்கு பயின்றவர்களே இறைவனது சிறப்பியல்பினை உணரவல்லவராவர் என்பதாம். வீங்குதல் - மிகுதல். ஆங்கு, அசை. ஓகாரம், எதிர்மறை. (63)

6379. கருமமுங் கருமத்தின் பயனு மப்பயன்
றருமுதற் றலைவனுந் தானு மானவன்
அருமையும் பெருமையு மறிவ ரேலவர்
இருமையென் றுரைசெயுங் கடனின் றேறுவார்.

' " கருமமும், கருமத்தின் பயனும், அப்பயன்
தரு முதல் தலைவனும், தானும், ஆனவன்;
அருமையும் பெருமையும் அறிவரேல் அவர்,
இருமை என்று உரைசெயும் கடல்நின்று ஏறுவார்.

பொ :—(உயிர்கள் செய்யும்) வினையும், அதனால் விளையும் பயனும், அப்பயனை(ச் செய்த உயிர்க்கு)த் தந்து நுகர்விக்கும் முதற் கடவுளும், (வினை செய்தற் கருத்தாவாகிய) உயிர்தானும் (ஆக இவ்வாறு) எல்லாம் ஆகி விளங்கும் அம் முதல்வனுடைய அருமை பெருமைகளை உள்ளவாறு அறியப் பெறுவாராயின், (அன்னோர்) நல்வினை தீவினை எனப்படும் கடலினின்றும் (முத்தியாகிய அக்கரையிலே) ஏறுவார்கள்.

கு :—கருமம் - நன்று தீதெனப்படும் வினைகள். கருமத்தின் பயன் - அவற்றால் விளையும் இன்ப துன்பங்கள். அப்பயன் தரும் முதல் தலைவன்-வினைப் பயன்களை வினைசெய்த உயிர்களே நுகருமாறு செய்யும் முதன்மையுடைய கடவுள். தான்-வினை செய்யும் கருத்தாவாகிய உயிர். இந்நால்வகைப் பொருள்களையும் "செய்வினையும் செய்வானும் அதன் பயனும் சேர்ப்பானும், மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள்" (பெரிய-சாக்கிய-) எனச் சேக்கிழாரடிகள் குறித்திருத்தல் இங்கு ஒப்பு நோக்கியுணரத்தக்கதாகும். வினை, வினைப்பயன், ஊட்டுவானாகிய இறைவன், வினை செய்வானாகிய உயிர் என இந்நான்குமாகி விளங்கும் இறைவனுடைய அருமை பெருமைகளை அறியவல்ல ஞானிகளே நல்வினை தீவினை யென்னும் கடல்களினின்றும் நீங்கி முத்திக் கரையினை அடைந்து இன்புறுவர் என்பதாம். (64)

6380. மந்திர மாதவ மென்னு மாலைய
தந்துறு பயனிவை முறையிற் சாற்றிய
நந்தலி றெய்வமாய் நல்கு நான்மறை
அந்தமில் வேள்விமாட் டவிசு மாமவன்.

"மந்திரம் மாதவம் என்னும் மாலைய,
தந்துறு பயன், இவை முறையின் சாற்றிய
நந்தல் இல் தெய்வம் ஆய் நல்கும்; நான்மறை
அந்தம் இல் வேள்விமாட்டு அவிசும் ஆம்—அவன்.

பொ :—அம்முதல்வன் (யாவராலும் தியானிக்கப்படும்) மந்திரம், (வேண்டிய வேண்டியாங்கு எய்தும்) பெருமை வாய்ந்த தவம் என்னும் இயல்பினையுடைய நற்கருமங்களாகவும், அவற்றால் தரப்பெற்று மிகும் பயன்களாகவும், இவற்றை முறைப்பட அருளிச் செய்த அழிவில்லாத. தெய்வமாகவும் (இருந்து உயிர்களுக்கு) அருளை வழங்குவான்; நான்கு வேதங்களால் அறிவுறுத்தப்படும் அழிவில்லாத யாகங்களிலே இடப்பெறும் அவியுணவாகவும் அமைவான்.

கு :—அவன், நல்கும்; அவிசும் ஆம் என முடியும். மாலை-இயல்பு. நந்தல் இல் - கெடுதல் இல்லாத. அந்தம் இல் - அழிவில்லாத. அவிசு - தேவர்களைக் குறித்து மந்திரங்கள் ஓதி வேள்வித் தீயில் இடப்பெறும் தேவருணவு. பரமனாகிய அவன், உயிர்கள் ஈடேறுதற்குச் சாதனமாகிய உபாயமாகவும் அவற்றால் அடையத் தகும் பயனாகவும் விளங்குகின்றான் என்பது கருத்து. 'கருமமும் கரும பலனுமாகிய காரணன் தன்னை' (திருவாய் மொழி 3-5-10.) என்பது நம்மாழ்வார் அருளிச் செயல். (65)

6381. முற்பயப் பயன்றரு முன்னி நின்றவர்
பிற்பயப் பயன்றரும் பின்பு போயவன்
றற்பயன் றான்றருந் தரும மில்லைய஽
தற்புத மாயையா லறிகி லார்பிறர்.

"முற்பயப் பயன் தரும், முன்னி நின்று, அவர்
பிற்பயப் பயன் தரும், பின்பு போய், அவன்;
தன் பயன் தான் தரும் தருமம் இல்லை; அஃது
அற்புத மாயையால் அறிகிலார் பிறர்.

பொ :—(இறைவனாகிய) அவன், உயிர்கள் முந்துற நுகர்தற்குரிய வினைப் பயன்களைக் கருதி(த் தானே முன் நின்று) அளிப்பான்; அவ்வுயிர்கள் பின்னர் நுகர்தற்குரிய வினைப் பயன்களை (அவ்வுயிர்களைத் தொடர்ந்து) பின் சென்று நுகர்விப்பான். (இவ்வாறன்றித்) தனது பயனைத் தானே தரவல்ல (உணர்வுடைய) வினை எதுவும் இல்லை. (மேற்குறித்த) அவ்வுண்மையினை (அவன் அருளின் வழி ஒன்றி நில்லாத) பிறர் (அவனது) வியக்கத்தக்க மாயையின் மறைப்பினால் அறிய மாட்டாதவராயினர்.

கு :—அவன், அவர் முற்பயப்பயன் முன்னி நின்று தரும்; பிற்பயப்பயன் பின்பு போய்த் தரும் என இயையும். அவன் என்றது, ஒருவனாகிய இறைவனை. அவர் என்றது, பலராகிய உயிர்த் தொகுதியை. முன் பயப்பயன் – முன்னே நுகர்தற்குரிய நிலையில் முதிர்ந்த வினைப் பயன். பின் பயப்பயன்-பின்னே நுகர்தற்குரிய வகையில் முதிராத நிலையிலுள்ள வினைப்பயன். தருமம் - செயல். உயிர்கள் செய்த இருவினைப் பயன்களில் முன்னே நுகர்தற்கு ஏற்ற வகையில் பக்குவப்பட்ட வினைப் பயன்களை முன்னரும், அவ்வாறு பக்குவப்படாத வினைப் பயன்களை அவை முதிர்ச்சியடைந்த பின்னரும் ஆக இம்முறையே உயிர்களுக்கு ஊட்டுபவன் இறைவன் ஒருவனே என்பதும், தன் பயனைத் தானே அருத்தவல்ல உணர்வு சடமாகிய வினைக்கு இல்லை யென்பதும், ஆகிய இவ்வுண்மையினை இறைவனது அருள்வழி நில்லாத ஏனையோர் அவனது வியக்கத்தக்க மறைப்புச் சத்தியால் உணரமாட்டாதவராயினர் என்பதாம். செய்த வினைப் பயன் தானே பயன்தரும்; அதனை அறிந்து கூட்டுதற்குத் தெய்வம் வேண்டுவதில்லை என்ற இரணியனது கூற்றினை மறுத்து, வினை அறிவற்ற சடமாதலின் அது, செய்தானையறிந்து காலத்தோடு எய்தித் தன் பயனை நுகர்வித்தல் இயலாது எனவும் வினைப் பயன்களை அவற்றின் முதிர்ச்சியறிந்து உயிர்களுக்கு ஊட்டுபவன் இறைவன் ஒருவனே எனவும் அறிவுறுத்தியவாறு. (66)

6382. ஒருவினை யொருபய னன்றி யுய்க்குமோ
இருவினை யென்பவை யியற்றி யிட்டவை
கருதின கருதின காட்டு கின்றது
தருபர னருளினிச் சான்று வேண்டுமோ.

"ஒரு வினை, ஒரு பயன் அன்றி உய்க்குமோ?
இரு வினை என்பவை இயற்றி யிட்டவை;
கருதின கருதின காட்டுகின்றது,
தரு பரன் அருள்; இனிச் சான்று வேண்டுமோ?

பொ :—(உயிர்கள்) செய்தனவாகிய இருவகை வினைகளுள் ஒரு வினை ஒரே பயனையன்றி (அதற்கு மேலும் மிக்க பயன்களை)த் தரவல்லதாகுமோ ? (அவ் வினைவகையானன்றி) அன்பர்கள் எண்ணிய எண்ணிய பயன்களையெல்லாம் (அவர்கள் எண்ணிய வண்ணமே) நுகர்விப்பது, (எல்லா நலங்களையும்) தரவல்ல இறைவனது திருவருளாகும். (எனவே வினைவலியினும் மேற்பட்டு விளங்கும் பேராற்றல் வாய்ந்தது இறைவனது திருவருள் என்பதற்கு) இனி (மேலும் வேறு) சாட்சி வேண்டுமோ ?

கு :—'வேள்வியும் தவமும் ஆகிய நல்வினைகளைச் செய்து அவற்றின் வன்மையால் யானே உலக முதல்வன் ஆயினேன் ; எனது ஆட்சியில் அயன் அரி அரன் என்னும் மும்மூர்த்திகளும் தவம் முதலிய நல்வினைகளைச் செய்யும் ஆற்றல் குன்றித் தம் தலைமையை இழந்தனர்' எனத் தன்னை வியந்துரைத்த இரணியனுக்கு, 'வினையின் ஆற்றலை யெல்லாம் கீழ்ப்படுத்து மேற்பட்டு விளங்குவது இறைவனது திருவருளே' என்னும் உண்மையினைப் பிரகலாதன் வற்புறுத்துவதாக அமைந்தது இச்செய்யுள். இயற்றியிட்டவை இருவினை என்பவை ; ஒருவினை ஒருபயன் அன்றி உய்க்குமோ என மாற்றிப் பொருள் கொள்க. உயிர்களாற் செய்யப்படும் வினைகள் நல்வினை தீவினை என இருவகைப்படுவன. அவற்றுள் ஒவ்வொரு வினையும் ஒவ்வொரு பயனையே விளைக்குமியல்பின. இங்ஙனமன்றி அன்பர்கள் எண்ணிய பயன்களை யெல்லாம் அவர்கள் எண்ணியவாறே ஒருசேர அளிக்கவல்லது இறைவனது திருவருளாதலின் அது, வினைவலியினும் மிக்க பேராற்றல் வாய்ந்தது என்பதற்கு அது தரும் பயனைக் காட்டிலும் வேறு சான்று வேண்டுவதில்லை என்பதாம். (67)

இச்செய்யுளின் பின் அமைந்த மிகைப் பாடலகளாக 52-என்னும் எண்ணுள்ள சுவடியில் பின்வரும் பாடல்கள் இரண்டும் குறிக்கப் பெற்றுள்ளன :—

6382 (a) 'உயிர்க்குயி ராகிநின் றுதவும் பான்மைபார்
அயிர்க்குறும் நேயர்தம் செயலிற் காண்டல்போல்
பயிர்ப்புறு மதனிலே பாசம் நீக்கிவே
றயிர்ப்பறு மறிவினில் அறிவர் சீரியோர்.

6382 (b) 'நான்முகத் தொருவனும் நாரிபாகனும்
தானகத் துணர்வதற் கரிய தத்துவத்—
தோனிகத் தொடுபர மிரண்டு மெங்குமாய்
ஊனகத் துயிரகத் துலவும் மூர்த்தியான்.

6383. ஓராவுதி கடைமுறை வேள்வி யோம்புவோர்
அராவணை யமலனுக் களிப்ப ரேலது
சராசர மனைத்தினுஞ் சாரு மென்பது
பராவரு மறைப்பொருள் பயனு மன்னதால்.

' " ஓர் ஆவுதி, கடைமுறை வேள்வி ஓம்புவோர்,
அரா–அணை அமலனுக்கு அளிப்பரேல், அது,
சராசரம் அனைத்தினும் சாரும்—என்பது,
பராவ அரும் மறைப் பொருள் ; பயனும் அன்னதால்.

பொ :—(வேத விதிப்படி) யாகத்தைச் செய்பவர்கள் (அந்த யாகத்தின்) முடிவிலே (அதன் பயனைப்) பாம்பணையிற் பள்ளிகொண்டருளிய தூயோனாகிய திருமாலுக்கு (உரிமை செய்து) ஓர் ஆகுதி கொடுப்பார்களாயின், அவ்வுணவு (இறைவனுக்குச் சரீரமாகப் பொருந்திய) சரம் அசரம் ஆகிய எல்லாவுயிர்களுக்கும் சென்று சேரும் என்பது துதித்தற்கரிய (பெருமை வாய்ந்த) வேதத்திற் கூறப்பட்ட பொருள் முடிவாகும். (ஆகுதியேயன்றி, வேள்வியாற் பெறும்) பயனும் (சராசரம் அனைத்தினும் சென்று சேரும்) அத் தன்மையதேயாகும்.

கு :—வேள்வி ஓம்புவோர், கடைமுறை அரா அணை அமலனுக்கு ஓர் ஆவுதி அளிப்பரேல், அது, சரம் அசரம் அனைத்தினும் சாரும் என இயையும். ஆவுதி - வேள்வித்தீ மூலமாகத் தேவர்களுக்குக் கொடுக்கப்படும் தேவருணவு. மக்கள் முதலியோரால் தொழப்படுந் தகுதி வாய்ந்த தேவர்களைக் குறித்துச் செய்யப்பெறும் வேள்வியின் முடிவில், அவ்வேள்விப் பயனைத் தேவர் அசுரர் முதலிய யாவர்க்குந் தலைவனாகிய திருமாலுக்கு உரிமை செய்யும் முறையில் ஓர் ஆகுதி கொடுத்தால், அது, நிற்பன நடப்பனவாகிய எல்லாவுயிர்களுக்கும் சென்று நலம் விளைக்கும் என வேதங் கூறுதலால், எவ்வுயிர்க்கும் உயிராக விளங்கும் இறைவன் அராவணையமலனாகிய திருமாலே என்பது நன்கு தெளியப்படும் எனப் பிரகலாதன் தன் தந்தைக்கு அறிவுறுத்தினன் என்பதாம். சரம்-நடப்பன. அசரம்-நிற்பன. (68)

6384. பகுதியி னுட்பயன் பயந்த தன்னதின்
விகுதியின் மிகுதிக ளெவையு மேலவர்
வகுதியின் வசத்தன வரவு போக்கது
புகுதியி லாதவர் புலத்திற் றுகுமோ.

'"பகுதியின் உட்பயன் பயந்தது; அன்னதின்
விகுதியின் மிகுதிகள் எவையும், மேலவர்
வகுதியின் வசத்தன; வரவு போக்கு அது,
புகுதி இல்லாதவர் புலத்திற்று ஆகுமோ?'

பொ :—(அராவணை அமலனாகிய அம்மெய்ப் பொருள்) மூலப் பகுதியின் உள்ளிருந்தும் காரிய ரூபமாகிய இவ்வுலகத்தை உண்டாக்கியது; (உலகிலுள்ள) எவ்வகைப் பொருளும் அம்மூலப் பகுதியினின்றும் (தோன்றி) வேறுபட்டு விரிந்தனவே. (பகுதியும் விகுதியும் ஆகிய இவை யாவும் இவற்றின் இயல்பினை உள்ளவாறுணர்ந்த) மேலோரது பகுப்பினுட்பட்டு அடங்குவனவாம். இவற்றின் தோற்றமும் ஒடுக்கமும் ஆகிய இயல்பு (அம்மெய்ப் பொருளைப் பற்றிய) ஞானமில்லாதாரது உணர்வுக்குப் புலப்படுந் தகையதோ.

கு :—பகுதி-மூலப் பிரகிருதி; அழியாததாய் அளவற்றதாய் முக்குணங்களுடன் கூடியதாய் உலகிற்கு முதற் காரணமாய்த் தனக்கு முதற் காரணமும் தோற்றக் கேடுகளும் இன்றி இறைவனது அருள் விளையாடற்குக் கருவியாய் விளங்குவது மூலப்பகுதி யென்றும், படைப்புத் தொழிலில் திருவுளங்கொண்ட இறைவனது அருட் செயலால் மூலப்பகுதியினின்றும் மான் (மகத்) முதலிய தத்துவங்கள் தோன்றி உலகமாய் விரியுமென்றும் கூறுவர். தொன்மையே வேறுபாடின்றி இயல்பாயமைந்த முதற் காரணப் பொருளாதலின் மூலப் பகுதியெனப் பெற்றது. இது 'தொண்டு' (பரிபாடல் 2-79) எனவும் வழங்கப்படும். இம்மூலப் பகுதியினின்றும் பலவாய் வேறுபட்டு விரிந்த பொருள்கள் யாவும் விகுதியெனப்பட்டன. விகுதிகளாகிய இவற்றை 'வேறுபாடுற்ற வீக்கம்' (சுந்தர - கடவுள் வாழ்த்து) என ஆசிரியர் முன்னர்க் குறித்தமை இங்கு நினைக்கத்தக்கதாகும். மேலவர்-ஐம்புலன்களையும் வென்று மேம்பட்ட பெரியோர். வகைபட விரிந்த தத்துவங்களாகிய இருபத்தைந்தும் இவற்றின் கூறுபாட்டினை உள்ளவாறு உணரவல்ல மேலோர்க்கே இனிது விளங்குவன என்பான், 'மேலவர் வகுதியின் வசத்தன' என்றான். வகுதி-வகை; என்றது, ஈண்டு வகுத்துணரும் உணர்வினை. "சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின், வகைதெரிவான்கட்டே யுலகு" (திருக்குறள்-27) என்றார் தெய்வப் புலவரும். வரவு-தோற்றம். போக்கு-ஒடுக்கம். புகுதி-அழுந்தியுணரும் நுண்ணறிவு. மூலப்பகுதியாகிய தத்துவம் பிரபஞ்சத்திற்குக் காரணமாய்த் தன்னின் விரிந்துள்ள இருபத்து நான்கு தத்துவ மயமாய்த் திருமாலாகிய இறைவனுக்குச் சரீரமாய் விளங்குவதென்றும், இந்த மூலப் பகுதியாகிய தத்துவத்தின் மேலாகப் பரமபதத்தில் திருமால் வீற்றிருக்கின்று

னென்றும் வைணவ சமய நூல்கள் கூறும். இதனை இந்நூலாசிரியர்,

" தகுதியாய் நின்ற வென்றி மாருதி தனிமை சார்ந்த
மிகுதியை வேறு நோக்கி னெவ்வண்ணம் விளம்புந் தன்மை
புகுதிகூர்ந் துள்ளார் வேதம் பொதுவுறப் புலத்து நோக்கும்
பகுதியை யொத்தான் ; வீரன் மேலைத்தன் பதமே யொத்தான் "
(கம்பர்-உயுத்த-முதற் போர்-222)

என வரும் பாடலில் உவமை முகத்தால் விளக்கியுள்ளமை காணலாம்.

" பகுதி யென்றுள தியாதினும் பழையது பயந்த
விகுதியால் வந்த விளைவுமற் றதற்குமே னின்ற
புகுதி யாவர்க்கு மரியவப் புருடனு நீயிம்
மிகுதி யுன்பெரு மாயையி னுல்வந்த வீக்கம் "
(கம்பர்-யுத்த-மீட்சிப் 100)

எனப் பிரமன் இராமபிரானை நோக்கி இறைவனுகிய அவனது இயல்பினை விரித்துரைத்துப் போற்றுவதாக அமைந்த செய்யுள், பகுதி, விகுதி, புகுதி என்னும் சொற்களுக்கு இவ்வாசிரியர் கொண்ட பொருளாட்சியை இனிது புலப்படுத்துவதாகும். (69)

6385. எழுத்திய னளத்தி னெண்ணி லாவகை
முழுத்தனி நான்முகன் முதல முற்றுயிர்
வழுத்தரும் பொகுட்டதோர் புரையின் வைகுமால்
விழுத்தனிப் பல்லிதழ் விரையு லாமுகில்.

'" எழுத்து இயல் நாளத்தின் எண் இலா வகை
முழுத் தனி நான்முகன் முதல முற்று உயிர்,
வழுத்து அரும் பொகுட்டது ஓர் புரையின் வைகுமால்,
விழுத் தனிப் பல் இதழ் விரை உலாம் முகிழ்.

பொ :—அளவில்லாத பகுப்புடையனவாகிய நிறைவுடைய சிறந்த பிரமன் முதலிய உயிர்கள் முழுவதும், ஓவியத்தின் தன்மை வாய்ந்த (அழகிய) தண்டினையும் மேலான சிறந்த பல இதழ்களையும் உடைய நறுமணம் வீசும் (திருமாலின் உந்தித் தாமரை) மலரில் துதிக்கத்தகும் அருமை வாய்ந்த கொட்டையின்கண் அமைந்த ஒரு துளையினுள்ளே தங்கியிருப்பனவாகும்.

கு :—எண்ணிலாவகை முழுத்தனி நான்முகன் முதல உயிர் முற்றும், எழுத்து இயல் நாளத்தின் விழுத்தனிப் பல் இதழ் விரை உலாம் முகிழ் வழுத்து அரும் பொகுட்டது ஓர் புரையின் வைகும் என இயையும். ஆல்-அசை. எழுத்து இயல் நாளம்-ஓவியத்தின் இயல் புடைய (அழகிய) தண்டு ; மந்திர எழுத்துக்களின் உருவாகிய தண்டு எனினும் அமையும். நாளம் - உள் துளையுடைய பூந்தண்டு. முழுமை-நிறைவுடைமை. உயிர் முற்றும் என உம்மை வருவித்துரைக்கப் பட்டது. பொகுட்டு-தாமரை மலரின் நடுவே அமைந்துள்ள கொட்டை என்னும் உறுப்பு. புரை-துளை. விரை-நறுமணம். முகிழ் என்றது, ஈண்டு மலரும் பருவத்து அரும்பினையொத்துத் தோன்றும் திருமாலின் உந்தித் தாமரையினை. இதன் இயல்பு,

'எண்டிசையுந் திண்சுவரா ஏழேழ் நிலைவகுத்த
அண்டப் பெருங்கோயிற் கெல்லாம் அழகுடைய
மண்டலங்கண் மூன்றின்மே லென்றும் மலராத
புண்டரிக மொட்டின் பொகுட்டே புரையம்மா'

(ஆரணிய–கவந்தப்-46)

என முன்னரும் விளக்கப் பெற்றிருத்தல் காணலாம்.

'மூவே ழுலகமும் உலகினுள் மன்பதும்
மாயோய் நின்வயிற் பரந்தவை யுரைத்தேம்'

(பரிபாடல்–ஃ. 9-10)

எனவும்,

'யாவகை யுலகமும் யாவரும் இல்லா
மேல்வரும் பெரும்பாழ்க் காலத்து
இரும் பொருட்கெல்லாம் அரும்பெறல் தனிவித்து
ஒருதானாகித், தெய்வ நான்முகக் கொழுமுளை யீன்று
முக்கண் ஈசனொடு தேவுபல நுதலி
மூவுலகம் விளைத்த உந்தி, மாயக் கடவுள்'

(திவ்ய-இயற்பா-திருவாசிரியம்-ஃ)

எனவும் வரும் தொடர்கள் இங்கு ஒப்புநோக்கியுணரத்தக்கன வாகும். (70)

6386. கண்ணினுங் கரந்துளன் கண்டு காட்டுவான்
உண்ணிறைந் திடுமுணர் வாகி யுண்மையான்
மண்ணினும் வானினு மற்றை மூன்றினும்
எண்ணினு நெடியவ னொருவ னெண்ணிலான்

'"கண்ணினும் கரந்துளன்; கண்டு காட்டுவான்;
உள் நிறைந்திடும் உணர்வு ஆகி உண்மையான்;
மண்ணினும், வானினும், மற்றை மூன்றினும்—
எண்ணினும் நெடியவன்; ஒருவன்; எண் இலான்,

பொ :—(இறைவனாகிய முதல்வன் காணுதற்குக் கருவியாகிய) கண்ணினுள்ளேயும் (அதனாற் காணவொண்ணாதபடி) மறைந்துள்ளான்; (உயிர்களோடு உடனாகி உலகப் பொருள்களைக்) கண்டு (அவற்றின் இயல்பினை உள்ளவாறு) அறிவுறுத்துவான்; உயிர்களின் உள்ளத்துள்ளே நிறைந்திடும் ஞானமாகி எழுந்தருளியுள்ளான்; நிலத்தின் பரப்பினைக் காட்டிலும் விசும்பின் உயர்ச்சியைக் காட்டிலும் ஏனைய (நீர் தீ காற்று என்னும்) மூன்று பூதங்களைக் காட்டிலும் (இவற்றை வகுத்துணரவல்லார்) மனத்தைக் காட்டிலும் நெடியவனாய் விளங்குபவன்; (தனக்கு நிகராவார் எவருமின்றி,) ஒருவனாக உள்ளான்; (அவனே எல்லாப் பொருள்களுமாகிக் கலந்து) எண்ணற்ற வடிவினனாகத் திகழ்கின்றான்.

கு :—கரத்தல்-மறைதல். "கரந்த சில்லிடந்தொறும் இடந்திகழ் பொருள் தொறும், கரந்தெங்கும் பரந்துளன் இவையுண்ட சுரனே" (திருவாய்மொழி-1-1-10) என்பது அருளிச் செயல். இறைவன் உயிர்களுக்குப் பொருள்களின் இயல்பினை உள்ளவாறுணர்த்துதல் வேண்டும் என்னும் அருட் குறிப்புடன் அவ்வுயிர்களோடு ஒருங்கு இயைந்து நின்று பொருள்களின் இயல்பினைத் தானே அறிந்து, அறிவித்து உதவி செய்கின்றான் என்பார், 'கண்டு காட்டுவான்' என்றார். 'காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்' (சிவஞானபோதம் 11-ம் சூத்திரம்) என வரும் மெய்கண்டார் வாக்கும், 'அறிவானுந் தானே அறிவிப்பான் தானே, அறிவாய் அறிகின்றான்தானே' (அற்புதத் திருவந்தாதி-20) என வரும் அம்மையார் அருள்மொழியும் இங்கு ஒப்பு நோக்கியுணரத்தக்கனவாகும். இறைவன் உயிர்களின் நெஞ்சத் தாமரையிலே ஞான சொரூபனாக எழுந்தருளியுள்ளான் என்பார், 'உள் நிறைந்திடும் உணர்வாகி யுண்மையான்' என்றார். 'மலர்மிசை யெழுதரும் மனனுணர்வளவிலன்' (திவ்ய-2676) என்பது திருவாய் மொழி. இறைவன் ஐம்பெரும் பூதங்களிலும் கலந்து அவற்றினும் நெடியனாய் விளங்கும் திறத்தை,

'திடவிசும் பெரிவளி நீர்நில மிவைமிசை
படர்பொருள் முழுவது மாயவை யவைதொறும்
உடல்மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்
சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரனே'

(திவ்ய-2681)

என வரும் திருவாய்மொழி இனிது விளக்குவதாகும். இறைவன் தான் ஒருவனாக இருந்தும் அன்பர்கள் கருதிய திருவுருவங்கள் பலவுங்கொண்டு பொருள்தோறும் கலந்து நின்று அருள்புரியும் இயல்பினனாகத் திகழ்கின்றான் என்பார் 'ஒருவன் எண்ணிலான்' என்றார். 'தான் ஒருவனுமே பலவாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ' (திருத்தோணோக்கம்-5) என்பது திருவாசகம். (71)

6387. சிந்தையிற் செய்கையிற் சொல்லிற் சேர்ந்துளன்
இந்தியந் தொறுமுள னுற்ற தெண்ணினால்
முந்தையோ ரெழுத்தென வந்து மும்முறைச்
சந்தியும் பதமுமாய்த் தழைத்த தன்மையான்.

' " சிந்தையின், செய்கையின், சொல்லின், சேர்ந்துளன்;
இந்தியம் தொறும் உளன்; உற்றது எண்ணினால்,
முந்தை ஓர் எழுத்து என வந்து, மும்முறைச்
சந்தியும் பதமும் ஆய்த் தழைத்த தன்மையான்.

பொ :—(எண்ணிலானாகிய அவன்) உயிர்களுடைய மனம் மொழி செயல் ஆகிய மூன்று கரணங்களிலும் பொருந்தியுள்ளவன்; (மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும்) ஐம்பொறிகள் தோறும் கலந்துள்ளவன்; (அவன் பொருள் தோறும் நீக்கமறக் கலந்து) பொருந்திய இயல்பினைக் கருதுங்கால், முற்பட ஓர் எழுத்தின் உருவாகத் தோன்றி, அதனோடு மூன்று புணர்ச்சியும் (நான்கு) பதமும் ஆகி யாண்டும் செறிந்த இயல்பினையுடையன் ஆவன்.

கு :—சிந்தை சொல் செய்கை என முறைப்பட மாற்றுக. இந்தியம்-பொறிகள்; இந்திரியம் என்னும் வடசொற் சிதைவு. உற்றது-(அவனுக்குப்) பொருந்திய இயல்பு. முந்தை ஓர் எழுத்து என்றது, மறைகளுக்கெல்லாம் வித்தாக முற்பட அமைந்த பிரணவத்தினை. வருதல்-தோன்றுதல். மும்முறைச் சந்தி என்றது, ஓம்+நம+நாராயண+ஆய என நான்கு பதங்கள் தம்முட் புணருங்கால் உளவாம் மூன்று புணர்ச்சியினை. பதம் என்றது, மேற்குறித்த மூன்று புணர்ச்சிகளும் அமையப் புணர்ந்த நான்கு பதங்களை. தழைத்தல்-செறிதல்; யாண்டும் நீக்கமற நிறைதல். தன்மையாவது, அந்தர்யாமித்துவம் எனப்படும் உயிர்க்குயிராதற்றன்மை. (72)

6388. காமமும் வெகுளியும் முதல கண்ணிய
தீமையும் வன்மையுந் தீர்க்குஞ் செய்கையா

ஞமமு மவன்பிற நலிகொ டாநெடுஞ்
சேமமும் பிறர்களாற் செப்பற் பாலவோ.

"காமமும் வெகுளியும் முதல கண்ணிய
தீமையும் வன்மையும் தீர்க்கும் செய்கையான்
நாமமும், அவன் பிற நலிகொடா நெடுஞ்
சேமமும், பிறர்களாற் செப்பற் பாலவோ?

பொ:—காமமும் சினமும் முதலியனவாகக் கருதப்பட்ட தீக்குணங்களையும் (அவற்றால் விளையும்) வன்செயல்களையும் (அறவே) நீக்கி நலம் புரியும் இயல்பினனாகிய இறைவனது திருப்பெயரின் பெருமையும் பிறவுயிர்கள் நலிதலைச் செய்யாதவாறு அவன் (மன்னுயிர்க்குச் செய்யும்) நிலைத்த புரத்தற்றொழிலின் சிறப்பும் (அவனது அருள்பெறாத) ஏனையோரால் சொல்லுந் தரத்தனவாமோ?

கு:—தீமை என்றது, ஈண்டு மனத்தாற் செய்யும் குற்றங்களை. வன்மை-வன்செயல்; கொடுமை. நாமம்-பெயர்; ஈண்டு அதன் பெருமையை யுணர்த்தி நின்றது. பிற நலிதலைக் கொடாவாறு அவன் (செய்யும்) நெடுஞ்சேமமும் என விரித்துப் பொருள் கொள்க. நெடுஞ்சேமம்-நிலைத்த பாதுகாப்பு. பிறர்-அவனது அருள் பெறாதாராகிய ஏனையோர். நாமமும் சேமமும் பிறர்களாற் செப்பற்பாலவோ என முடியும். (73)

6389. காலமுங் கருவியு மிடனு மாய்க்கடைப்
பாலமை பயனுமாய்ப் பயன்றுய்ப் பானுமாய்ச்
சீலமு மவைதருந் திருவு மாயுளன்
ஆலமும் வித்துமொத் தடங்கு மாண்மையான்.

"காலமும் கருவியும் இடனும் ஆய், கடைப்
பால் அமை பயனும் ஆய், பயன் துய்ப்பானும் ஆய்,
சீலமும் அவைதரும் திருவும் ஆய், உளன்—
ஆலமும் வித்தும் ஒத்து அடங்கும் ஆண்மையான்.

பொ:—ஆலமரமும் (அதனைத் தன்னகத்தே அடக்கியுள்ள) விதையும் போன்று (உலகம் யாவையும் தனது நுண்ணுருவில்) அடங்கியமைதற்கேற்ற பேராற்றலுடையவனாகிய இறைவன், (தொழில் நிகழ்ச்சிக்கு இன்றியமையாத) காலமும் கருவியும் இடமும் (தொழிற்) பயனும் அப்பயனை நுகரும் புருடனும் ஆகி, (உயிர்களைத் தூய்மைப்படுத்தும்) நல்லொழுக்கமும் 'அவ்வொழுக்கங்கள் தரும் பெருஞ் செல்வமுமாக விளங்குகின்றான்.

கு :—பேரரசரும் படையுடன் தங்கியிருத்தற்கேற்றதாய்க் கிளைகளுடன் வளர்ந்து நிழல்தரும் பெரிய ஆலமரத்தினைச் சிறிய விதையொன்று தனக்குள் அடக்கியவாறு போன்று, உலகமெல்லாவற்றையும் தனது நுண்ணருவில் அடக்கிய வியக்கத்தக்க பேராற்றல் படைத்தவன் இறைவன் என உணர்த்துவார், 'ஆலமும் வித்தும் ஒத்து அடங்கும் ஆண்மையான்' என்றார். ஆண்மை என்றது அளவிறந்த பேராற்றலை. 'ஆலமர்வித்தின் அருங்குறளானான்' (கம்பர். பால. வேள்வி 21) என வரும் தொடர் இங்கே ஒப்புநோக்குதற்குரியதாகும். தொழில் நிகழ்ச்சிக்கு முதற் காரணமாயுள்ளவை செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள், இன்னதற்கு, இது பயன் என்னும் எட்டென்பர் இலக்கண நூலார். உலகத் தொழில் நிகழ்ச்சிகளுக்கு இன்றியமையாத இவ் எண் வகைக் காரணங்களாகவும் இயைந்து விளங்குபவன் இறைவன் ஒருவனே என்பது இச்செய்யுளின் கருத்தாகும். "கருமமுங் கருமபலனுமாகிய காரணன்' (திருவாய் மொழி-3-5-10) என வரும் அருளிச்செயல் இங்கு நினைத்தற்குரியதாகும். (74)

6390. உள்ளுற வுணர்வினி துணர்ந்த வோசையோர்
தெள்விளி யாழிடைத் தெரியுஞ் செய்கையின்
உள்ளுளன் புறத்துள னொன்று நண்ணலான்
தள்ளரு மறைகளு மருளுந் தன்மையான்.

' " உள்ளுற உணர்வு இனிது உணர்ந்த ஓசை, ஓர்
தெள்விளி யாழிடைத் தெரியும் செய்கையின்,
உள் உளன்; புறத்து உளன்; ஒன்றும் நண்ணலான்;
தள்(ள) அரு மறைகளும் மருளும் தன்மையான்.

பொ :—(இசை வல்லாரது) உள்ளத்தினுள்ளே பொருந்த உணர்வினால் உணரப்பட்ட (ஏழிசைத் திறமாகிய) ஓசையானது, (அவரால் இயக்கப்படும்) ஒப்பற்ற தெளிந்த இனிய ஓசைக்கு இடனாகிய யாழ்க் கருவியிலே புலப்படத் தோன்றுமாறு போன்று (இறைவனாகிய அம் முதல்வன்) எல்லாப் பொருள்களின் உள்ளேயும் உள்ளான்; அவற்றின் புறத்தேயும் உள்ளான்; (ஆயினும் அப் பொருள்களுள்) ஒன்றினது தன்மையும் தன்னை (ஊடுருவி)க் கலக்காதவாறு (தூயனாக) உள்ளான்; (யாவராலும்) விலக்க ஒண்ணாத அரிய வேதங்களும் (இன்னதன்மையன் என்று அறிய ஒண்ணாது) மயங்கும்படியான இயல்பினையுடையான் (அவன்).

கு :—இசை வல்லாரது உள்ளத்தினுள்ளே பொருந்தி அமைந்த இனிய இசைத்திறமே அவரால் வாசிக்கப்பெறும் யாழ்க் கருவியிலும் விளங்கித் தோன்றுமாறு போன்று, உயிர்களின் உள்ளத்தே உயிர்க் குயிராய் எழுந்தருளிய இறைவனே எல்லாப் பொருள்களிலும் பிரிவற அமர்ந்து அவற்றின் புறத்தேயும் வெளிப்பட்டுத் தோன்றி யருள்கின்றான் என்பார், "உள்ளுற உணர்வு இனிது உணர்ந்த ஓசை, ஓர் தெள்விளி யாழிடைத் தெரியுஞ் செய்கையின், உள் உளன் புறத்து உளன்" என்றார். தெள்விளி - தெளிந்த ஓசை. தெரிதல்- புலப்படத் தோன்றுதல். "முன் நல்யாழ் பயில் நூல் நரம்பின் முதிர் சுவையே" (திருவாய்மொழி. 2-3-7) எனவும், "ஏழிசை யேழ் நரம்பின் ஓசையை" (சுந்தரர் தேவாரம். 7-83-6) எனவும் வரும் தொடர்கள் இங்கு நினைக்கத்தக்கன. இங்ஙனம் இறைவன், உயிர்கள் உயிரல் பொருள்கள் ஆகிய எல்லாவற்றினும் உள்ளும் புறம்பும் நீக்கமறக் கலந்துள்ளானாயினும் அப்பொருள்களின் மாசுபட்ட தன்மையெதுவும் தன் தன்மையில் ஊடுருவிக் கலக்க வொண்ணாதபடி தான் என்றும் தூயோனாகத் திகழ்கின்றான் என்பார், 'ஒன்றும் நண்ணலான்' என்றார். "இவற்றின் தன்மை தனக்கெய்தலின்றித் தானே நிலவு சீர் அமலனாகி நின்றனன் நீங்காதெங்கும்" (சிவஞானசித்தியார்- சுபக்கம்-91.) என்றார் அருணந்தி சிவாசாரியாரும். வேதங்களும் இறைவனது இயல்பினை உணரவொண்ணாது மயங்குந் திறத்தினை, 'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே' (சிவ புராணம்-34, 35) எனத் திருவாதவூரடிகள் குறித்துள்ளமை இங்கு ஒப்புநோக்கி யுணரத்தக்கதாகும். (75)

6391. ஓமெனு மோரெழுத்
ததனி னுள்ளுயிர்
ஆமவ னறிவினுக்
கறிவு மாயினான்
தாமமூ வுலகமுந்
தழுவிச் சார்தலால்
தூமமுங் கனலும்போற்
றொடர்ந்த தோற்றத்தான்.

' "ஓம் எனும் ஓர் எழுத்து அதனின் உள் உயிர்
ஆம் அவன், அறிவினுக்கு அறிவும் ஆயினான்
தாம மூவுலகமும் தழுவிச் சார்தலால்,
தூமமும் கனலும்போல் தொடர்ந்த தோற்றத்தான்.-

பொ :—ஓரெழுத்தாக அமைந்த ஓம் என்னும் பிரணவத்தினுள்ளே (பொருந்திய அ உ ம் என்னும் மூன்றனுள்) அகரவுயிராய்த் திகழும் அவ் இறைவன், (உயிர்களின்) அறிவுக்கெல்லாம் (உள் நின்றுணர்த்தும்) ஞானமாகவும் விளங்குகின்றான். பரமபதத்திலும் மூன்றுலகங்களிலும் (யாண்டும் நீக்கமற) விரவிப் பொருந்தியிருத்தலால், புகையும் அதற்குக் காரணமாகிய தீயும் போன்று (காரிய காரணமாய்ப்) பொருந்திய இயல்பினையுடையான்.

கு :—அறிவு நூல்களுக்கெல்லாம் முதலாகிய பிரணவம் அ உ ம் என்னும் மூன்றும் புணர்ந்த ஒரு பதமாயினும் பிரிவற நின்று இசைத்தலால் ஓரெழுத்தாய் இறைவனது திருப்பெயருடன் ஓரெழுத்தாக வைத்து எண்ணப்படும் மரபு பற்றி 'ஓமெனும் ஓரெழுத்து' எனப்பட்டது. அதன்கண் அமைந்த எழுத்துக்கெல்லாம் உயிராய் விளங்கும் இயல்புடையது அகரம். அகரத்தின் பொருளாவான் இறைவன் ஆதலின் 'அதனின் உள் உயிராம் அவன்' என்றார். 'தோன்று சோதி மூன்றுமாய்த் துளக்கமில் விளக்கமாய்' (திவ்ய-755) என வரும் திருச்சந்த விருத்தம் இப்பொருளை இனிது விளக்குதல் அறியத்தக்கதாகும். உயிர், மெய் எனப்படும் எழுத்துக்கள் எல்லாவற்றின் இயக்கத்திற்கும் காரணமாய் அகரம் முன்னிற்றல் போன்று இயங்குவன நிற்பனவாகிய எப்பொருட்கும் காரணமாய் முன்னிற்பவன் இறைவன். "அகரம் தனியே நிற்றலானும் பல மெய்க்கண் நின்று அவ்வம் மெய்கட்கு இசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்டதாகலின், ஒன்றேயாயும் பலவேயாயும் நிற்பதோர் தன்மையுடைத்தென்று கோடும்; இறைவன் ஒன்றேயாய் நிற்குந்தன்மையும் பல்லுயிர்க்குந் தானேயாய் நிற்குந் தன்மையும் போல" எனவும், "இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும் தனி மெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையேயாய் நிற்கும் என்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது. 'அகர முதல' என்னுங் குறளான் 'அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம்; அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகம்' என வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும், கண்ணன் 'எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே' எனக் கூறியவாற்றானும் பிற நூல்களானும் உணர்க" எனவும் (தொல் - நூல் மரபு 1, மொழிமரபு 13) நச்சினார்க்கினியர் கூறிய விளக்கம் இங்கு நினைக்கத்தக்கதாகும். "அகரம் முதலினெழுத்தாகி நின்றாய்" (திருநெல்வாயில் 7-3-7) என்பது நம்பியாரூரர் வாய்மொழியாகும். அறிவினுக்கு அறிவாதல்-உயிரறிவின் உள் நின்றுணர்த்தும் ஞானமாய் நின்று உதவுதல். தாமம் - பரந்தாமம். 'விண்முழுதும் எதிர்வரத்தன் தாமம் மேவி' (பெருமாள்

திருமொழி 10-10) என வருதல் காண்க. தூமம் - புகை. கனல் - நெருப்பு. தொடர்ந்த தோற்றம் - காரியத்தோடு ஒற்றுமையுடைய தாய் இயைந்த காரணத்தின் தன்மை. உலகுயிர்களின் தலைவனும் உலகிற்கு முதற் காரணமாகத் திகழ்பவனும் இறைவன் ஒருவனே என்றவாறு. (76)

6392. காலையி னறுமல ரொன்றக் கட்டிய
மாலையின் மலர்புரை சமய வாதியர்
சூலையின் றிருக்கலாற் சொல்லு வோர்க்கெலாம்
வேலையுந் திரையும்போல் வேறு பாடிலான்.

"காலையின் நறுமலர் ஒன்றக் கட்டிய
மாலையின் மலர்புரை சமய வாதியர்
சூலையின் திருக்கு அலால், சொல்லுவோர்க்கு எலாம்
வேலையும் திரையும் போல் வேறுபாடு இலான்.

பொ :—செவ்விப்பொழுதில் மலர்ந்த மலர்களைப் பொருந்தத் தொடுத்த மாலையினிடத்தே இணைந்துள்ள (பல்வேறு) மலர்களைப் போலும் (தோற்றத்தால் வேறுபட்ட) சமயவாதிகளது மன எரிவினுற் கூறப்படும் மாறுபாட்டினையன்றி, (அவனது இயல்பினை உள்ளவாறு உணர்ந்து) துதிப்போர் எல்லார்க்கும் கடலினையும் (அதனின் வேருகாத) அலைகளையும் போன்று வேற்றுமையின்றி (ஒற்றித்து) விளங்குபவன்.

கு :—காலை - மலருங்காலம். செவ்விப்பொழுதிலே மலர்ந்த பல நிற நறுமலர்களையும் இணைத்துக் கட்டிய மாலையின் கண்ணே காணப்படும் அம் மலர்கள், நிறத்தால் வேறுபடினும் மணமும் தேனும் பெற்றிருத்தலாகிய தன்மையால் ஒற்றித்து விளங்குமாறு போன்று, பல சமயங்களும் தத்துவவகையால் தம்முள் வேறுபடினும் மெய்ப்பொருளாகிய இறைவனை அடைதற்குச் சாதனமாகிய நெறி என்னும் தன்மையால் ஒத்த தன்மையனவாகவே அறிஞர்களால் மதிக்கத்தக்கன என அறிவுறுத்துவார், 'காலையின் நறுமலர் ஒன்றக் கட்டிய மாலையின் மலர் புரை சமய'ம் எனக் குறித்தார். இங்ஙனம் இறைவனை யடைதற்குரிய நெறிகளாதல்பற்றி எல்லாச் சமயங் களும் ஒத்தனவாகவும், அவ்வொற்றுமையினை உளத்துட்கொண்டு தத்தம் தகுதிக்கேற்பத் தாம் தாம் மேற்கொண்ட சமயத்தினைக் கடைப்பிடித் தொழுகுதலே நன்மக்களுக்குரிய கடமையாகவும் அவ் வரம்பில் நில்லாது தம் சமயமல்லாத ஏனைச் சமயங்களை யிகழ்ந்து வாதிடும் புறனுரைகளால் அச்சமயங்கள் தம்முள் முரண்பட்டன

போற் காணப்படுவன அல்லது, இறைவனால் அருளிச் செய்யப் படுதலும் உயிர்கள் இறைவனை அடைதற்குரிய நெறியாய் நின்று உதவுதலும் பற்றி அவைதம்முட் சிறிதும் வேற்றுமையில்லை எனவும், தன்னைத் துதித்துப் போற்றும் இயல்பினராகிய அன்புடையார் எல்லார்க்கும் அவரவர் சமயத் தெய்வமாக வந்து அருள் புரியும் பெருங் கருணையாளன் இறைவன் ஒருவனே எனவும் உணர்த்துவார், 'சமயவாதியர் சூலையின் திருக்கு அலால், சொல்லு வோர்க்கு எலாம்.....வேறுபாடு இலான்' என்றார். சமயத்தார் என்னாது சமயவாதியர் என்றது, தத்தம் சமயக் கோட்பாட்டின் வழி நின்று ஒழுகுதலிற் கருத்தின்றிப் பிறசமயத்தவரொடு வாதிட்டு வெற்றி பெறுவதொன்றனையே தமது நோக்கமாகக் கொண்டவர் என்றவாறு. "சமயவாதிகள் தத்தம் மதங்களே, அமைவதாக அரற்றி மலைந்தனர்" (போற்றித் திருவகவல்-52, 53) என வரும் திருவாசகத்தொடர் ஈண்டு நினைக்கத்தக்கதாகும். சொல்லுவோர்- இறைவனை அன்பினாற் புகழ்ந்தேத்தும் இயல்பினராகிய அடியார்கள். 'பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப்பார்க்கும் செல்வக் கடவுள் தொண்டர்' (திருவிடைமருதூர் மும்மணிக்கோவை-7.) ஆகிய அடி யார்கள், அருட்கடலாகிய இறைவனருளிலே எல்லாச் சமயங்களும் அலைகளைப் போன்று தோன்றியடங்குதலின், அவை தம்முள் மாறு பட்டன அல்ல என்னும் உண்மையை நன்குணர்வராதலின், அன் னோர்க்கு இறைவன் எல்லாச் சமயங்களாலும் போற்றப்பெறும் ஒருவனாகவே வேற்றுமையின்றிக் காட்சியளிக்கின்றான் என்பார், 'சொல்லுவோர்க்கெலாம் வேலையுந் திரையும்போல் வேறுபாடிலான்' என்றார். வேலை - கடல். திரை - அலை. கடலையின்றி அதனின் வேறாகாத அலைகள்யாவும் கடலின் நீர்மையைப் புலப்படுத்துந் திறத்தால் ஓரளவு ஒத்த தன்மையினவாதல் போன்று, இறைவனை யின்றி அவனின் வேறாகாத சமயங்கள் யாவும் அவனது இயல்பினை விளக்குந் திறத்தில் ஒத்ததன்மையினவே என்பது கவிச்சக்கரவர்த்தி கம்பரது கருத்தாதல் இதனாற் புலனாம். இக்கருத்தினையே,

"கல்லிடைப் பிறந்து போந்து
    கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையின் மறைக ளாலும்
    இயம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையின் ஒன்றே யாகித்
    துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும்
    பொருளும்போற் பரந்த தன்றே"

(கம்பர்-பால-ஆற்றுப்-19)

என முன்னரும் வேறோர் உவமையால் இவ்வாசிரியர் விளக்கியுள்ளமை இங்கு நினைக்கத்தக்கதாகும்.

இனி, 'சமயவாதியர் சூலையின் திருக்கு அலால் சொல்லுவோர்க்கு எலாம் வேறுபாடிலான்' எனவும், 'வேலையும் திரையும் போல் வேறுபாடிலான்' எனவும் இரு வேறு தொடராக இயைத்து, 'வேலையும் திரையும்போல் வேறுபாடிலான்' என வரும் இத்தொடர், அலைகள் யாவும் கடலிடத்தே தோன்றி அதன் கண்ணேயே ஒடுங்குமாறு போல, இயங்குவன நிற்பனவாகிய உலகப் பொருள்கள் யாவும் எல்லாவற்றுக்கும் நிலைக்களனாகிய இறைவனிடத்தே தோன்றி அம் முதல்வனிடத்திலேயே ஒடுங்குவன என எல்லாவற்றுக்கும் காரணனாகிய இறைவனது முதன்மையை விரித்துரைத்ததாகப் பொருள் கொள்ளுதலும் பொருந்தும். இவ்வாறு, இறைவன் வேலையும் திரையும்போல் வேறுபாடின்றி உலக காரணனாக விளங்கும் இவ்வியல்பினை,

"தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின்கண் நின்றதே."
(திருச்சந்த விருத்தம்-10)

என வரும் அருளிச் செயலாலும்,

"உளர்தரு
நுரையுந் திரையும் நொப்புறு கொட்பும்
வரையில் சீகர வாரியும் குரைகடற்
பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணில வாகி இருங்கட லடங்குந்
தன்மை போலச் சராசர மனைத்தும்
நின்னிடைத் தோன்றி நின்னிடை யடங்கும்"
(கோயில் நான்மணிமாலை-24)

என வரும் திருவெண்காட் டடிகள் வாய்மொழியாலும் இனிதுணரலாம்.

இச் செய்யுளில் காலை, மாலை என்பன அடிமுரண் என்னும் அணிநலம்பெற அமைந்தன. சூலை - உடம்பினுள் குடரை முறுக்கி வருத்துவதோர் நோய்; ஈண்டு அந்நோயின் தன்மையதாகிய வெறுப்பின் விளைவினைச் சுட்டி நின்றது. திருக்கு - மாறுபாடு. (77)

6393. இன்னதோர் தன்மைய னிகழ்வுற் றெய்திய
நன்னெடுஞ் செல்வமு நாளு நாமற
மன்னுயி ரிழத்தியென் றஞ்சி வாழ்த்தினேன்
சொன்னவ னுமமென் றுணரச் சொல்லினான்.

"இன்னது ஓர் தன்மையன் இகழ்வுற்று எய்திய
நல் நெடுஞ் செல்வமும் நாளும், நாம் அற
மன்னுயிர் இழத்தி என்று அஞ்சி வாழ்த்தினேன்
சொன்னவன் நாமம்" என்று உணரச் சொல்லினான்.

பொ :—இத்தகைய ஒப்பற்ற இயல்பினனாகிய இறைவனை (நீ) இகழ்ந்தமையால் (இதற்குமுன் நீ) பெற்றுள்ள சிறந்த பெருஞ் செல்வமும் வாழ்நாளும் பெயரோடு அழிந்தொழிய (நினது) நிலை பெற்ற உயிரை இழக்கின்றனையே என்று அஞ்சி, (நினக்குக் கேடு நேரா வண்ணம்) வேதங்களால் முற்படக் கூறப்பட்ட இறைவனாகிய நாராயணனது திருப்பெயரைச் சொல்லி வாழ்த்தினேன்' என்று (தன் தந்தையாகிய இரணியன்) அறியும்படி (விளங்கக்) கூறினான் (பிரகலாதன்).

கு :—"இன்னதோர் தன்மையனை (நீ) இகழ்வுற்று மன்னுயிர் இழத்தி என்று அஞ்சி, சொன்னவன் நாமம் வாழ்த்தினேன்" என்று, உணரச் சொல்லினான் என இயையும். 'இன்னதோர் தன்மையன்' என்றது, மேல் 57-ஆம் செய்யுள் முதல் 77-ஆம் செய்யுள் முடிய விரித்துரைக்கப்பட்ட இறைமைக் குணமுடைய திருமாலை. 'தன்மையனை இகழ்வுற்று' என இரண்டாமுருபு விரித்துரைக்க. இகழ்வுற்று - இகழ்ந்து; செய்தென்னும் வாய்பாட்டு வினையெச்சம் இங்கு காரணப்பொருளில் வந்தது. எய்திய நல் நெடுஞ்செல்வம் - இறைவனை இகழாத முன்னை நிலையில் அவனருளால் வந்து எய்திய பெருஞ்செல்வம்; என்றது மூவுலகங்களையும் ஒருங்கே ஆட்சிபுரியும் நிலையில் இரணியனுக்குக் கிடைத்த அரச பதவியாகிய செல்வத்தினை. நாள் - பல்லூழியாகிய நெடிய வாழ்நாள். நாம்அற - பெயரும்கூட இல்லாமற் கெட்டொழிய; நாமம் என்பது நாம் எனக் குறைந்து நின்றது. இனி, நாம் என்பதனைத் தன்மைப் பன்மை இடப்பெயராகக்கொண்டு, பிரகலாதன் தந்தையொடு தன்னையும் உளப்படுத்திப் பேசும் முறையில், 'நாம் எய்திய நன்னெடுஞ் செல்வமும் நாளும் அற (நீ) மன்னுயிர் இழத்தி என்று அஞ்சி, சொன்னவன் நாமம் வாழ்த்தினேன்' என்றான் எனினும் அமையும். உணரச் சொல்லுதல் - கேட்போர் தம் உள்ளத்தில் தெளிவாக உணர்ந்து கொள்ளும்படி விளங்க எடுத்துரைத்தல். (78)

இரணியன் எல்லையற்ற வெகுளியுடையனாய்த் தன் புதல்வனைக் கொல்லுமாறு வீரர்களை ஏவுதலும் அவர்கள் பிரகலாதனைப் பற்றுதலும்

6394. எதிரி னின்றவ னிவையுரைத்
* திடுதலு மெவ்வுல கமுமஞ்ச
முதிரும் வெங்கத மொழிகொடு
மூண்டது முதுகடற் கடுவேய்ப்பக்
கதிரும் வானமுஞ் சுழன்றன
நெடுநிலங் கம்பித்த கனகன்கண்
உதிரங் கான்றன தோன்றின
புகைக்கொடி யுமிழ்ந்தன கொடுந்தீயே.

'எதிரில் நின்று, அவன், இவை
உரைத்திடுதலும், எவ் உலகமும் அஞ்ச,
முதிரும் வெங்கதம் மொழிகொடு
மூண்டது, முது கடற்கடு ஏய்ப்ப;
கதிரும் வானமும் சுழன்றன;
நெடுநிலம் கம்பித்த; கனகன் கண்
உதிரம் கான்றன; தோன்றின
புகைக்கொடி; உமிழ்ந்தன கொடுந் தீயே.

பொ :—(இரணியனது) கண்ணெதிரே (பிரகலாதனாகிய) அவன் இம்மொழிகளைச் சொன்ன அளவிலே எல்லாவுலகத்து உயிர்களும் அஞ்சும்படி (இரணியன்பால்) முதிர்ந்து தோன்றிய கடுங்கோபமானது தொன்மையுடையதாய்க் கடலிடத்தே தோன்றிய (ஆலகால) நஞ்சினையொத்து(த் தனக்குரிய) மொழிகளுடன் பொங்கியெழுந்தது. (அதன் வெம்மையினைத் தாங்கவொண்ணாதனவாய்ச்) சூரியன் முதலிய ஒளிப் பொருள்களும் வானுலகமும் சுழல்வனவாயின; நீண்ட நிலப் பகுதிகளும் நடுக்கமுற்றன. இரணியனுடைய கண்கள் குருதியைச் சொரிந்தன; (அவற்றினின்றும்) புகைப் படலங்கள் தோன்றின; (கண்கள்) கொடுமை வாய்ந்த தீயை வெளிப்படுத்தின.

கு :—அவன் என்றது, பிரகலாதனை. முதிரும் வெங்கதம் முது கடற்கடு ஏய்ப்ப மொழி கொடு மூண்டது என இயையும். கதம் – கோபம். கடு-நஞ்சு. கம்பித்தல்-நடுக்கமுறுதல். கனகன்-இரணியன்; பொன்னிற உருவினன் என்பது பொருள். கானுதல்-கக்குதல். உமிழ்தல்-வெளிப்படுத்தல். (சீவக-2149) (79)

இதன்பின் 41, 52 என்னும் எண்ணுள்ள அச்சுப் புத்தகங்களில்,

6394 a " வைய மேலினி வரும்பகை
யுளவெனின் வருவதொன்றென்றாலும்
உய்ய உள்ளுளே யொருவனை
உணர்ந்தன னென்றென்மு னுரைசெய்தாய்
செய்ய வேண்டுவ தென்னினி
நின்னுயிர் செகுக்குவன் சிறப்பில்லாப்
பொய்யி லாளனைப் பொருந்திய
பெரும்பகை போயபின் புகழையா."

எனவரும் பாடல் மிகைப் பாடலாக வெளியிடப் பெற்றுளது.

6395. வேறு மென்னொடு தரும்பகை
பிறிதினி வேண்டலென் வினையத்தால்
ஊறி யென்னுளே யுதித்தது
குறிப்பினி யுணர்குவ துளதன்றால்
ஈறி லென்பெரும் பகைஞனுக்
கன்புசா லடியென்யா னென்கின்றான்
கோறி ரென்றன னென்றலும்
பற்றினர் கூற்றினுங் கொலைவல்லார்.

' " வேறும் என்னொடு தரும்பகை
பிறிது இனி வேண்டல் என்? வினையத்தால்
ஊறி, என்னுளே உதித்தது;
குறிப்பு இனி உணர்குவது உளது அன்றால்;
ஈறு இல் என்பெரும் பகைஞனுக்கு
அன்புசால் அடியென்யான்—என்கின்றான்;
கோறிர் " என்றனன்; என்றலும்
பற்றினர், கூற்றினும் கொலை வல்லார்.

பொ :—(இவனைக் காட்டிலும்) வேறாக என்னொடு இடர் விளைக்கும் பகையாக மற்றொன்றினை வேண்டுதல் எற்றுக்கு? (இப்பகை) முன்னை வினையால் என்னுடம்பினுள்ளே ஊறியிருந்து (இப்பொழுது என் மகனாகத்) தோன்றியது. (பகையாய்த் தோன்றிய இவனது) உள்ளக் குறிப்பு மேலும் உய்த்துணர்ந்து கொள்ள வேண்டியதொன்றன்று. அழிவில்லாத எனது பழைய பெரும் பகைவனாகிய திருமாலுக்கு 'அன்பு நிறைந்த அடியனாவேன் யான்' என்று (தன்னைக்) கூறிக் கொள்கின்றான். (ஆகவே இவனை இப்பொழுதே) கொன்று

விடுங்கள் என்று (இரணியன் தன் ஏவலரை நோக்கிக்) கூறினான். கூற்றுவனைக் காட்டிலும் கொலைத் தொழிலில் வல்லவரான அவர்கள் (பிரகலாதனைப்) பற்றித் துன்புறுத்துவாராயினர்.

கு:—வேண்டலென் என்பதனைத் தன்மையொருமை வினைமுற்றாகக் கொண்டு வேண்டுவேன் அல்லேன் எனப் பொருளுரைத்தலும் பொருந்தும். வினையம்-முன்னைவினை. குறிப்பு-பிரகலாதன் மனக்குறிப்பு. அது வெளிப்பட விளங்கியதாதலின் இனி உய்த்துணர வேண்டுவ தொன்றன்றாயிற்று. ஈறு இல்-அழிவில்லாத; முடிவு இல்லாத. 'ஈறு இல்' என்னும் அடைமொழி 'என்' என்பதனோடும் 'பெரும் பகைஞன்' என்பதனோடும் தனித்தனி இயைந்து 'அழிவில்லாத எனது' எனவும், முடிவில்லாத (தீராத) பெரும் பகைவன் எனவும் பொருள் தந்து நிற்றல் காணலாம். (80)

இரணியனது ஆணையினை மேற்கொண்ட அசுர வீரர்கள் பிரகலாதனைப் பல வழிகளிற் கொல்ல முயலுதலும், பிரகலாதன் இறைவன் நாமத்தை இடைவிடாது எண்ணுதலால் அவ்விடையூறுகளிலிருந்து தப்பி உய்தலும்

6396. குன்று போன்மணி வாயிலின் பெரும்புறத்
துய்த்தனர் மழுக்கூர்வாள்
ஒன்று போல்வன வாயிர மீதெடுத்
தோச்சின ருயிரோடும்
தின்று தீர்குது மென்குந ருருமெனத்
தெழிக்குநர் சினவேழக்
கன்று புல்லிய கோளரிக் குழுவெனக்
கனல்கின்ற தறுகண்ணர்.

'குன்று போல் மணிவாயிலின் பெரும் புறத்து
உய்த்தனர், மழுக்கூர்வாள்,
ஒன்று போல்வன ஆயிரம் மீது எடுத்து
ஓச்சினர்—"உயிரோடும்
தின்று தீர்குதும்" என்குநர், உரும் எனத்
தெழிக்குநர், சினவேழக்
கன்று புல்லிய கோள் அரிக் குழு எனக்
கனல்கின்ற தறுகண்ணர்.

பொ :—(கொலை வல்லாராகிய அவ் அவுணர்கள்) வெகுளி மிக்க யானையின் கன்றினைப் பற்றிச் சூழ்ந்துகொண்ட வலிய சிங்கக் கூட்டத்தினைப் போன்று (பிரகலாதனைச் சூழ்ந்து கொண்டு) தீயினைக் கக்கும் கண்களையுடையராய், '(இவனை) உயிரோடே தின்று முடிப்போம்' என்று கூறுவோரும், இடியினை யொத்து உரப்புகின்றவர்களும் ஆகி, மலைபோல் உயர்ந்த அரண்மனை வாயிலின் பெரிய முற்றத்தின் புறத்தே (அவனைக்) கொண்டு செலுத்தியவர்களாய், ஒன்று போல் உள்ளனவாகிய ஆயிரக்கணக்கான கோடரிகளையும் கூரிய வாட்படைகளையும் உயர எடுத்து (அவன்மேல்) வீசினார்கள்.

கு :—'கூற்றினும் கொலை வல்லார்' என மேற்பாட்டில் உள்ள தொடரையே ஈண்டும் எழுவாயாக்கி, கொலை வல்லார், சினவேழக் கன்று புல்லிய கோளரிக் குழு எனக் கனல்கின்ற தறுகண்ணாராய், உயிரோடும் தின்று தீர்குதும் என்குநராய், உருமெனத் தெழிக்குநராய், வாயிலின் பெரும்புறத்து உய்த்தனராய், ஒன்றுபோல்வன ஆயிரம் மழுக்கூர்வாள் மீது எடுத்து ஓச்சினர் என முடிக்க. என்குநர், தெழிக்குநர், தறுகண்ணார், உய்த்தனர் என வரும் முற்றுக்கள் எச்சப் பொருளவாய் நின்றன. மழு-பரசு (கோடரி) என்னும் படை. கோள்-வலிமை. அரிக்குழு-சிங்கக் கூட்டம். என-உவம உருபு. உயிரோடும் தின்று தீர்தலாவது, கொன்று உயிர் நீங்கிய பின்னர்க் குருதி திரிந்து கெடுமாதலின் கொல்லாது வைத்து உடம்பில் உயிருள்ள பொழுதே (குருதி திரிந்து கெடாதவாறு) அவனுடம்பினைத் தின்று முடித்தல். தெழித்தல்-அதட்டுதல். (81)

6397. தாயின் மன்னுயிர்க் கன்பினன் றன்னையத்
தவமெனுந் தகவில்லோர்
ஏயென் மாத்திரத் தெய்தன வெறிந்தன
வெறிதொறு மெறிதோறுந்
தூய வன்றனைத் துணையென வுடையவவ்
வொருவனைத் துன்னுதார்
வாயின் வைதன வொத்தன வத்துணை
மழுவொடு கொலைவாளும்.

'தாயின் மன்னுயிர்க்கு அன்பினன் தன்னை,
அத் தவம் எனும் தகவு இல்லோர்
"ஏ" என் மாத்திரத்து எய்தன எறிந்தன
எறிதொறும் எறிதோறும்

தூயவன்தனைத் துணை என உடைய
அவ் ஒருவனைத் துன்னுதார்
வாயின் வைதன ஒத்தன—அத்துணை
மழுவொடு கொலை வாளும்.

பொ :—தவம் என்னும் தகுதியில்லாத கொடியோராகிய அவ் அவுணர்கள் பெற்ற தாயைக் காட்டிலும் நிலைபெற்ற உயிர்களிடத்திலே அன்புடையவனாகிய அப்பிரகலாதனைக் குறித்து 'ஏ' என்னும் அளவில் எய்தனவும் எறிந்தனவும் ஆன ஆயிரக்கணக்கினவாய மழுவும் கொல்லுந் தன்மை வாய்ந்த வாளும் ஆகிய ஆயுதங்கள் யாவும் எறியுந்தோறும் எறியுந்தோறும் தூயோனாகிய இறைவனையே துணையாகவுடைய ஒப்பற்றவனாகிய அப்பிரகலாதனை, பகைவர்கள் வாயினால் வைத வசைச் சொற்களை யொத்து (அவனுடம்பிற்கு எத்தகைய ஊறும் விளைக்க மாட்டாதனவாய்)க் கழிந்தன

கு :—'தாயின் மன்னுயிர்க்கன்பினன்' எனவும் 'தூயவன்தனைத் துணையெனவுடையவன்' எனவும் குறித்தது, எவ்வுயிர்க்கும் அன்பினனாய் இறைவனையே துணையாகவுடைய பிரகலாதனை. தூயவன்- இயல்பாகவே பாசங்களின் நீங்குதலால் தூய்மையேயுருவாகிய இறைவன். 'தவம் எனும் தகவு இல்லோர்' என்றது, பிறவுயிர்களுக்கு உறுகண் செய்யாமையாகிய தகுதியில்லாத அவுணர்களை. பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாமையே சிறப்புடைய தவமாம் என்பது, 'உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை, அற்றே தவத்திற்குரு' (திருக்குறள்-261) எனவரும் தெய்வப் புலவர் வாய்மொழியாற் புலனும். ஏயென் மாத்திரத்து-ஏ என்று சொல்லும் அளவுக்குள் ; ஒரு நொடிப் பொழுதுக்குள். துன்னுதார்- பகைவர். பகைவரால் எய்யப்படும் அம்பு முதலிய படைக்கலங்களேயன்றி அன்னோர் தம் பகைவரை நோக்கி வாயினாற் கூறிய வசைச் சொற்கள் வையப்பட்டாரையடைந்து ஒன்றுஞ் செய்ய மாட்டாமை போல, பிரகலாதனைக் குறித்து அவுணர்களால் எறியப்பட்ட ஆயுதங்கள் யாவும் அவன் மேனியில் எத்தகைய ஊறுபாடும் செய்யமாட்டாதனவாய் ஒழிந்தன என்பதாம். (82)

6398\. எறிந்த வெய்தன வெற்றின குற்றின
வீர்ந்தன படையாவும்
முறிந்த நுண்பொடி யாயின முடிந்தன
முனிவிலான் முழுமேனி

சொறிந்த தன்மையுஞ் செய்தில வாயின
தூயவன் துணிவொன்று
அறிந்த நாயகன் சேவடி மறந்தில
னயர்த்தில னவனுமம்.

'எறிந்த, எய்தன, எற்றின, குற்றின,
ஈர்ந்தன, படையாவும்
முறிந்த, நுண்பொடி ஆயின, முடிந்தன ;
முனிவுஇலான் முழுமேனி
சொறிந்த தன்மையும் செய்தில ஆயின ;
தூயவன் துணிவு ஒன்று
அறிந்த நாயகன் சேவடி மறந்திலன் ;
அயர்த்திலன், அவன் நாமம்.

பொ :—வீசி எறிந்தனவும் (வில்லில் தொடுத்து) எய்தனவும் (ஏந்தி) வீசினவும் குற்றிச் செருகினவும் (தாக்கிப்) பிளந்தனவும் ஆகிய ஆயுதங்கள் யாவும் (பிரகலாதன் மேனியிற்பட்ட அளவில்) இற்று முறிந்தனவாய் நுண்ணிய பொடியாய்ச் சிதைந்து போயின ; (கொடியோர் தன்னைத் தாக்கி வருத்திய நிலையிலும்) சினங் கொள்ளாதவனாகிய பிரகலாதனுடைய உடம்பு முழுவதிலும் (தினவு நீங்கச்) சொறிதலாகிய தன்மையையும் (அவை) செய்யாதனவாயின. மனந் தூயனாகிய பிரகலாதன் (இங்ஙனம் அவுணர்கள் தனக்கு இடர் விளைத்த நிலையிலும் தன்னால்) தெளிவினைப் பொருந்தி உணரப்பட்ட (ஆருயிர்த்) தலைவனாகிய திருமாலின் செம்மை பொருந்திய திருவடிகளை மறந்திலன் ; அம்முதல்வனது திருப்பெயரையும் மறந்திலன்.

கு :—எறிதல்-வீசி எறிதல். எய்தல்-வில்லில் தொடுத்து அம்பினைச் செலுத்தல். எற்றுதல்-வெட்டுதல், குற்றுதல்-உள்ளே ஊடுருவிப் பதியும்படி குற்றுதல். ஈர்தல்-பிளத்தல். அவுணர்களாகிய கொடியோர்கள் பிரகலாதன்மேற் செலுத்திய வேல், அம்பு, வாள், ஈட்டி, மழு முதலிய படைக்கலங்கள் யாவும் அவனுடம்பில் தினவு நீங்கச் சொறிதலாகிய அத்தன்மையையுஞ் செய்திலவாய் முறிந்து பொடியாய்ச் சிதைந்தன. இங்ஙனம் கொடியோர் தன்னைத் தாக்கி வருத்திய நிலையிலும் வெகுளாத உள்ளத்தவனாகிய பிரகலாதன் தான் தெய்வமெனத் தெளிந்துணர்ந்த திருமாலின் சேவடிகளை மறவாது தியானித்து அவனது திருப்பெயரை எப்பொழுதும் சோர்வின்றிச் சொல்லுதலை மறந்திலன் என்பதாம்.
(83)

6399. உள்ள வான்பெரும் படைக்கலம் யாவையு
முக்கன வுரவோய்நின்
பிள்ளை மேனிக்கோ ரானிவந் திலதினிச்
செயலென்கொல் பிறிதென்னக்
கள்ள வுள்ளத்தன் கட்டினன் கருவிகள்
கதுமெனக் கனல்பொத்தித்
தள்ளு மின்னென வுரைத்தனன் வயவரு
மத்தொழிற் றலைநின்றார்.

"'உள்ள வான்பெரும் படைக்கலம் யாவையும்
உக்கன—உரவோய் நின்
பிள்ளை மேனிக்கு ஓர் ஆனி வந்திலது; இனிச்
செயல் என்கொல் பிறிது?" என்ன,
"கள்ள உள்ளத்தன் கட்டினன் கருவிகள்;
கதுமெனக் கனல் பொத்தித்
தள்ளுமின்" என உரைத்தனன்; வயவரும்,
அத்தொழில் தலை நின்றார்.'

பொ :—(அவுணர்களாகிய ஏவலர் இரணியனை யடைந்து) 'வலிமை வாய்ந்த தலைவனே! (நம்மிடம்) உள்ள மேலான பெரிய ஆயுதங்களெல்லாம் (நின் மகனது உடம்பிற்பட்ட அளவில்) பொடி யாய்ச் சிதைந்து உதிர்ந்தன. அவற்றால் நின்னுடைய பிள்ளையின் உடம்புக்கு ஒரு தீங்கும் உண்டாகவில்லை. இனி நாங்கள் செய்ய வேண்டிய வேறு செயல் யாதோ' என வினவி நிற்க, (அது கேட்ட இரணியன்,) ('பிரகலாதனாகிய அவன்) மாயையில் வல்ல மனத்தின னாதலால் (தன் மேல் வீசப்பட்ட) ஆயுதங்களைத் தடை செய்து பிணித்து விட்டான். (எனவே) விரைவாகத் தீயை மூட்டி (அத்தீயில் அவனைத்) தள்ளி விடுங்கள்' எனக் கூறினான். வீரர்களும் அவ்வாறு தீ மூட்டுந் தொழிலில் தலைப்பட்டார்கள்.

கு :—ஆனி-துன்பம்; ஹாநி என்னும் வடசொற் சிதைவு. தன் ஏவலராகிய அவுணர்கள் செலுத்திய ஆயுதங்கள் அனைத்தும் தன் மகனுக்கு எத்தகைய ஊறுபாட்டினையும் விளைக்கமாட்டாதனவாயின என்பதனை அறிந்த இரணியன், கொடிய படைக்கலங்களாகிய அவை பிரகலாதனது மேனியிற் சிறிதும் துன்பத்தைச் செய்யும் வலியின்றிச் சிதைந்தமைக்குத் தன் மகன் மந்திரம் மாயம் வல்லவனாய்ப் 'படைக் கலத்தடை' என்னும் மந்திரப் பிரயோகத்தைச் செய்தமையே கார ணம் என்பான், 'கள்ள உள்ளத்தன் கட்டினன் கருவிகள்' என்றான். கள்ள உள்ளத்தன், என்றது, பிரகலாதனை. கருவி கட்டுதலாவது,

தன் மேற் பகைவர் செலுத்திய படைக்கலங்கள் தனக்கு எத்தகைய ஊறுபாடும் செய்ய வொண்ணுதபடி அவற்றை மந்திரத்தாற் கட்டுதல். இஃது ஆயுதத் தம்பனம் எனப்படும். கனல் பொத்தல்- தீ மூட்டுதல். (84)

6400. குழியி லிந்தன மடுக்கினர்
குன்றெனக் குடந்தொறுங் கொணர்ந்
இழுது நெய்சொரிந் திட்டனர் [தெண்ணெய்
நெருப்பெழுந் திட்டது விசும்பெட்ட
அழுது நின்றவ ரயர்வுற
வையனைப் பெய்தன ரரியென்று
தொழுது நின்றன ணயகன்
ருளிணை குளிர்ந்தது சுடுதீயே.

'குழியில் இந்தனம் அடுக்கினர்,
குன்று என; குடந்தொறும் கொணர்ந்து
இழுது நெய் சொரிந்திட்டனர்; [எண்ணெய்
நெருப்பு எழுந்திட்டது, விசும்பு எட்ட,
அழுது நின்றவர் அயர்வுற,
ஐயனைப் பெய்தனர்; 'அரி' என்று
தொழுது நின்றனன், நாயகன்
தாள் இணை; குளிர்ந்தது சுடுதீயே.'

பொ :—(இரணியனுடைய ஏவலர்) பெரிய குழியிலே மலையினையொத்து விறகுகளை உயர அடுக்கினுர்கள்; குடங்களிலே எண்ணெயையும் இழுதாக உறைந்த நெய்யினையும் கொண்டுவந்து (அவ்விறகின்மேற்) சொரிந்து தீயிட்டனர்; தீயானது வானமளவும் உயர்ந்து எரிந்தது; (அருகே) நின்று காண்பவர்கள் அழுது சோர்வுறும்படி, வியக்கத்தக்க பேரறிவாளனுகிய பிரகலாதனை (அந்நெருப்பிலே) தள்ளினர். (அப்பொழுது அவன் திருமாலின் திருப்பெயராகிய) அரி என்னும் நாமத்தை ஓதி, இறைவன் திருவடிகளை வணங்கி நின்றுன். (சேர்ந்தாரைச்) சுடும் இயல்பினதாகிய தீயானது (அவனுக்குக்) குளிர்ச்சியுடையதாயிற்று.

கு :—குழியில் குன்றென இந்தனம் அடுக்கினர் குடந்தொறும் எண்ணெய் இழுது நெய் கொணர்ந்து சொரிந்திட்டனர்; நெருப்பு விசும்பு எட்ட எழுந்திட்டது; நின்றவர் அழுது அயர்வுற ஐயனைப் பெய்தனர்; அரி என்று நாயகன்தாளிணை தொழுது நின்றனன்;

சுடுதீ குளிர்ந்தது என இயையும். இந்தனம் - விறகு. ஐயன் என்றது, பிரகலாதனை. அரி என்பது, திருமால் திருப்பெயர்களுள் ஒன்று. நாயகன் - இறைவன். (85)

6401. கால வெங்கனல் கதுவிய
காலையிற் கற்புடை யவள்சொற்ற
சீல நல்லுரைச் சீதமிக்
கடுத்தலிற் கிழியொடு நெய்தீற்றி
ஆல மன்னநம் மரக்கர்கள்
வயங்கெரி மடுத்தலி னனுமன்றன்
கூல மாமென வென்புறக்
குளிர்ந்ததக் குருமணித் திருமேனி.

'கால வெங்கனல் கதுவிய
காலையில்—கற்புடையவள் சொற்ற
சீல நல் உரைச் சீதம் மிக்கு
அடுத்தலின், கிழியொடு நெய்தீற்றி,
ஆலம் அன்ன நம் அரக்கர்கள்
வயங்கு எரி மடுத்தலின்—அனுமன்தன்
கூலம் ஆம் என, என்பு உறக்
குளிர்ந்தது, அக் குருமணித் திருமேனி.'

பொ :—அந்த(ப் பிரகலாதனுடைய) நிறம்பொருந்திய மாணிக்க மணிபோலும் அழகிய உடம்பானது, ஊழித்தீப் போலும் வெம்மை வாய்ந்த நெருப்பினாற் பற்றப்பட்டபொழுது, ஆலகால நஞ்சினை யொத்த கொடுமையையுடைய நம்முடைய அரக்கர்கள் (அனுமனது வாலில்) துணி சுற்றி அதன்மேல் நெய்யினைச் சொரிந்து சுடர்விட்டு விளங்கும் தீயினைப் பற்றவைத்தமையால், கற்பிற் சிறந்த நங்கை யாகிய சீதை கூறிய ஒழுக்கமிக்க நல்லுரையாகிய குளிர்ச்சி மிக்குப் பொருந்தினமையால் (வெம்மை நீங்கிக் குளிர்ந்த) அனுமனது வாலினைப் போன்று (உள்ளேயுள்ள) எலும்பளவும் குளிர்ச்சியடைவ தாயிற்று.

கு :—அக் குருமணித் திருமேனி, காலவெங்கனல் கதுவிய காலையில், கற்புடையவள் சொற்ற சீலநல்லுரைச் சீதம்மிக்கு அடுத் தலின் அனுமன்றன் கூலமாம் என என்புறக் குளிர்ந்தது என இயையும். பிரகலாதனைத் தீக்குழியில் தள்ளியபொழுது அவனது உடம்பு தீயினாற் சுடப்படாது குளிர்ந்திருந்த செய்தியைத் தன்

தமையன் இராவணனுக்கு எடுத்துரைக்கும் வீடணன், அந் நிகழ்ச்சிக்கு இராவணனால் அறியப்பெற்ற மற்றொரு நிகழ்ச்சியை உவமையாக எடுத்துக் காட்டுகின்றான். இராமனது ஏவலால் சீதை யைத் தேடி இலங்கைக்கு வந்த தூதனாகிய அனுமன், தன்னை எதிர்த்த அட்சகுமாரனையும் அரக்கர் பலரையும் கொன்ற நிலையில் இந்திரசித்து அவனைப் பிரமாத்திரத்தாற் கட்டிக்கொணர, இராவணன் வீடணன் வேண்டியபடி அவனைக் கொல்லாது விடப் பணிக்க, அரக்கர்கள் அனுமனது வாலில் துணிகளைச் சுற்றித் தீ மூட்டியபொழுது அதனை அறிந்த கற்புடை நங்கையாகிய சீதை, அங்கியங்கடவுளை நோக்கி, 'கற்பினால் தூயேன் என்னில் தொழு கின்றேன், எரியே அவனைச் சுடாதொழிக' என வேண்ட, அவ் வுரைகேட்டு அஞ்சிய தீக்கடவுளும் அநுமனைச் சுடாதொழிந்தான். அதனால் அனுமனது வால் தீயின் வெம்மை தாக்காது உள்ளே எலும்பளவும் குளிர்ச்சியுடையதாயிற்று என்பது,

"வெளுத்தமென் னகையவள் விளம்பும் ஏல்வையின்
ஒளித்தவெங்கனலவன் உள்ளம் உட்கினான்
தளிர்த்தன மயிர்ப்புறஞ் சிலிர்ப்பத் தண்மையால்
குளிர்த்ததக் குரிசில்வால் என்பு கூரவே"
(சுந்தர-இலங்கை யெரியூட்டு-128)

என வருஞ் செய்யுளால் விளக்கப் பெற்றது. இந்நிகழ்ச்சியை இரா வணன் நேரிற் கண்டறிந்தவனாதலின், இரணியனால் தீக்குழியில் தள்ளப்பட்ட பிரகலாதன் தீ வெம்மையால் தாக்கப்படாது குளிர்ந்த மைக்கு இதனையே உவமையாக எடுத்துரைத்தான் வீடணன் என்க. கூலம்-வால். (86)

6402. சுட்ட தில்லைநின் றோன்றலைச்
சுடர்க்கனல் சுழிபட ராழுவத்துள்
இட்ட போதினு மென்னினிச்
செயத்தக்க தென்றன ரிகல்வெய்யோர்
கட்டித் தீயையுங் கடுஞ்சிறை
யிடுமினக் கள்வனைக் கவர்ந்துண்ண
எட்டுப் பாம்பையும் விடுமின்க
ளென்றன னெரியெழுந் தறுகண்ணன்.

'"சுட்டது இல்லை நின் தோன்றலை,
சுடர்க்கனல் சுழிபடர் அழுவத்துள்
இட்ட போதினும்; என் இனிச்
செயத்தக்கது ?" என்றனர், இகல் வெய்யோர்;
"கட்டி, தீயையும் கடுஞ்சிறை
இடுமின்; அக் கள்வனைக் கவர்ந்து உண்ண
எட்டுப் பாம்பையும் விடுமின்கள்"
என்றனன், எரி எழு தறுகண்ணன்.'

பொ :—(பிரகலாதன் தீயினுற் சுடப்படாது உய்ந்த நிலையைக் கண்ட) பகைமையுடைய கொடியோராகிய அவ்வசுரர்கள் (இரணியனை அணுகி நின்று,) நெருப்பு கொழுந்து விட்டெரிந்து சுழியுடையதாய்ப்பரவும் தீக்குழியில் தள்ளிய பொழுதும் (தீயானது) நின் மகனைச் சுடுதலைச் செய்திலது. இனி (எங்களால்) செய்யத் தக்கது யாது என வினவினர். (அது கேட்டுத்) தீப்பொறி பறக்கும் கொடிய கண்களையுடையவனுகிய இரணியன், (எனது ஏவலின் வண்ணம் நடவாத) அக்கினி தேவனையும் பிணித்துக் கொடிய சிறையில் அடைத்திடுமின், வஞ்சகனுகிய பிரகலாதனை(த் தீண்டி) உயிரைப் பருகுமாறு அட்டமா நாகங்களையும் (அவன்மேல்) ஏவுங்கள் எனப் பணித்தான்.

கு :—சுடர்க்கனல் சுழிபடர் அழுவம் என்றது, தீ கொழுந்து விட்டுச் சுழித்தெரியும் தீக்குண்டத்தினை. அழுவம்-பரப்பு. எட்டுப் பாம்பு - அட்டமா நாகங்கள்; அவை: அனந்தன், கார்க்கோடகன், குளிகன், சங்கபாலன், தட்சகன், பதுமன், மகாபதுமன், வாசுகி என்பன. (87)

6403. அனந்த னேமுத லாகிய நாகங்க
ளருளென்கொ லெனவன்னுன்
நினைந்த மாத்திரத் தெய்தின நொய்தினி
னெருப்புகு பகுவாயால்
வனைந்த தாமன்ன மேனியி னுன்றன்மேல்
வாளெயி றுறலூன்றிச்
சினந்த லைக்கொளக் கடித்தன துடித்திலன்
திருப்பெயர் மறவாதான்.

அனந்தனே முதலாகிய நாகங்கள்,
"அருள் என் கொல்" என, அன்னான்
நினைந்த மாத்திரத்து எய்தின, நொய்தினின்;
நெருப்பு உகு பகு வாயால்,
வனைந்ததாம் அன்ன மேனியினான் தன்மேல்,
வாள் எயிறு உற ஊன்றிச்
சினம் தலைக் கொளக் கடித்தன;
துடித்திலன், திருப்பெயர் மறவாதான்.

பொ:—அனந்தன் முதலான எட்டுப் பாம்புகளும் அவ் இரணியன் நினைந்த மாத்திரத்திலேயே (அவனது) அருளிப்பாடு யாதோ என (அவனை) அடைந்தனவாய், (அவன் பணித்த வண்ணம்) அழகுறப் புனையப்பெற்ற சித்திரம் போலும் (அழகிய) திருமேனியை யுடையவனாகிய பிரகலாதன்மேல், தீயுமிழும் பிளந்த வாயினால் வாள்போலும் கூரிய பற்கள் அழுந்திப் பதியும்படி சினம் பொங்கி மேற்பட விரைந்துகடித்தன. (அத்துன்ப நிலையிலும் திருமாலின்) திருநாமத்தினை மறவாதவனாகிய பிரகலாதன் மனந்துணுக்குற்று வருந்தினான் அல்லன்.

கு:—அனந்தனே முதலாகிய நாகங்கள், அன்னான் நினைந்த மாத்திரத்து 'அருள் என் கொல்' என எய்தின; வனைந்ததாம் அன்ன மேனியினான் தன்மேல் நெருப்பு உகு பகு வாயால் வாள் எயிறு உற ஊன்றி, சினம் தலைக்கொள நொய்தினின் கடித்தன; திருப்பெயர் மறவாதான் துடித்திலன் என இயையும். அன்னான் என்றது, தான் பெற்ற மைந்தனையே தனக்குப் பகைவனாக எண்ணித் துன்புறுத்தும் அத்தகைய கொடுமையுடையவனாகிய இரணியனை. திருப்பெயர் மறவாதான் என்றது அப்பெயரைச் சொல்லுதல் காரணமாகத் தனக்கு இடர்கள் பல அடுக்கிவரும் துன்பநிலையிலும் உயிர்க்குயிராகிய இறைவனது திருப்பெயரை மறவாது ஓதும் மாண்புடையவனாகிய பிரகலாதனை. அனந்தன் முதலிய நாகங்கள் சினந்தலைக் கொளக் கடித்தநிலையிலும் திருப்பெயர் மறவாதவனாய்ச் சிறிதும் துடித்திலன் எனவே இவ்வாறு இடுக்கண்பட்ட நிலையிலும் மனந்துளங்காது நலம் பெற்றமைக்கு இறைவன் திருப்பெயரை மறவாது ஓதினமையே காரணம் என்பதனையும் ஆசிரியர் குறிப்பினாற் புலப்படுத்தினாராயிற்று.
(88)

6404. பக்க நின்றவை பயத்தினிற்
புயற்கறைப் பசும்புனல் பகுவாயிற்
கக்க வெஞ்சினக் கலுழனு
நடுக்குறக் கவ்விய காலத்துச்
செக்கர் மேகத்துச் சிறுபிறை
நுழைந்தன செய்கைய வலிசிந்தி
உக்க பற்குல மொழுகின
வெயிற்றிரும் புரைதொறு மமிழ்தூறி.

'பக்கம் நின்று அவை பயத்தினின்
புயற்கறைப் பசும்புனல் பகுவாயின்
கக்க, வெஞ்சினக் கலுழனும்
நடுக்குற, கவ்விய காலத்து,
செக்கர் மேகத்துச் சிறு பிறை
நுழைந்து அ(ன்)ன செய்கைய, வலி சிந்தி
உக்க, பற்குலம்; ஒழுகின
எயிற்று இரும் புரைதொறும் அமிழ்து ஊறி.

பொ :—(அட்டமா நாகங்களாகிய) அவை (பிரகலாதனது) அருகிற் பொருந்த நின்று (இரணியனது ஆணையை மீறினல் என்ன நேருமோ என்ற) அச்சத்தினல் மேகத்தினை யொத்த கரிய நச்சுக் கறை படிந்த பசிய குருதி நீர் பிளந்த வாயினின்றும் சொரிய, கொடிய வெகுளியையுடைய கருடனும் (தம் செயலைக் கண்டு) நடுக்கம் உறும்படி (பிரகலாதனைத் தீண்டிக்) கடித்தபொழுது, செந்நிறம் பொருந்திய மேகத்தினுள்ளே (வெள்ளிய) சிறிய பிறைச் சந்திரன் நுழைந்தாற் போலும் செய்கையினவாய்த் தம் வன்மை யிழந்து (அவற்றின்) பல் தொகுதிகள் சிதர்ந்து உதிர்ந்தன. (அவ்வாறு பிரகலாதன்மேல் ஊன்றிப் படிந்த) பற்களின் உள்ளேயமைந்த பெரிய துளைகளினின்றும் அமிர்தத் துளிகள் ஊறியொழுகின.

கு :—அவை, பக்கம் நின்று, பயத்தினின், புயற்கறைப் பசும் புனல் பகுவாயிற் கக்க, வெஞ்சினக் கலுழனும் நடுக்குற, கதுவிய காலத்து (அவற்றின்) பற்குலம், செக்கர் மேகத்துச் சிறுபிறை நுழைந்து அன்ன செய்கைய (ஆய்) உக்க; எயிற்று இரும்புரை தொறும் அமிழ்து ஊறி ஒழுகின என இயையும். அவை என்றது, அப்பாம்புகளை. பயம்-இரணியனது ஏவலிற் பிழைத்தால் தமக்கு என்ன நேருமோ என அப்பாம்புகள் கொண்ட அச்சம். கலுழன் - கருடன். உகுதல் - ஒடிந்து சிந்துதல். பாம்பின் பற்கள் இயல்பாகவே நஞ்சு பில்கும் துளையினையுடையவாயினும், திருமாலின்

திருவருள் பெற்ற பிரகலாதனது தூய மேனியில் ஊன்றிப் பதிந்தமையால் தமது நச்சுத் தன்மை மாறி, அமிழ்து ஊறிச் சுரக்கும் துளையினை உடையவாயின என்பதாம். (89)

6405. சூழப் பற்றின சுற்று மெயிற்றின்
★ போழக் கிற்றில வென்று புகன்றார்
வாழித் திக்கின் மயக்கின் மதந்தாழ்
வேழத் துக்கிடு மின்னென விட்டான்.

'"சூழப் பற்றின சுற்றும் எயிற்றின்
போழக் கிற்றில" என்று புகன்றார்;
"வாழித் திக்கின் மயக்கின் மதம் தாழ்,
வேழத்துக்கு இடுமின்" என விட்டான்.'

பொ :—(அதுகண்ட அசுரர்கள் இரணியனை அடைந்து) பிரகலாதனைச் சுற்றிலும் சூழ்ந்து பற்றினவாகிய பாம்புகள், (அவனுடம்பைப்) பிளந்து வடுப்படுத்தும் வன்மையில்லாதனவாயின என்று கூறினார்கள். (அதனைக் கேட்ட இரணியன்) மயக்கத்தையுடைய மதம் மிகுந்த திசையானைக்கு (இவனை இலக்காக) இடுங்கள் என்று சொல்லி (அவ்வாறே) இடச் செய்தான்.

கு :—சுற்றும் சூழப்பற்றின, எயிற்றின் போழக்கிற்றில என இயையும். போழ்தல் - கடித்து வடுப்படுத்தல். கிற்றில - ஆற்றல் இல்லாதன ஆயின. 'கிற்றில' என்பது, கில் என்னும் இடைச்சொல்லடியாகப் பிறந்த வினைக்குறிப்பு முற்று. ஆக்கச்சொல் வருவித்துரைக்கப்பட்டது. இவ்வாறு 'கிற்றிலேன், கிற்பன்' (திருச்சதகம் - 41) எனத் திருவாசகத்தில் வரும் வினைச் சொற்கள் இங்கு நோக்கத்தக்கனவாகும், வாழி - அசை. மயக்கின் மதந்தாழ் திக்கின் வேழம் என்றது, திசையானைகளில் ஒன்றாய் இந்திரனுக்குரியதாகிய ஐராவதம் என்னும் யானையை. (90)

6406. பசையிற் றங்கலில் சிந்தையர் பல்லோர்
திசையிற் சென்றனர் செப்பின னென்னும்
இசையிற் றந்தன னிந்திர னென்பான்
விசையிற் றிண்பணை வெஞ்சின வேழம்.

'பசையில் தங்கல் இல் சிந்தையர் பல்லோர்
திசையில் சென்றனர்; 'செப்பினன்' என்னும்

இசையின், தந்தனன், இந்திரன் என்பான்
விசையின் திண்பணை வெஞ்சின வேழம்.'

பொ :—(பிறர் துயர் கண்டு மனம் நெகிழ்தலாகிய) இரக்கத்திற் பொருந்துதல் இல்லாத (வலிய) நெஞ்சத்தினரான அசுரர்களிற் பலர், (கிழக்குத்) திசையிற் சென்று, (எம் வேந்தனாகிய இரணியன் இவ்வாறு) கூறினான் எனக் கூறிய சொல்லால், (தேவர் கோமானாகிய) இந்திரன் என்பவன் திண்மை வாய்ந்த பெரிய தந்தங்களையுடைய (ஐராவதம் என்னும்) யானையை விரைந்து அனுப்பினான்.

கு :—பசை-பிறிதின்நோய் தன் நோய் போற் கருதும் மன நெகிழ்ச்சியாகிய இரக்கம். தங்குதல் - நிலைத்து நிற்றல். பசையில் தங்கல் இல் சிந்தையர் எனவே இரக்கம் என்று ஒரு பொருள் இலாத நெஞ்சினர் என்றவாறு. சென்றனர்-முற்றெச்சம். இசையின்-சொல்லால். இந்திரன் என்பான், திண்பணை வெஞ்சினவேழம் விசையின் தந்தனன் என இயையும். விசை-வேகம். (91)

6407. கையிற் கால்களின் மார்பு கழுத்திற்
றெய்வப் பாசமு றப்பிணி செய்தார்
மையற் காய்கரி முன்னுற வைத்தார்
பொய்யற் றானுமி தொன்று புகன்றான்.

'கையில், கால்களில், மார்பு கழுத்தில்,
தெய்வப் பாசம் உறப் பிணி செய்தார்;
மையல் காய் கரி முன் உற வைத்தார்;
பொய் அற்றானும் இது ஒன்று புகன்றான்.'

பொ :—(பிரகலாதனுடைய கைகளிலும் கால்களிலும் மார்பிலும் கழுத்திலும் தெய்வத்தன்மை (மந்திர வலிமை) வாய்ந்த பாசக் கயிறுகளால் இறுகக் கட்டி, மத மயக்கமுடையதும் (எதிர்ப்பட்டோரைச்) சினந்து கொல்வதும் ஆகிய அவ் யானையின் முன்னே பொருந்தக் கிடத்தினர் (அசுரர்கள்). பொய்மையில்லாத தூய நெஞ்சினனாகிய பிரகலாதனும் (தன்னைக் கொல்ல வரும் யானையை நோக்கிப் பின் வருமாறு) இவ்வொரு வார்த்தையைக் கூறினான்.

கு :—பிரகலாதனைப் பாசத்தாற் பிணித்து ஐராவதமாகிய மத யானையின் முன்னே இட்டபொழுது அவன் அந்த யானையை நோக்கிக் கூறிய வார்த்தையினை அடுத்த செய்யுளிற் காண்க. (92)

6408. எந்தாய் பண்டொ ரிடங்கர் விழுங்க
முந்தாய் நின்ற முதற்பொரு ளேயென்
றுந்தாய் தந்தை யினத்தவ னோத
வந்தா னென்றன் மனத்தின னென்றான்.

'"எந்தாய்! பண்டு ஓர் இடங்கர் விழுங்க,
முந்தாய் நின்ற முதற் பொருளே!" என்று
உம் தாய் தந்தை இனத்தவன் ஓத
வந்தான், என் தன் மனத்தினன் என்றான்.'

பொ :—(ஐராவதமே!) உன்னுடைய தாய் தந்தையரின் உறவினனாகிய கசேந்திரன் என்னும் தலைவன், முற்காலத்தில் தன்னை ஒரு முதலை விழுங்கத் தொடங்கியபொழுது, 'எந்தை பெருமானே! (எல்லாப் பொருள்கட்கும்) மூலமாய் நின்ற முதற்பொருளே' என்று கூவி அழைக்க (உடனே அங்கு) வந்து (முதலையைக் கொன்று யானையின்) இடரைக் களைந்த இறைவனாகிய திருமால் எனது நெஞ்சத்தினுள்ளே (நீங்காது) எழுந்தருளியுள்ளான் எனக் கூறினான்.

கு :—உம் தாய் தந்தை இனத்தவன், பண்டு ஓர் இடங்கர் விழுங்க, 'எந்தாய்! முந்தாய் நின்ற முதற்பொருளே' என்று ஓத, வந்தான், 'என் தன் மனத்தினன்' என இயையும். இடங்கர்-முதலை. உம் தாய் தந்தை இனத்தினன் என்றது, கசேந்திர ஆழ்வானை. வந்தான் என்றது அவனை உய்விக்க விரைந்து எழுந்தருளிய திருமாலை. வந்தான், வினையாலணையும் பெயர். மனத்தினன் - மனத்தின்கண் உள்ளான்; வினைக் குறிப்பு முற்று. பிரகலாதன் தன்னைக் கொல்ல வந்த மத யானையை நோக்கி, 'உம் தாய் தந்தையர்க்கு உறவினனாகிய கசேந்திரன் என்னும் யானையை இடர் நீக்கிக் காப்பாற்றியருளிய இறைவன் என் நெஞ்சத்தில் எழுந்தருளியுள்ளான்' என்று கூறவே, யானையாகிய உனக்கும் எனக்கும் எத்தகைய பகையுமில்லை என்பதனோடு அமையாது, இறைவனாகிய ஒருவனுக்கு ஆட்பட்ட முறையினை நோக்க உன் குல முன்னோனாகிய கசேந்திரனும் யானும் அன்பினால் நெருங்கிய உறவுடையோம் என்பதனையும் வற்புறுத்தினான் என்பதாயிற்று. (93)

6409. என்னா முன்ன மிருங்களி றுந்தன்
பொன்னா ரோடை பொருந்த நிலத்தின்
அன்னா னைத்தொழு தஞ்சி யகன்ற
தொன்னா ரத்திற மெய்தி யுரைத்தார்.

'என்னு முன்னம், இருங்களிறும் தன்
பொன் ஆர் ஓடை பொருந்த நிலத்தின்
அன்னுனைத் தொழுது அஞ்சி அகன்றது;
ஒன்னுர் அத்திறம் எய்தி உரைத்தார்.'

பொ :—என்று (பிரகலாதன்) சொல்லி முடிப்பதற்கு முன்னமே பெரிய யானையும் அச்சமுற்றுப் பொன்னினுல் இயன்ற தனது முக படாம் நிலத்திற் பொருந்தும்படி (அப் பிரகலாதனை) இறைஞ்சி அவ்விடத்தை விட்டு நீங்கிச் சென்றது. (யானை ஒன்றும் செய்யாது மீண்ட) அத்திறத்தினைப் பகைமையுள்ளத்தராகிய அசுரர்கள் (இரணியனை) அடைந்து கூறினுர்கள்.

கு :—இருங்களிறு - பெரிய யானை; என்றது, இந்திரனுக்கு உரிய தாய்ச் சிறந்த பேராற்றல் வாய்ந்த ஐராவதம் என்னும் யானையை. ஓடை - யானையின் முகத்தில் அணியும் முகபடாம். அன்னுன் என்றது, அத்தகைய தூயோனுகிய பிரகலாதனை. ஒன்னுர் - ஒன்ருர்; பகைவர். (94)

6410. வல்வீ ரைத்துயில் வானை மதித்தென்
நல்வீ ரத்தை யழித்தது நண்ணுற்
ருெல்வீ ரொற்றை யுரக்கரி தன்னைக்
கொல்வீ ரென்றன னெஞ்சு கொதிப்பான்.

' "வல் வீரைத் துயில்வானை மதித்து, என்
நல் வீரத்தை அழித்தது; நண்ணுற்று,
ஒல்வீர்! ஒற்றை உரக் கரி தன்னைக்
கொல்வீர்" என்றனன், நெஞ்சு கொதிப்பான்.'

பொ :—வெகுளியால் மனம் கொதிப்படைந்தவனுகிய இரணியன், (தன் ஏவலர்களை நோக்கி) வினை இயற்றுதலில் வல்லவர்களே! (நம்மால் அனுப்பப்பட்ட யானையானது,) வலிய (பாற்) கடலிலே உறங்கிக் கிடப்பவனுகிய திருமாலை (இறைவனுக) மதித்து என்னுடைய சிறந்த வீரத்தினை (இகழ்ந்து) சிதைத்தது. (ஆதலால்) உரம் படைத்த அந்தத் தனித்த யானையைத் தொடர்ந்து சென்று கொன்று விடுவீராக எனப் பணித்தான்.

கு :—தனது ஆணைவழி நில்லாத பிரகலாதனுகிய மைந்தன் வேந்தனுகிய தன்னுற் செய்யப்படும் தண்டத்தினின்றும் தப்பி யுய்ந் தான் எனக் கேட்ட இரணியன் சின மிகுதியால் உள்ளங் கொதித்து

எழுந்தான் என்பார், 'நெஞ்சு கொதிப்பான்' என்றார். 'நெஞ்சு கொதிப்பான்' என்றது வினையாலணையும் பெயர். நெஞ்சு கொதிப்பான், 'ஒல்வீர்! ஒற்றைக் கரிதன்னை நண்ணுற்றுக் கொல்வீர்' என்றனன் என இயையும். எனக்குப் பயந்து ஓடிய திருமால் கடலையே வலிய அரணாகக் கொண்டு ஒளிந்து உறங்கிக் கிடப்பவன் என்பான், 'வல் வீரைத் துயில்வான்' என்றும், துணையின்றித் தனித்த யானையாகிய அது, என்பால் தோல்வியுற்று ஓடி யுறங்குவானை இறைவனாக மதித்து, உலக முழுதாளும் இறைமைத் தன்மை வாய்ந்த எனது கட்டளையினை இகழ்ந்தது ஆதலால் அவ் யானையை உடனே அணுகிக் கொன்றொழிமின் என்பான், 'துயில்வானை மதித்து என் நல் வீரத்தை இகழ்ந்தது; ஒற்றை உரக் கரிதன்னை நண்ணுற்றுக் கொல்வீர்' என்றும், என்னுடைய பணியாளராகிய நீவிர் எத்தகைய அரிய வினைகளையும் விரைந்து செய்து முடிக்கவல்ல திறமையுடையீர் என்பான், 'ஒல்வீர்' என்றும் கூறினான் இரணியன். வீரை - கடல். மதித்தல் - பொருளாகக் கொண்டு ஒழுகுதல். ஒல்லுதல்-இயலுதல்; செய்து முடிக்கவல்லராதல். உரம் - வன்மை. (95)

6411. தன்னைக் கொல்லுநர் சாருத லோடும்
பொன்னைக் கொல்லு மொளிப்புகழ் பொய்யா
மன்னைக் கொல்லிய வந்தது வாரா
மின்னைக் கொல்லும் வெயிற்றி னெயிற்றால்.

'தன்னைக் கொல்லுநர் சாருதலோடும்,—
பொன்னைக் கொல்லும் ஒளிப் புகழ் பொய்யா
மன்னைக் கொல்லிய வந்தது; வாரா,
மின்னைக் கொல்லும் வெயில் தின் எயிற்றால்.'

பொ:—(பிரகலாதனைக் கொல்லாது நீங்கிய யானையானது) தன்னைக் கொல்லும் கருத்துடையராகிய அசுரர்கள் (தன்னை) நெருங்கிய அளவில், மின்னலின் ஒளியினையழித்துக் கதிரவன் ஒளியினை மழுங்கச் செய்யும் பேரொளியினையுடைய தந்தங்களாலே, பொன்னை மழுங்கச் செய்து மேம்படும் ஒளி மிகுந்த மேனியையும் புகழையும் உடைய வாய்மையில் தவறாத இளவரசனாகிய பிரகலாதனைக் கொல்லுதற்கு (மீண்டும்) வந்தது; (அவ்வாறு) வந்து,

கு:—இதுவும் அடுத்த செய்யுளும் ஒரு தொடர். பொன்னினது ஒளியினையும் மழுங்கச் செய்யும் பேரொளிவாய்ந்த அழகிய மேனியினையும் யாவராலும் புகழப் பெறுதற்கேற்ற நற்செய்கையினையும் தான் மெய்யாகக் கண்டுணர்ந்ததனை அஞ்சாது கூறும் மாண்

பினையும் உடையவன் அசுரர் குலத்தில் தோன்றிய இளவரசனாகிய பிரகலாதன் என்பார், 'பொன்னைக் கொல்லும் ஒளிப் புகழ் பொய்யா மன்' என்றார். கொல்லிய - கொல்ல; செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். வாரா - வந்து. வாரா என்னும் வினையெச்சம். அடுத்த செய்யுளில் 'வீரத் திண் திறல் மார்பினில் வெண்கோடு, ஆரக்குத்தி' என்புழிக் குத்துதலாகிய வினையைக்கொண்டு முடிந்தது. வெயில் - ஒளி. பொன்னைக் கொல்லும், மின்னைக் கொல்லும் வெயில்தின் என வரும் தொடர்களில் கொல்லுதல் தின்னுதல் என்பன, தன் ஒளி மிகுதியால் கீழ்ப்படுத்தல் உருவின்றி மழுங்கச் செய்தல் என்ற பொருளில் ஆளப்பெற்றன. (96)

6412. வீரத் திண்டிறன் மார்பினில் வெண்கோ
டாரக் குத்தி யழுத்திய தாக
வாரத் தண்குலை வாழை மடற்சூழ்
ஈரத் தண்டென விற்றன வெல்லாம்.

'வீரத் திண் திறல் மார்பினில் வெண்கோடு
ஆரக் குத்தி அழுத்தியது ஆக,
வாரத் தண் குலை வாழை மடல் சூழ்
ஈரத் தண்டு என இற்றன எல்லாம்.'

பொ:—வீரத்தினையும் திண்ணிய வலிமையினையும் உடைய (பிரகலாதனது) மார்பின் கண்ணே (யானையானது) வெண்ணிறம் வாய்ந்த தந்தங்கள் நன்கு பொருந்தும்படி தாக்கி அழுத்துதலைச் செய்ததாக (அவ்வளவில் அதன் தந்தங்கள் நான்கும்) விருப்பத்தை விளைக்கும் குளிர்ந்த குலையினையுடைய வாழையின் பட்டைகளாற் சூழப்பெற்றுள்ள ஈரம் குறையாத வாழைத்தண்டினைப் போல முழுவதும் ஒடிந்து சிதைந்தன.

கு:—வீரம் - உள்ளத்து உரன் ஆகிய ஞானம். திண்திறல் - உள்ளத்து உரனுடைமையின் பயனாக உடம்பின் வழிப்பட்டு நிகழும் பேராற்றல். இங்ஙனம் அகத்திலும் புறத்திலும் ஞானமும் பேராற்றலும் விளங்கித் தோன்றும் இயல்பினையுடையது பிரகலாதனது மார்பு என்பார், அதனை 'வீரத் திண்திறல் மார்பு' எனக் குறித்தார். (யானை) வாரா, மார்பினில் வெண்கோடு ஆர, குத்தி அழுத்தியது ஆக, (அவை) எல்லாம் இற்றன என இயைத்துரைக்க. யானையின் தந்தங்கள் பிரகலாதனது மார்பில் ஊன்றி அழுத்திய அளவில்

எளிதில் முறிந்தமைக்கு வடிவாலும் வண்ணத்தாலும் ஒத்த வாழைத் தண்டினை உவமையாகக் கூறிய நயம் நினைக்கத்தக்கதாகும். வாரம்- அன்பு; விருப்பம். (97)

6413. வெண்கோ டிற்றன மேவலர் செய்யும்
கண்கோ டற்பொறி யிற்கடி தேகி
எண்கோ டற்கரி தென்ன வெகுண்டான்
திண்கோ டைக்கதி ரிற்றெறு கண்ணன்.

'வெண் கோடு இற்றன, மேவலர் செய்யும்
கண்கோடல் பொறியின் கடிது ஏகி,
'எண் கோடற்கு அரிது' என்ன, வெகுண்டான்,
திண் கோடைக் கதிரின் தெறு கண்ணன்.'

பொ :—(யானையின்) வெண்மையான தந்தங்கள் ஒடிந்தன. (அதனைக் கண்ட) பகைமையுள்ளத்தராகிய அசுரர்கள் (பொருள்களைச்) சென்று பற்றிக் கொள்ளுதலைச் செய்யும் கண்ணாகிய பொறியினைப் போன்று (இரணியனை) விரைந்து அடைந்து, 'நீ எண்ணிய வண்ணம் (நின்மகனது உயிரைக்) கவர்ந்து கொள்ளுதற்கு இயலாது' என்று சொல்ல, (அது கேட்ட இரணியன்) முதிர்ந்த வேனிற் காலத்துக் கதிரவனை யொத்துக் கனன்று காயும் கண்களையுடையவனாய் வெகுள்வானாயினான்.

கு :—மேவலர் என்றது, இரணியனது ஆணை வழி நின்று பிரகலாதனிடத்துப் பகைமை கொண்டு துன்புறுத்திய அசுரர்களை. 'கோடல் செய்யும் கட்பொறியிற் கடிது ஏகி' என மொழி மாற்றிப் பொருள் கொள்க. ஐம்பொறிகளில் கண் தவிர ஏனைய நான்கும் தம்பால் சார்ந்த பொருள்களையே ஏற்று நுகரவல்லன. தானே சென்று பொருள்களைப் பற்றும் ஆற்றல் கண் என்னும் பொறிக்கே உண்டென்பார், 'கோடல் செய்யும் கட்பொறியின் கடிது ஏகி' என்றார். கண்ணின் பார்வையானது சேய்மைக்கண் உள்ள பொருள் மேல் விரைந்து சென்று சாருமாறு போன்று பணியாளராகிய அசுரர்கள் இரணியனை விரைந்தடைந்து தெரிவித்தார்கள் என்பதாம். இன் – உவம உருபு. கோடை – கடுவெயில் வீசும் முது வேனிற்காலம். (98)

இதன் பின் 41, 52 என்னும் எண்ணுள்ள சுவடிகளில்

6413 (a) " இவனை யேழ்நிலை மாளிகை உம்பர்மே லேற்றிப்
புவனந் தன்னிலே நூக்குமென் றவுணர்கோன் புகலப்

புவன முண்டவன் கழலிணைப் புண்ணியன் றன்னைப்
பவனன் றன்னிலும் வெய்யவர் பற்றியே யெடுத்தார்.

6413 (b) "உற்றெழுந்தனர் மாளிகை யும்பர்மேற் கொண்டு
கற்றறிந்தவர்க் கரசனைக் கடுந்திற லவுணர்
பற்றி நூக்கலும் பார்மகள் பரிவுடன் நாரார்
நற்றவற்கொரு தீங்கிலை யெனவவ ணயந்தாள்"

எனவரும் இரண்டு பாடல்கள் மிகைப் பாடல்களாகக் குறிக்கப் பெற்றுள்ளன.

6414. தள்ளத் தக்கில் பெருஞ்சயி லத்தோ
டெள்ளக் கட்டி யெடுத்து விசித்துக்
கள்ளத் திங்கிவ னைக்கரை காணு
வெள்ளத் துய்த்திடு வீரென விட்டான்.

'"தள்ளத் தக்கு இல் பெருஞ் சயிலத்தோடு
எள்ளக் கட்டி எடுத்து விசித்து,
கள்ளத்து இங்கு இவனைக் கரை காணு
வெள்ளத்து உய்த்திடுவீர்" என விட்டான்.'

பொ:—(இரணியன் தன் ஏவலராகிய அசுரர்களை நோக்கி) வஞ்ச நெஞ்சினனுகிய இப்பிரகலாதனை இங்குள்ளார் அனைவரும் இகழ்ந்து வெறுக்கும்படி அசைக்க ஒண்ணுத பெரிய மலையுடன் இணைத்து இறுகக் கட்டி யெடுத்துக் கரைகாண இயலாத கடலினுள்ளே தள்ளிவிடுவீர்களாக என ஏவினுன்.

கு:—கள்ளத்து இவனை இங்கு எள்ள, சயிலத்தோடு விசித்துக் கட்டி எடுத்துக் கரைகாணு வெள்ளத்து உய்த்திடுவீர் என விட்டான் என இயையும். கள்ளம் - வஞ்சனை. விசித்தல் - இறுகப்பிணித்தல். கரைகாணு வெள்ளம் என்றது கடலினை. விடுதல்-ஏவுதல். (99)

6415. ஒட்டிக் கொல்ல வுணர்ந்து வெகுண்டான்
விட்டிட் டானல னென்று விரைந்தார்
கட்டிக் கல்லொடு கால்விசை யிற்போய்
இட்டிட் டார்கட லின்னடு வெந்தாய்.

'"ஒட்டிக் கொல்ல உணர்ந்து வெகுண்டான்;
விட்டிட்டான் அலன்" என்று விரைந்தார்,

கட்டிக் கல்லொடு, கால் விசையின்போய்,
இட்டிட்டார், கடலின் நடு,—எந்தாய்!'

பொ :—எந்தையே! (இரணியன் தன் மைந்தனைக்) கொல்லாது விட்டான் அல்லன்; (பிரகலாதனது பிடிவாத நிலையை), உணர்ந்து சூளுறவு செய்து (அவனைக்) கொன்றொழிக்கும் நிலையிற் பெரிதும் சினமுடையனாயினான் எனத் தெளிந்து (அவனது பணியினை மேற்கொண்டு ஏவலராகிய அசுரர்கள்) விரைந்து சென்றார்கள். (பிரகலாதனை) மலையுடனே இறுகப் பிணித்துக் காற்றின் விசையுடன் விரைந்து சென்று கடலின் நடுவே தள்ளிவிட்டார்கள்.

கு :—ஒட்டுதல் - சபதஞ் செய்தல். 'ஒட்டிய சமயத்துறுபொருள் வாதிகள்' (1-60) என்பது மணிமேகலை. கல்லொடு கட்டிக் கால் விசையிற்போய்க் கடலின் நடு இட்டிட்டார் என இயையும். கால் - காற்று. விசை - வேகம். 'எந்தாய்' என்றது இராவணனுக்கு இரணியனது வரலாற்றைக் கூறிவரும் வீடணன் தன் தமையனை நோக்கிக் கூறிய விளியாகும். (100)

6416. நடுவொக் குந்தனி நாயக னாமம்
விடுகிற் கின்றில னாதலின் வேலை
மடுவொத் தங்கதின் வங்கமு மன்றாய்க்
குடுவைத் தன்மைய தாயது குன்றம்.

'நடு ஒக்கும் தனி நாயகன் நாமம்
விடு கிற்கின்றிலன் ஆதலின், வேலை
மடு ஒத்து, அங்கு அதின் வங்கமும் அன்றாய்,
குடுவைத் தன்மையது ஆயது, குன்றம்.'

பொ :—(எவ்வுயிர்க்கும்) நடுவாய் நிற்றலில் ஒத்த இயல்பினை யுடைய ஒப்பற்ற தலைவனாகிய திருமாலின் திருப்பெயரை (நினைந்து ஓதுதலை எக்காலத்தும்) சோரவிடாத தன்மையினையுடையான் (பிரகலாதன்) ஆதலால், (கரை காணாப் பெருங்) கடல் (அவனுக்குச் சிறிய) மடுப்போன்று அமைய, (அவனொடு சேர்த்துக் கட்டப்பட்ட) மலையானது அந்நீரில் கப்பல் என்று சொல்லுதற்கும் போதாமல் (சிறிய சுரைக்) குடுவையின் தன்மையதாய் (மேலே மிதப்பது) ஆயிற்று.

கு :—பகை நட்பு என்னும் வேறுபாடின்றி எவ்வுயிர்க்கும் நடுவாய் நின்று அருள் சுரத்தல் இறைவனது இயல்பு என்பார், 'நடுவொக்குந் தனி நாயகன்' என்றார். இறைவனாகிய திருமாலின்

திருநாமத்தைப் பிரகலாதன் இடைவிடாது ஓதினமையால் கரையில்லாத பெருங்கடல் அவனுக்குச் சிறிய மடுப்போன்று கடத்தற்கு எளிதாய்ச் சுருங்கியது என்றும், அவனெடு பிணிக்கப்பட்ட பெருமலை சிறிய மரக்கலம் என்று சொல்லுமளவிற்குக் கூடக் கனமுடையதாகாமல் சிறிய சுரைக் குடுவை போன்று மிகவும் இலேசானதாகி அந்நீரின்மேல் மிதப்பதாயிற்று என்றும் விளக்கியவாறு. குடுவை-குடுக்கை. குன்றம் குடுவைத் தன்மையதாய் நீரினுள்ளே அமிழாது மிதந்தது எனவே அதனெடு பிணிக்கப்பட்ட பிரகலாதனும் அம் மிதவையின் சார்பு பெற்றுக் கடலினுள் அமிழாது மேற்பட்டு விளங்கினன் என்பதாயிற்று. (101)

6417. மோதுற் றார்திரை வேலையின் மூழ்கான்
மீதுற் றார்சிலை மீது கிடந்தான்
ஆதிப் பண்ணவ னாயிர நாமம்
ஓதுற் றான்மறை யெல்லை யுணர்ந்தான்.

'மோதுற்று ஆர் திரை வேலையில் மூழ்கான்,
மீதுற்று ஆர் சிலைமீது கிடந்தான்,
ஆதிப் பண்ணவன் ஆயிர நாமம்
ஓதுற்றான்—மறை எல்லை உணர்ந்தான்.'

பொ :—வேதங்களின் முடிந்த எல்லையாகிய பரம்பொருளை உணர்ந்த பிரகலாதன், (ஒன்றன்மேலொன்றாக) மோதி நெருங்கும் அலைகளையுடைய கடலினுள்ளே அமிழாதவனாகி, அக்கடலின் மேலே (மிதவைபோன்று) பொருந்திய மலையின்மீது படுத்த வண்ணம் அமைந்தவனாய், ஆதிதேவனாகிய திருமாலின் ஆயிரந் திருநாமங்களையும் (அன்புடன்) ஓதுவானாயினான்.

கு :—மறை எல்லை உணர்ந்தான், சிலைமீது கிடந்தான், ஆயிர நாமம் ஓதுற்றான் என முடியும். வேதங்களை ஆசிரியன்பாற் கேட்டுப் பயில்வதற்கு முன்னமே வேதத்துச்சியின் மெய்ப்பொருளை உள்ளவாறு உணரப்பெறும் திருவுடைய சிந்தையினான் பிரகலாதன் என்பார், 'மறையெல்லை யுணர்ந்தான்' என்றார். இனி, 'மறை ஒல்லை யுணர்ந்தான்' எனப் பாடங்கொண்டு, நாரதமுனிவர் செய்த உபதேசத்தால் தாயின் கருப்பத்தில் இருக்கும்பொழுதே வேதங்களை விரைவில் அறிந்துகொண்டவனாகிய பிரகலாதன்' எனப் பொருளுரைத்தலும் உண்டு. ஆதிப்பண்ணவன் - தேவர் முதலிய யாவர்க்கும் முதல்வனாகிய கடவுள்; என்றது திருமாலை. (102)

இச் செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்

6417 (a) ஓதத் தில்மிதந் தோடிய கல்மேல்
தீதற் றேதெளி வோடு திகழ்ந்தான்
வேதத் துச்சியின் மெய்ப்பொருள் நாமம்
ஓதிப் பின்னும் உரைப்பதை யுற்ருன்.

என வரும் பாடல் மிகைப் பாடலாகக் குறிக்கப்பெற்றுளது.

6418. *தலையிற் கொண்ட தடக்கையி ஞன்றன்*
நிலையிற் றீர்வின் மனத்தினி னைந்தான்
சிலையிற் றண்புன லிற்சினை யாலின்
இலையிற் பிள்ளை யெனப்பொலி கின்ருன்.

'தலையில் கொண்ட தடக் கையிஞன், தன்
நிலையின் தீர்வு இல் மனத்தின் நினைந்தான்;
சிலையில் தண்புனலில், சினை ஆலின்
இலையில் பிள்ளை எனப் பொலிகின்ருன்.'

பொ :—(பிரளயகாலத்திலே) கிளைகளையுடையதோர் ஆல மரத்தின் இலையிலே சிறிய குழந்தை வடிவாகிக் கண் வளரும் திருமாலைப்போன்று, குளிர்ந்த கடல் வெள்ளத்திலே மலையின்மீது (எத்தகைய இடையூறுமின்றி) விளங்குகின்றவஞகிய பிரகலாதன், தன் தலைமீது உயர்த்திய பெரிய கைகளையுடையஞய், (இறைவனைச் சிந்தித்துணரும்) தன் உறுதி நிலையினின்றும் சிறிதும் வழுவாத மனத்திஞல் (திருமாலைத்) தியானிப்பாஞயிஞன்.

கு :—ஆலின் இலையிற் பிள்ளை எனத் தண்புனலிற் சிலையிற் பொலிகின்ருன் என்றது பிரகலாதனை. என, உவமவுருபு. கடல் நீர் பொங்கி உலகங்களையெல்லாம் மூடிக்கொள்ள எங்கும் பெரு வெள்ளமாகிய ஊழிக்காலத்திலே, அழிவில்லாதவஞகிய திருமால், சரம் அசரம் ஆகிய எல்லாவற்றையும் ஒரு சிறு துன்பமும் நேராதவாறு தன் வயிற்றினுள்ளே அடக்கிக்கொண்டு சிறு குழந்தை வடிவாகி ஓர் ஆல மரத்தின் இலையிற் பள்ளிகொண்டருளுவன் என நூல்கள் கூறும். இதனை,

'பாலன் தனதுருவாய் ஏழுலகுண் டாலிலையின்
மேலன்று கண் வளர்ந்தாய் மெய்யென்பர்' (திவ்ய-2150)

என வரும் அருளிச் செயலாலும் அறியலாம். (103)

6419. அடியா ரடியே னெனுமார் வமலால்
★ ஒடியா வலியா னுடையே னுளனோ
கொடியாய் குறியாய் குணமே துமிலாய்
நெடியா யடியே னிலைநேர் குதியோ.

' " அடியார் அடியேன் எனும் ஆர்வம் அலால்,
ஒடியா வலி யான் உடையேன் உளனோ?
கொடியாய்! குறியாய்! குணம் ஏதும் இலாய்!"
நெடியாய்! அடியேன் நிலை நேர்குதியோ?'

பொ :—(தீயோர்களை ஒறுப்பதில்) கொடுமையுடையவனே! (யாவராலும்) குறித்து அறிய ஒண்ணாதவனே! (தீய) குணம் எதுவும் இல்லாதவனே! நெடியோனே! நின் அடியார்க்கு அடியேன் ஆவேன் என்னும் அன்பு ஒன்றைத் தவிர, (பகைவராயினார் செய்யும் துன்பங்களுக்குச் சிறிதும்) தளராத பெருவன்மையினை யான் பெற்றுடையவனாக உள்ளேனோ? அடியேன்படும் இத்துன்ப நிலையில் எதிர்ப்பட்டு அருள்புரிவாயோ?

கு :—இறைவனாகிய நின்னுடைய அடியார்க்கு அடியேனாவேன் என்னும் ஆர்வம் ஒன்றைத் தவிர, நின்னை நினைந்து போற்றுதலால், பகைவராயினார் செய்யும் துன்பங்களை யெல்லாம் தளராது தாங்கிக் கொள்ளவல்ல பெருவன்மை எனக்கு இல்லை என்பான் ' அடியார் அடியேன் எனும் ஆர்வம் அலால் ஒடியா வலி யான் உடையேன் உளனோ' என்றான். பகைவர் இவர் நட்டோர் இவர் என்னும் வேறுபாடு நினக்கு இல்லையாயினும் உயிர்கட்கு இன்னல் செய்யும் கொடியார்பால் கொடுமையுடையையாய் ஒறுத்தலை மேற்கொண்டுள்ளாய் என்பான், 'கொடியாய்' என்றான். இறைவனாகிய நீ இன்ன தன்மையன் என யாவராலும் குறித்துணர வொண்ணாதவாறு மனவாக்குக்கு எட்டாத நிலையில் உள்ளாய் என்பான் 'குறியாய்' என்றான். வேண்டுதல் வேண்டாமை யில்லாதவனாகிய நினக்கு விருப்பு வெறுப்பு இல்லையெனவே அவற்றால் வரும் தீயகுணம் எதுவும் இல்லை என்பான், 'குணமேதுமிலாய்' என்றான். அண்டங்களெல்லாம் அணுவெனக் குறுகித் தோன்ற அவை யெல்லாவற்றினும் உயர்வறவுயர்ந்த நெடியோன் நீயே என்பான், 'நெடியாய்' என்றான். அத்தகைய பெரியோனாகிய நீ சிறியேனுக்கு இத் துன்ப நிலையில் எளிவந்து அருளும் திருவுள்ளமுடையாயோ என்பான் 'அடியேன் நிலை நேர்குதியோ' என்று இரங்கிப் போற்றினான் பிரகலாதன். (104)

6420. கள்ளந் திரிவா ரவர்கை தவனீ
உள்ளந் தெரியா தவுனக் குளவோ
துள்ளும் பொறியின் னிலைசோ தனைதான்
வெள்ளந் தருமின் னமுதே விதியோ.

'"கள்ளம் திரிவாரவர் கைதவன் நீ;
உள்ளம் தெரியாத, உனக்கு உளவோ?"
துள்ளும் பொறியின் நிலை சோதனைதான்—
வெள்ளம் தரும் இன் அமுதே!—விதியோ?'

பொ:—மனத்தின்கண் வஞ்சனையுடையராய் ஒழுகுகின்றவர்களுக்கு (அவரினும்) வஞ்சனையுடையவனாய்(ப் புலப்படாது) மறைந்தொழுக வல்லவன் நீ. அத்தன்மையனான உனக்கு (என்) உள்ளக் கருத்துக்கள் தெரியாதன உளவோ? பாற்கடலில் விளைந்த இனிய அமுதம் போல்பவனே! (ஒரு வழி நில்லாது) துள்ளித் திரியும் இயல்பினவாகிய பஞ்சேந்திரியங்களின் நிலையைச் சோதித்தல் வேண்டும் என்பது (ஆட்கொள்ளப் பெறுவார் எல்லார்க்கும் உரிய) விதியாய் அமைந்ததோ?

கு:—கள்ளம் - வஞ்சனை. கைதவன் - வஞ்சகன். கள்ளந் திரிவாரவர் கைதவன் என்றது, பொய்யர்க்குப் பொய்யன் என விளக்கியவாறு. 'வஞ்சனையார் ஆர்பாடும் சாராத மைந்தன்' (தேவாரம்-4-19-8) என்றார் சான்றோரும். உனக்கு உள்ளந் தெரியாத உளவோ என இயையும். ஓகாரம் எதிர்மறை. துள்ளுதல் - ஒருவழிப்பட அமைந்து நில்லாது வரம்பிகந்து தாவுதல். 'புள்ளுவர் ஐவர் வேடர் புனத்திடைப் புகுந்து நின்று துள்ளுவர்' (4-77-5) என்பது அப்பர் அருள் மொழி. உயிர்க்குயிராய் நின்று என் உள்ளத்தியல்புகளையெல்லாம் உள்ளவாறுணர்ந்த அருளாளனும் அடியார்களுக்கு இனிய அமுதம்போல் உள்ளத்தினுள்ளே அண்ணித்திட்டு இன்பம் சுரப்பவனுமாகிய நீ எளியேனை இத்துன்ப நிலையில் வைத்துச் சோதித்தல் முறையாகுமோ என்பான், 'வெள்ளம் தரும் இன்னமுதே! துள்ளும் பொறியின் நிலை சோதனைதான் விதியோ' என்றான். விதி - முறை. (105)

6421. வருநான் முகனே முதல்வா னவர்தாம்
திருநான் மறையின் னெறியே திரிவார்
பெருநா டெரிகின் றிலர்பே தைமையேன்
ஒருநா ளுனையெங் ஙனமுள் ளுவெனே.

" ' வரு நான்முகனே முதல் வானவர்தாம்,
திரு நான்மறையின் நெறியே திரிவார்,
பெரு நாள் தெரிகின்றிலர் ; பேதைமையேன்
ஒரு நாள் உனை எங்ஙனம் உள்ளுவெனோ ?

பொ :—(நினது உந்தித் தாமரையினின்றும்) தோன்றிய நான்கு முகங்களையுடைய பிரமதேவன் முதலிய தேவர்கள் தாம் திருவுடைய நான்கு வேதங்கள் அறிவுறுத்திய நெறியிலே ஒழுகுகின்றவர்கள், நெடுங்காலமாக (உன்னைத் தேடியும்) காணமாட்டாதவராயினர். (ஆற்றல் மிக்க தேவர்களது நிலையே இவ்வாறாகவும்) அறியாமை யுடைய சிறுவனாகிய யான் (மனவாக்குக்கு எட்டாத பெரியோனாகிய) உன்னை ஒரு நாளாகிய இச்சிறிய பொழுதில் எவ்வாறு தியானிக்க வல்லவனாவேன் ?

கு :—பெருநாள் - நெடுங்காலம். ஒருநாள் - ஒரு பகலாகிய சிறு பொழுது. உள்ளுதல் - நினைத்தல் ; தியானித்துப் போற்றுதல்.
(106)

6422. செய்யா தனவோ விலைதீ வினைதான்
பொய்யா தனவந் துபுணர்ந் திடுமால்
மெய்யே யுயிர்தீர் வதொர்மேல் வினைநீ
ஐயா வொருநா ளுமயர்த் தனையோ.

" ' செய்யாதனவோ இலை, தீவினைதான்,
பொய்யாதன வந்து புணர்ந்திடுமால் ;
மெய்யே உயிர் தீர்வது ஓர் மேல்வினை, நீ,
ஐயா ! ஒரு நாளும் அயர்த்தனையோ ?

பொ :—(யான்) செய்யாத தீய செயல்களோ எதுவும் இல்லை ; (அவை) தப்பாதனவாய் (இப்பொழுது என்னை அணுகி) வந்து வருத்துகின்றன. ஐயனே ! (அத்தீவினைப் பயன்கள் யாவும்) உண்மையாகவே (நின் அன்பராயினாரது) உயிரை விட்டு நீங்குதற்குக் காரணமாக (நீ மேற்கொள்ளும்) மேலான திருவருட் செயலை ஒரு பொழுதாயினும் நீ மறந்தனையோ ?

கு :—என்றால் முன்னர்ச் செய்யப்பட்ட தீவினைக்குரிய பயன்களே இப்பொழுது என்னை அணுகித் தப்பாது வருத்துகின்றன என்பான், 'செய்யாதனவோ இலை தீவினைதான், பொய்யாதனவந்து புணர்ந்திடும்' என்றான். ஆல் - அசை. பொய்த்தல் - தப்புதல்.

மெய்யே - உண்மையாகவே. உயிர் தீர்வது ஓர் மேல் வினை - (தீவினைப் பயன்கள்) உயிரைவிட்டு நீங்குதற்கு ஏதுவாக மேற் கொள்ளும் ஒப்பற்ற மேலாகிய செயல்; என்றது, அன்புடைய நல்லுயிர்கள் பண்டைத் தீவினைப் பயனை நுகராதவாறு அவ்வினைப் பயன்களை அறவே போக்கிக் காத்தருளும் நிலையில் இறைவன் செய்யும் திருவருட் செயலை. ஐயன் - தலைவன்; என்றது, எவ்வுயிர்க்குந் தலைவனாகிய இறைவனை. ஒரு நாளும் - ஒருபொழுதா யினும். அயர்த்தல் - மறத்தல். அயர்த்தனையோ என்புழி ஓகாரம், எதிர்மறை. மறந்தாயல்லை என்பதாம். அன்பராயினார்க்கு அருள் வழங்குவதில் என்றும் மறவாத அருளாளனாகிய நீ, இன்று இத் துன்ப நிலையில் அடியேற்கு எளிவந்து அருள்புரியாதிருத்தல் முறையோ எனக் குறிப்பால் வினவியவாறு. (107)

6423. ஆயப் பெறுநன் னெறிதம் மறிவென்
றேயப் பெறுமீ சர்களெண் ணிலரால்
நீயப் புறநிற் கநினைக் கிலர்நின்
மாயப் பொறிபுக் குமயங் குவரால்.

"'ஆயப்பெறும் நல்நெறி தம் அறிவு என்று,
ஏயப்பெறும் ஈசர்கள் எண்ணிலரால்;
நீ அப்புறம் நிற்க, நினைக்கிலர்; நின்
மாயப் பொறி புக்கு மயங்குவரால்.

பொ :—ஆராய்ந்து மேற்கொள்ளத்தக்க நல்ல சாதனமாவது தம்முடைய அறிவே என நினைந்து (அதனையே வலியுடையதாகக் கொண்டு) பொருந்தியொழுகும் தலைவர் எண்ணற்றவராய் உள் ளார்கள். நீ (அவர்களுடைய அறிவுக்கெல்லாம்) அப்பாற்பட்டு நிற்றலால் (தமது அறிவின் துணைகொண்டு நின்னைத்) தியானித் துணரும் ஆற்றலற்றவர்களாய், நீ செய்யும் மாயையாகிய இயந்திரத் திலே அகப்பட்டு(த் தம் நிலையறியாது) மயங்குவாராயினர்.

கு :—எவ்வுயிர்க்கும் இறைவனாகிய நினது அருளை நாடாது தம் அறிவொன்றையே துணையாகக் கொண்டு நின்னைக் காண்பார்க்கு நீ அவரது உணர்வுக்கு எட்டாது அப்பாற்பட்டு நிற்றலால், அன் னோர் நின்னை யுணர்ந்து தியானிக்கும் அறிவு வன்மையின்றி, நீ புணர்த்த மாயையுட்பட்டு மதிமயங்குகின்றனர் என்பதாம். ஈசர் - திருவுடைய தலைவர்கள்; இச்சொல் குறிப்பு மொழியாய்த் திருவில் லாதவர்கள் என்னும் பொருளைத் தந்து நின்றது. நிற்க - நிற்ற லால்; செயவெனெச்சம் காரணப் பொருளில் வந்தது. நினைக்கிலர் -

தியானிக்க இயலாதவராயினர். மாயப் பொறி - மாயையாகிய இயந்திரம். பொறி - புலி முதலிய கொடிய விலங்குகளைச் சூழ்ச்சியால் அகப்படுத்தற்கு அமைத்த இயந்திரம். 'இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய பெருங்கல்லடாரும்' (புறம். 19) என வரும் பகுதி இங்கு ஒப்புநோக்குதற்குரியதாகும். (108)

6424. தாமே தனிநா யகரா யெவையும்
போமே பொருளென் றபுரா தனர்தாம்
யாமே பரமென் றனரென் றவர்க்
காமே பிறர்நின் னலதா ருளரே.

'தாமே தனி நாயகராய், 'எவையும்
போமே பொருள்' என்ற புராதனர் தாம்,
'யாமே பரம்' என்றனர்; என்ற அவர்க்கு
ஆமே? பிறர், நின் அலது, ஆர் உளரே?

பொ :—ஒப்பற்ற முதற்றலைவர் தாமேயாய், எத்தகைய (அருஞ்) செயல்களும் எம்மால் செய்து முடிக்கப் பெறுவனவே என்ற பழையோராகிய முதன்மையுடைய தேவர்கள், 'யாமே பரம்பொருள்' என்று தருக்கி மொழிந்தனர். அங்ஙனம் (செருக்குற்றுக்) கூறிய அத்தேவர்க்கு (அவ்வாறு செய்து) நிறைவேற்றுதல் இயலுமோ? (அன்னோர்க்கும் துணையாவார்) நின்னையன்றிப் பிறர் யார் இருக்கின்றார்கள்?

கு :—புராதனர் - பழையோர்; என்றது, பிரபஞ்சத்திற்குக் காரணராய் அயன் அரி அரன் என நின்ற மும்மூர்த்திகளில் அரியாகிய திருமால் ஒழிந்த ஏனை இருவரையும். பொருள் எவையும் போம் - காரியங்கள் யாவும் (எம்மால்) நிறைவேறும்; எவ்வகைப் பொருள்களும் எமக்கு உள்ளவாறு புலனும். முடிவிலாற்றலும் முற்றுணர்வும் உடையோம் யாமே என்றவாறு. பரம் - மேலாகிய பொருள்; முதற் கடவுள். ஆமே - ஆகுமா? தம்மைத் தாமே முதற் கடவுள் என்று எண்ணித் தருக்குற்ற அயன் அரன் என்றும் அத்தேவர்களும் திருமாலாகிய நினது துணையின்றி எத்தொழிலையும் செய்யவல்லரல்லர் என்பதாம். (109)

6425. ஆதிப் பரமா மெனிலன் றெனலாய்
ஓதப் பொருணூல் களுலப் பிலவால்
பேதிப் பனநீ யவைபேர் கிலையால்
வேதப் பொருளே விளையா டுதியோ.

" ' ஆதிப் பரம் ஆம் எனில், அன்று எனல் ஆய்,
ஓது அப்பொருள் நூல்கள் உலப்பு இலவால்;
பேதிப்பன ; நீ அவை பேர்கிலையால் ;
வேதப் பொருளே ! விளையாடுதியோ ?

பொ :—(அதுவே) முதன்மையுடைய பரம்பொருள் என்று ஒரு நூல் கூறின் (அஃது) அன்று என்று சொல்லுதற்குரியதாய் (அதனை) மறுத்துக் கூறும் அத்தகைய சமயதத்துவ நூல்கள் அளவின்றி யுள்ளன. (அவை) ஒன்றையொன்று முரணுவனவாய்ப் பயில்வோ ருள்ளத்தை வேறுபடுத்தி நிற்பன. இறைவனாகிய நீயோ அவற்றி னின்றும் பெயர்கின்றிலை. (உணர்ந்த ஞானியர்க்கு) வேதப் பொரு ளாய் விளங்கும் பெருமானே! (ஏனையோர் நின்னை உள்ளவாறு உணராதபடி இங்ஙனம் மாறுபட்ட பல சமயங்களையுங் கற்பித்து மாயஞ் செய்து) விளையாடுகின்றாயோ ?

கு :—ஆதிப்பரம் - முதற் கடவுள் ; ஆதியாகிய பரம் என இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. அப்பொருள் நூல்கள் என்றது, அளவைகளாலும் பொருள்களாலும் ஒன்றையொன்றொவ்வாதன வாய்ப் பொருந்திய சமய தத்துவ நூல்களை. சமய வாதிகள் தத்தம் மதங்களே அமைவதாகக் கூறிக் கேட்போருணர்வை வேறுபடுத்தி மயங்கச் செய்வராதலின், அவர்களால் பிரமாணமாகக் காட்டப் பெறும் அப் பெருநூல்கள் பயில்வோருள்ளத்தில் மாறுபாட்டை விளைப்பன என்பான், 'பேதிப்பன' என்றான். 'ஒன்றே பொரு ளெனின் வேறென்ப வேறெனின், அன்றென்ப ஆறு சமயத்தார்' என வரும் திருவள்ளுவமாலைத் தொடர் இங்கு நோக்கத்தகுவ தாகும். இவ்வாறு ஒன்றையொன்றொவ்வாதனவாய் மாறுபடும் சமய மெலாம் புகுந்து நோக்கினும் அவையனைத்தும் பரம்பொருளாகிய நினது இருப்பினை மாற்றவொண்ணாதனவாய் அவை யெல்லாவற் றிற்கும் மேலாய் அவற்றை வகுத்து நிறுத்திய நினது திருவிளை யாடலைப் புலப்படுத்தும் நிலையில் உள்ளன என்பான், 'பேதிப்பன; நீ அவை பேர்கிலையால்; வேதப் பொருளே விளையாடுதியோ ?' என்றான்.

"' வணங்கும் துறைகள் பலபல வாக்கி மதிவிகற்பால்
பிணங்குஞ் சமயம் பலபல வாக்கி. அவையவைதோ
றணங்கும் பலபல வாக்கிநின் மூர்த்தி பரப்பிவைத்தாய்
இணங்குநின் னோரையில்லாய் நின்கண் வேட்கை யெழுவிப்பனே"
(திவ்யப்-2573)

எனவரும் அருளிச் செயல் இங்கு நினைக்கத் தகுவதாகும். (110)

6426. அம்போ ருகனு ரரனு ரறியார்
எம்போ லியரெண் ணிடினென் பலவாக்
கொம்போ டடைபூ கனிகா யெனினும்
வம்போ மரமொன் றெனும்வா சகமே.

"' அம்போருகனுர் அரனுர் அறியார்;
எம்போலியர் எண்ணிடின் என் பலவா?
கொம்போடு அடை, பூ, கனி, காய், எனினும்,
வம்போ, 'மரம் ஒன்று' எனும் வாசகமே?

பொ :—(எல்லாமாயிருக்கும் நின் இயல்பினைப்) பிரமதேவரும் உருத்திரமூர்த்தியும் (உள்ளவாறு) உணரப் பெற்றிலர். (அவ்வாருகவும்) எம்மைப்போலும் சிற்றறிவினோர் (நின்னைக் குறித்துப்) பலவாக எண்ணி யுரைத்தற்கு யாதுளது? கிளையோடு இலை, பூ, கனி, காய் எனப் பல உறுப்புக்களாகப் பிரிந்து காணப்பட்டாலும் (அவையனைத்தும் சேர்த்து நோக்குங்கால்) மரம் என ஒன்றேயாம் எனக் கூறும் சொல் புதுமையுடையதாகுமோ?

கு :—அம்போருகம்-தாமரை. அம்போருகனுர்-தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவர். அரனுர் - உருத்திரமூர்த்தி. பிரமனும் அரனும் நினக்கு அங்கமாய் நினது சொரூபத்தினுள்ளே ஏகதேசமாய் அடங்கியவராதலின் அவ்விருவரும் நின்னியல்பனைத்தையும் தனி நின்று காணவல்லரல்லர் என்பான், 'அம்போருகனுர் அரனுர் அறியார்' என்ருன். உலகினைப் படைத்தழிக்கவல்ல முதற்கடவுளராகிய அவர்தம் நிலைமையே அதுவாயின் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய எம்மைப் போன்ருேர் நின்னைக் குறித்துப் பலவாக எண்ணுதற்குரியது யாதுளது என்பான், 'எம்போலியர் பலவா எண்ணிடின் என்?' என்ருன். கிளை, இலை, பூ, காய், பழம் என்பன பல்வேறு உறுப்புக்களாகத் தனித்தனி எண்ணப்படினும் அவையனைத்தையும் ஒருசேர நோக்குமிடத்து 'மரம்' என ஒரே பொருளாய்த் தோன்றுமாறு போன்று, அவயப்பகுப்புடைய உலகமும் அதன்கண் வாழும் பல்லுயிர்களும் தனித்துணரும்வழிப் பலவாக

எண்ணப்படினும், அவையனைத்தையும் ஒருசேர நோக்குங்கால் அவையனைத்தும் நினது சொரூபத்தின் அங்கங்கள் எனப்பட்டு ஏக தேசமாய் அடங்க நீ ஒருவனே தனி முதல்வனாகத் திகழ்கின்றாய் என்பான், "கொம்போடு, அடை, பூ, கனி, காய் எனினும், மரம் ஒன்று எனும் வாசகம் வம்போ" என்றான். கொம்பு-கிளை. அடை-இலை. வம்பு-புதுமை. (111)

6427. நின்னிற் பிறிதாய் நிலையிற் றிரியா
தன்னிற் பிறிதா யினதா மெனினும்
உன்னிற் பிறிதா யினவோ வுலகம்
பொன்னிற் பிறிதா கிலபொற் கலனே.

"'நின்னின் பிறிதாய், நிலையின் திரியா,
தன்னின் பிறிது ஆயினதாம் எனினும்,
உன்னின் பிறிது ஆயினவோ உலகம்?
பொன்னின் பிறிது ஆகில, பொற்கலனே.

பொ :—உலகங்கள் தாம் (இறைவனாகிய) நின்னிடத்தினின்றும் (வெளிப்பட்டு) வேறாய்த்தோன்றித் தம் நிலையினின்றும் திரிந்து (தமக்குள்) வேறு வேறாயின ஆனாலும் (எல்லாவற்றுக்கும் காரணனாகிய) நின்னினின்றும் வேறுபட்டன ஆகுமோ? (ஆகா); பொன்னினால் இயன்ற அணிகலன்கள் (தமக்கு முதற்காரணமாகிய) பொன்னினின்றும் வேறாவன அல்ல (அது போல).

கு :—பொன்னினால் ஆகிய ஆபரணங்கள் அப்பொன்னின் காரியமாய், அப்பொன்னினின்றும் வேறாகாது அப்பொன்னே என ஒன்றாமாறு போல, இறைவனாகிய உன்னிடத்தினின்றும் தோன்றிய உலகங்களும் முதற்காரணனாகிய நின்னின் வேறாகாத காரியமாய், நினது சொரூபத்துள் ஒன்றாய் அடங்கின என்பான், 'பொன்னின் பிறிது ஆகில பொற்கலனே' என்றான். பொற்கலன் பொன்னின் பிறிது ஆகில (அதுபோல) உலகம் உன்னிற்பிறிது ஆயினவோ (ஆகில) என இயையும். இச் செய்யுள் எடுத்துக்காட்டுவமையணி. பிறிது ஆயின என்பது ஒருமை பன்மை மயக்கம். நிமித்த காரணனாகிய இறைவன் உலகங்களுக்கெல்லாம் முதற்காரணமாகவும் திகழ்கின்றான் என்பதாம்.

இச் செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்

1. கயமேவும் இடங்கர் கழற் கதுவ
பயமேவி யழைத்தது பன் முறையுன்

நயமேவிய நாமம் மதக் கரியன்
றுயுமா றுத வுற்றிட வந்திலேயோ.

2. வேதன் சிரம் ஒன்றை வெறுத்தமையால்
காதும் பிர மக்கொலே காயவுலேந்
தோதுன்றிரு நாம முரைத்த சிவன்
ஏதங்கெட வந்திர வோட்டிலேயோ.

என வரும் இரண்டு செய்யுட்கள் மிகைப் பாடல்களாகக் குறிக்கப் பெற்றுள்ளன. (112)

6428. தாய்தந் தையெனுந் தகைவந் தனேதான்
நீதந் தனேநீ யுறுநெஞ் சினனுன்
நோய்தந் தவனே நுவறீர் வுமெனு
வாய்தந் தனசொல் லிவணங் கினனுல்.

"'தாய் தந்தை எனும் தகை வந்தனேதான்,
நீ தந்தனே; நீ உறு நெஞ்சினன் நான்;
நோய் தந்தவனே நுவல் தீர்வும்" எனு,
வாய் தந்தன சொல்லி, வணங்கினனுல்.

பொ:—(தன்னைப் பெற்ற) தாய் எனவும் தந்தை எனவும் (பெற்றோர்பால் அன்புடையராய் அடங்கி) ஒழுகும் தகுதியுடைய வழிபாட்டு முறையினை (இறைவனுகிய) நீயே (உலகோர்க்கு) நியமித் தருளினுய். (அங்ஙனம் வகுத்தருளிய பெருமானுகிய) நீ குடிகொண் டிருக்கும் நெஞ்சத்தையுடைய அடியவன் யான் ஆவேன். நோயைத் தந்தவனே அந்நோயைத் தீர்த்தற்குரிய மருத்துவனும் ஆவான் என (இவ்வாறு தன்) வாயிற் பயின்ற மெய்ம்மொழிகளைச் சொல்லி (இறைவனைத்) தொழுதான்.

கு:—உயிர்களை இப் பிறவியிற் புகுத்தித் தாய் தந்தை என்னும் சுற்றத் தொடர்பினை யுண்டாக்கி இருமுது குரவர் ஏவல் வழிநின்று அவர்களைப் பணிந்தொழுகுதல் வேண்டும் என்னும் நியதியினை உலகத்தார்க்குக் கற்பித்தருளியவன் முழுமுதற் கடவுளாகிய நீயே யாதலின், நின்னை இடைவிடாது நினைக்கும் நெஞ்சினேனுகிய யான், தந்தை நிலையிலுள்ள கொடியோனுகிய இரணியனது சொல்வழி வணங்கி யொழுகும் மைந்தன் என்னும் முறையிலுள்ளேன். இரணிய னெடு எனக்குள்ள இப் பிறவித்தொடர்பே என்னைத் துன்புறுத்தும் பெரியதோர் நோயாக அமைந்து விட்டது. இந் நோயினை அறவே தீர்க்கவல்ல மருத்துவனுக உள்ளவன் இறைவனுகிய நீயே என

இவ்வாறு பிரகலாதன் மெய்ம்மொழியே பயிலும் தன் வாயில் வெளிப்பட்ட சொற்களால் திருமாலைப் பலவாறு துதித்துப் போற்றினன் என்பதாம்.

இச் செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்,

அது கண்டடல் வஞ்சக ரப்பொழுதில்
கத மிஞ்சிய மன்னன்மு னேகடுகிப்
புதல்வன் இறவாது பொருப்புமு நீர்
மிதவைப்பட மேவின னென்றனரால்.

என்ற செய்யுள் மிகைப்பாடலாகக் குறிக்கப்பெற்றுளது. (113)

6429. அத்தன் மையறிந் தவருந் திறலோன்
உய்த்துய்ம் மினென்முன் னெனவுய்த் தனரால்
பித்துண் டதுபேர் வுறுமா பெறுதும்
கைத்துங் கடுநஞ் சினெனக் கனலா.

'அத்தன்மை அறிந்த அருந் திறலோன்,
"உய்த்து உய்ம்மின் என்முன்" என, உய்த்தனரால்;
"பித்துண்டது பேர்வுறுமா பெறுதும்;
கைத்தும் கடு நஞ்சின்'' என, கனலா,

பொ :—(பிரகலாதனை மலையொடு பிணித்துக் கடலில் வீழ்த்திய நிலையிலும் அவன் இறவாது உய்ந்த) அத்தன்மையை (ஏவலர் சொல்ல) அறிந்த வெல்லுதற்கரிய பேராற்றல் வாய்ந்த இரணியன், ('பிரகலாதனாகிய) அவனைக் கொண்டுவந்து என் முன்னே விடுவீராக' என (த் தன் ஏவலர்க்கு)க் கட்டளையிட (அவர்களும் அவ்வாறே) கொண்டுவந்து நிறுத்தினர். (இரணியன்) 'இவன் கொண்ட பைத்தியம் அறவே நீங்குதற்குரிய உபாயமொன்றைச் செய்யப் பெறுவோம்; கொடிய நஞ்சினால் (இவனது உயிரை) அப்புறப்படுத்துவோம் என்று சொல்ல (அது கேட்ட அசுரர்களும் பிரகலாதனைச்) சினந்து,

கு :—அருந்திறலோன் என்றது, யாவராலும் வெல்லுதற்கு அரிய பேராற்றல் வாய்ந்தவனாகிய இரணியனை. தந்தையாகிய தனது சொல்வழி நில்லாது எத்தகைய இடர் நேரினும் திருமாலிடத்து நீங்காத பேரன்பு பூண்ட பிரகலாதனது பத்தித் திறத்தினைப் பித்துண்டது எனக் குறித்தான் இரணியன். கடு நஞ்சின் கைத்தும்

என - கடிய விடத்தினால் (இவனது உயிரை) அப்புறப்படுத்துவோம் என்று (இரணியன்) சொல்ல. (அது கேட்ட அசுரர்கள்) கனலா, கடுவல்விடம் இட்டார் என அடுத்த செய்யுளோடு இயைத்துப் பொருள் கொள்க. கைத்தல் - செலுத்துதல். கனலா - சினந்து (114)

6430. இட்டார் கடுவல் விடமெண் ணுடையான்
தொட்டா னுகரா வொருசோர் விலனால்
கட்டார் கடுமத் திகைகண் கொடியோன்
விட்டா னவன்மே லவர்வீ சினரால்.

'இட்டார் கடு வல்விடம்; எண்ணுடையான்
தொட்டான் நுகரா, ஒரு சோர்வு இலனால்;
கட்டு ஆர் கடு மத்திகை, கண் கொடியோன்,
விட்டான்; அவன்மேல் அவர் வீசினரால்.

பொ :—கொடுமையுடையதாய் (ப் பருகினார் உயிரைக் கொள்ள வல்ல) வலிய நஞ்சினைப் பிரகலாதனுக்குக் (கலந்து) கொடுத்தார்கள். (திருமாலை இடைவிடாது) தியானித்தலை யுடையவனாகிய பிரகலாதன் (அந்த நஞ்சினை) வாங்கியுண்டு (அதனால்) ஒரு சிறிதும் தளர்ச்சியில்லாதவனாய் இருந்தான். அருளில்லாக் கொடிய கண்களையுடையவனாகிய இரணியன், (பிரகலாதனைத் துன்புறுத்தற் பொருட்டுக்) கட்டமைந்த குதிரைச் சம்மட்டிகளை அனுப்பினான். (அவனுடைய ஏவலராகிய) அவ் அசுரர்கள் பிரகலாதன்மேல் (அவற்றால்) வீசி அடித்தார்கள்.

கு :—எண்ணுடையான் - (இறைவனைத்) தியானித்தலையுடையவனாகிய பிரகலாதன். எண் - எண்ணுதல்; தியானித்தல். இடுதல் - கொடுத்தல். தொடுதல் - ஏற்று வாங்குதல். நுகரா - நுகர்ந்து. ஒரு சோர்வு இலன் - சோர்வு ஒன்றும் இலன்; சிறிதும் சோர்வின்றி யிருந்தான். ஆல், அசை. கண் கொடியோன் கடுமத்திகை விட்டான் என இயையும். கண் கொடியோன் என்றது, அருட்பார்வை சிறிதுமின்றிக் கொடுமையே குடிகொண்ட கண்களையுடையவனாகிய இரணியனை. மத்திகை - குதிரைச் சம்மட்டி. விடுதல் - செலுத்துதல்; அனுப்புதல். அவன்மேல் அவர் (கடுமத்திகை) வீசினர் என்க. அவன் - பிரகலாதன். அவர் - இரணியனுடைய ஏவலராகிய அசுரர். (115)

6431. வெய்யார் முடிவில் லவர்வீ சியபோ
துய்யா னெனும்வே லையினுள் ளுறைவோன்
கையா யிரமல் லகணக் கிலவென்
றெய்யா வுலகியா வையுமெண் ணினனால்.

'வெய்யார், முடிவு இல்லவர், வீசியபோது,
"உய்யான்" எனும் வேலையின், "உள் உறைவோன்
கை ஆயிரம் அல்ல; கணக்கு இல" என்று,
எய்யா, உலகு யாவையும் எண்ணினனால்.

பொ:—கொடுமையே யுருவானவர்களும் எண்ணிறந்தவர்களும் ஆகிய அசுரர்கள், (குதிரைச் சம்மட்டிகளைக் கொண்டு பிரகலாதனை) அடித்துத் துன்புறுத்தியபொழுது (கண்டோர், 'இனி இவன்) பிழைக்க மாட்டான்' என்றெண்ணிய அச் சமயத்தில், '(உயிர்க்குயிராய் என் நெஞ்சத்தின்) உள்ளே எழுந்தருளியிருப்பவனாகிய திருமாலுக்குக் கைகள் ஆயிரம் என்னும் அளவிற்பட்டு அடங்குவன அல்ல; எண்ணிறந்தனவாகும்' என்று அறிந்து, எல்லா வுலகங்களுமாய் விளங்கும் அம் முதல்வனது பேருருவினைத் தன்னுள்ளத்துள்ளே தியானித்துக் கொண்டிருந்தான் (பிரகலாதன்).

கு:—அசுரர் பலர் கூடிச் சம்மட்டியால் தன்னை அடித்து வருத்திய நிலையிலும் பிரகலாதன் அவற்றால் துன்புறாது தன் உள்ளத்துள்ளே எழுந்தருளிய இறைவனாகிய திருமாலின் பேருருவினைத் தியானித்துக் கொண்டிருந்தான் என்பதாம். உள்ளுறைவோன் என்றது, தன்னைத் தியானிப்பார் உள்ளத்துள்ளே விரும்பி வீற்றிருக்கும் இறைவனை. எய்யா - அறிந்து; எய்த்தல் - அறிதல். (சீவக. 2683). உலகு யாவையும் எண்ணுதலாவது, உலகங்களெல்லாவற்றையும் தன்பாற்கொண்டு விளங்கும் இறைவனது பெருவடிவத்தினைத் தியானித்து வழிபடுதல்.

இச் செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்,

6431 (a) மிடல் கொண்டவர் வீசுகரம் பொடிபட்
டுடல் சிந்திட வுட்கினர் மற்றவனுக்
கொடி வொன்றில தென்றவ ரோதுமுனம்
விட மஞ்ச வெழுந்தனன் வெய்யவனே.

என்ற செய்யுள் மிகைப்பாடலாகக் குறிக்கப்பெற்றுளது. (116)

பிரகலாதனைப் பலவகையாகக் கொல்ல முயன்றும் அவன் இறவாமையை அறிந்த இரணியன் 'யானே இவனுயிரை யுண்பேன்' என அவனை நெருங்குதல்

6432. ஊனோ டுயிர்வே றுபடா வுபயம்
தானே யுடையன் றனிமா யையினால்
யானே யுயிருண் பலெனக் கனலா
வானே ழுநடுங் கிடவந் தனனால்.

" 'ஊனோடு உயிர் வேறுபடா உபயம்
தானே உடையன், தனி மாயையினால்;
யானே உயிர் உண்பல்" எனக் கனலா,
வான் ஏழும் நடுங்கிட, வந்தனனால்.

பொ :—(என் மைந்தனாகிய பிரகலாதன்) உடம்பினை விட்டு உயிர் பிரிந்து வேறுபடாது நிலைத்து நிற்றற்குரிய உபாயத்தினைத் தனது ஒப்பற்ற மாயையினால் தானே பெற்றுள்ளான். (ஆதலால் யாவரையும் அழிக்கும் ஆற்றலுடைய இரணியனாகிய) யானே (சென்று அவனது) உயிரைக் கொள்வேன் என்று சொல்லிச் சினந்து, (இடித்தலையுடைய) ஏழு மேகங்களும் (தனது குரல் கேட்டு) அஞ்சும்படி (பிரகலாதன் அருகில்) வந்தடைந்தான்.

கு :— ஊன் - உடம்பு. உபயம் - உபாயம்; குறுக்கல் விகாரம். வான் - மேகம். சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்கிருதம், துரோணம், காளமுகி, நீலவர்ணம் என மேகங்கள் ஏழ் என்பர். தான் என்றது, பிரகலாதனை. தான் தனி மாயையினால் ஊனோடு உயிர் வேறுபடா உபயம் உடையன் என இயையும். தன் மைந்தனாகிய பிரகலாதன் தான் செய்த இடையூறுகள் அனைத்திலும் தப்பி உய்ந்தமைக்கு அவன் எல்லாம் வல்ல இறைவனாகிய திருமாலிடத்தே வைத்த பேரன்பே காரணம் என்பதனை உணரமாட்டாத இரணியன், தன் மகன் இடர்களினின்றும் தப்பியுய்ந்தமைக்குக் காரணம் தன்னைப்போல் அவனும் மாயச் செயலில் வல்லனாயிருத்தலே எனத் தவறாக எண்ணினான் என்பதாம். (117)

பிரகலாதனுக்கும் இரணியனுக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல்

6433. வந்தா னவனங் கியென்மன் னுயிர்தான்
எந்தாய் கொளவெண் ணினையே லிதுதான்

உந்தா வரிதன் றுலகியா வுமுடன்
தந்தார் கொளநின் றதுதா னெனலும்.

வந்தானை வணங்கி, "என் மன்னுயிர்தான்
எந்தாய்! கொள எண்ணினையேல், இதுதான்
உந்தா; அரிது அன்று; உலகு யாவும் உடன்
தந்தார் கொள நின்றதுதான்" எனலும்.

பொ :—(யானே உயிர் உண்பல் என்று கூறி) வந்தவனாகிய இரணியனை(ப் பிரகலாதன்) வணங்கி, 'என் தந்தையே! எனது நிலைபெற்ற உயிரை நீ கவர்ந்துகொள்ள எண்ணினையாயின் இதோ எடுத்துக்கொள்; (எனது உயிர் தந்தையாகிய உனக்குக் கொடாது பேணிவைத்தற்குரிய) அரிய பொருள் அன்று; (ஆயினும்) இவ்வுயிர் எல்லாவுலகங்களையும் ஒருசேரப் படைத்தவராகிய திருமால் (ஒருவரே) ஏற்றுக் கொள்ளும் வண்ணம் (இவ்வுடலில்) நிலைபெற்று நிற்ப தாகும்' என்று கூற,

கு :—'எனலும்' என்னும் உம்மீற்று வினையெச்சம், அடுத்த செய்யுளில் வரும் 'என்றான்' என்னும் பிறகருத்தாவின் வினை கொண்டு முடிந்தது; உம் வினையெச்ச விகுதியாதல், 'அன்னமரபிற் காலங்கண்ணிய என்னகிளவியும்' (தொல்-வினையியல் சூ-32) என் பதனாற் கொள்ளப்படும் என்பர் சேனாவரையர். அல்லீற்றுத் தொழிற் பெயர் உம் விகுதிபெற்று வினையெச்சமாதல் உண்டென் பது, 'நனவிற் புணர்ச்சி நடக்கலும்' (குறிஞ்சிக்கலி, 3) எனவரும் தொடரால் அறியப்படும். இதா என்ற சுட்டுச் சொல் இந்தா என மருவி வழங்குதல் போன்று உதா என்ற சுட்டுச் சொல் உந்தா என மருவியது. உந்தா - இந்தா. 'அறிந்திலேன் ஈதா' (பரிபாடல்-8-61) என்புழி "ஈதா என்பது ஒரு மரூஉ முடிபு; அஃது இக்காலத்து இந்தா வென்று வழங்கப்படும்; சுட்டு நீண்டது" எனப் பரிமேலழகர் கூறிய அமைதியும்; "பண்டங்கள் வந்து பலிதாவென்றான் பகலோற் கிடென்றேன்" (பொன்வண்ணத்தந்தாதி 33.) எனவரும் தொடரில் 'இதா' என்ற சுட்டுச் சொல் 'இந்தா எடுத்துக் கொள்' என்ற பொருளில் ஆளப்பட்டிருத்தலும், "இந்தா விஃதோரிளங்குழவி" (கந்தபுராணம் - வள்ளியம்மை 35) என்ற தொடர் இப்பொருளில் வந்துள்ளமையும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கனவாகும். இனி, 'உந்தாரியதன்று' எனப் பாடங் கொண்டு, 'இவ்வுயிர்தான் உனது வசத்தில் உள்ளதன்று' எனப் பொருளுரைத்தலும் உண்டு. தாரி - வழி; திசைச் சொல். தாரியது அன்று-வசப்பட்டது அன்று. (118)

6434. ஏவரே யுலகந் தந்தா
★ ரென்பெய ரேத்தி வாழும்
மூவரே யல்ல ராகின்
முனிவரே முழுதுந் தோற்ற
தேவரே பிறரே யாரே
செப்புதி தெரிய வென்றான்
கோவமூண் டெழுந்துங் கொல்லான்
காட்டுமேற் காட்சி கொள்வான்.

" ' ஏவரே உலகம் தந்தார்?
என் பெயர் ஏத்தி வாழும்
மூவரே? அல்லர் ஆகின்
முனிவரே? முழுதும் தோற்ற
தேவரே? பிறரே? யாரே?
செப்புதி தெரிய" என்றான்,
கோவம் மூண்டு எழுந்தும் கொல்லான்,
காட்டுமேல் காட்சி கொள்வான்.

பொ :—(இங்ஙனம் பிரகலாதன் சொல்லக் கேட்ட இரணியன் தன் சொல் வழி நில்லாத பிரகலாதன் மேல் தனக்குச்) சினம் பொங்கி யெழுந்த நிலையிலும் (அவனைக்) கொல்ல முற்படாதவனாய், (உலகு தந்தான் இவன் எனக்) காட்டுவானாயின் (அவனைக்) காணலாம் என்னும் கருத்துடையனாகி, (பிரகலாதனை நோக்கி) 'உலகங்களைப் படைத்தளித்தவர் யாவர்? என்னுடைய பெயரைச் சொல்லித் துதித்து வாழும் (அயன், அரி, அரன் என்னும்) மும்மூர்த்திகளோ? அவர்கள் அல்லராயின் (அவர்களையொத்த) முனிவர்களோ? அல்லது என்பால் தோல்வியுற்று(த் தங்கள் உடைமைகளனைத்தையும்) இழந்த ஏனைத் தேவர்களோ? அவர்களை யொழிந்த பிறரோ? யாவர் என்பதனை எனக்கு விளங்கச் சொல்வாயாக' எனக் கூறினான்.

கு :—உலகு தந்தான் இவன் என்பதனைத் தானே கண்டு தெளியும் தகுதி இரணியனுக்கு இல்லையாயினும் தன்னொடு மாறுபட்ட பிரகலாதன் தெளியக் காட்டினானாயிற் காணலாம் என்னும் வேட்கை இரணியனுள்ளத் தெழுந்தது என்பார், 'காட்டுமேற் காட்சி கொள்வான்' என்றார். காட்சி கொள்வான், கோவம் மூண்டெழுந்தும் கொல்லான், 'ஏவரே உலகம் தந்தார்......யாவரே? தெரியச் செப்புதி' என்றான் என இயையும். தெரிய-விளங்க. கோபம் என்ற வடசொல் எதுகை நோக்கிக் கோவம் எனத் திரிந்து நின்றது. (119)

6435. உலகுதந் தானும் பல்வே
றுயிர்கடந் தானு முள்ளுற்
றுலேவிலா வுயிர்க டோறு
மங்கங்கே யுறைகின் ருனும்
மலரினில் வெறியு மெள்ளி
லெண்ணெயு மான வெங்கும்
அலகில்பல் பொருளும் பற்றி
முற்றிய வரிகா ணத்தா.

"'உலகு தந்தானும், பல்வேறு உயிர்கள்
தந்தானும், உள் உற்று,
உலேவு இலா உயிர்கள் தோறும்
அங்கு அங்கே உறைகின்ருனும்,
மலரினில் வெறியும் எள்ளில்
எண்ணெயும் மான, எங்கும்
அலகுஇல் பல் பொருளும் பற்றி
முற்றிய அரிகாண்—அத்தா.

பொ :—(அது கேட்ட பிரகலாதன் இரணியனே நோக்கி) 'என் அப்பனே! உலகங்களேப் படைத்தவனும், பிறவி பேதங்களாற் பல வேறு வகைப்பட்ட உயிர்களேப் படைத்தவனும், அழிவில்லாதன வாகிய அவ்வுயிர்களின் உள்ளே உயிர்க்குயிராய்ப் பொருந்தி அங்கங்கே எழுந்தருளியிருப்பவனும் (ஆகிய இறைவன் யாவன் எனின்,) மலரின் கண்ணே மணமும் எள்ளில் எண்ணெயும் போன்று எங்குமுள்ள அளவில்லாத பல பொருள்களேயும் தன்னகத்தே கொண்டு பிரிவின்றி நிறைந்து நிற்கும் திருமாலே என்று அறிவாயாக.

கு :—இது முதல் மூன்று செய்யுட்கள் ஒரு தொடர். அத்தன் - அப்பன். 'ஏவரே உலகம் தந்தார்?' என இரணியன் வினவிய விஞவுக்கு, 'உலகு தந்தானும் உயிர்கள் தந்தானும் உயிர்கள் தோறும் அங்கங்கே உறைகின்ருனும் அரிகாண்' என விடையிறுத்தான் பிரகலாதன். 'மலரினில் வெறியும் எள்ளில் எண்ணெயும் போல எங்கும் முற்றிய அரி' எனவும் 'அலகில் பல்பொருளும் பற்றி முற்றிய அரி' எனவும் தனித்தனி இயைத்து, நாராயணபதத்தின் இருவகைப் பொருள்களேயும் விளக்கும் முறையில் இத்தொடர் அமைந்திருத்தல் காணலாம். பற்றுதல்-தன்னகத்துக் கொள்ளுதல். முற்றுதல் - தங்குதல்; நிறைதல். உயிர்கள் என்றும் அழிவில்லன வாதலின் 'உலேவு இலா உயிர்கள்' எனப்பட்டன. வெறி-மணம்.(120)

6436. என்கணு ேனாக்கிக் காணு
யெங்கணு முளன்கா ணெந்தை
யுன்கணு னன்பிற் சொன்ணு
லுறுதியென் ெறுன்றுங் கொள்ளாய்
நின்கணு ேனாக்கிக் காண்டற்
கெளியனோ நினக்குப் பின்னோன்
பொன்கணு ஞவி யுண்ட
புண்டரீ கக்க ணம்மான்.

'**என்கணால் நோக்கிக் காணாய்,**
எங்கணும் உளன்காண், எந்தை!
உன்கண் நான் அன்பிற் சொன்னால்
உறுதி என்று ஒன்றும் கொள்ளாய்;
நின்கணால் நோக்கிக் காண்டற்கு
எளியனோ? நினக்குப் பின்னோன்
பொன்கணான் ஆவி உண்ட
புண்டரீகக்கண் அம்மான்.

பொ :—என் தந்தையே, (நின் மகனாகிய) யான் நின்பால் வைத்த அன்பினால் கூறுவதனை உறுதியுடையதென்று சிறிதும் ஏற்றுக் கொள்கின்றிலை. உனக்குத் தம்பியாகிய இரணியாட்சனுடைய உயிரைக் கவர்ந்த செந்தாமரை மலர் போலும் கண்களையுடைய திருமாலாகிய இறைவன் எவ்விடத்தும் நீக்கமறக் கலந்துள்ளான். (அவன், தன்பால் அன்பின்றிப் பகைமை பாராட்டும்) உன்னுடைய கண்களால் குறித்துக் காணுதற்கு எளியன் ஆவானோ? (அவன்பால் அன்புடைய அடியவனாகிய) என்னுடைய கண்களால் (அவனைக்) **காண்பாயாக;**

கு :—எந்தை, விளி. நினக்குப் பின்னோனாகிய பொன்கணான் எனப் பண்புருபு விரித்துரைக்க. பின்னோன் - தம்பி. இரணியாக்ஷன் என்ற வடசொல்லைப் 'பொன்கணான்' எனத் தமிழில் மொழி பெயர்த்தார் ஆசிரியர். புண்டரீகக் கண் அம்மான் - தாமரை மலர் போலும் கண்களையுடைய திருமாலாகிய இறைவன். புண்டரீகக்கண் அம்மான், எங்கணும் உளன்காண்; நின்கணால் நோக்கிக் காண்டற்கு எளியனோ? என்கணால் நோக்கிக் காணாய் என இயைத்துப் பொருள் கொள்க. கணால், கணான் என்பன இடைக்குறை. நோக்குதல் - மனத்தாற் குறித்துணர்தல். காண்டல் - கண்களாற் காணுதல். இவ்விருதிறக் காட்சியையும் முறையே நோக்கல் நோக்கம், நோக்கிய நோக்கம் எனக் குறிப்பிடுவர் தொல்காப்பியர்.

திருமாலாகிய இறைவன், யாவராலும் வெல்லுதற்கு அரிய நின் தம்பி இரணியாட்சனது உயிரைப் போக்கிய பேராற்றலை அறிந்திருந்தும் அம்முதல்வனை இறைவன் எனத் தெளிந்து அன்பினால் வழிபடுதலை விடுத்து நின்பகைவன் எனப் பிறழவுணர்ந்து இகழுமியல்பினையாதலால் அம்முதல்வன் நின்கண்களால் காணுதற்கு அரியன் என்பான், 'நினக்குப் பின்னோன் பொன்கணன் ஆவியுண்ட புண்டரீகக்கண் அம்மான், நின்கணால் நோக்கிக் காண்டற்கு எளியனோ' என்றான். ஓகாரம், எதிர்மறை. அம்முதல்வன் நின்கண்களாற் காணுதற்கு அரியனாயினும் யாண்டும் பொருள் தோறும் நீக்கமற நிறைந்து விளங்குகின்றான் என்பான், 'எங்கணும் உளன்காண்' என்றான். காண் - முன்னிலையசை. தன்முனைப்பின்றி அன்பினால் தன்னை வழிபடுவோர் யாவராயினும் அவர்க்கு எளிவந்தருளும் பெருங்கருணை இறைவனது இயல்பாதலின் அப்பெருமானை அடியவனாகிய யான் அன்பினாற் காணுமாறு போன்று நீயும் அன்பினாற் காணுதல் இயலும் என்பான், 'என்கணால் நோக்கிக் காணாய்' என்றான். என்னுடைய கண்களைக் கொண்டு நீ அவனைக் காண்பாயாக என்றான் என்பதாம்.

> "என் நெஞ்சினால் நோக்கிக் காணீர் என்னை முனியாதே
> தென்னன்சோலைத் திருக்குறுங்குடி நம்பியை நான்கண்டபின்
> மின்னுநூலும் குண்டலமும் மார்வில் திருமறுவும்
> மன்னுபூணும் நான்குதோளும் வந்தெங்கு நின்றிடுமே"
>
> (திவ்ய-3162)

எனவரும் அருளிச் செயலும், 'என்னை மன், நின்கண்ணாற் காண்பென்மன்யான்' எனவும், 'நெய்தலிதழுண்கண், நின்கண்ணாகென் கண்மன' எனவும் வரும் கலித்தொகை (குறிஞ்சிக்கலி ௩)த் தொடர்களும் ஈண்டு நோக்கத்தக்கன. (121)

6437. மூன்றவன் குணங்கள் செய்கை
மூன்றவ னுருவ மூன்று
மூன்றுகண் சுடர்கொள் சோதி
மூன்றவ னுலக மூன்று
தோன்றலு மிடையு மீறுந்
தொடங்கிய பொருள்கட் கெல்லாம்
சான்றவ னிதுவே வேத
முடிவிது சரத மென்றான்.

"'மூன்று அவன் குணங்கள் ;
செய்கை மூன்று; அவன் உருவம் மூன்று;
மூன்றுகண், சுடர்கொள் சோதி மூன்று ;
அவன் உலகம் மூன்று ;
தோன்றலும் இடையும் ஈறும்
தொடங்கிய பொருள்கட்கு எல்லாம்
சான்று அவன் ; இதுவே வேத முடிவு :
இது சரதம்'' என்ருன்.

பொ :—(சாத்துவிகம், இராசதம், தாமதம் என்னும்) மூன்றும் அவ் இறைவனுடைய குணங்களாகும். (படைத்தல், காத்தல், அழித்தல் என்னும்) மூன்றும் அவனுக்கு உரிய தொழில்களாகும். (அயன், அரி, அரன் என்னும் வடிவம்) மூன்றும் அவனுடைய உருவங்களாகும். சுடர்விட்டொளிர்வனவாகிய (ஞாயிறு, திங்கள், தீ என்னும்) ஒளியுடைப் பொருள்கள் மூன்றும் அவனுடைய மூன்று கண்களாகும். (சுவர்க்கம், மத்தியம், பாதலம் என்னும்) மூவகையுலகங்களும் அவனுற் படைக்கப்பட்டு (அவனது அருளாணையின் வண்ணம்) இயங்கும் அவனுடைய உலகங்களாகும். தோன்றுதல் நிலைபெறுதல் அழிதல் ஆகிய மூன்று நிலைகளையுடையவா யுண்டாகிய பொருள்கள் எல்லாவற்றுக்கும் என்றும் சாட்சியாய்(த் தனக்கு முதல் நடு ஈறு இன்றி என்றும்) இருப்பவன் அவ் இறைவன் ஒருவனே. இதுவே மறைகளின் முடிந்த பொருள். இது சத்தியம் எனக் கூறினுன் (பிரகலாதன்).

கு :—எங்கும் என்றும் உளனுகிய இறைவனது இயல்பு இச் செய்யுளில் வகுத்துரைக்கப்பட்டமை காண்க. (122)

6438. என்றலு மவுணர் வேந்த
னெயிற்றரும் பிலங்க நக்கான்
ஒன்றலில் பொருள்க ளெல்லா
மொருவன்புக் குறைவ னென்ருய்
நன்றது கண்டு பின்னர்
நல்லவா புரிது தூணின்
நின்றுள னென்னிற் கள்வ
னிரப்புதி நிலைமை யென்ருன்.

'என்றலும் அவுணர் வேந்தன்
எயிற்று அரும்பு இலங்க நக்கான்,
"ஒன்றல் இல் பொருள்கள் எல்லாம்
ஒருவன் புக்கு உறைவன்' என்றாய்;
நன்று, அது கண்டு பின்னர்
நல்லவா புரிது; தூணின்
நின்றுளன் என்னின், கள்வன்,
நிரப்புதி நிலைமை" என்றான்.

பொ :—(பிரகலாதன்) இவ்வாறு கூறியவுடனே அசுரர் வேந்தனாகிய இரணியன், அரும்பினையொத்த பற்கள் வெளியே விளங்கித் தோன்றும்படி சிரித்தனன்; (தன் மகனை நோக்கி,) 'ஒருவனாய் உள்ள இறைவன், தம்முள் ஒவ்வாதனவாயுள்ள பல்வேறு பொருள்கள் முழுவதும் ஊடுருவிப் புகுந்து (நீக்கமறத்) தங்கியுள்ளான் என்று கூறினாய், மிகவும் நல்லது. அத்தன்மையைச் சோதித்துப் பார்த்துப் பின்னர் அதற்கேற்ற செயலை நன்றாகச் செய்வேன். (யாவர்க்கும் புலப்படாத நிலையில் மறைந்த) கள்வனாகிய அவன் (இத்) தூணினுள்ளே நிலைபெற்றுள்ளான் (என்பது உண்மை ஆயின், (அவ்வாறு) நிலைத்துள்ள தன்மையை எனக்குப் புலப்படுத்தி நிறைவு செய்வாயாக' என்று கூறினான்.

கு :—தன் புதல்வனாகிய பிரகலாதன் கூறிய மெய்ம் மொழிகளைப் பிள்ளைமைத் தன்மையாகிய பேதைமையின்பாற்பட்டனவெனப் பிறழவுணர்ந்த இரணியன், தன் புதல்வனாகிய அவனை இகழ்ந்து சிரித்தனன் என்பார், 'என்றலும் அவுணர்வேந்தன் எயிற்றரும்பு இலங்கநக்கான்' என்றார். ஒன்றல் இல் பொருள்கள் - அவயப் பகுப்பினாலும் தத்தமக்கேயுரிய தனிவேறியல்புகளாலும் ஒன்றோடொன்றொவ்வாதனவாய் வேறுபட்ட பொருள்கள். எல்லாம் - முழுதும். புரிது - புரிவேன். இறைவன் பொருள்கள் தோறும் வெளிப்படாது மறைந்து நின்றுளன் எனக்கேட்ட இரணியன், அவனது இயல்பினைத் தானும் உடன்பட்டுரைப்பான் போன்று இறைவனைக் 'கள்வன்' எனச் சுட்டி இகழ்ந்தனன் என்க. 'கள்வன் தூணில் நின்றுளன் என்னின் நிலைமை நிரப்புதி' என இயைத்துரைக்க. (123)

6439. சாணினு முளனோர் தன்மை
யணுவினைச் சதகூ றிட்ட
கோணினு முளன்மா மேருக்
குன்றினு முளனிந் நின்ற

தூணினு முளன்நீ சொன்ன
சொல்லினு முளனித் தன்மை
காணுதி விரைவி னென்று
னன்றெனக் கனகன் சொன்னான்.

"'சாணினும் உளன்; ஓர் தன்மை
அணுவினைச் சதகூறு இட்ட
கோணினும் உளன்; மாமேருக்
குன்றினும் உளன்; இந் நின்ற
தூணினும் உளன்; நீ சொன்ன
சொல்லினும் உளன்; இத்தன்மை
காணுதி விரைவின்' என்றான்;
'நன்று' எனக் கனகன் சொன்னான்:

பொ :—(அது கேட்ட பிரகலாதன், 'யான் சொன்ன இறைவனாகிய முதல்வன்) சாண் என்னும் அளவினதாகிய பொருளிலும் அடங்கியுள்ளான். (பிரிவுபடாமையால்) ஒன்றென்னுந்தன்மையினையுடைய நுண்ணிய அணுவினை நூறாகப் பகிர்ந்த நுண்ணிய பகுப்பிலும் உள்ளான். மிகப் பெரிய மேருவாகிய மலையிலும் (நீண்டு) பரவியுள்ளான். இதோ நிற்கின்ற இத்தூணிலும் உள்ளான். நீ சொல்லிய சொல்லிலும் கலந்துள்ளான். (இறைவனது இயல்பாகிய) இத்தன்மையினை (யான் காட்ட) நீ விரைவிற் காண்பாய்' எனக் கூறினான். இரணியன் (கேட்டு) 'மிகவும் நன்று' என உடன்பட்டுப் பின்வருமாறு கூறினான்.

கு :—சாண் என்றது, கைவிரல்களால் நீட்டியளக்கும் ஓர் அளவு; அஃது ஈண்டு ஆகுபெயராய் அவ்வளவினதாகிய பொருளையுணர்த்தி நின்றது. அணு என்பது, கண்ணாற் காணுதற்கரிய மிகச் சிறிய துகள். தான் மேலும் இரண்டு முதலாகப் பிரிபட இயலாதவாறு ஒன்றும் தன்மையையுடைய மிகச் சிறிய துகளே 'அணு' எனப்படும் என்பான், 'ஓர் தன்மை அணு' என்றும், பிரிபடாத அவ் அணுவினையும் ஆற்றல் மிக்க கருவி கொண்டு பல நூறு கூறுபடப் பகுத்து நோக்கின் மிக மிக நுண்ணிதாகிய அப்பகுப்பினுள்ளும் இறைவன் பிரிவின்றிப் பரவியுள்ளான் என்பான், 'அணுவினைச் சதகூறு இட்ட கோணினும் உளன்' என்றும், நுண்ணிய பொருள்களிலேயன்றி மேருவை யொத்த மிகப் பெரிய பொருள்களிலும் இடையீடின்றிப் பரவியுள்ளான் என்பான், 'மாமேருக்குன்றினும் உளன்' என்றும், இங்ஙனம் அணுமுதல் அண்டம் ஈறாக எவ்வகைப் பொருள்களிலும் உள்ள அவ் இறைவன் இதோ நிற்கின்ற தூணின்கண்ணும் உள்

ளான் என்பது சொல்லாமலே விளங்கும் என்பான், 'இந்நின்ற தூணினும் உளன்' என்றும், இங்ஙனம் எங்கும் நீக்கமறக் கலந்துள்ள இறைவனது உண்மையினை உடன்படாது முரணிப் பேசும் நின்னுடைய வாய்ச் சொற்களிலும் அவன் கலந்து உள்ளான் என்பது அவனது இருப்பிடங்களுள் ஒன்ருக இத்தூணினைச் சுட்டிச் சொன்ன சொல்லினுலேயே உய்த்துணரப்படும் என்பான், 'நீ சொன்ன சொல்லினும் உளன்' என்றும், இவ்வாறு யாண்டும் நீக்கமறக் கலந்துள்ள இறைவனது இயல்பினை மிக விரைவிலேயே நீ காணப் போகின்ருய் என்பான், 'இத்தன்மைகாணுதிவிரைவின்' என்றும் கூறினுன் பிரகலாதன். கனகன் - இரணியன். அவன் கூறியவை அடுத்த செய்யுளிற் கூறப்படும். (124)

6440. உம்பர்க்கு முனக்கு மொத்திவ்
வுலகெங்கும் பரந்து ளானைக்
கம்பத்தின் வழியே காணக்
காட்டுதி காட்டா யாகில்
கும்பத்தின் கரியைக் கோண்மாக்
கொன்றென நின்னைக் கொன்றுன்
செம்பொத்த குருதி தேக்கி
யுடலையுந் தின்பெ னென்ருன்.

"'உம்பர்க்கும் உனக்கும் ஒத்து,
இவ் உலகு எங்கும் பரந்துளானை,
கம்பத்தின் வழியே காண,
காட்டுதி; காட்டாய் ஆகில்,
கும்பத்தின் கரியைக் கோள்மாக்
கொன்றென, நின்னைக் கொன்று உன்
செம்பு ஒத்த குருதி தேக்கி,
உடலையும் தின்பென்" என்ருன்.

பொ :—வானுலகத்தவராகிய தேவர்க்கும் (அவர் வழியில் ஒழுகும்) உனக்கும் கருத்துக்கு இசைந்தவனும் இவ்வுலக முழுவதும் பரவியுள்ளவன் எனப்படும் திருமாலை இந்தத் தூணின் கண்ணே (யான்) காணுமாறு (எனக்குக்) காட்டுவாயாக; காட்டாதொழிவாயாகுல் மத்தகத்தையுடைய வலிய யானையை வலிய சிங்கமானது தாக்கிக் கொன்ருற்போன்று (உருக்கிய) செம்பினை யொத்த செந்நிறம் வாய்ந்த (உன்உடம்பின்) இரத்தத்தை நிறையக் குடித்து நின் உடம்பினையும் தின்று தீர்ப்பேன் எனக் கூறினுன் (இரணியன்),

கு :—உம்பர் - தேவர். கும்பம் - யானையின் தலையில் அமைந்த மத்தகம் என்னும் உறுப்பு. கோண்மா - வலிய சிங்கம். தேக்குதல் - தேங்கும்படி நிறைவித்தல். (125)

6441. என்னுயிர் நின்னாற் கோறற்
கெளியதொன் றன்றி யான்முன்
சொன்னவன் ரொட்ட தொட்ட
விடந்தொறுந் தோன்றா னாயின்
என்னுயிர் யானே மாய்ப்பல்
பின்னும்வாழ் வுகப்ப லென்னின்
அன்னவற் கடியே னல்லே
னென்றன னறிவின் மிக்கான்.

''என் உயிர் நின்னால் கோறற்கு
எளியது ஒன்று அன்று ; யான் முன்
சொன்னவன் தொட்ட தொட்ட
இடந்தொறும் தோன்றான் ஆயின்,
என் உயிர் யானே மாய்ப்பல் ;
பின்னும் வாழ்வு உகப்பல் என்னின்,
அன்னவற்கு அடியேன் அல்லேன்"
என்றனன் அறிவின் மிக்கான்.

பொ :—(யாவரினும்) அறிவினால் மேம்பட்டவனாகிய பிரகலாதன், (இரணியனை நோக்கி) 'எனது உயிர் உன்னாற் கொன்றொழிப்பதற் குரிய எளிமையுடையதொன்றன்று. என்னால் முன்னர்ச் சொல்லப் பட்ட இறைவனாகிய திருமால் (நீ) தொட்டுத் தொட்டு(ச் சுட்டி)க் காட்டிய இடங்கள் தோறும் வெளிப்பட்டுத் தோன்றாது போவானா யின், என்னுடைய உயிரை யானே மாய்த்துக் கொள்வேன். (அங்ஙன மன்றி) மீளவும் இவ்வுலக வாழ்க்கையை விரும்பி உயிர் தாங்கியிருப் பேனாயின், யான் அம்முதல்வனுக்கு அடியேன் அல்லேன்' என்று சபதங் கூறினான்.

கு :—'இறைவனுக்கு அடியவன் யான் ஆவேன்' என்பதொரு நினைவினைத் தனக்கு உவகைதரும் பெருஞ் செல்வமாகக் கொண்டு ஒழுகுபவன் பிரகலாதன் ஆதலின், அவன் இரணியனை நோக்கிச் சூளுறவு செய்யும் நிலையில் 'யான் இவ்வாறு செய்யேனாயின் திருமா லுக்கு அடியவன் ஆகமாட்டேன்' எனத் தான்கொண்ட கொள்கை

யின்மேல் வைத்துச் சூளுறவு செய்தனன் என்க. அறிவின்மிக்கான், என்றனன் என முடியும். அறிவின்மிக்கான் என்றது ஞானத்தால் உயர்ந்தோனாகிய பிரகலாதனை. (126)

இரணியன், அங்குள்ள தூண்களில் ஒன்றினைத் தன் கையினால் அறைந்து தாக்க, அத்தூணின்கண்ணே நரசிங்கம் தோன்றிச் சிரித்தல்

6442. நகைதிறந் திலங்கப் பொங்கி
நன்றுநன் றென்ன நக்கு
விசைதிறந் துருமு வீழ்ந்த
தென்னவோர் தூணின் வென்றி
இசைதிறந் துயர்ந்த கையா
லெற்றினா னெற்ற லோடும்
திசைதிறந் தண்டங் கீறச்
சிரித்ததச் செங்கட் சீயம்.

'நகை திறந்து இலங்கப் பொங்கி,
"நன்று, நன்று" என்ன நக்கு,
விசை திறந்து உருமு வீழ்ந்தது
என்ன ஓர் தூணின், வென்றி
இசை திறந்து உயர்ந்த கையால்
எற்றினான்; எற்றலோடும்,
திசை திறந்து அண்டம் கீறச் சிரித்தது,
அச் செங்கண் சீயம்.

பொ :—(அது கேட்ட இரணியன், உலகெலாம் கலந்து விளங்கும் இறைவனொருவன் உளன் எனப் பிரகலாதன் தெளியக் காட்டுவானாயின் அவனைக் காணுதல் வேண்டும் என்பதில் தனக்குள்ள) விருப்பம் வெளிப்பட்டு விளங்கச் சினத்தாற் பொங்கி யெழுந்து (பிரகலாதனை நோக்கி) 'நீ கூறியது நன்று நன்று' என்று கூறிச் சிரித்து, வேகத்துடன் (வானத்தைப்) பிளந்து இடியேறு விழுந்தாற் போன்று (தன்னெதிரேயுள்ள) தூண் ஒன்றில் வெற்றிப் புகழை வெளிப்படுத்திச் சிறந்த தனது கையினால் அறைந்தான். (அவ்வாறு அவன் மோதிய அளவில்) சிவந்த கண்களையுடைய (திருமாலாகிய) அந்தச் சிங்கமானது (அத்தூணினுள்ளேயிருந்து) திசைகள் கிழிந்து அண்டம் பிளக்குமாறு (வெடிபடச்) சிரித்தது.

கு :—நசை - விருப்பம். திறந்து இலங்குதல் - வெளிப்பட்டு விளங்குதல். விசை - வேகம். வென்றியிசை - வெற்றியால் உளதாய புகழ், 'வென்றிப்பல்புகழ்' (மலைபடுகடாம்-544) என்றார் பிறரும். எற்றுதல் - மோதுதல்; அறைதல். சீயம் - சிங்கம். (127)

சிங்கத்தின் சிரிப்பொலி கேட்டுப் பிரகலாதன் மகிழ்தல்

6443. நாடிநான் றருவெ னென்ற
நல்லறி வாள னுளும்
தேடிநான் முகனுங் காணுச்
சேயவன் சிரித்த லோடும்
ஆடினு னழுதான் பாடி
யரற்றினன் சிரத்திற் செங்கை
சூடினன் றொழுதா னோடி
யுலகெலாந் துகைத்தான் றுள்ளி.

"நாடி நான் தருவென்" என்ற
நல் அறிவாளன், நாளும்
தேடி நான்முகனும் காணுச்
சேயவன் சிரித்த லோடும்,
ஆடினன்; அழுதான்; பாடி
அரற்றினன்; சிரத்தில் செங்கை
சூடினன்; தொழுதான்; ஓடி
உலகெலாம் துகைத்தான், துள்ளி.

பொ :—(இறைவனை) நானே தேடிக் (கண்டு உனக்குக்) காட்டிக் கொடுப்பேன் என (இரணியனுக்கு) உறுதி கூறிய மெய்யுணர்வுடையனுகிய பிரகலாதன், (படைத்தற் கடவுளாகிய) பிரமதேவனும் நாள்தோறும் முயன்று தேடியும் காண ஒண்ணுதவாறு நெடுந்தூரத்திலுள்ளவனுக (அப்பாற்பட்டு) விளங்கும் திருமால் (சிங்க வுருவுடன் தூணினுள்ளே நின்று வெடிபடச்) சிரித்த அளவில் (அச் சிரிப்பொலியைக் கேட்டு மகிழ்ந்து) ஆனந்தக் கூத்து ஆடினன்; (தன்பொருட்டு எளிவந்தருளிய இறைவனது கருணைத்திறத்தை யெண்ணி நெஞ்சம் நெக்குருகி) அழுதான்; (அம் முதல்வனது புகழ்த்திறத்தைப்) பாடி அரற்றினன்; சிவந்த கைகளைத் தலைமேற்கூப்பித் தொழுதான்; (கீழே வீழ்ந்து) வணங்கினன்; துள்ளிக் குதித்து ஓடி உலகமெங்கும் (கால்களால்) உழப்பினன்.

கு :—நல்லறிவாளன் என்றது, இறைவனையுணரும் நன்ஞானம் பெற்ற பிரகலாதனை. அவனருளால் அன்றித் தன் அறிவொன்

17

றையே துணையாகக்கொண்டு அவனைத் தேடிக் காண முற்படுவோர், எத்தகைய பேரறிவினராயினும் அன்னோர் தன்னை யணுக வொண்ணுதவாறு நெடுந்தூரத்தினராக அப்பாற்பட்டுச் செல்லுதல் இறைவனது இயல்பு என்பார், 'தேடி நான்முகனுங் காணுச் சேயவன்' என்ருர். 'நான்முகனும் நாளும் தேடிக் காணுச் சேயவன்' என இயையும். உம்மை, உயர்வு சிறப்பு. சேயவன்-தூரத்தில் உள்ளவன். 'நணியானே சேயானே' (அப்பர்-4-13-3) என்பது தேவாரம். நல்லறிவாளன், ஆடினுன், அழுதான், பாடி அரற்றினுன், துள்ளி ஓடி உலகெலாம் துகைத்தான் என முடிக்க. துகைத்தல் - காலால் மிதித்து உழப்புதல். (128)

இச் செய்யுளை யடுத்து 23, 26 41, 43 52-என்னும் எண்ணுள்ள சுவடிகளில்

6443 (a) நாணிநின் னெதிரே யாண்டு
நடுவதாயினதோர் செம்பொற்
றூணில்நின் றனனே யன்றித்
தோன்றிய திலதென்ருென்ற
வேணுதண் டுடையோன் வெய்ய
வெள்ளியே விளம்பவெள்ளி
காணவந் தனைய சீயங்
கணத்திடைக் கதிர்த்ததம்மா,

என்ற பாடலும், இதனையடுத்து 52-என்னும் சுவடியில்

6443 (b) ஈதவன் மகிழ்த லோடும்
இரணியன் எரியிற்பொங்கிச்
சாதலை யில்லா வென்முன்
தருக்குறு மாயமெல்லாம்
போதுமோர் கணத்தில் இன்னே
போக்குவேன் போக்குவேனென்
ருேதினன் அண்டகோளம் உடைந்திட
வுருத்துச் சொல்வான்.

என்ற பாடலும் மிகைப் பாடல்களாகக் குறிக்கப்பெற்றுள்ளன.

தூணினுள் நின்று சிரித்த இறைவனைப் போருக்குப் புறப்படுக என இரணியன் அறைகூவி யழைத்தல்

6444. ஆரடா சிரித்தாய் சொன்ன
வரிகொலோ வஞ்சிப் புக்க
நீரடா போதா தென்று
நெடுந்தறி நேடி ஞயோ

போரடா பொருதி யாயிற்
புறப்படு புறப்ப டென்றான்
பேரடா நின்ற தாளோ
டுலகெலாம் பெயரப் பேர்வான்.

ஆர் அடா சிரித்தாய்? சொன்ன
அரிகொலோ? அஞ்சிப் புக்க
நீர், அடா, போதாது என்று,
நெடுந்தறி தேடினாயோ?
போர் அடா பொருதி ஆயின்,
புறப்படு! புறப்படு!" என்றான்—
பேர் அடா நின்ற தாளோடு
உலகு எலாம் பெயரப் பேர்வான்.

பொ :—(தூணினுள்ளே யிருந்த சிங்கத்தின் சிரிப்பொலியைக் கேட்ட இரணியன்,) 'சிரித்தவனாகிய நீ யாரடா? (என் மைந்தனாகிய இவனாற்) சொல்லப்பட்ட நாராயணனோ? (என் முன் நிற்றலாற்றாமல்) அஞ்சி ஓடி ஒளித்தமைக்கு இடனாகிய கடலின் நீர் போதாது என்றெண்ணி இந்த நீண்ட தூணினைத் தேடிக் கொண்டாயோ? ஏடா! 'நீ என்னுடன் எதிர்த்துப் போர் செய்ய வல்லையாயின் உடனே விரைந்து புறப்படுக' என்று (அறைகூவி) அழைத்தான்; புகழ்த்திறம் பொருந்தி நிலை பெற்ற தன் தாள்களால் உலகெலாம் நிலை குலையும்படி அடிபெயர்த்திடுவானாயினன்.

கு :—சிரித்தாய் (நீ) யாரடா? சொன்ன அரிகொலோ? அடா! அஞ்சிப் புக்கநீர் போதாது என்று நெடுந்தறி தேடினாயோ? அடா! போர் பொருதி ஆயின் புறப்படு! புறப்படு! என்றான் என இயைத்துரைக்க. இரண்டாம் அடியிலும் மூன்றாம் அடியிலும் வந்த 'அடா' என்னும் சொல் 'ஏடா' என்ற சொல்லின் திரிபாகும். 'புறப்படு புறப்படு' என்னும் அடுக்கு விரைவுப் பொருளில் வந்தது. பேர் - புகழ். அடா நின்ற - அடுத்து நின்ற; பொருந்தி நிலைபெற்ற. தாள் - பாதம். பெயர - நிலைகுலைய. பேர்தல் - இடம் பெயர்தல். (129)

நரசிங்கப்பிரான் தூணைப் பிளந்து வெளிப்பட்டுப் பேருருவங் கொள்ளுதல்

6445. பிளந்தது தூணு மாங்கே
பிறந்தது சீயம் பின்னை
வளர்ந்தது திசைக ளெட்டும்
பகிரண்ட முதல மற்றும்
அளந்ததப் புறத்துச் செய்கை
யாரறிந் தறைய கிற்பார்
கிளர்ந்தது ககன முட்டை
கிழிந்தது கீழு மேலும்.

'பிளந்தது தூணும்; ஆங்கே
பிறந்தது, சீயம்; பின்னை
வளர்ந்தது, திசைகள் எட்டும்;
பகிரண்டம் முதல மற்றும்
அளந்தது; அப்புறத்துச் செய்கை
யார் அறிந்து அறையகிற்பார்?
கிளர்ந்தது; ககனமுட்டை
கிழிந்தது கீழும் மேலும்.

பொ :—(அந் நிலையில் அந்தத்) தூணும் பிளந்தது. அதன்கண் நின்றும் சிங்கம் தோன்றி வெளிப்பட்டது; (அது) பின்னர் எட்டுத் திசைகளையும் அளாவி வளர்ந்தது. (இவ் அண்டத்திற்கு) வெளியிலுள்ள அண்டம் முதலியனவாகவுள்ள ஏனையவற்றையும் அளப்பதாய் (தன் வடிவினால் நீண்டு) உயர்ந்தது. அதனால் உலக வுருண்டையாகிய முட்டை கீழும் மேலும் கிழிந்து பிளந்தது. இவ் வண்டத்திற்கு அப்பால் நிகழ்ந்த செய்கையினை யார்தாம் அறிந்து சொல்லவல்லவர்கள்?

கு :—தூணும் பிளந்தது; ஆங்கே சீயம் பிறந்தது; பின்னை திசைகள் எட்டும் வளர்ந்தது; பகிர் அண்டம் முதல மற்றும் அளந்தது; கிளர்ந்தது; ககன முட்டை கீழும் மேலும் கிழிந்தது; அப்புறத்துச் செய்கை அறிந்துரைக்க வல்லார் யார்? என இயைத்துரைக்க. ககனம் - ஆகாயம்; என்றது, வானப் பரப்பினைத் தன்னகத்தே கொண்டுள்ள அண்டகோளத்தினை. முட்டை என்றது, அதன் மேற்பரப்பாகிய ஓட்டினை. (130)

நரசிங்கமூர்த்தியின் பேருருவத் தோற்றம்

6446. மன்றலந் துளப மாலை
மானிட மடங்கல் வானிற்
சென்றது தெரித றேற்றுஞ்
சேவடி படியிற் றீண்ட
நின்றதோர் பொழுதி னண்ட
நெடுமுகட் டிருந்த முன்னோன்
அன்றவ னுந்தி வந்தா
னுமெனத் தோன்றி னானால்.

'மன்றல் அம் துளபமாலை
மானிட மடங்கல், வானில்
சென்றது தெரிதல் தேற்றும்;
சேவடி படியில் தீண்ட
நின்றது ஓர் பொழுதின், அண்ட
நெடுமுகட்டு இருந்த முன்னோன்
அன்று அவன் உந்தி
வந்தானும் எனத் தோன்றினானால்.

பொ :—மணம் பொருந்திய அழகிய திருத்துழாய் மாலையை அணிந்த, (திருமாலாகிய) நரசிங்கம் வானத்தை ஊடுருவி (நீண்டு) உயர்ந்து சென்றது. (அது சென்ற எல்லையைத்) தெளிய அறிந்திலோம். (நரசிங்கமானது) செம்மை பொருந்திய திருவடிகள் பூமியிற் பொருந்த நின்ற அச் சமயத்தில், இவ் அண்டத்தின் உயர்ந்த முகட்டிலே (யுள்ள சத்தியலோகத்தில்) இருந்த முதியோனாகிய பிரமன், முற்காலத்தில் அத் திருமாலின் உந்தித் தாமரையிற் பிறந்தவனைப் போன்று காணப்பட்டான்.

கு :—திருமாலுக்கு உகந்ததாகிய திருத்துழாய் தான் முளைக்கும் பொழுதே மணமுடையதாய் முளைக்குஞ் சிறப்பும் அழகும் உடைய தென்பார், 'மன்றலந்துளபம்' என அடைகொடுத்தோதினார். துளபம் - துளசி. மானிட மடங்கல் - மனிதவுருவுடன் கூடிய சிங்கம்; முகமும் நகங்களும் சிங்கத்தின் வடிவாகவும் ஏனைய அங்கங்கள் மனித வடிவாகவும் கொண்டு தோன்றிய நரசிங்கமூர்த்தி. தேவர், மனிதர், விலங்கு முதலியனவாக உள்ள எவ்வகைப் பிறப்பு வகைகளாலும் தனக்குச் சாதல் நேர்தல் ஆகாது என வரம் பெற்றுள்ள

இரணியனை அவன் பெற்றுள்ள வரத்திற் பிறழாதபடி சூழ்ச்சியாற் கொல்லக் கருதிய திருமால் இங்ஙனம் மனித வடிவும், சிங்க வடிவும் கலந்ததொரு வடிவினைத் தாமே புதியதாகப் படைத்துக் கொண்டார் எனப் புராணம் கூறும். முன்னோன் என்றது உலகப் படைப்பிற்கு முன்னரே தோன்றிய முதியவனாகிய பிரமனை. 'தொடங்கற்கண் தோன்றிய முதியவன்' (கலித்தொகை-2) எனச் சான்றோர் கூறுதல் ஈண்டு நினைக்கத்தக்கதாகும். (131)

6447. எத்துணை போதுங் கையென்
றியம்பினு லெண்ணற் கேற்ற
வித்தக ருளரோ வந்தத்
தானவர் விரிந்த சேனை
பத்துநூ றமைந்த கோடி
வெள்ளத்தாற் பகுதி செய்த
அத்தனை கடலு மாளத்
தனித்தனி யள்ளிக் கொண்ட.

"'எத்துணை போதும் கை?" என்று
இயம்பினுல் எண்ணற்கு ஏற்ற
வித்தகர் உளரோ? அந்தத்
தானவர் விரிந்த சேனை
பத்து நூறு அமைந்த கோடி
வெள்ளத்தால் பகுதி செய்த
அத்தனை கடலும் மாளத்
தனித்தனி அள்ளிக் கொண்ட.

பொ:—(மானிட மடங்கலாகிய அவ் இறைவனுக்குக்) கைகள் எத்தனையுள்ளன என வினவினுல், அவற்றை எண்ணி அளவிட்டுரைத்தற்கு இயைந்த திறமையுடையார் (இவ்வுலகில் யாரேனும்) உளரோ? ஆயிரங்கோடி வெள்ளம் என அளவிட்டுப் பகுத்துரைக்கப்பட்ட அந்த அசுரர்களுடைய விரிந்து பரவிய சேனைகளாகிய கடல் அனைத்தும் அழியும்படி (அக் கைகள் அந்தச் சேனை வீரர்களைத்) தனித்தனியே அள்ளிக்கொண்டன.

கு :—நரசிங்க மூர்த்தியாக உருக்கொண்ட இறைவன், தன்னெதிர்ப்பட்ட அசுரர்களாகிய ஆயிர வெள்ளஞ் சேனை வீரர்களையும் தனித்தனியே கைகளிற் பற்றிக்கொண்டான் ஆதலின், அவனுடைய திருவுருவில் அமைந்த கைத்தலங்கள் ஆயிரங் கோடி வெள்ளம் என்னும் எண்ணினும் மேற்பட்டனவாய் எண்ணிறந்தன என்பதாம். பொருள்களை நுனித்துணர்ந்து எண்ணியறிய வல்ல திறமையுடையோரை வித்தகர் எனக் குறித்தார். பத்து நூறமைந்த கோடி வெள்ளம்—ஆயிரங் கோடி வெள்ளம். 'ஆயிரங் கோடி வெள்ளத்து அயிலெயிற்றவுணர்' என்பர் பின்னரும். வெள்ளம், ஓர் எண்ணுப் பெயர். பத்து நூறமைந்த கோடி வெள்ளத்தாற் பகுதி செய்த அந்தத் தானவர் விரிந்த சேனைக் கடல் அத்தனையும் என இயையும்.

"இரு கை மா அல்
முக்கை முனிவ நாற்கை அண்ணல்
ஐங்கைம் மைந்த அறுகை நெடுவேள்
எழுகை யாள எண்கை யேந்தல்
ஒன்பதிற்றுத் தடக்கை மன்பே ராள
பதிற்றுக்கை மதவலி, நூற்றுக்கை யாற்றல்
ஆயிரம் விரித்தகைம் மாய மள்ள
நூறுயிரங் கை ஆறறி கடவுள்
அனைத்து மல்லபல அடுக்கல் ஆம்பல்
இனைத்தென எண்வரம் பறியா யாக்கையை"
(பரிபாடல்-௩ வரி-35-45)

என வரும் கடுவன் இளவெயினனார் வாய்மொழி இங்கு நினைத்தற்குரியதாகும். (132)

6448. ஆயிரங் கோடி வெள்ளத்
தயிலெயிற் றவுணர்க் கங்கங்
கேயின வொருவர்க் கோரோர்
திருமுக மிரட்டிப் பொற்றோள்
தீயெனக் கனலுஞ் செங்கண்
சிரந்தொறு மூன்று தெய்வ
வாயெனிற் கடல்க ளேழு
மலைகளு மற்று முற்றும்.

'ஆயிரம் கோடி வெள்ளத்து அயில்
எயிற்று அவுணர்க்கு அங்கு அங்கு
ஏயின ஒருவர்க்கு ஓர் ஓர் திருமுகம்,
இரட்டி பொன் தோள்,
தீ எனக் கனலும் செங்கண்
சிரம் தொறும் மூன்று, தெய்வ
வாய் எனில், கடல்கள் ஏழும்,
மலைகளும், மற்றும், முற்றும்.

பொ :—ஆயிர கோடி வெள்ளம் தொகையினராய கூரிய பற்களை யுடைய அசுரர்கள் ஒவ்வொருவர்க்கும் (எதிராக) ஒவ்வொரு திருமுகம் இவ்விரண்டு அழகிய தோள்கள், நெருப்புப் போன்று சினத்தால் அழல்கின்ற கண்கள் ஒவ்வொரு திருமுகத்திலும் மும்மூன்றுள்ளன. தெய்வத்தன்மை வாய்ந்த (அத்திருவுருவத்தின்) வாயினுள்ளே ஏழு கடல்களும் மலைகளும் (அடங்குவன).

கு :—அசுரர் சேனையிலுள்ள ஆயிர கோடி வெள்ளத்தினராய வீரர்கள் ஒவ்வொருவர்க்கு முன்னும் ஒவ்வொரு திருமுகமும் இவ்விரண்டு கைகளும் முகந்தோறும் மும்மூன்று கண்களும் ஏழு கடல்களும் மலைகளும் அடங்கத்தக்க பெரிய வாயும் ஆக அப்பொழுது பேருருக்கொண்டு நின்ற நரசிங்கமூர்த்தியின் திருவுருவில் எண்ணிறந்த முகங்களும் கைகளும் கண்கள் முதலிய அங்கங்களும் காணப்பட்டன என்பதாம். (133)

6449. முடங்குவா ருளைய வண்ட
முழுவது முடிவி னுண்ணும்
கடங்கொள்வெங் காலச் செந்தீ
யதனைவந் தழிக்குங் கால
மடங்கலி னுயிர்ப்பு மற்றக்
காற்றினை மாற்று மானல்
அடங்கலும் பகுவா யாக்கை
யப்புறத் தகத்த தம்மா.

'முடங்கு வார் உளை, அ(வ்)
அண்டம் முழுவதும் முடிவின் உண்ணும்
கடம் கொள் வெம் காலச் செந்தீ
அதனை வந்து அழிக்கும்; கால

மடங்கலின் உயிர்ப்பு, மற்று
அக்காற்றினை மாற்றும்; ஆனால்,
அடங்கலும் பகுவாய் யாக்கை
அப்புறத்து அகத்தது அம்மா!

பொ :—(அச்சிங்கத்தினது) வளைந்த நீண்ட பிடரிமயிர் அவ் அண்டம் முழுவதனையும் இறுதியில் அழிக்கும் கடமையையுடைய கொடிய ஊழிக்காலத் தீயினைக் கீழ்ப்படுத்தவல்லது. காலமடங்கல் ஆகிய அச்சிங்கத்தின் மூச்சுக் காற்று அவ்வூழிக் காலத்துப் பெருங் காற்றை மாற்றவல்லது. ஆனால் அவையிரண்டும் திறந்த வாயினை யுடைய அச்சிங்க வடிவத்தின் மேற்புறத்திலும் உள்ளிடத்திலும் (ஆக மாறி) அமைந்தன.

கு :—சிங்கத்தின் பிடரில் வளைந்து தொங்கும் மயிர்த் தொகுதி யானது, செந்நிறத்தாலும் வெம்மையினாலும் யுகமுடிவிலே உலகத்தை யழிக்கும் ஊழித் தீயினை வென்றடக்கும் இயல்பின தென்றும், அச்சிங்கத்தின் மூச்சுக்காற்று, உலகங்களையழிக்கும் ஊழிப் பெருங்காற்றை வென்றடக்கும் இயல்பினதென்றும், ஆனால் ஊழித் தீயும் சண்டமாருதமும் முறையே அண்டத்தின் உள்ளேயும் புறத்தேயும் அமைந்திருக்க, அவற்றைக் கீழ்ப்படுத்தவல்ல பிடரி மயிரும் உயிர்ப்பும் ஆகிய இவை, இச்சிங்கத்தினது உடம்பின் புறத் திலும் அகத்திலும் ஆக மாறியமைந்திருப்பது வியப்புக்குரிய தொன் றும் என்றும் கூறியவாறு. 'ஆனால் அடங்கலும் பகுவாய் யாக்கை அப்புறத்து அகத்தது' எனவரும் இத்தொடர்க்கு 'ஆயினும் (இவ் வாறு உளையினாலும் உயிர்ப்பினாலும் வென்றடக்கப்படும்) ஊழித் தீயும் சண்டமாருதமும் ஆகிய அவ்வையிரண்டும் முறையே பிளந்த வாயினையுடைய அச்சிங்கத்தினது மேனியின் புறத்திலுள்ளதும் அகத்திலுள்ளதும் ஆகிய அப்பொருளாய் ஒன்றி ஒடுங்கின' எனப் பொருளுரைத்தலும் பொருந்தும். அம்மா - வியப்பிடைச் சொல். முடங்குதல் - வளைதல். வார்தல் - நீளுதல். உளை - பிடரிமயிர். காலச் செந்தீ - ஊழித்தீ. காலமடங்கல் - காலனையொத்து எதிர்ப் பட்டார் உயிரைக் கொள்ளும் சிங்கம்; என்றது நரசிங்கத்தினை. (134)

6450. குயிற்றிய வண்டங் குஞ்சை
யிட்டிலா முட்டை முட்டப்
பயிற்றிய பருவ மொத்த
காலத்து ளமுது பல்கும்

எயிற்றுவன் பகுவா யுள்புக்
கிருக்குந விருக்கை யெய்தி
வயிற்றின்வந் தந்நா ளிந்நாள்
வாழுமன் னுயிர்கண் மன்றே.

‘ குயிற்றிய அண்டம் குஞ்சை
இட்டிலா முட்டை முட்டப்
பயிற்றிய பருவம் ஒத்த
காலத்துள் அமுது பல்கும்
எயிற்று வன் பகுவாயுள் புக்கு
இருக்குந இருக்கை எய்தி ;
வயிற்றின் வந்து அந்நாள் இந்நாள்
வாழும் மன்னுயிர்கள் மன்றே.

பொ :—(உலகெலாம் அழியும் ஊழிக்காலமாகிய அந்நாளிலே திருமாலின்) வயிற்றினுள்ளே (புகுந்து) இருந்து (பின் அங்கிருந்து) வெளிப்பட்டு இந்நாளிலே இவ்வுலகில் வாழும் நிலைபேறுடைய உயிர்கள் யாவும், (முன்னளில் இறைவனுற்) படைக்கப்பட்ட இவ் அண்டமானது குஞ்சு பொரிக்காத முட்டையினை யொத்து (அதனைப் பக்குவப் படுமாறு) பொருந்த அணைத்துக்கொண்ட பருவத்தினை யொத்த அக்காலத்திலே, (இந்நரசிங்க மூர்த்தியினது) அமிழ்தூறும் (இனிய) தந்தங்களையுடைய வலிய திறந்த வாயினுள்ளே புகுந்து (அங்கே தத்தமக்கேற்ற) இடத்தினைப் பெற்று இருப்பனவாம்.

கு :—அந்நாள் வயிற்றின் வந்து இந்நாள் வாழும் மன்னுயிர்கள், குயிற்றிய அண்டம் குஞ்சை இட்டிலா முட்டை முட்டப் பயிற்றிய பருவம் ஒத்த காலத்துள், அமுது பல்கும் எயிற்று வன்பகுவாயுள் புக்கு இருக்கை எய்தி இருக்குந என இயையும். நரசிங்கமூர்த்தியின் திறந்த வாயானது, அண்டப் பரப்பினுள் உயிர்கள் குடிபுகுதற்கு முன்னும் அண்டங்கள் யாவும் அழியும் ஊழிக் காலத்தும் மன்னுயிர்கள் யாவும் தத்தமக்குத் தகுதியான இடங்களைப் பெற்று இனிது வாழ்தற்கேற்ற இடப் பரப்பும் இனிமையும் ஒருங்குடைய தாய் அமைந்திருந்தது என்றவாறு. குயிற்றுதல் - செய்தல். முட்டுதல் - மோதுதல்; பொருந்தி அடைகாத்தல் என்ற பொருளில் இங்கு ஆளப்பெற்றது. நரசிங்கத்தின் தந்தங்கள் பகைவரானோர்க்கு அச்சத்தை விளைப்பனவாகத் தோன்றினும், தன் அடியார்களுக்கு இன்பங்கள் தருதலே அவற்றின் இயல்பென்பார். ‘ அமுதுபல்கும் எயிறு ’ என அடை கொடுத்தோதினர். பல்குதல் - பலவாகச் சுரத்தல்.
(135)

6451. நன்மையிற் றொடர்ந்தார்க் குண்டோ
கேடுநான் முகத்தோ னாதி
தொன்மையிற் றொடர்ந்த வாய்மை
யறத்தொடுந் தொடர்ந்தி லோரை
அன்வயித் தோருந் தீய
வவுணரல் லாரை யந்நாள்
தன்வயிற் றகத்து வைத்துத்
தந்ததச் சீயந் தாயின்.

'நன்மையின் தொடர்ந்தார்க்கு உண்டோ,
கேடு? நான்முகத்தோன் ஆதி
தொன்மையின் தொடர்ந்த வாய்மை
அறத்தொடும் தொடர்ந்திலோரை
அன்வயித்து, ஓரும் தீய
அவுணர் அல்லாரை அந்நாள்
தன் வயிற்றகத்து வைத்துத் தந்தது,
அச் சீயம், தாயின்.

பொ :—அந்த நரசிங்கமானது, நான்கு முகங்களையுடையோனாகிய பிரமன் முதலாகத் தொன்றுதொட்டு இயைந்து வரும் மெய்ம்மைத் தன்மையோடும் அறத்தினோடும் பொருந்தி யொழுகுதல் இல்லாதவர்களாகிய அசுரர்களைப் பின்தொடர்ந்து (வருத்தி), ஆராய்ந்துணரும் தீமையினையுடைய அசுரர்கள் அல்லாத ஏனைய நல்லோர்களைத் தன் வயிற்றினகத்தே அணைத்துத் தாய்போற் பாதுகாத்தது. (ஆதலால்) நல்லறநெறியில் ஒழுகியவர்களுக்கு (என்றேனும்) கெடுதி உண்டாகுமோ? (உண்டாகாது என்பதாம்).

கு :—அச்சீயம், அறத்தொடும் தொடர்ந்திலோரை அன்வயித்து, அவுணர் அல்லாரைத் தன் வயிற்றகத்து வைத்துத் தாயின் தந்தது என முடிக்க. சீயம் - சிங்கம். அன்வயித்தல் - பின்தொடர்தல். தாயின் - தாய்போன்று. தருதல் - புறந்தருதல்; பாதுகாத்தல். திருமாலாகிய நரசிங்கம் பிரமன் முதலாகத் தொன்றுதொட்டு இயைந்து வரும் வாய்மைக் குணத்தோடும் அறத்தினோடும் பொருந்தியொழுகாத கொடியோர்களாகிய அசுரர்களைப் பின் தொடர்ந்து வருத்துவதாய், அவுணரல்லாத ஏனைய நல்லோர்களைத் தன் வயிற்றிலணைத்துத் தாய்போற் பாதுகாத்தது என்பதாம். இச் சிறப்புப் பொருளை விளக்கும் நிலையில் அமைந்தது, 'நன்மையிற் றொடர்ந்தார்க்குக் கேடு உண்டோ' என்னும் பொதுப்பொருளாகும். இச் செய்யுள் வேற்றுப் பொருள் வைப்பணி. உண்டோ என்புழி ஓகாரம் எதிர்மறை. (136)

நரசிங்கமூர்த்தி அசுரர்களை அழித்தல்

6452. பேருடை யவுணர் தம்மைப்
பிறையெயிற் றடக்கும் பேராப்
பாரிடைத் தேய்க்கு மீளப்
பகிரண்டத் தடிக்கும் பற்றி
மேருவிற் புடைக்கு மாள
விரல்களிற் பிசையும் வேலை
நீரிடைக் குமிழி யூட்டு
நெருப்பிடைச் சுரிக்க நீட்டும்.

'பேருடை அவுணர் தம்மைப்
பிறை எயிற்று அடக்கும்; பேரா,
பாரிடைத் தேய்க்கும்; மீளப்
பகிரண்டத்து அடிக்கும்; பற்றி,
மேருவில் புடைக்கும்; மாள
விரல்களின் பிசையும்; வேலை
நீரிடைக் குமிழி ஊட்டும்;
நெருப்பிடைச் சுரிக்க நீட்டும்;

பொ :--(நரசிங்கமாகிய அது,) வெற்றிப் புகழையுடைய அசுரர்களிற் பலரைப் பிறைச் சந்திரனையொத்த தன்னுடைய (கோரப்) பற்களில் (அழுத்தி) அடக்கும்; (தன் கால்களால் பலரைப்) பூமியிலே தேய்த்து அழிக்கும்; (பலரை எடுத்துப்) புறத்தேயுள்ள அண்டங்களிலே வீசி அடிக்கும்; (பலரைப்) பிடித்து மேரு மலையிலே மோதித் தாக்கும்; (பலரை) இறக்கும்படி விரல்களாற் பிசையும்; (பலரைக்) கடல் நீரினுள்ளே (ஆழும்படி அமுக்கிக்) குமிழி யெழச் செய்யும். (பலரை வடவைத்) தீயிலேபட்டுச் சுருண்டு தீயும்படி நீட்டி வதைக்கும்.

கு :—நரசிங்கமூர்த்தி அசுரர்களைத் தொடர்ந்து பற்றி அழித்த செய்தி இது முதல் ஏழு செய்யுட்களில் விரித்துரைக்கப் பெற்றுளது. பேர் - புகழ். பகிரண்டம் - புறத்தேயுள்ள அண்டம். வேலை - கடல். நீரிடைக் குமிழியூட்டுதலாவது, நீரினுள்ளே ஆழ அமுக்குதலால் நீரிற் புறத்தே குமிழிகள் தோன்றுமாறு செய்தல். நெருப்பிடைச் சுரிக்க நீட்டுதலாவது, தீயிலேபட்டுச் சுருண்டு தீயும்படி நீட்டி வாட்டுதல். சுரித்தல் - சுருண்டு தீய்தல். (137)

6453. வகிர்படத் துணிக்கும் பற்றி
வாய்களைப் பிளக்கும் வன்றோல்
சுகிர்படுத் துரிக்குஞ் செந்தீக்
கண்களைச் சூலுஞ் சுற்றிப்
பகிர்படக் குடரைக் கொய்யும்
பசையறப் பிசையும் பல்கா
லுகிர்புரைப் புக்கோர் தம்மை
யுகிர்களா லுறக்கு மூன்றி.

'வகிர்படத் துணிக்கும்; பற்றி
வாய்களைப் பிளக்கும்; வன்தோல்
சுகிர்படுத்து உரிக்கும்; செந்தீக்
கண்களைச் சூலும்; சுற்றிப்
பகிர்படக் குடரைக் கொய்யும்;
பசை அறப் பிசையும்; பல்கால்
உகிர்புரைப் புக்கோர் தம்மை
உகிர்களால் உறக்கும், ஊன்றி;

பொ :—(நரசிங்கமானது, அசுரர்களை) இரு கூறுகும்படி துண்டித்துக் கொல்லும்; (அசுரருடைய) வாய்களைப் பற்றிக் கிழிக்கும்; (அவர்களது உடம்பின்) வலிய தோலினைக் கிழித்தலைப் பொருந்தி உரித்தெடுக்கும்; செந்நிறமுடைய தீயுமிழும் கண்களைத் தோண்டியெடுக்கும்; வெளிப்புறத்திலே சரிந்து விழும்படி (அசுரர்களின்) குடர்களைப் பற்றிப் பறிக்கும்; (உதிரப்) பசையற்றொழியுமாறு (அவர்களைப்) பலமுறையும் பிசைந்து பிழியும்; (தன்னுடைய) நகத் தொளைகளினுள்ளே புகுந்தொடுங்கிய அசுரர்களை மற்றை நகங்களினால் ஊன்றிக் கிள்ளிக் களைந்தெறியும்.

கு :—வகிர் - பிளவு; கூறு. சுகிர்தல் - கிழித்தல். சூலுதல் - தோண்டியெடுத்தல். பகிர் - வெளிப்புறம். உகிர்புரை - நகத் துவாரம். உகிர்ப்புரை எனற்பாலது எதுகை நோக்கி உகிர்புரை என வந்தது. உறக்குதல் - கிள்ளுதல். (138)

6454. யானையுந் தேரு மாவும்
யாவையு முயிரி ராமை
யூன்றொடுந் தின்னும் பின்னை
யொலிதிரைப் பரவை யேழும்

மீனொடுங் குடிக்கு மேகத்
துருமொடும் விழுங்கும் விண்ணிற்
றானொடுங் காதென் றஞ்சித்
தருமமுஞ் சலித்த தம்மா.

'யானையும், தேரும், மாவும்,
யாவையும், உயிர் இராமை,
ஊனொடும் தின்னும்; பின்னை,
ஒலிதிரைப் பரவை ஏழும்
மீனொடும் குடிக்கும்; மேகத்து
உருமொடும் விழுங்கும் விண்ணில்;
"தான் ஒடுங்காது" என்று, அஞ்சித்
தருமமும் சலித்தது அம்மா!

பொ:—(அந்நரசிங்கமானது, அவ் அசுரர்களுக்குரிய) யானை தேர் குதிரை ஆகிய எல்லாவற்றையும் (அவற்றின்கண்) உயிர் நிலைத்திராவண்ணம் (அவற்றின்) உடம்புகளுடனே ஒருசேரத்தின்றொழிக்கும்; பின்னர் ஒலிக்கின்ற அலைகளையுடைய ஏழு கடல்களையும் மீனினங்களுடனே குடித்துத் தீர்க்கும்; வானின்கண் உலவும் மேகங்களை இடியுடனே சேர விழுங்கும்; நரசிங்கமாகிய இது (ஆகாயமாகிய எல்லையளவில்) அடங்கித் தன் கோபந்தணிவதன்று என்றெண்ணி அறக்கடவுளும் அஞ்சி நடுங்கியது.

கு:—'உயிர் இராமை ஊனொடுந்தின்னும்' என்பதனைத் தேர் ஒழிந்த உயிருடையவற்றுக்குக் கொள்க. தேருடன் இயைத்துரைக்குங்கால் தின்னுதல் என்றது, விழுங்கி வயிற்றினுள் அடக்கிக் கொள்ளுதலைக் குறிக்கும். மா - குதிரை. பரவை - கடல். உரும் - இடி. 'விண்ணில்' என்ற சொல் முன்னும் பின்னும் இயைந்து நின்றது. தான் என்றது, நரசிங்கத்தினை. எக்காலத்தும் யாண்டும் சலியாத வலிபடைத்த தருமமும் யாவராலும் அடக்கவொண்ணாத வெகுளிமிக்க நரசிங்கமூர்த்தியின் செயல்களைக் கண்டு உளந்துணுக்குற்று நடுங்கியது என்பார் 'தருமமும் சலித்தது' என்றார். தருமம் என்றது அறமாகிய தெய்வத்தை. சலித்தல் - நடுங்குதல். அம்மா, வியப்பிடைச் சொல். (139)

6455. ஆழிமால் வரையோ டெற்றுஞ்
சிலவரை யண்ட கோளச்
சூழிருஞ் சுவரிற் றேய்க்குஞ்
சிலவரைத் துளக்கில் குன்றம்

ஏழினே டெற்றிக் கொல்லுஞ்
சிலவரை யெட்டுத் திக்கும்
தாழிருட் பிழம்பிற் றேய்க்குஞ்
சிலவரைத் தடக்கை தாக்கி.

'ஆழி மால் வரையோடு எற்றும்,
சிலவரை; அண்ட கோளச்
சூழ் இருஞ் சுவரில் தேய்க்கும்,
சிலவரை; துளக்கு இல் குன்றம்
ஏழினோடு எற்றிக் கொல்லும்,
சிலவரை; எட்டுத் திக்கும்
தாழ் இருட் பிழம்பின் தேய்க்கும்,
சிலவரை—தடக்கை தாக்கி.

பொ :—(அந்த நரசிங்கமானது, அசுரர்களிற்) சிலரைப் பெரிய சக்கரவாளகிரியுடன் எறிந்து தாக்கும்; சிலரை அண்டப்பரப்பினைச் சூழ்ந்துள்ள பெரியபுறச் சுவரிலே (நெருக்கித்) தேய்க்கும்; சிலரை அசைக்கவொண்ணாத குலமலைகள் ஏழுடனே மோதிக் கொன்றொழிக்கும்; சிலரை(த் தன்) பெரிய கைகளால் தாக்கி எட்டுத் திசைகளிலும் நிறைந்த இருட்டொகுதியிலே யிட்டுத் தேய்க்கும்.

கு :—மால் - பெரிய. ஆழிவரை - சக்கரவாளகிரி; இம்மலை ஏழு தீவுகளையும் சூழ்ந்துள்ள எழு கடல்களுக்கும் அப்பால் கோட்டை போன்று அமைந்துள்ள தென்றும், சக்கரவாள மலையாகிய இதனைச் சூழ்ந்து பெரும்புறக் கடல் அமைந்துள்ள தென்றும் அக்கடலுக்கு அப்பால் எட்டுத் திசைகளிலும் பேரிருட்பிழம்பு சூழ்ந்துள்ள தென்றும் கூறுதல் புராண வழக்கு. துளக்குதல் - அசைத்தல். துளக்கில் குன்றம் ஏழாவன கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம் என்பனவாம். தாழ்தல் - தங்குதல்; நிறைதல். சிலர் என்ற சொல் சிலவர் என வந்தது விரித்தல் விகாரம். (140)

6456. மலைகளிற் புரண்டு வீழ
வள்ளுகிர் நுதியால் வாங்கித்
தலைகளைக் கிள்ளு மள்ளித்
தழலெழப் பிசையுந் தக்க

கொலைகளிற் கொல்லும் வாங்கி
யுயிர்களைக் குடிக்கும் வான
நிலைகளிற் பரக்க வேலை
நீர்களை நிரம்பத் தூர்க்கும்.

'மலைகளின் புரண்டு வீழ,
வள் உகிர் நுதியால், வாங்கி,
தலைகளைக் கிள்ளும்; அள்ளித்
தழல் எழப் பிசையும்; தக்க
கொலைகளின் கொல்லும்; வாங்கி
உயிர்களைக் குடிக்கும்; வான
நிலைகளில் பரக்க, வேலை
நீர்களை நிரம்பத் தூர்க்கும்;

பொ:—(நரசிங்கமானது, தன்னால் வீசியெறியப்பட்ட அசுரர்களிற் சிலர்) மலைகளினின்றும் புரண்டு (தரையில்) விழ, (அவர்களைப்) பற்றி யிழுத்து(த் தன்) கூரிய நகங்களின் நுனியால் (அவர்தம்) தலைகளைக் கிள்ளியெறியும். (அசுரர்களாகிய அவர்களைத் தன் கைகளால் தொகுதியாக) அள்ளியெடுத்துத் தீப்பொறி பறக்கப் பிசைந்து அழிக்கும்; (அவர்கள் செய்த கொடுமைகளுக்குத்) தக்க கொலைத் தண்டங்களால் (அவர்களைக்) கொன்று தீர்க்கும்; (அவருடைய உடம்புகள் வறிதே சக்கையாய்க் கிடக்க) உயிரை மட்டும் குடித்து ஒழிக்கும்; வான மண்டலத்தின் நிலைகளாகிய எல்லையளவும் பரவித் தோன்றுமாறு (அவ்வசுரர்களின் உடல்களைக்) கடல் நீரிலே நிறையத் தூர்க்கும்.

கு:—வள் - கூர்மை. பரத்தல் - பரவித் தோன்றுதல் தக்க கொலைகளாவன, கொடியோர்களாகிய அவ்வசுரர்கள் செய்த தீவினைகளுக்குத் தக்க கொடுந் துன்பங்களை நுகர்விக்கும் நிலையிற் செய்யப்படும் பல்வேறு வகைப்பட்ட கொலைத் தண்டனைகள். (141)

6457. முப்புறத் துலகத் துள்ளு
மொழிவற முற்றும் பற்றித்
தப்புற லின்றிக் கொன்று
தையலார் கருவுந் தள்ளி

இப்புறத் தண்டத் தியாரு
மவுணரில் லாமை யெற்றி
அப்புறத் தண்டந் தோறுந்
தடவின சிலகை யம்மா.

'முப்புறத்து உலகத் துள்ளும்
ஒழிவு அற முற்றும் பற்றி,
தப்புறல் இன்றிக் கொன்று,
தையலார் கருவும் தள்ளி,
இப்புறத்து அண்டத்து யாரும்
அவுணர் இல்லாமை எற்றி,
அப்புறத்து அண்டம் தோறும்
தடவின, சிலகை அம்மா!

பொ :—(அந்நரசிங்க மூர்த்தியின்) கைகளிற் சில, (மேல், கீழ், நடு என்னும்) மூவகையுலகங்களிலும் எஞ்சுதல் இல்லாதவாறு (அசுரர் எல்லோரையும்) முழுவதும் பிடித்துத் தப்பியோடாதபடி (அவர்களைக்) கொன்று, (அவர் தம் உரிமை மகளிராகிய) அசுரப் பெண்களின் (வயிற்றிலுள்ள) கருப்பத்தினையும் (சிதைத்துப்) புறத்தே தள்ளி, (இவ்வாறு) அண்டத்தின் இப்புறத்திலே அசுரர்கள் யாரும் இல்லாதபடி தாக்கி(க் கொன்று இங்கிருந்து தப்பியோடிய அசுரர்கள் யாரேனும் இருக்கிருர்களோ என்று) இவ் அண்டத்தின் அப்புறத்தேயுள்ள அண்டங்கள் தோறும் (நீண்டு சென்று) தடவித் தேடின.

கு :—சிலகை, பற்றி, கொன்று, தள்ளி, எற்றி, தடவின என முடிக்க. (142)

இச்செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்,

6457 (a) 'அப்புறத்தளவில் கோடி
யண்டங்கள் அனைத்துள்ளாக
வெப்புறும் அனந்த கோடி
வெள்ளமென் றுரைப்பர் மேலாம்
துப்புடைக் கனகன் சேனைத்
தொகையவை யனைத்துஞ் செந்தீ
ஒப்புற நகைத்து நீருய்
எரித்ததோர் கடவுட் சீயம்.

என்ற செய்யுள் மிகைப்பாடலாகக் குறிக்கப்பெற்றுளது.

6458. கனகனு மவனில் வந்த
வானவர் களைக ணுன
அனகனு மொழியப் பல்வே
றவுணரா னவரை யெல்லாம்
நினைவதன் முன்னங் கொன்று
நின்றதந் நெடுங்கட் சீயம்
வனைகழ லவனு மற்ற
மடங்கலின் வரவு நோக்கி.

'கனகனும், அவனில் வந்த
வானவர் களைகண் ஆன
அனகனும் ஒழிய, பல்வேறு
அவுணர் ஆனவரை எல்லாம்
நினைவதன் முன்னம் கொன்று
நின்றது—அந் நெடுங்கண் சீயம்.
வனைகழலவனும், மற்று அ(ம்)
மடங்கலின் வரவு நோக்கி,

பொ :—நீண்ட (பெரிய) கண்களையுடைய அந்த நரசிங்கமானது, பொன்னிறத்தவனுகிய இரணியனும் அவனிடத்தினின்றும் தோன்றிய (அவனுடைய புதல்வன்) தேவர்க்குப் பாதுகாவலனுகிய பிரகலாதனும் நீங்கலாகப் பல்வேறு வகையினராகவுள்ள அசுரர்களை யெல்லாம் நினைப்பளவிற்கு முன்னரே (விரைந்து) கொன்று போக்கி நின்றது. அழகுறப் புனையப்பெற்ற வீரக் கழலை யணிந்தவனுகிய இரணியனும் அந்நரசிங்கத்தின் வருகையை எதிர்நோக்கி,

கு :—இதுவும் அடுத்த செய்யுளும் ஒரு தொடர். கனகன் - பொன்னிறமான உடம்பினையுடையவன்; இரணியன். கனகம் - பொன். அவனின்வந்த அனகன், வானவர் களைகண் ஆன அனகன் எனத் தனித்தனி இயையும். அவனின் வந்த அனகன் - அவ்விரணியனிடத்தினின்றும் புதல்வனுகத் தோன்றிய தூயோன்; என்றது, பிரகலாதனை. தேவர்கள் பன்னெடுங் காலமாக அனுபவித்து வந்த பேரிடர்கள் யாவும் ஒருசேரத் தொலையுமாறு திருமால் நரசிங்கமூர்த்தியாக வெளிப்படுதற்குக் காரணமாயிருந்தவன் பிரகலாதன் ஆதலால் அவனை 'வானவர் களைகண் ஆன அனகன்' எனச் சிறப்பித்தார் ஆசிரியர். களைகண் - பற்றுக்கோடு. அனகன் - குற்றம் அற்றவன்; தூயோன்.

(143)

சினமிக்க இரணியன், வாளும் கேடகமும் ஏந்தி நரசிங்கத்துடன் போர் செய்யப் புறப்படுதல்

6459. வயிரவா ளுறையின் வாங்கி
வானக மறைக்கும் வட்டச்
செயிரறு கிடுகும் பற்றி
வானவ ருள்ளந் தீய
அயிர்படர் வேலை யேழு
மலைகளு மஞ்ச வார்த்தங்
குயிருடை மேரு வென்ன
வாய்மடித் துருத்து நின்றான்.

'வயிர வாள் உறையின் வாங்கி,
வானகம் மறைக்கும் வட்டச்
செயிர் அறு கிடுகும் பற்றி,
வானவர் உள்ளம் தீய,
அயிர் படர் வேலை ஏழும்
மலைகளும் அஞ்ச, ஆர்த்து, அங்கு
உயிருடை மேரு என்ன
வாய் மடித்து, உருத்து நின்றான்.

பொ :—திண்ணிய வாட்படையினை உறையினின்றும் எடுத்து (வலக்கையிற்) பற்றிக் கொண்டு விண்ணிடம் முழுவதனையும் மறைத் தற்குரிய வட்டமான குற்றமற்ற கேடகத்தையும் (இடக்கையிற்) கொண்டு, தேவர்கள் நெஞ்சம் தீய்ந்து கருகவும், நுண்ணிய மணல் பரவிய ஏழு கடல்களும் மலைகளும் அஞ்சி நடுங்கவும் ஆரவாரித்து, உயிருடையதாய் உள்ளதொரு மேருமலையினைப் போன்று வாயின் உதட்டை மடித்துச் சினந்து சீறி நின்றான்.

கு :— வனைகழலவனும், அம் மடங்கலின் வரவு நோக்கி, வயிரவாள் உறையின் வாங்கி, கிடுகும்பற்றி, வாய்மடித்து உருத்து நின்றான் என முடிக்க. வயிரவாள் - திண்மையுடைய வாட்படை. செயிர் - குற்றம். கிடுகு - கேடகம்; மாற்றார் எறியும் ஆயுதங்களைத் தடுத்து விலக்குதற்குரிய கருவியாகிய வட்டப்பலகை. 'உயிருடை மேரு என்ன' என்பது இல்பொருள் உவமை. (144)

அது கண்ட பிரகலாதன், நரசிங்கப்பிரானைப் பணிந்து உய்திபெறுமாறு இரணியனுக்கு அறிவுறுத்தல்

6460. நின்றவன் றன்னை நோக்கி
நிலையிது கண்டு நீயும்
ஒன்றுமுன் னுள்ளத் தியாது
முணர்ந்திலை போலு மன்றே
வன்றொழி லாழி வேந்தை
வணங்குதி வணங்க வேயுன்
புன்றொழில் பொறுக்கு மென்று
னுலகெலாம் புகழ நின்றான்.

'நின்றவன் தன்னை நோக்கி,
"நிலை இது கண்டு, நீயும்
ஒன்றும் உன் உள்ளத்து யாதும்
உணர்ந்திலை போலும் அன்றே;
வன்தொழில் ஆழி வேந்தை
வணங்குதி; வணங்கவே, உன்
புன்தொழில் பொறுக்கும்" என்றான்—
உலகு எலாம் புகழ நின்றான்.

பொ:—எல்லாவுலகங்களில் உள்ளாரும் புகழ்ந்து போற்றும் வண்ணம் (இறைவனது பொருள் சேர் புகழைத் தன் தந்தைக்கு விரித்துரைத்து) நின்றவனாகிய பிரகலாதன், (திருமாலாகிய நரசிங்கத்தினை நோக்கிச் சினந்து சீறி) நின்றவனாகிய இரணியனை நோக்கி, '(எங்கும் நீக்கமற விளங்கும் இறைவனது) இந்த நிலையைக் கண்ட பின்னரும் எதனையும் (உய்த்துணர வல்லவனாகிய) நீயும் நின் மனத்தில் ஒரு சிறிதும் இதனை உணர்ந்தாயல்லை. (யாவராலும் விலக்க ஒண்ணாத) வலிய தொழிலையுடைய சக்கரப் படையைத் தாங்கிய தலைவனாகிய திருமாலை (இப்பொழுதாவது இறைவன் எனத் தெளிந்து விரைந்து) இறைஞ்சுவாயாக. (அவ்வாறு) இறைஞ்சிய அளவிலேயே (அம்முதல்வன் நீ முன் அறியாது செய்த) புல்லிய தொழில்களாகிய பிழைகளை (யெல்லாம்) பொறுத்து அருள்புரிவான்' என்று கூறினான்.

கு:—'நின்றவன்' என்றது, சிங்கத்தின் வரவு நோக்கிச் சினந்து நின்ற இரணியனை. உலகெலாம் புகழ நின்றான் என்றது, உலகத்தாரனைவரும் புகழ்ந்து போற்றும் வண்ணம் இறைவன்பாற் பேரன்புடையனாகி நின்ற பிரகலாதனை. உலகெலாம் புகழ நின்றான்,

நின்றவன் தன்னை நோக்கி, 'நீயும் உன் உள்ளத்து யாது ஒன்றும் உணர்ந்திலை, ஆழிவேந்தை வணங்குதி, வணங்கவே, உன் புன் தொழில் பொறுக்கும்' என்றான் என இயைத்துரைக்க. போலும் என்பது ஒப்பில் போலியாகிய உரையசை. அன்றே - அசை. (145)

அதற்கு உடம்படாமல் இரணியன் பிரகலாதனைச் சினந்து சூளுரைத்து நகுதல்

6461. கேளிது நீயுங் காணக்
கிளர்ந்தகோ ளரியின் கேழில்
தோளொடு தாளு நீக்கி
நின்னையுந் துணித்துப் பின்னென்
வாளினைத் தொழுவ தல்லால்
வணங்குதல் மகளி ரூடல்
நாளினு முளதோ வென்று
வண்டங்க ணடுங்க நக்கான்.

“'கேள், இது; நீயும் காண,
கிளர்ந்த கோள் அரியின் கேழ் இல்
தோளொடு தாளும் நீக்கி,
நின்னையும் துணித்து, பின், என்
வாளினைத் தொழுவது அல்லால்,
வணங்குதல் மகளிர் ஊடல்
நாளினும் உளதோ?” என்று
அண்டங்கள் நடுங்க நக்கான்.

பொ :—(அது கேட்ட இரணியன், பிரகலாதனை நோக்கி, 'யான் சொல்லும்) இவ்வார்த்தையைக் கேட்பாயாக. (திருமாலிடத்திற் சிறந்த பத்தியுடையவனாகிய) நீயும் (நின் கண்களாற்) காணும்படி, ஊக்கமுடையதாய்த் தோன்றிய கொலைத் தொழிலில் வல்ல (இந்த நர) சிங்கத்தின் ஒப்பற்ற தோள்களுடனே கால்களையும் (வெட்டி வீழ்த்தி, (தந்தையாகிய) என்னை மதியாது என் பகைவனைத் தெய்வமாக மதித்து அன்பு செய்யும்) உன்னையும் வெட்டி (வீழ்த்திப்) பின்பு (இவ்வெற்றியைத் தந்த) எனது வாட்படையினை வணங்குவதல்லது (பிறரை) வணங்குவதென்பது (என் உரிமை) மகளிரது (ஊடலைத் தணித்தற்குரிய) ஊடற்காலத்தும் (என்பால்) உளதாகுமோ?' என்று சொல்லி அண்டங்களும் அதிர்ந்து நடுங்கும்படி (வெடிபடச்) சிரித்தான்.

கு :—இது வீரத்தினுல் தோன்றிய வெகுளிபற்றிய நகை. உரிமை மகளிர் அன்பினுல் ஊடியகாலத்து அவருடைய ஊடலைத் தணிவித்தல் வேண்டி அவர்களைத் தலைதாழ்த்து வணங்கி வேண்டுதல் வீரத்திற் சிறந்த தலைவர்க்குக் குற்றமற்ற செயலாகக் கருதப் படினும், அத்தகைய ஊடற் காலத்தும் யான் வணங்கியறியேன் என்பான், 'வணங்குதல் மகளிர் ஊடல் நாளினும் உளதோ' என்றான். உளதோ என்புழி ஓகாரம் எதிர்மறை. ''மாதர், வலிய நெடும் புலவியினும் வணங்காத மகுடநிரை'' (கம்பர் - ஆரணிய-மாரீசன் வதை-4) என யாவர்க்கும் தலைவணங்காத இராவணனுடைய முடிகளை ஆசிரியர் முன்னர்ச் சிறப்பித்துள்ளமை இங்கு ஒப்புநோக்குதற்குரிய தாகும். (146)

நரசிங்கப்பிரான் இரணியனது மார்பைப் பிளந்து அவனது உயிரைப் போக்குதல்

6462. நகைசெயா வாயுங் கண்ணும்
வாளொடு நடந்த தாளும்
புகைசெயா நெடுந்தீப் பொங்க
வுருத்தெதிர் பொருந்தப் புக்கான்
தொகைசெயற் கரிய தோளாற்
றாள்களாற் சுற்றிச் சூழ்ந்தான்
மிகைசெய்வார் வினைகட் கெல்லா
மேற்செயும் வினையம் வல்லான்.

'நகைசெயா, வாயும் கண்ணும்
வாளொடு நடந்த தாளும்
புகைசெயா, நெடுந் தீப் பொங்க
உருத்து எதிர்பொருந்தப் புக்கான்;
தொகை செயற்கு அரிய தோளால்
தாள்களால் சுற்றிச் சூழ்ந்தான்;
மிகை செய்வார் வினைகட்கு எல்லாம்
மேற்செயும் வினையம் வல்லான்.

பொ :—(இரணியன் இங்ஙனம் கூறி) நகைத்து(த்தன்) வாயிலும் கண்களிலும் வாட்படையொடு (விரைந்து) நடந்த (தன்) கால்களிலும் புகையினைத் தோற்றுவித்துத் (தீப்பிழம்பு கிளர்ந்து தோன்ற வெகுண்டு (அந் நரசிங்கத்தினை) எதிர்த்துப் பொருதற்கு நெருங்கிச் சென்றான்; (அந்நிலையில்) மிக்க கொடுந் தொழிலைச் செய்வோராகிய

தீயோர் செய்யும் வஞ்சனைகளுக்கெல்லாம் முந்துறமேற்பட்டுச் செய்யும் சூழ்வினைத் திறத்தில் வல்லவனாகிய திருமால், (யாவராலும் இவ்வளவின என எண்ணித்) தொகை சொல்லுதற்கு அரிய (மிகப்பலவாய) கைகளாலும் கால்களாலும் (இரணியனைச்) சுற்றிப் பிணித்தான்.

கு :—நகைசெயா - நகைத்து. புகைசெயா – புகையைத் தோற்றுவித்து. மிகை செய்வார்–தீமையே புரிந்தொழுகும் அசுரர்கள் முதலிய கொடியோர்கள். வினையம் இரண்டனுள் முன்னையது, வஞ்சகம் ; பின்னையது, சூழ்ச்சித் திறனாகிய உபாயம். (147)

6463. இருவரும் பொருந்தப் பற்றி
யெவ்வுல குக்கு மேலாய்
ஒருவருங் காணு வண்ண
முயர்ந்ததற் குவமை கூறின்
வெருவரு தோற்றத் தஞ்சா
வெஞ்சின வவுணன் மேரு
அருவரை யொத்தா னண்ண
லல்லவை யெல்லா மொத்தான்.

'இருவரும் பொருந்தப் பற்றி,
எவ் உலகுக்கும் மேல்ஆய்,
'ஒருவரும் காணு வண்ணம்
உயர்ந்ததற்கு உவமை கூறின்,
வெரு வரு தோற்றத்து, அஞ்சா,
வெஞ்சின, அவுணன், மேரு
அருவரை ஒத்தான் ; அண்ணல்,
அல்லவை எல்லாம் ஒத்தான்.

பொ :—(இரணியனும் நரசிங்கமூர்த்தியும் ஆகிய) இருவரும் (ஒருவரையொருவர்) இறுகப்பிடித்து எல்லாவுலகங்களுக்கு மேலாக எவரும் காணமுடியாதவாறு உயர்ந்து ஓங்கிநின்ற தன்மைக்கு உவமை சொல்லுங்கால், (யாவரும்) அஞ்சத்தக்க தோற்றத்தையுடைய (எதற்கும்) அஞ்சாத மிக்க வெகுளியையுடைய அசுரனாகிய இரணியன், அரிய (பொன்மயமான) மேருமலையை யொத்துத் தோன்றினான். (அவனை இறுகப் பிணித்துக்கொண்ட) இறைவனாகிய நரசிங்கமூர்த்தி (அம்மேருமலையைச் சுற்றிச் சூழ்ந்துள்ள மலை

களும் கடல்களும் ஆகிய) ஏனைய எல்லாவற்றையும் ஒத்துத் தோன்றினன்.

கு :—பூமியின் நடுவே உயர்ந்து நிற்றலாலும், பொன்னிற முடைமையாலும் மேருமலை பொன்னிறத்தினனாகிய இரணியனுக்கு உவமையாயிற்று. மேருவைச் சுற்றியுள்ள மலைகளும் கடல்களும் ஆகிய ஏனைய எல்லாம் இரணியனைச் சுற்றி வளைந்து பற்றிய நரசிங்கத்திற்கு உவமையாயின. (148)

6464. ஆர்ப்பொலி முழக்கின் வெவ்வாய்
வள்ளுகிர்ப் பார மான்ற
ஏற்றருங் கரத்திற் பல்வே
றெறிதிரைப் பரப்பி னுற்ற
பாற்கடல் பரந்து பொங்கிப்
பங்கயத் தொருவ னட்டின்
மேற்சென்ற தொத்தான் மாயன்
கனகனு மேரு வொத்தான்.

'ஆர்ப்பு ஒலி முழக்கின் வெவ் வாய்
வள் உகிர்ப் பாரம் ஆன்ற
ஏற்று அருங் கரத்தின், பல்வேறு
எறிதிரைப் பரப்பின் உற்ற,
பாற்கடல், பரந்து பொங்கிப்
பங்கயத்து ஒருவன் நாட்டின்
மேல் சென்றது ஒத்தான் மாயன்;
கனகனும் மேரு ஒத்தான்.

பொ :—(இரணியனை வளைத்துப்பற்றிய) திருமாலாகிய நரசிங்க மூர்த்தி, ஆர்ப்பரித்தலாகிய பெருமுழக்கத்தினாலும் வெம்மையான விளிம்பினையுடைய கூரிய நகங்களாகிய பெருஞ்சுமை நிறைந்த பொறுத்தற்கு அரிய கைகளாலும், பலவேறுவகைப்பட மோதும் அலைகளையுடைய பாற்கடலானது தாமரை மலரில் வீற்றிருக்கும் ஒப்பற்ற முதல்வனாகிய பிரமனுடைய உலகத்தின்மேலும் உயர்ந்து சென்றதனை ஒத்துத் தோன்றினன். (அவனுடைய பிணிப்பில் அகப்பட்ட) இரணியனும் (அப்பாற் கடலிடையேயகப்பட்ட) மேருமலையை ஒத்துக் காணப்பட்டான்.

கு :—முழக்கின், கரத்தின் என்புழி இன்னுருபுகள் ஏதுப் பொருளில் வந்தன. மாயன், முழக்கினுலும் கரத்தினுலும், பங்கயத்து ஒருவன் நாட்டின்மேற் பாற்கடல் சென்றது ஒத்தான் என்க. இஃது ஏதுவுவமை. ‘பல்வேறு எறிதிரைப் பரப்பின் உற்ற’ என்ற தொடர், பாற்கடலுக்கு அடையாய் நின்றது. நரசிங்கத்தின் கர்ச்சனைக்குக் கடலின் முழக்கமும், அதன் எண்ணற்ற கைகளுக்குக் கடலின் அலைப் பரப்பும் உவமையாயின. இப்பாட்டு, ரகரமெய் ஆசிடையிட்ட வல்லின எதுகை. (149)

இச்செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்

6464 (a) இத்திறம் அமரின் ஏற்றங்
கிருவரும் பொலிந்த காலை
பொய்த்திறற் கனகன் வேண்டும்
போர்பல இயற்றிப் பின்னும்
எத்தனை கோடி கோடி
மாயங்கள் இயற்ற நோக்கி
முத்தனும் முறுவல் கொண்டாங்
கவையெலாம் முடித்து நின்றான்.

6464 (b) நெருப்பெனக் கனகன் சீறி
நிலமுதல் புவன மஞ்சப்
பொருப்பின மெவையுஞ் சிந்திப்
பொடிபடக் குதித்துப் போர்வாள்
தரிப்புறச் சுழற்றித் தாக்க
வருதலும் தரும மூர்த்தி
பருப்பதம் கடந்த தோளான்
பதமிரண் டொருகை பற்ற.

எனவரும் இரண்டு செய்யுட்கள் மிகைப்பாடல்களாகக் குறிக்கப் பெற்றுள்ளன.

6465. வாளொடு தோளுங் கையு
மகுடமு மலரோன் வைத்த
நீளிருங் ககன முட்டை
நெடுஞ்சுவர் தேய்ப்ப நேமி
கோளொடுந் திரிவ தென்னக்
குலமணிக் கொடும்பூண் மின்னத்
தாளிணை யிரண்டும் பற்றிச்
சுழற்றினன் றடக்கை யொன்றால்.

'வாளொடு தோளும், கையும்,
மகுடமும், மலரோன் வைத்த
நீள் இருங் ககன முட்டை
நெடுஞ்சுவர் தேய்ப்ப, நேமி
கோளொடும் திரிவது என்னக்
குலமணிக் கொடும் பூண் மின்ன,
தாள் இணை இரண்டும் பற்றிச்
சுழற்றினன்; தடக்கை ஒன்றால்.

பொ:—(இரணியனுடைய) வாட்படையும் (அதனைப் பற்றிய) கையும் தோளும் முடியும் பிரமன் படைத்த நீண்ட பெரிய விசும்புடன் பொருந்திய அண்டப்பரப்பின் நெடிய சுவரிலே பட்டு உராய்ந்து தேயவும் (சோதிமண்டிலமாகிய) ஒளிவட்டம் ஏனைய கிரகங்களுடன் கூடிச் சுழல்வது போன்று உயர்ந்த மணிகள் பதிக்கப்பெற்று அமைந்த வளைவுடையனவாய் அணிகலன்கள் ஒளிவிட்டு விளங்கவும் (இரணியனுடைய) இணைந்துள்ள இரண்டு கால்களையும் (திருமால், தன்) பெரிய கையொன்றினால் சேரப்பிடித்துச் சுழற்றினான்.

கு:—நேமி - வட்டம்; ஈண்டு வட்டமாகிய ஒளி மண்டிலத்தைக் குறித்து நின்றது. கோள் - கிரகம். இனி, 'நேமி கோளொடுந் திரிவதென்ன' என்ற தொடர்க்குச் 'சூரியன் தன்னைச் சூழ்ந்த பரிவேடத்துடனே சுற்றித் திரிவதுபோல' என உரை கூறுதலும் உண்டு. கொடுமை - வளைவு. இனி, பூண்பவனது கொடுமை அவனாற் பூணப்பெற்ற அணிகலத்தின்மேல் ஏற்றியுரைக்கப்பட்டதென்றலும் ஒன்று. (150)

6466. சுழற்றிய காலைக் காதிற்
றூங்குகுண் டலங்க ணீங்கிக்
கிழக்கொடு மேற்கி னோடி
விழுந்தன கிடந்த வின்றும்
அழற்றரு கதிரோன் றானென்று
முதயத்தோ டத்த மான
நிழற்றருங் காலை மாலை
நெடுமணிச் சுடரி னீத்தம்.

'சுழற்றிய காலை, காதில்
தூங்கு குண்டலங்கள் நீங்கி,
கிழக்கொடு மேற்கின் ஓடி
விழுந்தன கிடந்த, இன்றும்
அழல்தரு கதிரோன் தோன்றும்
உதயத்தோடு அத்தம் ஆன;
நிழல் தரும், காலை மாலை,
நெடு மணிச் சுடரின் நீத்தம்.

பொ :—(இவ்வாறு நரசிங்கமூர்த்தி இரணியனுடைய கால்களைப் பற்றிச்) சுழற்றியபோது (அவனுடைய) காதுகளில் தொங்கிக் கொண்டிருந்த குண்டலங்கள் (காதினை விட்டு) நீங்கிக் கிழக்குத் திசையிலும் மேற்குத் திசையிலும் தனித்தனியே ஓடி விழுந்து கிடந்தன. (அவ்வாறு விழுந்த அக்குண்டலங்களே) இந்நாளிலும் வெம்மையைத் தருகின்ற சூரியன் தோன்றி மறைதற்கு இடமாகிய உதயகிரியும் அத்தகிரியும் ஆயின. (அக்குண்டலங்களிற் பதிக்கப் பெற்ற) பெரிய மாணிக்கமணியின் கதிர்க்கற்றையாகிய ஒளிவெள்ளமே காலைப் பொழுதிலும் மாலைப் பொழுதிலும் (வானப்பரப்பில் செந்நிறமாகிய) ஒளியைத் தருகின்றன.

கு :—நரசிங்கப்பிரான் இரணியனைப் பற்றிச் சுழற்றியபோது இரணியன் செவிகளில் அணியப்பெற்றுள்ள குண்டலங்கள் இரண்டும் அவன் செவிகளை விட்டு நீங்கிக் கிழக்கிலும் மேற்கிலும் ஓடி விழுந்தவையே பிற்காலத்தில் கதிரவன் தோன்றி மறைதற்கு இடமாகிய உதயகிரியும் அத்தகிரியும் ஆயின என்றும், அக்குண்டலங்களிற் பதிக்கப்பெற்ற மாணிக்க மணியின் ஒளிவெள்ளமே காலையிலும் மாலையிலும் வானப்பரப்பில் தோன்றும் செந்நிற வொளியாம் என்றும் இவ்வாறு இரணியனுடைய காதணியாகிய குண்டலங்களின் வடிவப் பெருமையினையும் ஒளிச் சிறப்பினையும் புனைந்துரைப்பதாக அமைந்த இச்செய்யுள், கதிரவன் தோன்றி மறைதற்குரிய உதயமலை அத்தமனமலை ஆகிய பொருளுண்மையினை மறுத்துப் பிறிதுரைத்த தாதலின், அவநுதியணியின்பாற்படும். நீத்தம் - வெள்ளம்; மிகுதி. (151)

6467. போன்றன வினைய தன்மை
பொருவிய தினைய தென்று
தான்றனி யொருவன் றன்னை
யுரைசெயுந் தரத்தி னன்றே

வான்றரு வள்ளல் வெள்ளை
வள்ளுகிர் வயிர மார்பின்
ஊன்றலு முதிர வெள்ளம்
பரந்துள துலக மெங்கும்.

"'போன்றன இனைய தன்மை;
பொருவியது இனையது" என்று
தான் தனி ஒருவன், தன்னை
உரைசெயும் தரத்தி னானோ?
வான்தரு வள்ளல் வெள்ளை
வள்உகிர் வயிர மார்பின்
ஊன்றலும், உதிர வெள்ளம்
பரந்துளது, உலகம் எங்கும்.

பொ :—(ஒன்றிலும் தோய்வின்றித்) தான் தனிப்பட்டு விளங்கும் ஏகனாகிய இறைவன், (இவனுடைய) இவ்வியல்புகள் இன்னாருடைய இயல்புகளை) ஒத்தன. இன்னதொரு பொருள் (இவ்வியல்பால் இவனை) ஒத்தது என இவ்வாறு தன்னைப் பிறவற்றுடன் ஒப்பிட்டுரைத்தற்கேற்ற இயல்பினன் ஆவானோ? (தன்னை அன்பினால் வழி படுவார்க்குப்) பரம பதமாகிய விண்ணுலகினைத் தந்து அருள்புரியும் வள்ளன்மையுடைய அருளாளனாகிய திருமாலின் வெண்மை நிறம் பொருந்திய கூரிய நகங்கள், (இரணியனுடைய) வயிரமணி போலும் திண்ணிய மார்பின் கண்ணே ஊன்றிப் பதிந்த அளவிலேயே குருதி வெள்ளம் பீறிட்டெழுந்து உலக முழுதும் பரவிற்று.

கு :—நரசிங்கவுருக்கொண்டு தோன்றியவன், தனக்குவமை யில்லாதான் ஆகிய இறைவனே என்பார், 'தான் தனியொருவன்' என்றும், அவனது தன்னிகரற்ற தன்மையினை விளக்குவார், "போன்றன இனையதன்மை, பொருவியது இனையது' என்று தன்னை உரை செய்யும் தரத்தினானோ" என்றும் கூறினார் ஆசிரியர். ஓகாரம், எதிர் மறை. (152)

6468. ஆயவன் றன்னை மாய
னந்தியி னவன்பொற் கோயில்
வாயிலின் மணிக்க வான்மேல்
வயிரவா ளுகிரின் வானின்

மீயெழு குருதி பொங்க
வெயில்விரி வயிர மார்பு
தீயெழப் பிளந்து நீக்கித்
தேவர்க ளிடுக்கண் டீர்த்தான்.

'ஆயவன் தன்னை, மாயன்
அந்தியின், அவன் பொன் கோயில்
வாயிலில், மணிக் கவான்மேல்,
வயிர வாள் உகிரின், வானின்
மீ எழு குருதி பொங்க,
வெயில் விரி வயிர மார்பு
தீ எழப் பிளந்து நீக்கி,
தேவர்கள் இடுக்கண் தீர்த்தான்.'

பொ :—வியக்கத்தக்க பேராற்றலையுடைய நரசிங்கப்பிரான், அத்தகைய இரணியனை (ஞாயிறு மறையும்) அந்திப் பொழுதிலே அவனது பொன்மயமான அரண்மனையின் வாயிற்படியிலே (தனது) அழகிய தொடையின்மேல் (வைத்து) வெயிலைப்போன்று ஒளி வீசும் அவனது திண்ணிய மார்பினை வயிரவாளினைப் போலும் கூரிய (தன் கைவிரல்களின்) நகங்களால் மேல் எழுகின்ற இரத்த வெள்ளம் (எங்கும்) மிக்குப் பரவவும் தீப்பொறி பறக்கவும் பிளந்து போக்கி (அவனால்) தேவர்களுக்கு நேர்ந்த துன்பம் அனைத்தையும் நீக்கி யருளினான்.

கு :—ஆயவன் - அத்தன்மையனாகிய அவன்; என்றது ஆற்றலிற் சிறந்தவனாகிய இரணியனை. யாவரும் வியக்கத்தக்க பேராற்றலையுடைய இறைவன் என்பார், அப்பொருளைத்தரும் 'மாயன்' என்ற பெயராற் குறித்தார். இரணியன் பிரமனை நோக்கிப் பெருந்தவம் இயற்றி வரம் வேண்டியபோது, இரவு பகல் என்னும் இரு பொழுதிலும் உள்ளும் புறம்பும் ஆகிய ஈரிடங்களிலும், பூமியிலும் ஆகாயத்திலும் ஈரமுடைய உறுப்புக்களாலும் ஈரமற்ற படைக்கலங்களாலும் தன்னை யாரும் கொல்ல வொண்ணாதவாறு சாகா வரத்தினை வேண்டிப் பெற்றான் எனப் புராணம் கூறும். அவன் பெற்றுள்ள வரங்களுக்கெல்லாம் முரண்படாத நிலையில் அவனைக் கொன்றொழிக்க எண்ணிய திருமால், மக்கள் வடிவும் விலங்கு வடிவும் அல்லாத நரசிங்க வடிவினை மேற்கொண்டு, இரவும் பகலும் அல்லாத அந்திப் பொழுதிலே, அரண்மனையின் உள்ளும் புறம்பும் அல்லாத வாயிற்படியிலே, பூமியும் ஆகாயமும் அல்லாத தனது தொடையின்மேல் வைத்து ஈரமுடையதும் ஈரமற்றதும் அல்லாத

தன் நகத்தினுல் அவனது மார்பினைப் பிளந்து கொன்ருர் என்ற செய்தி இச் செய்யுளில் தெளிவாக விளக்கப் பெற்றிருத்தல் காண லாம். இந் நிகழ்ச்சியினை,

"துங்கநகத் தாலன்றித் தொலையா வென்றித்
தொகுதிறலவ் விரணியனை ஆகங்கீண்ட
அங்கனகத் திருமாலும்" (6-84-2)

என வரும் திருத்தாண்டகத் தொடரில் அப்பரடிகள் தெளிவாகக் குறித்துள்ளமை இங்கு ஒப்புநோக்கி யுணரத்தக்கதாகும். (153)

இச் செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்,

6468 (a) அழிவிலான் வயிர மார்பத்
தமலன் மானுடமாஞ் சீய
எழிலுலாம் உருவு கொண்டாங்
கிருகையி னுகிர்வா ளோச்சிக்
கழியவே பிளத்த லோடும்
கனகமா மேரு விண்டு
கிழியவே குருதி யோதம்
கிளர்ந்தபோல் கிளர்ந்த தம்மா.

6468 (b) இரணியன் வயிர மார்பும்
இருபிள வாகக் கீறிக்
கரையறும் அவுண வெள்ளப்
படையெலாம் கடிதின் மாய்த்துத்
தரைமுத லான அண்டப்
பரப்பெலாந் தானே யாகிக்
கருணைகொ ளமலன் பல்வே
றுயிரெலாம் காத்து நின்ருன்.

என வரும் இரண்டு செய்யுட்கள் மிகைப் பாடல்களாகக் குறிக்கப் பெற்றுள்ளன.

முன்பு இரணியனுக்கு அஞ்சியோடி யொளிந்திருந்த தேவர்கள் அவன் இறந்த நிலையில் அங்கு வந்து குழுமி நரசிங்கத்தின் தோற்றத்தைக் கண்டு அஞ்சி நிற்றல்

6469. முக்கணு னெண்க ணுனு
முளரியா யிரக்க ணுனும்
திக்கணுந் தேவ ரோடு
முனிவரும் பிறருந் தேடிப்

புக்கநா டறிகு ருமற்
றிரிகின்ருர் புகுந்து மொய்த்தார்
எக்கணுற் காண்டு மெந்தை
யுருவமென் றிரங்கி நின்ருர்.

'முக்கணன் எண்கணனும்,
முளரி ஆயிரக் கணனும்,
திக்கண் ஆம் தேவரோடு
முனிவரும், பிறரும், தேடிப்
புக்க நாடு அறிகுருமல்
திரிகின்ருர், புகுந்து மொய்த்தார்;
"எக்கணுல் காண்டும் எந்தை
உருவம்" என்று இரங்கி நின்ருர்.'

பொ :—மூன்று கண்களையுடையவனுகிய உருத்திர மூர்த்தியும் எட்டுக் கண்களையுடையவனுகிய நான்முகக் கடவுளும் தாமரை மலர் போலும் ஆயிரங் கண்களையுடையவனுகிய இந்திரனும் எட்டுத் திசைகளிற் பொருந்தியுள்ள தேவர்களோடு முனிவர்களும் மற்றையோரும் (தாம் தாம் சென்று) புகுந்த நாடு (இது எனத்) தேடி அறியவொண்ணுதவாறு (இரணியனுக்கு அஞ்சி மறைந்து) திரிகின்றவர்கள், (நரசிங்கப் பிரான் இரணியனைக் கொன்ருெழித்தவுடனே) அங்கு வந்து நெருங்கியவர்களாய், 'எம்பெருமான் கொண்ட நரசிங்க வடிவமாகிய இதனை (நாங்கள்) எத்தகைய கண்களைக்கொண்டு காண வல்லேம்' என்று (தமக்கு ஆற்றலின்மையை யெண்ணி) இரங்கி நின்ருர்கள்.

கு :—இரணியனுக்கு அஞ்சி ஓடி ஒளிந்திருந்த உருத்திரன் பிரமன் இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்கள் முதலிய ஏனையோரும், இரணியன் இறந்தான் என்று அறிந்தவுடனே நரசிங்க மூர்த்தியாகிய திருமாலையடைந்து, அவரது அச்சந்தரும் திருவுருவினை அஞ்சாது நேர்நின்று காணும் வன்மை தம் கண்களுக்கு அமையவில்லையே யென்று இரங்கி நின்றனர் என்பதாம் (154)

6470. நோக்கினுர் நோக்கி ஞர்முன்
னேக்குறு முகமுங் கையும்
ஆக்கையுந் தாளு மாகி
யெங்கணுந் தானே யாகி

வாக்கினுன் மனத்தி னுன்மற்
றறிவினு லளக்க வாரா
மேக்குயர் சீயந் தன்னைக்
கண்டனர் வெருவு கின்றூர்.

'நோக்கினூர் நோக்கினூர் முன்,
நோக்குறு முகமும் கையும்
ஆக்கையும் தாளும் ஆகி,
எங்கணும் தானே ஆகி,
வாக்கினுல் மனத்தினுல் மற்று
அறிவினுல் அளக்க வாரா,
மேக்கு உயர் சீயம் தன்னைக்
கண்டனர் வெருவு கின்றூர்.'

பொ :—(அவ்வாறு நெருங்கிவந்து) கண்டோராகிய அவரவர் களுக்கு முன்னே (அவரவரையும் தனித்தனியே எதிர்கொண்டு) நோக்கியருளிய முகங்களும் கைகளும் திருமேனியும் திருவடிகளும் ஆகி(த் தோன்றி) எல்லா இடங்களிலும் தானேயாய் நிறைந்து, சொல்லாலும் மனத்தாலும் ஆன்ம போதத்தாலும் அளந்து காணு தற்கு அகப்படாத (விசும்பின் உயர்ச்சியினும்) மேற்பட உயர்ந்து வளர்ந்துள்ள நரசிங்கத்தினைக் கண்டு (அத்தேவர்கள்) அஞ்சுவா ராயினர்.

கு :—வாக்கினுற் சொல்லவும் மனத்தினுல் நினைக்கவும் ஆன்ம போதத்தால் உய்த்துணரவும் ஒண்ணுதவாறு சொல்லும் பொருளும் ஆகியவற்றின் எல்லைக்கு அப்பாற்பட்டு விளங்கும் பரம்பொருள் தானே இவ்வாறு நரசிங்கத் திருமேனி கொண்டு தோன்றிய தென் பார், 'வாக்கினுல் மனத்தினுல் மற்று அறிவினுல் அளக்கவாராச் சீயம்' என்றூர். வருதல் - எல்லையுள் அகப்பட்டு அடங்குதல். வாராச்சீயம், மேக்குயர்சீயம் எனத் தனித்தனி இயையும். மேக்கு - மேல். வெருவுதல் - அஞ்சுதல். (155)

பிரமதேவன் நரசிங்கப்பிரானைத் துதித்தல்

6471. பல்லொடு பல்லுக் கெல்லை
யாயிரக் காதப் பத்தி
சொல்லிய வதனங் கோடி
கோடிமேல் விளங்கித் தோன்ற

எல்லையி லுருவிற் ருகி
யிருந்ததை யெதிர நோக்கி
அல்லியங் கமலத் தண்ண
லவன்புகழ் விரிப்ப தானுன்.

'பல்லொடு பல்லுக்கு எல்லை
ஆயிரக் காதப் பத்தி,
சொல்லிய வதனம் கோடி
கோடிமேல் விளங்கித் தோன்ற,
எல்லை இல் உருவிற்று ஆகி
இருந்ததை எதிர நோக்கி,
அல்லி அம் கமலத்து அண்ணல்
அவன் புகழ் விரிப்பதானுன்.'

பொ :—(வாயிலுள்ள பற்களில்) ஒரு பல்லுடன் மற்றைப் பல்லுக்கு அமைந்த இடைவெளி ஆயிரங்காத தூரமாகவும், சொல்லப் பெற்ற முகங்கள் கோடி கோடி என்னும் தொகையினவாகவும் இவ்வாறு திருமேனியின்மேல் விளங்கித் தோன்ற எல்லையில்லாத பெருவடிவினையுடையதாய் இருந்த அந் நரசிங்கமூர்த்தியை அழகிய அகவிதழ்களையுடைய தாமரை மலரில் வீற்றிருப்போனுகிய பிரமதேவன் நேர்படக் கண்டு அம் முதல்வனுடைய புகழ்த்திறங்களை விரித்துரைத்துப் போற்றுவானுயினன்.

கு :—ஆயிரக்காதப்பத்தி - ஆயிரங்காத தூரம். நரசிங்கமூர்த்தியின் வாயிலுள்ள பற்களில் ஒன்றுக்கும் மற்ருென்றுக்கும் இடையிலுள்ள இடைவெளி ஆயிரங்காத தூரம் எனவே, அங்ஙனம் பல பற்கள் வரிசைப்பட நிறைந்துள்ள அவ்வாயின் அகலமும் பரப்பும் அவ்வாயினைத் தன்னகத்தே கொண்ட முகத்தின் அகலமும் நீளமும் இவையென உய்த்துணர்ந்து அளவிட்டுரைத்தல் இயலாதென்பதும் குறிப்பினுல் உணர்ந்து கொள்ள வைத்தாராயிற்று. வதனம் - முகம். கோடி கோடி - கோடியென்னும் எண்ணினுற் பெருக்கப்பட்ட கோடி என்னும் பேரெண். எதிரநோக்குதல் - நேரே நின்று காணுதல். அல்லி - அகவிதழ். (156)

6472. தன்னைப் படைத்ததுவுந்
★ தானே யெனுந்தன்மை
பின்னைப் படைத்ததுவே
காட்டும் பெரும்பெருமை

உன்னைப் படைத்தாய்நீ
யென்று லுயிர்படைப்பான்
என்னைப் படைத்தாய்நீ
யெனுமிதுவு மேத்தாமோ.

"'தன்னைப் படைத்ததுவும் தானே எனும் தன்மை
பின்னைப் படைத்ததுவே காட்டும்; பெரும் பெருமை
உன்னைப் படைத்தாய் நீ என்றால், உயிர் படைப்பான்
என்னைப் படைத்தாய் நீ எனும் இதுவும் ஏத்து ஆமோ?

பொ:—(இறைவனாகிய) தன்னைத் தோற்றுவித்துக் கொண்டதும் அப் பரம்பொருள்தானே என்று (அறிவு நூல்கள்) கூறும் உண்மையினைப் பின்பு (நின்னாற்) படைத்துக் கொள்ளப்பெற்ற (நரசிங்கமாகிய) இத் திருவுருவமே நன்கு புலப்படுத்துவதாகும். மிகப் பெரிய பிரபஞ்சத்தினை உன்னிடத்திருந்தே நீ உண்டாக்கினாய் என்றால், பல்லுயிர்களையும் (உடம்புடன்) படைத்தற்பொருட்டு (ப் பிரமதேவனாகிய) என்னை நீ படைத்தருளினாய் என்று கூறுவது, (நின் பேராற்றலை உள்ளவாறு உணர்ந்து போற்றிய) புகழுரையாகுமோ?

கு:—உலகிற்கெல்லாம் தானே காரணமாய்த் தனக்குக் காரணமாவது பிறிதொன்று மின்றியுள்ள முதற்பொருளாகிய இறைவன், மன்னுயிர்களெல்லாம் தன்னை யுணர்ந்து போற்றி வழிபட்டு உய்தல் வேண்டும் என்னும் பேரருளால் தனக்குரிய திருமேனியினைத் தானே படைத்துக்கொண்டு தோன்றியருளினான் என்று அறிவு நூல்கள் கூறும் உண்மையினைத் திருமாலாகிய நீ இப்பொழுது படைத்துக் கொண்டுள்ள எங்குமில்லாத புதுமையினையுடைய இந் நரசிங்க வடிவமே இனிது புலப்படுத்தவல்லது என்பான், 'தன்னைப் படைத்ததுவும்தானே எனும் தன்மை, பின்னைப் படைத்ததுவே காட்டும்' என்றான். பெரும் பெருமை என்றது விசுவம் எனப்படும் பிரபஞ்சத்தினை. உன்னைப் படைத்தாய் - உன்னிடத்திருந்தே தோற்றுவித்தருளினாய். உன்னை - உன்கண்; உருபு மயக்கம். பிரபஞ்சமுழுவதும் மாயோனாகிய இறைவனிடத்திருந்தே தோன்றியது என்பதனை,

"தீ வளி விசும்பு நிலன் நீர் ஐந்து
ஞாயிறுந் திங்களும் அறனும் ஐவரும்
திதியின் சிறாரும் விதியின் மக்களும்
மாசில் எண்மரும் பதினொரு கபிலரும்
தாமா இருவரும் தருமனும் மடங்கலும்

மூவே ழுலகமும் உலகினுள் மன்பதும்
மாயோய் நின்வயிற் பரந்தவை யுரைத்தேம்
மாயா வாய்மொழி யுரைதர வலந்து" (பரிபாடல் ௩-4-11.)

என வரும் தொடர்களில் கடுவன் இளவெயினனார் தெளிவாகக் குறித்துள்ளமை இங்கு நோக்கத்தக்கதாகும். எல்லையற்ற பேருலகம் அனைத்தையும் நின்னிடத்திருந்தே தோற்றுவித்தருளிய வியக்கத் தக்க பேராற்றல் வாய்ந்த முழுமுதற் கடவுளாகிய நீயே மன்னுயிர் களுக்கேற்ற பல்வேறு உடம்புகளையும் எளிதிற் படைத்தளிக்க வல்லவனாக இருந்தும் அத்தகைய படைத்தற்றொழிலைச் செய்தற் பொருட்டுப் பிரமனாகிய என்னைப் படைத்தனை என்று சொல்வது, இறைவனாகிய உன்னை உள்ளவாறு உணர்ந்து போற்றிய புகழ்ச்சி யுரையாகாது என்பான், 'உயிர் படைப்பான் என்னைப் படைத்தாய் நீ எனுமிதுவும் ஏத்தாமோ' என்றான். ஏத்து - புகழ்ச்சி. நினக்குரிய எல்லையற்ற பேராற்றல்களுள் ஒரு பகுதியை எனக்குக் கொடுத்து என்னை நின்னருளினால் உயரச் செய்தாய் என்று கூறுவதே ஏற்பு டையதாகும் என்பது குறிப்பு. (157)

6473. பல்லா யிரங்கோடி
யண்டம் பனிக்கடலுள்
நில்லாத மொக்குளெனத்
தோன்றுமா னின்னுழையே
எல்லா வுருவமுநீ
யென்றக்கா லிவ்வுருவம்
வல்லே குறித்தால்
வரம்பின்மை வாராதோ.

"'பல் ஆயிரங்கோடி அண்டம், பனிக் கடலுள்
நில்லாத மொக்குள் எனத் தோன்றுமால், நின்னுழையே;
எல்லா உருவமும் நீ என்றக்கால், இவ் உருவம்
வல்லே குறித்தால், வரம்பு இன்மை வாராதோ?

பொ:—பல ஆயிரங்கோடி அண்டங்களும் குளிர்ச்சியையுடைய கடலிடத்தே தோன்றியழியும் நிலையற்ற நீர்க் குமிழிகளைப் போன்று (இறைவனாகிய) நின்னிடமிருந்தே உண்டாகின்றன. (இவ்வாறு உலகத் தோற்றத்திற்கு நிலைக்களமாய் விளங்கும்) நீயே (உலகி லுள்ள) எல்லாவுருவங்களாகவும் கலந்து விளங்குகின்றாய் என்று கூறும்பொழுது (அவ்வுருவங்களுக்கெல்லாம் மாறுபட்ட நிலையில்

அஞ்சத்தக்க) இந்நரசிங்கவுருவத்தினை விரைந்து படைத்துக் கொண்டனையாயின் வரம்பில்லாமை என்ற குற்றம் (நின்பால்)வந்து சேராதோ ?

கு :—கரையற்ற பெருங்கடல் நீரிலே தோன்றும் நீர்க்குமிழ் களைப் போன்று பரம்பொருளாம் இறைவனாகிய நின்னிடமிருந்தே எண்ணில்லாத அண்டங்கள் தோன்றியொடுங்குகின்றன என்பான், 'பனிக்கடலுள் நில்லாத மொக்குள் என, பல்லாயிரங்கோடி அண்டம் நின்னுழையே தோன்றும்' என்றான். ஆல் - அசை.

> "உளர்தரு
> நுரையுந்திரையும் நொப்புறு கொட்பும்
> வரையில் சீகர வாரியும் குரைகடற்
> பெருத்தும் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
> எண்ணிலவாகி இருங்கடல் அடங்கும்
> தன்மைபோலச் சராசரமனைத்தும்
> நின்னிடைத் தோன்றி நின்னிடையடங்கும் நீ
> ஒன்றினுந் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்"
>
> (கோயில் நான்மணி மாலை-24)

எனப் பட்டினத்தடிகள் இறைவனது இயல்பினை விரித்துரைத்துப் போற்றிய பாடற் பகுதி இங்கு ஒப்புநோக்கி யுணரத்தக்கதாகும். உலகப் பொருள்கள் அனைத்துமாகிக் கலந்து விளங்கும் நீ நின்னால் இதுவரை படைக்கப்பட்டுள்ள பொருள்களின் வேறாக அவற்றுக்கு மாறானதொரு புது வடிவினைப் படைத்துக் கொள்வாயானால், நினது படைப்புத் தொழிலில் ஒரு நியதியற்ற தன்மையாகிய குற்றம் ஏற் படாதோ என்பான், 'இவ்வுருவம் வல்லே படைத்தால் வரம்பின்மை வாராதோ' என வினவினான். நீ புதியதாக மேற்கொண்டுள்ள இந் நரசிங்க வடிவம் முன்னரே நின்னாற் படைக்கப்பட்டு உன்னுடைய சொருபமேயாக விளங்கும் இவ்வுலகங்களைச் சிதைத்தழிக்காதபடி நினது சீற்றத்தைத் தணித்தருள்புரிவாயாக என வேண்டியவாறு. (158)

6474. பேரை யொருபொருட்கே
பல்வகையாற் பேர்த்தெண்ணும்
தாரை நிலையை
தமியை பிறரில்லை

யாரைப் படைக்கின்ற
தியாரை யளிக்கின்ற
தாரைத் துடைக்கின்ற
தையா வறியேமால்.

"'பேரை ஒரு பொருட்கே பல் வகையால் பேர்த்து எண்ணும்
தாரை நிலையை; தமியை; பிறர் இல்லை;
யாரைப் படைக்கின்றது? யாரை அளிக்கின்றது?
ஆரைத் துடைக்கின்றது?—ஐயா!—அறியேமால்.

பொ:—ஒன்றுயுள்ளதொரு பொருளுக்கே அதன் பல்வேறு திறங் கருதிப் பெயரினை வெவ்வேருக மாற்றி வழங்கும் ஒரு தொடர்ச்சியாகிய ஒழுங்கு நிலையினையுடையாய்; (நினக்குப் பற்றுக் கோடாவது எதுவுமின்றி நீயே) தனித்துள்ளாய்; (நின்னையின்றிப்) பிறர் இல்லை யென்னும்படி (எவ்வுயிரும் நீயேயாகி) யுள்ளாய். ஐயனே! (இத்தகைய நீ, நினக்கு வேருகப்) படைக்கின்றது யாரை? காக்கின்றது யாரை? அழிக்கின்றது யாரை? (நீ செய்யும் இத் தொழில்கள்பற்றி நாங்கள்) சிறிதும் அறியப் பெற்றிலோம்.

கு:—முழுமுதற் கடவுளாகிய நீயே, படைத்தல் காத்தல் அழித் தல் என்னும் முத்தொழில் பற்றி அயன் அரி அரன் என வெவ்வேறு பெயர்களாற் குறித்துப் போற்றப்படினும், நின்னுடைய இயல்பினைத் தையும் ஒருங்கு நோக்குவார்க்கு அம்மூவகைப் பகுப்பும் தனி முதற் பொருளாகிய நின்னுடைய தொடர்ந்த தோற்றமே என்பது இனிது விளங்கும் என்பான், 'பேரை ஒரு பொருட்கே பல்வகையாற் பேர்த்து எண்ணும் தாரை நிலையை' என்ருன். தாரை-தொடர்ச்சி.

"ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானும்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்று"
(திருமந்திரம்-104)

எனவரும் திருமூலர் வாய்மொழி இங்கு நினைக்கத் தகுவதாகும்' நினக்கு ஒப்பாவார் எவருமின்றித் தனி முதல்வனுகத் திகழ்பவன் நீயே; மன்னுயிர்களின் தோற்றம் நிலை ஒடுக்கம் ஆகிய எல்லாவற் றுக்கும் நின்னையின்றி வேறு நிலைக்களம் இல்லை என்பான், 'தமியை, பிறரில்லை' என்ருன், இவ்வாறு பிரபஞ்சம் முழுவதும் நினது சொரூபமேயாக அடங்கும் நிலையில் நீ செய்கின்ற முத்தொழில்களும் யாரைக் குறித்து நடைபெறுகின்றன என்பதனைச் சிற்றறிவினே மாகிய யாம் தெளிவாக அறியப் பெற்றிலோம் என்பான், 'ஐயா அறியேம்' என்ருன். ஆல், அசை. (159)

6475. நின்னுளே யென்னை
நிருமித்தாய் நின்னருளால்
என்னுளே யெப்பொருளும்
யாவரையும் யானீன்றேன்
பின்னிலேன் முன்னிலே
னெந்தை பெருமானே
பொன்னுளே தோன்றியதோர்
பொற்கலனே போல்கின்றேன்.

"'நின்னுளே என்னை
நிருமித்தாய்; நின் அருளால்,
என்னுளே, எப்பொருளும்
யாவரையும் யான் ஈன்றேன்;
பின் இலேன்; முன் இலேன்;
எந்தை பெருமானே!
பொன்னுளே தோன்றியது ஓர்
பொற்கலனே போல்கின்றேன்.

பொ:—என் தந்தையாகிய இறைவனே! நின்னிடத்திலே யிருந்து என்னைத் தோற்றுவித்தருளினாய். நின்னுடைய அருளின் திறத்தால் யான் என்னிடத்திலேயிருந்து (அஃறிணையாகிய) எல்லாப் பொருள்களையும் (உயர்திணை யுயிர்களாகிய) யாவரையும் படைத்தேன். (நின்னையன்றி எனக்கு ஆதியாக ஒன்றையும்) முன் உடையேனல்லேன். பின்னர் (ச் சென்றடையும் அந்தமாக) ஒன்றையும் பெற்றிலேன். பொன்னிலிருந்து தோன்றியதொரு பொன்னணிகலத்தினையே போன்று (நின்னிற் பிரிவின்றி) உள்ளேன்.

கு:—முன், பின் என்பன, ஆகுபெயராய்த் தனக்கு ஆதியும் அந்தமுமின்றி ஏனைய எல்லாப் பொருள்களின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்கும் காரணமாயுள்ள உள்பொருளைச் சுட்டி நின்றன. '**முன்னிலன் பின்னிலன் ஒருவன்**' (கம்பர் - இரணியன்வதை - 59) என முன்னரும் இப் பொருளில் ஆளப்பெற்றமையறிக. இறைவனாகிய உனக்கும் உலக வுயிர்களாகிய எங்களுக்கும் இடையே அமைந்த தொடர்பு பொன்னுக்கும் அதனால் இயன்று அதனின் வேறாகாத பொன் அணிகலன்களுக்கும் உள்ள சம்பந்தம் போன்று அபேத சம்பந்தமாம் என்பான், 'பொன்னுளே தோன்றியதோர் பொற்கலனே போல்கின்றேன்' என்றான். (160)

நரசிங்கப்பிரான் சீற்றந்தணிந்து தேவர்கட்குஅபயம் அளித்தல்

6476. என்றாங் கியம்பி யிமையாத வெண்கணனும்
வன்றாண் மழுவோனும் யாரும் வணங்கினார்
நின்றா ரிருமருங்கு நேமிப் பெருமானும்
ஒன்றாத சீற்றத்தை யுள்ளே யொடுக்கினான்.

'என்று ஆங்கு இயம்பி, இமையாத எண் கணனும்,
வன்தாள் மழுவோனும், யாரும், வணங்கினார்;
நின்றார், இருமருங்கும்; நேமிப் பெருமானும்,
ஒன்றாத சீற்றத்தை உள்ளே ஒடுக்கினான்.

பொ:—என்று இவ்வாறு கூறித் துதித்து, இமைத்தலில்லாத எட்டுக் கண்களையுடையவனான பிரமதேவனும் வலிய போர்த்திறம் வாய்ந்த மழுப்படையினையுடைய உருத்திர மூர்த்தியும் (தேவர் முனிவர் முதலிய) ஏனைய யாவரும் (நரசிங்கமூர்த்தியை) வணங்கியவர்களாய் அவ் இறைவனது இரண்டு பக்கங்களிலும் நின்றார்கள். (அப்பொழுது சக்கரப் படையினையுடைய திருமாலாகிய நரசிங்கப் பிரானும் அடங்குதற்கு அரிய பெருஞ் சினத்தைத் (தேவர்கள் முதலிய உயிர்கள் மேல் வைத்த பெருங் கருணையால்) தனக்குள்ளே அடக்கியருளினான்.

கு:—ஒன்றுதல் - ஒடுங்குதல்; அடங்குதல். இனி, ஒன்றாமை - பொருந்தாமை எனப் பொருள் கொண்டு, இறைவன், தன் அருளியல் புக்கு மாறாகத் தான் கொண்ட பெருஞ் சினத்தினைத் தனக்குள்ளே அடக்கிக் கொண்டான் எனினும் அமையும். இறைவனுக்குப் பகைவர் இவர் நட்டோர் இவர் எனும் வேற்றுமையில்லையாதலால் எவ்வுயிர்க்கும் அருளுடையனாகிய அம்முதல்வன் நல்லோரைக் காத்தல் வேண்டித் தீயோரை ஒறுத்தற்கெனத் தான் சிறிது பொழுது மேற்கொண்ட சீற்றம், அப்பெரியோன் பால் என்றும் மாறாது நிலை பெற்றுள்ள அருளியல்புக்கு ஒவ்வாததாய்த் தோன்றியதென்பது புலப்பட 'ஒன்றாத சீற்றம்' எனக் குறிக்கப்பட்டது. ஒடுக்குதல் - உள்ளே யடங்கச் செய்தல். (161)

6477. எஞ்சு முலகனைத்து மிப்பொழுதே யென்றென்று
நெஞ்சு நடுங்கு நெடுந்தே வரைநோக்கி
அஞ்சன்மி னென்னா வருள்சுரந்த நோக்கினான்
கஞ்ச மலர்பழிக்குங் கையபயங் காட்டினான்.

"எஞ்சும், உலகு அனைத்தும் இப்பொழுதே" என்று என்று,
நெஞ்சு நடுங்கும் நெடுந் தேவரை நோக்கி,
"அஞ்சன்மின்" என்னு, அருள் சுரந்த நோக்கினுன்,
கஞ்ச மலர் பழிக்கும் கை அபயம் காட்டினுன்.

பொ :—(நரசிங்கப்பிரானின் தணித்தற்கரிய வெகுளியினுல்) உலகங்கள் யாவும் இப்பொழுதே சிதைந்தொழியும் என்று இவ்வாறு எண்ணி (அச்சத்தால்) மனம் நடுங்கும் (பிரமன் முதலிய) பெரிய தேவர்களை (நரசிங்கப்பிரான்) நோக்கி, 'அஞ்சாதீர்கள்' என்று சொல்லி, அருள்பொழியும் இனிய பார்வையையுடையனுய்ச் செந்தாமரை மலரையும் (அழகினுற்) கீழ்ப்படுத்தும் தன் திருக்கரத்தால் அபயக் குறிப்பாகிய அடையாளத்தினைக் காட்டியருளினுன்.

கு :—உலகனைத்தும் இப்பொழுதே எஞ்சும் என்று என்று நெஞ்சு நடுங்கும் நெடுந்தேவர் என்க. எஞ்சுதல் - குறைதல்; சிதைவுற்று அழிதல். நெடுந்தேவர் – தேவர்களிற் பெரியோராகிய பிரமன் உருத்திரன் ஆகிய கடவுளர்கள். கஞ்சமலர் - தாமரைமலர். அபயமாவது, அஞ்சித் தன்னையடைந்தோரை நோக்கி அஞ்சாதீர்கள் என்று ஆதரிக்கும் அருள் நோக்குடன் வலக் கையின் ஐந்து விரல்களும் நெஞ்சுற நோக்கி நெகிழ்ந்து நிமிர்ந்து நிற்கும் நிலையில் அமைந்த அடையாளக் குறிப்பாகும். (162)

திருமகளாகிய பெரிய பிராட்டியை நரசிங்கப்பிரான் அருகிற் செல்லுமாறு தேவர்கள் வேண்டியனுப்ப, அப் பிராட்டியைச் சிங்கப்பிரான் அருளொடு நோக்குதல்

6478. பூவிற் றிருவை யழகின் புனைகலத்தை
யாவர்க்குஞ் செல்வத்தை வீடீனு மின்பத்தை
ஆவித் துணையை யமுதிற் பிறந்தாளைத்
தேவர்க்குந் தம்மோயை யேவினுர் பாற்செல்ல.

'பூவில் திருவை, அழகின் புனைகலத்தை,
யாவர்க்கும் செல்வத்தை, வீடு ஈனும் இன்பத்தை,
ஆவித் துணையை, அமுதின் பிறந்தாளை,
தேவர்க்கும் தம் மோயை, ஏவினுர், பாற் செல்ல.

பொ :—அழகு என்பதோர் பண்பு (தனக்கு மேலும் அழகுண்டாகப்) புனைந்து கொள்ளத்தக்க ஆபரணமாகத் திகழ்பவளும், எல்லோர்க்கும் செல்வத்தை வழங்குபவளும் (முடிவில்) வீடுபேருகிய

பேரின்பத்தை வழங்குபவளும், (எம்பெருமானுகிய திருமாலுக்கு) உயிர்த்துணையாக விளங்கும் தேவியும், (சாவாமையைத்தரும்) அமிழ் தத்துடனே (திருப்பாற்கடலிலே) தோன்றியவளும் (மக்கள் முதலிய மன்னுயிர்களுக்கேயன்றித்) தேவர்களுக்கும் தாயாகவுள்ளவளும் செந்தாமரை மலரில் எழுந்தருளியிருப்பவளும் ஆகிய திருமகளை (நரசிங்கப்பிரானிடம்) செல்லும் வண்ணம் (பிரமன் முதலிய தேவர்கள் பிரார்த்தித்து) அனுப்பினுர்கள்.

கு:—பிராட்டியாகிய திருமகள் அழகுக்கு அழகுதரும் தெய்வ மாதல்பற்றி 'அழகின்புனைகலம்' என்றும், திருமாலாகிய இறை வனை வழிபடும் அடியார்கள் நிரதிசய ஆனந்தமாகிய வீடுபேற்றினை யடைதற்கு அவர்கள் பொருட்டுத் தன் நாயகனுகிய இறைவன்பால் அன்பு மொழிகள் கூறி அவனது திருவருளுக்கு உரியராகச் செய்து பரமபதமாகிய பேரின்ப வாழ்வினை அளித்து உதவுதல் பற்றி 'வீடு ஈனும் இன்பம்' என்றும் போற்றினுர் ஆசிரியர். மோய் - தாய். நரசிங்கப்பிரான் தனது சீற்றத்தினைத் தன்னுள்ளே அடக்கிக் கொண்டு தேவர்களுக்கு அபயமளித்த நிலையினும் அப்பெருமானை அணுகுதற்கு அஞ்சிய தேவர்கள், அவனது திருவருளை எல்லாவுயிர் களும் எளிதிற் பெற்று இன்புறுதற்கு உறுதுணையாய் உதவும் திருமக ளாகிய பிராட்டியை வழிபட்டு எவ்வுயிர்க்குந் தாயாகிய அத்தேவியை அவளுடைய நாயகனுகிய நரசிங்கப்பிரானது சீற்றமெல்லாந் தணிய அவன் பக்கல் செல்லும் வண்ணம் துதித்து வேண்டி அனுப்பிவைத் தார்கள் என்பதாம். (163)

6479. செந்தா மரைப்பொகுட்டிற்
செம்மாந்து வீற்றிருக்கும்
நந்தா விளக்கை
நறுந்தா ளிளங்கொழுந்தை
முந்தா வுலகு
முயிரு முறைமுறையே
தந்தானை நோக்கினுன்
றன்னெப்பொன் றில்லாதான்.

'செந் தாமரைப் பொகுட்டில் செம்மாந்து வீற்றிருக்கும்
நந்தா விளக்கை, நறுந்தாள் இளங் கொழுந்தை,
முந்தா உலகும் உயிரும் முறை முறையே
தந்தானை நோக்கினுன், தன் ஒப்பு ஒன்று இல்லாதான்.

பொ :—தனக்கு ஒப்பாக ஒரு பொருளும் இல்லாத இறைவனாகிய நரசிங்கப்பிரான் செம்மை நிறம் வாய்ந்த தாமரை மலரின் நடுவில் பெருமகிழ்ச்சியுடன் வீற்றிருக்கும் தூண்டாவிளக்குப் போல்பவளும் நறுமணம் வாய்ந்த காம்புடன் கூடிய இளங் கொழுந்துபோல்வாளும் ஆதியிலேயே உலகங்களையும் உயிர்களையும் வழிமுறை வழிமுறையாகப் பெற்றருளியவளும் ஆகிய திருமகளை(க் கண்குளிர)க் கண்டருளினான்.

கு :—பொகுட்டு - தாமரை மலரின் நடுவில் அமைந்த கொட்டை. செம்மாத்தல் - மனமகிழ்தல். நந்தா விளக்கு - தூண்டா விளக்கு; அவியாத ஒளியுடைய மாணிக்க மணி விளக்கு எனினும் அமையும். காம்பு உள்பட முழுவதும் நறுமணம் பொருந்திய கொழுந்து என்பார் 'நறுந்தாள் இளங்கொழுந்து' என்றார். முந்தா(க) - முற்பட; ஆதியிலேயே. திருமகளாகிய பிராட்டி திருமாலாகிய இறைவனுக்குச் சத்தியாய் அம்முதல்வன் செய்யும் படைப்பு முதலிய தொழில்களுக்கு உடனாதல் பற்றி 'முந்தா உலகும் உயிரும் முறைமுறையே தந்தாள்' என்றார். தனக்குவமையில்லாதான் என்பார், 'தன்னொப்பொன்றில்லாதான்' என்றார். (164)

இச்செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்,

6479 (a) மங்கையொரு பாகன் முதலமரர் மாமலர்மேல்
நங்கைதனை யேனைதலும் நாராயணக் கடவுள்
சிங்கலிலா மானுடமாம் சீயவுருவம் போக்கிப்
பொங்கு பரஞ்சுடராய் எங்கும் பொலியநின்றான்.

என்ற செய்யுள் மிகைப்பாடலாகக் குறிக்கப் பெற்றுளது.

நரசிங்கப்பிரான் தன்பால் அன்புடைய பிரகலாதனை நோக்கி அருள் செய்தல்

6480. *தீதிலா வாக வுலகீன்ற தெய்வத்தைக்*
காதலா னோக்கினான் கண்ட முனிக்கணங்கள்
ஓதினார் சீர்த்தி யுயர்ந்த பரஞ்சுடரும்
நோதலாங் கில்லாத வன்பனையே நோக்கினான்.

'தீது இலா ஆக உலகு ஈன்ற தெய்வத்தைக்
காதலால் நோக்கினான்; கண்ட முனிக் கணங்கள்
ஓதினார், சீர்த்தி; உயர்ந்த பரஞ்சுடரும்,
நோதல் ஆங்கு இல்லாத அன்பனையே நோக்கினான்.

பொ :—தீங்குகள் யாவும் இல்லாதனவாய் ஒழிய இவ்வுலகினைப் படைத்தற்கு உதவிய தெய்வமாகிய திருமகளை அன்போடு பார்த்தருளினன். (அவ் அருட் குறிப்பைப்) பார்த்த முனிவர் கூட்டத்தார் (அப்பெருமானுடைய) மிக்க புகழ்த்திறங்களை எடுத்துரைத்துப் போற்றினர்கள். சிறந்த மேலான பேரொளிப் பிழம்பாகிய இறைவனும், (தந்தையை யிழந்த) அந்நிலையில் (சிறிதும்) வருந்துதல் இல்லாத பேரன்பினனாகிய பிரகலாதாழ்வானையே பார்த்தருளினன்.

கு :—சீர்த்தி - மிகுபுகழ். நரசிங்கப்பிரான், தன் தந்தையைக் கொன்று நின்ற அந்நிலையிலும் தந்தையின் இழப்புக்குச் சிறிதும் மனம் வருந்துதல் இன்றிப் பிரகலாதன் இருந்தமைக்கு அவன் திருமாலாகிய இறைவனிடத்து வைத்த பேரன்பே காரணம் என்பார், 'நோதல் ஆங்கு இல்லாத அன்பன்' எனக் குறித்தார். ஆங்கு - தந்தையை இழந்த அந்நிலையில். பரஞ்சுடராகிய நரசிங்கப்பிரான் தன் பெரும் புகழைச் சொல்லித் துதிக்கும் முனிவர் முதலியோரை முதற்கண் நோக்காது, தன்பால் வைத்த அளவிலாப் பேரன்பு காரணமாகத் தந்தையையும் இழக்கத் துணிந்த பிள்ளைப் பருவத்தினனாகிய பிரகலாதனையே குறிக்கொண்டு நோக்கியருளினன் என்பார் 'அன்பனையே நோக்கினன்' என்றார். அன்பனையே என்புழி ஏகாரம் பிரிநிலை. (165)

6481. உந்தையை யுன்முன்னே
கொன்றுடலைப் பிளந்தளையச்
சிந்தை தளரா
தறம்பிழையாச் செய்கையாய்
அந்தமிலா வன்பென்மேல்
வைத்தா யளியத்தாய்
எந்தை யினியிதற்குக்
கைம்மா றியாதென்றான்.

"'உந்தையை உன்முன்னே
கொன்று, உடலைப் பிளந்து அளைய,
சிந்தை தளராது,
அறம் பிழையாச் செய்கையாய்!
அந்தம் இலா அன்பு என்மேல்
வைத்தாய்! அளியத்தாய்!
எந்தை! இனி இதற்குக்
கைம்மாறு யாது?" என்றான்.

பொ :—(யான்) உன் தந்தையாகிய இரணியனை உன் முன்னிலையிலே கொன்று (அவனது) உடம்பினை (என் கை நகங்களாற்) பிளந்து துழாவவும் (அது கண்டு) மனந்தளராது அறநெறி வழுவாது நற்செயலையுடையையாய் முடிவில்லாத பேரன்பினை என்பால் வைத்தனை. (என்னால்) தலையளி செய்யத்தக்கவனே! என் அப்பனே! இப்பொழுது நீ என்பால் வைத்த பேரன்புக்கு ஈடாக (நான் உனக்குச் செய்யும்) மாற்றுதவி யாதுளது? என்று (நரசிங்கப்பிரான் பிரகலாதனை நோக்கிக்) கூறினான்.

கு :—அந்தம் இலா அன்பு - முடிவில்லாத பேரன்பு. அளியத்தாய் - அளிக்கத்தக்காய்; 'அஞ்சிறைய மடநாராய் அளியத்தாய்' என்பது திருவாய்மொழி (1-4-1). எந்தை - அன்புபற்றிய விளி. தந்தைக்கும் மைந்தர்க்கும் எவ்வளவு மனவேறுபாடிருப்பினும் தம்முடைய தந்தையை மற்றொருவர் சித்திரவதை செய்து கொல்லுதலைக் காணப் பொறார். பிரகலாதனாகிய நீயோ உன் முன்னிலையிலேயே உன் தந்தையாகிய இரணியனை யான் சித்திரவதை செய்யக் கண்டிருந்தும் உன் தந்தையின் இறப்புக்குச் சிறிதும் மனங்கலங்குதலின்றி என்பாற் சிறிதும் வெறுப்பின்றிப் பேரன்பு பூண்டுள்ளாய். இவ் இளம்பருவத்திலேயே தந்தை முதலிய சுற்றத் தொடர்பினை விட்டு என்னையே தஞ்சமாகப் பற்றிய உனக்கு யான் எத்தகைய பெருநலத்தைச் செய்தாலும் அது நீ என்பால் வைத்துள்ள அன்புக்கு ஈடாகாது என்று நரசிங்கப்பிரான் தன் அன்பனாகிய பிரகலாதனை வியந்து பாராட்டினான் என்பதாம். (166)

6482. அயிரா விமைப்பினையோ
ராயிரங் கூறிட்ட
செயிரி னொருபொழுதி
னுந்தையையான் சீறி
உயிர்நேடு வேன்போ
லுடலளையக் கண்டும்
செயிர்சேரா வுள்ளத்தாய்க்
கென்னினியான் செய்கேனே.

"'அயிரா இமைப்பினை ஓர்
ஆயிரம் கூறு இட்ட
செயிரின் ஒரு பொழுதின்
உந்தையை யான் சீறி,

உயிர் நேடுவேன் போல்,
உடல் அளைய, கண்டும்
செயிர் சேரா உள்ளத்தாய்க்கு,
என் இனியான் செய்கேனே?

பொ :—கண்ணிமைப்பொழுதாகிய காலத்தை நுண்மையுடைய ஆயிரம் கூறுகளாகப் பகிர்ந்த (பகுப்பினுள்) ஒரு கூருகிய சிறிது நேரத்திற்குள் உன் தந்தை இரணியனை (அவன் செய்த) குற்றங் காரணமாக யான் சினந்து அவனது உயிரைத் தேடியறிவேன்போல (அவனுடைய) உடம்பினை (கை நகங்களாற் பிளந்து) துழாவி வருத்துதலை (நின் கண்ணுற்) கண்டிருந்தும் (அது பற்றி என் செயலிற்) பகைமை கொள்ளாத (தூய) உள்ளத்தையுடைய (பேரன்பினனாகிய) உனக்கு யான் இனி எத்தகைய உதவியைச் செய்யவல்லேன்?

கு :—இமைப்பினை அயிரா ஓர் ஆயிரங்கூறு இட்ட ஒரு பொழுதின் செயிரின் உந்தையை யான் சீறி உடல் அளையக்கண்டும் என இயைத்துரைக்க. அயிரா - நுண்ணிதாக. அயிர் - நுண்மை. இமைப்பு - கண்ணின் இமைகள் இயல்பாக மூடித்திறக்கும் கால அளவு. செயிர் - குற்றம். (167)

6483. கொல்லே னினியுன்
குலத்தோரைக் குற்றங்கள்
எல்லை யிலாதன
செய்தாரே யென்றாலும்
நல்லே னுனக்கென்னை
நாணும னென்செய்வ
தொல்லை யுளதே
லியம்புதியா லென்றுரைத்தான்.

"'கொல்லேன், இனி உன்
குலத்தோரை, குற்றங்கள்
எல்லை இலாதன
செய்தாரே என்றாலும்;
நல்லேன், உனக்கு; என்னை
நாணுமல் நான் செய்வது
ஒல்லை உளதேல்,
இயம்புதியால்" என்று உரைத்தான்.

பொ :—(உன் குலத்திற் பிறந்தோர்) அளவற்ற குற்றங்களைச் செய்தனராயினும் உன் குலத்தோராகிய அவர்களை இனிக் கொல்ல மாட்டேன். (என் அன்பனுகிய) உனக்கு என்றும் நன்மையே புரிவேன். மேலும் நான் உனக்குச் செய்யத்தக்க உதவி உளதாயின், (உனது பேரன்புக்கு ஏற்ற உதவியைச் செய்யவில்லையே என்று) என் செயலுக்கு நானே நாணி வருந்தாதவாறு அதனை விரைவிற் சொல்வாயாக என்று (நரசிங்கப்பிரான் பிரகலாதனை நோக்கிக்) கூறினான்.

கு :—எல்லையிலாதன குற்றங்கள் செய்தாரே யென்றாலும் உன் குலத்தோரை இனிக் கொல்லேன் ; உனக்கு நல்லேன் ; நான் செய்வது உளதேல் என்னை நாணுமல் ஒல்லை இயம்புதி என இயைத்துரைக்க. அசுரர் குலத்திற் பிறந்த பிரகலாதனது பேரன்புக்கு உவந்த திருமால், 'உன் குலத்தோரை இனிக் கொல்லேன்' என்று கூறிய வரத்திற்கேற்ப, பிரகலாதனுடைய பேரனுகிய மாவலிச் சக்கரவர்த்தியைக் கொல்லாமல் திருவடியால் அடக்கியருளிய நிகழ்ச்சி இங்கு நினைக்கத்தக்கதாகும்.

இச் செய்யுளையடுத்து 52-என்னும் எண்ணுள்ள சுவடியில்,

6483 (a) ஈதாங் கமல னியம்ப வெழிற்புதல்வன்
நாதாங் கருமறையும் நாடற் கரியசெழும்
பாதாம் புயவலரிற் பன்முறையும் தான்பணிந்து
வேதாந்த மெய்ப்பொருளே யென்று விளம்பலுற்றான்.

என்ற செய்யுள் மிகைப் பாடலாகக் குறிக்கப்பெற்றுளது. (168)

பிரகலாதன் அன்பே பெரும்பேறென வேண்டுதல்

6484. முன்பு பெறப்பெற்ற பேருற முடிவில்லை
பின்பு பெறும்பேறு முண்டோ பெறுவேனேல்
என்பு பெருத விழிபிறவி யெய்திடினும்
அன்பு பெறும்பே றடியேற் கருளென்றான்.

"'முன்பு பெறப் பெற்ற பேருற முடிவு இல்லை ;
பின்பு பெறும் பேறும் உண்டோ? பெறுவேனேல்,
என்பு பெருத இழிபிறவி எய்திடினும்,
அன்பு பெறும் பேறு அடியேற்கு அருள்" என்றான்.

பொ :—(எம்பெருமானே! நின்திருவருளால்) இதற்கு முன்னர் (யான்) பெற்ற பேறுகளோ எல்லையில்லாதன. பின்னர் (இவற்றின் மேலாகப்) பெறவேண்டிய பேறுகளும் உளவோ ? (முடிவாக

ஒன்றினை) வேண்டிப் பெறுவேனாயின், எலும்பில்லாத இழிந்த (புழுவின்) பிறப்பினை யான் எய்தப்பெற்றாலும் (நின் திருவடிக்கண்) அன்பு ஒன்றையே வேண்டிப் பெறும் நற்பேற்றினை அடியேனுக்கு அருள்வாயாக என இரந்து வேண்டினான் (பிரகலாதன்).

கு :—முன்புபெற்ற பேறுகளாவன, கல்வி பயிலாத இளம் பருவத்திலேயே கற்ற கல்வியின் பயனாவான் இறைவனாகிய திருமாலே எனத் தெளிந்து அவனது திருநாமமாகிய திருஎட்டெழுத்தின் பெருமையை நன்கு உணரப்பெற்றமையும், தான் உணர்ந்த அவ்வுண்மையைத் தந்தைக்கு எடுத்துரைத்து வற்புறுத்துங்கால் தந்தை செய்த பல்வேறு இடையூறுகளாலும் தான் கொல்லப்படாது உய்ந்தமையும், மாற்ற மனங் கடந்த பரம்பொருளாகிய திருமால் தான் குறித்த வண்ணம் தூணிடையே நரசிங்கப்பிரானாகத் தோன்ற அம்முதல்வனைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்து தன் தந்தைக்குக் காட்டினமையும் முதலாயின. பிரகலாதன் பெற்ற திருஅட்டாக்கரத்தின் பெருமையை,

நம்பெரு மாளெட் டெழுத்தின் பெருமை நவிலுமதோ
சம்பரன் மாயம் புரோகிதர் சூழ்வினை தாரணிவாள்
வெம்படை மாசுணம் மாமத வேழம் விடந்தழல்கால்
அம்பர மேமுத லானவை பாலனுக் கஞ்சினவே.

என வரும் பாடல் இனிது புலப்படுத்தல் காணலாம். என்பு பெறாத இழி பிறவி என்றது தாழ்வுடைய புழுவின் பிறப்பினை. "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியாவுன்னடி யென்மனத்தே, வழுவாதிருக்க வரந்தர வேண்டும்" (4-94-8) என வரும் அப்பர் அருள் மொழியும "தூண்டா விளக்கின் சுடரனையாய் தொண்டனேற்கும் உண்டாங் கொல் வேண்டாதொன்றும் வேண்டாது மிக்க அன்பே மேவுதலே" (பிரார்த்தனைப்பத்து-4) என வரும் திருவாசகமும், 'இறவாத இன்ப அன்பு வேண்டி" (பெரிய-காரைக்காலம்மையார் புராணம்) என வரும் திருத்தொண்டர் புராணத் தொடரும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கனவாம். (169)

நரசிங்கப்பிரான் அருள்புரிதல்

6485. அன்னானை நோக்கி யருள்சுரந்த நெஞ்சினனாய்
என்னானை வல்ல னெனமகிழ்ந்த பேரீசன்
முன்னான பூதங்கள் யாவையு முற்றிடினும்
உன்னா ளுலவாய்நீ யென்போலு மென்றான்.

'அன்னானை நோக்கி, அருள் சுரந்த நெஞ்சினன் ஆய்,
"என் ஆனை வல்லன்" என மகிழ்ந்த பேர் ஈசன்,
"முன் ஆன பூதங்கள் யாவையும் முற்றிடினும்,
உன் நாள் உலவாய் நீ, என்போல் உளை" என்றான்.

பொ :—(இவ்வாறு அன்பு ஒன்றினையே வேண்டிய பிரகலாதனது பத்தித்திறத்தினை வியந்து) 'என் ஆனையாகிய இவன் (மெய்யுணர்வில்) மிகவும் வல்லவன்' என்று (அவனது ஞானத்திறன்கண்டு) மகிழ்ந்தருளின பெருமையுடைய இறைவனாகிய நரசிங்கப்பிரான், (தன்பால் நீங்காத பேரன்புடையனான) அத்தகைய பிரகலாதனைப் பார்த்துக் கருணைகூர்ந்த திருவுள்ளத்தையுடையவனாய், (உலகத் தோற்றத்திற்குக் காரணமாய்) முன்னுள்ள ஐம்பெரும் பூதங்கள் யாவும் கெட்டொழியும் ஊழிக்காலம் வந்தாலும் நீ உன்னுடைய வாழ் நாள் சிதையப்பெறாய்; (இறைவனாகிய) என்னைப்போன்று (எக்கா லத்தும் அழிவின்றி) இருப்பாய்' என்று வரந்தந்து வாழ்த்தி யருளினான்.

கு :—ஈசன், அன்னானைநோக்கி, 'உன்நாள் உலவாய், என் போல் உளை' என்றான் என முடியும். உலத்தல் - கெடுதல். முற்றுதல் - முடிதல்; அழிதல். உளை - உள்ளாய். தன்னால் அன்பு செய்யப்பெற்றாரை 'என் ஆனை' என அன்பினாற் பாராட்டிக்கூறும் மரபு பற்றி நரசிங்கப்பிரான் தன் பேரருளுக்குரிய பிரகலாதனை 'என் ஆனை வல்லன்' என அவனது மெய்யுணர்வினை வியந்து பாராட் டினன் என்க. (170)

6486. மின்னைத் தொழுவளைத்த தன்ன மிளிரொளியாய்
முன்னைத் தொழும்புக்கே யாமன்றோ மூவுலகும்
என்னைத் தொழுதேத்தி யெய்தும் பயனெய்தி
உன்னைத் தொழுதேத்தி யுய்க வுலகெல்லாம்.

"'மின்னைத் தொழு வளைத்தது அன்ன மிளிர் ஒளியாய்!
முன்னைத் தொழும்புக்கே ஆம் அன்றோ, மூ உலகும்?
என்னைத் தொழுது ஏத்தி எய்தும் பயன் எய்தி,
உன்னைத் தொழுது ஏத்தி, உய்க, உலகு எல்லாம்.

பொ :—(கணப்பொழுதும் நிலைத்தல் இன்றி மறையுந்தன்மைய தாகிய) மின்னலை (அவ்வாறு மறையவொட்டாமல்) தொழுமரத்திலே வளைத்துப் பிணித்தாற்போன்று (இடைவிடாது) ஒளிவிட்டு விளங்கும் மேனியையுடையோனே! (என்னை நோக்கி நீ) முன் செய்த திருவடித்

தொண்டுக்கே மூவகையுலகங்களும் உனக்கு உரியவாயின அல்லவோ? உலகில் வாழும் உயிர்களெல்லாம் (இறைவனாகிய) என்னைத் தொழுது துதித்து அடையத்தக்க நற்பயன்கள் அனைத்தையும் (என் அருளுக்குரிய அடியவனாகிய) உன்னை வணங்கிப் போற்றுமுகத்தால் அடையப்பெற்று உய்திபெறுவனவாகுக.

கு :—தொழு - பசு முதலிய விலங்குகளைச் சேரப் பிணித்தற்குரிய மரம். வளைத்தல் - வளைத்துக் கட்டுதல். முன்னைத் தொழும்புக்கே மூவுலகும் ஆம் அன்றோ எனவும், உலகெல்லாம் என்னைத் தொழுதேத்தி எய்தும் பயன் உன்னைத் தொழுதேத்தி எய்தி உய்க எனவும் இயைத்துரைக்க. தொழும்பு - அடித்தொண்டு. (171)

6487. ஏனவர்க்கு வேண்டி
னெளிதொன்றோ வெற்கன்பர்
ஆனவர்க ளெல்லா
நினக்கன்ப ராயினார்
தானவர்க்கு வேந்தனீ
யென்னுந் தரத்தாயோ
வானர்க்கு நீயே
யிறைதொன் மறைவல்லோய்.

"'ஏனவர்க்கு வேண்டின்,
எளிது ஒன்றோ?—எற்கு அன்பர்
ஆனவர்கள் எல்லாம்
நினக்கு அன்பர் ஆயினார்;
தானவர்க்கு வேந்தன் நீ
என்னும் தரத்தாயோ?
வானவர்க்கும் நீயே
இறை—தொல்மறை வல்லோய்!

பொ :—பழைமையான வேதங்களை (ஓதாது) உணர்ந்தவனே! எனக்கு அன்புடையராகிய தொண்டரினத்தார் அனைவரும் (என் அடியாராகிய) உனக்கு அன்புடைய அடியவரானார்கள். நீ அசுரர் இனத்தார்க்குமட்டும் அரசன் என்று சொல்லப்படும் நிலையில் உள்ளாயோ? தேவரினத்தார்க்கும் நீயே தெய்வமாவாய். (நீ பெற்ற இச்சிறப்பு) ஏனையோரால் வேண்டிப் பெறுதற்கு எளிய தொன்றாகுமோ?

கு :—ஏனவர் - ஏனையோர். எளிது ஒன்றோ - எளிமையுடைய தொன்றுகுமோ ? ஓகாரம் எதிர்மறை. தானவர் - அசுரர். இறை - தெய்வம் ; அரசன் எனினும் ஆம். (172)

6488. நல்லறமு மெய்ம்மையு
நான்மறையு நல்லருளும்
எல்லையிலா ஞானமு
மீறிலா வெப்பொருளும்
தொல்லைசா லெண்குணனு
நின்சொற் றொழில்செய்க
நல்ல வுருவொளியாய்
நாளும் வளர்கநீ.

" ' நல் அறமும், மெய்ம்மையும்,
நான்மறையும், நல் அருளும்,
எல்லை இலா ஞானமும்,
ஈறு இலா எப்பொருளும்,
தொல்லை சால் எண்குணனும்,
நின் சொல் தொழில் செய்க;
நல்ல உரு ஒளியாய்,
நாளும் வளர்க நீ.

பொ :—நன்மையை விளக்கும் தருமமும் சத்தியமும் நான்கு வேதங்களும், நலஞ்சிறந்த கருணையும், வரம்பில்லாத (தத்துவ ஞானமாகிய) மெய்யுணர்வும் முடிவில்லாத எவ்வகைப்பட்ட பொருள்களும், தொன்மைவாய்ந்த எட்டுக் குணங்களும் நின்னுடைய ஆணையின் வண்ணம் தொழில் புரிவனவாகுக. நலம் நிறைந்த ஒளியுடன் திகழும் அழகிய உருவினையுடையவனாக நீ நாளும் வளம் பெற்று வாழ்வாயாக.

கு :—இறைவனாகிய என்னைப் போன்று என்னுடைய அடியவனாகிய நீயும் எல்லா நற்குணங்களையும் ஒருங்கே பெற்று அழிவின்றி வாழ்வாயாக என நரசிங்கப்பிரான் பிரகலாதாழ்வானை வாழ்த்திய வாறு. எண் குணங்களாவன தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என இவை. (173)

இச்செய்யுளை யடுத்து 52 என்னும் எண்ணுள்ள சுவடியில்,

6488 (௧) சீலம் உறுவோய் உனக்குச் செப்புந் திருநாமம்
மேலோர் புகழ்பிரக லாதன் எனவிரும்பி
நால்வேத வாய்மை நனிமா தவத்தோரும்
மேலாம் அமரர்களும் யாரும் விளம்ப வென்ருன்.

என்ற செய்யுள் மிகைப்பாடலாகக் குறிக்கப் பெற்றுளது.

நரசிங்கப்பிரான் தேவர்களை நோக்கிப் பிரகலாதனுக்கு முடிசூட்டுவதற்கு ஆவன செய்யுமாறு பணித்தல்

6489. என்று வரமருளி யெவ்வுலகுங் கைகூப்ப
முன்றின் முரச முழங்க முடிசூட்ட
நின்ற வமர ரனைவீரு நேர்ந்திவனுக்
கொன்று பெருமை யுரிமை புரிகென்ருன்.

'என்று வரம் அருளி, எவ்வுலகும் கை கூப்ப,
முன்றில் முரசம் முழங்க, முடி சூட்ட,
"நின்ற அமரர் அனைவீரும் நேர்ந்து இவனுக்கு
ஒன்று பெருமை உரிமை புரிக" என்ருன்.

பொ :—(நரசிங்கப்பிரான் இவ்வாறு) கூறி(ப் பிரகலாதாழ்வானுக்கு நிலைத்த) வரத்தினைக் கொடுத்தருளி, எல்லா வுலகத்தவரும் கைகூப்பி வணங்க, அரண்மனை வாயிலிலே (மங்கல வாத்தியமாகிய) முரசு ஒலிக்க, (பிரகலாதனுகிய) இவனுக்கு முடியினைச் சூட்டுதற்கு இங்கு நின்ற தேவர்களாகிய நீவிர் எல்லீரும் மனம் இசைந்து பொருந்திய சிறப்புடன் கூடிய உரிமைப் பணிகளை உவப்புடன் செய்வீராக எனப் பணித்தருளினுன்.

கு :—இவன் என்றது பிரகலாதனை. புரிதல் – விருப்புடன் செய்தல். (174)

பிரகலாதன் முடிசூட்டப் பெறுதல்

6490. தேம னுரிமை புரியத் திசைமுகத்தோன்
ஓம மியற்ற வுடையான் முடிசூட்டக்
கோமன் னவனுகி மூவுலகுங் கைக்கொண்டான்
நாம மறையோதா தோதி நனியுணர்ந்தான்.

'தே மன் உரிமை புரிய, திசை முகத்தோன்
ஓமம் இயற்ற, உடையான் முடி சூட்ட,
கோ மன்னவன் ஆகி, மூ உலகும் கைக் கொண்டான்;
நாம மறை ஓதாது ஓதி, நனி உணர்ந்தான்.

பொ :—(நரசிங்கப்பிரான் பணித்த வண்ணம்) தேவர்களுக்கு அரசனாகிய இந்திரன் (பிரகலாதனது முடிசூட்டு விழாவுக்குரிய) குற்றேவற் பணிகளை விருப்புடன் செய்யவும், நான்முகக் கடவுள் வேள்விச் சடங்கினை நிகழ்த்தவும், எல்லா வுலகங்களையும் உடைய இறைவனாகிய திருமாலே (தன் திருக்கரத்தினால்) முடியினைச் சூட்டியருள, வேந்தர் வேந்தன் என்னும் பெருமையினையுடையவனாகி மூன்றுலகங்களையும் தனக்கே உரியனவாகக் கைக்கொண்டு ஆட்சி புரிந்தான்; புகழமைந்த வேதங்களை (ஆசிரியனிடத்திற் சென்று) ஓதாமலே (அவற்றின் உட்பொருளை) மிகவும் தெளிய உணர்ந்தவனாகிய பிரகலாதன்.

கு :—நாமமறை ஓதாது ஓதி நனி உணர்ந்தான், தேமன் உரிமைபுரிய, திசை முகத்தோன் ஓமம் இயற்ற, உடையான் முடி சூட்ட, கோமன்னவன் ஆகி, மூவுலகும் கைக்கொண்டான் என முடிக்க. ஓதுதல் ஆவது, கற்றுவல்ல ஆசிரியனிடத்துச் சென்று அவன் கற்பித்த முறையிலே பலகாலும் பயின்று ஓதுதல். ஓதாது ஓதுதலாவது, ஆசிரியனிடத்திற் சென்று அவன் கற்பிக்கப் பயிலாது தானே தன் நுண்ணறிவினால் ஓதியுணர்தல். பிரகலாதன் ஆசிரியன் உதவியின்றி இறைவனருளால் தானே வேதங்களைத் தெளிய உணர்ந்தான் என்பார், 'நாமமறை ஓதாது ஓதி நனி உணர்ந்தான்' என்றார். நாமம் - புகழ். தேமன் – தேவர்கட்கு மன்னனாகிய இந்திரன். திசை முகத்தோன் - நான்கு திசைகளிலும் முகமுடையனாகிய பிரமதேவன். ஓமம் - வேள்விச் சடங்கு. உடையான் – இறைவன்; என்றது நரசிங்கப்பிரானை. கோமன்னவன் – வேந்தர் வேந்தன்; சக்கரவர்த்தி. (175)

வீடணன் இராவணனை நோக்கிக் கூறிய முடிப்புரை

6491. ஈதாகு முன்னிகழ்ந்த
தெம்பெருமா னென்மாற்றம்
யாதானு மாக
நினையா திகழ்தியேல்

தீதாய் விளைதனனி
திண்ணமெனச் செப்பினன்
மேதாவி கட்கெல்லா
மேலாய மேன்மையான்.

"'ஈது ஆகும், முன் நிகழ்ந்தது;
எம் பெருமான்! என் மாற்றம்
யாதானும் ஆக
நினையாது, இகழ்தியேல்,
தீது ஆய் விளைதல் நனி
திண்ணம்" எனச் செப்பினன்,
மேதாவிகட்கு எல்லாம்
மேலாய மேன்மையான்.

பொ :—எங்கள் தலைவனாகிய பெருமானே! (இரணியனைப் பற்றிய) இவ்வரலாறு முன்பு நிகழ்ந்ததாகும். என் மொழியினை ஏதோ பழங்கதையெனக் கொண்டு, சிந்தித்துப்பாராது இகழ்ந்து ஒதுக்குவாயாயின், (அவ் விகழ்ச்சியினால்) உனக்குத் தீமையுண்டாகி முடிதல் மிகவும் நிச்சயம் என்று சொல்லி முடித்தான், அறிவினால் மேம்பட்டோர்க்கெல்லாம் மேலாய் விளங்கும் சிறப்பினையுடையோனாகிய வீடணன்.

கு :—மேதாவிகட்கு எல்லாம் மேலாய மேன்மையான் செப்பினன் என முடியும். 'எம்பெருமான்!' ஈது முன் நிகழ்ந்தது ஆகும். என் மாற்றம் யாதானும் ஆக(க்கொண்டு) நினையாது இகழ்தியேல், தீதுஆய் முடிதல் நனிதிண்ணம்' என்பது வீடணன் இராவணனை நோக்கிக் கூறிய முடிப்புரை. யாதானுமாக இகழ்தியேல், நினையாது இகழ்தியேல் எனத் தனித்தனி இயைத்துப் பொருள் கொள்க. நினைதல் - சிந்தித்தல். இனி, 'யாதானுமாக நினையாது' என்பதற்கு 'சிறிது கவனிக்கத்தக்கது இவன் பேச்சு என்றுகூடக் கருதாமல்' எனப் பொருள் கூறி, இகழ்தற்கு அடையாக்கியுரைப்பினும் அமையும். நனிதிண்ணம் - மிகவும் உறுதி. மேதாவி என்பது அறிஞன் எனப் பொருள் தரும் வடசொல். அதனடியாகத் தமிழில் பன்மைப் பொருளில் வந்தது மேதாவிகள் என்ற சொல்லாகும். மேதாவிகள் - அறிஞர்கள். அறிஞர்கட்கெல்லாம் மேலாய் விளங்கும் சிறப்புடையான் என்றது, எதிரதாக்காக்கும் நல்லறிவுடையனாகிய வீடணனை. (176)

இரணியன் வதைப் படலம் முற்றிற்று

4. வீடணன் அடைக்கலப் படலம்

வீடணன் இராமனிடம் அடைக்கலம் புகுந்த செய்தியைக் கூறும் பகுதியாகலின் இது வீடணன் அடைக்கலப் படலம் எனப் பெயர் பெறுகின்றது. விபீடணப் படலம் எனவும் விபீடணன் அடைக்கலப் படலம் எனவும் வீடணப் பெருமாள் அடைக்கலப் படலம் எனவும் சிற்சில சுவடிகளில் இப்படலத்தின் பெயர் வேறுபட்டுக் காணப்படுகின்றது. விபீஷணன் என்ற வடசொல்லுக்குப் பயத்தைச் செய்கின்றவன் என்று பொருள் கூறுவர்.

படலப் பொருட் சுருக்கம்

இரணியனது வரலாற்று மூலமாக வீடணன் கூறிய அறிவுரைகளை இராவணன் ஏற்றுக் கொள்ளாமையோடு மனிதர்பால் வைத்த சார்பினை என அவனைச் சினந்து இழித்துக் கூறி, 'இனி என் விழி எதிர் நிற்றியேல் அழிவாய்' என அச்சுறுத்துகின்றான். வீடணன் அவ்விராவணன் முன்னிலையில் நின்றும் துணைவருடன் நீங்கி விண்ணிடைச் சென்று நின்று மேலும் பல உறுதிமொழிகளைக் கூறிவிட்டு 'உனக்கு உறுதி பயக்கும் பல அறிவுரைகளைச் சொன்னேன்; நீ உணரவில்லை. உணராத உனக்கு அறிவுரை கூறிய எனது பிழையைப் பொறுத்துக் கொள்க' என்று சொல்லிவிட்டு இலங்கையை விடுத்துச் செல்கின்றான். அனலன், அனிலன், அரன், சம்பாதி என்ற அமைச்சர் நால்வரும் அவ்வீடணனோடு சேர்ந்து கொள்கின்றனர். கடலின் வடகரையில் இராமன் வானர சேனையுடன் தங்கியுள்ளமை யுணர்ந்து விண்வழியே சென்று மாலையில் அவ்விடத்தை அடைந்து வானரப் படையின் பரப்பைக் கண்டு வியக்கின்றனர்.

பின்பு, வீடணன் தன் அமைச்சரை நோக்கி, 'இராவணன் உடன் பிறந்த தம்பியாகிய என் உறுதிமொழிகளை ஏற்றுக் கொள்ளாமல் என்னை வெறுத்துத் துரத்திவிட்டான்; இனி யான் செய்யத் தக்கது யாது? சொல்லுங்கள்' என்று வினவ, அமைச்சர்கள், 'தரும மூர்த்தியாகிய இராமனை அடைக்கலம் அடைவதே தக்கது' என்கின்றனர். வீடணனும் அதுவல்லது நல்லது இல்லை என்று அவர் கருத்தைப் பாராட்டுகின்றான். இப்போது இரவுக் காலமாக இருத்தலால் நாம் அவர்பால் போதல் பொருந்தாது என்று அங்குள்ள இருண்ட சோலை ஒன்றில் இறங்கி மறைந்து தங்குகின்றனர். இரவு கழிகின்றது; பொழுது புலர்கின்றது. பாடி வீட்டிலிருந்து இராமன் வெளிப்போந்து கடலை எவ்வாறு கடப்பது என்ற எண்ணத்துடன் கடற்கரையில் உலாவுகின்றான். அக்கடற்கரைக் காட்சிகள் சீதையின்

பிரிவை நினைவுறுத்தி இராமன் உள்ளத்தைக் கலங்கச் செய்கின்றன. அந்நிலைமையில் அனுமன் முதலிய அறிஞர்கள் சென்று இராமனைத் தேற்ற ஒருவாறு தேறிப் பாடி வீட்டை அடைந்து துணைவரோடு தங்கியிருக்கின்றான்.

அப்போது, வீடணன் தன் துணைவருடன் எழுந்து வானர சேனையின் முனையில் வஞ்சனையில்லா நெஞ்சத்தனாய் நுழைகின்றான். அவ்வரக்கர் உருவங்களைக் கண்டவுடன் வானரர், இராவணனே துணைவருடன் தம்மைக் கொல்ல வந்ததாக எண்ணி அவர்களைக் கொல்ல வேண்டும் என ஆரவாரிக்கின்றனர். அந்த ஆரவாரத்தைக் கேட்ட அனுமான், மயிந்தன் துவிந்தன் என்ற இருவரை அனுப்பிச் செய்தியறிந்து வருமாறு செய்கின்றான். அவ்விருவரும் வீடணனை அணுகி 'யார்' என வினவ, அனலன் என்னும் அமைச்சன் வீடணனைக் காட்டி 'இவன் இராவணன் தம்பியாகிய வீடணன். தன் அண்ணனுக்குச் சீதையை விடுமாறு அறிவுரை கூறி வற்புறுத்தவும் அவன் ஏற்றுக் கொள்ளாமல் சினந்து அச்சுறுத்தி விலக்கினமையால் இராமனை அடைக்கலம் அடைந்து உய்ய வந்துளான்' என விளக்கிக் கூறுகின்றான். அதைக் கேட்ட மயிந்தன் அச்செய்தியை இராமனிடம் சென்று அறிவிக்கின்றான். இராமன் அவனைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்குமாறு அருகில் உள்ள சுக்கிரீவன் அனுமன் முதலியோரை உசாவுகின்றான். சுக்கிரீவன், வீடணனை ஏற்றுக் கொண்டால் ஏதம் விளையும் என்று கூறுகின்றான் சாம்பவன். நீலன் முதலியோரும் சுக்கிரீவன் கருத்தையே தழுவிக் கூறுகின்றனர். அனுமன் மட்டும் வீடணனை ஏற்றுக்கொள்வதே நல்லது என்பதைத் தக்க காரணம் காட்டி நிறுவுகின்றான். அதைக் கேட்ட இராமன் அனுமன் கூறியதே சிறந்தது எனப் பாராட்டுகின்றான். தன் கருத்தும் கடமையும் அன்னதே என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரித்துக் கூறி விளக்கிவிட்டுச் சுக்கிரீவனை நோக்கி, 'நீயே சென்று வீடணனை என்பால் கொணர்க' என்று ஏவுகின்றான். சுக்கிரீவனும் இராமன் தெளிவித்த நெறியே சிறப்புடைத்து என ஏற்றுக் கொண்டு வீடணனிடம் சென்று அவனைத் தழுவிக் கொண்டு 'இராமன் உனக்கு அடைக்கலம் அருளினான்; விரைந்து வருக' என்கின்றான். வீடணன் அளவிலா மகிழ்ச்சி கொண்டு சுக்கிரீவனோடு சென்று சிரமேற் குவித்த கரத்தனாய் - கல்லையும் உருக்கும் கனிந்த நோக்கத்தனாய் வந்து இராமன் திருவடிகளில் வீழ்கின்றான்.

மண்ணில் மார்பு பொருந்த வீழ்ந்து வணங்கிய வீடணனை இராமன் அருளொடு நோக்கி இருக்கையில் இருக்குமாறு பணிக்கின்றான். அவ்வாறே இருந்த வீடணனை இராமன் மகிழ்ச்சி மிக்க அருட்பார்வையால் மீண்டும் பார்த்து 'இந்த உலகமும் என்

பெயரும் நிற்கும் வரையில் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்' என்று கூறுகின்ருன். அச்சொல்லைக் கேட்டு உலகில் உள்ள சராசரங்கள் எல்லாம் வாழ்ந்தோம்! வாழ்ந்தோம்! என ஆரவாரிக்கின்றன. இலக்குவனை விளித்து 'நம்மையடைந்த நற்றுணைவனுகிய வீடணனுக்கு மகுடம் சூட்டுக' என இராமன் பணிக்கின்ருன். உடனே வீடணன் எழுந்து, 'என்றும் அழியாத இலங்கைச் செல்வத்தை எனக்கு அளிப்பதாயின், கள்ளனுகிய இராவணன் பின் பிறந்த தொடர்பு ஒழியும்படி பரதனுக்குக் கவித்த மகுடத்தை எனக்கும் கவிக்க வேண்டும்' என வேண்டுகின்ருன். அவன் அன்பின் பெருக்கை யுணர்ந்த இராமன் அவனைத் தம்பியாக ஏற்றுக் கொள்கின்ருன். வீடணன் மகிழ்ந்து "என்னைத் தம்பியாக ஏற்றுக் கொண்டமையால் நினக்கு அடிமைத் தொழில் செய்வதில் சிறப்புரிமை பெற்று விட்டேன்' என்று கூறிக்கொண்டே இராமனுடைய திருவடி நிலைகளைத் தானே உரிமையுடன் எடுத்துத் தலைமேல் சூட்டிக் கொள்கின்ருன். சூட்டிக் கொண்டவனை நோக்கி யாவரும் மகிழ்கின்றனர். வானவர் மலர்மாரி சொரிகின்றனர். இலங்கை வேந்தனுய் மகுடம் சூட்டிக்கொண்ட வீடணனைப் பாடி வீடாகிய நகரை வலம் வருமாறு செய்க என இலக்குவனையும் சுக்கிரீவனையும் இராமன் ஏவுகின்ருன். அவ்வாறே சந்தன மரத்தாற் செய்த விமானத்தில் ஏற்றி வானரத் தலைவர் தாங்க 'இந்திரற்கும் அரிய இலங்கையின் அரசச் செல்வத்தை இவ்வீடணன் இப்போது பெற்றுக் கொண்டான்' என்பதைப் பலரும் கேட்குமாறு கூறிப் பாராட்டிக் கொண்டு பாடிவீட்டை வலம் செய்விக்கின்ருர்கள். வேள்விகளானும் தவத்தானும் ஞானத்தானும் பெறவியலாத பேற்றை வீடணன் எளிதாகப் பெற்றுவிட்டான் என்று பெரியோர்கள் எல்லாம் வியந்து பாராட்டுகின்றனர்.

கம்பர், வான்மீகத்தோடு வேறுபடும் இடங்கள்

இராவணனுல் துறக்கப்பட்ட வீடணன் கடலின் வடகரையில் வானரப் படை தங்கியிருந்த இடத்திற்கு நேரே விண்ணில் நின்றதாகவும், அதைக் கண்ட சுக்கிரீவன் அனுமன் முதலியவர்கட்குக் காட்டி, இவர்கள் நம்மைக் கொல்லவே வந்துள்ளனர் என்று கூற, வானர வீரர்கள் ஆச்சா மரங்களையும் மலைகளையும் எடுத்துக்கொண்டு அவ்வரக்கரைக் கொல்ல முனைந்ததாகவும், அப்பொழுது வீடணன் தன் வரலாறு கூறி இராமனை அடைக்கலம் அடைய வந்திருப்பதைத் தெரிவித்ததாகவும், அச்செய்தியைச் சுக்கிரீவன் இராமனிடம் தெரிவித்து, இராவணன் தம்பியாகிய இவ்வீடணனை ஏற்றுக்கொள்ளுதல் ஏலாது எனத் தெரிவித்ததாகவும் வான்மீகம் கூறுகின்றது.

வீடணன் தன் துணைவருடன் தரையில் இறங்கி இரவு தங்கி யிருந்து பொழுது புலர்ந்தவுடன் வானரப் படைக்குள் நுழைய முயன்றபோது, வானர வீரர்கள் அவ்வரக்கர்களைக் கொல்ல வேண்டும் என ஆரவாரஞ் செய்ய அவ்வாரவாரத்தைக்கேட்ட அனுமன் அதற்குக் காரணம் அறிந்துவர வானர வீரர் இருவரை அனுப்ப அவ்விருவரும் சென்று அரக்கர்களை 'யார்' என வினவ, வீடணன் துணைவனான அனலன் என்பவன் முன்வந்து வீடணன் இராமனை அடைக்கலம் அடைய வந்திருக்கும் செய்தியைக் கூறு கின்றான். அது கேட்ட மயிந்தன் இராமனை அடைந்து தான் கண்ட தையும் கேட்டதையும் கூறுகின்றான். இராமன் அந்நிகழ்ச்சியை யறிந்து தன்னைச் சார்ந்துள்ள சுக்கிரீவன் முதலியோரின் கருத்தை வினவுகின்றான்' எனக் கம்பர் கூறுகின்றார்.

இராமனைச் சரணடைய வருகின்ற வீடணன் விண்ணில் நின்று அடைக்கலம் என்று கூறுதல் தகுதியன்று என்று கருதியே கம்பர் அவன் தரையிடை யிழிந்து நடந்து வந்ததாக மாற்றினார் போலும். இலங்கை வேந்தன் ஆகப் போகும் வீடணனே தன் வரலாற்றை வானரர்க்கும் கூறினான் என்பது அவன் பெருமைக்கு ஏலாது என்று கருதி, அவன் துணைவன் அனலன் கூறியதாகக் கம்பர் மாற்றினா ராதல் வேண்டும்.

வானர வேந்தனாகிய சுக்கிரீவன் இராமனை விட்டு விலகிச் சேனை யில் வேறிடத்தில் இருந்து வீடணன் சொல்லைக் கேட்டுப் பின் இராமனை அடைந்து, அவ்வீடணன் அடைக்கலம் அடைந்ததைக் கூறினான் என்பதினும் சுக்கிரீவன் இராமனை அகலாது இருந்த தாகவும் மயிந்தன் என்ற வானர வீரன் ஒருவன் வீடணன் அடைக் கலம் புகவந்த நிகழ்ச்சியைக் கூறியதாகவும் அமைத்தல் அரசியல் அமைப்பிற்குச் சிறப்புத்தரும் எனக் கம்பர் மாற்றியுள்ளார் எனலாம். வீடணன் அடைக்கலம் புகவந்த செய்தியைக் கூறவந்த சுக்கிரீவன் இராமனது மனநிலையை அறியு முன்னே அவ்வீடணனை ஏற்றுக் கொள்ளுதல் கூடாது எனக் கூறியதாக அமைத்தல் சுக்கிரீவன் பணிவுடைமைக்கு ஏலாது என்ற கருத்தால் கம்பர் அதை மாற்றி, இராமன் கருத்துக் கூறுமாறு கேட்ட பின்னர் சுக்கிரீவன் தன் கருத் தைக் கூறியதாக அமைத்துள்ளார்.

அனுமன் கருத்தைக் கூறிய பின்னும் சுக்கிரீவன் வீடணனைச் சேர்த்தல் கூடாது என்று கூறியதாக வான்மீகம் கூறவும் கம்பர் அதை மாற்றி அனுமன் கூறுவதற்கு முன் ஒரேமுறை சுக்கிரீவன் தன் கருத்தைத் தெரிவித்ததாக அமைத்துள்ளார். அறிவினாற் பெரியனாகிய அனுமன் தன் கருத்தைக் கூறியபின் வேறெவரும் ஆலோசனை கூறவில்லை என்பதே பொருத்தமாகவுள்ளது.

வீடணனை ஏற்றுக் கொள்வது பற்றிக் கருத்துத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டவர்களில் அங்கதனையும் சரபனையும் வான்மீகி சேர்த்துக் கூறியுள்ளார். கம்பர் அவ்விருவரையும் சொல்லவில்லை. அங்கதன் இளையன் ஆகலின் இராமனுக்கு ஆலோசனை சொல்பவனாக அவனை அமைத்தல் பொருந்துவதாக இல்லை என இவ்வாறு மாற்றினராதல் வேண்டும். சரபனை நீக்கியதற்கும் இது போன்ற காரணம் இருத்தல் கூடும்.

வீடணனுக்கு அடைக்கலம் கொடுத்தல் தகும் என அனுமன் கூறும்போது இலங்கையில் தான் கண்ட வீடணன் வீட்டின் இயல்பு பற்றியோ, இராவணன் தன்னைக் கொல்லச் சொல்லியபோது வீடணன் தடுத்துத் 'தூதரைக் கோறல் தூய்தன்று' எனக் கூறிய தாகவோ வான்மீகி கூறவில்லை. அச்செய்திகளைக் கம்பர் தாமே படைத்துக் கூறியுள்ளார். அவர் படைத்துக் கூறிய செய்திகள் பொருத்தமாகவே அமைந்து அழகு செய்கின்றன.

தன்னைச் சரணடைந்த வீடணனை நோக்கி இராமன், இராவணனுடைய வலிமையைப் பற்றிக் கூறுமாறு வேண்டியதாகவும் அவ்வாறே வீடணன் விரித்துக் கூறியதாகவும் அங்ஙனம் கூறிய பின்னரே 'இலங்கை வேந்தனாக உன்னை இன்றே ஆக்குகின்றேன்' என இராமன் கூறியதாகவும் இலக்குவனைக் கொண்டு முடிசூட்டிய தாகவும் வான்மீகம் கூறுகின்றது.

வீடணன் தன்னைச் சரணடைந்தவுடனே இராமன், "தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்" என்று கூறி இலக்குவனை வீடணனுக்கு முடி சூட்டுமாறு ஏவியபோது வீடணன், 'இளையவற் கவித்த மோலி என்னையுங் கவித்தி' என்று கூற, இராமன் மகிழ்ந்து அவ்வீடணனைத் தம்பி முறையினனாகக் கொண்டானாக, வீடணன் தானே இராமன் பாதுகைகளை யெடுத்துத் தலையில் சூட்டிக் கொண்டான் எனக் கம்பர் கூறுகின்றார்.

இராமன் வீடணனைத் தம்பியாக ஏற்றுக் கொண்டதாகவோ, இராமன் பாதுகைகளை வீடணன் முடியாகச் சூடிக்கொண்டதாகவோ வான்மீகத்தில் கூறப்படவில்லை. கம்பரின் இப்புதிய படைப்பு வீடணனின் பணிவுடைமையையும் அன்புடைமையையும் புலப்படுத்திக் கதைப் போக்கினைச் சுவைமிக்கதாக்கி விட்டது என்பது உண்மை. இராவணன் வலிமையைப் பற்றி வீடணன்பால் இராமன் கேட்டுணர்ந்த நிகழ்ச்சியைக் கம்பர் வீடணன் அடைக்கலப் படலத்துக் கூறாமல் 'இலங்கை கேள்விப் படலம்' எனத் தனிப் படலமாகப் பின்பு கூறியுள்ளார்.

இராவணனை விடுத்த அன்றே வீடணன் இராமனைச் சரணடைந்தான் என வான்மீகம் கூறவும் அதனைக் கம்பர் மாற்றி மறுநாள் காலையில் சரணடைந்ததாகக் கூறியுள்ளார். இராவணனை விட்டு வந்த அன்று இரவு ஒரு சோலையில் தங்கியிருந்ததாகக் கம்பர் அமைத்தது பொருத்தமுடையதாகும். வஞ்சனை நெஞ்சமுடைய அரக்கர் சூழலில் தங்கியிருந்த வீடணன், இலங்கை நினைவும் இராவணன் நினைவும் மாருத மனநிலையில் இராமனைக் கண்டான்' என்பதைக் காட்டிலும் உற்றுரை மறந்து ஊரை மறந்து சரணுகக்கூடிய இராமனையே இரவெல்லாம் நினைந்தமையால் மனந் தூய்மை பெற்ற பின் இராமனைக் கண்டான் என்பது சிறப்புடையதாதலைக் காணலாம்.

படலப் பொருட் சிறப்பு

இராவணனை விடுத்து வந்த வீடணனை இரவெல்லாம் கடலின் வட கரையிலுள்ள சோலையில் தங்கச் செய்த கம்பர், அவ்வீடணன் இராமனைக் காண்பதற்கு முன்னர் ஓரரிய காட்சியை இடையில் நுழைத்துக் காட்டுகின்றுர். பொழுது புலர்கின்றது; இராமன் கடலைக் கடப்பது எப்படி? என்ற எண்ணத்துடன் எழுந்து புறம் போந்து கடற்கரையில் உலாவுகின்றுன். அக்கடற்கரையில் காணப் படும் காட்சிகள் சீதையைப் பிரிந்துள்ள இராமன் துயரை மிகுதிப் படுத்துகின்றன. பாலைத்திணையின் உரிப்பொருளாகிய பிரிவுத் துயரால் வருந்துகின்ற இராமனை அக்கடற்கரையிலேயே ஏனைத் திணைக்குரிய உரிப்பொருள்களையெல்லாம் காணச் செய்யும் கம்பர் திறம் கவின்மிக்கதாக உள்ளது.

கடற்கரையில் காணப்படும் முத்துக்கள் சீதையின் பற்களை நினைப்பிக்கின்றன. அங்குள்ள பவழம் அவள் செவ் வாயிதழையும் மணிக் குவியல்கள் அவள் அணிந்திருந்த அணித்திரளையும் கனக தீரங்கள் அவள் பொன்ஞர் மேனியையும் நினைப்பிக்கின்றன. அங்குள்ள இருண்ட சோலைகள் அச் சீதையின் கரிய கூந்தலையும் மணற் குவியல்கள் அவள் நகிலையும் நினைப்பிக்கின்றன. எனவே அவற்றையெல்லாம் இராமன் மிக விரும்பி நோக்குகின்றுன். சீதையின் நினைவு மேலோங்குகின்றது.

கடற்கரையாகிய நெய்தல் நிலத்திற்கு உரிப்பொருள் இரங்கல் ஆதலின் அதனையே முதற்கண் இராமன் காண்பதாகக் கம்பர் அமைத்துள்ளார். நெய்தல் நிலத்தில் வாழும் வலைஞர்கள் தம் மனைவியரைப் பிரிந்து கடல் வழியே நெடுந் தொலைவு சென்று விட்டார்கள். அவர்கள் சொல்லிய பருவத்தில் வரவில்லை. கணவரோடு இருந்தபோது இனிய நகைமுகத்தினரா யிருந்த வலைஞர் மகளிர் அவர்களைப் பிரிந்து இருந்து அவர் குறித்த காலத்தில்

வாராமை நினைந்து சோர்ந்த முகத்தினராய் அக்கணவர் வருகையை யறிவதற்காகப் புன்னைப் பொதும்பரில் அமர்ந்து மணலில் கூடற்சுழி இழைக்கின்றார்கள். ஒளி மிக்க மணிகள் பதித்த மோதிரம் அணிந்த தம் விரல் தேயுமாறு பெரிய சுழியை இழைத்து முடிப்பதற்கு முன்னரே அவர் பிரிவாற்றாது விடுகின்ற கண்ணீர் அச்சுழியை அழித்து விடுகின்றது. மீண்டும் சுழிக்கின்றார்கள்; அப்பொழுதும் அதே நிலைதான் நிகழ்கின்றது. இவ்வாறு அவர்கள் கைவிரல் சுழிக்கக் கண்ணீர் அழித்துக்கொண்டே இருக்கின்றது. எனவே கூடற்சுழி கூடாது குறையாகவே யுள்ளது. அக் குறை தீரக் கூடும்படி வலைஞர் மகளிர் கூடற்சுழியை இழைத்துக்கொண்டே இருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் இராமன் புன்னையம் பொதும்பரில் புகுந்து காண்கின்றான்.

மின்னகு மணிவிரல் தேய வீழ்கணீர்
துன்னரும் பெருஞ்சுழி அழிப்பச் சோர்வினோடு
இன்னகை நுளைச்சியர் இழைக்கும் ஆழிசால்
புன்னையம் பொதும்பரும் புக்கு நோக்கினான்.

எனக் கம்பர் இராமன் நிலையைப் புலப்படுத்துகின்றார். கணவரைப் பிரிந்து வருந்தும் மகளிர் அக்கணவர் குறித்த காலத்தில் கூடாமையால் கூடற்சுழி கூடுதல்கொண்டு அவர் வரவை யறிய விரும்பி, அக் கூடற்சுழியை மணலில் இழைத்து இழைத்து இளைக்கின்ற நிலையை நோக்கும் இராமன், 'என்னைப் பிரிந்த சீதையும் இவர்களைப் போலவே என் வருகையை நோக்கிக் கூடற்சுழி இழைத்துக் கொண்டு கண்ணீர் விடுவாள் அன்றோ?' என நினைந்து ஏங்காமல் இருக்க இயலுமோ?

அடுத்து வேறொரு காட்சியைக் காண்கின்றான். கடலை அடுத்து ஒரு முடத்தாழை தோன்றுகின்றது. அத்தாழையின் மேற்பகுதியிலுள்ள மடலில் கோவையாகப் பனித் திவலைகள் காணப்படுகின்றன. அத் திவலைகள் கொட்டிக்கொண்டே இருக்கின்றன. அத்தாழையின் அடிப் பகுதியைக் கடலின் வெள்ளிய அலைகள் மோதித் தாக்குகின்றன. இவ்வாறு மேலும் கீழும் நீர்த் திவலைகளால் நனைகின்ற அம் முடத்தாழையின் மேல் ஓர் அன்னச் சேவல் தன் பேடையைத் தன் சிறகுகளால் பக்கத்தில் அணைத்துக்கொண்டு கவலையின்றித் துயில்கின்றது. மேலே கொட்டும் பனித் திவலைகளையும் கீழே அலைகள் வீசும் நீர்த் திவலைகளையும் பொருட்படுத்தாமல் தூங்குகின்ற அவ்வன்னப் பறவைகளின் இன்ப நிலையை—குறிஞ்சித் திணையின் உரிப்பொருளாகிய புணர் நிலையை—இராமன் காண்கின்றான். இப்பறவைகட்கு வாய்த்த வாழ்வு தானும் ஆறறிவு நிறைந்த

அரசகுமாரனுகிய தனக்கு வாய்த்திலதே எனப் பெருமூச்சு விடுகின்ருன்.

மேலும் உலாவுகின்ருன். ஒரு கொக்கின் பேடை ஒருபெரிய மரக்கிளேயில் வாடிய முகத்துடன் வழிநோக்கி யிருப்பதைக் காண்கின்ருன். தன் அன்புறு பேடை அருந்துதற்கு இனிதாகிய மீனேத் தேடிக் கொணர்தற்காகவே அன்புடன் பிரிந்தது ஆண் கொக்கு. அது வரும் வழிமேல் வைத்த விழியுடன் அந்த இளமையுடைய பெண் கொக்கு வாடியிருக்கின்றது. அது விட்டுச்சென்ற பெரிய மரக்கிளேயில் இருந்துகொண்டு கணவன் வரவை எதிர்நோக்கியுள்ள இப் பெண் கொக்கு முல்லேயின் உரிப்பொருளாகிய இல்லிருத்தல் என்ற ஒழுக்கத்தை மேற்கொண்டுள்ளதை இராமன் உணர்கின்ருன். அதன் தனி நிலேக்காக இரங்குகின்ருன். கணவன் வரும் வழிநோக்கி வாடியிருக்கும் கொக்கின் பேடையைக் கண்டவுடன் சீதையும் இவ்வாறு தானே என் வரவை எதிர்நோக்கி யிருப்பாள்? என்ற எண்ணம் இராமனுக்கு உண்டாதல் இயல்புதானே? அவ் எண்ணமே இராமன் இரக்கவுணர்ச்சிக்குச் சிறந்த காரணமாகும்.

இவ்வாறு இரங்கலும், புணர்வும், இருத்தலும் ஆகிய ஒழுக்கங் களேக் கண்டு செல்லும் இராமன், பொருந்தாக் காமமாகிய பெருந்திணே நிகழ்ச்சியையும் கண்டதாகக் கம்பர் அமைத்துள்ளார். இது கதைப் போக்கிற்கு முன்ளுேடியாய் அமைந்து சுவையூட்டுகின்றது. ஒரு பெண் நாரைமேல் இரண்டு பெரிய வலிய நாரைகள் காதல் கொள்கின்றன. ஒன்றை ஒன்று காதலிப்பதே இயல்பு. ஒன்றை இரண்டு நாரைகள் காதலித்ததால் அவ்விரண்டு நாரைகளுக்கும் சினமூள்கின்றது. மாறுபட்ட கொடிய கோபத்தையுடையவாய்க் கண்களில் தீப்பொறி பறக்கப் போர் செய்கின்றன. இந்த அடாத காட்சியை இராமன் கண்டவுடன் அவன் நேர்மையான உள்ளத்தில் சினம் பொங்குகின்றது; புருவங்களே வளேத்துக்கொண்டு கோபத்துடன் அவற்றைப் பார்க்கின்ருன். அவற்றின் பொருந்தாக் காதலேக் கண்ட இராமனுக்குத் தான் காதலித்து மணந்த சீதையின் மேல் பொருந்தாக் காமங்கொண்ட இராவணன் நினேவு வாராமல் இருக்க இயலுமா? அந்நினேவே அவன் புருவங் கோட்டற்குக் காரணமாயது என்னலாம். பின் இலங்கை புகுந்து வில்லினே வளேத்து எய்யும் அம்பிஞல் இராவணன் உயிரை வாங்க இருக்கின்ற இராமன் இப்பொழுது அவ்விராவணன் போன்ற கொடுமையுள்ள நாரையைக் கண்டு புருவம் மட்டும் கோட்டுவாஞனுன் என்க. இதஞல் இராமனுக்கு வெகுளியாகிய மெய்ப்பாடு தோன்றிற்று.

அதன் பின் மருதத் திணேக்குரிய ஊடலாகிய உரிப்பொருளேயும் அக்கடற்கரையில் இராமன் காண்கின்ருன். ஊடல் கொண்ட தன்

அன்னப் பேட்டிற்குத் தோற்றுத் தன் பணிவைப் புலப்படுத்திய ஓரன்னச் சேவல், பின்னர் நிகழ்ந்த கூடலில் வெற்றி கொண்ட நிலையை இராமன் கண்டு சீதையோடு தான் அனுபவித்த இன்ப நிலையை நினைவுகூர்ந்து வாயிதழைப் பல்லினால் அதுக்குகின்றான். இதனால் இராமனுக்கு உவகைச் சுவை தோன்றியது. உடனே அச் சுவை நீடிக்காது மறைய அவலச்சுவை தோன்றுகின்றது; சீதையை நினைந்து விம்முகின்றான். பாலைத் திணையின் உரிப் பொருளுக்குரிய னாகிய இராமன், நெய்தல் நிலத்தில் உலாவிக்கொண்டு, நெய்தலின் உரிப்பொருளாகிய இரங்கலையும் குறிஞ்சியின் உரிப்பொருளாகிய புணர்ச்சியையும், முல்லையின் உரிப்பொருளாகிய இல்லிருத்தலையும் பெருந்திணைக்குரிய பொருந்தாக் காமத்தையும், மருதத் திணைக்குரிய ஊடலையும் கண்டதாக அமைத்தது, கம்பரின் அகப்பொருட் புலமையை நன்கு புலப்படுத்துகின்றது. நெய்தல் திணையின் உரிப் பொருளாகிய இரங்கலை அந்நிலத்து வாழும் நுளைச்சியராகிய மக்க ளிடத்து அமைத்துக் காட்டிய கம்பர் ஏனைத் திணைக்குரிய ஒழுக்கங் களை அந் நிலத்து மக்கள்பால் நிகழ்ந்ததாகக் கூறாமல் "எந்நில மருங்கிற் பூவும் புள்ளும் அந்நிலம் பொழுதொடு வாராவாயினும், வந்த நிலத்தின் பயத்தவாகும்" (தொல். பொருள் - 19) என்று கூறிய விதிப்படி வந்த நிலத்தின் பயத்தவாய் மாறுதற்குரிய புட்க ளிடத்தே நிகழ்ந்ததாகக் காட்டிய கம்பரின் பொருளிலக்கண மரபு காக்கும் புலமைத்திறனை நோக்கின் வியப்பு விஞ்சுகின்றது.

அவ்வாறு புட்களிடத்து உரிப்பொருள் நிகழ்ச்சியைக் கூறும் வழியும் காதல் உணர்ச்சியில் சிறந்ததாகிய அன்னப் பறவைகள்பால் குறிஞ்சியுரிப்பொருளாகிய புணர்ச்சியையும் மருதத்தின் உரிப்பொரு ளாகிய ஊடலையும் அமைத்துக் காட்டியது மிக்க பொருத்தமுடைய தாகும். ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கி னிடத்துக் கணவன் வரவை எதிர்நோக்கி வாடியிருக்கும் இல்லிருத்த லாகிய முல்லை யுரிப்பொருளை அமைத்துள்ள சிறப்பு நினைத்து நினைத்து இன்புறத்தகுவதாகும். பொருந்தாக் காமமாகிய பெருந் திணை நிகழ்ச்சிக்குப் பொருத்தமாக பெருநாரையைக் காட்டியிருத் தலும் சிறப்புடையதே ஆகும். அன்னப் பறவை போல் சிறப்பாக மதிக்கத்தகாத நாரையிடத்தே பொருந்தாக் காமம் இருப்பது இயல்பு தானே! அகத்திணை ஏழனுள் கைக்கிளைக் காட்சியைக் காட்டாமல் விடுத்தது இயைபின்மையால் போலும்.

நுளைச்சியர் கூடற்சுழி இழைத்துக்கொண்டு இரங்கும் நிலையை முதற்கண் கண்ட இராமன், இறுதியில் ஊடலும் பின் கூடலும் ஆகிய அன்னங்களின் விளையாட்டுகளைக் கண்டதாக அமைத்தது நோக்கியுணரும் நுட்பமுடையதாகும். இராமன் கண்ட இறுதிக்

காட்சி கூடலாகிய இன்பத்தில் முடிகின்றது. தோற்ற அன்னம் வெல்கின்றது. இதனால் இராமனும் இராவணனை வென்று சீதையைக் கூடுதல் உறுதி என்பதைக் குறிப்பால் உணரவைத்துள்ளமை நோக்கி இன்புறத்தகுவதாகும்.

இனித் தன்பால் அடைக்கலம் அடையும் வீடணனை இராமன் தானே தன்னிச்சைப்படி சேர்த்துக்கொள்ளும் தலைமை யுடையனாயிருந்தும் தன் துணைவர்களாகிய சுக்கிரீவன் முதலியோரை இராமன் கேட்டு அவர் கருத்தறிவது அவனுடைய அரசியல் அறிவைப் புலப்படுத்துகின்றது. தன் கருத்திற்கு வேறுபட்ட சுக்கிரீவன் முதலியோரையும் உடன்படுமாறு சொல்லிய இராமன் சொல்லாற்றலும் தன்னடைந்தோரைக் காக்கும் அருட்குணமும் இப்படலத்தில் சிறப்பாகக் கருதத்தக்கனவாகும்.

4. வீடணன் அடைக்கலப் படலம்

இராவணன் வீடணன் சொல்லைக் கேட்டுச் சினந்து கூறுதல்

6492. கேட்டன னிருந்துமக் கேள்வி தேவியிற்
கோட்டிய சிந்தையா னுறுதி கொண்டிலன்
மூட்டிய தீயென முடுகிப் பொங்கினன்
ஊட்டரக் கூட்டிய வனைய வொண்கணான்.

கேட்டனன் இருந்தும், அக் கேள்வி, தேவியின்
கோட்டிய சிந்தையான், உறுதி கொண்டிலன்,—
மூட்டிய தீ என முடுகிப் பொங்கினன்—
ஊட்டு அரக்கு ஊட்டிய அனைய ஒண்கணான்.

பொ :—(வீடணன் கூறியதைக்) கேட்டுக் கொண்டு (பக்கத்தில்) இருந்தானாயினும் இராவணன் சீதையின்கண் நேர்மையின்றிச் செலுத்திய சிந்தையுடையனாதலின் அக்கேள்வி தனக்கு உறுதி அளிக்கும் எனக் கொள்ளாதவனாய் ஊட்டுதற்குரிய செவ்வரக்கை ஊட்டினாற் போன்று சிவந்த ஒளிவீசும் கண்ணையுடையவனாய் மூட்டிய நெருப்புப்போல விரைந்து வெகுண்டான்.

கு :—இராவணன் உடம்பு வீடணன் அருகில் இருந்ததேயன்றி அவன் மனம் சீதைபாற் சென்றிருந்தது என்பார், 'கேட்டன னிருந்தும் தேவியிற் கோட்டிய சிந்தையான்' என்றார். அக்கேள்வியை உறுதியாகக் கொள்ளாமைக்குக் காரணம் தேவியிற் கோட்டிய சிந்தையே என்றவாறு. கோட்டிய சிந்தை என்றது, நடுநிலை இன்றிப் பிறன்மனைமேல் சென்ற சிந்தை என்றவாறு. அக் கேள்வி உறுதி அளிக்கும் எனக் கொண்டிலனாய் என ஒரு சொல் வருவித்து முற்றெச்சமாக்கி முடிக்க. மூட்டிய தீ என்றது, எண்ணெயும் விறகுங் கொண்டு மூளச் செய்த தீ என்றவாறு. வீடணன் சொல்லால் பொங்கும் சினத்திற்குப் பொருந்திய உவமை கூறியவாறு. வீடணன் சொற்கள், இராவணன் தீயொழுக்கத்தைக் கடிந்து உறுதி அளிக்கும் தன்மையனவாதலின் அவ்விராவணனுக்கு இசையாத சொற்களாய்ச் சினத்தை மூட்டின என்க. ஒண்கணனாய்ப் பொங்கினான் என்க. வீடணன் சொல்லை உறுதி அளிக்கும் சொல்லாகக் கொள்ளாமையாகிய குற்றத்தோடு அவன்மேல் வெகுளுதலாகிய குற்றத்தையும் செய்தான் இராவணன் என்க. (1)

52 என்ற எண்ணுள்ள அச்சுப் புத்தகத்தில் 1-1 ஆகக் கீழ்வரும் பாடல் மிகைப்பாடலாகக் காட்டப்பட்டுளது.

6492 (a) சிரத்தொகை யனைத்தையும் துளக்கித் தீயெழக்
கரத்தொடு கரம்பல புடைத்துக் காளைநீ
உரைத்திடு முறுதிகள் நன்று நன்றெனுச்
சிரித்தனன் கதமெழுந் தினைய செப்புவான்.

6493. இரணிய னென்பவ
னெம்ம னோரினும்
முரணிய னவன்றனை
முருக்கி முற்றினு
னரணிய னென்றவற்
கன்பு பூண்டனை
மரணமென் றொருபொருள்
மாற்றும் வன்மையோய்.

' " இரணியன் என்பவன் எம்ம னோரினும்
முரணியன்; அவன்தனை முருக்கி முற்றினுன்,
அரணியன் " என்று, அவற்கு அன்பு பூண்டனை
மரணம் என்று ஒரு பொருள் மாற்றும் வன்மையோய் '

பொ :—எவராலும் மாற்ற முடியாத மரணம் என்கின்ற ஒரு பொருளை மாற்றிச் சிரஞ்சீவியாய் வாழும் வலிமையுடையோனே! இரணியன் என்பவன் எம்மைக் காட்டிலும் வலிமையுடையவன்; அத்தகு பெருவலி படைத்தோனையும் கொன்று முடித்த திருமால் உனக்குப் பாதுகாப்பாவான் என்று அத்திருமாலின் அமிசமான இராமனிடம் அன்பு பூண்டாய் போலும்!

கு :—எம்மனோரினும் என்புழி அனோர் ஒப்பில் போலியாய் வந்தது; எம்மினும் என்பதே பொருள். இராவணன் செருக்குத் தோன்றத் தன்னையே பன்மையாகக் கூறிக் கொண்டான்; தனித் தன்மைப் பன்மை. முரண்-வலிமை; அதனடியாக முரணியன் என்ற பண்புப் பெயர் தோன்றியது. முருக்கி முற்றுதல் - கொன்று முடித்தல். நரசிங்கமாக வந்தவனும் இராமனுக வந்துள்ளவனும் திருமாலே ஆதலின், 'முற்றினுன் அரணியன் என்றவற்கு அன்பு பூண்டனை' என நரசிங்க அவதாரத்தையும் இராமாவதாரத்தையும் ஒன்ருக்கிக் கூறியவாறு. அரண் - பாதுகாப்பு; அரணியன் என்பது அரண் அடியாகத் தோன்றிய பெயர். இராவணனைக் காட்டிலும்

வலியனான இரணியனையே கொன்றவன் ஆதலின் உனக்கு அரண மாவான் என்ற கருத்தால் அவன்பால் அன்பு பூண்டனை போலும் என்றவாறு. எத்தகைய பகைவனுக்கும் அஞ்சவேண்டாது சிரஞ் சீவியாக இருக்கும் தவ வலிமை பெற்ற நீ இராமனுக்கு அஞ்சி இவ் வாறு பேசத் தக்கவனல்லை என்பது தோன்ற 'மரணமென் றொரு பொருள் மாற்றும் வன்மையோய்' என வீடணனை விளித்தான். "வேதியர் தேவன் சொல்லால் விளிவிலா ஆயுப் பெற்றாய்" (கும்ப கருண-135) என்றதால் வீடணன் பிரமனால் சாகாவரம் பெற்றவன் என்பது புலனாம். (2)

6494. ஆயவன் வளர்த்ததன் தாதை யாகத்தை
மாயவன் பிளந்திட மகிழ்ந்த மைந்தனு
மேயுநம் பகைவனுக் கினிய நண்புசெய்
நீயுமே நிகர்பிறர் நிகர்க்க நேர்வரோ,

'ஆயவன் வளர்த்த தன் தாதை ஆகத்தை
மாயவன் பிளந்திட மகிழ்ந்த மைந்தனும்,
ஏயும் நம் பகைவனுக்கு இனிய நண்பு செய்
நீயுமே நிகர்; பிறர் நிகர்க்க நேர்வரோ.

பொ :—தன்னைப் பெற்று வளர்த்த தந்தை ஆய இரணியன் மார்பகத்தை மாயை வல்லவனாகிய திருமால் (நரசிங்கமாய் வந்து) பிளக்க(க் கண்டு) மகிழ்ந்த மைந்தனாகிய பிரகலாதனும், இங்கு வந்து சேர்ந்துள்ள நம் பகைவனாகிய இராமனுக்கு இனிய நண்பு செய் கின்ற நீயுமே ஒருவர்க்கொருவர் ஒத்தவராவீர். பிறர் உங்களை ஒத்த வராகத் தகுந்தவராவரோ? ஆகார்.

கு :—தாதை ஆயவன் ஆகத்தை என மாற்றுக. ஆகம் - மார்பு. மாயவன் - மாயைச் செயலில் வல்லவன்; கரியவன் எனலும் ஆம். கல்லுதல் - பிளத்தல். தன்னை வளர்த்த தந்தையைப் பிறன் கொல்லக்கண்டு துன்புறவேண்டியிருக்க, மகிழ்தல் அடாத செய லாதல் போலவே தன் தமையன் பகைவனுக்கு அன்பு செய்தலும் அடாத செயலாம் ஆதலின் "மகிழ்ந்த மைந்தனும் நம் பகைவனுக் கினிய நண்பு செய் நீயுமே நிகர்" என்றான். பிரகலாதனுக்கு வீட ணனும் வீடணனுக்குப் பிரகலாதனுமே நிகர் என்றது இதர இதர உவமை. இத்தகைய இழிநிலை பிறர்பால் உளதாகாது என்பான் 'பிறர் நிகர்க்க நேர்வரோ' என்றான். (3)

6495. பாழிசா லிரணியன் புதல்வன் பண்பெனச்
சூழ்வினை முற்றியா னவர்க்குத் தோற்றபி
னேழைநீ யென்பெருஞ் செல்வ மெய்திப்பின்
வாழவோ கருத்தது வரவற் றுருமோ.

பாழிசால் இரணியன் புதல்வன் பண்பு எனச்,
சூழ் வினை முற்றி யான் அவர்க்குத் தோற்ற பின்,
ஏழை நீ என் பெருஞ் செல்வம் எய்திப், பின்
வாழவோ கருத்து? அது வர வற்று ஆகுமோ?

பொ:—வலிமை மிக்க இரணியனுடைய மைந்தனை பிரகலாதன் தன்மைபோல, (நீ) ஆலோசிக்கின்ற செயல் முடிவு பெற்று, யான் அம்மனிதர்க்குத் தோற்ற பிறகு, ஏழ்மையுடைய நீ என்னுடைய பெரிய செல்வத்தை அடைந்து எனக்குப் பின் வாழவேண்டும் என்பதோ உன் கருத்து? அத்தகைய நிலை வரவல்லது ஆகுமோ? ஆகாது.

கு:—பாழி - வலிமை. சூழ்வினை - ஆராய்கின்ற சூழ்ச்சி; இனி, என் உயிரைச் சூழ்ந்து பற்றியுள்ள வினை எனப் பொருள் கொண்டு என் வினை முடிந்தமையால் யான் அவர்க்குத் தோற்பேனுயின், அதற்குப் பின் இரணியன் புதல்வன் பண்பென என்பெருஞ் செல்வ மெய்தி வாழவோ கருத்து எனக் கூறலும் ஆம். புதல்வன் பண்பெனச் செல்வம் எய்தி வாழவோ கருத்து? என இயையும், இராவணன் தம்பியாயினும் அரசுரிமை வீடணனுக்கு இன்மையால் 'ஏழை நீ' என்ருன். ஏழை என்பதற்கு அறிவற்றவனுகிய நீ எனப் பொருள் கூறலும் ஆம். என் பெருஞ் செல்வம் என்றது மூவுலக முழுதாளும் பேரரசச் செல்வத்தை. அண்ணன் மாண்ட பின் தம்பி உயிர் வாழ்தலே பிழை; அதற்கு மேலும் அண்ணனது பெருஞ் செல்வத்தைப் பெற்று வாழக் கருதுதல் பெரும் பிழை என்பான், 'என் பெருஞ் செல்வம் எய்திப் பின் வாழவோ கருத்து?' என்ருன். தவத்தாலும் வலிமையாலும் தான் முயன்று பெற்ற செல்வம் என்பான் 'என் பெருஞ் செல்வம்' என்ருன்; தந்தை வழியில் கிடைத்த தாயச் செல்வம் அன்று என்றவாறு. இதனுல் வீடணன் அச்செல்வத்தைப் பெற விரும்பல் தகுதியன்று என்பதும் குறிப்பிட்டவாறு. இராவணன் தோற்றலும் அவன் செல்வத்தை வீடணன் எய்தலும் என்றும் நிகழாது என்பான் அது வரவற்றுருகுமோ? என்ருன். இராவணன் இராமனுக்குத் தோற்க நேர்ந்தாலும் அவன்போல மூவுலக முழுதாளும் வெற்றி வீடணனுக்கு வரத்தக்கதன்று என்பான் 'அது வரவற்றுருகுமோ?' என்ருன் எனலும் ஆம். வீடணனுக்கும் அரசில் ஆசை உண்டு; 'அருத்தியுமரசின் மேற்றே' (107) என இராமன் கூறலும் காண்க. (4)

6496. முன்புற வனையர்பா னண்பு முற்றினை
வன்பகை மனிதரின் வைத்த வன்பினை
யென்புற வுருகுதி யழுதி யேத்துதி
யுன்புக லவர்பிறி துரைக்க வேண்டுமோ.

'முன்புற அனையர்பால் நண்பு முற்றினை;
வன்பகை மனிதரின் வைத்த அன்பினை;
என்பு உற உருகுதி; அழுதி; ஏத்துதி;
உன்புகல் அவர்; பிறிது உரைக்க வேண்டுமோ?

பொ :—(இராம இலக்குவரைக் காணு) முன்பே அவரிடம் நட்பு முதிரப் பெற்றாய்; நமக்கு வலிய பகையாயுள்ள அம்மனிதர்களிடத்தில் வைத்த அன்புடையையாய் என்பும் மிக உருகுகின்றாய்; கண்ணீர் விட்டு அழுகின்றாய்; அவர்களைத் துதிக்கின்றாய்; இந் நிகழ்ச்சிகளால் உனக்குப் புகலிடம் அவ்விராம இலக்குவரே (என்பது புலனாகின்றது) இவற்றிற்கு வேறாக உன் வாயினால் அதைச் சொல்லுதல் வேண்டுமோ? வேண்டா.

கு :—உலகத்து ஒருவர்பால் ஒருவர் நட்புக் கொள்ளுதல் அவரைக் கண்ட பின்னர் நிகழ்வதே பெரும்பான்மையாகவும் வீடணன், இராம இலக்குவரைக் காணு முன்னரே நட்பு முதிரப் பெற்றமை புலப்பட ''முன்புற அனையர்பால் நண்பு முற்றினை'' என்றான். "புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான் நட்பாங்கிழமை தரும்" (குறள்-785) என்பதும், இக்குறள் உரையில் பரிமேலழகர், 'இவ்விரண்டும் இன்றிக் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சி யொப்பின் அதுவே உடனுயிர் நீங்கும் உரிமைத்தாய நட்பினைப் பயக்கும் என்பதாம்' என்றதும் இங்கு நினையத்தகும். இராவணன் தன்முன் அறவுரை கூறிய அனுமனைக் கொல்லத் துணிந்தபோது வீடணன் தடுத்து "வந்த தூதரைக் கொன்றுளார்கள் யாவரே தொல்லை நல்லோர்" (சுந்தர-1155) என ஏதுவிற் சிறந்தன எடுத்துக் காட்டி அனுமனை உய்வித்தமை நினைந்து, 'முன்புறவனையர்பால் நண்பு முற்றினை' என்றான் எனலும் ஆம்.

'அன்று வானரம் வந்து நம் சேனையை யழிக்கக்
கொன்று தின்றிடு மின்னெனத் தூதரைக் கோறல்
வென்றியன்றென விலக்கினை மேல்விளைவு எண்ணி" (7)

என இராவணனும் பின் கூறுமாறு காணலாம்.

செய்யுளாதலின் 'அனையர்பால்' எனச் சுட்டு முன் வந்தது. அன்பினையாய் உருகுதி என முற்றெச்சமாக்குக. என்புருகுதற்கும் அழுதற்கும் அன்பே காரணமாதல் தெளிவு. அன்பால் உள்ளம் உருகும்போது என்பும் நெகிழ்ந்துருகுதல் உண்டு. 'என்பெனக் குருகுகின்ற திவர்கின்ற தளவில் காதல்' (கிட்கிந்தா-அனுமப்-15) என இராம இலக்குவரைக் கண்ட அனுமன் கூறுதலும் காணலாம். "முன்புறக் கண்டிலன் கேள்வி முன்பிலன், அன்புறக் காரணம் அறிய கிற்றிலேன், என்புறக் குளிரும் நெஞ்சுருகு மேலவன், புன்புலப் பிறவியின் பகைஞன் போலுமால்" (21) என வீடணனே பின்பு கூறுதலும் காணலாம். அழுதி என்றது இராம இலக்குவரை நினைந்து கண்ணீர் விடுதலை. வீடணன் தன் வாயால் 'எனக்குப் புகலிடம் இராம இலக்குவரே' என்று சொல்லாவிடினும் அவர்களை நினைந்து அவன் உருகுதலும் அழுதலும், ஏத்துதலுமாகிய செயல்களே அதனைப் புலப்படுத்திவிட்டமையால் 'பிறிதுரைக்க வேண்டுமோ' என்றான். உருகுதல் முதலிய குறிப்பே அமையும் என்றவாறு. (5)

6497. நண்ணினை மனிதரை நண்பு பூண்டனை
யெண்ணினை செய்வினை யென்னை வெல்லுமா
றுன்னினை யரசின்மே லாசை யூன்றினை
திண்ணிதுன் செயல்பிறர் செறுநர் வேண்டுமோ.

நண்ணினை மனிதரை; நண்பு பூண்டனை;
எண்ணினை செய்வினை; என்னை வெல்லுமாறு
உன்னினை; அரசின்மேல் ஆசை ஊன்றினை;
திண்ணிது உன் செயல்; பிறர் செறுநர் வேண்டுமோ?

பொ:—மனிதர்களாகிய இராம இலக்குவரை உள்ளத்தால் நெருங்கினாய்; அவர்பால் நட்புக்கொண்டாய்; நீ செய்யவேண்டியதை நன்கு ஆராய்ந்து விட்டாய்; என்னை வெல்லும் வழியை நினைத்துள்ளாய்; இலங்கை அரசின்மேல் ஆசை வைத்துள்ளாய்; உன் செய்கை மிக வன்மையுடையது; எனக்குப் பகைவர் (உன்னைக் காட்டிலும்) வேறு ஒருவர் வேண்டுமோ? (நீயே போதும்).

கு:—மனிதரை நண்ணினை என்றது வீடணன் மனத்தால் இராம இலக்குவரைப்பற்றி நினைத்து அவர்க்கு அணியனாய தன்மையை யுணர்த்தியவாறு. 'அரசின்மேல் ஆசை யூன்றினை' என இராவணன் கூறியது போலவே "காதல் அருத்தியும் அரசின் மேற்றே அறிவினுக் கவதியில்லை" (107) என வீடணனைப்பற்றி

இராமன் எடுத்துரைப்பதும் காண்க. உடன்பிறந்த தம்பியாகிய நீயே எனக்கு மாறுபட்டவனாய் என்னை அழித்து என் அரசைப் பெற விரும்புகின்றபோது என்னை அழிக்க வேறு பகைவர் வேண்டா, நீயே போதும் என்றவாறு. "வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக கேள்போல் பகைவர் தொடர்பு" (குறள் - 882) என்றவாறே வாள்போன்ற இராம இலக்குவர்க்கு அஞ்சுவதினும் உடன்பிறந்த கேள் போன்ற வீடணன் ஆகிய உட்பகைக்கு அஞ்சிக் கூறினான் இராவணன் என்க. (6)

6498. அன்று வானரம் வந்துநஞ்
★ சோலையை யழிப்பக்
கொன்று தின்றிடு மின்னெனத்
தூதரைக் கோறல்
வென்றி யன்றென விலக்கினை
மேல்வினை வெண்ணித்
துன்று தாரவற் றுணையெனக்
கோடலே துணிந்தாய்.

அன்று வானரம் வந்து நம் சோலையை அழிப்பக்
"கொன்று தின்றிடுமின்!" எனத் தூதரைக் கோறல்
வென்றி அன்று என விலக்கினை; மேல்வினைவு எண்ணி;
துன்று தாரவற் றுணை எனக் கோடலே துணிந்தாய்.

பொ :—அன்றைக்கு ஒரு குரங்கு வந்து நம் அசோக வனமாகிய சோலையை அழியா நிற்க, 'இக் குரங்கைக் கொன்று தின்னுங்கள்' என யான் கட்டளையிட (அப்போது) 'தூதரைக் கொல்லுதல் வெற்றி அன்று' என்று கூறி மேல் விளைவினைக் கருதி (அவனைக் கொல்ல வொட்டாது) விலக்கினாய்; (அதற்கேற்பவே இப்பொழுதும்) மலர்கள் நெருங்கிய மாலையை அணிந்த இராமனைத் துணைவனாகக் கொள்ளு தலையே துணிந்திருக்கின்றாய்.

கு :—அனுமான் அசோக வனத்தை அழித்த நாளை நினைந்து 'அன்று' என்றான். இராவணன் அனுமனைக் கொல்லச் சொன்ன போது வீடணன் தடுத்த செய்தியை "மின்னும் வாளெயிற்றன் சினம் வீங்கினான், கொன்மினென்றனன் கொல்லியர் சேர்தலும் நின்மி னென்றனன் வீடணன் நீதியான்" (சுந்தர-1152) எனவும் "வேந்தர் மாதரைக் கொலை செய்தார்க ளுளரென வரினும் வந்த தூதரைக் கொன்றுளார்கள் யாவரே தொல்லை நல்லோர்" எனவும் முன்னரே

கூறியுள்ளமையால் அறியலாம். அனுமனைக் கொல்லுதல் கூடாது என்றது, தூதரைக் கோறல் தூய்தன்று என்ற அரசியல் முறை கூறியதன்றிப் பின் விளைவை எண்ணி வீடணன் கூறவில்லை; ஆயினும், இராவணன் வீடணன்பால் கொண்ட ஐயத்தால் பின் விளைவு எண்ணியே அன்று தடுத்ததாகக் கற்பனை செய்கின்றான். துன்று தாரவன் என்றது இராமனை. விளைவெண்ணி விலக்கினை என இயையும். (7)

6499. அஞ்சினை யாதலி னமர்க்கு மாளலை
தஞ்செ‌ன மனிதர்பால் வைத்த சார்பினை
வஞ்சனை மனத்தினை பிறப்பு மாற்றினை
நஞ்சினை யுடன்கொடு வாழ்த னன்மையோ.

' அஞ்சினை ஆதலின், அமர்க்கும் ஆள் அலை;
தஞ்சு எனா மனிதர்பால் வைத்த சார்பினை;
வஞ்சனை மனத்தினை; பிறப்பு மாற்றினை;
நஞ்சினை உடன் கொடு வாழ்தல் நன்மையோ?

பொ :—நீ (பகைவர்க்கு) அஞ்சுகின்றாய்; ஆதலால், (எனக்குத் துணையாய் நின்று) போர் செய்தற்கும் ஏற்ற வீரன் அல்லை; புகலிடம் ஆவர் என மனிதர்களிடத்தில் வைத்த பற்றுதல் உடையாய்; (என் அரசைக் கவர்ந்து கொள்ள வேண்டும் என்ற) வஞ்சனை பொருந்திய மனத்தினை யுடையாய்; மேலும், அரக்கர் பிறப்பிற்கேற்ற தன்மையைக் கொள்ளாமல் அதற்கு மாறுபட்ட ஒழுக்கத்தை யுடையையாய் மாற்றிவிட்டாய்; எனவே இத்தகைய நச்சுத்தன்மையுடைய உன்னை உடன் கொண்டு வாழ்தல் நன்மை பயக்குமோ? பயவாது.

கு :—அஞ்சாமையுடையவரே அமர் செயற்குரியார் ஆகலின், 'அஞ்சினை ஆதலின் அமர்க்கும் ஆளலை' என்றான். ஆள் என்றது வீரனை. "விழித்த கண் வேல் கொண்டெறிய வழித்திமைப்பின் ஓட்டன்றோ வன்கணவர்க்கு" (குறள் - 775) என வீரர் தன்மை பேசப்படுதல் காணலாம். தஞ்சம், தஞ்சு என விகாரம் பெற்றது; புகலிடம் என்னும் பொருளது. தமக்குக் குறைந்த வலியினராகிய மனிதரைத் தஞ்சம் எனப் பற்றுக்கொள்ளுதல் முறையன்று என்றவாறு. வஞ்சனை என்றது, வந்த பகைவனை நண்பனாகக் கொண்டு தமையனைக் கொன்று அரசு கொளக் கருதுவதை. சார்பு - பற்று. பிறப்பு என்றது பிறப்பிற்குரிய ஒழுக்கத்தினை. அது மாறியதாவது அரக்கர்க்குரிய வீர ஒழுக்கத்தை விடுத்து அந்தணர்க்குரிய கும்பிட்டு வாழும் கொள்கையுடையன் ஆயது. நஞ்சினை என்றது முன்னிலை

குறிப்புப் பெயர்; நச்சுத்தன்மையுடைய நினை என்பது பொருள். இனி, நஞ்சு என்பது ஆகுபெயராய்ப் பாம்பை உணர்த்தியதாகக் கொண்டு பாம்பை உடன்கொண்டு வாழ்தல் நன்மையோ? எனப் பொருள் கூறலுமாம். "உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட் பாம்போ டுடனுறைந் தற்று" (குறள் - 890) என வள்ளுவர் கூறியுள்ளதும் நினைக. இவ்வாறு பொருள் கூறுங்கால் இறுதியடி ஒட்டணியாகும்; நச்சுப்பாம்பை யுடன்கொண்டு வாழ்தல் இறுதிக்குக் காரணமாதல் போல, நின்னை யுடன்கொண்டு வாழ்தல் இறுதி பயக்கும் என்றவாறு. இறுதி ஓகாரம் எதிர்மறை; தீமையே என்பதை உணர்த்தியது. (8)

6500. *பழியினை யுணர்ந்தியான் படுக்கி லேனுனை*
யொழிசில புகலுத லொல்லை நீங்குதி
விழியெதிர் நிற்றியேல் விளிதி யென்றன
னழிவினை யெய்துவா னறிவு நீங்கினான்.

'பழியினை உணர்ந்து, யான் படுக்கிலேன், உனை;
ஒழி சில புகலுதல்: ஒல்லை நீங்குதி;
விழி எதிர் நிற்றியேல், விளிதி" என்றனன்
அழிவினை எய்துவான், அறிவு நீங்கினான்.

பொ:—அழிவை அடைதற்குரிய விதியுடையனாய் மதிகெட்ட இராவணன், "(தம்பியைக் கொன்றான் என்ற) பழி வருதலையுணர்ந்து யான் உன்னைக் கொல்லவில்லை; மேலும் நீ எனக்குச் சில நீதிகள் சொல்வதை ஒழிவாயாக! விரைந்து என்னை விட்டுப் போய்விடு! மேலும் என் கண்முன் நிற்பாயானால் (என் கையால்) அழிவாய் என்று வெகுண்டு கூறினான்.

கு:—அழிவினை எய்துவான்—அழிவு எய்தற்குரிய விதியுடையனாய்; முற்றெச்சம். அறிவு நீங்கினான் என்றது வினைப்பெயராய் இராவணனை உணர்த்தியது. இராவணன் வீடணனுரையை யேற்கும் அறிவுடையனாயினும் அழிவிற்குரிய விதி வலி அவன் அறிவைக் கெடுத்தது என்றவாறு. 'விதிவழி மதி' என்பதும் 'பேதைப் படுக்கும் இழவூழ்' (குறள் - 372) என்பதும் இங்கு நினையத்தகுவன. 'பழியினை யுணர்ந்தியான் படுக்கிலேனுனை' என்றவன், பின், 'விழியெதிர் நிற்றியேல் விளிதி' என்று முன் கூறியதற்கு மாறுபடக் கூறியதும் அறிவு நீங்கினதால் உளதாய சொல்லே என்பது உடம்பொடு புணர்த்தலால் உணர்த்தியவாறு. வீடணன் தன் தமையன் மேல் வைத்த அன்பினால் அறிவுரை கூறவும் அதை வஞ்சக உரை

யாகப் பொருள் கொண்டு இராவணன் அவனை வலிந்து புறப்படு மாறு செய்ததும் அழிவினைச் செய்யும் விதிவலியால் நிகழ்ந்ததே என்க. மேலும் சில அறிவுரைகளைக் கூறுவான் வீடணன் என்பதை அவன் முகக்குறிப்பாற் கண்டு 'சில புகலுதல் ஒழி' என்றான் இராவணன். (9)

வீடணன் விண்ணில் எழுந்து நின்று நீதி பல கூறுதல் 6500-6502

6501. என்றலு மிளவலு மெழுந்து வானிடைச்
சென்றனன் றுணைவருந் தானுஞ் சிந்தியா
நின்றனன் பின்னரு நீதி சான்றன
வொன்றல பலபல வுறுதி யோதினான்.

என்றலும், இளவலும் எழுந்து, வானிடைச்
சென்றனன் துணைவரும் தானும் சிந்தியா
நின்றனன்; பின்னரும் நீதி சான்றன
ஒன்று அல பல பல உறுதி ஓதினான்.

பொ :—என்று இராவணன் வெகுண்டு கூறியவுடன், அவன் தம்பியாகிய வீடணனும், வானத்தில் சென்று, தன் துணைவரும் தானுமாய்ச் சிந்தித்து நின்றான்; (சிந்தித்த பின்) மேலும் நீதி அமைந்தனவாகிய உறுதிச் சொற்கள், ஒன்று அல்ல; பலப்பல வற்றை இராவணனுக்குச் சொன்னான்.

கு :—இராவணன் கண்முன் தரையிடை நின்றால் அவன் கொன்றுவிடுவதாகக் கூறினான் ஆதலின், வீடணன் துணைவருடன் வானிடைச் சென்று சிந்தித்து நிற்பானானான். உடன்பிறந்த தமைய னுக்கு உய்யும் நெறி இனி எப்படிக் காட்டுவது என்பதையே வானில் நின்று துணைவருடன் சிந்தித்ததாகக் கொள்க. வீடணன் இராவண னுக்கு அமைச்சன் இயல்பினனாய் அமைந்தவன் ஆதலின் "தம் முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்டபோதும், வெம்மை யைத் தாங்கி நீதி விடாது நின்றுரைக்கும் வீரர்" (அயோத்தி - மந்திரப் - 9) என்ற இலக்கணத்திற்கேற்ப இராவணன் வெகுண்ட போதும் நீதி விடாது நின்று உரைத்தான் என்க. நீதி சான்றன வாகிய உறுதிச் சொற்கள் என்க. உறுதி என்றது உறுதிச் சொற்களை. துணைவரும் தானும் நின்றனன் என்பது தலைமைப் பொருட்குரிய வினையால் தலைமையில் பொருளும் முடிவதோர் முறைமைபற்றி வந்தது. "தானுந் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்" என்புழிப்போல. (10)

6502. வாழியாய் கேட்டியால் வாழ்வு கைம்மிக
ஊழிகாண் குறுநின துயிரை யோர்கிலாய்
கீழ்மையோர் சொற்கொடு கெடுத னேர்தியோ
வாழ்மைதா னறம்பிழைத் தவர்க்கு வாய்க்குமோ.

'வாழியாய்! கேட்டியால்; வாழ்வு கைம் மிக
ஊழி காண்குறும் நினது உயிரை ஓர்கிலாய்,
கீழ்மையோர் சொற் கொடு கெடுதல் நேர்தியோ?'
வாழ்மைதான், அறம் பிழைத்தவர்க்கு வாய்க்குமோ?

பொ :—வாழ்தற்குரியவனே! (யான் சொல்வதைக்) கேட்பாயாக: செல்வ வாழ்வு மேற்பட்டு நிற்க ஊழிக்காலம் வரை வாழ்தற்குரிய நின் உயிரைப் பற்றி எண்ணிப் பாராமல் கீழ்மக்களின் சொல்லைக் கொண்டு நீ அழிய உடன்படுகின்றாயா? தருமத்தில் தவறி நடந்தவர்க்கும் நல்வாழ்க்கை வாய்க்குமா? (வாய்க்காது.)

கு :—என் சொல் கேட்டு வாழ்தற்குரியாய் என்பான், 'வாழியாய்' என வீடணன் இராவணனை விளித்தான். நெடுங்காலம் வாழ்தற்குரிய நீ கீழ்மக்களின் சொல்லைக் கேட்டு அறத்திற்கு மாறாய் நடந்து விரைந்து கெடும் வழியைப் பின்பற்றுகின்றாய் என்பான், கெடுதல் நேர்தியோ எனவும், அறம்பிழைத்தவர்க்கும் வாழ்மைதான் வாய்க்குமோ எனவும் கூறினான். ஊழி என்றது நெடுங்காலத்தை. நெடிது காலம் உடம்பொடு கூடி வாழ்தற்குரிய உன்னுயிரை உன் தீய செயலால் அழிக்கின்றாய் என்றவாறு. கீழ்மையோர் என்றது அவன் எண்ணியது எண்ணி அவனைக் கெடுக்கும் தீய அமைச்சர்களை. அவர் சொல் கேளாது தன் உயிரின் இயல்பை ஓர்ந்து அறம் பிழையாது இருந்தால் ஊழிக் காலம்வரை இராவணன் அழிவின்றி வாழலாம் என்றவாறு. வாழ்மை - வாழ்க்கை. எதுகை நோக்கிக் கம்பர் வழங்கிய புதுச் சொல். அறம் பிழைத்தவர் அடியிற் கட்டிய வாழ்நாள் முடியுமுன் முடிவர் என்பது இதனால் புலப்படுத்திய வாறு. அறம் பிழையாது நடந்தால் நீடித்து வாழலாம் என்றது, இன்னபயன் உண்டாகும் என்னும் கருத்தினது ஆதலின் இது தானோபாயம் கூறியவாறு. (11)

6503. புத்திரர் குருக்கணின் பொருவில கேண்மையர்
மித்திர ரடைந்துளோர் மெலியர் வன்மையோர்
இத்தனை பேரையு மிராமன் வெஞ்சரம்
சித்திர வதைசெயக் கண்டு தீர்தியோ.

'புத்திரர், குருக்கள், நின் பொருவு இல் கேண்மையர்,
மித்திரர், அடைந்துளோர், மெலியர், வன்மையோர்,
இத்தனை பேரையும், இராமன் வெஞ்சரம்
சித்திர வதை செயக் கண்டு, தீர்தியோ ?

பொ :—உன் புதல்வர்கள், குருக்கள் முதலிய பெரியோர்கள், ஒப்பற்ற உறவினர்கள், நண்பர்கள், நின்னைச் சார்ந்து வாழ்பவ ராகிய மெலியவர்கள், வலிமை மிக்கவர்கள் ஆகிய இத்தனை பேரையும் இராமனுடைய கொடிய அம்பு சித்திரவதை செய்யப் பார்த்து விட்டுத்தான் உயிர் விடுவதாக எண்ணமோ ?

கு :—இராவணன் சீதையைக் கொண்டுபோய் விடுத்து இராமனைப் பணியாமற் போனால் அவ்விராமன் அம்பு அத்தனை பேரையும் கொல்லுவது உறுதி என்று தண்டோபாயத்தாற் கூறிய வாறு. இராமன் அம்பால் இறக்கப் போகின்றவர்களில் இராவண னுக்குச் சிறந்தோர்களை முறைப்படுத்திக் கூறியுள்ளமை நோக்கத் தகும். புதல்வர்களே தந்தையை நரகத்திற் செல்லவொட்டாது நற்கதியடையச் செய்பவர் ஆதலின், அவர்களை அப்பொருள் பயக்கும் 'புத்திரர்' என்ற சொல்லால் முதற்கண் கூறியவாறு. குருக்கள் நல்லுபதேச மொழிகளில் நன்னெறி செலுத்துவோர் ஆதலின் அவரை அப்புத்திரர்க்கு அடுத்துக் கூறினர். தன் இன்பத்துன்பங் களில் பங்கு கொண்டு தனக்கு நன்மை செய்வோர் உறவினரே ஆதலின் அவரை அக்குருக்களையடுத்துக் கூறினர். உறவினர் போலவே மனம் ஒன்றிய அன்பினராய்ச் சாவிற் சாதற்குரியோர் நண்பராதலின் உறவினரை அடுத்து மித்திரரைக் கூறினர். புதுவ தாக வந்தடைந்த மெலியரும் வலியரும் இராவணனுக்காகவே உயிர் வாழ்கின்ற இயல்பினராதலின் அம்மித்திரரை அடுத்துக் கூறினர். தன்னோடு மிக நெருங்கிய தொடர்புடைய புத்திரர் முதலிய யாவரும் அழிவார்களே என்று கருதியேனும் இராவணன் மனம் மாற்றம் அடையானோ என்ற எண்ணத்தால் இவ்வாறு வீடணன் முறை தெரிந்து ஓதினன் என்க. இதனால் இராம பாணத்தின் சிறப்பும் புலப்படுத்தியவாறு. சித்திரவதை - வேதனைமிக உறுப்புக்களை யெல்லாம் தனித்தனியே அறுத்துக் கொல்வது. தீர்தல் என்றது உயிர்விடுதலை. (12)

இதன்பின் 52-ல் 11-1 எனப் பின்வரும் மிகைப் பாடல் காணப்படுகின்றது.

நேர்வரு முறுதியி னிலை யுரைத்தனென்
சீரிதென் றுணர்கிலை சீறிப் பொங்கினய்
ஓர்தரு மறிவிலார்க் குரைக்கும் புந்தியார்
தேர்வுறி னவர்களின் சிறந்த பேதையோர்.

வீடணன் இலங்கையை விடுத்துச் செல்லுதல்

6504. எத்துணை வகையினு முறுதி யெய்தின
வொத்தன வுணர்த்தினே னுணர கிற்றிலை
யத்தவென் பிழைபொறுத் தருளு வாயெனு
வுத்தம னந்நக ரொழியப் போயினான்.

'எத்துணை வகையினும் உறுதி எய்தின,
ஒத்தன, உணர்த்தினேன்; உணர கிற்றிலை;
அத்த! என் பிழை பொறுத்து அருளுவாய் எனா,
உத்தமன் அந்நகர் ஒழியப் போயினான்.

பொ :—'எல்லா வகையாலும் உறுதி பொருந்தியனவும் நீதி நூற்கு ஒத்தனவுமான கருத்துக்களை உனக்கு உணர்த்தினேன். ஆனால், அவற்றை நீ உணரும் ஆற்றல் அற்றவன் ஆனாய்: என் தந்தை போன்றவனே! (பெரியோனாகிய உனக்கு அறிவுரை கூறிய) என் பிழையைப் பொறுத்தருள்வாயாக!' என்று கூறிவிட்டுச் சிறந்த குண நலங்களையுடைய வீடணன் அந்த இலங்கை நகரத்தை விடுத்துச் சென்றான்.

கு :—வீடணன், தான் உணர்த்திய கருத்துக்கள் யாவும் தன்னலம் பற்றியோ, இராமனுக்கு அஞ்சியோ, கூறப்பட்டனவல்ல; இராவணனுக்கு உறுதி பயப்பனவும் அரச நீதிக்கு ஒத்தனவுமேயாம் என்பதை இதனால் உணர்த்தியவாறு. "பொருட்குத் திரிபில்லை உணர்த்தவல்லின்" (தொல் - சொல். 392) என்பது கருதித் தன்னா லியன்ற அளவெல்லாம் உணர்த்தினமை தோன்ற "எத்துணை வகை யினும் உணர்த்தினேன்' என்றான். 'உணர்ச்சி வாயிலுணர்வோர் வலித்தே' (தொல் - சொல். 393) ஆகலின் இராவணனுக்கு அவ் வறிவுரைகளை உணரும் ஆற்றல் இல்லாமையால் விடுகின்றேன் என்பான் 'உணரகிற்றிலை' என்றான். 'கில்' ஆற்றலுணர்த்தும் இடைச்சொல். அண்ணன் அப்பனாகக் கருதத்தக்க முறைமையன் ஆதலின் இராவணனை 'அத்த' என்ற சொல்லால் விளித்தான். அத்தன் - அப்பன். அரச நீதிகளை யுணர்வதில் வீடணனுக்கும் மேம்பட்டவன் அப்பன்—என்ற கருத்தினனாய் இராவணன் அவன் உரையை ஏற்றுக் கொள்ளாமை நினைந்து 'அத்த' என விளித் தான் எனலும் ஆம். 'காணாதாற் காட்டுவான் றான்காணான்' (குறள்-849) ஆகலின் உணரகில்லா இராவணனுக்கு அறிவுரை கூறியது தன் பிழையே என்பதுணர்ந்து வீடணன் 'என் பிழை பொறுத்தருளுவாய்' என்று வேண்டிக் கொள்வான்போல அவ்விரா வணனை இகழ்ந்தவாறு. பிழையில்லாதனவற்றையும் பிழையெனக் கொள்ளும் பேதை இராவணன் என்பது குறிப்பு. வீடணன்

இலங்கை சிறப்படைதற்கேற்ற பெருங் குணமுடையவன் என்பார் அவனை 'உத்தமன்' என்ற பெயரால் கூறினர். உத்தமன் இலங்கையை விட்டுப் போதல் அந்நகரின் பெருமை ஒழிதற்குக் காரணமாகும் என்ற பொருளுந் தோன்ற 'அந்நகரொழியப் போயினன்' என்றார். (13)

6505 அனலனு மனிலனு மரன்சம் பாதியும்
வினையவர் நால்வரும் விரைவின் வந்தனர்
கனைகழற் காலினர் கருமச் சூழ்ச்சியர்
இனைவரும் வீடண னோடு மேயினர்.

அனலனும், அனிலனும், அரன், சம்பாதியும்,
வினையவர் நால்வரும், விரைவின் வந்தனர்;—
கனைகழல் காலினர், கருமச் சூழ்ச்சியர்,—
இனைவரும் வீடணனோடும் ஏயினர்.

பொ:—ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த காலினையுடையவரும், செய்யவேண்டிய செயல்களில் ஆராய்ச்சியுடையவரும் ஆகிய அனலன், அனிலன், அரன், சம்பாதி என்ற பெயரினராகிய நல்வினையுடைய நால்வரும் விரைவாக வந்து, (இராவணன் அறிவின்மைக்கு) வருந்துகின்ற வீடணனோடு (செல்வதற்குச்) சேர்ந்து கொண்டார்கள்.

கு:—இலங்கையில் உள்ள அத்துணை அரக்கரிலும் இராமன் பக்கல் சேர்தற்குரிய நல்வினையுடையவர் இந்நால்வரே என்பார், 'வினையவர் நால்வரும்' என்றார். வினை என்றது இங்கு நல்வினையை. எனவே ஏனையோர் நல்வினையிலாது மாய்தற்குரியர் என்பதும் குறித்தவாறு. வந்தனர் என்பது முற்றெச்சம்; வந்தனராய் ஏயினர் என இயையும். கனைகழற்காலினர் என்பதால் அவர்கள் வீரமுடைமையும் கருமச் சூழ்ச்சியர் என்பதால் அவர்கள் நுண் அறிவுடைமையும் புலப்படுத்தியவாறு. இனைவரல் - வருந்தல். உடன் பிறந்த இராவணன் தன் அறிவுரை கேளாது கெடுகின்றனே என்ற வருத்தம் வீடணன் உள்ளத்தில் இருந்தமை புலப்படுத்த 'இனைவரும் வீடணன்' என்றார். 'துணைவரும் தானும் சிந்தியா நின்றனர்' என்புழிக் கூறிய துணைவர் இவர் என்பதும் இத்துணையர் என்பதும் இங்கு விளக்கியவாறு. வீடணன் இலங்கையை விட்டுப் புறப்படுங்கால் வருத்த மிகுதியால் துணைவர்க்கு எந்தக் குறிப்பும் காட்டானாயினும் இந்த நான்கு பேரும் தாமே விரைந்து வந்து வீடணனோடு சேர்ந்து கொண்டனர் என்றவாறு. (14)

6506. அரக்கனு மாங்கணோ
ரமைச்சர் நால்வரும்
குரக்கினத் தவரொடு
மனிதர் கொள்ளைநீர்க்
கரைக்கண்வந் திறுத்தன
ரென்ற காலையில்
பொருக்கென வெழுதுமென்
றெண்ணிப் போயினார்.

அரக்கனும் ஆங்கணோர் அமைச்சர் நால்வரும்,
'குரக்கு இனத்தவ ரொடும் மனிதர், கொள்ளை நீர்க்
கரைக்கண் வந்து இறுத்தனர்' என்ற காலையில்,
'பொருக்கென எழுதும்' என்று எண்ணிப் போயினார்.

பொ :—அங்கு உள்ளவர்கள் ; "இராம இலக்குவர், குரங்கினத்திற்கு உரிய சுக்கிரீவன் முதலியவரோடு பெருநீராகிய கடலின் கரைக்கண் வந்து தங்கியுள்ளார்கள்" என்று சொன்னபோது வீடணனும் அவனுடைய அமைச்சர்களாகிய அனலன் முதலிய நான்கு பேரும் விரைவாக எழுந்து அங்குப் போவோம் என்று எண்ணி அக் கரைக்குப் போனார்கள்.

கு :—ஆங்கணோர் என்ற காலையில் என இயையும். ஆங்கணோர் - அவ்விடத்துள்ளோர். இனி ஓர் என்பதை அசைநிலை ஆக்கி ஆங்கண் என்பதற்கு 'அப்பொழுது' என்று பொருள் கூறினும் ஆம். இப்பொருட்குப் 'பிறர்' என்ற காலையில் என எழுவாய் வருவித்தல் வேண்டும். கொள்ளை நீர் என்றது கடலை. இறுத்தல் - தங்குதல். 'பொருக்கென' விரைவுக் குறிப்புணர்த்தும் இடைச்சொல். கரை என்றது கடலின் வடகரையை. (15)

வீடணன் வானரத் தானையைக் காண்டல்

6507. அளக்கரைக் கடந்துமே லறிந்த நம்பியும்
விளக்கொளி பரத்தலிற் பாலின் வெண்கடல்
வளத்தடந் தாமரை மலர்ந்த தாமெனக்
களப்பெருந் தானையைக் கண்ணி னோக்கினான்.

அளக்கரைக் கடந்து மேல்அறிந்த நம்பியும்
விளக்கு ஒளி பரத்தலின் பாலின் வெண்கடல்

வளத்தடந் தாமரை மலர்ந்தது ஆம் எனக்,
களப் பெருந் தானையைக் கண்ணில் நோக்கினன்.

பொ :—மேலான ஞானத்தை அறிந்த வீடணனும் கடலைக் கடந்து, (வடகரையை யடைந்து) விளக்குகளின் ஒளி இடையிடையே பரவுதலால் வெண்மையான பாற்கடலில் வளம் வாய்ந்த பெருமை யுடைய தாமரை மலர் மலர்ந்ததுபோலும் என வியந்து, போர்க்களத் திற்குச் செல்லுதற்குரிய பெரிய வானர சேனையைக் கண்களால் பார்த்தான்.

கு :—வெண்மையான வானரசேனை பாற்கடல் போன்றது எனவும், அச்சேனைப் பரப்பிற்கு இடையிடையே தோன்றும் விளக்குகள் அப்பாற்கடலில் மலர்ந்த தாமரை மலர்களைப் போன்றன எனவும் கொள்க. இது ஏதுத்தற்குற்பேற்றவணி. மேல் என்றது இங்கு எல்லாவற்றிற்கும் மேலானதாகிய ஞானத்தை. பண்பாகுபெயர். இனி, அளக்கரை மேல் கடந்து எனக் கூட்டிக் கடலை விண்வழியாகக் கடந்து எனப் பொருள் கூறலும் ஆம். நம்பி என்றது வீடணனை. கடலில் என ஏழாவது விரிக்க. இனி, மலர்ந்தது என்ற வினைக்குக் கடலையே யெழுவாயாக்கி இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றப்பட்டதாகக் கூறலுமாம்; ‘ஊருணி நீர் நிறைந்தற்றே’ என்புழிப்போல. போர்க்களம் நோக்கிச் செல்லும் சேனையாதலின் களப் பெருந்தானை எனப்பட்டது. மலர்ந்ததாமென வியந்து நோக்கினன் என ஒரு சொல் வருவித்து முடிக்க. பிறர் வாய்க் கேட்டுக் கருத்தால் நோக்கவில்லை என்பார், ‘கண்ணில் நோக்கினன்’ என்றார். தலைமை பற்றி வீடணன் நோக்கியதை எடுத்துக் கூறினர் ஆயினும் இனம்பற்றி அவன் அமைச்சரும் நோக்கினமை கொள்ளப்படும். (16)

6508. ஊனுடை யுடம்பின வுயிர்கள் யாவையும்
ஏனைய வொருதலை நிறுத்தி யெண்ணினல்
வானரம் பெரிதென மறுவில் சிந்தையான்
தூநிறச் சுடுபடைத் துணைவர்ச் சொல்லினன்.

‘ஊனுடை உடம்பின உயிர்கள் யாவையும்
ஏனைய ஒருதலை நிறுத்தி எண்ணினல்,
வானரம் பெரிது’ என மறு இல் சிந்தையான்,
தூநிறச் சுடுபடைத் துணைவர்ச் சொல்லினன்.

பொ :—தசையையுடைய உடம்பினவான ஏனைய உயிரினங்கள் எல்லாவற்றையும் ஓரிடத்தில் ஒருங்கே நிறுத்தி எண்ணிப் பார்த்தால் வானர இனமே எண்ணிக்கையால் பெரியதாக இருக்கும் எனக் குற்றமற்ற மனத்தையுடைய வீடணன், ஊன்பதிந்தவாய் ஒளி வீசுகின்ற, கொல்லும் படைக்கலங்களையுடைய அமைச்சரை நோக்கிச் சொன்னான்.

கு :—ஏனைய உயிர்கள் யாவையும் ஒருதலை நிறுத்தி என இயையும். எண்பத்துநான்கு நூறாயிரமாம் உயிர்வகைகளில் வானரந் தவிர ஏனைய வுயிர்வகைகளை எல்லாம் ஓரிடத்தில் நிறுத்தி எண்ணினாலும் வானரங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் குறைந்தனவாகவே இருக்கும் என்று அவ்வானர சேனையின் பெருக்கை வியந்தவாறு. உடம்பில்லா உயிர்களை எண்ணுதல் கூடாமையின் அவற்றை விலக்க ஊனுடை யுடம்பின உயிர்கள் எனச் சிறப்பித்தவாறு. அரக்கனாயிருந்தும் அரக்கர்க்குப் பகையாக வந்துள்ள வானரப் படையைக் கண்டு வியத்தற்குக் காரணம் கூறுவாராய் வீடணனை 'மறுவில் சிந்தையான்' என்று குறித்தார். உடம்பால் அரக்கனாயினும் உள்ளத்தால் தூயன் என்றவாறு. இவ்வானர சேனையைக் கண்ட இலக்குவனும் அச்சேனையின் பெருக்கை வியந்து "மற்றை மன்னுயிர்கள்......குரங்கின் மாப்படைக் குறையிடப் படைத்தன கொல்லாம்" (தானைகாண் - 39) என்று கூறியுள்ளமை இங்கு ஒப்புநோக்கத் தகுவதாகும். தூ – தசை. பகைவரை எப்போதும் கொல்கின்ற படையாதலின் அதன்கண் தசைபடிந்து கிடத்தல் இயல்பு. நிறம் - ஒளி. சுடுதல் இங்குக் கொல்லுதலை யுணர்த்தியது. துணைவர் என்றது அனலன் முதலிய அமைச்சர் நால்வரையும். வீடணன் துணைவரும் வீரரே என்பது புலப்படுத்த 'தூநிறச் சுடு படைத் துணைவர்' என்றார். (17)

இனிச் செய்வது யாதென வீடணன் அமைச்சரை வினவுதல்

6509. அறந்தலை நின்றவர்க் கன்பு பூண்டனன்
மறந்துநன் புகழலால் வாழ்வு வேண்டலன்
பிறந்தவென் னுறுதிநீ பிடித்தியா லெனத்
துறந்தன னினிச்செயல் சொல்லுவீ ரென்றான்.

'அறந்தலை நின்றவர்க்கு அன்பு பூண்டனன்;
மறந்தும் நன்புகழ் அலால் வாழ்வு வேண்டலன்;
பிறந்த என் உறுதி நீ பிடித்தியால்' எனத்
துறந்தனன்; இனிச் செயல் சொல்லுவீர் என்றான்.

பொ :—(யாவரேயாயினும்) அறத்தில் தலைமையான பற்றுடைய வர்களாய் ஒழுகினவரிடத்தில் அன்பு பூண்டேன்; நல்ல புகழை வேண்டுவதன்றி அதற்கு மாருன பழிபடு வாழ்வை மறந்தும் விரும் பியதில்லை. உடன் பிறந்த தம்பியாகிய என் உறுதிச் சொல்லை நீ ஏற்றுக்கொள்வாயாக எனக் கூற, அதை யேற்றுக் கொள்ளாமல் இராவணன் என்னைத் துறந்துவிட்டான்; இனி, யான் செய்யத்தக்க செயல் யாது என்பதைச் சொல்லுங்கள் என்று அமைச்சரை வீடணன் வினவினுன்.

கு :—அறத்தொடுபட்ட வாழ்க்கையை விரும்புவதும், புகழுக்கு மாருய்ப் பழிக்கத்தக்க வாழ்க்கையை விரும்பாமையும் என் இயல் பாகும்; என் மன நிலைக்கு ஏற்பவே என் அண்ணனும் அறத்திற்கு மாருன இன்ப வாழ்வை விரும்பலாகாது என்றும் பழிக்கத்தக்க பிறர் மனை நச்சும் வாழ்வை விடவேண்டும் என்றும் அவனுக்குக் கூறினேன்; அவன் ஏற்றுக் கொள்ளாது மறுத்ததோடு என்னை அகல்க எனவும் துறந்தான். இனி யான் செய்யத்தக்க செயல் என்னை! என்பது வீடணன் வினு. யான் அறவோர்பால் அன்புடைய ளுதலும் பழிபடு வாழ்வை வெறுத்தலும் இராவணன் என்னை வெறுத்துத் தள்ளுதற்குக் காரணங்களாயினவே என, நல்லனவெல் லாந் தீயனவாகத் தோன்றுதற்குக் காரணமான இராவணனது தீயூழை எண்ணி வீடணன் ஏங்கிக் கூறியவாறு. பிடித்தல் - கடைப் பிடித்தல். பூண்டனன், வேண்டலன் என்பன தன்மை ஒருமை வினை முற்றுக்கள். துறந்தனன் என்பது படர்க்கை ஒருமை முற்று. புகழலால் வாழ்வு வேண்டலன் என்பது 'புகழெனி னுயிருங் கொடுக் குவர்' (புறநா - 182) என்பதை நினைப்பித்தல் காணலாம். (18)

இராமனைக் காணுமாறு அமைச்சர்கள் கூறல்

6510. மாட்சியி னமைந்தது வேறு மற்றிலை
தாட்சியில் பொருடருந் தரும மூர்த்தியைக்
காட்சியே யினிக்கட னென்று கல்விசால்
சூட்சியின் கிழவருந் துணிந்து சொல்லினர்.

'மாட்சியின் அமைந்தது வேறு மற்று இலை;
தாட்சி இல் பொருள்தரும் தரும மூர்த்தியைக்
காட்சியே இனிக்கடன்' என்று கல்வி சால்
சூட்சியின் கிழவருந் துணிந்து சொல்லினர்.

பொ :—'தாழ்வு இல்லாத ஞானப் பொருளைத் தரும் தருமமே வடிவாக உள்ள இராமனைக் காண்பதே இப்பொழுது செய்யத்தக்க

கடனுகும்; இதைப்போல் சிறப்பமைந்த செய்கை வேறு ஒன்றும் இல்லை; என்று கல்வியறிவாற் சிறந்த, ஆலோசனைக்கு உரியவ ராகிய, அமைச்சரும் துணிந்து சொன்னுர்கள்.

கு :—அறந்தலை நின்றவர்க்கு அன்பு பூணும் இயல்புடைய வீடணன் மறந்தலை நின்ற இராவணனைத் துறந்து தரும மூர்த்தி யாகிய இராமனை அடைவதே பொருத்தம் என்பது அமைச்சர் துணிபு. தாழ்ச்சி, சூழ்ச்சி என்ற சொற்கள் எதுகை நோக்கித் தாட்சி, சூட்சி எனத் திரிந்தன. ழகரம் ளகரமாய்ப் பின் டகரமாய்த் திரிந்தது. தாழ்ச்சியில் பொருள் என்றது மயர்வற்ற மதிநலத்தை; ஆவது ஞானத்தை. சூழ்ச்சியின் கிழவர் - ஆலோசனைக்குரிமையுள்ள அமைச்சர். 'ஒருதலையாச் சொல்லலும் வல்ல தமைச்சு' (குறள்-634) என்றதற்கேற்ப அமைச்சர் தம் கருத்துச் சொல்லுங்கால் ஐயுரு வண்ணம் ஒருதலையாத் துணிந்து சொன்னுர்கள் என்றவாறு. கல்வி அறிவானும் இயற்கை யறிவானும் ஆராய்ந்து தமக்கு நல்லதென்று பட்டதைத் துணிந்து சொன்னுர்கள் என்க. தரும மூர்த்தியைக் காண்டல் என்றது, இராமன்பால் அடைக்கலம் புகுதலையே குறித்த வாறு. கிழவரும் என்ற எச்சவும்மை வீடணனும் அதையே துணிந் திருந்தான் என்பதைப் புலப்படுத்தும். (19)

வீடணன் அமைச்சர் சொல்லை உடன்பட்டு மகிழ்தல் 6511-6514

6511. நல்லது சொல்லினீர் நாமும் வேறினி
யல்லது செய்துமே லரக்க ராதுமா
லெல்லையில் பெருங்குணத் திராமன் ருளிணை
புல்லுதும் புல்லியிப் பிறவி போக்குதும்.

'நல்லது சொல்லினீர்; நாமும் வேறு இனி
அல்லது செய்துமேல், அரக்கர் ஆதுமால்;
எல்லை இல் பெருங் குணத்து இராமன் தாள் இணை
புல்லுதும்; புல்லி இப்பிறவி போக்குதும்.

பொ :—(நீங்கள் எனக்கு) நல்லதையே சொன்னீர்கள்; நீங்கள் சொன்னது விடுத்து அல்லாததாகிய வேறு ஒன்றை இனிச் செய்வோமாயின், நாமும் அரக்கத்தன்மை யுடையராவோம்; ஆத லால், வரம்பு இல்லாத பெருங் குணத்தையுடைய இராமனின் இரு தாள்களையும் சென்று பிடித்துக்கொள்வோம்; (பிடித்துக்கொண்டு இழிந்ததாகிய இவ் அரக்கப் பிறவியைப் போக்கிக் கொள்வோம்.)

கு :—வீடணன் நினைந்ததே அமைச்சரும் கூறினராகலின் 'நல்லது சொல்லினீர்' என உடன்பட்டுப் பாராட்டினன். நாமும் அரக்கர் ஆதும் என இயையும். அல்லது என்றது 'இராமனைக் காண்டல் அல்லாத பிறிதொரு செயலை; இராமனைச் சரணடையாத செயல் எதுவும் அறத்தொடு பட்டது ஆகாமையின், "வேறினி அல்லது செய்துமேல் நாமும் அரக்கர் ஆதுமால்" என்றான். நாமும் என்ற எச்ச உம்மை, 'அறத்துக்கு மாறாய் ஒழுகும் இராவணனே யன்றி' என இறந்தது தழுவியது. வீடணன் பிறப்பால் அரக்கனாயினும் ஒழுக்கச் சிறப்பால் அந்தணன் ஆதலின் 'அரக்கராதும்' என்றான். இதுகாறும் அவன் அரக்கனாகவில்லை என்பது கருத்து. இராமன் குணக்கடலாதல் தோன்ற 'எல்லையில் பெருங் குணத்து இராமன்' என்று புகழ்ந்தான். "முற்குணத்தவரே முதலோரவர், நற்குணக் கடலாடுதல் நன்றரோ" (பால - தற்சிறப்புப் பாயிரம்) என்றல் நினைக. வீடணன், இராமனுடைய பிற சிறப்புகளைக் கூறாது அவன் பெருங் குணத்தையே கூறியது, தன்னைப் பிறவி நோக்கித் தள்ளாது குணம் நோக்கிக் கொள்ளுதற்குரியவன் என்ற கருத்தைப் புலப்படுத்தவேயாம். தாளிணை புல்லுதல் என்பது அடைக்கலம் புகுதலையே உணர்த்தியது. அவன் தாள்களே பிறவிப் பெருங்கடல் நீந்துதற்குப் புணையாதல் நினைந்து 'புல்லியிப் பிறவி போக்குதும்' என்றான். இதனால், அவன் தாள்கள் அரக்கப் பிறவியைப் போக்குவது மட்டுமன்றிப் பேரா இன்ப வீடளித்து இனிப் பிறவாமலும் காக்கவல்லது என்பது புலப்படுத்தியவாறு. 'புன்புறப் பிறவியின் பகைஞன் போலுமால்' எனப் பின் கூறுவதும் காணலாம். வீடணன் பண்பு அவனைச் சேர்ந்த அமைச்சர்க்கும் இருத்தலின் தாளிணை புல்லுதும் பிறவி போக்குதும் என உளப்பாட்டுத் தன்மைப் பன்மையால் கூறினன். (20)

6512. முன்புறக் கண்டிலேன் கேள்வி முன்பிலே
னன்புறக் கார ண மறிய கிற்றிலே
னென்புறக் குளிருநெஞ் சுருகு மேலவன்
புன்புறப் பிறவியின் பகைஞன் போலுமால்.

'முன்புறக் கண்டிலேன்; கேள்வி முன்பு இலேன்;
அன்பு உறக் காரணம் அறிய கிற்றிலேன்;
என்பு உறக் குளிரும்; நெஞ்சு உருகுமேல், அவன்
புன்புறப் பிறவியின் பகைஞன் போலுமால்.

பொ :—முன்பு ஒருபோதும் இராமனை யான் கண்டதில்லை. அவனைப்பற்றி முன்பு அதிசமாகக் கேள்விப்பட்டதும் இல்லை;

அங்ஙனமாகவும், அந்த இராமனிடத்தில் எனக்கு அன்பு உண்டா தற்குரிய காரணத்தை அறிந்துகொள்ள ஆற்றல் அற்றவனாக இருக்கின்றேன்; (அவனை நினைக்கும்போதே என்னுடம்பில் உள்ள) எலும்புகள் மகிழ்ச்சியால் மிகவும் குளிர்ச்சியடைகின்றன; என் உள்ளமும் உருகுகின்றது; இங்ஙனம் காரணமின்றி என்பு குளிர்தலும் நெஞ்சுருகுதலும் நிகழ்வதால் அவ்விராமன், புல்லிய உடம்போடு கூடிய உயிர்களின் பிறவி நோய்க்குப் பகைவன் ஆகிய கடவுள்தானோ?

கு:—இவ்வுலகத்து ஒருவர்பால் ஒருவர்க்கு அன்பு உண்டாக வேண்டுமாயின் அவரை முன் கண்டிருத்தல் வேண்டும்; அல்லது அவரைப்பற்றிக் கேள்விப்பட்டேனும் இருத்தல் வேண்டும்; இவ்விரண்டும் இல்லாது ஒருவர்பால் ஒருவர்க்கு அன்புண்டாதல் இயல்பன்று; ஆயினும், வீடணன் தான் கண்டும் கேட்டும் அறியாத இராமனை நினைத்தவுடன் என்பு குளிர்தலும் நெஞ்சு உருகுதலும் தன் குறிப்பின்றியே நிகழ்கின்றமை கொண்டு இராமன் பரம்பொருளாதல் வேண்டும் என்று உய்த்துணர்ந்து கூறியவாறு; இவ்வுய்த்துணர்ச்சிக்குக் காரணம் வருஞ் செய்யுளில் கூறுவான். அனுமனும் இராமனைக் கண்ட ஞான்று, "துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினை தன்னை நீக்கித் தென்புலத் தன்றி மீளா நெறியுய்க்குந் தேவரோதாம்? என்பெனக்கு உருகுகின்றது இவர்கின்றது அளவில் காதல், அன்பினுக்கு அவதியில்லை அடைவென்கொல் அறிதல் தேற்றேன்" (கிட்கிந்தை - அனுமப் - 15) என இவ்வாறே சிந்தித்ததை நினையலாம். நிலைபேறில்லாது பிணி, மூப்பு, சாக்காடுகளால் வருந்துமியல்புடையதாகலின் இவ்வுடற் பிறவி 'புன்புறப் பிறவி' எனப்பட்டது. புன்புறம் - புல்லிதாகிய உடம்பு. பிறவியின் பகைஞன் என்றது பரம்பொருளை. (21)

6513. ஆதியம் பரமனுக் கன்பு நல்லற
நீதியின் வழாமையு முயிர்க்கு நேயமும்
வேதிய ரருளுநான் விரும்பிப் பெற்றனென்
போதுறு கிழவனைத் தவமுன் பூண்டநாள்.

ஆதி அம் பரமனுக்கு அன்பும், நல் அற
நீதியின் வழாமையும், உயிர்க்கு நேயமும்,
வேதியர் அருளும், நான் விரும்பிப் பெற்றனென்,—
போதுறு கிழவனைத் தவம் முன் பூண்ட நாள்.

பொ :—தாமரையிலிருக்கின்ற பிரமனைக் குறித்து யான் தவம் செய்த நாளில் எல்லாப் பொருள்கட்கும் முன்னவனாகிய அழகிய பரம்பொருளிடத்தில் பத்தியும், நல்ல அறத்தோடுபட்ட நீதியிலிருந்து வழுவாமையும், உயிர்களிடத்தில் அன்பும், அந்தணரின் அருளும் (எனக்கு வேண்டும் என்று) நான் விரும்பி வரமாகப் பெற்றேன்.

கு :—வீடணன் பிரமனைக் குறித்துத் தவஞ் செய்தபோது ஆதியம் பரமனுக்கு அன்பு வேண்டும் என்று வரம் பெற்றவாறே, இப்போது இராமனை நினைந்தவுடன் அவ்வீடணனுக்கு அன்பு தோன்றினமையால், இராமன் ஆதியம் பரமனேயாவன் என்பதை நிறுவியவாறு. நீதி, அறத்தோடு தொடர்புடையதாகலின் ' நல்லற நீதி' என்றான். நல்லறத்தினும் நீதியினும் வழாமையும் என உம்மைத் தொகையாக்கிப் பொருள் கூறலும் ஆம். உயிர் என்றது, உலகத்து உடம்போடு நின்ற எல்லா உயிர்களையும் குறித்தவாறு. வேதியர் என்றது அந்தணரை. "ஆவதற்கும் அழிவதற்கும் அவர் ஏவநிற்கும் விதியும்" (அயோத்தி-மந்தரை-10) ஆதலின், வேதியர் அருளை விரும்பிப் பெற்றான் என்க. போது என்றது திருமாலின் உந்தித் தாமரையை. கிழவன் - உரியவன் ; இனி எல்லா உயிர்க்கும் மூத்தவன் என்ற பொருளில் ' கிழவன் ' என்றார் எனலும் ஆம். கிழவனைக் குறித்துத் தவம் பூண்ட நாள் என ஒரு சொல்வருவிக்க. முன் தவம் பூண்ட நாள் விரும்பிப் பெற்றனன் எனவே, வீடணன் விரும்பிய வரங்களைப் பிரமனால் கொடுக்கப் பெற்றான் என்பது பெறப்படும். (22)

6514. ஆயது பயப்பதோ ரமைதி யாயது
தூயது நினைந்தது தொல்லை யாவர்க்கும்
நாயகன் மலர்க்கழ னணுகி நம்மனத்
தேயது முடித்துமென் றினிது மேயினான்.

' ஆயது பயப்பது ஓர் அமைதி ஆயது ;
தூயது, நினைந்தது ; தொல்லை யாவர்க்கும்
நாயகன் மலர்க்கழல் நணுகி, நம்மனத்து
ஏயது முடித்தும் ' என்று இனிது மேயினான்.

பொ :—" அந்தப் பிரமன் வரம் பயனை அளிப்பதற்கு உரிய ஒரு தகுதியான காலம் நமக்கு உளதாயது ; நீங்கள் நினைந்தது தூய்மையான கருத்தாகும் ; பழைய நிலையில் யாவர்க்கும் தலைவனாகிய நாராயணனாக இருந்த இராமனது தாமரை மலர் போன்ற திருவடிகளைப்

புகலிடமாக அடைந்து, நம்மனத்தில் பொருந்திய கருத்தை முடிப்போம்" என்று கூறிவிட்டு இனிதாக அமர்ந்திருந்தான்.

கு :—முன் வீடணன் அமைச்சர்கள் 'தரும மூர்த்தியைக் காட்சியே யினிக்கடன்' என்று கூறியதையே மீண்டும் பாராட்டி 'தூயது நினைந்தது' என்றான். இராமன் இப்பொழுது தயரதன் மகனாக மனித வேடம் தாங்கி யிருப்பினும், பழைய தெய்வநிலையில் யாவர்க்கும் தலைவனாகிய நாராயணனாக இருந்தவனே என்ற கருத்தால் 'தொல்லை யாவர்க்கும் நாயகன்' என இராமனைக் கூறுகின்றான். வீடணன் தான் அடைக்கலம் புகுதற்கு உரியவன், இராவணன் கூறியதுபோல மனிதன் அல்லன்; யாவர்க்கும் நாயகனே என்பது விளக்கித் தன் கருத்தை முடித்தற்குரிய பேராற்றல் அவனுக்குண்டு என்பதையும் நிறுவியவாறு. நம்மனத்து ஏயது என்றது, இலங்கை ஆட்சியைக் கைப்பற்றுதலை. "சூழ்வினை முற்றியான் அவர்க்குத் தோற்றபின் ஏழை நீ யென்பெருஞ் செல்வ மெய்திப்பின் வாழவோ கருத்து" (4) என இராவணனும், "வாலிவிண் பெறவர சிளையவன்பெறக் கோலிய வரிசிலை வலியுங் கொற்றமும், சீலமுமுணர்ந்துநிற் சேர்ந்து தெள்ளிதின், மேலரசு செய்துவான் விரும்பி மேயினான்" (92) என அனுமனும், 'காதலருத்தியும் அரசின் மேற்றே' (107) என இராமனும் கூறியிருத்தலை இங்கு நினைக. (23)

6515. இருளுற வெய்துவ தியல்பன் றாமெனப்
பொருளுற வுணர்ந்தவப் புலன்கொள் புந்தியார்
மருளுறு சூழலின் மறைந்து வைகினார்
உருளுறு தேரவ னுதய மெய்தினான்.

'இருள்உற எய்துவது இயல்பு அன்றாம்' என,
பொருள் உற உணர்ந்த அப் புலன்கொள் புந்தியார்,
மருள் உறு சூழலின் மறைந்து வைகினார்;
உருளுறு தேரவன் உதயம் எய்தினான்.

பொ :—"இருள் நிறைந்து இருத்தலால் (இவ்விரவுப் பொழுதில் இராமனை) அடைவது (புதியவர்க்கு) இயல்பன்று' என்று உலகியல்பை நன்குணர்ந்த அந்த அறிவமைந்த புத்திமான்களாகிய வீடணன் முதலியோர், (தம்மிருப்பை யாரும் காண முடியாதவாறு) மருண்டிருக்கின்ற ஒரு மரச்செறிவில் மறைந்து தங்கியிருந்தார்கள்; உருளுகின்ற ஒற்றைச் சக்கரத்தையுடைய தேரோன் ஆகிய சூரியன் உதயமலையை அடைந்தான்.

கு :—புதியவர்களை இரவில் காண்பது ஐயத்திற்கு இடமாகும் ஆதலின் 'இயல்பன்றும்' என்று விளக்கினர். பொருள் என்றது உலகியலை. புலன் - அறிவு. மருளுறு சூழல் என்றது, இருண்ட மரச்செறிவினை. கண்டோர் மருளுதற்குக் காரணமாய் உயிர்களின் இயக்கம் இல்லாத இடம் எனலும் ஆம். வானரங்கள் காணமுடியாத இடத்தில் தங்கினர் என்பதே கருத்து. உதயமெய்தினன் என்ற குறிப்பால் 'உருளுறுதேரவன்' என்றது சூரியனையே என்பது புலனும். (24)

இராமன் கடற்கரைக்கு வருதல்

6516. அப்புறத் திராமனவ் வலங்கு வேலையைக்
குப்புறக் கருதுவான் குவளை நோக்கிதன்
துப்புறச் சிவந்தவாய் நினைந்து சோர்குவான்
இப்புறத் திருங்கரை மருங்கி னெய்தினன்.

அப்புறத்து, இராமன் அவ் அலங்கு வேலையைக்
குப்புறக் கருதுவான், குவளை நோக்கி தன்
துப்பு உறச் சிவந்தவாய் நினைந்து சோர்குவான்
இப்புறத்து இருங்கரை மருங்கின் எய்தினன்.

பொ :—அந்தப் பக்கத்தில், இராமன் அலைவீசும் கடலைச் சேனையுடன் தாண்டிச் செல்வது பற்றிச் சிந்திக்கின்றவன், கருங்குவளை மலர்போன்ற கண்களையுடைய சீதையின் பவழம் போலச் சிவந்த வாயை நினைந்து மனந் தளர்பவனாய், இப்புறத்துள்ள பெரிய கடற்கரைப் பக்கத்தை அடைந்தான்.

கு :—இராவணனை வெல்வது கருதிக் கடலைத் தாண்டுவதுபற்றிப் புறப்பொருள் சிந்தனையில் இருந்த இராமன், காலை நேரத்தில் சீதையின் நினைவு வருத்த அகப்பொருள் சிந்தனையுடையனாய்த் தனியே கடற்கரையை அடைந்தான் என்றவாறு. சேனைக்கு இடையில் நின்று சீதையை நினைந்து வருந்துதல் பொருந்தாது என்று தனியே கடற்கரையை அணுகினன் இராமன் என்க. வீடணன் பக்கல் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறிமுடித்து இராமனைப்பற்றிப் பேசுகின்றார் ஆதலின் 'அப்புறத்து இராமன்' என்றார். 'வேலையை அப்புறத்துக் குப்புற' என இயைப்பாருமுளர். வேலை குப்புறல் - கடலைத் தாண்டுதல்; கடத்தல். உறுப்புகளில் சிறப்புடைய கண்ணால் சீதைக்குக் 'குவளை நோக்கி' எனப் பெயர் கொடுத்தது, மிதிலையில் முதலில் காதலை உணர்த்தியது அக்கண்ணே ஆதல் நினைந்து. "பருகிய

நோக்கெனும் பாசத்தாற் பிணித்து ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தலால் வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும் இருவரும் மாறிப்புக் கிதயமெய்தினர்" (மிதிலைக்-37) என்றதும், "அருளிலாள் எனினும் மனத்து ஆசையால் வெருளு நோய்விடக் கண்ணின் விழுங் கலால்" (142) என்றதும் இங்கு நினைக. குவளை நோக்கி எனச் சீதைக்குப் பெயர் கொடுத்து உடம்பொடு புணர்த்தலால் இராமன் நினைந்து சோர்தற்கு அக்குவளை நோக்கும் பொருளாகக் கொள்ள வைத்தார். வில்லை வளைத்துச் சீதையை மணந்தபின் தனக்குப் பேரின்பம் தந்தது வாய் ஆதலின், 'சிவந்த வாய் நினைந்து' இராமன் சோர்வானுனன். இராமன் தங்கியுள்ள இடம் நெய்தல் நிலமாதலின் அந்நிலத்துக் கருப்பொருளையே உவமைகூற நினைந்து 'குவளை நோக்கி' எனவும், 'துப்புறச் சிவந்தவாய்' எனவும், குவளை மலரையும் பவழத்தையுமே கூறியவாறு. பிரிந்தார்க்கு இரங்கலைத் தருவது நெய்தலாகலான் 'நினைந்து சோர்குவான்' என அந்நிலத்துக்குரிய இரங்கலாகிய உரிப்பொருளையும் கூறியவாறு. (25)

இராமன் அங்குக் கானல் முதலியவற்றை நோக்குதல் 6517-6519

6517. கானலுங் கழிகளு மணலுங் கண்டலும்
பானலுங் குவளையும் பரந்த புன்னையும்
மேனிறை யன்னமும் பெடையும் வேட்கைகூர்
பூநிறை சோலையும் புரிந்து நோக்கினன்.

கானலும், கழிகளும், மணலும் கண்டலும்
பானலும், குவளையும், பரந்த புன்னையும்,
மேல்நிறை அன்னமும் பெடையும் வேட்கைகூர்
பூ நிறை சோலையும் புரிந்து நோக்கினன்.

பொ :—(கரைமருங்கெய்திய இராமன்) கடற்கரைச் சோலைகளையும், உப்பங்கழிகளையும்; மணல்பரப்புகளையும் அங்குள்ள தாழைகளையும், கழிகளில் பூத்துள்ள கருநெய்தல் மலரையும் கருங்குவளை மலரையும், கிளைகள் பரவியுள்ள புன்னை மரங்களையும், அப்புன்னை மேல் நிறைந்து அமர்ந்துள்ள அன்னப் பறவைகளையும், பெண் அன்னங்களையும், (காண்போர்க்கு) ஆசை மிகுதற்குக் காரணமான பூக்கள் நிறைந்த சோலையையும் விரும்பிப் பார்த்தான்.

கு :—இராமன் கடற்கரையில் கண்டனவற்றை விவரித்தவாறு. கானல் - கடற்கரைச் சோலை. கண்டல் - தாழை. பானல் - கரு

நெய்தல். கண்டல், பானல், குவளை, புன்னை அன்னம் என்பன நெய்தல்நிலக் கருப்பொருளாதல் காண்க. பேடையைப் பின்பிரித்துக் கூறியதால் முன் கூறிய 'அன்னம்' ஆண் அன்னம் என்பது புலனும். சீதையின் கண்களைக் குவளையும் அவள் நடையை அன்னமும் நினைப் பிக்கின்றமையால் இராமன் புரிந்து நோக்குவான் ஆனான். புரிதல் - விரும்புதல். (26)

6518. தரளமும் பவளமுந் தரங்க மீட்டிய
திரண்மணிக் குப்பையுங் கனக தீரமும்
மருளுமென் பொதும்பரும் மணலின் குன்றமும்
புரணெடுந் திரைகளும் புரிந்து நோக்கினான்.

தரளமும், பவளமும், தரங்கம் ஈட்டிய
திரள் மணிக் குப்பையும் கனக தீரமும்,
மருளும் மென்பொதும்பரும், மணலின் குன்றமும்,
புரள் நெடுந் திரைகளும் புரிந்து நோக்கினான்.

பொ :—அலைகள் கொண்டுவந்து சேர்த்த முத்துக்களையும், பவழங்களையும், திரண்ட மணிகளின் குவியல்களையும், பொன்துகள் நிறைந்த கரைப்பரப்பையும், கண்டோர் அஞ்சுதற்குக் காரணமான மெல்லிய சோலைகளையும், மணல்மேடுகளையும், (ஒன்றன்பின் ஒன்றாய்ப்) புரண்டு வருகின்ற நீண்ட அலைகளையும் விரும்பி நோக்கினான்.

கு :—'தரங்கம் ஈட்டிய' என்பது இடைநிலை விளக்காய் முன்னும் இயையும். தரங்கம் ஈட்டிய தரளமும் பவளமும் திரள்மணிக் குப்பையும் என்க. மரச் செறிவால் சோலை இருண்டு தோன்றுதலின் மருளும்மென் பொதும்பர் என்றார். பொதும்பரில் உள்ள மலரின் மென்மையைப் பொதும்பர்க்கு ஏற்றி 'மென் பொதும்பர்' என்றார். 'நூலாக் கலிங்கம்' என்புழிப்போல. மணலின் குன்றம் என்றது மணல் மேடுகளை. தரளம் முதலியனவும் சீதையின் பல் முதலிய உறுப்புகளை நினைப்பித்தலின் இங்கும் இராமன் புரிந்து நோக்கிய தாகக் கூறினார். பவழம் வாயிதழையும் திரண்மணிக்குப்பை அணி கலன்களையும் கனகதீரம் மேனியையும் இருண்ட பொதும்பர் கூந்தலையும், மணலின் குன்றம் நகிலையும், திரைகள் வயிற்றின் மடிப்பையும் நினைவுறுத்தின என்க. (27)

6519. மின்னகு மணிவிரற் றேய வீழ்கணீர்
துன்னரும் பெருஞ்சுழி யழிப்பச் சோர்வினோ

டின்னகை நுளைச்சிய ரிழைக்கு மாழிசால்
புன்னையம் பொதும்பரும் புக்கு நோக்கினன்.

மின் நகு மணிவிரல் தேய, வீழ்கண் நீர்
துன்னரும் பெருஞ்சுழி அழிப்பச் சோர்வினோடு
இன் நகை நுளைச்சியர் இழைக்கும் ஆழி சால்
புன்னையம் பொதும்பரும் புக்கு நோக்கினன்.

பொ :—(தத்தம் கணவரோடு கூடியிருக்கும் காலத்தில்) இனிய சிரிப்போடு விளங்குபவரான வலைஞர் மகளிர், (கணவரைப் பிரிந்த காலத்தில்) மின்னல் போல் ஒளிவீசுகின்ற மணி பதித்த மோதிர மணிந்த விரல் தேயவும், கண்களிலிருந்து வீழ்கின்ற நீர், கூடுதற்கு அரிய பெரிய கூடற்சுழியை அழிக்கவும், மனச் சோர்வோடு தரையில் எழுதுகின்ற கூடற்சுழிகள் மிக்கிருக்கின்ற, புன்னை மரங்கள் செறிந்த அழகிய சோலையையும் புகுந்து நோக்கினன்.

கு :—கூடிய பொழுது நகையும் பிரிந்தபொழுது அழுகையும் பெண்டிர்க்கு இயல்பு ஆதலின் 'இன்னகை நுளைச்சியர்' என்றது, கூடிய பொழுதின் நிலையை யுணர்த்தியவாறு என்பது புலப்படும். மின்னகும் அணி என்றது மணியாழியை. ஆழியணிந்து ஆழி இழைக்கின்றார் என்றவாறு. பன்முறை சுழிக்கவேண்டியிருத்தலின் விரல் தேயலாயிற்று, கூடற்சுழி இழைக்கும்போதே பிரிவாற்றாமையால் பெருகும் கண்ணீர் அவர் இழைக்கும் கூடல் கூடும்முன் அவற்றை அழித்து விடுகின்றது என்றவாறு. அவர் இழைக்கும் கூடற்சுழி ஒக்கக் கூடுதல் அரிது என்பார், 'துன்னரும் பெருஞ்சுழி' என்றார். இதனால், கண்ணீர் செய்த அழிவின் கடுமை புலப்படுத்தியவாறு. விரல்தேய இழைக்கும் ஆழி, அழிப்ப இழைக்கும் ஆழி எனத் தனித் தனி இயையும். புன்னைப் பொழிலில் இருந்து நுளையர் மகளிர் தம் தலைவர் வருகையை அறிந்து கொள்ளக் கூடற்சுழி இழைக்கும் பிரிவாற்றா நிலையைப் பிரிவாற்றாத இராமன் கண்டு தன்னிலையோடு ஒப்பிட்டுக் காண்பானாய்ச் சீதையும் இவ்வாறே கூடற்சுழி இழைத்துத் தன் வரவை எதிர்நோக்கியிருப்பாளோ என்று மனத்தால் நோக்குவானாயினன் என்க. கூடற்சுழியாவது தரையில் கிழிக்கும் வட்டக்கோடு சிதைவின்றித் தலையொக்கக் கூடுமாயின் தலைவர் விரைவில் வருதற்கு அது நிமித்தமாகும் எனக் கொண்டு தலைவியர் சுழிக்கும் சுழி. அது கூடாக்கால் தலைவரும் வந்து கூடார் என்பது அவர் கொள்கை. "கூடற்பெருமானைக் கூடலார் கோமானைக் கூடப் பெறுவேனேல் கூடென்று - கூடல், இழைப்பாள்போற் காட்டி யிழையாதிருக்கும், பிழைப்பிற் பிழைப்பாக்கறிந்து" (முத்தொள்ளாயிரம்-31) என்றது காண்க, (28)

இராமன் கடற்கரைக் காட்சிகளால் கவலை மிகுதல் 6520–6523

6520. கூதிர்நுண் குறும்பனித் திவலைக் கோவைகால்
மோதிவெண் டிரைபொரு முடவெண் டாழைமேல்
பாதியஞ் சிறையிடைப் பெடையைப் பாடணைத்
தோதிமந் துயில்வகண் டுயிர்ப்பு வீங்கினான்.

கூதிர் நுண் குறும்பனித் திவலைக் கோவை கால்,
மோதி வெண் திரைபொரு, முடவெண் தாழைமேல்,
பாதி அம்சிறையிடைப் பெடையைப் பாடுஅணைத்து
ஓதிமம் துயில்வ கண்டு, உயிர்ப்பு வீங்கினான்.

பொ :—குளிர்மிக்க மிகச் சிறிய பனித்துளிகளின் வரிசைகளைச் சொரிகின்றதும், வெண்மையான அலைகள் பொருகின்றதுமான வளைந்த வெண்மையான தாழை மடல்மேல் ஆண் அன்னம் தன் அழகிய ஒருபுறத்துச் சிறகுக்குள் பெண் அன்னத்தைப் பக்கத்தில் அணைத்துக்கொண்டு உறங்குவதைக் கண்டு (இராமன்) பெருமூச்சு விட்டான்.

கு :—தாழை மடல்மேல் இருக்கும் அன்னங்கள் குளிர்ச்சி மிகுதியால் வருந்தி, வெம்மையுண்டாகப் பேடைகளைச் சிறகால் அணைத்துக்கொண்டு உறங்குவன ஆயின. தாழை மடல்களிலிருந்து பனித் திவலைகள் வீழ்தலாலும் கடல் அலைகள் அத்தாழையைத் தாக்குதலாலும் அத்தாழைமேலிருந்த அன்னங்கட்குக் குளிர் மிகுவதாயிற்று என்பார், பனித்திவலைக் கோவைகால் தாழை, திரைபொரு தாழை என ஈரடையால் சிறப்பித்தார். கூதிர் என்பது பருவத்தைக் குறியாது குளிர் என்ற பொருளில் இங்கு வந்தது என்பது குறும்பனித் திவலைக் கோவை காலுதல் கூறப்படுதலால் உணரலாம். பனிக் காலத்திற்குரிய பனித்திவலை கூதிர் காலத்திற்கு ஏலாமை அறியலாம். மேலும் காரும் கூதிருமாகிய பருவங்கள் கழிந்த பின்னரே வானரங்களைச் சீதையைத் தேடுதற்கு அனுப்பிய செய்தி மேல் கார் காலப் படலத்தில் கூறப்பட்டுள்ளமையாலும் சென்ற வானரங்கள் ஒரு திங்கள் எல்லையைக் கடந்து வந்தமை கூறப்பட்டதாலும் இராமன் கடற்கரையை அடைந்த காலம் பனிக்காலமே என்பது பெறப்படும். வெண்டாழை என மலர்க்குரிய அடைமொழியை முதல்மேல் ஏற்றிக் கூறியவாறு. கடல் அலைகளின் தாக்குதலுக்கு உரிய இடம் என்பது தோன்ற முடத்தாழை எனக் கூறினார். பாதியஞ் சிறை என்றது ஒரு சிறகை, பறவைக்குரிய இரு சிறகுகளில் பாதி, ஒரு சிறகு ஆதல் அறியலாம். இடை என்பதை உருபு மயக்கமாகக் கொண்டு சிறையால் அணைத்து எனக் கூறலும் ஆம். பாடு - பக்கம். அன்னப் பறவைக்குரிய நிலையும் தனக்கு வாய்த்

திலதே என நினைந்து இராமன் பெருமூச்சுவிடுவானானான், சீதையின் பிரிவால் வருந்துபவன் ஆதலின். (29)

6521. அருந்துதற் கினியமீன் கொணர வன்பினால்
பெருந்தடங் கொம்பிடைப் பிரிந்த சேவலை
வருந்திசை நோக்கியோர் மழலை வெண்குரு
கிருந்தது கண்டுநின் றிரக்க மெய்தினான்.

அருந்துதற்கு இனிய மீன் கொணர, அன்பினால்
பெருந்தடங் கொம்பிடைப் பிரிந்த சேவலை,
வருந் திசை நோக்கி, ஓர் மழலை வெண்குருகு,
இருந்தது கண்டு நின்று, இரக்கம் எய்தினான்.

பொ :—தான் உண்ணுதற்கு இனிதாக உள்ள மீனைக் கொணரும் பொருட்டுப் பெரிதாய் வளர்ந்த கிளையில் தன்னை விடுத்து அன்பினால் பிரிந்து சென்ற ஆண் நாரை வருதற்குரிய திசையை நோக்கிக்கொண்டு ஒரு இளமையான வெண்ணிறமுடைய பெண் நாரை இருந்ததைக் கண்டு நின்று (இராமன்) இரக்கத்தையடைந்தான்.

கு :—கடலில் மீன்கள் மிக இருப்பினும் அம்மீன்களினும் இனிதாகிய மீன் கொணரும் பொருட்டு ஆண் நாரை பிரிந்து சேய்மையில் உள்ள நீர் நிலைக்குச் செல்லவேண்டியதாயிற்று. பெண்ணாரை அருந்துதற்கு இனிய மீனைக் கொணரப் பிரிதலின் 'அன்பினால் பிரிந்த சேவலை' என்றார். பெருந்தடங் கொம்பு - பெரிய வளர்ந்த கிளை. கொம்பிடை வைத்துப் பிரிந்த என ஒரு சொல் வருவிக்க. சேவல் வருந்திசையை என இரண்டன் உருபைப் பிரித்துக் கூட்டுக. சேவலை வருந்திசையை என இரண்டு செயப்படு பொருள் வந்ததாகக் கூறலும் ஆம். சீதை, காண்டற்கினிய மான் கொணரும் பொருட்டு அன்பினால் பிரிந்து சென்ற தான், வருந் திசையை அவள் நோக்கி வருந்தியிருப்பதைப்போல, இப்பெண் நாரையும் வருந்தியிருத்தலை இராமன் கண்டானாகலின் அதன்பால் இரக்கம் கொள்ளலானான். இனிப் பெண்ணாரையைக் கண்டு சீதையின் நிலையை நினைவு கூர்ந்து அவள் நிலைக்கு இரக்கம் எய்தினான் எனலும் ஆம். மழலை இங்கு இளமையை உணர்த்தியது. மேல் பிரியாதிருந்த அன்னங்களைக் கண்டு அந்நிலை தனக்கு வாய்க்காமையால் பொறாமையுணர்ச்சிமிக்குப் பெருமூச்சுவிட்ட இராமன், இங்குப் பிரிவால் வருந்திக் கணவன் வருந்திசை நோக்கும் பெண் நாரையைக் கண்டு இரக்கவுணர்ச்சியை எய்தினான் என்க. இதனால், இராமன் உணர்ச்சி காட்சிப் பொருளுக்கேற்ப மாறுவதை விளக்கியவாறு. (30)

6522. ஒருதனிப் பேடைமே லுள்ள மோடலால்
பெருவலி வயக்குரு கிரண்டும் பேர்கில
திருகுவெஞ் சினத்தன தெறுகட் டீயன
பொருவன கண்டுதன் புருவங் கோட்டினன்.

ஒருதனிப் பேடைமேல் உள்ளம் ஓடலால்,
பெருவலி வயக்குருகு இரண்டும் பேர்கில,
திருகு வெஞ்சினத்தன, தெறுகண் தீயன
பொருவன கண்டு தன் புருவம் கோட்டினன்.

பொ :—தனித்திருக்கின்ற ஒரு பெண் நாரைமேல் தம் மனம் விரும்பிச் செல்லுதலால், மிக்க வலிமையுடைய பெரிய ஆண் நாரைகள் இரண்டும் பின்வாங்காமல், மாறுபட்ட கொடிய சீற்றத்தை யுடையவாய், கண்களில் சுடுகின்ற நெருப்புப் பொறிகளையுடைய வாய்ப் போர் செய்வனவற்றை (இராமன்) பார்த்துக் கோபத்தால் தன் புருவத்தை வளைத்தான்.

கு :—தனி ஒரு பேடை என்க. உள்ளம் ஓடுதல் என்பது விருப்பத்தால் மனம் அப்பேடைமேல் செல்லுதலை. வலிவயப் பெருங் குருகு என்க. வலிவயம் என்பன ஒரு பொருட் பன்மொழி. ஒரு பெண் குருகின் பொருட்டு இரண்டு ஆண் குருகுகள் செய்யும் போரின் கடுமை தோன்றப் "பேர்கில, திருகுவெஞ்சினத்தன, கண் தீயன பொருவன" என்றார். இக்குருகுகளின் போர், சீதையின் பொருட்டாக இனி இராவணனுக்கும் தனக்கும் நடக்க விருக்கும் போரை முன்கூட்டி யுணர்த்துவதாக இருத்தலால் இராமன் தன் கோபம் தோன்றப் புருவத்தை வளைத்தான் என்க. கோபத்தோடு பார்க்கும்போது புருவம் வளைதல் இயல்பு. திருகுதல் - மாறுபடுதல். தெறுதீ என இயையும். இதனால் இராமன் வீரவுணர்ச்சியைப் புலப் படுத்தியவாறு. ஒரு பேடைமேல் ஓர் ஆண் குருகு காதல் கொள்ளுதல் இயல்பாகவும், மற்றொரு ஆண் குருகும் அதன்மேல் காதல் கொண்டு தன்னை நிகர்த்த அவ் ஆண் குருகோடு போர் செய்தல் அறனன்று ஆகலின், அறத்தை நிலைநிறுத்த வந்த இராமனுக்கு அவற்றின்மேல் கோபம் பொங்குதல் இயல்பே. இதனால் இராமனது வெகுளி உணர்ச்சி புலப்படுத்தியவாறு. (31)

6523. உண்ணிறை யூடலிற் றேற்ற வோதிமம்
கண்ணுறு கலவியில் வெல்லக் கண்டவன்

தண்ணிறப் பவளவா யிதழைத் தற்பொதி
வெண்ணிற முத்தினு லதுக்கி விம்மினுன்.

உள்நிறை ஊடலில் தோற்ற ஓதிமம்
கண்ணுறு கலவியில் வெல்லக் கண்டவன்,
தண்நிறப் பவளவாய் இதழை, தற்பொதி
வெண்நிற முத்தினுல், அதுக்கி, விம்மினுன்.

பொ :—பெண் அன்னத்தின் உள்ளத்தில் நிறைந்த ஊடல் நிகழ்ந்த காலத்தில் (அதனை எதிர்தலாற்ருது பணிந்து) தோல்வி யுற்ற ஆண் அன்னம், இரண்டுடம்பும் ஒன்றுபடுகின்ற கலவிக் காலத்தில் பேரின்பமுற்று வென்றதைப் பார்த்த இராமன், இனிய நிறத்தையுடைய பவழம் போன்ற தன் வாயிதழை அவ்விதழ் தன்னுல் மறைக்கப்படுகின்ற வெண்மையான நிறத்தையுடைய முத்துப்போன்ற பற்களினுல் அதுக்கிக் கொண்டு ஏக்கத்தால் விம்மினுன்.

கு :—இதனுல் இராமனுக்கு உவகையுணர்ச்சி உண்டானமை புலப்படுத்தியவாறு. 'ஊடலிற் ருேற்றவர் வென்ருர் அதுமன்னுங் கூடலிற் காணப்படும்" (குறள் - 1327) என்பதைத் தழுவி, "ஊடலிற் ருேற்ற ஓதிமம் கண்ணுறு கலவியில் வெல்ல" என்ற பகுதி அமைந்துள்ளமை காணலாம். ஊடல் என்றது சிறிய கோபத்தை. ஊடல் செய்து கொள்ளுதற்குரியவர் பெண்டிரே ஆவர். அவ்வூடலை எதிர்தலாற்ருது சாய்ந்து பணிபவர் ஆடவரே ஆவர். "மனைவி யுயர்வுங் கிழவோன்பணிவும் நினையுங்காலை புலவியுளுரிய" (தொல் - பொருள். 227) எனத் தொல்காப்பியர் கூறியதும் காண லாம். ஊடலில் தோற்றலாவது அதனை எதிர்தல் ஆற்ருது வணங் குதல். ஊடலில், கலவியில் என்புழி ஏழனுருபாகிய இல் வினை நிகழ்ச்சிக் கண் வந்தது. கலவியில் வெல்லுதலாவது புணர்ச்சிக்கண் பேரின்பமுறுதல். ஆண் அன்னத்தின் தோல்வியே பின்பு பேரின்ப மெய்தற்குக் காரணமாயது என்றவாறு. கண்ணுறுதல் என்பது இரண்டு உடம்பும் ஒன்றுபடுதலை. கண்-உடம்பு. 'பொன்கட்பச்சை' (பரிபாடல். 3-82) என்புழியும் கண் அப்பொருளதாதல் காணலாம். அன்னங்களின் ஊடலையும் கூடலையும் கண்டு இன்பவுணர்ச்சியால் உந்தப்பட்டு இதழைப் பல்லால் அதுக்கியவன், அவ்வின்ப நிலைக் குரிய சீதை இல்லாமையால் விம்முவானுயினுன். "அன்னந் துணையோ டாடக்கண்டு, நென்னல் நோக்கி நின்ருரொருவர்" (சிலப் - கானல்வரி - 45) என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். முத்து உவமையாகு பெயராய்ப் பல்லை உணர்த்தியது. 'தற்பொதி முத்து' என்றது இதழ் தன்னுல் மறைக்கப்படுகின்ற பல் என்றவாறு.

இதழால் மறைக்கப்படுகின்ற பற்களால் அவ்விதழை அதுக்கினுன் என்க. அதுக்குதலாவது மெல்லென அழுத்துதல். கண்டவன், வினைப்பெயர். (32)

6524. இத்திற மெய்திய காலை யெய்துறும்
வித்தகர் சொற்களான் மெலிவு நீங்கினு
னொத்தன னிராமனு முணர்வு தோன்றிய
பித்தரி னொருவகை பெயர்ந்து போயினுன்.

இத்திறம் ஏய்திய காலை எய்துறும்
வித்தகர் சொற்களால் மெலிவு நீங்கினுன்
ஒத்தனன் இராமனும், உணர்வு தோன்றிய
பித்தரின், ஒருவகை பெயர்ந்து போயினுன்.

பொ :—இந்த நிலையை இராமன் அடைந்தபோது அங்கு வந்து அடைந்த அனுமன் முதலிய அறிஞர்களின் தேறுதல் மொழிகளால் மெலிவு நீங்கினவன் போன்று காணப்பட்ட இராமனும், நல்லுணர்வு வரப்பெற்ற பித்தரைப்போன்று, அந்த இடத்தை விடுத்து ஒருவாறு நடந்து சென்றுன்.

கு :—வித்தகர் அறிவுத்திறம் நிரம்பியவர். இராமனுக்கு ஆறுதல் கூறுதற்கேற்ற தகுதியுடைமை தோன்ற வித்தகர் என்றுர். அவர் அனுமன், சுக்கிரீவன், சாம்பவன் முதலியோராகக் கொள்ளலாம். மெலிவு நீங்கினுன் ஒத்தனன் என்றமையால் உள்ளத்தில் மெலிவு நீங்கவில்லை என்பதும் புறத் தோற்றத்தால் மெலிவு நீங்கினவன் போலக் காணப்பட்டான் என்பதும் போதரும். இக்கருத்து விளங் கவே 'உணர்வு தோன்றிய பித்தரின்' என உவமை கூறினுர். பித்தர்க்கு உணர்வு இடையில் தோன்றினுலும் மீண்டும் பித்துடைய ராதல் இயல்பு ஆதலின் இராமனும் அவர்போல மீண்டும் மெலி வுற்று வருந்துவான் என்பது அவ்வுவமையால் பெறப்படும். ஒத்தனனுகிய இராமனும் என இருபெயரொட்டாக்குக. இதனுல், இராமன் கடற்கரையில் கண்ட காட்சிகளால் பிரிவுத் துன்பம் மிக்கவ னுய் வருந்தியபோது, அனுமன் முதலிய அறிஞர்கள் வந்து அவ னுக்கு ஆறுதல் மொழி பல கூறினுர் என்பது புலனும். (33)

வீடணன் வருதல்

6525. உறைவிட மெய்தினு னொருங்கு கேள்வியின்
துறையறி துணைவரோ டிருந்த சூழலின்

முறைபடு தானையின் மருங்கு முற்றின
னறைகழல் வீடண னயிர்ப்பில் சிந்தையான்.

உறைவிடம் எய்தினன் ஒருங்கு கேள்வியின்
துறை அறி துணைவரோடு இருந்த சூழலின்
முறைபடு தானையின் மருங்கு முற்றினன்—
அறைகழல் வீடணன் அயிர்ப்பு இல் சிந்தையான்.

பொ :—(போய்) தன் இருப்பிடத்தை அடைந்து, நூற்கேள்வி களின் வழிகளையெல்லாம் அறிந்த அனுமன் முதலிய தன் துணைவர்க ளோடு ஒருங்கு இருந்த இடத்தில் முறைப்படி அமர்ந்துள்ள வானர சேனையின் பக்கத்தில் ஒலிக்கின்ற வீரக் கழல் அணிந்த வீடணன் ஐயமில்லாத மனத்தினனாய் வந்து சேர்ந்தான்.

கு :—துணைவரோடு ஒருங்கிருந்த என இயையும். சூழல்-இடம். இராமன் துணைவர் சூழ இருந்த இடம் என்பார் சூழல் என்றார். அச் சூழலுக்கு அருகில் வானர சேனையிலுள்ளோர் தத்தம் தகுதிக்கேற்ற முறையில் அமர்ந்திருந்த இடத்தில் என்பார் 'சூழலின் முறைபடு தானையின் மருங்கு' என்றார். இராமனும் அவன் துணைவரும் நடுவில் இருக்க அவரைச் சூழ்ந்து முறைப்படி வானரர்கள் அமர்ந் திருந்தனர் என்க. முற்றுதல், இங்கு அடைதலைக் குறித்தது. அயிர்ப்பு - ஐயம். வீடணன் தன்னை இராக்கதன் என்று யாரும் துன்புறுத்தலாம் என்ற ஐயம் இன்றித் துணிந்த நெஞ்சினனாய் வந்தடைந்தானாகலின், 'அயிர்ப்பில் சிந்தையான் முற்றினன்' என்றார். சிந்தையான் முற்றெச்சம். தன் வருகையை வீரக் கழலின் ஒலியால் உணர்த்திக்கொண்டு வந்தமை புலப்பட 'அறைகழல் வீடணன்' எனச் சிறப்பித்தார். அயிர்ப்புளனாயின், இவ்வாறு வெளிப்பட்டு வரல் இயலாமை அறிக.

இச் செய்யுளுக்குப் பின் சில சுவடிகளில் பின்வரும் செய்யுட்கள் காணப்படுகின்றன :—

6525 (a) மற்றொரு பொருளுள தென்னின் மாறிலாக்
கொற்றவ சரணெனக் கூய தோருரை
உற்றது செவித்தலத் தைய னெல்லெனா,
நற்றுணை வரைமுக நயந்து நோக்கினன்.

(b) எந்தையே யிராகவ சரண மென்றசொல்,
தந்தவ ரெனவரோ சாற்று மின்னென
மந்தண முற்றுழீஇ வயவெஞ் சேனையின்
முந்தினர்க் குற்றதை மொழிகு வாமரோ.

இவை இடைச் செருகல். சிந்தையான் முற்றினன் என்று முடிந்து வரும் செய்யுளில் 'முற்றிய குருசிலை' எனச் சொல் வினையுபடச் செய்துள்ளார். 'கொற்றவ சரண்' எனக் கூறியிருப்பவும் பின் மயிந்தனும் துமிந்தனும் வந்து 'சலக்குறியிலர்' என ஆராய்வதும் 'போரது புரிதிரோ?' என வினவுவதும் பொருந்தாச் செயலாய்ப் போகும் ஆதலின், இவற்றை விலக்கவேண்டியதாயிற்று. (34)

வானரர் வீடணனை எதிர்த்தல் 6526-6530

6526. முற்றிய குருசிலை முழங்கு தானையி
னுற்றனர் நிருதர்வந் தென்ன வொன்றின
ரெற்றுதிர் பற்றுதி ரெறிதி ரென்றிடை
சுற்றின ருருமெனத் தெழிக்குஞ் சொல்லினர்.

முற்றிய குருசிலை, 'முழங்கு தானையின்
உற்றனர், நிருதர் வந்து' என்ன ஒன்றினர்,
'எற்றுதிர்; பற்றுதிர்; எறிதிர்' என்று, இடை
சுற்றினர்—உரும் எனத் தெழிக்கும் சொல்லினர்.

பொ:—(வானர சேனையைச்) சார்ந்து நின்ற உபகாரியாகிய வீடணனை(க் கண்டு) 'ஒலிக்கின்ற நம் சேனையில் அரக்கர் வந்து சேர்ந்துள்ளனர்' என்று கூறிக்கொண்டு ஒன்று சேர்ந்தவர்களாய் (வந்த அரக்கரை) 'பற்றிக் கொள்ளுங்கள்; அடியுங்கள்; ஆயுதங்களால் எறியுங்கள்' என்று சொல்லிக்கொண்டு, இடிபோல அதட்டுகின்ற சொல்லையுடையராய் அவ்விடத்தில் அவனைச் சுற்றிக் கொண்டார்கள்.

கு:—குருசில் - உபகாரி. இராவணன் ஆட்சியிலுள்ள இரகசியங்களைக் கூறி இராமன் வெற்றிக்கு உதவ வந்த வீடணனைப் பகைவன் என வானரர் எண்ணித் துன்புறுத்த எண்ணுகின்றனரே என்ற கவியின் ஏக்கம் தோன்ற, வீடணனைக் 'குருசில்' என்ற பெயரால் கூறினர். 'நிருதர் தானையின் வந்துற்றனர்' எனவும் 'குருசிலைச் சுற்றினர்' எனவும் இயையும். உரும் - இடி. தெழித்தல் - அதட்டுதல். சொல்லினராய்ச் சுற்றினர் என முற்றெச்சமாக்கி முடிக்க. (35)

6527. தந்தது தருமமே கொணர்ந்து தானிவன்
வெந்தொழிற் றீவினை பயந்த மேன்மையான்
வந்தன னிலங்கையர் மன்ன னுகுநம்
சிந்தனை முடிந்தன வென்னுஞ் சிந்தையார்.

தந்தது தருமமே கொணர்ந்து தான்; இவன்
வெந்தொழில் தீவினை பயந்த மேன்மையான்,
வந்தனன் இலங்கையர் மன்னன் ஆகும்; நம்
சிந்தனை முடிந்தன என்னும் சிந்தையார்.

பொ :—(இவனை) நாம் செய்த தருமமேதான் இங்குக் கொணர்ந்து தந்தது; இவன்,—(சீதையைக் கவர்ந்த) கொடிய தொழிலாகிய தீவினை, நற்பயன் அளிக்கப்பெற்ற மேன்மையுடைமை காரணமாக (மேலும் தீவினை செய்ய) வந்தவனாகிய இலங்கையர் வேந்தனாகும்; எனவே, நம் கவலைகள் தீர்ந்தன; என்னும் கருத்தினராயினர்.

கு :—தருமமேதான் கொணர்ந்து தந்தது என இயையும். பயந்த - பயனளிக்கப்பெற்ற. வெந்தொழில் என்றது இராவணன் மாயவேடந் தாங்கி வந்து சீதையைக் கவர்ந்த செயல். முன் செய்த வெந்தொழில் பயன் அளித்த மேன்மை பற்றி மேலும் வெந்தொழில் செய்ய வந்தவனாகிய இலங்கையர் மன்னன் என்க. இவன், மன்னனாகும் என இயையும். செய்யக் கருதிய தீவினை கருதியவாறே சீதையாகிய பயனைத் தந்தது ஆதலின் அந்த மேன்மை காரணமாக மேலும் இராமனைக் கொல்லும் வெந்தொழிலைச் செய்யவே இராவணன் வந்தனன் என்பது வானரர் கருத்து. நாம் தேடிச் சென்று கொல்ல வேண்டாது தானே வந்து அகப்பட்டுக் கொண்டான் என்ற கருத்தால் "தருமமே கொணர்ந்து தந்தது" என்றனர். சிந்தனை - கவலைகள். நம்பால் வந்தோனைக் கொல்லுதல் எளிது என்னும் கருத்தால் 'நம் சிந்தனை முடிந்தன' என்று இறந்த காலத்தால் நினைத்தனர். பயந்த, செயப்பாட்டு வினைப்பொருளது. (36)

6528. இருபது கரந்தலை யீரைந் தென்பரித்
திருவிலிக் கன்னவை சிதைந்தவோ வென்பார்
பொருதொழி லெம்மொடும் பொருதி போரென்பா
ரொருவரி னொருவர்முன் னுறுக்கி யூன்றுவார்.

"" இருபது கரம்; தலை ஈரைந்து" என்பர்; இத்
திரு இலிக்கு; அன்னவை சிதைந்தவோ? என்பார்,
பொரு தொழில் எம்மொடும் பொருதி போர்! என்பார்,
ஒருவரின் ஒருவர் முன் உறுக்கி ஊன்றுவார்.

பொ :—'இந்த நல்வினை இல்லாதவனுக்குக் கரம் இருபது; தலை பத்து என்பார்கள்; அவை சிதைந்து போயினவோ?' என்பாரும்,

"போர் செய்யும் தொழிலையுடைய எங்களோடு நீ போர் செய்வாயாக' என்பாருமாய், ஒருவர்க்கு முன் ஒருவர் முற்பட்டுச் சென்று வெகுண்டு எதிர்ப்பாராயினர்.

கு:—'இருபது கரந்தலை யீரைந்தென்னுமத் திருவிலி' (பால-190) என்ற பாலகாண்ட அடியோடு இச்செய்யுளின் முதலடி ஒத்திருத்தல் காணலாம். இராவணனுக்கு இருபது கைகளும் பத்துத் தலையும் இருப்பதாகக் கேள்விப்பட்ட வானரங்கள், தாம் கண்டு இராவணனாக மதித்த அரக்கனுக்கு ஒரு தலையும் இரு கையும் இருக்கக்கண்டு 'அன்னவை சிதைந்தவோ' என ஐயுறலாயினர். இராமனோடு போர் செய்யவே வந்துள்ளான் என்ற எண்ணத்தால் 'எம்மொடு பொருதி போர்' என்றார், உறுக்கி - வெகுண்டு. ஊன்றுதல் - எதிர்த்தல். (37)

6529. பற்றினஞ் சிறையிடை வைத்துப் பாருடைக்
கொற்றவர்க் குணர்த்துது மென்று கூறுவார்
எற்றுவ தன்றியே யிவனைக் கண்டிறை
நிற்றலென் பிறிதென நெருக்கி நேர்குவார்.

'பற்றினம் சிறையிடை வைத்துப் பாருடைக்
கொற்றவர்க்கு உணர்த்துதும்' என்று கூறுவார்;
'எற்றுவது அன்றியே, இவனைக்கண்டு, இறை
நிற்றல் என் பிறிது?' என நெருக்கி நேர்குவார்.

பொ:—(வானரரில் சிலர்) இவனைப் பிடித்துச் சிறையில் வைத்துவிட்டுப் பின் உலகுடைய மன்னவனாகிய இராமனுக்கு உணர்த்துவோம் என்று கூறுவார்'; (வேறு சிலர்) 'இவனைத் தாக்குவதை விடுத்து அதற்கு வேறாக இவனைப் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் தானும் நிற்பது ஏன்? என்று சொல்லிக்கொண்டு நெருக்கி எதிர்ப்பார்.

கு:—சிறையிடை வைத்தல் என்பது பாதுகாவலில் வைத்தலை. பாருடைக் கொற்றவர் என்றது இராம இலக்குவரை. எற்றுதல் - மோதுதல்; தாக்குதல். பிறிது - வேறாக. இறை - சிறிதுபோது. எற்றுவதன்றியே பிறிதாகக் கண்டு நிற்றலென் என்க. நேர்தல் - எதிர்த்தல். (38)

6530. இமைப்பதன் முன்விசும் பெழுந்து போயபின்
அமைப்பதென் பிறிதிவ ரரக்க ரல்லரோ
சமைப்பது கொலையலாற் றக்க தியாவதோ
குமைப்பது நலனென முடுகிக் கூறுவார்.

'இமைப்பதன் முன் விசும்பு எழுந்து போயபின்,
அமைப்பது என், பிறிது? இவர் அரக்கர் அல்லரோ?'
சமைப்பது கொலை அலால், தக்கது யாவதோ?
குமைப்பது நலன்' எனமுடுகிக் கூறுவார்.

பொ :—(வேறு சிலர்) நாம் கண் இமைப்பதற்கு முன் இவர்கள் விண்ணிடை எழுந்து போய் விடுவார்களாயின், அதற்குப் பின் நாம் வேறு என்ன செய்ய இயலும்? இவர்கள் இராக்கதர் அல்லரோ?' (எல்லாம் வல்லவர் என்றபடி) இனி நாம் செய்யத்தகுவது இவர்களைக் கொல்லுதலே அன்றி, வேறு தக்க செயல் யாதுளது? ஆதலால், இவர்களை அழிப்பதே நல்லது என்று விரைந்து கூறுவாராயினர்.

கு:—பிறிது என் அமைப்பது என இயையும். அரக்கர் மாயைவல்லராதலின் தப்பிக்க யாதும் செய்யவல்லவர் என்பார், 'இமைப்பதன் முன் விசும்பெழுந்து போயபின் அமைப்பதென் பிறிது' என்றார். சமைப்பது - செய்வது. இவர்களைக் கொல்லுதலே தக்கது, வேறு தக்க செயல் இல்லை என்றவாறு. குமைப்பது-அழிப்பது. முடுகுதல்-விரைதல். (39)

அனுமன் ஆணையின்படி மயிந்தனும் துமிந்தனும் வருதல் 6531-6532

6531. இயைந்தன வியைந்தன வினைய கூறலும்
மயிந்தனுந் துமிந்தனு மென்னு மாண்பினர்
அயிந்திர நிறைந்தவ னாணை யேவலால்
நயந்தெரி காவல ரிருவர் நண்ணினர்,

இயைந்தன இயைந்தன இனைய கூறலும்,
மயிந்தனும் துமிந்தனும் என்னும் மாண்பினர்,
அயிந்திரம் நிறைந்தவன் ஆணை ஏவலால்,
நயம் தெரி காவலர் இருவர், நண்ணினர்.

பொ :—(சேனையின் முன்னணியில் உள்ள வானரர்) தம் மனத்திற்கு ஏற்ற ஏற்ற இத்தகைய சொற்களைச் சொல்லலும், ஐந்திர இலக்கணம் வல்ல அனுமன் ஏவிய கட்டளைப்படி நீதி முறைமையைத் தெரிந்த தலைவர்கள்—மயிந்தன், துமிந்தன் என்னும் மாட்சி மிக்க பெயருடையோர்—இருவர் அங்கு வந்தனர்.

கு :—இயைந்தன இயைந்தன என்ற அடுக்குப் பன்மையுணர்த்த வந்தது. தத்தம் மனத்துக்கேற்ற சொற்களைப் பலரும் பலவாறு கூறினர் என்றபடி. மயிந்தன் துமிந்தன் என்பார் அசுவினி தேவர்களின் புதல்வர்கள். இரட்டையர். அயிந்திரம் என்பது இந்திரனால் செய்யப்பட்ட வடமொழி இலக்கணம். 'விண்ணவர் கோமான் விழுநூல்' (சிலப் - 11-99) எனவும், 'கப்பத்து இந்திரன் காட்டிய நூல்' (154) எனவும் இளங்கோவடிகள் இந்நூலைக் குறிப்பது காணலாம். அனுமன் நவவியாகரண பண்டிதன் ஆதலின், இந்திரனால் செய்யப்பட்ட ஐந்திர வியாகரணத்தையும் அறிந்திருத்தல் இயல்பே. பனம்பாரனாரும் தொல்காப்பியரைக் கூறும்போது 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' (தொல் - பாயிரம்) என்று கூறியிருத்தல் காணலாம். நயம் - நீதி. இனி, நயமொழி - இன்சொல் - தெரிந்த காவலர் எனலும் ஆம். வானர சேனையின் முன்னணியில் எழுந்த ஆரவாரத்தைக் கேட்டு அனுமன், அதன் காரணமறிந்து அமைதியுறச் செய்யுமாறு அவ்விருவரையும் ஏவினன் என்க. (40)

6532. விலக்கினர் படைஞரை வேத நீதிநூல்
இலக்கண நோக்கிய வியல்ப ரெய்தினர்
சலக்குறி யிலரென வருகு சார்ந்தனர்
புலக்குறி யறநெறி பொருந்த நோக்கினர்.

விலக்கினர் படைஞரை; வேதம், நீதி நூல்,
இலக்கணம், நோக்கிய இயல்பர் எய்தினர்,—
'சலக்குறி இலர்' என, அருகு சார்ந்தனர்,—
புலக்குறி அறநெறி பொருந்த நோக்கினர்.

பொ :—வேத நூலிலும் நீதி நூலிலும் (இன்னோர் இன்னவாறிருப்பர் எனக்) கூறப்பட்ட மக்கள் இலக்கணங்களை ஆராய்ந்தறிந்த இயல்பினராகிய அவ்விருவரும், படையில் உள்ளோரை விலக்கிக் கொண்டு அவ்விடத்தை அடைந்து, (வீடணன் முதலோர்) வஞ்சகச் செய்கை இல்லாதவர் என்பதை அறிந்து, அவர்கள் அருகில் சென்று, அவர்கள்பால் ஞானமுடைமைக்குரிய அடையாளமும்,

அறநெறி ஒழுகினவர் என்பதற்குரிய அடையாளமும் பொருந்தி யிருக்கக் கண்டார்கள்.

கு:—வேத நூலும் நீதி நூலும் கூறும் மக்கள் இலக்கணம் நோக்கிய இயல்பினர் என மயிந்தனுக்கும் துமிந்தனுக்கும் காரணப் பெயர் கூறியவாறு. படைஞரை விலக்கி எய்தி, சார்ந்து நோக்கினர் என இயையும். விலக்கினர், எய்தினர், சார்ந்தனர் என்பன முற்றெச்சங்கள். சலம் - வஞ்சகம். குறி - அடையாளம். புலக்குறி - ஞானத்திற்குரிய அடையாளம். அறநெறி, குறி எனப் பின்னும் இயைத்து, அறநெறியில் ஒழுகுபவர் என்பதற்குரிய அடையாளம் எனப் பொருள் கொள்க. வீடணன் முதலியோர்பால் சலக்குறி இல்லை எனவும் புலக்குறியும் அறநெறி அடையாளமுமே உண்டு எனவும் வந்த இருவரும் அறிந்தனர் என்றவாறு. (41)

வீடணன் முதலியோரை யார் என வினவுதல்

6533. யாரிவ ணெய்திய கருமம் யாவது
போரது புரிதிரோ புறத்தொ ரெண்ணமோ
சார்வுற நின்றநீர் சமைந்த வாறெலாம்
சோர்விலிர் மெய்ம்முறை சொல்லு வீரென்றான்

யார்? இவண் எய்திய கருமம் யாவது?
போர் அது புரிதிரோ? புறத்து ஓர் எண்ணமோ?
சார்வு உற நின்றநீர் சமைந்தவாறு எலாம்,
சோர்விலீர், மெய்ம் முறை சொல்லுவீர் என்றான்.

பொ:—'எம் சேனையைச் சார்ந்து நின்ற நீர் யார்? இங்கு வந்த செய்தி யாது? எம்மோடு போர் புரியப் போகின்றீர்களா? அல்லது அதற்குப் புறம்பான வேறோர் எண்ணம் உண்டா? உம் மனத்தில் எண்ணியவாறு எல்லாவற்றையும் மறதியால் விடாமல் உண்மையாகச் சொல்லுங்கள்' என்று மயிந்தன் கூறினான்.

கு:—சார்வுற வந்த நீர் யார் என இயையும். போரது என்பதில் அது பகுதிப் பொருள் விகுதி. மன்னவர் தம் பகைவர் சேனைக்குப் போரைக் குறித்து வருதலும் நட்பை நாடி வருதலும் இயல்பாதலின் 'போரதுபுரிதிரோ? புறத்தொ ரெண்ணமோ?' என்று வினவினான். சமைதல் என்றது இங்கு மனத்து ஆராய்ந்து துணிந்தனவற்றை. சோர்வு - மறதி. இனி அச்சத்தால் மனம் சோர்வுபடாமல் எனக் கூறலும் ஆம். தம் கருத்தைச் சொல்லுங்கால் ஒன்று விடாமல் சொல்லுதலும் உண்மையாகச் சொல்லுதலும் வேண்டும் என்ற

வாறு. மயிந்தன் விஞவிய ஐய விஞவில் பின்னது மெய்ம்மையாதல் தெரியலாம். 'மயிந்தனு மவ்வுரை' என (49) பின் கூறுதலின் இங்கு வினவியவன் மயிந்தனே என்பது பெறப்படும். (42)

வீடணன் துணேவனுன அனலன் விடை 6534-6538

6534. பகலவன் வழிமுதற் பாரி ஞயகன்
புகலவன் கழலடைந் துய்யப் போந்தனன்
தகவுறு சிந்தையன் றரும நீதியன்
மகன்மகன் மைந்தனுன் முகற்கு வாய்மையான்.

'பகலவன் வழிமுதல் பாரின் நாயகன்,
புகல் அவன் கழல் அடைந்து, உய்யப் போந்தனன்—
தகவு உறு சிந்தையன், தரும நீதியன்,
மகன் மகன் மைந்தன் நான்முகற்கு, வாய்மையான்.

பொ :—நடுவுநிலைமை பொருந்திய மனத்தையுடையவனும், தருமத்தோடு தொடர்புடைய நீதியோடு பட்ட ஒழுக்கமுடையவனும், உண்மை பேசும் இயல்புடையவனும், பிரமன் பெயரனுக்கு மகனும் ஆகிய வீடணன், சூரியன் மரபில் தோன்றிய முதன்மையுடையவனும் பூமிக்குத் தலைவனும் நல்லோர்க்குப் புகலிடமாக உள்ளவனுமான இராமனுடைய திருவடியைப் புகலிடமாக அடைந்து வாழ்வதற்காக வந்துள்ளான்.

கு :—மன மொழி மெய்களால் தூய்மையுடையவன் வீடணன் என அனலன் விளக்கியவாறு. 'தகவுறு சிந்தையன்' என்றதால் மனத்தூய்மையும், 'தரும நீதியன்' என்றதால் நன்னெறி ஒழுகும் அவன் உடம்பின் தூய்மையும், வாய்மையான் என்றதால் அவன் மொழியின் தூய்மையும் புலப்பட்டவாறு காண்க. தோற்றத்தால் தீமை செய்யும் அரக்க உடம்பினனுயினும் வீடணன் ஒழுக்க நெறியில் அந்தணனுவான் என்பது விளக்கியவாறு. இனி, அவன் மரபின் பெருமை புலப்பட 'நான்முகற்கு மகன் மகன் மைந்தன்' என்முன். பிரமன் மகன் புலத்தியன்; புலத்தியன் மகன் விச்சிரவசு; விச்சிரவசுவின் மகன் வீடணன் ஆதலின் இங்ஙனம் கூறிஞன். ஒருவரை அறிமுகப்படுத்துங்கால் அவர் மூன்று தலைமுறையிலுள்ளாரையும் கூறி அறிமுகப்படுத்தல் பழைய மரபு. இவ்வாறு கூறியதால் வீடணன் அரக்கர் மரபினன் என்பது வெளிப்படாமல் அந்தணர் மரபினன் என்பது புலப்படுத்தியவாறும் ஆம். இவ்வாறே சூர்ப்பணகையும் இராமன்பால் தன் மரபு கூறும்போது 'பூவிலோன்

புதல்வன் மைந்தன் புதல்வி' (ஆரணிய - சூர்ப்பணகைப் - 39) எனக் கூறியிருத்தல் காணலாம். சூரியன் எவ்வுயிர்க்கும் ஒருபடித்தாய் வெயில் வீசி ஒளி தருதல் போல அவன் வழிவந்த இராமனும் பிறந்த குலம் நோக்காது அருள் செய்தற்குரியவன் என்பது புலப் படப் 'பகலவன் வழிமுதல்' என இராமனைப் புகழ்கின்றான். இராமன் தலைமையைப் புகழ்வானாய்ப் 'பாரிநாயகன்' என்றான். அறவோர்க்கு அரணாக உள்ளவன் என்பான் 'புகலவன்' என்றான். அடைக்கலம் ஏற்றுக்கொள்ளும் அருட்குணம் நிறைந்தவன் என்ற வாறு. ஒருபொருள்மேல் அடுக்கி வந்த இம் முப்பெயரும் வீடணனை அடைக்கலமாக ஏற்றுக்கொள்ளுதற்குரிய தகுதியுடைமை யையே வற்புறுத்துவனவாதல் காணலாம். அவன் கழல் புகல டைந்து என மாறிக் கூட்டலும் ஆம். (43)

6535. அறநிலை வழாமையு மாதி மூர்த்திபால்
நிறைவரு நேயமு நின்ற வாய்மையும்
மறையவர்க் கன்புமென் றினைய மாமலர்
இறையவன் றரநெடுந் தவத்தி னெய்தினான்.

அறநிலை வழாமையும் ஆதி மூர்த்திபால்
நிறைவரு நேயமும், நின்ற வாய்மையும்,
மறையவர்க்கு அன்பும், என்று இனைய, மாமலர்
இறையவன் தர, நெடுந் தவத்தின் எய்தினான்.

பொ :—அறநெறியில் நின்று ஒழுகுதலில் தவறாமையும், ஆதி மூர்த்தியாகிய திருமாலிடத்து நிறைந்த பக்தியும், நிலைபேறுடைய வாய்மையே பேசுதலும், அந்தணர்க்கு அன்பு செய்தலும் என்ற இப் பெருங் குணங்களை (வீடணன் தன்) பெரிய தவத்தின் பயனாகச், சிறப்புடைய உந்திக் கமலத்தில் தோன்றிய பிரமன் தருதலால் பெற்றவன்.

கு :—அரக்கர் குடியில் தோன்றிய வீடணனுக்கு நற்பண்புகள் உண்டாதற்குக் காரணங் கூறியவாறு. மாமலர் இறையவன், பிரமன். அறநிலை வழாமை முதலிய பண்புகளைத் தவஞ்செய்து பெற்றவன் வீடணன் என அவன் பெருமை புலப்படுத்தியவாறு. (44)

6536. சுடுதியைத் துகிலிடைப் பொதிந்த துன்மதி
யிடுதியே சிறையிடை யிறைவன் றேவியை

விடுதியே லுய்குதி விடாது வேட்டியேல்
படுதியென் றுறுதிகள் பலவும் பன்னினான்.

"சுடு தியைத் துகிலிடைப் பொதிந்த துன்மதி!
இடுதியே சிறையிடை இறைவன் தேவியை;
விடுதியேல் உய்குதி; விடாது வேட்டியேல்
படுதி" என்று உறுதிகள் பலவும் பன்னினான்.

பொ :—"சுடுகின்ற தீயைத் துணியில் மூடிவைக்கும் அறிவிலியே! உலகிற்குத் தலைவனான இராமன் மனைவியாகிய சீதையைச் சிறையில் இடுவாயோ? (அச்சீதையை) விடுவாயாயின் நீ வாழ்வாய்; அவளை விடாது விரும்புவாயாயின் நீ வீழ்வாய்" என்று உறுதிமொழிகள் பலவற்றையும் விரித்துச் சொன்னான்.

கு :—சுடுதீ என்பது எதுகை நோக்கிச் சுடுதி எனக் குறுகியது. நெருப்பைத் துணியில் மூடும் செயலும் இறைவன் தேவியைச் சிறையிடும் செயலும் ஒரு தன்மையன என்பான், 'சுடுதியைத் துகிலிடைப் பொதிந்த துன்மதி!' என விளித்தான். நெருப்பைத் துகிலிற் பொதியும் துன்மதியுடையான் போல நீ தேவியைச் சிறையிடையிடுதி என்பான், உவமைக்குரிய அடையைப் பொருள் மேல் ஏற்றிச் 'சுடுதியைத் துகிலிடைப் பொதிந்த துன்மதி' என்றான். இது ஒட்டணியின்பாற்படும். நெருப்பை மடியிற் கொண்டவன் மாய்தல் போலத் தேவியைச் சிறையிடை வைத்த நீயும் மாய்தல் திண்ணம் என்றவாறு. "போரரக்க ரென்னும் கான்சுட முளைத்த கற்பிற் கனலியைக் கண்ணிற் கண்டாள்" (சூர்ப்பணகைப் - 58) என்றது இங்கு நினைத்தற்குரியது. (45)

6537. மறந்தரு சிந்தையன் மதியி னீங்கினான்
பிறந்தனை பின்பதிற் பிழைத்தி பேர்குதி
யிறந்தனை நிற்றியே லென்ன வின்னவன்
துறந்தன னெனவிரித் தனலன் சொல்லினான்.

'மறம் தரு சிந்தையன், மதியின் நீங்கினான்,
"பிறந்தனை பின்பு; அதின் பிழைத்தி; பேர்குதி;
இறந்தனை, நிற்றியேல்" என்ன, இன்னவன்
துறந்தனன்' என விரித்து, அனலன் சொல்லினான்.

பொ :—பாவச் செயல்களையே கொண்ட நெஞ்சத்தையுடையவனும் அறிவு இல்லாதவனுமான இராவணன், (வீடணனை

வெகுண்டு) "நீ எனக்குப் பின் பிறந்த தம்பியாக இருக்கின்றாய் அதனால் பிழைத்திருக்கின்றாய்; இவ்விடத்தை விட்டுச் செல்வாயாக மேலும் இங்கு நிற்பாயானால் இறப்பாய்" என்று கூற, இந்த வீடணன் (அந்த இராவணனை விட்டுத் துறந்தான் என்று அனலன் விரித்துச் சொன்னான்.

கு:—அறச் சிந்தனையும் அறிவுடைமையும் இராவணனுக்கு இல்லாமையால் வீடணன் சொல்லை ஏற்றுக்கொள்ளாமல் வெகுண்டு துரத்தினான் என்றவாறு. மறம் - பாவம். அவன் சிந்தனையில் அறச் சிந்தனைக்கே இடமில்லை என்பான், 'மறந்தரு சிந்தையன், என்றான். மதியினீங்கினான் என்றது அறிவில்லாதவன் என்றவாறு. பின்பு பிறந்தனை அதிற் பிழைத்தி என இயையும். பிழைத்தி, போகுதி, என்பவற்றில் இகரம், முறையே முன்னிலை வினைமுற்று விகுதியும் முன்னிலை ஏவல் விகுதியும் ஆம். நிற்றியேல் இறந்தனை என்பதில் துணிவுபற்றி எதிர்காலம் இறந்த காலமாய் வந்தது; வழுவமைதி. இன்னவன் என்றது வீடணனைச் சுட்டிக் கூறியது. 'இங்கு நிற்றியேல் இறந்தனை' என்னும் கடுஞ் சொல்லை இராவணன் சொன்ன பின்னரே வீடணன் அவனைத் துறந்தான் என வீடணனின் நற்பண்பினை விளக்கியவாறு. (46)

6538. மயிந்தனு மவ்வுரை மனத்து வைத்துநீ
யியைந்தது நாயகற் கியம்பு வேனெனாப்
பெயர்ந்தனன் றம்பியும் பெயர்வில் சேனையு
மயர்ந்திலிர் காமினென் றமைவ தாக்கியே.

மயிந்தனும் அவ் உரை மனத்து வைத்து, 'நீ
இயைந்தது நாயகற்கு இயம்புவேன்' எனா,
பெயர்ந்தனன்—'தம்பியும் பெயர்வு இல் சேனையும்,
அயர்ந்திலிர் காமின்!' என்று அமைவது ஆக்கியே.

பொ:—மயிந்தனும் அனலன் கூறிய அச்சொற்களை மனத்தில் கொண்டு 'நீ அடைக்கலம்புக வந்திருப்பதை இராமனுக்குச் சொல்கின்றேன்' என்று வீடணனை நோக்கிக் கூறிவிட்டு, 'தம்பியாகிய துமிந்தனும் பின்வாங்காத சேனையும் சோர்வின்றிக் காவல் செய்து கொண்டிருங்கள்! என்று அவர்களை விழிப்புடன் இருக்கச் செய்து விட்டு (இராமனிடம்) போனான்.

கு:—'நீ இயைந்தது' என்றது வீடணனை நோக்கிக் கூறியதாகும். வீடணன் தன் வரலாற்றைத் தானே கூற வியலாமையால் அனலன் என்ற அமைச்சன் கூறினான்; அவன் சொற்களால்

வீடணன் வருகைக்குரிய காரணம் உணர்ந்த மயிந்தன் அவ்வீடணனை நோக்கியே 'நீ இயைந்தது நாயகற்கு இயம்புவேன்' என்றான் என்க. நீ இயைந்தது என்றது நீ அடைக்கலம்புக வந்துள்ளதை என்றவாறு. நாயகன் என்றது இராமனை. வந்துள்ள அரக்கர் நிலை முழுதும் அறியக் கூடாமையின், அவர்கள் அப்புறம் போகாது காத்துக் கொள்ளுங்கள் என்பான். "தம்பியும் பெயர்வில் சேனையும் அயர்ந்திலிர் காமின்" என்றான். படர்க்கைப் பெயர்களை எண்ணி 'அயர்ந்திலிர் காமின்' என்று முன்னிலை வினையான் முடித்தது இடவழுவமைதியாகும்; "ஆவுமானியற் பார்ப்பனமாக்களும் பெண்டிரும்......நும்மரண்சேர்மின்" (புறநா—9) என்புழிப்போல. இனித் தம்பியும் என்பதைத் தம்பியாகிய நீயும் என்று பொருள் கொண்டு, தம்பியாகிய நீயும் சேனையும் காமின் என வழாநிலையாகக் காட்டலும் ஆம். 'எம்பியை யீங்குப் பெற்றேன்' (சீவக-1760) என்புழி 'எம்பி, முன்னிலைப் படர்க்கை' என நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் இலக்கணக் குறிப்புத் 'தம்பியும்' என்புழியும் பொருந்தும். மயிந்தனும், இயம்புவேன் என, அமைவதாக்கிப் பெயர்ந்தனன் என இயையும். (47)

மயிந்தன் இராமனடி வணங்குதல்

6539. தருமமு ஞானமுந் தவமும் வேலியாய்
மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய்க்
கருணையங் கோயிலு ளிருந்த கண்ணனை
அருணெறி யெய்திச்சென் றடிவ ணங்கினான்.

தருமமும் ஞானமும் தவமும் வேலியாய்,
மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய்க்,
கருணை அம் கோயிலுள் இருந்த கண்ணனை
அருள் நெறி எய்திச் சென்று அடி வணங்கினான்.

பொ :—அறநெறி, தவஒழுக்கம் ஞானத் தெளிவு ஆகிய மூன்றும் மும்மதில்களாகவும், நெருங்குதற்கரிய பெருமையும் பொறுமையும் வாயில்களாகவும் கொண்டுள்ள கருணை ஆகிய கோயிலினுள் இருந்த இராமனை, அவன் அருள் குறிப்பின்படி நெருங்கிச் சென்று திருவடிகளை வணங்கினான் (மயிந்தன்)

கு :—கருணைக்கு ஆதாரமான இராமனைக் காட்டிலும் ஆதேயமாகிய கருணை பெரிது என்ற கருத்தால் கருணையைக் கோயிலாக உருவகஞ் செய்து அக்கோயிலில் உள்ள மூர்த்தியாக இராமனைக் காட்டியவாறு. "நின்னிற் சிறந்த நின்றாளிணையவை" (பரிபாடல் –

4, 62) என்புழி வீடளிக்குங்கால் நின்னிலுஞ் சிறந்த நின் தாளினை யுடையை'' எனப் பரிமேலழகர் எழுதியுள்ள உரை இங்கு நினைதற் குரியது. உயிர்களுக்கு வீடளிப்பதில் இறைவனைவிட அவன் அருளாகிய தாள்கள் பெரியன என்பதே கருத்து. வீடணன் அடைக் கலம் புக வந்துள்ள செய்தியைக் கேள்விப்பட இருக்கும் இராமனை இவ்வாறு கூறியதால், இராமன் ஒருகால் வீடணனை ஏற்றுக்கொள் ளாத குறிப்புடையனுயினும் அவனினும் பெரிதாய அருள் முற்பட்டு அவ்வீடணனை ஏற்றுக் கொள்ளும் என்ற குறிப்புப் புலப்படுத்திய வாறு காணலாம். புறமதிலும் இடைமதிலும் அகமதிலும் எனக் கோயிலுக்கு மூன்று மதில்கள் இருத்தல் இயல்பு. கருணையங் கோயிலுக்கும் அத்தகைய மூன்று மதில்கள் உண்டு என்பார், தருமமும், தவமும், ஞானமும் வேலியாய் என்ருர். வேலி என்றது மதிலை. இறுதியில் நிற்க வேண்டிய ஞானம் செய்யுளாதலின் ஓசை நோக்கி இடையில் நின்றது. தருமமுதிர்ச்சியால் தவமும், தவமுதிர்ச்சியால் ஞானமும் பெறுதலே முறையாதலும், இம்மூன்றும் உள்வழியன்றி அருள் நிலை பெருமையும் நினைக. இராமன் தருமத்தின் வடிவாகவும் தவத்தின் வடிவாகவும் ஞானத்தின் வடிவாகவும் விளங்கினுன் என் பதே கருத்து. அறனல்லவரைத் தடுக்க அறமாகிய மதிலும், அவஞ் செய்வோரைத் தடுக்கத் தவமாகிய மதிலும், ஞானமில்லாதாரைத் தடுக்க ஞானமாகிய மதிலும் அக்கருணையங் கோயிலுக்கு இருந்தன எனின் மறவோர்க்கும் அவநெறியோர்க்கும் அஞ்ஞானிகட்கும் உய்தி காட்டாது மும்மதிலினுள் கருணையங்கோயிலுள்ளிருக்கும் கண்ணனுல் பயன் என்னை? என்பாரை விலக்கி, அங்ஙனம் மும்மதில்கள் இருப்பினும் யாவர்க்கும் மேலாம் பெருமையும் குற்றம் பொறுக்கும் பொறுமையும் ஆகிய இரண்டு வாயில்களின் வழியாகச் சென்று தகுதியில்லோரும் உய்தி பெறலாம் என்பார், 'மருவரும் பெருமையும் பொறையும் வாயிலாய் என்ருர். வலிமையின் பெருமையால் பிறர் தன்னை அழித்தல் கூடுமோ என்ற அச்சம் யாரினும் வலியனுகிய இராமன்பால் இல்லையாதலின் எத்தகையோரும் காண்டற்கெளியனுய் இருக்கின்ருன் என்பார், பெருமையை வாயிலாக உருவகஞ் செய் தார். எத்துணை வலியவரும் இவனை அழிக்கலாம் என எண்ணி நெருங்க முடியாத பெருமையன் என்பார் 'மருவரும் பெருமை' எனச் சிறப்பித்தார். குற்றஞ் செய்தோரும் அஞ்சாது வந்து அடைக் கலம் புகுந்தால் அவரைப் பொறுத்தருள் செய்யும் பண்பு இராமனுக்கு உண்டு என்பார், 'பொறையும் வாயிலாய்' எனப் பொறையை வாயிலாக உருவகஞ் செய்தார். கருணையே கோயிலென்னுமாறு விரிந்து தோன்றும் இராமன் கருணை அவன் கண் வழியாகவே புலப் பட்டு விரிதலின் 'கண்ணனை' எனக் கண்ணுகிய உறுப்பால் அவனுக்குப் பெயர் கொடுத்தார்.

இங்ஙனம் கூறியதால், இராவணன் தம்பியாகிய வீடணன் தன்னை அழித்தலும் கூடும் என்று அஞ்சாத பெருமையுடைமையும், இராவணன் தம்பியாகப் பிறந்த குற்றத்தைப் பொறுத்துக்கொண்டு அவனை அடைக்கலம் ஏற்றுக்கொள்ளும் பொறையுடைமையும் இராமனுக்கு உண்டு என்பது புலப்படுத்தியவாறு.

மயிந்தன் வானர சேனையில் சேர்ந்தவனாயினும் இராமனை அடையுங்கால் அவன் அருட்குறிப்பறிந்தன்றிச் சேறல் முறையன்றாகலின் "அருணெறியெய்தி" என்றார். 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' (திருவாசகம் சிவபுராணம்) என்றதும் இங்குக் குறிக் கொண்டு நோக்கத்தகும். (48)

மயிந்தன் இராமனுக்குக் கண்டதும் கேட்டதும் கழறல்

6540. உண்டுரை யுணர்த்துவ தூழி யாயெனப்
புண்டரீ கத்தடம் புரையும் புங்கவன்
மண்டலச் சடைமுடி துளக்க வாய்மையால்
கண்டதுங் கேட்டதுங் கழறல் மேயினன்.

'உண்டு உரை உணர்த்துவது, ஊழியாய்!' எனப்
புண்டரீகத் தடம் புரையும் புங்கவன்
மண்டலச் சடைமுடி துளக்க, 'வாய்மையால்
கண்டதும் கேட்டதும் கழறல் மேயினன்.'

பொ :—'ஊழி இறுதியிலும் அழியாமல் வாழ்தற்குரியவனே! உனக்குத் தெரிவிக்க வேண்டிய வார்த்தை ஒன்று உண்டு' என மயிந்தன் கூற, தாமரைப் பொய்கை போன்ற திருமேனியையுடைய இராமன், தன் வட்டமாகக் கட்டியுள்ள சடை முடியை (உடன்பாடு தோன்ற) அசைக்க, (மயிந்தன்) தான் கண்டதையும் அனலன் வாயிலாகக் கேட்டதையும் உண்மையாகச் சொல்லத் தொடங்கினன்.

கு :—ஊழியாய்! உணர்த்துவது உரை உண்டு என இயையும். ஊழி தோறூழி வாழி என்ற கருத்துப் புலப்பட 'ஊழியாய்' என இராமனை விளித்தான். கண்ணும் கையும் உந்தியும் அடியும் செந்தாமரை பூத்தாற்போல் தோன்ற நீலவண்ணமுடைய இராமன் மேனியிலை படர்ந்த பொய்கைபோல் காணப்படுவதால் 'புண்டரீகத் தடம் புரையும் புங்கவன்' என்றான். "கண்ணும்! கண் கைகால், தூய செய்ய மலர்களாச் சோதிச் செவ்வாய் முகிழதாச், சாயல்சாமத் திருமேனித் தண்பாசடையாத் தாமரை நீள், வாசத் தடம்போல் வருவானே! ஒரு நாள் காணவாராயே" (திருவாய்மொழி. 8.5.1)

என்ற ஆழ்வார் அருளிச் செயலும் இங்கு ஒப்புநோக்கத்தகும். இராமன் முடியசைத்தலால் உடன்பாடு தெரிவிக்க மயிந்தன், தான் கண்டதையும், அனலன் மூலம் கேள்விப்பட்டதையும் வாய்மையாகச் சொல்லத் தொடங்கினன் என்க. (49)

6541. விளைவினை யறிந்திலம் வீட ணப்பெயர்
நளிமலை யாக்கைய னல்வ ரோடுடன்
களவியல் வஞ்சனை யிலங்கை காவலற்
கிளவனஞ் சேனையி னடுவ ணெய்தினன்.

‘விளைவினை அறிந்திலம்; வீடணப் பெயர்
நளிமலை யாக்கையன் நால்வரோடு உடன்
களவு இயல் வஞ்சனை இலங்கை காவலற்கு
இளவல், நம் சேனையின் நடுவண் எய்தினன்.

பொ :—பின் விளைவதை அறிந்திலோம்; களவுத் தன்மை பொருந்திய வஞ்சனையையுடைய இலங்கைக்கு அரசனாகிய இராவணனுக்குத் தம்பியாகிய வீடணன் என்ற பெயரினையுடைய குளிர்ந்த மலைபோன்ற உம்பினையுடையவன், தன்னொடு சேர்ந்த அமைச்சர் நால்வரோடு நம் வானர சேனையின் நடுவில் வந்து சேர்ந்தான்.

கு :—வஞ்சனை செய்த இராவணன் தம்பி ஆதலின், அவன் வந்தமையால் தீமை விளையப் போகின்றதோ நன்மை விளையப் போகின்றதோ யாம் அறியோம் என மயிந்தன் தன் அச்சத்தைப் புலப்படுத்தியவாறு. துமிந்தனையும் உளப்படுத்தி அறிந்திலம் எனப் பன்மையாற் கூறினன். சீதையை வஞ்சனையாற் கவர்ந்த கள்வன் இராவணன் ஆதலின், அவனைக் களவியல் வஞ்சனை இலங்கை காவலன்’ என்றான். இராவணனுக்குரிய கள்ளத் தன்மையும் வஞ்சனையும் வீடணன்பாலும் இருக்கலாம் என்பதைப் புலப்படுத்தவே ‘இலங்கை காவலற்கு இளவல்’ என்றான். நால்வர் என்றது, அனலன் முதலிய அமைச்சர் நால்வரையும் ஆம். (50)

6542. கொல்லுமின் பற்றுமி
னென்னுங் கொள்கையால்
பல்பெருந் தானைசென்
றடர்க்கப் பார்த்தியாம்

நில்லுமி னென்றுநீர்
யாவிர் நுந்நிலை
சொல்லுமி னென்னவோர்
துணைவன் சொல்லினான்.

' " கொல்லுமின், பற்றுமின் " என்னும் கொள்கையால்
பல்பெருந் தானை சென்று அடர்க்கப் பார்த்து, யாம்
" நில்லுமின் " என்று, " நீர் யாவிர்? நும் நிலை
சொல்லுமின் " என்ன ஓர் துணைவன் சொல்லினான்.

பொ :—'கொல்லுங்கள் ; இறுகப் பற்றுங்கள்' என்கின்ற சொற்களோடு நம் பலவாய பெரிய சேனை சென்று அவர்களை நெருக்கா நிற்க, யாம் பார்த்து, 'நில்லுங்கள்' என்று அச்சேனையை அமைத்துவிட்டு, (வந்துள்ளவர்களை நோக்கி) நீங்கள் யார்? உம் நிலைமையைச் சொல்லுங்கள் என்று கேட்க, வீடணன் துணைவர் நால்வருள் ஒரு துணைவன் (பின் வருமாறு) சொன்னான்.

கு :—கொள்கை - கருத்து; இங்கு அக்கருத்தினையுடைய சொல்லைக் குறித்து நின்றது. ஆல் உடனிகழ்ச்சிக்கண் வந்தது. யாம் என்றது இங்கும் தும்மிந்தனை யுளப்படுத்தியது. நுந்நிலை என்றது, நீர் இங்கு வரக் காரணமாயிருந்த நிலை என்றவாறு. ஓர் துணைவன் என்றது அனலனை. அவன் சொன்னது வருஞ் செய்யுட்களால் உணரலாம். (51)

6543. முரண்புகு தீவினை முடித்த முன்னவன்
கரண்புகு சூழலே சூழக் காண்பதோ
ரரண்பிறி தில்லென வருளின் வேலையைச்
சரண்புகுந் தனனென முன்னஞ் சாற்றினான்.

' " முரண்புகு தீவினை முடித்த முன்னவன்
கரண்புகு சூழலே சூழக் காண்பது ஓர்
அரண் பிறிது இல் என, அருளின் வேலையைச்
சரண் புகுந்தனன் " என முன்னம் சாற்றினான்.

பொ :—(அறத்திற்கு) முரணைப் பொருந்திய தீவினையைச் செய்து முடித்த தன் அண்ணனான இராவணன் தன் மனம் போன போக்கிலே போகா நிற்க (வீடணன் கண்டு, அத்தீவினையில் நின்றும் விலகுமாறு) அடைதற்குரிய பாதுகாவல் (இராமன் திருவடி

யன்றி) வேறு இல்லை என்று (தெளிந்து) அருட்கடலாகிய இராமனை அடைக்கலம் புகுந்தான்' என்று முன்னம் தொகுத்துக் கூறினான்.

கு :—'தீவினை' என்றது கற்பினுக்கு அணியாகிய சீதையைக் கவர்ந்ததை. முன்னவன், தனக்கு முன்னே பிறந்த அண்ணனான இராவணன். கரண், கரணம் என்பதன் விகாரம். மனம் அந்தக் கரணங்களுள் ஒன்று ஆகலின் அதனைக் கரணம் என்ற சொல்லால் குறிப்பிட்டார். மனத்தைத் தீதொரீஇ நன்றின்பால் செலுத்தாது அதன் வழியே பின்பற்றி ஓடும் இராவணன், அத் தீவினையால் அழிவது திண்ணம் ஆதலின், அத் தீவினையாலாய அழிவினின்றும் தான் உய்ய அடைதற்குரிய பாதுகாவல் இராமன் திருவடியன்றி வேறு இல்லை என்று வீடணன் தெளிந்து இராமனை அடைக்கலம் புகுந்தான் என்றவாறு. காண்பதோர் அரண் - அடைதற்குரிய பாதுகாவல். காண்பது என்பது அடைதலை உணர்த்தியது. வீடணனை ஏற்றுக் கொள்வதற்குரிய தகுதியுடைமை புலப்பட இராமனை 'அருளின் வேலை' என்று உருவகித்தவாறு. சரண் - அடைக்கலம். முன்னஞ் சாற்றினான் என்றது முன் தொகுத்துக் கூறினான் என்னும் கருத்தினது. (52)

6544. ஆயவன் றருமமு மாதி மூர்த்திபால்
மேயதோர் சிந்தையு மெய்யும் வேதியர்
நாயகன் றரநெடுந் தவத்து நண்ணினன்
தூயவ னென்பதோர் பொருளுஞ் சொல்லினான்.

'"ஆயவன் தருமமும் ஆதி மூர்த்தி பால்
மேயது ஓர் சிந்தையும் மெய்யும் வேதியர்
நாயகன் தர, நெடுந் தவத்து நண்ணினான்
தூயவன்" என்பது ஓர் பொருளும் சொல்லினான்.

பொ :—"அவ் வீடணன், தரும வழியில் நடத்தலையும் ஆதி மூர்த்தியாகிய திருமாலிடத்துப் பொருந்திய பத்திச் சிந்தையையும், மெய் பேசுதலையும் வேதியர் தலைவனான பிரமன் வரமாகத் தரத் தான் செய்த பெருந் தவத்தின் பயனாகப் பெற்றுள்ளவன்; தூய்மையுடையவன்" என்ற செய்தியையும் சொன்னான்.

கு :—"அற நிலை வழாமையு மாதி மூர்த்திபால், நிறைவரு நேயமும் நின்ற வாய்மையும், மறையவர்க் கன்பு மென்றினைய மாமலர், இறையவன்றர நெடுந்தவத்தி னெய்தினான்" என முன் (46) அனலன் கூறியதையே மயிந்தன் வாங்கிக் கூறியவாறு.

தூயவன் என்று இங்குக் கூறியது அங்குக் கூறியுள்ள மறையவர்க் கன்புசெய்தலை உணர்த்தியதாகவும் கொள்ளலாம். தூயவர்க்கு அன்பு செய்பவனாதலின் தூயவன் எனப்பட்டான் என்பது கருத்து. (53)

6545. கற்புடைத் தேவியை விடாது காத்தியே
லெற்புடைக் குன்றமா மிலங்கை யேழைநின்
பொற்புடை முடித்தலை புரளு மென்றொரு
நற்பொரு ளுணர்த்தின னென்று நாட்டினான்.

' " கற்புடைத் தேவியை விடாது காத்தியேல்
எற்புடைக் குன்றம் ஆம் இலங்கை; ஏழை! நின்
பொற்புடை முடித்தலை புரளும்—என்று ஒரு
நற் பொருள் உணர்த்தினன் " என்றும் நாட்டினான்.

பொ :—"கற்பினையுடைய சீதையை விடாமல் சிறையில் வைத்துக் காத்திருப்பாயாயின், இலங்கைமா நகரம், (அரக்கரின்) எலும்பின் மலையாக ஆய்விடும்; அறிவில்லாதவனே! நின் அழகு டைய முடியணிந்த தலைகள் தரையில் புரளும்" என்ற நல்ல ஓர் கருத்தையும் (இராவணனுக்கு வீடணன்) உணர்த்தினான்' என்ப தையும் (அவன் துணைவன் என்பால்) உறுதியாகக் கூறினான்.

கு :—சீதையை விடாது சிறையில் வைத்திருந்தால் இலங்கையி லுள்ள அரக்கர்; அனைவரும் அழிவர்; அந் நகரின் தலைவனாகிய நீயும் அழிவாய் என்ற கருத்து உண்மையாதலின் அதனை 'ஒரு நற் பொருள்' எனச் சிறப்பித்தார். இலங்கை எற்புடைக் குன்றமாம் என்றது, அரக்கர் அனைவரும் அழிவர் என்ற கருத்தை உணர்த் தியது. இறந்த அரக்கரின் எலும்புகள் மலைபோலக் குவிந்து கிடக்கும் என்றவாறு. சீதையை விடாமலிருந்தால் இராமன் அம் பால் அனைவரும் அழிதல் திண்ணம் என்பதை வீடணன் முன்னரே எண்ணியுரைத்தான் என்பதை, அனலன் தனக்குக் கூறினான் என்றான் மயிந்தன். "இறைவன் தேவியை விடுதியே லுய்குதி விடாது வேட்டியேல் படுதி," (47) என்ற அனலன் கூற்றை மயிந்தன் வாங்கிக் கூறியது. (54)

6546. ஏந்தொழி லிராவண னினைய சொன்னநீ
சாந்தொழிற் குரியையென் சார்பு நிற்றியே

லாந்தினைப் பொழுதினி லகறி யாலெனப்
போந்தன னென்றனன் புகுந்த தீதென்றான்.

' " ஏம் தொழில் இராவணன் இனைய சொன்ன நீ
சாம் தொழிற்கு உரியை; என் சார்பு நிற்றியேல்;
ஆம் தினைப் பொழுதினில் அகல்தியால்—எனப்
போந்தனன்" என்றனன் புகுந்தது ஈது' என்றான்.

பொ:—'பிறரை வருத்துவதைத் தொழிலாகக் கொண்டுள்ள இராவணன், வீடணனை நோக்கி) 'இத்தன்மையான சொற்களைச் சொன்ன நீ என் முன் நிற்பாயானால் சாகும் தொழிற்கே யுரியை ஆவாய்; (ஆதலால்,) தினையளவு பொழுதில் இவ்விடத்தை விடுத்துச் செல்வாயாக' என்று வெகுண்டு கூறியதால், வீடணன் (அவனைத் துறந்து இங்குச் சரணடைய) வந்தான்' என்று (அனலன்) கூறினான்; நிகழ்ந்தது இதுவே என்று மயிந்தன் கூறினான்.

கு:—ஏம் - வருத்தம். இங்கு வினைத்தன்மைப் பட்டு நின்றது. அழச் செய்பவன் என்ற பொருள் இராவணன் என்ற பெயர்க்கே உண்டு; இங்கு அப்பொருளை விளக்க ஏம் தொழில் இராவணன் என அடை கொடுத்தான். பிறரை வருத்துவதையே தொழிலாகவுடையவன் ஆதலின் தன்னுடன் பிறந்த தம்பியையும் வருத்தி அனுப்பினான் என்ற கருத்தும் அவ்வடையால் பெறப்படுதல் காணலாம். இனி, யாரையும் ஏவுந் தொழிலையுடைய இராவணன் எனலுமாம். சாந்தொழிற்குரியை என்றது, யான் உன்னைக் கொன்று விடுவேன் என்னும் கருத்தினது. என்சார்பு நிற்றியேல் என்புழிச் சார்பு முன் என்னும் பொருளது. முன் என்பது அவ்விராவணனைச் சார்ந்துள்ள இடமாதலும் காண்க. தினை ஆம் பொழுது என மாறுக. தினை அளவாகிய சிறு போதினில் நீங்குக என்றவாறு. வீடணன் பகைவர் சார்பினனாகக் காணப்படுதலால் தினைப்போது அவன் இங்கு நிற்பதாலும் ஏதம் உண்டாகலாம் என்ற கருத்தால் இராவணன் இவ்வாறு கூறலானான். அகல்தி - நீங்குதி. ஆல் - அசை. என்றனன் என்றது அனலனை. என்றான் என்றது மயிந்தனை. (55)

வீடணனுக்கு அடைக்கலம் கொடுப்பது பற்றி
இராமன் நண்பரின் கருத்தறிதல்

6547. அப்பொழு திராமனு மருகி னண்பரை
யிப்பொருள் கேட்டநீ ரியம்பு வீரிவன்

கைப்புகற் பாலனோ கழியற் பாலனோ
ஒப்புற நோக்கிநும் முணர்வி னாலென்றான்.

அப்பொழுது இராமனும், அருகில் நண்பரை,
'இப் பொருள் கேட்ட நீர் இயம்புவீர்—இவன்
கைப் புகற் பாலனோ? கழியற் பாலனோ?—
ஒப்புற நோக்கி, நும் உணர்வினால் என்றான்.

பொ:—அப்போது இராமனும் தன் அருகில் உள்ள சுக்கிரீவன் முதலிய நண்பரை (நோக்கி) (அனலன் கூறிய) "இப்பொருளைக் கேட்டிருந்த நீங்கள், இவ்வீடணன் நம்மிடத்தில் புகுதற்குத் தகுந்தவனோ? அல்லது, புகாது திரும்பிப் போதற்குரியவனோ? என்பதை நும் உணர்வினால் பொருந்த நோக்கி ஆராய்ந்து சொல்வீர்களாக" என்று பணித்தான்.

கு:—நண்பரை நோக்கி என ஒரு சொல் வருவிக்க. கேட்ட நீர், 'இவன் கைப்புகற் பாலனோ? கழியற்பாலனோ? நும் உணர்வினால் ஒப்புற நோக்கி, இயம்புவீர்' என இயையும். நண்பர் என்றது, சுக்கிரீவன், சாம்பவான், நீலன், அனுமன் முதலியோரை. மயிந்தன் கூறியதை இராமன், மீண்டும் நண்பர்க்குக் கூறவேண்டா என்ற கருத்தால் 'இப்பொருள் கேட்ட நீர்' என்றான். கை - பக்கம். கைப் புகற்பாலனோ என்றது, பகைவர் பக்கத்திருந்தவனாகிய இவ்வீடணன் நம் பக்கத்தில் சேர்தற்குத் தகுந்தவன்தானோ என்று வினவியவாறு. 'நாம் அவனைச் சேர்த்துக் கொள்வதா விடுவதா? என்று தம் செயலாக வினவாமல் கைப்புகற்பாலனோ? கழியற்பாலனோ? என வீடணன் வினையாகவே கூறிய நயம் நோக்குதற்குரியதாகும். கைபுகுற்குரிய தகுதியுடைமையும் கழிதற்குரிய தகுதியின்மையும் அவ்வீடணன்பாலதே ஆதல் நினைக. ஆழ்ந்து சிந்தியாமல் சொல்லலாகாது என்பான், 'நும்முணர்வினால் ஒப்புற நோக்கி இயம்புவீர்' என்றான். ஒப்புற நோக்குதலாவது, அவன் வருவதால் நேரும் நன்மை தீமைகளையும், அவன் வராது திரும்புவதால் உளதாகும் நன்மை தீமைகளையும் ஒப்ப நோக்கி நன்மை மிக்கவற்றைக் கொண்டு முடிவு செய்தல். "குணநாடிக் குற்றமுநாடி அவற்றின் மிகைநாடி மிக்க கொளல்" (குறள் - 504) என்றது இங்கு நினைதற்குரியது. (56)

கவிக்கூற்று

6548. தடமலர்க் கண்ணனைத் தடக்கை கூப்பிநின்
றிடனிது காலமீ தென்ன வெண்ணுவான்

கடனறி காவலன் கழறி ஞனரோ
சுடர்நெடு மணிமுடிச் சுக்கி ரீவனே.

தடமலர்க் கண்ணனைத் தடக்கை கூப்பி நின்று,
'இடன் இது; காலம் ஈது' என்ன எண்ணுவான்
கடன் அறி காவலன் கழறினன் அரோ—
சுடர்நெடு மணிமுடிச் சுக்கிரீவனே.

பொ:—தன் கடமையை யுணர்ந்த வானர வேந்தனாகிய, ஒளி வாய்ந்த நீண்ட மணிமுடி சூடியுள்ள சுக்கிரீவன், பெரிய தாமரை மலர் போன்ற கண்களையுடைய இராமனைத் தன் பெரிய கைகளைக் குவித்து வணங்கி நின்று, வீடணன் வந்துள்ள இடம் இத்தன்மை யது; காலம் இத்தன்மையது என்று சிந்தித்தவனாய்க் கூறலானான்.

கு:—இராமன் தன்னைச் சுட்டிக் கூறுமாறு பணித்திலனாயினும் வானரர் தலைவனாகிய தானே கூறவேண்டும் என்ற கடமையுணர்ச்சி யால் சுக்கிரீவன் முதற்கண் கூறத் தொடங்கினான் என்பார் 'கடனறி காவலன்' என்றார். சுக்கிரீவன் - அழகிய கழுத்தையுடையவன் என்ற காரணம் பற்றி வந்த பெயர். தன் கருத்தைக் கூறத் தொடங்குங் கால் தலைவனை வணங்கியே சொல்லுதல் மரபு ஆதலின் சுக்கிரீவன் இராமனை வணங்கிக் கூறலானான். வீடணனைச் சேர்த்துக் கொள் ளுங் குறிப்போ அல்லது விலக்கும் குறிப்போ தன் கண்களில் புலப் படாவண்ணம் இராமன் நோக்கிய நோக்கம் புலப்பட 'தடமலர்க் கண்ணனை' என்றார். தடக்கை என்பதற்கு வளைந்த கையென்றும் பொருள் கூறலாம். வீடணன் வந்துள்ள இடமும் காலமும் உணர்ந்தன்றி முடிவுகூற முடியாதாகலின் 'இடனிது காலமீதென்ன வெண்ணுவான்' என்றார். "ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங் கருதி யிடத்தாற் செயின்" (குறள் - 484) என்பது நினைக. வீடணன் உண்மையாக இராமன்பால் அடைக்கலம் புகுவோனாயின் சேய்மையி லிருக்கும்போதே வந்து சேர்ந்திருக்க வேண்டும்; இலங்கைக்கு அருகில் வந்துள்ளபோது சேர்தல் ஐயுறற்குரியது எனவும், இராவ ணன் சீதையைக் கவர்ந்து வந்தவுடன் அவனை வெறுத்து இராமனை அடைந்திருக்க வேண்டும்; பகைவர் படை நெருங்கி வந்திருக்கும் போது இராவணனை விடுத்து வீடணன் வருதல் ஐயுறற்குரிய நிகழ்ச்சி எனவும் சுக்கிரீவன் சிந்தித்துச் சொல்லலானான் என்க. கழறுதல் - சொல்லுதல்; பெரும்பாலும் மறுத்துரைத்தலையே இச் சொல் உணர்த்தும். சுக்கிரீவன் உரையும் வீடணனைச் சேர்த்துக் கொள்ளலாகாது என்ற மறுப்புரையாக அமைந்திருத்தல் காணலாம்.
(57)

சுக்கிரீவன் கூறுகின்றான் 6549-6550

6549. நனிமுதல் வேதங்க ளுலு நாமநூல்
மனுமுதல் யாவையும் வரம்பு கண்டநீ
இனையன கேட்கவோ வெம்ம ஞேர்களை
வினவிய காரணம் விதிக்கு மேலுளாய்.

நனி முதல் வேதங்கள் நாலும், நாம நூல்
மனு முதல் யாவையும், வரம்பு கண்ட நீ,
இனையன கேட்கவோ, எம் அனோர்களை
வினவிய காரணம்?—விதிக்கும் மேல் உளாய்!

பொ:—விதியின் ஆற்றலுக்கும் மேம்பட்டுள்ளவனே! மிக்க முதன்மை வாய்ந்த நான்கு வேதங்களையும் புகழ்மிக்க மனுநீதி முதலிய சாத்திரங்கள் எல்லாவற்றையும் கற்றுத் துறைபோயநீ இத்தகைய செய்திகளைப்பற்றி, எம்போன்றவர்களை வினவிய காரணம், எங்களிடம் கேட்டறிதற்காகத்தானோ? (கேட்டறிய அன்று; நண்பர்களையும் கேட்டல் வேண்டும் என்ற முறைமை பற்றியே யாம்)

கு:—விதியாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்குக் காரணமாய ஊழ். அந்த விதிக்கும் இராமன் மேலுளான் என்றது, அவன் ஏவிய வழியில் விதியும் நிற்கும் என அவன் ஆற்றலைப் புலப்படுத்தியவாறு. இராமன் நினைத்தால் நல்லூழும் அல்லூழாக மாறும் என்றவாறு. இராமன் அறிவின் பெருமையைப் புலப்படுத்த, "வேதங்களுலு நாமநூல் மனு முதல் யாவையும் வரம்பு கண்டநீ" என்றான். அறிவால் ஆற்றலால் எம்மினும் சிறந்துள்ள நீ எம்மை வினவாமலே முடிவு செய்தற்குரியையா யிருந்தும் எம்மை வினவியது, எம்பால் கேட்டறிதற்கன்று; கேட்க வேண்டும் என்ற முறைமைபற்றியே யாம் என்றவாறு. 'கேட்கவோ' என்புழி ஓகாரம் ஒழியிசைப் பொருளது; 'படிக்கவோ வந்தாய்' என்புழிப்போல. இனையன என்றது, வீடணன் கைப்புகற்குரியனோ? கழியற்பாலனோ? என்பதை நிறுவும் ஆலோசனைகளை. நாமநூல் - புகழ்மிக்க சாத்திரம். வரம்பு காணுதல் என்பது, அவற்றை முற்றும் கற்றுத் துறை போதலை. பகை நட்பாங் காலத்து ஆராயவேண்டிய செய்திகள் வேதங்களிலும் - மனு முதலிய நூல்களிலும் உள்ளன ஆதலின், அந்நூல்களைக் குறிப்பிட்டவாறு. (58)

6550. ஆயினும் விளம்புவெ
னருளி ளுழியாய்
ஏயின தாகலி
னறிவிற் கேற்றன
தூயவென் றெண்ணினுந்
துணிவன் றென்னினும்
மேயது கேட்டியால்
விளைவு நோக்குவாய்.

ஆயினும், விளம்புவென், அருளின் ஆழியாய்!
ஏயினது ஆதலின், 'அறிவிற்கு ஏற்றன,
தூய' என்று எண்ணினும், 'துணிவு அன்று' என்னினும்
மேயது கேட்டியால்! விளைவு நோக்குவாய்.

பொ :—அருட்கடல் போன்றவனே! (எம்மைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டிய நிலை உனக்கு இல்லை) ஆயினும், நீ கட்டளையிட்ட பணி ஆகலின், யான் சொல்லுகின்றேன்; அச் சொல்லின் பின் விளைவை நோக்குவாயாய், (என் சொல்) அறிவிற்கு ஏற்றனவாய்த் தூய்மையுடையன, என்று நீ மதித்தாலும், அல்லது 'துணியத்தக்கதன்று' என்று நீ தள்ளினுலும் என் உள்ளத்தில் பொருந்தியதைச் சொல்கின்றேன் கேட்பாயாக.

கு :—ஆழியாய்! ஆயினும் ஏயினதாகலின், விளம்புவென்; விளைவு நோக்குவாய், 'அறிவிற்கேற்றன, தூய' என்று எண்ணினும், 'துணிவு அன்று' என்னினும் மேயது கேட்டியால் எனக்கூட்டி வினை முடிவு செய்க. எண்ணுதல் - மதித்தல். 'யான் கூறிய சொல் அறிவிற்கு ஏற்புடையனவாய்த் தூய்மை மிக்கன என்று நீ மதித்தாலும், அல்லது இச் சொல், 'நல்லது எனத் துணியத்தக்கது அன்று' எனத் தள்ளினுலும், என் உள்ளத்துப் பொருந்தியதைக் கூறுகின்றேன் கேட்பாயாக' எனச் சுக்கிரீவன் கூறியதில் பின்னுள்ள 'துணிவன்று' என்பதே நிகழ்ந்தது என்பதைப் பின்னிகழ்வால் அறியலாம். பின் விளைவை நோக்குவதில் இராமன் வல்லவனுதலின், தன் சொல்லை நல்லதெனக் கொள்ளினும் அல்லது எனத் தள்ளினும் அது பின் விளைவு நோக்கியதே ஆதலின், என் சொல் ஏற்றுக்கொள்ளாதது பற்றி யான் வருந்தேன் என்பது குறிப்பு. இராமன் ஏயினது மருது செய்தல் வேண்டும் என்ற கடமையுணர்ச்சியால் சுக்கிரீவன் சொல்கின்ருனேயன்றித் தன் சொல்லே ஏற்றுக் கொள்ளத்தக்கது என்ற தன் முனைப்பால் சொல்லவில்லை என்பது இதனுலறியலாம். (59)

6551. வெம்முனை விளைதலி னன்று வேறொரு
சும்மையா னுயிர்கொளத் துணித லாலன்று
தம்முனைத் துறந்தது தரும நீதியோ
செம்மையி லரக்கரில் யாவர் சீரியோர்.

" வெம் முனை விளைதலின் அன்று; வேறு ஒரு
சும்மையான் உயிர் கொளத் துணிதலால் அன்று;
தம் முனைத் துறந்தது தரும நீதியோ?
செம்மை இல் அரக்கரில் யாவர் சீரியோர்.

பொ :—(வீடணன்) தன் தமையனைத் துறந்து வந்தது, அவ் விராவணனோடு தனக்குக் கொடிய போர் விளைந்ததாலும் அன்று; வேறு ஒரு பாரமுள்ள பொருளைத் தன்மேல் போகட்டுத் தன்னுயிரைக் கொள்ள அத் தமையன் துணிந்ததாலும் அன்று; (இத்தகைய பெரிய காரணங்கள் நிகழாதிருக்கவும்) தன்னுடன் பிறந்த தமையனைத் துறந்து வந்தது தருமத்தொடுபட்ட நீதியாகுமோ? (ஆகாது) மேலும் நேர்மைப் பண்பு இல்லாத அரக்கர்களில் சிறப்புடையவர் எவருளர்? (எவருமிலர்.)

கு :—சுக்கிரீவன், ஏதிலானாகிய வீடணனது குற்றத்தைப் பார்ப்பதுபோலவே தமையனைத் துறந்து இராமனையடைந்து தமையன் உயிரை வாங்கிய தன் குற்றத்தையும் காண்கின்றானாகலின், இவ்வாறு கூறலானான். தமையனைத் துறந்து வந்ததில் வீடணனுக்கும் சுக்கிரீவனுக்கும் ஒற்றுமையிருப்பினும் தமையனோடு சுக்கிரீவனுக்குப் பெரும் போர் விளைந்தது; பெரிய பாரமுடைய தன் கையால் தாக்கி வாலி சுக்கிரீவனைக் கொல்ல நினைந்தான்; இத்தகைய பெரிய காரணம் இருந்தமையால் சுக்கிரீவன் தன் தமையனாகிய வாலியைத் துறந்து வந்தது பொருத்தமே. அத்தகைய பெரிய காரணம் யாதும் நிகழாதிருக்கவும் வீடணன் தன் தமையனைத் துறந்து வந்துளான் ஆகலின், அவன் செயல் தருமம் ஆகாது என்றவாறு. இராவணன் வீடணனோடு போர் செய்யாதிருக்கவும், தன் வலிய பாரமுள்ள கையால் தாக்கிக் கொல்ல முயலாதிருக்கவும், வீடணன் அவனைத் துறந்து வந்திருத்தலின் ஐயுறவேண்டியவனாக இருக்கின்றான். மேலும் செம்மைக் குணம் இன்மை அரக்கர் எல்லோர்க்கும் பொதுவாகலின் அவருள் ஒருவனைச் சிறப்பாகச் செம்மைக் குணமுடையவன் என எங்ஙனம் கொள்ள இயலும்? எனவே ஏற்றுக் கொள்ளலாகாது என்பது சுக்கிரீவன் கருத்து. (60)

6552. தகையுறு தம்முனைத் தாயைத் தந்தையை
மிகையுறு குரவரை யுலகின் வேந்தனைப்
பகையுற வருதலுந் துறந்த பண்பிது
நகையுற லன்றியு நயக்கற் பாலதோ.

தகை உறு தம்முனைத், தாயைத், தந்தையை,
மிகை உறு குரவரை, உலகின் வேந்தனை,
பகை உற வருதலும், துறந்த பண்பு இது
நகை யுறல் அன்றியும் நயக்கற் பாலதோ?

பொ :—மேன்மை பொருந்திய அண்ணனையும், தாயையும், தந்தையையும், சிறப்புப் பொருந்திய குருவையும், உலகிற்குரிய வேந்தனையும், (இவர்கட்குப்) பகைவர் நெருங்கி வந்தவுடன் விட்டுத் துறத்தலாகிய இப் பண்பு இகழ்ந்து நகைப்பதற்குரியதேயன்றி விரும்பத்தக்கதாகுமோ? ஆகாது.

கு :—தம்முனைத் துறத்தல் நயக்கற்பாலதன்று என்பான், அத் தமையனோடு ஒப்புமையுடையராய் ஐங்குரவர் என்று எண்ணத்தக்க ஏனை நால்வரையும் உடன் கூறியவாறு. இது ஒப்புமைக் கூட்டம் என்னும் அணி தழுவிக் கூறியது. 'தகையுறு' என்னும் அடையைத் தாய் தந்தைக்கும் இயைக்கலாம். குரவராவார் ஞானத்தைச் செவ யறிவுறுக்க உரியராதலின் அவரை 'மிகையுறு குரவர்' எனச் சிறப் பித்தார். அறிவால் மற்றையோரினும் உயர்ந்தவர் என்றவாறு. பண்பிது என்பதில் சுட்டினைப் பிரித்துத் துறத்தலாகிய 'இப் பண்பு' என மாறுக. நகையுறல் என்றது எள்ளல் குறிப்புத் தோன்றச் சிரித்தலை யுணர்த்தியது. நயத்தல் - விரும்புதல். (61)

6553. வேண்டுழி யினியன விளம்பி வெம்முனை
பூண்டுழி யஞ்சிவெஞ் செருவில் புக்குடன்
மாண்டொழி வின்றிநம் மருங்கு வந்தவ
னாண்டொழி லுலகினுக் காணி யாமன்றே.

வேண்டுழி இனியன விளம்பி, வெம்முனை
பூண்டுழி, அஞ்சி, வெஞ் செருவில் புக்கு உடன்
மாண்டொழிவு இன்றி நம் மருங்கு வந்தவன்
ஆண் தொழில் உலகினுக்கு ஆணி ஆம் அன்றே?

பொ :—அண்ணன் உதவி தனக்கு வேண்டும்போது இனிய சொற்களைச் சொல்லிக் கொண்டிருந்துவிட்டு, அவ்வண்ணன்தன்

பகைவரோடு கொடிய போர் செய்ய மேற்கொண்டபோது, போரில் புகுந்து தன் அண்ணனோடு மாய்ந்து ஒழியாமல், (மரணத்திற்குப்) பயந்து (அவனுக்குப் பகையாயுள்ள) நம் பக்கத்தில் சேர்தற்கு வந்தவனுடைய ஆண்மைத் தொழில் உலகிற்கு ஆணிபோலச் சிறந்ததன்றோ?

கு :—'உறினட்டு அறின் ஒருஉம் ஒப்பிலார் கேண்மை பெறினும் இழப்பினும் என்?' (குறள் - 812) என்ற திருக்குறளையும் 'அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னார், தமரிற் றனிமை தலை' (814) என்ற திருக்குறளையும் இச் செய்யுள் நினைப்பித்தல் காணலாம். அஞ்சி நம்மருங்கு வந்தவன் என இயையும். மாண்டொழிவு என்பது ஒரு சொல்லாய் இறத்தலை உணர்த்தியது. புரந்தார்கண் நீர்மல்கச் சாதலும், உறின் - உயிரஞ்சாமையுமே (780, 778) ஆண்மைத் தொழிலாகவும், அவை செய்யாது பகைவரைப் புகலடைந்த வீடணன் செயலை ஆண்தொழில் என்றதும், அது உலகினுக்கு ஆணிஎன்றதும் இகழ்ச்சிக் குறிப்பின; கற்கறித்து, 'நன்கட்டாய்' என்புழிப்போல. உலகம் கலங்காமல் நிறுத்தற்குரிய ஆணி போலும் சிறப்பினது என இகழ்ந்தவாறு. "பொருதொழிற் குரியராகி ஒருத்தரின் முன்னஞ் சாதல் உண்டவர்க்குரியதம்மா" (கும்பகருணன் வதைப் படலம்: 157) எனக் கும்பகருணன் கூறுதல் காணலாம். 'உழுவா ருலகத் தார்க் காணி' (குறள் - 1032) என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். வீடணனின் ஆண்மையின்மை உலகிலுள்ள வீரரின் ஆண்மையையும் கெடுக்கவல்லது என்றவாறு. (62)

6554. மிகைப்புலந் தருமமே வேட்ட போதவர்
தகைப்புலந் துறந்துபோய்ச் சார்த லன்றியே
நகைப்புலம் பொதுவற நடந்து நாயக
பகைப்புலஞ் சார்தலோ பழியி னீங்குமோ.

'மிகைப் புலம் தருமமே வேட்ட போது, அவர்
தகைப் புலம் துறந்து போய்ச் சார்தல் அன்றியே,
நகைப் புலம் பொது அற நடந்து, நாயக!
பகைப் புலம் சார்தலோ? பழியின் நீங்குமோ?

பொ :—நாயகனே! தன் மேம்பட்ட அறிவு தருமத்தையே விரும்பியபோது, தன் கருத்திற்குத் தடையாயுள்ள அவர்கள் இடத்தைத் துறந்து சென்று (தவத்தைச்) சார்தலை விடுத்து, நகைப்புக்குரிய இடம் பிறர்க்கும் பொதுவாகாது தனக்கே யுரித்தாகுமாறு

நடந்து வந்து, பகையிடத்தைக் சார்வது தகுமோ? அவ்வாறு சார்ந்தவன் என்றேனும் பழியினின்று நீங்குவானோ? (நீங்கான்.)

கு :—'தருமத்தை விரும்பிய காரணத்தால் வீடணன் வந்தானாதலின், அவன்பால் குற்றமில்லை' யென்பாரை மறுத்து, அவன் தருமத்தை விரும்பினானாயின், தன் கருத்திற்கு முரணான அண்ணன் பால் இருத்தலைத் துறந்து வேறிடம் சென்று தவம் செய்தல் முறையேயன்றிப் பகைப்புலம் சேர்தல் பழிக்கத்தக்க செயல் என்பதைச் சுக்கிரீவன் நிறுவியவாறு. தகைப்புலம் - தன் கொள்கையைத் தடுக்கும் இடம். துறந்துபோய்ச் சார்தல் என்பது, துறந்து தவத்தில் சார்தலை யுணர்த்திற்று. துரியோதனனை வெறுத்த விதுரன், அவனைத் துறந்து தவத்தைச் சார்ந்த பாரதக் கதை இங்கு நினைதல்தகும். மிகைப்புலம் என்றது மேம்பட்ட அறிவை. ஏனை மூன்றிடத்தும் புலம் இடம் என்ற பொருளில் பயின்றது. நகைப்புக்கு இடமாதல் தனக்கே சிறப்புரிமையாக என்பான், 'நகைப்புலம் பொதுவற' என்றான். நகைப்பிற்கு இடமாதலில் பிறர்க்குப் பங்கு இல்லாமல் தனக்கேயுரிமையாகப் பெற்று, என்றவாறு. தமையனுக்குப் பகைவரிடம் செல்லக் கருதி அடியெடுத்து வைத்தலே நகைப்பிற்கு இடமாகும் என்பான், 'நகைப்புலம் பொதுவற நடந்து' என்றான். பகைப்புலஞ் சார்ந்தவன் என்றும் பழியினின்று மீளுமாறில்லை என்பான், பழியினீங்குமோ? என்றான். இதனால் வீடணன் தருமத்தையே விரும்பியதனால் வரவில்லை; வேறு வஞ்சக எண்ணத்தோடே வந்துளான் என்பது நிறுவியவாறு. (63)

6555. வார்க்குறு வனைகழற் றம்முன் வாழ்ந்தநாள்
சீர்க்குற வாயிடைச் செறுநர் சீறிய
போர்க்குற வன்றியே புகுந்த போதிவ
னார்க்குற வாகுவ னருளி னாழியாய்.

'வார்க்குறு வனைகழல் தம்முன் வாழ்ந்த நாள்,
சீர்க்கு உறவு ஆய், இடைச் செறுநர் சீறிய
போர்க்கு உறவு அன்றியே போந்தபோது, இவன்
ஆர்க்கு உறவு ஆகுவன்?—அருளின் ஆழியாய்!

பொ :—அருட்கடலே! உருக்கி வார்த்துச் செய்யப்பட்ட வீரக் கழலை அணிந்த தன் அண்ணன் வாழ்ந்த நாளில் அவன் செல்வச் சிறப்பைத் துய்ப்பதற்கு உறவு பூண்டிருந்துவிட்டு, நடுவே, பகைவர் வெகுண்டு செய்யும் போருக்கு உறவினனாகாது பகைவரிடம் புகுவா

னுயின், இவன் ஆருக்குத்தான் உறவு ஆகப் போகின்றான்? (யார்க்கும் உறவாகான் என்றவாறு)

கு :—கழல் செய்யும் முறையைப் புலப்படுத்த 'வார்க்குறு வினை கழல்' என்றான். உலோகத்தை உருக்கி வார்த்துச் செய்யப்பட்ட கழல் என்றபடி 'கழல்வினை தம்முன்' என இயையும். சீர்க்கு உறவாதலாவது இராவணன் செல்வச் சிறப்பை அவனோடு சேர்ந்து துய்த்தல். சீர்க்குறவாய்ப் போர்க்குறவன்றியே புகுதல் என்பது, 'உறினட் டறினொரூஉம் ஒப்பிலார் கேண்மை' (குறள்-812) என்றதைப் பின்பற்றியதாதல் காணலாம். உடன் பிறந்த அண்ணனின் துன்பத்திற்குத் துணையாகாமல் துறந்து வந்தவன், இடையில் புகுந்த நம்மைத் துறத்தல் கூறவேண்டுமோ என்பான், 'இவன் ஆர்க்குறவாகுவன்' என்றான். யார் மாட்டும் நிலைத்த அன்பு இவனுக்கு இருத்தல் இயலாது என்றவாறு. 'அருளினுழியாய்' என்றது அருட்கடலாதலின் இராமனுக்கு வீடணன்பால் உள்ள குற்றங்கள் தோன்ற என்பதைப் புலப்படுத்தியவாறு. (64)

6556. ஒட்டிய கனகமா னுருவ மாகிய
சிட்டனு மருமக னிழைத்த தீவினை
கிட்டிய போதினிற் றவமுங் கேள்வியும்
விட்டது கண்டுநாம் விடாது வேட்டுமோ.

'ஒட்டிய கனகமான் உருவம் ஆகிய
சிட்டனும், மருமகன் இழைத்த தீவினை
கிட்டிய போதினில், தவமும் கேள்வியும்
விட்டது கண்டும், நாம் விடாது வேட்டுமோ?

பொ :—இடையில் ஏற்றுக் கொண்ட பொன் மானின் உருவமாகிய பெரியோனாகிய மாரீசனும் தன் மருமகனாகிய இராவணன் சூழ்ந்த தீவினையைச் செய்ய நேர்ந்தபோது, தான் மேற்கொண்டிருந்த தவத்தையும், பயின்ற நூற் கேள்விகளையும் கைவிட்ட நிகழ்ச்சியைக் கண்டிருந்தும், நாம் இவ்வீடணனை (அவன் தவமுடைமை கருதி) கைவிடாது விரும்பக் கடவோமோ?

கு :—பொன்மானுருவம் மாரீசனுக்கு இயல்பாகாது இடையில் ஏற்றுக் கொண்ட உருவமே ஆதலின், 'ஒட்டிய கனகமான் உருவம்' என்றான். மாரீசன் தவஞ் செய்து கொண்டிருந்த நிலையை நினைந்து 'சிட்டன்' என அவனைக் கூறிக் குறிப்பால் இகழ்ச்சியைத் தோற்றுவித்தவாறு. இயக்கர் மகளாகிய தாடகையின் புதல்வன் மாரீசன்..

சுந்தன் என்ற தன் கணவன் அகத்திய முனிவன் கோபத்தால் சாம்ப லாயினமை யறிந்த தாடகை, தன் மக்களாகிய சுவாகு மாரீசனோடு அம்முனிவனை எதிர்க்க, அம்முனிவன் சாபத்தால் அரக்கராயினர். பிறகு இராவணன் பாட்டனை அடைந்து மாரீசனும் சுவாகும் உனக்கு மக்கள் முறையினேம் என்று உறவு பூண்டவர்கள் ஆதலால், மாரீச னுக்கு இராவணன் மருகன் எனப்பட்டான். இழைத்த தீவினை என்றது இராவணன் தன் வஞ்சனை மனத்தால் சூழ்ந்த - ஆராய்ந்த தீவினையை. இழைத்தல் - நுணுகி ஆராய்தல். "இழைத்துணர்ந்து ஈண்டிய கேள்வியவர்" (குறள்-417) என்புழியும் இச்சொல் இப் பொருள தாதல்காணலாம். தீவினையைத் தான் செய்யவேண்டிய நிலை நேர்ந்ததையே 'கிட்டிய போதினில்' என்றான். மாரீசன் தவஞ் செய்துகொண்டிருந்தவனாயினும் இராவணனுக்குத் துணையாய்த் தீவினை செய்ய வாய்த்தபோது தவவொழுக்கத்தை விடுத்து அவ வொழுக்கத்தைக் செய்ததுபோலத், தவமுடையான் என்று கருதப் படும் இவ்வீடணனும் தீமை செய்யும் காலம் வாய்த்தபோது தவத் தைக் கைவிட்டுத் தீமை செய்யலாம் ஆதலால், அவனைக் கைவிடு வதே நல்லது என்றவாறு, இதனால், 'செம்மையில் அரக்கரில் யாவர் சீரியோர்' என முன் கூறியதைச் சான்று காட்டி நிறுவிய வாறு. (65)

6557. கூற்றுவன் றன்னொடிவ் வுலகங் கூடிவந்
தேற்றன வென்னினும் வெல்ல வேற்றுள
மாற்றவன் றம்பிநம் மருங்கு வந்திவண்
தோற்றுமோ வன்னவன் றுணைவ னகுமோ.

கூற்றுவன் தன்னொடு இவ் உலகம் கூடி வந்து
ஏற்றன என்னினும், வெல்ல ஏற்றுளம்;
மாற்றவன் தம்பி நம்ம ருங்கு வந்திவண்
தோற்றுமோ அன்னவன் துணைவன் ஆகுமோ?

பொ:—எமனோடு இவ்வுலகமெலாம் திரண்டு வந்து எதிர்த்தா லும், அவ்வனைவரையும் வெல்ல ஏன்று கொண்டுள்ளோம்; பகை வன் தம்பியாகிய வீடணன் நம்மிடத்து வந்து தோன்றத்தக்கவனோ? அவன் நமக்குத் துணை செய்பவன் ஆய்விடுவானோ? (ஆகான் என்றவாறு)

கு:—சுக்கிரீவன் தன் படையின் பெருமையும் துணிவும் புலப் படுத்துவானாய்க் "கூற்றுவன் றன்னொடிவ் வுலகங் கூடிவந்தேற்றன வென்னினும் வெல்ல ஏற்றுளம்" என்றான். "கூற்றுடன்று மேல்

வரினுங் கூடி யெதிர்நிற்கு மாற்ற லதுவே படை" (குறள்-765) என்பதைப் பின்பற்றி இச் செய்யுளின் முன்னிரண்டடிகள் அமைந்துள்ளமை காணலாம். வெல்ல வேற்றுளோம் என்றது, வெல்ல வஞ்சினம் கொண்டுள்ளோம் என்றவாறு. இத்தகைய வஞ்சினமுடைய நாம் இராவணனுக்குத் தோல்வியுற மாட்டோம் என்பது உறுதியாதலின், நமக்கு வீடணன் துணை வேண்டா என்றவாறு. பகைவன் தம்பி ஆகிய அவ்வீடணன் நம் வெற்றிக்குத் துணை செய்ய இயலாது என்பான். "அன்னவன் துணைவனுகுமோ?' என்ருன். வெற்றியும் தோல்வியும் வீடணனல் மாறுபடப் போவதில்லை ஆதலின், அவனைக் சேர்த்துக் கொள்வதால் பயனில்லை என்பதை நிறுவியவாறு. (66)

6558. அரக்கரை யாசறக் கொன்று நல்லறம்
புரக்கவந் தனமெனும் பெருமை பூண்டநா
மிரக்கமி லவரையே துணைக்கொண் டோமெனிற்
சுருக்கமுண் டவர்வலிக் கென்று தோன்றுமால்.

" அரக்கரை ஆசு அறக் கொன்று, நல் அறம்
புரக்க வந்தனம்" எனும் பெருமை பூண்ட நாம்,
இரக்கம் இல் அவரையே துணைக் கொண்டோம் எனின்,
சுருக்கம் உண்டு அவர் வலிக்கு என்று தோன்று மால்.

பொ :—" அரக்கர்களை முழுவதும் கொன்று விட்டு நல்ல தருமத்தை நிலைநிறுத்திக் காக்க வந்துளோம்" என்னும் பெருமையை மேற்கொண்டுள்ள நாம், இரக்கம் இல்லாத அவ்வரக்கரில் சிலரையே துணையாகக் கொண்டோம் ஆயின், அவ்விராம இலக்குவரின் படை வலிக்குக் குறைபாடு உண்டு என்று பிறர்க்குத் தோன்றும்.

கு :—அரக்கரை அழிக்க அரக்கர் துணையை நாடினுர்கள் ஆதலின், இராமன் படையினர்க்கு அரக்கரை அழிக்கும் ஆற்றல் இல்லை எனப் பிறர் எண்ண நேரும் என்று காட்டி மறுத்தவாறு. ஆசற - முற்றுப் பெற – முழுவதும். 'ஊழிசென்ருசறுங்காலத்து' (ஆரணிய-சரபங்கர்-30) என்புழியும் இச்சொல் இப்பொருளில் வந்துள்ளமை காணலாம். 'ஆரறத்திறேடன்றி நின்ருரவர் வேரறுப்பன்' (அகத்தியப்-22) எனத் தண்டகவனத்து முனிவர்க்கு இராமன் கூறியுள்ளதை இங்கு நினைக. நல்லறம் புரக்கவந்தனம் என்பது இராமன் கருத்து நோக்கிக் கூறியது. 'அவர் வலிக்குச் சுருக்கமுண்டு என்று தோன்றும்' என இயையும். அறத்தைக் காக்க

அறத்தொடு மாறுபட்ட இரக்கமில் அரக்கரையே துணையாகக் கொள்ளுதல் பொருந்தாது என்றவாறு. சுருக்கம் - குறைவு. பிறர்க்குத் தோன்றும் என ஒரு சொல் வருவிக்க. (67)

6559. விண்டுழி யொருநிலை நிற்பர் மெய்ம்முகம்
கண்டுழி யொருநிலை நிற்பர் கைப்பொருள்
கொண்டுழி யொருநிலை நிற்பர் கூழுடன்
உண்டுழி யொருநிலை நிற்ப ருற்றவர்.

விண்டுழி ஒரு நிலை நிற்பர்; மெய்ம் முகம்
கண்டுழி ஒரு நிலை நிற்பர்; கைப் பொருள்
கொண்டுழி ஒரு நிலை நிற்பர்; கூழுடன்
உண்டுழி ஒரு நிலை நிற்பர்—உற்றவர்.

பொ :—(நம்மிடத்து அடைக்கலமாக வந்து) உற்றவராகிய இவ்வரக்கர் - நம்மை விட்டு விலகிச் சேய்மையில் சென்ற பொழுது ஒரு நிலையில் நிற்பார்கள்; மெய்யாக நம் முகத்தைக் கண்டபோது வேறு ஒரு நிலையில் நிற்பார்கள்; நம் கைப்பொருளைப் பெற்றுக்கொண்ட போது ஒரு நிலையில் நிற்பார்கள்; அப்பொருள் பெறல் இன்றிச் சிறிய உணவாகிய கூழை நம்முடன் இருந்து உண்டபோது வேறு ஒரு நிலையில் நிற்பார்கள்; (எக்காலத்தும் ஒரே நிலையில் நிற்கும் உறுதியுடையவரல்லர்.)

கு : -அரக்கர்க்கு நிலையான கொள்கை இன்மையான் அவரைச் சேர்த்தல் தகாது என்று விளக்கியவாறு. கண்டபோது நண்பு நிலையும், காணாதபோது பகை நிலையும்; கைப்பொருள் கொண்ட போது விரும்பிப் புகழும் நிலையும், அப்பொருள் பெறாதபோது வெறுத்து இகழும் நிலையும் உடையராவர் அரக்கர் என்றவாறு. கைப்பொருள் உள்ளபோது கொடுத்தலும் அஃதில்லாதுபோது இரவலரை உடன் அமர்த்திக் கொண்டு உண்ணுதலும் பெரியோர் இயல்பு. "உண்டாயின் பதங் கொடுத்து இல்லாயின் உடனுண்ணும் இல்லோர் ஒக்கல் தலைவன்" (புறநா-95) என அதியமான் நெடுமானஞ்சி ஔவையாரால் புகழப்படுதல் காணலாம். கூழ் என்றது வறியவர் உண்ணும் மாவினாலாய ஒருவகை உணவு. கூழுடன் உண்டுழி எனவே அவர் கொள்ளக் கைப்பொருள் இன்மை புலனும். உற்றவர் என்றது, வினையாலணையும் பெயராய் வீடணன் முதலியோரை உணர்த்தியது. "காலையி லொன்றுவர் கடும்பகலில் ஒன்றுவர் மாலையிலொன்றுவர் மனிதரெலாம்" (தனிப்பாடற்றிரட்டு) என்பது இங்கு ஒப்புநோக்கத் தகும். இனி இப்பாடற்கு 'உற்றவ

ராவார்'-கண்டுழியும் விண்டுழியும் கொண்டுழியும் கொடுத்துழியும் அன்பு வேறுபடாது ஒரு நிலையில் நிற்கும் இயல்பினர் ஆவர்; வீடணன் இராவணனுக்குத் தம்பி என்ற உறவுடையவன் ஆதலின் அவ்விராவணனோடு வேறுபட்டுப் பிரிந்து வந்தாலும் அவன்பால் அன்புடையவனாய் அவனுக்கு ஆக்கம் செய்யவே முயலுவான் ஆதலால் அவனைச் சேர்த்தல் தகாது எனப் பொருள் கூறலும் ஆம். (68)

6560. வஞ்சனை யியற்றிட வந்த வாறலால்
தஞ்செனை நம்வயிற் சார்ந்து ளானலன்
நஞ்சினிற் கொடியனை நயந்து கோடியோ
அஞ்சன வண்ணவென் றறியக் கூறினான்.

'வஞ்சனை இயற்றிட வந்தவாறு அலால்
'தஞ்சு' என நம் வயின் சார்ந்துளான் அலன்;
நஞ்சினிற் கொடியனை நயந்து கோடியோ?—
அஞ்சன வண்ண!' என்று அறியக் கூறினான்.

பொ:—(இராவணன்பால் மாறாத அன்பு கொண்ட இவ்வீடணன்,) நம்மிடத்தில் ஏதோ வஞ்சனை செய்வதற்கு வந்தவாறே அன்றி (உண்மையாக) அடைக்கலம் என நம்மிடத்தில் சார்ந்தவன் அல்லன்; மைபோன்ற வண்ணமுடையோனே' நஞ்சினும் கொடியனாகிய வீடணனை விரும்பி யேற்றுக்கொள்ளக் கடவையோ? என்று, (சுக்கிரீவன் தன் கருத்தை) இராமன் அறியுமாறு கூறினான்.

கு:—தஞ்சம் என்பது தஞ்சு என வந்தது; கடைக்குறை. வீடணன் தஞ்சமாக வந்தேன் என்று கூறியது பொய்; அவன் சொல்லால் அவ்வாறு கூறிச் செயலால் வஞ்சனை புரியவே வந்துளான். நஞ்சு தன் உண்மைத் தன்மையைக் காட்டிக் கொல்லும்; இவனோ, தன் உண்மைத் தன்மையை மறைத்துக் கொண்டு வஞ்சனையாற் கொல்ல வந்துளான் என்பான், 'நஞ்சினிற் கொடியனை' என்றான். வீடணனை நோக்க நஞ்சமே நல்லது என்றவாறு. "வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக கேள்போல் பகைவர் தொடர்பு" (குறள்-882) என்றவாறு வீடணன் கேள்போல் வந்த பகைவனாதலின் அவன் வரவிற்கு அஞ்சவேண்டும்; அவனை நயந்து ஏற்றுக்கொள்ளல் ஆகாது என்பான், நஞ்சினிற் கொடியனை நயந்து கோடியோ?' என்றான். நஞ்சு, வீடணற்கு நிறத்தாலும் தன்மையாலும் உறழ் பொருவாயிற்று. அஞ்சனம், மறைந்துள்ள பொருளையும் காட்டவல்லது; (அஞ்சனம் கொண்டு கள்வரையறிதல் இக்காலத்தும் உண்டு.) அவ்வஞ்சனம் போன்ற நிறத்தையுடைய

நீயும் வீடணன் உள்ளத்து மறைத்துள்ள வஞ்சனையை அறிதற் குரியையாகலின் அவனை நயந்து கோடற்குரியையல்லை என்பான், அஞ்சனவண்ண! கொடியனை நயந்து கோடியோ? என்ருன். இது, கருத்துடையடைகொளி அணி. (69)

கவிக் கூற்று

6561. அன்னவன் பின்னுற
வலகில் கேள்வியால்
தன்னிகர் பிறிதிலாத்
தகைய சாம்பனை
என்னையுன் கருத்தென
விறைவி னுயினுன்
சொன்முறை நெறிதெரிந்
தவனுஞ் சொல்லுவான்

அன்னவன் பின்னுற, அலகு இல் கேள்வியால்
தன் நிகர் பிறிது இலாத் தகைய சாம்பனை,
'என்னை உன் கருத்து?' என இறை வினுயினுன்;
சொல் முறை நெறி தெரிந்துஅவனும் சொல்லுவான்.

பொ :—அந்தச் சுக்கிரீவனுக்குப்பின், அளவில்லாத கேள்வி ஞானத்தால் தனக்குத் தானே யுவமமாவதன்றித் தனக்கு உவமைப் பொருள் வேறு இல்லாத பெருமையுடைய சாம்பவனை (நோக்கி) இராமன், 'உன் கருத்து என்னை?' என வினவினுகைச், சொல்லும் முறையினையும் நெறியினையும் மனத்தே ஆராய்ந்து தெளிந்து, சாம்ப வனும் சொல்லுவாருனுன்.

கு :—சாம்பவன் யாரினும் முதியனுதலின், அவனைப்போன்று கேள்வி ஞானமுடையார் இருத்தல் இயலாமை நினைந்து, 'கேள்வி யால் தன்னிகர் பிறிதிலாத்தகைய சாம்பன்' எனச் சிறப்பித்தார். நெடிதுகாலமாக வாழ்பவனுதலின் பலரோடு பயின்று பலதிறக் கேள்விகளால் அறிவு நிரம்பப் பெறும் வாய்ப்பும் சாம்பனுக்கு மிகுதி என்பது கருத்து. இத் தகுதி நோக்கியே சுக்கிரீவனுக்குப்பின் சாம்பனை இராமன் வினவினுன். சொல்லவேண்டிய முறையையும், சொற்பொருளின் நெறியினையும் சாம்பவன் தன் மனத்தே ஆராய்ந்து அமைத்துக்கொண்டு சொல்லத் தொடங்கினுன் என்றவாறு. முறை, சொல் மேலது; நெறி, சொல்லின் பொருள் மேலது. தெரிந்தவனும் என ஒரு சொல்லாக்கலும் ஒன்று. (70)

சாம்பவன் கூறுகின்றான் 6562–6565

6562. அறிஞரே யாயினு மரிய தெவ்வரைச்
செறிஞரே யாவரேற் கெடுத றிண்ணமாம்
நெறிதனை நோக்கினு நிருதர் நிற்பதோர்
குறிதனி யுளதென வுலகங் கொள்ளுமோ.

'அறிஞரே ஆயினும், அரிய தெவ்வரைச்
செறிஞரே ஆவரேல், கெடுதல் திண்ணமால்;
நெறிதனை நோக்கினும், நிருதர் நிற்பது ஓர்
குறி தனி உளது என உலகங் கொள்ளுமோ?

பொ :—நம்புதற்கு அரிய பகைவர் சிறந்த அறிஞராக இருப்பினும் (அவ்வறிவுடைமை கருதி) அப்பகைவரை ஒருவர் நண்பராகச் சேர்த்துக் கொண்டாராயின் அவர் அழிதல் உறுதியாகும்; மேலும், (அவ்வீடணனைச் சேர்த்துக் கொள்ளற்கு ஆதரவாக அவன் மேற்கொண்டுள்ள) அற நெறியையே நாம் நோக்கினும், உலகத்தார், அரக்கர் மேற்கொண்டு நிற்கின்ற ஓர் அறக்கொள்கை தனியே உண்டு என்று கொள்ளுவாரோ? (கொள்ளார்.)

கு :—வீடணனின் அறிவுடைமை கருதியோ, அன்றி அவன் மேற்கொண்டுள்ள அறநெறி கருதியோ அவனை நாம் சேர்த்துக் கொள்ளல் பொருந்தாது என்றவாறு. நெறி என்றது அறநெறியை. மேல் மயிந்தன், 'ஆயவன் தருமமும் ஆதி மூர்த்திபால் மேயதோர் சிந்தையும் மெய்யும் வேதியர் நாயகன்தர நெடுந்தவத்தின் எய்தினன்" என வீடணனைப் பற்றிக் கூறியதுகொண்டு சாம்பவன் அவன் தருமநெறியைப் பற்றிக் கூறலானன். மாரீசன் போல வாய்ப்பில்லாதபோது தவநெறி மேற்கொண்டு, வாய்ப்பு நேர்ந்த போது அதைக் கைவிட்டு அவநெறி மேற்கொள்ளுதலே அரக்கர் பால் உலகவர் கண்ட இயல்பாதலின், 'நிருதர் நிற்பதோர் குறிதனி உளதென உலகங் கொள்ளுமோ?' என்றான். அரக்கர் நிலைபெற்ற அறக்கொள்கை யுடையரல்லர் என்பது உலகறிந்த செய்தி ஆகலின், வீடணனின் அறவொழுக்கம் கொண்டு நாம் அவனைச் சேர்த்துக் கொண்டால், உலகம் பழிக்கும் என்றவாறு. குறி - கொள்கை; அறம். நம் கேடும் உலகவர் பழிப்பும் நினைந்து அவனை விலக்குதல் நல்லது என்றவாறு. அறிஞரே ஆயினும் என்பதற்கு, ஒருவர் தாம் சிறந்த அறிஞராயிருந்தாலும், பகைவரை நண்பராகச் சேர்த்துக்கொண்டால் அவ்வறிவாற் பயனின்றி அழிவர் என்றும் கூறலாம். (71)

6563. வெற்றியுந் தருகுவர் வினையம் வேண்டுவர்
முற்றுவ ருறுகுறை முடிப்பர் முன்பினு
லுற்றுறு நெடும்பகை யுடைய ரல்லதூஉம்
சிற்றினத் தவரொடுஞ் செறிதல் சீரிதோ.

வெற்றியும் தருகுவர்; வினையம் வேண்டுவர்
முற்றுவர்; உறு குறை முடிப்பர் முன்பினுல்;
உற்றுறு நெடும்பகை உடையர்; அல்லதூஉம்
சிற்றினத் தவரொடும் செறிதல் சீரிதோ?

பொ :—(நாம் இராவணனோடு செய்யப்போகும் போரில்) இவர் நமக்கு வெற்றியும் தருவார்கள்; நமக்கு வேண்டிய உபாயங்களையும் விரும்பியவராய்ச் செய்து முடிப்பார்கள்; நம்முடைய பெரிய குறைகளை எல்லாம் தம் வல்லமையால் செய்து முடிப்பார்கள் (ஆயினும்) இவர், நம்மோடு பண்டு தொட்டுத் தொடர்ந்து வருகின்ற பெரிய பகைமையுடையவராக இருக்கின்றார்கள்; அஃதல்லாமலும் நாம் சிற்றினத்தராகிய இவ்வரக்கரோடு சேர்தல் சிறப்புடையதாகுமோ? (ஆகாது.)

கு :—மேல் அறிஞராயினும் பகைமையுடையவரைச் சேர்த்துக் கொள்ளுதல் தகாது என்பதையே இங்கும் அனுவதித்துக் கூறிச் சிற்றினத்தர் என்ற காரணம் பற்றியும் இவர் விலக்கத்தக்கவர் என்பதை விளக்கியவாறு. 'சிற்றினமஞ்சும் பெருமை' (குறள் - 451) என்பது இங்கு நினையத்தகும். வினயம் - உபாயம். இராவணனோடு செய்யப்போகும் போரில் அவர் செய்யும் மாயங்களை வெல்லுதற்குரிய உபாயத்தையே இங்கு 'வினயம்' என்றான். "கொல்லலாம் மாயங்கள் குறித்தனவே கொள்ளலாம் கொற்றமுற்ற, வெல்லலாம் மற்றியற்றும் வினையெல்லாம் கடக்கலாம்" (சூர்ப்பணகைப் - 138) எனச் சூர்ப்பணகை இராமனுக்குத் தான் செய்யத்தக்க உதவிகளைக் கூறியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தகும். வேண்டுவாராய் முற்றுவர் என்க. (72)

6564. வேதமும் வேள்வியு மயக்கி வேதியர்க்
கேதமு மிமையவர்க் கிடரு மீட்டிய
பாதகர் நம்வயிற் படர்வ ராமெனின்
தீதில ராய்நமக் கன்பு செய்வரோ.

'வேதமும் வேள்வியும் மயக்கி, வேதியர்க்கு
ஏதமும், இமையவர்க்கு இடரும், ஈட்டிய
பாதகர் நம் வயின் படர்வராம் எனின்,
தீது இலராய், நமக்கு அன்பு செய்வரோ ?

பொ :—வேதங்களையும், வேதங்களில் கூறப்பட்ட வேள்விகளையும் கெடுத்து, அந்தணர்க்குத் தீமையையும், தேவர்கட்குத் துன்பத்தையும் செய்து பழகிய பாதகர்களாகிய அரக்கர்கள் நம்மிடத்து வருவராயின் நமக்குத் தீமை செய்யாதவராய் நம்மிடத்து அன்பு செய்து கொண்டிருப்பாரோ?

கு :—மேல், சிற்றினத்தவரொடுஞ் செறிதலாகாது என்றவன், இங்கு அதற்குக் காரணங் கூறுகின்றான். வேதமும் வேள்வியும் மயக்குதலாவது வேதியர் வேதம் ஓதாமலும், வேள்விகள் செய்யாமலும், துன்புறுத்திக் கெடுத்தல். அரக்கர் இவ்வாறு செய்தமை "மாதவத் தொழுகலெம்; மறைகள் யாவையும், ஓதலெம்; ஓதுவார்க்குதவலாற்றலெம்; மூஎரி வளர்க்கிலெம்; முறையினீங்கினேம்" ஆதலின் அந்தணரேயு மாகிலேம் ; (ஆரணிய - அகத்தியப் - 14) எனவும், "அரக்கரென்றுளர் சிலர் அறத்தினீங்கினர், நெருக்கவும் யாம்படர் நெறியலா நெறி, துரக்கவும் அருந்தவத் துறையுள் நீங்கினேம்" (அகத்தியப் - 12) எனவும், தண்டகவனத்து முனிவர்கள் இராமன்பால் முறையிட்டமையால் அறியலாம். வேதம் ஓதியும் வேள்வி செய்தும் தம்மொழுக்கத்தில் நிலைநிற்க வேதியர்க்கு இயலாமல் செய்து வேதியர்க்கு ஏதம் விளைத்தனர். வேள்வியில் அந்தணர் கொடுக்கும் அவியுணவு தேவர்க்குக் கிடைக்காதபடி வேள்விகளை யழித்தமையால் இமையவர்க்கு இடர் செய்தனர். மயக்குதல் - கெடுத்தல். ஈட்டுதல், இங்குச் செய்தலை யுணர்த்தியது. பாதகம் - பெரும்பாவம். பாதகம் செய்து செய்து கைவந்தவர் அரக்கராதலின் அவர் நம்பால் வந்தும் அப்பாதகமே செய்வாரேயன்றி அன்பு செய்யமாட்டார் என்பான், 'தீதிலராய் நமக்கு அன்பு செய்வரோ' என்று வினவினான். படர்தல் இங்கு வருதலை யுணர்த்தியது. சிற்றினத்தவர் தீவினை செய்து பழகியவர் ஆதலின், அவரைச் சேர்த்துக் கொண்டால் நமக்கும் தீமையே செய்வார், என்பதை நிறுவியவாறு. 'தீவினையார் அஞ்சார்' (குறள் - 201) என்றதும், "மேற்றொட்டுச் செய்து கைவந்தமையான் அஞ்சார் என்றும்" எனப் பரிமேலழகர் அதற்கு விளக்கம் கூறியுள்ளதும் காண்க. இதனால் சிற்றினம் சிறுமையல்லது செய்யாது என விளக்கியவாறு. (73)

6565. கைப்புகுந் துறுசர ணருளிக் காத்துமேல்
பொய்க்கொடு வஞ்சனை புணர்த்த போதினும்
மெய்க்கொள விளியினும் விடுது மென்னினும்
திக்குறு நெடும்பழி யறமுஞ் சீறுமால்.

" கைப் புகுந்து உறு சரண் அருளிக் காத்துமேல்
பொய்க் கொடு வஞ்சனை புணர்த்த போதினும்,
மெய்க் கொள விளியினும், 'விடுதும்' " என்னினும்
திக்கு உறும் நெடும்பழி; அறமும் சீறுமால்.

பொ :—(வீடணன் முதலியோர்) நம் பக்கல் புகுந்து பொருந்துதற்குக் காரணமான அடைக்கலம் கொடுத்து இது போழ்து காப்பாற்றுவோமாயின், பின்னர், அவர் பொய்ம்மையைக் கைக்கொண்டு வஞ்சனை செய்தாலும், தம் உண்மைத் தன்மை புலப்பட நேரே நம்மை வெகுண்டு மாறுபட்டாலும், அப்போது அவர்களை 'விட்டுவிடுவோம்' என்று நீ கருதினாலும், (அவ்வாறு சரண் அருளிப் பின் விலக்குவதால்), பெரும்பழி திசைகளின் இறுதி வரையில் பரவும்; அறக் கடவுளும் நம்மேல் வெகுளும்.

கு :—சரண் அருளுதல் இதுவென விளக்க, 'கைப்புகுந்துறு சரண்' என்றார். கை - பக்கம், இங்கு இராமன் பக்கலைக் குறித்தது. மெய்க்கொள - தம் உண்மையியல்பைப் பிறர் உணர்ந்து கொள்ள. விளியினும் - கோபித்தாலும். " முடியினைப் பறித்திவ் விரதவேடமற்றுதவிய பாவிமேல் விளிவு சரத நீங்கல தாமென்றான் " (மீட்சிப்-130) எனப் பின்னரும் இப்பொருளில் விளிவு ஆளப்பட்டிருத்தல் காணலாம், " விளிந்தாரே போலப் பிறராகி " (பழமொழி-182) என்புழியும் இப்பொருள்படுதல் காணலாம். இப்போது அடைக்கலமாக வந்தவனைச் சேர்த்துக் கொள்வோம்; பின் அவன் வஞ்சனை செய்தாலும், நேரே வந்து வெகுண்டாலும் விலக்கி விட்டால் போகின்றது என இராமன் கருதக் கூடும் ஆதலின், சாம்பவன் இங்ஙனம் கூறலானான். ' நாடி நட்பின் அல்லது நட்டு நாடார் தம் ஒட்டியோர் திறத்தே '' (நற்றிணை-32) எனவும், " நாடாது நட்டலிற் கேடில்லை நட்ட பின் வீடில்லை நட்பாள் பவர்க்கு " (குறள்-791) எனவும், " நல்லார் எனத் தாம் நனிவிரும்பிக் கொண்டாரை அல்லாரெனினும் அடக்கிக் கொளல் வேண்டும் " (நாலடி-221) எனவும் கூறப்படுதலின் நண்பனைத் தழுவிக்கொண்டு பின் அவன் தேற்றாவொழுக்கம் கண்டு அவனைத் தூரவிடுதல் கூடாதென்பான் 'திக்குறு நெடும்பழி ; அறமும் சீறுமால்' என்றான். உலகமும் பழிக்கும் அறத்திற்கும் மாறுபட்டது என அச்செயலால் இம்மையினும் மறுமையினும் வரும் தீங்கு உணர்த்தியவாறு. (74)

6566. மேனனி விளைவது விளம்பல் வேண்டுமோ
கானகத் திறைவியோ டுறையுங் காலையின்
மானென வந்தவன் வரவை மானுமிவ்
வேனையன் வரவுமென் றினைய கூறினான்.

'மேல் நனி விளைவது விளம்பல் வேண்டுமோ?
கானகத்து இறைவியோடு உறையும் காலையில்,
மான் என வந்தவன் வரவை மானும், இவ்
ஏனையன் வரவும்' என்று இனைய கூறினான்.

பொ :—(இவ்வீடணனைச் சேர்த்துக் கொள்வதால்) எதிர் காலத்தில் தீமை விளையப் போவதை யான் அதிகமாகச் சொல்ல வேண்டுமோ? (வேண்டா; சுருங்கச் சொல்கின்றேன்) காட்டில் தேவியோடு நீ தங்கியிருந்த காலத்தில் பொன்மானாக வந்த மாரீசன் வரவை ஒக்கும், ஏனையரக்கனாகிய இவ்வீடணன் வரவும்; என்று இத்தன்மையான சொற்களைச் சாம்பவன் சொன்னான்.

கு :—நனி விளம்பல் வேண்டுமோ என இயையும். தான் எடுத்துக் காட்டும் உவமையால் பின் பெருந் தீமை விளையும் என்பதை விளக்கப் போகின்றானாதலின், 'மேல் விளைவது நனி விளம்பல் வேண்டுமோ' என்றான். மாரீசன் தீமைபுரியாத மானாக வந்து நீக்க முடியா நெடுந்துயரையும் பெரும் பழியையும் விளைத்தது கண்டா யன்றே, அது போலவே, அவன் இனத்தனாகிய இவ்வீடணனும் தீமைபுரியாத தவவிரதத்தவனாக வந்து பின்னர்ப் பெருந் தீமை விளைப்பான் என்று எடுத்துக் காட்டான் விளக்கியவாறு. கானகம் என்றது பஞ்சவடியை. இறைவி என்றது சீதையை. அரக்கர் என்ற ஒற்றுமையால் மாரீசனைக் கூறியபின் வீடணனை 'ஏனையன்' என்றான். சாம்பவன் கருத்தும் சுக்கிரீவன் கருத்தைப் பின்பற்றியதாகவே அமைந்திருத்தல் காணலாம். (75)

இராமன் வினவ நீலன் தன் கருத்தைக் கூறத் தொடங்கல்

6567. பால்வரு பனுவலின் துணிவு பற்றிய
சால்பெருங் கேள்வியின் றானை நாயகன்
நீலனை நின்கருத் தியம்பு நீயென
மேலவன் விளம்பலும் விளம்பன் மேயினான்.

பால்வரு பனுவலின் துணிவு பற்றிய
சால் பெருங் கேள்வியின் தானை நாயகன்,

நீலனை, 'நின் கருத்து இயம்பு நீ' என
மேலவன் விளம்பலும், விளம்பல் மேயினன்.

பொ :—பல பகுப்புகள் பொருந்திய நூல்களின் துணிவுகளைக் கற்றுணர்ந்தவனும், மிகப் பெரிய நூற்கேள்விகளைத் தக்கோர்பால் கேட்டுணர்ந்தவனும், வானர சேனைக்குத் தலைவனும் ஆகிய நீலனை நோக்கி, யாவர்க்கு மேலவனாகிய இராமன், 'நீ நின் கருத்தினைச் சொல்வாயாக' என்று கேட்க, அந்நீலன் சொல்லத் தொடங்கினான்.

கு :—துணிவு பற்றிய நீலன்; கேள்வியின் நீலன்; தானை நாயகனாகிய நீலன் எனத் தனித்தனி இயையும். பால் - பகுப்பு. பனுவல் - நூல். நூல்களில் அரசியல் பற்றியனவும் அறம் பற்றியனவும் நீதி பற்றியனவும் எனப் பல பகுப்பு உண்மையின் 'பால்வரும் பனுவல்' என்றார். நீலன் தானே படித்தறிந்த நூல்களின் துணிவுகளைச் சுட்டியவாறு. கற்றல் கேட்டல் உடையான் நீலன் என்பது விளக்கி, இராமன் 'நின்கருத்தியம்பு நீ' என்று வினவுதற்கேற்ற தகுதியுடைமை புலப்படுத்தியவாறு. மேலவன் என்றது இராமனை. தெய்வநிலையில் யாவர்க்கும் மேலவன் ஆதல் போலவே இங்குள்ள சுக்கிரீவன் முதலிய அனைவர்க்கும் இராமனே மேலவன் ஆதல் காணலாம். (76)

நீலன் சொல்லுகின்றான் 6568-6573

6568. பகைவரைத் துணையெனப் பற்றற் பாலவாம்
வகையுள வன்னவை வரம்பில் கேள்வியாய்
தொகையுறக் கூறுவென் குரங்கின் சொல்லென
நகையுற லின்றியே நயந்து கேட்டியால்.

'பகைவரைத் துணை எனப் பற்றற்பால ஆம்
வகை உள; அன்னவை—வரம்பு இல் கேள்வியாய்!—
தொகையுறக் கூறுவென்; 'குரங்கின் சொல்' என
நகையுறல் இன்றியே நயந்து கேட்டியால்.

பொ :—'எல்லையில்லாத நூற்கேள்விகளையுடையவனே! பகைவர்களையும் துணையாகக் கொள்ளுதற்குரியனவாகிய வகைகள் பல உள்ளன; அவற்றைத் தொகுத்துச் சுருங்கச் சொல்கின்றேன்; (என் சொல்லை) 'இது குரங்கின் சொல்தானே' என்று எள்ளிச் சிரிக்காமல் விரும்பிக் கேட்பாயாக.

கு :—'யான் கூறுவனவற்றை நீ அறியாதவன் அல்லை' என்பான், வரம்பில் கேள்வியாய்! என இராமனை விளித்தான்; கருத்துடை யடை கொளியணி. வகைபலவுள என்க. 'அன்னவை தொகையுறக் கூறுவென்' என இயையும். ஒருவர் சொல்லும் சொல்லை விரும்பிக் கேட்குங்கால் அச்சொல்லின் நன்மை புலனாதலும் எள்ளற் குறிப்போடு கேட்கின் அச்சொல்லின் சிறப்புப் புலனாகாமையும் இயல்பாதலின் 'நகையுறலின்றியே நயந்து கேட்டி' என நீலன் வேண்டியவாறு. நகை என்றது, இங்கு எள்ளல்பற்றிய நகையை யுணர்த்தியது. மேல்வரும் மூன்று செய்யுட்களாலும் பகைவரைப் பற்றற்குரிய வகை பலவற்றைத் தொகையுறக் கூறுகின்றான். (77)

6569. தங்குலக் கிளைஞரைத் தருக்கும் போரிடைப்
பொங்கினர் கொன்றவர்க் கெளியர் போந்தவர்
மங்கையர் திறத்தினில் வயிர்த்த சிந்தையர்
சிங்கலில் பெரும்பொரு ளிழந்து சீறினோர்.

'தம் குலக் கிளைஞரைத் தருக்கும் போரிடைப்
பொங்கினர் கொன்றவர்க்கு எளியர் போந்தவர்,
மங்கையர் திறத்தினில் வயிர்த்த சிந்தையர்,
சிங்கல் இல் பெரும் பொருள் இழந்து சீறினோர்.

பொ :—செருக்கிச் செய்யும் போரில் சீற்றம் பொங்கினவராய்த் தமது குலத்துத் தோன்றிய சுற்றத்தாரைக் கொன்றவரான பகைவர்க்கு எளிமைப்பட்டவராய் அஞ்சி வந்தவர்களும், பெண்டிர் காரணமாகப் பிறரோடு பகை கொண்ட மனத்தவரும், குறைவிலாத பெரும் பொருளை இழந்து அப்பொருள் காரணமாகச் சீற்றம் கொண்டவர்களும்.

கு :—தருக்கும் போரிடைப் பொங்கினராய்த் தம் குலக் கிளைஞரைக் கொன்றவர்க்கு எளியர் என இயையும். இத்தகையோர் நமக்குப் பகைவராயினும் இந்த நிலையில் அடைக்கலமாக ஏற்றுக் கொள்ளலாம் என்றவாறு. கிளைஞரைக் கொன்ற பகைஞரைத் தாம் கொல்ல இயலாமையால் நம் துணை நாடி வந்தவரும், மங்கைமார் காரணமாகப் பிறரோடு பகைமை மிக்கு நம்மை அடைந்தவர்களும், பிறரால் பெரும் பொருளை இழந்தவர்களாய் அவர்பால் கொண்ட சீற்றத்தோடு நம்மை வந்து அடைந்தவர்களும் தம் குறை

முடிக்கும் எண்ணத்தராதலின் நிலையில் திரியாது நம்மோடு இருப்பர் என்றவாறு. சிங்கல் – குறைதல். 'சிங்காவண் புகழ்ச் சிங்கபுரத்து' (சிலம்பு-பதிகம்-48) என்றது காண்க. (78)

6570. பேரபி மானங்க ளுற்ற பெற்றியோர்
போரிடைப் புறங்கொடுத் தஞ்சிப் போந்தவர்
நேர்வரு தாயத்து நிரம்பி ஞேர்பிறர்
சீரிய கிளைஞரை முடியச் செற்றுளோர்.

'பேர் அபிமானங்கள் உற்ற பெற்றியோர்,
போரிடைப் புறங் கொடுத்து அஞ்சிப் போந்தவர்,
நேர்வரு தாயத்து நிரம்பிஞேர், பிறர்
சீரிய கிளைஞரை மடியச் செற்றுளோர்

பொ :—நாட்டுப் பற்று முதலிய பெரிய பற்றுகளையுடையவரும், போரில் பகைவர்க்கு ஆற்ருது புறமுதுகுகாட்டி அஞ்சி ஓடி வந்தவரும், நேரான தாயத்தவரால் வறுமையடைந்தவரும், பிறருடைய சிறப்புப் பொருந்திய உறவினரை மடியுமாறு கொன்றவரும்.

கு :—அபிமானம் - பற்று. தன்னுடு என்ற பற்றுக் கொண்டுள்ள ஒருவன், அதற்கு மாருக மாற்ரேன் தன்னுட்டைக் கைப்பற்றி ஆள்வாஞயின், அது பொருது வேற்றரசனைச் சரணடைந்து தன்னுட்டைப் பெற முயலுதல் இயல்பு. அவ்வியல்புடையவரைச் சேர்த்துக் கொள்ளலாம் என்றவாறு. போரில் பகைவனை வெல்ல மாட்டாது புறங்கொடுத்து வந்தவன் அப்பகைவனை வெல்லுங் கருத்தினனுய்த் துணை நாடி வரின் அவனை ஐயுருமல் சேர்த்துக் கொள்ளலாம். தனக்கு நேரே வரவேண்டிய தாயப் பொருளைத் தாயத்தோர் தாராமையினுல் வறுமையுற்ற ஒருவன், அத்தாயப் பொருளைப் பெறத் துணைசெய்யுமாறு வேண்டி வந்தால் அவனையும் ஏற்றுக் கொள்ளலாம். பிறருடைய சிறப்பு மிக்க உறவினரைக் கொன்றவன், கொல்லப்பட்டோரின் உறவினரால் தனக்கு வருந் தீங்கினின்றும் உய்தி பெற நினைந்து வந்தடையின் அவனையும் ஏற்றுக் கொள்லலாம் என்றவாறு. (79)

6571. அடுத்தநாட் டரசிய
லுடைய வானையாற்
படுத்தவர் நட்டவர்
பகைஞ ரோடொரு

மடக்கொடி திறத்திடை
வைத்த சிந்தையர்
உடற்கொளத் தகையர்நம்
முழைவந் தொன்றினுல்.

அடுத்தநாட்டு அரசியல் உடைய ஆணையால்
படுத்தவர் நட்டவர், பகைஞரோடு ஒரு
மடக்கொடி திறத்திடை வைத்த சிந்தையர்,
உடன்கொளத் தகையர், நம் உழை வந்து ஒன்றினுல்.

பொ :—தன்னுட்டிற்கு அடுத்துள்ள நாட்டின் அரசியலார் தம் கட்டளையால் அகப்படுத்தப்பட்டவரின் நண்பர்களும், பகைவரோடு தங்கியுள்ள ஓர் இளமையான கொடிபோன்ற மங்கையின்பால் வைத்த மனமுடையோரும், நம்மிடத்து வந்து அடைக்கலம் புகுந்தால் உடன் சேர்த்துக் கொள்ளத்தக்கவராவர்.

கு :—அடுத்த நாட்டரசினரின் ஆணையால் சிறைப்படுத்தப் பெற்றவரின் நண்பர்களாயின் சிறையிலிருக்கும் தம் நண்பரை மீட்க வேண்டும் என்ற நோக்கத்தால் நம்மோடு ஒற்றுமையாகவே இருப்பர். பகைவரோடு தங்கியுள்ள ஒரு பெண்ணின்மேல் வைத்த காதலுடையவர் அப்பெண்ணையடையும் பொருட்டு அப்பகைவரை வெல்ல வேண்டி நம்மோடு பிரியாதிருப்பர்; எனவே இவ்விருதிறத்தாரும் ஐயமின்றிச் சேர்த்துக் கொள்ளத்தக்கவராவர் என்றபடி. எளியராய்ப் போந்தவரும் வயிர்த்த சிந்தையரும், சீறினேரும், பெற்றியோரும், அஞ்சிப் போந்தவரும், நிரப்பினேரும், செற்றுளோரும், ஆணையாற்படுத்தவர் நட்டவரும், ஒரு மடக்கொடி திறத்திடை வைத்த சிந்தையரும் ஆகிய ஒன்பது வகையினரும் நம்முழை வந்து ஒன்றினுல் உடன் கொளத்தகையர் என்க. ஆணையாற்படுத்தவர் என்றது சிறைப்பட்டவரை. (80)

6572. தாமுற வெளிவருந் தகைமை யாரலர்
நாமுற வல்லவர் நம்மை நண்ணினுல்
தோமுற நீங்குத றுணிவ ராதலின்
யாமிவன் வரவிவற் றென்னென் றுன்னுவாம்.

தாம் உற எளிவரும் தகைமையார் அலர்,
நாம் உற வல்லவர் நம்மை நண்ணினுல்,
தோம் உற நீங்குதல் துணிவர் ஆதலின்,
யாம், இவன் வரவு இவற்று என் என்று உன்னுவாம்?

பொ :—தாமே (பிறரிடம்) வந்து சேரும்படி எளிமை பொருந்திய தன்மையர் அல்லாதவராய் யாரும் அஞ்சத்தக்க வலிமையுடையவர் நம்மை அடைந்தாராயின், (நாம்) துன்புறச் செய்து நீங்குவதையே துணிவார்; ஆதலால், நாம் இவ் வீடணன் வரவை, யான் மேற் கூறிய இருதிறத்தில் எதன்பாற்பட்டது என்று நினைப்போம் ?' (நாமுறவல்லவர் வரவாகத்தானே நினைப்போம் ?)

கு :—மேற்கூறிய எண்வகையரும் எளிவருந்தகையர் என்ற ஒரு திறத்தராகவும், தோமுற நீங்குகின்றவராய் நாமுறவல்லவர் என்பார் ஒரு திறத்தாராகவும் கொண்டு இவ் விருவகையுள் 'இவன் வரவு இவற்று என் என்று உன்னுவாம்?' என்று வினவினன் நீலன். வீடணன் அரக்கன் ஆதலின் அவன் வரவை 'நாமுற வல்லவர் வரவாகத் தானே நினைப்போம்' என்பதை இசையெச்சமாகக் கொள்ளவைத்தான். மேற்கூறிய எண்மரும் எளிவருந்தகையராய் உடன் கொளத்தகையவர் என்றதால், இங்குக் கூறிய வல்லவர் தோமுற நீங்குதல் துணிவர் ஆதலின் உடன் கொளத் தக்கவரல்லர் என்பதும் புலப்படுத்தியவாறு. நாம் - அச்சம். தோம்—துன்பம். "தீச்சொலிறுத்தனர் தோமும்" (கல்லாடம் - 74, 24) என்புழியும் இச் சொல் இப்பொருளது ஆதல் காணலாம். வீடணனை இப்பொழுது நாம் சேர்த்துக்கொண்டால் நம்மைத் துன்புறுத்தி நீங்குவான் என்றவாறு. (81)

6573. காலமே நோக்கினுங் கற்ற நூல்களின்
மூலமே நோக்கினு முனிந்து போந்தவன்
சீலமே நோக்கியாந் தெரிந்து தேறுதற்
கேலுமே யென்றெடுத் தினைய கூறினன்.

காலமே நோக்கினும், கற்ற நூல்களின்
மூலமே நோக்கினும், முனிந்து போந்தவன்
சீலமே நோக்கி, யாம் தெரிந்து தேறுதற்கு
ஏலுமே? என்று எடுத்து இனைய கூறினன்.

பொ :—"(இவ் வீடணன் வந்த) காலத்தையே நோக்கினாலும், நாம் கற்றுள்ள அரசியல் நூல்களின் மூலம் ஆராய்ந்தாலும், (தன் அண்ணனை) வெறுத்து வந்தவனது நல்லொழுக்கத்தையே பார்த்து நாம் ஆராய்ந்து தெளிதற்கு முடியுமோ ?" என்று இத்தன்மையான சொற்களைச் சொன்னன்.

கு :—போர் மூளுதற்குரிய காலத்தில் தன் அண்ணனை முனிந்து வீடணன் வந்தது பொருந்தாது என்பான் 'காலமே நோக்கினும்' என்றான். அரசியல் நூல்களை ஆராய்ந்து பார்த்தாலும் அவற்றிலும் இத்தகையவனைச் சேர்த்துக்கொள்ள விதியில்லை என்பான் 'கற்ற நூல்களின் மூலமே நோக்கினும்' என்றான். சீலம் - ஒழுக்கம். காலமும் நூலும் நோக்காது அண்ணனை முனிந்து வந்தவன் ஒழுக்கத்தை மட்டுமே நோக்கிச் சேர்த்தல் தகாது என்பான் "சீலமே நோக்கி யாம் தெரிந்து தேறுதற்கு ஏலுமே" என்றான். அவன் சீலமும் நம்பத்தக்கது அன்று என்பான், 'முனிந்து போந்தவன் சீலம்' என்றான். அண்ணனை முனிந்தவன்பால் சீலம் இருத்தல் அரிது என்றவாறு. (82)

மற்றை மந்திரக் கிழவரும் அவ்வாறே கூறுகின்றனர்

6574. மற்றுள மந்திரக் கிழவர் வாய்மையால்
குற்றமில் கேள்விய ரன்பு கூர்ந்தவர்
பற்றுதல் பழுதெனப் பழுது ருவொரு
பெற்றியி னுணர்வினர் முடியப் பேசினர்.

மற்றுள மந்திரக் கிழவர், வாய்மையால்,
குற்றம் இல் கேள்வியர், அன்பு கூர்ந்தவர்,
'பற்றுதல் பழுது' எனப் பழுது உறுஒரு
பெற்றியின் உணர்வினர், முடியப் பேசினர்.

பொ :—சிறிதும் குற்றம் இல்லாத கேள்வி அறிவை உடையவர்களும், இராமன்பால் அன்பு மிக்கவர்களும், குற்றம் பொருந்தாத ஒருதன்மையினதாகிய உணர்வினை உடையவர்களும் ஆகிய மற்றுள்ள மந்திரிமாரும் '(பகைவன் தம்பியைச்) சேர்த்துக் கொள்ளுதல் குற்றமாகும்' என்று உண்மையாக—முடிவாகச் சொன்னார்கள்.

கு :—கேள்வியர், அன்புகூர்ந்தவர், உணர்வினர் ஆகிய மந்திரிக் கிழவர் பற்றுதல் பழுதென வாய்மையால் முடியப் பேசினர் என இயையும். மந்திரக்கிழவர் - ஆலோசனைக்கு உரியவர்; மந்திரிமார். நல்லோர்பால் நயந்து கேட்ட கேள்வியர் ஆதலின், 'குற்றமில் கேள்வியர்' எனப்பட்டார். தம்முயிர்க் குறுதி எண்ணாது தலைமகனாகிய இராமனுக்குத் தீங்கு வாராமையையே நோக்குபவர் என்பார், 'அன்பு கூர்ந்தவர்' என்றார். கூர்தல் - மிகுதல். "காலம், மும்மையும் உணரவல்லார் ஒருமையே மொழியு நீரார்" (அயோத்தியா - 9) என்றதற்கேற்ப இங்கும் 'ஒரு பெற்றியின் உணர்வினர்' என்றார்.

"அறுபதினுயிரரெனினு மாண்டகைக், குறுதியிலொன்றிவற் குணர் வென்றுள்ளலாம், பெறலருஞ் சூழ்ச்சியர்" (அயோத்தியா 11) என்றதும் இங்கு ஒப்புநோக்கத்தகும். பற்றுதல் - சேர்த்துக்கொள்ளுதல். வீடணனை என்பது அவாய் நிலையான் வருவிக்கப்படும். பழுது - குற்றம். சுக்கிரீவன் கூறிய கருத்தையே மந்திரிமார் அனைவரும் வற்புறுத்திக் கூறியவாறு காணலாம். (83)

இராமன் அனுமனை வினவுதல்

6575. உறுபொருள் யாவரு மொன்றக் கூறினர்
செறிபெருங் கேள்வியாய் கருத்தென் செப்பென
நெறிதெரி மாருதி யென்னு நேரிலா
வறிவனை நோக்கின னறிவின் மேலுளான்.

'உறுபொருள் யாவரும் ஒன்றக் கூறினர்;
செறிபெருங் கேள்வியாய்! கருத்து என் செப்பு' என
நெறிதெரி மாருதி என்னும் நேரிலா
அறிவனை நோக்கினன், அறிவின் மேலுளான்

பொ:—அறிவினால் யாரினும் மேம்பட்டவனாகிய இராமன், அரசியல் நெறியனைத்தும் தெரிந்த, மாருதி என்று சொல்லப்படுகின்ற, தனக்கு ஒப்பாரை இல்லாத அறிஞனை நோக்கினவனாய், "பொருள் செறிந்த பெரிய கேள்வி அறிவையுடையவனே! செய்ய வேண்டிய செயலைப் பற்றி எல்லோரும் ஒரு தன்மையராகக் கூறி விட்டார்கள்; நின் கருத்து என்னை? சொல்லுக" என்று வினவ,

கு:—மேலுளான் அறிவனை நோக்கி, 'கேள்வியாய்! யாவரும் ஒன்றக் கூறினர்; கருத்து என் செப்பு என' என்றியையும். குளகம். செப்பு என, நுவல்வதாயினான். என மேல் இயையும். இனிக் கிடந்தாங்கே 'செப்பென நோக்கினான்' என இச் செய்யுளிலேயே முடித்தலும் ஆம். 'அறிவின் மேலுளான்' என்பதற்கு, உயிர்களின் அறிவிற்கும் அறிவாய் நிற்பவன் எனவும், அறிவுக்கு எட்டாத மேல் நிலையில் உள்ளவன் எனவும், இராமன் தெய்வநிலை நினைந்து பொருள் கூறலும் ஆம். 'அறிவின் மேலுளான் அறிவனை நோக்கினான்' என்ற சொன்னயமும் பொருள்நயமும் ஆழ்ந்து சிந்தித்து இன்புறத்தகுவன. 'யாவரும் ஒன்றக் கூறினர்; செறிபெருங் கேள்வியாய் கருத்தென்' என்று இராமன் வினவிய குறிப்பினால், யாவரும் கூறிய கருத்திற்கு வேறுபட்ட கருத்தினன் இராமன் என்பது புலப்படச் செய்துள்ளமை நோக்குக. செறிபெருங் கேள்வியாய்! என

அனுமனைச் சிறப்பித்து விளித்த விளியாலும், யாவரும் கூறியவாறு போல நீ கூறத்தக்கவனல்லன் என்ற குறிப்புப் புலப்பட வைத்த நயம் காணலாம். மாருதியே யாரினும் அரசியல் நெறி தெரிந்தவன் என்பார் 'நெறிதெரி மாருதி' என்றார். தன் பெருங்குணத்தாற் றன்னின்றனலா தொப்பிலாதான்' (கிட்கிந்தா - அனுமப் - 11) என முன் கூறியதற்கேற்ப இங்கும் 'நேரிலா அறிவனை' என்றார். (84)

அனுமன் கூறுகின்றான்

6576. இணங்கின ரறிவில ரெனினு மெண்ணுங்கால்
கணங்கொளல் நும்மனோர் கடன்மை காணென
வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்விய னுவல்வ தாயினான்.

'இணங்கினர் அறிவிலர் எனினும், எண்ணுங்கால்,
கணங்கொளல் நும்அனோர் கடன்மை காண்' என,
வணங்கிய சென்னியன், மறைத்த வாயினன்,
நுணங்கிய கேள்வியன், நுவல்வ தாயினான்.

பொ :—நுட்பமான கேள்வி அறிவுடைய அனுமன், (இராமனை நோக்கி) தம்மோடு சேர்ந்தவர்கள் அறிவு இல்லாதவர் ஆனாலும், தாம் ஒன்றைப்பற்றி ஆராயுங் காலத்து, அவ்வறிவிலாதவரையும் ஆராய்தற்குரிய இனமாகக் கொண்டு சிறப்பித்தல் நும்மை ஒத்த பெரியவர்களின் முறைமையாகும்' என்று கூறிக்கொண்டு வணங்கிய தலையையுடையவனாய் (கையால்) மறைத்த வாயினை யுடையவனாய்த் தன் கருத்தைச் சொல்லத் தொடங்கினான்.

கு :—இணங்கினர் - தம்மோடு சேர்ந்தவர். எண்ணுதல் - ஆராய்தல். கணங்கொளல் - இனமாகச் சேர்த்துக் கொண்டு சிறப்பித்தல். சிறந்த அறிவுடைய இராமனுக்குச் சிற்றறிவுடைய வானரர்கள் கூறுவதோர் ஆலோசனை இல்லையெனினும், அவன் பெருந்தன்மை தோன்ற அவ்வானரங்களையும் இனமாகக் கொண்டு ஆலோசனை கேட்டுச் சிறப்பிக்கின்றான் என அனுமன் தன் சிறுமையும் இராமன் பெருமையும் தோன்றக் கூறியவாறு. காண், முன்னிலை அசை. பெரியோர்பால் பேசுங்கால் மேற்கொள்ள வேண்டிய முறைமை தோன்ற 'வணங்கிய சென்னியன், மறைத்தவாயினன், நுவல்வதாயினான்' என்றார். தலைவணங்கி வாய்புதைத்து நின்று பேசினான் என்றவாறு. அனுமனின் நுணங்கிய கேள்வியறிவுடைமையே அவன் வணங்கிய நிலைமைக்குக் காரணம் ஆகும் என்பார் 'நுணங்கிய கேள்வியன்'

என அனுமனைக் குறித்தார். 'நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய வாயின ராத லரிது'' (குறள்-419) என்பதைப் பின்பற்றிய தாக இச்செய்யுளின் பின்னிரண்டடிகள் அமைந்துள்ளமை காண லாம். கேட்கப்படும் பொருளினது நுண்மையைக் கேள்விமேல் ஏற்றி 'நுணங்கிய கேள்வியன்' என்ருர். (85)

6577. எத்தனை யுளர்தெரிந் தெண்ண வேய்ந்தவர்
அத்தனை வருமொரு பொருளை யன்றென
உத்தம ரதுதெரிந் துணர வோதினர்
வித்தக வினிச்சில விளம்ப வேண்டுமோ.

'எத்தனை உளர், தெரிந்து எண்ண' ஏய்ந்தவர்,
அத்தனைவரும், ஒருபொருளை "அன்று" என,
உத்தமர், அது தெரிந்து உணர ஓதினர்;
வித்தக! இனிச் சில விளம்ப வேண்டுமோ?

பொ :—(ஒரு பொருளை) ஆராய்ந்து எண்ணுதற்குப் பொருத்த மானவராகிய உத்தமர்கள் எத்தனை பேர் உளரோ அவ்வத்தனை பேரும் ஒரு பொருளைப் பற்றி ஆராய்ந்து 'அது செய்யத் தக்கது அன்று' என்று உணரும்படி (தெளிவாகச்) சொன்னர்கள்; பேரறி வுடையோனே! இனி யானும் சிலவற்றைச் சொல்லவேண்டுமோ? (வேண்டாவே என்றவாறு.)

கு :—தெரிந்தெண்ண ஏய்ந்தவர் ஆகிய உத்தமர் எத்தனை உளர் அத்தனைவரும் ஒரு பொருளைத் தெரிந்து 'அது அன்று' என உணர ஓதினர் என இயையும். இது, கொண்டுகூட்டுப் பொருள் கோள். எத்தனை பேர் உளரோ அத்தனைவரும் என்க. அவ்வனைவரும் என்பது, அத்தனைவரும் என எதுகை நோக்கித் திரிந்தது. வித்தக! என்றது இராமனை. பேரறிவுடையனுகிய நீ முடிவு செய்யத் தக்கவனுகவும் யான் சில விளம்ப வேண்டுமோ? எனத் தன் தாழ்வு தோன்றக் கூறியவாறு.
(86)

6578. தூயவர் துணிதிற னன்று தூயதே
யாயினு மொருபொரு ளுரைப்ப ளுழியாய்
தீயனென் றிவனையா னயிர்த்தல் செய்கிலேன்
மேயின சிலபொருள் விளம்ப வேண்டுமால்.

'தூயவர் துணிதிறன் நன்று, தூயதே;
ஆயினும், ஒருபொருள் உரைப்பன், ஆழியாய்!
"தீயன்" என்று இவனை யான் அயிர்த்தல் செய்கிலேன்;
மேயின சில பொருள் விளம்ப வேண்டுமால்.

பொ :—தூயவர்களாகிய மந்திரிமார்கள் துணிந்து கூறிய கருத்து மிகவும் தூய்மையானதே; ஆனாலும் ஆணையாகிய சக்கரமுடை யோனே! ஒரு கருத்தைச் சொல்லுகின்றேன்; இவ்வீடணனைத் 'தீயவன் என்று யான் ஐயுறவில்லை' அதற்குப் பொருத்தமான சில செய்திகளை யான் சொல்லவேண்டியுளது.

கு :—தூயவர் என்றது சுக்கிரீவன் முதலியவரை. அவர் துணி திறன் ஆவது வீடணனை ஏற்றுக்கொள்ளலாகாது என்பது. தூய வர்கள் ஆராய்ந்து கூறியதாகலின் அது பெரிதும் தூய்மையுடைய கருத்தே என்றவாறு. 'நன்று பெரிதாகும்' (தொல். சொல்-343) என்ற விதியால் இங்கு நன்று என்பது மிகுதியை யுணர்த்தியது. ஆணையாகிய சக்கரமுடையாய்! என இராமனை விளித்தது கருத்துடை யடை கொளியணியாம். என்னை? 'நின் கருத்தென்' என்று வினவி என் கருத்துக் கூறுமாறு பணித்தமையால் நின் ஆணையின்படியே சொல்லுகின்றேன் என்ற கருத்துத் தோன்ற 'ஒரு பொருள் உரைப் பென் ஆழியாய்' என்றமையான் என்க. அயிர்த்தல்-சந்தேகித்தல். யான் இவனைத் தீயவன் என்று அயிர்த்தல் செய்யாமைக்குரிய சில செய்திகளுண்டு என்பான், 'மேயின சில பொருள் விளம்ப வேண்டும்' என்ருன். (87)

இச்செய்யுளுக்குப் பின் 52 என்ற எண்ணுள்ள அச்சுப் புத்த கத்தில் பின்வரும் செய்யுட்கள் மிகைப் பாடலாகக் காணப்படு கின்றன,

6578 (a) மேலைநாள். அமுதமும் விடமும் வெண்கடல்,
மூலமாய் உதித்தன; முறையின் முற்றுதல்
காலுமோ, ஒன்றெனக் கருதல் தக்கதோ,
ஞால நாயக! தெரிந் தெண்ணி நாடியே!

(b) ஒருவயி றுதித்தனர், அதிதி, ஒண்திதி,
இருவர் மற்றவரிடத் தெண்ணி லெம்பிரான்
சுரரொடு சுடுசினத் தவுணர் தோன்றினர்,
கருதின்மற் றென்றெனக் கழறலாகுமோ?

(c) எப்பொரு ளேவரே உலகி னோர்முறை
ஒப்பினுங் குணத்தியல் உணரின் பேதமாம்
அப்பொரு ணலனிழிவு இரண்டு மாய்ந்தகம்
மெய்ப்பொருள் கோடலே விழுமிதென்பரால்.

6579. வண்டுள ரலங்கலாய் வஞ்சர் வாண்முகம்
கண்டதோர் பொழுதினிற் றெரியுங் கைதவம்
உண்டெனி னஃதவர்க் கொளிக்க வொண்ணுமோ
விண்டவர் நம்புகன் விரும்பி வீழ்வரோ.

'வண்டு உளர் அலங்கலாய்! வஞ்சர் வாள்முகம்,
கண்டதோர் பொழுதினில், தெரியும்; கைதவம்
உண்டு எனின், அஃது அவர்க்கு ஒளிக்க ஒண்ணுமோ?
விண்டவர் நம்புகல் விரும்பி வீழ்வரோ?

பொ :—வண்டுகள் கிண்டுகின்ற மலர் மாலை யணிந்தவனே, வஞ்சகரின் ஒளி வாய்ந்த முகத்தைக் கண்டபொழுதே அவர் நெஞ்சத்துள்ள வஞ்சம் தெரிந்துவிடும்; இவர் உள்ளத்தில் வஞ்சகம் இருக்குமானல் (அவ்வஞ்சகக் குறிப்பு முகத்தில் தோன்ருதபடி இவரால்) மறைக்க இயலுமோ? மேலும் பகைவர் நம் புகலிடத்தை விரும்பி வந்து சேர்வார்களோ ?

கு :—சேய்மையிலுள்ள வண்டுகள் வந்து கிண்டித் தேனருந்து தற்கிடமான மலர் மாலை யணிந்தவனுகிய நீ, சேய்மையிலுள்ள பகைவனிடத்திலிருந்து வந்துள்ள வீடணனை அடைக்கலமாக ஏற்றுக் கொள்ளத் தக்கவனே, என்ற குறிப்புத் தோன்ற 'வண்டுளரலங்கலாய்!' என இராமனை விளித்தான். வஞ்சர் முகம் கண்ட போதே தெரியும் என்ருன் 'அகத்தினழகு முகத்தில் தெரியும்' "முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி யுற்ற துணர்வார்ப் பெறின்" (குறள்-708) என்பன கருதி. வாள்முகம் என்பது முகத்திற்கு இயற்கையடை. கைதவம் - வஞ்சகம். வஞ்சர் முகம் கண்டபோதே தெரியும் என்பதை விளக்க "கைதவம் உண்டெனி னஃதவர்க் கொளிக்க வொண்ணுமோ" என்றும் கூறினுன். வந்தவர் வஞ்சகராயின் அவர் முகமே அதனைக் காட்டிவிடும்; அவர் முகத்தில் அவ்வஞ்சகக் குறிப்பு இல்லை ஆதலின் வஞ்சகரல்லர் என்றவாறு. விண்டவர் - பகைவர். நம் பகைவராயுள்ளவர் நம்மைச் சரணடைய மாட்டார்கள்; இவர் நம்மைச் சரணடைகின்றமையால் இவர் நம்மைப் பகைப்பவரல்லர் என அருத்தாபத்தி அளவையால் தெளிவித்தவாறு. வீழ்தல், சேர்தலை யுணர்த்தியது.
(88)

6580. உள்ளத்தி னுள்ளதை யுரையின் முந்துற
மெள்ளத்தம் முகங்களே விளம்பு மாதலால்
கள்ளத்தின் விளைவெலாங் கருத்தி லாவிருட்
பள்ளத்தி னன்றியே வெளியிற் பல்குமோ.

'உள்ளத்தின் உள்ளதை உரையின் முந்துற
மெள்ளத் தம் முகங்களே விளம்பும்; ஆதலால்,
கள்ளத்தின் விளைவு எலாம் கருத்து இலா இருள்
பள்ளத்தின் அன்றியே, வெளியில் பல்குமோ?

பொ:—ஒருவர் மனத்தில் உள்ள உணர்ச்சிகளைச் சொல்லால் சொல்லுதற்கு முன்னே, அவர் தம் முகங்களே மெள்ளத் தெரிவித்து விடும்; ஆதலால், கள்ளத்தின் விளைவுகள் எல்லாம் கருத்து ஒன்றும் இல்லாத அறியாமையாகிய இருள் நிறைந்த பள்ளம் போன்ற முக முடையாரிடைப் பெருகுவதன்றி (அறிவொளி வீசுகின்ற) வெளி யாகிய முகமுடையாரிடைப் பெருகுமோ? (பெருகா)

கு:—வீடணன் முதலியோர் கள்ளமுடையார் என்பது உண்மை யாயின், உள்ளத்தின் உள்ளதை முகங்களே விளம்பும் ஆகலால், அறிவொளி வீசுகின்ற வெளிபோலக் காணப்படுகின்ற இவர் முகமே, இவர் உள்ளத்தில் கள்ளமின்மையை விளக்குகின்றது என்பான். 'கள்ளத்தின் விளைவெலாம் வெளியில் பல்குமோ?' என்றான். கருத்து இலா இருட்பள்ளம் போன்ற முகமுடையாரிடத்துக் கள்ளத்தின் விளைவுகள் பெருகுவதும், அறிவொளி வீசுகின்ற வெளியாகிய தூய முகமுடையாரிடத்து அறச் செயல்கள் பல்குவதும் இயல்பாதல் அறியலாம். இருட்பள்ளத்தில் இருக்க வேண்டிய கள்ளத்தின் விளைவுகள், வெளியாகிய இடத்தில் பல்காது என்பதை அருத்தா பத்தி யளவையான் நிறுவியவாறு. கள்ளத்திற்கும் இருட்பள்ளத் திற்கும் தொடர்பு இருப்பதுபோல, வெளிக்கும் அறத்திற்கும் தொடர் புண்டு என்பதைக் குறிப்பால் பெறவைத்தவாறு. அறியாமை காரண மாகத் தோன்றும் வஞ்சமுள்ள முகத்தை இருட்பள்ளம் எனவும், வஞ்சமறியா முகத்தை வெளியெனவும், ஒட்டணியாகக் கூறியவாறு. "அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங் 'கடுத்தது காட்டும் முகம்" (குறள் – 706) "முகத்தின் முதுக் குறைந்த துண்டோ வுவப் பினுங் காயினுந் தான்முந் துறும்" (குறள் - 707) என்ற குறள் கருத் துக்களைத் தழுவியதாக இச்செய்யுளின் முன்னிரண்டடிகள் அமைந் திருத்தல் காணலாம். மெள்ள விளம்பும் என இயையும். ஒருவன் குறித்ததை அவன் கூறுமுன்னம் அவன் முகமே உணர்த்திவிடும். இருட்பள்ளம் என்றதற்கேற்ப அறிவொளி வீசும் வெளி என வரு வித்துரைக்கப்பட்டது. பல்குதல் - பெருகுதல். (89)

6581. வாலிவின் பெறவர சிளைய வன்பெறக்
கோலிய வரிசிலை வலியுங் கொற்றமுஞ்

சீலமு முணர்ந்துநிற் சேர்ந்து தெள்ளிதின்
மேலரா செய்துவான் விரும்பி மேயினன்.

'வாலி விண்பெற, அரசு இளையவன் பெறக்,
கோலிய வரிசிலை வலியும், கொற்றமும்,
சீலமும், உணர்ந்து, நிற்சேர்ந்து, தெள்ளிதின்
மேல் அரசு எய்துவான் விரும்பி மேயினன்.

பொ :—வாலி விண்ணுலகத்தைப் பெறவும் அவ்வாலியின் அரசை அவனுக்கு இளையவனாகிய சுக்கிரீவன் பெறவும் வளைத்த நின் கட்டமைந்த வில்லின் வலிமையும் வெற்றியும் பண்பும் (கேள்வியான்) தெள்ளிதின் உணர்ந்து (தானும் அவ்வாறே) நின்னை அடைக்கலம் அடைந்து பின் அண்ணன் அரசைப் பெறும்பொருட்டு விரும்பி வீடணன் இங்கு வந்துளான்.

கு :—இராவணனைக் காட்டிலும் வலியனாகிய வாலியை விண்ணுலகம் உறச் செய்த நின் சிலை வலியும் கொற்றமும், தன்னண்ணனாகிய அவ்விராவணனையும் விண்ணுலகுறச் செய்யும் எனவும். வாலியைக் கொன்றபின் அவன் அரசைத் தான் கைக்கொள்ளாது அவ்வாலியின் இளவலாகிய சுக்கிரீவனுக்கு அளித்த நின் சீலம், இராவணனாகிய தன் அண்ணன் அரசைத் தனக்கும் நல்கும் எனவும், தெளிவை உண்டாக்கி வீடணனை இங்கு வரச் செய்தன என்றவாறு. நின் வலியும் சீலமுமே வீடணன் வருகைக்குக் காரணம் என இராமனைச் சிறப்பித்தவாறு. "அளிக்கென, இரக்கு வாரே னெஞ்சிக் கூறேன், ஈத்ததிரங்கா னீத்தொறு மகிழான், ஈத்தொறும் மாவள்ளியன் என நுவலும் நின் நல்லிசைதர வந்திசினே" (பதிற்றுப் - 61) எனக் கபிலர், செல்வக் கடுங்கோ வாழியாதனை நோக்கிக் கூறியது இங்கு ஒப்புநோக்கத்தகும். வீடணன் இங்கு வந்தது குற்றம் என்றால் அக் குற்றம் அவனை இங்கு வரச் செய்த நின் மேலதே ஆகும் எனத் திறம்படக் காட்டியவாறு. வாலி இறக்கக் கோலிய வரிசிலை வலி என்னாது, வாலி விண்பெறக் கோலிய வரிசிலை என மங்கலமாகக் கூறி, வாலிக்கும் விண்ணரசைக் கொடுத்தான் என்ற நயம் தோற்றுவித்தவாறு. வாலி விண்பெறக் கோலிய வரிசிலை வலியும் கொற்றமும் எனவும் அரசிளையவன் பெறக் கோலிய சீலமும் என நிரனிறையாக இயைத்துப் பொருள் கொள்க. கோலுதல் - வளைத்தல் ; செய்தல் என்ற இரு பொருளும்பட நின்றது. வாலியை வென்றபின் அவன் அரசு வெற்றிகொண்ட இராமனுக்குரியதாதலே முறைமையாயினும் அவ்வாறு தான் கைக்கொள்ளாமல் அவ் வாலியின் தம்பியாகிய சுக்கிரீவன் பெற அவ்வரசைக் கொடுத்தது இராமன் சீலமே என்பது தெளியலாம். தெள்ளிதி

னுணர்ந்து என இயையும். இராவணனை வென்றபின் அவன் அரசை இராமன் கைக்கொள்ளாமல் தனக்குத் தருவான் என்ற நம்பிக்கையால் வீடணன் இங்கு வந்துளான் என்றவாறு. (90)

6582. செறிகழ லரக்கர்த மரசு சீரியோர்
நெறியல தாகலி னிலைக்க லாமையு
மெறிகட லுலகெலா மிளவற் கீந்ததோர்
பிறிவருங் கருணையு மெய்யும் பேணினன்.

'செறிகழல் அரக்கர்தம் அரசு சீரியோர்
நெறி அலது; ஆகலின் நிலைக்கலாமையும்,
எறி கடல் உலகு எலாம் இளவற்கு ஈந்தது ஓர்
பிறிவு அருங் கருணையும், மெய்யும், பேணினன்.

பொ :—காலில் கட்டிய வீரக் கழலினையுடைய அரக்கர்களின் அரசு, சிறப்புமிக்க பெருமக்களின் நன்னெறியைப் பின்பற்றிச் சென்றதன்று ஆகலின், அது நிலைபெற இயலாமையையும், அலை வீசுகின்ற கடலால் சூழப்பட்ட உலகம் முழுமையையும் நின் இளவலாகிய பரதனுக்குக் கொடுத்ததாகிய ஒப்பற்ற, நீங்குதல் இல்லாத நின் கருணையையும் வாய்மையையும் உணர்ந்து வந்துளான்.

கு :—அரசு நிலைபெறற்கேற்ற வீரமுடைமை புலப்படச் 'செறிகழலரக்கர்' என்றும், அத்தகு வீரமுடையராயினும் அவர் அரசு நிலை பெறுமைக்குக் காரணம் புலப்படச் சீரியோர் நெறியலதாகலின் என்றும் கூறினன். தான் அரசு பெறும் பொருட்டுத் தன் அண்ணனை விடுத்து வருதல் முறையன்று என்பார்க்கு விடையாக 'அரக்கர்தம் அரசு சீரியோர் நெறியலதாகலின் நிலைக்கலாமையும் பேணினன்' என்றான். அண்ணனை விட்டுப் பிரியாது வீடணன் இருந்தாலும் இராவணன் அரசு நிலைபெறாது என்பது உறுதியாகலின், சீரியோர் நெறி செல்லாத அரக்கரை விடுத்துச் சீரியோரைச் சேர்ந்து அவ்வரசைச் சீரியோர் நெறியில் நடத்த நினைப்பது குற்றமன்று என்றவாறு. நிலைக்கலாமையும் கருணையும் மெய்யும் பேணினன் என்க. பேணுதல் - கருதுதல்; உணர்தல். அரக்கர் அரசு நெறி நில்லாமையால் நிலைக்கலாமை யுணர்ந்து வீடணன் இராவணனை விட்டுப் பிரிந்தான் எனவும், உலகெலாம் இளவற்கீந்த கருணையை யுணர்ந்து நின்பால் அடைக்கலம் புகுந்தான் எனவும் கூறுபடுத்திக் கொள்க. 'எறிகடலுலகெலாம் இளவற்கீந்ததோர் கருணை' என்றதால் இராவணனுண்ட சிறிய இலங்கையை விரும்பித் தான் கைக்கொள்ளான் என்பதைப் புலப்படுத்தியவாறு. பிறிவருங்

கருணை—நீங்காத அருட்குணம். மெய் - வாய்மை. சத்தியம். கொடுத்ததைப் பின் கொள்ளாத வாய்மையன் என்ற கருத்தான் 'மெய்யும் பேணினன்' என்றான். பிரிவு எதுகை நோக்கிப் பிறிவு ஆயிற்று. நீரும் தண்மையும் போல இராமன்பால் கருணை பிரியாதது; இயல்பாக அமைந்தது என்றவாறு. (91)

6583. காலமன் றிவன்வருங் கால மென்பரேல்
வாலிதன் றுறுபகை வலிய தேறிய
ஏலுமிங் கிவர்க்கினி யிறுதி யென்றலால்
மூலமென் றுணைவரைப் பிரிவு முற்றினான்.

'காலம் அன்று இவன் வரும் காலம்' என்பரேல்,
வாலிது அன்று; உறுபகை வலியது ஏறியது;
ஏலும் இங்கு இவர்க்கு இனி இறுதி; என்றலால்,
மூலம் என் துணைவரைப் பிரிவு முற்றினான்.

பொ :—'இவ் வீடணன் அண்ணனைப் பிரிந்து வருங்காலம் ஏற்ற காலம் அன்று' என்று கூறுவாராயின், அச் சொல் சிறந்ததன்று; ஏன் எனின்? இராவணன்பால் உற்றுள்ள பகை வலிமை மிக்கது; ஆதலால், இவ்விலங்கையிலுள்ள இராவணன் முதலியோர்க்கு இனி இறுதி வந்து பொருந்தும்; என்று (தன் வலியும் மாற்றான் வலியும் சீர்தூக்கித்) துணிதலால் தனக்கு மூலம் எனப்படும் அண்ணன்மாராகிய இராவண கும்பகருணர்களைப் பிரிதலைச் செய்தான்; (எனவே, இவன் வந்த காலம் ஏற்புடையதே.)

கு :—இராவணன் வலிமையையும் அவனுக்குப் பகையாக வந்துள்ள நம் வலியையும் சீர்தூக்கிப் பார்த்து, இராவணன் வலியினும் நம்வலி மிக்கதாதல் கண்டு, இராவணனை விடுத்து வலிமை மிக்க நம்பால் தக்க காலத்தில் அடைந்துளான் ஆதலின், இவ் வீடணன் வருங்காலம் சரியானதே; பொருத்தமான காலம் அன்று என்பது சிறப்புடையதாகாது என்றவாறு. வாலிது - சிறப்புடையது. உறுபகை - நெருங்கியுள்ள பகை; என்றது இராமனை. வலியது என்புழி அது பகுதிப்பொருள் விகுதி. ஏறியது என்றது உயர்ந்தது என்றவாறு. இங்கிவர்க்கு என்றது இராவணன் முதலியோர்க்கு என்றவாறு. இனி இறுதி ஏலும் என இயையும். என்றலால் - என்று துணிதலால். தன் முன்னேற்றத்திற்குக் காரணமான உடன்பிறந்தவரை 'மூலம் என் துணைவரை' என்றான். பிரிவு முற்றினான் - பிரிந்தான்; ஒரு சொல் நீர்மைத்து. "உடைத்தம் வலியறியா ருக்கத்தினூக்கி யிடைக்கண் முரிந்தார் பலர்" (குறள் - 473) என்றதற்கேற்ப

இராவணன் தன் வலியறியாது இராமனோடு போர் செய்யும் ஊக்க முடையனாக இருக்கின்றானாதலின் அவன் இடைக்கண் முரிவது திண்ணம் என்பதை முன்னமே அறிந்து வீடணன் வந்த காலம் ஏற்றகாலமே என்றவாறு. "காலமே நோக்கினும்...ஏலுமே" (82) என நீலன் கூறியதும், சுக்கிரீவன், இடனிது காலமீது என்ன எண்ணியதும் இங்கு நினைந்து அனுமன், 'காலமன் றிவன்வரு கால மென்பரேல்' எனக் கூறலானான். (92)

இதன்பின் 52-ல் 91–1 என மிகைப்பாடலாகக் காட்டப்பட்டுளது.

6583 (a) ஆவலி னடைக்கலம் புகுந்துளான் கருத்து,
ஓவலினிவர் தமக் குணர வொண்ணுமோ
தேவர்கள் தேவனீ தெளியி னன்னவர்க்
கூவியிங் கறிவது கொள்கை யாகுமால்.

6584. தீத்தொழி லரக்கர்த மாயச் செய்வினை
வாய்த்துள ரன்னவை யுணரு மாண்பினால்
காய்த்தவ ரவர்களே கையுற்றார் நமக்
கேற்றதோ ருறுதியு மெளிதி னெய்துமால்.

'தீத்தொழில் அரக்கர், தம் மாயச் செய்வினை
வாய்த்துளர், அன்னவை உணரும் மாண்பினால்
காய்த்தவர் அவர்களே கையுற்றார்; நமக்கு
ஏற்றதோர் உறுதியும் எளிதின் எய்துமால்.

பொ :—தீய தொழிலையுடைய அரக்கர்கள், தமக்கேயுரிய மாயத்தைச் செய்யும் தொழில் வாய்க்கப்பெற்றவர்கள்; (இராவணன் முதலியோர் செய்யும்) அம் மாயச் செயல்களை அறிந்து கொள்ளும் வகையில் பழக்கமுதிர்ந்தவர்களாகிய அவ்வரக்கர்கள் தாமே வலிய வந்து நம் பக்கம் சேர்ந்துளார்; (ஆதலால்) நமக்கு ஏற்றதாகிய சிறந்த நன்மையும் எளிதாகக் கிடைக்கும்.

கு :—நம் பகையாக இருக்கின்ற இராவணன் முதலிய அரக்கர் மாயத்தைச் செய்யும் தொழில் வாய்க்கப்பெற்றவர்கள். அவர்களது மாயத்தை உணரும் ஆற்றல் நமக்கு இல்லை. அம் மாயத்தை உணரும் வகையில் பயிற்சி முதிர்ந்த அவ்வரக்கரினத்தவரே நம் பக்கல் சேர்ந்தால் நமக்கு வேண்டிய உறுதியும் எளிமையாகக் கிடைக்கும் என்று கூறி வீடணன் வருவதால் விளையும் நன்மை புலப்படுத்தியவாறு. இங்கு அனுமன் கூறியவாறே வீடணன், மாயா சீதைப் படலத்தும் நிகும்பலையாகப் படலத்தும் இந்திரசித்துச்

செய்த மாயங்களை உணர்ந்து இராம இலக்குவர்க்குக் கூறித் துன்பம் துடைத்து நன்மை செய்ததைப் பின்னர்க் காணலாம். "அடலரக்கரவ ரோடே செருச்செய்வா னமைந்தீராயின், தாம் பொறியிற் பலமாயந் தரும் பொறிக ளறிந்தவற்றைத் தடுப்பெனன்றே, பாம்பறியும் பாம்பினகால் என மொழியும் பழமொழியும் பார்க்கிலீரோ" (சூர்ப்பணகைப் - 139) என அரக்கியாகிய சூர்ப்பணகை தன்னைச் சேர்த்துக் கொள்வதால் உளதாகும் நன்மைகளைக் கூறியுள்ளமை இங்கு ஒப்பு நோக்குதற்குரியது. மாயஞ் செய்தலையே தொழிலாக உடையவர் அரக்கர் ஆதலின் 'அரக்கர் தம் மாயச் செய்வினை' என்றார். உணரும் மாண்பினால் காய்த்தவர் என்றது மாயத்தை உணரும் சிறப்பால் பழக்கம் முதிர்ந்தவர் என்றவாறு. காய்த்தல் - முதிர்தல்; காழ்ப் பேறுதல் எனலுமாம். தாமே வலிய வந்து புகுந்தார் என்பான், 'காய்த்தவரவர்களே கையுற்றார்' என்றான். கையுறுதல் - நம் பக்கம் சேர்தல். கை - பக்கம். நமக்கு உறுதியும் எளிதின் எய்தும் என்க. மாய வல்லரக்கரைச் சேர்த்தலாகாது என்றதை மறுத்துக் கூறியவாறு. (93)

6585. தெளிவுற லரிதிவர் மனத்திற் றீமையாம்
விளிவது செய்குவ ரென்ன வேண்டுதல்
ஒளியுற வுயர்ந்தவ ரொப்ப வெண்ணலார்
எளியவர் திறத்திவை யெண்ண லேயுமோ.

' "தெளிவுறல் அரிது, இவர் மனத்தின் தீமை; நாம்
விளிவது செய்குவர்" என்ன வேண்டுதல்,
ஒளி உற உயர்ந்தவர் ஒப்ப எண்ணலார்;
எளியவர் திறத்து இவை எண்ணல் ஏயுமோ?

பொ :—" இவ்வரக்கருடைய மனத்திலுள்ள தீமையைத் தெரிந்து கொள்ளுதல் அருமையாகும்; (நல்லார் போல வந்த இவர்கள் பின் தீயராய்) நாம் இறக்குமாறு செய்வார்கள்" என்று கருதுதலை, அறிவினால் பெரியவர்கள் 'ஒத்தது' என்று மதிக்க மாட்டார்கள்; (நம்பால் அடைக்கலம் புகுந்த) எளியவரிடத்தில் இத்தகைய செயலையேற்றி எண்ணுதல் பொருந்துமோ? (பொருந்தாது.)

கு :—'பாதகர் நம்வயிற் படர்வராமெனில் தீதிலராய் நமக்கு அன்பு செய்வரோ' (73) எனச் சாம்பவன் மேற்கூறியதை உளங் கொண்டு அனுமன் மறுத்துக் கூறியவாறு. தோற்றத்தால் நல்லவர் போலத் தோன்றி மனத்தில் தீமையுடையராயிருப்பதை நாம் அறியாமல் மறைத்துக் கொண்டிருப்பார்கள்; காலம் வாய்த்தபோது நாம்

விளியுமாறு செய்வார்கள் என்று கருதுவது அறிவுடைமை ஆகாது என்பான், 'ஒளியுற உயர்ந்தவர் ஒப்ப எண்ணலார்' என்றுன். எண்ணலார் - மதியார். வேண்டுதல் என்பது இங்குக் கருதுதலை உணர்த்திற்று. வேண்டுதலை ஒப்ப எண்ணலார் என்க. ஒளி - அறிவு. 'ஒளியார்முன் ஒள்ளியராதல்' (குறள் - 714) என்புழியும் ஒளி அப்பொருள்படுதல் காணலாம். நம்பால் அடைக்கலமாகப் புகுந்த எளியவரிடத்தில் இத்தகைய தீய செயல்களையேற்றி நினைத்தல் அறிவிற்கும் உத்திக்கும் பொருந்துவதன்று என்பது கருத்து. யாம் தெளிவுறலரிது; யாம் விளிவது செய்குவர் என 'யாம்' இடைநிலை விளக்காய் முன்னும் பின்னும் இயையும். (94)

6586. கொல்லுமி னிவனையென் றரக்கன் கூறிய
எல்லையிற் றூதரை யெறித லென்பது
புல்லிது பழியொடும் புணரும் போர்த்தொழில்
வெல்லலம் பின்னரென் றிடைவி லக்கினுன்.

'"கொல்லுமின், இவனை" என்று அரக்கன் கூறிய
எல்லையில், "தூதரை எறிதல் என்பது
புல்லிது; பழியொடும் புணரும்; போர்த்தொழில்
வெல்லலம், பின்னர்" என்று இடை விலக்கினுன்.

பொ :—(யான் இந்திரசித்தால் இராவணனைக் கிட்டிய நிலையில்) 'கொல்லுங்கள் இவனை' என்று இராவணன் சொன்னபோது, (இவ்வீடணன்) தூதரைக் கொல்லுதல் என்பது இழிந்த செயல்; பழியோடு பொருந்தியதும் ஆகும்; பின்னர்ப் போர்த் தொழிலில் வெல்லமாட்டாதவரும் ஆவோம்" என்று கூறி இடையில் நின்று தடுத்தான்.

கு :—இராவணன் இழிவு புலப்பட 'அரக்கன்' என்ற பெயரால் அவனைக் குறித்தான். எறிதல், கொல்லுதலை உணர்த்தியது. தூதரைக் கொல்லலாகாதென்பதற்கு 'புல்லிது' 'பழியொடும் புணரும் போர்த்தொழில் வெல்லலம் பின்னர்' என்ற மூன்று காரணங்களைக் கூறினுன். தூதரைக் கொல்லாது அனுப்பினுல் நம் வலியின் அளவை நம் பகைவர்க்குத் தெரிவித்தவர்களாவோம்; போர்த் தொழிலில் வெல்லத்தக்க ஆற்றலுடையம் என்பதையும் புலப்படுத்தியவர்களாவோம். தூதரைக் கொன்றுவிட்டால் நம் வலியினளவைப் பகைவர்க்குப் புலப்படுத்த வழியில்லை; போர்த் தொழிலில் வெல்லமாட்டாதவர்கள் என நம்மைப் பகைவர் நினைக்க நேரும் என்பான். "போர்த் தொழில் வெல்லலம் பின்னர்' என்று

இறுதியில் கூறி விலக்கினன். வெல்லலம் ஆவோம் என ஒரு சொல் வருவித்து முடிக்க. "இளையவள் தன்னைக் கொல்லாது இருசெவி மூக்கொடு ஈர்ந்து விளைவுரை யென்று விட்டார் வீரராய் மெய்ம்மை ஓர்வார்; களைதியேல் ஆவி நம்பால் (இவன் வந்து கண்ணிற்கண்ட அளவு உரையாமற் செய்தி ஆதி" என்று அமையச் சொன்னான்" (சுந்தர - 1158) என முன்னர் வீடணன் கூறிய கருத்தையே இங்கு அனுமன் இவ்வாறு விளக்கிக் கூறுகின்றான்.

(95)

6587. மாதரைக் கோறலு மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலு மழிவு செய்யினு்ந
தூதரைக் கோறலுந் தூய்தன் றுமென
வேதுவிற் சிறந்தன வெடுத்துக் காட்டினான்.

"மாதரைக் கோறலும், மறத்து நீங்கிய
ஆதரைக் கோறலும், அழிவு செய்யினும்
தூதரைக் கோறலும் தூய்து அன்றாம்" என
ஏதுவில் சிறந்தன எடுத்துக் காட்டினான்.

பொ :—"பெண்டிரைக் கொல்லுதலும், வீரத்தில் நின்றும் நீங்கிய அறிவில்லாத எளியவரைக் கொல்லுதலும், நமக்குக் கேடு செய்தாலும் தூதரைக் கொல்லுதலும் நல்லதன்று" என்று ஏதுக்களுள் சிறந்தனவற்றை எடுத்துக் காட்டி விளக்கினான்.

கு :—மறத்து நீங்கிய மாதரைக் கோறலும் என முன்னும் இயைத்து இடைநிலை விளக்கணியாக்கலும் ஆம். மறம் - வீரம். ஆதர் - அறிவிலிகள். "முன்பொருள் செய்யாதா ராதரே" (சிறுபஞ்சமூலம் - 20) என்புழியும் இப்பொருள் பாடுதல் காணலாம். தூதனாக வந்த அனுமனைக் கொல்லுதற்குக் காரணம் அவன் செய்த அழிவுகளே என இராவணன் அமைதிகூற இயலாத வண்ணம், 'அழிவு செய்யினும் தூதரைக் கோறலும் தூய்தன்று' என்று வீடணன் கூறினான் என்க. தூதரைக் கொல்லலாகாது என்றற்குரிய காரணங்களுள் சிறந்தனவற்றை எடுத்துக் காட்டினான் என்பான், 'ஏதுவிற்சிறந்தன எடுத்துக் காட்டினான்' என்றான். தூய்தன்று என்பது ஒருமை வினையாதலின் மாதரைக் கோறலும் தூய்தன்று; ஆதரைக் கோறலும் தூய்தன்று. தூதரைக் கோறலுந் தூய்தன்று எனத் தனித்தனி முடிக்க. கோறல் - கொல்லுதல். முதனிலை நீண்ட தொழிற்பெயர்; தூதரைக் கோறல் தூய்தன்று என்பதைப் புலப்படுத்தும் வீடணன் அதனோடொப்புமையுடைமை

வின் மாதரைக்கோறலும் ஆதரைக் கோறலும் தூய்தன்று என்பதை உடன் கூறியவாறு; இது ஒப்புமைக்கூட்டவணி ஆம்(96)

6588. எல்லியில் யானிவ னிரண மாளிகை
செல்லிய போதினுந் திரிந்த போதினும்
நல்லன நிமித்தங்க ணனிநி கழ்ந்தன
அல்லது முண்டுநா னறிந்த தாழியாய்.

'எல்லியில் யான் இவன் இரண மாளிகை
செல்லிய போதினும், திரிந்த போதினும்,
நல்லன நிமித்தங்கள் நனி நிகழ்ந்தன ;
அல்லதும் உண்டு, நான் அறிந்தது—ஆழியாய்.

பொ :—ஆணைச் சக்கரமுடையோனே ! இரவில் யான் இவனுடைய பொன் மயமான மாளிகைக்குச் சென்ற பொழுதிலும், அங்குத் திரிந்த பொழுதிலும், நல்லனவாகிய நிமித்தங்கள் மிகப் பல நிகழ்ந்தன ; அதுவன்றியும் நான் அறிந்ததொரு நிகழ்ச்சி உண்டு.

கு :—எல்லி - இரவு. "எல்லியிது காலை யிது வென்பதறி கல்லாள்" (சீவகசிந் - 1877) என்புழியும் இப்பொருள் படுதல் காணலாம். இரணம் - பொன். வீடணன் பொன் மாளிகைக்கு அனுமன் போன போதும் அதில் நடமாடியபோதும் நல்ல சகுனங்கள் பல நிகழ்ந்தமையால் இவ்வீடணனே பின் அரசனுதற் குரியவன் என்பதும் அவனைச் சேர்த்துக் கொள்வதால் நமக்கு நன்மையுண்டு என்பதும் புலனுகின்றது என்றவாறு. அனுமன் தானறிந்ததை அடுத்த செய்யுளில் புலப்படுத்துகின்ருன். (97)

6589. நிந்தனை நறவமு நெறியி லூன்களுந்
தந்தன கண்டிலென் றரும தானமும்
வந்தனை நீதியும் பிறவு மாண்பமைந்
தந்தணர் மனையெனப் பொலிந்த தாமரோ.

'நிந்தனை நறவமும், நெறி இல் ஊன்களும்,
தந்தன கண்டிலென் ; தரும தானமும்,
வந்தனை நீதியும், பிறவும் மாண்பு அமைந்து,
அந்தணர் மனை எனப் பொலிந்தது ஆமரோ.

பொ :—பழிக்கத்தக்க கள்ளும், நன்னெறியால் வாராத (கொலை யாகிய தீநெறியால் வந்த) ஊன் உணவுகளும், இவன் வீட்டில் இருக்கக் கண்டிலேன் ; தருமத்தோடுபட்ட தானங்களும், கடவுள் வழிபாட்டின் முறைமைகளும், பிற நன்மைகளும், சிறப்புடன் பொருந்தி அந்தணரின் வீடு போல விளங்கியது; கண்டேன்.

கு :—ஏனை அரக்கர் வீட்டில் இயல்பாகக் காணத்தக்க, கள்ளும் ஊனும் வீடணன் வீட்டில் இல்லை; ஏனை அரக்கர் வீட்டில் காண முடியாத தருமதானமும் வந்தனை நீதியும் வீடணன் வீட்டில் பொலிந் திருந்ததைக் கண்டேன்; என்று கூறி, வீடணன் நல்லவன்போல நடிப்பவன் அல்லன்; அவன் இயல்பாகவே நல்லவன் என்பதை அனுமன் நிறுவியவாறு. ஈன்றாள் முகத்தேயும் இன்னாது கள் என்று சான்றோரால் நிந்திக்கப்படுதல் நினைந்து 'நிந்தனை நறவமும்' என்றான். உயிரில் தலைப் பிரிந்த ஊன் ஆகலின் 'நெறியில் ஊன் களும்' என்றான். கொலையாகிய தீநெறியால் வந்த ஊன் என்ற வாறு. "அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல், பிறவினை யெல்லாந் தரும்" (குறள் - 321) என்றது காண்க. தந்தன - கொணரப்பட்டன; செயப்பாட்டுவினை செய்வினையாக வந்தது; கொணரப்பட்டு அங்கு இருக்கக் கண்டிலேன் என்பது கருத்து. கண்டிலென் என முன் வந்ததைக்கொண்டு பொலிந்தது 'கண் டேன்' என ஒரு சொல் வருவிக்கப்பட்டது. அந்தணர் - அறவோர். "அந்தணரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" (குறள் - 30) என்றது காண்க. தருமதானமும் வந்தனை நீதியும் பொலிவது அந்தணர் இல்லின்கண் ஆகலின், அவை விளங்கும் வீடணன் வீடு அந்தணரில்லெனப் பொலிந்தது என்றது ஏது உவமையாகும். மாண்பமைதலால் எனக் காரணப் பொருட்டாக்குக; மழை பொழிந்து நெல் விளைந்தது என்புழிப்போல. பிறவும் என்றதால் வாய்மையும் நடுவுநிலைமையும் முதலிய அறங்கள் கொள்ளப்படும்.

(98)

6590. அன்னவன் றனிமக ளலரின் மேலயன்
சொன்னதோர் சாபமுண் டுன்னைத் துன்மதி
நன்னுத றீண்டுமே னணுகுங் கூற்றென
என்னுடை யிறைவிக்கு மினிது கூறினாள்.

'அன்னவன் தனிமகள், "அலரின்மேல் அயன்
சொன்னது ஓர் சாபம் உண்டு ; "உன்னைத் துன்மதி
நன்னுதல்! தீண்டுமேல், நணுகும் கூற்று" என
என்னுடை இறைவிக்கும் இனிது கூறினாள்.

பொ :—(என்னை வீடணன் உய்வித்ததுபோல) என்னை ஆளாக உடைய தலைவியாகிய சீதைக்கும் அவ்வீடணனுடைய ஒப்பற்ற மகளாகிய திரிசடை என்பவள்,—"நல்ல நெற்றியையுடையவளே! உன்னை அந்தக் கெடுமதியுடைய இராவணன் தீண்டுவானாயின் எமன் அவனை நெருங்கி உயிர் உண்பான்; இவ்வாறு தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் அவனுக்குக் கூறிய ஒரு சாபம் உளது" என இனிமையாகக் கூறினாள். (அதனால் சீதை கலக்கம் தவிர்ந்திருந்தாள்)

கு :—வீடணனே அன்றி அவன் மகளும் அறத்தின் வழிப்பட்டவள்; சீதையின் தடுமாற்றத்தைப் போக்கி அமைதியுறச் செய்தவள் என அனுமன் அவ்வீடணன் குடும்பத்தின் பெருமையை விளக்கியவாறு. தனி மகள் என்றது திரிசடையின் இணையற்ற பெருமை நினைந்தும் வீடணனுக்கு அவள் ஒருத்தியே மகளாதல் நினைந்தும் கூறியது. அயனிடம் செல்லும் அமரமாதினை இராவணன் விண்ணிற்கண்டு கற்பழிக்க அவள் அவன் கொடுமையைப் பிரமனுக்குச் சொல்லியபோது, அப் பிரமன் சினந்து 'இனி, இராவணன் தன்னை விரும்பாத மகளிரைத் தீண்டினானாயின் அவன் தலை சிதறுவதாக' எனச் சாபம் கொடுத்தான் என்பது பழைய நிகழ்ச்சி. நணுகுங்கூற்று என்றது, இறப்பான் என்னுங் கருத்தினது. 'இறைவிக்கும் என்றவும்மை, தனக்கு வீடணன் உதவியதேயன்றி' என்னும் பொருளது ஆதலின், இறந்தது தழீஇய எச்சவும்மையாம். இனிது கூறினாள் என்றது, அச்சொல் கேள்வியானும் பொருளானும் இனிதாதலைப் புலப்படுத்தியவாறு. (99)

6591. பெற்றுடைய பெருவரமும் பிறந்துடைய
★ வஞ்சனையும் பிறவு முன்கை
விற்றொடையின் விடுகணையால் வெந்தழியு
மெனக்கருதி விரைவின் வந்தான்
உற்றுடைய பெருவரமு முகந்துடைய
தண்ணளியு முணர்வு நோக்கின்
மற்றுடையர் தாமுளரோ வாளரக்க
னன்றியே தவத்தின் மிக்கார்.

"பெற்றுடைய பெருவரமும், பிறந்துடைய
வஞ்சனையும், பிறவும் உன்கை
வில் தொடையின் விடுகணையால் வெந்து ஒழியும்"
எனக்கருதி விரைவில் வந்தான்;

உற்றுடைய பெருவரமும் உகந்துடைய
தண்ணளியும் உணர்வும் நோக்கின்,
மற்று உடையர்தாம் உளரோ, வாள் அரக்கன்
அன்றியே தவத்தின் மிக்கார்.

பொ:—'(தன் அண்ணனாகிய இராவணன்) பெற்றுள்ள பெரு வரங்களும், அவன்பால் தோன்றியுள்ள மாயச் செயல்களும் பிற சிறப்புகளும் உன் கையில் உள்ள வில்லில் ஒரு தொடுப்பில் விடுகின்ற அம்பினால் வெந்து அழியும்' என்று கருதி வீடணன் நின்பால் விரைவாக வந்து சேர்ந்தான்; இவன் அடைந்திருக்கின்ற பெரிய வரங்களும் அவன் மகிழ்ந்து மேற்கொண்டுள்ள குளிர்ந்த அருட்குணமும், அவன் ஞான உணர்ச்சியும் நோக்கினால் இந்த வாளேந்திய அரக்கனை அன்றித் தவத்திற் சிறந்தவர்களாய் அத்தகைய சிறப்புடையவர்கள்தாம் வேறு யாரேனும் உளரோ? (இலர் என்றபடி)

கு:—தன் அண்ணனுக்குரிய வரம் முதலிய பெருமைகள் யாவும் இராமன் அம்பு ஒன்றால் அழியும் என்று அறிந்து வீடணன் இராமனை அடைந்தான் என்பது முதலிரண்டடிகளின் கருத்து. அரக்கன் என்ற காரணத்தால் வீடணனை விலக்கல் ஆகாது; அவன் அடைந்திருக்கின்ற வரங்களும் அவன் மேற்கொண்டுள்ள அருளும் அவன் உணர்ந்திருக்கின்ற ஞான உணர்ச்சியும் அரக்கரல்லாதாரில் பெற்றிருப்பவர்கள் யாரேனும் உளரோ? இலர். எனவே அரக்கரல்லாதாரினும் தவத்தின் மிக்கவனாய் பெரு வரமும் தண்ணளியும் உணர்வுமுடைய அரக்கனாகிய வீடணன் சிறந்தவனாதலின் அவனை ஏற்றுக் கொள்ளலாம் என்பது பின்னிரண்டடிகளின் கருத்து. இராவணன் பெற்றுடைய பெருவரமாவது மூன்றரைக்கோடி ஆயுளும் மூவுலகாட்சியும் ஆம். வஞ்சனை என்றது, இங்கு அவன் மாயச் செயல்களை. பிறவும் என்றது, செல்வமும் படைவலியு முதலிய பிற சிறப்புகளை. இராவணன் சிறப்புகளை அழிப்பதற்குப் பெருமுயற்சி வேண்டா என்பான் 'உன்கை விற்றொடையின் விடுகணையால் வெந்தழியும்' என்றான். வீடணனுற்றுடைய பெரு வரமாவது கடவுள் பத்தியும் அந்தணர் மாட்டு அன்பும் முதலியன. உகத்தல் - மகிழ்தல். உணர்வு என்றது, ஞான உணர்வினை. தவத்தின் மிக்காராய் மற்றுடையார் தாமுளரோ என இயையும். 'அரக்கனாதலின் ஏற்றுக் கொள்ளலாகாது' என்று கூறுவார்க்கும் வீடணனுக்குள்ள வரமும் தண்ணளியும் உணர்வும் தவமும் இல்லை என்பதைக் குறிப்பாலுணர்த்தியவாறு.

(100)

6592. தேவர்க்குந் தானவர்க்குந் திசைமுகனே
முதலாய தேவ தேவர்
மூவர்க்கு முடிப்பரிய காரியத்தை
முற்றுவிப்பான் மூண்டு நின்றேம்
ஆவத்தின் வந்தபய மென்றனை
யயிர்த்தகல விடுது மென்றல்
கூவத்தின் சிறுபுனலைக் கடலயிர்த்த
தொவ்வாதோ கொற்ற வேந்தே.

'தேவர்க்கும், தானவர்க்கும், திசைமுகனே
முதலாய தேவ தேவர்
மூவர்க்கும், முடிப்பரிய காரியத்தை
முற்றுவிப்பான் மூண்டு நின்றேம்;
ஆவத்தின் வந்து "அபயம்" என்றனை
அயிர்த்து அகல விடுதும் என்றல்
கூவத்தின் சிறுபுனலைக் கடல் அயிர்த்தது
ஒவ்வாதோ?—கொற்ற வேந்தே!

பொ :—வெற்றியே பெறுமியல்புடைய அரசே! தேவர்கட்கும் அசுரர்கட்கும் நான்முகனாகிய பிரமன் முதலாய தலைமைத் தேவர்கள் மூவர்க்கும் முடித்தற்கு அரிய காரியத்தை முடிப்பதற்கு முனைந்திருக் கின்றேம்; (அத்தகைய நாம்) ஆபத்துக் காலத்தில் நம்மை நாடி வந்து அபயம் என்று கூறிய வீடணனை ஐயுற்று விலக்கிவிடுவோம் என்றல், பெரிய நீரையுடைய கடல், கிணற்றிலுள்ள சிறிய அளவினையுடைய நீரைக் குறித்து, (நம்மையும் அடித்துக்கொண்டு போய்விடுமோ என) ஐயுற்றதைப் போன்றதாகாதோ?

கு :—இராமனுக்கும் வானரப்படைக்கும் முதலும் சினையும் போன்ற ஒற்றுமையுண்மையின் அனுமன் இராமனையும் வானரப் படையினையும் உளப்படுத்தி 'மூண்டு நின்றேம்' 'விடுதுமென்றல்' என உளப்பாட்டுத் தன்மைப் பன்மையால் கூறுகின்றன். 'பற்றே மேல்' எனப் பின்னும் இவ்வாறே கூறுகின்றமையும் காணலாம். "கூற்றுவன் தன்னொடிவ் வுலகுங்கூடிவந் தேற்றன வென்னினும் வெல்ல வேற்றுளேம்" (68) என இவ்வாறே சுக்கிரீவனும் உளப் பாட்டுத்தன்மைப் பன்மையால் முன் கூறியுள்ளதும் நினைக. தேவர் தானவரே அன்றி முதற்றேவர் மூவரும் முடித்தற்கரிய காரியம் என்றது, அரக்கரை வேரறுத்து அறத்தை நிலைநிறுத்துதலை "சூரறுத்தவனுஞ் சுடர்நேமியும், ஊரறுத்த வொருவனு மோம்பினும், ஆரறத்தினொ டன்றி நின்றரவர், வேரறுப்பென்" (அகத்தியர் - 22)

என இராமன் தண்டக வனத்து முனிவர்கட்குக் கூறியுள்ளது இங்கு நினையலாம். பெருவலி படைத்த நாம் சிறுவலியுடைய வீடணனை ஐயுற்று விலக்குவது, பெரியதாய கடல்நீர் சிறிய கிணற்று நீரை ஐயுற்று விலக்குவது போலும் எனப் பொருந்தாமை விளக்கியவாறு. மழைக்காலத்தில் கிணறு நிரம்பி வழிந்தநீர் கடலில் கலக்கச் செல்லும்போது "இக்கிணற்று நீரை ஏற்றுக்கொண்டால் நமக்குக் கேடு விளையும்" எனக் கடல் ஐயுற்று விலக்காது ஏற்றுக்கொள்ளு தல் போலத் தேவதேவர் மூவர்க்கும் முடிப்பரிய காரியத்தை முற்று விக்கும் பேராற்றலையுடைய நாம் அண்ணன் கொடுமைக்கு அஞ்சி வந்த எளியனாய வீடணனை விலக்காது ஏற்றுக்கொள்ளுதலே தக்கது என்பது கருத்து. கிணற்று நீரால் கடல் நீருக்குக் கேடு செய்ய முடியாதவாறுபோல, எளியனாய வீடணனால் இராமனுக்குக் கேடு விளைக்க இயலாமையும் இவ்வுவமையால் பெற்றும். கூவம் - கிணறு. கடல் என்றது கடல்நீரை. சிறுபுனல் என்ற அடையால் பெருங்கடல் நீர் என அடைவருவிக்க. வீடணனால் கேடு விளைய லாம் என ஐயுறத் தகாதவன் என்ற கருத்துப் புலப்பட இராமனைக் கொற்ற வேந்தே! என விளித்த நயம் காண்க. (101)

6593. பகைப்புலத்தோர் துணையல்ல ரென்றிவனைப்
பற்றேமே லறிஞர் பார்க்கின்
நகைப்புலத்த தாமன்றே நற்றாய
முளதாய பற்றான் மிக்க
தகைப்புலத்தோர் தந்தையர்க டம்பியர்க
டமையரிவர் தாமே யன்றோ
மிகைப்புலத்து விளைகின்ற தொருபொருளைக்
காதலிக்கின் விளிஞ ராவர்.

'"பகைப்புலத்தோர் துணை அல்லர்" என்று இவனைப்
பற்றேமேல் அறிஞர் பார்க்கின்
நகைப்புலத்தது ஆம் அன்றே; நல் தாயம்
உளதாய பற்றால் மிக்க
தகைப்புலத்தோர் தந்தையர்கள் தம்பியர்கள்
தமையர் இவர் தாமே அன்றோ,
மிகைப்புலத்து விளைகின்றது ஒருபொருளைக்
காதலிக்கின் விளிஞர் ஆவர்?

பொ :—"பகையிடத்தைச் சார்ந்தவர் நமக்குத் துணையாதற்கு உரியரல்லர்" என்று கருதி இவ்வீடணனை ஏற்றுக் கொள்ளாது விடுவோம் ஆயின், அரசியலுணர்ந்த அறிஞர்கள் நோக்கினுல் நம் செயல் நகைப்பிற்கு இடமாகுமன்றே? (ஏன் எனின்?) சிறந்த பிறப்புரிமையால் உளதாய பற்றினுல் மிகுந்த மேன்மையான கருத்துடையராகிய தந்தையரும், தம்பியரும் தமையன்மாரும் ஆகிய இத்தகைய உறவினர்தாமே அன்றே, மேல் பயன்தருகின்றதாகிய ஒரு பொருளைத் தத்தமக்கே வேண்டும் என்று விரும்பினுராயின், போர்க்களத்தில் வெகுள்கின்ற பகைவராகத் தக்கவர்கள்?

கு :—முன்னர்ப் பகைவரோடு தொடர்புடையராயிருந்து பின்னர்ப் பிரிந்து வந்தவரை விரைந்து சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை, "நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே யொட்டாரை யொட்டிக் கொளல்" (குறள் - 379) என்றதால் உணர்ந்த அறிஞர், 'பகைப்புலத்தோர் துணையல்லர் என்றிவனைப் பற்றேமேல்' நம் செயலைப் பார்த்துச் சிரிப்பார் என்றவாறு. பகைவேந்தனுேடு நட்பாயிருந்து பின் பகைத்து வந்தவர்களே அப் பகைவேந்தனுேடு போர் செய்யுங்கால் நம் நண்பர்களைக் காட்டிலும் சிறந்து நின்று துணை செய்யத் தக்கவராகவும், அவரைப் பகைப்புலத்தோராயிருந்தவர் என்ற காரணம் பற்றித் துணையல்லர் என்று விலக்குவது அறிஞர் எள்ளத்தக்க செயல் என்பது விளக்கியவாறு. தந்தையர், தம்பியர், தமையர் என்ற நெருங்கிய உறவினர்தாம், பயன்தரத்தக்க ஒரு பொருளை விரும்பியபோது தமக்குள் பெரும்பகைஞராவர் ஆதலின், இராவணன் தம்பியாகிய வீடணனும் இலங்கை யரசாகிய ஒரு பொருளைக் காதலித்தமையால் அண்ணனுகிய அவ்விராவணனுேடு பெரும்பகை கொண்டு பிரிந்து வந்துளான்; அவனைச் சேர்த்துக் கொள்ளுதலே அரசியலறிவிற்கு ஏற்றதாகும் என்றவாறு. வலியின் மிகுதி காட்டிப் போர் செய்தற்கு இடமாதல் பற்றிப் போர்க்களத்தை 'மிகைப்புலம்' என்றுன். விளைதல் - பயன்படுதல். இனி ஐம்புலத்திற்கு மேற்பட்ட மனம் எனலும் ஆம். "இவர்தாமே யன்றே காதலிக்கின் மிகைப்புலத்து விளிஞராவர் என இயையும். விளிஞர் - கோபிப்பவர்; பகைப்பவர். "விளிந்தாரே போலப் பிறராகி" (பழமொழி-182) என்புழியும் விளி கோபத்தை யுணர்த்தல் காணலாம். இனி விளிஞர் - வேறுபடுவர் எனப் பொருள் கூறலும் ஆம். ஏனையோர் பகையினும் உறவினர் பகையே பெரிது என்பது காட்டியவாறு. தாயம் - சொத்துரிமை, பங்காளித்தன்மை. (102)

6594. ஆதலா லிவன்வரவு நல்வரவே
யெனவுணர்ந்தே னடிய னேனுன்
வேதநூ லெனத்தகைய திருவுளத்தின்
குறிப்பறியே னென்று விட்டான்
காதனான் முகனாலுங் கணிப்பரிய
கலையனைத்துங் கதிரோன் முன்சென்
றோதினா னோதநீர் கடந்துபகை
தடிந்துலகை யுய்யக் கொண்டான்.

'ஆதலால், இவன் வரவு நல்வரவே' என
உணர்ந்தேன், அடியனேன்; உன்
வேதநூல் எனத்தகைய திருவுளத்தின்
குறிப்பு அறியேன் என்றுவிட்டான்;—
காதல் நான்முகனாலும் கணிப்பரிய
கலை அனைத்தும் கதிரோன் முன் சென்று
ஓதினான், ஓதநீர் கடந்து பகை
தடிந்து உலகை உய்யக் கொண்டான்.

பொ :—"ஆகையினால், (தன் அண்ணனோடு மாறுபட்டு வந்துள்ள) இவ்வீடணன் வரவு நமக்கு நன்மை தரத்தக்க வரவே என நின்னடியேனாகிய யான் தெளிந்தேன்; வேதநூல் என்று சொல்லத் தக்கவாறு புலமை நிரம்பியுள்ள உன் திருவுளத்தின் குறிப்பு எதுவோ அறிந்திலேன்" என்று சொல்லி முடித்தான்; (யாரெனின்?) கலைமகள்மேல் வைத்த காதலையுடைய பிரமனாலும் எண்ண முடியாத கலைகள் யாவற்றையும் சூரியனுக்கு முன்னே நடந்து சென்று அவன்பால் கற்றுக் கொண்டவனும், அலைகளை யுடைய கடலைக் கடந்து இலங்கை புகுந்து அட்சயகுமாரன் முதலிய பகைவரைக் கொன்று உலகத்தை உய்வித்துக் கொண்டவனுமாகிய அனுமன்.

கு :—இராமன் உள்ளத்தில் வேதங்கள் யாவும் பதிந்து கிடத்தல் பற்றி 'வேதநூலெனத் தகைய திருவுளம்' என்று சிறப்பித்தான். இராமன் முடிவே வேத முடிபு என்றவாறு. அடியனேன் இவன் வரவு நல்வரவே என வுணர்ந்தாலும் தலைவனாகிய நின் திருவுளக் குறிப்பு இருந்தாலன்றி என் கருத்து முடிவானதன்று என்பான், அடியனேனுன் திருவுளத்தின் குறிப்பறியேன் என்றான். விட்டான் என்றது கூறி முடித்தான் என்றவாறு. பிரமன் கலைமகளின் காதலனாய், நான்கு முகங்களையும் உடையனாயினும் அனுமன் கற்ற கலைகளை எண்ணவும் இயலாதவனானான் என்பார், காதனான்

முகனுலுங் கணிப்பரிய கலையனைத்தும் என்றார். சூரியன் ஓய்வின்றித் திரிபவனாதலின் அனுமன் அச்சூரியன் திரியுமிடமெல்லாம் தானும் திரிந்து கற்றமை தோன்றக் 'கதிரோன் முன் சென்று ஓதினன்' என்றார். ஓதநீர் என்றது கடலை. பகைதடிதல் - பகையை அழித்தல். "சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே" (சிலப்-24:7) என்றதுங் காணலாம். அனுமன் கடலைக் கடந்து சென்று இலங்கையில் சீதையைக் கண்டு வந்து இராமனுக்குச் சொல்லாதிருப்பின் இராம இலக்குவரும் அயோத்தியும் உலகமும் அழிந்திருக்குமாதலின், சீதையைக் கண்டு வந்து கூறி அவ்வழிவினின்றும் உலகை உய்யக் கொண்டவன் அனுமன் என்பார், 'உலகையுய்யக் கொண்டான்' என அவ்வனுமனைச் சிறப்பித்தார். கலையனைத்தும் ஓதினன் என்றமையால் அனுமனின் பேரறிவும், 'ஓதநீர் கடந்துபகை தடிந்து' என்றமையால் அவனது பேராற்றலும் புலப்படுத்தி, அத்தகைய நுணங்கிய கேள்வியனாதலின் 'அடியனேன்' எனவும், 'உன் திருவுளத்தின் குறிப்பறியேன்' எனவும் பணிமொழி பகர்ந்து வணங்கிய வாயினன் ஆனான், என்பதையும் குறிப்பாலுணரவைத்துள்ள அருமை பெருமை மிக்கதாகும். (103)

அனுமன் வார்த்தை கேட்டு மகிழ்ந்து இராமன் கூறுவது

6595. மாருதி வினைய வார்த்தை
★ செவிமடுத் தமிழ்தின் மாந்திப்
பேரறி வாள நன்று
நன்றெனப் பிறரை நோக்கிச்
சீரிது மேலிம் மாற்றந்
தெளிவுறத் தேர்மி னென்ன
ஆரிய னுரைப்ப தானு
னனைவரு மதனைக் கேட்டார்.

மாருதி வினைய வார்த்தை
செவிமடுத்து அமிழ்தின் மாந்திப்
'பேர் அறிவாள! நன்று! நன்று!!'
எனப் பிறரை நோக்கிச்
'சீரிது; மேல் இம்மாற்றம் தெளிவுறத்
தேர்மின்' என்ன
ஆரியன் உரைப்பதானான்;
அனைவரும் அதனைக் கேட்டார்.

பொ:—அனுமன் கூறிய பணிவான சொல்லைச் செவியில் கேட்டு, அமிழ்தம் உண்பதுபோல் மனத்தால் அதைப் பருகி மகிழ்ந்து,

(அனுமனை நோக்கி) பேரறிவாள ! (நீ கூறியதே) நல்லது ; நல்லது ; எனப் பாராட்டிவிட்டு, மற்றவர்களைப் பார்த்து, ' இவ்வனுமன் கூறிய வார்த்தை சிறப்புடையது ; மேல் தெளிவாகத் தெரிந்து கொள்ளுங்கள் ' என இராமன் சொல்லத் தொடங்கினன் ; அதனை அனைவரும் கேட்கலானார்கள்.

கு :—வினைய வார்த்தை - பணிவான சொல் ; பணிவைத் தோற்றுவிக்கும் சொல். வினையம் - பணிவு. வணங்கிய சென்னியனாய் மறைத்த வாயினனாய் மெய்ப்பாட்டாலும், ' இணங்கினரறிவில ரெனினும் மெண்ணுங்கால், கணங்கொளல் நும்மனோர் கடன்மை காண் ' எனச் சொல்லாலும் அனுமன் தன் பணிவைத் தெரிவித்த வாறு நினைக. வார்த்தையைச் செவிமடுத்த இராமன் அவ்வார்த்தையின் பொருட்செறிவை மனத்தால் நினைந்து நினைந்து மகிழ்ந்தமை புலப்பட ' அமிழ்தின் மாந்தி ' என்றார். அமிழ்தம் உண்ணுங் காலத்து இனிமை மிக்கதாய், உண்ட உடம்பிற்குப் பிணி மூப்புகளை ஒழித்து நலம் செய்தல்போல அனுமன் சொல்லும் கேள்விக்கினிய தாய்க் கேட்டார்க்கு வெற்றியாகிய நன்மை பயத்தல் நோக்கி அமிழ்தினை உவமை கூறினர். மாந்தி - பருகி. மாந்துதற்கு மனம் என்ற எழுவாய் வருவிக்கப்பட்டது. வார்த்தையை மாந்துதலாவது. செவியால் கேட்டதை மனத்தில் வாங்கி நினைத்தல். அனுமன் கூறிய வார்த்தையால் அவன் பேரறிவு புலப்பட்டமையின் ' பேரறிவாள ' என அவனை விளித்து நன்று ! நன்று !! எனப் பாராட்டினன் இராமன். அடுக்கு உவகைபற்றி வந்தது. நன்று எனச் சொல்லி என ஒருசொல் வருவிக்க. இம்மாற்றம் சீரிது ; மேல் தெளிவுறத் தேர்மின் என இயையும். மேல் தேர்மின் என்றது பின்னர்த் தெரிந்து கொள்ளுங்கள் என்றவாறு. அனுமன் கூறியதே சிறப்புடையது என்பது பின்னர் விளங்கும் என்றபடி. ஆரியன் என்றது சிறப்புடைய இராமனை. இராமன், தானே வீடணனைச் சேர்த்துக் கொள்ளாமல் சுக்கிரீவன் முதலியோரை வினவியது " தெரிந்த வினத்தொடு தேர்ந் தெண்ணிச் செய்வார்க் கரும்பொருள் யாதொன்று மில் " (குறள்-462) என்ற அரச நீதியை நினைந்து செய்ததாகும். (104)

வீடணனை விடலாகாமைக்கு இராமன் காட்டும் விளக்கம் 6596-6609

6596. கருத்துற நோக்கிப் போந்த
காலமு நன்று காதல்
அருத்தியு மரசின் மேற்றே
யறிவினுக் கவதி யில்லை

பெருத்துயர் தவத்தி ஞனும்
பிழைத்தில னென்னும் பெற்றி
திருத்திய தாகு மன்றே
நம்வயிற் சேர்ந்த செய்கை.

கருத்து உற நோக்கிப் போந்த
காலமும் நன்று; காதல்
அருத்தியும் அரசின் மேற்றே;
அறிவினுக்கு அவதி இல்லை;
"பெருத்து உயர் தவத்திஞனும்
பிழைத்திலன்" என்னும் பெற்றி
திருத்தியது ஆகும் அன்றே,
நம்வயின் சேர்ந்த செய்கை.

பொ :—(வீடணன் தன்) மனத்திஞல் மிக ஆராய்ந்து இங்கு வந்த காலமும் ஏற்ற காலமேயாகும். அவன் பெருவிருப்பமும் இலங்கையரசின் மேலதே ஆம்; அவன் அறிவுடைமைக்கும் வரம்பு இல்லை; (பேரறிவுடையவன்) பெரிதாய் உயர்ந்த தவத்திஞலும் குறைபாடுடையனல்லன் என்ற தன்மையை அவன் நம்மிடத்துச் சேந்துள்ள செய்கையே நன்கு விளக்கியதாகும் அன்ருே?

கு :—சுக்கிரீவனும், நீலனும் வீடணன் வந்த காலம் ஏற்ற காலம் அன்று என்ற கருத்தினராதலின் அவர் கருத்தை மறுக்கக் 'கருத்துற நோக்கிப் போந்த காலமும் நன்று' என முதற்கண் இராமன் கூறலாஞன். நல்லவன் போல வந்து சேர்ந்துபின் தீமையே செய்வான்' என்ற கருத்தை மறுக்க 'காதல் அருத்தியும் அரசின் மேற்றே' என்ருன். இராவணனது அரசைக் கைக்கொள்ள வேண்டும் என்ற ஆசையுடைய வீடணன் நம்மொடு நட்பாக இருந்து அதைப்பெற வந்துளான் ஆதலின் நமக்குத் தீமை செய்யமாட்டான் என்பது இதஞல் விளக்கியவாறு. இனி, வீடணன் அறிவாலும் தவத்தாலும் சிறந்தவஞதலின் நாம் சேர்த்துக்கொள்ளத்தக்க பெருமையுடையவன் என்பான், 'அறிவினுக்கு அவதியில்லை' 'பெருத்துயர் தவத்திஞனும் பிழைத்திலன்' என்ருன். அவதி - எல்லை. வீடணன் தன் அண்ணனை விடுத்து நம்மிடத்துச் சேர்ந்தமையே அவன் பேரறிவையும் தவமுடைமையையும் விளக்கியதாகும் என்றவாறு. இதனை இதஞல் இவன் முடிக்கும் என்று ஆராய்ந்து அறிந்து நம்மைக் கொண்டு இராவணனை வென்று இலங்கை அரசை எய்தலாம் என்று இவன் துணிந்து வந்தமையே இவ்வீடணனின் பேரறிவை விளக்கவல்லது என்பதும் தவத்தில் பற்றுடைய நம்பால்

இவன் சேர விரும்பியமையே, "என்றும், சான்றோர் சான்றோர் பாலராப, சாலார் சாலார் பாலராகுபவே" (புறநா-218) என்ற முறைப்படி இவ்வீடணன் தவத்திற் குறைவிலன் என்பதை விளக்க வல்லது என்பதும் இராமன் விளக்கியவாறு. பெற்றி - தன்மை. திருத்தியதாகும் - விளக்கியதாகும். நம்வயிற்சேர்ந்த செய்கை, அறிவினுக்கவதியில்லை; பெருத்துயர் தவத்தினும் பிழைத்திலன் என்னும் பெற்றி திருத்தியதாகும் அன்றே என இயையும். அறிவினால் மட்டுமன்றித் தவத்தினும் என்று பொருள்படுதலின் உம்மை இறந்தது தழீஇயது. (105)

6597. மற்றினி யுரைப்ப தென்னோ
மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி யன்ன
தன்றெனிற் பிறிதொன் றேனும்
வெற்றியே பெறுக தோற்க
வீக வீயாது வாழ்க
பற்றுத லன்றி யுண்டோ
புகலெமைப் பகர்கின் றேனை.

'மற்று இனி உரைப்பது என்னோ?
மாருதி வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றி; அன்னது
அன்று எனின், பிறிது ஒன்றேனும்,
வெற்றியே பெறுக, தோற்க,
வீக, வீயாது வாழ்க,
பற்றுதல் அன்றி உண்டோ,
புகல் எமைப் பகர்கின் றேனை.

பொ :—'வேறு இனிச் சொல்லுவது எதற்கு? அனுமன் ஆராய்ந்து தெளிவாகச் சொன்ன காரியமே நாம் செய்யத்தக்க காரியம் ஆகும்; (நீங்கள்) அது அத்தகையது அன்று என்று கருதுவீராயின், அவ்வாறே அனுமன் சொன்னது நாம் செய்யத் தகாதது ஆயினும்,-(வீடணனை ஏற்றுக் கொள்வதால்) நாம் வெற்றியே பெறுவோமாக; அல்லது, தோற்போமாக; நாம் அழிவோமாக, அல்லது அழியாது வாழ்வோமாக; எம்மை நோக்கி அடைக்கலம் என்று சொல்கின்றவனை ஏற்றுக் கொள்ளுதல் அன்றி விடுமாறு உண்டோ? (இல்லை.)

கு :—இராமன் கருத்தும் அனுமன் சொல்லிய கருத்தும் ஒன்றாக இருத்தலின், வேறு கூற வேண்டா என்ற எண்ணத்தால் 'மற்றினி யுரைப்ப தென்னோ?' என்றான். வடித்தல் - தெளிவுறுத்தல். பெற்றி- காரியம். மாருதி சொன்ன காரியம் ஏற்றுக் கொள்ளத்தக்கது அன்று என்று நீர் கருதினால், உம் கருத்துப்படி அனுமன் சொன்னது செய் யத் தகுவது அன்றாயினும் புகல் எமைப் பகர்கின்றானைப் பற்றுத லன்றி உண்டோ? எனச் சுக்கிரீவன் முதலியோரை நோக்கிக் கூறினான் இராமன். ஒன்றாயினும் என்பது ஒன்றானும் என மருவியது. அனுமன் சொல்லியதை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், வீடணனைச் சேர்த்துக் கொள்வதால் வெற்றியுண்டானாலும், தோல்வியுண்டா னாலும், அவனால் நாம் அழிந்தாலும், அழியாது வாழ்ந்தாலும், எம்மை நோக்கி அடைக்கலம் என்று சொல்கின்றவனை யேற்றுக் கொள்வதன்றி விடுமாறு இல்லை என இராமன் துணிந்து கூறிய வாறு. அடைக்கலம் என வந்தோனை ஏற்றுக்கொள்வதன்றிப் பின் விளைவை நோக்குவது முறையாகாது என்பான் 'வெற்றியே பெறுக, தோற்க, வீக வீயாது வாழ்க' என்றான். அனுமன் சொன்னவாறு செய்வதே தக்கது என்று கூறிய இராமன், பின், அடைக்கலம் அடைந்தோனை ஏற்றுக்கொள்ள வேண்டிய இன்றியமையாமையை வற்புறுத்த, அனுமன் சொன்னது ஏற்றுக் கொள்ளத்தகாதது ஆயினும் 'பற்றுதலன்றி யுண்டோ?' என்றான். புகல்புகுந்தோனை ஏற்றுக் கொள்ளுதலே என் கடமையாகக் கொள்கின்றேன்; அனுமன் கூறியதால் மட்டும் அன்று என்பது கருத்து. இதனால், சுக்கிரீவன் முதலியோர், தம் சொல்லை ஏற்றுக்கொள்ளவில்லையே என எண்ண இடமின்றிச் செய்தான் இராமன் என்க. (106)

6598. இன்றுவந் தானென் றுண்டோ
 வெந்தையை யாயை முன்னைக்
கொன்றுவந் தானென் றுண்டோ
 புகலது கூறு கின்றான்
தொன்றுவந் தன்பு பேணுந்
 துணைவனு மவனே பின்னைப்
பின்றுமென் றாலு நம்பாற்
 புகழன்றிப் பிறிதுண் டாமோ.

'இன்று வந்தான் என்று உண்டோ?
 எந்தையை யாயை முன்னைக்
கொன்று வந்தான் என்று உண்டோ?
 புகலது கூறுகின்றான்;

தொன்று வந்து அன்பு பேணும்
துணைவனும் அவனே ; பின்னைப்
பின்றும் என்றாலும், நம்பால்
புகழ் அன்றிப் பிறிது உண்டாமோ ?

பொ :—நம்பால் வந்து அடைக்கலம் கூறுகின்றவன், (இதற்கு முன் பழக்கமின்றி) இன்றைக்கு வந்தவன் என்று விலக்குவது உண்டோ ? (அல்லது,) எம் தந்தையையும் தாயையும் அண்ணனையும் கொன்று வந்தவன் என்று விலக்குவது உண்டோ ? (விலக்குமாறு இல்லை) பல நாளாகப் பழகி வந்து அன்பு செய்கின்ற நண்பனும் அவனே ; (என்று ஏற்றுக் கொள்வதே முறை) அவன் பின்னர் அந் நட்பு முறையினின்றும் மாறுபட்டு நமக்குத் தீமை விளைத்தாலும் நம் மிடத்தில் புகழுண்டாகுமே யன்றிப் பழியுண்டாகுமோ ? (உண்டாகாது.)

கு :—புகல் புகுகின்றவனை ஏற்றுக் கொள்ளக் காலம் தடையாகாது ; அவன் கொடுமையும் தடையாகாது என்பதை விளக்கியவாறு. தாய் தந்தையரைக் கொன்றவன் அடைக்கலமாக வந்தாலும் ஏற்றுக்கொள்வதே முறை எனின் அத்தகு கொடுமை யேதும் செய்தறியாத வீடணனை யேற்றுக் கொள்வது பற்றிச் சொல்ல வேண்டுமோ? என்றவாறு. தொன்று - பழமை ; புகல் புகுந்தவன் எவ்வளவு கொடியனாயினும் அன்பொடு பழகிய நண்பனாகவே கொள்ள வேண்டும் என்பான், “ தொன்று வந்து அன்பு பேணும் துணைவனும் அவனே ” என்றான். பின்றுதல் - மாறுபடுதல் ; - அன்பனாக வந்தவன் வன்பனாக மாறிக் கொடுமை செய்தல். அடைக்கலம் புக்கவன் பின் கொடுமை செய்தாலும், அதனால் அடைக்கலம் கொடுத்தவர்க்குப் புகழே உண்டாகும் என்றவாறு. பழி என்ற சொல்லை வாயாற் சொல்லவுங் கூசிப் ‘ பிறிதுண்டாமோ ? ’ என்றான். புகழன்றிப் பிறிது என்றமையின் புகழ்க்கு மாறானது பழியே என்பது விளங்கும். நம்பாற் புகழன்றிப் பிறிதுண்டாமோ என்றமையால் புகல் புக்கவன்பால் பழியுண்டாகும் என்பதும் பெறப்படும். புகலது கூறுகின்றான் இன்று வந்தானென்றுண்டோ எந்தையை யாயை முன்னைக் கொன்று வந்தான் என்றுண்டோ ? என இயையும். முன்னை - அண்ணனை.
(107)

6599. பிறந்தநாட் டொடங்கி யாருந்
துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநா ளுண்டோ வென்னைச்
சரணென்று வாழ்கின் றானைத்

துறந்த நாட் கின்றுவந்து
துன்னினுன் சூழ்ச்சி யாலே
இறந்தநா ளன்றே வென்று
மிருந்தநா ளாவ தென்றுன்.

'பிறந்தநாள் தொடங்கி யாரும்
துலைபுக்க பெரியோன் பெற்றி
மறந்தநாள் உண்டோ? என்னைச்
சரண் என்று வாழ்கின்றுனைத்
துறந்தநாட்கு இன்று வந்து
துன்னினுன் சூழ்ச்சி யாலே
இறந்தநாள் அன்றே என்றும்
இருந்தநாள் ஆவது என்றுன்.

பொ :—(தன்னைப் புகல் புகுந்த புறவின் பொருட்டாகத்)தராசில் ஏறித் தன்னையே கொடுக்கத் துணிந்த சிபி என்ற பெரியவனின் பெருமையை யாரும் பிறந்தநாள் முதல் மறந்த நாளும் உண்டோ? (இல்லையன்றே! அங்ஙனம் ஆதலின் அப்பெரியோன் வழிவந்த யான்) என்னை நோக்கி அடைக்கலம் என்று சொல்லி வாழ இருக்கின்ற வீடணனை (அவன் வருந்த) விலக்கிய நாளைக் காட்டிலும் - இன்று வந்து அடைக்கலமாகச் சேர்ந்த அவன் வஞ்சனையால் யான் இறந்த நாள் அன்றே என்றும் நிலைத்திருப்பதற்குரிய சிறந்த நாள் ஆகத் தக்கது என்று கூறினுன்.

கு :—துலை புக்க பெரியோன் என்றது சிபி என்னும் வேந்தனை இவன் சோழ மரபினன் என்று புறநானூறு புகலும். 'புறவி னல்லல் சொல்லிய கறையடி, யானை வான் மருப்பெறிந்த வெண்கடைக் கோனிறை தூலாஅம் புக்கோன் மருக" (புறநா - 39) எனவும், "கூருகிர்ப் பருந்தி னேறுகுறித் தொரீஇத் தன்னகம் புக்க குறு நடைப் புறவின், தபுதி யஞ்சிச் சீரைபுக்க வரையா வீகை யுரவோன் மருக" (புறநா - 43) எனவும் சோழர்கள் விளிக்கப்பட்டிருத்தல் காணலாம். கம்பர் சிபியை இராமன் குலத்தவனுகக் கூறுகின்றுர். "புறவொன்றின் பொருட்டாகத் துலை புக்க பெருந்தகைதன் புகழிற் பூத்த அறனென்று திருமனத்தான் அமரர்களுக் கிடரிழைக்கும் அவுண ராயோர் திறலுண்ட வடிவேலான் தசரதன்-" (திருவவ தாரப் - 65) என்றது காணலாம். சூரியன் மரபு என்ற ஒற்றுமை யிருத்தலின் இவ்வாறு கூறினர் போலும். பறவையின் உயிர்க்காக மன்னவன் தன்னுயிரையே கொடுக்கத் துணிந்த நிகழ்ச்சி பெருமை மிக்கதாகலின் அதை யாரும் மறவாது போற்றுகின்றனர் என்பான்,

யாரும் பிறந்தநாள் தொடங்கி மறந்தநாளுண்டோ? என்றான். பிறந்த நாள் தொடங்கி என்றது உயர்வு நவிற்சியாகக் கூறியது; அறிவதறியாப் பருவத்தில் சிபியின் புகழைக் கேட்டலும் மறவாமையும் இயலாமை நினைக. இனி, பிறந்த நாள் என்பதற்கு உலகம் தோன்றிய நாள் எனப் பொருள் கொள்ளலும் ஆம். மறந்த நாளுண்டோ என்றது சிபியின் புகழ் நிலைபெற்றதை யுணர்த்திய வாறு. 'உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க் கொன் றீவார் மேல் நிற்கும் புகழ்" (குறள் - 232) என்று திருவள்ளுவர் கூறியதை யுளங் கொண்டு, 'துலை புக்க பெரியோன் பெற்றி யாரும் மறந்தநாள் உண்டோ?' என்றார். 'அன்புடையார் என்பு முரியர் பிறர்க்கு' என் பதைத் துலைபுக்குக் காட்டிய சிபியின் வழிவந்த யான் என்னை நோக்கிச் சரண் என்று சொல்லி வாழ நினைக்கின்றவனை ஏற்றுக் கொள்ளாமல் அவனால் தீங்கு வருமோ என்ற ஐயத்தால் விலக்கு வதைக் காட்டிலும். அடைக்கலமாக வந்த அவன் வஞ்சனையால் இறத்தலே சிறப்புடைத்து என்றவாறு. துறந்த நாட்கு என்புழி நான்கனுருபு உறழ்ச்சிப் பொருளில் வந்தது. தன் கேடு நோக்காது அடைக்கலத்தை யேற்றுக் கொண்டவன் பின் அவ்வடைக்கலமாக வந்தவனால் இறந்து பட்டுழியும் புகழ் நிலை பெறுதல் நோக்கி 'என்றும் இருந்த நாள் ஆவது' என்று கூறினான். வீடணன், இராமனை அடைக்கலம் புகும்போதே வாழ்வு பெறுகின்றதாக எண்ணுதல் புலப் பட 'சரணென வாழ்கின்றானை' என நிகழ் காலத்தால் கூறினான். பின்னும் போவதாய உயிர் வாழ்வினும் என்றும் நிலைபெறுவதாய புகழ் பெறுதலே சிறப்புடைத்து என்றவாறு. "வசையொழிய வாழ் வாரே வாழ்வா ரிசையொழிய வாழ்வாரே வாழா தவர்" (குறள்-240) என்றதும் நினைக. இதனால், 'நஞ்சினிற் கொடியனை நயந்து கோடியோ' என்ற கருத்தை மறுத்துத் தன் கருத்தை இராமன் விளக்கியவாறு.

பருந்தால் துரத்தப்பட்ட புறா அஞ்சி வந்து சிபியின் முன்னிலையில் வீழ்ந்ததாக அதைத் துரத்தி வந்த பருந்தும் அங்கு வந்து அப்புறாவைக் கவர முயலுங்கால், சிபிச் சக்கரவர்த்தி, அப்பருந்தை விலக்கி என்னை அடைக்கலம் புக்க புறாவைக் கவர்தல் கூடாது; வேறு எதை வேண்டினும் தருகின்றேன்' என்று கூற அப்பருந்து 'உன் உடம்புத் தசையை அப்புறாவின் எடையளவு கொடுத்தால் இப்புறாவை விடுவேன். என்ன உடனே யானையின் தந்தத்தால் செய்த தராசு கொணர்ந்து நிறுத்தி, ஒரு தட்டில் புறாவை யிட்டுப் பிறிதொரு தட்டில் சிபி, தன் தசையை அரிந்து அரிந்து வைக்கவும் புறா விருந்த தட்டே தாழ்தல் கண்டு, தானே அந்தத் தராசில் ஏறி அமர்ந்தானாகத் துலை ஒத்தது. அப்பொழுது புறாவாகவும் பருந் தாகவும் வந்த எமனும் இந்திரனும் தம் முருவு காட்டிச் சிபியைப்

பாராட்டி முன்னைய உடம்பும் கொடுத்து மறைந்தார்கள் என்பதே துலைபுக்க பெரியோன் பெற்றியாகும். (108)

6600. இடைந்தவர்க் கபயம் யாமென்
றிரந்தவர்க் கெறிநீர் வேலை
கடைந்தவர்க் காகி யால
முண்டவற் கண்டி லீரோ
உடைந்தவர்க் குதவா னாயி
னுள்ளதொன் றீயா னாயின்
அடைந்தவர்க் கருளா னாயி
னறமென்னா மாண்மை யென்னாம்.

'இடைந்தவர்க்கு "அபயம் யாம்" என்று
இரந்தவர்க்கு, எறிநீர் வேலை
கடைந்தவர்க்கு, ஆகி ஆலம்
உண்டவற் கண்டிலீரோ?
உடைந்தவர்க்கு உதவான் ஆயின்,
உள்ளது ஒன்று ஈயான் ஆயின்,
அடைந்தவர்க்கு அருளான் ஆயின்,
அறம் என் ஆம்? ஆண்மை என் ஆம்?

பொ :—(பாற்கடலில் தோன்றிய பெரு நஞ்சிற்கு) அஞ்சி விலகி வந்தவர்களும் "யாம் அடைக்கலம்" என்று சொல்லி இரந்தவர்களும், அலைவீசுகின்ற பாற்கடலைக் கடைந்தவர்களுமான தேவர்க்கு உதவியாகி அப்பெரு நஞ்சினை உண்ட சிவபிரானை அறியகில்லீரோ? வலிகுறைந்து தோற்றவர்க்கு உதவி செய்யானாயின், தன்பால் உள்ளது ஒன்றை வேண்டி யிரந்தோர்க்குக் கொடானாயின், தன்னை அடைக்கலமாக அடைந்தவர்க்கு அடைக்கலம் அருளானாயின், ஒருவன் மேற்கொண்ட அறம் என்ன பயனுடையதாகும்? அவன் ஆண்மைதான் என்ன பயன்படும்? (ஒன்றுக்கும் பயன்படா)

கு :—எறிநீர் வேலை கடைந்தவரே இடைந்தவரும் அபயம் யாம் என்று சொல்லி இரந்தவரும் ஆவர் ஆதலின், கு என்ற உருபு ஓரிடத்துக் கூற அமையும் எனின்? செய்யுளின்பம் நோக்கி மூவிடத்தும் குவ்வுருபு விரித்துக் கூறினர் என்க. இடைந்தவர்; இரந்தவர், கடைந்தவர் என்பன ஒரு பொருட்பல் பெயர்கள். பாற் கடல் கடைந்து முடிவுறும் அமையத்து அமிழ்தத்தை எதிர்நோக்கி யிருந்த தேவர்கட்கு முன் பெருநஞ்சு எழுதல் கண்டு அஞ்சி, அவ்

விடத்தைவிட்டுத் தேவர்கள் விலகிஓடிவந்து, சிவபிரானை அடைந்து 'அபயம் யாம்' என்று இரந்த முறைமை புலப்பட இடைந்தவர்க்கு என முன்னும் 'அபயம் யாம்' என்று இரந்தவர்க்கு எனப் பின்னும் கூறினர். இடைதல் - விலகுதல்; ஓடுதல். அபயம் - அடைக்கலம். அபயம் என்ற சொல்லின் சிறப்புத் தோன்ற 'யாம் அபயம்' என்னாது 'அபயம் யாம்' என முன் எடுத்துக் கூறினர். ஒருவரும் உண்ணாத நஞ்சினைச் சிவபிரான் உண்டது தேவர்கட்கு உதவியாகவே என்பான், 'வேலைகடைந்தவர்க்காகி யால முண்டவன்' என்றான். அடைக்கலம் அடைந்தோரைக் காக்கச் சிவன் மரணத்தை யுண்டாக்கும் நஞ்சினை உண்ட வரலாறு அறிந்திருப்பின் இவ்வாறு வீடணனை ஏற்கலாகாது என்று கூறமாட்டீர்கள் என்பான், 'ஆலமுண்டவற் கண்டிலீரோ' என்றான். ஆகி - உதவியாகி. நஞ்சினை யஞ்சித் தேவர்கள் சிவனை அடைக்கலமடைந்த செய்தியை "நஞ்சட வெழுதலு நடுங்கி நாண்மதிச் செஞ்சடைக் கடவுளை யடையுந் தேவர் போல்" (பால-வேள்விப்-50) என முன்னர் உவமித்துள்ளதால் அறியலாம். அடைந்தவர்க்கருளாயின் என்பதைக் கூறவேண்டிய இடத்து ஒப்புமைக் கூட்டம் என்னும் அணி பற்றி, 'உடைந்தவர்க் குதவாயின் உள்ளதொன்றீயாயின்' என்பன உடன் கூறப் பட்டன. உடைந்தவர்க்கு உதவுவதால் ஆண்மையும் உள்ளதொன் றீவதாலும் அடைந்தவர்க்கருளுதலாலும் அறனும் புலப்படுதல் நோக்கி அவை இவ்வழி 'அறமென்னும் ஆண்மை யென்னும்' என்றார். பெருமிதச் சுவைக்கு (வீரச்சுவைக்கு)க் கொடையும் காரண மாதலின் ஈவதற்கும் ஆண்மை வேண்டும் என்பது புலப்பட அறத் தோடு ஆண்மையும் உடன் கூறினர். அடைக்கலம் அருளுதற்கு மேல் தன்குலத்து ஒருவனாகிய சிபியை எடுத்துக் கூறினவன், இங்குத் தேவர்களில் சிறந்தோராகிய சிவபிரானை எடுத்துக் கூறினான். என்பால் அறனும் ஆண்மையும் நிலைபெற வேண்டின் வீடணனை அடைக்கலமாக ஏற்றுக் கொள்வதே முறை என்றவாறு. (109)

6601. பேடையைப் பிடித்துத் தன்னைப்
பிடிக்கவந் தடைந்த பேதை
வேடனுக் குதவி செய்து
விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித்
தன்னுடல் கொடுத்த பைம்புள்
வீடுபெற் றுயர்ந்த வார்த்தை
வேதத்தின் விழுமி தன்றோ.

பேடையைப் பிடித்துத், தன்னைப்
பிடிக்கவந்து அடைந்த பேதை
வேடனுக்கு உதவி செய்து
விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியை நோக்கித்
தன் உடல் கொடுத்த பைம்புள்
வீடு பெற்று உயர்ந்த வார்த்தை
வேதத்தின் விழுமிது அன்றோ?

பொ :—தன் பெண் புறுவைப் பிடித்துக் கொண்டு பின் தன்னையும் பிடிக்கவேண்டும் என்றும் கருதித் தன் இருப்பிடத்திற்கு வந்து அடைந்த அறிவிலாத வேடனுக்கு (க் குளிர் நீங்குமாறு) விறகு சுள்ளிகளைக் கொணர்ந்து அதில் வெப்பமுடைய தீயை மூட்டி உதவி செய்து, பின் அத்தீயின் ஒளியில் அவன் பெரும்பசியை நோக்கி யுணர்ந்து அது நீங்குமாறு தான் தீயில் வீழ்ந்து தன்னுடம்பையே அவன் உண்ணுமாறு கொடுத்த சிறிய ஆண்புறு அந்த அறத்தின் பயனாக நற்கதி அடைந்து சிறப்புற்ற வரலாறு, வேதப் பொருள் போலச் சிறப்பாகக் கொள்ளத்தக்கது அன்றோ ?

கு :—இங்குக் கூறப்பட்ட புறுவின் வரலாறு கபோதோபாக்கி யானம் என்ற வடமொழி நூலில் பேசப்படுகின்றது என்பர். ஒரு வேடன் காட்டில் வேட்டையாடச் சென்று ஒரு பெண் புறுவைப் பிடித்துக் கூட்டில் அடைத்துக்கொண்டு மேலும் சில புறுக்களை வேட்டையாடக் காட்டில் திரிந்தான். பொழுது மறைந்தது; மழையும் வந்தது; வேடன் மழையில் நனைந்து குளிர் நடுக்கத்துடன் ஒரு மரத்தடியில் ஒதுங்கி நின்றான். அம்மரத்தில் பேடையைப் பிரிந்த ஆண்புறு துன்பத்தால் கூவிக் கொண்டிருந்தது. அதை யறிந்த வேடனது கூட்டிலுள்ள பெண்புறு 'நான் முன் செய்த வினை யால் இங்குச் சிறைப்பட்டுள்ளேன்; நம் வீடு நோக்கிவந்த இவ் வேடனுக்கு வேண்டிய உதவியைச் செய்க' என மரத்திலுள்ள ஆண் புறுவுக்குச் சொல்லியது. அவ்வாறே ஆண்புறு அங்கு உலர்ந்த சுள்ளிகளைக் கொணர்ந்து சேர்த்து நெருப்பையும் தேடிக் கொணர்ந்து தீ மூட்டி அவ்வேடன் குளிரைப் போக்கியது. பின் அவன் பெரும் பசியால் வருந்துவது கண்டு, 'பயனற்ற இவ்வுடலை உண்டு பசி தணிக' எனக் கூறிக் கொண்டே தீயில் வீழ்ந்து இறந்தது. தன்னை யடைந்த வேடனுக்காகத் தன்னுடலைக் கொடுத்த அறத்தின் பயனாக அப்புறு வீடு அடைந்தது என்பது வரலாறு.

தன் அன்புறு பேடையைப் பிடித்ததோடன்றித் தன்னையும் பிடிக்கும் நோக்கமுடைய வேடன் கொடுமை தெரிந்தும் தன்னை

வந்தடைந்தவனைக் காக்க வேண்டும் என்று சிறிய புறு தன்னுடம்பையே கொடுத்ததென்றால் அப்பறவையினும் சிறந்த மக்கட் பிறப்பினராகிய நாம் தவவொழுக்க முடைய வீடணனை ஏற்றுக் கொள்ளாது விடலாமா? என்பது கருத்து. வெந்தீ மூட்டி உதவி செய்து என இயையும். பாடுறுபசி - பெரும்பசி. பாடு - பெருமை. தன்னகம்புக்க புறவின் பொருட்டுப் பருந்துக்குத் தன்னுடலை அரிந்தளித்தான் சிபி; தன்னகம்புக்க வேடனுக்குத் தன்னுடலைத் தீய்த்துக் கொடுத்தது புறு. ஆறறிவு நிறைந்த சிபியின் கொடையினும், ஐயறிவுடைய புறுவின் கொடை சிறந்தமையின் அதன் வரலாறு வேதப் பொருள்போல விழுமிதாகக் கொள்ளப்படும் என்பான், 'வீடுபெற்றுயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமிதன்றோ?' என்றான், பைம்புள் என்றது புறுவினை; பசுமை இங்குச் சிறுமை யுணர்த்தியது. (110)

6602. போதக மொன்று கன்றி
யிடங்கர்மாப் பொருத போரின்
ஆதியம் பரமே யானுன்
னபயமென் றழைத்த வந்நாள்
வேதமு முடிவு காணு
மெய்ப்பொருள் வெளிவந் தெய்தி
மாதுயர் துடைத்த வார்த்தை
மறப்பரோ மறப்பி லாதார்.

'போதகம் ஒன்று, கன்றி
இடங்கர்மாப் பொருத போரின்,
"ஆதி அம் பரமே! யான் உன்
அபயம்!" என்று அழைத்த அந்நாள்,
வேதமும் முடிவு காணு
மெய்ப்பொருள் வெளிவந்து எய்தி,
மாதுயர் துடைத்த வார்த்தை
மறப்பரோ, மறப்பு இலாதார்?

பொ :—(தாமரை மடுவில்) முதலை கோபித்துத் தன் காலைப் பிடித்து இழுத்துச் செய்த போரில் கசேந்திரன் என்னும் யானை, (ஆற்றாது) 'ஆதிமூலமே! யான் உன் அடைக்கலம்' என்று கூவி அழைத்த அந்த நாளில் வேதங்களும் இத்தகையன் என முடிவு காண முடியாத உண்மைப் பரம்பொருளான திருமால், உருவு

கொண்டு வெளிப்பட்டு வந்து அந்த யானையை அணுகி அதன் பெருந்துயரைப் போக்கி வீடளித்த வரலாற்றை மறதியில்லாத அறிஞர்கள் மறப்பாரோ? (மறவாரன்றே)

கு:—வேதங்களுக்கும் எட்டாத நிலையில் உள்ள திருமால், 'யான் உன் அபயம்' என யானை சொன்ன காரணத்தால் இழிந்த விலங்கு என்றும் பாராமல் தன் பெருமையையும் பாராட்டாமல் உருவுகொண்டு வெளிப்பட்டு அந்த யானை உள்ள இடத்திற்கு வந்து முதலையைக் கொன்று யானையை விடுவித்து வீடும் கொடுத்தான் என்றால், நம்மைப் போன்ற ஆறறிவு படைத்த வீடணனை அடைக்கலமாக ஏலாது விலக்க ஒண்ணுமோ என்பான், "மாதுயர் துடைத்த வார்த்தை மறப்பரோ மறப்பிலாதார்" என்றான். இதனால் அடைக்கலப் பொருளின் பெருமை சிறுமைகளை நோக்காது காத்தலே முறைமை என்பதும் புலப்படுத்தியவாறு. மெய்ப்பொருள் என்றது திருமாலை. அவன் இயல்பு இதுதான் என உயர்ந்த வேதங்களும் வரையறுத்துக் கூறவில்லை என்பான், 'வேதமும் முடிவு காணா மெய்ப் பொருள்' என்றான். இன்ன உருவினன் என வேதங்களாலும் சொல்ல இயலாதவன், இன்ன உருவினன் என உலகமறியச் சங்கு சக்கரமேந்திய வடிவு கொண்டமை புலப்பட 'வெளிவந்து' எனவும் யானை வருந்தும் இடத்திற்கு எளியனாய்ப் போந்தமை புலப்பட 'எய்தி' எனவும் கூறினான். முதலை பற்றியதாலாய துயரத்தைப் போக்கியதோடு பல் பிறவியினும் தொடர்ந்து துயர் செய்யும் வினைகளாலாய பெருந் துயரையும் போக்கி வீடு கொடுத்தமை புலப்பட 'மாதுயர் துடைத்த வார்த்தை' என்றான். இச் செயல் திருமாலின் அருள் திறத்தைப் புலப்படுத்துதலின் 'மறப்பரோ' என்றான். போதகம் - யானை. (111)

6603. மன்னுயி ரெல்லாந் தானே
வருவித்து வளர்க்கு மாயன்
தன்னன வுலக மெல்லாந்
தருமமு மெவையுந் தானே
என்னினு மடைந்தோர் தம்மை
யேமுற வினிதி னோம்பிப்
பின்னும்வீ டளிக்கு மென்றாற்
பிறிதொரு சான்று முண்டோ.

'மன்னுயிர் எல்லாம் தானே
வருவித்து வளர்க்கும் மாயன்,
தன் அன உலகம் எல்லாம்
தருமமும் எவையும் தானே
என்னினும், அடைந்தோர் தம்மை
ஏமுற இனிதின் ஓம்பி,
பின்னும் வீடு அளிக்கும் என்றால்,
பிறிது ஒரு சான்றும் உண்டோ?

பொ :—நிலைபெற்ற உயிர்களையெல்லாம் தானே உண்டாக்கிக் காப்பாற்றும் திருமால், உலகம் எல்லாம் தன்னுடையனவே ஆயினும், அவ்வுலகத்து வழங்கும் தருமமும் அத் தருமத்தின் பயன்கள் யாவும் தானே ஆயினும், தன்னைச் சரணடைந்தோரை மட்டும் இன்பமுற இனிதாகப் பாதுகாத்து அவர் எடுத்த உடம்புக்குப் பின்னும் முத்தியை அளிப்பான் ஆனால், சரணடைந் தோரைக் காத்தல் வேண்டும் என்பதற்கு வேறு சான்றும் காட்ட வேண்டுமோ? (வேண்டா)

கு :—படைப்புத் தொழிலுக்குரிய பிரமனையும் தன்னுந்திக் கமலத்தில் நின்று தோற்றுவிப்பவன் திருமாலே ஆதலின், மன்னு யிரை வருவித்தலையும் வளர்க்கும் தொழிலோடு உடன் கூறியவாறு. வருவித்தல் - படைத்தல். வளர்த்தல் - காத்தல். உலகங்கள் யாவும் தன்னுடையனவாகவும் அவ்வுலகங்களில் வழங்கும் தருமங் களும் அவற்றின் பயன்களும் தானே யாகவும், அவ்வுலகத்துள் சிலர் தன்னைச் சரணடைந்தார்கள் என்ற காரணத்தால், திருமால் தன் நடுவு நிலைமையினின்றும் வழுவி அந்தச் சரணடைந்தோரை மட்டும் இனிமையாகக் காத்தலையும் பின் அவர்க்கு வீடு அளித்தலையும் செய் கின்றமையே அடைக்கலம் அடைந்தோரைக் காத்தலின் இன்றியமையாமை நன்கு புலப்படுத்தலின் 'பிறிதொரு சான்று முண்டோ?' என்றான். அடைந்தோர் - சரணடைந்தோர். "சார்ந் தாரைக் காத்தல் தலைவர் கடனாதல் சார்ந்தாரைக் காத்தும் சலமில னாய்ச் - சார்ந்தடி யார், தாந்தானாய்ச் செய்து பிறர் தங்கள்வினை தான் கொடுத்தல், ஆய்ந்தார்முன் செய்வினையு மாங்கு" (சிவஞான போதம். 64) என்றதும், காண்க. "நகையச் சாக நல்லமிர்து கலந்த, நடுவுநிலை திறம்பிய நயமி லொருகை" (பரிபாடல் - 3 - 33, 34) எனத் திருமாலின் அடைந்தோரைக் காக்கும் இயல்பைப் பழிப்பது போலப் புகழ்ந்திருத்தலும் காணலாம். பின்னும் என்பதற்கு மேலும் எனப் பொருள் கூறலும் ஆம். (112)

6604. நஞ்சினை மிடற்று வைத்த
நகைமழு வாள ஞளும்
தஞ்சென முன்னந் தானே
தாதைபாற் கொடுத்துச் சாதல்
அஞ்சினே னபய மென்ற
வந்தணற் காகி யந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்று
மேன்மையின் மேன்மை யுண்டோ.

'நஞ்சினை மிடற்று வைத்த
நகைமழுவாளன், "நாளும்
தஞ்சு" என, முன்னம், தானே
தாதைபால் கொடுத்துச், "சாதல்
அஞ்சினேன்; அபயம்!" என்ற
அந்தணற்கு ஆகி, அந்நாள்,
வெஞ்சினக் கூற்றை மாற்றும்
மேன்மையின் மேன்மை உண்டோ?

பொ :—(பாற்கடலில் எழுந்த) விடத்தைக் கண்டத்தில் வைத்துக்கொண்ட, ஒளி பொருந்திய மழுப்படையையுடைய சிவபிரான், (மார்க்கண்டேயர்க்கு) ஆயுள் நாளும் எளிமையானதே (குறைந்ததே) என அவன் தந்தையாகிய மிருகண்டுவிடம் முன்னம் தானே கொடுத்துவிட்டுப் பின், "சாதலுக்கு அஞ்சினேன்; உன் அடைக்கலம்" என்று வேண்டிய மார்க்கண்டேயனுய அந்தணனுக்குத் துணையாகி, அந்த நாளில் கொடிய கோபத்தையுடைய எமனை உதைத்துத் தள்ளிய மேன்மையைக் காட்டிலும் மேலான சான்று வேறுண்டோ? இல்லை.

கு :—மேல், "வேலை கடைந்தவர்க்காகி யால முண்டவற் கண்டிலீரோ?" என்றதை உளங்கொண்டு இங்கு "நஞ்சினை மிடற்று வைத்த நகை மழுவாளன்" என்ருர். நகை - ஒளி. மழுவாளன் - சிவபிரான். "மழுவாணெடியோன் றலைவனுக" (மதுரைக்காஞ்சி - 455) என்றதும் நினைக. நாள் - ஆயுள்நாள். தஞ்சு, அம் சாரியை குறைந்து வந்தது. "தஞ்சக்கிளவி எண்மைப் பொருட்டே" (தொல் - சொல். 266) என்ற விதியால் எளிமை என்னும் பொருள் பட்ட அச்சொல் இங்குக் குறைவு என்னும் பொருளில் ஆளப் பட்டது. தாதை என்றது மார்க்கண்டேயரின் தந்தையாகிய மிருகண்டு முனிவரை.

மிருகண்டு முனிவர் பிள்ளைப்பேறு இல்லாமையால் வருந்திச் சிவபிரானை நோக்கித் தவஞ் செய்ய, அத் தவத்திற்கு இரங்கி வெளி வந்த சிவபிரான், நூறு வயதுடையனாய்த் தீயொழுக்கமுடைய மகவு வேண்டுமா? நல்லொழுக்கமுடைய பதினாறு வயதுவரையே வாழும் மகவு வேண்டுமா? என்று வினவியபோது, நல்லொழுக்கமுடைய மகவே வேண்டும் என்று மிருகண்டு கூறப் 'பதினாருண்டு வரையே வாழ்கின்ற மகவு பிறக்கும்' என வரங் கொடுத்து மறைந்தார். அவ் வரத்தின்படியே குழந்தை பிறந்தது; பதினைந்தாண்டு நிரம்புநாளில் தாய் புலம்புவதுகண்ட மார்க்கண்டேயர் காரணம் என்னை? என்ன, அன்னையார் நிகழ்ந்தது கூறி, இன்னும் ஓராண்டு மட்டுமே உன்னைக் காணும் வாய்ப்புள்ளது என்று கலங்க, மார்க்கண்டேயர், 'இன்றே யான் சென்று தவஞ்செய்து மரணமிலாப் பெருவாழ்வு வாழ்ந்திடு வேன்' என்று சொல்லிப் புறப்பட்டுச் சிவலிங்கத்தைத் தாபித்துச் சிவபூசை செய்துகொண்டிருக்கப் பதினாருண்டு நிறைந்தவுடன் எமன் தூதுவரால் மார்க்கண்டேயரை நெருங்க முடியாமை அறிந்து எமன் தானே போந்து, தனது பாசத்தை வீசியபோது மார்க்கண் டேயர் அஞ்சிச் சிவலிங்கத்தை அணைக்க அச் சிவலிங்கத்தையும் சேர்த்துப் பாசத்தால் பிணித்தபோது, சிவன் வெகுண்டு எமனை உதைத்து மார்க்கண்டேயர்க்கு என்றும் பதினாறு வயதுடையவனாக இருக்க வரங் கொடுத்துச் சென்றார் என்பது கந்தபுராணத்துக் கண்ட வரலாறு. (113)

6605. சரணெனக் கியார்கொ லென்று
சானகி யழுது சாம்ப
அரணுனக் காவென் வஞ்சி
யஞ்சலென் றருளி னெய்தி
முரணுடைக் கொடியோன் கொல்ல
மொய்யமர் முடித்துத் தெய்வ
மரணமென் றுதைபெற்ற தென்வயின்
வழக்கன் றாமோ.

' "சரண் எனக்கு யார்கொல்?" என்று
சானகி அழுது சாம்ப,
"அரண் உனக்கு ஆவென்; வஞ்சி!
அஞ்சல்!" என்று அருளின் எய்தி,

முரணுடைக் கொடியோன் கொல்ல,
மொய் அமர் முடித்து, தெய்வ
மரணம் என் தாதை பெற்றது
என் வயின் வழக்கு அன்று ஆமோ?

பொ :—(இராவணன் தன்னை வஞ்சித்து எடுத்துச் செல்லும் போது) 'எனக்குப் புகலிடமாவார் யார்?' என்று சீதை அழுது சோரா நிற்க, "வஞ்சிக் கொடி போன்றவளே! உனக்குப் பாதுகாவலனாவேன்; நீ அஞ்சாதே!" என்று அருளினால் தானே வந்து அடைந்து வலிமை மிக்க கொடியோனாகிய இராவணன் கொல்லத் தான் அவனொடு செய்த நெருங்கிய போரினை முடித்துவிட்டுத் தெய்வத் தன்மை வாய்ந்த மரணத்தை என் தந்தையாகிய சடாயு பெற்றது, என்னிடத்து முறையிலதாய் விடுமோ? ஆகாது.

கு :—சானகி, சனகன் மகள் என்னும் பொருள்பட வந்த பெயர். சரண் - புகலிடம். சடாயுவைக் குறித்து 'நின் அடைக்கலம்' என்று சீதை கூறாத வழியும் சடாயு தானே அருளினால் சென்று சீதையைக் காக்கும் பொருட்டு இராவணனோடு கடும்போர் செய்து உயிர்விட்ட நிகழ்ச்சியை நேரில் கண்டிருக்கின்றோமன்றோ? என் தந்தையாகிய சடாயு செய்தது எனக்கும் செய்தற்குரிய முறைமையது தானே என்றவாறு. சாம்ப - சோர. அரண் - பாதுகாவல். என்தாதை எய்தி முடித்து பெற்றது என்வயின் வழக்கன்றாமோ என இயையும். முரண் - வலிமை; அறத்திற்கு முரணான தன்மை எனலும் ஆம். மொய்யமர் - நெருங்கிச் செய்த போர். தேர் முதலியவற்றையும் வில்லையும் அழித்த பின்னரே சடாயு அமரை முடித்தான் என்பான், 'மொய்யமர் முடித்து' என்றான். சீதையைக் காக்க முயன்று பெற்ற மரணம் ஆதலின் 'தெய்வ மரணம்' எனப்பட்டது. என் தந்தைக்குரிய பண்பு எனக்கும் வருதல் இயல்பே என்பான், 'என்தாதை பெற்றது என் வயின் வழக்கன்றாமோ?' என வினவினான். வழக்கு - முறைமை, என் தந்தையாகிய சடாயு தன்னைச் சரண் என்று சீதை சொல்லாத போதும் அவள் புலம்புதலைக் கேட்டுத் தானே வலியச் சென்று சீதையை அடைக்கலமாகக் கொண்டு அச்சீதையைக் காக்கத் தன் உயிரையே கொடுத்தான் என்றால், என்னை நோக்கிச் 'சரணம்' என்று வந்துள்ள வீடணனைக் காவாது விடுதல் முறையாமா? ஆகாது; என்றவாறு. இதனால் புகல் புக்கோரைக் காத்தல் தன் குடிப் பண்பு என்பது புலப்படுத்தியவாறு. (114)

6606. உய்யநிற் கபய மென்ற
னுயிரைத்தன் னுயிரி னோம்பாக்
கையனு மொருவன் செய்த
வுதவியிற் கருத்தி லானும்
மையுறு நெறியி னோக்கி
மாமறை வழக்கி னின்ற
மெய்யினைப் பொய்யென் றானு
மீள்கிலா நரகின் வீழ்வார்.

உய்ய, 'நிற்கு அபயம்' என்றான்
உயிரைத் தன் உயிரின் ஓம்பாக்
கையனும், ஒருவன் செய்த
உதவியில் கருத்து இலானும்,
மைஉறு நெறியின் நோக்கி
மாமறை வழக்கின் நின்ற
மெய்யினைப் பொய் என்றானும்,
மீள்கிலா நரகின் வீழ்வார்.

பொ :—'யான் உய்தி பெற நினக்கு அடைக்கலம் ஆகின்றேன்' என்று கூறியவன் உயிரைத் தன்னுயிரைப் போலக் கருதிப் பாது காவாத கீழ் மகனும், ஒருவன் தனக்குச் செய்த உதவியில் கருத்தில் லாது மறந்தவனும், குற்றம் பொருந்திய நெறியால் ஆராய்ந்து பார்த்துப் பெரிய வேத வழக்கில் நிலைபெற்ற மெய்ப் பொருளாகிய கடவுளைப் பொய் என்று இகழ்கின்ற நாத்திகனும் மீளாத நரகில் வீழ்தற்குரியராவர்.

கு :—கையன் - கீழ்மகன். 'நிற்கு அபயம்; என்றான் உயிரைத் தன்னுயிர் போலக் கருதிப் பாதுகாவாதவன் மீளா நரகில் வீழ்வான் என்பதைக் கூற வந்தவன், அவ்வாறு நரகில் வீழ்தற்குரியராய செய்ந்நன்றி மறந்தவனையும், கடவுளைப் பொய்யென்று மறுக்கும் நாத்திகனையும் ஒப்புமைக் கூட்டம் என்னும் அணிபற்றி உடன் கூறினான். ஒருவன் செய்த உதவியில் கருத்திலாமையாவது செய்ந்நன்றி மறத்தல். "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (குறள். 110) என்றும், "ஆன் முலை யறுத்த அறனிலோர்க்கும், மாணிழை மகளிர் கருச் சிதைத்தோர்க்கும் பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும், வழுவாய் மருங்கிற் கழுவாயுமுளவென நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன், செய்தி கொன்றோர்க்கு உய்தி யில்லென அறம்பாடிற்றே ஆயிழைகணவ" (புறநா - 34) என்றும் செய்ந்நன்றி கொன்றார்க்கு

உய்தியின்மை உறுதி செய்துள்ளமை காணலாம். மை - குற்றம்; ஐயம், திரிபு அறியாமை என்பன. நோக்கிப் பொய்யென்றுனும் என இயையும். மெய்யினைப் பொய்யென்றற்குக் காரணம் மையுறு நெறியின் நோக்கினமையேயாம் என்க. செய்ந்நன்றி மறத்தலும் கடவுளைப் பொய்யென மறுத்தலும் போல அபயம் என்றுனை மறுத்தலும் பெருங்குற்றம் என்றவாறு. (115)

6607. சீதையைக் குறித்த தேயோ
தேவரைத் தீமை செய்த
பேதையைக் கொல்வெ னென்று
பேணிய விரதப் பெற்றி
வேதிய ரபய மென்றுர்க்
கன்றுநான் விரித்துச் சொன்ன
காதையைக் குறித்து நின்ற
வவ்வுரை கடக்க லாமோ.

'சீதையைக் குறித்த தேயோ,
"தேவரைத் தீமை செய்த
பேதையைக் கொல்வென்" என்று
பேணிய விரதப் பெற்றி
வேதியர், "அபயம்" என்றுர்க்கு,
அன்று, நான் விரித்துச் சொன்ன
காதையைக் குறித்து நின்ற
அவ் உரை கடக்கல் ஆமோ?

பொ :—'தேவர்களுக்குத் தீமை செய்த இராவணனுகிய அறிவிலியைக் கொல்வேன்' என்று யான் விரும்பிச் சொன்ன விரதத்தின் தன்மை, சீதையை (அவன் எடுத்துச் செல்வான், அவனைக் கொல்வேன் என்று) நினைத்துச் சொன்னதோ? அன்று; என்னிடம் 'அபயம்' என்று கூறிய தண்டகவனத்து முனிவர்க்கு அன்று நான் விரித்துக் கூறிய செய்தியை உள்ளடக்கி நின்ற (அபயம் என்பாரைக் காப்பேன் என்ற) அந்தச் சொல்லை யானே மீறுதல் தகுமோ?

கு :—தன்னைச் சரணடைந்த தண்டக முனிவர்க்கு இராமன், 'இராவணனைக் கொல்வேன்' என்று கூறி அதை விரதமாக மேற்கொண்டது, சீதையோடு வாழுங்காலத்து ஆகலின், பிற்காலத்து இராவணன் சீதையை எடுத்துச் செல்வான் என்பதை முன்னறிந்து கூறியதன்று என்பான், பேதையைக் கொல்வேன் என்று பேணிய

விரதப் பெற்றி, சீதையைக் குறித்ததேயோ? என வினவினன். இராவணன் சீதையைக் கவர்ந்ததாகிய பின்னிகழ்ச்சி, தண்டகவனத்து முனிவர்பால் 'பேதையைக் கொல்வேன்' என்று கூறிய முன்னைய நிகழ்ச்சிக்குக் காரணமாகாமை தெளிவு. அபயமென்றார்க்கு அபயம் அளித்த செயலே பேதையைக் கொல்வேன் என்று பேணிய விரதப் பெற்றியாகும். "புகல் புகுந்திலரேற் புறத்தண்டத்தின், அகல்வரேனு மென்னம்பொடும் வீழ்வாரால், தகவிறுன்பம் தவிருதிர் நீர்" (அகத்தியப் படலம். 16) என்றும், "ஆவுக்காயினு மந்தணர்க் காயினும் யாவர்க் காயினு மெளியவர்க் காயினும் சாவப் பெற்றவரே தகைவானுறை தேவர்க்குந் தொழுந் தேவர்க ளாகுவார்" (21) என்றும், "ஆரறத்தினொடன்றி நின்றாரவர், வேரறுப்பென் வெருவன்மினீர்" என்றும் ஆறுகவிகளால் தண்டகவனத்து முனிவர்க்கு அபயம் கொடுத்து இராமன் விரித்துக் கூறியதைக் காண்க. 'அவ்வுரை' என்றது 'அபயம் என்றாரைக் காப்பதே கடமை' என்ற உரையை. இராமன் முனிவர்க்கு விரித்துக் கூறிய செய்திகள் யாவும் அச்சொல்லில் அடங்குதலின், 'நான் விரித்துச் சொன்ன காதையைக் குறித்து நின்ற அவ்வுரை' என்றான். 'யாவர்க்காயினும்...சாவப் பெற்றவரே தேவர்க்கும் தொழுந் தேவர்களாகுவார்' என்று கூறிய நானே அந்தச் சொல்லைக் கடத்தல் தகாது; அடைக்கலம் ஈதலே தக்கது என்றவாறு. காதை - செய்தி. (116)

6608. காரிய மாக வன்றே
யாகுக கருணை யோர்க்குச்
சீரிய தன்மை நோக்கி
னிதனின்மேற் சிறந்த துண்டோ
பூரிய ரேனுந் தம்மைப்
புகல்புகுந் தோர்க்குப் பொன்றா
ஆருயிர் கொடுத்துக் காத்தா
ரெண்ணிலா வரச ரம்மா.

'காரியம் ஆக! அன்றே
ஆகுக! கருணை யோர்க்குச்
சீரிய தன்மை நோக்கின்,
இதனின்மேல் சிறந்தது உண்டோ?
பூரிய ரேனும் தம்மைப்
புகல் புகுந்தோர்க்குப் பொன்றா
ஆர் உயிர் கொடுத்துக் காத்தார்,
எண் இலா அரசர் அம்மா?

பொ :—(இவனை ஏற்றுக் கொள்வதால் நாம் நினைத்த) காரியம் நிறைவேறட்டும் அல்லது நிறைவேறாமல் போகட்டும்; அருள் உள்ளம் உடையோர்க்குச் சிறப்பான பண்பு (எது என்று) ஆராய்ந்து பார்த்தால், (அடைக்கலம் புகுந்தோரைக் காக்கின்ற) இதைக் காட்டிலும் சிறந்தது ஒரு செயல் வேறு உண்டோ? (இல்லை.) (இச்சிறப்பு நோக்கியே) அளவிட முடியாத அரசர் பலர், தம்மைப் புகல் புகுந்தோர் கீழ் மக்களே ஆயினும், அவர்க்காகத் தம் அழிவில்லாத அரிய உயிரையே கொடுத்து அவரைக் காப்பாற்றியுள்ளார்.

கு :—அடைக்கலம் புகுந்தவரின் தகுதி நோக்காது தம் அருளுடைமையே காட்டிப் புல்லோர்க்காகவும் தம் நல்லுயிரைக் கொடுத்துக் காத்துள்ளார்கள் அரசர் பலர்; ஆதலின், இவனைச் சேர்த்துக் கொள்வதால் காரியம் ஆயினும் ஆகாமல் போயினும் நம்மைப் புகல் புகுந்தவனாகிய இவனைச் சேர்த்துக் கொள்வதைக் காட்டிலும் சிறந்த செயல் வேறு இல்லை என்று இராமன் தன் கருத்தைத் தெளிவு படுத்தியவாறு. கருணைக்கு அடையாளம் புகல் புகுந்தோரைக் காத்தலே என்பான் "கருணையோர்க்குச் சீரிய தன்மை நோக்கின் இதனின்மேற் சிறந்ததுண்டோ" என்றான். பூரியர் - கீழ்மக்கள். "வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப் பூரியர்க ளாழுமளறு" (குறள்-916) என்புழியும் இச்சொல் இப்பொருளில் பயின்றுள்ளமை காணலாம். உயிர் நித்தியமாதலின் 'பொன்றா ஆருயிர்' என்றார். இனி, நீடித்து உடம்போடு வாழ்தற்குரிய உயிர் என்பான், 'பொன்றா ஆருயிர்' என்றான் எனலும் ஆம். இனி, புகல் புகுந்தோரின் பிரிதற்குரிய உயிரைப் பிரியாமல் காத்தார் எனக் கருத்துக் கூறலும் ஆம். (117)

இச் செய்யுளுக்குப் பின் கீழ்வரும் பாடல் சில பிரதிகளில் காணப்படுகின்றது.

6608 (அ) மோதிவந் தடருஞ் சீய முனிவினுக் குடைந்து வேடன்
மீதொரு மரத்திற் சேர வேண்டுரை அரிக்குச் சொல்லிப்
பேதமற் றிருந்தும் அன்னோன் பிரிந்தவஞ் சகத்தையோர்ந்தும்
காதலிற் கனிகாய் நல்கிக் காத்ததும் கவிய தன்றோ.

இப்பாடலே 63ஆம் எண்ணுள்ள ஏட்டில் பின்வருமாறு காணப்படுகின்றது. அது வருமாறு.

வடிபடு மெயிற்றுப் பேழ்வாய் மடங்கலால் வெருண்ட வேடன்
கொடிபடு பழுவத் தேறக் கோளரிக் கிடங்கொ டாது
பிடிபடும் பொழுதி லன்னோன் பிரித்தகை தவமு மோர்ந்தும்
கடிபடு கனிகாய் நல்கிக் காத்ததுங் கவிக ளன்றோ.

6609. ஆதலா னபய மென்ற
போதத்தே யபய தான
மீதலே கடப்பா டென்ப
தியம்பினீ ரென்பால் வைத்த
காதலா னினிவே றெண்ணக்
கடவதென் கதிரோன் மைந்த
கோதிலா தவனை நீயே
யென்வயிற் கொணர்தி யென்றான்.

'ஆதலான், "அபயம்" என்ற
போதத்தே அபய தானம்
ஈதலே கடப்பாடு என்பது;
இயம்பினீர் என்பால் வைத்த
காதலான்; இனி வேறு எண்ணக்
கடவது என்? கதிரோன் மைந்த!
கோது இலாதவனை நீயே
என்வயின் கொணர்தி' என்றான்.

பொ :—ஆதலால், வீடணன் அபயம் என்று சொன்ன போதே அபயதானம் கொடுத்தலே என் கடமையாகும். என்னிடம் வைத்த பேரன்பால் நீங்கள் (அவனை யேற்கலாகாது என்று) முன் சொன்னீர்கள்; இனி வேறு வகையாக எண்ண வேண்டுவது யாதுளது? 'சூரியன் புதல்வனாகிய சுக்கிரீவ! குற்றம் அற்றவனாகிய வீடணனை நீயே என்னிடத்து அழைத்து வருவாயாக' என்று கூறினான்.

கு :—அடைக்கலம் அருளற்குரிய காரணங்கள் மேலே கூறப்பட்டமையின் இங்கு 'ஆதலான்' என அக்காரணங்களை அனுவதித்தவாறு. அபயமாகிய தானம் அபயதானம் எனப்பட்டது. என்பது, அசை நிலை. அடைக்கலம் ஈதலாகாது என்ற சொல்லைத் தன் வாயால் சொல்லவும் கூசி 'இயம்பினீர்' என்று மட்டும் இராமன் கூறினான். வீடணனை யேற்றுக் கொள்ளலாகாது எனச் சுக்கிரீவன் முதலியோர் கூறியது இராமனுக்குத் தீங்கு வருமோ என்று அன்பால் தோன்றிய அச்சத்தாலே ஆம்; என்று அவர் சொல்லுக்கு அமைதி கூறுவானாய் 'இயம்பினீர் என்பால் வைத்த காதலால்' என்றான். இது காறும் பலவகையாக எண்ணி முடித்தமையால் 'இனி வேறெண்ணக் கடவதென்' என்றான். 'நல்லார்க்கும் பொல்லார்க்கும் ஒப்ப வெயில் வீசுகின்ற சூரியனின் மைந்தனாகலின் நீ அல்லோன் எனக் கருதிய வீடணனை வெறுப்பின்றி அழைத்து வருதற்குரியை' என்ற கருத்தும் புலப்படச் சுக்கிரீவனைக் 'கதிரோன் மைந்த' என விளித்தான்

சுக்கிரீவன் நினைத்த குற்றங்கள் வீடணன் பால் இல்லை என்பது தோன்றக் 'கோதிலாதவனை' என வீடணனைச் சிறப்பித்தான். வானரப் படையில் சேர வருகின்ற வீடணனை, வரவேற்கத்தக்கவன் அப்படைக்கு அரசனாகிய நீயே என்பான், 'நீயே என் வயிற் கொணர்தி' என்றான். ஏகாரம் பிரிநிலை. அவனை ஏற்றல் ஆகாது என்று விலக்கிய நீயே, (அவன் கோதிலான் என்பதை உணர்ந்து கொண்டாயாதலின்) கொணர்தி எனப் பொருள் கூறலுமாம். இனி, கோது இலாது அவனைக் கொணர்தி என இயைத்து, முன்பு நீ கருதிய குற்றங்களை உளங் கொள்ளாமல் நீக்கிவிட்டு அவனைக் கொணர்தி • எனப் பொருள் கூறலும் ஆம். மறுத்தவர்களில் முதன்மையானவனையே கொண்டு வீடணனை வரவேற்கச் செய்த இராமன் திறம் இங்கு நோக்கத்தகும். (118)

இச்செய்யுளின் பின் 52 ல் பின்வரும் பாடல் மிகைப் பாடலாகக் காட்டப்பட்டுளது.

6609. (a) என்னமுன் பரிதி மைந்தன்
எழுந்தடி வணங்கி யெந்தாய்,
சொன்னதே துணிவ தல்லால்
மறுத்தொரு துணிவும் உண்டோ?
உன்னுளத் துணரா தேது
உனக்கரி தியாதோ என்னாப்
பன்னிமற் றவரை யெல்லாம்
பார்த்திருந் துரைக்க லுற்றான்.

சுக்கிரீவன் வீடணனை அழைத்து வரச் செல்லுதல்

6610. ஐயுற வெல்லாந் தீரு
மளவையா யமைந்த தன்றே
தெய்வநா யகன துள்ளந்
தேறிய வடைவே தேறிக்
கைபுகற் கமைவ தானான்
கடிதினிற் கொணர்வ லென்னா
மெய்யினுக் குறையு ளான
வொருவன்பால் விரைவிற் சென்றான்.

ஐயுறவு எல்லாம் தீரும்
அளவையாய் அமைந்தது அன்றே;
தெய்வ நாயகனது உள்ளம்
தேறிய அடைவே; தேறி,

கை புகற்கு அமைவது ஆனான்
'கடிதினின் கொணர்வல்' என்று,
மெய்யினுக்கு உறையுள் ஆன
ஒருவன்பால் விரைவில் சென்றான்.

பொ :—தெய்வநாயகனாகிய இராமனது உள்ளம் தெளிந்த முறையே, நம் ஐயங்கள் எல்லாம் தீர்தற்குரிய பிரமாணமாக அமைந்தது; என்று தெளிந்து, வீடணன் அடைக்கலம் புகுதற்கு உடன்பட்டவனான சுக்கிரீவன், "விரைவில் கொணர்கின்றேன்" என்று சொல்லிவிட்டு உண்மைக்கு இருப்பிடமாயுள்ள ஒருவனாகிய வீடணனிடம் விரைவாகச் சென்றான்.

கு :—அன்று, ஏ, அசைநிலை. தெய்வநாயகன் உள்ளம் தீயோரைத் தெளியாது ஆகலின், அவன் உள்ளம் தேறிய அடைவே ஐயுறவு எல்லாம் தீரும் அளவையாய் அமைந்தது என்று சுக்கிரீவன் தெளியலானான். அளவை - பிரமாணம். இராமன் உள்ளம் தேறியபின் பிறர் ஐயுறற்கு இடமில்லை என்றபடி. இராமன் உள்ளத்தின் உயர்வு புலப்படவே இங்கு அவனைத் 'தெய்வ நாயகன்' என்று குறிப்பிட்டவாறு. அடைவு - முறைமை. தேறிய அடைவே அளவையாய் அமைந்தது என்று தேறி அமைவதானான் என ஒரு சொல் வருவித்து முடிக்க. வீடணன் கைபுகற்கு அமைவதானான் என்க. அமைவது - உடன்படுவது. அமைவதானான் என்பது வினைப்பெயர்; சுக்கிரீவனைக் குறித்தது. பொய்யரே நிறைந்த இலங்கையில் மெய் தங்குதற்கு வீடணனை அன்றிப் பிறர் இன்மை புலப்பட 'மெய்யினுக் குறையுளான ஒருவன்' என வீடணனைச் சிறப்பித்தவாறு. வீடணன் வாய்மையன் என்பதை "அறநிலை வழாமையு மாதி மூர்த்திபால், நிறைவரு நேயமு நின்ற வாய்மையும்......தவத்தி னெய்தினான்" (46) என முன் கூறியுள்ளதாலும் அறியலாம். ஒருவன் - ஒப்பற்றவன் எனலும் ஆம். கடிதினில் கொணரவேண்டி விரைவில் செல்லலானான் என்க. (119)

சுக்கிரீவன் வரவை அறிந்து வீடணன் எதிர்வரல்

6611. வருகின்ற கவியின் வேந்தை
மயிந்தனுக் கிளவல் காட்டித்
தருகென்று னண்ண னின்னை
யெதிர்கொளற் கருக்கன் றந்த

இருகுன்ற மனைய தோளா
　　னெய்தின னென்ன லோடும்
திரிகின்ற வுள்ளத் தானு
　　மகமலர்ந் தவன்முன் சென்றான்.

வருகின்ற கவியின் வேந்தை
　　மயிந்தனுக்கு இளவல் காட்டித்
"தருகென்றான் அண்ணல் நின்னை;
　　எதிர் கொளற்கு அருக்கன் தந்த
இருகுன்றம் அனைய தோளான்
　　எய்தினன்" என்ன லோடும்,
திரிகின்ற உள்ளத் தானும்,
　　அகம் மலர்ந்து அவன்முன் சென்றான்.

பொ :—(தம்மை நோக்கி) வருகின்ற வானரர் வேந்தனாகிய சுக்கிரீவனை, மயிந்தனுக்குத் தம்பியாகிய துவிந்தன், (வீடணனுக்குக்) காட்டி, 'பெருமையுடைய இராமன் நின்னை (வீடணனை) அழைத்து வருக' என்று கூறினனாக, நின்னை எதிர்கொள்வதற்காகச் சூரியன் பெற்ற, இரண்டு குன்றுபோன்ற தோளையுடைய, சுக்கிரீவன் இங்கு வந்தடைந்தான்' என்று கூறிய அளவில் ஊசலாடும் உள்ளத் தானாகிய வீடணனும் மனமகிழ்ந்து அச் சுக்கிரீவன் எதிரில் சென்றான்.

கு :—கவியின்வேந்து என்றது சுக்கிரீவனை. மயிந்தனுக்கு இளவல் என்றது துவிந்தனை. அண்ணல் என்றது இராமனை. தருக என்றான் என்பது அகரம் தொகுத்தல் விகாரமாய்த் தருகென்றான் என நின்றது. தருதல் என்றது அழைத்து வருதலை. நின்னை என்பது இடைநிலை விளக்காய் நின்னைத் தருகென்றான் எனவும், நின்னை யெதிர் கொளற்கு எனவும், இருவழியும் இயையும். இரு குன்ற மனைய தோளான் என்பது ஒரு பெயர்த்தன்மைப்பட்டு 'தந்த' என்ற பெயரெச்சத்திற்கு முடிவு ஆயது. இராமன் தன்னை நோக்கிக் "கோதிலா தவனை நீயே யென்வயின் கொணர்தி" என்று கூறியது கேட்டுக் சுக்கிரீவன் கொண்ட மகிழ்ச்சியால் அவன் தோள்கள் பூரித்தமை புலப்பட 'இருகுன்றம் அனைய தோளான்' என அவனைச் சிறப்பித்தவாறு. வீடணனை வரவேற்கும் வாய்ப்புத் தனக்குக் கிட்டினமைக்குச் சுக்கிரீவன் பெருமகிழ்வுற்றான் என்றவாறு. இராமன் தன்னை ஏற்றுக் கொள்வானோ? கொள்ளானோ? என்ற ஐயத்தால் ஒரு நிலைப்படாது ஊசலாடும் உள்ளத்தனாக வீடணனிருந்தமை புலப்படத் 'திரிகின்ற வுள்ளத்தானும்' என

அவனைக் குறிப்பிட்டார். தன்னை எதிர்கொளச் சுக்கிரீவன் வருகின்றான் என்பதை அறிந்தவுடன் மனம் தடுமாற்றம் நீங்கி ஒருநிலைப்பட்டு மகிழ்ச்சியுற்றது என்பார். 'அகமலர்ந்து' என்றார். வானரர்களுக்கெல்லாம் அரசனாய் இராமனுக்குத் துணையாய் நிற்கும் பெருமையுடையவன் சுக்கிரீவன் ஆகலின் அவன் தன்னை வந்து காண்பதற்கு முன் வீடணன் தானே அவன்முன் சென்றான் என்க. "மன் முன்னே தழீஇக் கொண்ட மனக்கினிய துணைவனேல், என்முன்னே யவற்காண்பென் யானே சென்றென வெழுந்தான்" (குகப்-27) எனக்குகன் தன்னைக் காண வருமுன் பரதன் முற்பட்டு அவனைச் சென்று கண்டமை இங்கு ஒப்புநோக்கத்தகும். சுக்கிரீவன் முகக் குறிப்பால் உய்த்துணர்ந்தே துவிந்தன், 'தருகென்றானண்ணல்' என்று கூறினான். (120)

சுக்கிரீவனும் வீடணனும் தழுவிக் கொள்ளுதல்

6612. சொல்லருங் கால மெல்லாம்
பழகினுந் தூய ரல்லார்
புல்லல ருள்ளந் தூயார்
பொருந்துவ ரெதிர்ந்த ஞான்றே
ஒல்லைவந் துணர்வு மொன்ற
விருவரு மொருநா ளுற்ற
எல்லியும் பகலும் போலத்
தழுவின ரெழுவிற் றோளார்.

சொல்லருங் காலம் எல்லாம்
பழகினும், தூயர் அல்லார்
புல்லலர் உள்ளம்; தூயார்
பொருந்துவர், எதிர்ந்த ஞான்றே;
ஒல்லை வந்து உணர்வும் ஒன்ற,
இருவரும், ஒருநாள் உற்ற
எல்லியும் பகலும் போலத்,
தழுவினர், எழுவின் தோளார்.

பொ :—எல்லை சொல்லுதற்கரிய (தமது) ஆயுட்கால முழுதும் பழகினாலும் தூய ஒழுக்கமில்லாத கீழ்மக்கள் மனம் ஒன்றுபட மாட்டார்கள்; தூய ஒழுக்கம் உடைய பெருமக்கள் எதிர்ப்பட்ட அன்றே மனம் ஒன்றுபட்டு நண்பராவர் ; (என்ற முறைப்படி) தூண்போன்ற தோள்களையுடையராகிய சுக்கிரீவனும் வீடணனும் தத்தம் உணர்வும்

விரைந்து வந்து ஒன்றுபட, ஒருநாளில் பொருந்திய இரவும் பகலும் போலத் தழுவிக்கொண்டார்கள்.

கு :—கீழ்மக்கள் பல்லாண்டு பழகினும் நண்பராகார்; மேன் மக்கள் ஒருநாட் பழக்கத்திலேயே நண்பராவர்; என்ற முறைப்படி, தூயராகிய வீடணனும் சுக்கிரீவனும் எதிர்ப்பட்டபோதே நட் புணர்ச்சியுடன் தழுவிக்கொண்டனர் என்க. வீடணன் இருள் நிறமும் சுக்கிரீவன் பொன்னிறமும் உடையராதலின் அவர் தழுவிக் கொண்டதற்கு 'ஒருநாளுற்ற எல்லியும் பகலும் போல' எனப் பண்பு உவமை கூறினார். எல்லி - இரவு. இரவு மாயப் பகல் வருதலும் பகல் மறைந்தபின் இரவு வருதலுமே இயல்பாதலின், ஒரு நாளுற்ற எல்லியும் பகலும் போலத் தழுவினர் என்றது இல்பொருள் உவமையாம். பகலையும் இரவையும் ஒருங்கு வைத்துக்காண்டல் இயலாமையறிக. "நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை, நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள்ளாதே; ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை, யிருநிலம் பிளக்க வேர் வீழ்க்குமே" (வெற்றி வேற்கை) என்ற கருத்தையே முதலிரண்டடிகளில் விளக்கியவாறு. "செல்வுழிக் கண்ணொருநாட் காணினுஞ் சான்றவர், தொல்வழிக் கேண்மையிற் றோன்றப் புரிந்தியாப்பர்" (நாலடி - 154) என்பதும் இங்கு நினைக்கத்தகும். உணர்வும் ஒன்ற என்புழி உம்மை எதிரது தழுவிய எச்சவும்மை. உடம் பொன்றத் தழுவியமை பின் கூறப் படுதல் காணலாம். எழுவிற்றோளார் ஆகிய இருவரும் உணர்வும் ஒன்றத் தழுவினர் என இயையும். இருவர் என்றது தொகைக் குறிப்பாய் வீடணனையும் சுக்கிரீவனையும் உணர்த்தியது. வீடணன் இராமனோடு நட்புக்கொள்ளுதற்கு முன்னரே அவனால் அனுப்பப் பட்ட சுக்கிரீவனோடு நட்புணர்ச்சியோடு தழுவினான் என்றவாறு. (121)

இராமன் அடைக்கலம் அருளியதைச் சுக்கிரீவன் வீடணனுக்குத் தெரிவித்தல்

6613. தழுவினர் நின்ற காலைத்
தாமரைக் கண்ணன் றங்கள்
முழுமுதற் குலத்திற் கேற்ற
முறைமையா லுவகை மூள
வழுவலி லபய முன்பால்
வழங்கின னவன்பொற் பாதம்
தொழுதியால் விரைவி னென்று
கதிரவன் சிறுவன் சொன்னான்.

தழுவினர் நின்ற காலை,
 'தாமரைக் கண்ணன் தங்கள்
முழு முதல் குலத்திற்கு ஏற்ற
 முறைமையால் உவகை மூள
வழுவல் இல் அபயம் உன்பால்
 வழங்கினன் அவன் பொற் பாதம்
தொழுதியால், விரைவின்' என்று
 கதிரவன் சிறுவன் சொன்னான்.

பொ :—(அவ்விருவரும்) தழுவிநின்றபொழுது சூரியன் மகனாகிய சுக்கிரீவன், (வீடணனை நோக்கித்) 'தாமரை மலர் போன்ற கண்ணை யுடைய இராமன் தமது சிறந்த முதன்மையுடைய சூரியகுலத்தின் இயல்புக்கு ஏற்ற முறைமையால், தன் உள்ளத்தில் மகிழ்ச்சி பெருகத் தவறுதல் இல்லாத அபயத்தை உன்னிடம் வழங்கினான்; ஆதலால், அவ்விராமனுடைய பொன்போன்ற திருவடிகளை விரைவில் தொழுவாயாக' என்று சொன்னான்.

கு :—கதிரவன் சிறுவன் என்புழிச் சிறுவன் என்பது மகன் என்னும் பொருளில் வந்தது. சுக்கிரீவன் இராமன் பொற் பாதங்களைத் தொழுது விரும்பிய அரசைப் பெற்றவன் ஆகலின், அவ்வாறே வீடணனும் அவ்விராமன் பாதங்களில் அடைக்கலம் புகுந்து தொழுதால் விரும்பிய அரசை யெய்தலாம் என்பதும் குறிப்பிட்டவாறு. தங்கள் என்றது, இராமன் குலத்தவரையெல்லாம் உளப்படுத்திக் கூறியது; எங்களூர் என்பதுபோல. சூரியகுலமே எல்லாக் குலத்தினும் முதன்மையும் முழுமையும் உடைய குலமாதலின் 'முழு முதற் குலம்' என்றான். புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்க பெருந்தகைபோலத் தன்பால் அடைக்கலமாக வந்து அடைந்த உன்னை யேற்றுக்கொண்டான் என்பான், தங்கள் முழுமுதற் குலத்திற்கேற்ற முறைமையால் உன்பால் அபயம் வழங்கினான் என்றான். நின் வரவை எதிர்நோக்கி மலர்ந்த கண்ணினன் என்பான், இராமனைத் 'தாமரைக் கண்ணன்' எனக் கண்ணாகிய உறுப்பால் பெயர் கூறினான். தம் குலத்திற்கேற்ற முறைமையால் அபயம் வழங்கினன் எனவே அவனுக்கு விருப்பமில்லைபோலும் என்னும் ஐயத்தைப் போக்க 'உவகை மூள வழங்கினன்' என்றான். மூளுதல் - பெருகுதல். இன்று அபயம் கொடுத்துவிட்டு நாளைக்கு மாறுகின்ற அபயம் அன்று என்பான், 'வழுவல் இல் அபயம்' என்றான். தன் மனையாளை வஞ்சித்துக் கவர்ந்த இராவணன் தம்பியாகிய உன்னிடத்து இராமன் அபயதானம் கொடுத்தல் கூடாதாயினும் தன் வள்ளல் தன்மையால் கொடுத்தான் என்பான், 'உன்பால் வழங்கினன்' என்றான். கிடைத்தற்கரிய பேறு கிடைத்துள்ள

மையால் இனி ஒரு சிறிது போழ்தும் தாழ்த்தாது பெறுக என்பான், 'தொழுதியால் விரைவின்' என்ருன். பொன்னுலகம் என்னும் பரம பதத்தையே கொடுக்கத்தக்க பாதம் ஆதலின் இராமன் பாதம் பொற்பாதம் எனப்பட்டது எனலும் ஆம். பரமபதத்தையே கொடுக்க வல்ல அவன் பாதங்களைத் தொழுதால் இலங்கை அரசு பெறுதல் கூறவேண்டுமோ என்பதும் குறிப்பு. கதிரவன் குலத்துதித்த இராமன் பெருமையை விளக்குதற்குத் தகுதியுடைமை புலப்படக் 'கதிரவன் சிறுவன்' எனச் சுக்கிரீவனைக் குறிப்பிட்டார். (122)

சுக்கிரீவன் சொல்லைக் கேட்ட வீடணனின் விழுமிய மகிழ்ச்சி 6614-6617

6614. சிங்கவே றனையான் சொன்ன
வாசகஞ் செவிபு காமுன்
கங்குலி னிறத்தி ளுன்றன்
கண்மழைத் தாரை கான்ற
அங்கமு மனம தென்னக்
குளிர்ந்ததவ் வகத்தை மிக்குப்
பொங்கிய வுவகை யென்னப்
பொடித்தன வுரோமப் புள்ளி.

சிங்க ஏறு அனையான் சொன்ன
வாசகம் செவி புகாமுன்,
கங்குலின் நிறத்தினன் தன்
கண், மழைத் தாரை கான்ற;
அங்கமும் மனம் அது என்னக்
குளிர்ந்தது; அவ் அகத்தை மிக்குப்
பொங்கிய உவகை என்னப்
பொடித்தன உரோமப் புள்ளி.

பொ:—ஆண் சிங்கம் போன்ற சுக்கிரீவன் சொன்ன வார்த்தை தன் செவியில் புகுவதற்கு முன்னே, இருள்போன்ற நிறத்தினனாகிய வீடணனின் கண்கள் மழைத்தாரை போன்ற உவகைக் கண்ணீரைச் சொரிந்தன; அவன் உடம்பும் மனம் போல (மகிழ்ச்சியால்) குளிர்ந்தது; அவ்வுள்ளத்தைக் கடந்து மகிழ்ச்சி பொங்கி உடம்பில் வழிந்தது என்று சொல்லுமாறு புளகங்கள் உடம்பில் தோன்றலாயின.

கு :—சுக்கிரீவன் நிறமும் திறமும் புலப்படச் சிங்கவேறனையான் என உவமித்தார். "ஒருநாளுற்ற எல்லியும் பகலும்போலத் தழுவினர்", என மேற்கூறியபோது, இரவு போன்றவர் யார் பகல் போன்றவர் யார் என்பதை உய்த்துணர வைத்தாராதலின் இங்கு நன்கு புலப்படச் சுக்கிரீவனைச் 'சிங்கவேறனையான்' என்றும் வீடணனைக் 'கங்குலினிறத்தினன்' என்றும் விளக்கிக் கூறினர். வாசகம் கேட்டவுடன் என்பார், விரைவுபுலப்பட 'வாசகம் செவிபுகா முன்' என்றார். வீடணன் தன் சிறுமையையும் தன்னையும் அடைக்கலமாக ஏற்றுக்கொண்ட இராமன் பெருமையையும் நினைந்து உருகுதலின் அவன் கண்கள் மழைத்தாரைபோல நீரைச் சொரிந்தன என்க. அங்கம் - உடம்பு. மகிழ்ச்சியால் மனங்குளிர்ந்த வழி உடம்புங் குளிர்ச்சி பெறுதல் இயல்பு; இரண்டற்கும் இயைபு மிக உண்மையால். உள்ளத்தில் தோன்றிய உவகையை மயிர்க்கூச்சால் உடம்பு வெளிப்படுத்தினமையால் அதனை "அவ்வகத்தை மிக்குப் பொங்கிய உவகையென்னப் பொடித்தன வுரோமப்புள்ளி" எனத் தற்குறிப்பேற்ற வுவமையாகக் கூறினர். உரோமப்புள்ளி - மயிர்க் கூச்சு; புளகம். பொடித்தல் - தோன்றுதல். இதனல் இராமன் தன்னையேற்றுக் கொண்டான் என்பதைக் கேட்டவுடன் வீடணன் உள்ளத்திலும் உடம்பிலும் தோன்றிய மாறுதல்களை யுணர்த்திய வாறு. (123)

6615. பஞ்செனச் சிவக்கு மென்காற்
றேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக் கிளைய வென்னை
வருகவென் றருள்செய் தானே
தஞ்செனக் கருதி னானே
தாழ்சடைக் கடவு ளுண்ட
நஞ்செனச் சிறந்தே னன்றே
நாயக னருளி னாயேன்.

"பஞ்சு" எனச் சிவக்கும் மென் கால்
தேவியைப் பிரித்த பாவி
வஞ்சனுக்கு இளைய என்னை,
"வருக!" என்று அருள் செய்தானே?
தஞ்சு எனக் கருதினானே?
தாழ்சடைக் கடவுள் உண்ட
நஞ்சு எனச் சிறந்தேன் அன்றே,
நாயகன் அருளின் நாயேன்?

பொ :—(தோழியர்) செம்பஞ்சுக்குழம்பு (ஊட்டவேண்டும்) என்று சொன்னவுடன் (பொருமல்) சிவக்கின்ற மெல்லிய திருவடிகளை யுடைய தேவியாகிய சீதையை (க் கவர்ந்து இராமனை விட்டுப்) பிரியச் செய்த பாவியாகிய வஞ்சகத்தன்மையுள்ள இராவணனுக்கு இளையவனுகிய என்னையும் 'வருவானுக' என்று கூறியருளினுனே? அடைக் கலப் பொருளாகத் திருவுளம் பற்றினுனே ? உலக நாயகனுகிய இராமன் அவ்வாறு அருள் செய்தானுயின், நாய்போன்ற கடைப் பட்டவனுகிய யான், நீண்ட சடையையுடைய சிவபிரான் உட் கொண்ட ஆலகாலவிடம் போலச் சிறப்புப் பெற்றுவிட்டேன் அன்றோ !

கு :—சீதையின் மென்மைத் தன்மையைச் சிறப்பிக்க, 'பஞ்செனச் சிவக்கும் மென்காற்றேவி' என்ருன். பஞ்சு என்றது செம்பஞ்சுக் குழம்பினை. அடிக்குச் செந்நிறம் ஊட்டச் செம்பஞ்சுக் குழம்பை ஊட்டுதல் பண்டைப் பெண்டிர் பழக்கமாகும் "அரக் கார்ந்த பஞ்சு கொண்டூட்டினும் பையெனப் பையெனவென் றஞ்சிப் பின் வாங்குமடி" (நாலடி-396) என அடியின் மென்மையை விளக்கி யிருத்தல் காணலாம். பஞ்சு ஊட்டுவதைப் பொருது அஞ்சிப் பின் வாங்கும் அடியினும், பஞ்சு என்று தோழியர் சொன்னவுடன் சிவக்கும் மென்கால் மென்மையிற் சிறந்ததாதல் காணலாம். அடைக்கலம் ஏற்கத் தகுதியற்றவன் என்பான், "தேவியைப் பிரித்த பாவி வஞ்சனுக்கிளைய என்னை" என்ருன். என்னைத் தஞ்செனக் கருதி ஞுனே எனப் பின்னும் கூட்டுக. அருள் செய்தல் என்பது இங்குச் சொல்லுதலை உணர்த்தியது. தஞ்சு, அம் சாரியை குறைந்து வந்தது. தஞ்சம் - அடைக்கலம். வீடணனுள்ளத்தில் தோன்றிய வியப்பினுல் வருகவென்றருள் செய்தானே? தஞ்செனக் கருதி ஞுனே என இரண்டு வினுவாகக் கூறியவாறு. தாழ்சடைக் கடவுள்- சிவபிரான். நஞ்சு கொடியதாயினும் அதன் கொடுமையை நினை யாது சிவபிரான் தன் கண்டத்தில் அடக்கி வைத்துக் கொண்டமை யால் அக் கொடிய நஞ்சும் பிறரால் வணங்கப்படும் சிறப்பு எய்தியது போல, நஞ்சு போன்ற கொடியனுகிய என்னை இராமன் அடைக்கல மாக ஏற்றுக்கொண்டால் யானும் சிறப்புப் பெறுவேன் என்று வீடணன் மகிழ்ந்தவாறு. (124)

6616. மருளுறு மனத்தி ஞனென்
வாய்மொழி மறுத்தான் வானத்
துருளுறு தேரி ஞனு
மிலங்கைமீ தோடு மன்றே

தெருளுறு சிந்தை வந்த
தேற்றமீ தாகிற் செய்யும்
அருளிது வாயிற் கெட்டேன்
பிழைப்பரோ வரக்க ரானோர்.

'மருளுறு மனத்தினன் என்
வாய்மொழி மறுத்தான்; வானத்து
உருளுறு தேரி னனும்,
இலங்கை மீது ஓடும் அன்றே?
தெருளுறு சிந்தை வந்த
தேற்றம் ஈது ஆகின், செய்யும்
அருள் இது வாயின் கெட்டேன்!
பிழைப்பரோ அரக்கர் ஆனோர்?

பொ :—தெளிவு பொருந்திய (இராமன்) சிந்தையில் உண்டான உறுதியான எண்ணம் (எனக்கு அடைக்கலம் அருளுதலாகிய) இது வானல்—அவன் செய்யும் அருள் (யான் வரலாம் என்கின்ற) இது வானல் - கெட்டேன்! காம மயக்கம் பொருந்திய மனத்தினையுடைய இராவணன் என் உண்மையான சொல்லைக் கேளாது மறுத்துவிட்டான்; இனி, விண்ணில் உருண்டு செல்லும் தேரையுடைய சூரியனும் (ஒதுங்கிச் செல்லாமல்) இலங்கை நகரத்தின்மேல் ஓடுவான் அன்றோ? அரக்கராயுள்ளவர்கள் இனிப் பிழைத்திருப்பார்களோ? (பிழையாரன்றே)

கு :—இராவணன் தம்பி என்று மருமல் என்னை அடைக்கலமாக ஏற்றுக் கொண்டது போலவே இராவணனும் சீதையைக் கொணர்ந்து விடுத்துச் சரணடைந்திருந்தால் அவன் குற்றத்தைப் பொறுத்து அருள் செய்திருப்பான் இராமன்; அரக்கர்க்கும் அழிவு நேராது; காம மயக்கத்தையுடைய இராவணன் என் சொல்லை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்து விட்டானே! இனி ஞாயிறும் அச்சம் நீங்கினவனாய் இலங்கையின்மேல் உலவுவானே! அரக்கர்களும் அடியோடு அழிவார்களே! என்று வீடணன் இரங்கிக் கூறியவாறு. அரக்கர்களின் அழிவை நினைந்து 'கெட்டேன்' என இரக்கத்தால் கூறினான். துன்பத்தை வெளியிடுங்கால் 'கெட்டேன்' என்ற இரக்கச் சொல்வரும். மருளுறு மனத்தினன் என்றது இராவணனை. வீடணன் கூறுவது வாய்மை மொழி என்று தெளியவொண்ணாது மறைத்தது இராவணனின் மருளுறு மனமே என்பது புலப்படுத்தியவாறு. இராவணன் ஆட்சியில் சூரியன் இலங்கைமேல் செல்ல அஞ்சி ஒதுங்கிச் சென்று கொண்டிருந்தமை "முன்னம் யாவரும் இராவணன் முனியும் என்றெண்ணிப்

பொன்னின் மாநகர் மீச்செலான் கதிரெனப் புகல்வார்'' (சுந்தர - ஊர் - 21) என்றதாலும், "பகலவன் மீதியங்காமைக் காத்த பதி யோன்றனை யிகலழிவித்தவன் ஏத்துகோயில் இராமேச்சுரம்'' (திரு ஞான சம்பந்தர் தேவாரம்) என்றதாலும், அறியலாம். இனி இராம னுல் இராவணன் அழிவது திண்ணமாதலின் சூரியன் அச்சமின்றி இலங்கை மீது ஓடுவான் என்ருன். இராவணன் மனத்தை மருளுறு மனம் எனவும் இராமன் சிந்தையைத் 'தெருளுறு சிந்தை' எனவும், கூறிய நயம் நோக்குக. மேல் 'வருக வென்றருள் செய் தானே?; எனவும் தஞ்செனக் கருதினுனே' எனவும் கூறியவற் றையே இங்கும் 'சிந்தை வந்த தேற்றமீதாயின், எனவும் செய்யும் அருளிதுவாயின்' எனவும் இரண்டாக்கிக் கூறியவாறு. (125)

6617. தீர்வரு மின்ன றம்மைச்
செய்யினுஞ் செய்ய சிந்தைப்
பேரரு ளாளர் தத்தஞ்
செய்கையிற் பிழைப்ப துண்டோ
கார்வரை நிறுவித் தன்னைக்
கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி யமர ருய்ய
வமிழ்துபண் டளித்த தன்றே.

தீர்வு அரும் இன்னல் தம்மைச்
செய்யினும் செய்ய சிந்தைப்
பேர் அருளாளர் தத்தம்
செய்கையிற் பிழைப்பது உண்டோ?—
கார் வரை நிறுவித், தன்னைக்
கனல் எழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி அமரர் உய்ய
அமிழ்து பண்டு அளித்தது அன்றே?

பொ :—தீர்க்க இயலாத பெருந் துன்பத்தைத் தமக்குப் பிறர் செய்தாலும் செம்மையான மனமுடைய பெரிய அருளாளர்கள், தமக்கு இயல்பான உபகாரச் செயலில் நின்றும் தவறுவது உண்டோ? (இல்லை) எங்ஙனம் எனின்? கரிய மந்தரமலையை மத்தாக நிறுத்திக் கனல் எழும்படி தன்னைக் கலக்கிய செயலைக் கண்டிருந்தும் பாற்கடல் (தன்னைக் கலக்கிய) தேவர் உய்யுமாறு அமிழ்தத்தை முன் கொடுத்தது அல்லவோ?

கு :—செய்ய சிந்தைப் பேரருளாளர் என்றது இராமனை உள்ளிட்ட பெருமக்களை. பேரருளாளர் தம் செய்கையில் பிழையார் என்பதை நிறுவப் பாற்கடலின் செயலை எடுத்துக் காட்டியவாறு; இது எடுத்துக் காட்டுவமை. தேவர்கள் மலையை நிறுத்தி நெருப்பெழத் தன்னைக் கலக்கிய வழியும் பாற்கடல் அவர்கட்கு அமிழ்தத்தை அளித்ததுபோலத் தீராத துன்பத்தைச் செய்த இராவணன் தம்பியாகிய எனக்கு இராமன் அடைக்கலம் அருளினான் என்றவாறு. ஆர்கலி - கடல். பாற்கடல் போன்றவன் இராமன்; பாற்கடலைக் கலக்கிய அமரரைப் போன்றவன் வீடணன்; பாற்கடல் அளித்த அமிழ்து போன்றது இராமன் அளித்த அடைக்கலம். அமிழ்தத்தால் அமரர் உய்தி பெற்றதுபோல், இராமன் அருளிய அடைக்கலத்தால் வீடணன் உய்தி பெறுவான் என்பது புலப்படுத்தியவாறு. கடல் கடையும் கடுமையால் நெருப்பெழுதல் இயல்பு ஆதலின் 'கனல் எழக் கலக்கக் கண்டும்' என்றான். தம்தம் செய்கை என்பது தத்தம் செய்கை எனத் திரிந்து வந்தது. செய்கை என்றது இங்கு உதவிச் செயலை. பிழைத்தல் - தவறுதல். (126)

6618. துறவியி னுறவு பூண்ட
தூயவர் துணைவ னென்னை
உறவுவந் தருளி மீளா
வடைக்கல முதவி னானேல்
அறவினை யிறையு மில்லா
வறிவிலா அரக்க னென்னும்
பிறவியிற் பெயர்ந்தேன் பின்னு
நரகினிற் பிழைப்ப தானேன்.

துறவியின் உறவு பூண்ட
தூயவர் துணைவன் என்னை
உறவு உவந்து அருளி, மீளா
அடைக்கலம் உதவினானேல்,
அறவினை இறையும் இல்லா,
அறிவு இலா, அரக்கன் என்னும்
பிறவியின் பெயர்ந்தேன்; பின்னும்
நரகினில் பிழைப்ப தானேன்.

பொ :—துறவறத்தில் உறவு கொண்டுள்ள தூயவராகிய முனிவர்களுக்குத் துணைவனாகிய இராமன், (இராவணன் தம்பியாகிய) என்னையும் உறவாக நினைந்து மகிழ்ந்தருள் செய்து என்றும் கைவிடாத

அடைக்கலம் கொடுத்தருளினனென்றால், அறச் செயல் சிறிதும் இல்லாத - ஞானம் இல்லாத—அரக்கன் என்னும் இழிந்த பிறப்பில் நின்றும் மாறித் தூய பிறப்புடையனாயினேன்; மேலும் மறுமையில் நரகத்தில் வீழ்வதிலிருந்து தப்பி யீடேறினேன்.

கு :—துறவி - துறவு; "துறந்தோர் தம்முன் துறவி யெய்தவும்" (சிலப் - 27-95) என்றதும் காணலாம். துறவியின் உறவு பூண்ட தூயவர் என்றது, முனிவரை. துறவு என்றது, யான் என்னும் அகப் பற்றையும் எனது என்னும் புறப்பற்றையும் துறத்தலே. ஏனை உறவுகளை விட்டாராயினும் துறவில் மட்டும் உறவு பூண்டவராகவேயுள்ளார் முனிவர் எனத் திறம்படக் கூறியவாறு. தூயவர்க்குத் துணைவனாகிய இராமன், தூய்மையற்ற அரக்கனாகிய என்னையும் உறவாக உவந்தருளி அடைக்கலம் உதவினான் ஆயின், என் அரக்கத் தன்மை என்னைவிட்டகன்றது; அரக்கர்க்குரிய நரகத்திலும் இனி வீழ மாட்டேன் என்பான், "அரக்கன் என்னும் பிறவியிற் பெயர்ந்தேன்; பின்னும் நரகினிற் பிழைப்ப தானேன்" என்றான். இராமன் வீடணனை அடைக்கலமாக ஏற்றுக் கொண்டமையே, அவ்வீடணன் பால் அரக்கத் தன்மையில்லை என்பதையும் நரகிடை வீழும் புன்மையில்லை யென்பதையும் புலப்படுத்தியது என்றவாறு. இவ்வாறே இராமன் வீடணனைப் பற்றிக் கூறுங்கால், "பெருத்துயர் தவத்தினானும் பிழைத்தில னென்னும் பெற்றி திருத்திய தாகுமன்றே நம் வயிற் சேர்ந்த செய்கை" (105) என்று முன் கூறியுள்ளதும் இங்கு நினைக. இதனால் ஆள்வோனுக்கும் ஆளப்படுவோனுக்கும் கருத்தொற்றுமையுண்மை தெளியலாம். (127)

இராமன்பால் விரைவில் செல்லுமாறு சுக்கிரீவன் சொல்லுதல்

6619. திருத்திய வுணர்வு மிக்க
செங்கதிர்ச் செல்வன் செம்மல்
ஒருத்தரை நலனுந் தீங்குந்
தேரினு முயிரி னேம்பும்
கருத்தின னன்றே தன்னைக்
கழலடைந் தோரைக் காணும்
அருத்திய னமலன் றாழா
தேகுதி யறிஞ வென்றான்.

திருத்திய உணர்வு மிக்க
செங்கதிர்ச் செல்வன் செம்மல்,
'ஒருத்தரை நலனும் தீங்கும்
தேரினும், உயிரின் ஓம்பும்
கருத்தினன் அன்றே, தன்னைக்
கழல் அடைந்தோரை; காணும்
அருத்தியன், அமலன்; தாழாது
ஏகுதி அறிஞ! என்றான்.

பொ:—இராமன் சொல்லால் திருத்தப்பட்ட உணர்வில் சிறந்தவனாகிய - சிவந்த கிரணங்களாகிய செல்வத்தையுடைய சூரியன் மகனாகிய சுக்கிரீவன், (வீடணனை நோக்கி) "அறிவிற் சிறந்தோனே! தூயவனாகிய இராமபிரான் (உலகில் உள்ள) ஒவ்வொருவரின் நல்ல பண்புகளையும் தீய குற்றங்களையும் ஆராயும் இயல்பினனாயினும், தன்னைச் சரணடைந்தவர்களைத் தன்னுயிர்போல் பாதுகாக்கும் கருத்துடையவன் அன்றோ ? (நின்னைக்) காணவேண்டும் என்னும் ஆசையுடையவனாக எதிர்நோக்கியுள்ளான்; (ஆதலால்) காலம் தாழ்த்தாது விரைந்து அவன்பாற் செல்க" என்று கூறினான்.

கு:—உணர்வு மிக்க செம்மல்; செங்கதிர்ச் செல்வன் செம்மல் என இயையும். முன் வீடணனை ஏற்றுக் கொள்ளலாகாது என்று கூறிய சுக்கிரீவன் உணர்ச்சி, பின் இராமன் சொல்லால் திருத்தப்பட்ட நிலைமை புலப்படுத்த 'திருத்திய வுணர்வு மிக்க செம்மல்' என்றார். "ஐயுற வெல்லாந் தீரு மளவையாயமைந்ததன்றே தெய்வநா யகனை துள்ளந் தேறிய வடைவே தேறிக் கைபுகற் கமைவதானான்" (119) எனச் சுக்கிரீவன் இராமன் சொல்லால் திருத்திய வுணர்வு மிக்கானாதலை முன் கூறியிருத்தல் காண்க. அமலன் - மலமற்றவன்; தூயவன். இராமன் தூயனாதலின் உலகத்துள்ள ஒவ்வொருவரையும் தூயராக்கும் நோக்குடையனாய் அவ்வவர் நலந் தீங்குகளை ஆராய்ந்தறிதல் அவனுக்கு இயல்பேயாயினும், தன்னைச் சரணடைந்தோரை அவ்வாறு ஆராயாது ஏற்றுக்கொண்டு தன்னுயிர்போல அவரைக் காக்கும் கருத்துடையன் ஆகலின், நீ, தேவியைப் பிரித்த பாவி வஞ்சனுக்கு இளையவனாயினும், நீ அவனைச் சரணடைந்தமையால் அவன் தன்னுயிரைப்போல நின்னைக் காப்பாற்றும் கருத்துடையவன்; நின்னைக் காணவேண்டும் என்ற ஆர்வமுடையவனாக எதிர்நோக்கியுள்ளான். விரைந்து அவனை அடைக என்றவாறு. 'பாவி வஞ்சனுக்கிளைய வென்னையும் வருக வென்றருள் செய்தானோ ?" என்று வீடணன் வியந்து கேட்டமையால் சுக்கிரீவன் இவ்வாறு சொல்லவேண்டியவனானான். அமலன் ஒருத்தரை நலனுந் தீங்குந் தேரினும் தன்னைக் கழலடைந்தோரை உயிரினோம்பும் கருத்

தினன் அருத்தியன் என இயையும். கழலடைந்தோரை - சரணடைந்தோரை; ஒரு சொல் நீர்மைத்து. நின்னைக் காணும் என ஒரு சொல் வருவிக்க. இராமனது தகுதியறிந்து சரணடைந்த அருமை நினைந்து வீடணனை 'அறிஞ' என விளித்தான். (128)

வீடணனும் சுக்கிரீவனும் இராமனை அடைதல்

6620. மொய்தவழ் கிரிகண் மற்றும்
பலவுடன் முடுகிச் செல்ல
மைதவழ் கிரியு மேருக்
குன்றமும் வருவ தென்னச்
செய்தவம் பயந்த வீரர்
திரண்மர மேழுந் தீய
வெய்தவ னிருந்த சூழ
லிருவரு மெய்தச் சென்றார்.

மொய்தவழ் கிரிகள் மற்றும்
பலவுடன் முடுகிச் செல்ல,
மைதவழ் கிரியும் மேருக்
குன்றமும் வருவது என்ன,
செய்தவம் பயந்த வீரர்—
திரள் மரம் ஏழும் தீய
எய்தவன் இருந்த சூழல்,
இருவரும் எய்தச் சென்றார்.

பொ :—வலிமை பொருந்திய மலைகள் வேறுபல உடனாக விரைந்து வரக் கருநிறம் பொருந்திய மலையும் பொன்னிறமுடைய மேருமலையும் வருவதுபோலத் தாம் செய்த நல்வினைப்பயன் கை கூடப்பெற்ற வீரர்களாகிய வீடணன் சுக்கிரீவன் என்ற இருவரும், திரண்ட மராமரங்கள் ஏழும் தீயுமாறு அம்பு எய்தவனாகிய இராமபிரான் இருந்த இடத்திற்கு நெருங்கிச் சென்றார்கள்.

கு :—மொய் - வலிமை. தவழ்தல் - பொருந்துதல். கிரிகள் - முடுகிச் செல்லல், வீடணனோடு வந்த அமைச்சர்கள் உடன் வந்தமைக்கு உவமை. மை - கருமை; மேகமுமாம். வீடணனுக்கு மைதவழ்கிரியும் சுக்கிரீவனுக்கு மேருமலையும் உவமை; கருநிறமும் பொன்னிறமும் உடைமைபற்றி, "எல்லியும் பகலும்போலத் தழுவினர்" (121) என முன் உவமை கூறியதையும் நினைக

வலிமையும் திண்மையும் நிறமும் பற்றி இங்ஙனம் உவமித்தவாறு; இராமனைச் சேரும் பெரும் பேறு வாய்க்கப்பெற்றமை நினைந்து 'செய்தவம் பயந்த வீரர்' என அவ்விருவரையும் கூறினர். திரண் மரம் ஏழும் தீய எய்தவன் என்றது இராமனை. இப் பெயரால் இராமனைக் குறித்தது, வீடணன் ஏழு பிறவியினும் செய்த பாவங்கள் திரண்டிருப்பினும் அவற்றையெல்லாம் ஒரு திருவருள் நோக்க மாத்திரையால் தீர்க்க வல்லவன் என்ற குறிப்புத் தோற்றுவித்தற்கு என்க. சூழல் - இடம். வீரர் இருவரும் சென்றார் என இயையும். எய்தச் செல்லுதல் - நெருங்கச் செல்லுதல். (129)

வீடணன் இராமனைக் காணுதல் 6621-

6621. மார்க்கடஞ் சூழ்ந்த வைப்பி
னிளையவன் மருங்கு காப்ப
நாற்கட லுடுத்த பாரி
னாயகன் புதல்வ னாமப்
பாற்கடல் சுற்ற விற்கை
வடவரை பாங்கு நிற்பக்
கார்க்கடல் கமலம் பூத்த
தெனப்பொலி வானைக் கண்டான்.

மார்க்கடம் சூழ்ந்த வைப்பின்
இளையவன் மருங்கு காப்ப
நாற்கடல் உடுத்த பாரின்
நாயகன் புதல்வன் நாமப்
பாற்கடல் சுற்ற விற்கை
வடவரை பாங்கு நிற்பக்
கார்க்கடல் கமலம் பூத்தது
எனப் பொலிவானைக் கண்டான்.

பொ :—வானரங்கள் சூழ்ந்துள்ள இடத்தில் இளையவனாகிய இலக்குவன் பக்கத்தில் நின்று காவல் புரிய, நாலு கடல்களால் சூழப்பட்ட நிலவுலகிற்குத் தலைவனாகிய தயரதன் புதல்வனாகிய இராமபிரான், புகழ்பெற்ற பாற்கடல் தன்னைச் சூழ்ந்து விளங்க, வில்லையேந்திய மேருமலை பக்கத்தில் நிற்கத் தாமரை மலர்கள் மலரப்பெற்ற கரிய கடல் போலப் பொலிகின்றவனை (வீடணன்) கண்டான்.

கு :—இராமனை அடைந்த இருவருள் சுக்கிரீவன் அவனை முன்னமே கண்டு பழகியவனாகலின், இங்குக் கண்டவன் என்றது வீடணனையே என்பது புலனாம். மர்க்கடம் - வானரம். இங்கு எதுகை நோக்கி நீட்டல் விகாரம் பெற்று மார்க்கடம் என ஆயிற்று. மார்க்கடஞ் சூழ்ந்துள்ள நிலை, பாற்கடல் சுற்றியுள்ளது போன்றது; வில்லேந்திய இலக்குவன் மருங்கு காத்து நிற்கும் நிலை, விற்கை வடவரை பாங்கு நிற்பது போன்றது ; தாமரை மலர்போன்ற முகம், கண் கை கால் முதலிய உறுப்புக்களோடு கரியநிறமுடைய இராமன் இருப்பது, கமலம் பூத்ததாகிய கார்க்கடல் போன்றுள்ளது என உவமையை விரித்துக் கொள்க. புதல்வன் பொலிவானைக் கண்டான் என இயையும். இது பழைய நடை. "யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை வலிதிற்போய்க் கட்டிலெய்தினானைக் குறுங் கோழியூர்கிழார் பாடியது (புறநானூறு - 17) என்ற அடிக் குறிப்பைக் காண்க. பொலிவானாகிய நாயகன் புதல்வனை என இக்கால நடையில் மாற்றலும் ஆம். நாமம் - புகழ். வடவரை - மேருமலை; பொன்னிறமுடைய இலக்குவனுக்கு உவமை. இளையவன் என்று உவமேயத்தில் அடையின்றிச் சொல்லி, உவமையில் விற்கை வட வரை என்ற அடைகொடுத்தது, ஒன்று குறை இரட்டையுவமை என்பர். விற்கை வடவரை என்றது இல்பொருளுவமை; வில் லேந்திய கையையுடைய வடவரை இன்மையின் என்க. "கருமுகிற் றாமரைக் காடு பூத்துநீ டிருசுட ரிருபுறத்தேந்தியேடவிழ் திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல் வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்" (பால - 192) என்பது இங்கு ஒப்புநோக்கத் தகும். (130)

6622. அள்ளிமீ துலகை வீசு
மரிக்குலச் சேனை நாப்பண்
தெள்ளுதண் டிரையிற் றாகிப்
பிறிதொரு திறனுஞ் சாரா
வெள்ளிவெண் கடலின் மேலுள்
விண்ணவர் தொழுது வேண்டப்
பள்ளிதீர்ந் திருந்தா னென்னப்
பொலிதரு பண்பினானை.

அள்ளி மீது உலகை வீசும்
அரிக் குலச் சேனை நாப்பண்,
தெள்ளுதண் திரையிற்று ஆகிப்
பிறிது ஒரு திறனும் சாரா

வெள்ளி வெண் கடலில் மேல் நாள்
விண்ணவர் தொழுது வேண்டப்
பள்ளி தீர்ந்து இருந்தான் என்னப்
பொலிதரு பண்பினானை;

பொ :—இந்நிலவுலகத்தைக் கையால் அள்ளி விண்மேல் வீசும் ஆற்றலுடைய வானர இனத்தின் சேனைக்கு நடுவில் - தெளிவான குளிர்ந்த அலைகளையுடையதாகி(ப் பாலின் தன்மையன்றி) வேறு ஒரு தன்மையும் சேராத மிக்க வெண்மையுடைய பாற்கடலில், முற் காலத்தில் தேவர்கள் தன்னைத் தொழுது, (அரக்கரை அழித்துத் தம்மைக் காக்குமாறு) வேண்டத் தன் நாகணையில் படுத்திருத்தலை விடுத்து வீற்றிருந்த திருமாலைப்போல விளங்குகின்ற தன்மை யுடையவனை;—

கு :—சேனை நாப்பண் பொலிதரு பண்பினானை என இயையும். பண்பினானைக் கண்டான் என மேலைச் செய்யுளோடு இயைக்க. பொலிவானை, பண்பினானை, வயங்குவானை, தோளினானை, சென்னி யானை, வீரனை என்பன ஒருபொருள்மேல் வந்த பல்பெயர்கள் இரண் டனுருபு ஏற்று நின்றவை, 'கண்டான்' என்ற ஒருவினை கொண்டு முடிந்தன. இனிப் பண்பினானை, வயங்குவானை, தோளினானை, சென்னியானை. வீரனை நோக்கி என நூற்று முப்பத்தைந்தாம் பாட லோடு இயைத்தலும் ஆம். வெண்ணிறக் குரங்கு சேனை நடுவில் வீற்றிருக்கும் இராமனுக்குப் பாற்கடலில் பள்ளி கொள்ளாது வீற்றி ருந்த திருமாலின் நிலை உவமை. பள்ளி தீர்ந்திருத்தற்குக் காரணம் கூறுவாராய் 'விண்ணவர் தொழுது வேண்டப் பள்ளி தீர்ந்திருந்தா னென்ன' என்றார். பாற்கடலில் இருந்த வியூப நிலையை வானர சேனை நடுவில் வீற்றிருந்த இராமனின் விபவ நிலைக்கு உவமையாக் கியவாறு. பாற்கடலில் திருமால் பள்ளிகொள்ளாது வீற்றிருந்தது தேவர்கட்கு அபயம் நல்குதற்கேயாதலின், வீடணனுக்கு அபயம் நல்க வீற்றிருக்கும் இராமனுக்கு அத்திருமால் வீற்றிருந்த நிலையை உவமை கூறியது பொருத்தமிக்கதாதல் காணலாம். வானர சேனைக்குப் பாற்கடல் நிறத்தாலும் பரப்பாலும் உவமையாயிற்று. வானரங்களின் ஆற்றல் தோன்ற 'அள்ளி மீதுலகை வீசும் அரிக் குலம்' என்றார். (131)

6623. கோணுதற் கமைந்த கோலப்
புருவம்போற் றிரையுங் கூடப்
பூணுதற் கினிய முத்தின்
பொலிமணல் பரந்த வைப்பின்

காணுதற் கரிய நீள
வெண்மையிற் கருமை காட்டி
வாணுதற் சீதை கண்ணின்
மணியென வயங்கு வானை.

கோணுதற்கு அமைந்த கோலப்
புருவம் போல் திரையுங் கூடப்,
பூணுதற்கு இனிய முத்தின்
பொலி மணல் பரந்த வைப்பின்
காணுதற்கு அரிய நீள
வெண்மையில் கருமை காட்டி,
வாணுதல் சீதை கண்ணின்
மணி என வயங்கு வானை.

பொ :—வளைதற்கு உரியதாய் அமைந்த சீதையின் அழகிய புருவத்தைப் போலக் கடல் அலைகள் வளைந்து பொருந்த - பூண்டு கொள்ளுதற்கு இனிய முத்துக்களைப் போல விளங்குகின்ற மணல் பரவியுள்ள கடற்கரையில், எல்லை காண்பதற்கரிய நீளமுடைய வெண்ணிறத் தோற்றத்திற்கு இடையில் (இராமன் தன்) கருநிறத்தைக் காட்டிக் கொண்டிருப்பதால்,-ஒளிவாய்ந்த நெற்றியையுடைய சீதையினது கண்ணின் கருமணி என்று சொல்லுமாறு விளங்குகின்றவனை;

கு :—புருவம் போல் திரையுங் கூட, வெண்மையில் கருமை காட்டிக் கண்ணின் மணி என வயங்குவானை என இயையும். கடல் அலைகள் வளைந்து வீசும் தோற்றம் சீதையின் வளைந்த புருவம் போன்றது; கடற்கரையில் வெண்மணற் பரப்பு சீதையின் வெள் விழி போன்றது ; அவ்வெண்மணற் பரப்புக்கிடையில் கரிய நிறத்தையுடைய இராமன் அமர்ந்திருப்பது, சீதையின் வெள் விழிக்கு நடுவில் விளங்கும் கருமணி போன்றது என உவமையை விரித்துக் கொள்க, கடற்கரையில் உள்ள மணலுக்கு முத்துக்கள் உவமை. முத்தினையுடைய மணல் எனலும் ஆம். காணுதற்கரிய நீள வெண்மை என்றது, எல்லை காண்பதற்கு அரிதாம்படி மிக நீண்டு தோன்றும் வெண்மைத் தோற்றத்தை. கருங்கடலின் வளைந்த அலைகளின் தோற்றத்தையும், அவ்வலைகளைச் சார்ந்துள்ள வெண்மணற்பரப்பின் தோற்றத்தையும் அவ்வெண்மணற்பரப்புக் கிடையில் கரிய செம்மல் வீற்றிருக்கும் தோற்றத்தையும் சேர்த்துப் பார்க்கும்போது ஒரு கண்ணின் அமைப்புப் போலத் தோன்றுதல் பற்றி இங்ஙனம் உவமித்தவாறு. அவ்வாறு உவமிக்கின்றவர் பொது வகையால் கண் எனக் கூறாது, சீதை கண்ணின் மணியென வயங்குவான் என்றது,

இராமன் சீதைக்குக் கண்மணி யனையான் என்ற உண்மையையும் புலப்படுத்த வேண்டியேயாம். இதனால், இராமனைப் பிரிந்த சீதை கருமணி பிரிந்த கண்போலச் செயலற்றுக் கிடக்கின்றாள் என்ற குறிப்பும் புலப்படும். "கண்மணி யனையாற்குக் காட்டுக" (சிலப் - 13-75) என மாதவி கோவலனைக் குறித்திருத்தல் இங்கு நினைவு கூரத்தகும். காட்டி என்பது காரணப் பொருளில் வந்த வினையெச்சம். (132)

6624. படர்மழை சுமந்த காலைப்
பருவவா னமரர் கோமான்
அடர்சிலை துறந்த தென்ன
வாரந்தீர் மார்பி னானைக்
கடல்கடை மத்துத் தாம்பு
கழற்றிய தென்னக் காசின்
சுடரொளி வலயந் தீர்ந்த
சுந்தரத் தோளி னானை.

படர்மழை சுமந்த காலைப்
பருவ வான், அமரர் கோமான்
அடர்சிலை துறந்தது என்ன
ஆரம்தீர் மார்பி னானைக்
கடல் கடை மத்துத் தாம்பு
கழற்றியது என்னக், காசின்
சுடர் ஒளி வலயம் தீர்ந்த
சுந்தரத் தோளி னானை ;

பொ :—கார்ப்பருவத்து மேகம் பரவிய மழை நீரைச் சுமந்துள்ள போது, இந்திரனுடைய (பல வண்ணங்கள்) நெருங்கியுள்ள இந்திர வில்லைத் தாங்காததுபோல, நவமணிகள் பதித்த மணிமாலையை அணியாத மார்பினையுடையவனை;—பாற்கடலைக்கடைந்த மந்தரமலையாகிய மத்துப் பாம்பாகிய தாம்பு கழற்றப் பெற்றதுபோல, மணிகள் இழைத்த பேரொளியுடைய வாகுவலயம் நீங்கிய அழகிய தோள்களையுடையவனை;

கு :—இராமன் மணியாரம் அணியாத மார்பினையும் வாகுவலயம் அணியாத தோள்களையும் உடையவனாக இருந்தான் என்பதை உவமைகூறி விளக்கியவாறு. இராமன் மார்பில் ஆரம் அணிந்திருந்த நிலையை: "தேனுடை மலர்மகள் திளைக்கு மார்பினில், தானிடை

விளங்கிய தகையினுரைந்தான், மின்னொடு சுடர்விட விளங்கு மேகத்து, வானிடை வில்லினில் வயங்கித் தோன்றவே" (பால - கடிமண - 59) எனவும், வாகுவலயம் அணிந்த நிலையை: "சுந்தரத் தோளணி வலயம் தொல்லைநாள், மந்தரஞ் சுற்றிய வரவை மானுமே" (கடிமண - 56) எனவும் உவமை கூறியதை நினைந்து, அவையணியாத நிலைக்கு இங்ஙனம் உவமை கூறியது பொருத்தமாதல் காணலாம். கரிய மேனியனாகிய இராமன் மார்பில் மணியாரம் அணியாமைக்குப் பருவவான் சிலை துறந்த நிலை உவமை. நீர் சுமந்த மேகம் விண் முழுமையும் மறைத்துக்கொண்டு பரவியபோது சூரியன் ஒளி சிறிதும் தோன்றாது மறைதலின் வானவில் தோன்றாமை தெளிவு; என்னை? கரிய மேகத்தில் சூரியன் ஒளி படுவதாலேயே வானவில் தோன்றுதலின் என்க. வானவில்லை இந்திர தனுசு என்னும் மரபு தோன்ற அமரர் கோமான் அடர்சிலை என்றார். அமரர் கோமான் - தேவேந்திரன். ஏழு வண்ணங்கள் வானவில்லில் அடர்ந்து தோன்றுதல் பற்றி 'அடர்சிலை' என்றார். வானவில் போன்ற ஆரம் என்றதால் பல வண்ணமுடைய நவமணி மாலையே ஆரம் எனப் பட்டமை புலனாம். ஆரமும் வலயமும் அணியாமை கூறியது, இராமன் அரசு துறந்தமை புலப்படுத்தவேயாம். வலயம் இராமன் தோளால் வனப்புற்றவேயன்றி வலயத்தால் அவன் தோள்கள் அழகு பெறவில்லை என்பது புலப்படுத்த 'வலயந்தீர்ந்த சுந்தரத் தோளினானை' என்றார். வலயம் தீர்ந்தமையால் தோள்களின் சுந்தரம் சிறிதும் குறையவில்லை என்றவாறு. மண்ணவர்க்கு மழைப் பயன் தரும் பருவவான் போலவும் விண்ணவர்க்கு அமிழ்தாகிய பயன் கொடுக்கும் மந்தரமலை போலவும் இராமன் வீடணனுக்கு அடைக்கலமாகிய பயன் தரும் நிலையில் இருக்கின்றான் என்ற குறிப்பும் இவ்வுவமையால் புலப்படுத்தியுள்ளமை நோக்குக. (133)

6625. கற்றைவெண் ணிலவு நீக்கிக்
கருணையா மமிழ்தங் காலும்
முற்றுறு கலையிற் றூய
முழுமதி முகத்தி னானைப்
பெற்றவ னளித்த மோலி
யிளையவன் பெறத்தான் பெற்ற
சிற்றவை பணித்த மோலி
பொலிகின்ற சென்னி யானை.

கற்றைவெண் நிலவு நீக்கிக்
கருணை ஆம் அமிழ்தம் காலும்
முற்றுறு கலையிற்று ஆய
முழுமதி முகத்தினானை;
பெற்றவன் அளித்த மோலி
இளையவன் பெறத், தான் பெற்ற
சிற்றவை பணித்த மோலி
பொலிகின்ற சென்னியானை;

பொ:—திரட்சியாகிய வெண்ணிலவு வீசுவதை நீக்கிவிட்டுக் கருணையாகிய அமிழ்தத்தைச் சொரிகின்ற நிறைவுபெற்ற கலைகளையுடையதாய நிறைமதி போன்ற முகத்தையுடையவனை—தன்னைப் பெற்ற தந்தையாகிய தயரதன் தனக்குத் தந்த அரச முடியைத் தனக்கு இளையவனாகிய பரதன் பெறவிட்டுத் தான் பெற்ற-தன் சிறிய தாயாகிய கைகேயி கட்டளையாகக் கூறிய சடைமுடி விளங்குகின்ற தலையையுடையவனை,

கு:—இராமன் முகத்திற்கு முழுமதியை உவமைகூற வந்தவர், மதி, வெண்ணிலவு சொரிவது போல இராமன் முகம் வெண்ணிலவைச் சொரியாமையும், இராமன் முகம் கருணையைச் சொரிவது போல, மதி கருணையைச் சொரியாமையும் நினைந்து இல்பொருள் உவமையாக, 'வெண்ணிலவு நீக்கிக் கருணையாம் அமிழ்தம் காலும் முழுமதி முகத்தினானை' என்றார். கருணையாம் அமிழ்தம் என்பது உருவகம். "கருணையங் கோயிலுளிருந்த கண்ணனை" (50) என்றார் முன்னும். பதினாறு கலைகளும் நிறைந்த சந்திரன் என்பார், 'முற்றுறு கலையிற்றாய முழுமதி' என்றார். முற்றுதல் - நிறைதல். கலையிற்று - கலைகளையுடையது; குறிப்புமுற்று. தான்பெற்ற மோலி சிற்றவை பணித்த மோலி எனத் தனித்தனி இயையும். சிற்றவை பணித்த மோலி என்றது சடைமுடியை. பணித்தல் - கட்டளையாகச் சொல்லுதல். "ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீ போய்த் தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற்கொண்டு பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத்துறைகளாடி, யேழிரண்டாண்டின் வாவென்றியம்பின னரச னென்றாள்" (அயோத்தி-கைகேயி சூழ்வினை-111) என்றது நினைக. இராமன் தனக்கே யுரிமை யுடைய மணி முடியைத் தம்பிக்கு அளித்தவன் ஆதலின், இராவணனை வென்ற பின் இலங்கை யரசினைத் தான் கொள்ளாது அவ்விராவணன் தம்பியாகிய வீடணனுக்கே கொடுக்கும் துறவுள்ளமுடைமை பின்னிரண்டடிகளால் குறிப்பிட்டவாறு. இராமன், முழுமதிபோன்று விளங்கிக் கருணை பொழியும் முகமும், சடைமுடி தாங்கிய தலையும், உடையனாக இருந்தான் என்றவாறு.
(134)

6626. வீரனை நோக்கி யங்கம்
மென்மயிர் சிலிர்ப்பக் கண்ணீர்
வாரநெஞ் சுருகிச் செங்க
ணஞ்சன மலையன் றாகில்
கார்முகில் கமலம் பூத்த
தாமிவன் கண்ணன் கொல்லாம்
ஆரருள் சுரக்கு நீதி
யறநிறங் கரிதோ வென்றான்.

வீரனை—நோக்கி அங்கம்
மென் மயிர் சிலிர்ப்பக் கண்ணீர்
வார, நெஞ்சு உருகி, "செங்கண்
அஞ்சனமலை! அன்று ஆகின்
கார்முகில் கமலம் பூத்தது ஆம்;
இவன் கண்ணன் கொல்லாம்;
ஆர் அருள் சுரக்கும் நீதி
அறம் நிறம் கரிதோ?" என்றான்.

பொ :—வீரத்திற் சிறந்த இராமனை நோக்கி, உடம்பு மெல்லிய மயிர்க் கூச்செறியக் கண்கள் நீர்சொரிய உள்ளம் உருகி, (வீடணன்) இவன், சிவந்த கண்களையுடைய அஞ்சனமலை போல்வன்; அது அன்றானால், 'தாமரை மலர்கள் பூக்கப் பெற்றதாகிய கரிய மேகம் போல்வனாக உள்ளான்' இத்தன்மையுடைய இவன் திருமால் தானோ? நிறைந்த அருளைச் சுரக்கும் தன்மையுடைய அறக் கடவுளின் நிறம் கரிதுதானோ? என்று வியந்து கூறினான்.

கு :—"கார்க்கடல் கமலம்பூத்த தெனப் பொலிவானைக் கண்டான்" என (130) முன் கூறியுள்ளமையால் இங்கு, 'வீரனை நோக்கி' என அனுவதிக்கலானார். கண் முதலிய உறுப்புகள் சிவந்திருக்கக் கரிய மேனியுடன் இராமன் தோன்றுவதால் அவன் தோற்றத்திற்குச் செங்கண் அஞ்சனமலையும் கமலம் பூத்ததாகிய கார் முகிலுமே உவமையாதல் நினைந்து, இவன் செங்கண் அஞ்சன மலையாம்; அன்றாகில், கார்முகில் கமலம் பூத்ததாம்' என்றான். ஆம் என்பது முன்னும் இயையும். ஆகும் என்பது இடை குறைந்து நின்ற ஆம் என்னும் ஆக்கச் சொல் உவமை குறித்து நின்றது; "ஆள்வாரிலி மாடாவேனோ" (திருவாசகம்-கோயில் மூத்த திருப் பதிகம்) என்புழிப்போல. திருமால் கார்முகில் கமலம் பூத்தாற் போன்ற தோற்றமுடைமையை வீடணன் முன்னரே நூலளவையால் அறிந்தவனாகலின் "'கார்முகில் கமலம் பூத்ததாமிவன் கண்ணன்

கொல்லாம்" என்பானுயினன். கருமுகிற்றாமரைக் காடுபூத்து நீடிரு சுட ரிருபுறத் தேந்தி யேடவிழ்" (பால-திருவவதாரம்) எனத் திருமாலின் தோற்றம் கூறப்பட்டிருத்தல் நினைக. நீதி - தன்மை. பாவம் கரிதெனவும் புண்ணியம் வெள்ளிது எனவும் கூறுதல் நூல் மரபு ஆகலின், அறவடிவாக இருக்கின்ற இராமன், அம்முறைக்கு மாருகக் கரிய நிறத்தனாய் இருத்தல் கண்டு, வியந்து 'அறம் நிறம் கரிதோ?' என்று கூறலானன். ஆர்அருள் - நிறைந்த அருள்.

(135)

6627. மின்மினி யொளியின் மாயும்
பிறவியை வேரின் வாங்கச்
செம்மணி மகுட நீக்கித்
திருவடி புனைந்த செல்வன்
தன்முனார் கமலத் தண்ண
ருதையார் சரணந் தாழ
என்முனா ரெனக்குச் செய்த
வுதவியென் றேம்ப லுற்றான்.

மின்மினி ஒளியின் மாயும்
பிறவியை வேரின் வாங்கச்,
செம்மணி மகுடம் நீக்கித்,
திருவடி புனைந்த செல்வன்
தன்முனார், கமலத்து அண்ணல்
தாதையார், சரணம் தாழ,
என்முனார் எனக்குச் செய்த
உதவி என்று ஏம்பல் உற்றான்.

பொ :—மின்மினிப் பூச்சியின் ஒளிபோல விரைந்து அழியும் இயல்பினதாகிய என்பிறவியை யான் அடியோடு ஒழிக்கும்படி, சிவந்த மாணிக்கங்கள் பதிக்கப்பெற்ற முடி தனக்கு கிடைத்திருக்கவும் அதனை வேண்டாமென்று நீக்கிவிட்டுத் திருவடி நிலைகளையே முடியாகப் புனைந்துகொண்ட செல்வனாகிய பரதனுடைய தமையனாரும், தாமரை மலரில் இருக்கின்ற பிரமனுடைய தந்தையாருமாகிய இராமனுடைய திருவடிகளில் வணங்குமாறு என் அண்ணனாகிய இராவணன் எனக்குச் செய்த உதவிதான் என்னே! என்று மகிழ்ச்சியடைந்தான்.

கு :—இராவணன் தன்னை வெறுத்துத் துரத்திய செயலையே வீடணன் தனக்குச் செய்த பேருதவியாக நினைந்து மகிழ்கின்றான். பிறவியை வேரின் வாங்க வேண்டின் இறைவன் அடிசேர்தல் வேண்டும்; இராவணன் தன்னைத் துரத்தியதால் இறைவனாகிய இராமனடியில் தாழ்ந்து தன் அரக்கப் பிறவியை வேரொடு களையும் வாய்ப்புக் கிடைத்தது என்றவாறு. 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்' (குறள்-10) என்பது இங்கு ஒப்பு நோக்கத்தகும். பிறவியை வேரின் வாங்குதற்குத் தாதையார் சரணந் தாழ்தல் காரணமாயிற்று; சரணம் தாழ்தற்கு இராவணன் வெறுத்துத் துரத்தியது காரணமாயிற்று என்க. இராவணன் "ஒழிசில புகலுதல் ஒல்லை நீங்குதி விழியெதிர் நிற்றியேல் விளிதி" எனத் துரத்தியதால் வீடணன் இராமனைச் சரணடைந்தான்; இராமனைச் சரணடைந்தமையால் பிறவியை வேரின் வாங்கும் பயன் கிட்டியது ஆதலின் "என்முனார் எனக்குச் செய்த உதவி என்னே" என வீடணன் மகிழ்வானான். "மைவாச நறுங் குழல் மாமலையாள் மணவாளன் மலர்க்கழல் வந்தடையும், இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக் கெதிர்செய்குறை என்கொல் எனத் தொழுவார்" (பெரியபு-திருநாவுக்கரசர்-73) என்பது இங்கு ஒப்பு நோக்கத்தகும். இராமன் என்ற பெயர் கூறாமல் 'திருவடி புனைந்த செல்வன் தம்முனார்', எனவும் 'கமலத்தண்ணல் தாதையார்' எனவும் வீடணன் கூறக் காரணமென்னை எனின்? தனக்குரியதாய செம்மணி மகுடத்தை விரும்பாது நீக்கிய பரதனுக்கு அண்ணன் ஆதலின் இராவணனை வென்ற பின்னர் இலங்கைக்குரிய அரசு முடியையும் விரும்பாது கொடுக்கும் துறவுள்ளமுடையவன் இராமன் என்பதும், தான் சரணடைவது தன்குல முதல்வனாகிய பிரமனுக்குத் தந்தையையே; பகைவனை யன்று என்பதும் புலப்படுத்த வேண்டியே யாம். 'நீயவன் முதற்குலம் இதற்கொருவன் நின்றாய்" (இராவண மந்திரம்-48) எனக் கும்பகருணன் இராவணனை நோக்கிக் கூறுவதாலும் "பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி" (சூர்ப்பணகைப்-39) எனச் சூர்ப்பணகை கூறுவதாலும் வீடணன் பிரமன் வழி வந்தவன் என்பது புலனாதல் காண்க.

மின்மினிப் பூச்சியின் ஒளி மிகச் சிறிய அளவினதாய் விரைவில் தோன்றி மறையும் இயல்பினதாகலின், விரைவில் தோன்றி மறையும் பிறவிக்கு உவமையாயிற்று. செம்மணி என்றது மாணிக்கத்தை. திருவடி என்றது இராமனின் திருவடி நிலைகளை (பாதுகையை). செம்மணி மகுடத்தைச் செல்வமாக நினையாமல் இராமன் திருவடி நிலைகளையே பரதன் செல்வமாக நினைத்தமை புலப்பட 'திருவடி புனைந்த செல்வன்' என அவனைக் குறிப்பிட்டவாறு. "தில்லைச் சிற்றம்பலமேய செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" (1-8-5-

தேவாரம்) என ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்திருத்தலும் இங்கு நினையலாம். வீடணன் பரதனை "செம்மணி மகுட நீக்கித் திருவடி புனைந்த செல்வன்" என்று குறிப்பிட்டமையால், அச் செல்வம் தனக்கும் வாய்க்க வேண்டும் என்னும் நினைவினன் என்பதை யறியலாம். "களவியல் அரக்கன் பின்னே தோன்றிய கடன்மை தீர இளையவற் கவித்தமோலி என்னையுங் கவித்தி" (141) என்று வீடணன் பின் வேண்டுதலும் காணலாம். 'உதவி என்னே' என ஒரு சொல் வருவிக்க. (136)

6628. பெருந்தவ மியற்றி னோர்க்கும்
பேர்வரும் பிறவி நோய்க்கு
மருந்தென நின்றான் தானே
வடிக்கணை தொடுத்துக் கொல்வான்
இருந்தன னென்ற போதென்
னியம்புவ தெல்லை தீர்ந்த
வருந்தவ முடைய ரம்மா
வரக்கரென் றகத்துட் கொண்டான்.

'பெருந்தவம் இயற்றினோர்க்கும்
பேர்வு அரும் பிறவி நோய்க்கு
மருந்து என நின்றான் தானே
வடிக்கணை தொடுத்துக் கொல்வான்
இருந்தனன்; என்றபோது என்
இயம்புவது? எல்லை தீர்ந்த
அருந்தவம் உடையர் அம்மா அரக்கர்!'
என்று அகத்துள் கொண்டான்.

பொ :—'பெரிய தவத்தைச் செய்தார்க்கும் போக்குதற்கு அரிய பிறவியாகிய நோய் தீர்தற்கு மருந்துபோல நின்றவனாகிய இராம பிரான், தானே கூரிய அம்புகளை எய்து (அரக்கரைக்) கொல்வதற்குச் சித்தனாக இருந்தான் என்றால், (அவ்வரக்கரின் பெருமையைப்பற்றி) என்ன சொல்வது? (இராமன் கையால் மாயும் பேறுபெற்றுள்ளமையால்) அவ் அரக்கர்கள் எல்லை இல்லாத அரிய தவத்தினை உடையவராக உள்ளனர்; என்னே வியப்பு!' என்று கருதினான்.

கு :—இராமன் தோற்றங் கண்டவுடன் அவன் பிறவியறுக்கும் கடவுளாதலை உணர்ந்த வீடணன், இத்தகைய கடவுள் கையால் மாயும்பேறு அரக்கர்க்குக் கிடைத்தமை நினைந்து வியந்தவாறு.

முன்னர், அரக்கர்களின் இம்மைச் செல்வமும் வாழ்வும் இராம பிரானால் சிதையப் போகின்றதே என்பது நினைந்து, "செய்யும் அருளிது வாயிற் கெட்டேன் பிழைப்பரோ அரக்கரானோர்" (125) என இரங்கியவன், இங்கு இராமன் அம்பால் இறந்து அரக்கர்களும் பிறப்பறுக்கப் போகின்றார்களே என அவர் மறுமைப் பயன் நினைந்து வியக்கின்றான். பிறவியை நோயாக உருவகஞ் செய்தமையின் பிறவி நீக்கும் இராமனை 'மருந்தென நின்றான்' என உவமித்தார். வடி - கூர்மை. அரக்கரின் பெருமை பேசற்கரிய தென்பான் என் இயம்புவது? என்றான். எல்லை தீர்ந்த தவம் என்பது வரம்பில் தவத்தை. அருந்தவம் என்றது செய்தற்கு அரிய தவம் என்றவாறு. அம்மா வியப்பிடைச் சொல். அகத்துட் கொள்ளுதல் - கருதுதல். (137)

6629. கரங்கண்மீச் சுமந்து செல்லுங்
கதிர்மணி முடியன் கல்லும்
மரங்களு முருக நோக்குங்
காதலன் கருணை வள்ளல்
இரங்கின னோக்குந் தோறு
மிருநிலத் திறைஞ்சு கின்றான்
வரங்களின் வாரி யன்ன
தாளிணை வந்து வீழ்ந்தான்.

கரங்கள் மீச் சுமந்து செல்லும்
கதிர்மணி முடியன், கல்லும்
மரங்களும் உருக நோக்கும்
காதலன், கருணை வள்ளல்
இரங்கினன் நோக்குந் தோறும்,
இருநிலத்து இறைஞ்சுகின்றான்;
வரங்களின் வாரி அன்ன
தாள் இணை வந்து வீழ்ந்தான்.

பொ :—கூப்பிய கைகளை மேலே சுமந்து செல்கின்ற ஒளிவீசும் மணிமுடியுடையவனாய், வலிய கற்களும் மரங்களுங்கூட உருகுமாறு பார்க்கின்ற அன்புடையவனாய், அருளையுடைய வள்ளலாகிய இராமன் மனம் இரங்கித் தன்னைப் பார்க்குந்தோறும் பெரிய பூமியில் வீழ்ந்து வணங்குகின்றவனாய் (வீடணன்) வரங்களின் வாயில் போன்ற அவ் இராமன் திருவடிகளில் வந்து வீழ்ந்தான்.

கு :—மணிமுடிமேல் கூப்பிய கையனாய் வீடணன் சென்றான் என்பது முதலடியின் கருத்து. கதிர் மணிமுடியன் வணங்கத்தக்க சிறப்புச் சடைமுடியனுக்கு உண்டு என்பது தோன்ற 'வீடணனைக் கதிர்மணி முடியன்' என்றார். வீடணனுடைய பத்தி ஆர்வத்தைப் புலப்படுத்தும் பார்வையைக் கண்டு திண்ணிய கல்லும் மரங்களுங் கூட உருகும் என்று அவன் பத்திச் சிறப்பைப் புலப்படுத்தியவாறு "குன்றுஞ் சுவருந்திண் கல்லும் புல்லுங் கண்டுருகப் பெண்கனி நின்றாள்" (பால. மிதிலைப் - 32) என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். கருணை வள்ளல் என்றது இராமனை. பகைவன் தம்பிக்கும் அடைக்கலம் கொடுக்கும் அருட் குணத்தையும் இலங்கையரசைக் கொள்வதற்கு முன் வீடணற்குக் கொடுக்கும் வள்ளல் தன்மையும் நினைந்து அப் பெயரால் கூறியவாறு. அடைக்கலம் புகும் வீடணன் நிலையை நினைந்து இராமன் உளம் உருகும் இயல்பு புலப்பட 'இரங்கினன் நோக்குந்தோறும்' என்றார். இராமன் பார்வை தன் பக்கம் திரும்பும் போதெல்லாம் வீடணன் தரையில் வீழ்ந்து வணங்கினான் என்க. இதனால், இராமன் தன்னை நோக்கிவரும் வீடணனைப் பன்முறை இரங்கி நோக்கினான் என்பதும் வீடணன் பலமுறை வீழ்ந்து வணங்கினான் என்பதும் பெற்றாம். இராமன்பால் வேண்டிய வரம் பெற விரும்புவோர் அவன் திருவடிகளை வணங்கிய அளவில் பெறல் உறுதி ஆகலின் அவன் தாளிணையை 'வரங்களின் வாரியன்ன தாளிணை' என்றார். வாரி - வாயில். வரம் பெறுதற்கு வாயிலாக உள்ள திருவடி என்க. 'நின்னிற் சிறந்த நின் தாளிணையவை' (பரிபாடல் - 4: 62) என்பதும், 'வீடளிக்குங்கால் நின்னினுஞ் சிறந்த நின் தாளிணையையுடையை' என்ற உரையும் இங்கு நினைக்கத் தகும். வேறு பற்றுக்கோடு இல்லாத நிலைமை புலப்பட வணங்கினான் என்பார் 'வந்து வீழ்ந்தான்' என்றார். பருந்தால் துரத்தப் பட்ட புறா சிபியின் அடிகளில் விழுந்ததுபோல வீடணன் வீழ்ந்தான் என்க. (138)

இராமன் வீடணனுக்கு இருக்கை அளித்தல்

6630. அழிந்தது பிறவி யென்னு
மகத்தியன் முகத்திற் காட்ட
வழிந்தகண் ணீரின் மண்ணின்
மார்புற வணங்கி னானைப்
பொழிந்ததோர் கருணை தன்னாற்
புல்லின னென்ன நோக்கி
எழுந்தினி திருத்தி யென்றா
மலர்க்கையா லிருக்கை யீந்தான்.

'அழிந்தது பிறவி' என்னும்
அகத்து இயல் முகத்தில் காட்ட,
வழிந்த கண்ணீரின் மண்ணின்
மார்பு உற வணங்கினானைப்
பொழிந்தது ஓர் கருணை தன்னால்,
புல்லினன் என்ன நோக்கி
'எழுந்து, இனிது இருத்தி' என்று,
மலர்க் கையால் இருக்கை ஈந்தான்.

பொ :—'தன் அரக்கப் பிறவி அழிந்தது' என்கின்ற மனத்தின் மகிழ்ச்சித்தன்மை முகத்தில் தோற்றுமாறு பெருகிவழிகின்ற கண்ணீரோடு தரையில் மார்பு பொருந்த வீழ்ந்து வணங்கின வீடணனை (இராமபிரான் தன் கரங்களில்) மிகுதியாகச் சொரிந்த கருணையினால் தழுவினன் என்னுமாறு அருட்பார்வை பார்த்து' 'எழுந்து இனிதாக இருப்பாயாக' என்று சொல்லிச் செந்தாமரை மலர்போன்ற தன் கையால் அவனுக்கு இருப்பிடத்தைக் கொடுத்தான்.

கு :—'பிறவி அழிந்தது' என்றது, வீடணனது அரக்கப் பிறவி அழிந்த நிலையை. இராமன் திருவடிகளிலே வீழ்ந்தவுடன் வீடணன் தன் அரக்கத்தன்மை அழிந்துவிட்டது என்ற மகிழ்ச்சியுடையனாக இருந்தான் என்றவாறு. "நல்லது சொல்லினீர் நாமும் வேறினி அல்லது செய்துமேல் அரக்கராதுமால், எல்லையில் பெருங்குணத் திராமன் றாளிணை புல்லுதும் புல்லியிப் பிறவி போக்குதும்" (20) என்று வீடணன் தன் அமைச்சர்க்குக் கூறியதும் "மின்மினி ஒளியின் மாயும் பிறவியை வேரின் வாங்க......தாதையார் சரணந்தாழ, என் முனார் எனக்குச் செய்த உதவி" (என்னே) என்று மகிழ்ந்ததும், "களவியல் அரக்கன் பின்னே தோன்றிய கடன்மைதீர, இளையவற் கவித்த மோலி என்னையுங் கவித்தி" (143) எனப் பின் இராமனை வேண்டுவதும், கும்பகருணன், "இராமன் என்பானைப் பற்றிப் பிறப் பெனும் புன்மை தீர்ந்தாய்" (கும்பகருணன் வதை - 133) என்று கூறியதும் இங்கு நினையலாம். 'அகத்தியல் முகத்திற்காட்ட' என்றது, "நெஞ்சங்கடுத்தது காட்டு முகம்" (குறள் - 706) என்பதை நினைப்பிக்கின்றது. காட்ட என்றது தோற்ற என்னும் பொருளது. இனி, அத்தும் இன்னும் தவிர்வழிச் சாரியை எனக் கொண்டு 'முகம் காட்ட' என்றலும் ஆம். கண்ணீரினோடு வணங்கி என ஒடுவருவிக்க. அட்டாங்க வணக்கம் செய்தமை புலப்படுத்த 'மண்ணில் மார்புற வணங்கி' என்றார். இராமன் வீடணனை உடம்பால் தழுவவில்லை ஆயினும் அவன்பால் பெருகிய கருணைநோக்கால் தழுவினான்

என்று தோன்றுமாறு பார்த்தான் என்க. "குன்றுபோன்றுள தோளினுன் சீதையைக் குறுகத், தன்றுணைக்கழல் வணங்கலும் கருணையாற்றழுவி" (யுத்த. மீட்சிப் - 121) எனத் தயரதன் சீதையைக் கருணையால் தழுவியதாகக் கூறியுள்ளமையும் காண்க. வீடணன் இருக்கவேண்டிய இருக்கையைக் கையால் காட்டினமை புலப்பட 'மலர்க்கையாலிருக்கை யீந்தான்' என்றார். (139)

இராமன் வீடணனுக்கு இலங்கையரசுரிமை யீதல்

6631. ஆழியா னவனை நோக்கி
யருள்சுரந் துவகை கூர
ஏழினோ டேழாய் நின்ற
வுலகுமென் பெயரு மெந்நாள்
வாழுநா ளன்று காறும்
வளையெயிற் றரக்கர் வைகும்
தாழ்கட லிலங்கைச் செல்வ
நின்னதே தந்தே னென்றான்.

ஆழியான் அவனை நோக்கி,
அருள் சுரந்து உவகை கூர,
"ஏழினோடு ஏழாய் நின்ற
உலகும் என் பெயரும் எந்நாள்
வாழும்நாள் அன்று காறும்,
வளைஎயிற்று அரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே தந்தேன்' என்றான்.

பொ:—இராமன் அவ் வீடணனை நோக்கி, அருள் மிக்கமையால் அவனுக்கு மகிழ்ச்சி மிகுமாறு, "பதினன்காக நின்ற இவ்வுலகங்களும் என் பெயரும் எவ்வளவு நாள் வாழுமோ அந்நாள் வரையில் வளைந்த கோரைப் பற்களையுடைய அரக்கர்கள் வாழ்கின்ற, ஆழமான கடல் நடுவில் உள்ள, இலங்கையின் அரசச் செல்வம் நின்னுடையதே; கொடுத்துவிட்டேன்" என்று கூறினன்.

கு:—'ஆழியான் என்றது, சக்கரப்படையுடைய திருமாலின் அமிசமான இராமனை. உலகுள்ள காலம் வரையில் இலங்கைச் செல்வம் நின்னதே எனக் கொடுத்தற்குரிய தகுதியுடைமைபுலப்பட அப் பெயரால் கூறியவாறு. 'உவகைகூர' என்றது இராமனுக்கும்

வீடணனுக்கும் பொதுவாய் நின்று பொருள் தந்தது. தந்த இராம னுக்கும் தரப்பெறும் வீடணனுக்கும் மகிழ்ச்சி மிகுதல் இயல்பு. ஆதாரமாய இவ்வுலகும் ஆதேயமாய இராமன் பெயரும் வாழுநாள் வரையில் வீடணன் இலங்கைக்கு அரசனாய் வீற்றிருக்கலாம் என்ற வாறு. இராமன் இலங்கைக்கரசனாய இராவணனை வெல்வதற்கு முன்னமே துணிவினால் "இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்" என்று கூறலானான். இத்தகைய நிகழ்ச்சியைத் தொல்காப்பியர் புறத்திணையியலில்: 'கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்' (தொல்-பொருள்-67) என்று துறை கூறுவர். 'இராமன் இலங்கை கொள் வதன்முன் வீடணற்குக் கொடுத்த துறையும் அது' என்ற நச்சினார்க் கினியர் குறிப்பும் நினையலாம். "ஒன்னா, ராரெயில் அவர்கட்டாகவும் நுமதெனப், பாண்கடனிறுக்கும் வள்ளியோய்" (புறநா-203) என் பதும் இங்கு ஒப்புநோக்கத்தகும். "வாலி விண்பெறவர சிளையவன் பெறக் கோலிய வரிசிலை வலியுங் கொற்றமும், சீலமு முணர்ந்து நிற் சேர்ந்து தெள்ளிதின், மேலர செய்துவான் விரும்பி மேயினான்" (90) என அனுமன் உணர்ந்து கூற, "காதல் அருத்தியும் அரசின் மேற்றே" (105) என இராமன் முன்னமே வீடணன் குறிப்பைத் தெளிந்திருந்தமையால் அவன் வந்து வணங்கியவுடன் வேறு யாதும் கூறாமல் 'இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்' என மொழிய லானான். இதனால் இராமனுடைய அரசியலறிவு நன்கு புலப்படும். (140)

6632. தீர்த்தன தருளை நோக்கிச்
 செய்ததோ சிறப்புப் பெற்றான்
கூர்த்தநல் லறத்தை நோக்கிக்
 குறித்ததோ யாது கொல்லோ
வார்த்தையஃ துரைத்த லோடுந்
 தனித்தனி வாழ்ந்தோ மென்னா
வார்த்தன வுலகி லுள்ள
 சராசர மனைத்து மம்மா.

தீர்த்தனது அருளை நோக்கிச்
 செய்ததோ? சிறப்புப் பெற்றான்
கூர்த்த நல் அறத்தை நோக்கிக்
 குறித்ததோ? யாது கொல்லோ?

வார்த்தை அஃது உரைத்த லோடும்
தனித்தனி "வாழ்ந்தோம்" என்று
ஆர்த்தன உலகில் உள்ள
சர அசரம் அனைத்தும் அம்மா.

பொ:—(இராமன்) அந்தச் சொல்லைச் சொன்னவுடன் உலகத்தில் உள்ள இயங்குவனவும் நிற்பனவுமாய உயிர்கள் எல்லாம் 'வாழ்ந்தோம்' என்று தனித்தனி ஆரவாரித்தன; அவ்வாறு ஆரவாரித்தது, தூயனாகிய இராமனது அருளின் பெருமை நோக்கிச் செய்ததோ? அல்லது அவனால் (இலங்கையரசன் என்று) சிறப்புப் பெற்ற வீடணனது மிக்க நல்லறத்தை நோக்கிச் செய்ததோ? யாதோ? (அறிந்திலம்)

கு:—சராசரம் அனைத்தும் 'வாழ்ந்தோம்' என்று ஆரவாரித்ததற்குக் காரணம் இவ்விரண்டில் யாதோ அறிந்திலம் என்றவாறு. கவிக்கூற்று. தான் தூயதாய்த் தன்னையடைந்தோரையும் தூயராக்கும் புண்ணிய தீர்த்தம் போல்பவன் இராமன் என்பார், அவனைத் 'தீர்த்தன்' என்ற பெயரால் குறிப்பிட்டார். அரக்கனாகிய வீடணனையும் தன்னைப் போலத் தூயவனாக்கிய நிலைமை நினைப்பித்தவாறு. தன் மனைவியைக் கவர்ந்த கள்வன் தம்பி என இகழாது அடைக்கலமாக ஏற்றுக்கொண்டு இலங்கையரசுரிமையைக் கொடுத்த இராமன் பேரருளைக் கண்டவுடன் இத்தகைய இராமனருள் நமக்கும் கிட்டுதல் அரிதன்று என்ற நம்பிக்கையால் சராசரங்கள் "வாழ்ந்தோம்" என்று ஆர்த்தலும் இயல்பே. இராமனால் இலங்கையரசுக் குரியனாக்கப் பெற்ற வீடணன் மிக்க நல்லறமுடையனாதல் நினைந்து இராவணன் ஆட்சியில் உற்ற அல்லல் நீங்கி 'இனி வாழ்வோம்' என்ற நம்பிக்கையால் அவை ஆரவாரித்தலும் இயல்பே. இவ்விரண்டும் அச் சராசரங்களின் ஆரவாரத்திற்குப் பொருத்தமான காரணமாக இருத்தல் பற்றி ஐய வாய்பாட்டால் 'யாது கொல்லோ' என்றார். என்றாரேனும் 'முற்கூறியதிற் பிற் கூறியது வலியுடைத்து' எனும் அளவை நூல் முறைப்படி, தீர்த்தனது அருளை நோக்கி ஆர்த்தன என்பதினும் சிறப்புப் பெற்றான் கூர்த்த நல்லறத்தை நோக்கி ஆரவாரித்தன என்பதே சிறப்பு என்பது கம்பர் கருத்தாகலாம். இராமன் இயல்பாகவே அருட்குணம் உடையனாகலின் அவனருள் வீடணன்பால் பயனளித்தது கண்டு சராசரங்கள் 'வாழ்ந்தோம்' என்று ஆரவாரித்தலினும் பிறப்பினால் அரக்கனாயிருந்தே அறத்தில் பற்றுடையனாக இருக்கும் வீடணனுக்கு அரசுரிமை வந்தமை நினைந்து 'வாழ்ந்தோம்' என உயிர்கள் ஆரவாரித்தலே பொருத்த முடையதாய்ச் சிறந்து காட்டுதலும் நினையலாம்.

(141)

வீடணனுக்கு முடிசூட்டுமாறு இலக்குவனை யேவுதல்

6633. உஞ்சன னடிய னேனென்
றூழ்முறை வணங்கி நின்ற
அஞ்சன மேனி யானை
யழகனு மருளி னோக்கித்
தஞ்சநற் றுணைவ னான
தவறிலாப் புகழான் றன்னைத்
துஞ்சலி னயனத் தைய
சூட்டுதி மகுட மென்றான்.

'உஞ்சனன் அடியனேன்' என்று
ஊழ்முறை வணங்கி நின்ற
அஞ்சன மேனி யானை
அழகனும் அருளின் நோக்கித்
'தஞ்ச நல் துணைவனான
தவறு இலாப் புகழான் தன்னைத்
துஞ்சல் இல் நயனத்து ஐய!
சூட்டுதி மகுடம்' என்றான்.

பொ :—(தன் சொல்லைக் கேட்டு) 'அடியேன் உய்ந்தேன்' என்று முறைப்படி தன்னை வணங்கி நின்ற மைபோன்ற கரிய மேனியையுடைய வீடணனை அழகனாகிய இராமனும் அருளொடு பார்த்தருளிவிட்டு (இலக்குவனை நோக்கி) தூங்குதல் இல்லாத கண்களையுடைய ஐய! நம்பால் தஞ்சம் அடைந்த நல்ல துணைவனாகிய குற்றம் இல்லாத புகழையுடைய வீடணனுக்கு (இலங்கை வேந்தனாக) முடி சூட்டுவாயாக' என்று பணித்தான்.

கு :—உய்ந்தனன் என்பது எதுகை நோக்கி 'உஞ்சனன்' என மருவியது; "உஞ்சிவர் போய்விடின் நாய்குகன் என்றெனை யோதாரோ" (குகப்-14) என்புழிப்போல. ஊழ்முறை, ஒருபொருட் பன்மொழி. அஞ்சன மேனியான் என்றது வீடணனை. அழகன் என்றது இராமனை. 'ஓவியத் தெழுத வொண்ணா வுருவத்தாய்' (வாலிவதைப்.78) என வாலியே புகழ்ந்துள்ளமை நினைக. வணங்கி நின்ற வீடணனை அருளால் நோக்கியது அவன் அரக்கத்தன்மை நீங்கி அமரத்தன்மை யெய்தற்பொருட்டாகும். தஞ்சம்-அடைக்கலம். அடைக்கலம் புக்கமையால் துணைவனானவன் வீடணன் என்பார், தஞ்ச நற்றுணைவன் ஆன......புகழான் என்றார். பிறப்புரிமையால் துணைவராயினவரினும் தஞ்சம் புகுந்தமையால் துணைவனான

வீடணன் சிறப்புடையன் என்பார் 'நற்றுணைவனை' என்று சிறப்பித்தார். அறத்தொடுபட்ட வாழ்க்கையனாய் வாழ்ந்ததோடு அறத்தை நிலைநிறுத்த வந்த தன்னை அடைக்கலம் புகுந்தமையால் வீடணன் வசை நீங்கிய இசையுடையனாயினான் என்பார், 'தவறிலாப் புகழான்' என்றார். பழித்தற்குரிய குற்றம் சிறிதும் இன்றிப் புகழத்தக்க குணங்களே நிறைந்தவன் என்றவாறு. இலங்கை அரசனாதற்குத் தகுதி மிகவுடைமை விளக்கியவாறு. தன்னைக் காக்கும் அன்பால் இலக்குவன் இமைப்பில்லாத நயனத்தனாய் இருத்தல் போலவே அடைக்கலப் புக்க தம்பியாகிய வீடணனும் தன்னைக் காக்கும் அன்புடையவனே என்ற குறிப்புத் தோன்ற இலக்குவனை 'துஞ்சலில் நயத்தைய' என விளித்தான். வீடணனை ஏற்றுக்கொள்ள உடன் படாது கூறிய சுக்கிரீவனையே அனுப்பி அவ் வீடணனை வரவேற்கச் செய்தது போலவே அவ்வீடணனை ஏற்றுக் கொள்வதில் உடன்பாடில்லாத இலக்குவனைக் கொண்டே அவனுக்கு முடிசூட்டச் செய்கின்ற இராமன் திறம்அளவிடற்கரியது. வீடணனை ஏற்றுக்கொள்ள இலக்குவன் உடன்படாமை இங்குக் கூறப்படா விடினும் சுக்கிரீவனோடு நட்புக் கொண்டு அவன் வேண்டு கோளின்படி வாலியைக் கொல்லும் கருத்தோடு இராமன் நின்ற போது "மாற்றானெனத் தம்முனைக் கொல்லிய வந்து நின்றான், வேற்றுக் கடிறத் திவன்றஞ்சமென் வீர" (வாலிவதைப்-33) எனக் கூறியுள்ளமையால் அச்சுக்கிரீவன் போன்ற வீடணனிடத்தும் அக் கருத்தே யுடையனாவான் என்பது தெளிவு. அக்கருத்துடையனாதல் உணர்ந்தே இலக்குவனை வீடணனுக்கு முடிசூட்டுமாறு கூறுகின்ற வன் "தஞ்ச நற்றுணைவனை தவறிலாப் புகழான்றன்னை" என வீடணனைப் பல அடைமொழிகளால் சிறப்பிக்கின்றான் என்க. (142)

வீடணன் இராமனுடைய பாதுகையாகிய மகுடமே சூட்ட வேண்டுதல்

6634. விளைவினை யறியும் வென்றி
வீடண னென்றும் வீயா
வளவறு பெருமைச் செல்வ
மளித்தனை யாயி னைய
களவிய லரக்கன் பின்னே
தோன்றிய கடன்மை தீர
விளையவற் கவித்த மோலி
யென்னையுங் கவித்தி யென்றான்.

விளைவினை அறியும் வென்றி வீடணன், என்றும் வீயா
அளவு அறு பெருமைச் செல்வம் அளித்தனை ஆயின் ஐய!
களவுஇயல் அரக்கன் பின்னே தோன்றிய கடன்மை தீர
இளையவற் கவித்த மோலி என்னையும் கவித்தி' என்றான்.

பொ :—பின் விளையப் போவதை முன்னரே அறிந்து நடக்கும் தன்மையில் வெற்றிகண்ட வீடணன் "ஐயனே! என்றும் அழியாத அளவற்ற பெருமையுடைய இலங்கையரசச் செல்வத்தை எனக்கு அளித்தாய் ஆனால், களவுத் தன்மையையே இயல்பாகவுடைய இராவணனாகிய அரக்கனுக்குப் பின்னே பிறந்த தொடர்பு தீரும்படி, இளையவனாகிய பரதனுக்குச் சூட்டிய பாதுகையாகிய மகுடத்தை எனக்கும் சூட்டுவாயாக" என்று வேண்டினான்.

கு :—இராமன் வாலியை வென்ற வீரனாகலின் இராவணனை வெல்வது தப்பாது என்ற எதிர்கால வுணர்வோடு வீடணன் அவ் இராமனை அடைக்கலம் அடைந்தமையால் இலங்கையரசாகிய பயனைப் பெற்றான் என்பார். 'விளைவினை யறியும் வென்றி வீடணன்' எனச் சிறப்பித்தார். "ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங் கருதி யிடத்தாற் செயின்" (குறள்-484) என்றாங்கே வீடணற்கு ஞாலங் கைகூடிற்று என்க. இனி, வென்றியின் பயனாகிய அரசு பெறு கின்றமை நினைந்து 'வென்றி வீடணன்' என்றார் எனலும் ஆம். "ஏழிரண்டேழாய் நின்ற வுலகும் என் பெயரும் எந்நாள் வாழும் நாள் அன்று காறும்......இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்" (140) என்று முன் இராமன் கூறியதை நினைந்து "வீயா அளவறு பெருமைச் செல்வம்" என இலங்கைச் செல்வத்தைச் சிறப்பித்த வாறு. வீயா-அழியாத; நீங்காத. வீயாச் செல்வம் அளவறு செல்வம். பெருமைச் செல்வம் எனத் தனித்தனி இயையும். பொருளற்ற வரையும் பொருளாகச் செய்யும் பெருமை செல்வத்திற்கு இருத்தல் கருதிப் பெருமைச் செல்வம் எனச் சிறப்பித்தான். சீதையைக் கவர்ந்த செயல் நினைந்து 'களவியல் அரக்கன்' என இராவணனைக் குறித்தவாறு. இராவணன் இயல்பு அவன் தம்பிக்கும் உரியதே என உலகம் கொள்ள நேரும் ஆகலின், அத்தொடர்பு நீக்கி நின் தம்பியாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பான் "அரக்கன்பின்னே தோன்றிய கடன்மை தீர இளையவற் கவித்த மோலி என்னையுங் கவித்தி" என வேண்டினான். இளையவன் என்றது பரதனை. அவற்குக் கவித்த மோலியாவது பாதுகை. "புன்னெறியாம் அமண் சமயத் தொடக்குண்டு போந்த வுடல் தன்னுடனே யுயிர் வாழத் தரியேன் நான் தரிப்பதனுக்கு என்னுடைய நாயக நின் இலச்சினை யிட்டருள்" (பெரியபு-திருநாவுக்-150) என்று ஆளுடையரசர் வேண்டுவதும் இங்கு நினையலாம். (143)

இராமன் வீடணனைத் தம்பியாக ஏற்றுக் கொள்ளுதல்

6635. குகனொடு மைவ ரானோ
முன்புபின் குன்று சூழ்வான்
மகனொடு மறுவ ரானோ
மெம்முழை யன்பின் வந்த
அகனமர் காத லைய
நின்னொடு மெழுவ ரானோம்
புகலருங் கானந் தந்து
புதல்வராற் பொலிந்தா னுந்தை.

'குகனொடும் ஐவர் ஆனோம் முன்பு; பின், குன்று சூழ்வான் மகனொடும், அறுவர் ஆனோம்; எம்முழை அன்பின் வந்த அகன் அமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனோம்; புகலருங் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

பொ:—எம்மிடத்து அன்பினால் வந்து அடைந்த, மனத்தில் நிலைபெற்ற முதிர்ந்த பத்தியையுடைய ஐயனே! முன்பு கங்கைக் கரையில் குகனொடு நட்புக்கொண்டு (நால்வராய நாங்கள்) ஐவராகப் பெருகினோம்; அதன் பின்பு (கிட்கிந்தையில்) மேருமலையைச் சுற்றி வருகின்ற சூரியனுடைய மகனாகிய சுக்கிரீவனோடு சேர்ந்து அறுவ ராகப் பெருகினோம்; (இன்று) நின்னொடு நட்புக்கொண்டு எழுவ ராகப் பெருகிவிட்டோம்; புகுதற்கரிய காட்டை இடமாக எனக்குத் தந்தமையால் நும் தந்தையாகிய தயரதன் புதல்வர்களால் நிறை வுடையவன் ஆனான்.

கு:—அன்பின் முதிர்ச்சி காதல் ஆதல்தோன்ற அன்பின் வந்த எனவும், 'அகனமர் காதலைய' எனவும் பிரித்துக் கூறியவாறு. வீடணன் இராமனை அடைக்கலம் அடைய வந்தபோது இருந்த அன்பு, அவ்விராமன் பார்வை பட்டவுடன் அகனமர் காதலாக முதிர்ந்தது என்பது விளக்கியவாறு. அனுமன் இராமனைக் கண்ட போது "என்பெனக் குருகுகின்றது இவர்கின்றது அளவில் காதல்; அன்பினுக்கு அவதியில்லை" என அன்பையும் காதலையும் தனித்தனி கூறியிருத்தல் காணலாம். இளையவற் கவித்தமோலி என்னையுங் கவித்தி' என்றது என்னையும் நும் தம்பியாக ஏற்றுக்கொள்க என்ற வேண்டுகோளாக இராமன் உணர்ந்து 'நின்னொடும் எழுவரானோம்' என்றான். கானத்தின் கடுமை புலப்பட 'புகலருங்கானம்' என்றான். "கல் நிறைந்து தீந்து கழையுடைந்து கால் சுழன்று, பின்னும் திரைவயிற்றுப் பேயே திரிந்துலவாக் கொன்னவிலும் வெங் கானம்" (பெரிய திருமடல்) எனத் திருமங்கையாழ்வார் அக்

கானத்தின் கடுமையைப் புலப்படுத்தியிருத்தல் காணலாம். கானந் தருங்கால் தயரதன் பிரிவாற்ருது வருந்திஞுயினும் பின்பு நன்மையே பெருகிற்று என்று மகிழ்ந்தவாறு. தம்பியாக ஏற்றுக் கொண்டமை உறுதிப்பட வேண்டித் தந்தை என்ஞது நுந்தை என வீடணனுக்குத் தயரதனை உரிமைத் தந்தையாக இராமன் கூறிய நயம் நினைத்தற்குரியது. இராவணன் இரக்கமில் அரக்கன் என்பது காட்டுவான்போல வீடணனனைத் தம்பியல்லன் எனத் துரத்தவும் இராமன் தன் அருளுடைமை காட்டி அரக்கன் என்றும் பாராது அவ் வீடணனைத் தம்பியாக ஏற்றுக்கொண்டமை புலப்படுத்திய வாறு. கடவுள், மேல் விழுந்து உயிர்களை அடிமை கொள்ளும் சிறப்பு இதனுல் அறியலாம். (144)

வீடணன் இராமனுடைய திருவடி நிலைகளைச் சூட்டிக் கொள்ளுதல்

6636. நடுவினிப் பகர்வ தென்னே
நாயக நாயி னேனை
உடனுதித் தவர்க ளோடு
மொருவனென் றுரையா நின்ருய்
அடிமையிற் சிறந்தே னென்ன
வயிர்ப்பொடு மச்ச நீங்கித்
தொடுகழற் செம்பொன் மௌலி
சென்னியிற் சூட்டிக் கொண்டான்

'நடு இனிப் பகர்வது என்னே?
நாயக! நாயினேனை
'உடன் உதித்தவர்களோடும்
ஒருவன்' என்று உரையா நின்ருய்,
அடிமையில் சிறந்தேன்' என்ஞ
அயிர்ப்பொடும் அச்சம் நீங்கித்
தொடுகழல் செம்பொன் மோலி
சென்னியில் சூட்டிக் கொண்டான்.

பொ:—(அதைக் கேட்ட வீடணன் இராமனை நோக்கி) தலைவனே! நாய் போன்ற கடையஞகிய என்னை 'உன் உடன் பிறந்தவர்களோடு ஒருவன்' என்று சொல்லுகின்ருய்; இடையே நான் இனிச் சொல்வது யாதுளது? நினக்கு அடிமைத்தொழில் செய்வதில் சிறப்புடையன் ஆனேன்' என்று கூறிக்கொண்டே முன்

பிருந்த ஐயமும் அச்சமும் நீங்கப் பெற்றவனாய் (இராமன் காலில்) அணிந்த பாதுகைகளாகிய செம்பொன் முடியைத் தலையில் தானே சூட்டிக்கொண்டான்.

கு :—தனது தகுதியின்மை புலப்படுத்த 'நாயினேனை' என்றார். எறிந்த வேல் மெய்யதா வால்குழைக்கும் இயல்பினது நாயாதலின், அந் நாய் போன்றவன் என வீடணன் தன்னைக் கூறித் தன் நன்றியுடைமையைப் புலப்படுத்தியவாறும் ஆயிற்று. நாயகனாகிய நீ வெகுண்டு தண்டித்த வழியும் அதுபற்றி வெருது பழைய நன்றியையே நினைந்து அன்பு காட்டுவேன் என்ற கருத்து இதனால் புலப்படுதல் காணலாம். இழிந்தவனாகிய என்னை உயர்ந்தவனாகிய உன்னுடைய தம்பிமாரோடு ஒருவனாக நீயே மதிக்கின்றபோது அதை அவ்வாறே யான் ஏற்றுக் கொள்வதன்றி இடையில் யான் ஒன்றும் தடைகூறப் போவதில்லை என்பான், 'நடுவினிப் பகர்வ தன்னே' என்றான். இராமனுக்குத் தான் தம்பி முறையினனாய் விட்டமையால் அவனுக்குச் சிறப்பாக அடித்தொண்டு செய்யும் வாய்ப்புக் கிடைத்தது என்பான் 'அடிமையிற் சிறந்தேன்' என்று கூறினான். அயிர்ப்பு - ஐயம். இராமன், அரக்கனாகிய என்னையும் அடைக்கலமாக ஏற்றருள்வானோ? ஏலாது விடுவானோ? என்று முன்பு வீடணன் கொண்டிருந்த ஐயமும், அவன் திருவடி நிலைகளைத் தீண்டின் என்ன நேருமோ என்ற அச்சமும், தன்னை அவன் தம்பியாக ஏற்றுக்கொண்டபின் இலவாயின ஆதலின், அவ்விராமன் திருவடி நிலைகளைத் தானே எடுத்துத் தலையில் சூட்டிக்கொள்ளலானான். தொடுகழல் - பாதுகை. கழல், செருப்பு என்ற பொருளில் "கழலிற் செந்தாமரையடிகள் புல்லி" (சீவக - 1648) என்புழி ஆளப் பட்டிருத்தல் காணலாம். பரதனும் இவ்வாறே செய்தமை: "அடித் தலமிரண்டையும் அழுத கண்ணினன், முடித்தல மிவையென முடியிற் சூடினன்" (கிளைகண்டுநீங்கு - 136) என்பதால் அறியலாம். (145)

யாவரும் மகிழ்தல் 6637-6638

6637. திருவடி முடியிற் சூடிச்
செங்கதி ருச்சி சேர்ந்த
அருவரை யென்ன நின்ற
வரக்கர்தம் மரசை நோக்கி
இருவரு முவகை கூர்ந்தார்
யாவரு மின்ப முற்றார்
பொருவரு மமரர் வாழ்த்திப்
பூமழை பொழிவ தானார்.

திருவடி முடியில் சூடிச், செங்கதிர் உச்சி சேர்ந்த
அரு வரை என்ன நின்ற அரக்கர்தம் அரசை நோக்கி,
இருவரும் உவகை கூர்ந்தார் ; யாவரும் இன்பம் உற்றார் ;
பொரு அரும் அமரர் வாழ்த்திப், பூமழை பொழிவதானார்.

பொ :—இராமபிரான் திருவடி நிலைகளைத் தலையில் சூடிக்கொண்டமையால் சிவந்த கதிர்களையுடைய சூரியனைத் தன் உச்சியில் சேரப் பெற்ற பெரிய மலைபோல நின்ற அரக்கர்களுக்கு அரசனை வீடணனைப் பார்த்து இராம இலக்குவராகிய இருவரும் மிக்க மகிழ்ச்சியடைந்தார்கள்; மற்றுமுள்ள யாவரும் மகிழ்ச்சியால் இன்புற்றார்கள்; ஒப்பற்ற தேவர்கள் வீடணனுக்கு வாழ்த்துக்கூறி மலர்மாரி சொரியலானார்கள்.

கு :—இராமன் திருவடிநிலைகள் தலையில் சூரியனைப்போல ஒளி வீசின ; அத் திருவடிநிலைகளைச் சூடிக்கொண்ட வீடணன் மலை போலக் காட்சியளித்தான் என்க. வீடணன் கரிய வண்ணத்தாலும் இராமனுக்குத் தம்பியாய், இலங்கையரசான மகிழ்ச்சியால் பூரித்த அவன் பெருந் தோற்றத்தாலும் பெரிய மலைபோல விளங்கினான் என்றவாறு. திருவடியாகிய முடியைச் சூடிக்கொண்ட உடனே வீடணன் இலங்கையிலுள்ள அரக்கர்களுக்கு அரசனாய் விட்டமை புலப்பட 'அரக்கர்தம் அரசை' என அவனைக் குறிப்பிட்டார். இருவர் என்றது இராம இலக்குவரை. யாவரும் என்றது அவ்விருவரல்லாத பிறரை. வீடணனின் அன்பையும் பணிவையும் நோக்கி இராம இலக்குவர் உவகை கூர்வாராயினர். அறத்தொடுபட்ட வாழ்க்கையனாகிய வீடணனுக்கு இராமன் திருவடி நிலைகளை முடியாகச் சூடிக்கொள்ளும் பேறு வாய்த்தது கண்டு மற்றவர் அனைவரும் இன்பம் அடைந்தார்கள். தேவர்கள் தம் கருத்து முற்றுப் பெறுதற்குத் தக்க துணை கிடைத்தது என்ற மகிழ்ச்சியால் வீடணனை 'நீடூழி வாழ்க' என வாழ்த்திக் கற்பகமலர் மழையைப் பொழியலானார்கள். 'முடியிற் சூடி' என்பதற்கு முடிபோலச் சூடி என்றும் பொருள் கூறலாம். இப்பொருளுக்கு இல் உவமையுருபு. (146)

6638. ஆர்த்தன பரவை யேழு
மவனியு மமரர் நாடும்
வார்த்தொழிற் புணருந் தெய்வ
மங்கல முரசுஞ் சங்கும்

தூர்த்தன கனக மாரி
சொரிந்தன நறுமென் சுண்ணம்
போர்த்தது வானத் தன்றங்
கெழுந்தது துழனிப் பொம்மல்.

ஆர்த்தன, பரவை ஏழும்;
அவனியும், அமரர் நாடும்,
வார்த் தொழில் புணரும்
தெய்வ மங்கல முரசும் சங்கும்;
தூர்த்தன கனக மாரி;
சொரிந்தன, நறுமென் சுண்ணம்;
போர்த்தது, வானத்து, அன்று, அங்கு,
எழுந்தது துழனிப் பொம்மல்.

பொ :—(வீடணன் இலங்கையரசனுய்த் திருவடி நிலேயாகிய முடியைச் சூடிக் கொண்டபோது) ஏழு கடல்களும், மண்ணுலகமும் விண்ணுலகமும், வாரால் கட்டிய தொழிற் சிறப்பு அமைந்த, தெய்வத்தன்மையும் மங்கலத் தன்மையும் அமைந்த முரசங்களும், சங்குகளும் ஆரவாரித்தன; பொன்நாணயங்களாலாகிய மழை நிரம்பின; நறுமணமுடைய மென்மையான சுண்ணப்பொடிகள் எங்கும் சொரியப் பெற்றன; அப்பொழுது அவ்விடத்தில் எழுந்ததாகிய ஆரவாரத்தின் மிகுதி விண் முழுதும் கவிந்து கொண்டது.

கு :—பரவை ஏழும் அவனியும் அமரர் நாடும் முரசும் சங்கும் ஆர்த்தன என இயையும். வார்த்தொழில் புணரும் முரசு, தெய்வ முரசு, மங்கல முரசு என முரசிற்கு அடையாக்குக. முரசில் கொற்றவை வீற்றிருத்தல் பற்றித் தெய்வ முரசு எனப்பட்டது; மங்கல நிகழ்ச்சிகட்கு மட்டும் முழங்கும் இயல்பினதாகலின் மங்கல முரசு எனப்பட்டது. வார், தோற்கயிறு. தெய்வத்தன்மையும் மங்கலத் தன்மையும் சங்கிற்கும் இயைக்கலாம். கனக மாரி என்றது, பொன் காசுகளே மழைபோல அள்ளி வீசுதலே. மகிழ்ச்சி மேலீட்டால் வானர சேனேயில் முரசும் சங்கும் முழங்கின; பொற்காசுகளும் பொற் சுண்ணங்களும் தூவப்பெற்றன என்க. துழனி - ஆரவாரம். பொம்மல் - மிகுதி. அன்று அங்கு எழுந்ததாகிய துழனிப் பொம்மல் வானத்துப் போர்த்தது என இயையும். மண்ணில் எழுந்த ஆரவாரம் விண்ணேயும் எட்டியது என்றவாறு. கடல்களும் உணர்வு உடையனபோல முன்னேயினும் மிக்கொலிப்பதுபோல் தோன்றியது என்பார், 'ஆர்த்தன பரவையேழும்' என்ருர். (147)

பிரமனும் அறமும் இடர் நீங்கி மகிழ்தல்

6639. மொழிந்தசொல் லமிழ்த மன்னா
டிறத்தினின் முறைமை நீங்கி
யிழிந்தவென் மரபு மின்றே
யுயர்ந்ததென் றிடரிற் றீர்ந்தான்
செழுந்தனி மலரோன் பின்னை
யிராவணன் றீமைச் செல்வம்
அழிந்ததென் றறனுந் தன்வா
யாவலங் கொட்டிற் றன்றே.

'மொழிந்த சொல் அமிழ்தம் அன்னாள்
திறத்தினின் முறைமை நீங்கி
இழிந்த என் மரபும் இன்றே உயர்ந்தது
என்று இடரில் தீர்ந்தான்,
செழுந் தனி மலரோன்; பின்னை,
'இராவணன் தீமைச் செல்வம்
அழிந்தது' என்று அறனும்,
தன்வாய் ஆவலம் கொட்டிற்று அன்றே.

பொ :—செழுமையான ஒப்பற்ற தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன், 'பேசும் சொற்களால் அமிழ்தம் போல்பவளாகிய சீதை காரணமாக (இராவணன் செய்த தீமையால்) பழைய முறைமையின் நின்றும் நீங்கி இழிவு அடைந்த என் மரபும் இப்பொழுதே (வீடணன் இராமனை அடைக்கலமடைந்து இலங்கையரசை யேற்றுக் கொண்டமையால்) உயர்ந்துவிட்டது என்று முன்னைத் துன்பத்தில் நின்றும் நீங்கி மகிழ்ந்தான்; பிறகு, தரும தேவதையும் 'இராவணனுடைய தீமையே பயந்த செல்வம் அழிந்துவிட்டது' என்று தன் வாயினால் ஆரவாரம் செய்தது.

கு :—அமிழ்தம் போன்ற சொற்களையுடையவள் என்பார் 'மொழிந்த சொல் அமிழ்தம் அன்னாள்' என்றார். சொல்லால் அமிழ்தனையாள் என்றது ஏதுவுவமையணி. திறம் - காரணம். இராவணன் சீதையை வஞ்சித்துக் கவர்ந்த முறையற்ற செயலால் தன் மரபு இழிவடைந்துவிட்டதே என்று கவன்ற பிரமன், இப்பொழுது வீடணன் இராமனை அடைக்கலமடைந்து இலங்கையரசைப் பெற்றுவிட்டமையால், இராவணன் வளைத்த செங்கோலை அறவழி நின்ற வீடணன் நிமிர்த்துவான் என்ற நம்பிக்கையுடையனாய், 'என் மரபும் இன்றே உயர்ந்தது' என முன்னைய இடர்

நீங்கப் பெற்றான் என்றவாறு. முறைமை நீங்கிய இராவணன் அழியவே அவனுலுளதாய தாழ்வும் அழியும் என்றபடி. தன்னை யுடையானுக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கவேண்டிய செல்வம், பிறர்க்குத் தீமை பயந்ததோடு இராவணனுக்கும் தீமையைப் பயந்த தாகலின் இராவணன் தீமைச் செல்வம் என்று இழித்துக் கூறப் பட்டது. ஆவலம் கொட்டுதல் - ஆரவாரித்தல். பிரமன் இடர் தீர்ந்தது போலவே அறமும் இடர் தீர்ந்து ஆரவாரித்தது என்க. இதுகாறும் புகமுடியாமல் அல்லலுற்ற அறம், இனி வீடணனின் துணைகொண்டு இலங்கையில் புகலாம் என மகிழ்ந்தது என்றவாறு. "அறம் புகாதிந்த வணிமதிட்கிடக்கை நின்றகத்தின்" (சுந்தர-ஊர்தேடு-23) என முன் கூறப்பட்டிருத்தல் காணலாம். இராவணன் பிரமனுக்குக் கொள் பேரனாதலின் அவ் இராவணன் மரபைப் பிரமன் 'என் மரபு' என்னலானான். (148)

வீடணனோடு பாசறையை வலம் வருமாறு இராமன் இலக்குவற்குப் பணித்தல்

6640. இன்னதோர் செவ்வித் தாக
விராமனு மிலங்கை வேந்தன்
தன்னெடுஞ் செல்வந் தானே
பெற்றமை பலருங் காணப்
பன்னெடுந் தானை சூழப்
பகலவன் சேயும் நீயும்
மன்னெடுங் குமர பாடி
வீட்டினை வலஞ் செய்கென்றான்.

இன்னது ஓர் செவ்வித்து ஆக
இராமனும், இலங்கை வேந்தன்
தன் நெடும் செல்வம் தானே
பெற்றமை பலரும் காணப்,
பல் நெடும் தானை சூழப்
பகலவன் சேயும் நீயும்
மன் நெடுங் குமர! பாடி
வீட்டினை வலஞ் செய்கென்றான்.

பொ :—இத்தன்மையதாகிய ஒரு நிலைமை நிகழும்போது, இராம னும், (இலக்குவனை நோக்கி) பெருமைமிக்க அரச குமார! இலங்கை வேந்தனாகிய இராவணனது பெரிய அரசச் செல்வத்தை வீடணனே

(பிறர்க்கு உரிமையின்றிப்) பெற்றுக் கொண்டதைப் பலரும் அறியுமாறு பலவாகிய பெரிய சேனை சூழ்ந்துவர அவ்வீடணனைச் சூரியன் மகனாகிய சுக்கிரீவனும் நீயும் படைகள் தங்கியுள்ள பாடிவீட்டினை வலம் செய்விப்பீராக' என்று கூறினான்.

கு :—இலங்கை வேந்தன் என்றது இராவணனை. அவன் நெடுஞ் செல்வமாவது இலங்கையை ஆளும் அரசச் செல்வம். வீடணன் தானே பெற்றமை என்க. ஏகாரம் பிரிநிலை. பிறர்க்கு உரிமையின்றித் தனக்கே யுரிமையுடையதாகப் பெற்றமை என்றவாறு. இனி, இலங்கை வேந்தன் என்றது வீடணனையே எனக்கொண்டு அறவழியில் ஒழுகும் தனக்கே யுரித்தாக வேண்டிய அரசச் செல்வத்தைத் தானே பெற்றுக் கொண்டான் எனப் பொருள் கூறலும் ஆம். அறம் உள்ள இடத்தில் அரசச் செல்வம் நிற்றலே தகுதியாதல் நினைந்து இராவணன் செல்வம் வீடணன் தன்னெடுஞ்செல்வம் எனப்பட்டது. அறத்தினைக் கொன்ற பாவிபால் அரசுரிமை இருத்தல் பொருத்தமின்று என்றவாறு. வீடணன் முடிசூடி நகர்வலம் வருதல் இராமன் ஆணையின்படி நடப்பதே எனப் படையிலுள்ளார் உணர வேண்டி வானர அரசனாகிய சுக்கிரீவனையும் தன் இளவரசனாகிய இலக்குவனையும் வலம் செய்விக்க இராமன் ஏவினான். மன்னனை வலஞ் செய்விக்க இலக்குவன் தக்கவனாதல் புலப்பட அவனை, மன்னெடுங்குமர! என விளித்தான். செய்க என்பதில் அகரம் தொகுத்தல். பிறவினைப் பொருளில் வந்தது. முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலையாதலின், 'பகலவன் சேயும் நீயும் வலஞ் செய்க' என்று ஏவினான். முடிசூடியபின் பட்டினப் பிரவேசம் நிகழும் மரபு புலப்படுத்தியவாறு. (149)

வீடணனைப் பாடி வீடாகிய நகர்வலம் செய்வித்தல்

6641. அந்தமில் குணத்தி னானை
யடியிணை முடியி னோடும்
சந்தன விமான மேற்றி
வானரத் தலைவர் தாங்க
இந்திரற் கரிய செல்வ
மெய்தினா னிவனென் றேத்தி
மந்தரத் தடந்தோள் வீரர்
வலஞ்செய்தார் தானை வைப்பை.

அந்தம் இல் குணத்தினனை
அடியிணை முடியினோடும்
சந்தன விமானம் ஏற்றி,
வானரத் தலைவர் தாங்க,
'இந்திரற்கு அரிய செல்வம்
எய்தினன் இவன் என்று ஏத்தி
மந்தரத் தடந்தோள் வீரர்
வலஞ் செய்தார் தானை வைப்பை.

பொ:—எல்லையில்லாத பெருங் குணத்தையுடையவனாகிய வீடணனை (அவன் சூட்டிக்கொண்ட) பாதுகைகளாகிய முடியினோடும் சந்தன மரத்தால் இயன்ற விமானத்தில் ஏற்றி அவ்விமானத்தை வானரத் தலைவர்கள் தாங்கிவர, 'இவ்வீடணன் இந்திரனுக்கும் பெறுதற்கரிய இலங்கை அரசச் செல்வத்தைப் பெற்றுவிட்டான்' என்று சொல்லிக் கொண்டாடி (அவ்வேந்தனை) மந்தரமலை போன்ற தோள்களையுடைய இலக்குவனும் சுக்கிரீவனும் தம் படைகள் தங்கியுள்ள பாசறையை வலம் செய்வித்தார்கள்.

கு:—வீடணன் குணநலங்கள் மிகப் பலவாதல் புலப்பட, அவனை 'அந்தமில் குணத்தினனை' என்றார். வெறுக்கத்தக்க அவன் பிறப்பு நோக்காது விரும்பத்தக்க அவன் குணச்சிறப்பையே நோக்குதல் வேண்டும் என்பது நினைப்பித்தவாறு. அடியிணை முடி என்றது உருவகம். இராமனது அடிநிலைகளாகிய முடி என்றவாறு. மரங்களுள் சந்தனமரம் மணத்தாலும் குணத்தாலும் சிறந்ததாகலின் அதனாலாகிய விமானத்தில் இலங்கை வேந்தனாகிய வீடணன் பெருமை தோன்ற ஏற்றினார்கள். அவ்விமானத்தை வானரத் தலைவர் தாங்கிச் சென்றதும் வீடணன் தகுதியை மிகுதிப்படுத்தவேயாம். மூவுலகும் ஆண்ட இராவணன் செல்வம் ஆதலின், அது 'இந்திரற்கு அரிய செல்வம்' எனப்பட்டது. பாடி வீட்டினை வலம் வருங்கால் இலங்கையரசை வீடணன் எய்தினமை வானரசேனைக்குப் புலப்படுமாறு 'இந்திரற்கரிய செல்வம் எய்தினன் இவன்' எனச் சுக்கிரீவன் முதலியோர் கூறி ஏத்தினர் என்க. வீரர் என்றது இலக்குவனையும் சுக்கிரீவனையும். 'தானைவைப்பு' என்றது படைகள் தங்கியுள்ள ஊரினை.

(150)

கவிக் கூற்று

6642. தேடுவார் தேட நின்ற
சேவடி தானுந் தேடி
நாடுவா னன்று கண்ட
நான்முகன் கழீஇய நன்னீர்
ஆடுவார் பாவ மஞ்சு
நீங்கிமே லமர ராவார்
சூடுவா ரெய்துந் தன்மை
சொல்லுவார் யாவர் கண்டீர்.

தேடுவார் தேட நின்ற
சேவடி, தானும் தேடி
நாடுவான், அன்று கண்ட
நான்முகன் கழீஇய நன்னீர்
ஆடுவார் பாவம் அஞ்சும்
நீங்கி, மேல் அமரர் ஆவார்;
சூடுவார் எய்தும் தன்மை
சொல்லுவார் யாவர்? கண்டீர்.

பொ :—கடவுளைத் தேடியறிதலையே தம் குறிக்கோளாகக் கொண்ட ஞானிகள் தம் ஞானத்தால் தேடவும் அவர்க்குப் புலப் படாமல் நின்ற (திருமாலின்) சேவடியை (அத்திருமாலின் உந்தித் தாமரையில் தோன்றிய) தானும் தேடிக் காண விரும்பினவனாய் (அத்திருமால் திருவிக்கிரமாவதாரம் செய்த) அன்று, (அச்சேவடி தன்னை நெருங்கிவரக்) கண்ட நான்கு முகங்களையுடைய பிரமன், அச்சேவடியைக் கழுவிய நீராகிய கங்கையின் நல்ல நீரில் மூழ்கினவர் தம் பாவங்கள் ஐந்தும் நீங்கப் பெற்று விண்ணுலகில் தேவராய்ச் செல்வார் என்றால், அச்சேவடியையே தலையில் சூடிக் கொள்ளும் பேறு பெற்றவர்கள் அடையும் பெருமைபற்றிச் சொல்லுந் தகுதியுடையவர் யாவர்? (யாரும் இலர்.)

கு :—கண்டீர், முன்னிலையசை. தேடுவார் என்றது ஞானிகளை. ஞானிகள் தம் ஞானத்தால் தேடவும் அவர்க்குப் புலப்படாமல் நின்ற சேவடி, பிரமன் கண்ணுக்குப் புலப்படத் திருவிக்கிரமாவதாரத்தில் விண்ணுலகளக்கையில் காணக் கிடைத்தது என அத்திருவடியின் அருமை புலப்படுத்தியவாறு. அன்று என்றது, உலகளந்த அன்று என்றவாறு. குறளனாய் மாவலிபால் மூவடி மண்பெற்ற பின் திருவிக்கிரமனாய் உயர்ந்து திருமால் மண்ணுலகை ஓரடியால் அளந்து

ஓரடியால் விண்ணுலகை அளக்க உயர்த்துகையில் அவ்வடி பிரமனுலகத்துச் சென்றதாக இதுகாறும் தான் நாடியிருந்த அவ்வடி இப்பொழுது தன்னை நாடி வந்ததே என மகிழ்ந்து தன் கமண்டல நீரால் திருமஞ்சனம் ஆட்டினான்; அச்சேவடி கழுவிய நீரே கங்கை எனப் பட்டுத் தன்கண் மூழ்குவாரது பஞ்சமா பாதகங்களையும் போக்கி அவரைத் தேவராக்கும் பெருமை பெற்றது. "செய்ய தாமரைத்தாள்பண்டு தீண்டலால், வெய்ய பாதகம் தீர்த்து விளங்குவாள் ஐயன் மேனியெலாமளைந்தாலினி வையமாநரகத்திடை வைகுமே" (அயோத்தி - கங்கைப் - 25) என்றதும் இங்கு ஒப்புநோக்கத்தகும். திருமாலின் சேவடியைக் கழுவிய நீர்க்கே அப்பெருமை வருமாயின் அத்திருவடிகளையே சூடிக்கொண்ட வீடணன் எய்தும் பெருமைக்கு அளவுண்டோ என்பார், "சூடுவார் எய்துந் தன்மை சொல்லுவார் யாவர்?" என்றார். அவர் பெருமை சொல்லுக்கு அடங்குவதன்று என்றவாறு. சூடுவார் என வீடணனையே பிறர் போல் கூறியவாறு. திருவடிக்கும் திருவடி நிலைக்கும் உள்ள ஒற்றுமை நினைந்து சேவடி சூடுவார் என்றார். இப்பாடலால் சேவடியின் பெருமை புலப்படுத்தி அச்சேவடி சூடிய வீடணன் இலங்கையரசைப் பெற்றது வியப்பன்று என்பது விளக்கியவாறு. (151

பெரியோர் வியப்பு

6643. இற்றைநா ளளவும் பாரி
லிருடிக ளிமையோர் ஞான
முற்றினா ரன்பு பூண்டார்
வேள்விகண் முடித்து நின்றார்
மற்றுமா தவரு மெல்லாம்
வாளெயிற் றிலங்கை வேந்தன்
பெற்றதார் பெற்றா ரென்று
வியந்தனர் பெரியோ ரெல்லாம்.

'இற்றை நாள் அளவும், பாரில்
இருடிகள், இமையோர், ஞானம்
முற்றினார், அன்பு பூண்டார்,
வேள்விகள் முடித்து நின்றார்,
மற்றும் மாதவரும், எல்லாம்,
'வாள் எயிற்று இலங்கை வேந்தன்
பெற்றது ஆர் பெற்றார்!' என்று
வியந்தனர், பெரியோர் எல்லாம்.

பொ :—முனிவர்களும், தேவர்களும், ஞானிகளும், பத்தி பூண்டவர்களும், வேள்விகளை யெல்லாம் செய்து முடித்தவர்களும், மற்றும் உள்ள பெரிய தவத்தினரும் ஆகிய எல்லாரிலும் கூரிய பற்களையுடைய இலங்கை வேந்தனாகிய வீடணன் பெற்ற சிறப்பை இன்று வரையில் இவ்வுலகத்தில் யார் பெற்றிருக்கின்றார்கள்? என்று பெரியோர்கள் எல்லாம் வியந்து பாராட்டினார்கள்.

கு :—இருடிகள் என்றது தேவ இருடிகளை. தவத்தாலும் ஞானத்தாலும், வேள்விகளாலும் பத்தியாலும் எய்த முடியாத பேற்றை அரக்க பிறப்பினனாகிய வீடணன் பெற்றுவிட்டான் என்றவாறு. இராமன் திருவடி நிலைகளையே முடியாகச் சூடிக்கொண்டு இந்திரற்கும் அரிய இலங்கைச் செல்வத்தை எய்திய சிறப்பையே இங்ஙனம் வியந்து பாராட்டினர் பெரியோர் என்க. அப்பாதங்கள் இம்மையிலேயே வீடணனுக்குப் பயன் அளித்துவிட்டன என்றவாறு. இலங்கை வேந்தன் பெற்றது இற்றைநாளளவும் பாரில் ஆர் பெற்றார் என இயையும். (152)

52-ல் 151-1. மிகைப்பாடலாகக் கீழ்வரும் பாடல் காணப்படுகின்றது.

6643. (உ) வானவ ரிதனைக்கூற
வலங்கொடு தானை வைப்பை
தானையந் தலைவரோடுஞ்
சார்ந்தவீடணனுந் தாழா
தூனுடைப் பிறவி தீர்ந்தே
னெனமனத் துவந்தாங் கண்ணல்
தேனுகு கமலபாதம் சென்னியால்
தொழுது நின்றான்.

வீடணன் அடைக்கலப் படலம் முற்றிற்று.

5. இலங்கை கேள்விப் படலம்

இராமன் இலங்கையின் இயல்பு பற்றி வீடணன்பால் கேட்டறியும் பகுதியாகலின் இது இலங்கை கேள்விப் படலம் எனப் பெயர் பெறுகின்றது. சில சுவடிகளில் 'ஒன்னார் வலியறி படலம்' எனவும், சில சுவடிகளில் 'இலங்கையளவறி படலம்' எனவும் இப்படலத்தின் பெயர் காணப்படுகின்றது. ஒன்னார் வலிமை மட்டுமேயன்றி அனுமன் அவ்விலங்கையில் காட்டிய வலிமையும் வீடணனால் கூறப்படுதலின் ஒன்னார் வலியறிபடலம் என்ற பெயர் பொருந்தாமையும் இலங்கையின் அளவேயன்றி அனுமன் வலியளவும் கூறப்படுதலின் இலங்கை அளவறி படலம் என்ற பெயர் பொருந்தாமையும், இலங்கையின் வலிமையைக் கூறியதோடு அவ்விலங்கையில் அனுமன் காட்டிய வலிமையையும் வீடணன் கூறுதலின் 'இலங்கை கேள்விப்படலம்' என்ற பெயரே பொருத்தமுடைமையும் புலனாம். அனுமன் இலங்கையில் காட்டிய வீரச் செயலைக் கேள்விப்பட்டது இலங்கைக் கேள்வியாய் அடங்குதல் காணலாம்.

படலப் பொருட் சுருக்கம்

இலங்கையரசனாய் முடிசூடி நகர்வலம் முடித்து வந்து வணங்கிய வீடணனுக்கு இராமன் தக்கதோர் இருப்பிடம் தருகின்றான். சூரியனும் மறைகின்றான். மாலையில் செய்ய வேண்டிய சந்தியாவந்தனத்தை இராமன் செய்து முடிக்கின்றான். இருள் பரவுகின்றது. விண்மீன்கள் விளக்கம் பெறுகின்றன. மல்லிகை மலர்கின்றன. வெண்திங்கள் விண்ணில் தோன்றி நிலவைப் பொழிகின்றது. தென்றல் மன்றலோடு வந்து வீசுகின்றது. மன்மதன் மலர்க் கணைகள் நிலவின் கதிர்களோடு இராமன் மார்பில் பாய்கின்றன. சீதையின் நினைவால் இராமன் உணர்வுமயங்கி வருந்துகின்றான், இராமன் பிரிவாற்றாது வருந்துவது கண்ட சுக்கிரீவன் அவனை நெருங்கிச் சென்று ஆறுதல் கூறிவிட்டு வீடணனோடு கலந்து ஆலோசித்து மேல் நிகழ வேண்டிய நல்ல செயல்களைப் பற்றிச் சிந்திக்குமாறு வேண்டுகின்றான். இராமன் அயர்ச்சி நீங்கி உணர்ச்சி பெற்று எழுந்து வீடணனை அழைத்துவரச் செய்கின்றான். வந்த வீடணனை அருகில் இருக்கச் செய்து, இலங்கையின் அரண்களையும், அரக்கர்களின் வலிமையையும், இராவணன் சேனையின் அளவையும், அச்சேனையின் இயல்பையும் உள்ளவாறு கூறுக என இராமன் பணிக்கின்றான்.

வீடணன் எழுந்து வணங்கி இராமன் பணித்த வண்ணம் இலங்கையின் தோற்றத்தையும், மதிலின் பெருமையையும், மதிற் பொறிகளின் மாட்சியையும், நாற்றிசையிலும் உள்ள வாயில்களிலும், மேலும் கீழும் உள்ளும் புறம்பும் நின்று காவல்புரியும் வீரரின் எண்ணிக்கையையும், வலிமையையும், சேமப் படையின் சிறப்பையும், அரண்மனைக் காவலரின் ஆற்றலையும், நால்வகைப் படைகளோடு கூடிய ஆயிர வெள்ளம் சேனையின் பெருமையையும் விரித்துக் கூறுகின்றான்.

இத்தகைய ஆற்றல் மிக்க இராவணன் படைவலியும் துணை வலியும் இலங்கை வந்த அனுமன் ஆற்றலுக்குத் தோற்று அழிந்தமையும் பொன் மயமான இலங்கை மாநகர் அனுமனால் எரியுண்டமையும் கூறி வீடணன் அனுமனைப் புகழ்கின்றான். இராமன் அனுமனுடைய இவ்வீரச் செயல்களைக் கேட்டவுடன் மகிழ்ந்து, சீதையின் பிரிவால் மெலிந்த தன் தோள்கள் பூரிக்கப் பெறுகின்றான். அனுமனைப் புகழ்ந்து பாராட்டிப் பிரம பதத்தையே அத்தொண்டிற்குப் பரிசாகத் தருகின்றான். அனுமன் தன் புகழ் கேட்டு நாணித் தலை வணங்கி இராமனைத் தொழுது விட்டு ஒன்றும் பேசாது நிற்கின்றான். வானரர்கள் அனைவரும் அனுமன் வீரச் செயலையும் இராமன்பால் பெற்ற பரிசிலையும் நினைந்து வியந்து மகிழ்கின்றார்கள்.

கம்பர் வான்மீகத்தோடு வேறுபடும் இடங்கள்

1. வான்மீகத்தில் வீடணன் இராவணனுடைய படைவலியைப் பற்றி விவரித்துத் தானும் அவ்விராவணனை அழிக்கும் போரில் சேரப் போவதாகக் கூறிய பின்னரே இராமன் இலக்குவனைக் கொண்டு அவ்வீடணனை இலங்கை அரசனாக முடிசூட்டுவதாகக் கூறப்படுகின்றது.

கம்பர் அதை மாற்றி வீடணனைக் கண்டவுடன் இராமன் அவ்வீடணனை இலங்கை மன்னனாக ஆக்கியதாகவும் இலங்கை மன்னனாய் வீடணன் முடிசூடிக் கொண்டு பாடி வீட்டினை வலஞ் செய்து வந்த பின் தனியே இருப்பிடம் கொடுத்து அனுப்பி மறுநாட் காலையில் மீண்டும் அவ்வீடணனை அழைத்து இலங்கையின் அரண் முதலியவற்றைப் பற்றிக் கூறுமாறு கேட்க வீடணன் அவற்றை முறையே கூறியதாகவும் அமைந்துள்ளார். வீடணன் இராவணனை அழிக்கும் போரில் பங்கு கொள்வதாகச் கூறிய பின் இராமன் அவ்வீடணனுக்கு முடிசூட்டினான் என்பதினும் அவன் தன்னைச் சரணடைந்தவுடன் இலங்கை வேந்தனாக ஆக்கினான் என்பதே இராமன் வலிமையையும் நம்பிக்கையையும் பெருமையையும் புலப்படுத்துவதாக உள்ளது.

2. இராவணனுக்குரிய அரக்கர் சேனையின் அளவு பதினுயிரங் கோடி என வீடணன் கூறியதாக வான்மீகத்தில் உள்ளது. ஆயிரம் வெள்ளம் சேனை இராவணனுக்கு உண்டு என்று வீடணன் கூறிய தாகக் கம்பர் கூறுகின்றுர். இது உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டன என்னலாம்.

3. வீடணன் இலங்கையின் அரண் முதலியவற்றைக் கூறி முடித்தபின் அனுமன் அவ்விலங்கையில் செய்த வீரச் செயல்களைப் புகழ்ந்து கூறியதாகக் கம்பர் கூறியுள்ள செய்தி வான்மீகத்தில் இல்லை. கம்பர் தாமே புதுவதாக இச்செய்தியைக் கூறியுள்ளார்.

இராவணன் படைவலி மட்டும் கூறி வீடணன் அமைந்திருந் தால் இராமனது படைவலி யறியாதவன் என்ற குற்றம் அவன்பால் தங்கும். மேலும் தன்னை அடைக்கலமாக ஏற்றுக்கொண்ட இராமனது பகைவனையே புகழ்ந்ததாகவும் அமையும். ஆதலின் இராவணன் வலிமைகளை யெல்லாம் சிறக்கக் கூறி முடித்த வீடணன் அவ்விராவணனுடைய படைவலியை யழிக்கும் ஆற்றல் இராமனு டைய வானரப்படைக்கு உண்டு என்பதை விளக்க வேண்டி, அனுமன் இலங்கையில் செய்த வீரச் செயல்களைப் புகழ்ந்து கூறிய தாகக் கம்பர் கூறியுள்ளார். மேலும் அனுமனுடைய ஆற்றலை இலங்கையில் நேரில் கண்டமையே தான் இராமனை அடைக்கலம்புக ஏதுவாக இருந்தது எனவும், வீடணன் கூறியதாகக் கம்பர் அமைத்தது அனுமன் வலிமையைச் சிறப்பித்ததோடு அவனை ஆளாக உடைய இராமன் பெருமையை நன்கு புலப்படுத்துவதாய் அமைந்தமை யறியலாம்.

அனுமன் இலங்கையில் அரக்கர் படையை அழித்ததையும் இலங்கையை எரியூட்டியதையும் இராமன் வீடணன் வழியாகவே அறிந்தான் என்றமையால், அனுமன் தன் பெருமையைப் புலப் படுத்தாத பெருந்தகையாக அடங்கியிருந்த சிறப்புப் புலப்படுத்திய வாருயிற்று. இத்தகைய சிறப்புகள் எல்லாம் அமையக் கம்பர் புதிய கருத்துகளைச் சேர்த்து இராமாயணத்தை அழகுமிக ஆக்கியுள்ளார் என்பதை யுளங்கொளல் வேண்டும்.

படலப் பொருட் சிறப்பு

வீடணனை இலங்கை வேந்தனுக முடிசூட்டி நகர்வலம் செய்வித்த பின்னர் இராமன், அவனுக்குத் தனியே இருப்பிடம் கொடுத்து அனுப்பிவிட்டுத் தனித்திருக்கின்றுன். நிலவின் அமுதக் கதிர்கள் தன்மேல் பாய்தலால் சீதையின் நினைவு வெளிப்பட இராமன்

வருந்துகின்றான் என்பதைக் கூறவந்த கவிஞர், இராமன் பேராற்றலையும் அவன் தன் ஆற்றலுக்கு ஏலாத துன்பத்தை இப்போது உற்றிருத்தலையும் விளக்கும் இயல்பு தனிச் சிறப்புடையதாகும். இவ் விளக்கத்தால் சீதையைப் பிரிந்து வருந்தும் இராமன்பால் கவிஞருக்கு உண்டான இரக்க உணர்ச்சி அவரை அறியாமலே புலப்பட்டு விடுகின்றது. கதை நிகழ்ச்சியைக் கூறவந்த கவிஞர், கதையுறுப்பினர் படும் துன்பத்தில் பங்குகொள்ளும் அளவிற்கு உணர்ச்சி வயப் பட்டு விடுகின்றார். பெருங்கவிஞர்க்கு இது இயல்பு. இராமன் இப்பொழுது எளிய பொருள்களாலும் துன்புறும் நிலையைக் காண்கின்ற கம்பர் அவ்விராமனுடைய பேராற்றலைப் புலப்படுத்தும்பழைய வீரச் செயல்களையெல்லாம் நினைவிற்குக் கொண்டு வருகின்றார். அத்தகைய பேராற்றல் உடையவன் இப்பொழுது மிக எளிய வற்றாலும் துன்புறுகின்றானே! என்று தம் இரக்கவுணர்ச்சியைப் புலப்படுத்தி விடுகின்றார்.

கரத்தொடும் பாழிமாக் கடல் கடைந்துளான்
உரத்தொடுங் கரனொடு முருவ வோங்கிய
மரத்தொடுந் தொளைத்தவன் மார்பின் மன்மதன்
சரத்தொடும் பாய்ந்தன நிலவின் தாரைவாள்.

என்கின்றார். எளியவன் ஒருவன் மார்பில் அம்பும் வாளும் பாய்வதில் வியப்பொன்றுமில்லை; அங்கு இரக்கம் கொள்ளவேண்டிய இன்றியமையாமையும் இல்லை. இராமன் அத்தகைய எளியனல்லன்; 'வில்லினுக்கு இராமன்' எனப் புகழ்பெற்றவன். வீரரில் வீரனாகிய கரனுடைய மார்பினைத் தன் அம்பால் துளைத்திருக்கின்றான்; மிகப் பெரிய மராமரங்கள் ஏழினையும் ஒருசேர ஓரம்பால் துளைத்திருக்கின்றான்; வானர வீரனாகிய வாலியின் வலிய மார்பைத் தொளைத்திருக்கின்றான். வாலியின் வலிமை எத்தகையது? பெரிய பாற் கடலில் மந்தரமலையாகிய மத்தை நாட்டி வாசுகி என்னும் பாம்பையே தாம்பாகக் கொண்டு தன் கைகளால் கடைந்த தகுதிமிக்கவன். கோடிக்கணக்கான தேவரும் அசுரரும் சேர்ந்து கடையவேண்டிய கடலைத் தான் ஒருவனே கடைந்த பேராற்றல் உடையவன். அத்தகைய வாலியின் மார்பைத் தன் அம்பு ஒன்றால் தொளைத்து அழித்தவன் இராமன் என்றால், அவன் ஆற்றலை அளவிடல் ஒல்லுமோ? அவ்வலிமை சான்ற இராமன் மார்பில் உருவிலியாகிய மன்மதனுடைய மெல்லிய மலர் அம்புகள் பாய்கின்றனவே! அவ் வம்புகளோடு வெண்ணிலவின் கதிர்களாகிய கூரிய வாள்களும் பாய்கின்றனவே! வாலியின் வலியமார்பைத் தொளைத்த வலிய வனாகிய இராமன், மன்மதன் மலர்க்கணைக்கு எளியவன் ஆகின் றானே! கரனுடைய வாளுக்கு இலக்காகாதவன் தண்மதியின் கதிர்

வாளுக்கு இலக்காகின்றானே! என்னே இராமனுக்கு நேர்ந்துள்ள இரங்கத்தக்க நிலை! என்று கம்பர் தம் இரக்கவுணர்வைப் புலப் படுத்தியுள்ளமை காணலாம்.

இவ்வாறு இரக்கம் தோன்றக்கூறிய இப்பாடலில் வேறு பல கருத்துகளும் தோன்றி வியப்பையூட்டுகின்றன. வலிய வீரர்களை யெல்லாம் வென்ற இராமனுக்கு உருவிலியாகிய மாரனை வெல்ல இயலாது போயிற்று என்று காட்டி, மன்மதன் பெருமையை இப் பாடல் புலப்படுத்துகின்றது என்று கொள்ளவும் இடமுண்டு. இனி, இராமன் சீதைமேல் வைத்த காதல் உடையவன் ஆதலின், தன் பேராற்றலை இழந்து மன்மதன் மலர்க்கணைக்கும் தண்மதியின் வெண்ணிலவிற்கும் வருந்துபவன் ஆனான் எனப் பெண்கள் பால் வைத்த நேயத்தால் உளதாம் பீழையை இதனால் விளக்கியவாறு கவும் கொள்ள இடமுண்டு. "பிரிதற்றுன்பமும் புணர்தற்றுன்பமும், உருவிலாளனொறுக்குந் துன்பமும், புரிகுழல் மாதர்ப் புணர்ந்தோர்க் கல்லது ஒருதனி வாழ்க்கை யுரவோர்க்கில்லை" (சிலப்-14; 35) என்பது இங்கு நினையலாம்.

இனி, இப்பாடற்கு, "பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக் கின்னா பிற்பகற் றாமே வரும்" (குறள்-319) என்ற நியதியை விளக்கிய தாகவும் கருத்துக் கூறலாம். இராமன் முன்னே கரனையும், மரா மரங்கள் ஏழினையும், வாலியின் மார்பையும் தொளைத்துப் பிறர்க்கு இன்னா செய்தவன் ஆதலின், இப்போது அவ்விராமன் மார்பில் மன்மதன் மலர்க்கணைகளும் நிலவின் தாரைவாளும் தாமே பாய் கின்றன என்க. மன்மதன் சரங்களை எய்தான் என்னாது "மன்மதன் சரத்தொடும் பாய்ந்தன நிலவின் தாரைவாள்" எனச் சரத்தின் வினையாகவே கூறியுள்ள நுட்பம் இங்குக் கருதத்தக்கது. "தமக் கின்னா பிற்பகல் தாமே வரும்" என்ற வள்ளுவர் வாய்மொழி நினைந்தே இவ்வாறு கம்பர் அமைத்தார் போலும்.

இனி, மேலும் ஒரு நுட்பம் இதில் அமைத்துள்ளமையும் ஊன்றி நோக்கி யுணரலாம். இராமன் தன் வடிவு புலப்படாமல் மரத்தில் மறைந்து நின்று வாலியின் மார்பைத் துளைத்தவன் ஆதலின், உருவிலியாகி மறைந்திருக்கின்ற மன்மதனுடைய அம்புகள் தன் மார்பில் பாயப் பெற்று வருந்துகின்றான் என இயைபு காட்டி, வீயாது பின் சென்று அடும் வினைப்பகையின் திறத்தை வியந்தவாறாகவுங் கொள்ள இச்செய்யுள் இடந்தருதல் காணலாம்.

இராமன் "வினைவலியுந் தன்வலியு மாற்றான்வலியும் துணை வலியுந் தூக்கிச் செயல்" (குறள்-471) என்ற நியதிப்படி இராவணன்

வலியை உள்ளவாறு அறிய விரும்பி அவன் தம்பியாகிய வீடணனை வினவுகின்றான். வீடணனும் தன்னை இழிவுபடுத்தித் துரத்திய இராவணனைப் பற்றிக் கூறுங்கால் தன் வெறுப்பைச் சிறிதும் புலப் படுத்தாமல் அவ்விராவணன்பால் அன்புள்ளவன் கூறுவதுபோலவே சிறப்பித்துக் கூறுகின்றான். பகைவன் வலிமையை மிகுதிப்படுத்திக் கூறுவதே போரில் வெற்றி கொள்வோர்க்கு நன்மை பயக்கும் என்ற உண்மை உணர்ந்தே இவ்வாறு கூறி வீடணன் தன் பெருந்தன்மை யைப் புலப்படுத்துவது சாலச் சிறப்புடையதாகும்.

5. இலங்கை கேள்விப் படலம்

வீடணனுக்கு இராமன் இடமளித்தல்

6644. வந்தடி வணங்கிய நிருதர் மன்னவற்
கந்தமி லாததோ ருறையு ளவ்வழித்
தந்தனன் விடுத்தபி னிரவி தன்கதிர்
சிந்தின வெய்யவென் றெண்ணித் தீர்ந்தனன்.

வந்துஅடி வணங்கிய நிருதர் மன்னவற்கு
அந்தம் இலாதது ஓர் உறையுள் அவ்வழித்
தந்தனன் விடுத்தபின், இரவி 'தன்கதிர்,
சிந்தின வெய்ய' என்று எண்ணித் தீர்ந்தனன்.

பொ :—(நகர்வலம் முடிந்தபின்) வந்து தன் திருவடிகளை வணங்கிய வீடணனுக்கு இராமன், அளவிலாத பரப்பினையுடைய ஒரு வீட்டை அவ்விடத்தில் தந்து (அங்கு இருக்குமாறு) அவனை அனுப்பியபின், சூரியன் தான் சிந்திய கதிர்கள் வெப்பமுடையன என்று கருதி அக்கதிர்களைச் சொரியாமல் சுருக்கிக்கொண்டு நீங்கி மறைந்தனன்.

கு :—இராமனுடைய திருவடி நிலைகளாகிய முடியைச் சூட்டிக் கொண்டவுடனே வீடணன் இலங்கையில் உள்ள நிருதர்கட்கெல்லாம் மன்னன் ஆய்விட்டமை புலப்பட இங்கு அவனை 'நிருதர் மன்னவன்' என்றார். உறையுள், தங்குதற்குரிய வீடு; இலங்கை மன்னவனாகிய வீடணன் தங்குதற்கேற்ற தகுதியுடைய வீடு என்பார், 'அந்தமிலாததோர் உறையுள்' என்றார். அந்தம் - எல்லை ; முடிவு. தந்தனன், முற்றெச்சம். விடுத்தல் - அனுப்புதல். இரவி - சூரியன். சிந்தினவாய தன் கதிர் வெய்ய என்று எண்ணி என இயையும். இலங்கைக்கு மன்னவனாய் முடிசூட்டிக் கொண்ட வீடணன்மேல் தன்னுடைய வெப்பமுள்ள கதிர்களைச் சொரிதல் தக்கதன்று என்று எண்ணிச் சூரியன் தன் கதிர்களைச் சுருக்கிக் கொண்டு மறைந்தான் என்றது தற்குறிப்பேற்ற அணியாகக் கூறியவாறு. தீர்தல் - நீங்குதல் ; மறைதல். (1)

இராமன் அந்திவந்தனை முடிக்க இரவு வருதல்

6645. சந்திவந் தனைத்தொழின் முடித்துத் தன்னெடும்
புந்திநொந் திராமனு முயிர்ப்பப் பூங்கணை
சிந்திவந் திறுத்தனன் மதனன் றீநிறத்
தந்திவந் திறுத்தது கறுத்த தண்டமே.

சந்தி வந்தனைத் தொழில் முடித்துத் தன் நெடும்
புந்தி நொந்து, இராமனும் உயிர்ப்பப் பூங்கணை
சிந்தி வந்து இறுத்தனன் மதனன்; தீ நிறத்து
அந்தி வந்து இறுத்தது; கறுத்தது அண்டமே.

பொ :—(முன் கூறியாங்குக் கதிரவன் மறையவே) மாலை நேரத்திற்குரிய தொழுகைக் கடனைச் செய்து முடித்துத் தன் நெடியதாய மனம் நொந்து இராமனும் பெருமூச்சுவிடக் காமனும் மலரம்புகளை எறிந்துகொண்டு வந்து தங்கினான்; தீப்போலும் செந்நிறங்கொண்ட அந்திப் பொழுது வந்து தங்கியது; அதன்பின் உலகமும் இருண்டது.

கு :—சந்தி என்றது மாலைச்சந்தியை. கடவுள் வழிபாட்டிற்குச் சிறந்த காலம் அந்தியாதலின் அக்காலத்திற்குரிய கடவுள் வழிபாட்டை இராமன் செய்து முடிக்கலானான். கடவுள் தியானத்தால் பெருமையுற்ற புந்தி ஆதலின் நெடும் புந்தி எனப்பட்டது. நெடுமை இங்குப் பெருமையை யுணர்த்தியது. மனம் கடவுள் வழிபாட்டில் தோய்ந்திருந்ததாயினும் மாலைக் காலத்தில் மிகும் இயல்புடைய பிரிவுத்துயரால் இராமன் வருந்தாமல் இல்லை என்பது புலப்படத் ‘தன்னெடும் புந்தி நொந்து இராமனும் உயிர்ப்ப’ என்றார். மாலை செய்த துயரால் வருந்தி உயிர்க்கின்ற இராமனை மேலும் வருத்த மதனனும் மலர்க்கணை சிந்திக் கொண்டு வந்து தங்கினான் என்றவாறு. செவ்வானையுடைய அந்தியாதலின் ‘தீ நிறத் தந்தி’ என்றார். அந்திப் பொழுதிற்குப் பின் இருள் செறியும் இயல்பு புலப்படக் ‘கறுத்தது அண்டமே’ என்றார். (2)

விண்மீன்கள் விளங்குதல்

6646, மாத்தடந் திசைதொறு மறைந்த வல்லிருள்
கோத்தது கருங்கடல் கொள்ளை கொண்டென
நீத்தநீர்ப் பொய்கையி னிறைந்த நாண்மலர்
பூத்தபோன் மீன்களாற் பொலிந்த தண்டமே.

மாத் தடந் திசைதொறும் மறைந்த வல் இருள்
கோத்தது, கருங்கடல் கொள்ளை கொண்டென ;
நீத்த நீர்ப் பொய்கையில் நிறைந்த நாள்மலர்
பூத்தபோல் மீன்களால் பொலிந்தது அண்டமே.

பொ :—பெரிய பரந்த திக்குக்களிலெல்லாம் மறைந்திருந்த வலிய இருளானது, கரிய கடல் நீர் (உலகைக்) கொள்ளை கொண்டாற்போல, வந்து கவிந்தது ; நீந்துதற்குரிய ஆழமுடைய நீர் நிலையில் நிறையப் புதுமலர்கள் மலர்ந்தனபோல், வானம் நட்சத்திரங்களால் விளங்கியது.

கு :—சூரியனைக் கண்டவுடன் திசைகளின் இறுதியிற் சென்று மறைந்த இருள் அச்சூரியன் மறைந்தவுடன் வந்து கவிந்த தன்மை கருங்கடல் பொங்கி வந்து உலக முழுமையும் கொள்ளை கொண்டு கோத்துக் கொண்டது போலிருந்தது எனத் தற்குறிப்பேற்றவுவமை கூறியவாறு. நீலவானில் விண்மீன்கள் ஒளியுடன் விளங்கும் தோற்றம், பெரிய பொய்கையில் மலர்கள் நிறையப் பூத்தாற்போலத் தோன்றியது என்றவாறு. நீலவானுக்குப் பொய்கையும் விண்மீன்களுக்கு மலர்களும் உவமை. நாண்மலர்களின் மலர்ச்சியால் பொலிவு பெற்ற பொய்கைபோல, விண்மீன்களின் விளக்கத்தால் வானம் பொலிவு பெற்றது என்க. நீத்த நீர் – நீந்துதற்குரிய ஆழமுடைய நீர். கடல் கொள்ளை கொண்டென இருள் கோத்தது என இயையும். கொள்ளிக்கும் விள்ளாத கூரிருள் என்பார், வல்லிருள் என்றார். (3)

மல்லிகை மலர்தல்

6647. சில்லியற் கோதையை நினைந்து தேம்பிய
வில்லியைத் திருமனம் வெதுப்பும் வெம்மையால்
எல்லியைக் காண்டலு மலர்ந்த வீட்டினால்
மல்லிகைக் கானமும் வான மொத்ததே.

சில் இயல் கோதையை நினைந்து தேம்பிய
வில்லியைத் திருமனம் வெதுப்பும் வெம்மையால்
எல்லியைக் காண்டலும் மலர்ந்த ஈட்டினால்
மல்லிகைக் கானமும் வானம் ஒத்ததே.

பொ :—சில வகைகளாக வகுத்து அணி செய்யப்படுகிற கூந்தலையுடையாளான சீதையை நினைந்து வருந்துகின்ற வில்வீரனை

இராமனது அழகிய மனத்தை வாட்டும் கடுமையால், இரவைக் கண்டதும் மலர்ந்த தன்மையைக் கொண்ட மல்லிகை மலர்களைக் கொண்ட காடும் (நட்சத்திரக் கூட்டத்தைக் கொண்ட) வானத்தை ஒத்திருந்தது.

கு :—கோதை - மாலை ; அது மாலையணிந்த கூந்தலுக்கு ஆகிப் பின் அக்கூந்தலையுடைய சீதையை உணர்த்தியது; இரு மடி ஆகு பெயர். வில்லி என்றது, வில்லையுடைய இராமனை. என்றும் யார்க்கும் தீமை நினையாது நன்மையே நினையும் மனம் ஆதலின், இராமன் மனம் திருமனம் எனச் சிறப்பிக்கப் பெற்று அத்தகைய மனமும் வெதும்ப நேர்ந்ததே என்ற இரக்கக் குறிப்பையுணர்த்துவதாயிற்று. வெம்மையால் மலர்ந்த வீட்டினுல் மல்லிகைக் கானமும் வானம் ஒத்தது என்பது ஏது உவமை. இராமன் மனத்தை விண்மீன்கள் தோன்றிப் பிரிவாற்றுமையை மிகுவிப்பதுபோல, மல்லிகை மலர்களும் மலர்ந்து மணம் வீசி மிகுவித்தலாலும், இரவைக் கண்டவுடன் விளக்கம் பெறும் விண்மீன்கள் போல மல்லிகையும் இரவைக் கண்டவுடன் மலர்தலாலும் மல்லிகை மலர்களும் விண்மீன்களும் ஒப்புமையுடையன என்க. வானம் என்றது, மேற்கூறியாங்கு விண்மீன்களால் விளக்கம் பெற்ற வானத்தை, ஈடு - தன்மை. (4)

சந்திரன் எழுதல்

6648. ஒன்றுமுட் கறுப்பினே டொளியின் வாளுரீஇத்
தன்றனி முகத்தினு லென்னைத் தாழ்த்தற
வென்றவ டுணைவனை யின்று வெல்குவேன்
என்றது போலவந் தெழுந்த திந்துவே.

ஒன்றும் உட் கறுப்பினேடு, ஒளியின் வாள் உரீஇத்
'தன் தனி முகத்தினுல் என்னைத் தாழ்த்து அற
வென்றவன் துணைவனை இன்று வெல்குவேன்'
என்றது போல, வந்து எழுந்தது இந்துவே.

பொ :—'தனது ஒப்பற்ற முகத்தினுல் என்னை மிகவும் தாழ்மைப் படுத்தி வென்றவளின் கணவனை இன்று வெல்வேன்' என்றது போல, பொருந்திய உட்கறுப்புடனே ஒளியாகிய வாளையுருவிக் கொண்டு வந்து, சந்திரன் (கீழ்த் திசையில்) தோன்றிற்று.

கு :—தனி - ஒப்பில்லாத. சீதை தன் முகத்தால் சந்திரனை வென்றவள். அவளை வெல்ல வலியற்ற சந்திரன் அவள் கணவனையாவது வெல்வோம் என்று பகைமையை உட்கொண்டு வாளையுருவிப்

போருக்கெழுந்ததாகக் கூறினர். இயல்பாகவே சந்திரனுக்குள்ளே பொருந்திய களங்கத்தை 'ஒன்றும் உட்கறுப்பு' என்றார். அது 'உள்ளே பகைமையைக் கொண்டு என்றும் பொருள்படும். கறுப்பு-களங்கம், பகைமை. ஒளியென்றது ஒளியார்ந்த கிரணங்களை, ஒளிக் கிரணங்களை வாளாக உருவகித்தார். என்னை வென்றவள் துணைவனை இன்று வெல்குவேன் என்று திங்கள் எழுந்தது என்பது பிரத்தியனீகம் என்னும் அணியாகும். வெல்குவேன் என்றதுபோல எழுந்ததிந்து என்றது தற்குறிப்பேற்ற வணி. ஒன்று முட்கறுப்பினோடு என்றது சிலேடை அணி. ஒளியின் வாள் என்றது உருவக அணி. இன் தவிர்வழிச்சாரியை. இவ்வாறு பல வணிகள் வந்தமையால் இச்செய்யுள் சங்கீரண அணி எனப்படும். (5)

நிலவு வீசுதல்

6649. கண்ணிணை யப்புறங் கரந்து போகினும்
பெண்ணிறை யுண்டெனிற் பிடிப்ப லீண்டென
உண்ணிறை நெடுங்கட லுலக மெங்கணும்
வெண்ணிற நிலவெனும் வலையை வீசினான்.

'கண்ணிணை அப்புறம் கரந்து போகினும்
பெண் இறை உண்டு எனின் பிடிப்பல் ஈண்டு' என,
உள் நிறை நெடுங்கடல் உலகம் எங்கணும்
வெண் நிற நிலவு எனும் வலையை வீசினான்.

பொ :—'கண்ணுக்குப் புலனாகாமல் அப்பாற்பட்டு மறையினும், அப்பெண்களுக்குத் தலைவியான சீதை இருப்பாளேயானால் அவளை இப்பொழுது பிடித்து விடுவேன் என்று உள்ளே (நீர்) நிரம்பிய பெரிய கடலையுடைய உலகமெங்கும் வெள்ளை நிறம் பொருந்திய நிலவொளி என்கிற வலையை(ச் சந்திரன்) வீசியெறிந்தான்.

கு :—கண்ணுக்கு மறைந்து போனாலும் விடாது பிடித்து விடுவேன் என்பதுபோல் நிலவாகிய வலையை வீசினான் சந்திரன் என்றவாறு. பெண்களுக்கு இறைவியாகிய சீதையைப் பெண் இறை என்றார். கண்ணுக்குப் புலனாகாமல் கடலாழத்தில் உள்ள மீன்களும் வலைக்குட்படுதல் போலக் கண்ணிணைக் கரந்து போகிய சீதையும் நிலவெனும் வலையில் அகப்படாதிராள் என்றவாறு. நிலவெனும் வலை என்றதற்கேற்ப உலகம் எனும் நெடுங்கடல் எங்கணும் என மாற்றி உருவகம் செய்தலும் ஆம். மேல் தன்னை முகத்தினால் வென்றவள் துணைவனை இன்று வெல்குவேன் என்று வஞ்சினத்துடன்

எழுந்த சந்திரன், இராமன் சீதையின் பிரிவாற்ருமையால் மெலிவது கண்டு கண்ஞேடி: 'இவன் பிரிவுத்துயர் தீரச் சீதையைத் தேடிப் பிடித்துத்தருவேன்' என்று சங்கற்பம் செய்துகொண்டு அவளைப் பிடிக்க நிலவெனும் வலையை வீசிஞன் என்றவாறு. வீசிஞன் என்ற வினைக்கு மேற்செய்யுளில் வந்த இந்துவையே எழுவாயாகக் கொள்க. (6)

கடல் ஒலித்தல்

6650. புடைக்கவன் றிரையெடுத் தார்க்கும் போர்க்கடல்
உடைக்கருந் தனிநிற மொளித்துக் கொண்டவன்
அடைக்கவந் தானெனை யரியின் ருனையால்
கிடைக்கவந் தானெனக் கிளர்ந்த தொத்ததே.

புடைக்க வன் திரை எடுத்து ஆர்க்கும் போர்க்கடல்,
'உடைக் கருந் தனிநிறம் ஒளித்துக் கொண்டவன்
அடைக்க வந்தான் எனை அரியின் தானையால்,
கிடைக்க வந்தான்' எனக் கிளர்ந்தது ஒத்ததே.

பொ :—ஓங்கி யறைய வலிய அலைகளைக் கிளப்பி ஆரவாரிக்கும் கரைபொரு கடலானது "என்னுடைய கருமையான ஒப்பற்ற நிறத்தைக் கவர்ந்து கொண்டவஞன இராமன் (இப்பொழுது) குரங்குப் படைகளைக் கொண்டு என்னை அடைக்க வந்தவஞய் (என் கைக்கு) அகப்படும்படி வந்தான்" என்று சினந்தெழுவதைப் போன்றிருந்தது.

கு :—புடைக்க - மோத. இயல்பாகவே அலை வீசிக் கரையோடு பொருகின்ற கடலைப் 'போர்க்கடல்' என்று சிறப்பித்து, இராமனோடு கைகளை வீசிப் போருக்குக் கிளம்பியதுபோலக் கூறிஞர். 'உடைக்கரும்' என்பதற்கு அழித்தற்கரிய என்றும் பொருள் கொள்ளலாம். கடலின் கரு நிறத்தை இராமன் கவர்ந்ததேயன்றிக் குரங்குப் படைகளால் அணைகட்டி அடைக்கவும் வந்தானே என்பது கடல் சினத்தற்குரிய காரணங்களாகும். இராமனுக்கு இயல்பாக அமைந்த கருநிறத்தைத் தன்னிடத்திருந்து இராமன் கவர்ந்து கொண்டதாகக் கடல் கற்பனை செய்து கொண்டு அவன்மேல் பகைத்துக் கொள்ளக் காரணம் காட்டியவாறு. கடல் வண்ணன் எனப்படுதல் இங்கு நினைக. அரி - குரங்கு. அடைத்தற்குரிய தகுதியின்மை புலப்பட 'அரியின்ருனையால்' என்றதாகக் கொள்க. (7)

நிலவொளி பாய்தல்

6651. மேலுகத் தொகுதியான் முதிர்ந்த மெய்யெலாந்
தோலுகுத் தாலென வரவத் தொல்கடல்
வாலுகத் தாலிடைப் பரந்த வைப்பெலாம்
பாலுகுத் தாலென நிலவு பாய்ந்ததால்.

மேல் உகத்தொகுதியால் முதிர்ந்த மெய் எலாம்
தோல் உகுத்தால் என, அரவத் தொல்கடல்
வாலுகத்தால் இடைப் பரந்த வைப்பு எலாம்
பால் உகுத்தால் என, நிலவு பாய்ந்ததால்.

பொ :—மேல் உள்ள வானமானது, தனக்குக் கழிந்த யுகங்களின் பன்மையால் முதிர்ச்சியுற்ற தன்னுடம்பெல்லாம் மூடியுள்ள வெண்மையான தோலை உரித்துச் சிந்தினாற்போலவும், ஒலி வாய்ந்த பழமையான கடல் எனும் பெண் மணற் குன்றுகளாகிய நகில்களால் தன்னருகில் பரவியுள்ள இடமெல்லாம் பரவுமாறு பாலைச் சொரிந்தாற் போலவும் நிலவு விண்ணிலிருந்து பாய்ந்து தரையில் பரவியது.

கு :—மேல் என்றது விசும்பினை; ஆகுபெயர். வானுலகத்தை மேலுலகம் என்னும் வழக்கும் காண்க. விசும்பு தோலுகுத்தாலெனவும் கடல் வாலுகத்தால் பாலுகுத்தாலெனவும் நிலவு பாய்ந்தது என இயையும். விண்ணினின்றும் நிலவு தரையில் பாய்வதற்கு விசும்பு தோலுரித்து உகுப்பதையும், அந்நிலவு தரையிடைப் பரவுதற்குக் கடல் வாலுகத்தால் பாலுகுப்பதையும் தற்குறிப்பேற்றவுவமையாகக் கூறியவாறு. பனிக் காலத்தில் விண்ணில் உலவும் வெண் மேகங்களின் தோற்றத்தைக் கண்ட ஆலூர் மூலங்கிழார், "விசும்புரிவது போல் வியலிடத் தொழுகி மங்குல் மாமழை தென்புலம் படரும்" (அகநா-24) எனத் தற்குறிப்பேற்றமாகக் கூறியிருப்பது இங்கு ஒப்பு நோக்கத் தகும். தோலுகுத்தலாகிய குறிப்பால், வானமாகிய பாம்பு என்ற உருவகமும் பாலுகுத்தலாகிய குறிப்பால், கடலாகிய பெண் என்ற உருவகமும், வாலுகமாகிய நகில் என்ற உருவகமும் கொள்ளப் பெற்றன; இவை குறிப்புருவகம்; "இடுக்கண் கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும் நல்லா ளிலாத குடி" (குறள் – 1030) என்புழிப்போல. வாலுகம் நகிலாக உருவகிக்கப்படுதலை, "வாலுகங் குவைஇய மலர்ப்பூந் துருத்திப் பால்புடைக் கொண்டு பன்மலரோங்கி, எதிரெதிர் விளங்கிய கதிரிளவன முலை" (சிலப்-13-161-163) என்ற அடிகளாலும், அடியார்க்கு நல்லார் அப்பகுதிக்கு எழுதியுள்ள உரையாலும் அறியலாம்.

விசும்பு தோலுரித்து உகுத்தற்குக் காரணம் புலப்பட உகத் தொகுதியான் முதிர்ந்த மெய்யெலாம் என்றார். உகத் தொகுதியான் என்றது பல யுகங்கள் கழிந்தமையால் என்றவாறு· உடம்பு முதிர்ச்சி யுறும்போது தோலுரிதல் பாம்புக்கு இயல்பு. அரவம் ஒலி, இனித் 'தொல் கடலாகிய அரவம் என மாற்றி மேற்கழிந்த உகங்களின் காரணமாக முதிர்ந்த மெய்யெலாம் உள்ள தோலைக் கடலாகிய பாம்பு உரித்துச் சிந்தியதுபோலத் தோன்றும் வெண் மணலோடு அங்குப் பரவியுள்ள இடமுழுதும் பாலைச் சொரிந்தாற்போல நிலவு வீசியது எனப் பொருள் கொள்வாருமுளர். (8)

தென்றலால் இராமன் வருந்தல்

6652. மன்றல்வாய் மல்லிகை யெயிறு வண்டினம்
கன்றிய நிறத்தது நறவின் கண்ணது
குன்றின்வாய் முழையினின் றுலாய கொட்பது
தென்றலென் றொருபுலி யுயிர்த்துச் சென்றதால்.

மன்றல் வாய் மல்லிகை எயிறு, வண்டு இனம்
கன்றிய நிறத்தது, நறவின் கண்ணது,
குன்றின் வாய் முழையின் நின்று உலாய கொட்பது,
தென்றல் என்று ஒரு புலி உயிர்த்துச் சென்றதால்.

பொ :—மணம் வாய்ந்த மல்லிகையரும்பாகிய பற்களையுடையதும், வண்டுக் கூட்டமாகிய கரிய கோடுகளையுடைய உடலையுடையதும், தேனாகிய (செந்நிறக்) கண்களையுடையதும் (பொதிய) மலையின் குகையினின்றும் உலாவுகின்ற தன்மையையுடையதும் ஆகிய தென்றல் என்று சொல்லப்படும் ஒரு புலி (சினம் தோன்றப்) பெரு மூச்சு விட்டுக்கொண்டு வரலாயிற்று.

கு :—மணம், தேன், இவை தென்றலில் இருத்தலின் இவ்வாறு கூறினார். மன்றல்வாய் என்பதில் ஐம்பொறிகளில் ஒன்றாகிய வாயும் ஒருவாறு கூறப்பட்டவாறறிக. தென்றலாகிய புலிக்கு மல்லிகையரும் பாகிய பற்களையும், மணம் வீசும் வாயையும், வண்டுக் கூட்டமாகிய கரும்புள்ளிகள் வரிகள் கொண்ட உடலையும், தேனாகிய சிவந்த கண் களையும் பொதியமலைக் குகையாகிய உறைவிடத்தையும், வீசுதலாகிய உயிர்ப்பையும் இயைத்துக் கூறிய நயம் நோக்கத்தகும். கன்றிய - கருகிய. நிறத்தது - உடலையுடையது. மலர்ந்த மலர்களிலுள்ள தேனையளாவி வீசி வருதலால் தென்றலை நறவின் கண்ணது என்று கூறினார். நறவின் கண்ணது என்னுமிடத்து, தேனாகிய கண்ணை யுடையது என்றும் தேனின் இடத்தே உள்ளது என்றும் இருவகை

யாகப் பொருள்படும். உயிர்த்து (மோப்பம் பார்த்து)ச் செல்லுதல் புலியின் இயல்பென்க. (9)

மன்மதன் அம்புகளாலும் நிலவின் கதிர்களாலும் இராமன் வருந்துதல்

6653. கரத்தொடும் பாழிமாக் கடல்க டைந்துளான்
உரத்தொடுங் கரனொடு முருவ வோங்கிய
மரத்தொடுந் தொளைத்தவன் மார்பின் மன்மதன்
சரத்தொடும் பாய்ந்தன நிலவின் ருரைவாள்.

கரத்தொடும் பாழிமாக் கடல் கடைந்துளான்
உரத்தொடும், கரனொடும், உருவ ஓங்கிய
மரத்தொடும் தொளைத்தவன் மார்பில் மன்மதன்
சரத்தொடும் பாய்ந்தன நிலவின் தாரைவாள்.

பொ :—கைகளினாலே வலிய பெரிய கடலைக் கடைந்தவனாகிய வாலியினது மார்புடனே, கரன் என்னும் அரக்கனையும், (வானத்தை) அளாவ ஓங்கிய மராமரங்கள் ஏழையும் (தனதம்பால்) தொளைத்தவனாகிய இராமனது மார்பில் காமனது (மலர்) அம்புகளுடனே நிலாக் கதிர்களாகிய வாள்களும் பாய்ந்தன.

கு :—வீரனும் வலியனுமான இராமனை (மனைவியின் பிரிவுத் துயரால்) காமன் அம்பும் நிலவும் வருத்தலாயின என்றவாறு. தாரை என்றது, நிலவின் கதிர்களை ; நிலவின் ஒழுக்கு எனலும் ஆம். உருவில்லாத மன்மதனது சரத்தின் வலிமையும் நிலவின் தாரை வலியும் புலப்பட வேண்டி, இராமன் ஆற்றலைப் புலப்படுத்தியவாறு. கையால் கடலைக் கடைந்த வாலியின் மார்பினையும் கரனையும் ஏழு மராமரங்களையும் தொளைத்த பேராற்றலையுடைய இராமன் மார்பில் மன்மதன் மலர் அம்போடு நிலவின் தாரையாகிய வாளும் பாய்ந்தனவே ஈதென்னே என இரக்கந் தோன்றக் கூறியவாறு. மன்மதன் சரம் என்றது மலரம்புகளை. இச்செய்யுளால் பிரிவுத்துயரின் வன்மை புலப்படுத்தியபடி. (10)

இராமன் உடல் முதலியவற்றை நோக்குதல்

6654. உடலினை நோக்குமின் னுயிரை நோக்குமுள்
ளிடரினை நோக்குமற் றியாது நோக்கலன்

கடலினை நோக்குமக் கள்வன் வைகுறுந்
திடரினை நோக்குந்தன் சிலையை நோக்குமால்.

உடலினை நோக்கும்; இன்உயிரை நோக்கும்; உள்
இடரினை நோக்கும்; மற்று யாதும் நோக்கலன்;
கடலினை நோக்கும்; அக்கள்வன் வைகுறும்
திடரினை நோக்கும்; தன் சிலையை நோக்குமால்.

பொ:—(அப்பொழுது இராமன் மெலிந்துள்ள தன்) உடம்பைப் பார்ப்பான்; (அதற்குக் காரணமானதன்) இனிய உயிருக்கு ஒப்பான சீதையை மனத்தினால் எண்ணுவான்; (அவளது) உள்ளத் துயரம் எவ்வாறு இருக்குமென்று சிந்திப்பான்; வேறு ஒன்றையும் நோக்காதவனாய்க் கடலினைப் பார்ப்பான்! (சீதையைக் கவர்ந்து சென்ற) அந்தத் திருடனான இராவணன் தங்கியிருக்கும் இலங்கையான திட்டை நோக்குவான், (அவனைக் கொல்லுதற்குத் தோளிற் கிடக்கும்) தனது வில்லையும் பார்ப்பான்.

கு:—இராமனது உடல் வாட்டத்தைப் போக்கவல்ல மருந்து சீதையே யாதலால், அவள் இன் உயிர் என்னப்பட்டாள். இராமனின் உண்மையான உயிர் சீதையாதலால், அவள் இன்னுயிர் என்னப்பட்டாள் என்பதும் கொள்க.

"தேண்டிநேர் கண்டேன் வாழி தீதில னெங்கோ னாகம்
பூண்டமெய் யுயிரே போகப் பொய்யுயிர் போல நின்ற
ஆண்டகை நெஞ்சினின்று மகன்றிலை யழிவுண் டாமோ
ஈண்டுநீ யிருந்தா யாண்டங் கெவ்வுயிர் விடுமி ராமன்."

என்று சுந்தரகாண்டம், உருக்காட்டுப் படலத்தில் அனுமன் சீதைக்குக் கூறியதும் இங்கே கருதத்தகும். திடர் என்றது கடலால் சூழப்பட்ட தீவுத் திட்டாகிய இலங்கையை. இலங்கைக் கள்வனைக் கொல்லவேண்டித் தன் சிலையை இராமன் நோக்கினான் என்க. இலங்கையை யடைதற்குத் தடையாய் இடையில் கிடப்பதால் கடலை வெறுப்புடன் நோக்குவானாயினன். உயிரை நோக்கும் என்றும் உள் இடரினை நோக்கும் என்றும் கூறியது மனத்தால் நோக்கியதை. இதனை நோக்கல் நோக்கம் என்பர். (11)

இராமன் சீதையின் நினைவால் சிந்தை கலங்கல்

6655. பணிபழுத் தமைந்தபூ ணல்குற் பண்பினால்
பிணிபழுத் தமைந்ததோர் பித்தி னுள்ளத்தான்

அணிபழுத் தமைந்தமுத் தரும்பு செம்மணி
மணிபழுத் தமைந்தவாய் மறக்க வல்லனே.

பணி பழுத்து அமைந்த பூண் அல்குல் பண்பினால்,
பிணி பழுத்து அமைந்தது ஓர் பித்தின் உள்ளத்தான்,
அணி பழுத்து அமைந்த முத்து அரும்பு செம்மணி
மணி பழுத்து அமைந்த வாய் மறக்க வல்லனே ?

பொ :—தொழின் முதிர்ந்தமைந்த அணிகலன் அணிந்த அல்குலையுடையளாகிய சீதையினது குணங்களை நினைப்பதனால் காம நோய் முதிர்ந்து அதனால் உண்டான ஓர் பித்துக்கொண்ட மனத்தையுடையவனாகிய இராமன், அழகு முதிர்ந்து அமைந்த முத்தையரும்புகின்ற மாணிக்க மணி போன்ற அழகு முதிர்ந்தமைந்த (அச்சீதையின்) வாயை மறக்கவல்லானே ?

கு :—சீதை பிரிந்ததனால் அவளையே நினைந்தவனாய் ஏக்கம் கொண்டு காமநோயால் பீடிக்கப்பட்டுப் பித்தேறிய மனத்தனாய் மாழ்கினான் இராமன் என்றவாறு. சிவந்த அதரத்தினுள்ளே வெள்ளிய பற்கள் இருத்தலின், முத்தரும்பு செம்மணி என்றார். (12)

சுக்கிரீவன் இராமனை நோக்கி வீடணனோடு மேல் நிகழ்வதை எண்ணுக எனல்

6656. ஆயதோ ரளவையி னருக்கன் மைந்தனீ
தேய்வதென் காரிய நிரப்புஞ் சிந்தையை
மேயவன் றன்னொடு மெண்ணி மேலினித்
தூயது நினைக்கிலை யென்னச் சொல்லினான்.

ஆயது ஓர் அளவையின், அருக்கன் மைந்தன், 'நீ
தேய்வது என் ? காரியம் நிரப்பும் சிந்தையை ;
மேயவன் தன்னொடும் எண்ணி, மேல் இனித்
தூயது நினைக்கிலை' என்னச் சொல்லினான்.

பொ :—அவ்வாறு இராமன் வருந்தியிருந்த பொழுது, சூரியனது மகனாகிய சுக்கிரீவன், (இராமனை நோக்கி) "செய்யவேண்டிய தொழிலை முடிக்கவல்ல கருத்தைக் கொண்டவனை நீ வருந்துவது என்னை ? (வருந்துதல் தகாது நம்மோடு) சார்ந்தவனாய வீடணனோடும் ஆராய்ந்து இனிமேல் நடக்கவேண்டிய குற்றமற்ற செயலை நினையாமலிருக்கின்றாயே" என்று கூறினான்.

கு :—இராவணனோடு போர்புரிந்து கற்புக்கரசியாகிய சீதையை மீட்டலைப் புனிதமான ஓர் உயர்ந்த செயலாகக் கருதி அதனைத் 'தூயது' என்றான் சுக்கிரீவன். மிகுதிக்கண்மேற் சென்றிடிக்கின்ற நண்பன் சுக்கிரீவனாதலின் இவ்வாறு கூறினான் என்க. (13)

6657. அவ்வழி யுணர்வுவந் தயர்வு நீங்கினன்
செவ்வழி யறிஞனைக் கொணர்தி சென்றென
இவ்வழி வருதியென் றியம்ப வெய்தினான்
வெவ்வழி விலங்கிந னெறியை மேவினான்.

அவ்வழி உணர்வு வந்து அயர்வு நீங்கினன்,
'செவ்வழி அறிஞனைக் கொணர்தி சென்று' என
'இவ்வழி வருதி' என்று இயம்ப, எய்தினான்,
வெவ்வழி விலங்கி, நல் நெறியை மேவினான்.

பொ :—(இராமன்) அப்பொழுது தன்னுணர்வு வரப்பெற்று, மனம் வருந்துதலொழிந்து "நல்வழியிற் செல்லும் அறிவாளனாகிய வீடணனைப் போய் அழைத்து வாருங்கள்" என்று கூறவும், (வானரர்கள் வீடணனிடம் சென்று) 'இவ்விடம் (இராமன் உள்ள இடத்திற்கு) வருக" என்று சொல்ல, தீ நெறியினின்று நீங்கி நல்வழியிற் செல்பவனான வீடணனும் (இராமன் உள்ள இடத்திற்கு) வந்து சேர்ந்தான்.

கு :—கம்பர் வீடணனுக்குச் 'செவ்வழியறிஞன்' என்று ஒரு பெயர் சூட்டினது நோக்கற்பாலது. செவ்வழி அறிஞனாதலின் கடல் கடக்கச் செவ்வழி கூறுதற்குரியன் என்ற குறிப்பும் காணலாம். விலங்கினனாய் நெறியை மேவினானாகிய வீடணன் எய்தினான் என இயையும். விலங்கினன் முற்றெச்சம். மேவினான், வினைப்பெயர். (14)

6658. மருக்கிளர் தாமரை வாச நாண்மலர்
நெருக்கிடு தடமென விருந்த நீதியான்
திருக்கிளர் தாமரை பணிந்த செம்மலை
இருக்கவீண் டெழுந்தென விருந்த காலையில்.

மருக்கிளர் தாமரை வாச நாள் மலர்
நெருக்கிடு தடம் என இருந்த நீதியான்,
திருக்கிளர் தாமரை பணிந்த செம்மலை
இருக்க ஈண்டு எழுந்து' என, இருந்த காலையில்.

பொ :—நறுமணம் எழுகின்ற தாமரையின் வாசனையுள்ள அன்றலர்ந்த மலர்கள் செறிந்திருக்கப்பெற்ற தடாகம் போன்று வீற்றிருந்த அறவோனுகிய இராமன், (தனது) அழகு விளங்குகின்ற தாமரை மலர் போன்ற திருவடிகளை வணங்கின பெருமையுள்ளவனை வீடணனை "எழுந்து இங்கே அமர்க" என்று சொல்லவும் (அங்ஙனமே வீடணன் எழுந்து) அமர்ந்திருந்தபொழுது.

கு :—வீடணனுக்கு இராமன் கூறியவை அடுத்த செய்யுளில் தொடரும். இராமனைத் தாமரை மலர்கள் நெருங்கிய ஒரு தடமாகக் கூறியதோடு,

"மாய்க்கூத்தா வாமனு வினையேன் கண்ணு கண்கைகால்
தூயசெய்ய மலர்களாச் சோதிச் செவ்வாய் முகிழதாச்
சாயல் சாமத் திருமேனி தண்பாசடையாத் தாமரைநீள்
வாசத் தடம்போல் வருவானே ஒருநாள் காண வாராயே."

என்ற நம்மாழ்வார் திருவாய் மொழியை ஒப்பிடுக. மற்றும் சுந்தர காண்டம்' சூளாமணிப் படலத்தில்,

"தீர்வி லேனி தொருபக லுஞ்சிலை
வீரன் மேனியை மானுமிவ் வீங்குநீர்
நார நாண்மலர்ப் பொய்கையை நண்ணுவேன்
சோரு மாருயிர் காக்குந் துணிவினுல்."

என்று சீதை அனுமனுக்குக் கூறியதும் நினைக்கத்தகும். தாமரை பணிந்த என்புழித் தாமரை உவமையாகுபெயராய்த் திருவடிகளை யுணர்த்தியது. (15)

6659. ஆர்கலி யிலங்கையி னரணு மவ்வழி
வார்கெழு கனைகழ லரக்கன் வன்மையும்
தார்கெழு தானையி னளவுந் தன்மையும்
நீர்கெழு தன்மையாய் நிகழ்த்து வாயென்ருன்.

'ஆர்கலி இலங்கையின் அரணும், அவ்வழி
வார்கெழு கனைகழல் அரக்கன் வன்மையும்,
தார்கெழு தானையின் அளவும், தன்மையும்,
நீர்கெழு தன்மையாய்! நிகழ்த்துவாய்' என்ருன்.

பொ :—"நற்குணம் விளங்குகின்ற இயல்பையுடையவனே! கடல் சூழ்ந்த இலங்கையின் மதிலமைப்பையும், நீண்டு ஒலிக்கின்ற வீரக் கழலையணிந்துள்ள அரக்கனை இராவணனது வலிமையையும்,

கொடிப் படையோடு கூடிய சேனைகளின் அளவையும் இயல்பையும் சொல்லுவாய்" என்று வினவினான்.

கு :—தார் - கொடிப்படை அல்லது தூசிப்படை. நல்ல நீர்மை யுடையவன் வீடணனாதலின் 'நீர்கெழு தன்மையாய்' என விளிக்கப் பட்டான். அரக்கன் என்றது இராவணனை; அவன் இழிவு புலப் படுத்தியவாறு. (16)

வீடணன் இராமனது வினாவிற்கு விடைகூறத் தொடங்குதல்

6660. எழுதலு மிருத்தியென் றிராம னேயினான்
முழுதுணர் புலவனை முளரிக் கண்ணினான்
பழுதற வினவிய பொருளைப் பண்பினால்
தொழுதுயர் கையினன் றெரியச் சொல்லினான்.

எழுதலும், 'இருத்தி' என்று இராமன் ஏயினான்
முழுது உணர் புலவனை; முளரிக் கண்ணினான்
பழுது அற வினவிய பொருளைப் பண்பினால்
தொழுது உயர் கையினன், தெரியச் சொல்லினான்.

பொ :—(இராமன் வினாக்களுக்கு விடையிறுக்குமாறு வீடணன் எழுந்தவுடனே அந்த முற்றுமுணர்ந்த அறிஞனாகிய வீடணனை 'இருப்பாயாக' என்று இராமன் கூறினான்; தாமரைக் கண்களை யுடையவனாகிய இராமன் வினவிய செய்திகளை, முறைப்படி வணங்க உயர்த்திய கைகளை யுடையவனான வீடணன் பழுதில்லாமல் விளங்கக் கூறுவானான்.

கு :—வீடணன் சொல்லுமாறு எழுதலும், முழுதுணர்ந்த பண்டிதனாகிய அவனை இராமன் 'இருந்து சொல்லலாம்' என்று பணித்தான். முளரிக் கண்ணினான் வினவிய பொருளைப் பண்பினால் தொழுதுயர் கையினன் பழுதறத் தெரியச் சொல்லினான் எனக் கூட்டுக. வீடணன் ஐயந்திரிபின்றி உணர்த்துவானானான் என்றவாறு. கையினன் வினைப்பெயர்; வீடணன். (17)

இலங்கையின் பிறப்பு

6661. நிலையுடை வடவரை குலைய நேர்ந்ததன்
றலையென விளங்கிய தமனி யப்பெரு

மலையினை மும்முடி வாங்கி யோங்குநீர்
அலைகட லிட்டன னனுமன் ருதையே.

' நிலையுடை வடவரை குலைய நேர்ந்து, அதன்
தலை என விளங்கிய தமனியப் பெரு
மலையினை மும்முடி வாங்கி, ஓங்கு நீர்
அலைகடல் இட்டனன் அனுமன் தாதையே.'

பொ :—" அனுமனது தந்தையாகிய காற்றுக் கடவுள் நிலைத் திருத்தலையுடைய மேருமலையைச் சிதறச் செய்வதாக ஒருப்பட்டு, அந்த மலையின் சிகரமாக விளங்கிய மூன்று முடியை யொருங்கே கொண்ட பொன்மயமான பெரிய மலையைப் பறித்து, மிக்க நீரைக் கொண்ட அலையுந் தன்மையுடைய கடலில் எறிந்தான்."

கு :—மும்முடி கொண்ட அப்பொன் மலையைத் திரிகூட மலை என்பர். அவ்வாறு கடலில் எறியப்பட்ட திரிகூட மலையிலேதான் இலங்கை அமைந்திருந்தது.

அனுமன் தாதை வடவரை குலைய நேர்ந்ததாவது,—காற்றுக் கடவுளுக்கும் ஆதிசேடனுக்கும் ஒரு வலிமைப் போட்டி ஏற்பட்டு, ஆதிசேடன் தன் ஆயிரந் தலைகளாலும் மேருவின் ஆயிரம் சிகரங் களையும், கவித்து அமுக்கிக் காத்துக் கொள்ளவும், காற்று தன் முழு பலத்தாலும் மேருவின் மூன்று சிகரங்களைப் பறித்துக் கொடுபோய்க் கடலில் இட்டனன் என்பதாகும். இலங்கையின் பிறப்பிற்கும் அனு மனுக்கும் தொடர்பு காட்டுவானய் வாயு என்னது ' அனுமன் தாதை' என்ருன். (18)

இலங்கை சூழ் மதிலின் சிறப்பு

6662. ஏழுநா றியோசனை யகல மிட்டகீழ்
ஆழநா றியோசனை யாழி மால்வரை
வாழியா யுலகினை வளைந்த வண்ணமே
சூழுமா மதிலது சுடர்க்கு மேலதால்.

' ஏழு நூறு யோசனை அகலம், இட்ட, கீழ்
ஆழம் நூறு யோசனை, ஆழிமால் வரை,
வாழியாய் ! உலகினை வளைந்த வண்ணமே
சூழும், மாமதில்; அது சுடர்க்கும் மேலதால்.'

பொ :—" நல்வாழ்க்கை பெற்றவனே! எழுநூறு யோசனை அகலமும், கீழ் நூறு யோசனை ஆழமுமாகக் கட்டப்பட்ட பெரிய மதிலானது, சக்கரவாளமலை இவ்வுலகினை எவ்வாறு சுற்றியுள்ளதோ அவ்வாறே (அந்த இலங்கை நகரத்தை) வளைந்துள்ளது; (உயரத்தில்) அந்த மதில் சூரிய சந்திரர் இயங்குமிடத்தினும் மேலாகவுள்ளது."

கு :—வாழியாய்! ஏழுநூறு யோசனை அகலம் கீழ் நூறு யோசனை ஆழம் இட்ட மாமதில், ஆழிமால்வரை உலகினை வளைந்த வண்ணமே சூழும்; அது சுடர்க்கும் மேலதால், எனக்கொண்டு கூட்டுக. இது இலங்கைப் புறமதிலின் அகலம் ஆழம் உயரம் கூறியவாறு. " ஏழு நூறு யோசனை சூழ்ந்தெயில் கிடந்த திவ்விலங்கை " (சுந்தர - ஊர்தேடு - 229) என்று முன் கூறியதும் நினையலாம். (19)

இச்செய்யுளின் பின் 52 என்ற எண்ணுள்ள புத்தகத்தில் 18-1 எனப் பின் வரும் பாடல் காணப்படுகின்றது.

6662 (a) வலம்பெறு தசமுகன் தவத்தின் மாட்சிகண்டு
இலங்குறு மலரயன் எண்ணில் யோசனைத்
தலங்கொடு சமைத்துநல் நகருந் தந்திதற்
கிலங்கையென் றொருபெய ரீந்த மேலைநாள்.

மதிற்பொறி முதலியன

6663. மருங்குடை வினையமும் பொறியின் மாட்சியும்
இருங்கடி யரணமும் பிறவு மெண்ணினால்
சுருங்கிடு மென்பல சொல்லிற் சுற்றிய
கருங்கட லகழது நீருங் காண்டிரால்.

' மருங்குடை வினையமும், பொறியின் மாட்சியும்
இருங்கடி அரணமும், பிறவும், எண்ணினால்,
சுருங்கிடும்; என்பல சொல்லில்? சுற்றிய
கருங்கடல் அகழது; நீரும் காண்டிரால்.'

பொ :—" அந்த மதிலினிடத்துள்ள வஞ்சக வேலைப்பாடுகளையும், எந்திரங்களின் மேம்பாடுகளையும், மிக்க காவலாகவுள்ள கோட்டை, மதில்களையும், மற்றுமுள்ளவற்றையும் எண்ணத் தொடங்கினால் (விரித்துச் சொல்ல வேண்டுமானால் ஆயுள் போதாதபடி) சுருங்கும்; பலவற்றையும் சொல்லிக் கொண்டிருப்பதால் என்ன பயன்? (அந்த இலங்கை) தன்னைச் சூழ்ந்துள்ள கரிய கடலையே அகழாகக் கொண்டுள்ளது; நீரும் (அதனை நேரே) பார்க்கலாம்,

கு :—மருங்கு - பக்கம்; இங்கே மதிலின் இடத்தைக் குறித்து நின்றது. வினையம் - (எதிரிகளை ஏமாற்றும்) வஞ்சக வேலைப் பாடுகள். பொறி - எந்திரம். கடி - காவல். அரணம் - கோட்டை. சுருங்கிடும் என்பதற்கு, எண் சுருங்கிடும் என்றும், மனம் சுருங்கிடும் என்றும் கூறுதலும் ஆம். (20)

இலங்கையின் வடக்கு வாயில் காப்போர்

6664. வடதிசை வயங்கொளி வாயில் வைகுவோர்
இடையில ரெண்ணிரு கோடி யென்பரால்
கடையுக முடிவினிற் கால னென்பதென்
விடைவரு பாகனைப் பொருவும் வெம்மையார்.

'வடதிசை வயங்கு ஒளி வாயில் வைகுவோர்
இடை இலர், எண் இரு கோடி என்பரால்;
கடை யுக முடிவினில் காலன் என்பது என்?
விடைவரு பாகனைப் பொருவும் வெம்மையார்.'

பொ :—"வடக்குத் திக்கிலுள்ள விளங்குகின்ற ஒளியையுடைய வாயிலில் (காவலாக) உள்ளவர்கள் (எதற்கும்) பின்வாங்குதலில் லாதவர்கள்; (அவர்கள்) பதினறுகோடி வீரர்கள் என்று சொல்லப் படுவார்கள்; (அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு) காலன் என்று எப் படிச் சொல்வது? (சொன்னல் போதாது) கடையூழி முடிவிலே காளை மாட்டின்மேல் ஏறி வருகிற உருத்திரனை யொத்த கொடுமையை யுடையவர்கள்.

கு :—வடக்கு வாயிற் காவலர்களுக்குக் காலனும் ஒப்பாகமாட் டான்; அவர்கள் வெம்மைக்குச் சர்வ சங்கார காலத்தில் விடை யூர்ந்து வருகிற உருத்திரனைத்தான் உவமை சொல்ல வேண்டும் என்றவாறு. இயமதர்மராசனின் தூதுவருள் காலன் ஒருவன். (21)

மேற்றிசை வாயில் வீரர்

6665. மேற்றிசை வாயிலின் வைகும் வெய்யவர்க்
கேற்றமு முளவவர்க் கிரண்டு கோடிமேல்
கூற்றையுங் கட்பொறி குறுகக் காண்பரேல்
ஊற்றுறு குருதியோ டுயிரு முண்பரால்.

'மேல் திசை வாயிலின் வைகும் வெய்யவர்க்கு
ஏற்றமும் உள, அவர்க்கு இரண்டு கோடிமேல்;
கூற்றையும் கண்பொறி குறுகக் காண்பரேல்,
ஊற்றுறு குருதியோடு உயிரும் உண்பரால்.'

பொ :—அந்த வடதிசைக் காவலர்களைவிட இரண்டு கோடி மேலான (அதாவது, பதினெட்டுக்கோடி) எண்ணிக்கையை யுடைய மேற்குத் திக்கு வாயிலைக் காவல் புரியும் கொடியவர்களுக்கு (வேறு) மேன்மைகளும் உள்ளன; அவர்களுடைய கண்ணாகிய இந்திரியம் (சிறுகும்படி) குறுகப்பார்ப்பார்களானால் கூற்றுவனையும் ஊறிப் பெருகும் இரத்தத்தோடு உயிரையும் உண்டு விடுவார்கள்"

கு :—ஏற்றம் என்றது இங்கே, வலத்தாலான மேன்மைகளை. கண்குறுகக் காண்டலாவது கண்ணை இடுக்கிப் பார்த்தல் அல்லது ஓரக்கண்ணால் பார்த்தல்; கண்ணை அகல விரித்துச் சினந்து நோக்க வேண்டியதின்றிச் சிறிதே பார்த்தாலும் போதும் என்ற வாறு; இன்னும், படைக்கருவிகள் எதுவுமின்றிச் சற்றே செலுத்தும் கண்பார்வையினாலேயே (திட்டிவிடம் என்ற பாம்பினைப் போல) கூற்றுவன் போன்ற கொடியவர்களையும் அவர்களின் குருதியையும் உயிரையும் ஒரு சேரக் குடித்து விடுவார்கள் என்பதாம். கூற்று என்றது கூற்றுவனை: கூற்றுவன் இயமதர்மராச னுடைய தூதருள் ஒருவன். இயமன்வேறு கூற்று வேறு என்பது அறிக. "சாற்று நாளற்றதென்று தருமரா சற்காய்வந்த கூற்றினைக் குமைப்பர் போலுங் குறுக்கைவீ ரட்டனாரே". என்ற திருநாவுக்கரசர் வாக்கையும் நேக்குக. (நான்காம் திருமுறை, பதிகம் 49, பாடல் 2.) (22)

தென் திசை வாயில் வீரர்

6666. தென்றிசை வாயிலின் வைகுந் தீயவர்
என்றவ ரெண்ணிரு கோடி யென்பரால்
குன்றுறழ் நெடியவர் கொடுமை கூறியென்
வன்றிறல் யமனையு மரசு மாற்றுவார்.

'தென் திசை வாயிலின் வைகும் தீயவர்
என்றவர் எண் இரு கோடி என்பரால்;
குன்று உறழ் நெடியவர் கொடுமை கூறி என்?
வன் திறல் யமனையும் அரசு மாற்றுவார்.'

பொ :—"தெற்குத்திக்கு வாயிலின் கண் உள்ள கொடியவர்கள் என்று பெயர் பெற்றுள்ள காவலர்களும் பதினாறு கோடி என்று

சொல்லப்படுவார்கள்; மலை போன்று பெரியவர்களான அவர்களுடைய கொடுமையை எடுத்துக் கூறுவது எதற்கு? (அவர்களில் ஒவ்வொருவரும் வலிய ஆற்றல் படைத்த இயமதர்ம ராசனையும் கீழே இறக்கி விட்டுத் தானே இருந்து ஆட்சி புரிய வல்லவர்கள்".

கு :—அரசு மாற்றுவார் என்பது அரசாட்சியை அழிக்க வல்லார் என்றும் பொருள் படும். இயமனையும் வெல்லும் ஆற்றலர் என்றவாறு. (23)

கிழக்கு வாயில் வீரர்

6667. *கீட்டிசை வாயிலின் வைகுங் கீழவர்*
ஈட்டமு மெண்ணிரு கோடி யென்பரால்
கோட்டிருந் திசைநிலைக் கும்பக் குன்றையும்
தாட்டுணை பிடித்தகன் றரையி னெற்றுவார்.

'கீழ்த்திசை வாயிலின் வைகும் கீழவர்
ஈட்டமும் எண் இரு கோடி என்பரால்;
கோட்டு இருந் திசை நிலைக் கும்பக் குன்றையும்
தாள் துணை பிடித்து, அகன் தரையின் எற்றுவார்.'

பொ :—கிழக்குத் திக்கு வாயிலின் காவலில் உள்ள கயவர்களின் தொகையும் பதினாறு கோடி என்று சொல்வார்கள்; பெரிய (எட்டுத்) திக்குகளிலும் நிலையாக நின்ற கொம்புகளையும் மத்தகங்களையுமுடைய மலை போன்ற யானைகளை இரண்டு கால்களையும் பிடித்துத் தூக்கிப் பரந்த தரையிலே அறைய வல்லவர்கள்.

கு :—கீழ்த்திசை கீட்டிசை என எதுகை நோக்கித் திரிந்தது. கும்பக் குன்று என்றமையால் யானை என்பது புலப் படுத்தியவாறு. திசையானையின் பின்கால்களிரண்டையும் பிடித்துத் தூக்கித் தரையில் மோதுவார்கள் என்றவாறு. திசை யானைகளினும் வலிமை மிக்கவர் என்றபடி. தாட்டுணை என்றது பின்கால் இரண்டையும்.(24)

விண்ணினும் மண்ணினும் காவல்செய் வீரர்

6668. *விண்ணிடை விழித்தனர் நிற்கும் வெய்யவர்*
எண்ணிரு கோடியி னிரட்டி யென்பரால்
மண்ணிடை வானவர் வருவ ரென்றவர்
கண்ணிலர் கரையிலர் கரந்து போயினர்.

'விண்ணிடை விழித்தனர் நிற்கும் வெய்யவர்
எண் இரு கோடியின் இரட்டி என்பரால்;
மண்ணிடை வானவர் வருவர் என்றவர்
கண் இலர், கரை இலர், கரந்து போயினர்.'

பொ:—வானத்தில் (தேவர்கள் வருவார்கள் என்று உறங்காமல்) கண் விழித்தவர்களாய்க் காத்து நிற்கும் கொடியவர்களின் முப்பத்திரண்டு கோடி (அரக்கர்கள்) என்று சொல்வார்கள்; தேவர்கள் வருவார்கள் என்று பூமியின் கண் உரு மறைந்து பதுங்கிக் கிடக்கும் இரக்கமற்ற அரக்கர்கள் அளவற்றோர்கள்".

கு:—கண்–கண்ணோட்டம் (இரக்கம்). கரையிலர் வரம்பற்றோர்கள். கரந்து என்பதற்கு உருமாறி என்றும் கொள்ளலாம். வானவர் வருவர் என்று கருத்துடையராய் மண்ணிடைக் கரந்து போயினோராகிய கண்ணிலர் என்று இயையும். (25)

மதிலின் புறத்தும் அகத்தும் காப்போர்

6669. பிறங்கிய நெடுமதிற் பின்னு முன்னரும்
உறங்கல ருண்பத முலவை யாதலாற்
கறங்கெனத் திரிபவர் கணக்கு வேண்டுமேல்
அறைந்துள தையிரு நூறு கோடியால்.

'பிறங்கிய நெடு மதில் பின்னும் முன்னரும்
உறங்கலர், உண் பதம் உலவை ஆதலால்,
கறங்கு எனத் திரிபவர் கணக்கு வேண்டுமேல்
அறைந்துளது ஐ இரு நூறு கோடியால்.'

பொ:— (அந்த) விளங்குகின்ற நீண்ட கோட்டை மதிலுக்கு உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் தூங்காதவராய், உண்ணுகின்ற உணவு காற்றாதலால் காற்றாடி போலச் சுற்றுபவருமான அரக்கர்களின் தொகை அறிய வேண்டுமானால், ஆயிரம் கோடி என்று சொல்லப்பெற்றுள்ளது".

கு: —உலவை-காற்று: காற்றையுண்டு கொண்டு காற்றாடி போல் திரிந்து ஆயிரம் கோடி பேர் மதிலுக்கு முன்னும் பின்னுமாய்க் காவல் காப்பாரயினர் என்க. அறைந்துளது ஐயிரு நூறுகோடி என்றமையால் உண்மையால் நோக்கின் ஆயிரம் கோடிக்கு மேலும் இருக்கும் என்று குறிப்பிட்டவாறு. (26)

நகர் காவல்

6670. இப்படி மதிலொரு மூன்று வேறினி
ஒப்பரும் பெருமையு முரைக்க வேண்டுமோ
மெய்ப்பெருந் திருநகர் காக்கும் வெய்யவர்
முப்பது கோடியின் மும்மை முற்றினர்.

'இப்படி மதில் ஒரு மூன்று; வேறு இனி
ஒப்ப அரும் பெருமையும் உரைக்க வேண்டுமோ?
மெய்ப் பெருந் திருநகர் காக்கும் வெய்யவர்
முப்பது கோடியின் மும்மை முற்றினர்.'

பொ :—"கீழ்க் கூறியவாறு காவலமைந்த அரணங்கள் (அந்நகர்க்கு) மூன்று (உள்ளன); இனிவேருக (அந்நகரின்) ஒப்பற்ற (பாதுகாவலின்) சிறப்பையும் சொல்ல வேண்டுமோ? உண்மையான பெருமை பெற்ற அந்த அழகிய நகரைக் காக்கின்ற கொடிய அரக்கர்கள் தொண்ணூறு கோடியளவு பெருகியுள்ளார்கள்.

கு :—அகமதில், இடைமதில், புறமதில் என ஒரு நகர்க்கு மூன்று மதில்கள் அமைந்திருக்கும் ஆதலின், 'மதிலொரு மூன்று' என்ருர். (27)

இராவணனல் சிறப்புப் பெற்ற வீரர்கள்

6671. சிறப்பவன் செய்திடச் செல்வ மெய்தினர்
அறப்பெரும் பகைஞர்க ளளவி லாற்றலர்
உறப்பெரும் பகைவரி னுதவு முண்மையர்
இறப்பில ரெண்ணிரு நூறு கோடியே.

'சிறப்பு அவன் செய்திடச் செல்வம் எய்தினர்,
அறப் பெரும் பகைஞர்கள், அளவு இல் ஆற்றலர்,
உறப் பெரும் பகை வரின் உதவும் உண்மையர்,
இறப்பு இலர், எண் இரு நூறு கோடியே.'

பொ :—"(மேற் கூறியவர்களேயன்றி) அந்த இராவணனல் பெருமைப் படுத்தப்பட்டுச் செல்வம் பெற்றவர்களும், அறத்திற்குப் பெரும் பகைவர்களா யுள்ளவர்களும், அளவிடற்கரிய திறம் படைத்தவர்களும் மிகப் பெரும்பகை எதிரிடவருமாயின் உண்மை யாக உதவுகின்றவர்களும் (இராவணன் ஆணையைக்) கடவாதவர்

களுமான அரக்கர் (வேறு) பதினாறு நூறு கோடி பேர் (அந்நகரத்திற் சேமப் படையாக) உள்ளனர்".

கு :—எண்ணிரு நூறு கோடி என்றது பதினாறு நூறுகோடி என்றவாறு. (28)

கோயில் வாயில் காப்போர்

6672. விடமல விழியெனும் வெகுளிக் கண்ணினர்
கடனல விமைத்தலு மென்னுங் காவலர்
வடமலை புரைவன கோயில் வாயிலின்
இடம்வலம் வருபவ ரெண்ணெண் கோடியால்.

' "விடம் அல விழி" எனும் வெகுளிக் கண்ணினர்,
"கடன் அல இமைத்தலும்" என்னும் காவலர்,
வடவரை புரைவன கோயில் வாயிலின்
இடம் வலம் வருபவர், எண் எண் கோடியால்.'

பொ :— "(இவை) நஞ்சல்ல; கண்களே" என்று சொல்லுமாறு சினம் தோன்ற விழிக்கும் கண்களை யுடைவர்களாகி, "கண்கொட்டு தலும் முறையல்ல" என்று எண்ணுகின்றவர்களாய், மேருமலையை ஒப்பனவாகிய அரண்மனைகளின் வாயில்களில் இடம் வலமாக உலாவி வந்து கொண்டிருக்கும் காவல் வீரர்களின் தொகை அறு பத்து நான்கு கோடியாகும்.

கு :—'விடமல விழி யெனும் வெகுளிக் கண்ணினர்' என்பது 'உண்மை யுவமை யணி; தாமரையன்று முகமே' என்பது போல. இதனால் அவ்வரக்கர்தம் கண்களின் நச்சுத்தன்மை புலப்படுத்திய வாறு. கண்ணிமைக்கும் சிறிய நேரத்திற்குள் என்ன தீங்கு வந்து விடுமோ என்று எண்ணி இமைத்தலும் செய்யாது. கோயில் வாயில் காக்கின்றனர் என்பார், 'கடனல விமைத்தலும் என்னுங் காவலர்' என்றார். இமைத்தலும் கடனல எனவே காவல் செய்தலே தாம் செய்யத் தகுகடன் என்ற கொள்கையர் என்றவாறு. வடமலை என்றது மேருமலையை; பெருந்தோற்றத்தாலும் பொன்னொளியன்றமை யாலும் இராவணன் கோயிலுக்கு மேருமலை உவமையாயிற்று. வாயிலில் இடப் பக்கத்துள்ளோர் வலப் பக்கத்திலும் வலப் பக்கத் துள்ளோர் இடப்பக்கத்திலுமாக மாறிமாறித் திரிந்துகொண்டே இருப்பர் என்றபடி. இவ்வாறு திரிவதால் பகைவர் யாரும் எப்படி யும் நுழைய இயலாது. காவலர்க்கும் உறக்கம் வாராது. (29)

அரண்மனை முன்றிலில் உள்ள வீரர்

6673. அன்றியு மவனகன் கோயி லாய்மணி
முன்றிலின் வைகுவார் முறைமை கூறிடின்
ஒன்றிய வுலகையு மெடுக்கு மூற்றத்தார்
குன்றினும் வலியவர் கோடி கோடியால்.

'அன்றியும் அவன் அகன் கோயில் ஆய் மணி
முன்றிலின் வைகுவார் முறைமை கூறிடின்,
ஒன்றிய உலகையும் எடுக்கும் ஊற்றத்தார்,
குன்றினும் வலியவர், கோடி கோடியால்.'

பொ :—"அன்றியும் அந்த இராவணனது அகன்ற அரண்மனையின் ஆராய்ந்தெடுக்கப்பட்ட மணிகளால் இயன்ற முற்றத்தில் தங்கிய அரக்கர்களின் தன்மையைச் சொல்லின், ஒன்றுகச் சேர்ந்துள்ள உலகத்தை யெல்லாம் பெயர்த்துத் தூக்கவல்ல வலிமையை யுடையவர்கள்; மலையினும் திண்மை யுடையவர்கள்; (அவர்களின் தொகை) கோடி கோடியாகும்.

கு :—ஆய்மணி முன்றில் என்பதற்கு ஆராய்ச்சிமணி கட்டியுள்ள முற்றம் எனப் பொருள் கூறலும் ஆம். அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணி கட்டியிருத்தல் உண்டு என்பதை 'வாயிற் கடைமணி நடுநா நடுங்க' (சிலப் - 20-53) என்றதால் அறியலாம். (30)

தேர் முதலிய நால்வகைப் படைகளின் அளவு

6674. தேர்பதி னுயிரம் பதுமஞ் செம்முகக்
கார்வரை யவற்றினுக் கிரட்டி கால்வயத்
தூர்பரி யவற்றினுக் கிரட்டி யொட்டகம்
தார்வரு புரவியி னிரட்டி சாலுமே.

'தேர் பதினுயிரம் பதுமம்; செம்முகக்
கார் வரை அவற்றினுக்கு இரட்டி; கால் வயத்து
ஊர் பரி அவற்றினுக்கு இரட்டி; ஒட்டகம்
தார் வரும் புரவியின் இரட்டி சாலுமே.'

பொ :—"(அந்த இராவணனிடமுள்ள) தேர்களின் எண்ணிக்கை பதினுயிரம் பதுமமாகும்; செம்புள்ளி சேர்ந்த முகத்தைக் கொண்ட கரியமலை போலும் யானைகள் அந்தத் தேர்களின் தொகையினும் இரட்டித்த தொகையினவாம் (இருபதினுயிரம் பதுமம்); கால் வலி

மையையுடைய, மேலேறிச் செல்லவல்ல குதிரைகள் அந்த யானை களின் தொகையினும் இரட்டித்த தொகையினவாம் (நாற்பதினாயிரம்); ஒட்டகங்களின் தொகை கிண்கிணி மாலை பூண்ட குதிரைகளினும் இரட்டித்து நிரம்பியிருக்கும், (எண்பதினாயிரம்)."

கு :—பதுமம் என்பது ஒரு பேரெண். கோடிக்கும் மேற்பட்டது. நால்வகைப் படையில் காலாட் படையை நீக்கி ஒட்டகப் படையைச் சேர்த்துக் கூறியது கடலை யடுத்துள்ள இடமாதல்பற்றிப் போலும். ஒட்டகம் மணற்பரப்பில் நடக்கும் இயல்பினதாதல் அறிக. (31)

இப்பாடலுக்குப் பின் 52 என்ற எண்ணுள்ள அச்சுப் புத்தகத்தில் 30-1 ஆகப் பின்வரும் பாடல் உளது.

6674. (a) ஈங்கிவை யன்றியும் ஏழுதீவினும்
ஓங்குபா தலத்தினு முயர்ந்த வானத்தும்
தாங்கிய சக்கர வாளச் சார்பினும்
ஆங்கவன் படைதனக் களவை யில்லையால்.

6675. பேயின னென்பல பிதற்றிப் பேர்த்தவன்
மாயிரு ஞாலத்து வைத்த மாப்படை
தேயினு நாளெலாந் தேய்க்க வேண்டுவ
தாயிர வெள்ளமென் றறிந்த தாழியாய்.

'பேயினன் என் பல பிதற்றிப் பேர்த்து? அவன்
மா இரு ஞாலத்து வைத்த மாப்படை
தேயினும் நாள் எலாம், தேய்க்க வேண்டுவது,
ஆயிர வெள்ளம் என்று அறிந்தது, ஆழியாய்!'

பொ :—பேய் போன்ற யான் திருப்பித் திருப்பி (அவனது படை களின் அளவை)ச் சொல்லிக் கொண்டிருப்பதால் என்ன பயன்? அந்த இராவணன் இந்தப் பெரிய நிலத்தின்கண் அமைத்துள்ள பெரிய படை (இந்த உலகுள்ள) நாளெல்லாம் அழித்தாலும் (தாம் ஒழியாமல்) அழிக்க வேண்டியவையாயிருக்கும்; (அவற்றின் மொத்தத் தொகை) ஆயிரம் வெள்ளம் என்று அறியப்பட்டுள்ளன.''

கு :—வெள்ளம் - ஓர் அளவு. பதுமத்திற்கு மேற்பட்டது. (32)

இராவணன் துணைவரின் பெருமை கூறத் தொடங்குதல்

6676. இலங்கையி னரணிது படையி னெண்ணிது
வலங்கையின் வாள்சிவன் கொடுக்க வாங்கிய

அலங்கலந் தோளவன்றுணைவ ரந்தமில்
வலங்களும் வரங்களுந் தவத்தின் வாய்த்தவர்.

'இலங்கையின் அரண் இது, படையின் எண் இது;
வலங்கையின் வாள் சிவன் கொடுக்க வாங்கிய
அலங்கல் அம் தோளவன் துணைவர், அந்தம் இல்
வலங்களும் வரங்களும் தவத்தின் வாய்த்தவர்.'

பொ :—"கீழ்க் கூறியவாறு) இலங்கை நகரின் கோட்டை மதில் இத்தகையது; (அந்த இராவணனது) தானையின் அளவும் இத் தன்மையது; சிவபெருமான் (அருள்புரிந்து) வாட் படையைக் கொடுக்க (அதனை) வாங்கிக் கொண்டுள்ள வெற்றி மாலை சூடிய அழகிய தோள்களையுடைய (அந்த) இராவணனுக்குத் துணையாய் நிற்பவர் எல்லையில்லாத வலிமைகளையும் வரங்களையும் தவத்தின் பயனாகப் பெற்றவராவர்."

கு :—அத்துணைவர்களின் தன்மையை அடுத்துவரும் பாடல் களிற் கூறலுறுகின்றான் வீடணன். அரணிது; எண்ணிது என்றது முடிந்தது முடித்தல் என்னும் உத்தியாற் கூறியதாகும். (33)

இச்செய்யுளின் பின் 52 என்ற எண் உள்ள புத்தகத்தில் 32-1 ஆக ஒரு மிகைப்பாடல் காணப்படுகின்றது :—

6676. (a) ஆயவ ரளவில ரறத்தை நுங்கிய
தீயவர் தேவரைச் செறுத்துத் தேவரூர்
காயெரி படுத்திய கடுமை யார்களில்
நாயக வறிந்தமை நவிலக் கேட்டியால்.

கும்பன் பெருமை

6677. தும்பி யீட்டமு மிரதமும்
புரவியுந் தொடர்ந்த
அம்பொன் மாப்படை யையிரு
கோடிகொண் டமைந்தான்
செம்பொ னூட்டுள சித்தரைச்
சிறையிடை வைத்தான்
கும்ப னென்றுள னூழிவெங்
கதிரினுங் கொடியான்.

தும்பி ஈட்டமும், இரதமும், புரவியும், தொடர்ந்த
அம் பொன் மாப்படை ஐ இரு கோடி கொண்டு அமைந்தான்,

'செம் பொன் நாட்டு உள சித்தரைச் சிறையிடை வைத்தான்
கும்பன் என்று உளன், ஊழிவெங் கதிரினும் கொடியான்.'

பொ :—"யானைக் கூட்டமும் தேர்களும் குதிரைகளும் சேர்ந்த அழகிய பொன்போலருமையான சிறந்த தானைகள் பத்துக்கோடி கொண்டு பொருந்தி யிருப்பவனும், செம்பொன் நாடாகிய தேவ லோகத்திலுள்ள சித்தர்கள் என்னும் தேவ இனத்தாரைச் சிறையிலே அடைத்து வைத்தவனுமாகிய கும்பன் என்று உள்ள துணைவனுனவன் யுகமுடிவில் தோன்றும் வெம்மையான சூரியனைக் காட்டிலும் கொடியவன்."

கு :—செம்பொன் நாடு - தேவலோகம். சித்தர், தேவர்களில் ஒருவகைப் பிரிவினர். சித்தர்களைப் போரில் வென்று சிறையிட்ட பெருமை கும்பன் என்னும் அரக்கனுக்கு உண்டு என்றவாறு. (34)

அகம்பன் பெருமை

6678. உகம்பல் காலமுந் தவஞ்செய்து
பெருவர முடையான்
சுகம்பல் போரலால் வேறிலன்
பெரும்படைத் தொகையான்
நகம்ப லென்றிவை யில்லதோர்
நரசிங்க மனையான்
அகம்ப னென்றுள னலைகடல்
பருகவு மமைவான்

'உகம் பல் காலமும் தவம் செய்து
பெரு வரம் உடையான்,
சுகம் பல் போர் அலால் வேறு
இலன், பொருபடைத் தொகையான்,
நகம் பல் என்று இவை இல்லது ஓர்
நரசிங்கம் அனையான்,
அகம்பன் என்று உளன், அலை கடல்
பருகவும் அமைவான்.'

பொ :—"பல யுக காலம் தவம் புரிந்து பெருவரம் பெற்றவனும், பல போர்த் தொழிலையன்றி இன்பம்தருந் தொழிலாக வேறு எதனையும் கொள்ளாதவனும், போர் செய்யவல்ல சேனைத் தொகுதியையுடையவனும், நகம், பல் என்ற இவை மட்டும் இல்லாத ஒரு

நரசிங்கமூர்த்தியை ஒத்தவனுமான அகம்பன் என்றும் ஒரு துணைவன் உளன்; (அவன்) அலைகளையுடைய கடலை(யே வேண்டுமானாலும்) குடிக்கவல்லவன்."

கு:—நரசிங்கமூர்த்திக்கு உள்ள நகமும் பல்லும் மட்டுமே அகம்பனுக்கு இல்லை; மற்று எல்லா விதத்திலும் ஒத்திருப்பான் என்றவாறு. (35)

நிகும்பன் பெருமை

6679. பொருப்பை மீதிடும் புரவியும்
பூட்கையுந் தேரும்
உருப்ப விற்படை யொன்பது
கோடியு முடையான்
செருப்பெய் வானிடைச் சினக்கடாய்
கடாய்வந்து செறுத்த
நெருப்பை வென்றன னிகும்பனென்
றுளனொரு நெடியோன்.

'பொருப்பை மீதிடும் புரவியும்,
பூட்கையும், தேரும்,
உருப்ப விற்படை ஒன்பது
கோடியும் உடையான்,
செருப் பெய் வானிடைச் சினக் கடாய்
கடாய் வந்து செறுத்த
நெருப்பை வென்றவன், நிகும்பன் என்று
உளன், ஒரு நெடியோன்.'

பொ:—"மலையையும் தாண்டும் குதிரைப் படையும், யானைப் படையும், தேர்ப்படையும் சினத்தையுடைய விற்பிடித்த காலாட் படையுமாக ஒன்பதுகோடியளவு படையுடையவனும், போர்புரிகின்ற வானிலே சீறி எழுகின்ற ஆட்டுக் கடாவைச் செலுத்தி வந்து தடுத்து எதிர்த்த நெருப்புத் தேவனை வென்றவனுமான நிகும்பன் என்று பெயர்கொண்ட வீரன் ஒருவன் உளன்."

கு:—நிகும்பன் இராவணனுக்கு மாமன் முறையாகுபவன் என்பர். நெருப்புத் தேவனின் ஊர்தி ஆட்டுக் கடாய். (36)

மகோதரன் பெருமை

6680. பேயை யாளியை யானையைக்
கழுதையைப் பிணித்த
வாய தேர்ப்படை யையிரு
கோடிகொண் டமைந்தான்
தாயை யாயினுஞ் சலித்திடு
வஞ்சனை தவிரா
மாயை யானுளன் மகோதர
னென்றொரு மறவோன்.

'பேயை யாளியை யானையைக்
கழுதையைப் பிணித்த
ஆய தேர்ப் படை ஐ இரு
கோடி கொண்டு அமைந்தான்
தாயை ஆயினும் சலித்திடு
வஞ்சனை தவிரா
மாயையான் உளன், மகோதரன்
என்று ஒரு மறவோன்.'

பொ :—பேயையும் யாளியையும் கோவேறு கழுதையையும் பூட்டின வாய தேர்ப்படை பத்துக்கோடி கொண்டு பொருந்தின வனும், தாயினிடத்தாயினும் கலங்கச் செய்யும் வஞ்சனைச் செயல் நீங்காத மாயையுடையவனும் ஆகி மகோதரன் என்று பெயர் பூண்ட ஒரு வீரன் உளன்.

கு :—வஞ்சனை செய்யத் தகாதவள் தாய் என்பார், தாயை யாயினும் என உயர்வு சிறப்பும்மை கொடுத்துக் கூறினர். யாவர்க்குந் தாயாகிய சீதையின்பால் சனகனுக மருத்துவனை மாற்றி யனுப்பி மாயஞ் செய்யப் போகின்றமை நினைந்து இங்குத் தாயை யாயினும் சலித்திடு வஞ்சனை தவிரா மாயையான் என மகோதரனைச் சிறப் பித்தவாறு. மறவோன் - வீரத்தையுடையவன். (37)

வேள்விப் பகைஞன் பெருமை

6681. குன்றில் வாழ்பவர் கோடிநா
லைந்தினுக் கிறைவன்
இன்று ளார்பின்னை நாளையி
லாரென வெயிற்றுல்

தின்று ளான் பண்டுதேவரைப்
பன்முறை செருவின்
வென்று ளானுளன் வேள்வியின்
பகைஞனோர் வெய்யோன்.

'குன்றில் வாழ்பவர் கோடி நால்
ஐந்தினுக்கு இறைவன்
"இன்று உளார் பின்னை நாளை
இலார்" என எயிற்றால்
தின்றுளான், பண்டு தேவரைப்
பல் முறை செருவின்
வென்றுளான், உளன், வேள்வியின்
பகைஞன், ஓர் வெய்யோன்.'

பொ:—மலையில் வாழ்பவராகிய இருபதுகோடி வீரர்க்குத் தலைவனும், இன்றைக்கு இருப்பவர் பின் நாளைக்கு இல்லை என்று எவரும் துணியுமாறு தன் பற்களால் மக்களைத் தின்னும் இயல்புள்ளவனும், முன்னர்த் தேவரைப் பலமுறைப் போரில் வென்றவனும், வேள்வியின் பகைஞன் என்ற பெயருடையவனுமாகிய ஒரு கொடியோன் உளன்.

கு:—'இன்றுளார் பின்னை நாளையிலார் என' என்பது "இன்றுளேன் நாளையில்லேன் என் செய்வான் தோன்றினேனே" (4-78-1) என்ற திருநாவுக்கரசரின் வாக்கினை நினைப்பித்தல் காணலாம். வேள்விப் பகைஞன் வாழ்க்கையில் யாரும் 'இன்றிருக்கின்றோம்; நாளைக்கும் இருப்போம்' என உறுதியாக எண்ணமுடியாதபடி தின்று தீர்ப்பான் என அவன் கொடுமையின் பெருமை புலப்படுத்தியவாறு. அவன் ஆட்சியில் மக்கள் நிலையாமையை நன்கு உணர்ந்திருந்தனர் என்றவாறு. தேவரைப் பன்முறை செருவின் வென்றுளான் எனவே அவன் வலிமை புலப்படுத்தியவாறாயிற்று. (38)

சூரியன் பகைஞன் பெருமை

6682. மண்ணு ளாரையும் வானினுள்
ளாரையும் வகுத்தால்
உண்ணு நாளொரு நாளினி
லொளிர்படைத் தானை

எண்ணி னலிரு கோடிய
　　னெரியஞ்ச விழிக்கும்
கண்ணி ஞனுளன் சூரியன்
　　பகையென்றோர் கழலான்.

'" மண் உளாரையும் வானின்
　　உள்ளாரையும் வகுத்தால்,
உண்ணும் நாள் ஒரு நாளினில் "
　　ஒளிர் படைத் தானை
எண்ணின் நால் இரு கோடியன்,
　　எரி அஞ்ச விழிக்கும்
கண்ணினன் உளன், சூரியன்
　　பகை என்று ஓர் கழலான்.'

பொ :—இம்மண்ணுலகத்துள்ளவர்களையும் விண்ணுலகத்துள்ள வர்களையும் சேர்த்து வகைப்படுத்தி வைத்தால் ஒரு நாளில் அவ்விரு திறத்தவர்களின் ஆயுள் நாளையும் கவரும் தன்மையனும், ஒளிர்கின்ற படைக் கலங்களையுடைய அவன் சேனையை எண்ணினால் எட்டுக்கோடி என்னும் அளவையுடையவனும், நெருப்பும் அஞ்சுமாறு விழித்துப் பார்க்கும் கண்ணினையுடையவனும் ஆகிய சூரியன் பகைஞன் என்று ஒரு வீரக் கழலணிந்த வீரன் உளன்.

கு :—சூரியன் பகைஞனுடைய ஒரு நாள் போர்க்கு மண்ணுலகத்தவர் அனைவரும் போதாமையின் விண்ணுளாரையும் சேர்த்து அணிவகுத்து நிறுத்தவேண்டும் என்றவாறு. இதனால் அவன் ஆற்றல் புலப்படுத்தியவாறு. எண்ணினால் இருகோடி எனப் பிரித்தலும் ஆம். இதனால் அவன் சேனையின் அளவு கூறியவாறு. அவன் கண்ணொளியின் மிகுதி புலப்படுத்த வேண்டி 'எரியஞ்ச விழிக்கும் கண்ணினன்' என்றார். கண்ணிற்குப் பிறப்பிடமாகிய நெருப்பும் அஞ்சத்தக்க விழி என்றவாறு. (39)

பெரும்பக்கன் பெருமை

6683. தேவருந் தக்க முனிவருந்
　　திசைமுகன் முதலா
மூவரும் பக்க நோக்கியே
　　மொழிதர முனிவான்

தாவரும் பக்க மெண்ணிரு
கோடியின் றலைவன்
மாபெரும் பக்க னென்றுளன்
குன்றினும் வலியான்.

'தேவரும், தக்க முனிவரும், திசை முகன் முதலா
மூவரும் பக்கம் நோக்கியே மொழிதர, முனிவான்,
தாவரும் பக்கம் எண்—இரு கோடியின் தலைவன்,
மா பெரும் பக்கன் என்று உளன், குன்றினும் வலியான்.'

பொ :—தேவர்களும் தகுதிமிக்க முனிவர்களும் பிரமன் முதலாகிய மும்மூர்த்திகளும் பக்கம் பார்த்தே பேசுமாறு பெருங்கோபங் கொள்பவனும், வலிமை பொருந்திய சேனை பதினாறு கோடிக்குத் தலைவனும், ஆகிய பெருமையுடைய பெரும் பக்கன் என்று மலையினும் வலியவன் ஒருவன் உளன்.

கு :—பெரும்பக்கன் வெகுளிக்கு ஆளாக நேருமோ என்ற அச்சத்தால் தேவர் முதலியோர் பக்கம் பார்த்தே பேசுவார்கள் என்றதால் அவன் சினத்தின் சிறப்புப் புலப்படும். தா - வலிமை. பக்கம் - சேனை. (40)

வச்சிரதந்தன் பெருமை

6684. உச்சி ரத்தெரி கதிரென
வுருத்தெரி முகத்தன்
நச்சி ரப்படை நாலிரு
கோடிக்கு நாதன்
முச்சி ரத்தயிற் றலைவற்கும்
வெலற்கரு மொய்ம்பன்
வச்சி ரத்தெயிற் றவனுளன்
கூற்றுவன் மாற்றான்.

உச்சிரத்து எரி கதிர் என உருத்து எரி முகத்தன்,
நச்சிரப்படை நால்—இரு கோடிக்கு நாதன்,
முச்சிரத்து அயில் தலைவற்கும் வெலற்கு அரும் மொய்ம்பன்,
வச்சிரத்து எயிற்றவன், உளன், கூற்றுவன் மாற்றான்.

பொ :—தலைக்கு மேலாக நண்பகலில் வெயில் வீசுகின்ற சூரியனைப் போலக் கோபித்து எரிகின்ற முகத்தையுடையவனும், சிறந்த

தலைமையான எட்டுக்கோடி சேனைக்குத் தலைவனும், மூன்று தலையினையுடைய சூலப்படை தாங்கிய உருத்திரனுக்கும் தடுத்தற்கு அரிய வலிமையுடையவனும் ஆகிய வச்சிரதந்தன் என்ற பெயருடையவனான கூற்றுவனுக்குப் பகைவன் ஒருவன் உளன்.

கு :—நண்பகலில் சூரியன் மிக்க வெப்பத்துடன் வெயில் வீசும் இயல்பு நினைந்து வச்சிரதந்தனது உருத்தெரிமுகத்திற்கு உவமை கூறியவாறு. நண்பகலில் சூரியன் யார்க்கும் தலைக்குமேல் இருத்தல் இயல்பு. உ என்பது மேலிடத்தை யுணர்த்திற்று; உம்பர் என்புழிப் போல. உச்சிரம் - தலைக்குமேல். நச்சிரப்படை என்புழி'ந, சிறப் புணர்த்தும் இடைச்சொல். சிரம் என்பது இலக்கணையால் தலைமையை யுணர்த்தியது. நச்சிரம் - சிறந்த தலைமை. முச்சிரத்து அயில் என்றது மூவிலைச் சூலத்தை; அதையுடைய தலைவன் என்றது உருத்திரனை; எமனைக் குறித்ததாகவும் கொள்ளலாம். கூற்றுவன் எமனுக்குத் தூதுவன் என்பது முன்னுங் கூறப்பட்டது. (41)

பிசாசன் பெருமை

6685. அசஞ்ச லப்படை யையிரு
கோடிய னமரின்
வசஞ்செ யாதவன் றானன்றிப்
பிறரிலா வலியான்
இசைந்த வெஞ்சமத் தியக்கரை
வேரொடு முன்னாள்
பிசைந்து மோந்தவன் பிசாச
னென்றுள னொருபித்தன்.

அசஞ்சலப் படை ஐ—இரு கோடியன், அமரின்
வசம் செயாதவன், தான் அன்றிப் பிறர் இலா வலியான்,
இசைந்த வெஞ்சமத்து இயக்கரை வேரொடும் முன் நாள்
பிசைந்து மோந்தவன், பிசாசன் என்று உளன், ஒரு பித்தன்.

பொ :—பகைவரைக் கண்டு நடுக்கம் அடையாத பத்துக்கோடி சேனையை யுடையவனும், போரில் தன்னால் வெல்லப்படாதவன் தான் ஒருவனே அன்றிப் பிறர் யாரும் இல்லாத வலிமையுடையவனும், இசைந்து செய்த கொடிய போரில் இயக்கரை முன்னாளில் அடியோடு அழித்து அவர் உடலைக் கையால் பிசைந்து மூக்கால் மோந்தவனுமான பிசாசன் என்று ஒரு போர்ப்பித்தன் இருக்கின்றான்.

கு :—சஞ்சலம் - நடுக்கம். பகைவரைக் கண்டு நடுங்காத படை என்பார் ‘அசஞ்சலப்படை’ என்றார் அமரின் வசம் செய்தல் என்பது போரில் தோல்வியுறச் செய்தல். பிசாசனோடு போர்க்குச் சென்றவர் எவரும் வசஞ் செயப்பட்டவர்களே என்பார், ‘வசம் செயாதவன் தானன்றிப் பிறரிலா வலியான்’ என்றார். தன்னொடு தான் பொருதலும் தோல்வியுறுதலும் என்றும் நிகழா நிகழ்ச்சி என்பது தெளிவு. இயக்கர் என்பார் தேவர்களில் ஒருவகையினர், இயக்கர் உடன்பட்டே போர் செய்தனர் என்பது தோன்ற ‘இசைந்த வெஞ் சமம்’ என்றார். ஒத்த வலிமையுடையாரால் செய்யப்படுவது என்ற காரணம் புலப்படப் போரினைச் ‘சமம்’ என்ற சொல்லால் குறித்தவாறு. பிசாசன் தன் கையால் பிசைந்து மோந்து பார்க்கும் அளவிற்கு இயக்கர் எளியராயினர் என்றவாறு. தீ நாற்றமுள்ள பொருளை மோந்து மகிழ்தல் கீழோர் இயல்பு ஆகலின், பிசாசன் இயக்கரைப் பிசைந்து மோந்தான் என்க. போரையே விரும்பும் இயல்பினன் ஆதலின் பிசாசன் பித்தன் எனப்பட்டான். (42)

6686. சில்லி மாப்பெருந் தேரொடுங்
கரிபரி சிறந்த
வில்லின் மாப்படை யேழிரு
கோடிக்கு வேந்தன்
கல்லி மாப்படி கலக்குவன்
கனலெனக் காந்திச்
சொல்லு மாற்றத்தன் றுன்முக
னென்றறந் துறந்தோன்.

‘சில்லி மாப்பெருந் தேரொடும்,
கரி, பரி, சிறந்த
வில்லின் மாப்படை ஏழ்—இரு
கோடிக்கு வேந்தன்,
கல்லி மாப்படி கலக்குவன்,
கனல் எனக் காந்திச்
சொல்லும் மாற்றத்தன் துன்முகன்
என்று அறம் துறந்தோன்.’

பொ :—சக்கரத்தோடு கூடிய மிகப் பெரிய தேர்ப்படையோடு யானைப்படையும் குதிரைப்படையும் சிறந்த வில்லினையுடைய பெரிய காலாட்படையுமாகிய பதினான்கு கோடிப் படைக்குத் தலைவனும், தோண்டுவானாயின் பெரிய பூமியையே கலக்குபவனும், நெருப்பைப்

போலக் காந்திப் பேசுகின்ற சொல்லையுடையவனும் ஆகிய தருமத்தைக் கைவிட்ட துன்முகன் என்பவன் ஒருவன் உளன்.

கு :—ஒருவன் உளன் என்ற பயனிலை இசையெச்சமாக வருவிக்கப்பட்டது. சில்லி - தேர் உருளை. வில்லின் மாப்படை என்றது காலாட்படையை. கல்லுதல் - தோண்டுதல். மாப்படி - பெரிய பூமி. காந்திச் சொல்லுதலாவது, வெகுண்டு பேசுதல். (43)

விருபாக்கன் பெருமை

6687. இலங்கை நாட்டன்ன வெறிகடற்
றீவிடை யுறையும்
அலங்கல் வேற்படை யையிரு
கோடிக்கு மரசன்
வலங்கொள் வாட்டொழில் விஞ்சையர்
பெரும்புகழ் மறைத்தான்
விலங்கு நாட்டத்த னென்றுளன்
வெயிலுக விழிப்பான்.

இலங்கை நாட்டன்ன எறிகடல்
தீவிடை உறையும்
அலங்கல் வேற்படை ஐ—இரு
கோடிக்கும் அரசன்,
வலம் கொள் வாள் தொழில் விஞ்சையர்
பெரும் புகழ் மறைத்தான்,
விலங்கு நாட்டத்தன் என்று உளன்
வெயில் உக விழிப்பான்.

பொ :—இலங்கை நாட்டை ஒத்த அலை வீசுகின்ற கடலின் இடையில் உள்ள, வேறு தீவில் தங்கியுள்ள, வெற்றிமாலை யணிந்த வேல் தாங்கிய சேனை பத்துக் கோடிக்குத் தலைவனும், வலக்கையில் கொண்ட வாளால் செய்யும் போர்த் தொழிலில் வல்ல வித்தியா தரரின் பெரும் புகழை மறைத்தவனும் ஆகிய விலங்கு நாட்டத்தன் என்று பெயர் பெற்ற, வெயில் போன்ற ஒளி சிந்துமாறு கடுமையாக விழித்துப் பார்க்கின்றவன் ஒருவன் உளன்.

கு :—விலங்கு நாட்டத்தன் என்றது நேரே பாராது குறுக்கே பார்க்கின்றவன் என்ற காரணம் பற்றி வந்த பெயர்; இப்பெயர் விருபாக்கன் என்னும் வடமொழித் திரிபாகவும் சொல்லப்படும்.

இவன் இலங்கை போன்ற வேறு ஒரு தீவில் இருப்பவன். இலங்கை நாட்டன்ன தீவு, எறிகடற்றீவு என இயையும். வேலுக்கு மாலை யணியும் வழக்குண்மையின் அலங்கல் வேல் என்ருன். வேற்படை என்றது வேலேந்திய படையை. விருபாக்கன் விஞ்சையரை வென்றவன் என்பார், 'விஞ்சையர் பெரும்புகழ் மறைத்தான்' என்ருர். வேற்ருெழில் வல்ல விருபாக்கன் வாட்டொழில்வல்ல விஞ்சையரை வென்று அவர் தம் வாட்டொழிலால் வந்த புகழைக் கெடுத்தான் என்றவாறு. (44)

தூமநாட்டத்தின் பெருமை

6638. நாம நாட்டிய சவமெலா
நாடொறு மொருவர்
ஈம நாட்டிடை யிடாமற்றன்
னெயிற்றிடை யிடுவான்
தாம நாட்டிய கொடிப்படைப்
பதுமத்தின் றலைவன்
தூம நாட்டத்த னென்றுளன்
றேவரைத் துரந்தான்.

நாமம் நாட்டிய சவம் எலாம் நாள்தொறும் ஒருவர்
ஈம நாட்டிடை இடாமல்தன் எயிற்றிடை இடுவான்,
தாமம் நாட்டிய கொடிப் படைப் பதுமத்தின் தலைவன்,
தூம நாட்டத்தன் என்று உளன் தேவரைத் துரந்தான்.

பொ :—பிறர்க்கு அச்சத்தை யுண்டாக்கிய வீரரின் சவம் எல்லாவற்றையும் பிறர் ஒருவர் இடுகாட்டில் இடாதபடி நாள்தொறும் தன் பற்களையுடைய வாயில் இடும் இயல்புடையவனும், மாலையணியப் பெற்ற வெற்றிக் கொடி யேந்திய பதுமம் என்ற எண்ணளவுள்ள சேனைக்குத் தலைவனும் தேவரைத் தோற்று ஓடுமாறு துரத்தியவனும் ஆகிய புகைக் கண்ணன் என்று பெயருடைய ஒருவன் உளன்.

கு :—நாம் - அச்சம். அம்சாரியை பெற்று நாமம் என நின்றது. நாம நாட்டிய சவம் என்றது, பகைவர்க்கு அச்சத்தை விளைத்துப் போர் செய்து பிறகு அப்பகைவரால் மாண்டவருடைய பிணத்தை. எமனுல் இயல்பாக இறந்தவர்களின் சவத்தை விடுத்து வீரமரணம் எய்தியவரின் சவத்தையே உண்ணும் இயல்பினன் தூமாட்சன் என்றவாறு. மேலும் மேலும் தனக்கு வீரவுணர்ச்சி பெருக வேண்டி வீரமரணம் எய்தியவரின் உடம்புகளை இடுகாட்டில் இடவிடாது தன்

வாயிடையிட்டான் என்க. ஈமநாடு என்றது இடுகாட்டை. எயிற்றிடை யிடுவான் என்புழி எயிறு ஆகுபெயராய் வாயை யுணர்த்தியது. பதுமம் என்பது ஒரு பேரெண். தாமம் - மாலை. கோபப் புகையைக் கக்கும் கண்களை யுடைமையால் இவன் தூமநாட்டத்தன் எனப் பெயர் பெற்றான். காரணப் பெயர். தூமாட்சன் என வடமொழியில் பெயர் பெற்றவன் இவன். தேவரைப் பின்னிடச் செய்த வெற்றியன் இவன். (45)

போர்மத்தன், வயமத்தன் பெருமை

6689. போரின் மத்தனும் பொருவய
மத்தனும் புலவர்
நீரின் மத்தெனும் பெருமையர்
நெடுங்கடற் படையார்
ஆரு மத்தனை வலியுடை
யாரிலை யவரால்
பேரு மத்தனை யெத்தனை
யுலகமும் பெரியோய்.

'போரில் மத்தனும், பொருவய மத்தனும், புலவர்
நீரில் மத்து எனும் பெருமையர்; நெடுங் கடற் படையார்;
ஆரும் அத்தனை வலி உடையார் இலை; அவரால்
பேரும், அத்தனை எத்தனை உலகமும்; பெரியோய்!

பொ :—பெரியோனே! போர்மத்தனும், போர் செய்யவல்ல வயமத்தனும், தேவர்களால் பாற்கடலில் இடப்பட்ட மந்தரமலையாகிய மத்து என்று சொல்லத்தக்க பெருமையுடையவர்கள்; நீண்ட கடல் போன்ற பெரிய சேனையை யுடையவர்கள்; அவர்கள் அளவு வலிமையுடையவர்கள் யாரும் இவ்வுலகத்து இல்லை; அவ்விருவரால் எத்தனை உலகம் உண்டோ அத்தனை உலகமும் நிலைகெட்டுப் பெயரும்.

கு :—இச்செய்யுளில் மத்து என்ற சொல் பன்முறைவரத் தொடுத்தமையால் இது சொற்பின் வருநிலை யணி எனப்படும். போர்மத்தன் வயமத்தன் என்பவர் இரட்டையர் போலும். கட்டித் தயிரை யுடைக்கின்ற மத்துப்போலப் பகைவர் அணிவகுப்பை உடைக்கும் திறமைபற்றி வந்த காரணப் பெயரே மத்தன் என்பது. போர்மத்தனை ரணமத்தன் என்பர் வடநூலோர். வயமத்தன் - வலிய மத்துப் போன்றவன். பேர்தல் - நிலைதடுமாறுதல். புலவர்

என்றது தேவரை. இனிப் புலமையுடையோர் எனம் பொருள் கொண்டு புலவர்கள், கடலில் இட்ட மந்தரமலையாகிய மத்தே என்று புகழ்தற்குக் காரணமான பெருமையுடையவர் எனக் கூலுறம் ஆம். நீர் என்றது ஆகுபெயராய்க் கடலை உணர்த்தியது; அது இலக்கணை யால் திருப்பாற்கடலை உணர்த்தியது. (46)

பிரகத்தன் பெருமை 6690-6691

6690. இன்ன தன்மைய ரெத்தனை
யாயிர ரென்கேன்
அன்ன வன்பெருந் துணைவரா
யமர்த்தொழிற் கமைந்தார்
சொன்ன சொன்னவர் படைத்துணை
யிரட்டியின் றொகையான்
பின்னை யெண்ணுவான் பிரகத்த
னென்றொரு பித்தன்.

இன்ன தன்மையர் எத்தனை
ஆயிரர் என் கேன்—
அன்னவன் பெருந் துணைவராய்,
அமர்த் தொழிற்கு அமைந்தார்?
சொன்ன சொன்னவர் படைத்துணை
இரட்டியின் தொகையான்
பின்னை எண்ணுவான் பிரகத்தன்
என்று ஒரு பித்தன்.

பொ:—அந்த இராவணனுக்குப் பெருந்துணைவராய்ப் போர் செய்யும் தொழிலுக்கென்றே அமைந்தவர் இப்படிப்பட்ட தன்மை யுடையவர் எத்தனை ஆயிரவர் என்று கணக்கிட்டுச் சொல்வேன்? (கணக்கிட இயலாதவர் என்றவாறு) இதுகாறும் சொல்லி வந்தவர் களின் சேனையின் அளவுக்கு இரட்டியாகிய தொகையுள்ள பெருஞ் சேனையுடைய சிறப்பினுல் பின் எண்ணத்தக்கவனுகிய பிரகத்தன் என்று ஒரு பித்தன் இருக்கின்ருன்.

கு:—இதுகாறும் கூறிய துணைவர்களின் சேனைக்கு இரட்டிப் பான சேனையுடையவன் பிரகத்தன் என்றவாறு. இரட்டியின் தொகையான் பின்னை எண்ணுவான்' என்ருர்; சிறப்புடைப் பொருளை முன்னர்க் கூறுவதுபோலப் பின்னர்க் கூறலும் மரபே ஆதலின். போரில் மிக்க பற்றுள்ளவன் ஆதலின் பித்தன் என்ருர். (47)

6691. சேனை காவல னிந்திரன் சிந்துரச் சென்னி
யானை கால்குலைந் தாழியோ ரேழும்விட் டகல
ஏனை வானவ ரிருக்கைவிட் டிரியலுற் றலையச்
சோனை மாரியிற் சுடுகணை பலமுறை துரந்தான்.

சேனை காவலன்; இந்திரன் சிந்துரச் சென்னி
யானை கால் குலைந்து ஆழி ஓர் ஏழும் விட்டு அகல,
ஏனை வானவர் இருக்கை விட்டு இரியலுற்று அலையச்
சோனை மாரியின் சுடு கணை பலமுறை துரந்தான்.

பொ :—(அந்தப் பிரகத்தன் இராவணனுடைய) சேனைத் தலைவன்; இந்திரனுடைய சிந்துரம் அப்பிய மத்தகத்தையுடைய ஐராவதம் என்னும் யானை கால் தடுமாறி ஏழு கடல்களையும் தாண்டி அஞ்சி ஓடவும், மற்றும் உள்ள தேவர்கள் தம் இருப்பிடத்தை விட்டு ஓடி அலையவும், சுடுகின்ற அம்புகளை விடாமழை போலும்படி பல முறை எய்தவன்,

கு :—இந்திரன் யானை என்றது ஐராவதத்தை. யானையின் சென்னியில் சிந்துரம் அழகுற அணிதல் மரபு ஆதலின், 'சிந்துரச் சென்னி யானை' என்றார், இந்திரன் யானை ஆழியோர் ஏழும் விட்டு அகன்றது கூறவே இந்திரன் ஓடியதும் உணர்த்தியவாறாயிற்று. பிரகத்தன் விடுத்த கணைமழைக்கு அஞ்சி ஐராவதம் கால் குலைந்து ஓடிற்று என்க. அகல, அலையச் சுடுகணை துரந்தான் என இயையும். சோனைமாரி - விடாமழை. பிரகத்தன் இந்திரனையும் தேவர்களையும் தோற்றோடச் செய்தவன் என்பது இச்செய்யுளால் கூறியவாறு. இரியல் - ஓடுதல், துரத்தல் - செலுத்துதல். (48)

கும்பகன்னன் பெருமை

6692. தம்பி முற்பகற் சந்திரர்
நால்வரிற் றயங்கும்
கும்ப மால்கரிக் கோடிரு
கைகளால் வாங்கிச்
செம்பொன் மால்வரை மதம்பட்ட
தாமெனத் திரிந்தான்
கும்ப கன்னனென் றுளன்பண்டு
தேவரைக் குமைத்தான்.

தம்பி ; முற் பகல் சந்திரர் நால்வரில் தயங்கும்
கும்ப மால்கரிக் கோடு இரு கைகளால் வாங்கிச்
செம்பொன் மால்வரை மதம் பட்டதாம் எனத் திரிந்தான்,
கும்ப கன்னன் என்று உளன் பண்டு தேவரைக் குமைத்தான்.

பொ :—இராவணக்குத் தம்பி ; முதல் நாள் தோன்றிய பிறைச் சந்திரர் நால்வர்போல் விளங்குகின்ற, மத்தகத்தையுடைய பெரிய ஐராவதம் என்னும் யானையின் கொம்புகளை இரு கைகளால் பறித்துக் கொண்டு, செம்பொன்னாலாய பெரிய மேருமலை மதம்பட்டது என்னு மாறு திரிந்து முற்காலத்தில் தேவர்களை அடித்தவனாகிய கும்ப கன்னன் என்று ஒருவன் உளன்.

கு :—முற்பகற் சந்திரன் என்றது பிறைச்சந்திரனை. அமவாசைக்குப் பின் விண்ணில் சந்திரன் முதலில் தோன்றும் நாள் பிறை மதி நாளேயாதலின் முற்பகற் சந்திரன் என அப்பிறையினைக் குறித் தார், முற்பகல் - முன்னாள் ; முதல்நாள். ஐராவதத்தின் நான்கு கோடுகட்கும் உவமை கூறவேண்டி 'முற்பகற் சந்திரர் நால்வரில் தயங்கும் கோடு' என இல்பொருளுவமை கூறினார். யானை மருப் பிற்குப் பிறையை உவமை கூறுவதுண்டு. 'பெருகுசூலிடம் பிடிக் கொரு பிறைமருப்பியானை' (அயோத்தி சித்திரகூடப்-10) என முன் னும் கூறியுள்ளது காணலாம். தழைவிரி கடுக்கை மாலைத் தனி முதற் சடையிற் சூடும் குழவிவெண் டிங்களிற்ற கோட்டது குறை யென்றெண்ணிப் புழை நெடுங் கரத்தாற் பற்றிப் பொற்புற விணைத்து நோக்கும் மழைமதக் களிற்றின் செய்ய மலரடி சென்னி வைப்பாம்" (நைடதம் - 1) என அதிவீரராமன் கூறியதும் இங்கு ஒப்பு நோக்கலாம். நான்கு கோடுகளை இரு கைகளால் வாங்கி எனவே ஒரு கையில் இரு கொம்புகளைப் பறித்தமை புலப்படும், கும்பகன்னன் சிறு முயற்சியுமின்றி அக்கொம்புகளைப் பறித்தமை புலப்பட 'வாங்கி' என்றார். ஐராவதம் தானே கொடுக்க வாங்கிக் கொண்டதுபோல வாங்கினான் என்றவாறு. வேறு ஆயுதம் தேடாது இந்திரனது யானையின் கொம்புகளைப் பறித்து அவற்றையே ஆயுத மாகக் கொண்டு தேவர்களை அடித்தான் என்றவாறு. இதனால் கும்ப கன்னன் வலிமையும் தேவர்கள் எளிமையும் புலப்படுத்தியவாறு. குமைத்தல் - அடித்தல். 'குமைதின்பர்கள்' (திவ் - திருவாய்மொழி, 4-1-2) என்பது காண்க. கோடிரு கைகளால் வாங்கித் திரிந்தானாய்க் குமைத்தான் என இயையும், மேருமலையைத் தோற்றத்தால் ஒத்த கும்பகன்னன், திரிவதால் மதம்பட்ட யானை போன்றனன் என்பார், 'செம்பொன் மால்வரை மதம் பட்ட தாமெனத் திரிந்தான்' எனத் தற்குறிப்பேற்றமாகக் கூறினார். மால்வரை மதம்படல் இன்மை தெளிவு. (49)

இந்திரசித்தின் பெருமை

6693. கோளி ரண்டையுங் கொடுஞ்சிறை
வைத்தவக் குமரன்
மூளும் வெஞ்சினத் திந்திர
சித்தென மொழிவான்
ஆளு மிந்திரற் கன்னவன்
பிணித்ததற் பின்னைத்
தாளி னும்முள தோளினு
முளவினந் தழும்பு.

'கோள் இரண்டையும் கொடுஞ்சிறை வைத்தவக் குமரன்
மூளும் வெஞ்சினத்து இந்திர சித்து என மொழிவான்;
ஆளும் இந்திரற்கு அன்னவன் பிணித்ததன் பின்னைத்,
தாளினும் உள, தோளினும் உள, இனம் தழும்பு.'

பொ:—சூரிய சந்திரர் என்ற கோள்கள் இரண்டையும் கொடுமையான சிறையில் வைத்தவனாகிய அவ் இராவணன் மகன் பெருகுகின்ற கொடிய கோபத்தையுடைய இந்திரசித்து எனச் சொல்லப்படுவான்; அவன், (இந்திரனைக்) கட்டிய பிறகு விண்ணுலகை ஆளும் அந்த இந்திரனுக்குக் கால்களிலும் தோள்களிலும் இன்னும் (கட்டுப்பட்ட) வடுக்கள் இருக்கின்றன.

கு:—கோளிரண்டையும் இராவணன் கொடுஞ்சிறை வைத்த செய்தி சூர்ப்பணகையால் முன்னமே சொல்லப்பட்டுளது: "கூற்றினையும் விண்ணினையும் கோளினையும் பணிகொண்டற் காற்றினை நீ யீண்டிருவர் மானுடவர்க் காற்றுது, மாற்றினையோ வுன்வலத்தைச் சிவன் தடக்கை வாள்கொண்டாய்" (சூர்ப்பணகைப் - 104) எனவும், 'இளங்கோவோ டெனையிருத்தின் இருகோளுஞ் சிறை வைத்தாற் இளையேன் என்றாள்' (140) எனவும் சூர்ப்பணகை இராவணனை விளித்தும் இராமனைப் பார்த்தும் கூறியுள்ளமை காணலாம். "சந்திரனிரவி யென்பவர் கடாமவன் சிந்தனை வழிநிலை திரிவர்" (சடாயு உயிர் நீத்த - 45) எனவும், "வாரிவைத்தவெங் கோளுடைச் சிறையினன்" எனவும் தவவேடம் பூண்டஇராவணன் கூறுவதும் காண்க. (சடாயு உயிர் நீத்த - 47) 'சிறை வைத்தவக் குமரன்' என்ற பாடமே அச்சுப் புத்தகங்களிலும் பல ஏடுகளிலும் காணப்படுகின்றன. கோபால கிருஷ்ணமாச்சாரியார் இப் பாடமே கொண்டு சிறை வைத்தவன் குமரன் என்று பொருள் வரைந்துள்ளார். பாடமும் உரையும் வேறு படாமல் சிறை வைத்தவன் குமரன் என்றே பாடம் இருப்பின் சிறக்கும். இலங்கைக் கையெழுத்

துக் குறிப்பிலும் இராவணன் மகனென்றே பொருள் வரையப் பட்டுள்ளது. கோளிரண்டையும் சிறை வைத்த செய்தி இராவண னுக்கன்றி இந்திரசித்துக்கு இயையாமையும் வைத்த அக் குமரன் எனின் சுட்டுக்குப் பொருள் இல்லாமையும் காண்க. தந்தையின் செயலை மகன் மேலேற்றிக் கூறியதாக ஒருவாறு அமைதி கூறலாம். இந்திரனை இந்திரசித்துப் பிணித்த செய்தி, "தானவரைக் கருவ றுத்துச் சதமகனைத் தளையிலிட்டு வானவரைப் பணிகொண்ட மருகாவோ மருகாவோ" (சூர்ப்பணகை - 111) எனவும், "இருகாலிற் புரந்தரனை இருஞ்சிறையினிடுவித்த மருகாவோ" எனவும் முன்னமே சூர்ப்பணகையால் சொல்லப்பட்டிருத்தல் காணலாம். (50)

அதிகாயன் பெருமை

6694. தன்னை யுந்தெறுந் தருமமென்
றிறைமனந் தாழான்
முன்ன வன்றரப் பெற்றதோர்
முழுவலிச் சிலையான்
அன்ன வன்றனக் கிளையவ
னப்பெய ரொழித்தான்
பின்னொ ரிந்திர னிலாமையிற்
பேரதி காயன்.

தன்னையும் தெறும் தருமம் என்று இறை மனம் தாழான்,
முன்னவன் தரப் பெற்றது ஓர் முழுவலிச் சிலையான்,
அன்னவன் தனக்கு இளையவன், அப் பெயர் ஒழித்தான்,
பின் ஒர் இந்திரன் இலாமையின்; பேர் அதிகாயன்.

பொ :—(அறத்திற்கு மாறாக நடந்தால்) தன்னையும் அறக்கடவுள் அழிக்கும் என்று சிறிதேனும் மனதில் நினைந்து தீமை செய்தலில் காலம் தாழ்த்தாதவன், (விரைந்து பாவங்களையே செய்பவன்) உலகத்திற்கு முன்னவனாகிய பிரமன் கொடுக்கப்பெற்ற நிறைந்த வலிமையுடைய வில்லையுடையவன், அவ் இந்திரசித்துக்குத் தம்பி; மேலும் ஓர் இந்திரன் இல்லாமையால் அந்த இந்திரசித்து என்ற பெயரைப் பெறாது விடுத்தவனாய்ப் பெயர் அதிகாயன் எனப் பெற் றவன் ஒருவன் உளன்.

கு :—தெறுதல் - அழித்தல். எப்பொழுதும் தீமையே செய் தற்குக் காரணம் கூறுவாராய், 'தன்னையுந்தெறும் தருமம் என்று இறை மனம் தாழான்' என்றார். இறை - சிறிது. தாழான் - காலம்

தாழ்த்தாதவன். இராவணன் மகனாகிய தன்னை அறக்கடவுள் ஒன்றும் செய்ய இயலாது என்ற எண்ணத்தால் பாவங்களை அஞ்சாது செய்பவன் என்றவாறு. தன்னையும் என்புழி உம்மை உயர்வு சிறப்புப் பொருளோடு இறந்தது தழுவிய எச்சப்பொருளிலும் வந்தது. ஏனையோரைத் தெறும் தருமம் இராவணன் மகனாகிய தன்னையும் தெறும் என்று எண்ணாதவன் என்றவாறு. முன்னவன் என்றது பிரமனை. மேலும் ஓர் இந்திரன் இருந்திருந்தால் அவனை வென்று அதிகாயனும் இந்திரசித்து எனப் பெயர் பெற்றிருப்பான், என்பார் பின்னொரிந்திரன் இலாமையின் அப் பெயரொழித்தான், என்றார். ஒழித்தானாய்ப் பெயர் அதிகாயன் எனப் பெற்றவன் ஒருவன் உளன், என முற்றெச்சமாக்கி, இசையெச்சமாக வேண்டும் சொற்களை வருவித்து முடிக்க. அதிகாயன் இந்திரசித்தோடு ஒத்த வலிமையுடையவன் என்றவாறு. (51)

தேவாந்தகன், நராந்தகன், திரிசிரன் என்பார் பெருமை

6695. தேவ ராந்தக னராந்தகன்
திரிசிரா வென்னும்
மூவ ராந்தகை முதல்வராந்
தலைவரு முனையில்
போவ ராந்தகை யழிவ
ராமெனத் தனிப்பொருவார்
ஆவ ராந்தகை யிராவணற்
கரும்பெறற் புதல்வர்.

தேவ ராந்தகன் நராந்தகன், திரிசிரா, என்னும்
மூவர் ஆம் "தகை முதல்வராம் தலைவரும் முனையில்
போவராம்; தகை அழிவராம்" எனத் தனிப் பொருவார்
ஆவராம் தகை இராவணற்கு அரும் பெறற் புதல்வர்.

பொ:—தேவராந்தகன், நராந்தகன், திரிசிரா என்று பெயர் பெற்ற மூவர்—'பெருமைக் குணமுடைய உலகத்திற்கு முதல்வராய தலைவர் மும்மூர்த்தியரும் அவர்களோடு போர் முனைக்கண் போவராம் எனின், தம் பெருமை யழிவராவர்' என்று உலகம் சொல்லுமாறு தனித் தனிப் போர் புரிபவர்; பெருமையுடைய இராவணனுக்குப் பெறுதற்கு அரிய சிறந்த புதல்வர் ஆவர்.

கு:—மூவராம் என்புழியும் ஆவராம் என்புழியும் ஆம் அசை நிலை. என்னும் மூவர், தனிப் பொருவார், இராவணற்கு அரும் பெறற்

புதல்வர் ஆவர் என இயையும். முனையிற் போவராம் எனின் தகையழிவராம் என' என்று ஒரு சொல் வருவிக்கப்பட்டது. சொற் பின் வருநிலை யணி பொருந்த ஆம் என்ற சொல் பன்முறை வரத் தொடுக்கப்பட்டுளது. தேவர் அந்தகன் என்பது நீட்டல் விகாரம் பெற்று தேவராந்தகன் என வந்தது. தேவர்களுக்கு எமன் போன்றவன் என்பது பொருள். நராந்தகன் - நரர்களுக்கு எமன் போன்றவன். நரர் - மனிதர். மூன்று தலைகளையுடையவன் ஆதலின் திரிசிரா எனப் பெயர் பெற்றான் போலும். (52)

6695 (a) இன்னும் மைந்தர்க ளியம்பின்மூ வாயிர கோடி
என்ன வுண்டவர் இரதமுங் கரிகளும் பரியும்
துன்னு மாள்வகைத் தொகுதியும் செறிந்திட மேனாள்
பன்னகாதிபன் உலகினைப் பரிபவப் படுத்தோர்.

என்ற பாடல் 52ஆம் எண்ணுள்ள புத்தகத்தில் மிகைப் பாடலாகக் காட்டப்பட்டுளது.

இராவணன் பெருமை 6696-6700

6696. இனைய தன்மையர் வலியிதா
மிராவண னென்னும்
அனைய வன்றிறம் யானறி
யளவெலா மறைவென்
தனைய னான்முகன் றகைமகன்
சிறுவற்குத் தவத்தால்
முனைவர் கோன்வர முக்கணான்
வரத்தொடு முயர்ந்தான்.

இனைய தன்மையர் வலி இதாம் இராவணன் என்னும்
அனையவன் திறம் யான் அறி அளவு எலாம் அறைவென்;
தனையன், நான் முகன் தகை மகன் சிறுவற்குத் தவத்தால்,
முனைவர் கோன் வரம், முக்கணான் வரத்தொடும் உயர்ந்தான்.

பொ :—இப்படிப்பட்ட தன்மையுடையவராகிய துணைவரின் வலிமை இத்தன்மையது ; இராவணன் என்கின்ற பெயருடையவனாகிய அவன் திறமையில் யான் அறிந்த அளவு முழுதும் கூறுகின்றேன் ; நான்முகனாகிய பிரமனுக்கு நல்ல மகனான புலத்தியனது மகன் விச்சிரவசுவுக்குப் புதல்வன்; தன்னுடைய தவப் பெருமையால் பெற்ற, அந்தணர் தலைவனாகிய பிரமனது வரத்தாலும், முக்கண்ணன் ஆகிய சிவபிரான் வரத்தாலும், மேம்பாடு உடையவனானான்.

கு :—நான்முகன் தகைமகன் சிறுவற்குத் தனையன் என இயையும். சிறுவன் என்றது புதல்வன் என்னும் பொருளது. நான்முகன் மகன் புலத்தியன்; புலத்தியன் மகன் விச்சிரவசு; விச்சிரவசுவின் மகன் இராவணன் என்றவாறு. முனிவர் என்றது அந்தணரை. பிரமன் அந்தணர் கடவுளாதலின் முனிவர்கோன் எனப்பட்டான். வரத்தொடும் என்புழி ஒடு ஏதுப்பொருளது, 'ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்' என்புழிப்போல. தவத்தால் பெற்ற வரத்தால் உயர்ந்தான் என ஒரு சொல் வருவித்து முடிக்க. இனி முக்கணன் வரத்தொடு முனிவர்கோன் வரம் பெற்று உயர்ந்தான் என ஒரு சொல் வருவித்து முடித்தலும் ஆம். (53)

வெள்ளிமலையை யள்ளி யெடுத்தது

6697. எள்ளி லைம்பெரும் பூதமும்
யாவையு முடைய
புள்ளி மானுரி யாடைய
னுமையொடும் பொருந்தும்
வெள்ளி யம்பெருங் கிரியினை
வேரொடும் வாங்கி
அள்ளி விண்தொட வெடுத்தன
னுலகெலா மனுங்க.

எள் இல் ஐம் பெரும் பூதமும் யாவையும் உடைய
புள்ளி மான் உரி ஆடையன் உமையொடும் பொருந்தும்
வெள்ளி அம் பெருங் கிரியினை வேரொடும் வாங்கி
அள்ளி விண்தொட எடுத்தனன் உலகெலாம் அனுங்க.'

பொ :—சிறிதென இகழ முடியாத ஐந்து பெரும் பூதங்களையும் அவற்றின் மயக்கமாகிய இயங்குவனவும் நிற்பனவுமாகிய எல்லாப் பொருள்களையும் உடையவனாகிய, புள்ளிகளோடு கூடிய மான் தோலாகிய ஆடையைத் தரித்த சிவபிரான், உமையம்மையோடு அமர்ந்துள்ள அழகிய பெரிய வெள்ளிமலையினை அடியோடும் பறித்துக் கைக் கொண்டு உலகெலாம் வருந்த விண்ணுலகைத் தொடுமாறு எடுத்தான்.

கு :—எள்ளுதல் - இகழ்தல். சிறிய என யாரும் இகழ்தற்கில்லாதவாறு பெரியதாக உள்ள ஐம்பூதங்கள் என்க. நிலமும் நீரும், நெருப்பும், காற்றும், விண்ணும் ஐம்பெரும் பூதங்கள் எனப்படும். இந்த ஐம்பெரும் பூதங்களையும் சிவபிரானே இயற்றினன் என்பதை

'நீரும் நிலனுந் தீயும் வளியும், மாக விசும்போடைந்துட னியற்றிய மழுவாள் நெடியோன் 'தலைவனாக' (மதுரைக் காஞ்சி-453-455) என மாங்குடி மருதனாரும் கூறியுள்ளமை காணலாம். யாவையும் என்றது, அவ்வைம் பெரும் பூதங்களின் மயக்கமாகிய இவ்வுலகில் நிற்பனவும் திரிபனவுமாய எல்லாப் பொருள்களையும். 'நிலந்தீ நீர்வளி விசும் போடைந்துங் கலந்த மயக்கம் உலகம்" (தொல்-பொருள். மரபு-89) என்றதும் காண்க. சிவபிரான் மான் தோலை உடுப்பவன் என்பதை 'புள்ளியுழை மான்றோல் ஒன்றுடுத்து' (காரைக்காலம்மையார் மூத்த திருப்பதிகம்-5) எனவும், "கருமானின் உரியதளே உடையா வீக்கி" (6-1-3) எனவும் காரைக்காலம்மையாரும் திருநாவுக்கரசரும் கூறியுள்ளமையால் அறியலாம். இராவணன் வெள்ளிமலையை யெடுக்க முயன்றும் முடியாது மலையடியில் சிக்குண்டு வருந்தினான் என்பதை "இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன், உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக, ஐயிரு தலையி னரக்கர் கோமான், தொடிப் பொலி தடக்கையிற் கீழ்புகுந்தம்மலை, எடுக்கல் செல்லா துழப்பவன் போல" (கலி - 38) எனக் கபிலரும், 'தடக்கைநா லைந்துகொண்டு தடவரை தன்னைப்பற்றி எடுத்தவன் பேர்க்க வோடி யிரிந்தன பூத மெல்லாம், முடித்தலை யனைத்தும் தோளும் முறிதர இறையே யூன்றி அடர்த்தருள் செய்ததென்னே ஆரூர் மூலட்டனீரே.' (4-52-10) எனத் திருநாவுக்கரசரும் கூறியிருத்தல் காண்க, இங்ஙனம் வெள்ளிமலை யெடுக்க முயன்று முடியாது வருந்தின இராவணனை 'வெள்ளியம் பெருங்கிரியினை வேரொடும் வாங்கி அள்ளி விண்டொட எடுத்தனன்" எனக் கூறியது உயர்வு நவிற்சியாகும். "கங்கை சடை வைத்தவ னெடுங் கயிலை வெற்போர் அங்கையினெடுத்தவென தாடெழின் மணித்தோள்" (மாரீசன் வதைப்-188) "ஈசனுண்டிருந்த பேரிலங்கு மால்வரை ஊசி வேரொடும் பறித் தெடுக்கு மூற்றத்தான்" (சடாயு வுயிர்நீத்த - 42) என இராவணனே தன் தோள்களைப் புகழ்ந் திருத்தல் காணலாம். (54)

திசையானை மருப்பு ஒசித்த திறம்

6698. ஆன்ற வெண்டிசை யுலகெலாஞ்
சுமக்கின்ற யானை
ஊன்று கோடிறத் திரள்புயத்
தழுத்திய வுரவோன்
தோன்று மென்னவே துணுக்கமுற்
றிரிவரத் தொகுதி
மூன்று கோடியின் மேலொரு
முப்பத்து மூவர்.

"ஆன்ற எண் திசை உலகு எலாம் சுமக்கின்ற யானை,
ஊன்று கோடு இறத் திரள் புயத்து அழுத்திய உரவோன்,
தோன்றும் என்னவே துணுக்கம் உற்று இரிவர், அத்தொகுதி
மூன்று கோடியின் மேல் ஒரு முப்பத்து மூவர்.'

பொ :—வலிமை நிறைந்தனவும் எட்டுத் திசைகளோடு உலகம் முழுவதையும் சுமக்கின்றனவும் ஆகிய திசையானைகள் (தன்மேல்) ஊன்றிய கொம்புகள் முரியும்படி திரண்ட தோள்களில் அழுத்திக் கொண்ட வலிமையுடைய இராவணன், இதோ வந்து தோன்று கின்றான் என்று பிறர் கூறிய அளவிலே அந்த முப்பத்து மூன்று கோடி தேவர்களின் மேலாளர் ஆகிய முப்பத்துமூவரும் நடுக்கமுற்று ஓடுவார்கள்.

கு :—ஆன்ற யானை, உலகெலாம் சுமக்கின்ற யானை என இயையும். ஆலுதல் - நிறைதல்; இங்கு வலிமையின் நிறைவை யுணர்த்தியது. இராவணன் திசையானைகளோடு போர்புரியச் சென்ற போது அந்த எட்டு யானைகளும் தம் வலிய கொம்புகளால் இராவணன் மார்பிலும் தோள்களிலும் குத்தினவாக அவன் வலிமை மிக்க உடம்பில் நுழையும் வலிமை யின்மையால் அக்கொம்புகள் முரிந்து விட்டன. ஆசைகள் சுமந்தபே ரளவில் யானைகள் பூசல்செய் மருப்பினைப் பொடி செய் தோளினான். (சடாயு வுயிர் நீத்த-42) என இராவணன் கூறுதலும் காண்க. அம்முரிந்த கொம்புகளை அகற்றாது அப்படியே தன் மார்பிற்கும் தோள்கட்கும் அணியாக வைத்திருந் தான் என்பார், 'திரள்புயத்து அழுத்திய உரவோன்' என்றார். திரள் புயத்து என்றாரேனும் அப்புயத்தோடு சேர்ந்துள்ள மார்பும் இனம் பற்றிக் கொள்க. உரவோன் - வலியோன். திசையானைகளின் கொம்புகளும் முரியத் தக்க வலிய உடம்புடையன் இராவணன் ஆதலின், அவனை வெல்லல் இயலாது என்ற அச்சத்தால் அவன் தோன்றும் என்ற அளவில் இரிந்தோடுவார் ஆயினர் தேவர்கள் என்றவாறு.

இராவணன் இவ்வாறு அழுத்திக்கொண்ட திசையானைகளின் கொம்புகள் பின்னர் நிகழ்ந்த போரில் அனுமன் குத்தியதால் இராவணன் முதுகின்வழிக் கழன்று வீழ்ந்தன என்பதை வீடணன் "நாடுளதனையுமோடி நண்ணலார்க் காண்கிலாமல், பீடுள குன்றம் போலும் பெருந்திசை யெல்லை யானைக் கோடுள தனையும் புக்குக் கொடும்புறத் தழுந்து புண்ணின் பாடுள தன்றித் தெவ்வர் படைக்கலம் பட்டென் செய்யும்" (இராவணன் வதைப் - 212) எனவும், "அப்பனை யனைத்து மார்புக் கணியெனக் கிடந்த வீரக், கைப்பனை முழங்க மேனு ளமரிடைக் கிடைத்தக்காலின், துப்பனை வயிரவாளி விசையினுங் காலின் தோன்றல், வெப்பனை

குத்திஞலும் வெரிநிடைப் போய வன்றே" (213) எனவும் இராமனுக்குக் கூறுமாற்ருல் உணரலாம். இராவணனுக்குத் தேவர்கள் அஞ்சிய அச்சமிகுதியை யுணர்த்துவாஞய் 'உரவோன் தோன்றும் என்னவே துணுக்க முற்றிரிவர்' என்ருன். இராவணன் போர்க் கோலத்தோடு தோன்ற வேண்டா; அவன் தோன்றுவதாகப் பிறர் சொன்ஞலும் இரிவர் என்றவாறு. இரிதல் - ஓடுதல். அத்தொகுதி என்றது முப்பது என்ற எண்ணினை; தொகுதி மூன்று கோடி என்றது முப்பத்து மூன்று கோடியை, தேவர் தொகை முப்பத்து மூன்று கோடி என்பது உலகறிந்தது ஆதலின் 'அத்தொகுதி மூன்று கோடி' என உலகறி சுட்டாற் குறித்தவாறு. மேல் ஒரு முப்பத்து மூவர் என்றது, அத்தேவர்களுள் ஒவ்வொரு கோடிக்கும் தலைவராய் அமைந்த முப்பத்து மூவரை; முப்பத்து மூவராவார் - வசுக்கள் எண்மர், உருத்திரர் பதிஞெருவர், ஆதித்தர் பன்னிருவர், மருத்துவர் இருவர், என்பார். மேற்பார்வைக்குரிய தலைவர்களை 'மேல் ஒரு முப்பத்து மூவர்' என்ருர், 'இரிவர் முப்பத்து மூன்று கோடியின் எனப்பாடம் இருப்பின் சிறக்கும். தலைவர்களே இரிவவர் என்ற போது மற்றைத் தேவர் இரிவது சொல்ல வேண்டுமோ? (55)

காலகேயரை வென்றமை

6699. குலங்க ளோடுதங் குலமணி
முடியொடுங் குறைய
அலங்கல் வாள்கொடு காலகே
யரைக்கொன்றவ தற்பின்
இலங்கை வேந்தனென் றுரைத்தலு
மிடியுண்ட வரவின்
கலங்கு மாலினந் தானவர்
தேவியர் கருப்பம்.

குலங்க ளோடு தம் குல மணி
முடியொடும் குறைய,
அலங்கல் வாள்கொடு காலகே
யரைக் கொன்ற அதன்பின்,
'இலங்கை வேந்தன்" என்று உரைத்தலும்,
இடி உண்ட அரவின்
கலங்குமால் இனம் தானவர்
தேவியர் கருப்பம்.'

பொ :—தமது சிறந்த மணிகள் பதித்த முடிகளோடு வெட்டுண்ணுமாறு காலகேயரை அவர்தம் மக்களோடு, இராவணன் தன் வாகைமாலை சூடிய வாளினால் கொன்றதன் பின்னர், இலங்கை வேந்தன் என்று எவரேனும் சொன்னால் அவர் சொன்ன அளவில் இடியொலி கேட்ட நாகம் போலத் தானவர் தம் மனைவியரின் கருப்பம் இன்னும் கலங்கா நிற்கும்.

கு :—குலமணி - சிறந்த மணி. காலகேயர் தம் முடியில் பதித்த மணிகளின் பெருமை கூறியவாறு. முடியணிந்த தலையோடு வெட்டுண்ண என்பான், 'முடியொடுங் குறைய' என்றான். முடியொடுங் குறைய, காலகேயரைக் குலங்களோடு கொன்ற என இயையும், காலகேயர் தம் குலக்கொழுந்தாகவுள்ள மக்களையும் கொன்றான் என்றவாறு. குலங்கள் என்றது அவர்தம் மக்களை. "குலத்தொடுங் கோறலெண்ணிக் கொடியவன் கடிய சூழ்ந்தான்" (சீவக - 261) என் புழிக் குலத்தொடும் என்பதற்கு நச்சினார்க்கினியர் 'பிள்ளையுடனே' என்று பொருள் வரைந்திருத்தல் நோக்குக. பகைவரை யழிக்குங் கால் அவர் வழித்தோன்றல் இல்லையாம்படி செய்தல் வீரர் இயல்பு. காலகேயர் என்பார் தானவர் ஆதலின், அவரைக் கொன்ற இராவணன் பெயர் கேட்ட அளவில் அவர்தம் மனைவியர் கலங்குவாரா யினர். இராவணன் காலகேயரைக் கொன்று ஆண்டு பல சென்ற தாயினும் தானவர் மனைவியர் இராவணன் பெயரைக் கேட்டால் இன்னுங் கலங்குவர் என அவன் கொடுமை மிகுதி காலங்கடந்தும் அச்சுறுத்தும் நிலை புலப்படுத்தியவாறு. இடி என்றது இடியின் ஒலியை. அச்சமிகுதியால் பெண்டிர் கருப்பம் கலங்கிச் சிதைதல் உண்டு. இனிக் கருப்பம் என்பது உட்பொருள் என என்னுங் கருத் தினதே யாகலின் இங்கு உள்ளம் எனப் பொருள்கொண்டு உள்ளம் கலங்கும் எனப் பொருள்கூறலும் ஆம். (56)

வடதிசையில் குபேரனை வென்றமை

6700. குரண்ட மாடுநீ ரளகையி
னுளித்துறை குபேரன்
திரண்ட மாடுந்தன் திருவொடு
நிதியமு மிழந்து
புரண்டு மான்றிரள் புலிகண்ட
தாமெனப் போனான்
இரண்டு மானமு மிலங்கைமா
நகரமு மிழந்து.

'குரண்டம் ஆடு நீர் அளகையின்
ஒளித்து உறை குபேரன்,
திரண்ட மாடும், தன் திருவொடு
நிதியமும், இழந்து,'—
புரண்டு மான்திரள் புலி கண்டது
ஆம் எனப், போனான்—
இரண்டு மானமும், இலங்கை மா
நகரமும் இழந்து.'

பொ:—கொக்குகள் விளையாடுகின்ற நீரையுடைய அளகாபுரியில் ஒளித்துக்கொண்டு வாழ்கின்ற குபேரன், (திக்கு விசயம் செய்ய வந்த இராவணனைக் கண்டதும்) மான்கூட்டம் புலியைக் கண்டால் ஒப்ப அஞ்சித் தன் திரண்ட செல்வத்தையும் வெற்றித் திருவையும் சங்கநிதி பதுமநிதி ஆகிய நிதியங்களையும் இழந்து, அவற்றோடு தன் மானம் விமானம் என்ற இருவகை மானங்களையும், இலங்கை மா நகரத்தையும் இழந்து புரண்டு ஓடினான்.

கு:—குபேரன் இழந்து புரண்டு போனான் என இயையும் குரண்டம் - கொக்கு. நீர்வளத்தால் குறைவிலாத அளகை என்பார், 'குரண்டமாடுநீர் அளகை' என்றார். நீர்வளத்திற்குக் கொக்குகள் இருப்பது அறிகுறி. இராவணன் வலிமை கேட்டு முன்னமே அளகையில் ஒளித்திருந்தவன், அவன் நேரில் போர்க்கு வரக் கண்டவுடன் தனக்குரிய எல்லாவற்றையும் இழந்து ஓடினான் என்றவாறு. மாடு - செல்வம். திரு என்றது வெற்றித்திருவினை. நிதியம் என்றது சங்கநிதி பதுமநிதி என்ற நிதிகளை. மானம் என்ற சொல்லுக்குப் பெருமை, விமானம் என்ற இருபொருள் உண்டு. குபேரன், அருவாயதன் மானத்தையும் உருவாய புட்பக விமானத்தையும் இழந்து போனான் என்க. இராவணனைக் கண்ட குபேரனது அச்ச மிகுதி யுணர்த்தப் புலிகண்ட மான்றிரளை உவமித்தார். அச்சத்தின் மிகுதியால் நிமிர்ந்து நடக்க இயலாது குபேரன் புரண்டு ஓடுவானானான். (57)

இப் பாடலின் பின் 11ஆம் எண்ணுள்ள ஏட்டில் பின்வரும் மிகைப்பாடல் காணப்படுகின்றது.

6700 (a) கோ...ன் குடைப்பரா கடுகளிற்றை மீக்கொள்ளா
வாடலிந்திர... ளடைவர வமரிற்
கோடி வெங்கரி கோளரி கண்டெனக் குலையா
ஓடினான்றரு முதலியர் பிறவிழுந் துருகி.

தென்திசையில் அந்தகனை வென்றது

6701. புண்ணுஞ் செய்தது முதுகெனப்
புறங்கொடுத் தோடி
உண்ணுஞ் செய்கையத் தசமுகக்
கூற்றந்தன் னுயிர்மேல்
நண்ணுஞ் செய்கைய தெனக்கொடு
நாடொறுந் தன்னாள்
எண்ணுஞ் செய்கைய னந்தகன்
றன்பத மிழந்தான்.

'"புண்ணும் செய்தது முதுகு" எனப்
புறம் கொடுத்து ஓடி,
"உண்ணும் செய்கை அத் தசமுகக்
கூற்றம் தன் உயிர்மேல்
நண்ணும் செய்கையது" எனக் கொடு,
நாள் தொறும், தன் நாள்
எண்ணும் செய்கையன், அந்தகன்,
தன் பதம் இழந்தான்.'

பொ:—'உயிர் உண்ணும் செய்கையுடைய அந்தப் பத்து முகங்களையுடைய இராவணனாகிய கூற்றம் என் முதுகையும் புண் செய்து விட்டது' என்று கூறிக்கொண்டு புறமுதுகிட்டு ஓடிச் சென்று தன் தென்திசைக் காவற் பதவியை இழந்தவனாகிய எமன், அக் கூற்றம் தன் உயிர்மேலும் வரும் செய்கையுடையதே என நினைந்து நாள் தோறும் தான் வாழ்ந்தநாளை எண்ணிப் பார்க்கும் செய்கையன் ஆனான்.

கு:—இராவணன் எமனுக்கும் எமனானான் என்றவாறு. முதுகையும் புண் செய்தது என உம்மையைப் பிரித்துக் கூட்டுக. புண் செயக் கூடாத முதுகையும் புண் செய்த தசமுகக் கூற்றம் புறங் காட்டி ஓடிய தன் உயிரை உண்ணவும் வரல்கூடும் என அந்தகன் தன் நாளை எண்ணிப் பார்க்கலானான் என்க. பிறவுயிர்களின் நாளை எண்ணும் எமன் இப்போது இராவணனுக்குப் பயந்து தன் நாளையே எண்ண வேண்டியவனானான். நாள்தோறும் எமன் தன் நாளை எண்ணுதலாவது, இன்று ஒருநாள் பிழைத்தோம்; இருநாள் பிழைத்தோம்; மூன்றுநாள் பிழைத்தோம்; என்று தான் இராவண னுக்குத் தோற்றபின் வாழ்ந்த நாளை எண்ணிக் கழித்தல்; தென் திசைக் காவலன் என்னும் பதவியையே "இங்குத் தன் பதம்"

என்றான். ஓடித் தன் பதம் இழந்தானாகிய அந்தகன் தன் உயிர்மேல் (கூற்றம்) நண்ணும் செய்கையது எனக் கொடு தன்னுள் எண்ணும் செய்கையது என இயையும். "கூற்றினையும்......பணிகோடற் காற்றினை நீ" (சூர்ப்பணகைப் - 104) எனச் சூர்ப்பணகையும் இதைக் கூறுதல் நினைக. (58)

மேற்றிசையில் வருணனை வென்றமை

6702. இருணன் காசற வெழுகதி
ரவனிற்க வென்றும்
அருணன் கண்களுங் கண்டிலா
விலங்கை மண்டமரில்
பருணன் தன்பெரும் பாசமும்
பறிப்புண்டு பயத்தால்
வருண னுய்ந்தனன் மகரநீர்
வெள்ளத்து மறைந்து.

'இருள் நன்கு ஆசு அற, எழு
கதிரவன் நிற்க; என்றும்
அருணன் கண்களும் கண்டிலா
இலங்கை, மண்டு அமரில்
பருணன் தன் பெரும் பாசமும்
பறிப்புண்டு, பயத்தால்
வருணன் உய்ந்தனன், மகரநீர்
வெள்ளத்து மறைந்து.'

பொ :—இருள் நன்கு ஒழிய உதயமாகின்ற சூரியன் (காணாமை) கிடக்கட்டும்; அச்சூரியனுக்கு முன் தோன்றுகின்ற அவன் தேர்ப் பாகனாகிய அருணனுடைய கண்களும் கண்டறியாத இலங்கையில் மூண்ட போரில் போர்த்திறம் பெற்றவனாகிய வருணன் தனது பெரிய பாசம் என்னும் படையும் (அவ்விலங்கை மன்னனாய இராவணனால்) பறித்துக் கொள்ளப் பெற்று, அச்சத்தால் மகர மீன்களை யுடைய கடல்நீரில் மறைந்து தப்பித்துக் கொண்டான்.

கு :—நன்கு ஆசறுதல் அடியோடு ஒழிதல். 'ஊழிசென்றாசறுங் காலத்து' (ஆரணிய - சரபங்கர் - 30) என்புழியும் இச்சொல் இப் பொருளில் ஆளப்பட்டிருத்தல் காணலாம். ஆசறல், ஒரு சொல் நீர்மைத்து. தேரில் பின் வருகின்றவன் காணாமையினும் முன் வரு

கின்றவனாகிய தேர்ப்பாகன் காணாமையே வியப்பு ஆதலின் "கதிரவன் நிற்க என்றும், அருணன் கண்களும் கண்டிலா இலங்கை" என்றும் கூறினான். இதனால் இலங்கையின் பாதுகாவல் கூறிய வாறு. இலங்கையைச் சூரியனும் அருணனும் கண்டிலர் என்றது, அவ்விலங்கைமேற் செல்லாமல் அவர்கள் ஒதுங்கிச் செல்லுதல் கருதியேயாம். இலங்கை மண்டமரில் என்றது, அத்தகைய இலங் கையில் அருணன் சென்றமையால் மூண்ட போரில் என்றவாறு. பருணன் - திறமுடையவன்; இங்குப் போர்த்திறத்தை யுணர்த் திற்று. வருணனுக்குச் சிறந்த படை பாசமே யாதலின் அப்பாசமும் எனச் சிறப்பும்மை கொடுத்துக் கூறினார். தன் கைப் பாசமும் பறித் தவன் தன் உயிரையும் பறிப்பானோ என்ற பயத்தால் கடல் நீரில் மறைந்து ஒளித்துக்கொண்டு வருணன் உய்ந்தான் என்க. மகர நீர் - கடல்; மகர மீன்களையுடைமையால் வந்த காரணப் பெயர். வெள்ளம் - நீர். வருணன் பயத்தால் மறைந்து உய்ந்தனன் என இயையும். வருணன் கடற்றெய்வமாதலின் அக்கடலில் மறைதல் எளிதாயிற்று. கடலில் மறைந்திலனேல் அவன் இராவணனால் கொல்லப்பட்டிருப்பான் என்றவாறு. (59)

6702 (a) பண்டவன் தவத்துமையொரு பாகன் முன் கொடுக்கும்
திண்டிறல் பெறும் வானகத் தேர்ஒன்றின் இவர்ந்தே
அண்ட கோடிகள் எவற்றினும் புகுந்தரசுரிமை
கொண்டுமீளுவான் ஒருகணத் திலங்கையில் கொடியோன்

என்ற பாடலும்—

(b) சுற்று தன்கிளைப் பரப்பொடும் தொலைவின்றி வாழ்தற்கு
உற்ற மூன்றரைக் கோடியின் உகமவன் றவத்தின்
பெற்றனன் சிவன் கொடுத்திடப் பெருவரம் பெரியோய்
இற்றவன் செயல் என்று கொண் டினையன உரைப்பான்.

என்ற பாடலும் 52-ஆம் எண்ணுள்ள புத்தகத்தில் 58-1, 2, ஆக மிகைப் பாடல் எனக் காட்டப்பட்டுள்ளன.

இராவணன் தோள் வலிமை

6703. என்று லப்புறச் சொல்லுகே
ணிராவண னென்னும்
குன்று லப்பினு முலப்பிலாத்
தோளினான் கொற்றம்

இன்று லப்பினு நாளையே
யுலப்பினுஞ் சிலநாள்
சென்று லப்பினு நினக்கன்றிப்
பிறர்க்கென்றுந் தீரான்.

'என்று, உலப்புறச் சொல்லுகேன்,
இராவணன் என்னும்
குன்று உலப்பினும் உலப்பு இலாத்
தோளினன் கொற்றம்'
இன்று உலப்பினும், நாளையே
உலப்பினும், சிலநாள்
சென்று உலப்பினும், நினக்கு அன்றிப்,
பிறர்க்கு என்றும் தீரான்.

பொ :—இராவணன் என்னும் பெயரினனாகிய - மலைகள் அழிந்தாலும் அழியாத தோள்களையுடையவனது வெற்றியை என்றைக்கு யான் முடிவுறச் சொல்லுவேன்? (எத்தனை நாள் சொன்னாலும் முடிவுறாது என்றவாறு) அவ்விராவணன் இன்றைக்கே அழிவதாயிருப்பினும், அல்லது நாளைக்கே அழிவதாயிருப்பினும், அல்லது இன்னும் சிலநாள் கழித்து அழிவதாயிருப்பினும், நின்னால் அழிவானே அன்றிப் பிறரால் என்றும் அழியாத வலிமையுடையவன்.

கு :—இராவணனென்னும் என்ற பெயரெச்சத்திற்குத் தோளினன் என்ற பெயரையே எச்சமாக்கி முடிக்க. கொற்றம் - வெற்றி. தோளினனது கொற்றத்தை என்று உலப்புறச் சொல்லுகேன் என இயையும். உலத்தல் - முடிதல். நினக்கு, பிறர்க்கு என்புழி உருபுமயக்கம். நின்னால், பிறரால் என மூன்றனுருபு விரிக்க. இராமனாலன்றிப் பிறரால் என்றும் அழியாதவன் என இராவணன் வலிமையும் இராமன் வலிமையும் ஒருங்கே புலப்படுத்தியவாறு. (60)

கீழ்வரும் பாடல் 52 என்ற எண்ணுள்ள அச்சுப் புத்தகத்தில் 59-1 மிகைப்பாடலாக அச்சிடப்பட்டுள்ளது.

6703 (a) ஈது நிற்கமற் றெந்தைநீ யேவிய தூதன்
மோது வாரிதி கடந்தொரு கணத்தினில் முடுகி
ஆதி நாயகி தன்னைக்கண் டணிநக ரரணும்
காது வெஞ்சினத் தரக்கர்தம் வலிமையுங் கடந்தான்.

அனுமன் இலங்கையில் செய்த வெற்றிச் செயல்கள்

6704. ஈடு பட்டவ ரெண்ணிலர் தோரணத் தெழுவால்
பாடு பட்டவர் படுகடன் மணலினும் பலரால்
சூடு பட்டது தொன்னக ரடுபுலி துரந்த
ஆடு பட்டது பட்டன ரனுமனு லரக்கர்.

'ஈடு பட்டவர் எண்ணிலர், தோரணத்து, எழுவால்;
பாடு பட்டவர் பகுகடல் மணலினும் பலரால்;
சூடு பட்டது, தொல்நகர்; அடுபுலி துரந்த
ஆடு பட்டது பட்டனர் அனுமனுல் அரக்கர்.

பொ :—அசோக வனத்தில் தோரண கம்பத்திலிருந்த அனுமனுல் வலிமை இழந்த அரக்கர் எண்ணற்றவர்கள்; அவ்வனுமன் ஏந்திய எழுவால் அடிபட்டு அழிந்த அரக்கர் கடல் மணலினும் பலராவர்; (அனுமன் வலிமையைக் கண்டு வெருவிய) அரக்கர், கொல்லும் புலியால் துரத்தப்பட்ட ஆடுகள் பட்ட பாடே பட்டனர்; (ஓடினர் என்றபடி) பழமையான இலங்கை மாநகரம் அனுமனுல் எரிந்தது.

கு :—மேல், 'இராவணன் கொற்றத்தைப்பற்றி என்று உலப்புறச் சொல்லுகேன்' என்று கூறிமுடித்த வீடணன், அத்தகைய ஆற்றல் சான்ற இலங்கை அரக்கர்கள் அனுமன் ஒருவனுல் பட்ட பாட்டை இப்பாடலில் கூறத் தொடங்குகின்ருன். தோரணம் என்றது தோரண கம்பத்தை. தோரண கம்பத்தில் அனுமன் அமர்ந்திருந்து இரும்பினுலாய எழுவால் அரக்கர்களைத் துன்புறுத்தினுன். இங்குக் கூறப்பட்ட தோரணம் தேவேந்திரன் அரண்மனை வாயிலிலிருந்தது. செவ்வொளி வீசும் சிறப்புடையது. இராவணன் இந்திரனை வென்று அத்தோரணத்தைக் கொணர்ந்து அசோகவனத்தில் அழகுற வைத்திருந்தான். "ஆயிடை யனுமனு மமரர் கோனகர், வாயினின் றவ்வழிக் கொணர்ந்து வைத்தமாச் சேயொளித் தோரணத் தும்பர்ச் சேணெடு மீயுயர் விசும்பையுங் கடக்க வீங்கினுன்" (சுந்தர - பஞ்சசேனுபதிகள் வதைப் - 29) என்றது காண்க. இதனுல் இலங்கை அரக்கரின் ஆற்றல் எத்துணைப் பெரியதாயினும் நம் படையிலுள்ள அனுமன் ஆற்றலுக்குக் கீழ்ப்பட்டதே என வானரப் படையின் சிறப்புப் புலப்படுத்தியவாறு. கடல் மணல் எண்ண இயலாதது போலவே அனுமனின் எழுவால் பாடுபட்ட அரக்கரின் தொகையையும் எண்ண இயலாது என்றவாறு. ஆடுகள் புலியைக் கண்டு அஞ்சும் எளிமையுடையன. "மடிவாயிடையன்

சிறுதலை யாயமொடு குறுகல் செல்லாப் புலிதுஞ்சு வியன்புலத் தற்றே...அவனுடை நாடே " (புறநா-54) என்பது இங்கு நோக்கத் தகும். (61)

கிங்கரரை வதைத்தது

6705. எங்கு லத்தவ ரெண்பதி ஞயிர ரிறைவ
கிங்க ரப்பெயர் கிரியன தோற்றத்தர் கிளர்ந்தார்
வெங்க ரத்தினுங் காலினும் வாலினும் வீக்கிச்
சங்க ரற்கழி முப்புரத் தவரெனச் சமைந்தார்.

'எம் குலத்தவர், எண்பதினுயிரர், இறைவ,
கிங்கரப் பெயர் கிரியன தோற்றத்தர், கிளர்ந்தார்,
வெங் கரத்தினும் காலினும் வாலினும் வீக்கிச்
சங்கரற்கு அழி முப்புரத்தவர் எனச் சமைந்தார்.

பொ :—தலைவனே ! எம் குலத்தில் பிறந்தவரும், எண்பதினுயிரர் என்ற தொகையினரும் ஆய கிங்கரர் என்ற பெயருடையவர் - மலை போன்ற தோற்றமுடையராய்ப் போர்க்கு எழுந்தவர்கள், (அனு மனது) கொடிய கைகளாலும் கால்களாலும் வாலினாலும் அழிக்கப் பெற்றுச் சிவனால் அழிந்த முப்புரத்து அசுரர்கள் போல முடிவுற் ருர்கள்.

கு :—இறைவ என்றது இராமனை. எண்பதினுயிரர் தோற்றத்த ராய்க் கிளர்ந்தவர் வீக்கப்பெற்றுச் சமைந்தார் என இயையும். கிளர்ந்தார், வினைப் பெயர். வீடணன் கிங்கரரை 'எம் குலத்தவர்' என்றது, பழைய நினைவினலாகும். வாலினும் என்ற குறிப்பால் முன் வந்த கரத்தினும் காலினும் என்றதும் அனுமானது உறுப்புக் களே என்பது பெறப்படும். அரக்கர்களைப் பிசையும் கரமாதலின் வெங்கரம் எனச் சிறப்பிக்கப் பெற்றது. வீக்கி, என்பது செயப்பாட்டுப் பொருளது; அழிக்கப்பெற்று என்றவாறு. இன் மூன்றும் ஏதுப் பொருளன. வீக்குதல் - அழித்தல். 'வீக்கு...வெவ்விடத்தை' (இராவணன் வதைப் - 122) எனப் பின்னும் இச்சொல் இப்பொருளில் ஆளப்படுதல் காணலாம். சங்கரன் - சிவபிரான். முப்புரத்திலிருந்த அசுரர்கள் சிவபிரானல் எளிதின் அழிந்ததுபோலக் கிங்கரர் எண்பதி ஞயிரரும் அனுமனல் எளிதின் அழிந்து முடிவுற்றனர் என்றவாறு. சமைந்தார் - முடித்தார். (62)

சம்புமாலியை வதைத்தது

6706. வெம்பு மாக்கடற் சேனைகொண்
டெதிர்பொர வெகுண்டான்
அம்பு மாயிரத் தாயிர
மிவன்புயத் தழுத்தி
உம்பர் வானகத் தொருதனி
நமனைச்சென் றுற்றான்
சம்பு மாலியும் வில்லினாற்
சுருக்குண்டு தலைவ.

வெம்பும் மாக்கடல் சேனை கொண்டு
எதிர்பொர வெகுண்டான்,
அம்பும் ஆயிரத்து ஆயிரம்
இவன் புயத்து அழுத்தி
உம்பர் வானகத்து ஒரு தனி
நமனைச் சென்று உற்றான்,
சம்பு மாலியும், வில்லினால்
சுருக்குண்டு—தலைவ!

பொ :—தலைவனே ! சம்புமாலி என்பவனும் கோபிக்கின்ற பெரிய கடல் போன்ற பெரிய சேனையைக் கொண்டு (அனுமன்) எதிரே போர் செய்ய வெகுண்டவனாய் இவ்வனுமன் தோள்களில் ஆயிரக் கணக்கான அம்புகளை அழுத்தி (பின்பு அவன் வில்லினாலேயே அனுமானால் சுருக்கிடப் பெற்று ஒருதனியனாய் எமனை அடைந்து பின் மேலிடத்துள்ள வீர சுவர்க்கத்தை அடைந்தான்.

கு :—போர்க்கு வெகுண்டு எழுகின்ற சேனைக்கு உவமையாதல் வேண்டி 'வெம்பு மாக்கடல்' எனச் சிறப்பித்தார். வெகுண்டான் முற்றெச்சம்; சம்புமாலியும் வெகுண்டானாய் அம்பும் இவன்புயத்து அழுத்திச் சுருக்குண்டு உம்பர் வானகத்து உற்றான் என இயையும். சம்புமாலியும் என்புழி உம்மை இறந்தது தழுவிய எச்ச உம்மை; கிங்கரர் இறந்ததோடு சம்புமாலியும் இறந்தான் என்றவாறு. ஆயிரத் தாயிரம் என்றது ஆயிரக்கணக்கான - பல்லாயிரம் என்றவாறு. சம்புமாலியை அவன் வில்லினாலேயே அனுமன் கொன்ற நிகழ்ச்சியை : "தேரினுட்புக்குக் கவித்தான் சிலையைக் கையால் வாங்கிக் கழுத்தினிடையிட்டு வலித்தான் பகுவாய் மடித்து மலைபோற் றலைமண்ணிடை வீழ" (சம்புமாலி வதைப் - 47) என முன் கூறியிருத்தல் நினையலாம். நமனிடத்துச் சென்று உம்பர் வானகத்து உற்றான்

என்க. நமனை என்புழி உருபு மயக்கம்; நமன்கண் என ஏழாவதாக மாற்றுக. உம்பர் வானகத்துள்ள நமனை ஒரு தனிச் சென்றுற்றான் எனலும் ஆம். (63)

பஞ்ச சேனாபதிகளை வதைத்தது

6707. சேனைக் காவல ரோரைவ
ருளர்பண்டு தேவர்
வானைக் காவலு மானமு
மாற்றிய மறவர்
தானைக் கார்வருங் கடலொடுந்
தமரொடுந் தாமும்
யானைக் காற்பட்ட செல்லென
வொல்லையி னவிந்தார்.

'சேனைக் காவலர் ஓர் ஐவர் உளர், பண்டு தேவர்
வானைக் காவலும் மானமும் மாற்றிய மறவர்,
தானைக் கார்வருங் கடலொடும், தமரொடும், தாமும்,
யானைக் கால்பட்ட செல் என, ஒல்லையின் அவிந்தார்.

பொ :—முற்காலத்துத் தேவர்களின் விண்ணுலகத்தைக் காக்கும் காவற்றொழிலையும் மானத்தையும் போக்கிய வீரர்களான சேனாபதியர் ஐவர் உளர்; அவர்கள் தம் சேனையாகிய கருநிறம் பொருந்திய கடலோடு சுற்றத்தாரோடு தாமும் யானையின் காலில் அகப்பட்ட சிதலைப்போல அனுமனால் எளிதாக விரைவில் அழிந்தார்கள்.

கு :—வானைக் காக்கும் காவல் என்க, சேனைக் காவலர் ஐவர் என்றது, விருபாட்சன், யூபாட்சன், துர்த்தர்ஷன், ப்ரஹசன், பாசகர்ணன் என்ற பஞ்ச சேனாபதிகளை. விண்ணுலக ஆட்சியைத் தேவர்க்கு இல்லையாக்கி அரக்கர்க்கு உரிமையாக்கினவர் என்பார், 'வானைக் காவலும் மாற்றிய மறவர்' என்றார். மானம் - பெருமை; இதை மாற்றுதலாவது தேவர்கள்பால் மானம் இல்லாதவாறு செய்தல்; தோல்வியுறச் செய்தல். தானையைப் பெருமை நோக்கிக் கடலாக உருவகஞ் செய்தவாறு. கார்வரும் என்ற அடை அரக்கர் சேனையாகிய கடலுக்கும் உவர்க்கடலுக்கும் ஏற்புடையதாதல் காணலாம். பஞ்ச சேனாபதிகள் தம் சேனையும் சுற்றமும் தாமும் அனுமனால் விரைவில் எளிமையாகக் கொல்லப்பட்டனர் என்பார், 'யானைக் காற்பட்ட செல்லென ஒல்லையின் அவிந்தார்' என்றார். சிதல் என்பது

செல் என மருவியது. அது மிகச் சிறிய உடலினது ஆகலின் ஆனைக் காலில் அகப்பட்டுழி உருவின்றி அழிதல் உறுதியாதலின் அதனை அனுமனால் அழிந்த பஞ்ச சேனாபதிகட்கு உவமை கூறினார். இதனால் அனுமனின் பெருமையும் பஞ்சசேனாபதிகளின் சிறுமையும் புலப்படுத்தியவாறு. 'ஆற்றய லெழுந்த வெண்கோட்டதவத்து எழுகளிறு மிதித்த ஒரு பழம் போலக் குழையக் கொடியோர் நாவே" (குறுந்-24) என்று பரணர் கூறிய உவமம் இங்கு ஒப்புநோக்கத்தகும். சேனைக் காவலர் என்பது எதுகை நோக்கி மிக்கது. (64)

இப்பாடலுக்குப் பின் 11 ஆம் எண் ஏட்டில் கீழ்வரும் பாடல் 67-வதாக மிகைப் பாடலாகக் காணப்படுகின்றது.

6707 (a) மழுவு மீட்டியுந் தோட்டியு முசலமு மலையும்,
தழுவுமாப்படை முடிவிலாததனெடுந் தாமும்
எழுவர் சூட்சியின் தலைவர்கள் கிளரொளி யிரவிக்,
குழுவின் வாய்ப்படு புழுவென வழுவுறக் குறைந்தார்.

அனுமன் அரக்கனை அழித்தது

6708. காய்த்த வக்கணத் தரக்கர்த
முடலுரு கறைத்தோல்
நீத்த வெக்கரி னிறைந்துள
கருங்கட னெருப்பின்
வாய்த்த வக்கனை வரிசிலை
மலையொடும் வாங்கித்
தேய்த்த வக்குழம் புலர்ந்தில
விலங்கையின் றெருவில்.

காய்த்த அக்கணத்து அரக்கர்தம் உடல் உரு கறைத்தோல்,
நீத்த எக்கரின், நிறைந்துள; கருங்கடல் நெருப்பின்
வாய்த்த அக்கனை, வரிசிலை மலையொடும் வாங்கி,
தேய்த்த அக் குழம்பு உலர்ந்தில, இலங்கையின் தெருவில்.

பொ :—(அனுமனுக்குச்) சினமூட்டிய அந்தக் கணத்தில் (அவ் அனுமனால் கொல்லப்பட்ட) அரக்கர்களுடைய உடம்பில் நின்றும் சிந்துகின்ற இரத்தத்தோடு கூடிய அவர்கள் தோல்கள், வெள்ளத்தோடு கூடிய மணல்மேடுகளைப் போல எங்கும் நிறைந்துள்ளன; கருங்கடலிடையேயுள்ள வடவைக் கனல்போல என்றும் மாறாச் சினம் வாய்க்கப்பெற்ற அட்சகுமாரனை அவன் கட்டமைந்த

வில்லாகிய மலையோடும் பிடித்து இழுத்து அனுமன் தரையில் தேய்த்ததால் ஆன குழம்பு இலங்கைத் தெருவில் இன்னும் உலர்ந்த பாடில்லை.

கு :—காய்த்த - கோபமூட்டிய அனுமனைக் கோபமூட்டுதலாவது, அம்பு முதலிய படைகளை அவன்மேல் எறிதல். இவ்வாறு கோப மூட்டிய அரக்கர்களையே அனுமன் பிழிந்து குருதி வேறு தோல் வேருகச் செய்தான் என்க. கறை - குருதி; கறையையுண்டாக்கு வதாகலின் குருதி ஆகுபெயரால் கறை எனப்பட்டது. கறைத் தோல் - கறையோடு கூடிய தோல். அரக்கர்தம் உடல் உகு குருதி நீத்தம் போலவும் தோல்களின் குவியல் மணல்மேடுகள் போலவும் நிறைந்து காணப்பட்டன என்க. கருங்கடல் நெருப்பு என்றது வடவைக்கனலை. கருங்கடல் போன்ற தோற்றமுடையவன் அரக்கன் எனவும், அக்கடலுள் மறைந்திருக்கும் வடவைக்கனல் போன்றது அவன் உள்ளத்தெழும் கோபம் எனவும் கொள்க. வாங்குதல் - இழுத்தல். "தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது" (அகநா-36) என்றது காண்க. தேய்த்ததாலாகிய குழம்பு எனக் காரணப் பொருளதாக்குக. வரிசிலை மலை என்றது உருவகம். (65)

61 முதல் 65 வரையுள்ள செய்யுள்கள் இம்முறையில் பல ஏடுகளில் காணப்படுவதாலும் சுந்தர காண்டத்தில் சொல்லப்பட்ட முறையில் கிங்கரர் வதை முதலியன இங்கு அமைந்திருத்தலாலும் இம்முறையே அமைக்கலாயிற்று.

அனுமனது வீரப் பெருமை

6709. சொன்ன மாமதி லிலங்கையின்
பரப்பினில் துகைத்துச்
சின்ன மானவர் கணக்கினை
யாவரே தெரிப்பார்
இன்ன மாருளர் வீரர்மற்
றிவன்சுட வெரிந்த
வன்ன மாநக ரவிந்ததக்
குருதியா லன்று.

சொன்ன மாமதில் இலங்கையின் பரப்பினில் துகைத்துச்
சின்னம் ஆனவர் கணக்கினை யாவரே தெரிப்பார்?
இன்னம் ஆர் உளர், வீரர் மற்று? இவன் சுட எரிந்த
அன்ன மா நகர் அவிந்தது அக் குருதியால் அன்று.

பொ :—பொன்னால் இயன்ற பெரிய மதிலால் சூழப்பட்ட இலங்கை நகரின் பரப்பிற்குள் (அனுமனால்) துகைக்கப்பட்டுச் சின்னபின்னமானவர்களின் கணக்கினைத் தெரிந்து கூறுவார் யாருளர் ? (கணக்கிலர் என்றபடி) இவ் அனுமன் சுடுதலால் எரிந்த அந்த இலங்கை மாநகரம் அன்று அத்துகைப்புண்டவரின் குருதியால் அவிந்தது; என்றால் இவனை யொத்த வீரர் இனி வேறு யார் உளர் ? ஒருவரும் இலர்.

கு :—சொன்னம், வடசொற்றிரிபு; பொன் என்பது பொருள். துகைத்து என்பது செயப்பாட்டுவினைப் பொருளில் வந்தது. அனுமனால் துகைக்கப்பட்டுச் சின்னமானவர்என்க. சின்னமாதலாவது உருவு சிதைந்து சின்னபின்னமாதல். கணக்கு என்றது அளவினை. சின்னமாய் அழிந்தவர் அளவினைக் கணக்கிட்டுச் சொல்ல யாராலும் இயலாது என்றவாறு. இவ்வனுமனால் சுடப்பட்ட நகரத்தின் தீ இவனால் துகைப்புண்டவரின் குருதியால் அவிந்தமை கொண்டு இறந்தவர்களின் பெருக்கை ஒருவாறு உய்த்துணரலாம் என்றவாறு. இலங்கைமாநகரை எரிப்பதற்கும் அவ்வெரியை அவிக்குமளவிற்குக் குருதி பெருகுமாறு வீரர்களைக் கொல்லுதற்கும் வேறு எவராலும் இயலாது என்பார், 'இன்னமா ருளர் வீரர் மற்று' என்றார். இதனால், அனுமன், வீரத்தில் தனக்குவமை யில்லாதவன் என்பது புலப்படுத்தியவாறு. (66)

திரிகூட மலையும் வெந்தமை

6710. விலங்கல் வெந்தவா வேறினி
விளம்புவ தெவனோ
அலங்கன் மாலையுஞ் சாந்தமு
மன்றுதா னணிந்த
கலன்க ளோடுமச் சாத்திய
துகிலொடுங் கதிர்வாள்
இலங்கை வேந்தனு மேழுநாள்
விசும்பிடை யிருந்தான்.

'விலங்கல் வெந்தவா வேறு இனி விளம்புவது எவனோ?—
அலங்கல் மாலையும் சாந்தமும் அன்றுதான் அணிந்த
கலன்களோடும், அச் சாத்திய துகிலொடும், கதிர்வாள்
இலங்கை வேந்தனும் ஏழு நாள் விசும்பிடை இருந்தான்!

பொ :—ஒளி வீசும் வாளை யேந்தியுள்ள இலங்கை வேந்தனுகிய இராவணனும், அன்றைக்குத் தான் அணிந்திருந்த, அசைகின்ற மலர் மாலையோடும் சந்தனத்தோடும், அணிகலன்களோடும் அப்பொழுது சாத்திய ஆடையோடும் ஏழுநாள் வரையில் (இலங்கையில் புகமுடியாமையால்) ஆகாயத்திலேயே தங்கி யிருந்தான் (என்ருல்) திரிகூட மலை வெந்த தன்மையைப் பற்றி வேறு இனிச் சொல்வதற்கு யாதுளது ?

கு :—அன்று தான் அணிந்த என்பது இடைநிலை விளக்காய் முன்னும் இயைந்தது. மாலையொடும் சாந்தத்தோடும் என ஒடு வை முன்னுங் கூட்டுக. அலங்கல் - அசைதல், மார்பில் அசைந்து தொங்கும் இயல்பினது என்பது தோன்ற அலங்கல் மாலை' என்ருர். சூடும் மாலைக்கும் பூசும் சாந்தத்திற்கும் அணிந்த என்பது பொது வினையாய் நின்றது. மாலையணிந்தார், சந்தனம் அணிந்தார் என்ற வழக்கும் காண்க. சிவன் கொடுத்த வாள் கையிலிருந்தும் இலங்கையை எரித்த அனுமனை யாதும் செய்ய வியலவில்லை என்பது தோன்றக் 'கதிர்வாள் இலங்கை வேந்தனும்' என்ருர். வேந்தனும் என்புழி உம்மை உயர்வு சிறப்பு. வேந்தனே ஏழு நாள் விசும்பிடை யிருக்க நேர்ந்ததென்ருல், ஏனைய அரக்கர் பட்டபாட்டைச் சொல்லு வானேன் என்க. அனுமன் இலங்கையில் வைத்த நெருப்பு ஏழுநாள் வரை அவியாதிருந்தமையால் இராவணன் இலங்கையில் நுழையகில்லாது விசும்பிடை இருக்கலானுன். இந்த ஏழு நாளிலும் நீராடுதற்கும் மாலை முதலியன மாற்றியணிதற்கும் இயலாமை புலப்பட, அன்று தான் அணிந்த மாலை முதலியவற்ருேடு விசும்பிடையிருக்க நேர்ந்தது என்ருன். கலன்கள் - அணிகலன்கள். சாத்துதல் - உடுத்தல். விலங்கல் என்றது, இலங்கை மாநகர்க்கு ஆதாரமாயிருக்கும் திரிகூட மலையை. இலங்கை நகரம் மட்டும் எரிந் திருந்தால் இராவணன் நகரை அடுத்துள்ள இடத்தில் தங்கி யிருக்கலாம்; இலங்கைக்கு ஆதாரமாக இருக்கும் திரிகூட மலையே எரிந்தமையால் அவன் விசும்பிடை நிற்கவேண்டியதாயிற்று. இலங்கை வேந்தனுக்கு நேர்ந்த நிலையே விலங்கல் வெந்த வாற்றிற்குப் போதிய சான்ருக அமைதலின், 'வேறினி விளம்புவ தெவனே' என்ருன். (67)

எரிந்த இலங்கை பண்டுபோல் ஆதல்

6711. நொதுமற் றிண்டிற லரக்கன
திலங்கையை நுவன்றேன்
அதுமற் றவ்வழி யரணமும்
பெருமையு மறைந்தேன்

இதுமற் றவ்வழி யெய்திய
திராவண னேவப்
பதுமத் தண்ணலே பண்டுபோ
லந்நகர் படைத்தான்.

'நொதுமல் திண்திறல் அரக்கனது இலங்கையை நுவன்றேன்;
அது மற்று அவ்வழி அரணமும் பெருமையும் அறைந்தேன்;
இது மற்று அவ்வழி எய்தியது; இராவணன் ஏவப்
பதுமத்து அண்ணலே பண்டுபோல் அந்நகர் படைத்தான்.

பொ :—நல்லோரை அழிக்கும் மற்போரில் திண்மையும் திறமையுமுடைய இராவணனது இலங்கையின் தோற்றத்தைப் பற்றிக் கூறினேன்; அதுவேயன்றி அவ்விலங்கையின் அரண் அமைப்பையும் அரக்கர் பெருமையையும் சொன்னேன்; இந்த அனுமன் செய்கை அவ்விடத்து நிகழ்ந்தது; (ஆகலின், அதனையும் கூறினேன்.) (பின்பு) இராவணன் ஏவலினால் தாமரையில் வீற்றிருக்கும் பிரமனே தெய்வத்தச்சனைக் கொண்டு) முன்பு போலவே அந்த எரிந்த நகரைப் புதுவதாக உண்டாக்கினான்.

கு :—நொதுத்தல் - அழித்தல்; (திவாகரம்) நொது மல் - நல் லோரையழிக்கும் மற்போர்; வினைத்தொகை. திண்மை உடம் பிற்கும், திறல் உள்ளத்திற்கும் உரியன. அவ்வழியதாகிய அரணமும் என அதுவைப் பின் கூட்டுக. மற்று இரண்டும் அசைநிலை. அரணம் மதில் முதலியன. பெருமை என்றது அரக்கரது பெருமையை. இராமன் வீடணனை வினவியது இலங்கையின் அரணத்தையும் சேனையின் தன்மையையும் பற்றியே யாதலின் "இலங்கையை நுவன்றேன்; அரணமும் பெருமையும் அறைந்தேன்" எனத் தொகுத்துச் சுட்டலாக வீடணன் இறுதியில் கூறினான். அனுமன் இலங்கை யரக்கரை அழித்ததும் இலங்கையை யெரியூட்டியதுமாய செய்திகளை வீடணன் தானே கூறியது வினாவின்றியும் விடை கூறியதாகாதோ என்னும் ஐயத்தைப் போக்கவே 'இது மற்றவ்வழியெய்தியது' என்று காரணங் கூறியவாறு. இலங்கையைப் பற்றிக் கூறப்புக்காற்கு இலங்கையில் நிகழ்ந்த அனுமனது செயலும் கூறுதல் இயைபுடையதே என்றவாறு அவ்வழி யெய்தியது; 'ஆகலின் அதையுங் கூறினேன்' என்பது இசை யெச்சமாக வருவிக்கப்பட்டது. பதுமத்தண்ணல் - பிரமன். பண்டுபோல் அந்நகர் படைத்தவன் தெய்வத் தச்சனே என்பது, "பொன்னகர் மூவகையுலகினு மழகு முற்றுற, ஏவின இயற்றினன் கணத்தின் என்பரால் தேவரும் மருள்கொளத் தெய்வத்தச்சனே"

(இராவணன் மந்திரப்-1) என முன் கூறியதால் பெறப்படுதலின் பதுமத்தண்ணலே படைத்தனன் என இங்குக் கூறியது பிரமன் ஏவுதல் கருத்தா ஆதல் பற்றி என்க. (68)

வீடணன் வந்ததற்கும் காரணமாவது அனுமன் வீரமே

6712. காந்தும் வாளியிற் கரன்முதல்
வீரருங் கவியின்
வேந்து மென்றிவர் விளிந்தவா
கேட்டன்றவ் விலங்கை
தீந்தவா கண்டு மரக்கரைச்
செருவிடை முருக்கிப்
போந்தவா கண்டு நானிங்குப்
புகுந்தது புகழோய்.

'காந்தும் வாளியின் கரன் முதல்
வீரரும், கவியின்
வேந்தும், என்று இவர் விளிந்தவா
கேட்டு அன்று; அவ் விலங்கை
தீந்தவா கண்டும், அரக்கரைச்
செருவிடை முருக்கிப்
போந்தவா கண்டும் நான் இங்குப்
புகுந்தது—புகழோய்!'

பொ :—புகழுக்கே யுரியவனே! நான் இங்கு உனக்கு அடைக்கலமாகப் புகுந்தது - நினது ஒளி வீசும் அம்பினால் கரன் முதலிய வீரர்களும், குரங்குகட்கு அரசனாகிய வாலியும் என்ற இவர்கள் இறந்தவாற்றைக் கேள்விப்பட்டதனால் மட்டும் அன்று; இலங்கை மாநகரம் அனுமனால் தீய்ந்தவாற்றைக் கண்டதாலும், அவன் அரக்கரைப் போரில் அழித்துவந்தவாற்றைக் கண்டதாலும் ஆம்.

கு :—காந்துதல் - ஒளி வீசுதல். கேட்ட செய்தியினும் தன் கண்ணால் கண்ட செய்தியே உறுதியுடையது ஆதலின், நானிங்குப் புகுந்தது - விளிந்தவா கேட்டன்று; தீந்த வா கண்டும் போந்த வா கண்டும் ஆம் என்றான். கரதூடணரும் வாலியும் இராமன் அம்பால் விளிந்தமை கேள்விப்பட்டதும் வீடணன் வருகைக்குக் காரணமே ஆயினும், அனுமனால் அரக்கர் பட்டதும் இலங்கை வெந்ததும் கண்ட பின்னரே அவ்வனுமனை ஆளாக உடைய இராமன் பெருமை

யுள்ளவாறு வீடணன் உணர்ந்தமை தோன்ற 'விளிந்தவா கேட்டன்று' என மறுத்து, 'இலங்கை தீந்தவா கண்டும் அரக்கரைச் செருவிடை முருக்கிப் போந்தவா கண்டும் நான் இங்குப் புகுந்தது' என்றான். நான் இங்குப் புகுந்தது, கேட்டன்று; கண்டும், கண்டும் ஆம். என ஒரு சொல் வருவித்து முடிக்க. கவியின் வேந்து என்றது வாலியை. அரக்கர் என்றது, கிங்கரர் முதலியோரை. முருக்குதல் - அழித்தல்; கொல்லுதல். அனுமன் இலங்கையில் வீரச்செயல் புரிந்து பெற்ற புகழ் முழுமையும் அவனை ஆளாக உடைய இராமனையே சாரும் எனப் புலப்படுத்துவான்போல் இங்கு இராமனைப் 'புகழோய்' என வீடணன் விளித்தான். இத்தகைய அனுமனை ஆளாக உடைய இராமன் இராவணனை வெல்லுதல் தப்பாது என்ற உறுதிகொண்டே வீடணன் அடைக்கலம் புகுந்தான் என்றவாறு. (69)

அனுமன் செயல் கேட்டு இராமன் மகிழ்தல்

6713. கேள்கொள் மேலையான் கிளத்திய
பொருளெலாங் கேட்டான்
வாள்கொ ணோக்கியைப் பாக்கியம்
பழுத்தன மயிலை
நாள்கள் சாலவு நீங்கலி
னலங்கெட மெலிந்த
தோள்கள் வீங்கித்தன் தூதனைப்
பார்த்திவை சொன்னான்.

கேள் கொள் மேலையான் கிளத்திய
பொருள் எலாம் கேட்டான்,
வாள் கொள் நோக்கியைப், பாக்கியம்
பழுத்தன மயிலை,
நாள்கள் சாலவும் நீங்கலின்,
நலம் கெட மெலிந்த
தோள்கள் வீங்கித், தன் தூதனைப்
பார்த்து, இவை சொன்னான்.

பொ :—தான் நண்பனாகக் கொண்ட மேன்மையுடைய வீடணன் சொன்ன கருத்துகளை யெல்லாம் கேட்டவனாகிய இராமன், வாளின் தன்மை கொண்ட கண்களையுடையவளை - புண்ணியப் பயன் போன்றவளாய் மயிலன்ன சாயலையுடையளாய சீதையைப் பல நாட்களாக

நீங்கியிருத்தலால் அழகுகெட மெலிந்த தன் தோள்கள் பூரிக்கப் பெற்றுத் தன் தூதனாகிய அனுமனைப் பார்த்து இச்சொற்களைச் சொல்லலானான்.

கு :—கேள் - நட்பு. மேலையான் என்றது வீடணனை, நம்பத் தக்க மெய்மொழியுடையான் என்பது தோன்ற அவனை 'மேலையான்' என்றார். பொருள் என்றது கருத்தினை. நோக்கியை - மயிலை என்பன சீதை என்ற ஒரு பொருள் மேல் வந்த பல பெயர்கள். பிரிய இயலாத வடிவழகுடைமை தோன்ற 'வாள் கொணோக்கியை' எனவும். அவள் கற்பு மிக்க உள்ளத்தின் பெருமை தோன்றப் 'பாக்கியம் பழுத்தன்ன மயிலை' எனவும் சிறப்பித்தார். மயில் போன்ற சாயலுடைமை பற்றிச் சீதை 'மயில்' என உவமையாகு பெயரால் குறிக்கப் பெற்றாள். இதனானும் அவளைப் பிரிதலின் அருமை புலப் படுத்தியவாறு, (70)

அனுமனை இராமன் பாராட்டுதல் 6714-6716

6714. கூட்டி னார்படை பாகத்தின்
மேற்படக் கொன்றாய்
ஊட்டி னையெரி யூர்முற்று
மினியங்கொன் றுண்டோ
கேட்ட வாற்றினாற் கிளிமொழிச்
சீதையைக் கிடைத்தும்
மீட்டி லாததென் விற்றொழில்
காட்டவோ வீர.

'கூட்டினார் படை பாகத்தின்
மேற்படக் கொன்றாய்;
ஊட்டினாய் எரி, ஊர் முற்றும்;
இனி அங்கு ஒன்று உண்டோ?
கேட்ட ஆற்றினால், கிளி மொழிச்
சீதையைக் கிடைத்தும்
மீட்டி லாதது என் வில் தொழில்
காட்டவோ? வீர!

பொ :—(இராமன் அனுமனை நோக்கி) வீரனே! வீடணன் பால் யான் கேட்ட வகையால் பல நாளாகத் திரட்டி வைத்திருந்த பகைவரது படையை ஒரு பாதிக்கு மேலாகக் கொன்றிருக்கின்றாய்; இலங்கையாகிய ஊர் முழுதும் எரியூட்டி யிருக்கின்றாய்' (என அறி

கின்றேன், அங்ஙனம் நீ செய்தமையின்,) இனி அவ்விலங்கையில் யான் செய்யக்கூடிய செயல் ஒன்று உண்டோ? (இல்லை;) கிளி போன்று பேசும் மொழியினையுடைய சீதையைக் கிடைக்கப் பெற்றும் நீ மீட்டுக் கொணராதது, என் வில்லின் வலிமையை உலகறியக் காட்டுதற்காகவே போலும்?

கு:—அனுமன் வீரச் செயலை இராமன், கண்ணுற்காணாது வீடணன்பால் கேட்டே அறிந்தானாகலின் 'கேட்டவாற்றினால்' என்றான். கேட்டவாற்றினால், கொன்றாய்; ஊட்டினாய் எரி என அறிகின்றேன்; அங்ஙனம் நீ செய்துவிட்டமையால் அங்கு இனி யான் செய்தற்குரிய தொன்று உண்டோ? என வேண்டுஞ் சொல் இசை யெச்சமாக வருவிக்க. இராமன் தன் விற்றொழில் காட்டி இராவணனைக் கொன்று சீதையை மீட்க வேண்டுமே யொழிய, அவன் வில்லினாற்ற லுக்கு மாசு உண்டாகுமாறு தான் மீட்டல் கூடாது என எண்ணியே அனுமன் சீதையை மீட்கவில்லை; என அனுமன் ஆற்றலைப் புகழ்ந்த வாறு. இராவணனைக் கொன்று சீதையை மீட்கும் ஆற்றல் அனுமனுக்கு உண்டு என்பது இதனால் புலப்படுத்தியவாறு. 'காட்டக் கொல்' என்புழிக் கொல் ஐயத்தின்கண் வந்தது. இலங்கையில் சிறையிருக்கும் சீதையை அனுமன் தானே மீட்க எண்ணி, "ஆறு துயரஞ் சொலிள வஞ்சி யடியன்றோள், ஏறுகடி தென்று தொழு தின்னடி பணிந்தான்" (சூளாமணிப் - 10) என்பதால் புலப்படுகின்றது; ஆயினும், "அன்றியும் பிறிதுள்ள தொன்றுரியன், வென்றி வெஞ்சிலை மாசுணும்" (சூளாமணிப் - 14) எனச் சீதை கூறியதை யுடன்பட்டு அனுமன் மீட்காது வந்தானாகலின், இராமன் தன் விற்றொழில் காட்டியே சீதையை மீட்க வேண்டும் என்ற கருத்து அனுமனுக்கும் உண்மை தெளியலாம், சம்பாதிபால் கேட்ட ஆற்றினால் சீதையைக் கிடைத்தும் எனப் பொருள் கூறலும் ஆம். (71)

6715. நின்செய் தோள்வலி நிரம்பிய
விலங்கையை நேர்ந்தோம்
பின்செய் தோஞ்சில வவையினிப்
பீடொன்று பெறுமே
பொன்செய் தோளினாய் போர்ப்பெரும்
படையொடும் புக்கோம்
என்செய் தோமென்று பெரும்புக
ழெய்துவா னிருந்தோம்.

'நின் செய் தோள்வலி நிரம்பிய
இலங்கையை நேர்ந்தோம் ;
பின் செய்தோம் சில ; அவையினிப்
பீடு ஒன்று பெறுமே ?
பொன் செய் தோளிணுய் !—போர்ப் பெரும்
படையொடும் புக்கோம் ;
என் செய்தோம் என்று பெரும் புகழ்
எய்துவான் இருந்தோம் ?

பொ :—பொன்ஞெளி வீசும் தோள்களையுடையவனே! நின் தோள்கள் செய்த ஆற்றலே நிரம்பியுள்ள இலங்கையை(க் கடல் கடந்து) அடைந்தோமாய்ப், போர் செய்தற்குரிய பெரிய படையோடும் அவ்விலங்கையில் புகுந்தோமாய்ப், பின்பு சில செயல்களைச் செய்வோம் ; (ஆயினும்) அவை இனி ஒரு பெருமையைப் பெறுமோ ? (பெருது ; ஆதலால்) இனி, என்ன வீரச் செயலைச் செய்துவிடுவோம் என்று பெரிய புகழைப் பெறுதற்கு ஆசை கொண்டு இருக்கின்றேம் ?

கு :—அனுமன் இலங்கையில் தனித்துச் செய்த வீரச் செயல் அளவு எழுபது வெள்ளம் சேனையோடு சென்றும் இராமன் செய்ய இயலாது என்றவாறு. நின் தோள் செய்வலி என மாறுக. அனுமன் கிங்கரர் முதலிய அரக்கரைக் கொன்றதாலும், இலங்கையை எரியூட்டியதாலும் அவன் வீரச் செயலைப்பற்றியே இலங்கையிலுள்ளோர் நினைந்து அலறிக் கொண்டிருத்தலால், 'நின் செய்தோள்வலி நிரம்பிய இலங்கை' என்றுர். நேர்தல் இங்கு அடைதலை உணர்த்தியது. கடல்கடந்து படையொடு இலங்கை புகுதலின் அருமை புலப்பட 'நேர்ந்தோம், புக்கோம்' என்ருன். நேர்ந்தோமாய்ப் புக்கோமாய்ப் பின் சில செய்தோம் என முற்றெச்சமாக்கி முடிக்க. செய்தோம், என் செய்தோம், இருந்தோம் என்பன எதிர்காலம் இறந்த காலமாக 'வந்த காலவழுவமைதி' அனுமன் ஒருவனே புகுந்து பல வீரச் செயல் புரிந்த இலங்கையில் போர்ப் பெரும் படையொடு புகுந்து சில செய்தலால் பெருமை உண்டாகாது என்றவாறு. அவை இனி ஒரு பீடு பெறுமே ? என மாறுக. அனுமன் வீரச் செயலுக்கும் பின் இராமன் எத்துணைவீரச் செயலைச் செய்தாலும் புகழ் எய்த இயலாது என்பது இறுதியடியின் கருத்தாகும். அனுமனைக் காட்டிலும் வீரச் செயல் செய்யவும் இயலாது ; பெரும் புகழ் பெறவும் இயலாது என இராமன் அனுமனைப் புகழ்ந்தவாறு. (72)

6716. என்ன தாக்கிய வலியொடவ்
விராவணன் வலியும்
உன்ன தாக்கினே பாக்கிய
முருக்கொண்ட தொப்பாய்
முன்ன தாக்கிய மூவுல
காக்கிய முதலோன்
பின்ன தாக்கிய பதநினக்
காக்கினென் பெற்ருய்.

'என்னது ஆக்கிய வலியொடு அவ்
இராவணன் வலியும்
உன்னது ஆக்கினே; பாக்கியம்
உருக் கொண்டது ஒப்பாய்!
முன்னது ஆக்கிய மூவுலகு
ஆக்கிய முதலோன்
பின் அது ஆக்கிய பதம் நினக்கு
ஆக்கினென்; பெற்ருய்.'

பொ :—புண்ணியமே உருவு கொண்டாற் போன்றவனே எனக்கே யுரியதாகக் கொண்டிருந்த என் வலிமையோடு அந்த இராவணன் வலிமையையும் (நீ முந்துறச் சென்று பொருது வென்றமையால்) உன்னுடையதாக ஆக்கிக் கொண்டாய்; ஆதலால் முன்னே உண்டாக்கப் பெற்றவனும் மூன்று உலகங்களேயும் உண்டாக்கினவனுமான பிரமனுக்குப் பின்பு அந்த உலகத்தைப் படைத்தற்கு அப்பிரம பதத்தை நினக்கு உரியதாக ஆக்கிவிட்டேன்; நீ அப்பதவியைப் பெற்ருயாயினே.

கு :—பாக்கியம் - புண்ணியம். அனுமன் - புண்ணியம் அல்லா ததைச் செய்யான் ஆதலின் அவனைப் புண்ணியமே உருவ கொண்டாற் போன்றவன் என்று தற்குறிப்பேற்றமாகக் கூறினுன். கரதூடணர் வாலி முதலிய பெருவலியுடையவரை வென்று வலிமையைத் தனக்கே யுரியதாகக் காட்டினவன் இராமன் ஆதலின் 'என்னது ஆக்கிய வலி' என்ருன். அத்தகைய இராமன் வலிமை, முன்னதாக இலங்கையில் சென்று பொருத அனுமன் வலிமைக்கு முன் குறைந்து தோன்றுதலின், என்ன தாக்கிய வலிமையும் உன்னதாக்கினே என இராமன் கூறினுன். வெள்ளி மலையை அள்ளியெடுத்த இராவணன் பேராற்றல், அரக்கரை அழித்து இலங்கையை எரித்த அனுமனைத் தடுக்க இயலாமையின் 'இராவணன்வலியும் உன்னதாக்கினே' என்ருன். "உன்குலமுன்ன

தாக்கி யுயர்புகழ்க் கொருத்தியாய, தன்குலந் தன்னதாக்கித்......... என்குலம் எனக்குத் தந்தாள்" (சுந்தரகாண்டம் திருவடி-61) என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். முன்னதாக்கிய முதலோன் மூவுலகாக்கிய முதலோன் எனத் தனித்தனி இயையும். திருமால் தனது உந்திக் கமலத்தில் பிரமனை முன்னர் உண்டாக்க, அப்பிரமன் பின் மூவுலகங்களையும் உண்டாக்கிய முறைமை தெரிவித்தவாறு. இப்போது படைப்புத் தொழில் செய்துகொண்டுள்ள பிரமனுக்குப் பின் அப்பிரமபதத்தை நீயே மேற்கொள்வாய் என்றவாறு. அனுமன் வருங்காலப் பிரமன் ஆனன் என்க. முதலோன்பின் அது ஆக்கிய பதம் என்புழி, அது என்பது உலகத்தை. ஆக்கிய - ஆக்க; செய்யிய என்னும் வினையெச்சம். பதம் - அப்பிரம பதம். சீதையின் போகின்ற உயிரை மீட்டமையாலும், அறத்திற்கு மாருய அரக்கரை அழித்து அறத்திற்குத் துணை செய்ததாலும் அனுமனுக்குப் பிரம பதவியைக் கொடுத்தான் இராமன். துணிவு பற்றிப் பெற்ருய் என இறந்த காலத்தால் கூறியவாறு. (73)

தன்புகழ் கேட்ட அனுமன் நாணமும் வானரப்படையின் வியப்பும்

6717. என்று கூறலு மெழுந்திரு
நிலனுற விறைஞ்சி
ஒன்றும் பேசல ஞணினுல்
வணங்கின னுரவோன்
நின்ற வானரத் தலைவரு
மரசுமந் நெடியோன்
வென்றி கேட்டலும் வீடுபெற்
ருரென வியந்தார்.

என்று கூறலும், எழுந்து இரு நிலன் உற இறைஞ்சி,
ஒன்றும் பேசலன் நாணினுல், வணங்கினன் உரவோன்;
நின்ற வானரத் தலைவரும், அரசும், அந் நெடியோன்;
வென்றி கேட்டலும், வீடு பெற்ருர் என வியந்தார்.

பொ :—என்று இராமன் சொல்லுதலும், வலிமையில் அறிவிற் சிறந்தவனுகிய அனுமன், இருக்கைவிட்டு எழுந்து பெரிய நிலத்தில் உடம்பு பொருந்துமாறு வீழ்ந்து வணங்கிவிட்டு ஒன்றும் பேசாதவனுய்த் தன் புகழ் கேட்டலால் உண்டான நாணத்தால் தலைசாய்த்திருந்தான்; மற்றைய வானரத் தலைவர்களும் அரசனுகிய சுக்கிரீ

வனும் அந்த நெடியோனாகிய அனுமனது வெற்றியைக் கேட்ட அளவில் வீடு பெற்றவர்போல வியந்து மகிழ்ந்தார்கள்.

கு :—உரவு - திண்மை; இங்கு அறிவுத் திண்மையையும் உடன் உணர்த்தியது. இராமன் புகழ்ந்தது அனுமன் இலங்கையில் காட்டிய ஆற்றல் பற்றியே யாதலின் அவனை இங்கு 'உரவோன்' என்ற பெயரால் குறிப்பிட்டார். இலங்கையில் தான் செய்த வீரச் செயல்களை இதுகாறும் அனுமன் கூறுதிருந்ததும் வீடணன் அச் செயல்களைக் கூறும்போதும், இராமன் தன்னைப் புகழ்ந்தபோதும் நாணியதும் அனுமனது அறிவின் திண்மையாலாதலின் அப் பொருளும் உடன் தோன்ற, அப்பெயரால் கூறினர். 'உரனென்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்' (குறள் - 24) என்புழிப் பரிமேலழகர் உரன் என்பதற்குத் திண்மை என்று பொருள் கூறிவிட்டு 'திண்மை ஈண்டறிவின் மேற்று' என்று விளக்கம் தருதலும் நினைக. நிலனுற இறைஞ்சி என்றது, இராமனை அனுமன் நிலத்தில் எட்டுறுப்பும் பட வீழ்ந்து வணங்கியதை உணர்த்தியது. அவ்வாறு வணங்கியதன் குறிப்பு, இலங்கையில் தன்னால் நிகழ்ந்ததாக வீடணன் கூறிய நிகழ்ச்சிகள் யாவற்றிற்கும் உள்ளீடாய் நின்று உதவியது இத்திருவடிகளே என்பதைப் புலப்படுத்தலும், அச்செயல்களுக்காகப் பெரிய ஞானிகளும் பெறமுடியாத பிரம பதத்தைத் தனக்குக் கொடுத்தருளிய இராமன் பெருங் கருணையையும் பெருந் தெய்வத் தன்மையையும் நினைந்து தன் நன்றியைப் புலப்படுத்தலும் ஆம். நாணினால் வணங்கினன் என்றது, தன் புகழ் கேட்டலால் உளதாகிய நாணத்தால் தலை குனிந்திருந்த நிலையை உணர்த்தியவாறு. "தம்புகழ் கேட்டார் போல் தலைசாய்த்து மரந் துஞ்ச" (கலி - 119) என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். வீடு - முத்தி. வீடு பெற்றவர் அவ்வீட்டின்பத்தின் பெருமையை நினைந்து வியத்தல் போல அனுமனது வென்றி கேட்டு வானரத் தலைவர்கள் வியந்து மகிழ்ந்தனர். நெடியோன் என்றது அனுமனை. நெடியோனாய்க் கடல் தாண்டியும் அரக்கரை அழித்தும் இலங்கை யெரியூட்டியும் செய்த வீரச் செயல்களை நினைத்து அனுமனை அப்பெயரால் குறித்தார். (74)

இலங்கை கேள்விப் படலம் முற்றிற்று.

6. வருணனை வழிவேண்டு படலம்

இராமன், வானர சேனையோடு இலங்கைக்குச் செல்லக் கடலில் வழிவிடுமாறு வருணனை வேண்டுகின்ற நிகழ்ச்சி கூறப்படுதலின், இப்பகுதி, 'வருணனை வழி வேண்டு படலம்' என்று பெயர் பெறு கின்றது. சிற்சில ஏடுகளில் இப்படலத்தின் முதற்பகுதிக்கு (63ஆம் பாடல்வரை) கடல் சீறியருள் படலம், கடல் சீறியருளிய படலம், கடல் சீறிய படலம், கடலைச் சீறிய படலம் என வேறு வேறு பெயர் களும், பிற்பகுதிக்கு (64 முதல் 85ஆம் பாடல்வரை) வருணன் அடைக்கலப் படலம் என்ற ஒரு பெயரும் காணப்படுகின்றன. வருணனை வழி வேண்டுதலே இராமன் நோக்கம் என்பதை இப் பகுதி இரண்டும் புலப்படுத்துதலின், இப்படலத்தை இரண்டாக் காது வருணனை வழி வேண்டு படலம் என ஒன்றாக அமைத்தலே சிறப்புடைத்தாதல் காணலாம்.

படலப் பொருட் சுருக்கம்

இராமன் வீடணனை நோக்கி நம் சேனை கடலைக் கடந்து செல்லுவது எப்படி எனச் சிந்திக்குமாறு கூறுகின்றான். வீடணன் அவ்வாறே சிந்தித்து இராமனை நோக்கி, 'கடல் உம் குலத்தோடு தொடர்பு உடையது ஆதலின், நீ கேட்கும் வரத்தைக் கொடுக்கும்; அதனை இரந்து வழியை வேண்டுக என்று கூறுகின்றான். வீடணன் கூறியதே நல்லது என இராமன் கடலுக்கு அருகில் தருப்பைப் புல்லை விதிப்படி பரப்பி அதன்மேல் கிடந்து ஏழுநாள் வரையில் வருண மந்திரத்தை உருவேற்றிக் கொண்டிருக்கின்றான். வருணன் வந்து காட்சியளிக்கவில்லை. தண்புனல் போன்ற இராமன் உள் ளத்தில் வெங்கனல் போன்ற வெகுளியெழுகின்றது. தம்பியை நோக்கித் 'தருதி வில்' என்று பலமுறை கேட்கின்றான். மறுக்க இயலாமல் இலக்குவனும் இரத்தக் கண்ணீர் விட்டுக்கொண்டு வில்லைக் கொடுக்கின்றான். வாங்கிய வில்லை வளைத்து நாணொலி செய்து, ஊழிக்காலத்துச் சூரியன் கதிர்கள் போன்ற அம்புகளைக் கடலின்மேல் எய்கின்றான். அவ்வம்புகள் இக்கடலை மட்டுமன்றி எழு கடலையும் வெதுப்புகின்றன. கடல் வாழ் உயிர்களையெல்லாம் கலக்கு கின்றன. கடலைப் பற்றியெரிக்கும் நெருப்பு விண்ணுலகத்தையும் வெதுப்புகின்றது.

அப்பொழுதும் வருணன் வரவில்லை. இராமன் வெகுளி மேலும் விஞ்சுகின்றது. பிரமாத்திரத்தை யெடுத்து வில்லில் தொடுக்

கின்றான். அதைக் கண்டு மேகங்களும் கதறுகின்றன. வருணனும் வாய் புலர்ந்து கதறுகின்றான். திருமாலின் அமிசமாக வந்துள்ள இராமன் இரந்து வேண்டவும் வருணன் வாராமல் பிழை செய்து விட்டானே! என்று தேவர்களும் நினைந்து வருந்துகின்றார்கள். நிலம் முதலிய மற்றை நான்கு பூதங்களும் வருணன் செய்த பிழையால் தமக்கும் இடையூறு வருமோ என அஞ்சி வருணனை வைகின்றன. அனற் கொழுந்தும் புகைப் படலமும் செறிந்த கடலில் வருணன், வழி தெரியாமல் குருடன் போல வருந்திக்கொண்டு, வெந்த உடலோடு அழுது அழிகின்ற கண்களோடு தொழுத கையோடு வந்து இராமன் திருவடிகளில் 'அடைக்கலம்' என வீழ்கின்றான். இராமனது தெய்வநிலையின் பெருமையைக் கூறி வழுத்துகின்றான். இராமன் இரங்கிச் சீற்றம் தணிந்து அபயமும் அளித்து விட்டு, 'யாம் இரந்து வேண்ட வாராமல் சினந்தபின் வரக் காரணம் என்னை?' எனக் கேட்கின்றான். 'ஏழாவது கடலில் நிகழ்ந்த மீன்களின் போரை விலக்கப் போயிருந்தேன்; இங்கு நிகழ்ந்தது ஏதும் அறிந்திலேன்' என்று வருணன் கூறுகின்றான்.

அதைக் கேட்ட இராமன் மனம் இரங்கி, 'இது நிற்க, இந்த அம்புக்கு இலக்கு வேண்டும் கூறுக' என்கின்றான். வருணன் மகிழ்ந்து, 'மருகாந்தாரம் என்ற தீவில் வாழ்கின்ற நூறு கோடி அவுணர்களும் உலகிற்கு அழிவு செய்து வருகின்றனர்; எனக்கும் தீயவர்களாக உள்ளனர்; அவர்கள்மேல் நின் கணையை ஏவுக' என வேண்டுகின்றான். அவ்வாறே இராமன் தன் பிரமாத்திரத்தை எய்கின்றான். இமைப்பொழுதில் அந்தத் தீவையே அழித்துவிட்டு அந்த அம்பு மீள்கின்றது. பிறகு இராமன் வருணனை நோக்கி, 'நீ அபயம்! என்ற சொல்லைச் சொன்னாய்; ஆதலின் சினம் தீர்ந்தேன். எனக்குப் பழியுண்டாக்கிய அரக்கர்தம் செருக்கையடக்கி மீளக் கடலில் வழி தருக' என்கின்றான். "கடலை வற்றச்செய்து போவதாயின் அளவில்லாத காலம் கழியும்; அல்லது, கடல் நீரினைக் கல்லைப்போல இறுகச் செய்து கடப்பதாயின் கடல்வாழ் உயிர்களெல்லாம் அழியும்; ஆதலால், இவ்விருதிறனும் வேண்டா. என்மேல் அணைகட்டிச் செல்வதே நல்லது. என்மேல் இட்ட கல் முதலிய பொருள்கள் கடலில் ஆழ்ந்து விடாமல் யான் வரம்பில்லாத காலம் எல்லாம் தாங்குகின்றேன்" என்கின்றான் வருணன். அதுவே நல்லது என இராமன் பாராட்டிவிட்டுக் 'குன்றுகளைக் கொண்டு அடுக்கிக் கடலில் அணை கட்டுக' எனச் சேனைக்குப் பணித்துவிட்டுத் தன் இருப்பிடம் சேர்கின்றான். வருணனும் அவன் அருள் பெற்றுச் செல்கின்றான்.

கம்பர் வான்மீகத்தோடு வேறுபடும் இடங்கள்

1. இராமன் வருணனை நோக்கித் தருப்பைப் புல்லில் தவங் கிடந்தபோது மூன்று இரவுகள் கழிந்தன என வான்மீகத்தில் உள்ளது; ஏழு நாட்கள் கழிந்ததாகக் கம்பர் கூறுகின்றார். ஏழு கடலுக்கு உரியவன் வருணன் ஆதலின், அவனை நோக்கி ஏழுநாள் காறும் தவங்கிடந்ததாகச் சொல்வது பொருத்தமுடைத்தாகும் எனக் கம்பர் இவ்வாறு மாற்றஞ் செய்தார் போலும்.

2. இராமன் பெரிய கோதண்டம் என்ற வில்லை (வருணனை வருவிக்க) வளைத்தபோது இலக்குவன் 'வேண்டா, வேண்டா, என்று கூறிக்கொண்டே அவ்வில்லைத் தன் கைகளால் பற்றிக் கொண்டு இவ் வில் இல்லாமலே வருணனைப் பணிவிக்கலாம் எனக் கூறியதாகவும், விண்ணில் உள்ள தேவர்களும் முனிவர்களும் வேண்டா, வேண்டா என ஒலி செய்து தடுத்ததாகவும் வான்மீகம் கூறுகின்றது. கம்பர் இந் நிகழ்ச்சிகளைக் கூறவில்லை.

3. பிற அம்புகள் தொடுப்பதற்கு ஒரு வில்லும் பிரமாத்திரம் தொடுக்க வேறொரு வில்லும் இராமன் வளைத்ததாக வான்மீகி கூறவும் கம்பர், முன் வளைத்த வில்லிலேயே பிரமாத்திரத்தையும் தொடுத்ததாகக் கூறுகின்றார். இரண்டு விற்களைக் கையாண்ட தாகக் கூறவில்லை.

4. பிரமாத்திரத்தை இராமன் தொடுத்தவுடன் வருணன், உதயமலையிலிருந்து தோன்றும் உதய சூரியனைப்போல நடுக்கடலி லிருந்து தோன்றினன் என்றும், அவன் பலவகையான மணிகள் பதித்த பொன்னொலியன்ற அணிகலன்களையும், மணமிக்க மலர் மாலை களையும், கவுத்துவ மணியொடு தோன்றிய வெள்ளொளி வீசும் நன் மணியை நடுநாயக மணியாகக் கொண்ட முத்து மாலையையும் அணிந்து கொண்டிருந்தான் என்றும் வான்மீகம் கூறுகின்றது.

வருணன் கடலில் எழுந்த கனலாலும் புகையாலும் வழிதெரி யாமல் குருடனைப்போல வருந்திக்கொண்டு வந்ததாகவும், வருங்கால் தீய்ந்துபோன தலையையும் வெந்து உருகும் உடம்பையும் உடையனாக இருந்தான் எனவும் கூறுகின்றார் கம்பர். அணிகலன்களால் அலங் கரிக்கப் பெற்றவனாக வருணனைக் கம்பர் கூறவில்லை. இராமன் அம்பால் கடல் வெந்து வெதும்பும்போது அந்தக் கடலின் தெய்வ மாகிய வருணன் அந்தத் துன்பம் தனக்கின்றி அலங்காரமுடையனாக வந்தான் என்பதைக் காட்டிலும், கடலடைந்த துன்பங்கள் யாவும் கடல் தெய்வமாகிய வருணனுக்கும் இருந்தன என்று கம்பர் காட் டியது பொருத்தமாகவே யுள்ளது.

5. அம்பும் கையுமாக நிற்கும் இராமனைப் பார்த்துக் கூப்பிய கையுடன் கிட்டி முகமன்கூறித் தன் விண்ணப்பத்தைத் தெரிவித்தான் என வான்மீகம் கூறுகின்றது.

வெந்து உருகும் உடம்பொடு வருந்தி வந்த வருணன் அபயம், அபயம் என்று அரற்றிக்கொண்டே இராமனை அண்மி அவன் தெய்வ நிலையை பலபடச் சொல்லித் துதித்துவிட்டு ஒளிவீசும் மணிமாலை ஒன்றை அவன் அடியுறையாக வைத்துத் தன் பிழையைப் பொறுக்க வேண்டும் எனத் தரையில் வீழ்ந்து வணங்கினதாகக் கம்பர் கூறுகின்றார்.

வருணன் அபயம் என்று இராமன் திருவடியில் வீழ்ந்ததாகவோ, தன் பிழையைப் பொறுக்குமாறு வேண்டியதாகவோ, மணிமாலையை அடியுறையாக வைத்து வணங்கியதாகவோ வான்மீகி கூறவில்லை. இராமன் திருமாலின் அமிசமாக வந்தவன் ஆதலாலும், பெரியோனாகிய அவ்விராமனைக் காணுங்கால் வருணன் தன்னிடம் சிறப்பாகக் கிடைக்கக் கூடிய முத்துக்களாலாய மாலையை அடியுறையாக வைத்து வணங்குதலே முறையாதலாலும், அவன் அம்பால் நேரும் தீங்கில் நின்றும் உய்வதற்கு வழி அவன்பால் 'அபயம்' என்று வீழ்வதன்றிப் பிறிதில்லை ஆதலாலும், கம்பர் இக்கருத்துக்களைப் புதுவதாகச் சேர்த்துக் கூறினாராதல் வேண்டும். மேலும் வருணன் நடுக் கடலிலிருந்து எழுந்து காட்சியளித்ததாக வான்மீகம் கூறவும், கம்பர், ஏழாவது கடலில் நிகழ்ந்த மீன்களின் போரை விலக்கச் சென்றமையால் இராமனது வேண்டுகோளைத் தெரிந்துகொள்ள இயலாது போயது என்று வருணன் கூறியதாகவும் கூறியுள்ளார். புதுவதாகப் புகுத்திய இக்கருத்துக்கள் இராமன் பெருமையையும் வருணன் பணிவையும் புலப்படுத்த உதவுகின்றமை காணலாம்.

6. வருணன் இராமனை நோக்கி, 'நின்பால் கொண்ட பத்தியினாலோ பயத்தினாலோ கடலை வறளச் செய்வது இயலாது; பெரிய மீன் முதலிய உயிர்கள் வாழ்கின்ற கடல் நீரை இறுகச் செய்வதும் இயலாது' என உறுதியாகக் கூறியதாக வான்மீகத்தில் உள்ளது.

வான்மீகத்தில் வருணன் சொல்லில் காணப்படும் கடுமையைக் கம்பர் மாற்றிப் பணிவும் அன்பும் தோன்றச் செய்துள்ளார். 'இக்கடலின் ஆழமும் அகலமும் அளப்பரிது ஆகலின் இந்நீரை வற்றச் செய்யக் காலம் நீடிக்கும்; அதனால் நின் சேனையும் தளர்வுறும்; ஆதலால் இக்கடல் நீரை வற்றச் செய்து போவது பொருந்துவதாக இல்லை எனவும், கல்லைப்போல் கடல் நீர் இறுகுமாறு செய்யலாகாதோ என்றால், கடலில் வாழும் கணக்கிலா உயிர்கள் யாவும் அழிவுறும், ஆதலால், அதுவும் பொருந்தாது எனவும், தன் மீது

அணைகட்டிச் செல்லுதலே நல்லது' எனவும், வருணன் கூறியதாகக் கம்பர் அமைத்துள்ளார். இது இராமன் பெருமையையும் வருண னுடைய பணிவுடைமையையும் நன்கு புலப்படுத்துவதாக அமைந் திருத்தல் காணலாம்.

7. இராமன் தன் வில்லில் தொடுத்த பிரமாத்திரத்திற்கு இலக்கு யாது என்று கேட்டபோது வருணன், 'துருமகுல்யம் எனப் பெயர் பெற்ற இடத்தில் பலர் கொடிய தோற்றத்தையும் செயலையும் உடையராய் யார்க்கும் தீங்கு புரிபவர்களாய் இருக்கின்றார்கள்; அவர்கள் என் கடல் நீரையும் குடித்து விடுகின்றார்கள்; அவர்கள் மீது இப்பிரமாத்திரம் விடப்படட்டும்' என்று கூறியதாகவும் அவன் வேண்டுகோளின்படி இராமன் விட்ட அம்பு அக்கொடியவர்களைக் கொன்று குவிக்க அத்தீயவர்கள் அழிவுற்ற அவ்விடம் இராமன் கொடுத்த வரத்தால் வளமுற்றதாய் 'மருகாந்தாரம்' என்று புகழ் பெற்றுத் திகழ்ந்ததாகவும் வான்மீகம் கூறுகின்றது.

கம்பர் 'துரும குல்யம்' என்ற பெயரையே குறிப்பிடாமல் பின் புகழ் பெற்று விளங்கியபோது வழங்கிய மருகாந்தாரம் என்ற பெய ரையே குறிப்பிட்டுள்ளார். மேலும் அங்கு வாழ்ந்த கொடியவர் களுக்கு அவுணர் என்ற பெயரையும், நூறுகோடி என்ற தொகை யையும் புதுவதாகக் கொடுத்துள்ளார்.

கடல் மீது அணை கட்டுவதற்கு விசுவகன்மாவின் மகனாகிய இந்த நளனே தக்கவன் என்று வருணன் சுட்டிக் கூறி மறைந்ததாக வான்மீகத்தில் உள்ள கருத்தைக் கம்பர் கூறவில்லை. வருணன் கூறாமலே நளன் திறமையைச் சுக்கிரீவன் உணர்ந்திருக்கிறான் என்பதைப் புலப்படுத்த இதைக் கூறாது விடுத்தார் போலும்.

படலப் பொருட் சிறப்பு

இராமன், வருணனை நோக்கித் தவங்கிடந்தும் அவன் வாராமை யால் சினந்து பேசுதல், இராமன் சினந்து எய்த அம்பால் கடல்பட்ட பாடு, வருணன் அஞ்சி வந்து இராமன்பால் அடைக்கலம் புகுந்து துதிபாடுதல் என, இப்படலத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம்.

இராமனுடைய தண்ணருள் உள்ளத்திற்கு ஏலாத சினம் தோன் றியமைக்குக் கூடாவுவமையாகக் கூறிய,

'ஏற்ற மீக்கொண்ட புனலிடை யெரிமுளைத் தென்னச்
சீற்ற மீக்கொண்டு சிவந்தன தாமரைச் செங்கண்'

என்ற பகுதி சுவை நலம் செறிந்ததாய், இராமன் உள்ளம் சினம் விளையாத நிலம் என்பதை நன்கு புலப்படுத்துவதாய் அமைந்துள்

ளமை காணலாம். இவ்வுவமையே, இராமனுடைய கடல்வண்ணம் பெற்ற மேனியில் நெருப்பெனச் சிவந்த கண்களின் இயல்பை விளக்கும் வண்ணம் பற்றிய உவமையாகவும் அமைந்து சிறப்பளிப்பது நினைந்து இன்புறுதற்குரியதாகும்.

இராமன், ஏழுநாள் காறும் வருண செபம் செய்துகொண்டு தருப்பைப் புல்லில் வருந்தித் தவம் கிடக்கவும் வருணன் வாராமை கண்டு, வெகுண்டு, கடல்மேல் எய்த அம்புகளால் அக்கடலும், கடல் வாழ் உயிர்களும், கடல் சூழ்ந்த இடங்களும் பட்டபாட்டினை முப்பத்தொன்பது கவிகளால் கம்பர் விரித்துக் கூறித் தம் கற்பனைத் திறத்தை நன்கு காட்டியுள்ளார். கடலின் அழிவாகிய துன்ப நிகழ்ச்சியைக் கூறும் வழியும் நகைச்சுவையூட்டி இன்புறுத்திப் படிப்பவர் உள்ளம் சலிப்படையாது கிளர்ச்சியுறச் செய்யும் திறம் வியத்தற்குரிய சிறப்புடையதாகும்.

கடலில் பனைமீன் என ஒருவகை மீன் உண்டு. இராமன் அம்பு அந்தப் பனைமீனின் தலையில் தைக்கின்றது. தைத்த அம்புகளோடு அப்பனை மீன்கள் கடலில் நீந்தி ஓடுகின்றன. அவற்றின் தோற்றம், கூம்பினையுடைய நீண்ட மரக்கலம் கடலில் ஓடுவதை ஒத்துள்ளது என்று உவமை கூறி, அம்மீன்களூறும் அல்லலைப் படிப்பவர்கள் மறந்து மகிழ்ச்சியால் மனம் கிளர்ச்சி கொள்ளுமாறு செய்கின்றார். (25)

கடலில் உள்ள சங்குகள் கதறுமாறு இராமன் அம்புகள் அச்சங்குகளின் துளைகளில் பாய்கின்றன; அம்பு பாய்ந்துள்ள அச்சங்குகளின் தோற்றம், காம்போடு கூடிய அகப்பையை ஒத்துளது என்று (52) அவர் கூறியுள்ள உவமமும் அத்தகையதே.

தீமை செய்யும் சினம்தானும் நல்லோர்பால் தோன்றின் தீமை செய்யாது நன்மையே விளைக்கும் என்ற கருத்தினைக் கம்பர் சிலேடை வகையால் கூறி நிறுவும் திறம், நினைந்து நினைந்து இன்புறத்தக்கதாகவுள்ளது. கடல் நீர் உப்புத்தன்மையுடையது ஆதலின், 'உண்ண உதவாதது உப்புக்கடல்' என்று உலகவர் பழிப்பது இயல்பு. அந்தப் பழியினையுடைய உவர்க்கடல் இராமனால் கோபிக்கப் பெற்ற இப்போது உப்பு வேலை என்ற பழிபடு பெயர் நீங்கப் பெற்று, 'அப்பு வேலை' என்ற நல்ல பெயரைக் கொண்டு நிறைவுற்றது என்று திறம்படக் கூறியிருத்தல் காணலாம். (33) இராமன் வெகுண்டு விட்ட அம்புகள் கடல் முழுதும் நிறைந்துள்ளமையால் அதைக் கண்டோர் இது உப்பு வேலை அன்று அப்பு வேலையே (அம்பு வேலை) என்றுதானே சொல்வார்கள்? அப்பு வேலை என்பது நல்ல நீரையுடைய கடல் என்னும் பொருள்பட்டு, உண்ண

உதவாத உப்பு வேலையன்று; உண்பதற்குரிய அப்பு வேலையே என்றும் எண்ணுமாறு செய்து, இராமன் விட்ட அம்புகளின் மிகுதியைப் புலப்படுத்தியிருத்தல் காண்க.

நின்றுநூ றுயிரம் பகழி நீட்டலால்
குன்றுநூ றுயிரங் கோடியாயின
சென்று தேய்வுறுவரோ புலவர் சீறினும்
ஒன்றுநூ றுயின வுவரி முத்தெலாம் (53)

என்பதும் பெரியோர் சினம் நன்மையே விளைக்கும் என்பதையே விளக்குதல் காணலாம். குன்றுகளும் முத்துக்களும் இராமன் சினந்து விட்ட அம்பு பட்டுச் சிதறுண்ட நிலையினையே வஞ்சப் புகழ்ச்சியாக, முன் அவை ஒவ்வொன்றுக இருந்த சிறுமை நீங்கிப் பலவடிவம் கொள்ளும் பெருமை பெற்றதாகக் கூறி, இராமனுடைய அம்பின் ஆற்றலைப் புலப்படுத்தியுள்ளார் கம்பர்.

இராமனது அம்பால் கடல் கனன்று எரியும் துன்ப நிகழ்ச்சியைக் கூறுகின்ற கம்பர், அத்துன்பத்துள் துன்பமாகிய ஒரு நிகழ்ச்சியையும் கூறிப் படிப்பவர் உள்ளத்தை நீராய் உருக்கி விடுகின்றுர். சக்கரவாளம் என்பது ஒருவகை நீர்வாழ் பறவை. ஆணும் பெண்ணும் பிரியாது வாழும் அன்புமிகு பறவை. அத்தகைய சக்கரவாளப் பறவைகள், கடல்நீரில் தம் பெடைகளைப் பிரிந்து சென்று இரை தேடித் திரும்பி வருவதற்குள் கடலில் கனல் பரவியிருப்பதைப் பார்க்கின்றன; அங்ஙனம் பார்த்து அறிந்திருந்தும், குற்றம் என்பதை அறிந்திருந்தும் அறியாதவர்போல அக்குற்றத்தைச் செய்யும் பேதைகளைப் போலப் பிரிவாற்ருத தம் காதல் உணர்ச்சியின் மேலீட்டால் அக்கனல் பரவியுள்ள கடலில் புகுந்து தம் பெடைகளைத் தேட முயன்று உடல் வெந்து சுருண்டு கரிந்து இறந்து போயினவாம்.

பிரிந்தவர்க் குறுதுய ருணரும் பெற்றியால்
அறிந்திருந் தறிகில ரனைய ராமெனச்
செறிந்ததம் பெடைகளைத் தேடித் தீக்கொள
மறிந்தன கரிந்தன வாளப் புள்ளெலாம்.

என அத்துன்ப நிகழ்ச்சியைச் சித்திரித்துக் காட்டியிருத்தல் காணலாம். இங்குக் கற்றும் அறிவிலாதார் போலொழுகும் கொடியவர் இயல்பையும் உவமை முகத்தால் புலப்படுத்தியிருத்தல் காண்க.

இனி, வருணன் இராமனைச் சரண்புகுந்து துதிக்கும் பகுதி இராமனுடைய தெய்வ நிலையைப் பலபடப் புகழ்வதாய்ப் பத்திச்சுவையூட்டுவதாய் அமைந்துள்ளமை படித்து இன்புறத்தக்கது.

6. வருணனை வழிவேண்டு படலம்

இராமன் கடலைக்கடக்கும் உபாயத்தைச் சிந்திக்குமாறு வீடணனுக்குக் கூறுதல்

6718. தொடக்கு மென்னினிவ் வுலகொரு
மூன்றையுந் தோளால்
அடக்கும் வண்ணமு மழித்தலு
மொருபொரு ளன்றால்
கிடக்கும் வண்ணவெங் கடலினைக்
கிளர்பெருஞ் சேனை
கடக்கும் வண்ணமு மெண்ணுதி
யெண்ணுநூல் கற்றாய்.

'தொடக்கும் என்னின் இவ் உலகு ஒரு மூன்றையும் தோளால்
அடக்கும் வண்ணமும் அழித்தலும் ஒரு பொருள் அன்றால்;
கிடக்கும் வண்ணவெங் கடலினைக் கிளர் பெருஞ் சேனை
கடக்கும் வண்ணமும் எண்ணுதி—எண்ணு நூல் கற்றாய்!'

பொ :—மதிக்கத்தக்க சிறப்புடைய அரசியல் நூல்களையெல்லாம் கற்ற வீடணனே! நாம் போரைத் தொடங்கி விடுவோமாயின் (இந்த மூவுலகமும் எதிர்த்தாலும்) அம் மூன்று உலகங்களையும் நம் தோள்வலியால் அடக்குவதும் அழிப்பதும் நமக்கு ஒருபொருள் அன்று; ஆயின், நமக்கும் இலங்கைக்கும் இடையே கிடக்கும் இந்த நீலவண்ணமுடைய கொடிய கடலை நம் கிளர்ச்சிமிக்க பெரிய சேனை கடக்கும் உபாயத்தையும் சிந்தித்துச் சொல்லுவாயாக.

கு :—தொடக்குதல் - தொடங்குதல்; தொடக்கும், தன்மைப் பன்மை முற்று. இவ்வுலகொரு மூன்றையும் என்று அவற்றின் எளிமை புலப்படுத்தியவாறு. அடக்கும் வண்ணமும் ஒருபொருள் அன்று; அழித்தலும் ஒருபொருளன்று எனத் தனித்தனி இயையும். அடக்குதலாவது தனக்குக் கீழ்ப்படுத்தல். அவ்வாறு பணியாத நிலையில் அழித்தலை மேற்கொள்ளுதலே முறையாகலின், அழித்தலைப் பிற்கூறினார். இடையில் தடையாகக் கிடக்கும் கடல் என்று வேண்டும் சொல் வருவிக்க. வண்ணம் என்றது நீலவண்ணத்தை. தன் கருத்தை நிறைவேற்ற முடியாமல் தடையாக இருத்தல் கருதி 'வெங்கடல்' என்றான். தான் கடத்தல் அரிதன்று என்பது

தோன்றக் 'கிளர்பெருஞ் சேனை கடக்கும் வண்ணமும்' என்றான். உம்மை இறந்தது தழுவியது; இலங்கையின் அளவைக் கூறியது போலவே கடல் கடக்கும் வண்ணமும் சிந்தித்துக் கூறுக என்பது கருத்தாதல் காண்க. இராவணன் படைவலிக்கு மேற்பட்ட வலிமை தனக்குண்டு என்பதை முன்னிரண்டு அடிகளால் இராமன் புலப் படுத்திப் பின்னிரண்டு அடிகளால் கடல் கடக்கும் உபாயத்தை எண்ணுமாறு வீடணனை வேண்டியவாறு. கடலையடுத்துள்ள இலங் கையிற் பிறந்து வளர்ந்து பழகியவன் ஆதலாலும், இராவணன் சேனை இலங்கையினின்றும் வேற்று நாட்டிற்குப் போகும்போது கடலைக் கடக்க மேற்கொண்ட உபாயம் தெரிந்திருக்கக் கூடும் ஆத லாலும் வீடணனை இராமன் கடல் கடக்கும் உபாயத்தைக் கேட்க லானான் என்க. (1)

வீடணன் கடலை இரந்து வழிவேண்டுமாறு இராமனுக்குக் கூறுதல்

6719. கரந்து நின்றநின் றன்மையை
யதுசெலக் கருதும்
பரந்த துன்றிருக் குலமுதற்
றலைவராற் பரிவாய்
வரந்த ருமிந்த மாக்கடல்
படைசெல வழிவே
றிரந்து வேண்டுதி யெறிதிரைப்
பரவையை யென்றான்.

'கரந்து நின்றநின் தன்மையை, அது செலக் கருதும்;
பரந்தது உன்திருக் குல முதல் தலைவரால்; பரிவாய்
வரம் தரும், இந்த மாக்கடல்; படை செல, வழி வேறு
இரந்து வேண்டுதி எறிதிரைப் பரவையை' என்றான்.

பொ:—இந்தப் பெரிய கடலானது, உனது சிறந்த குலத்தில் பிறந்த சகரராகிய தலைவர்களால் தோண்டப்பட்டு மிகுதியாகப் பரவியது ஆதலாலும், (மானிடனாக) மறைந்து வந்துள்ள நின் உண்மைத்தன்மையை அக்கடல் கடைபோக அறியும் ஆதலாலும், நினக்கு அன்பாய் வரம் தரும்; ஆதலால், நம் படை செல்லுதற்கு வழி தருமாறு வீசுகின்ற அலைகளையுடைய கடலைச் சரண் புகுந்து தனியே இரந்து வேண்டுவாயாக என்று வீடணன் கூறினான்.

கு :—நேரில் சுட்டிக்காட்டி 'இந்த மாக்கடல்' என்ருன். செய்யுளாதலின் அது என்ற சுட்டு மாக்கடல் என்ற பெயர்க்கு முன் வந்தது. திருமாலே மனிதனுக இராமன் என்ற பெயரோடு மறைந்து வந்துளான் என்ற உண்மையைத் தான் அறிவது போலவே கடலும் அறியும் என்பது வீடணன் கருத்தாகலின், "கரந்து நின்ற நின் தன்மையை யதுசெலக் கருதும்" என்ருன். செலக் கருதுதலாவது கடைபோக முழுவதும் உணர்தல். தலைவராற் பரந்தது என இயையும். குலமுதல் தலைவர் என்றது, சகரரை, இராமன் குலத்தவரால் தோண்டப்பட்ட கடலாதலின், அவன் வேண்டிய வண்ணம் வரம் தரற்குரியது என இயைபு காட்டியவாறு. நின்தன்மை என்றது, இராமனது தெய்வத்தன்மையை. பரவை என்றது அதன் அதிதெய்வமாகிய வருணனையே குறித்தது; இராமன் தெய்வத்தன்மையை யுணர்தற்கும் வரந்தருதற்கும் ஏற்புடையது கடலன்றிக் கடற்றெய்வமே ஆதல் தெளிக. வருணனை வேண்டுங்கால் தனியே இருந்து வழிபட்டு வேண்டுதலே முறையாதல் தோன்ற 'வேறு இரந்து வேண்டுதி' என்ருன். வேறு - தனித்து. 'நன்றிலங்கையர் நாயகன் மொழி' எனப் பின்வருதலின் இங்கு 'என்ருன்' என்ற வினைக்கு வீடணனே எழுவாயாதல் தெளிவு. வீடணன் இராமனை இரந்து வேண்டிப் பயன் பெற்ற அநுபவத்தால் கடலை இரந்து வேண்டுமாறு இராமனுக்கும் கூறலாஞன். (2)

வீடணன் மொழியை இராமன் ஏற்றுக் கொள்ளுதல்

6720. நன்றி லங்கையர் நாயகன்
மொழியென நயந்தான்
ஒன்று தன்பெருந் துணைவரும்
புடைசெல வுரவோன்
சென்று வேலையைச் சேர்தலும்
விசும்பிடைச் சிவந்த
குன்றின் மேனின்று குதித்தன
பகலவன் குதிரை.

'நன்று இலங்கையர் நாயகன் மொழி' என நயந்தான்,
ஒன்று தன் பெருந் துணைவரும் புடை செல, உரவோன்,
சென்று வேலையைச் சேர்தலும், விசும்பிடை, சிவந்த
குன்றின் மேல் நின்று குதித்தன பகலவன் குதிரை.

பொ :—வலியனாகிய இராமன், 'இலங்கையர் தலைவனாகிய வீடணன் கூறிய சொல் நல்லது' என்று விரும்பி உடன்பட்டவனாய்த் தன்னோடு ஒன்றுபட்ட கருத்தினராய சுக்கிரீவன் முதலிய துணைவர்களும் தன் பக்கத்தே வர நடந்து சென்று கடலை நெருங்குதலும், அருணோதயத்தால் சிவந்துள்ள உதய மலையினின்றும் விண்ணில் செல்லுதற்குச் சூரியன் குதிரைகள் தாவின.

கு :—உரவு - வலிமை ; தொடங்கிய கருமத்தைச் செய்து முடிக்கும் அறிவு ஆற்றலும் மெய்வலியும் இராமனுக்கு உண்மை புலப்பட 'உரவோன்' என அவனைக் குறிப்பிட்டார். தன்னால் இலங்கையர் நாயகனாக ஆக்கப்பட்ட வீடணன் அத்தகுதிக்கேற்ற மொழியே கூறினான் என்பான், வீடணன் என்னாது, இலங்கையர் நாயகன் மொழி நன்று என்று பாராட்டினான். நயந்தான் என்றமையால் உடன்பட்டமை புலப்படுத்தியவாறு. ஒன்றுதல் - கருத்தொருமித்தல். புடை - பக்கம். வேலை - கடல், சூரியன் உதித்தற்கு முன் அருணோதயத்தால் சிவந்து தோன்றும் உதயமலையைச் சிவந்த குன்று என்று சிறப்பித்தார். குன்றின்மேல் நின்று பகலவன் குதிரை விசும்பிடைச் செல்லக் குதித்தன என ஒரு சொல் வருவித்து முடிக்க. குதித்தல் - பாய்தல். சூரியன் தேரில் பூட்டிய குதிரைகள் ஏழு ஆதலின் குதித்தன எனப் பன்மையாற் கூறினார். குதிரை என்பது பால்பகா அஃறிணைப் பெயர். இதனால், சூரியன் உதித்தமை கூறியவாறு. இராமன் வேலையைச் சேர்ந்தபோது சூரியன் உதித்தனன் என்றமையால் இராமன் விரும்பியவாறு கடலைக் கடந்து இலங்கையை அடைந்து பகையிருளைத் தடிவான் என்பதும் குறிப்பால் புலப்படுத்தியவாறு. (3)

இருள் புலர்தல்

6721. கொழுங்க திர்ப்பகைக் கோளிரு
ணீங்கிய கொள்கை
செழுஞ்சு டர்ப்பனிக் கலையெலா
நிரம்பிய திங்கள்
புழுங்கு வெஞ்சினத் தஞ்சனப்
பொறிவரி யரவம்
விழுங்கி நீங்கிய தொத்தது
வேலைசூழ் ஞாலம்.

கொழுங் கதிர்ப்பகைக் கோள் இருள் நீங்கிய கொள்கை,
செழுஞ் சுடர்ப் பனிக் கலை எலாம் நிரம்பிய திங்கள்

புழுங்கு வெஞ் சினத்து அஞ்சனப் பொறிவரி அரவம்
விழுங்கி நீங்கியது ஒத்தது, வேலை சூழ் ஞாலம்.

பொ :—கடலால் சூழப்பட்ட இப்பூவுலகமானது, தனக்குப் பகையாய்த் தன்னை மூடிக் கொண்டிருந்த இருள், செழுமையான சூரியனின் கதிர்களால் நீங்கப் பெற்ற தன்மை,—வளமான ஒளியையுடைய குளிர்ந்த பதினாறு கலைகளும் நிரம்பப் பெற்ற சந்திரன், வெதும்புகின்ற கொடிய கோபத்தையுடையதாய, படப் புள்ளிகளையும் உடம்பில் வரிகளையும் உடைய கரிய, இராகு என்னும் பாம்பினால் விழுங்கப் பெற்றுப் பின் அப்பாம்பின் வாயில் நின்றும் நீங்கப் பெற்ற தன்மையை ஒத்துத் தோன்றியது.

கு :—இருளுக்கு இராகுவும் பூமண்டலத்திற்குச் சந்திரமண்டலமும் உவமை. இருள் நீங்கப் பெற்ற உலகம், இராகு விழுங்கி உமிழ்ந்த சந்திரனைப் போன்றிருந்தது. பகைக் கோளிருள் - பகையாய்த் தன்னைக் கொள்ளுதலையுடைய இருள். கோள் முதனிலை நீண்ட தொழிற் பெயர். கோளிருள் - வலிய இருள் எனலும் ஆம். கொழுங்கதிர் என்றது சூரிய கிரணங்களை. கதிரால் நீங்கிய கொள்கை என மூன்றுவது விரிக்க. ஞாலம் கோள் இருள் நீங்கிய கொள்கை, திங்கள் அரவம் விழுங்கி நீங்கியது ஒத்தது என இயையும். ஞாலம் இருள் நீங்குதற்குச் சூரியன் காரணமாதல் போலத் திங்கள் அரவம் நீங்குதற்குக் காரணம் வெளிப்படக் கூறிற்றிலராயினும், "பானிற வெள்ளை யெருத்தத்துப் பாய்ந்தானை நோனுது குத்தும் இளங்காரித் தோற்றங்காண், பான்மதி சேர்ந்த அரவினைக் கோள் விடுக்கும், நீனிற வண்ணனும் போன்ம்" (கலி - 104 : 35-38) என்பதால் திங்கள் அரவம் நீங்கியதற்குத் திருமால் காரணன் என்பதும் கொள்ள இடமுண்டு. பொறிவரி அஞ்சன அரவம் என்க. அஞ்சன அரவம் என்றது கரும் பாம்பாகிய இராகுவை. (4)

இராமன் வருண மந்திரத்தை எண்ணுதல்

6722. தருண மங்கையை மீட்பதோர்
நெறிதரு கென்னும்
பொருண யந்துநன் னூனெறி
யடுக்கிய புல்லில்

கருணை யங்கடல் கிடந்தனன்
கருங்கட லோக்கி
வருண மந்திர மெண்ணினன்
விதிமுறை வணங்கி.

'தருண மங்கையை மீட்பது ஓர் நெறி தருக!' என்னும்
பொருள் நயந்து, நல் நூல்நெறி அடுக்கிய புல்லில்,
கருணை அம் கடல் கிடந்தனன், கருங்கடல் நோக்கி;
வருண மந்திரம் எண்ணினன், விதிமுறை வணங்கி.

பொ :—' இளமையுடைய சீதையை (இராவணனிடத்திலிருந்து) மீட்பதற்காக ஒரு வழியைத் தருவாயாக ' என்ற வேண்டுகோளையே விரும்பிக், கருணைக் கடலாகிய இராமன், சிறந்த நூல்களில் கூறிய படி அடுக்கிய தருப்பைப் புல்லில், கரிய கடலை நோக்கி விதிமுறையே வணங்கி வருண மந்திரத்தை எண்ணியபடியே கிடந்தான்.

கு :—தருணம் - இளமை. மீட்பதன் இன்றியமையாமை புலப் படத் " தருணமங்கை " எனச் சீதையைக் குறிப்பிட்டவாறு. மீட்ப தோர் நெறி என்றது, மீட்பதற்குப் படைகள் செல்லும் வழியை. புல் என்றது தருப்பைப் புல்லினை. நோக்கிப் புல்லில் கிடந்தனன் என இயையும். ஒரு கடல் மற்றொரு கடலை நோக்கிக் கிடந்தது என்று திறம்படக் கூறியவாறு. கருங்கடல் நோக்கிக் கிடத்தற்கு உரியவன் அல்லன் என்பார், 'கருணையங்கடல்' என இராமனைச் சிறப்பித்தார். இராமன் கருணையங் கடலாகலின் தன் உயர்நிலை யையும் பாராது, கடலை வற்றச் செய்யும் தன்னுற்றலையும் காட்டாது, கடலை நோக்கி வணங்கிக் கிடந்தனன்; கடலோ, கருமையுடைய தாகலின் அவன் பெருமையை யுணராதிருந்தது; என்ற குறிப்பு அடைமொழிகளால் பெறவைத்த சிறப்புக் காண்க. மந்திரம் எண்ணுதல் என்புழி எண்ணுதல், நினைத்தலையும் ஒன்று இரண்டு என எண்ணி உருவேற்றுதலையும் உணர்த்திற்று. (5)

ஏழுநாள் எண்ணியும் வருணன் வாராமை

6723. பூழி சென்றுதன் திருவுருப்
பொருந்தவும் புரைதீர்
வாழி வெங்கதிர் மணிமுகம்
வருடவும் வளர்ந்தான்

ஊழி சென்றன வொப்பென
வொருபக லவையோர்
ஏழு சென்றன வந்தில
னெறிகடற் கிறைவன்.

பூழி சென்று தன் திரு உருப் பொருந்தவும், புரைதீர்
வாழி வெங்கதிர் மணிமுகம் வருடவும், வளர்ந்தான்;
ஊழி சென்றன ஒப்பென, ஒரு பகல்; அவை ஓர்
ஏழு சென்றன; வந்திலன், எறிகடற்கு இறைவன்.

பொ :—புழுதி சென்று தன் திருமேனியில் படியவும், குற்றம் நீங்கிய வெப்பமான சூரியன் கதிர்கள் தன் அழகிய முகத்தில் தவழவும், (இராமன் தருப்பைப் புல்லில்) கண் வளர்ந்தவன்போன்று இருந்தான்; ஒருநாள் கழிவது, பல ஊழிகள் கழிதல்போன்று தோன்ற, அத்தகைய நாட்கள் ஏழு கழிந்தன; அங்ஙனம் கழிந்தும், அலையெறிகின்ற கடலுக்குத் தெய்வமாகிய வருணன் வந்திலன்.

கு :—இராமன் தருப்பைப் புல்லில் கிடந்து கண்மலர் முகிழ்த்துக் கொண்டு வருண மந்திரத்தை எண்ணும் இயல்பு முன் இரண்டடிகளால் விளக்கப்படுகின்றது. கடற்கரையில் உள்ள புழுதியெல்லாம் இராமன் திருமேனியில் படிகின்றன; சூரியனுடைய வெம்மையான கிரணங்கள் அவன் முகத்தில் தவழ்ந்து வாட்டுகின்றன என்றவாறு. வாழி - அசை. புரை - குற்றம். வெங்கதிர் எனவே சூரிய கிரணம் என்பது பெறப்படும். வளர்ந்தான் என்றது, படுக்கையில் கண் வளர்தல் போலத் தருப்பைப் புல்லில் கிடந்து மந்திரத்தையெண்ணிக்கொண்டு கண்களை மூடிக்கொண்டிருந்தான் என்றவாறு. சீதையின் பிரிவாற்றாத இராமன், தனித்திருந்து மந்திரம் எண்ணி வருந்தும் வருத்தத்தின் மிகுதி புலப்பட "ஒருபகல் ஊழி சென்றன ஒப்பென" என்றார். காலம் சிறிதாயினும் வருத்தம் பெரிது என்றவாறு. கழிவன போன்ற நாட்கள் ஏழு கழிந்தும் இராமன் தவத்திற்கு இரங்கி வருணன் வரவில்லை என அவ்வருணனது தகவின்மை புலப்படுத்தியவாறு. எனத் தோன்ற என ஒரு சொல் வருவிக்க. (6)

இராமன் சினங்கொளல்

6724\. ஊற்ற மீக்கொண்ட வேலையா
னுண்டிலை யென்னும்
மாற்ற மீக்கவும் பெற்றிலம்
யாமெனு மனத்தால்

ஏற்ற மீக்கொண்ட புனலிடை
யெரிமுளைத் தென்னச்
சீற்ற மீக்கொண்டு சிவந்தன
தாமரைச் செங்கண்.

'ஊற்றம் மீக் கொண்ட வேலையான்,
'உண்டு' "இலை" என்னும்
மாற்றம் ஈக்கவும் பெற்றிலம்,
யாம்' எனும் மனத்தால்,
ஏற்றம் மீக் கொண்ட புனலிடை
எரி முளைத் தென்னச்
சீற்றம் மீக் கொண்டு சிவந்தன,
தாமரைச் செங்கண்.

பொ :—'பெருமிதத்தை மிகுதியாகக் கொண்ட வருணன் "உண்டு" (அல்லது) "இல்லை" என்கின்ற மறுமொழி சொல்லவும் பெற்றிலோம் யாம்' என்ற எண்ணத்தால், பெருக்கை மிகுதியாகக் கொண்ட வெள்ளப் புனலில் நெருப்புத் தோன்றினாற்போல (இராமனுடைய அருள் நிறைந்த உள்ளத்தில்) கோபம் மேலிட்டதால் அவன் தாமரை மலர் போன்ற சிவந்த கண்கள் மேலும் சிவந்தன.

கு :—ஊற்றம் - பெருமிதம்; செருக்கு. வேலையான் என்றது கடலுக்கு இறைவனாகிய வருணனை. உண்டிலை யென்னும் மாற்றம் ஈயாமையால் 'ஊற்ற மீக்கொண்ட வேலையான்' என்று வருணனைச் சினந்து கூறியவாறு. 'நெறி தருக' என்ற தன் வேண்டுகோளை வருணன் நிறைவேற்றா விட்டாலும் 'நெறி உண்டு' அல்லது 'இல்லை' யென்ற மறுமொழியேனும் சொல்லுதல் எளிதாகவும் அது தானும் சொல்லப் பெற்றிலமே என்று இராமன் சினத்தால் கண் சிவந்தான் என்றவாறு. மாற்றம் - மறுமொழி. ஈக்கவும் – ஈயவும். வருணனுக்கு எளியமாகாது அவனைக் கலக்கியழிக்கவும் வல்லேமாகிய யாமும் மறுமொழி பெற்றிலம் என்ற கருத்துப் புலப்பட 'யாம்' என்ற சொல் அமைந்திருத்தல் காணலாம். ஏற்றம் - பெருக்கு. ஏற்ற மீக்கொண்ட புனல் என்றது பெருவெள்ளத்தை. இராமனுடைய உள்ளம் சினம் தோன்றாத அருள் உள்ளமாகலின் அதில் சினம் தோன்றியதற்குக் கூடாவுவமையாகப் புனலிடை எரிமுளைத்தலைக் கூறினார். "குன்றகல் நன்னுடன் வாய்மையிற் பொய் தோன்றின், திங்களுள் தீத்தோன்றியற்று" (கலி - 41) என்பதும் இங்கு ஒப்பு நோக்கத்தகும். புனலிடை யெரிமுளைத்தென்ன என்ற உவமையால் இராமன் உள்ளம் சீற்றம் விளையாத உள்ளம் என்பது கொள்ள

வைத்தலின் இது பிறிது மொழிதல் என்னும் அணியின்பாற்படும். "சீற்றம் விளையா நிலத்துனக் கெங்ஙன் விளைந்தது" (நகர் நீங்கு - 129) என இலக்குவனை நோக்கி இராமன் கூறியதும் இங்கு நினையத்தகும். இனி, இராமன் கடல் வண்ணன் ஆகலின் அவன் கண்சிவந்த தோற்றம் கடற்புனலிடை எரிமுளைத்தது போன்றிருந்தது என வண்ணவுவமையாக்கலுமாம். (7)

இராமன் சினத்தால் புருவம் வளைதல்

6725. மாண்ட வில்லிழந் தயருநான்
வழிதனை வணங்கி
வேண்ட வில்லையென் றொளித்ததா
மெனமனம் வெதும்ப
நீண்ட வில்லுடை நெடுங்கன
லுயிர்ப்பொடு நெடுநாண்
பூண்ட வில்லெனக் குனித்தன
கொழுங்கடைப் புருவம்.

'மாண்ட இல் இழந்து அயரும் நான்,
வழி, தனை வணங்கி,
வேண்ட, "இல்லை" என்று ஒளித்தது ஆம்'
என மனம் வெதும்ப,
நீண்ட வில்லுடை நெடுங்கனல்
உயிர்ப்பொடு நெடுநாண்
பூண்ட வில் எனக் குனித்தன,
கொழுங்கடைப் புருவம்.

பொ :—'மாட்சிமையுடைய மனைவியை மாற்றான் கொள இழந்து வருந்துகின்ற யான் தனை வணங்கி வழிவேண்ட (இவ்வருணன்) இல்லை யென்ற குறிப்புத் தோன்ற ஒளித்ததே ஆகும்' என்று மனம் புழுங்குதலால், நீண்ட ஒளியையுடைய நீண்ட நெருப்புப் போன்ற வெம்மையான பெருமூச்சோடு நீண்ட நாண் பூட்டிய வில்லைப்போல, இராமனுடைய செழுமையான புருவங்களின் முனைகள் வளைக்கப் பெற்றன.

கு :—ஏழுநாள் வணங்கி வழி வேண்டவும் வருணன் வாராமை, வழியில்லை என்ற குறிப்புத் தோன்ற ஒளித்ததே ஆகும் என்ற கருத்தால் இராமன் மனம் வெதும்புதலால் நெடிதுயிர்த்தலும் புருவங்கள்

வளைதலும் தாமே மெய்ப்பாடாக நிகழ்ந்தன என்றவாறு. மாண்ட இல் - மாட்சிமையுடைய மனைவி. "மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்" (புறநா - 191) என்பது இங்கு நினையத்தகும். தனைவணங்கி வழிவேண்ட என இயையும். நெடுங்கன லுயிர்ப் பொடு புருவங் குனித்தன என்புழி ஒடு வேறு வினையொடு: "தொடி யொடு தொல்கவின் வாடிய தோள்" என்புழிப்போல. உயிர்த்தலும் குனித்தலும் ஒருவினையன்றி வேறு வினையாதல் தெளிவு. வெய் துயிர்த்துப் புருவங்குனித்தான் என்றவாறு; வில்லுடை நெடுங்கனல் என்புழி வில் ஒளி என்னும் பொருளது. (8)

இராமனது சினச் சிரிப்பு

6726. ஒன்றும் வேண்டல ராயினு
மொருவர்பா லொருவர்
சென்று வேண்டுவ ரேலவர்
சிறுமையிற் றீரார்
இன்று வேண்டிய தெறிகட
னெறிதனை மறுத்தான்
நன்று நன்றென நகையொடும்
புகையுக நக்கான்.

"ஒன்றும் வேண்டலர் ஆயினும்,
ஒருவர் பால் ஒருவர்,
சென்று வேண்டுவரேல் அவர்
சிறுமையில் தீரார்;
இன்று வேண்டியது எறிகடல்
நெறிதனை மறுத்தான்;
நன்று! நன்று!" என நகையொடும்
புகை உக நக்கான்.

பொ:—"இவ்வுலகத்தில் ஒருவர் ஒரு பொருளையும் விரும்பாத இயல்புடையவர் ஆயினும் மற்றொருவரிடத்தில் சென்று (ஏதேனும் ஒரு சிறு பொருளை) வேண்டுவராயின், வேண்டப்பட்ட அவர் தம் அற்பத்தன்மையினின்றும் நீங்கமாட்டார், (என்பது உறுதியாயிற்று.) இன்று யான் இரந்து வேண்டிய வழியை, அலைவீசுகின்ற கடலுக்கு இறைவனாகிய வருணன் கொடாமல் மறுத்துவிட்டான். நல்லது, நல்லது!" என்று பல்லின் ஒளியொடு கோபப்புகை சிந்த (இராமன்) சிரித்தான்.

கு :—வேண்டப்பட்டோர் சிறியவராயின், பெரியோர், தம்பால் வந்து வேண்டும் போதும் தம் சிறுமையையே காட்டுவர் என்பது வருணன் செயலிலிருந்து உறுதியாயிற்று என்றவாறு. இது வேற்றுப் பொருள் வைப்பணி. சிறப்புப் பொருளால் பொதுப் பொருள் நிறுவப்படுகின்றது. கடவுளின் அமிசமாக வந்த இராமன், தனக்குக் கீழ்ப்பட்ட வருணனை வழிவேண்டியபோது அவன் பெருந்தன்மை காட்டி வழியைக் கொடாது தன் சிறுமையையே காட்டிக் கரந்து நின்றமையால் மேல் கூறிய உண்மை உறுதியாயிற்று என்றவாறு. நன்று நன்று என்பது குறிப்புச் சொல். கடலுக்கும் கடற்றெய்வ மாகிய வருணனுக்கும் உள்ள ஒற்றுமைபற்றி 'எறிகடல் மறுத்தான்' என்றார். இராமன் சினச் சிரிப்புச் சிரித்தபோது அவன் பற்கள் வெளித்தோன்றி ஒளி வீசின ; அவன் வாயிலிருந்து சினப்புகை தோன்றியது என்க. இனி, அவர் சிறுமையில் தீரார் என்பதற்குச் சென்று வேண்டியவர் சிறுமையடைவர் என்று கருத்துக் கூறுதலு முண்டு. இன்று வேண்டியதாகிய நெறிதனை எறிகடல் மறுத்தான் என இயையும். (9)

இராமன் சின மொழி 6727-6731

6727. பார நீங்கிய சிலையின னிராவணன் பறிப்பத்
தார நீங்கிய தன்மைய னாதலிற் றகைசால்
வீர நீங்கிய மனிதனென் றிகழ்ச்சிமேல் விளைய
ஈர நீங்கிய தெறிகட லாமென விசைத்தான்.

' " பாரம் நீங்கிய சிலையினன், இராவணன் பறிப்பத்
தாரம் நீங்கிய தன்மையன், ஆதலின், தகைசால்
வீரம் நீங்கிய மனிதன் " என்று இகழ்ச்சிமேல் விளைய,
ஈரம் நீங்கியது, எறிகடல் ஆம்' என இசைத்தான்.

பொ :—' இவன் பாரம் இல்லாத சிறிய வில்லையுடையவன், இராவணன் வஞ்சனையால் கவர' மனைவியை இழந்த தன்மையுடையவன், ஆதலால், பெருமை மிக்க வீரம் இல்லாத எளிய மனிதன்' என்ற இகழ்ச்சி மேற்படுதலால் அலைவீசும் கடலானது, இரக்கம் நீங்கியது ஆயிற்று! என மீண்டும் கூறினன்.

கு :—கரனோடு போர் செய்யுங்கால் இராமன் வில் ஒடிந்தபோது, தன்பால் கொடுத்து வைத்த பரசிராமன் வில்லை வருணனே இராம னுக்குக் கொடுத்தான் ஆகலின், பார நீங்கிய சிலையினன் என்பதை அவ்வருணன் உணர்தற்குரியனானன் என்க. " அண்டர் நாதன் தடக்கையினத்துணை பண்டு போர்மழுவாளியைப் பண்பினுல்

கொண்டவில்லை வருணன் கொடுத்தனன்" (கரன்வதை : 178) என்றது இங்கு நினையலாம். வீரம் நீங்கிய மனிதன் என்று தன்னை வருணன் நினைத்து இகழ்ந்திருக்க வேண்டும் என்பதற்கு இரண்டு காரணங்களை இராமன் கூறுகின்றான். ஒன்று பாரம் நீங்கிய சிலையினையுடையனாயிருத்தல்; மற்றொன்று இராவணன் பறிப்பத் தாரம் நீங்கிய தன்மையன் ஆதல். முன் கரன் வதை நிகழ்ந்த காலத்தில் நினைத்தவுடன் வந்து வில் கொடுத்த வருணன், இப்போது ஏழுநாள் காறும் தன்னையே நினைந்து தவம் கிடக்கவும் வாராமையால் இராமன் இவ்வாறு நினையலானான். ஈரம் - இரக்கம்; அன்பு. "இன் சொலா லீர மளைஇ" (குறள் - 91) என்புழியும் இச்சொல் இப்பொருள் படுதல் காணலாம். வருணன் இரக்கம் நீங்கியதற்குக் காரணம் வீரம் நீங்கிய மனிதன் இராமன் என்ற இகழ்ச்சியின் விளைவே என்றவாறு, கடலுக்கும் அதன் தெய்வமாகிய வருணனுக்கும் உள்ள ஒற்றுமை நயங்கருதி, 'எறிகடல் ஈரம் நீங்கியது' எனக் கடலின் வினையாகக் கூறியவாறு. (10)

6728. புரந்து கோடலும் புகழொடு
　　கோடலும் பொருது
துரந்து கோடலு மென்றிவை
　　தொன்மையிற் றொடர்ந்த
இரந்து கோடலி னியற்கையுந்
　　தருமமு மெஞ்சக்
கரந்து கோடலே நன்றினி
　　நின்றதென் கழறி.

புரந்து கோடலும், புகழொடு கோடலும் பொருது,
துரந்து கோடலும் என்றிவை தொன்மையின் தொடர்ந்த;
இரந்து கோடலின் இயற்கையும் தருமமும் எஞ்சக்
கரந்து கோடலே நன்று; இனி நின்றது என் கழறி?

பொ :—(ஒருவர்பால் உள்ள ஒன்றைப் பெற விரும்பினால்) அவரைப் பாதுகாத்துப் பின் தனக்கு வேண்டிய அதை அவர்பால் பெற்றுக் கொள்ளுதலும், (அன்றாயின்) அவரோடு போர் செய்து அவரை அழித்து வெற்றிப் புகழோடு அவர் பொருளைக் கைக்கொள்ளுதலும், (அன்றாயின்) அவரைத் தன் வலிமையால் துரத்திவிட்டு அவர் பொருளைக் கைக்கொள்ளுதலும் ஆகிய இவை தொன்று தொட்டு நிகழ்ந்து வருவனவாம்; (யான் இவ்வழிகளை விடுத்து இவ் வருணன்பால் இரந்து வேண்டி இவ்வழியைப் பெற எண்ணினேன்)

இவ்வாறு இரந்து வேண்டி இவ்வழியைப் பெறுவதைக் காட்டிலும் இயற்கையும் தருமமும் குறைவுறுமாறு (வருணனைக் கேளாமல்) அவ் வழியை யானே கவர்ந்து கொள்ளுதலே இனி நல்லது; அவனை இடித்துக் கூறிப் பயன் என்? (ஒரு பயனுமில்லை.)

கு:—தன் பெருமை எண்ணாது இராமன் வருணனை இரந்து கேட்டும் அவன் வாராமையால் சினந்து இவ்வாறு கூறியவாறு. ஒருவர்பால் உள்ள தொன்றைப் பெறுதற்கு மேற் கொள்ளத்தக்க உபாயங்களுள் புரந்து கோடல் என்றது சாமோபாயத்தையும் பொருது புகழொடு கோடல் என்றது தண்டோபாயத்தையும், துரந்து கோடல் என்றது பேதோபாயத்தையும் குறித்தன எனலாம். இரந்து கோடல் என்றது தானோபாயத்தை. தொன்மையில் தொடர்ந்த வழியைப் பின்பற்றாது, இரந்து கோடலாகிய புது நெறியை யான் மேற்கொள்வதினும் இயற்கையும் தருமமும் குறை வுறுமாறு கரந்து கொள்ளுதலே இனி நன்று என்று இராமன் துணிந்தவாறு. கடலில் வழியைக் கரந்து கோடலாவது வருணனைக் கேளாமலே தன் அம்பால் கடல் நீரை வற்றச் செய்து தன் சேனை களைச் செல்லுமாறு செய்தல். இதனைப் பின் "பாதமஞ்சலர் செஞ்சவே படர்வர் என் படைஞர்" (13) என இராமன் கூறுவதால் அறியலாம். கழறுதல் - இடித்துரைத்தல். இரந்து கோடலின் கரந்து கோடலே நன்று என்றது, இரந்து கொள்வதால் உளதாம் சிறுமை, கரந்து கொள்வதால் உளதாகாது என்ற கருத்தாலாம்.(11)

6729. கானி டைப்புகுந் திருங்கனி
காயொடு நுகர்ந்த
ஊனு டைப்பொறை யுடம்பின
னென்றுகொண் டுணர்ந்த
மீனு டைக்கடற் பெருமையும்
வில்லொடு நின்ற
மானு டச்சிறு தன்மையுங்
காண்பரால் வானோர்.

"கானிடைப் புகுந்து, இருங்கனி
காயொடு நுகர்ந்த
ஊனுடைப் பொறை உடம்பினன்"
என்று கொண்டு உணர்ந்த

மீனுடைக் கடல் பெருமையும்,
வில்லொடு நின்ற
மானுடச் சிறு தன்மையும்,
காண்பரால், வானோர்.

பொ :—“(நாட்டை விட்டுக்) காட்டில் புகுந்து காயோடு பெரிய பழங்களை உண்டதாலியன்ற தசையையுடைய பாரமான உடம்பை யுடையவன்தானே” என்று உட்கொண்டு சிறுமையாக என்னை உணர்ந்த, மீன்களையுடைய கடலின் பெருமையையும் (வேறு படைகள் இன்றி) வில்லோடு நின்ற மானுடத்தின் சிறுமையையும் இனித் தேவர்கள் கண்டு தெளிவார்களாக.

கு :—திறமையின்மை புலப்படுத்தக் ‘கானிடைப் புகுந்து’ என்றும், வலிமையின்மை புலப்படுத்தக் ‘கனி காயொடு நுகர்ந்த ஊனுடைப் பொறையுடம்பினன்’ என்றும் கூறியவாறு. ‘பொறை யுடம்பு’ என்றது, வெறும் பாரமேயன்றி வலிமை இல்லை என்பது புலப்படுத்தியவாறு. காய்கனியாகிய உணவு, தன்பால் உள்ள மீனுணவினும் வலிமை குறைந்ததே என்ற கருத்துக் கடலுக்கு உண்டு என்பது தோன்ற “மீனுடைக் கடற்பெருமையும்” என்றான். உணர்ந்த கடல், மீனுடைக் கடல் எனத் தனித்தனி இயையும். காய்கனியாகிய சைவ உணவினும், மீனாகிய ஊனுணவு வலிமை யுடையது என்ற குறிப்புக் கடலுக்கு உண்டு என்றவாறு. மற்றைப் படைக்கலங்கள் ஏதும் இன்மை புலப்படுத்த ‘வில்லொடு நின்ற’ என்றும், தேவர்கள் பெருமையினும் குறைந்தவர் மனிதர் என்பது புலப்படுத்த, “மானுடச் சிறுதன்மையும்” என்றும் கூறியவாறு. இவை யாவும் வருணன் உட்கோளாக இராமன் கற்பனை செய்து கூறியதேயாம். இனிக் கடலுக்குத் திமிங்கிலம் முதலிய மீன்களாகிய சேனையுண்டு; இராமனுக்கு வில்லன்றித் துணையில்லை என்பது புலப் படுத்த மீனுடைக் கடற் பெருமையும் வில்லொடு நின்ற மானுடச் சிறுதன்மையும்” என்றான் எனினும் அமையும். கடற்றெய்வமாகிய வருணன் தேவருள் ஒருவனாகலின் ‘மானுடச் சிறுதன்மை’ என்ற குறிப்பு அவனுக்கு உண்டு என்று இராமன் கருதினான். கடற் பெருமையும் மானுடச் சிறுதன்மையும் காண்பரால் வானோர் என்றது, உணவினும் படையினும் குறைவுடையதாயினும் மானுடத் திற்குச் சிறப்புண்டு என்பதைக் செயலால் காட்டுவேன் என்ற இராமனது உட்கோளை உணர்த்திற்று. கடலின் சிறுமையும் மானுடத் தின் பெருமையும் காண்பரால் வானோர் என்பதே இராமன் கருத்து. இமையாது விண்ணிலிருக்கும் தேவர்களே தப்பாது காண்பதற்கு உரியவராதலின் ‘காண்பரால் வானோர்’ என்றான். (12)

6730. ஏத மஞ்சிநா னிரந்ததே
யெளிதென விகழ்ந்த
ஓத மஞ்சினோ டிரண்டும்
வெந்தொரு பொடியாகப்
பூத மஞ்சும்வந் தஞ்சலித்
துயிர்கொண்டு பொருமப்
பாத மஞ்சலர் செஞ்செவே
படர்வரென் படைஞர்.

'ஏதம் அஞ்சி, நான் இரந்ததே,
"எளிது" என இகழ்ந்த
ஓதம் அஞ்சினோடு இரண்டும்
வெந்து ஒரு பொடி ஆகப்
பூதம் அஞ்சும் வந்து அஞ்சலித்து
உயிர் கொண்டு பொரும,
பாதம் அஞ்சலர் செஞ்செவே
படர்வர், என் படைஞர்.

பொ :—(கடலொடு மாறுகொண்டு அம்பினுல் வற்றச் செய்தால்) உளதாகும் தீமைகளுக்கு அஞ்சி, யான் இரந்து வேண்டியதையே கொண்டு, (இவன் செயல்) எளிமையானது என்று இகழ்ச்சி செய்திருக்கும் ஏழு கடலும் (என் அம்பினுல்) வெந்து ஒரே துகளாகவும், நில முதலாகிய பெரும் பூதங்கள் ஐந்தும் வந்து என்னை வணங்கித் தம்முயிரைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டி அழுது தேம்பா நிற்கவும் என் சேனை வீரர்களாகிய வானரர்கள் (நீரில்லாமையால்) பாதங்களால் நடக்க அஞ்சாதவர்களாய் வற்றிய கடலுக்கிடையே நடந்து (இலங்கையை நோக்கி) நேராகச் செல்வார்கள்.

கு :—இராமன் அம்பினுல் கடல்நீரை வற்றச் செய்திருந்தால் அக்கடலில் வாழ்கின்ற பலவகையான உயிர் வகைகள் இறந்துபடுதலாகிய தீமைக்கு அஞ்சி என்பான், "ஏதமஞ்சி நான் இரந்ததே" என்ருன். 'யான் ஏதமஞ்சி இரக்க அதைக் கடல் என் எளிமையால் இரந்ததாக எண்ணி இகழ்ந்தது' என இராமன் சினந்தான். ஓதம்-கடல். அஞ்சினோடிரண்டு என்றது, ஏழு கடல் என்றவாறு. ஐந்து என்பது அஞ்சு என எதுகை நோக்கிப் போலியாய் வந்தது. நீர் என்பது சிறிதும் இன்றி ஒரே மண் துகளாக மாற என்பான், 'வெந்து ஒரு பொடியாக' என்ருன். கடல் வெந்து பொடியாதற்கு இராமன் அம்பே காரணம் என்பது குறிப்பால் பெற வைத்தவாறு. கடலுக்கு நேர்ந்த கதி தமக்கும் வருமோ என்ற அச்சத்தால் பூதமஞ்சும் வந்து

உயிர் கொள்ளப் பொருமும் என்றவாறு. பூதம் அஞ்சாவன: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பன. உயிர்கொண்டு என்பதை உயிர் கொள்ள எனச் செயவெனெச்சமாகத் திரிக்க. பொருமுதல் - அழுது தேம்புதல். காலால் கடலைக் கடக்க அஞ்சுதல் இயல்பாகலின் "பாதமஞ்சலர் செஞ்செவே படர்வர் என்படைஞர்" என்றான். பாதத்தால் நடந்து கடலைக் கடக்க அஞ்சாதவராய் என வேண்டுஞ் சொல் வருவித்து முடிக்க. வற்றிய கடலாதலின் அஞ்சாது செஞ்செவே படர்வர் என்றவாறு. செஞ்செவே - நேராக. படர்வர் - நடப்பர். என் படைஞர் என்றது, வானரப் படைஞரை. (13)

6731. மறுமை கண்டமெய்ஞ் ஞானியர்
ஞாலத்து வரினும்
வெறுமை கண்டபின் யாவரும்
யாரென விரும்பார்
குறுமை கண்டவர் கொழுங்கன
லென்னினுங் கூசார்
சிறுமை கண்டவர் பெருமை
கண்டல்லது தேறார்.

'மறுமை கண்ட மெய்ஞ் ஞானியர்
ஞாலத்து வரினும்,
வெறுமை கண்ட பின், யாவரும்
'யார்' என, விரும்பார்;
குறுமை கண்டவர் கொழுங்கனல்
என்னினுங் கூசார்;
சிறுமை கண்டவர் பெருமை
கண்டு அல்லது தேறார்.

பொ :—முத்தி பெற்ற உண்மை ஞானிகள் இந் நிலவுலகத்திற்கு வந்தாலும் அவர்பால் ஏதும் சிறப்பியல்பு இல்லாமையைக் கண்டால் (இவ்வுலகத்தோர்) எவரும் அவர்களை 'யார்' என்று வினவியறிதற்கும் விரும்பமாட்டார்கள்; குறியவராக ஒருவர் இருக்கக்கண்டவர்கள் அவர் ஆற்றலால் கொழுவிய நெருப்பும் போன்றவர் என்றாலும் (அவரிடத்துத் தம் பணிவு தோன்றக்) கூசி நடக்கமாட்டார்கள்; சிறுமைத் தோற்றத்தைத் தம் கண்களால் கண்டவர்கள், (அவர் தம் செய்கையால்) பெருமையைக் கண்டால் அன்றி அவரை உயர்ந்தோரெனத் தெளியமாட்டார்கள்.

கு :—இராமன் இவ்வுலகத்தவரின் இயல்பு புலப்படுத்துவான் போலத் தன் சிறு வடிவு கண்டே இகழ்ந்து வருணன் வாராதிருக்கின்றான் என்பதையும், தன்னாற்றலைக் காட்டினாலன்றித் தன் பெருமையை யுணரான் என்பதையும் உணர்த்தியவாறு; இது பிறிது மொழிதலணி. கொழுங்கனல் போன்ற ஆற்றலைக் கொழுங்கனல் என்று ஆகுபெயராற் கூறியவாறு. கூசுதலாவது, பணிவு தோன்ற ஒடுங்கி நடப்பது. வடிவின் சிறுமை கண்டு இகழ்ந்திருந்தவர், அவர் செயலின் பெருமை அறிந்தாலன்றி அவரைப் பெரியவராகக் கொள்ளார் என்றவாறு. (14)

6732. திருதி யென்பதொன் றழிதர
ஊழியிற் சினவும்
பருதி மண்டில மெனப்பொலி
முகத்தினன் பலகால்
தருதி வில்லெனு மளவையிற்
றம்பியும் வெம்பிக்
குருதி வெங்கன லுமிழ்கின்ற
கண்ணினன் கொடுத்தான்.

திருதி என்பது ஒன்று அழிதர, ஊழியில் சினவும்
பருதி மண்டிலம் எனப் பொலி முகத்தினன் பலகால்
'தருதி வில்' எனும் அளவையில், தம்பியும் வெம்பிக்
குருதி வெங்கனல் உமிழ்கின்ற கண்ணினன் கொடுத்தான்.

பொ :—மனவடக்கம் என்ற ஒன்று இல்லையாக இராமன், ஊழியிறுதியில் வெகுண்டு காயும் சூரிய மண்டலம் என்னுமாறு கோபத்தால் பொலிகின்ற முகத்தினனாய் 'வில்லைத் தருவாயாக' என்று பல முறை கேட்கின்ற அளவில் இலக்குவனாகிய தம்பியும் மனம் வெம்பிக் குருதியோடு கொடிய நெருப்புப் பொறிகளைக் கக்குகின்ற கண்களையுடையவனாய் (வில்லை இராமன் கையில்) கொடுத்தான்.

கு :—திருதி - மனவடக்கம். வருண செபம் செய்யும்போது இருந்த மனவடக்கம் இப்போது இல்லையாயது என்றவாறு. 'திருதிமையால் ஐவரையுங் காவலேவி' (அப்பர் தேவாரம். 6. 61. 68) என்புழியும், இச்சொல் இப்பொருளில் ஆளப்பட்டிருத்தல் காணலாம்' சினத்தால் சிவந்த இராமன் முகம் ஊழிக்கதிரவன் போலப் பொலிந்தது என்க. வருணன் இராமனது வேண்டுகோளை நிறைவேற்ற வாராமையால் இராமன்போல இலக்குவனும் கோபங்

கொண்டவனே ஆயினும் காரியம் கெடுமே என்ற அச்சத்தால், கேட்டவுடன் வில்லைத் தாராமல் தயங்கினான் எனவும், பலகால் கேட்டபின் தந்தான் எனவும் கொள்க. கண்கள் குருதி உமிழ்தற்குக் காரணம் மனத்துயர் என்பதும், கனல் உமிழ்தற்குக் காரணம் சினக் குறிப்பு என்பதும் கொள்க. கண்ணினனாய்க் கொடுத்தான் என முற்றெச்சமாக்கி முடிக்க. (15)

6733. வாங்கி வெஞ்சிலை வாளிபெய்
புட்டிலு மலைபோல்
வீங்கு தோளயல் வீக்கினன்
கோதையின் விரலால்
தாங்கி நாணினைத் தாக்கினன்
ருக்கிய தமரம்
ஓங்கு முக்கணன் றேவியைத்
தீர்த்துள தூடல்.

வாங்கி வெஞ்சிலை வாளிபெய் புட்டிலும் மலைபோல்
வீங்கு தோள் அயல் வீக்கினன் கோதையின் விரலால்
தாங்கி நாணினைத் தாக்கினன் தாக்கிய தமரம்
ஓங்கு முக்கணன் தேவியைத் தீர்த்துளது ஊடல்.

பொ :—(இலக்குவன் கொடுத்த) கொடிய வில்லை வாங்கிக் கொண்டு, அம்பு பெய்துள்ள அம்பருத்தூணியையும் மலைபோல் பருத்துள்ள தன் தோட்புறத்தே கட்டிக்கொண்டு, (வில்லைக் கையில்) தாங்கி உறையினையுடைய விரலால் வில்லின் நாணினைத் தாக்கினான்; அவன் தாக்கியதால் உளதாகிய நாணொலி, பெருமையால் உயர்ந்த முக்கண்ணனாகிய சிவபிரான் தேவியின் பிணக்கைத் தீர்த்துவிட்டது.

கு :—வெஞ்சிலை வாங்கி என இயையும். வாளி பெய்புட்டில் என்றது அம்பருத்தூணியை. தோள் அயல் - தோட்புறம். அம்புப் புட்டிலைத் தோள்புறத்தில் கட்டுதலே மரபு. கோதை என்றது, உடும்புத் தோலால் செய்து விரல்களுக்கு இடும் உறையை. விரலால் தாக்கினன் என இயையும். வில்லைத் தாங்கி என வருவித்து முடிக்க. தமரம் - ஒலி. இராமன் செய்த நாணொலியின் பெருமை புலப்படவேண்டி, அவ்வொலியால் கயிலைமலையில் உள்ள உமா தேவியின் ஊடலைத் தீர்த்ததாகக் கூறினர். சிவபிரானோடு ஊடிக் கொண்டிருந்த உமை, இராமனுடைய நாணொலி கேட்டவுடன் அஞ்சி ஊடலை விடுத்துச் சிவபிரானைத் தழுவிக்கொண்டாள் என்றவாறு. இது, சமாகித அணியின்பாற்படும். "அருவியங் குன்ற

மரக்கனெடுப்ப, வெருவிய வெற்பரையன் பாவை - பெருமான், அணி யாக மாரத் தழுவினு டான்முன், தணியாத வூடறணிந்து (தண்டி: சூ. 73. உதாரணம்) என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். கயிலையில் பேய் பூதங்களின் ஆரவாரங்களைக் கேட்டுப் பழகிய உமாதேவி யையும் அஞ்சுவித்தது இராமன் செய்த நாணொலி என அவ் வொலியின் சிறப்பைப் புலப்படுத்தல் காணலாம். தமரம் ஊடல் தீர்த்துளது என்க. (16)

இராமன் அம்பு விடுதல் 6734-6735

6734. மாரி யின்பெருந் துளியினும் வரம்பில வடித்த
சீரி தென்றவை யெவற்றினுஞ் சீரிய தெரிந்து
பாரி யங்கிரும் புனலெலா முடிவினிற் பருகும்
சூரி யன்கதி ரனையன சுடுசரந் துரந்தான்.

மாரியின் பெருந் துளியினும் வரம்பு இல, வடித்த,—
சீரிது என்றவை எவற்றினும் சீரிய, தெரிந்து
பார் இயங்கு இரும்புனல் எலாம் முடிவினில் பருகும்
சூரியன் கதிர் அனையன சுடுசரம் துரந்தான்.

பொ :—மழையின் பெரிய துளிகளினும் எண்ணிக்கையால் அளவு இல்லாதனவும், கூர்மை செய்யப்பட்டனவும், சிறப்புடையது என்று சொல்லப்படுகின்ற அம்புகள் எவற்றினும் சிறப்புடையனவும், நிலத்தில் பரவியுள்ள நீர் எல்லாவற்றையும் ஊழி இறுதியில் பருகு கின்ற ஊழிக்காலச் சூரியன் கதிர்களைப் போன்றனவுமான சுடுகின்ற அம்புகளைத் தெரிந்து எடுத்துச் சொரிந்தான்.

கு :—இராமன் தொடுத்த சரங்களின் பன்மை புலப்படுத்த 'மாரி யின் பெருந்துளியினும் வரம்பில எனவும், அவற்றின் வெம்மை புலப் படுத்த, 'புனலெலாம் முடிவினிற் பருகும் சூரியன் கதிரனையன எனவும் கூறியவாறு. தெரிந்து துரந்தான் என இயையும். கடலைச் சுவறச்செய்ய வெம்மையுடைய அம்புகளே ஏற்றவையாதல் காண லாம். இயங்குதல் இங்குப் பரவுதலை உணர்த்தியது. கடல் நீரையும் உளப்படுத்தி 'இரும்புனலெலாம்' என்றார். முடிவு என்றது ஊழியிறுதியை. பன்னிரு சூரியர்களும் விண்ணில் தோன்றித் தம் வெம்மைக் கதிர்களால் உலகை வெதுப்பி அழிப்பதுண்டு என்பது புராண மரபு. கடலைச் சுவற்ற இராமனுடைய ஓரம்பே அமையு மாயினும் சின மிகுதியால் தன்னம்பின் ஆற்றலையும் மறந்து பல அம்புகளைத் தொடுத்தான் என்க. வரம்பில, வடித்த, சீரிய, கதிர னையன, சுடுசரம், தெரிந்து துரந்தான் என இயையும். (17)

6735. பெரிய மால்வரை யேழினும்
பெருவலி பெற்ற
வரிகொள் வெஞ்சிலை வளர்பிறை
யாமென வாங்கித்
திரிவ நிற்பன யாவையு
முடிவினிற் றீக்கும்
எரியின் மும்மடி கொடியன
சுடுசர மெய்தான்.

பெரிய மால்வரை ஏழினும் பெருவலி பெற்ற
வரி கொள் வெஞ்சிலை வளர்பிறை யாம் என வாங்கித்,
திரிவ நிற்பன யாவையும் முடிவினில் தீக்கும்
எரியின் மும்மடி கொடியன சுடு சரம் எய்தான்.

பொ :—பெரியவாகிய குலமலைகள் ஏழினைக் காட்டிலும் பெருவலி படைத்த கட்டமைந்த கொடிய தன் வில் வளர்பிறைச் சந்திரனைப் போலும்படி நாணினை இழுத்து, உலகில் உள்ள இயங்குவனவும் நிற்பனவுமான உயிர்கள் எல்லாவற்றையும் ஊழி முடிவில் தீத்து அழிக்கின்ற அனலினும் மூன்று மடங்கு வெம்மையாற் கொடியன வாகிய சுடுசரங்களை (இராமன் கடலின்மேல்) எய்தான்.

கு :—பிறைச் சந்திரனைப் போல வளைத்தற்கு அருமை புலப் படுத்த வேண்டிப் 'பெரிய மால்வரை ஏழினும் பெருவலி பெற்ற...... சிலை' என்றார். வாங்குதல், என்றது அம்புவிடுங்கால் நாணினை இழுத்தலை உணர்த்தியது. வீங்கு தோள்வலம் வீக்கினன் என்ற தால் வில்லை வளைத்தமை பெறப்படுதலின் இங்கும் வாங்கி என்ப தற்கு வளைத்து எனப் பொருள் கூறல் பொருந்தாமை யுணரலாம். வளைத்து நாணேற்றிய வில், அம்பு தொடுக்குங்கால் நாணினை இழுப்பதால் மேலும் வளையும் இயல்பு புலப்படுத்த "வளர்பிறை யாமென வாங்கி" என்றார். வாங்குதல் - இழுத்தல். நெருப்பால் அழிவுறும் ஊழியும் உண்டாதலின் 'முடிவினிற் றீக்கும் எரி' என்றார். ஊழி எரியினும் மும்மடங்கு வெப்பமுடைய சரங்களை இராமன் எய் தான் என்றவாறு. மேலைச் செய்யுளில் கூறுது விடுத்த அம்பின் சிறப்பை இச் செய்யுளால் கூறியவாறு; கூறியது கூறலன்று. குலமலைகள் ஏழாவன : கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்பன. (18)

இராமன் அம்பால் கடல் பட்டபாடு 6736-6772

6736. மீனு நாகமும் விண்டொடு
மலைகளும் விறகா
வேனை நிற்பன யாவையு
மேலெரி யெய்தப்
பேன நீர்நெடு நெய்யெனப்
பெய்கணை நெருப்பாக்
கூனை யங்கியின் குண்டமொத்
தது கடற் குட்டம்.

மீனும் நாகமும் விண்தொடு மலைகளும் விறகா
ஏனை நிற்பன யாவையும் மேல் எரி எய்த,
பேன நீர் நெடு நெய் என, பெய்கணை நெருப்பாக்
கூனை அங்கியின் குண்டம் ஒத்தது, கடற் குட்டம்.

பொ :—(கடலில் உள்ள) மீன்களும் பாம்புகளும் வான் அளாவிய மலைகளும் மற்றும் எஞ்சியுள்ளன எல்லாமும் விறகாகவும், தன்மேல் எரிபடுதலால் (கொதித்து) நுரையோடு தோன்றுகின்ற கடல் நீர் நெய்யாகவும், இராமன் எய்த அம்பு நெருப்பாகவும் அமைய கடற் பள்ளம், அக்கினியையுடைய வளைந்த யாக குண்டத்தைப்போல் தோன்றிற்று.

கு :—கடற்குட்டம் அங்கியின் குண்டம் ஒத்தது என்றது, உருவகத்தை உறுப்பாகக் கொண்ட தற்குறிப்பேற்ற அணி. விறகைப் பற்றி வெளிப்படும் இயல்பினது நெருப்பு ஆகலின், கடலில் இராமன் அம்பால் தோன்றிய நெருப்பிற்கு அக்கடலிலுள்ள மீன், நாகம், மலை முதலியன விறகாக உருவகஞ் செய்யப் பெற்றன. கடல்நீர் நுரையுடையதே ஆயினும், தன்மேல் எரி எய்தலால் கொதிக்கும் நிலையில் நுரை மிகுதியாகத் தோன்றுதல் நினைந்து 'மேலெரியெய்தப் பேன நீர் நெடு நெய்யென' என்றார். எரியெய்தலால் நுரையையுடைய நீர் என்க. நுரையோடு கூடிய நீர் தோற்றத்தால் நெய்யைப் போலுதலின் அதனை நெய்யாக உருவகஞ் செய்தார். இராமன் எய்த கணையே நெருப்பையுண்டாக்கி எல்லாவற்றையும் தீத்தது ஆகலின் அதனை நெருப்பாக உருவகம் செய்தார். பேனம் - நுரை. யாக குண்டத்தில் காணப்படும் விறகும் நெய்யும் நெருப்பும் கடற் குட்டத்திலும் காணப்படுதலின் அங்கியின் குண்டமொத்தது என்றார். கூனை - வளைவு. குண்டத்திற்கு அடையாக்குக. அங்கியின் குண்டம் என்றது யாக குண்டத்தை. யாக குண்டம், தரையில் பள்ளம் அமைத்துச் செய்தல் மரபு. வாயகன்ற பாத்திரமே இடமாக அமைத்

தலும் உண்டு. இந்நிலையில் அமைந்த யாக குண்டத்தையே இங்குக குறித்ததாகக் கொண்டு 'கூனை' என்பதற்குப் பெரிய மிடா எனப் பொருள் கூறலும் ஆம். கூனை ஆகிய குண்டம் என்க. "கரும்பேந் திரத் தொழுகு சாறகன் கூனையின்" (அயோ - ஆறுசெல். 49) என் புழியும் இச்சொல் இப்பொருளில் ஆளப்பட்டிருத்தல் காணலாம். (19)

6737. பாழி வன்னெடுங் கொடுஞ்சிலை
வழங்கிய பகழி
ஏழு வேலையு மெரியொடு
புகைமடுத் தேகி
ஊழி வெங்கனற் கொழுந்துக
ளுருத்தெழுந் தோடி
ஆழி மால்வரைக் கப்புறத்
திருளையு மவித்த.

பாழி வல் நெடுங் கொடுஞ்சிலை வழங்கிய பகழி,
ஏழு வேலையும் எரியொடு புகை மடுத்து ஏகி,
ஊழி வெங்கனல் கொழுந்துகள் உருத்து எழுந்து ஓடி,
ஆழி மால்வரைக்கு அப்புறத்து இருளையும் அவித்த.

பொ :—(இராமனுடைய) மிக்க வலிமையுள்ள நீண்டு வளைந்த வில் வெளிப்படுத்திய அம்பு, ஏழு கடல்களிலும் நெருப்பையும் புகையையும் நிரப்பிச் சென்று, ஊழிக் காலத்துத் தோன்றும் கொடிய கனலின் கொழுந்துகளைப் போன்று உருவுகொண்டு எழுந்து ஓடிச் சக்கரவாளமலைக்கு அப்புறத்தில் உள்ள இருளையும் நீக்கின.

கு :—பாழி - வலிமை. பாழிவன் - என்பது மீமிசைச் சொல். பூமியைச் சுற்றி ஒன்றன்பின் ஒன்றாக ஏழு கடல்கள் இருக்கின்றன என்பதும் அவற்றிற்கப்பால் சக்கரவாளகிரியும் அக்கிரிக்கு அப்பால் இருள்சூழ்ந்த இடமும் உள்ளன என்பதும் புராண வழக்கு. இராமன் அம்புகள் இலங்கையைச் சார்ந்துள்ள ஒரு கடலை மட்டுமன்றி ஏழு கடலையும் எரித்தனவாய் அவ்வளவில் அமையாது சக்கரவாளகிரிக்கு அப்புறத்துள்ள இருளையும் தம் பேரொளியால் நீக்கின என அவற்றின் ஆற்றலைப் புலப்படுத்தியவாறு. உருத்தல்—உருவு கொள்ளுதல். சினத்தல் எனலும் ஆம். (20)

6738. மரும தாரையி னெரியுண்ட
மகரங்கள் மயங்கிச்
செரும வானிடைக் கற்பக
மரங்களுந் தீய
நிருமி யாவிட்ட நெடுங்கணை
பாய்தலி னெருப்போ
டுருமு வீழ்ந்தெனச் சென்றன
கடற்றுளி யும்பர்.

மரும தாரையின் எரிஉண்ட மகரங்கள் மயங்கிச்
செரும, வானிடைக் கற்பக மரங்களும் தீய,
நிருமியா விட்ட நெடுங்கணை பாய்தலின், நெருப்போடு
உருமு வீழ்ந்தெனச், சென்றன, கடல்துளி உம்பர்.

பொ :—(வருணன் வருந்த வேண்டும் என்று) சங்கற்பித்துவிட்ட நீண்ட அம்புகள், நெருப்போடு இடி வீழ்ந்தாற்போலக் கடலில் பாய்தலால் உயிர் நிலையில் எரி உண்ட மகர மீன்கள் மயக்கமுற்று (கடலின்மேல் மிதந்து) நெருங்கா நிற்க, விண்ணுலகத்தில் உள்ள கற்பக மரங்களும் தீயுமாறு (வெப்பமிக்க) கடல் நீர்த்துளிகள் விண் மேற் சென்றன.

கு :—நெடுங்கணை நெருப்போடு உருமு வீழ்ந்தெனப் பாய்தலின் எரியுண்ட மகரங்கள் மயங்கிச் செரும எனவும் கற்பக மரங்களும் தீயக் கடற்றுளி உம்பர்ச் சென்றன எனவும் கொண்டு கூட்டுக. மருமதாரை - உயிர் நிலைபெற்ற இடம். இனி, மறைவான இடம் எனப் பொருள்கொண்டு கடலடியில் மறைவான இடத்தில் இருந்தும் எரியுண்ட மகர மீன்கள் மயங்கிக் கடல்மேல் மிதந்து நெருங்க எனப் பொருள் கூறலுமாம். செரும - நெருங்க. உருமு - இடி. இராமன் அம்பு பாய்ந்த வேகத்தால் கடலடியில் இருந்த மகர மீன்கள் மயங்கியது போலவே விண்ணுலகில் இருந்த கற்பக மரங்களும் தீயுமாறு வெதும்பிய கடல் நீர்த்துளிகள் விண்ணிற் சென்று தாக்கின என்க. கடலில் இராமன் அம்பு வீழ்ந்த வேகத்தால் அக்கடலினின்று எழுந்த துளிகள் அந்த அம்பின் வெப்பத்தால் வெதும்பியிருந்தமையால் அத் துளிகள்பட்ட கற்பக மரங்கள் தீய்ந்தன என்க. கடலின் தொடர்பு சிறிதுமில்லாது விண்ணுலகில் உள்ள கற்பக மரங்களும் தீய என உம்மையை உயர்வு சிறப்பும்மையாக்குக. இனி, மகரங்கள் மயங்கிச் செருமியதேயன்றிக் கற்பக மரங்களும் தீய என இறந்தது தழுவிய எச்சவும்மை யாக்கலுமாம். நிருமித்தல் - சங்கற்பம் செய்தல்; எண்ணுதல். நிருமியா என்பது செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். (21)

6739. கூடும் வெம்பொறிக் கொடுங்கன
றொடர்ந்தன கொளுந்த
ஓடு மேகங்கள் பொரிந்திடை
யுதிர்ந்தன வும்பர்
ஆடு மங்கையர் கருங்குழல்
விளர்த்தன வளக்கர்க்
கோடு நீத்தெழு கொழும்புகைப்
பிழம்புமீக் கொள்ள.

**கூடும் வெம்பொறிக் கொடுங்கனல் தொடர்ந்தன கொளுந்த,
ஓடும் மேகங்கள் பொரிந்து இடை உதிர்ந்தன; உம்பர்
ஆடும் மங்கையர் கருங்குழல் விளர்த்தன - அளக்கர்க்
கோடு நீத்து எழு கொழும்புகைப் பிழம்பு மீக்கொள்ள.**

பொ:—வெப்பமான பொறிகளோடு கூடிய கொடிய அனற் கொழுந்துகள் தொடர்ந்தனவாய்ப் பற்றிக் கொளுத்துதலால் (கடலின்மேல் விண்ணில்) ஓடுகின்ற மேகங்கள் பொரிந்து நடுவே உதிர்ந்தன; கடலின் வரம்பை விட்டு நீங்கி எழுகின்ற கொழுமை யான புகைப் படலம் மேல் நோக்கிச் செல்லுதலால் விண்ணுல கத்தில் நாட்டியம் ஆடுகின்ற அரம்பையரின் கருமையான கூந்தல்கள் வெளுத்துத் தோன்றின.

கு:—கடலின்கண்பட்ட நெருப்பாலும் புகையாலும் நிகழ்ந்தன வற்றை விளக்கியவாறு. கடலைக் கொளுத்திய கனலின் கொழுந்து அக்கடல்மேல் உலாவும் மேகங்களையும் தொடர்ந்துபற்றிக் கொளுத் துதலால் அம்மேகங்கள் செல்லவேண்டிய இடத்திற்குச் செல்ல இயலாது நடுவே வெந்து உதிர்ந்தன என்றதால் நெருப்பால் நிகழ்ந்த செயல் கூறினர். கடல் எல்லையை விடுத்து எழுகின்ற செழுமையான புகைப்படலம் மேற் செல்லுதலால் ஆடும் மங்கை யரின் கருங்குழல் வெளுத்தன என்றதால் புகையால் நிகழ்ந்த செயல் கூறினர். கடலின் பரப்பை விட்டு மேலெழுந்து சென்ற செழுமை யான புகையின் பிழம்பு அழுத்தமான கருநிறமுடையதாகலின் அப் புகைப் பிழம்பை நோக்க அரம்பையரின் கருங்குழலும் வெளிதாகத் தோன்றியது என்றவாறு. "திங்களுங் கரிதென வெண்மை தீற்றிய, சங்கவெண் சுதையுடைத் தவளமாளிகை" (பால - நகரப் - 27) என்பது இங்கு ஒப்பு நோக்கத்தகும். அளக்கர் - கடல். கோடு - கரை; வரம்பு. பிழம்பு - திரட்சி. (22)

6740. நிமிர்ந்த செஞ்சர நிறந்தொறும்
படுதலு நெய்த்தோர்
உமிழ்ந்து லந்தன மகரங்க
ளுலப்பில வுருவத்
துமிந்த துண்டமும் பலபடத்
துரந்தன தொடர்ந்து
திமிங்கி லங்களுந் திமிங்கில
கிலங்களுஞ் சிதறி.

நிமிர்ந்த செஞ்சரம் நிறம்தொறும் படுதலும், நெய்த்தோர் உமிழ்ந்து உலந்தன மகரங்கள் உலப்புஇல; உருவத் துமிந்த துண்டமும் பலபடத் துரந்தன, தொடர்ந்து திமிங்கிலங்களும் திமிங்கில கிலங்களும் சிதறி.

பொ:—வளைவின்றி நேராய் நிமிர்ந்துள்ள சிவந்த அம்புகள் தம் மார்புகள் தோறும் பட்டவுடன் அளவில்லாத மகர மீன்கள் குருதி கக்கிக் கொண்டு இறந்தன: (இராமனால்) செலுத்தப் பெற்றனவான அவ் அம்புகள் தொடர்ந்து ஊடுருவியதால் திமிங்கிலங்களும் திமிங்கில கிலங்களும் துண்டங்களும் பலப்பலவாம்படிச் சிதறுண்டு துணிவுற்றன.

கு:—உலப்பில மகரங்கள் நெய்த்தோர் உமிழ்ந்து உலந்தன எனவும். துரந்தன, தொடர்ந்துருவத் திமிங்கிலங்களும் திமிங்கில கிலங்களும் துண்டமும் பலபடச் சிதறித் துமிந்தனவும் கொண்டு கூட்டுக. நிமிர்தல் - வளைவிலாதிருத்தல். பகைவரின் குருதி தோய்ந்து செந்நிறம் பெற்றிருத்தலின் செஞ்சரம் எனப்பட்டது. நிறம் - மார்பு. நெய்த்தோர் – குருதி. உலந்தன உலப்பில என்புழி முரண் அமைந்திருத்தல் காணலாம். உலத்தல் - முடிதல்; இறத்தல். துரந்தன, வினைப்பெயர்; இராமனால் துரக்கப்பட்டன வான அம்புகள் என்க. திமிங்கிலம் என்பது ஒருவகைப் பெரிய மீன். திமிங்கிலத்தை உண்பதற்குரிய பெரிய மீன் திமிங்கில கிலம் எனப்படும். (23)

6741. நீறு மீச்செல நெருப்பெழப்
பொருப்பெலா மெரிய
நூறு மாயிர கோடியுங்
கடுங்கணை நுழைய

ஆறு கீழ்ப்பட வளறுபட்
டழுந்திய வளக்கர்ச்
சேறு தீய்ந்தன காந்தின
சேடன்றன் சிரங்கள்.

நீறு மீச்செல நெருப்பு எழப் பொருப்பு எலாம் எரிய,
நூறும் ஆயிர கோடியும் கடுங்கணை நுழைய,
ஆறு கீழ்ப்பட அளறுபட்டு அழுந்திய அளக்கர்ச்
சேறு தீய்ந்தன; காந்தின சேடன்றன் சிரங்கள்.

பொ:—நீறு மேலே பறக்குமாறு நெருப்புத் தோன்றுதலால் (தன்னுள் அடங்கியுள்ள) மலைகள் எல்லாம் எரியும்படி நூற்றுக் கணக்காகவும் ஆயிரங் கோடிக் கணக்காகவும் கடுமையான அம்புகள் தன்னுள் பாய்தலால், (பாதலத்திற்கு) வழி கீழே உண்டாகுமாறு சேறுபட்டு ஆழ்ந்துள்ள கடலின் சேறுமிக்க இடங்கள் தீய்ந்து போயின; (அச்சேறுள்ள இடங்கள் தீய்ந்து போனதால்) பூமியைத் தாங்கியுள்ள ஆதிசேடனுடைய ஆயிரந்தலைகளும் வெதும்பின.

கு:—கடலடியில் உள்ள சேறும் பாதலத்தில் உள்ள ஆதிசேடன் தலைகளும் வெதும்பினமை இதனால் புலப்படுத்தியவாறு. நீறு - சாம்பல். நெருப்பெழ - நெருப்புத் தோன்றுதலால்; காரணத்தின் கண்வந்த செயவெனெச்சம். பொருப்பெலாம் எரியும்படி கணை நுழைதலால் அளக்கர்ச் சேறு தீய்ந்தன; (சேறு தீய்ந்தமையால்) ஆதிசேடன் சிரங்கள் காந்தின என்று இயையும். நுழைய, காரணத் தின்கண்வந்த வினையெச்சம். ஆறுகீழ்ப்பட அளறுபட்டு அழுந்திய என்பன அளக்கர்க்கு அடை. கடலின் ஆழத்தைப் புலப்படுத்திய வாறு. ஆறு – வழி. பாதலத்திற்கு வழி கீழே உண்டாகுமாறு ஆழ்ந்துள்ள கடல் என்க. கடலின் அடிப்பகுதியும் பாதலமும் இவ்வாறு நெருங்கியுள்ளமையால் அக்கடலின் சேறு தீய்ந்தஅளவில் பாதலத்தில் உள்ள ஆதிசேடன் சிரங்கள் காந்துவன ஆயின. "மதில் சூழ்கிடந்த தொல்லகழி தாழ்ந்தோரனந்தன் மணிமுடிமேல் நின்றன்று" (பிரபுலிங்க லீலை–மாயையின் உற்பத்தி-14) என்பது இங்கு ஒப்பு நோக்கத்தகும். அளறு - சேறு. அழுந்துதல் - ஆழ்ந் திருத்தல். சேடன் - அதிசேடன். (24)

6742. மொய்த்த மீன்குல முதலற
முருங்கின மொழியில்
பொய்த்த சான்றவன் குலமெனப்
பொருகணை யெரிய

உய்த்த கூம்புடை நெடுங்கல
மோடுவ கடுப்பத்
தய்த்த வம்பொடுந் திரிந்தன
தாலமீன் சாலம்.

மொய்த்த மீன்குலம் முதல் அற முருங்கின, மொழியின்
பொய்த்த சான்றவன் குலம் என, பொருகணை எரிய ;
உய்த்த கூம்புடை நெடுங்கலம் ஓடுவ கடுப்ப,
தய்த்த அம்பொடும் திரிந்தன தால மீன்சாலம்.

பொ :—(இராமனுடைய) போர் செய்கின்ற அம்புகள் கொழுந்து விட்டு எரிவதால், சொல்லால் பொய்ச்சான்று கூறியவன் குலம் அடியோடு அழிவதுபோல, நெருங்கிய சிறு மீன் கூட்டங்கள் அடியோடு அழிந்தன ; (அவற்றினும் சிறிது பெரிய) பனை மீன்களின் வரிசை உடம்பில் தைத்த அம்புகளோடும், செலுத்தப்பட்ட கூம்பை யுடைய நெடிய மரக்கலம் ஓடுவனவற்றை ஒப்ப, திரிந்தன.

கு :—இராமன் கணைகளின் தீப்பட்டுச் சிறு மீன்கள் அடியோடு அழிந்தமையும், உடம்பில் தைத்த அம்புகளோடு பனை மீன்கள் குற்றுயிரோடு திரிந்தமையும் இதனால் கூறியவாறு. உள்ளத்தால் பொய்யாது சொல்லால் பொய்த்தமை தோன்ற 'மொழியில் பொய்த்த சான்றவன்' என்றார். மொழியால் பொய்த்தலும் பிற வுயிர்க்குத் தீங்கு விளைத்தலின் அவ்வாறு பொய்த்தவன் குலம் அடியோடு கெடுதல் உலகறிந்தது ஆகலின் அதனை இராமன் கணை யெரிய மீன்குலம் அடியோடு அழிந்தமைக்கு உவமையாக்கினர். சான்றவன் - சான்று கூறியவன். பொய்ச்சான்று கூறுதல் பெரும் பாவமாதலின் அது அவன் குலத்தையே அழித்துவிடும் என்பதும் இதனால் உணர்த்தியவாறு. பொய்ச்சான்று கூறியவனுக்கு நிழல் தந்த மரமும் வாடிவிடும் என்பது மேலோர் கொள்கை. "கரிபொய்த் தான் கீழிருந்த மரம் போலக் கவின் வாடி, எரிபொத்தி என்னெஞ்சம் சுடுமாயின் எவன் செய்கோ" (கலி-34: 10) என்றது காண்க. பொருகணை எரிந்துகொண்டு செல்லுங்கால் அத் தீப்பட்டவுடன் அழியத்தக்க சிறுமையுடைய மீன்கள் அடியோடு அழிந்தன எனவும், கணைகள் தம் உடம்பில் பட்டும் இறவாது திரியத்தக்க ஆற்றலுடைய பனைமீன்கள் தைத்த அம்புகளோடும் திரிந்தன எனவும் கொள்க. கூம்பு போன்றது அம்பு; மரக்கலம் போன்றது பனைமீன் என்க. உய்த்த நெடுங்கலம்; கூம்புடை நெடுங்கலம் எனத் தனித்தனி கூட்டுக. சாலம் - வரிசை. தாலம் - பனை. பனைமீன் என்பது

கரிய நிறமும் எட்டரையங்குல நீளமும் உடையது என்பர். "பனை மீன் வழங்கும் வளைமேய் பரப்பின்" (மதுரைக்-375) என்றது காண்க. (25)

6743. சிந்தி யோடிய குருதிவெங் கனலொடு செறிய
அந்தி வானகங் கடுத்ததவ் வளப்படு மளக்கர்
பந்தி பந்திக ளாய்நெடுங் கடுங்கணை படர
வெந்து தீந்தன கரிந்தன பொரிந்தன சிலமீன்.

சிந்தி ஓடிய குருதிவெங் கனலொடு செறிய,
அந்தி வானகம் கடுத்தது, அவ் அளப்பரும் அளக்கர்;
பந்தி பந்திகளாய் நெடுங் கடுங்கணை படர,
வெந்து தீந்தன, கரிந்தன, பொரிந்தன சிலமீன்.

பொ :—மீன் முதலியவற்றின் உடம்பிலிருந்து சிந்திப் பெருகி ஓடிய இரத்தம் வெப்பமுடைய நெருப்பொடு நெருங்கியிருத்தலால் அந்த அளக்க முடியாத பெருமையுடைய கடல், அந்திக் காலத்தில் தோன்றும் செவ்வானத்தை ஒத்தது; வரிசை வரிசையாய் நெடிய கடுமையான அம்புகள் செல்லுதலால், சில மீன்கள் வெந்து தீய்ந்து போயின; சில மீன்கள் கருகிப் போயின; சில மீன்கள் பொரிந்து விட்டன.

கு: —அந்தி வானகம் என்றது அந்திக் காலத்தே தோன்றும் செவ்வானத்தை. கடலில் நீர் வற்றிவிட்டமையால் 'குருதி வெங் கனல்களே செறிய' என்றார். செறிதலால் அந்தி வானகம் கடுத்தது என்றது ஏது உவமையணி. அளக்கர் அந்தி வானகம் கடுத்தது என்க. கடுத்தது - ஒத்தது. பந்தி - வரிசை. பந்தி பந்திகளாய் என்ற அடுக்குப் பன்மை யுணர்த்த வந்தது. படர்தல் - செல்லுதல். தீந்தன சிலமீன்; கரிந்தன சிலமீன்; பொரிந்தன சிலமீன் என இயைத்துக் கடை நிலைத் தீவகமாக்குக. வெந்த நிலையில் சிறிது சிறிது வேறுப்பட்ட நிலையை யுணர்த்த வேண்டித் தீந்தன, கரிந்தன, பொரிந்தன என்றார். இம்மூன்று நிலையும் ஒரு பொருளிடத்தே நிகழ்ந்ததாகக் கொள்வோருமுளர். (26)

6744. வைய நாயகன் வடிக்கணை குடித்திட வற்றி
யைய நீருடைத் தாய்மருங் கருங்கனன் மண்டக்
கைக லந்தெரி கருங்கடல் காரகல் கடுப்ப
வெய்ய நெய்யிடை வேவன வொத்தன சிலமீன்.

வைய நாயகன் வடிக்கணை குடித்திட, வற்றி,
ஐய நீர் உடைத்தாய், மருங்கு அருங்கனல் மண்ட,
கைகலந்து எரி கருங்கடல் கார் அகல் கடுப்ப,
வெய்ய நெய்யிடை வேவன ஒத்தன, சிலமீன்.

பொ :—உலக நாயகனாகிய இராமன் விட்ட கூரிய அம்புகள் குடித்துவிட்டமையால் வற்றிப்போய்ச் சிறிய அளவு நீரை உடைய தாய்த் தன்னிடத்தே தடுத்தற்கரிய நெருப்பு நெருங்குதலால் எல்லாப் பக்கமும் கலந்து எரிகின்ற கரிய கடல், கரிதாகிய சட்டியை ஒத்துத் தோன்ற, கொதிக்கின்ற நெய்யில் சில மீன்கள் வேவன போலத் தோன்றுகின்றன.

கு :—ஐய நீர் – சிறிதளவு நீர். 'ஒருதனக்குள்ள ஐய படையையும்' (திருவாலவாய் 46, 12) என்புழியும் ஐய என்பது இப்பொருளதாதல் காணலாம். காரகல் - கரிய சட்டி. (வாணல்) கடல் கரிய வாணல் போன்றது ; கடலில் உள்ள சிறிதளவு நீர் நெய் போன்றது, அம்பின் நெருப்பால் கடலில் வேகும் மீன்கள் வாணலில் வேகும் மீன்களைப் போன்றிருந்தன என்றவாறு. இது உருவகத்தை யுறுப்பாகக் கொண்ட தற்குறிப்பேற்ற அணி. (27)

6745. குணிப்ப ருங்கொடும் பகழிகள்
குருதிவாய் மடுப்பக்
கணிப்ப ரும்புனல் கடையுறக்
குடித்தலிற் காந்து
மணிப்ப ருந்தடங் குப்பைகண்
மறிகடல் வெந்து
தணிப்ப ருந்தழல் சொரிந்தன
போன்றன தயங்கி.

குணிப்பருங் கொடும் பகழிகள் குருதிவாய் மடுப்பக்,
கணிப்பரும் புனல் கடையுறக் குடித்தலின், காந்தும்
மணிப் பருந்தடங் குப்பைகள், மறிகடல் வெந்து
தணிப்பருந் தழல் சொரிந்தன போன்றன, தயங்கி.

பொ :—அளவிட முடியாத கொடிய அம்புகள் தம் இரத்தம் தோய்ந்த வாய்வழி சேருமாறு அளத்தற்கரிய கடல்நீரை முடிவு போகக் குடித்துவிட்டமையால், (அக்கடலுள் இருந்த) ஒளிவீசுகின்ற மணிகளின் மிகப் பெரிய குவியல்கள் விளக்கம் பெற்று, அலைமடங்கி

வீசும் கடல் வெந்துபோய்ப் பின் தணிக்க முடியாத கனலைச் சொரிந்தாற்போன்று காணப்பட்டன.

கு :—குணித்தல் - அளவிடல்; கணித்தலும் அப்பொருளதே. மடுப்பக் குடித்தலின் என்று இயையும். புனல் கடையுறக் குடித்தலாவது, நீர் முழுவதையும் குடித்தல். காந்துதல் - ஒளி வீசுதல். மணிக்குப்பைகள் தயங்கித் தழல் சொரிந்தன போன்றன என இயையும். ஒரு பொருள் வெந்து முடிந்தபின் அதன் தணல் அவியாது எஞ்சி நிற்றல் இயல்பு; ஆயின் கடல் வெந்தபின் தணலாய் எஞ்சி நிற்றற்கு யாதும் இல்லை என்பது வெளிப்படை. ஆனால், இராமன் அம்பு கடல்நீர் முழுமையையும் குடித்துவிட்டமையால் அந்நீருள் இருந்த சிவந்த மணிகளின் குவியல்கள் விளக்கம் பெற்றுத் தோன்றுவது, கடல் வெந்து தணலைச் சொரிந்ததைப் போன்றிருந்தது என்க. தற்குறிப்பேற்ற அணி. காந்தும் மணிக் குப்பைகள் தணல் சொரிந்தன போன்றன என்க. தணிப்பருந் தழல் - அவிக்க முடியாத தணல். (28)

6746. எங்கும் வெள்ளிடைப் படுத்தலி
 னிழுதுடை யினமீன்
சங்க முங்கறி கிழங்கென
 விடையிடைத் தழுவி
அங்கம் வெந்துபே ரளற்றிடை
 யடுக்கிய கிடந்த
பொங்கு நன்னெடும் புனலறப்
 பொரிந்தன போன்ற.

எங்கும் வெள்ளிடைப் படுத்தலின், இழுதுடை இனமீன்
சங்கமும், கறிகிழங்கு என, இடை இடைத் தழுவி,
அங்கம் வெந்துபேர் அளற்றிடை அடுக்கிய கிடந்த;
பொங்கு நல் நெடும் புனல் அறப் பொரிந்தன போன்ற.

பொ :—(இராமன் அம்பு) கடலிடம் எங்கும் நீரின்றி வெற்றிடமாகச் செய்தமையால், (அவ்வெற்றிடத்தில்) நிணத்தையுடைய மீன் இனங்களும் சங்குகளும், கறிகாய்களும் கிழங்குகளும் போல இடையிடையே பொருந்தி உடம்புகள் வேவப்பெற்றுப் பெரிய சேற்றில் அடுக்கினவாய்க் கிடந்தவைகள், பொலிகின்ற நல்ல நீர்ப்பற்று அறுமாறு (நெய்யில்) பொரிந்தனவற்றைப் போன்றன.

கு :—மீன்களும் சங்குகளும் வெந்து சேற்றில் கிடக்கும் தோற்றம், காய்களையும் கிழங்குகளையும் வாணலில் இட்டு நீர்ப் பசையறப் பொரித்தனவற்றைப் போன்றன என்க. மீன்கள் காய் களையும் சங்குகள் கிழங்குகளையும் போன்றன என நிரனிறையாக்குக. மீனும் சங்கமும் எனல் வேண்டும் உம்மை விகாரத்தால் தொக்கது. இழுது - நிணம். அங்கம் - உடம்பு. கிடந்த, வினைப்பெயர். கிடந் தவை பொரித்தன போன்ற என்க. பொரிக்குங்கால் காய் கிழங்கு களில் உள்ள நீர்ப்பசை வற்றும் இயல்பு புலப்படப் 'புனலறப் பொரிந்தன' என்றார். இது தற்குறிப்பேற்ற அணி. (29)

6747. அதிரும் வெங்கணை யொன்றையொன்
றடர்ந்தெரி யுய்ப்ப
வெதிரின் வன்னெடுங் கானென
வெந்தன மீனம்
பொதுவின் மன்னுயிர்க் குலங்களுந்
துணிந்தன பொழிந்த
வுதிர முங்கடற் றிரைகளும்
பொருவன வொருபால்.

அதிரும் வெங்கணை ஒன்றை ஒன்று அடர்ந்து எரி உய்ப்ப,
வெதிரின் நல் நெடுங் கான்என வெந்தன, மீனம்;
பொதுவின் மன்னுயிர்க் குலங்களும் துணிந்தன பொழிந்த
உதிரமும் கடல் திரைகளும் பொருவன, ஒருபால்.

பொ :—முழங்குகின்ற கொடிய அம்புகள் ஒன்றை ஒன்று நெருங் கினவாய் நெருப்பைக் கக்குதலால் வலிய மூங்கிலின் நெடிய காடு போல மீன்கள் வெந்து அழிந்தன; (கடலில் உள்ள) ஏனைய பொது வான உயிர் வகைகளும் (அவ்வம்புகளால்) துணிவுற்றனவாய்ச் சொரிந்த இரத்தமும் கடல் அலைகளும் ஒரு பக்கத்தில் மாறுபடுவன ஆயின.

கு :—இராமன் அம்புகள் ஒன்றை ஒன்று தாக்கி நெருப்பை யுண்டாக்கும் காட்சி ஒரு பக்கம்; உயிரினங்கள் துணிபட்டுப் பொழிந்த குருதியும் கடல் அலைகளும் பொரும் காட்சி மற்றொரு பக்கம் என்றவாறு. அம்புகள் ஒன்றை ஒன்று தாக்குவதால் உண் டான நெருப்பால் மீன்கள் வெந்து அழிந்தமைக்கு மூங்கிற்காடு வேகும் தன்மை உவமை. எஞ்சாது வேதற்குரியது மூங்கிற்காடு ஆதலின் மீனினம் எஞ்சாது வெந்தமைக்கு உவமையாயிற்று. துணி பட்டனவாய்ப் பொழிந்த என முற்றெச்சமாக்கி முடிக்க. கடல்

அலைகளோடு பொரும் அளவிற்கு கடல் உயிர் வகைகளின் குருதி மிக்கிருந்தது என்பது புலப்படுத்தியவாறு. வெதிர் - மூங்கில். (30)

6748. அண்ணல் வெங்கணை யறுத்திடத்
தெறித்தெழுந் தளக்கர்ப்
பண்ணை வெம்புனல் படப்பட
நெருப்பொடும் பற்றி
மண்ணில் வேருறப் பற்றிய
நெடுமர மற்றும்
எண்ணெய் தோய்ந்தென வெரிந்தன
கிரிக்குல மெல்லாம்.

அண்ணல் வெங்கணை அறுத்திட, தெறித்து எழுந்து அளக்கர்ப்
பண்ணை வெம்புனல் படப்பட, நெருப்பொடும் பற்றி,
மண்ணில் வேர் உறப் பற்றிய நெடுமரம், மற்றும்,
எண்ணெய் தோய்ந்தென எரிந்தன, கிரிக்குலம் எல்லாம்.

பொ :—இராமனுடைய கொடிய அம்பு அறுத்திடுதலால் கடலாகிய நீர்நிலையில் உள்ள வெப்பமுள்ள நீர் தெறித்து எழுந்து படப்பட, மண்ணில் வேர் நன்ருக ஊன்றிய நீண்ட மரங்களும் மலையின் கூட்டங்களும் மற்றுமுள்ள எல்லாப் பொருள்களும் எண்ணெய் தோய்ந்தாற்போன்று நெருப்பினுல் பற்றப்பட்டு எரிந்தன.

கு :—இராமன் கணையால் வெப்பமுற்ற கடல்நீர் பட்ட மர முதலியவை, எண்ணெய் தோய்ந்தாற்போன்று எளிதாக நெருப்பால் பற்றப்பெற்று எரிந்தன என்றவாறு. அளக்கர்ப்பண்ணை - கடலாகிய நீர்நிலை. நெடுமரம் கிரிக்குலம் எல்லாம் எண்ணெய் தோய்ந்தென எரிந்தன என இயையும். மண்ணில் வேருறப் பற்றிய என்பது நெடுமரத்திற்கு அடை. நெருப்பொடும் என்புழி ஒடு கருவிப் பொருளில் வந்தது; "ஊசியொடு குயின்ற தூசும் பட்டும்" என்புழிப் போல. நெருப்பை யவிக்கும் தண்ணீரும் இராமன் கணையால் வெப்ப முற்று அந்நெருப்பிற்கு எண்ணெய் போலத் துணை செய்தது என்ற வாறு. வெம்புனல் தெறித்தெழுந்து படப்பட நெடுமரம் கிரிக்குலம் மற்றும் எல்லாம் எண்ணெய் தோய்ந்தென நெருப்பொடும் பற்றி எரிந்தன என இயையும். (31)

6749. தெய்வ நாயகன் தெரிகணை
திசைமுகத் தொருவன்
வைவி தாமெனப் பிழைப்பில
மனத்தினுங் கடுக
வெய்.ப வந்நெருப் பிடையிடை
பொறிந்தெழ வெறிநீர்ப்
பொய்கை தாமரை பூத்தெனப்
பொலிந்தது புணரி.

தெய்வ நாயகன் தெரிகணை, 'திசைமுகத்து ஒருவன் வைவு இது ஆம் என, பிழைப்பு இல மனத்தினும் கடுக, வெய்ய அந்நெருப்பு இடை இடை பொறிந்தெழ வெறிநீர்ப் பொய்கை தாமரை பூத்தெனப் பொலிந்தது புணரி.

பொ :—தேவநாயகனாகிய இராமன் ஆராய்ந்து தொடுத்த அம்பு, பிரமதேவனின் சாபம் இதுவாகும் என்னுமாறு, பிழையாதனவாய் மனத்தினும் விரைந்து செல்வதால், வெப்பமுடைய அந்த நெருப்பு, இடை இடையே பொறியைச் சிதறிக்கொண்டு எழுதலால் கடலானது, நறுமணம் பொருந்திய நீர்நிறைந்த பொய்கை, தாமரை மலர்களைப் பூத்தாற்போலப் பொலிவுற்று விளங்கியது.

கு :—திசைமுகத்தொருவன் - நான்முகனாகிய பிரமன். பிரமனது சாபம் தப்பாது பயன் தரும் தன்மையது ஆதலின் குறி பிழையாத இராமன் கணைக்கு உவமையாயிற்று. "சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம் கரிய செம்மல் அல்லொக்கும் நிறத்தினாண்மேல் விடுதலும்" (பால - தாடகை - 71) எனவும், வைதவைவின் மராமரம் ஏழ்தொளை யெய்த வெய்தவற்கெய்திய மாக்கதை" (தற்சிறப்புப் - 5) எனவும் முன் வந்தமை காணலாம். கடலின் இடையிடையே நெருப்பு எழுவது பொய்கையின் இடையிடையே தாமரை மலர்கள் பூப்பது போலக் காணப்படுகின்றன என்றவாறு. வெறி - மணம். பொய்கை பூத்தென என்றது, இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேல் நின்றது; "ஊருணி நீர்நிறைந்தற்று" (குறள் - 215) என்புழிப் போல. (32)

6750. செப்பின் மேலவர் சீறினு
மதுசிறப் பாதல்
தப்பு மேயது கண்டன
முவரியிற் றணியா

வுப்பு வேலையென் றுலகுறு
பெரும்பழி நீங்கி
யப்பு வேலையாய் நிறைந்தது
குறைந்ததோ வளக்கர்.

செப்பின் மேலவர் சீறினும் அது சிறப்பு ஆதல்
தப்புமே? அது கண்டனம் உவரியில்: 'தணியா
உப்பு வேலை' என்று உலகு உறு பெரும்பழி நீங்கி,
அப்பு வேலையாய் நிறைந்தது; குறைந்ததோ, அளக்கர்?

பொ :—சொல்லுமிடத்து, மேலோர் கோபித்தாலும் அக்கோபம் சிறப்பையே உண்டாக்குதல் தவறுமோ? (தவருது.) அதனை உவர்க் கடலில் கண்கூடாகக் கண்டோம்: (எங்ஙனம் எனில்?) கடல் (இராமனுல் சீறப்பட்டாலும்) குறைந்து விட்டதோ? (இல்லை; அதற்கு மாருக) தணியாத உப்புக் கடல் என்று உலகிற் பொருந்திய பெரிய பழி நீங்கப்பெற்று அப்புக்கடலாய் நிறைந்தது.

கு :—மேலவர் சீறினும் அது சிறப்பாதல் உவரியிற் கண்டனம் என்றது காட்சியணியின்பாற்படும். உவர்ப்புத் தன்மையுடைய காரணம் பற்றிக் கடல் உவரி எனப்பட்டது. கடல் பெரியதாயினும் பருகுதற்குரிய நீரைக்கொண்டு திகழாமையின் உலகம் பழித்தது. "உவர்க்கடலன்ன செல்வருமுளரே கிணற்றூற்றன்ன நீயுமாருளையே" (நன்னூல். 268. மயிலை உரை) என உவர்க்கடல் பழிக்கப்பட்டிருத்தல் காணலாம். இராமன் சீற்றத்தால் கடலிலிருந்த உப்பு நீர் எல்லாம் வற்றி அம்புகளே நிறைந்துள்ளமை கண்டவர்கள் அதனை அப்பு வேலை என்றே கூறுவர் ஆதலின், உப்பு வேலை என்ற பழிநீங்கி அப்பு வேலையாய் நிறைந்தது என்ருர். அப்பு என்பது மென்தொடர் வன்தொடர்க் குற்றியலுகரமாக மாறியது. அம்பு என்பதே பொருள். அப்பு என்ற விகாரச் சொல்லால் கூறி அம்பு, நல்ல நீர் என்ற இரு பொருளும் தோன்றச் செய்த நயம் காண்க. (33)

6751. தாரை யுண்டபே ரண்டங்க
ளடங்கலுந் தானே
வாரி யுண்டருள் செய்தவற்
கிதுவொரு வலியோ

பாரை உண்பது படர்புன
லப்பெரும் பரவை
நீரை யுண்பது நெருப்பெனு
மப்பொரு ணிறுத்தான்.

தாரை உண்ட பேர் அண்டங்கள் அடங்கலும் தானே
வாரி உண்டு அருள் செய்தவற்கு இது ஒரு வலியோ ?—
பாரை உண்பது படர்புனல்; அப்பெரும் பரவை
நீரை உண்பது நெருப்பு எனும் அப்பொருள் நிறுத்தான் !

பொ :—(ஊழியிறுதியில்) நிலத்தை உண்பது பரவியுள்ள கடல் நீர்; அந்தப் பெரிய கடல்நீரை உண்பது நெருப்பு என்று (பழைய நூல்) கூறுகின்ற அந்தப் பொருளை இராமன் தன் செயலால் நிலை பெறச் செய்தான்; ஒன்றன்மேல் ஒன்றாய் ஒழுங்குபட்டுள்ள பெரிய அண்டங்கள் எல்லாவற்றையும் தானொருவனே வாரி உண்ட திருமாலின் அமிசமான அவ்விராமனுக்கு(த் தன் அம்பால் கடல் நீரையெல்லாம் உண்ட) இது ஒரு வலிமையாகுமோ ? (ஆகாது).

கு :—தாரை - ஒழுங்கு. அடங்கலும் - முழுவதும். வாரியுண் டருள் செய்தது திருமால். இராமன் திருமாலின் அமிசமாக அவ தரித்தவன் ஆகலின் ஒற்றுமை நயம் பற்றி ஒருவராகவே கூறினர். வாரியுண்டருள் செய்தவற் கிதுவொரு வலியோ என்பது கைமுதிக நியாயம் என்பர். ஐம்பூதங்களும் ஒடுங்குங் காலத்து நிலம் நீரிலும் நீர் நெருப்பிலும் ஒடுங்கும் என்பது நூல் வழக்கு. இராமனுடைய நெருப்புத்தன்மை வாய்ந்த அம்புகள் கடல் நீரை உண்டமையின் “நீரையுண்பது நெருப்பு எனும் அப்பொருள் நிறுத்தான்” என்றார். நிறுத்துதலாவது செயற்படுத்திக் காட்டுதல். (34)

6752. மங்கலம் பொருந்திய தவத்து மாதவர்
★ கங்குலும் பகலுமக் கடலுள் வைகுவா
ரங்கம்வெந் திலரவ னடிக ளெண்ணலால்
பொங்குவெங் கனலெனும் புனலிற் போயினர்.

மங்கலம் பொருந்திய தவத்து மாதவர்,
கங்குலும் பகலும் அக்கடலுள் வைகுவார்,
அங்கம் வெந்திலர், அவன் அடிகள் எண்ணலால்;
பொங்கு வெங்கனல் எனும் புனலில் போயினர்.

பொ :—நன்மை பொருந்திய தவத்தையுடையராய் இரவும் பகலும் அந்தக் கடலுள் தங்கியிருப்பவராகிய பெருந்தவ முனிவர்கள், அந்தப் பரமனுடைய திருவடிகளை என்றும் எண்ணியுருகும் இயல்பினராதலின் தம் உடம்பு வேவப்பெருமல், மிக்கதாகிய வெப்பத்தையுடைய நெருப்பு என்கின்ற அக்கடல் நீரில் துன்பமின்றி நடந்து சென்றனர்.

கு :—மங்கலம் - நன்மை. தவம் வேண்டிய வேண்டியாங்கு எய்தும் பயத்தது ஆதலின் 'மங்கலம் பொருந்திய தவம்' எனச் சிறப்பித்தார். கடல் நீருள் இருந்து தவஞ்செய்கின்ற முனிவர்கள் இடைவிடாது பரமனடியே நினைபவராகலின், அவ்விராமன் அம்பு அவர்கள் உடம்பைச் சுடவில்லை என்றவாறு. மற்றைய உயிர்கட்குக் கனலாய்த் தோன்றிச் சுட்ட கடல்நீர் அம்முனிவர்க்கு மட்டும் புனலாகவே தோன்றித் தண்மையாக இருந்தமை புலப்பட 'பொங்கு வெங்கனலெனும் புனலிற் போயினர்' என்றார். கடலுள் வைகுவாராகிய மாதவர் கங்குலும் பகலும் அவனடிகள் எண்ணலால் அங்கம் வெந்திலர் என இயைத்துக் கூறலும் ஆம். (35)

6753. தென்றிசை குடதிசை முதல திக்கெலாம்
துன்றிய பெரும்புகைப் படலஞ் சுற்றலால்
கன்றிய நிறத்தன கதிர வன்பரி
நின்றன சென்றில நெறியி னீங்கின.

தென்திசை, குடதிசை, முதல திக்கு எலாம்
துன்றிய பெரும்புகைப் படலம் சுற்றலால்,
கன்றிய நிறத்தன கதிரவன் பரி
நின்றன ; சென்றில ; நெறியின் நீங்கின.

பொ :—தென்திசை, மேற்குத்திசை முதலிய திசைகளில் எல்லாம் நெருங்கிய பெரிய புகைப் படலம் சூழ்ந்துகொண்டதால் சூரியனுடைய குதிரைகள் (பச்சை நிறம் நீங்கி) கன்றிய நிறத்தையுடையனவாய், வழிதவறிப்போய் மேல் செல்ல மாட்டாமல் நின்று விட்டன.

கு :—கடல் வெந்தமையால் எழுந்த புகை கதிரவன் செலவையும் தடுத்துவிட்டது என அப்புகையின் மிகுதி புலப்படுத்தியவாறு. நெறியின் நீங்குதலாவது வழி தவறிப்போதல். படலம் - திரட்சி. கதிரவன் பரி நிறத்தன நீங்கின சென்றில நின்றன என இயையும். நிறத்தன, நீங்கின சென்றில என்ற முற்றெச்சங்கள், நின்றன என்ற வினையோடு முடிந்தன. துன்றுதல் - நெருங்குதல். (36)

சக்கரவாகம்

6754. பிறிந்தவர்க் குறுதுய ருணரும் பெற்றியால்
அறிந்திருந் தறிகில ரனைய ராமெனச்
செறிந்ததம் பெடைகளைத் தேடித் தீக்கொள
மறிந்தன கரிந்தன வாளப் புள்ளெலாம்.

பிறிந்தவர்க்கு உறுதுயர் உணரும் பெற்றியால்,
அறிந்திருந்து அறிகிலர் அனையர் ஆம் எனச்,
செறிந்த தம் பெடைகளைத் தேடித், தீக்கொள
மறிந்தன, கரிந்தன—வாளப்புள் எலாம்.

பொ :—சக்கரவாகப் பறவைகள் எல்லாம், பிரிந்தவர்களுக்கு உண்டாகும் துயரம் இத்தகையது என்பதை உணரும் தம் சிறப்பியல்பால், (கடலில் கனல் பரவியிருப்பதை அறிந்திருந்தும்) குற்றம் என அறிந்திருந்தும் அறியாதவர்போல் அக்குற்றத்தைச் செய்யும் பேதையர்போல அக்கடலில் தங்கியிருந்த தம் பெண் பறவைகளைப் புகுந்து தேடி அங்குப் பரவியுள்ள நெருப்புப் பற்றிக் கொண்டமையால் உடம்பு கீழ் மேலாய் மறியப் பெற்று வீழ்ந்து கரிந்து போயின.

கு :—கடல் நீரில் தம் பெடைகளைப் பிரிந்து சென்ற சக்கரவாகப் பறவைகள், இரைதேடி மீண்டு வருவதற்குள் கடலில் கனல் பரவியிருப்பதை அறிந்திருந்தும், பிரிவாற்ருத தம் காதலுணர்ச்சியால் அக்கனல் பரவிய கடலில் புகுந்து தம் பெடைகளைத்தேட முயன்று உடல் வெந்து சுருண்டு கரிந்து இறந்துபோன துன்ப நிகழ்ச்சியைப் புலப்படுத்தியவாறு. கடலில் கனல் பரவியிருப்பதைக் கண்ணுல் கண்டிருந்தும் சக்கரவாகப் பறவைகள் தம் காதலுணர்ச்சியால் அக் கனலில் புகுந்தமைக்கு உவமையாகக் குற்றம் என்பதை அறிந் திருந்தும் அறியாதவர்போல் செய்யும் பேதையரைக் கூறியவாறு, "ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்பேதையிற் பேதையா ரில்" (குறள் - 834) என்பது இங்கு நினையத்தகும். அறிந் திருந்தும் என்புழி உம்மை விகாரத்தால் தொக்கது. இதனல் தம் பெடைகளுக்குற்ற துயரையே நினைந்து தமக்கு வரும் இறுதியை நினையாது தீயிலும் புகுந்து தேடிய சக்கரவாகப் பறவைகளின் காத லுணர்ச்சியைக் காட்டியவாறு. பிறிந்தவர்க் குறுதுயர் உணரும் பெற் றியே கனல் பரவிய கடல் என்பதையும் நினையாது அவை புகுந்து தேடுதற்குக் காரணமாயது என்க. இதனல் காமத்தால் வரும் தீமையும் உணர்த்தியவாருதல் காணலாம். சக்கரவாகம் பிரிந்த வர்க்குறுதுயர் உணரும் பெற்றியது என்பதை; "சேவற்குருகொடு சக்கரவாகச் செழும் பெடைகாள்! நாவற்குருமலர்ச் சாகையஞ்

சேக்கையுள் நைவதெல்லாம், காவற்குருமணி மோலியக் காரிகை கைகவர்ந்து, நீவற்குருகியன்றே யலதாயின் நிகழ்த்துமினே" (திருத் தணிகைப் புராணம் - களவுப். 347) என்பதால் உணரலாம். வாளப்புள் - சச்கரவாகப் பறவை. "கங்குலும் பகலாமெனப் பொலி வெய்துகரைய மங்கை மார்தட முலேயெனப் பொலிவன வாளம்" (பம்பைப் - 20) என்று முன் கூறியுள்ளதும் நினைக. இதனால் சக்கர வாகம் நீர்வாழ் பறவை என்பதும், இணைபிரியா இயல்பின என்பதும் இரவில் பிரிந்து பகலிற் கூடும் இயல்பின என்பதும் புலனாதல் காண்க. (37)

தேவர்கள்

6755. கமையறு கருங்கடல் கனலி கைபரந்
தமைவன யொத்தபோ தறைய வேண்டுமோ
சுமையுறு பெரும்புகைப் படலஞ் சுற்றலா
லிமையவ ரிமைத்தனர் வியர்ப்பு மெய்தினர்.

கமை அறு கருங்கடல், கனலி கைபரந்து
அமை வனம் ஒத்தபோது, அறைய வேண்டுமோ?
சுமை உறு பெரும்புகைப் படலம் சுற்றலால்
இமையவர் இமைத்தனர் வியர்ப்பும் எய்தினர்.

பொ :—பொறுமையற்று (என்றும் ஆரவாரித்துக் கொண்டிருக் கின்ற) கரிய கடலானது, (இராமன் அம்பால் உளதாகிய) நெருப்புப் பரவப் பெற்று மூங்கிற் காட்டை யொத்து எரிந்தபோது, சொல்ல வேண்டுமோ? சுமையாகத் தக்க பெரிய புகைத்திரள் விண் முழுதும் சூழ்ந்து கொண்டமையால் இமையா நாட்டத்தவராகிய தேவர்களும் கண்ணிமைத்தனர்; புகையின் வெம்மையால் உடம்பு வியர்க்கவும் பெற்றார்கள்.

கு :—கமை - பொறுமை. அலைமோதி ஆரவாரிக்கும் இயல் பினது கடல் ஆதலின் 'கமையறு கருங்கடல்' என்றார். கனலி - நெருப்பு. கைபரத்தல், ஒரு சொல். அமை - மூங்கில். விரைந்து எரிதற்கு உரிய மூங்கிற் காடுபோல எரியாமைக்குரிய கடல் நீர் எரிந் தமை வியப்பு என்பார், அமைவனம் ஒத்தபோது அறைய வேண் டுமோ? என்றார். நீர் எரிதலாகிய நிகழா நிகழ்ச்சி நிகழ்ந்துவிட் டமையால் தேவர்கள் இமைத்ததும் வியர்த்ததும் வியப்பன்று என்ற வாறு. தேவர்கள் கண்ணிமைத்தலும் உடல் வியர்த்தலும் இல்லா தவர் என்பது நூலளவையான் அறிந்தது. புகையால் கண்ணிமைத்து மூடுதலும் அப்புகையின் வெம்மையால் உடல் வியர்த்தலும் மக்க

ளுக்கு இயல்பு ; கடலிற் பற்றிய நெருப்பு மிகுதியால் எழுந்த புகையாலும் வெம்மையாலும் தேவர்கட்கும் அவை நிகழலாயின எனக் கடல் நெருப்பின் மிகுதி புலப்படுத்தியவாறு. இமைத்தற்குரிய இமையிருந்தும் இமையாதிருக்கும் சிறப்புத் தேவர்கட்கு இருத்தலால் இமையவர் எனப்பட்டார். (38)

6756. பூச்செலா தவணடை போல்கி லாமையா
லேச்செலா மெய்திய வெகினம் யாவையும்
தீச்செலா நெறிபிறி தின்மை யாற்றிசை
மீச்செலா புனலவன் புகழின் வீந்தவால்.

பூச் செலாதவள் நடை போல்கிலாமையால்,
ஏச்சு எலாம் எய்திய எகினம் யாவையும் ;
தீச் செலா நெறி பிறிது இன்மையால், திசை
மீச்செலா ; புனலவன் புகழின் வீந்தவால்.

பொ :—மென்மை மிக்க மலர்கள் மேலும் அடிவைத்து நடக்க முடியாத மெல்லியளாகிய சீதையின் நடைக்குத் தாம் ஒப்பாகாமையால் உலகப் பழி முழுமையும் அடைந்துள்ள அன்னப் பறவைகள்,- நெருப்புப் பரவாத வழி வேறு இல்லாமையால் எட்டுத் திசைகளிலும் விண்ணிலும் செல்ல இயலாதனவாய் வெந்து வருணனுடைய புகழ்போல அழிவுற்றன.

கு :—புனலவன் - வருணன். தவங்கிடந்த இராமன் வேண்டுகோட்கு உடன்பட்டு வாராமையால் வருணன் புகழ் அழிந்தது. வெண்மையான கடலன்னங்கள் வீந்தமை வெண்மையான புகழ் வீந்தமை போலத் தோன்றிற்று என்றவாறு. இது தற்குறிப்பேற்றவணி. புகழ் வெண்ணிறமுடையது என்பது கவிமரபு. கடலிடத்து வாழும் அன்னங்கள் பாதுகாக்கப்படாமல் தீந்தமை கடல் தெய்வத்தின் புகழுக்கு இழுக்காதலும் நினைக. திசை மீச்செலா என்பதற்குத் திசைகளிலும் மேலிடத்திலும் செல்லாதனவாய் என உம்மைத் தொகையாகப் பொருள் கூறலே சிறப்புடைத்தாதல் காணலாம். செலா என்பது முற்றெச்சமாய் வீந்த என்ற வினை கொண்டு முடிந்தது. சீதையின் நடைக்கு ஒப்பாகாமையால் இயல்பாகவே இறக்கவேண்டிய அன்னங்கட்கு இக்கடல் நெருப்புத் துணை செய்தது என்ற குறிப்பும் காண்க, ஏச்சு - பழி. ஏச்செலாம் எய்தி வாழ்தலினும் நெருப்பில் வீழ்ந்து இறத்தலே சிறப்பு என்ற எண்ணமுடைய அன்னங்கட்கு இயல்பாகவே நெருப்பில் இறக்கும் வாய்ப்பு நேர்ந்ததே என வியந்தவாறுமாம். "அனிச்சமு மன்னத்தின் தூவியு

மாத ரடிக்கு நெருஞ்சிப் பழம்" (குறள் - 1120) என்பது புலப் படுத்திச் சீதையைப் 'பூச்செலாதவள்' என்றார். அன்னநடை சீதையின் நடைக்குத் தோற்றமை; "ஓதிமமொதுங்கக் கண்ட வுத்தம னுழைய ளாகும் சீதை தன்னடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்" (ஆரணிய - 5) என முன் புலப்படுத்தியுள்ளமையும் நினையலாம். (39)

கடற்பறவைகளும் மேகமும்

6757. பம்புறு நெடுங்கடற் பறவை யாவையு
மும்பரிற் செல்லலுற் றுருகி வீழ்ந்தன
அம்பர மம்பரத் தேக லாற்றல
இம்பரி லுதிர்ந்தன வெரியு மெய்யன.

பம்புறும் நெடுங்கடல் பறவை யாவையும்,
உம்பரின் செல்லல் உற்று உருகி வீழ்ந்தன;
அம்பரம் அம்பரத்து ஏகல் ஆற்றல,
இம்பரில் உதிர்ந்தன எரியும் மெய்யன.

பொ :—ஒலித்தலையுடைய நீண்ட கடலில் வாழ்கின்ற பறவைகள் யாவும் விண்ணில் பறந்து செல்லத் தொடங்கி, அது முடியாமல், உருகி வீழ்ந்து விட்டன; மேகங்கள் ஆகாயத்தில் செல்ல இயலாதனவாய் எரிகின்ற உடம்பையுடையவாய் இவ்வுலகில் உதிர்ந்துவிட்டன.

கு :—விண்ணிலும் கனலின் கொழுந்து பரந்துள்ளமையால் பறவைகள் உருகி வீழ்வனவாயின. பம்பு - ஒலி. அம்பரம் - மேகம், ஆகாயம். அம்பரம் அம்பரத்து என்புழி மடக்கணி காணலாம். இம்பர், இவ்வுலகம்; தரை. மேகங்கள் கடல் நீரைக் குடிக்கக் கடல் மேல் படர்ந்திருந்தமையின் அவையும் விண்ணிற் பறந்து செல்ல வியலாது கடலிற்றோன்றிய கனலால் எரியும் உடம்பொடு தரையில் உதிர்வனவாயின. விண்ணில் இயங்குவதில் பறவைகட்கும் மேகங்கட்கும் ஒற்றுமை யுண்மையின் அவற்றின் வீழ்வை யுடன் கூறினார். (40)

இறவாத பறவைகளின் மயக்கம்

6758. பட்டன படப்படப் படாத புட்குலம்
சுட்டுவந் தெரிக்கனற் படலம் சுற்றலா
விட்டுழி யறிகில விரியல் போவன
முட்டையென் றெடுத்தன வெளுத்த முத்தெலாம்.

பட்டன படப்பட, படாத புட்குலம்,
சுட்டு வந்து எரிக்கனல் படலம் சுற்றலால்,
இட்டுழி அறிகில, இரியல் போவன
முட்டை என்று எடுத்தன, வெளுத்த முத்து எலாம்.

பொ :—சுட்டுக் கொண்டே வந்து அனற் கொழுந்துகளின் திரள் சூழ்ந்து கொண்டமையால் வலிமை குன்றிய பறவைகள் இறந்து படாநிற்க, இறந்துபடாத பறவை இனங்கள் ஓடத் தொடங்கித் தம் முட்டைகளை இட்ட இடம் அறியாது வெளுத்த முத்துகளை யெல்லாம் தம் முட்டைகள் என்று மயங்கி எடுத்தன.

கு :—பட்டன என்றது வலிகுறைந்த பறவைகளை. படுதல் - குறைதல்; இறத்தல். இறவாத பறவைகள் நெருப்பிற்குத் தப்பி ஓடத் தொடங்குகையிலும் தம் முட்டைகளை விடாது எடுத்துச்செல்ல முயலும் அன்புணர்ச்சியை இதனால் புலம்படுத்தியவாறு. தப்பியோடு முயற்சியில் ஈடுபடும்போது முட்டைகட்கும் முத்துகட்கும் வேறுபாடு தெரியாமல் வெண் முத்துகளை முட்டையாக மயங்குதல் இயல்பு; இவ்வாறு மயங்கியதாகக் கூறுவது மயக்க அணி அல்லது திரிபதிசயம் எனப்படும். எரிக்கனற் படலம் சுற்றலால் படாத புட்குலம் இரியல் போவன இட்டுழி அறிகிலவாய் வெளுத்த முத்தெலாம் முட்டையென்று எடுத்தன என இயையும். இரியல் போவனவாய் அறிகிலவாய் எடுத்தன என முற்றெச்சமாக்கி முடிக்க. இரியல் போதல் என்பது வேற்றிடத்திற்கு விரைந்து குடிபோதலை யுணர்த்தும். (41)

நீர்க்குரங்குகளின் செயல்

6759. வள்ளலைப் பாவியே மனிச னென்றுகொண்
டெள்ளலுற் றுறைந்தன மெண்ணி லாமென
வெள்ளிவெண் பற்களைக் கிழித்து விண்ணுறத்
துள்ளலுற் றிரிந்தன குரங்கு சூழ்ந்தில.

'வள்ளலைப் பாவியேம், "மனிசன்" என்று கொண்டு
எள்ளலுற்று உறைந்தனம்; எண் இலாம்' என
வெள்ளி வெண் பற்களைக் கிழித்து விண் உறத்
துள்ளலுற்று இரிந்தன குரங்கு சூழ்ந்தில.

பொ :—"பாவிகளாகிய நாம் வள்ளலாகிய இராமனைச் சாதாரண மனிதன் மனிதன் என்று கருதிக்கொண்டு (அவனால் என்ன நிகழ்ந்துவிடப் போகின்றதென்று) இகழ்ந்து இக்கடலில் தங்கி

விட்டோம்; ஆராய்ச்சியில்லாதேம்" என்று தம் இனத்தை நோக்கிக் கூறிக்கொண்டு நீர்க் குரங்குகள், அக்கடலில் சூழ்ந்து கொண்டிராமல் மிக்க வெண்மையான தம் பற்களை இளித்துக் காட்டிக் கொண்டு விண்ணில் பொருந்தத் துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடின.

கு :—புனல் நிறைந்த கடலை அனல் நிறைந்ததாக ஆக்கும் ஆற்றல் இராமன்பால் உண்டு என்பதை அறியாத நீர்க் குரங்குகள் இம் மனிதனால் என்ன நிகழ்ந்துவிடும் என்று இகழ்ந்து அக்கடலிலேயே தங்கியிருந்தன; பின் இராமன் அம்பு கடறபுனலை கனலாக்கியவுடன் அவன் தெய்வத்தன்மையை யுணர்ந்து தமக்குள் இவ்வாறு கூறிக்கொண்டு கடலை விட்டுத் துள்ளி ஓடின என்க. வெண்மை மிகுதியை யுணர்த்த வெள்ளி வெண் பற்கள் என்றார். பற்களைக் கிழித்தலாவது பல்லை இளித்தல்; இது குரங்குகளின் இயல்பு. குரங்கு சூழ்ந்திலவாய் இரிந்தன என இயையும். தெய்வ ஆற்றலையுடைய இராமனை மனிதன் என்று எண்ணி இகழ்ந்திருந்ததே பாவம் ஆதலின் 'பாவியேம்' எனக் குரங்குகள் தம்மைக் கூறிக்கொண்டன. அவன் தெய்வத்தன்மையை முன்னரே யுணர்ந்திருந்தால் தீயில் வெம்பாது பிழைத்திருக்கலாமே! அங்ஙனம் வருமுன் காக்கும் ஆராய்ச்சியறிவு தமக்கு இல்லையே! என்ற ஏக்கத்தால் 'எண்ணிலாம்' எனத் தம்மை நொந்துகொண்டன. எண் - அறிவு. உறைந்தனம் என்றது, கடல் நீரில் தங்கியிருந்த நிலையை நினைந்து கூறியது. (42)

கடலிலுள்ள அவுணர் நிலை

6760. தாநெடுந் தீமைக ளுடைய தன்மையார்
மாநெடுங் கடலிடை மறைந்து வைகுவார்
தூநெடுங் குருதிவே லவுணர் துஞ்சினார்
மீநெடுங் கிரியென மிதந்து வீங்கினார்.

தாம் நெடுந் தீமைகள் உடைய தன்மையார்,
மாநெடுங் கடலிடை மறைந்து வைகுவார்,
தூநெடுங் குருதிவேல் அவுணர், துஞ்சினார்;
மீநெடுங் கிரி என மிதந்து வீங்கினார்.

பொ :—தசையோடு கூடிய இரத்தம் தோய்ந்த வேலையேந்திய அவுணர்கள் தாம் பெரிய தீமைகள் செய்யும் தன்மையுடையராதலின் பிறரறியாவாறு பெரிய நீண்ட கடலில் மறைந்து தங்கியுள்ளவர்கள், (இராமன் எய்த அம்பின் நெருப்பால்) இறந்தவர்களாய்க் கடல்மேல் கிடக்கும் நீண்ட மலை போல மிதந்து பின் உடம்பு வீங்கினார்கள்.

கு :—கடலிடை மறைந்து வைகுதற்குக் காரணம் கூறுவாராய், 'தாம் நெடுந் தீமைகள் உடைய தன்மையார்' என்றார். தாம் பெருந் தீமைகளையுடையராகவே தமக்குப் பிறர் தீங்கு செய்யவுங்கூடும் என்று அஞ்சிக் கடலில் மறைந்து வைகுவாராயினர் அவுணர். 'நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும்' அஞ்சாப் புறங் கிடக்கும் நீர்ப்பாம்பு-நெஞ்சிற் கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார் கரவிலா நெஞ்சத்தவர்" (வாக்குண்டாம் - 25) என்பது இங்கு நினையத்தகும். மறைந்து வைகுவாராதலின் இராமன் அம்புக்குத் தப்பியோட முடியாமல் நெருப்பில் துஞ்சினார் என்க. தூ - தசை. துஞ்சுதல் - இறத்தல்; மங்கலவழக்கு. அவுணர்கள்தம் உடம்பின் பருமை புலப்பட 'மீநெடுங்கிரியென மிதந்து' என்றார். மீ - மேல்; கடலின்மேல் கிடக்கும் மலைபோல அவுணர்களின் உடம்பு மிதந்தன எனவும் பின் காலம் தாழ்க்கவே அவை வீங்கின எனவும் கொள்க. நீரில் கிடக்கும் பிணம் வீங்குதல் இயல்பு. மீநெடுங்கிரியென என்பது இல்பொருளுவமை. (43)

விமானம் முதலியவற்றின் நிலை

6761. தசும்பிடை விரிந்தன வென்னுந் தாரைய
பசும்பொனின் மானங்க ளுருகிப் பாய்ந்தன
வசும்பற வறந்தன வான வாறெலாம்
விசும்பிடை விளங்கிய மீனும் வெந்தவே.

தசும்பு இடை விரிந்தன என்னும் தாரைய
பசும் பொனின் மானங்கள் உருகிப் பாய்ந்தன :
அசும்பு அற வறந்தன, வான ஆறு எலாம் ;
விசும்பிடை விளங்கிய மீனும் வெந்தவே.

பொ :—பசுமையான பொன்னாலாய விமானங்கள் எல்லாம் (கடலிடைத் தோன்றிய நெருப்பால்) உருகி, நீர்க்குடம் நடுவே விரிந்தன என்னலாம்படி தாரைகளையுடையவாய்த் தரையில் பாய்ந்தன; ஆகாய கங்கை முழுதும் நீர்க்கசிவும் இல்லையாம்படி வறண்டு போயது; விண்ணின்மேல் விளக்கஞ் செய்து கொண்டிருந்த நாண் மீன்களும் வெந்தன.

கு :—இராமன் அம்பால் கடலிடைத் தோன்றிய நெருப்பின் கொழுந்து பட்டு விண்ணிற் செல்லும் பொன் விமானங்கள் உருகித் தாரை தாரையாகத் தரையில் பாய்ந்தன என்க. தாரைகளாய்ப் பாய்ந்தமைக்கு உவமை கூறுவாராய்த் 'தசும்பிடை விரிந்தன என்னுந் தாரைய' என்றார். தசும்பு - நீர்க்குடம். நீர்க்குடம்

உடைந்தால் நீர் தாரைதாரையாய் ஒழுகுவதுபோலப் பொன் விமானம் உருகித் தாரைகளையுடையவாய்ப் பாய்ந்தன என்க. தாரை - நீர்த்தாரை. உருகித் தாரையவாய்ப் பாய்ந்தன என இயையும். தாரைய என்பது அகரவீற்றுக் குறிப்பு வினைமுற்று எச்சப்பொருளில் வந்தது. அசும்பு - நீர்க்கசிவு. (44)

6762. செறிவுறு செம்மைய தீயை யோம்புவ
நெறியுறு செலவின தவத்தி னீண்டன
வுறுசின முறப்பல வுருவு கொண்டன
குறுமுனி யெனக்கடல் குடித்த கூர்ங்கணை.

செறிவுறு செம்மைய, தீயை ஓம்புவ,
நெறியுறு செலவின, தவத்தின் நீண்டன.
உறுசினம் உறப் பல உருவு கொண்டன,
குறு முனி எனக் கடல் குடித்த—கூர்ங்கணை.

பொ :—(இராமனுடைய) கூரிய கணைகள் - குறுகிய வடிவுடைய அகத்திய முனிவரைப் போல, நெருங்கிய செம்மையுடையனவும், தீயை வளர்ப்பனவும், நெறியிற் செல்லும் செலவினையுடையனவும், தவத்தில் நீண்டனவுமாய் மிக்க கோபங்கொள்ளுதலால் பல வடிவங் கொண்டு கடல்நீரைக் குடித்தன.

கு :—அகத்திய முனிவனைப்போல இராமன் கணையும் கடலைக் குடித்தன என்று கூற வந்தவர் செம்மொழிச் சிலேடையால் செறிவுறு செம்மை முதலிய பொதுத்தன்மைகளும் அகத்தியர்க்கும் இராமன் கணைகட்கும் இருப்பதாகக் காட்டியுள்ளார். இது சிலேடையை உறுப்பாகக் கொண்ட உவமையணி. கணைக்கு செம்மையாவது, குருதி தோய்தலால் செந்நிறமுடையதாக இருத்தல். தீயை ஓம்புதலாவது, தீயை யுண்டாக்கி வளர்த்தல், நெறியுறு செலவாவது, நேரே செல்லுதல். தவத்தினீளுதலாவது இராமனால் தாங்கப்பெறும் தவமுடைமையிற் சிறத்தல். அகத்தியர்க்கு, செறிவுறு செம்மையாவது, பொறியடங்கி நிற்கும் நற்குணமுடைமை; தீயை யோம்புதலாவது, ஓமத்தீயை வளர்த்தல்; நெறியுறு செலவாவது, நன்னெறியிற் செல்லும் ஒழுக்கமுடைமை. பலவுருவு கொள்ளுதல் கணைக்கு மட்டும் கொள்க. (45)

6763. மோதலங் கணைகடன் முருக்குந் தீயினால்
பூதலங் காவொடு மெரிந்து பொன்மதில்

வேதலு மிலங்கையு மீளப் போயின
தூதன்வந் தானெனத் துணுக்கங் கொண்டதால்.

மோதல் அம் கனைகடல் முருக்குந் தீயினல்
பூதலம் காவொடும் எரிந்து பொன்மதில்
வேதலும் இலங்கையும் மீளப் போயின
தூதன் வந்தான் எனத் துணுக்கம் கொண்டதால்.

பொ :—அலைமோதுதலையுடைய அழிக்கின்ற கடலில் பற்றி முழக்கத்துடன் எரிகின்ற நெருப்பினல் கடலைச் சார்ந்த பூமி தன்னிடத்துள்ள சோலையுடன் எரிந்து, பொன்னலியன்ற மதிலும் எரியவே, இலங்கைமாநகரம், போயின தூதனகிய அனுமன் மீளவும் வந்தான் என்று திடுக்கிட்டது.

கு :—தீ எரியும்போது முழக்கம் உண்டாதல் இயல்பு ஆதலின் 'முழங்குந் தீ' என்று சிறப்பித்தார். கடலில் பற்றிய தீயினல் கடலைச் சார்ந்துள்ள பூமியும் அப்பூமியிலுள்ள சோலையும் அச்சோலையால் சூழப்பட்ட மதிலும் எரிந்தன என்க. இலங்கையைச் சுற்றியுள்ள காவொடு மதிலும் வேதல் கண்டவுடன் முன் எரியூட்டிய தூதன் மீளவந்தான் போலும் என இலங்கை நகர் துணுக்கங் கொள்ளலாயிற்று என்க. தூதன் என்றது இராம தூதனகிய அனுமனை. இலங்கை இடவாகு பெயராய் அங்கு உள்ள அரக்கரையுணர்த்திற்று. (46)

6764. அருக்கனி லொளிவிடு மாட கக்கிரி
உருக்கென வுருகின வுதிரந் தோய்ந்தன
முருக்கெனச் சிவந்தன முரிய வெந்தன
கரிக்குவை நிகர்த்தன பவளக் காடெலாம்.

அருக்கனில் ஒளிவிடும் ஆடகக் கிரி,
உருக்கு என உருகின, உதிரம் தோய்ந்தன,
முருக்கு எனச் சிவந்தன ; முரிய வெந்தன,
கரிக் குவை நிகர்த்தன, பவளக் காடு எலாம்.

பொ :—சூரியனைப் போல ஒளிவீசுகின்ற திரிகூடமலை என்னும் பொன்மலையானது (கடலிடைப் பரவிய நெருப்பால்) அரக்கு உருக்குப்போல உருகினவாய்க் குருதி தோயப்பெற்று முருக்கம் பூப்போலச் சிவந்தன ; பவளக்காடு முழுதும் முரிய வெந்தனவாய்க் கரிக்குவியலைப் போலத் தோன்றின.

கு :—இராமன் கணையில் தோன்றிய நெருப்பால் பொன்னிற மலை செந்நிறம் பெற்றது; செந்நிறப்பவளக்காடு கருநிறம் பெற்றது என்றவாறு. ஆடகக்கிரி மூன்று சிகரங்களை யுடைமைபற்றி உருகின எனப் பன்மையால் கூறினார். ஆடகக்கிரி என்றது திரிகூடமலையை. உருக்கு என்றது அரக்கு உருக்கினை. எளிதில் உருகும் இயல்பினது ஆதலின் அதனை ஆடகக்கிரி உருகியதற்கு உவமை கூறினார். உருகிய பொன்மலையில் உதிரமும் சேர்ந்தமையால் அவ்வுருகிய மலை செந்நிறமாயிற்று. கணைபட்டு இறந்த உயிர்களின் உடம்பில் பெருகிய குருதி, கடல் நீரில் கலந்து அம்மலையிடைத் தோய்ந்தது என்க. " பொதுவின் மன்னுயிர்க் குலங்களும் துணிந்தன பொழிந்த, உதிரமுங் கடற் றிரைகளும் பொருவன ஒருபால் " (30) என அக் கடலில் குருதி பெருகினமை முன் கூறப்பட்டமை காண்க. உருகின தோய்ந்தன என்பவை முற்றெச்சங்கள். பவழக் கொடிகள் வெந்து முரிந்து கிடந்தமையால் கரிக்குவியலைப் போலத் தோன்றியது என்க. நெருப்பில் வெந்த பவளம் கருநிறம் பெறுதல் இயல்பு. ஆடகக்கிரி முருக்கெனச் சிவத்தற்கு அது உருகி உதிரம் தோய்ந்தமையும், பவளக்காடு கரிக்குவை நிகர்த்தற்கு முரிய வெந்தமையும் காரணங் களாகும். (47)

6765. பேருடைக் கிரியெனப் பெருத்த மீன்களு
மோரிடத் துயிர்தரித் தொதுங்கு கிற்றில
நீரிடைப் புகுமதின் நெருப்பு நன்றெனப்
பாரிடைக் குதித்தன பதைக்கு மெய்யன.

பேருடைக் கிரி எனப் பெருத்த மீன்களும்,
ஓர் இடத்து உயிர் தரித்து ஒதுங்க கிற்றில,
நீரிடைப் புகும் அதின் நெருப்பு நன்று எனப்
பாரிடைக் குதித்தன, பதைக்கும் மெய்யன.

பொ :—பெருமையுடைய மலை என்னலாம்படிப் பெருத்த உடம்பையுடைய மீன்களும் ஓரிடத்தில் உயிர்தாங்கி ஒதுங்கி நிற்க இயலாதனவாய், இக்கடல் நீருள் புகுவதைக் காட்டிலும் நெருப்பில் புகுவதே நன்று என்று (வெறுத்து) பதைபதைக்கும் உடம்பை யுடை யனவாய்த் தரையில் குதித்தன.

கு :—கடல் நீர் நெருப்பால் கொதித்துக் கொண்டிருத்தலால் ' நீரிடைப் புகுமதின் நெருப்பு நன்று ' என மீன்கள் வெறுக்கலாயின. கொதிக்கும் நீரில் பதைத்து உயிர் விடுவதைக் காட்டிலும் தரை யிடைக் கிடந்து உயிர் விடலாம் என்ற எண்ணத்தால் மீன்கள் பாரி

டைக் குதிக்கலாயின என்க. மீன் தரையிடைக் குதித்து உயிர் வாழ இயலாமை அறிந்தே இங்ஙனம் செய்தன என்க. இதனால் கடல் நீரின் வெப்ப மிகுதி புலப்படுத்தியவாறு. (48)

6766. சுருள்கடற் றிரைகளைத் தொலைய வுண்டனல்
பருகிடப் புனலில பகழி பாரிடம்
மருள்கொளப் படர்வன நாகர் வைப்பெலா
மிருள்கெடச் சென்றன விரவி போல்வன.

சுருள்கடல் திரைகளைத் தொலைய உண்டு, அனல்
பருகிடப் புனல்இல பகழி, பார் இடம்
மருள் கொளப் படர்வன, நாகர் வைப்பெலாம்
இருள் கெடச் சென்றன, இரவி போல்வன.

பொ :—இராமன் அம்புகள் - சுருண்டு எறிகின்ற கடல் அலைகளை வற்றும்படி உண்டு பின்னர்த் தம்மிடத்துள்ள நெருப்புப் பருகுதற்கு நீர் இல்லாதனவாய்ப் பூமியிலுள்ளோர் மருட்சி கொள்ளுமாறு செல்லத் தொடங்கிப் பின் நாகர் உலக முழுமையும் இருள் நீங்கு மாறு சூரியனைப் போன்றனவாய்ச் சென்றன.

கு :—கடல்மேல் தொடுத்த அம்பு அக்கடலோடு அமையாது பூமியிடத்தும் பாதலத்தும் சென்றமை இதனால் கூறியவாறு. சுருள் திரை என இயையும். அலைகளை உண்ணுதலாவது நீரையுண்ணு தலேயாம். தொலைய உண்ணுதலாவது நீர் முழுவதும் வற்றுமாறு உண்ணுதல். அனல் என்றது அம்பின்கண் உள்ள நெருப்பை. பாரிடம் இரவியோ என மருள் கொள்ளுமாறு சென்று பின் பாதலத்தில் சூரியனைப் போலவே இருள் நீங்குமாறு ஒளிவீசிக் கொண்டு சென்றன என்க. (49)

6767. கரும்புறக் கடல்களோ டுலகங் காய்ச்சிய
இரும்புறச் செல்வன விழிவ கீழுற
அரும்புறத் தண்டத்தை யுருவி யப்புறம்
பெரும்புறக் கடலையுந் தொடர்ந்து பின்செல்வ.

கரும்புறக் கடல்களோடு உலகம் காய்ச்சிய
இரும்பு உறச் செல்வன, இழிவ, கீழுற
அரும் புறத்து அண்டமும் உருவி, அப்புறம்
பெரும்புறக் கடலையும் தொடர்ந்து பின்செல்வ.

பொ :—(இராமன் கணைகள்) கரியபுறத்தினையுடைய கடல்களோடு இவ்வுலகம், உலைக்களத்தில் காய்ச்சிய இரும்பின் தன்மையைப் பொருந்தச் செல்வனவாய்க் கீழுற இறங்குவனவாகி உடைத்தற்கரிய புறத்தைக் கொண்ட அண்டத்தை ஊடுருவிச் சென்று, அதற்கு அப்புறத்திலுள்ள பெரும்புறக் கடலையும் தொடர்ந்து செல்வனவாயின.

கு :—கருங்கடல் என்பார், கருப்புறக் கடல் என்றார். இராமன் கணைகள் ஊடுருவிச் சென்றமையால் கடல்களும் இவ்வுலகமும் உலைக்களத்துக் காய்ச்சிய இரும்புபோல் வெம்மையுடையனவாயின என்க. பூமியைத் துளைத்துக் கொண்டு பாதலத்திற்குச் சென்றன என்பார், 'கீழுற இழிவ' என்றார், செல்வன, இழிவ என்ற முற்றெச்சங்கள், பின் செல்வ என்ற வினைகொண்டு முடிந்தன. சக்கரவாளகிரியை அடுத்துப் பெரும்புறக் கடல் இருப்பதாகப் புராணங் கூறும். இலங்கைக்கு அருகிலுள்ள கடல்மேற் சீறிவிட்ட இராமன் கணை, பெரும்புறக்கடற்கும் சென்றன என அக்கணைகளின் ஆற்றல் புலப்படுத்தியவாறு. (50)

மணிகளும் பாம்புகளும்

6768. திடறிறந் துகுமணித் திரள்கள் சேணில
முடறிறந் துதிரம்வந் துகுவ போன்றன
கடறிறந் தெங்கணும் வற்ற வக்கடல்
குடறிறந் தனவெனக் கிடந்த கோளரா.

திடல் திறந்து உகும் மணித் திரள்கள், சேண் நிலம்
உடல் திறந்து உதிரம் வந்து உகுவ போன்றன,
கடல் திறந்து எங்கணும் வற்ற அக்கடல்
குடல் திறந்தன எனக் கிடந்த, கோள் அரா.

பொ :—கடலில் உள்ள திட்டுகள் திறக்கப்பெற்றமையால் அவற்றிலிருந்து சிந்துகின்ற இரத்தினங்களின் தோற்றம், பரந்த பூமியின் உடல் திறக்கப்பெற்று இரத்தம் சிந்துவனபோன்று இருந்தன; கடல், அம்பால் பிளவுண்டு எங்கும் நீர் வற்றினமையால், அக்கடலின் குடல் வெளிப்பட்டன என்னும்படி வலிய நீர்ப்பாம்புகள் சுருண்டு கிடந்தன.

கு :—திடல் - திட்டு. இராமன் அம்பு கடலிலுள்ள திட்டுகளையும் ஊடுருவித் திறந்தன என்க. திடரிலிருந்து சிந்தும் செம்மணிகளின் தோற்றம் நிலமகளின் உடம்பிலிருந்து வெளிப்படும் இரத்தம்

போன்றது; கடலடியில் சுருண்டு கிடக்கின்ற நீர்ப்பாம்புகளின் தோற்றம் அக்கடலின் குடல் வெளிப்பட்டது போன்றிருந்தது என்றவாறு. தற்குறிப்பேற்ற அணி. (51)

மணியும் சங்கும்

6769. ஆழியிற் புனலற மணிக ளட்டிய
பேழையிற் பொலிந்தன பரவை பேர்வறப்
பூழையிற் பொருகணை யுருவப் புக்கன
மூழையிற் பொலிந்தன முரலும் வெள்வளை.

ஆழியின் புனல் அற மணிகள் அட்டிய
பேழையின் பொலிந்தன பரவை; பேர்வு அறப்
பூழையின் பொருகணை உருவப் புக்கன,
மூழையின் பொலிந்தன, முரலும் வெள்வளை.

பொ :—கடலில் நீர் வற்றிவிட்டமையால் (மணிகள் ஒளி வீசும்) அக்கடலின் தோற்றம், மணிகள் வைக்கப்பெற்ற பெட்டிபோல விளங்கின; அக்கடலில் ஒலிக்கின்ற வெண்சங்குகள் பெயர முடியாதவாறு தம் துளையில் (இராமனது) போர் செய்யும் கணைகள் ஊடுருவப் பெற்றனவாய், அகப்பை போலத் தோன்றின.

கு :—நீர் வற்றிய கடலில் பலவகை மணிகள் ஒளிவீசுவதால் அக்கடல், மணிகள் வைக்கப்பெற்ற பெட்டிபோலக் காட்சியளித்தது. இராமன் அம்புகள் தைக்கப்பெற்ற சங்குகளின் தோற்றம் காம்போடு கூடிய அகப்பைபோலக் காட்சியளித்தன. அட்டுதல் - சேர்த்து வைத்தல். பேழை - பெட்டி. பூழை - சங்கின் முகப்பிலுள்ள துளை. மூழை - அகப்பை. பூழையில் கணை உருவப்புக்கமையால் சங்கு, காம்போடுகூடிய அகப்பை போன்றது என்க. "இங்கே தலையின் வேல் பாய்ந்த இவை மூழைகளாக் கொள்ளீரே" (கலிங்கத்துப் பரணி - 563) என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். (52)

குன்றும் முத்தும்

6770. நின்றநூ றுயிரம் பகழி நீட்டலால்
குன்றுநூ றுயிரங் கோடி யாயின
சென்றுதேய் வுறுவரோ புலவர் சீறிறு
லொன்றுநூ றுயின வுவரி முத்தெலாம்.

நின்று நூருயிரம் பகழி நீட்டலால்
குன்று நூருயிரம் கோடி ஆயின;
சென்று தேய்வு உறுவரோ புலவர் சீறிஞல்?
ஒன்று நூறு ஆயின, உவரி முத்து எலாம்,

பொ:—இராமன் நிமிர்ந்து நின்று நூருயிரம் அம்புகளைச் செலுத்துதலால் கடலில் இருந்த குன்றுகள் நூறு ஆயிரங்கோடித் துண்டுகளாயின; அதுவேயன்றிக் கடலில் உள்ள முத்துகள் எல்லாம் ஒன்று நூருகச் சிதறுண்டன; அறிவிற் சிறந்தோர் சீறிஞலும் சீறப்பட்டோர் தேய்ந்து போவார்களோ? (போகார்; வளர்ச்சியே யுறுவர் என்பது இதனல் புலனும்)

கு:—கடலில் உள்ள குன்றுகளும் முத்துகளும் இராமன் சீற்றத்தால் பலவாகச் சிதறுண்டன என்றவாறு. புலவர் சீறிஞல் சென்று தேய்வுறுவரோ? என்பது வேற்றுப்பொருள் வைப்பணி. இராமஞல் வெகுளப்பட்ட குன்றும் முத்தும் ஒன்று பலவாக வளர்ந்து சிறப்புற்றன ஆதலின், புலவர் சீறிஞல் சென்று தேய்வுருர் என்பது தெளிவாயிற்று என்க. நல்லவர் கோபமும் நன்மையையே விளைக்கும் என்பதை நிறுவியவாறு. "செப்பின், மேலவர் சீறினுமது சிறப்பாதல் தப்புமே? அது கண்டனம் உவரியில் தணியா, உப்பு வேலையென்றுலகுறு பெரும்பழி நீங்கி, அப்பு வேலையாய் நிறைந்தது குறைந்ததோ வளக்கர்" (33) என்று முன் கூறியது இங்கு ஒப்பு நோக்கத்தகும். (53)

உயிர்களும் நெருப்பும்

6771. சூடுபெற் றையனே தொலேக்கு மன்னுயிர்
வீடுபெற் றனவிடை மிடைந்த வேணுவின்
காடுபற் றியபெருங் கனலிற் கைபரந்
தோடியுற் றதுநெருப் புவரி நீரெலாம்.

சூடு பெற்று ஐயனே தொலேக்கும் மன்னுயிர்
வீடு பெற்றன; இடை மிடைந்த வேணுவின்
காடுபற்றிய பெருங் கனலின் கைபரந்து
ஓடி உற்றது நெருப்பு, உவரி நீர் எலாம்.

பொ:—சினத்தால் சூடு பெற்று இராமனே அம்பு எய்து தொலேக்கும் நிலேபெற்ற உயிர்கள் யாவும் முத்தியடைந்தன; அவ்வம்பில் தோன்றிய நெருப்பு, இடையே நெருங்கியுள்ள மூங்கிற்

காட்டில் பற்றிய பெருங் கனலைப்போல விரைவில் பரவிக் கடல் நீரில் எல்லாம் ஓடிப் பொருந்திற்று.

கு :—திருமாலின் அமிசமான இராமன் கையால் மாண்டமைபற்றி அவ்வுயிர்கள் வீடு பெறுவனவாயின; மன்னுயிர்களை மாய்த்த அம்பில் வெளிப்பட்ட நெருப்புக் கடல் நீர் முழுவதையும் பற்றிக்கொண்டது என இராமனது அம்பின் ஆற்றலைப் புலப்படுத்தியவாறு. ஐயன் என்றது இராமனை. இராமனது ஆணை பெற்றவரைப் பிரித்தலின், 'ஐயனே' என்புழி ஏகாரம் பிரிநிலை. நெருப்பு விரைந்து பரவுதற்கு ஏற்றது மூங்கிற்காடு ஆகலின், "வேணுவின் காடு பற்றிய பெருங் கனலின் என அதனை உவரி நீரெலாம் நெருப்பு ஓடியுற்றதற்கு உவமை கூறினர். "கமையறு கருங்கடல் கனலிகைபரந்து, அமைவன மொத்தபோ தறைய வேண்டுமோ" (38) என்று முன்னும் உவமை கூறியுள்ளமை காணலாம். கை பரத்தல், ஒரு சொல் நீர்மைத்து. வேணு - மூங்கில். நெருப்பு உவரி நீரெலாம் கை பரந்து ஓடியுற்றது என இயையும். (54)

கணை சுற்றுங் கவ்விய கடல்

6772. காலவான் கடுங்கணை சுற்றுங் கவ்வலா
னீலவான் றுகிலினை நீக்கிப் பூநிறக்
கோலவான் தனிநெடுங் கூறை சுற்றினள்
போலமா நிலமகள் பொலிந்து தோன்றினள்.

காலவான் கடுங்கணை சுற்றும் கவ்வலால்
நீல வான் துகிலினை நீக்கிப், பூநிறக்
கோலவான் தனி நெடுங் கூறை சுற்றினள்
போல மாநில மகள் பொலிந்து தோன்றினள்.

பொ :—எமனைப் போன்ற சிறப்புடைய கொடிய அம்புகள் சுற்றிலும் கடலைக் கவ்விக்கொண்டமையால் மாநிலமாகிய பெண் (முன்னிருந்த) நீல நிறத்தையுடைய சிறந்த புடைவையை நீக்கி விட்டுப் பூத்தொழில் செய்யப்பட்ட நிறமிக்க அழகிய சிறந்த ஒப்பற்ற புத்தாடையை யுடுத்துக் கொண்டவள்போலப் பொலிந்து விளங்கினள்.

கு :—நில மகளுக்குக் கடலைப் புடவையாகக் கூறுவது கவிமரபு. நீலக் கடல் இப்பொழுது அம்புகளால் கவ்வப்பட்டு மறைந்திருக்கின்றது. அம்புகளும் குருதி வெள்ளமுமே காணப்படுகின்றன. சுற்றிலும் அம்புகள் கவ்விக்கொண்டுள்ள தோற்றம் பூத்தொழில்

பதியப்பெற்ற புடவையின் கரைபோல விளங்குகின்றது; குருதிப் பெருக்குச் செந்நிறமுடைய புடைவை போலத் தோன்றுகின்றது. நிலமகள், நீலக் கடலாகிய புடைவையை நீக்கிவிட்டுப் பூக்கரை யுடைய செந்நிறப் புடைவையை யுடுத்துக் கொண்டவள் போலப் பொலிவுடன் விளங்குகின்றாள். கூறை-புதிய ஆடை. திருமணத்தில் உடுக்கும் புடவை கூறை எனப்படுவதுண்டு. நிலமகள் திருமணப் பெண் போலக் கூறையுடுத்து முன்னையினும் பொலிவுடன் விளங்கினாள் என்றவாறு. இராமன் சினம் நிலமகட்குப் பொலிவுண்டாக்கி விட்டது என்க. (55)

வடவைக் கனல்

6773. கற்றவர் கற்றவ ருணர்வு காண்கிலாக்
கொற்றவன் படைக்கலங் குடித்த வேலைவிட்
டுற்றுயிர் படைத்தெழுந் தோட லுற்றலால்
மற்றொரு கடல்புக வடவைத் தீயரோ.

கற்றவர் கற்றவர் உணர்வு காண்கிலாக்
கொற்றவன் படைக்கலம் குடித்த வேலை விட்டு,
உற்று உயிர் படைத்து எழுந்து ஓடல் உற்றதால்,
மற்றொரு கடல்புக, வடவைத் தீயரோ.

பொ :—எல்லா நூல்களையும் கற்றவருள்ளும் கற்றோராக விளங்கும் ஞானிகளின் உணர்வும் காணமாட்டாத கடவுளின் அமிசமான இராமனது அம்புகள் குடித்த கடலை விடுத்து வடவைக்கனல், வேறொரு கடலில் புகுதற்காக வலிமை பெற்று எழுந்து ஓடத் தொடங்கியது.

கு :—வடவைத்தீ தானிருந்த கடல் நீரையெல்லாம் இராமன் கணை குடித்து விட்டமையால் வேறொரு கடலில் புகக் கருதி ஓடத் தொடங்கியது எனவே, இராமன் அம்புகள் வடவைக் கனலினும் வலியவை என்பதைப் புலப்படுத்தியவாறு. கொற்றவன் என்றது இராமனை. முதலடி இராமனுடைய தெய்வத்தன்மையை விளக்குகின்றது. கற்றவருள்ளும் கற்றவர் என்றது ஞானிகளை. "யாவதும் கற்றோரறியா வறிவினர் கற்றோர்க்கும் தாம் வரம்பாகிய தலைமையர்" (திருமுருகாற் - 132-134) என்றது காண்க. இறைவன் ஞானிகளாலும் அறியப்படான் என்பதை "உணர்ந்த மா முனிவர் உம்பரோடு ஒழிந்தார் உணர்வுக்கும் தெரிவரும் பொருளே" (திருவாச - கோயிற்றிருப் - 4) என்றும் "உணர்ந்தார்க் குணர்வரி யோன்

றில்லைச் சிற்றம் பலத்தொருத்தன்" (திருக்கோவையார் - 9) என்றும் மணிவாசகர் கூறியுள்ளதால் உணரலாம். கற்றவர் கற்றவர் - கற்றவருள்ளும் கற்றவர். இனிக் காலங்கள்தோறும் கற்றவர்களை யுணர்த்த அடுக்கிக் கூறினர் எனலுமாம். வடவைத்தீ, குடித்த வேலை விட்டு மற்றொரு கடல்புக ஓடலுற்றது என இயையும். வடவைத்தீ என்றது, பெண் குதிரையின் முகம்போன்ற வடிவுடைய தாய்க் கடலினுள் தங்கியிருக்கும் நெருப்பினை. உயிர் என்றது இங்கு வலிமையினை; உயிர்ப்பு எனலும் ஆம். (56)

அனற் கொழுந்து

6774. வாழிய ருலகினை வளைத்து வானுறச்
சூழிரும் பெருஞ்சுடர்ப் பிழம்பு தோன்றலா
லூழியி னுலகெலா முண்ண வோங்கிய
வாழியிற் பொலிந்ததவ் வாழி யன்னநாள்.

வாழியர் உலகினை வளைத்து, வான் உறச்
சூழ் இரும் பெருஞ் சுடர்ப் பிழம்பு தோன்றலால்,
ஊழியின் உலகு எலாம் உண்ண ஓங்கிய
ஆழியின் பொலிந்தது, அவ் ஆழி, அன்னநாள்.

பொ :—உலகத்தை வளைத்துக்கொண்டு விண்ணிலும் பொருந்துமாறு சூழ்கின்ற மிகப் பெரிய அனலின் பிழம்பு தோன்றுதலால், அப்போது அந்தக் கடல் ஊழியிறுதியில் உலகும் முழுவதையும் உண்பதற்காகப் பொங்கியுயரும் தன்மையுள்ள கடலைப்போல விளங்கிற்று.

கு :—வாழியர், அசை. வானுறச் சூழும் சுடர்ப் பிழம்பின் தோற்றம் ஊழியிறுதியில் பொங்கியெழும் கடலின் தோற்றம்போல் காணப்பட்டது என்க. ஊழியிறுதியல்லாத நாளில் - உலகெலாம் உண்ணாத - ஓங்காத - இயல்பான - கடல் என்பார், அவ்வாழி அன்னநாள் என்றார். பெருஞ்சுடர்ப் பிழம்பு தோன்றலால், ஓங்கிய ஆழியிற் பொலிந்தது என்றது, ஏதுத் தற்குறிப்பேற்றவுவமையணி. (57)

6775. ஏனைய ரென்னவே றுலகி னீண்டினு
ரானவர் செய்தன வறைய வேண்டுமோ
மேனிமிர்ந் தெழுகனல் வெதுப்ப மீதுபோய்
வானவர் மலரய னுலகின் வைகினர்.

ஏனையர் என்ன வேறு உலகின் ஈண்டினார்
ஆனவர் செய்தன அறைய வேண்டுமோ?
மேல் நிமிர்ந்து எழுகனல் வெதுப்ப மீதுபோய்
வானவர் மலர் அயன் உலகின் வைகினார்.

பொ :—(கடலிலிருந்து) மேலே நிமிர்ந்து எழுகின்ற அனற் கொழுந்து வெதுப்புதலால் (பொறுக்கமாட்டாமல்) தேவர்கள் (தம்முலகத்திலிருந்து) மேலே சென்று' தாமரை மலரில் வாழ்கின்ற பிரமனது உலகத்தில் தங்கினார்கள்; (என்றால்) தேவர்களினும் வேறுபட்டவர் என்று சொல்லுமாறு விண்ணுலகத்தினும் வேறுபட்ட மண்ணுலகத்தில் வாழ்கின்றவர்களாகிய மனிதர்கள் செய்தனவற்றைச் சொல்ல வேண்டுமோ?

கு :—கடலோடு தொடர்பு கொண்டுள்ள மண்ணுலகத்து வாழாது விண்ணுலகத்தில் வாழ்பவரே அக்கடலில் எழுந்த கனலின் வெம்மைக்கு ஆற்றாது அயனுலகத்திற்குச் சென்றனர் என்றால், அக்கடலோடு தொடர்பு கொண்டுள்ள மண்ணுலகத்து மனிதர்கள் அந்த வெப்பம் தாங்காது செய்த செயல்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமொ என்றது தொடர்நிலைச் செய்யுட் பொருட் பேறணி. ஏனையர் என்றது வானவர் அல்லாதவர் என்றவாறு. வேறுலகு என்றது விண்ணுலகின் வேறாய மண்ணுலகத்தை. விண்ணவர் அடைந்த அல்லலைக் கூறி அதனால் மண்ணுலக மக்கள் அடைந்த அல்லலை உய்த்து உணர வைத்தவாறு. (58)

இராமன் சதுமுகன் கணையைத் தொடுத்தல்

6776. இடுக்கினி யெண்ணுவ தென்னை யீண்டினி
முடுக்குவென் வருணனை யென்ன மூண்டெழு
தடுக்கரும் வெகுளியன் சதுமு கன்படை
தொடுத்தன னமரருந் துணுக்க மெய்தினார்.

'இடுக்கு இனி எண்ணுவது என்னை? ஈண்டு இனி
முடுக்குவென் வருணனை' என்ன, மூண்டு எதிர்
தடுக்கரும் வெகுளியன், சதுமுகன் படை
தொடுத்தனன்; அமரரும் துணுக்கம் எய்தினார்.

பொ :—' இனி, இதனால் உளதாகும் துன்பத்தைப் பற்றி எண்ணுவதாற் பயன் என்னை? வருணனை இங்கு விரைந்து வருமாறு செய்வேன்;' என்று பெருகி யெழுகின்ற தடுப்பதற்கு அரிய

கோபத்தையுடைய இராமன், பிரமன் கணையைத் தொடுத்தான்; தேவர்களும் நடுக்கமுற்றனர்.

கு:—இராமன் முன்விட்ட கணைக்கு அஞ்சி வருணன் வாராது போகவே, மேலும் வெகுண்டு பிரமாத்திரம் தொடுத்தலால் வரும் இடையூற்றையும் எண்ணாது, அப்படையை வில்லில் பூட்டினான் என்றவாறு. அமரரும் என்புழி உம்மை உயர்வு சிறப்பு. மண்ணுலகத்து மக்களேயன்றி விண்ணில் உள்ள தேவரும் நடுக்கமெய்தினர் என்க. இடுக்கு - துன்பம். முடுக்குதல் - விரைவுபடுத்துதல். மூண்டெழு வெகுளி - தடுக்கரும் வெகுளி எனத் தனித்தனி இயையும். சதுமுகன் - நான்முகனாகிய பிரமன். துணுக்கம் - நடுக்கம். பிரமன் கணையால் என்ன நிகழுமோ என்ற அச்சத்தால் அமரரும் நடுங்கலாயினர் என்க. 'இடுக்கினி எண்ணுவதென்னை மீண்டினி' என்றமையால் இராமன் இதுகாறும் அதுபற்றி எண்ணியே சதுமுகன் படையைத் தொடாது காலம் தாழ்த்தான் என்பது புலப்படும். (59)

பிரமன் கணை தொடுத்தமையால் தோன்றிய விளைவுகள்

6777. மழைக்குலங் கதறின வருணன் வாயுலர்ந்
தழைத்தன னுலகமு மடைத்த வாறெலா
மிழைத்தன நெடுந்திசை யாதும் யாரினிப்
பிழைப்பவ ரென்பதோர் பெரும்ப யத்தினால்.

மழைக்குலம் கதறின; வருணன் வாய் உலர்ந்து
அழைத்தனன்; உலகமும் அடைத்த, ஆறு எலாம்;
இழைத்தன நெடுந்திசை, யாதும்; யார் இனிப்
பிழைப்பவர்? என்பது ஓர் பெரும் பயத்தினால்.

பொ:—(இராமன் பிரமாத்திரம் தொடுத்தபின்) 'யார் இனி உய்பவர்கள்?' என்கின்ற ஒரு பெரிய பயத்தினால், மேகக் கூட்டங்கள் கதறின; வருணன் வாய் உலர்ந்து போய்க் கதறலானான்; உலகத்து ஆறுகள் எல்லாம் தூர்ந்து போயின; நெடிய திக்குகள் யாவும் (தேய்ந்து) நுணுகின.

கு:—மழைக்குலம் - மேகக் கூட்டம். அழைத்தல் இங்குப் பேரொலி செய்தலை உணர்த்திற்று. ஆறுகளும் வெள்ளம் பெருகாது தூர்ந்தன. இழைத்தல் - நுணுகுதல்; நெடுந்திசை நுணுகுதலாவது குறுகுதல். அச்சத்தால் திசையின் நெடுமையும் குறுகினது என்க. யாதும் இழைத்தன என்பது ஒருமைப் பன்மை மயக்கமாகக் கொள்க. யாரும் பிழைக்கமாட்டார் என்பதை உறுதிப்படுத்த

'யாரினிப் பிழைப்பவர்' என்று வினு வாய்பாட்டாற் கூறியவாறு. யாரினிப் பிழைப்பவர் என்பதோர் பெரும் பயத்தினுல் மழைக்குலங் கதறின; வருணன் அழைத்தனன்; ஆறெலாம் அடைத்த; திசை யாதும் இழைத்தன என இயையும். பெரும் பயம் வருணனுக்கே யன்றி அவனோடு தொடர்புடைய மேகம், ஆறு, திசை என்பவற் றிற்கும் தோன்றியதென்க. (60)

பெரும் புறக்கடல் முதலியன கொதித்தல்

6778. ★ அண்டமூ லத்துக் கப்பா
லாழியுங் கொதித்த தேழு
தெண்டிரைக் கடலின் செய்கை
செப்பியென் றேவன் சென்னி
பண்டைநா ளிருந்த கங்கை
நங்கையும் பதைத்தாள் பார்ப்பான்
குண்டிகை யிருந்த நீரும்
குளுகுளு கொதித்த தன்றே.

அண்ட மூலத்துக்கு அப்பால்
ஆழியும் கொதித்தது; ஏழு
தெண் திரைக் கடலின் செய்கை
செப்பி என்? தேவன் சென்னிப்
பண்டைநாள் இருந்த கங்கை
நங்கையும் பதைத்தாள்; பார்ப்பான்
குண்டிகை இருந்த நீரும்
குளுகுளு கொதித்தது அன்றே.

பொ :—அண்டத்தின் அடிப்பகுதிக்கும் அப்பால் உள்ள பெரும் புறக் கடலும் கொதித்தது; மகாதேவனுகிய சிவபிரான் தலைமேல் பண்டைநாள் தொட்டுத் தங்கியிருந்த கங்கையாகிய நங்கையும் வெப்பம் தாங்காது பதைபதைத்தாள்; பிரமனுடைய கமண்டலத்தி லிருந்த நீரும் குளுகுளு என்ற ஒலியையுடையதாய்க் கொதித்தது; (என்றால்) தெளிவான அலைகளையுடைய எழுகடலின் செய்கைபற்றிச் சொல்லிப் பயனென்னை?

கு :—இந்த உவர்க்கடலோடு தொடர்பில்லாத பெரும்புறக் கடல் முதலியன கொதித்தன என்றபோது இக்கடலோடு தொடர்புடைய எழுகடல் கொதித்தது உய்த்துணர்ச்சியால் பெறப்படுதலின் 'ஏழு

தெண்டிரைக் கடலின் செய்கை செப்பியென்' என்றார். இது தொடர் நிலைச் செய்யுட் பொருட்பேறணி. வருணன் நீர்த் தெய்வமாதலின் அவன் மேல் விட்ட பிரமாத்திரத்தால் எவ்விடத்துள்ள நீரும் கொதிப் பெய்தியது என்பார், 'பார்ப்பான் குண்டிகையிருந்த நீரும் குளுகுளு கொதித்தது என்றார். குளுகுளு என்பது ஒலிக்குறிப்புணர்த்த வந்தது. சிவன், பிரமன் என்ற பெருந்தேவர்கள் சார்பிலிருந்தும் கங்கையும் குண்டிகைநீரும் இராமன் அம்பிற்குத் தப்ப முடியவில்லை என்பது புலப்படுத்தியவாறு. (61)

வருணன் வாராமை கண்டு அறிஞர் அலக்கணுறுதல்

6779. இரக்கம்வந் தெதிர்ந்த காலத்
துலகெலா மீன்று மீளக்
கரக்குநா யகனைத் தானு
முணர்ந்திவன் சீற்றம் கண்டும்
வரக்கரு தாது தாழ்த்த
வருணனின் மாறு கொண்ட
அரக்கரே நல்ல ரென்று
வறிஞரு மலக்க ணுற்றார்.

இரக்கம் வந்து எதிர்ந்த காலத்து
உலகு எலாம் ஈன்று மீளக்
கரக்கும் நாயகனைத் தானும் உணர்ந்து
இவன் சீற்றம் கண்டும்
வரக் கருதாது தாழ்த்த
வருணனின் மாறு கொண்ட
அரக்கரே நல்லர் என்று
அறிஞரும் அலக்கண் உற்றார்.

பொ :—(தன் திருவுள்ளத்தில் உயிர்களின்மேல்) இரக்கம் தோன் றியபோது (அவ்வுயிர்களின் பொருட்டு) உலக முழுமையும் தன்னி டத்தினின்று தோற்றுவித்து, மீண்டும் தன்னிடத்தே ஒடுக்கிக்கொள் கின்ற பேராற்றலைக் கொண்டுள்ள தலைவனான திருமாலின் அம்ச மான இராமனை (நம்மைப் போலவே) இவன் தானும் உணர்ந் திருந்தும் அவ்விராமனுடைய கோபத்தைக் கண்டும் விரைந்துவரக் கருதாமல் காலம் தாழ்த்த வருணனைக் காட்டிலும் (அவ்விராமனோடு) பகைமை கொண்ட அரக்கரே நல்லவர்கள் என்று தேவர்களும் வருந்தலானார்கள்.

கு :—தான் கொண்ட மானிட வேடத்திற்கேற்பக் கடலிடையே வழிகேட்டு இராமன் தவங்கிடக்கின்றானேயன்றி அவன் உண்மை நிலையில் எல்லாவற்றையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லவனே என்பதை வருணன் தானும் உணர்ந்திருந்தும், அத்தகையோன் இப்பொழுது சீற்றம் கொண்டிருத்தலை நேரே கண்டிருந்தும் அவ் வருணன் வாராது தாழ்ப்பது பெருந்தவறு என்பது தேவர்களின் கருத்து. உலகெலாமீன்று மீளக் கரக்கு நாயகன் என்றது இராமனது தெய்வ ஆற்றலைப் புலப்படுத்தியவாறு. இவன்றானும் உணர்ந்து என்க. நாம் உணர்ந்திருப்பது போலவே இவ்வருணன்தானும் உணர்ந்து எனப் பொருள்படுதலின் உம்மை இறந்தது தழுவிய எச்சப்பொருளது. உணர்ந்தும் என்புழி உம்மை விகாரத்தால் தொக்கது. இராமன் பேராற்றலை உணர்ந்தவன் வாராமை குற்றம்; அதற்கு மேலும் அவன் சீற்றம் கண்டும் வாராமை பெருங்குற்றம் என்பார், தானும் உணர்ந்து சீற்றம் கண்டும் வரக் கருதாது தாழ்த்த வருணனின் அரக்கர் நல்லர் என்றார். அரக்கரில் இராமனோடு நட்புப் பூண்டோரும் உளராகலின் அவரை விலக்க 'மாறுகொண்ட அரக்கரே நல்லர்' எனச் சிறப்பித்தார். அரக்கர் இராமனுடைய உண்மை இயல்பை உணராமையால் தவறு செய்தனர்; இவ்வருணனோ அவ்விராமன் பேராற்றலை உணர்ந்திருந்தும் தவறு செய்கின்றானாகலின் வருணனின் அரக்கரே நல்லர் என அமரர் அலக்கணுறுவாராயினர்.

"வாள்போல் பகைவரை யஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு" (குறள் - 882)

என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். கேள்போல் பகைவனாகிய வருணனைக் காட்டிலும் வாள்போல் பகைவராகிய அரக்கரே நல்லர் என்றவாறு. (62)

வருணனைப் பிற பூதங்கள் வைதல்

6780. உற்றொரு தனியே தானே
தன்கணே யுலக மெல்லாம்
பெற்றவன் முனியப் புக்கா
னடுவினிப் பிழைப்ப தெங்ஙன்
குற்றமொன் றிலாதோர் மேலுங்
கோள்வரக் குறுகு மென்னு
மற்றைய பூத மெல்லாம்
வருணனை வைத மாதோ.

'உற்று ஒரு தனியே, தானே,
தன்கணே, உலகம் எல்லாம்
பெற்றவன் முனியப் புக்கால்
நடு இனிப் பிழைப்பது எங்ஙன்?
குற்றம் ஒன்று இலாதோர்மேலும்
கோள்வரக் குறுகும்' என்று,
மற்றைய பூதம் எல்லாம்,
வருணனை வைத மாதோ.

பொ:—தானே ஒரு தனியனாகப் பொருந்தியிருந்து நினைந்து தன்னிடத்திருந்து உலகம் எல்லாவற்றையும் பெற்றவனான இராமன் கோபிக்கத் தொடங்கினால், அக்கோபத்திற்கிடையே இனி நாம் எல்லாம் பிழைப்பது எவ்வாறு? (நம்முள் ஒருவன் குற்றம் செய்தமையால்) குற்றம் சிறிதும் இல்லாதவர் மேலும் தீங்குவரக் கூடும் என்று நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய மற்றைய பூதங்கள் எல்லாம் நீர்ப் பூதத்தின் தெய்வமாகிய வருணனை ஏசின.

கு:—இராமன் அழைப்பிற்கு வருணன் வாராத குற்றத்தால் இராமனுக்குச் சினம் தோன்றிற்று. அவன் சினத்தால் குற்றம் செய்யாத நிலம் முதலாகிய மற்றைப் பூதங்கட்கும் தீங்கு வரலாம் என்று அஞ்சி அவை வருணனை வைதன என்க. உலகங்களை யெல்லாம் பெற்றவன் வெகுள்வானாயின் அவ்வெகுளிக்குத் தப்பியுய்யும் ஆற்றல் தமக்கு இல்லையெனப் பெரும் பூதங்களும் கலங்கின என்றவாறு. உலகங்களைப் பெற்றவன் ஆற்றலுக்கு முன் அவ்வுலகத்தின் ஒரு பகுதியாக விளங்கும் பூதங்களின் ஆற்றல் யாதும் செய்ய இயலாதாகலின், 'நடுவினிப் பிழைப்பதெங்ஙன்?' என்றன. கோள் – தீங்கு; துன்பம். ஐம்பூதங்களுள் ஒன்றாகிய நீர்ப் பூதத் தெய்வமாகிய வருணன் குற்றம் செய்தமையால் குற்றம் செய்யாத தமக்கும் துன்பம் வரல் கூடும் என்று மற்றைப் பூதங்கள் ஐயுற்றன. வரக் குறுகும் - வரக்கூடும். இராமனுக்குக் கோபத்தையுண்டாக்கியவன் வருணனே ஆதலின் அவனை ஏனைப் பூதங்கள் ஏசலாயின. 'பூதமஞ்சும் வந்தஞ்சலித் துயிர்கொண்டு பொரும' (13) என இராமன் முன்னமே கூறியது நினைக. (63)

வருணன் தொழுதகையொடு தோன்றுதல்

6781. எழுசுடர்ப் படலை யோடு
மிரும்புகை நிரம்பி யெங்கும்
வழிதெரி வறிகி லாத
நோக்கினன் வருண னென்பான்

அழுதழி கண்ண னன்பா
    லுருகிய நெஞ்ச னஞ்சித்
தொழுதெழு கைய னெய்திற்
    றோன்றினன் வழுத்துஞ் சொல்லான்.

எழுசுடர்ப் படலை யோடும்
    இரும்புகை நிரம்பி எங்கும்
வழி தெரிவு அறிகிலாத
    நோக்கினன் வருணன் என்பான்,
அழுது அழி கண்ணன், அன்பால்
    உருகிய நெஞ்சன், அஞ்சித்
தொழுது எழு கையன், நொய்தின்
    தோன்றினன், வழுத்தும் சொல்லான்.

பொ :—மேலும் மேலும் எழுகின்ற அனற் கொழுந்தின் திரளோடு மிக்க புகை எங்கும் நிரம்பியிருந்தமையால் வழியைக் காண இயலாத பார்வையினையுடையவனாய், வருணன் என்பவன், அழுது அழுது எழில் அழிகின்ற கண்களையுடையவனாய், இராமன்பால் தோன்றிய அன்பால் உருகிய நெஞ்சத்தையுடையவனாய், அவன் கோபத்திற்கு அஞ்சித் தொழுது எழுகின்ற கைகளையுடையவனாய்த் துதிக்கும் சொல்லையுடையவனாய் விரைவில் இராமனுக்கு முன் வந்து தோன்றினான்.

கு :—படலை - திரள். நிரம்பி என்பது காரணத்தின் கண் வந்த வினையெச்சம். எங்கும் நிரம்புதலால் என்க. வழி தெரியவேண்டிய விழிகள் எங்கும் புகை நிரம்புதலால் அச்செயலை அறியாவாயின. அழுகையின் மிகுதியால் கண்ணின் அழகு அழிந்தது என்க. அன்பால் நெஞ்சம் உருகியது போலவே கண்களிலும் நீர் வழிந்தது என்க. 'அன்பிற்கு முண்டோ வடைக்குந்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசற் றரும்'' (குறள் - 71) என்பது இங்கு நினையத்தகும். நொய்து - விரைவு. வழுத்துதல் - துதித்தல். வருணன் என்பான், நோக்கினன், கண்ணினன், நெஞ்சன், கையன், சொல்லான், தோன்றினன் என இயையும். நோக்கு - பார்வை. இராமன் கோபத்தைப் பிரமாத்திரத்தின் செயலால் உணர்ந்த வருணன் அன்பும் அச்சமுமுடையவனாய் விரைந்தமை இதனாலுணர்த்தியவாறு. (64)

வருணன் பணிவுரை பகர்ந்து செல்லுதல் 6782-6783

6782. நீயெனை நினைந்த தன்மை
நெடுங்கடன் முடிவி னின்றே
னாயினே னறிந்தி லேனென்
றண்ணலுக் கயிர்ப்பு நீங்கக்
காயெரிப் படலை சூழ்ந்த
கருங்கடற் றரங்கத் தூடே
தீயிடை நடப்பான் போலச்
செறிபுனற் கிறைவன் சென்றான்.

'நீ எனை நினைந்த தன்மை,
நெடுங்கடல் முடிவின் நின்றேன்
ஆயினேன் அறிந்திலேன்' என்று
அண்ணலுக்கு அயிர்ப்பு நீங்க,
காய் எரிப் படலை சூழ்ந்த
கருங்கடல் தரங்கத் தூடே,
தீயிடை நடப்பான் போலச்
செறிபுனற்கு இறைவன் சென்றான்.

பொ :—நெருங்கிய நீர்க்குரிய கடவுளாகிய வருணன், இராமனுக்குண்டான ஐயம் நீங்குமாறு "நீ என்னை நினைத்த செயலை நெடிய கடலின் கோடியிலே நின்றேனாகிய யான் அறிந்திலேன்' என்று கூறிக்கொண்டு, காயும் தன்மையுள்ள நெருப்பின் திரள் பரவியுள்ள கரிய கடலின் அலைகளுடே, நெருப்பில் நடப்பவன்போல அரிதின் நடந்து சென்றான்.

கு :—புனற்கிறைவன் அண்ணலுக்கு அயிர்ப்பு நீங்க, 'கடல் முடிவின் நின்றேனாயினேன், நீ நினைந்த தன்மை அறிந்திலேன் என்று கூறிக் கொண்டு தரங்கத்தூடே சென்றான் என இயையும். எரிப்படலை சூழ்ந்த தரங்கமாதலின் அதனூடே நடக்கும் வருணன் தீயிடை நடப்பான்பேரல அரிதிற் செல்லவேண்டியவனானான். அனலிடை நடப்பதுபோலப் புனலிடை நடந்து சென்றான் என்றவாறு. அண்ணல் என்றது இராமனை. அயிர்ப்பு - ஐயம். படலை - திரள். புனற்கு இறைவன் வருணன், (65)

6783. வந்தன னென்ப மன்னோ
மறிகடற் கிறைவன் வாயில்
சிந்திய மொழியன் றீந்த
சென்னியன் றிகைத்த நெஞ்சன்
வெந்தழிந் துருகு மெய்யன்
விழுப்புகைப் படலம் விம்ம
அந்தரி னலமந் தஞ்சித்
துயருழந் தலக்க ணுற்றான்.

வந்தனன் என்ப மன்னோ
மறிகடற்கு இறைவன்; வாயில்
சிந்திய மொழியன், தீந்த
சென்னியன், திகைத்த நெஞ்சன்,
வெந்து அழிந்து உருகும் மெய்யன்,
விழுப்புகைப் படலம் விம்ம,
அந்தரின் அலமந்து, அஞ்சி,
துயர் உழந்து, அலக்கண் உற்றான்.

பொ :—(அலைகள்) மடங்கி வீசுகின்ற கடலுக்குத் தெய்வமான வருணன், வாயில் நின்றும் வெளிப்படுத்தும் பணிமொழிகளையுடையவனாய், நெருப்பால் தீய்ந்துபோன தலையையுடையவனாய், (யாது செய்வதென்று அறியாது) திகைக்கின்ற நெஞ்சத்தையுடையவனாய், நெருப்பில் வெந்து அழிந்து உருகுகின்ற உடம்பையுடையவனாய், மிக்க புகைத்திரள் எங்கும் நிறைந்திருத்தலால் குருடரைப்போலத் தடுமாறிக்கொண்டு அஞ்சித் துன்புற்று வருந்தினவனாய் வந்தான்.

கு :—என்ப, மன், ஓ, அசைகள். கடற்கிறைவன் மொழியன், சென்னியன், நெஞ்சன், மெய்யன், அலக்கணுற்றான் வந்தனன் என முற்றெச்சங்களாக்கி முடிக்க. விம்முதல் - நிறைதல். அந்தர் - குருடர். அலக்கண் - வருத்தம். வருணன் கண் புகைப்படலத்தில் பார்க்க முடியாமல் வருந்துகின்ற வருத்தத்தை 'அலக்கண்' எனக் குறிப்பிட்டது சாலப் பொருத்தமுடையதாகும். அலக்கணுற்றானாய் வந்தனன் எனச் செய்யுளின் இறுதியும் முதலும் சேர்ந்து பொருள் முடிவுறுதலின் இது விற்பூட்டுப் பொருள்கோள். வாயினின்றும் வெளிப்படும் மொழியைச் சிந்தியமொழி என்றார்; அவனையறியாது தானே வெளிப்படும் மொழியாகலின். (66)

வருணன் இராமனிடம் அடைக்கலம் புகுதல்

6784. நவையறு முலகிற் கெல்லா
நாயக நீயே சீறின்
கவயநின் சரண மல்லாற்
பிறிதொன் று கண்ட துண்டோ
விவையுனக் கரிய வோதா
னெனக்கென வலிவே றுண்டோ
வவயநின் னவய மென்று
வடுத்தடுத் தரற்று கின்றான்.

'நவை அறும் உலகிற்கு எல்லாம்
நாயக! நீயே சீறின்,
கவயம் நின் சரணம் அல்லால்,
பிறிது ஒன்று கண்டது உண்டோ?
இவை உனக்கு அரியவோ தான்;
எனக்கு என வலிவேறு உண்டோ?
அவயம், நின் அவயம்!' என்று,
அடுத்து அடுத்து அரற்றுகின்றான்.

பொ :—குற்றம் அற்ற உலகங்களுக்கெல்லாம் தலைவனே! தலைவனாகிய நீயே கோபித்தால் அக்கோபத்தினின்றும் உய்தற்குரிய பாதுகாப்பு நின் திருவடிகளேயன்றிப் பிறிதொரு பாதுகாவல் யாரேனும் கண்டது உண்டோ? (இல்லையன்றே) கடலை எரியூட்டி உலகை நடுக்குறச் செய்யும் இச் செயல்கள் உனக்குச் செயற்கு அரிய செயலாகுமோ? உன் தகுதிக்கு எளியவன்றோ? நின் வலிமையால் யான் வாழ்வதன்றி எனக்கு என்று வேறு வலி உண்டோ? அடைக்கலம், நின்னடைக்கலம் என்று அடுத்து அடுத்துக் கூறி அரற்றுவானானான்.

கு :—கவயம், கவசம் என்பதன் திரிபு; இலக்கணையால் பாது காவல் என்ற பொருளையுணர்த்தியது. நாயகனே சீறினால் வேறு பாதுகாவல் இல்லை என்பான், 'நீயே சீறின் அவயநின் சரணமல் லால் பிறிதொன்று கண்டதுண்டோ' என்றான். பிறிதொன்று இல்லை என்பான், 'கண்டது உண்டோ' என்றான். இவை என்றது கடலின்மேல் அம்பு தொடுத்து எரித்தல் முதலிய செயல்களை. அவன் பெருந் தகுதிக்கு இச் செயல்கள் மிக எளியவை என்பான், 'இவையுனக் கரியவோதான்' என்றான். தான் பெற்றுள்ள வலியும் அவ்விறைவனால் கொடுக்கப்பட்டதே என்பான், 'எனக்கென வலி

வேறுண்டோ' என்றான். அவயம் என்பது அபயம் என்னும் வட சொல்லின் திரிபு. அவயம் என்ற சொல்லைப் பன்முறை கூறி அரற்றினமை தோன்ற அடுத்தடுத்து அரற்றுகின்றான், என்றார். கனவில் அரற்றுவது போல நனவில் பன்முறை கூறினமை புலப் பட 'அரற்றுகின்றான்' என்றார். (67)

வருணன் இராமனைத் துதித்தல் 6785-6791

6785. ஆழிநீ யனலு நீயே
யல்லவை யெல்லா நீயே
ஊழிநீ யுலகு நீயே
யவற்றுறை யுயிரு நீயே
வாழியா யடியே னின்னை
மறப்பெனோ வயங்கு செந்தீச்
சூழுற வுலைந்து போனேன்
காத்தருள் சுருதி மூர்த்தி.

'ஆழி நீ; அனலும் நீயே;
அல்லவை எல்லாம் நீயே;
ஊழி நீ; உலகும் நீயே;
அவற்று உறை உயிரும் நீயே;
வாழியாய்! அடியேன் நின்னை
மறப்பெனோ? வயங்கு செந்தீச்
சூழுற உலைந்து போனேன்;
காத்தருள்—சுருதி மூர்த்தி.

பொ :—வேதங்களின் வடிவாக இருப்பவனே! இந்தக் கடலும் நீயே; இந்தக் கடலை எரிக்கின்ற நெருப்பும் நீயே; இவையல்லாத எல்லாப் பொருள்களும் நீயே; உலகத்தை அழிக்கின்ற ஊழியிறுதியும் நீயே; உலகும் நீயே; அவ்வுலகங்களில் வாழ்கின்ற உயிர்களும் நீயே; என்றும் வாழ்கின்ற பெருமானே? இத்தகைய நின்னை அடியேன் மறப்பேனோ? (மறக்க மாட்டேன்) விளங்குகின்ற செந்தீயானது என்னைச் சூழ்ந்து கொண்டமையால் அழிந்து போனேன்; அவ்வழிவில் நின்றும் என்னைக் காப்பாற்றியருள்க.

கு :—கடலுக்குத் தலைவன் என்ற செருக்குத் தனக்கு இன்மை தோன்ற வருணன் இராமனை நோக்கி 'ஆழிநீ' என்றான். கடலாகவும் கனலாகவும் உள்ள நீ கடலில் கனலைப் பரப்பினால் அதைத்

தடுக்கும் ஆற்றல் எனக்கு இல்லை என்பான், ஆழிநீ; அனலு நீயே! என்றான். அல்லவை என்றது மற்றைப் பூதங்களையும் பிற பொருள்களையும் ஆம். ஊழி என்றது கடையூழியை. கடையூழியாக நின்று அழிக்கின்றவனும் நீ; அழிபடுகின்ற உலகமும் உயிர்களும் நீ என அவன் முரண்பட்ட இயல்புகளைச் சொல்லிப் புகழ்ந்தவாறு. இத்தகைய பேராற்றலையுடைய இறைவனாகிய நின்னை, நின்னருளால் வாழ்கின்ற நின்னடியனாகிய யான் மறத்தலுமாமோ என்பான், 'அடியேன் நின்னை மறப்பனோ' என்றான். உலைதல் - அழிதல். 'வெந்தழிந் துருகுமெய்யன்' என மேல் கூறினமை நினைக முழுவதும் அழியும் நிலை நெருங்கி விட்டது என்பான், 'உலைந்து போனேன்' என்றான். இந்த அழிவினின்றும் உய்யுமாறு செய்க என்பான், 'காத்தருள்' என்றான். காத்தருள் ஒருசொல் நீர்மையது. வேதங்களின் வடிவாக இருப்பவன் இறைவனே ஆதலின் 'சுருதி மூர்த்தி' என இறைவன் அமிசமான இராமனை விளித்தான். சுருதியால் பேசப்படுகின்ற மூர்த்தி எனலும் ஆம். (68)

6786. காட்டுவா யுலகங் காட்டிக்
காத்தவை கடையிற் செந்தீ
யூட்டுவா யுண்பாய் நீயே
யுனக்குமொண் ணாத துண்டோ
தீட்டுவான் பகழி யொன்றா
லுலகங்க ளெவையுந் தீய
வீட்டுவாய் நினையி னாயேற்
கித்தனை வேண்டு மோதான்.

'காட்டுவாய் உலகம்; காட்டிக் காத்து,
அவை கடையில் செந்தீ
ஊட்டுவாய்; உண்பாய், நீயே;
உனக்கும் ஒண்ணாதது உண்டோ?
தீட்டு வான் பகழி ஒன்றால்
உலகங்கள் எவையும் தீய
வீட்டுவாய் நினையின்; நாயேற்கு
இத்தனை வேண்டுமோ தான்?

பொ :—உலகங்களைப் படைப்பாய்; அவ்வாறு படைத்துப் பின் காத்து அவ்வுலகங்களை ஊழியிறுதியில் செந்தீக்கு ஊட்டுவாய்; இல்லையேல் நீயே அவற்றை உண்பாய்; உனக்கு முடியாத செயலும்

உண்டோ? நினைத்தால் உலகங்கள் யாவற்றையும் தீயுமாறு தீட்டிய சிறந்த அம்பு ஒன்றினால் அழிப்பாய்; நாய் போன்ற எளியனாகிய எனக்கு இத்தனை அம்புகளும் வேண்டுமோ? (வேண்டாவன்றே)

கு:—காட்டுதல் இங்குப் படைத்தலை உணர்த்தியது. அயனாய் நின்று படைப்பவனும் அரியாய் நின்று காப்பவனும் அரனாய் நின்று (செந்தீயூட்டுபவனும்) அழிப்பவனும் நீயே என்றவாறு. கடை என்றது கடையூழியை. திருமால் உலகங்களையெல்லாம் ஊழியிறுதியில் உண்டு வயிற்றில் அடக்கி வைத்திருப்பார் என்பது புராண மரபு. இனி உண்பாய் நீயே என்பதற்கு நெருப்பாய் நின்று உண்பவனும் நீயே என்றும் பொருள் கூறலாம். மேல், 'ஆழிநீ அனலு நீயே' என்று கூறியதும் நினைக. உனக்கு ஒண்ணாததும் உண்டோ என உம்மையைப் பிரித்துக் கூட்டுக. இனிக் கிடந்தாங்கே, உயர்வற வுயர்நலமுடைய உனக்கும் இயலாதது உண்டோ எனப் பொருள் கூறி உயர்வு சிறப்பும்மை யாக்கலும் ஒன்று. உலகங்களையெல்லாம் அழிக்க நினைத்தால் அதனை ஓரம்பால் செய்யவல்லவனாகிய நீ எளியேனை அழிப்பதற்கு இத்தனை அம்புகளையும் விடவேண்டுமோ? வேண்டாவே, நினைத்த அளவில் அழித்திடத்தக்க எளியனாயிற்றே யான் என்பான், 'நாயேற்கு' என்றான். (69)

6787. சண்டவான் கிரண வாளாற்
றயங்கிருட் காடு சாய்க்கும்
மண்டலத் துறையுஞ் சோதி
வள்ளலே மறையின் வாழ்வே
பண்டை நான்முகனே யாதி
சராசரத் துள்ளப் பள்ளப்
புண்ட ரீகத்து வைகும்
புராதன போற்றி போற்றி.

சண்டவான் கிரண வாளால் தயங்கு இருள் காடு சாய்க்கும் மண்டலத்து உறையும் சோதி வள்ளலே! மறையின் வாழ்வே! பண்டை நான்முகனே ஆதி சராசரத்து உள்ளப் பள்ளப் புண்டரீகத்து வைகும் புராதன! போற்றி, போற்றி!

பொ:—வெப்பக் கொடுமையுடைய சிறந்த கிரணமாகிய வாளினால், திகைத்தற்குக் காரணமான இருளாகிய காட்டினை அழிக்கின்ற சூரிய மண்டலத்தில் தங்கியிருக்கின்ற ஒளிப்பிழம்பாகிய

வள்ளலே! வேதத்தின் வாழ்விற்குக் காரணமாக இருப்பவனே! பழமை வாய்ந்த பிரமன் முதலாக உள்ள இயங்குவனவும நிற்பனவு மாகிய உயிர்களின் உள்ளமாகிய தாமரையில் தங்கியிருக்கும் பழை யோனே! காப்பாயாக; காப்பாயாக!

கு :—சண்டம் - கொடுமை; இங்கு வெப்பக் கொடுமையை யுணர்த்தியது. கிரணவாள், இருட்காடு என்பன உருவகம். இருட் காடு சாய்க்கும் மண்டலம் என்றது சூரிய மண்டலத்தை. சூரிய நாராயணன் என்னப்பட்டுச் சூரிய மண்டலத்தில் சோதியாகத் திருமால் விளங்குகின்றான் என்றவாறு. 'சோதிநீ சோதிச் சுடர்ப் பிழம்பும் நீயென்று வேதமுரை செய்தால்' (ஆரணிய - கவந்தன் - 45) என்றது காண்க. வேதநெறி தழைத்தோங்கச் செய்கின்றவன் இராமன் ஆதலின், அவனை 'மறையின் வாழ்வே' என விளித்தான். இனி, மறையில் கூறிய நெறியில் வாழ்கின்றவனே எனப் பொருள் கூறலாம். ஒவ்வோருயிர்தொறும் திருமால் அந்தரியாமியாய் இருக்கும் நிலையைப் புலப்படுத்த நான்முகனே யாதி சராசரத்துள்ளப் பள்ளப் புண்டரீகத்து வைகும் புராதன' என்றான். உள்ளமாகிய புண்டரீகம் என்று உருவகமாக்குக. பள்ளத்துள் விளைவது தாமரை யாதலின், பள்ளப் புண்டரீகம் என இயற்கையடையோடு சேர்த்துக் கூறியவாறு; குருதிக்கோட்டுக் குஞ்சர நகரம் என்றாற்போல. உள்ளப் புண்டரீகம் என்பதே கருத்து. அதற்குப் பள்ளம் வேண்டாமை வெளிப்படை. பிரமர்கள் காலந்தோறும் வேறுபடுதலின் ஆதிப் பிரமனை உணர்த்த வேண்டிப் 'பண்டை நான்முகனே யாதி' என்றார். ஆதிப் பிரமனுக்கும் அந்தரியாமியாக இருந்தமை பற்றிப் 'புராதன' என விளிக்கப்பட்டான் இராமன். போற்றி - காப்பாயாக; வணக்கம் எனலும் ஆம். (70)

6788. கள்ளமா யுலகங் கொள்ளுங்
கருணையாய் மறையிற் கூறு
மெள்ளலா காத மூலத்
தியாதுக்கு முதலா யுள்ள
வள்ளலே காத்தி யென்ற
மாகரி வருத்தந் தீரப்
புள்ளின்மேல் வந்து தோன்றும்
புராதன போற்றி போற்றி.

“கள்ளமாய் உலகங் கொள்ளும்
கருணையாய்! மறையில் கூறும்
எள்ளல் ஆகாத மூலத்து
யாதுக்கும் முதலாய் உள்ள
வள்ளலே! காத்தி” என்ற
மாகரி வருத்தம் தீரப்
புள்ளின்மேல் வந்து தோன்றும்
புராதனா! போற்றி, போற்றி!

பொ:—“ஒருவரும் உணராவண்ணம் உலகத்தினைத் திருவயிற்றில் கொண்டு காக்கின்ற கருணையுடையவனே! வேதத்தில் கூறப்படுகின்ற இகழ முடியாத மூலப்பகுதியில் தோன்றிய எவ்வுயிர்க்கும் மூலமாக உள்ள வள்ளலே! காப்பாற்றுவாயாக” என்று அழைத்த கயேந்திரன் என்னும் பெருமை பொருந்திய யானையின் வருத்தம் தீருமாறு கருடப் பறவைமேல் வந்து காட்சியளித்த பழையோனே! காப்பாயாக; காப்பாயாக!

கு:—கள்ளம் என்றது இங்குப் பிறரறியாத நிலையை. ஊழியிறுதியில் உலக முழுமையையும் திருவயிற்றிற் கொண்டு காக்கின்ற உனக்கு அவ்வுலகில் ஒருயிராகிய என்னைக் காப்பதும் கடமையன்றோ என்ற கருத்துத் தோன்றுமாறு ‘கள்ளமாயுலகங் கொள்ளுங் கருணையாய்!’ என்ற விளி அமைந்திருத்தல் காணலாம். ‘மூலத்துயாதுக்கு முதலாயுள்ள வள்ளலே’ என்றது ‘ஆதி மூலமே’ எனக் கயேந்திரன் விளித்ததைக் குறிப்பிட்டவாறு. மாகரி - பெருமையுடைய யானை. (71)

6789. அன்னைநீ யத்த னீயே
யல்லவை யெல்லா நீயே
பின்னுநீ முன்னு நீயே
பேறுநீ யிழவு நீயே
யென்னைநீ யிகழ்ந்த தென்ற
தெங்ஙனே யீச னாய
வுன்னைநீ யுணராய் நாயே
னெங்ஙன முணர்வே னுன்னை.

‘அன்னை நீ; அத்தன் நீயே;
அல்லவை எல்லாம் நீயே;
பின்னும் நீ; முன்னும் நீயே;
பேறும் நீ; இழவும் நீயே;

என்னை, 'நீ இகழ்ந்தது' என்றது
எங்ஙனே? ஈசன் ஆய
உன்னை நீ உணராய்! நாயேன்
எங்ஙனம் உணர்வேன், உன்னை?'

பொ :—(எனக்குத்) தாயும் நீ, தந்தையும் நீயே; இவ்வுறவு அல்லாத பிற உறவுகளாக இருப்பவனும் நீயே; காரியப் பொருளாகிய யானும் நீயே; எனக்குக் காரணமாக உள்ளவனும் நீயே; யான் பெறும் நற்பேறாக இருப்பவனும் நீ, இழப்பாக இருப்பவனும் நீயே; இவ்வாறு நின்னையே சார்ந்துள்ள என்னை நோக்கி, 'நீ இகழ்ந்தாய்' என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? இறைவனாகிய உன்னை நீயே முழுவதும் உணரமாட்டாய்! என்றால், நாய் போன்ற கடையவனாகிய யான் உன் தன்மை முழுவதையும் எவ்வாறு உணரவல்லவனாவேன்?

கு :—தாய் முதலாக உள்ள உறவினர் செய்யும் உதவிகளை யெல்லாம் செய்பவன் இறைவனே என்பது புலப்படுத்த 'அன்னை நீ...... அல்லவை யெல்லா நீயே' என்றான். 'பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தை நீ, மற்றையா ராவாரும் நீ பேசில்' (பெரிய திருவந்தாதி - 5) என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். அல்லவை எல்லாம் என்றது பிறவுறவுகளை யெல்லாம் உணர்த்தியது. "அப்பனீ அம்மைநீ ஐயனுநீ அன்புடைய மாமனும் மாமியுநீ, ஒப்புடைய மாதரு மொண் பொருளும் நீ ஒரு குலமும் சுற்றமும் ஒருரும் நீ'' (தேவா-6-95-1) என ஆளுடைய அரசு கூறியருளினமை இங்கு நினையத்தகும். பின், முன் என்பன பின் நிகழும் காரியத்தையும் காரியத்துக்கு முன்னுள்ள காரணத்தையும் உணர்த்தின. பின் முன் என்பதற்கு அந்தமும் ஆதியுமாக இருப்பவன் என்று பொருள் கூறுவாருமுளர். நன்மை தீமை யெல்லாம் நீயே என்பான், பேறுநீ இழப்பு நீயே'' என்றான். நன்மை விளைக்கும் பேறுகளும் தீமை தரும் இழப்புகளும் நீயே என்றவாறு. என் தன்மை என்பது ஒன்றின்றி எல்லாவற்றானும் நின்னையே சார்ந்துள்ள என்னை என விரித்துரைக்க. எனக்கு எல்லாச் சார்புமாக உள்ள உன்னை யான் இகழ்ந்திருந்தால் அது என்னை யானே இகழ்ந்ததாகவே முடியும் என்பான், 'என்னை நீ இகழ்ந்த தென்ற தெங்ஙனே?' என்றான். யான் உன்னை இகழ்ந்ததாகக் கூறியது பொருந்தாது என்றவாறு. அவ்வாறு இகழ்ந்திருந்தாலும் நின் தன்மைகளை முற்றும் உணராமையால் நிகழ்ந்ததாகக் கொள்ள வேண்டும். நின் தன்மையை முற்றும் நீயே யுணராதபோது நாயேன் உணராமையும் குற்றமன்று என்பான், 'எங்ஙனமுணர்வே னுன்னை' என்றான். "தம் பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ" (திருவாசகம் - 273) என்று இறைவன் இயல்பு கூறப்படுதலின் 'உன்னை நீ யுணராய்' என்றான், (72)

6790. பாயிருள் சீக்குந் தெய்வப்
பரிதியைப் பழிக்கு மாலை
மாயிருங் கரத்தான் மண்மே
லடியுறை யாக வைத்துத்
தீயன சிறியோர் செய்தாற்
பொறுத்தலே பெரியோர் செய்கை
யாயிர நாமத் தையா
சரணமென் றடியில் வீழ்ந்தான்.

பாய் இருள் சீக்கும் தெய்வப் பரிதியைப் பழிக்கும் மாலை
மா இருங் கரத்தால், மண்மேல் அடியுறையாக வைத்து
" தீயன சிறியோர் செய்தால், பொறுத்தலே பெரியோர் செய்கை
ஆயிர நாமத்து ஐயா! சரணம் " என்று அடியில் வீழ்ந்தான்.

பொ :—பரவிய இருளைப் போக்குகின்ற தெய்வத் தன்மை வாய்ந்த சூரியனையும் தன்னொளியால் கீழ்ப்படுத்துகின்ற ஒரு மணி மாலையை வருணன் தன் பெரிய கைகளால் ஏந்திக்கொண்டு வந்து, தரைமேல் காணிக்கையாக வைத்துச் "சிறியவர்கள் தீயனவற்றைச் செய்தால் அவற்றைப் பொறுத்துக் கொள்ளுதலே பெரியவர் தம் செய்கையாகும்; ஆயிரம் பெயர்களை யுடைய ஐயனே! அடைக்கலம்" என்று கூறிக் கொண்டு இராமன் திருவடியில் வீழ்ந்து வணங்கினன்.

கு :—பாயிருள் - பரவிய இருள். சீத்தல் - நீக்குதல். 'இருள் சீக்கும் சுடரே போல்' (கலி - 100-24) என்பது காண்க. பரிதி - சூரியன். சூரியனைக் காட்டிலும் ஒளிமிக வீசும் மாலை என்பார், 'பரிதியைப் பழிக்கும் மாலை' என்றார். அடியுறை - அடியின்கண் வைப்பதற்குரிய காணிக்கைப் பொருள். வருணனுடைய தெய்வ வடிவின் பெருமை தோன்ற மாயிருங்கரத்தான் என்றார். அவன் பணிவுடைமை தோன்ற 'மண்மேலடி யுறையாக வைத்து அடியில் வீழ்ந்தான்' என்றார். சிறியேனாகிய என் தீமைகளைப் பெரியோனாகிய நீ பொறுத்தருள வேண்டும் என்பான், 'தீயன சிறியோர் செய்தால் பொறுத்தலே பெரியோர் செய்கை'' என உலகியல் கூறி வணங்கினன். "சிறியோர் செய்த சிறு பிழை யெல்லாம் பெரியோ ராயின் பொறுப்பது கடனே" (வெற்றி வேற்கை - 18) என்பதை மூன்றுமடி நினைப்பித்தல் காணலாம். "பொறுப்பரன்றே பெரியோர் சிறு நாய்கடம் பொய்யினையே" (திருவாசகம் - நீத்தல் - 6) என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். இராமனை ஆயிர நாமத்தையா என்றது, அவன் பழைய தெய்வ நிலையை நோக்கி என்க. சரணம் என்பது அடைக்கலம் என்னும் பொருளது. (73)

6791. பருப்பதம் வேவ தென்னப்
படரொளி படரா நின்ற
வுருப்பெறக் காட்டி நின்றி
யானுனக் கபய மென்ன
வருப்புறப் பிறந்த கோப
மாறினு னுரு வாற்றல்
நெருப்புறப் பொங்கும் வெம்பா
னீருற்ற தனைய நீரான்.

பருப்பதம் வேவது என்னப் படர் ஒளி படரா நின்ற உருப்பெறக் காட்டி நின்று, 'யான் உனக்கு அபயம்' என்ன, அருப்பு உறப் பிறந்த கோபம் ஆறினுன், ஆரு ஆற்றல் நெருப்பு உறப் பொங்கும் வெம்பால் நீர் உற்றது அனைய நீரான்.

பொ:—ஒரு மலையே பற்றி யெரிகின்றது என்று கண்டோர் கருதுமாறு பரவுகின்ற ஒளியையுடைய நெருப்புப் படர்கின்ற தன் வடிவத்தை நன்ருகக் காட்டிக்கொண்டு நின்று (வருணன்) 'யான் உனக்கு அடைக்கலம்' என்று வேண்டிக் கொண்டமையால், (இராமன்) ஆருத வலிமையையுடைய நெருப்பு மிகுதியாக எரித்த தனல் பொங்குகின்ற வெப்பமுடைய பாலில் நீர் தெளித்தாற் போன்ற தன்மையனுய்த் திண்மையாகத் தோன்றிய பெருங் கோபம் ஆறினுன்.

கு:—பால் நெருப்புறப் பொங்குவதுபோல இராமன், வருணன் வாராத குற்றத்திற்காகக் கோபம் பொங்கப் பெற்ருன் எனவும், பொங்கும் பாலில் நீர் தெளித்தவுடன் பால் பொங்குதல் அடங்கி விடுதல் போல வருணன் 'யான் உனக்கு அபயம்' என்று கூறிய வுடன் இராமனது கோபம் தணிந்தது எனவும் உவமையை விரித்துக் கொள்க. பருப்பதம் - மலை. இராமன் கோபத்தால் தான்பட்ட பாட்டைக் கண்முன் காட்டி நின்ருன் வருணன் என்பார், "படரொளி படரா நின்ற வுருப்பெறக் காட்டி நின்று" என்ருர். நின்றியான் என்புழி யகரம் வரக் குறளுத் திரிந்து இகரமாயிற்று. ஒளி என்றது நெருப்பினை. அபயம் - அடைக்கலம், அருப்பம் என்பது அருப்பு என அம் கெட்டு வந்தது. அருப்பம் - திண்மை. "அருப்ப மழிப்ப வழிந்த மனக் கோட்டையர்" (பரிபாடல் - 10-57) என்புழியும் அச் சொல் அப்பொருள் பட்டிருத்தலைப் பரிமேலழகர் உரையால் அறிய லாம். அருப்புறப் பிறந்த கோபம் - திண்மையாகத் தோன்றிய கோபம். ஆருக் கோபம் ஆறினுன் என்றவாறு. "அடுங்காலை, நீர் கொண்ட வெப்பம் போற் ருனே தணியுமே சீர்கொண்ட சான்ருேர் சினம்" (நாலடி - 68) என்பது இங்கு ஒப்பு நோக்கத்தகும். (74)

இராமன் அபயம் அளித்து வருணன் வாராமைக்குக் காரணம் வினவுதல்

6792. ஆறினு மஞ்ச லுன்பா
லளித்தன மபய மன்பா
லீறிலா வணக்கஞ் செய்தி
யாமிரந் திடவெய் தாதே
சீறுமா கண்டு வந்த
திறத்தினைத் தெரிவ தாகக்
கூறுநீ யறிஞ வென்றான்
வருணனுந் தொழுது கூறும்.

'ஆறினும்; அஞ்சல்; உன்பால்
அளித்தனம் அபயம்; அன்பால்
ஈறு இலா வணக்கம் செய்து,
யாம் இரந்திட, எய்தாதே,
சீறுமா கண்டு வந்த
திறத்தினைத் தெரிவதாகக்
கூறுநீ, அறிஞ' என்றான்;
வருணனும், தொழுது கூறும்.

பொ :—'அறிஞனே! யாம் கோபம் ஆறினோம்' நீ அஞ்சாதே; உனக்கு அபயம் கொடுத்தோம்; யாம் நின்பால் வைத்த முடிவிலாத அன்பால் வணக்கம் செய்து இரந்து வேண்ட வாராமல், யாம் சீறும் தன்மை கண்டபின் வந்த காரணத்தைத் தெளிவாக யாம் அறியுமாறு நீ கூறு!' என்று, (இராமன்) கூறினன்; வருணனும் அவனை வணங்கி விடை கூறுவானானன்.

கு :—ஈறிலா அன்பால் என மாறுக. வணக்கம் செய்து இரந்திட வாராதவன் சீறுவது கண்டு வந்தது வியப்பை விளைத்தலின் இங்ஙனம் வினவலானன். திறம் - காரணம். தெரிவு – தெளிவு. தன்னை யடைந்தோர் பகைவரேயாயினும் அவர்க்கு அபயம் அளித்துக் காத்தலையே விரதமாகக் கொண்டவன் இராமன் ஆதலின் தேவருள் ஒருவனாய வருணன் தன் குற்றம் உணர்ந்து அபயம் என அடியில் வீழ்ந்தபோது 'உன்பால் அளித்தனம் அபயம்' என விரைந்து கூறினன். அறிஞனாகிய நீ இங்ஙனம் செய்யலாமோ? என்ற கருத்துத் தோன்ற 'அறிஞ' என வருணனை விளித்தவாறு.

வருணன் வாராமைக்குக் காரணம் கூறுதல்

6793. பார்த்தனிற் பொறையின் மிக்க
பத்தினிக் குற்ற பண்பு
வார்த்தையி னறிந்த தல்லாற்
றேவர்பால் வந்தி லேனான்
தீர்த்தநின் னாணை யேழாஞ்
செறிதிரைக் கடலின் மீனின்
போர்த்தொழில் விலக்கப் போனே
னறிந்திலேன் புகுந்தே னென்றான்.

'பார்த்தனில் பொறையின் மிக்க
பத்தினிக்கு உற்ற பண்பு
வார்த்தையின் அறிந்தது அல்லால்,
தேவர்பால் வந்திலேன், நான்;
தீர்த்த! நின் ஆணை, ஏழாம்
செறிதிரைக் கடலில் மீனின்,
போர்த் தொழில் விலக்கப் போனேன்
அறிந்திலேன், புகுந்தேன்' என்றான்.

பொ :—பூமி தேவியைக் காட்டிலும் பொறுமையினால் மிக்க நின் பத்தினியாகிய சீதைக்கு நேர்ந்த நிலையை நின் வார்த்தையால் இப் போது அறிந்துகொண்டதன்றித் தேவரிடம் வந்து செய்தி தெரிந்து கொண்டிலேன் யான்; தூய்மையுடையவனே! நெருங்கிய அலைகளை யுடைய ஏழாவது கடலில் சுரு மீன்களின் போர்ச் செயலை விலக்கு தற்காகப் போயிருந்தேன்; நின்னுடைய கட்டளையை அறிந்திலேனாய் இயல்பாகவே வந்தேன் என்று கூறினான்.

கு :—வருணனுக்குச் சீதையின் நிலைமையும் தெரியாது; இராமன் இரந்து வேண்டியதும் தெரியாது; அவன் சினந்ததும் தெரியாது; மீனின் போரை விலக்கிவிட்டு இயல்பாக வரும்போது இராமன் அம்பால் நேர்ந்த நிலையை யுணர்ந்தான் என்றவாறு. 'பார்தனில்' என்பது எதுகை நோக்கி வல்லெழுத்து மிக்கு 'பார்த்தனில்' என வந்தது. தேவரிடம் சென்றிருந்தால் செய்தி தெரிந்திருக்கும் என்ற கருத்தால் 'தேவர்பால் வந்திலேன் நான்' என்றான். தேவர்பால் செல்லாமையால் சீதைக்கு நேர்ந்த நிலையை யுணரும் வாய்ப்பு இல்லையாயிற்று என்றவாறு. தீர்த்தன் - தூயோன். முதலிலுள்ள கடலின் கரையில் இராமன் இரந்து வேண்டியதை ஏழாவது கடலில் சுருமீனின் போரை விலக்கும் தொழில் ஈடுபட்டிருந்த வருணன்

உணராமை இயல்பேயாதல் காண்க. எனவே இராமன் வருணன் மேல் குற்றம் சார்த்துதற்கு இடமின்மை தெரியலாம். அறிந்திலேன் புகுந்தேன் என்றது, முற்றெச்சம்; அறிந்திலேனாய்ப் புகுந்தேன் என்க. நின்னை அறிந்திலேனாய்ப் புகுந்தேன் என இயையும். (76)

இராமன் தன் அம்பிற்கு இலக்குயாதென வருணன் கூறுதல் 6794-6795

6794. என்றலும் இரங்கி ஐயன்
இத்திறம் நிற்க இந்தப்
பொன்றலில் பகழிக் கப்பா
லிலக்கமென் புகறி யென்ன
வன்றிறல் வருணன் யானும்
உலகமும் வாழ்ந்தோ மென்னக்
குன்றென வுயர்ந்த தோளாய்
கூறுவ லென்று கூறும்.

என்றலும், இரங்கி, ஐயன், 'இத்திறம் நிற்க இந்தப்
பொன்றல் இல் பகழிக்கு அப்பால் இலக்கம் என்? புகறி' என்ன
வன்திறல் வருணன் யானும் உலகமும் வாழ்ந்தோம்' என்னக்
குன்று என உயர்ந்த தோளாய்! கூறுவல் என்று கூறும்.

பொ :—என்று வருணன் கூறுதலும், இராமன் மனமிரங்கி 'இது இருக்கட்டும்; இந்த அழிவில்லாத அம்புக்கு இனி இலக்கு என்னை? சொல்லுவாயாக' என்று கூற, மிக்க திறமையுடைய வருணன் 'யானும் உலகமும் வாழ்ந்தோம்' என்று கருத்துட்கொண்டு, (இராமனை நோக்கி) மலைபோல் உயர்ந்த தோள்களையுடையாய்! நின் அம்புக்கு இலக்கு இன்னது என்று கூறுகின்றேன் என்று தொடங்கிச் சொல்லுவானானான்.

கு :—பொன்றுதல் - அழிதல். வருணனை இலக்காகக் கொண்டு தொடுத்த அம்பு ஆதலின், வருணன்பால் பிழை இன்மை கண்டு, இராமன், வேறு இலக்குக் காட்டுக என்பான், 'அப்பால் இலக்கமென் புகறி' என்று கேட்டான், புகறி - புகலுதி. 'யானும் உலகமும் வாழ்ந் தோம்' என்றது வருணன் மனத்திற்குள் நினைத்தது. தன்மேல் தொடுத்த பிரமாத்திரம் வில்லினின்று விடுபடுமாயின் தன்னை மட்டும் அழித்துச் செல்லாது உலகத்தையும் அழித்திருக்குமாதலின் இப்

போது வருணன் தான் மட்டும் வாழ்ந்ததாகக் கூறுது 'யானும் உலகமும் வாழ்ந்தோம்' எனக் கருதிக் களிப்பானுனன். நீரின்றி யமையாது உலகம் என்ற கருத்தால் அங்ஙனம் கூறினுன் எனலும் ஆம்; போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொள் திண்டோ ளினன் இராமன் ஆதலின், 'குன்றெனவுயர்ந்த தோளாய்' என்று விளித்தான். இராமனது தோளாற்றலால் அம்பும் ஆற்றல் பெறு கின்றது என்பது குறிப்பு. கூறுவல் என்றது, பகழிக்கு இலக்குக் கூறுவேன் என்றவாறு. (77)

வருணன் இலக்கு இது எனல்

6795. மன்னவ மருகாந் தார
மென்பதோர் தீவின் வாழ்வா
ரன்னவர் சத கோடிக்கு
மேலுளா ரவுண ராயோர்
தின்னவே யுலக மெல்லாந்
தீந்தன வெனக்குந் தீயார்
மின்னுமிழ் கணையை வெய்யோர்
மேற்செல விடுதி யென்ருன்.

'மன்னவ! மருகாந்தாரம் என்பது
ஓர் தீவின் வாழ்வார்,
அன்னவர் சத கோடிக்கும்
மேல் உளர், அவுணர் ஆயோர்,
தின்னவே உலகம் எல்லாம்
தீந்தன; எனக்கும் தீயார்;
மின் உமிழ் கணையை வெய்யோர்
மேல் செல விடுதி' என்ருன்.

பொ:—மன்னவனே! மருகாந்தாரம் என்னும் ஒரு தீவில் வாழ் பவராகிய அவுணரான அவர்கள் நூறு கோடிக்கு மேற்பட்டிருக் கின்ருர்கள். அவர்கள் தின்னத் தொடங்கியதனுல் உலகம் முழுமை யும் அழிந்தனவாகும்; (அவ்வளவு கொடியவர்) எனக்கும் தீமை செய்கின்றவராக இருக்கின்றனர்; ஒளி வீசுகின்ற நின் அம்பினை அக்கொடியவர் மேல் செல்லுமாறு விடுவாயாக என்று' (வருணன்) கூறினுன்.

கு:—உலகம் என்றது இடவாகு பெயராய் உலகத்துயிர்களை யுணர்த்தியது. தின்னுதற்குரியது அவ்வுயிர்களின் உடம்புகளேயாம்.

துணிவுபற்றி உலகமெல்லாந் தீர்ந்தன என்றானேனும் உலகமெல்லாம் அழியும் என்பதே கருத்தாகக் கொள்க. இராமன் நல்லோரைக் காக்க வந்த நாயகனாகலின் உலகமெல்லாவற்றையும் துன்புறுத்தும் அவுணரை அழித்தல் தகும் என்ற கருத்தால் மன்னவ என்று விளித்தான். தன்பால் அடைக்கலம் புகுந்தவனுக்குப் பகைவர், தனக்கும் பகைவராகவே கொள்ளும் இயல்பினன் இராமன் ஆதலின் 'எனக்குந் தீயார்' என்பதையும் வருணன் கூறலானான். வெய்யோர்- கொடியோர். (78)

6795 (a) என்றுரைத் தின்னும் சொல்வா
னிறைவகேள் எனக்கு வெய்யோர்
என்றும் மெய்ப் பகைவராகி
யேழுபா தலத்தி னீருய்
நின்றுள தீவின் வாழ்வார்
நிமலநின் கணையா லாவி
கொன்றெமைக் காத்தி யென்றான்
குரிசிலுங் கோறலுற்றான்.

என்ற மிகைப்பாடல் 52-ல்–15-1 ஆகக் காணப்படுகின்றது.

இராமபாணம் அவுணரை அழித்து மீளல்

6796. நேடிநூ றெரிந்து ளோர்தம்
முணர்விற்கு நிமிர நின்றான்
கோடிநூ றாய தீய
வவுணரைக் குலங்க ளோடு
மோடிநூ றென்று விட்டா
னோரிமை யொடுங்கா முன்னம்
பாடிநூ றாக நூறி
மீண்டதப் பகழித் தெய்வம்.

நேடி நூல் தெரிந்துளோர்தம்
உணர்விற்கும், நிமிர நின்றான்,
'கோடி நூறு ஆய தீய
அவுணரைக் குலங்களோடும்
ஓடி நூறு' என்று விட்டான்;
ஓர் இமை ஒடுங்கா முன்னம்
பாடி நூறு ஆக நூறி மீண்டது
அப் பகழித் தெய்வம்.

பொ :—(நல்ல ஞான) நூல்களை ஆராய்ந்து மெய்ப்பொருளைத் தெரிந்த அறிஞர்களின் உணர்விற்கும் எட்டாது அப்பாற்பட்டு நின்றவனாகிய இராமன், (தன் கணையை நோக்கி) 'நீ ஓடிச் சென்று நூறு கோடி என்ற தொகையினராகிய அவுணர்களை அவர்தம் குலங்களோடும் அழிப்பாயாக' என்று சொல்லிவிட்டான்; அந்த அம்பாகிய தெய்வம் ஓர் இமைப்பொழுது முடிவதற்கு முன்னே மருகாந்தாரம் என்ற தீவினை நீறு படுமாறு அழித்துவிட்டுத் திரும்பியது.

கு :—நூல் நேடித் தெரிந்துளேர் என இயையும். நேடுதல் - தேடுதல்; ஆராய்தல். தெரிந்துளோர் என்றது மெய்ப்பொருளைத் தெரிந்த ஞானிகளை. ஞானிகள் மெய்ப்பொருளைச் சிறிது அறிவாரே அன்றி அம் மெய்ப்பொருளாகிய கடவுளின் இயல்புகள் முழுமையையும் அறியார் ஆதலின் "தெரிந்துளோர்தம் உணர்விற்கும் நிமிர நின்றான்" என்றார். நிமிர்தல் இங்கு எட்டாது உயர்ந்து நிற்றலையுணர்த்தியது. "கற்றவர் கற்றவர் உணர்வு காண்கிலாக் கொற்றவன்" (56) என முன்னர்க் கூறியுள்ளதும் நினைக. இராமனுடைய தெய்வ நிலையை நினைந்து இங்ஙனம் கூறினார். மருகாந்தாரத்து அவுணர் தன்பால் ஏதும் தீது புரியாதிருக்கவும் வருணனுடைய சொல்லையே கொண்டு இராமன் தன் அம்பால் அவ்வவுணரை அழிப்பது பொருந்துமோ என ஆய்ந்து வினவுவார்க்கு விடை கூறுவதாக முதலடி அமைந்துள்ளமை காணலாம். தெரிந்துளோர்தம் உணர்விற்கும் நிமிர நின்றவன் செயல் நம்மறிவிற்குப் புலனாகாது ஆதலின், சோதிக்கவேண்டா என்றவாறு. அல்லோரை அழித்து நல்லோரைக் காப்பதையே கடமையாகக் கொண்ட இராமனுக்கு அவ்வவுணரை அழிக்கும் நினைவு முன்னரே இருந்தது, வருணன் வேண்டுகோளும் உடன்சேர்ந்தது என அமைதி காணலாம். பாடி - ஊர். இங்கு மருகாந்தாரம் என்ற தீவை யுணர்த்தியது. இமை என்றது, இமைப்போதினை. (79)

தீங்கினைச் செய்தவரே தீங்குற்றார்

6797. ஆய்வினை யுடைய ராகி
யறம்பிழை யாதார்க் கெல்லா
மேய்வன நலனே யன்றி
யிறுதிவந் தடைவ துண்டோ
மாய்வினை யியற்றி முற்றும்
வருணன்மேல் வந்த சீற்றம்
தீவினை யுடையார் மாட்டே
தீங்கினைச் செய்த தன்றே.

ஆய்வினை உடையர் ஆகி, அறம் பிழையாதார்க்கு எல்லாம்
ஏய்வன நலனே அன்றி, இறுதி வந்து அடைவது உண்டோ?
மாய்வினை இயற்றி, முற்றும் வருணன்மேல் வந்த சீற்றம்,
தீவினை உடையார்மாட்டே தீங்கினைச் செய்தது அன்றே.

பொ:—(நல்லதன் நலனும் தீயதன் தீமையும்) ஆராய்தலை உடையவராய் அறநெறியினின்றும் வழுவாதவர்கட்கு வந்து பொருந்துவன எல்லாம் நன்மையே யாவதன்றிக் கேடு வந்து பொருந்துவது உண்டோ? (இல்லை) அழிவைச் செய்து முடிக்க வல்லதாய், வருணன்மேல் (இராமனுக்கு) வந்த கோபம், (அறம் பிழையாத வருணனுக்குத் தீமை செய்யாமல்) தீவினையுடைய அவுணரிடத்தே தீங்கினை விளைத்தது அன்றோ?

கு:—முன் இரண்டு அடிகளில் கூறிய பொதுப்பொருளைப் பின்னிரண்டடிகளில் கூறிய சிறப்புப் பொருள் நிறுவி நின்றமையின் இது வேற்றுப் பொருள் வைப்பு அணி. ஆய்வினை - ஆராய்ச்சி. அறம்பிழையாதார்க்கு வரும் தீமையும் நன்மையாக முடியும் என்பதற்கு இவ் வருணன் கதை சான்றாகின்றது காணலாம். ஏய்வன எல்லாம் என இயையும். மாய்வு-அழிவு. மாய்வினை இயற்றி முற்றும் சீற்றம்; வருணன்மேல் வந்த சீற்றம் எனத் தனித்தனி இயையும். முற்றும் - முடிக்கும். "நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம்" (குறள்-320) என்றதற்கேற்பத் "தீவினை யுடையார் மாட்டே தீங்கினைச் செய்ததன்றே" என்றார். தனக்கு இறுதிசெய்ய வந்த அம்பினைத் தன் பகைவர்க்கு இறுதி செய்யுமாறு வருணன் செய்த அறம் காத்தது என அவ்வருணனுடைய அறம் பிழையாமையைச் சிறப்பித்தவாறு. இராமன் அம்பு தனக்குத் தீங்கு விளையாமையேயன்றித் தன் பகைவரை யழித்தது வருணனுடைய பெரும்பேறுதல் காணலாம். (80)

தருமமே வலியது

6798. பாபமே யியற்றி னாரைப்
பன்னெடுங் காத மோடித்
தூபமே பெருகும் வண்ண
மெரியெழச் சுட்ட தன்றே
தீபமே யனைய ஞானத்
திருமறை முனிவர் செப்பும்
சாபமே யொத்த தம்பு
தருமமே வலிய தம்மா.

பாபமே இயற்றினாரைப், பல் நெடுங் காதம் ஓடித்,
தூபமே பெருகும் வண்ணம், எரி எழச் சுட்டது அன்றே,
தீபமே அனைய ஞானத் திருமறை முனிவர் செப்பும்
சாபமே ஒத்தது அம்பு—தருமமே வலியது அம்மா!

பொ :—விளக்கைப்போல் விளங்குகின்ற மெய்ஞ்ஞானத்தை யுடைய சிறந்த மறைகளில் வல்ல தவமுனிவர்கள் சினந்து சொல்லு கின்ற சாபத்தை ஒத்ததாகிய இராமன் அம்பு, நெடிய பல காவ தங்கள் கடந்து ஓடிச் சென்று, புகைமிகும் வண்ணம் நெருப்பு எழுமாறு, பாவச் செயல்களையே செய்துவந்தவர்களாகிய அவுணரைச் சுட்டது ஆதலின், எல்லாவற்றினும் தருமமே வலியது (என்பது புலனாயிற்று.)

கு:—இராமன் அம்பு பக்கத்திலிருந்த வருணனைக் கொல்லாது, சேய்மையிலிருந்த அவுணரைச் சுட்டது, தருமத்தின் வலிமையைப் புலப்படுத்தியதாயிற்று என்றவாறு. வருணன் அண்மையிலிருந்தும் இராமன் அம்புக்கு இலக்காகாதது அவன் தருமத்தைக் கைவிடாமை யாலேயாகும் என்க. அவுணர் புண்ணியம் சிறிதும் செய்யாது பாபத்தையே செய்தவர் ஆதலின் அவர்கள் சேய்மையிலிருந்தும் ஓடிச்சென்று சுட்டது. பாபமே என்புழி ஏகாரம் பிரிநிலை. தூபம் - புகை. மருகாந்தாரம் என்ற தீவை அவுணர்களோடு அம்பு சுட்ட போது புகை மிகுந்தது; எரி எழுந்தோங்கிற்று என்க. ஞானம் அஞ்ஞான இருளைப் போக்கி மெய்ப் பொருளைக் காட்டுதலின், புறவிருளை ஓட்டிப் பொருள்களைக் காட்டுகின்ற தீபம் போன்றது என்பார், 'தீபமே யனைய ஞானம்' என்றார். மறை - வேதம். ஞான முனிவர் சினந்து செப்பும் சாபம் தப்பாதவாறு போல இராமன் அம்பும் இலக்குத் தப்பாது எய்தும் இயல்பினது என்றவாறு. தெய்வ நாயகன் றெரிகணை திசைமுகத் தொருவன் வைவிதா மெனப் பிழைப்பில" (32) என இப்படலத்து முன்வந்தமையும் காண்க. அம்மா, வியப்பிடைச் சொல். (81)

இராமன் வருணனை வழி வேண்டுதல்

6799. மொழியுனக் கபய மென்ரு
யாதலான் முனிவு தீர்ந்தேன்
பழியெனக் காக வென்று
பாதகர் பரவை யென்னும்

குழியினைக் கருதிச் செய்த
குமண்டையைக் குறைத்து நீங்க
வழியினைத் தருதி யென்ருன்
வருணனை நோக்கி வள்ளல்.

" மொழி ' உனக்கு அபயம் ' என்ருய் ;
ஆதலால், முனிவு தீர்ந்தேன் ;
பழி எனக்கு ஆக என்று
பாதகர் பரவை என்னும்
குழியினைக் கருதிச் செய்த
குமண்டையைக் குறைத்து நீங்க
வழியினைத் தருதி " என்ருன்
வருணனை நோக்கி வள்ளல்.

பொ:—வள்ளலாகிய இராமன், வருணனை நோக்கி, "சொல்லால் 'உனக்கு அபயம்' என்று வாய் திறந்து சொல்லிவிட்டாய்; ஆதலால், (முன் கொண்ட) கோபம் நீங்கினேன் ; (மனைவியைக் காக்கும் வலியற்றவன் என்ற) பழி எனக்கு உண்டாவதாக என்று, பாவிகளாகிய அரக்கர் (தமக்கு அரணாக உள்ள) கடல் என்கின்ற சிறு குழியினைப் பெரிதாக மதித்துச் செய்த செருக்கிய செயலை இல்லையாம்படி அழித்துவிட்டு வருதற்கு (இக்கடலில்) வழியைத் தருவாயாக" என்று கூறினன்.

கு:—இராமன் பிறர் உள்ளத்தை ஆராயாது, சொல்லைக் கேட்ட அளவிலே அருள்பவன் ஆதலின், 'மொழியுனக் கபயம் என்ருய் ஆதலால் முனிவு தீர்ந்தேன்' என்ருன். மொழியால் என மூன்றனுருபு விரிக்க. தன் தாழ்வு புலப்படச் சொல்லால் அபயம் என்றதே போதும் என்பது கருத்து. அபயம் என்ற சொல்லை வாயாற் சொல்லாது செயலால் புலப்படக் காட்டி நிற்பதும் உண்டு என்பதை, "வந்தடி பணிந்து முந்தை நிற்பிற் றண்டமுந் தணிதிநீ பண்டையிற் பெரிதே" (புறநா-10) என்றதால் அறியலாம். பாதகர் என்றது இராவணன் முதலிய அரக்கரை. மேற்ருெட்டுப் பாதகமே செய்து பழகியவராதலின் அஞ்சாது எனக்குப் பழியுண்டாகச் செய்தார் என்பான் அரக்கரைப் 'பாதகர்' என்ற சொல்லால் குறித்தான். தன் தங்கையாகிய சூர்ப்பணகையின் மூக்கு முதலிய உறுப்புகளை அறுத்துத் தனக்குப் பழியை யுண்டாக்கியவர்கள் என்ற எண்ணத்தால்தான் இராவணன் சீதையைக் கவர்ந்தான் என்ற குறிப்பை இராமன் இங்குப் புலப்படுத்தியுள்ளான். கரன் முதலியோரின் அழிவால் என் ஆற்றலை யுணர்ந்தும் எனக்குப் பழிபடு வினையைச் செய்ய அவ்வரக்கர் துணிந்தது, தமக்குக் கடலாகிய அரணம்

உள்ளது என்ற செருக்குள்ளத்தால் என்பான், ‘பரவையை—கருதி’ என்றான். அக்கடல் எனக்குப் பெரிதன்று என்பான், ‘பரவை என்னும் குழியினை’ என்று இழித்துக் கூறினான். குமண்டை – செருக்கால் செய்யும் செயல். “தக்கனார் கொண்ட வேள்விக் குமண்டையது கெட” (தேவா—5 - 52 - 5) என்புழியும் இச்சொல் இப்பொருளில் ஆளப்பட்டிருத்தல் காணலாம். குமண்டையைக் குறைத்து நீங்குதலாவது அவ்வரக்கரின் செருக்கை அழித்துத் திரும்புதல். நீங்குதல், அவ்விலங்கையினின்றும் திரும்புதல். நீங்க வழியினைத் தருதி என்றமையால் போதற்கு வழி தருதி என்பது தானே பெறப்படுதல் காணலாம். யார்க்கும் தான் தருவதன்றித் தருதி என யாரையும் இரந்து வேண்டாத வள்ளல் சீதையின்பொருட்டுத் தனக்குக் கீழ்ப்பட்டவனாகிய வருணனை நோக்கித் தருதி எனக் கேட்க நேர்ந்ததே என்ற இரக்கம் தோன்ற, ‘தருதி யென்றான் வருணனை நோக்கி வள்ளல்’ என்றார். (82)

வருணன் காலம் நீடிக்கும் எனல்

6800. ஆழமு மகலந் தானு
மளப்பரி தெனக்கு மைய
வேழென வடுக்கி நின்ற
வுலகுக்கு மெல்லை யில்லை
வாழியாய் வற்றி நீங்கில்
வரம்பறு கால மெல்லாம்
தாழுநின் சேனை யுள்ளந்
தளர்வுறுந் தவத்தின் மிக்கோய்.

ஆழமும் அகலம் தானும்
அளப்பு அரிது எனக்கும், ஐய!
ஏழ் என அடுக்கி நின்ற
உலகுக்கும் எல்லை இல்லை;
வாழியாய்! வற்றி நீங்கில்,
வரம்பு அறுகாலம் எல்லாம்
தாழும்; நின் சேனை உள்ளம்
தளர்வுறும்—தவத்தின் மிக்கோய்.

பொ:—ஐயனே! என்றும் வாழ்கின்றவனே! தவத்திற் சிறந்தோனே! ஏழு தீவுகளாக அடுக்கியுள்ள உலகத்திற்கும் எல்லை இல்லாமல் போய்விடும் ஆதலாலும், இக்கடலின் ஆழமும் அகலமும்

(இக் கடற்றெய்வமாகிய) எனக்கும் அளந்தறிதற்கு அரியன ஆதலா லும், (இக் கடல்நீர்) வற்றிய பின் செல்வதாயின் அளவற்ற காலம் செல்லும்; அக்காலக் கழிவால் நின்னுடைய சேனையின் மனமும் தளர்ச்சியுறும்.

கு :—உலகத்திற்குக் கடலே எல்லையாக அமைந்துள்ள நிலைமை இல்லையாய்விடும் என்பான், 'உலகுக்கும் எல்லையில்லை' என்றான். கடல் நீர் வற்றியபின் செல்வதாயின், உலகுக்கு எல்லை இல்லையாய் விடும்; வற்றுதற்குக் காலமும் நீடிக்கும் ஆதலால் அது வேண்டா என்றவாறு. எனக்கும் என்ற உம்மை உயர்வு சிறப்பு; கடல் தெய்வமாகிய தனக்கும் அளப்பரிது என்றவாறு. இராமன் வருணனை வழி வேண்டியது நீரை வற்றச் செய்து வழிதரவேண்டும் என்ற கருத்தால் ஆதலின் வருணன் இவ்வாறு கூறினான். கடல் நீரை வற்றச்செய்து வழிதரல் இயலாது என்பதைக் குறிப்பால் தெரிவித்த வாறு. காலம் தாழ்த்தினும் குற்றமில்லை என இராமன் கருதலா காது என்ற கருத்தால், 'நின் சேனை யுள்ளம் தளர்வுறும்' என்று கூறினான். சேனையின் உள்ளம் தளர்ந்தால் அரக்கரை அழிக்கும் குறிக்கோள் நிறைவேறாது ஆதலின் கடல் கடந்தும் பயன் இல்லை என்பது குறிப்பு. (83)

சேது கட்டிச் செல்லுக எனல்

6801. கல்லென வலித்து நிற்பிற்
கணக்கிலா வுயிர்க ளெல்லா
மொல்லையி னுலந்து வீயு
மிட்டதொன் றொழுகா வண்ண
மெல்லையில் கால மெல்லா
மேந்துவெ னெளிதி னெந்தாய்
செல்லுதி சேது வென்றான்
றியற்றியென் சிரத்தி னென்றான்.

'கல் என வலித்து நிற்பின்,
கணக்கு இலா உயிர்கள் எல்லாம்
ஒல்லையின் உலந்து வீயும்;
இட்டது ஒன்று ஒழுகாவண்ணம்

எல்லையில் காலம் எல்லாம்
ஏந்துவென், எளிதின்; எந்தாய்!
செல்லுதி, "சேது" என்று ஒன்று
இயற்றி, என்சிரத்தின் என்றான்.'

பொ :—"எந்தையே! (வற்றுமல்) கல்லைப்போல நீர் இறுகி நிற்கப் பெறுவேனாயின் என்னிடத்து வாழ்கின்ற அளவிலாத உயிர்கள் யாவும் விரைவில் மாண்டு ஒழியும்; (ஆதலால், என்மீது) இட்ட கல் முதலியவற்றில் ஒன்றும் அழிந்து விடாதபடி அளவிலாத காலம் முழுமையும் அவற்றைத் தாங்கி நிற்பேன்; என் தலைமேல் சேது என்ற ஓர் அணையைக் கட்டி அதன்மேல் எளிதாகச் செல்லுவாயாக" என்று கூறினான் வருணன்.

கு :—கடல் நீர் வற்றச் செய்து செல்வதால் வரும் இடையூறுகளை மேற்கூறிய வருணன், இங்குக் கடல்நீர் இறுகப்பெற்றுக் கல்லைப்போல ஆனபின் செல்லலாகாதோ என்பார்க்கு அங்ஙனம் செல்லுதலும் பொருந்தாமை விளக்கி அணையைக் கட்டிச் செல்லுமாறு கூறினான். கடலில் உள்ள மீன் முதலிய உயிர்கள் நீர் இறுகுவதால் இறந்துபடும் ஆதலின், அங்ஙனம் செய்தல் அறமன்று என்றவாறு. அணை கட்டுவதற்கு இடுகின்ற கல் முதலியவற்றை ஆழ்ந்து வீணாகாவண்ணம் ஏந்தி நிற்கின்ற உதவியைச் செய்கின்றேன் என வருணன் உடன்பட்டுக் கூறியவாறு. என் சிரத்தின் சேது என்று ஒன்று இயற்றி எளிதின் செல்லுதி என்றான் என இயையும். ஒழுகுதல் – கீழ் வீழ்ந்து ஆழ்தல். (84)

சேது கட்டுமாறு சேனைக்குப் பணித்தல்

6802. நன்றிது புரிது மன்றே
நளிகடற் பெருமை நம்மா
லின்றிது தீரு மென்னி
னெளிவரும் பூத மெல்லாம்
குன்றுகொண் டடுக்கிச் சேது
குயிற்றுதி ரென்று கூறி
சென்றன னிருக்கை நோக்கி
வருணனு மருளிற் சென்றான்.

'நன்று, இது புரிதும் அன்றே;
நளிகடல் பெருமை நம்மால்
இன்று இது தீரும் என்னின்,
எளிவரும் பூதம் எல்லாம்;
குன்று கொண்டு அடுக்கி,
சேது குயிற்றுதிர்' என்று கூறிச்
சென்றனன் இருக்கை நோக்கி;
வருணனும் அருளிற் சென்ருன்.

பொ :—(வருணன் கூறும்) இது நல்லது; இதையே செய்வோம்; பெரிய கடலின் ஆழமுடைமையாகிய பெருமை நம்மால் நீங்குமாயின் ஏனை நான்கு பூதங்களும் (இவ்வாறே பெருமை யழியத்தக்கவே என உலகில்) எளிமைப்படும்; (எனவே நீரை வற்றச் செய்தலும் இறுகச் செய்தலும் இன்றி) குன்றுகளைக் கொண்டு அடுக்கி அணையைக் கட்டுங்கள்' என்று சொல்லிவிட்டு இராமன் தன் இருப்பிடம் நோக்கிச் சென்ருன்; அவன் அருளின்படி வருணனும் சென்ருன்.

கு :—வருணன் கூறிய ஆலோசனையை நன்று என்று இராமன் பாராட்டியவாறு. 'இது புரிதும்' எனத் தன் சேனைத் தலைவர்களை நோக்கி யுடன்பட்டுக் கூறிப் பின், 'குன்று கொண்டடுக்கிச் சேது குயிற்றுதிர்' எனக் கட்டளையிட்டவாறு. நம்மால் கடல் நீராகிய பூதம் எளிமைப்படுமாயின், ஏனை நான்கு பூதங்களும் இத்தகையனவே என உலகம் எளிமையாக நினைக்குமாறு அவை இழிவுறும் ஆகலின், கடல் நீரை வற்றச் செய்தலோ, இறுகச் செய்தலோ கூடாது; அணை கட்டிச் செல்லுதலே செய்யத்தக்கது எனத் துணிந்து இராமன் தன் சேனைக்குக் கட்டளையிட்டுச் சென்ருன் என்க. வருணன் இராமன்பால் விடைபெற்றுச் சென்ருன் என்பார், அருளிற் சென்ருன் என்ருர். சேது - அணை. (85)

வருணனை வழிவேண்டு படலம் முற்றிற்று

7. சேதுபந்தனப் படலம்

இராமன் தன் படைகளோடு இலங்கை சேர்தற் பொருட்டுக் கடலில் அணையைக் கட்டினமையைத் தெரிவிக்கும் படலமென்பது இத்தலைப்பின் பொருள். (சேது - அணை. பந்தனம் - கட்டுதல்.) இப் படலப் பெயர் சேதுப் படலம் எனவும் சில சுவடிகளில் காணப் படுகிறது.

சுக்கிரீவன் அறிஞர்களோடு ஆய்ந்து சேது கட்டுதற்கு நளனே தக்கவனென்று கருதி நளனை அழைக்கின்றான்; நளன் வருதலும் அவனைச் சேது கட்டுமாறு பணிக்கின்றான். அவன் சேது கட்டுதற்கு உடன்பட்டு அதற்கு வேண்டுவனவற்றை வானரர்களால் கொணர்ந்து தருமாறு சுக்கிரீவனை வேண்டுகின்றான். வானரர்கள் மலைகளைக் கைகளிலும் தோள்களிலும் தலைகளிலும் தாங்கி வந்து அணைகட்ட உதவி செய்கின்றனர். வானரர்கள் எறியும் மலைகளை நளன், வெண்ணெய் நல்லூரில் சடையப்ப வள்ளல் அடைக்கல மென வந்தவர்களைத் தாங்குவதுபோல் தாங்கி அணைகட்டியதாக ஆசிரியர் குறித்துள்ளார். மூன்று நாட்களில் அணைகட்டி முடிக்கப் படுகின்றது. அணைகட்டி முடிந்த மகிழ்ச்சியால் வானரர்கள் பேராரவாரம் செய்கின்றனர்.

இராமன் தன் சேனைகளோடு கடலைக் கடத்தற்கு ஆதிசேடனே தன் முதுகை உயர்த்திக் கிடந்தாற்போலவும், இலங்கையாகிய பெண் இராமன் கொண்டுவந்த சேனையைக் கண்டு மகிழ்ந்து அன்பினால் கையை நீட்டிக் கொண்டிருப்பது போலவும், இராமன் சேனையோடு செல்லுதற் பொருட்டு ஆகாய கங்கையே வழியாக (ஆறாக) வந்து கிடந்தாற்போலவும், இரவிலே இந்திரவில் காணப்பட்டாற்போலவும் அணைகாட்சியளிக்கின்றது.

சுக்கிரீவனும் வீடணனும் மற்றையோரும் இராமனை அணுகி வணங்கி, ‘அணை நூறு யோசனை நீளமும் பத்து யோசனை அகலமு முடையதாகச் செய்யப்பட்டது’ என்று கூறுகின்றனர் என்பது இப் படலத்தின் பொருட் சுருக்கமாகும்.

சேது கட்டும்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகள் முப்பத்தாறு பாடல் களால் (10-45) விரித்துரைக்கப்படுகின்றன. கடலிடை மலைகள் வீசி எறியப்பட்டபோதும், தம்மிடமுள்ள பொருள்களைத் தாம் அடியோடும் கெட்டவிடத்தும் வண்மையுடையோர் உதவுதல்போல, அவை மீன் களுக்கு உதவின எனவும், சேற்றுள் சென்று அழுந்திய மலைகள்

உலோபர்களைப் போல மீன்களுக்கு ஒன்றையும் கொடாதன ஆயின எனவும், மலையோடு கடலில் விழுந்த மலைப்பாம்புகள் யானைகளை விழுங்கிக் கொண்டு அறிவற்றவர் கேடுற்றபோதும் தம் கேட்டை உணராதிருத்தல் போல உறங்கிக் கிடந்தன எனவும், மலைகள் ஒன்றன்மேலொன்று போடப்பட்டதால் உடைந்த சில்லிகள் மேலே சென்று குறைந்த புண்ணியம் செய்து இறந்தவர்கள் சுவர்க்கத்திற்குச் சென்று கீழே இறங்குதல்போலக் கீழே வீழ்ந்தன எனவும், மலைகளைக் கடலில் எறிந்தபோது அம்மலை முழைஞ்சுகளிலிருந்து நழுவி விழுந்த பாம்புகள், தம் உடம்பை விட்டு வேறு உடலில் பாயும் வல்லமை பெற்றவர் மீண்டும் தம் உடம்பிலே வந்து புகுந்துகொண்டாற்போல அம்மலை முழைஞ்சுகளிலே மீண்டும் புகுந்துகொண்டன எனவும் ஆசிரியர் கூறும் உவமைகள் சுவை பயப்பனவாக உள்ளன.

மலைகளைச் சுமந்து வரும் வானரர்களின் செயல்கள் நகைச்சுவை நயம்படக் கூறப்பட்டுள்ளன.

வானரர்களால் கடலில் இடப்பட்ட மலைகளும் மரங்களும் நீருள் மூழ்குதலால் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பதின்மூன்று பாடல்களால் (52-64) விரித்துரைக்கப்படுகின்றன. வானரர்களால் மலைகள் பெயர்க்கப்பட்டுக் கடலில் எறியப்படுகின்றன. அம்மலையிலிருந்த யானைகளும் கடலுள் சென்றழுந்துகின்றன. அதுவரை அந்த யானைகளின் மதத்தில் மொய்த்துப் படிந்திருந்த வண்டுகள் வேசையரைப்போல அந்த யானைகளை விட்டு நீங்கின எனவும், மரங்கள் கடலிற் போடப்பட்டபோது அவற்றில் சுற்றியிருந்த கொடிகள் கற்புடைய மகளிரைப்போல் அம்மரங்களை விடாது கிடந்தன எனவும் அணிநயம் அமையக் கூறப்பட்டுள்ளன.

இப்படலத்தில் மூன்று வகைச் சந்தங்கள் அமைந்துள்ளன.

இப்படலத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் வான்மீகி ராமாயணத்தில் 22 ஆம் சருக்கத்தில் கூறப்பட்டுள்ளன. வான்மீகி, வானரர்கள் பெயர்த்துக் கொண்டு வந்த மரங்களின் பெயர்களை யெல்லாம் விரிவாகக் கூறுவதோடு அவ்வானரர்கள் மரங்களை இயந்திரங்களின் வாயிலாகக் கொண்டு வந்தனர் என்றும் குறிப்பிடுகின்றார். வான்மீகி, அணை ஐந்து நாட்களில் கட்டப்பட்டதென்று கூறியிருக்கவும், கம்பர் மூன்று நாட்களில் கட்டி முடிக்கப் பெற்றதாகக் குறித்துள்ளார்.

7. சேது பந்தனப் படலம்

சுக்கிரீவன் அறிஞரோடு எண்ணி நளனை அழைத்தல்

6803. அளவரு மறிஞரோ டரக்கர் கோமகற்
கிளவலு மினிதுட னிருக்க வெண்ணினன்
வினைவன விதிமுறை முடிக்க வேண்டுவான்
நளன்வரு கென்றனன் கவிக்கு நாயகன்.

'அளவு அரும் அறிஞரோடு அரக்கர் கோமகற்கு
இளவலும் இனிது உடன் இருக்க, எண்ணினன்,
வினைவன விதிமுறை முடிக்க வேண்டுவான்,
'நளன் வருக !' என்றனன்—கவிக்கு நாயகன்.

பொ :—வானரர்களுக்கு அரசனாகிய சுக்கிரீவன் மேல் நிகழ வேண்டியவற்றை முறைப்படி நிறைவேற்ற விரும்புபவனாய், அளவிலாத அறிஞர்களோடு, அரக்கர் தலைவனான இராவணனுக்குத் தம்பியாகிய வீடணனும் இனிதே உடன் இருக்க ஆலோசித்து நளன் வருவானாக என்று பணித்தான்.

கு :— இராவணனுக்குத் தம்பியான வீடணனும் சுக்கிரீவனுடைய அமைச்சரவையில் ஒருவனாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டமை தோன்ற 'அறிஞரோடு அரக்கர் கோமகற்கு இளவலும் இனிதுடன் இருக்க' என்றார். இராமனால் அடைக்கலமாகத் தழுவப்பட்ட பெருமை தோன்ற உடன் இருந்தான் என்பார், 'இனிது உடன் இருக்க' என்றார். கவிக்கு நாயகன் முடிக்க வேண்டுவானாய் எண்ணினனாய் நளன் வருக என்றனன் என முற்றெச்சங்களாக்கி முடிக்க. வினைவன என்றது மேல் நிகழ இருக்கும் சேது கட்டுதல் போல்வனவற்றை. வினைவன முடிக்க வேண்டி அறிஞரோடு எண்ணியதன் பயனாக அணை கட்டுதற்குத் தக்கவன் நளனே என்பது தெளிவாயினமையின் 'நளன் வருக' எனச் சுக்கிரீவன் பணிக்கலானான். நளன் வருக என்றது, நளனைக் கொணர்க என்னும் கருத்தினது. இவன் விசுவகன்மாவின் மகனாதலின் அணை கட்டுதற்கேற்ற தகுதியுடையவனாயினன். (1)

சேது கட்ட நளன் உடன்படுதல்

6804. வந்தனன் வானரத் தச்சன் மன்னநின்
சிந்தனை யென்னெனச் செறிதி ரைக்கடற்

பந்தனை செய்குதல் பணிந மக்கென
நிந்தனை யிலாதவன் செய்ய நேர்ந்தனன்.

வந்தனன், வானரத் தச்சன் ; மன்ன ! நின்
சிந்தனை என் ? என, செறிதிரைக் கடல்
பந்தனை செய்குதல் பணி நமக்கு ' என
நிந்தனை இலாதவன் செய்ய நேர்ந்தனன்.

பொ :—வானரத் தச்சனாகிய நளன் வந்து, (சுக்கிரீவனை நோக்கி) 'மன்னவ! நின் கருத்து என்னை? என வினவ, (சுக்கிரீவன்) 'நெருங்கிய அலைகளையுடைய கடலுக்கு அணை கட்டுதல் நமக்குப் பணியாகும்' என்று கூறப் பழிப்பு இலாத நளன், அது செய்தற்கு உடன்பட்டான்.

கு :—நளன் வானரர்க்குள் சிற்பியாகச் சிறப்பிக்கப்படுபவன் ஆகலின், இவ்வமையத்திற்கேற்ப வானரத் தச்சன் என்ற பெயரால் அவனைக் குறிப்பிட்டவாறு. வந்தனன் முற்றெச்சம். இத்துணை வானரரில் சுக்கிரீவன் தன்னை அழைத்தற்குக் காரணம் அறிய அவாவி, 'மன்ன நின் சிந்தனை என்', என வினவினான். அணையின்றிக் கடக்க முடியாத இயல்பினது கடல் என்பது புலப்படச் 'செறி திரைக் கடல்' எனச் சிறப்பித்தான். பந்தனை செய்தல் என்றது, அணை கட்டுதலை. பணி நினக்கு என்னாது, பணி நமக்கு என்று தன்னையும் உளப்படுத்திக் கூறியதால் மன்னவனாகிய தன்னோடு ஒப்ப எண்ணத்தக்கவன் நளன் என்பது புலப்படுத்தி அவன் தன் பணியை விரும்பி யேற்றுக் கொள்ளுமாறு செய்தவாறு. நிந்தனை - பழிப்பு. சிற்பத் தொழிலில் நிந்திக்கத்தக்க குற்றம் ஏதும் இல்லாதவன் நளன் ஆதலின், சேது கட்ட நேர்ந்தான் என்க. நேர்தல் - உடன்படல். (2)

நளன் சேது கட்டற்குரியன கொணர்க எனல்

6805. காரியங் கடலினை யடைத்துக் கட்டலே
சூரியன் காதல சொல்லி யென்பல
மேருவு மணுவுமோர் வேறு ருவகை
ஏருற வியற்றுவென் கொணர்தி யென்றனன்.

காரியம் கடலினை அடைத்துக் கட்டலே ;
சூரியன் காதல ! சொல்லி என் பல ;
மேருவும் அணுவும் ஓர் வேறு உருவகை
ஏர் உற இயற்றுவென் ; கொணர்தி ; என்றனன்.

பொ :—'சூரியன் புதல்வனே! (யான்) செய்யவேண்டிய காரியம் இக்கடலினை அடைத்து அணை கட்டுதல்தானே? அதுபற்றிப் பல சொல்லிப் பயன் என்? மிகப் பெரிய மேரு மலையும் மிகச் சிறிய அணுவும் வேருகத் தோன்ருதபடி ஒன்றுசேர்ந்திருக்குமாறு அழகுபடச் செய்கின்றேன்; அதற்குரிய குன்று முதலியவற்றைக் கொணர்க" என்று நளன் கூறினான்.

கு :—ஏற்றத் தாழ்வுள்ள பொருள்களைச் சமமாக அடுக்குதல் அரிதாயினும் சிறப்புக் கலையின் பயிற்சி மிகுதியால் எளிதாகச் செய்ய இயலும் என்பான், 'மேருவு மணுவுமோர் வேறுருவகை ஏருற வியற்றுவென்' என நளன் கூறலானான். ஏர்-அழகு. கொணர்தி என்றது மலை முதலியவற்றை வானரங்கள் கொணர்தற்கு ஏவுதல் கருத்தாவாகச் சுக்கிரீவன் இருக்க வேண்டும் என்பதே கருத்து. தன்னுற்றலைப் பற்றிப் பலபடக் கூறுதல் வேண்டா என்பான், 'சொல்லியென்பல' என்ருன். (3)

அணை கட்ட வருமாறு வானரர்களைச் சாம்பன் அழைத்தல்

6806. இளவலு மிறைவனு மிலங்கை வேந்தனு
மளவறு நங்குலத் தரசு மல்லவர்
வளைதருங் கருங்கட லடைக்க வம்மெனத்
தளமலி சேனையைச் சாம்பன் சாற்றினான்.

'இளவலும், இறைவனும், இலங்கை வேந்தனும்,
அளவறு நம் குலத்து அரசும், அல்லவர்,
வளைதரும் கருங்கடல் அடைக்க வம்' எனத்
தளம் மலி சேனையைச் சாம்பன் சாற்றினான்.

பொ :—'இலக்குவனும், இறைவனாகிய இராமனும், வீடணனும், அளவில்லாத நம் குலத்தவர்க்கு அரசாகிய சுக்கிரீவனும் அல்லாதவர்கள் இலங்கையை வளைந்துள்ள இக் கரிய கடலை அடைந்து அணை கட்ட வாருங்கள்' என்று சாம்பன் (சுக்கிரீவன் கட்டளைப்படி) கூட்டமிகுந்த சேனையை நோக்கிப் பறைசாற்றிச் சொன்னான்.

கு :—இராமனால் இலங்கை வேந்தன் ஆகச் செய்யப்பெற்ற பெருமை தோன்ற வீடணன் என்ற பழைய பெயராற் கூருது 'இலங்கை வேந்தனும்' என்றே வழங்கியிருத்தல் காண்க. அணை கட்டற்கு இந்நால்வரும் வருதல் தகுதியன்ருதலின் அவரை விலக்கி மற்றையோரை அழைத்தவாறு. அல்லவர் என்ற படர்க்கைப் பெயர் வம் என்ற முன்னிலை யேவலோடு வந்தது இடவழுவமைதி.

வம்மின் என்பது வம் என மருவிற்று. "வென்வேலான் குன்றின் மேல் விளையாட்டு யானகலேன், என்னோடுந் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்'' (சிலப் - 29 : 10) என இளங்கோவடிகளும் இச் சொல்லை ஆண்டுள்ளமை காண்க. வளைதருங் கடல் என்பதற்குச் சங்குகளைத் தரும் கடல் எனப் பொருள் கூறலும் ஆம். தளம் - கூட்டம். திருவிக்கிரம அவதாரத்தில் உலகையளந்து உரிமை யாக்கியதைச் சாம்பன் பறையறைந்து உலகிற்கு அறிவித்த அனு பவம் உடையவனாகலின் இப்போதும் அவனே அவ்வினையை மேற் கொண்டான். (4)

இச் செய்யுளுக்குப் பின் 52ஆம் எண்ணுள்ள அச்சுப் புத்தகத் தில் 4—1 ஆகப் பின்வரும் மிகைச் செய்யுள் காணப்படுகின்றது.

சாற்றுமா முரசொலி கேட்டுத் தானையின்
ஏற்றமோ டெழுந்தன ரெறிதிரைக் கடல்
ஊற்றமீ தொளித்தொரு கணத்தி லுற்றனை
ஏற்றுது மெனப்படைத் தலைவர் யாருமே.

வானரங்கள் மலைகளைக் கொணர்தல் 6807-6809

6807. கருவரை காதங்கள் கணக்கி லாதன
விருகையிற் றோள்களிற் சென்னி யேந்தின
வொருகட லடைக்கமற் றொழிந்த வேலைகள்
வருவன வாமென வந்த வானரம்.

கருவரை காதங்கள் கணக்கு இலாதன
இருகையில், தோள்களில், சென்னி, ஏந்தின,
ஒரு கடல் அடைக்க மற்று ஒழிந்த வேலைகள்
வருவன ஆம் என, வந்த வானரம்.

பொ :—கணக்கு இல்லாத காதங்கள் பரவியுள்ள கரிய மலைகளை வானரங்கள் தம் இரு கைகளிலும் தோள்களிலும் தலையிலும் ஏந்திக் கொண்டனவாய், இந்த ஒரு கடலை அடைப்பதற்காக மற்றைய ஆறு கடல்களும் வருவனபோலும் என்று கண்டோர் கூறுமாறு வந்தன.

கு :—வானர சேனைகளின் மிகுதியைக் காட்ட இவ்வாறு தற் குறிப்பேற்றமாகக் கூறினர். ஆறு கடல்கள் பெயர்ந்து வருவன போல வானரப்படைக் கடல் மலைகளை யேந்தி வந்தன என்க. சென்னியில் என ஏழனுருபு விரிக்க. வானரம் ஏந்தினவாய் வந்த என இயையும். ஏந்தின முற்றெச்சம். வந்த என்பது அன்பெறுத

அகரவீற்றுப் பலவின் முற்று. ஒழிந்த வேலைகள் என்றது பாற் கடல் முதலிய ஆறு கடல்களை. கணக்கிலாதன காதங்கள் உள்ள கருவரை என்க. (5)

6808. பேர்த்தன மலைசில பேர்க்கப் பேர்க்கநின்
றீர்த்தன சிலசில சென்னி யேந்தின
தூர்த்தன சிலசில தூர்க்கத் தூர்க்கநின்
றார்த்தன சிலசில வாடிப் பாடின.

பேர்த்தன மலை சில; பேர்க்கப் பேர்க்க, நின்று
ஈர்த்தன சில; சில சென்னி ஏந்தின;
தூர்த்தன சில; சில தூர்க்கத் தூர்க்க நின்று
ஆர்த்தன; சிலசில ஆடிப் பாடின.

பொ:—சில வானரங்கள் மலைகளைப் பேர்த் தெடுத்தன; அவை பேர்க்கப் பேர்க்கச் சில வானரங்கள் நின்று அம்மலைகளை இழுத்தன; இழுத்த மலைகளைச் சில வானரங்கள் தம் தலைமேல் தாங்கினவாய்ச் சென்று கடலிலிட்டுத் தூர்த்தன; அவ்வாறு தூர்ப்பதைக் கண்டு நின்று சில சில வானரங்கள் ஆரவாரித்தன; அவற்றைக் கண்டு சில சில வானரங்கள் ஆடிக்கொண்டே பாடின.

கு:—ஏந்தினவாய்த் தூர்த்தன என முற்றெச்சமாக்கி முடிக்க. ஆர்த்த வானரங்களும் ஆடிப் பாடிய வானரங்களும் மலைகளைப் பெயர்த்தும் தாங்கி வந்து தூர்த்தும் தொண்டு செய்கின்ற வானரங்களுக்குக் கிளர்ச்சியை யுண்டாக்குகின்றமையின் அவையும் அணைக்கு உதவி செய்தனவாகின்றன. பாடின என்பதற்கு மலையைத் தூக்கும் வானரங்களின் புகழையும் இராமன் புகழையும் பாடின எனலும் ஆம். இனிப் பாடி ஆடின என மாற்றிப் பொருள் கூறலும் ஆம். (6)

6809. காலிடை யொருமலை யுருட்டிக் கைகளின்
மேலிடை யிருமலை யேந்தி விண்டொடும்
சூலுடை மழைமுகில் சூழ்ந்து சுற்றிய
வாலிடை யொருமலை யீர்த்து வந்தவால்.

காலிடை ஒருமலை உருட்டி, கைகளின்
மேலிடை இருமலை ஏந்தி, விண்தொடும்

சூலுடை மழைமுகில் சூழ்ந்து சுற்றிய
வாலிடை ஒருமலை ஈர்த்து வந்தவால்;

பொ :—(வானரங்கள்) காலால் ஒரு மலையை உருட்டிக்கொண்டும், கைகளின்மேல் இரண்டு மலையைத் தாங்கிக் கொண்டும், விண்ணைத் தொடுகின்றதும் கருக்கொண்ட மேகங்களால் சூழ்ந்து சுற்றப் பெற்றதுமாகிய ஒரு மலையை வாலினால் இழுத்துக்கொண்டும் வந்தன.

கு :—இச் செய்யுளில் ஒரு குரங்கு நான்கு மலைகளைக் கொண்டு வந்தமை கூறியவாறு. இதனால் அவ்வானரத்தின் ஆற்றலும் இராமனிடத்துக் கொண்ட பற்றும் புலப்படும். சில வந்தவால் என மேலைச் செய்யுளிலிருந்து எழுவாய் வருவிக்க. வாலினால் இழுத்து வந்த மலையின் உயர்ச்சியைப் புலப்படுத்த, 'விண்டொடும்' எனவும், 'சூலுடை மழை முகில் சூழ்ந்து சுற்றிய' எனவும் சிறப்பித்தவாறு. (7)

நளன் மலைகளை வாங்கியடுக்குதல் 6810-6811

6810. முடுக்கினன் றருகென மூன்று கோடியர்
எடுக்கினு மம்மலை யொருகை யேந்தியிட்
டடுக்கினன் றன்வலி காட்டி யாழியை
நடுக்கினன் னளனெனு நவையி னீங்கினான்.

முடுக்கினன், 'தருக' என, மூன்று கோடியர்
எடுக்கினும் அம்மலை ஒருகை ஏந்தியிட்டு,
அடுக்கினன்; தன்வலி காட்டி, ஆழியை
நடுக்கினன்—நளன் எனும் நவையில் நீங்கினான்.

பொ :—நளன் என்ற பெயரினையுடைய குற்றத்தினின்றும் நீங்கிய வானரத் தச்சன், மூன்று கோடி வானரர்கள் சேர்ந்து தூக்கிக் கொண்டு வந்தாலும் அம்மலையைத் தன் ஒரு கையால் ஏந்திக் கொண்டு, மேலும் கொணர்ந்து தாருங்கள்' என்று விரைவுபடுத்தினனாய்த் தன் வலிமையைக் காட்டிக் கடலை நடுங்கச்செய்து கொண்டு அடுக்கினான்.

கு :—மூன்று கோடியர் எடுத்து வந்த மலையை நளன் ஒரு கையால் வாங்கிக்கொண்டு, மீண்டும் அத்தகைய மலையைக் கொணர்க என அவர்களை முடுக்கித் தன் வலியைக் காட்டுகின்றமையால் கடல் கண்டு நடுங்கிற்று என்றவாறு. நீங்கினான், பெயர். நவையில் நீங்கினவன், ஒரு கை யேந்தித் தருகென முடுக்கினனாய்த்

தன் வலி காட்டிக் கடலை நடுக்கினனாய் அடுக்கினன் என இயையும். பெரு மலைகளைக் கடலில் இடும்போது நீர் குழிவுற்று மேலெழுங் காட்சி கடல் நடுங்குவது போலத் தோன்றுதலின் 'ஆழியை நடுக்கினன்' என்றார் எனலும் ஆம். (8)

6811. மஞ்சினிற் றிகழ்தரு மலையை மாக்குரங்
கெஞ்சுறக் கடிதெடுத் தெறியவே நளன்
விஞ்சையிற் றாங்கினன் சடையன் வெண்ணெயில்
தஞ்சமென் றோர்களைத் தாங்குந் தன்மைபோல்.

மஞ்சினில் திகழ்தரு மலையை, மாக்குரங்கு
எஞ்சுறக் கடிது எடுத்து எறியவே, நளன்
விஞ்சையில் தாங்கினன்—சடையன் வெண்ணெயில்,
'தஞ்சம்!' என்றோர்களைத் தாங்கும் தன்மைபோல்.

பொ :—(உலகில் மலைகள்) குறையுமாறு, மேகத்தோடு விளங்கும் மலையைப் பெரிய குரங்கு விரைவாக எடுத்து வந்து எறிய, வெண்ணெய் நல்லூரில் சடையப்ப வள்ளல், அடைக்கலம் என்று தன்னை அடைந்தவர்களைத் தளர்ச்சியுறாது தாங்கும் தன்மையைப்போல, நளன் தன் கலை வன்மையால் அம்மலையைத் தாங்கினான்.

கு :—இப்பாடல் கம்பரின் செய்ந்நன்றி யறியும் இயல்பைப் புலப் படுத்துவது என்பர். சடையன் தன்னை யடைக்கலம் புகுந்தோரை வறுமைக் கடலில் புகாது பொருள் கொடுத்துத் தாங்குவது போல, நளனும் தன்னை நாடிவந்த மலை கடலுள் ஆழ்ந்து விடாது ஏந்திக் கொண்டான் என்பதால் சடையனின் வள்ளல் தன்மை புலப்படுதல் காணலாம். விஞ்சை என்றது சிற்பக் கலையை. தஞ்சம் - அடைக் கலம். மலையின் உயர்ச்சி புலப்பட 'மஞ்சினில் திகழ்தரு மலை' என்றார். மஞ்சு - மேகம். அம்மலையை எடுத்தற்குத் தகுதியுடைய குரங்கை 'மாக்குரங்கு' என்று சிறப்பித்தார். (9)

அணை கட்டும்போது நிகழ்ந்தவை

6812. சயக்கவிப் பெரும்படைத் தலைவர் தாள்களால்
முயற்கறை மதிதவழ் மூரிக் குன்றுகள்
அயக்கலின் முகிற்குல மலறி யோடின
இயக்கரு மகளிரு மிரியல் போயினர்.

சயக் கவிப் பெரும்படைத் தலைவர் தாள்களால்
முயல்கறை மதிதவழ் மூரிக் குன்றுகள்
அயக்கலின் முகில் குலம் அலறி ஓடின,
இயக்கரும் மகளிரும் இரியல் போயினார்.

பொ :—வெற்றியையுடைய பெரிய வானரப் படைத் தலைவர்கள் தம் பாதங்களால், முயல் போன்ற களங்கத்தையுடைய சந்திரன் தவழ்கின்ற பெரிய மலைகளைப் பறித்தற்கு அசக்குவதால் அம்மலையில் தவழ்ந்திருந்த மேகங்கள் அலறிக்கொண்டு ஓடின ; அம்மலையிலிருந்த இயக்கர்களும் அவர் மனைவிமாரும் ஓடிப் போனார்கள்.

கு :—தாள்களால் அயக்கலின் என்க. குன்றுகளின் உயர்ச்சி புலப்பட 'முயற்கறை மதிதவழ் மூரிக் குன்றுகள்' என்று சிறப்பித்தார். குன்றுகளை அயக்கலின் என இரண்டனுருபு விரிக்க. அயக்கல் - அசக்குதல் ; அசைத்தல். மேகங்கள், தமக்குப் பற்றுக்கோடாயிருந்த மலை அசைதலின் தமக்கு என்ன நேருமோ என்ற அச்சத்தால் அலறி ஓடுவனவாயின ; அவ்வாறே இயக்கரும் தம் மகளிருடன் ஓடுவாராயினர். அறிவில் பொருளாகிய மேகங்களையும் அறிவுள்ள பொருளாகப் படைத்துக் கூறுதல் கம்பர்க்கு இயல்பு. "ஏகுகின்ற தங்கணங்க ளோடு மெல்லை காண்கிலா நாகம் ஒன்று அகன்கிடங்கை நாமவேலையாம் எனா, மேகம் மொண்டு கொண்டு" (நகரப் - 15) என முன்னுங் கூறியிருத்தல் காணலாம். (10)

6813. வேருடை நெடுங்கிரி தலைவர் வீசின
வோரிடத் தொன்றின்மே லொன்று சென்றுக
நீரிடை நிமிர்பொறி பிறக்க நீண்டவீ
தாருடை நெருப்பென வருண னஞ்சினான்.

வேர் உடை நெடுங்கிரி தலைவர் வீசின,
ஓர் இடத்து ஒன்றின்மேல் ஒன்று சென்று உக
நீரிடை நிமிர்பொறி பிறக்க நீண்ட ஈது
'ஆருடை நெருப்பு?' என வருணன் அஞ்சினான்.

பொ :—வானரத் தலைவர் வீசி எறிந்த, வேரினையுடைய நீண்ட மலைகள் ஓரிடத்தில் ஒன்றின்மேல் ஒன்றாகச் சென்று வீழ்தலால் கடல் நீர்க்கு இடையில் மேலோங்கியவண்ணம் நெருப்புப் பொறி தோன்றியதாக, வருணன், (அதைக் கண்டு) நீண்டு தோன்றும் இது யாருடைய நெருப்பு ? என்று ஐயுற்று அஞ்சினான்.

கு :—முன்னரே இராமன் கணையால் தோன்றிய நெருப்பால் அல்லலுற்ற வருணன், மலையின்மேல் மலை வீழ்ந்ததால் உளதாகிய நெருப்பைக் கண்டவுடன் இது யாருடைய நெருப்போ என அஞ்சலானான். இராமன், தனக்கு அபயம் கொடுத்துவிட்டமையால் அவ்விராமனுடைய நெருப்பாக இருக்க இயலாது என்ற துணிவால், 'ஈது ஆருடை நெருப்பு' என ஐயுறலானான் வருணன். (11)

6814. ஆனிறக் கண்ணனென் றொருவ னங்கையால்
கானிற மலைகொணர்ந் தெறியக் கார்க்கடல்
தூநிற முத்தினந் துவலை யோடும்போய்
வானிறை மீனொடு மாறு கொண்டவே.

ஆனிறக் கண்ணன் என்று ஒருவன், அங்கையால்,
கான்நிற மலை கொணர்ந்து எறியக், கார்க்கடல்
தூநிற முத்தினம் துவலையோடும் போய்,
வான்நிறை மீனொடு மாறு கொண்டவே.

பொ :—ஆனிறக்கண்ணன் (கவயாக்கன்) என்று பேர் கொண்ட ஒரு வானரன், தன் அகங்கையால் காடு மயமாகத் தோன்றிய மலையைக் கொணர்ந்து வீச, கரிய கடலில் உள்ள தூய நிறத்தையுடைய முத்தினங்கள் கடல் நீர்த் துளிகளோடு சென்று, விண்ணில் நிறைந்து காணப்படும் விண்மீன்களோடு மாறுபட்டுத் தோன்றின.

கு :—கான்நிற மலை - காடு மயமாகத் தோன்றும் மலை. நிறம் - இயல்பு. காடு மிகுதியாகக் கொண்ட மலை ஆதலின், 'கான்நிற மலை' என்றார். மலை கடலில் வீழ்ந்தமையால் மேலெழுந்து சிதறிய நீர்த் துளிகளோடு முத்துகள் விண்ணில் சென்றமையால் அவையும் விண்மீன்களோ என்று எண்ணுமாறு நேர்ந்தமை நினைந்து, 'வானிறை மீனொடு மாறு கொண்டவே' என்றார். முத்துகளும் விண்மீன்களும் ஒளியாலும் தோற்றத்தாலும் ஒப்புமையுடைமையின் மாறுகொண்டதாகக் கூறினர். (12)

6815. சிந்துரத் தடவரை யெறியச் சேணிடை
முந்துறத் தெறித்தெழு முத்தந் தொத்தலால்
அந்தரத் தெழுமுகி லாடை யாவகன்
பந்தரொத் ததுநெடும் பரிதி வானமே.

சிந்துரத் தடவரை எறிய, சேணிடை
முந்துறத் தெறித்து எழு முத்தம் தொத்தலால்,
அந்தரத்து எழு முகில் ஆடையா, அகன்
பந்தர் ஒத்தது, நெடும் பரிதி வானமே.

பொ :—யானைகளையுடைய பெரிய மலையை வானரம் கடல் மீது எறிதலால், விண்ணில் முன்னதாகத் தெறித்து எழுந்த முத்தங்கள் நம்மீது தொத்திக் கொண்டமையால், வானத்தில் எழுகின்ற மேகங்கள் பந்தலில் முத்துகள் கோத்த மேற்கட்டியாகிய ஆடை போலத் தோன்ற, சூரியன் உலவும் நெடிய ஆகாயம் அகன்ற முத்துப் பந்தலை ஒத்துத் தோன்றியது.

கு :—வானரத்தால் எறியப்பட்ட மலை கடலில் வீழ்கின்றபோது தெறிக்கும் நீர்த் துளிகளோடு முத்துகள் விண்மேல் செல்கின்றன; மலை கடலில் வீழ்ந்தவுடன் அம்மலைமேல் தவழ்ந்து கொண்டிருந்த மேகங்கள் அந்தரத்தில் எழுந்து செல்கின்றன; அவ்வாறு எழுந்து செல்லும் மேகங்களின்மேல் முன் தெறித்தெழுந்த அம்முத்துகள் தொத்திக் கொள்கின்றன; முத்துகள் தொத்திக் கொண்ட அம்மேகங்களின் தோற்றம் முத்துப் பந்தலில் முத்துகள் கோத்துக் கட்டும் ஆடைபோலத் தோன்றுகின்றது; வானம் முத்துப் பந்தர்போலத் தோன்றுகின்றது; சூரியன் அம்முத்துப் பந்தலில் கட்டிய ஒளிவிளக்குப்போலத் தோன்றுகின்றான் என்ற குறிப்பும் பெறப்பட 'நெடும் பரிதி வானமே' என்றார். முத்தம் தொத்தலால் வானம் பந்தர் ஒத்தது என இயையும். (13)

6816. வேணுவி னெடுவரை வீச மீமிசை
சேணுறு திவலையா னனைந்த செந்துகில்
பூணுறு மல்குலிற் பொருந்திப் போதலால்
நாணினர் வானநாட் டுறையும் நங்கைமார்.

வேணுவின் நெடுவரை வீச, மீமிசைச்
சேண் உறு திவலையால் நனைந்த செந்துகில்,
பூண் உறும் அல்குலில் பொருந்திப் போதலால்,
நாணினர், வானநாட்டு உறையும் நங்கைமார்.

பொ :—மூங்கிலையுடைய நீண்ட மலையை வானரம் கடலில் வீச, அவ்வீச்சால் கடலிலிருந்து மேலிடமான விண்ணுலகத்தை அடைந்த நீர்த் துளிகளால் நனைந்த சிவந்த சேலை, மேகலையணி பூண்ட தம் அல்குலில் ஒட்டிக்கொண்டதால், வான நாட்டில் உள்ள தேவமாதர்

(தம் உறுப்பு வெளியில் தோன்றலாயிற்றே என) நாணம் அடைந்தார்கள்.

கு :—வேணு - மூங்கில். மீமிசை சேண் என்றது, மிக மிக உயர்ந்த விண்ணுலகத்தை. தேவமாதர் செந்துகில் அணியும் இயல்பினர் என்பதையும் அத்துகிலுக்குள் பல மணிகள் கோத்த ஏழு வடமாகிய மேகலையை யணியும் இயல்பினர் என்பதையும், "கோபத்தன்ன தோயாப் பூந்துகிற், பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்...... சூரரமகளிர்" (திருமுருகாற் - 15-41) என நக்கீரர் கூறுமாற்றால் உணரலாம். நீர்த்திவலைகள் பட்டால் உடுத்த மெல்லிய துகில் உடம்போடு ஒட்டிக் கொள்ளுதல் இயல்பு. "நான நீரிற் கலந்து நலங் கொள் பூம்பட் டொளிப்ப, மேனி தோன்ற விளங்கி வெளிப் பட்டதற்கு நாணி, மான மகளிர்போல மணிமேகலைகள் பேசாத், தானந்தழுவிக் கிடப்பச் செல்வோன் தன்மை காண்மின்" (சீவக - 923) என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். பொருந்திப் போதல், ஒரு சொல் நீர்மைத்து. (14)

6817. தேனிவர் தடவரை திரைக்க ருங்கடல்
தானிமிர் தரவிடை குவியத் தள்ளுநீர்
மேனிமிர் திவலைமீச் சென்று மீடலால்
வானவர் நாட்டினு மழைபொ ழிந்ததால்.

தேன் இவர் தடவரை, திரைக் கருங்கடல்
தான் நிமிர்தர, இடை குவியத் தள்ளும் நீர்
மேல் நிமிர் திவலை மீச்சென்று மீடலால்
வானவர் நாட்டினும் மழை பொழிந்ததால்.

பொ :—அலைகளை யுடைய கரிய கடல் மேலோங்கும்படி, தேன் பொருந்திய பெரிய மலைகள் (வானரங்களால் வீசப்பட்டு) அக்கடலிடையே குவிதலால் தள்ளப்பட்ட கடல் நீரிலிருந்து மேலே நிமிர்ந்து சென்ற நீர்த்திவலைகள் விண்ணுலகத்திற்கும் மேலே சென்று மீளுதலால் தேவருலகத்தினும் மழை பெய்தது,

கு :—இவர்தல் - பொருந்துதல். 'மாதிவர்பாகன்' (திருவாசகம் - 41 - 1) என்புழியும் இச்சொல் இப்பொருளில் ஆளப்பட்டிருத்தல் காண்க. தடவரை இடை குவிய என இயையும். கடலிடையில் வானரங்களால் வீசப்பட்ட மலைகள் மிகுதியாக வீழ்தலால் மேல் நிமிர்ந்தெழுந்த நீர்த் திவலைகள் வானவர் நாட்டிற்கும் மேலே சென்று மீளுந் தோற்றத்தைக் காணின் விண்ணவர் உலகத்திலும்

மழை பொழிவது போலத் தோன்றும் என்க. வானவர் நாட்டில் மழை பொழிவது இல்லை ஆயினும், அவ்வானவர் நாட்டிற்கும் மேலே சென்று விழும் நீர்த் திவலைகளின் தோற்றத்தால் அந்நாட்டினும் மழை பொழிந்தது என்னலாம் என்றவாறு. தற்குறிப்பேற்ற அணிக்கு உரிய உவம உருபு இல்லையேனும் கருத்து வகையால் அவ் வணியாகவே கொள்ளப்படும், ஆல் - அசை. (15)

6818. மையுறு மலைக ளோடு
★ மறிகடல் வந்து வீழ்ந்த
வெய்யவாய் மகரம் பற்ற
வெருவின விளிப்ப மேனாள்
பொய்கையி னிடங்கர் கவ்வப்
புராதனா போற்றி யென்று
கையெடுத் தழைத்த யானை
போன்றன களிநல் யானை.

மை உறு மலைகளோடு
மறிகடல் வந்து வீழ்ந்த
வெய்யவாய் மகரம் பற்ற
வெருவின விளிப்ப,—மேல்நாள்,
பொய்கையின் இடங்கர் கவ்வ,
'புராதனா போற்றி' என்று
கை எடுத்து அழைத்த யானை
போன்றன—களிநல் யானை.

பொ :—மேகங்கள் தவழ்கின்ற மலைகளோடு (வானரர்களால் வீசப்பட்டு) அலை மடங்கி வீசுகின்ற கடலில் வந்து வீழ்ந்தனவாய், கொடிய வாயையுடைய மகரமீன் பற்றிக் கவ்வுதலால் அஞ்சினவாய்க் கதறுகின்ற மதக்களிப்பையுடைய நல்ல யானைகள், பழைய காலத்தில் தாமரைப் பொய்கையில் முதலை, தன் காலைக் கவ்விக் கொள்ள 'ஆதிமூலமே காப்பாயாக' என்று துதிக்கையைத் தூக்கி அழைத்த கயேந்திரன் என்னும் யானையைப் போன்று தோன்றின.

கு :—மை - மேகம். யானைகள் வாழ்கின்ற இடம் பெரும்பாலும் மலையேயாதலின் அம்மலையோடு யானைகளும் கடலில் வீழ்வன ஆயின. முதலை கடலில் வாழ்தல் இல்லையாதலின் முதலை பற்றியதாகக் கூறாது மகரம் பற்றியதாகக் கூறினர். மகரம் - பெரிய மீன் வகையில் ஒன்று. மகர மீன் பற்றிக் கொண்டமையால் யானைகள்

அஞ்சிக் கதறிய தோற்றம், மேல்நாள் பொய்கையில் முதலை கவ்வக் கயேந்திரன் ஆதிமூலமே என அரற்றியதைப் போன்றது என்றவாறு, இது முற்றுவமை. (16)

6819. அசும்புபாய் தேனும் பூவு
மாரமு மகிலு மற்றும்
விசும்பெலா முலவுந் தெய்வ
வேரியின் மிடைந்து விம்மத்
தசும்பெலாம் வாச மூட்டிச்
சார்த்திய தண்ணீ ரென்னப்
பசும்புலா றும் வேலை
பரிமளங் கமழ்ந்த தன்றே.

அசும்பு பாய் தேனும், பூவும்,
ஆரமும் அகிலும், மற்றும்,
விசும்பு எலாம் உலவும் தெய்வ
வேரியின் மிடைந்து விம்மத்,
தசும்பு எலாம் வாசம் ஊட்டிச்
சார்த்திய தண்ணீர் என்னப்,
பசும்புலால் நாறும் வேலை
பரிமளம் கமழ்ந்தது அன்றே.

பொ :—(மலையிலிருந்து) ஊற்றெடுத்துப் பாய்கின்ற தேனும் தேனையுடைய மலர்களும், சந்தன மரங்களும், அகிற்கட்டைகளும் மற்றுமுள்ள வாசனைப் பொருள்களும், ஆகாயம் முழுமையும் பரவுகின்ற தெய்வ மணத்தைப்போல நெருங்கி மிகுதலால், புதுப்புலால் வீசும் கடல், குடம் முழுதும் நிறையுமாறு வாசனை ஊட்டிவைத்த தண்ணீர் போல நறுமணம் கமழ்வதாயிற்று.

கு :—அசும்பு - கசிவு; ஊற்று. மலையில் உள்ள தேனும் பூவும் சந்தனமும் அகிலும் முதலிய வாசனைப் பொருள்கள் அம்மலையோடு கடலில் வீழ்ந்தமையால் புலால் நாறும் கடல், மணம் கமழ்வதாயிற்று என்க. வேரி - மணம். காற்றோடு கலந்து மணம் எங்கும் பரவும் இயல்பினது ஆதலின், 'விசும்பெலாம் உலவும் தெய்வவேரி' என்றார். தெய்வத்தால் விரும்பத்தக்க நறுமணம் என்பார் 'தெய்வ வேரி' என்றார். மிடைதல்-நெருங்குதல். விம்முதல்-மிகுதல். தசும்பு - குடம். குடம் முழுதும் நிறையுமாறு சார்த்திய தண்ணீர்' என வேண்டும் சொல் வருவித்து முடிக்க. இனி, வாசமெலாம் ஊட்டி

என, மாற்றிக் கூட்டலும் ஆம். சார்த்துதல் - நிறைத்து வைத்தல். தண்ணீர்க்கு வாசனையூட்டும் வழக்கம் பண்டே உண்டு. 'கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின், நல்லறிவு நாளும் தலைப் படுவர் - தொல்சிறப்பின், ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.'' (நாலடி - 139) என்றது காணலாம். '' தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினு மவர்தம் மருண்ட தன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே '' (கம்ப - பால. 14 - 8) என்பது இங்கு ஒப்புநோக்கத்தகும். நாற்றத்திற்கு இழிவுப் பொருள் கொள்ளப்பட்டபின் உயர்ந்த மணத்திற்கு கமழ்வு என்ற வேறு பெயர் வழங்கப்பட்டதை இறுதியடி காட்டுகின்றது. (17)

6820. தேமுதற் கனியுங் காயுந்
தேனினோ டூனுந் தெய்வப்
பூமுத லாய வெல்லா
மீன்கொளப் பொலிந்த தன்றே
மாமுதற் றருவோ டோங்கும்
வானுயர் மானக் குன்றம்
தாமுத லோடுங் கெட்டா
லொழிவரோ வண்மை தக்கோர்.

தேம் முதல் கனியும் காயும், தேனினோடு ஊனும், தெய்வப்
பூ முதலாய எல்லாம், மீன் கொளப் பொலிந்தது அன்றே,
மா முதல் தருவோடு ஓங்கும் வான் உயர் மானக் குன்றம்—
தாம் முதலோடுங் கெட்டால் ஒழிவரோ, வண்மை தக்கோர்?

பொ :—மா முதலிய மரங்களோடு ஓங்கும், வானத்தளவு உயர்ந்த பெருமையையுடைய மலை, (தான் கடலிடை வீழ்ந்தபோதும்) இனிமையைத் தம்மிடத்தே கொண்ட பழமும் காயும் தேனுடனே இறைச்சியும் தெய்வத்தைப் பூசனை செய்தற்குரிய பூவும் ஆகிய எல்லாவற்றையும் மீன் உட்கொள்ளும்படி விளங்கியது. பெரியோர்கள், தாம் அடியோடும் செல்வமற்றுப் போனாலும் தம் கொடைக் குணத்தினின்றும் நீங்குவாரோ ? (நீங்கமாட்டார்கள்).

கு :—தேம் - இனிமை. முதல் - இடம். ஊன் - நெல்லும் ஆம் (அகராதி நிகண்டு). மா முதல் தருவோ டோங்கும் குன்றம் எனவும் வானுயர் மானக்குன்றம் எனவும் தனித்தனி கூட்டுக. மா முதல் தருவோடு என்பதற்குப் பெரிய அடிப் பாகத்தையுடைய மரங்களோடு எனவும் பொருள் கொள்ளலாம். முதலோடுங் கெட்டால்

என்பதனை முதலோடு கெட்டாலும் என உம்மையைப் பிரித்துக் கூட்டுக. கொடைக் குணம் வாய்ந்த பெரியோர்கள், தம் செல்வ முழுதும் அழிந்த காலத்தும் கொடைக் குணத்தினின்றும் மாறாதது போலக் குன்றமும் தன் நிலை பெயர்ந்து கடலிடை வீழ்ந்தபோதும் கனியும் காயும் தேனும் ஊனும் பூவும் ஆகியவற்றை மீன்கள் உட்கொள்ளுமாறு உதவிற்று என்பதாம். குன்றம் மீன் கொளப் பொலிந்ததன்றே என முடியும். 'தாம் முதலோடுங் கெட்டால் ஒழிவரோ வண்மை தக்கோர்' என்பது வேற்றுப் பொருள் வைப்பணி. (18)

6821. மண்ணுறச் சேற்றுட் புக்குச்
சுரிகின்ற மாலைக் குன்றம்
கண்ணிறை போதுங் காயுங்
கனிகளும் பிறவுங் கவ்வ
வெண்ணுறு மீன்க ளெல்லாம்
வறியவ ரென்னச் செல்ல
உண்ணிறை செல்வ நல்கா
தொளிக்கின்ற வுலோப ரொத்த.

மண்ணுறச் சேற்றுள் புக்குச் சுரிகின்ற மாலைக் குன்றம்—
கள் நிறை போதும் காயும் கனிகளும் பிறவும் கவ்வ
எண்ணுறு மீன்கள் எல்லாம், வறியவர் என்னச் செல்ல,
உள் நிறை செல்வம் நல்காது ஒளிக்கின்ற உலோபர் ஒத்த.

பொ:—தேன் நிறைந்த பூக்களையும் காய்களையும் கனிகளையும் பிறவற்றையும் கவ்வி உண்ண எண்ணும்படியான மீன்களெல்லாம் வறியவர் போல (ஏமாற்றமடைந்து) செல்ல, மண் தம் மீது படியச் சேற்றுள் புகுந்து உள்ளழுந்துகின்ற ஒழுங்காகிய மலைகள், உள்ளே நிறைந்த செல்வத்தைப் பிறருக்குக் கொடாமல் ஒளிக்கின்ற உலோபர்களைப் போன்றன.

கு:—சுரிதல் - உள்ளே அழுந்துதல். கடலுள் இடப்படுதலால் தம்மிடமுள்ள போது. காய், கனி ஆகியவற்றை மீன்கள் உண்ண இயலாதபடி உடனே கடலுட் சென்று அழுந்துகின்ற மலைகள், தமக்குரிய செல்வத்தைப் பிறருக்குக் கொடாமல் ஒளிக்கின்ற உலோபர்களைப் போன்றன என்றதால் இஃது உவமையணி. கண்ணிறை என்பதனைக் கண் நிறை எனப் பிரித்துக் கண்ணுக்கு நிறைந்த என

வும் பொருள் கொள்ளலாம். எண்ணுறு – எண்ணும்படியான. சுரிகின்ற மாலைக் குன்றம் ஒளிக்கின்ற உலோபரொத்த என முடிக்க.
(19)

6822. கறங்கெனத் திரியும் வேகக்
கவிக்குலங் கதுவ வாங்கிப்
பிறங்கிருங் கடலிற் பெய்த
போழ்தத்தும் பெரிய பாந்தள்
மறங்கிளர் மான யானை
வயிற்றின வாக வாய்சோர்ந்
துறங்கின கேடுற் றாலு
முணர்வரோ வுணர்வி லாதார்.

கறங்கு எனத் திரியும் வேகக் கவிக்குலம் கதுவ வாங்கிப்
பிறங்கு இருங் கடலில் பெய்த போழ்தத்தும் பெரிய பாந்தள்,
மறங்கிளர் மான யானை வயிற்றின ஆக, வாய் சோர்ந்து
உறங்கின—கேடு உற்றாலும் உணர்வரோ உணர்வு இலாதார்?

பொ :—காற்றாடி போலத் திரியும் வேகத்தையுடைய வானரக் கூட்டம் (தமது கைகளால்) பற்றிப் பிடுங்கி விளங்குகின்ற பெரிய கடலில் இட்டபோதும், (அம்மலைகளிலுள்ள) பெரிய பாம்புகள், வீரம் பொருந்திய பெருமையையுடைய யானைகள் (தம்) வயிற்றினிடமாக வாயைத் திறந்த வண்ணம் உறங்கிக் கிடந்தன. அறிவற்றவர்கள் தமக்குக் கேடுவந்த போதும் (அக்கேட்டினை) அறிவாரோ? (அறியார்).

கு :—கறங்கு - காற்றாடி. கதுவவாங்கி - பற்றிப் பிடுங்கி. கடலில் பெய்த போழ்தத்தும் - கடலில் இட்டபோதும். மலைப்பாம்புகள் யானைகளை விழுங்கும் என்பது "கரிய மாமுகிற் படலங்கள் கிடந்தவை முழங்கிடக்களிறென்று, பெரிய மாசுணம் வரையெனப் பெயர்தரு பிரிதி யெம் பெருமானை" (பெரிய திருமொழி 1-2-10) என்பதனால் அறியப்படும். வானரங்கள் மலைகளைப் பெயர்த்துக் கடலில் போட்ட போதும், மலைப்பாம்புகள் யானைகளை விழுங்கிக் கொண்டு தம் உறக்கத்தினின்றும் நீங்காதிருந்தன. அறிவற்றவர்கள் கேடுற்றபோதும் உணரமாட்டார்களென்பதை இம்மலைப் பாம்புகளின் செயல் விளக்கி நிற்கின்றது.
(20)

6823. இழையெனத் தகைய மின்னி
னெயிற்றின முழக்க மெய்தப்
புழையுடைத் தடக்கை யொன்றோ
டொன்றிடை பொருந்தச் சுற்றிக்
கழையுடைக் குன்றின் முன்றி
லுருமொடு கலந்த கால
மழையெனப் பொருத வேலை
மகரமு மத்த மாவும்.

இழை எனத் தகைய மின்னின்
எயிற்றின, முழக்கம் எய்த,
புழையுடைத் தடக்கை ஒன்றோடு
ஒன்று இடை பொருந்தச் சுற்றி;
கழையுடைக் குன்றின் முன்றில்,
உருமொடு கலந்த கால
மழை எனப் பொருத—வேலை
மகரமும் மத்த மாவும்.

பொ :—கடலின்கண் உள்ள மகர மீன்களும் மதங்கொண்ட யானைகளும், ஆபரணம் என்று சொல்லத்தக்க மின்னினை ஒத்த எயிறுகளையுடையன வாய்த் துவாரம் பொருந்திய பெரிய துதிக்கையை ஒன்றோடொன்று இடையே பொருந்தும்படி சுற்றி, மூங்கிலையுடைய மலையின் முன்னிடத்திலே, இடியொடு பொருந்திய ஊழிக் காலத்து மேகம்போலப் பெருமுழக்க முண்டாகுமாறு போரிட்டன.

கு :—இழை எனத்தகைய எயிற்றின, மின்னின் எயிற்றின எனத் தனித்தனி இயைக்க. எயிறு - தந்தமும் கோரப்பல்லும். மகர மீன்களுக்கும் துதிக்கை உண்மையின் ' புழையுடைத் தடக்கை ஒன்றோடு ஒன்று இடை பொருந்தச் சுற்றி ' என்றார். உலகம் அழியுங் காலத்துப் பெய்யும் மழை இடியொடுகூடிப் பெரு முழக்கத்தோடு பெய்யுமாதலின், மகர மீன்களும் யானைகளும் போர் செய்தபோது உண்டாகிய முழக்கத்திற்கு அதனை உவமையாகக் கூறினார். வேலை மகரமும் மத்தமாவும் இடைபொருந்தச் சுற்றி, குன்றின் முன்றில் உருமொடு கலந்த காலமழை என முழக்கம் எய்தப் பொருத என முடிக்க (21)

6824. பொன்றின சிறிய வாய
புண்ணியம் புரிந்தோர் போலக்
குன்றுகள் குரக்கு வீரர்
குவித்தனர் நெருப்புக் கோப்ப
ஒன்றின்மே லொன்று வீழ
வுகைத்தெழுந் தும்பர் நாட்டுச்
சென்றுமே னிலைபெ றாது
திரிந்தன சிகரச் சில்லி.

பொன்றின, சிறிய ஆய புண்ணியம் புரிந்தோர் போல,— குன்றுகள் குரக்கு வீரர் குவித்தனர், நெருப்புக் கோப்ப ஒன்றின்மேல் ஒன்று வீழ, உகைத்து எழுந்து, உம்பர் நாட்டுச் சென்று, மேல் நிலைபெறாது, திரிந்தன—சிகரச் சில்லி.

பொ :—வானர வீரர்கள் குன்றுகளைக் கொண்டு வந்து குவித்தனர், (அவை) நெருப்புப் பிறக்குமாறு ஒன்றின்மேல் ஒன்று வீழ்தலால் சிகரம் உடைந்ததனாலாகிய சிறு துண்டுகள், வேகத்தோடு எழுந்து வானுலகம் சென்று, இறந்தவராகிய சிறிதாகிய புண்ணியத்தைச் செய்தவர்போல, மேலே நிலைத்து நிற்க முடியாமல் கீழே வீழ்தலைப் பொருந்தின.

கு :—பொன்றின என்பது புரிந்தோர் என்னும் பெயரோடு இயையும். சிறிதாகிய புண்ணியம் செய்து இறந்தோர், அப்புண்ணியப் பயனால் சுவர்க்கத்தை அடைந்தும் அதன் குறைவால் மீண்டும் பூமியில் வருதல் போல், சிகரம் உடைந்ததனாலாகிய சிறு துண்டுகள், மேலே சென்றும் அங்கே நிற்றலைப் பெறாது கீழே திரும்பி வந்தன என்பது கருத்து. நெருப்புக்கோப்ப - நெருப்பு உண்டாகுமாறு. உம்பர் நாடு - வானுலகம். (22)

6825. கூருடை யெயிற்றுக் கோண்மாச்
சுறவின மெறிந்து கொல்லப்
போருடை யரியும் வெய்ய
புலிகளும் யாளிப் போத்தும்
நீரிடைத் தோற்ற வன்றே
தந்நிலை நீங்கிற் றென்றால்
ஆரிடைத் தோலார் மேலோ
ரறிவிடை நோக்கி னம்மா?

கூருடை எயிற்றுக் கோள்மாச் சுறவு இனம் எறிந்து கொல்ல,
போருடை அரியும், வெய்ய புலிகளும், யாளிப் போத்தும்,
நீரிடைத் தோற்ற அன்றே?—தம்நிலை நீங்கிற்று என்றால்
ஆரிடைத் தோலார் மேலோர், அறிவிடை நோக்கின் அம்மா?

பொ :—கூரிய எயிற்றையுடைய பிற உயிர்களைப் பற்றிக் கொள்ளும் விலங்காகிய சுறுமீன்கள் வெட்டிக்கொல்ல, (அதனால்) போர் செய்யுந் தன்மையுள்ள சிங்கங்களும் கொடிய புலிகளும் ஆண் யாளிகளும் நீரிலே தோற்றன; (இறந்தன); (இஃது என்ன வியப்பு); அறிவினால் ஆராய்ந்து பார்த்தால் (ஆற்றலால் மிகவும்) மேம்பட்டவர்களும் தமக்கு (வலிதாகிய) இடம் நீங்கிற்றாயின் யாரிடத்தில்தான் தோல்வியடையமாட்டார்கள்? (மிக்க வலி குறைந்தவர்களிடத்தும் தோல்வியடைவர்.)

கு :—மாச்சுறவு என்பதற்குப் பெரிய சுறவு என்றும் பொருள் கொள்ளலாம். ‘தம் நிலை நீங்கிற்றென்றால், ஆரிடைத் தோலார் மேலோர் அறிவிடை நோக்கின் அம்மா’ என்பது வேற்றுப் பொருள் வைப்பணி. ‘நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின், நீங்கின் அதனைப் பிற’ (குறள் - 495) என்பதும், ‘காலாழ் களரின் நரியடும் கண் அஞ்சா, வேலாள் முகத்த களிறு’ (குறள் - 500) என்பதும், ‘சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி, துலையல்லார் கண்ணும் கொளல்’ (குறள் - 986) என்பதும் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கன. (23)

6826. ஒள்ளிய வுணர்வு கூட
வுதவல ரெனினு மொன்றோ
வள்ளிய ராயோர் செல்வ
மன்னுயிர்க் குதவு மன்றே
துள்ளின குதித்த வானத்
துயர்வரைக் குவட்டிற் றூங்கும்
கள்ளினை நிறைய மாந்திக்
கவியெனக் களித்த மீன்கள்.

ஒள்ளிய உணர்வு கூட உதவலர் எனினும் ஒன்றோ,
வள்ளியர் ஆயோர் செல்வம் மன்னுயிர்க்கு உதவும் அன்றே?—
துள்ளின, குதித்த, வானத்து உயர்வரைக் குவட்டில் தூங்கும்
கள்ளினை நிறைய மாந்தி, கவி எனக் களித்த மீன்கள்.

பொ :—வானத்தளவு உயர்ந்த மலைச் சிகரத்தில் தொங்கும் தேனினை நிறையப் பருகி வானரங்களைப் போலக் களித்த மீன்கள் துள்ளினவாய்க் குதித்தன. வண்மைத்தன்மையுடையோருடைய செல்வம், விளக்கத்தையுடைய அறிவு பொருந்த(ப் பிறருக்கு உதவ வேண்டு மென்னும் எண்ணத்தோடு) அவர்கள் உதவா விட்டாலும் கூட நிலைபெற்ற உயிர்களுக்கு உதவுமல்லவா ?

கு :—வண்மையுடையோர் தம் செல்வத்தைப் பிறருக்கு உதவ வேண்டு மென்று நினைத்து உதவி செய்யா விட்டாலும், வண்மைத் தன்மையுடையோர் செல்வமாதலின் அது உயிர்களுக்குத் தவறாமல் பயன்பட்டே தீரும். இந் நிகழ்ச்சியைக் கடலில் போடப்பட்ட மலை களிலுள்ள தேனைப் பருகிக் களித்துத் துள்ளிக் குதிக்கும் மீன்கள் புலப்படுத்துகின்றன. மலைகள் தம்மிடத்திலுள்ள தேனை மீன்களுக்கு நல்க வேண்டுமென்னும் கருத்தில்லாதன ஆயினும் அம்மலையிலுள்ள தேன் மீன்களுக்குப் பயன்படுதல், வண்மைத் தன்மையுடையோர் தம் செல்வத்தை உதவவேண்டு மென்னும் எண்ணத்தோடே உதவாவிட்டாலும் அவர்களுடைய செல்வம் உயிர்களுக்குத் தவறாமல் பயன்படும் என்பதை விளக்கிக் காட்டுகின்றது. உணர்வு - அறிவு. உணர்வு, பொருள்களை விளக்குந் தன்மையுடையதாதலின் அதற்கு 'ஒள்ளிய' என்னும் அடைமொழி கொடுக்கப்பட்டது. உதவலர் எனினும் ஒன்றோ - உதவாவிட்டாலும் கூட. ஒன்றோ என்பதை அசையாகக் கொள்ளினும் அமையும். (24)

6827. மூசெரி பிறக்க மீக்கொண்
டிறக்கிய முடுக்கந் தன்னால்
கோய்சொரி நறவ மென்னத்
தண்புன லுகுக்குங் குன்றின்
வேய்சொரி முத்துக் கம்மா
விருந்துசெய் திருந்த விண்ட
வாய்சொரி யிப்பி யோடும்
வலம்புரி யுமிழ்ந்த முத்தம்.

மூசு எரி பிறக்க, மீக்கொண்டு, இறக்கிய முடுக்கம் தன்னால், கோய் சொரி நறவம் என்னத் தண்புனல் உகுக்கும் குன்றின் வேய் சொரி முத்துக்கு, அம்மா விருந்து செய்திருந்த—விண்ட வாய் சொரி இப்பி யோடும் வலம்புரி உமிழ்ந்த முத்தம்.

பொ :—(தலையின் மேலே தாங்கிக் கொண்டு வந்து செறிந்த நெருப்பு உண்டாகுமாறு (கடலில்) போட்ட வேகத்தினால், கள் முகக்கும் பாத்திரத்திலிருந்து சொரிகின்ற கள்ளைப்போல நீரைச் சொரிகின்ற மலையிலே உள்ள மூங்கில்கள் சொரிந்த முத்துக்களுக்கு, பிளந்த வாய் சொரிந்த இப்பி முத்துக்களும் வலம்புரிச் சங்கம் சொரிந்த முத்துக்களும் விருந்து செய்திருந்தன.

கு :—மீக்கொண்டு - (தலையின்) மேல் தாங்கிக் கொண்டு வந்து. இறக்கிய முடுக்கம் தன்னால் - (கடலில்) போட்ட வேகத்தினால். கோய் - கள் முகக்கும் பாத்திரம். 'ஓரிற் கோயின் தேருமால் நின்னே' (புறம் - 300). மீக்கொண்டு இறக்கிய முடுக்கம் தன்னால் தண்புனல் உகுக்கும் குன்று எனவும், கோய் சொரி நறவம் என்னத் தண்புனல் உகுக்கும் குன்று எனவும் தனித்தனி இயைக்க. அம்மா - இது வியப்புக் குறித்து நின்றது. இப்பி முத்தும் சங்கு முத்தும் வேய் முத்துக்களுக்கு இடங்கொடுத்த தன்மையை 'விருந்து செய்திருந்த' என்றார். இப்பியும் வலம்புரிச் சங்கமும் முத்துக்களைச் சொரிந்த தன்மை, வேய் முத்துக்களுக்கு விருந்தளித்தது போன்றிருந்தது என்னுங் கருத்தில் 'விருந்து செய்திருந்த' என்று கூறினாரெனினும் அமையும். (25)

52-ஆம் எண்ணுள்ள அச்சுப் பிரதியில் இச்செய்யுளை யடுத்துப் பின்வருமாறு ஒரு மிகைப்பாடல் காணப்படுகிறது.

6827. (a) வல்வி லங்கு வழாத்தவர் மாட்டருள்
செல்வ லம்பெறும் சிந்தையின் தீர்வரோ
இவ்வி லங்கல் விடோமினி யென்பபோல்
எல்வ யங்கு மிரவிவந் தெய்தினான்.

6828. விண்ட லந்தொடு மால்வரை வேரொடும்
★ கொண்ட லங்கொளி வீரர் குவித்தலால்
திண்ட லங்கட லானது நீர்செல
மண்ட லங்கட லாகி மலைந்ததே.

விண் தலம் தொடு மால்வரை வேரொடும்
கொண்டு, அலங்கு ஒளி வீரர் குவித்தலால்,
திண் தலம், கடல், ஆனது; நீர் செல,
மண் தலம் கடல் ஆகி மலைந்ததே.

பொ :—ஆகாயத்தைத் தொடுகின்ற பெரிய மலைகளை வேரோடும் பெயர்த்துக் கொண்டு வந்து விளங்குகின்ற ஒளியையுடைய (வானர)

வீரர்கள் (கடலில்) குவித்தலினாலே, கடலானது, நீர் அப்பாற் செல்லுதலினால் வலிய பூமியாயிற்று. (கடலிலுள்ள) நீர் வந்து பாய்தலினால், பூமி கடல் போன்றாகி(க் கடலாக இருந்து மாறிய நிலத்தொடு) பொருந்தது.

கு :—அலங்குதல் - அசைதல்; விளங்குதல். நீர் செல என்பது இடைநிலை விளக்காய் நீர் அப்பாற் சென்றுவிட எனவும், நீர் வந்து பாய எனவும் இரு பொருள் தந்து ஈரிடத்தும் இயைந்து நின்றது. நீர் செல (நீர் அப்பாற் சென்றுவிடக்) கடல் திண்தலம் ஆனது எனவும், நீர் செல (நீர் வந்து பாய) மண்தலம் கடலாகி மலைந்ததே எனவும் இயைக்க. மலைதல் - பொருதல். வானர வீரர்கள் மலைகளைக் கடலில் கொண்டுபோய்ப் போட்டமையால் கடல் நிலமாயிற்று : நிலம் கடலாயிற்று என்றபடி. (26)

6829. அய்யன் வேண்டி னதுவிது வாமன்றே
வெய்ய சீயமும் யாளியும் வேங்கையும்
மொய்கொள் குன்று முதலின மொய்த்தலால்
நெய்தல் வேலி குறிஞ்சி நிகர்த்ததால்.

அய்யன் வேண்டின் அது இது ஆம் அன்றே—
வெய்ய சீயமும், யாளியும், வேங்கையும்,
மொய்கொள் குன்று முதலின மொய்த்தலால்,
நெய்தல் வேலி குறிஞ்சி நிகர்த்ததால்.

பொ :—கொடிய சிங்கமும் யாளியும் வேங்கைப் புலியும் நெருங்குதலைக் கொண்ட மலைகளும் முதலாயின செறிந்திருத்தலால், நெய்தலின் எல்லையானது குறிஞ்சி நிலத்தை ஒத்துத் தோன்றியது. யாவர்க்குந் தலைவனாகிய இறைவன் விரும்பினால், ஒன்று மற்றொன்று ஆகுமன்றோ"

கு :—வானர வீரர்கள் கடலில் அணைகட்டுதற் பொருட்டு மலைகளைக் கடலில் போட்டதனால், மலைகளிலுள்ள சிங்கமும் யாளியும் வேங்கைப் புலியும் கடலில் செறிந்து காணப்பட்டமையின், கடல் நிலம் மலைநிலம்போலக் காட்சியளிப்பதாயிற்று. 'ஐயன்வேண்டின் அது இதுவாம் அன்றே' என்பது வேற்றுப் பொருள் வைப்பணி. அது இதுவாம் என்றது ஒன்று மற்றொன்றாகும் என்னும் பொருள் குறித்து நின்றது. (27)

6830. யானு ணுதன வீங்கிவை யென்னவே
தீனு ணுதன வென்னிது செய்யுமே
மானு ணுத திரைக்கடல் வாழ்தரு
மீனு ணுதன வில்லை விலங்கரோ.

யான் உணுதன ஈங்கு இவை' என்னவே
தீன் உணுதன; என் இது செய்யுமே?
மான் உணுத திரைக்கடல் வாழ்தரு
மீன் உணுதன இல்லை விலங்கு அரோ.

பொ :—(கடலிடத்தே மலையோடு வீழ்ந்த) மான்கள் இக்கடலிடத்தேயுள்ள மீன்கள் 'என்னால் உண்ணப்படாதனவாகும்' என்றெண்ணி (ஆண்டுள்ள) உணவாகிய அவைகளை உண்ணுதன ஆயின. (ஐயோ) இம் மான் கூட்டம் எவற்றையுண்டு உயிர் வாழுமோ? மானால் உண்ணப்படாத, அலைகளையுடைய கடலில் வாழும் மீன்களால் உண்ணப்படாதனவாகிய விலங்குகளோ இல்லை.

கு :—தீன் - தீனி. செயப்படு பொருளை உணர்த்தும் இகர விகுதி தொக்கு முதனிலை நீண்டு நின்றது. என் இது செய்யுமே என்றது கடலிடத்தேயுள்ள இம் மீன்களைத் தின்னுத இம் மான் கூட்டம் எவற்றையுண்டு உயிர் வாழுமோ என இரக்கப் பொருள் குறித்து நின்றது. மான் என்பதை மான், ஈங்கிவை யான் உணுதன என்னவே தீன் உணுதன, என் இது செய்யுமே எனவும், மான் உணுத திரைக்கடல் வாழ்தரு மீன், உணுதன விலங்கு இல்லை எனவும் ஈரிடத்தும் இயைக்க. மான் உணுத மீன் எனவும் திரைக்கடல் வாழ்தரு மீன் எனவும் இயையும். மான் உணுத திரைக்கடல் என இயைத்தலும் அமையும். மான் கடலிலுள்ள மீன்களை உண்ணுதிருக்க, மீன்களோ மலையினின்றும் வந்து வீழ்ந்த எல்லா விலங்குகளையும் உண்டன என்பது கருத்து. (28)

6831. வவ்வி லங்கு வளர்த்தவர் மாட்டருள்
செவ்வி லங்கலில் சிந்தையர் தீர்வரோ
இவ்வி லங்கல் விடேமினி யென்பபோல்
எவ்வி லங்கும்வந் தெய்தின வேலையே.

வவ்வில் அங்கு வளர்த்தவர் மாட்டு அருள்
செவ் விலங்கல் இல் சிந்தையர் தீர்வரோ—
'இவ் விலங்கல் விடேம்' இனி என்பபோல்
எவ் விலங்கும் வந்து எய்தின வேலையே.

பொ :—(வானரங்கள் மலைகளைப் பெயர்த்தவிடத்து) எல்லா விலங்குகளும் இனி இந்த மலைகளை விடமாட்டோம் என்பனபோல (அந்த மலைகளோடே) வந்து கடலை அடைந்தன. செம்மையினின்றும் நீங்காத மனத்தினையுடையோர், தம்மை வளர்த்தவரைப் (பிறர்) பற்றிக்கொண்டு செல்லும்போது அந்நிலைமையில் அவர் மாட்டுச் செலுத்தும் அருளினை நீங்குவரோ ? (நீங்கமாட்டார்).

கு :—செவ்விலங்கல் இல் சிந்தையர் வளர்த்தவர் வவ்வில் அங்கு (அவர்) மாட்டு அருள் தீர்வரோ என்றியைக்க; செவ்விலங்கல் இல் சிந்தையர் - செம்மையினின்றும் நீங்காத மனத்தினையுடையோர். இராவணன் துன்ப நிலையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும்போது அவனை விட்டு வாரேன் என வீடணனிடம் கும்பகருணன் கூறியதாக வுள்ள 'நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிது நாள் வளர்த்துப் பின்னைப், போர்க்கோலஞ் செய்துவிட்டாற் குயிர்கொடா தங்குப் போகேன்' (கும்பகருணன் வதைப்படலம் - 154) என்பது ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது. முதல் இரண்டடிகளில் வேற்றுப் பொருள் வைப்பணி அமைந்துள்ளது. (29)

23, 26, 43, 44 ஆம் எண்ணுள்ள சுவடிகளில் இச்செய்யுளை அடுத்துப் பின்வருமாறு ஒரு மிகைப் பாடல் காணப்படுகின்றது.

6831. (a) தம்மி னத்தொரு வற்கொரு சார்வுற
விம்ம லுற்று விடாதுறை வோர்கள்போற்
செம்மை மிக்க குரக்கினம் சேர்க்கையால்
எம்ம லைக்குல முங்கட லெய்துமே.

6832. கனித ருந்நெடுங் காய்தரு நாடொறும்
இனித ருந்தவ நொய்தினி யற்றலால்
பனித ருங்கிரி தம்மனம் பற்றுறும்
முனிவ ரும்முனி யார்முடி வுன்னுவார்.

கனி தரும், நெடுங்காய் தரும், நாள்தொறும்
இனிது அருந்தவம் நொய்தின் இயற்றலால்,—
பனி தரும் கிரி தம் மனம் பற்று உறும்
முனிவரும் முனியார், முடிவு உன்னுவார்.

பொ :—நாள்தொறும் கனி தருவதும் நீண்ட காய்களைத் தருவதும் குளிர்ச்சியைத் தருவதுமான மலை அரிய தவத்தை இனிதாக எளிதிற் செய்தற்கு இடமாக இருத்தலால், தம் மனம் (அம்மலையின் பால்) பற்றுதலையுடைய முனிவரும், (அணை அமைத்தலாகிய இச்

செயலால் இராவணன் முதலிய தீயோர் இறக்க, நல்லோர் நலம் பெறுவர் என்னும்) பின் விளைவினை நினைத்தவர்களாய், அம்மலையினைப் பெயர்த்தமைக்காக வானர வீரர்கள்பால்) சினங்கொள்ளாதவராயினர்.

கு :—கனிதருவதும் நெடுங்காய் தருவதும் பனிதருவதும் ஆகிய கிரி என்க. தவம் நொய்தின் இயற்றலால் கனிதரும் நெடுங்காய் தரும் பனிதரும் கிரி(யினிடத்துத்) தம் மனம் பற்றுறும் முனிவரும் முடிவு உன்னுவார் (ஆகி) முனியார் என முடிக்க. கனியும் காயும் குளிர்ச்சியும் தந்து தவத்தை இனிதாகச் செய்தற்கு ஏற்ற இடமாக இருத்தலால் முனிவர்கள் அம்மலையின்மேல் பற்றுக்கொள்வாராயினர். (30)

6833. புலையின் வாழ்க்கை யரக்கர் பொருப்புளார்
தலையின் மேல்வைத்த கையினர் சாற்றுவார்
மலையி லேமற்று மாறினி வாழ்வதோர்
நிலையி லேமென் றிலங்கை நெருங்கினர்.

புலையின் வாழ்க்கை அரக்கர், பொருப்பு உளார்,
தலையின் மேல் வைத்த கையினர், சாற்றுவார்,
'மலை இலேம்; மற்று, மாறு இனி வாழ்வது ஓர்
நிலை இலேம்' என்று, இலங்கை நெருங்கினர்.

பொ :—மலையிலுள்ளவராகிய மாமிசத்தால் உயிர் வாழ்தலைக் கொண்ட அரக்கர்கள், தலையின்மேல் வைத்த கைகளையுடையராய், இனி (யாம்) வாழ்வதற்கு (உரியது) ஒரு மலையினை உடையேம் அல்லேம். (ஆதலின் இனி) நிலையாக இருத்தற்குரிய இடமும் உடையேம் அல்லேம் என்று கூறுவாராய் இலங்கையை நெருங்கலுற்றனர்.

கு :—புலாலுண்டு உயிர் வாழும் வாழ்க்கையைப் 'புலையின் வாழ்க்கை' என்றார். வானர வீரர்கள் மலையினைப் பெயர்த்துக் கடலில் போட்டமையின், அதன்கண் உறைந்த அரக்கர்கள் வாழ்வதற்கு வேறு இடமின்மையின் இலங்கையை அடைவாராயினர். பொருப்புளார் (ஆகிய) அரக்கர் சாற்றுவார் (ஆகி) இலங்கை நெருங்கினர் என்க. அரக்கர் தாம் வாழுமிடம் இழந்த அவலந்தோன்றத் தலையின்மேல் வைத்த கையினை உடையாராயினர். தாங்கமுடியாத துன்பம் வந்துற்றபோது தலையின்மேல் கை வைத்தரற்றுதல்

'தலையின்மேல் சுமந்தகையள் தழலின்மேல் மிதிக்கின்றுள்போல்' (யுத்தகாண். இராவணன் சோகப்படலம்-45) என்னும் பாடலாலும் உணரலாம். (31)

6834. முழுக்க நீரிற் புகாமுழு கிச்செலாக்
குழுக்க ளோடணை கோளரி யாளிகள்
இழுக்கில் பேரணை யின்னிரு பக்கமும்
ஒழுக்கின் மாலை வகுத்தன வொத்தவால்.

முழுக்க நீரில் புகா, முழுகிச் செலா,
குழுக்களோடு அணை கோள் அரி, யாளிகள்,
இழுக்கு இல் பேர் அணையின் இரு பக்கமும்
ஒழுக்கின் மாலை வகுத்தன ஒத்தவால்.

பொ :—(கடல் நீர் தம்மை) முழுகச் செய்யும்படி (அக்கடல்) நீரிலே புகாதனவும், (தாம் நீரில் பாதி) முழுகி (அவ்விடத்தை விட்டு)ச் செல்லாதனவுமான (தத்தம்) இனங்களுடன் சேர்ந்திருக்கின்ற வலிய சிங்கங்களும் யாளிகளும், குற்றமற்ற பெரிய அணையின் இரு பக்கங்களிலும் ஒழுங்கையுடைய மாலையை அமைத்திருந்தன வற்றைப் போன்றன.

கு :—சிங்கங்களும் யாளிகளும் மீன் முதலிய நீர்வாழுயிர்களுக்கு அஞ்சித் தம்மை மூழ்கடிக்கச் செய்யும் ஆழமான நீரிற் செல்லாமல், நீரில் பாதியளவு முழுகிப் பாதி வெளியில் தெரியும்படி அணையின் இரு பக்கமும் தத்தம் இனங்களோடே செல்வனவாயின. அவைகள் இரு பக்கமும் தத்தம் இனங்களுடன் சேர்ந்திருந்த தோற்றம், அணையின் இரு பக்கமும் மாலையை அமைத்த தோற்றம் போன்றிருந்தது. (32)

6835. பளிக்கு மால்வரை முந்து படுத்தன
ஒளிக்கு மாழி கிடந்தென வோர்கிலர்
வெளிக்கு மால்வரை வேண்டு மெனக்கொணர்ந்
தளிக்கும் வானர வீர ரநேகரால்.

பளிக்கு மால்வரை முந்து படுத்தன
ஒளிக்கும் ஆழி கிடந்து என ஓர்கிலர்,
'வெளிக்கு மால்வரை வேண்டும்' எனக் கொணர்ந்து,
அளிக்கும் வானர வீரர் அநேகரால்.

பொ :—முன்பே (கடலில் தாம்) இட்டனவாகிய பெரிய பளிக்கு மலைகளை அறியாதவராய், அணை கட்டப்படவேண்டிய கடல் இன்னும் உள்ளதென்று நினைத்து, அந்த இடைவெளியை அடைத்தற்குப் பெரிய மலை வேண்டும் என்று (மலைகளைப் பெயர்த்துக்) கொண்டுவந்து (அங்கே இடுமாறு) கொடுக்கும் வானர வீரர் பலராவர்.

கு :—பளிக்கு மலைகளை யிட்டமையின் அவ்விடம் நீரின் தோற்ற முடையதாகவே தோன்ற, அதனை அடைக்கப்படாத இடைவெளி என்று கருதி, அதனை அடைத்தற்கு வானர வீரர்கள் பெரிய மலைகளைக் கொண்டுவந்து தருவாராயினர். முந்து படுத்தன பளிக்கு மால்வரை ஓர்கிலர் ஒளிக்கும் ஆழி கிடந்தது என வெளிக்கு மால் வரை வேண்டுமெனக் கொணர்ந்து அளிக்கும் வானர வீரர் அநேகர் என முடிக்க. ஒளிக்கும் ஆழி - ஒளிக்கப்பட வேண்டிய கடல்; அஃதாவது அணை கட்டப்பட வேண்டிய கடல். ஓர்தல் - உணர்தல். கிடந்தது என என்பது கிடந்தென எனத் தொகுத்தல் விகாரமாக நின்றது. (33)

6836. பாரி ளுண்முது குந்நெடும் பாழ்பட
மூரி வானரம் வாங்கிய மொய்ம்மலை
வேரி னுமென வெம்முழை யின்னுழை
சோரு நாக நிலனுறத் தூங்குமால்.

பாரினுள் முதுகும் நெடும் பாழ்பட,
மூரி வானரம் வாங்கிய மொய்ம் மலை
வேரின் ஆம் என, வெம் முழையின் உழை
சோரும் நாகம் நிலன் உறத் தூங்குமால்.

பொ :—பூமிதேவியின் முதுகும் மிகவும் பாழ்படும்படி வலிய வானரம் பறித்துக்கொண்டு வந்த கூட்டமாகிய மலைகள் வேரினை உடையனவாகும் என்னும்படி கொடிய மலைக் குகைகளிலிருந்து வெளிப்பட்ட நிலையில் காணப்படும் நாகம் நிலத்தில் பொருந்தும்படி தொங்கும்.

கு :—வானரங்கள் மலைகளைப் பெயர்த்துக்கொண்டு செல்லுத லால் பூமி வெற்றிடமாகத் தோற்றமளித்தலின் 'பாரினுள் முதுகும் நெடும் பாழ்பட' என்றார். பெயர்த்துக்கொண்டு வந்த மலைகளின் குகைகளிலே வெளிப்பட்டுத் தொங்கும் நிலையில் காணப்படும் பாம்பு மலையின் வேர் போலத் தோன்றுவதாயிற்று. மொய்மலை - கூட்ட

மாகிய மலைகள். வேரின் ஆம் என - வேரோடு கூடியதாம் என வெம்முழையின் உழைசோரும்—கொடிய குகைகளிலிருந்து வெளிப் பட்ட நிலையில் தொங்கும். பாம்பு மலையின் வேர்போலத் தொங்கும் என்றது தன்மைத் தற்குறிப்பேற்ற அணி. (34)

6837. அருணச் செம்மணிக் குன்றய லேசில
இருணற் குன்ற மடுக்கின வேய்ந்தன
கருணைக் கொண்டல் வறியன் கழுத்தென
வருணற் கீந்த வருண சரத்தையே.

அருணச் செம்மணிக் குன்று அயலே சில
இருள் நற் குன்றம் அடுக்கின, ஏய்ந்தன—
கருணைக் கொண்டல், ‘வறியன் கழுத்து’ என
வருணற்கு ஈந்த வருண சரத்தையே.

பொ :—சிவந்த மாணிக்க மலையின் பக்கத்திலே சில இருள் நிறம் வாய்ந்த நீலக்குன்றுகள் அடுக்கப்பட்டவை, கருணையைப் பொழியும் மேகம் போன்றவனாகிய இராமன், (இரத்தின மாலையைத் தனக்கு முன்பு காணிக்கையாக வருணன் கொடுத்துவிட்டதனால்) வெறுங் கழுத்தை உடையவனாக இருக்கின்றான் என்று கருதி, (அவ்) வருண னுக்குக் கொடுத்த பன்னிற மணிமாலையைப் போன்றிருந்தன.

கு :—அருணமணி - மாணிக்கம். இருள் நற்குன்றம் - இருள் நிறம் வாய்ந்த நீல மலைகள். வருணன் இரத்தின மாலையை இராம னுக்குக் காணிக்கையாகத் தந்தது “பாயிருள் சீக்குந் தெய்வப் பரிதி யைப் பழிக்குமாலை, மாயிருங் கரத்தான் மண்மே லடியுறையாக வைத்து...சரணமென்றடியில் வீழ்ந்தான்” (வருணனை வழிவேண்டு படலம் 73) என்பதால் பெறப்படும். சிவந்த மாணிக்கமலையின் பக்கத்தே இருள் நிறம் வாய்ந்த நீல மலைகள் அடுக்கப்பட்டிருந் தவை, இராமன் வருணனுக்கீந்த பன்னிற மணிமாலையை ஒத்துத் தோன்றின. ‘வறியன் கழுத்து என’ என்பதை கழுத்து வறியன் என என்று மாற்றுக. ஏய்ந்தன - ஒத்தன. அடுக்கின வருண சரத்தை ஏய்ந்தன என்க. (35)

6838. ஏய்ந்த தம்முடம் பிட்ட வுயிர்க்கிடம்
ஆய்ந்து கொள்ளு மறிஞரி ளூழ்கடல்
பாய்ந்த பண்டுறை யும்மலைப் பாந்தள்கள்
போந்த மாமலையின் முழை புக்கவே.

ஏய்ந்த தம் உடம்பு இட்ட உயிர்க்கு இடம்
ஆய்ந்து கொள்ளும் அறிஞரின், ஆழ்கடல்
பாய்ந்த பண்டு உறையும் மலைப் பாந்தள்கள்.
போந்த மா மலையின் முழை, புக்கவே.

பொ :—(மலையை எறிந்த வேகத்தினால்) ஆழமான கடலிற் பாய்ந்த மலைப்பாம்புகள், தம் உயிர்க்குப் பொருந்திய தம் உடம்பை வைத்த இடத்தை ஆராய்ந்து (அவ்வுடம்பை மீண்டும்) கொள்ளும் யோகியரைப் போல, (க் கடலில் எறியப்பட்டு) வந்து வீழ்ந்த பெரிய மலைகளிலுள்ள தாம் முன்பு வசித்த (அக்) குகைகளிலேயே புகுந்தன.

கு :—தம் உயிர்க்கு ஏய்ந்த உடம்பு இட்ட இடம் ஆய்ந்து கொள்ளும் அறிஞரின் என்றியைக்க. கூடுவிட்டுக் கூடு பாய்தலென்னும் சித்தின் இயல்பால் பிறிதோர் உடம்பில் புகவல்ல யோகியர் மீண்டும் தம் உடம்பில் சென்று புகுதல்போல, வானர வீரர்கள் மலையினைப் பெயர்த்துக் கடலில் வீசிய வேகத்தால் மலைக் குகைகளினின்றும் கடலில் நழுவி விழுந்த பாம்புகள், மீண்டும் அம் மலையிலுள்ள தமக்குரிய குகைகளிலேயே சென்று புகுந்து கொண்டன. முழை உடலாகவும் மலை அவ்வுடலை இட்ட இடமாகவும் பாம்பு அதனை ஆய்ந்து கொள்ளும் அறிஞராகவும் கொள்க. ஆழ் கடல் பாய்ந்த மலைப் பாந்தள்கள், அறிஞரின், போந்த மாமலையின் பண்டு உறையும் முழை புக்கவே என இயைக்க. இஃது உவமையணி. (36)

6839. சேது வின்பெரு மைக்கிணை செப்பவோர்
ஏது வேண்டுமென் றெண்ணுவ தென்கொலோ
தூத னிட்ட மலையின் றுவலையால்
மீது வீட்டுல குற்றன மீன்களும்.

சேதுவின் பெருமைக்கு இணைசெப்ப, ஓர்
ஏது வேண்டும் என்று எண்ணுவது என்கொலோ-
தூதன் இட்ட மலையின் துவலையால்,
மீது வீட்டு உலகு உற்றன, மீன்களும்.

பொ :—சேதுவின் பெருமைக்கு ஏற்றதாகச் சொல்ல ஒரு காரணம் வேண்டுமென்று எண்ணுவது எதற்காக? இராம தூதனாகிய அநுமன் இட்ட மலையினால் (வானத்துத் தெறித்த கடலின்) நீர்த் திவலையோடு மீன்களும் மேலதாகிய வீட்டுலகத்தை அடைந்தன.

கு :—கடல்வாழ் மீன்களும் நீர்த் திவலையோடு வீட்டுலகத்தை அடைந்தமையே சேதுவின் பெருமையை விளக்குதற்குப் போதிய சான்ருகும். வேறு ஒரு காரணமும் வேண்டியதில்லை என்றபடி. துவலையால் - துவலையோடு. 'ஆல்' உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. (37

6840. நீல னிட்ட நெடுவரை நீணில
மூல முட்டலின் மொய்புனல் கைம்மிகக்
கூல மிட்டிய வார்கலி கோத்ததால்
ஓல மிட்டெழுந் தோடி யுலகெலாம்.

நீலன் இட்ட நெடுவரை நீள் நில
மூலம் முட்டலின், மொய்புனல் கைம்மிக,
கூலம் இட்டிய ஆர்கலி கோத்ததால்
ஓலமிட்டு எழுந்து ஓடி, உலகு எலாம்.

பொ :—நீலன் (கடலில்) இட்ட பெரிய மலையானது நீண்ட பூமியின் அடிவரை சென்று தாக்குதலினுலே மிகுந்த நீர் எல்லை கடந்து மிகுதலால், கரை சிறிதாகிய கடல் நீர் ஒலித்தெழுந்தோடி உலகமெல்லாம் பாய்ந்தது.

கு :—நீள் நில மூலம் - நீண்ட பூமியின் அடிப்பாகம்; அஃதாவது பாதாளம். நீலன் இட்ட நெடுவரையால் மீதெழுந்த கடல்நீர் ஒலித்தெழுந்து ஓடி உலக முழுவதும் பாய்ந்தது என்றபடி. கைம்மிகுதல்- எல்லை கடந்து மிகுதல். கூலம் இட்டிய ஆர்கலி - கரை சிறிதாகிய கடல்; அஃதாவது கரை இல்லாததாகிய கடல் என்றபடி. கடலுக்குக் கரையில்லை என்பது 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணை மா கடலை' (சேந்தனுர் திருவிசைப்பா 2) என்பதனுல் அறியப்படும். நிறைந்த ஓசை யுடையதென்னுங் காரணத்தால் கடலுக்கு ஆர்கலி என்னும் பெயர் தோன்றுவதாயிற்று. (38)

இச் செய்யுளையடுத்து 18, 21, 23, 26, 29, 31, 40, 43, 44, 52, 60 61, 62, 63-ஆம் எண்ணுள்ள பிரதிகளில் பின்வருமாறு ஒரு மிகைப் பாடல் காணப்படுகிறது.

6840 (a) ஒருவ ராயிர யோசனை யோங்கிய
வருவி மால்வரை விட்டெறிந் தார்த்தலால்
மருவு லாங்கொடி மாடவி லங்கையின்
தெருவெ லாம்புக் குலாயதெண் ணீரெலாம்

6841. மயிந்த னிட்ட நெடுவரை வானுற
உயர்ந்து முட்டி விழவெழுந் தோதநீர்
தியந்த முட்டத் திசைநிலை யானையும்
பெயர்ந்து விட்டவை யாவும் பிளிறுவ.

மயிந்தன் இட்ட நெடுவரை வான் உற
உயர்ந்து முட்டி விழ, எழுந்து ஓத நீர்
தியந்தம் முட்ட, திசைநிலை யானையும்,
பெயர்ந்து விட்டவை, யாவும் பிளிறுவ.

பொ :—மயிந்தன் என்பவன் (கடலில்) இட்ட நீண்ட மலை வானளவும் உயர்ந்து (அதனை) முட்டி விழ (அதனால்) கடல்நீர் எழுந்து திக்கு எல்லைகளெல்லாம் சென்று மோதுதலினாலே, திக்கு யானைகள் எல்லாம் (தம் இடம் விட்டு) நிலை பெயர்ந்தனவாய்ப் பிளிறுவனவாயின.

கு :—திக்+அந்தம்=திகந்தம். திகந்தம் என்னும் வடசொற்றொடர் எதுகை நோக்கித் தியந்தம் என்றாயிற்று. மயிந்தன் இட்ட நெடுவரையால் கடல்நீர் தம்மீது தெறிக்கப்பெற்ற எட்டுத் திக்கிலுள்ள யானைகளும் நிலை பெயர்ந்து பிளிறுவனவாயின. (39)

6842. இலக்கு வன்சர மாயினு மேன்றெதிர்
விலக்கி னும்விலங் காத விலங்கலால்
அலக்க ணெய்த வமுதெழ வாழியைக்
கலக்கி னான்மகன் மீளக் கலக்கினான்.

இலக்கு வன் சரம் ஆயினும், ஏன்று எதிர்
விலக்கினும் விலங்காத விலங்கலால்,
அலக்கண் எய்த,—அமுது எழ ஆழியைக்
கலக்கினான் மகன்—மீளக் கலக்கினான்.

பொ :—(குறித்த வண்ணம்) இலக்கிலே (சென்று தைக்கவல்ல) வலிய அம்பாயினும், (எதிர்க்கும் ஆற்றலுடைய வீரர்) எதிராக நின்று எதிர்த்து விலக்கினாலும், அசையாத (மிக்க வலிமைபடைத்த) மலையைக்கொண்டு, அமிழ்தம் தோன்றுமாறு (முன்பு) கடலைக் கலக்கினவனாகிய வாலியின் மகனாகிய அங்கதன், (கடல்) துன்பம் எய்தும்படி மீளவும் கலக்கினான்.

கு :—இலக்குவன் சரமாயினும் என்பதற்கு இலக்குவன் அம்பு தடுத்து நிற்பினும் எனவும் பொருள் கொள்ளலாம். இலக்குவன்

அம்பின் வலிமை இராவணனால் 'மூளையமை திங்கள்சூடு முக்கணான் முதல்வனாகக், கிளையமை புவனமூன்றும் வந்துடன் கிடைத்த வேனும், வளையமை வரிவில்வாளி மெய்யுற வழங்குமாயின், இளையவன் றனக்குமாற்ரு தென்பெருஞ் சேனைநம்ப' (கும்பகருணன் வதைப் படலம் - 16) என்று வியந்து கூறப்பட்டமை காண்க. இலக்குவன் சரமாயினும் விலங்காத விலங்கல், எதிர் ஏன்று விலக்கினும் விலங்காத விலங்கல் என்று தனித்தனி இயைக்க. விலங்குதல் - இடம் விட்டுப் பெயர்தல்; அசைதல். வாலி கடல் கடைந்து தேவர்க்கு அமுதம் ஈந்தது தாரையாலும் அங்கதனாலும் புலப் படுத்தப்பட்டுள்ளது. (கிட்கிந்தா. அரசியற் படலம் - 6, 11. யுத்த காண். அங்கதன் தூதுப் படலம் - 24) அமுதெழ ஆழியைக் கலக்கினான் - வாலி. மகன் - அவன் மகனாகிய அங்கதன். (40)

6843. மருத்தின் மைந்தன் மணிநெடுந் தோளெனப்
பெருத்த குன்றங் கரடிப் பெரும்படை
விருத்த னிட்ட விசையினின் வீசிய
திருத்தம் வானவர் சென்னியிற் சென்றதால்.

மருத்தின் மைந்தன் மணி நெடுந் தோள் எனப்
பெருத்த குன்றம், கரடிப் பெரும் படை
விருத்தன் இட்ட விசையினின், வீசிய
திருத்தம், வானவர் சென்னியில் சென்றதால்.

பொ :—கரடிப் பெரும்படைக்கு உரிய முதியோனாகிய சாம்ப வான், வாயுவின் மைந்தனாகிய அநுமனது அழகிய பெரிய தோள் போன்று பெருத்த மலையினை இட்ட வேகத்தால் மேலே தெறித்த தீர்த்தம், தேவர்களுடைய தலையிலும் சென்று தெறித்தது.

கு :—மருத்து - காற்று. மருத்தின் மைந்தன் - வாயு தேவனின் புதல்வனாகிய அநுமன். விருத்தன் - வயது முதிர்ந்தவன்; என்றது, நெடுங்காலம் முதுமையுற்று வாழ்ந்த சாம்பவானை. தீர்த்தம் என்னுஞ் சொல் எதுகை நோக்கித் திருத்தம் எனத் திரிந்து நின்றது. (41)

6844. குமுத னிட்ட குலவரை கூத்தரின்
திமித மிட்டுத் திரியுந் திரைக்கடற்
றுமித மூர்புக வானவர் துள்ளினார்
அமுத மின்னு மெழுமெனு மாசையால்.

குமுதன் இட்ட குலவரை கூத்தரின்
திமிதம் இட்டுத் திரியும் திரைக்கடல்
துமி தம் ஊர்புக, வானவர் துள்ளினூர்—
அமுதம் இன்னும் எழும் எனும் ஆசையால்.

பொ :—குமுதன் என்பவன் இட்ட சிறந்த மலையானது கூத்தரைப் போலத் திமிதம் என்னும் ஒலியைச் செய்து சுழலுதற்கிடனாகிய அலைகளையுடைய கடலின் துளி தம்முடைய ஊரிலே புகுதலால், (அதனைக் கண்ட) தேவர்கள் இப்பொழுதும் அமுதம் தோன்றும் என்னும் ஆசையால் மகிழ்ந்து கூத்தாடினர்.

கு :—திமிதம் - குதித்தாடுதல். துமி - துளி. குமுதன் இட்ட குலவரை கூத்தரின் திரியும் திரைக்கடல் துமி தம் ஊர்புக அமுதம் இன்னும் எழுமெனும் ஆசையால் வானவர் துள்ளினூர் என்க. துமி, தம் ஊர்புக எனப் பிரிக்க. குமுதன் இட்ட மலை, தேவர்கள் மத்தாக இட்ட மந்தரமலையினைப் போன்று கடலைக் கலக்கியது என்றவாறு. துமி என்பது கம்பரால் துளி என்னும் பொருளில் ஆளப்பெற்றுள்ளது. இச் செய்யுளில் ஆளப்பெற்ற துமி என்னும் சொல்லுக்குத் துளி என்னும் பொருள் உண்டா எனச் சிலர் வினவக் கம்பர் அதனை உலகியல் வழக்கில் காட்ட எண்ணி ஆயர் சேரி வழியே அவர்களை அழைத்துக்கொண்டு சென்றபொழுது, ஆங்குத் தயிர் கடைந்து கொண்டிருக்கும் பெண், தன் மக்களை நோக்கித் ‘துமி தெறிக்கும். விலகிச் செல்லுங்கள்’ எனக் கூறிய சொல்லாட்சியை எடுத்துக் காட்டினூர் என ஒரு கதை வழங்குகிறது. (42)

6845. கனசி னத்துரு மிற்கடுங் கார்வரை
பனச னிட்டன யாவும் பரிக்கிலன்
மனசி னத்த னனந்தனும் வாழ்விகந்
தனச னத்தொழில் மேற்கொள்வ தாயினன்.

கன சினத்து உருமின் கடுங் கார் வரை
பனசன் இட்டன யாவும் பரிக்கிலன்,
மன சினத்தன் அனந்தனும், வாழ்வு இகந்து
அனசனத் தொழில் மேற்கொள்வது ஆயினன்.

பொ :—மனத்திலே சினத்தையுடைய ஆதிசேடனும் பனசன் இட்டனவாகிய மிக்க சினத்தோடு (விழும்) இடிபோல மிக்க வேகத்தோடு வீழும் கரிய மலைகள் யாவற்றையும் தாங்க இயலாதவனாய்,(ப் பூமியைத் தாங்குதலாகிய) அவ் வாழ்வைவிட்டு (உயிர் விடுதற் பொருட்டு), உண்ணாமையாகிய தொழிலை மேற்கொள்வானாயினன்.

கு :—கன சினத்து உருமின் கடுங் கார்வரை - மிக்க கோபத்தோடு விழும் இடியேற்றைப் போலக் கடிய வேகத்தோடு விழும் கரிய மலைகள். அனந்தன் பெருஞ் சீற்றமுடையவனென்பது 'ஆங்காரவாரமது கேட்டு அழலுமிழும், பூங்காரரவணையான்' (நான்முகன் திருவந்தாதி - 10) என்பதாலறியப்படும். பூமியைத் தாங்கும் அனந்தன், பனசன் வேகத்தோடு இட்ட மலைகளைத் தாங்க முடியாமையால் நாணமுற்று நிலத்தைத் தாங்கும் தன் தொழிலைவிட்டு உண்ணாமையை மேற்கொள்வானாயினன். அசனம் - உணவு. 'அசனமிடுவார்கள் தங்கள் மனைகள் தலை வாசல் நின்று' (திருப்புகழ் - 140) அன் அசனம் - அனசனம்; உண்ணாதிருத்தல். (43)

6846. எண்ணி லெண்கின
மிட்ட கிரிக்குலம்
உண்ண உண்ணச்சென்
றொன்றினொ டொன்றுறச்
சுண்ண நுண்பொடி
யாகித் தொலைந்தன
புண்ணி யம்பொருந்
தாத முயற்சிபோல்.

எண் இல் எண்கு இனம் இட்ட கிரிக்குலம்
உண்ண உண்ணச் சென்று, ஒன்றினொடு ஒன்று உற,
சுண்ண நுண்பொடி ஆகித் தொலைந்தன,
புண்ணியம் பொருந்தாத முயற்சி போல்.

பொ :—எண்ணற்ற கரடிக் கூட்டங்கள் போட்ட மலைக் கூட்டங்கள், (கடலில்) அழுந்த அழுந்தச் சென்று ஒன்றினோடு ஒன்று தாக்க, (அதனால்) நல்லூழின் துணையில்லாத முயற்சிபோல மிகத் தூளாகி அழிந்தொழிந்தன.

கு :—கரடிக் கூட்டங்கள் போட்ட மலைகள் போடப் போடக் கடலில் அழுந்திச் சென்றன. ஒன்றன்மேலொன்று அடுத்தடுத்து வீழ்ந்ததால் நல்லூழ் துணை செய்யாத முயற்சி பயனின்றி அழிதல் போல அம் மலைகள் உடைந்து மிகத் தூளாகிக் கெட்டன. கிரிக்குலம், புண்ணியம் பொருந்தாத முயற்சிபோல் தொலைந்தன என்றமையின் இஃது உவமையணி. (44)

6847. ஆர வாயிர யோசனை யாழமுந்
தீர நீண்டு பரந்த திமிங்கிலம்
பார மால்வரை யேறப் பதைத்துடல்
பேர வேகுன்றும் வேலையும் பேர்ந்தவால்.

ஆர ஆயிர யோசனை ஆழமும்
தீர நீண்டு பரந்த திமிங்கிலம்,
பார மால்வரை ஏறப் பதைத்து, உடல்
பேரவே, குன்றும் வேலையும் பேர்ந்தவால்.

பொ :—(கடலில்) ஆயிர யோசனை ஆழமும் நிரம்புமாறு முற்ற நீண்டு பரந்திருக்கின்ற திமிங்கிலம், (கடலில் போடப்பட்ட) பாரமுள்ள பெரிய மலை (தன்மீது) ஏற (அதனைத் தாங்கமாட்டாது) உடல் பதைத்து(த் தான் இருந்த இடத்தை விட்டு) அப்பாற்செல்ல, (அதனால்) போடப்பட்ட மலையும் அந்த இடத்திலுள்ள கடல் நீரும் இடம் பெயர்ந்தன.

கு :—ஆயிர யோசனை ஆழமும் ஆர தீர நீண்டு பரந்த திமிங்கிலம் என்றியைக்க. திமிங்கிலம் தன்மீது போடப்பட்ட பெரிய மலையின் பாரத்தைத் தாங்கமாட்டாது அப்பாற் சென்றமையால் மலையும் அது விழுந்த இடத்திலுள்ள நீரும் பெயர்ந்தன. (45)

நளன் சேதுவை அமைத்த வகை

6848. குலைகொ ளக்குறி நோக்கிய கொள்கையான்
சிலைக ளொக்க முறித்துச் செறித்துநேர்
மலைக ளொக்க வடுக்கி மணற்படத்
தலைக ளொக்கத் தடவுந் தடக்கையால்.

குலை கொளக் குறி நோக்கிய கொள்கையான்,
சிலைகள் ஒக்க முறித்துச் செறித்து, நேர்
மலைகள் ஒக்க அடுக்கி, மணற் படத்
தலைகள் ஒக்கத் தடவும், தடக் கையால்.

பொ :—அணை (நன்கு) அமையுமாறு சிந்தித்து நோக்கிய தன்மையனான நளன், மலைக் கற்களைச் சமமாக உடைத்து (அவைகளை) ஒன்றோடொன்று பொருந்த நெருக்கியும் நேரான மலைகளை (உயர்வு தாழ்வில்லாமல்) ஒத்திருக்கும்படியாக அடுக்கியும் (அம்) மலைகளின் மேற்பாகம் ஒத்திருக்கும்படி மணலைக்கொண்டு (தன்னுடைய) பெரிய கையால் மட்டஞ் செய்வான்.

கு :—குலை - அணை. அணை நன்கு அமையவேண்டுமென்று எண்ணிய நளன், நீண்ட கற்களை வேண்டிய அளவுக்கு உடைத்து அவைகளை ஒன்றோடொன்று பொருந்த இயைத்தும், நேராக உள்ள மலைகளை உயர்வு தாழ்வில்லாமல் அடுக்கியும், அடுக்கப்பட்ட மலைகளின் மேற்பாகம் ஒத்திருக்கும்படி அவைகளின்மேல் மணல் கொண்டு நிரவியும் மட்டஞ் செய்வானாயினன். (46)

6849. தழுவி யாயிர கோடியர் தாங்கிய
குழுவி வானரர் தந்த கிரிக்குலம்
எழுவி னீள்கரத் தேற்றிட விற்றிடை
வழுவி வீழ்வன கால்களின் வாங்குவான்.

தழுவி ஆயிர கோடியர் தாங்கிய
குழுவி வானரர் தந்த கிரிக் குலம்,
எழுவின் நீள்கரத்து ஏற்றிட, இற்று இடை
வழுவி வீழ்வன கால்களின் வாங்குவான்.

பொ :—ஆயிரங் கோடியராகிய வானரர்கள் கூடி நின்று தழுவித் தாங்கிக்கொண்டு வந்து தந்த மலைக்கூட்டங்களை (நளன்) கணைய மரம்போன்ற தன் நீண்ட கைகளால் தாங்கும்போது முறிந்து இடையே நழுவி வீழ்வனவற்றைக் கால்களால் தடுத்து எடுத்துக் கொள்வான்.

கு :—ஆயிர கோடியர் வானரர் குழுவி, தழுவி, தாங்கிய தந்த கிரிக்குலம் என்க. எழு - கணையமரம்; இது மதிலின் குறுக்கே கதவிற்குப் பாதுகாவலாகப் போடப்படுவது. 'அடிநிலை இருப்பெழு அமைந்த கன்மதிட், புடைநிலை வாரிகள் பொலிந்த சூழ்ந்தவே' (சீவக. 81) கால்களின் வாங்குதல் - கால்களால் விழாமல் தடுத்துப் பின்னர்க் கைகளால் பற்றிக்கொள்ளுதல். (47)

மலை சுமந்துவரும் வானரங்கள்

6850. மலைசு மந்து வருவன வானரம்
நிலையி னின்றன செல்ல நிலம்பெரு
அலைநெ டுங்கட லன்றியு மாண்டுத்தந்
தலையின் மேலுமொர் சேதுவுந் தந்தபோல்.

மலை சுமந்து வருவன வானரம்
நிலையில் நின்றன, செல்ல நிலம் பெறா—
அலை நெடுங் கடல் அன்றியும், ஆண்டுத் தம்
தலையின் மேலும் ஓர் சேதுவும் தந்தபோல்.

பொ :—மலைகளைச் சுமந்துகொண்டு வருவனவாகிய வானரங்கள் செல்லுதற்கு இடம் பெறாதனவாய் அலைகளையுடைய பெரிய கடலிடத்தன்றியும் அவ்விடத்தே தம் தலையின் மேலும் ஓர் அணையைக் காட்டி (அதன்மேல் இயங்க)த் தந்தன போன்று நிலையாக நின்று விட்டன.

கு :—வானரம் செல்ல நிலம் பெறா, சேதுவும் தந்தபோல் நிலையில் நின்றன என்றியைக்க. மலைகளைத் தலைமேல் தாங்கிக் கொண்டு செல்லுதற்கு இடம் பெறாமல் வரிசையாக நின்ற வானரங்களின் தோற்றம், தலையின்மேலே மலைகள் வரிசையாக இருத்தலால் கடலில் அன்றியும் தம் தலைகளின்மேலும் ஓர் அணையை அமைத்திருந்தது போன்றது என்பதாம். (48)

6851. பருத்த மால்வரை யேந்திய பல்படை
நிரைத்த லிற்சில செல்ல நிலம்பெறா
கரத்தி னேந்திய கார்வரை கண்ணகன்
சிரத்தின் மேற்கொடு நீந்தின சென்றவால்.

பருத்த மால்வரை ஏந்திய பல்படை
நிரைத்தலின், சில செல்ல நிலம் பெறா
கரத்தின் ஏந்திய கார்வரை, கண் அகன்
சிரத்தின் மேற்கொடு, நீந்தின சென்றவால்.

பொ :—மிகப் பெரிய மலைகளைத் தாங்கிய பலவகைப்பட்ட வானரபபடைகள் வரிசையாக நிற்றலினாலே, சில வானரங்கள் செல்லுதற்கு இடம் பெறாதனவாய்க் கையில் தாங்கிய கரிய மலைகளை இடமகன்ற தலையின்மேல் தாங்கிக்கொண்டு (கடலில் இறங்கி) நீந்தினவாய்ச் சென்றன.

கு: —பல் படை நிரைத்தலின் சில செல்ல நிலம் பெறா நீந்தின சென்ற என்றியைக்க. நிரைத்தல் - வரிசையாக நிற்றல். (49)

6852. ஆய்ந்து நீள மரிது சுமந்தன
ஒய்ந்த கால பசியி னுலர்ந்தன

ஏந்து மால்வரை வைத்தவற் றீண்டுதேன்
மாந்தி மாந்தி மறந்து துயின்றவால்.

ஆய்ந்து நீளம், அரிது சுமந்தன
ஓய்ந்த கால, பசியின் உலர்ந்தன,
ஏந்து மால்வரை வைத்து, அவற்று ஈண்டுதேன்
மாந்தி மாந்தி, மறந்து, துயின்றவால்.

பொ :—முயன்று வருந்திச் சுமந்தனவாகிய சில வானரங்கள், தாங்கள் செல்லவேண்டிய நெடுந்தூரத்தை ஆராய்ந்து, கால் ஓய்ந்தனவாகியும் பசியினால் வாடியனவாகியும் தாம் சுமந்து வந்த பெரிய மலைகளைக் கீழே வைத்து, அவற்றிலே திரண்டுள்ள தேனைப் பருகிப் பருகி, (அணை அமைத்தலாகிய தம் செயலை) மறந்து (அத் தேனின் மயக்கத்தால்) உறங்குதலைச் செய்தன.

கு :—சுமந்தனவாகிய வானரங்கள் நீளம் ஆய்ந்து கால் ஓய்ந்த வாய் பசியால் உலர்ந்தனவாய் மால்வரை வைத்து அவற்று ஈண்டு தேன் மாந்தி மாந்தி மறந்து துயின்ற என்க. நீளம் - தூரம். ஈண்டுதல் - பெருகுதல். ஆல் என்பது அசை. (50)

6853. போதல் செய்குந ரும்புகு வார்களும்
மாதி ரந்தொறும் வானர வீரர்கள்
சேது வெத்துணை சென்றதென் பார்சிலர்
பாதி சென்ற தெனப்பகர் வார்சிலர்.

போதல் செய்குநரும், புகுவார்களும்,
மாதிரம் தொறும் வானர வீரர்கள்,
'சேது எத்துணை சென்றது?' என்பார் சிலர்;
'பாதி சென்றது' எனப் பகர்வார் சிலர்.

பொ :—திசைகள் தோறுமுள்ள வானர வீரர்கள், (மலைகளைக் கொண்டுபோய் இறக்கிவிட்டு மீண்டும் மலை கொணரப்) போதலைச் செய்பவர்களும் (மலைகளைத் தாங்கிக்கொண்டு அணைகட்டும் இடத்தினுள்) புகுபவர்களும் ஆகி, (ப் புகுபவர்களுள்) சிலர் அணை எவ்வளவு தூரம் கட்டப்பட்டுள்ளது என வினவுவாராக, (ப் போகின்ற) சிலர் பாதியளவு கட்டப்பட்டுள்ளதெனப் பகர்வாராயினர்.

கு :—போதல் செய்குநர் - மலைகளைக் கொண்டுபோய் அணை கட்டுமிடத்தில் இறக்கிவிட்டு மீண்டும் மலை கொணரச் செல்பவர்கள். புகுவார்கள் - மலைகளைத் தாங்கிக்கொண்டு அணைகட்டு மிடத்திற்குச்

செல்பவர்கள். மலைகளைத் தாங்கிக்கொண்டு அணையை நோக்கிச் செல்பவர்கள் அணை எவ்வளவு தூரம் கட்டப்பட்டுள்ளதென்று வினவ, அணையினின்றும் மலை கொணரச் செல்பவர்கள் பாதியளவு கட்டப்பட்டுள்ளதென்று சொல்வார்கள். மாதிரம் - திசை. (51)

மலைகளும் மரங்களும் கடலில் ஆழ்த்தப்படுவதால் நிகழ்ந்த நிகழ்ச்சிகள்

6854. குறைவில் குங்கும முங்குகைத் தேன்களும்
நிறைம லர்க்குல முந்நிறைந் தெங்கணும்
துறைதொ றுங்கிரி தூக்கின தோய்தலால்
நறைநெ டுங்கட லொத்தது நாமநீர்.

குறைவு இல் குங்குமமும், குகைத் தேன்களும்,
நிறை மலர்க் குலமும், நிறைந்து எங்கணும்,
துறைதொறும் கிரி தூக்கின தோய்தலால்,
நறைநெடுங் கடல் ஒத்தது, நாமநீர்.

பொ :—மலைகள் தாங்கிக் கொண்டிருப்பனவாகிய நிறைந்த குங்கும மரங்களும் மலைக் குகையிலுள்ள தேன்களும் நிறைந்த மலர்க் கூட்டங்களும் நீர்த்துறை தோறும் எங்கணும் நிறைந்து படிதலால், அச்சத்தைச் செய்யும் உவர்க்கடலானது நெடிய தேன் கடலை ஒத்தது.

கு :—மலையினைக் கடலில் போட்டபோது அம் மலையிலுள்ள குங்கும மரங்களும் தேன்களும் மலர்த் தொகுதிகளும் நீரில் படிந்ததனுல் உப்புக் கடலானது தேன்கடலாக மாறிற்று. இது பிறிதின் குணம் பெறல் என்னும் அணி. நாம் என்னும் உரிச்சொல் அச்சம் என்னும் பொருளைத்தரும். இது அம்முச்சாரியை பெற்று ஈறு திரிந்து நாமம் என நின்றது. (52)

6855. நெடும்பன் மால்வரை தூர்த்து நெருக்கவும்
துடும்பல் வேலை துளங்கிய தில்லையால்
இடும்பை யெத்துணை யும்மடுத் தெய்தவும்
குடும்பந் தாங்கும் குடிப்பிறந் தாரினே.

நெடும் பல் மால்வரை தூர்த்து நெருக்கவும்,
துடும்பல் வேலை துளங்கியது இல்லையால்—

இடும்பை எத்துணையும் மடுத்து எய்தவும்
குடும்பம் தாங்கும் குடிப் பிறந்தாரினே.

பொ :—எத்துணைத் துன்பங்கள் (மேலும் மேலும்) வந்து தடுத்த விடத்தும் (அவற்றிற்குத் தளராமல்) தம்முடைய குடும்பத்தைப் பாதுகாக்கும் உயர்குடிப் பிறந்தவர்களைப்போல, பலவாகிய நீண்ட பெரிய மலைகள் தன்னைத் தூர்த்து நெருக்குமிடத்தும், அசையும் படியான கடல் கலங்கவில்லை.

கு :—துளும்பல் என்பது துடும்பல் என வந்தது. இவ்வாறு ளகரம் டகரமாக வருதல், 'கடிறு பலதிரி கானதரிடைக் கன்றின் பின்' (பெரியாழ்வார் திருமொழி 3-2-6) என்புழிக் களிறு, கடிறு எனத் திரிந்து வருவதாலும், சூளாமணி சூடாமணி என வருவதாலும் உணரலாம், எய்தி மடுக்கவும் என்பது மடுத்து எய்தவும் என மாறி நின்றது. மடுத்தல் - தடுத்தல். குடும்பந் தாங்குவார்க்குத் துன்பம் பல வருதல், 'இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக், குற்றம் மறைப்பான் உடம்பு (1029) என்னுங் குறளாலும், அவர் அத் துன்பங்களுக்குக் கலங்காதிருத்தல், 'அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற, இடுக்கண் இடுக்கட் படும்' (625) என்னுங் குறளாலும் அறியப்படும். (53)

6856. கொழுந்து டைப்பவ ளக்கொடி யின்குலம்
அழுந்த வுய்த்த வடுக்க றகர்ந்தயல்
விழுந்த பன்மணி யின்னொளி மீமிசை
எழுந்த வெங்கணு மிந்திர வில்லினே.

கொழுந்துடைப் பவளக் கொடியின் குலம்
அழுந்த உய்த்த அடுக்கல் தகர்ந்து, அயல்
விழுந்த பன்மணியின் ஒளி, மீமிசை
எழுந்த எங்கணும், இந்திர வில்லினே.

பொ :—கொழுந்தையுடைய பவளக்கொடியின் கூட்டம் உள்ளே அழுந்துமாறு (கடலில்) வீசி எறியப்பட்ட மலை உடைபட்டு (அதனினின்றும்) பக்கத்தில் சிந்திய பலவகை மணிகளின் ஒளிக்கற்றைகள், மிக்க மேலிடமான (வானத்திற் காணப்படும்) இந்திரவில்லைப்போல எவ்விடத்தும் தோன்றின.

கு :—மலையினைக் கடலில் வீசி எறிந்தபோது அது பவளக் கொடிகளை உள்ளே ஆழ்த்தி உடைய, அம்மலையினின்றும் சிதறிய

பன்மணிகளின் ஒளிக்கற்றைகள் இந்திர வில்லைப்போலக் காட்சி யளிப்பனவாயின. பன்மணியின் ஒளி மீமிசை இந்திர வில்லின் எங்கணும் எழுந்த என்று இயைக்க. (54)

6857. பழும ரம்பறிக் கப்பற வைக்குலம்
தழுவி நின்றொரு வன்றனித் தாங்குவான்
விழுத லும்புகல் வேற்றிட மின்மையால்
அழுத ரற்றுங் கிளையென வானவால்.

பழுமரம் பறிக்க, பறவைக் குலம்,
தழுவி நின்று ஒருவன் தனித் தாங்குவான்
விழுதலும், புகல் வேற்று இடம் இன்மையால்,
அழுது அரற்றும் கிளை என ஆனவால்.

பொ :—ஆலமரத்தை (வானரங்கள்) பெயர்த்தெடுக்க (அதி லிருந்த) பறவைக் கூட்டங்கள், (யாவரையும்) தழுவிக்கொண்டு தனியே பாதுகாப்பவனாகிய ஒப்பற்ற தலைவன் இறந்த அளவிலே, (தமக்குப்) புகலான வேறோரிடம் இல்லாமையால் அழுது புலம்பு கின்ற சுற்றத்தாரைப்போல, வருந்தி அரற்றுவனவாயின.

கு :—தழுவி நின்று தனித் தாங்குவான் ஒருவன் விழுதலும் என்றியைக்க. விழுதல் - இறத்தல். பழுமரம் பெயர்க்கப்பட்ட அளவிலே அதிலிருந்த பறவைகளெல்லாம், தம் தலைவன் இறக்கத் தமக்கு வேறு புகலிடமின்றி அழுதரற்றும் சுற்றத்தாரைப் போன்று, தமக்கோர் புகலிடமின்றி அழுதரற்றின என்பதாம். (55)

6858. தரவ லோமல ரென்றுயிர் தாங்கிய
மரமெ லாங்கடல் வீழ்தலும் வண்டெலாம்
கரவி லாளர் விழக்களை கண்ணிலா
இரவ லாளரி னெங்கு மிரிந்தவால்.

'தர வலோம், மலர்' என்று, உயிர் தாங்கிய
மரம் எலாம் கடல், வீழ்தலும், வண்டு எலாம்
கரவு இலாளர் விழ, களைகண் இலா
இரவலாளரின், எங்கும் இரிந்தவால்.

பொ :—(உங்களுக்கெல்லாம்) மலர்களிலுள்ள (தேனைக்) கொடுக்கவல்லோம் என்று (தேனைக் கொடுத்து அவ் வண்டுகளின்)

உயிரைத் தாங்கிய மரங்களெல்லாம் கடலில் விழுந்த அளவிலே வண்டுகளெல்லாம், (தம்மிடமுள்ள பொருளை) ஒளிக்காது கொடுப்பவர் இறக்க (அதனால்) வேறு பற்றுக்கோடில்லாத இரப்போரைப் போல, எங்கும் கெட்டோடத் தொடங்கின.

கு :—மரங்களெல்லாம் வானரங்களால் பெயர்க்கப்பட்டுக் கடலில் எறியப்பட்ட அளவிலே அவற்றிலிருந்த வண்டுகளெல்லாம், ஒளிக்காது கொடுப்பவர் இறந்துபட்டதனால் பற்றுக்கோடற்ற இரப்பவர்களைப்போல, எங்கும் அலைந்து திரியத் தொடங்கின. கரவிலாளர்-தம்மிடத்துள்ளனவற்றை ஒளிக்காது கொடுப்பவர். வள்ளுவர் இத்தகையோரைக் 'கரப்பிலார்' (1055) என்றும், 'கரத்தல் கனவிலும் தேற்றாதார்' (1054) என்றும் கூறுவர். களைகண் - பற்றுக்கோடு. இரிதல் - ஓடுதல். (56)

6859. தொக்க டங்கல வோடுந் துவலைகள்
மிக்க டங்கலும் போவன மீன்குலம்
அக்க ருங்கட றூர வயற்கடற்
யுக்க டங்கிடப் போவன போன்றவே.

தொக்கு அடங்கல ஓடும் துவலைகள்
மிக்கு அடங்கலும் போவன மீன்குலம்,
அக் கருங் கடல் தூர, அயற் கடல்
புக்கு அடங்கிடப் போவன போன்றவே.

பொ :—தொகுதிப்பட்டு அடங்காதனவாய் மிகுதியாகச் செல்லும் திவலைகளோடு முழுவதும் செல்வனவாகிய மீன் கூட்டங்கள், (தமக்கு இடமாக இருந்த) அந்தக் கருங்கடல் (மலைகளால்) தூர்ந்து விட்டதனால் அயலதாகிய (வேறொரு) கடலில் புகுந்து அடங்கும்படி போவனவற்றை ஒத்தன.

கு :—தொக்கு அடங்கல மிக்கு ஓடும் துவலைகளோடு அடங்கலும் போவன மீன்குலம், அக் கருங்கடல் தூர அயற்கடல் புக்கு அடங்கிடப் போவன போன்றவே என்றியைக்க. தொகுதல் - பலவாகிச் சேர்தல். மீன்கள் கடலிலிருந்து வெளிப்பட்ட துவலைகளோடு புறத்தே செலுந் தோற்றம், தாம் வாழுங் கடல் தூர்தலால் வசித்தற்கு இடமின்றி வேறு கடலை நாடிச் செல்லுதலை ஒத்துத் தோன்றிய தென்றவாறு. துவலைகள் என்பதனோடு ஒடு உருபு விரித்துப் பொருள் கொள்க. (57)

6860. மூசு வண்டின மும்மத மாவின்பின்
ஆசை கொண்டன போற்றொடர்ந் தாடின
ஓசை யொண்கடற் குன்றொ டவைபுக
வேசை மங்கைய ராமென மீண்டவே.

மூசு வண்டு இனம், மும்மத மாவின் பின்
ஆசை கொண்டனபோல் தொடர்ந்து ஆடின,
ஓசை ஒண்கடல் குன்றொடு அவைபுக,
வேசை மங்கையராம் என, மீண்டவே.

பொ :—மும்மதங்களையுடைய யானைகளிடத்தில் ஆசை கொண்டனபோல் தொடர்ந்து சுற்றிக் கொண்டிருந்த நெருங்கிய வண்டுக் கூட்டங்கள், ஓசையையுடைய அழகிய கடலிலே (வானரங்கள் மலைகளைப் பெயர்த்தெறிந்தமையால்) மலைகளோடு அவ்யானைகளும் விழுந்த அளவில், பரத்தை மகளிரைப் போன்று (அந்த யானைகளை விட்டு) நீங்கின.

கு :—யானையின் மதம் நறுமணமுடையதாதலின் வண்டுகள் நெருங்கி அதன்கண் மொய்ப்பனவாயின. 'புணர்மருப் பியானையின் புயல்கொண் மும்மதம், மணமகள் கதுப்பென நாறும்' (சீவக. 1621). வேசையர் ஒருவனை அன்புபற்றி விரும்பாமல் பொருள்பற்றி விரும்புகின்றமையின் பொருளற்றவழி அவனைத் துறத்தல்போல, மணம் வீசும் மதமுள்ளமையின் யானைகளைச் சுற்றித் திரிந்த வண்டுகள், மலைகளோடு அவ்யானைகள் கடலில் வீழ்ந்த அளவிலே அவைகளை விட்டு நீங்குவனவாயின. இஃது உவமையணி. வேசையர் நேசித்தவரைப் பொருளற்ற வழிக் கைவிடுதல், 'நறுந்தாதுண்டு நயனில் காலை, வறும்பூத் துறக்கும் வண்டு போல்குவம்' (மணிமேகலை 18 : 19-20) எனவும், 'வண்டிற் றுறக்குங் கொண்டி மகளிரை' (மணிமேகலை 18 : 109) எனவும் வருதலான் உணரப்படும். (58)

6861. நிலம ரங்கிய வேரொடு நேர்பறித்து
அலம ருந்துய ரெய்திய வாயினும்
வலம ரங்களை விட்டில மாசிலாக்
குலம டந்தைய ரென்னக் கொடிகளே.

நிலம் அரங்கிய வேரொடு நேர்பறித்து,
அலமரும் துயர் எய்திய ஆயினும்,
வல மரங்களை விட்டில, மாசு இலாக்
குல மடந்தையர் என்ன, கொடிகளே.

பொ :—கொடிகள் நிலத்தில் அழுந்திய வேரோடும் நேரே பறிக்கப்பட்டுச் சுழல்கின்ற துன்பத்தைப் பொருந்தியனவாயினும், குற்றமில்லாத குலத்திற் பிறந்த கற்புடைய மகளிரைப் போலத் தாம் சுற்றியுள்ள மரங்களை விடாமலிருந்தன.

கு :—கொடிகளை மரங்களோடு பெயர்த்துக் கடலில் இட்ட போதும் அக்கொடிகள், நற்குலத்திற் பிறந்த கற்புடைய மகளிரைப் போல அம்மரங்களை விட்டு அகலாமலிருந்தன. அரங்குதல் - அழுந்துதல். வலமரங்கள் - (கொடிகளால்) சுற்றப்பட்டுள்ள மரங்கள். வலத்தல் - சுற்றுதல். 'புலவுநாறு நெடுங்கொடி, வயலுழை மருதின் வாங்கு சினைவலக்கும்' (புறம். 52 : 9–10). வலமரங்களை என்பதற்கு வலிய மரங்களை என்றும் பொருள் கொள்ளலாம். இப் பாடலில் மரங்களொடு பின்னிக்கிடந்த கொடிகள், அம்மரங்களை விட்டு அகலாமல் அவற்றுடன் கடலுள் அழுந்தி அழிந்த செய்தியைக் கூறுமுகத்தால், கணவனைப் பிரியாது உடனுயிர் துறக்கும் கற்புடை மகளிரின் இயல்பினை ஆசிரியர் புலப்படுத்தியுள்ளமை அறியத்தக்கதாகும். (59)

6862. துப்பு றக்கட றூய துவலையால்
அப்பு றக்கட லுஞ்சுவை யற்றன
எப்பு றத்துரு மேறுங் குளிர்ந்தன
உப்பு றைத்தன மேக முகுத்தநீர்.

துப்பு உறக் கடல் தூய துவலையால்,
அப்புறக் கடலும் சுவை அற்றன ;
எப்புறத்து உரும் ஏறும் குளிர்ந்தன ;
உப்பு உறைத்தன, மேகம் உகுத்த நீர்.

பொ :—(வானரர்கள் மலைகளைக் கடலில் இட்டபோது) வலிமை மிக்க அந்தக் கடலானது தூவிய துவலையினுல் அண்டத்திற்கு வெளியேயுள்ள பெரும் புறக்கடலும் நன்னீர்த் தன்மை கெட்டன. (உவர்த்தன்மை யுற்றன). எப்புறத்திலுள்ள பேரிடிகளும் (வெம்மை நீங்கிக்) குளிர்ந்தன. மேகம் சொரிந்த நீரும் உப்புச் சுவை யுற்றன.

கு :—புறக்கடல் - பெரும் புறக்கடல். இது உலகத்தை வளைந்துள்ள சக்கரவாளகிரியைச் சூழ்ந்துள்ள நன்னீர்க் கடல். உரும் ஏறு - பேரிடி. துப்பு உறு அ கடல் தூய துவலையால் எனப் பிரித்துப் பொருள் கொள்ளுதலேயன்றித் துப்புறக் கடல் தூய துவலையால் எனவும் பிரித்துக் கடல் வலிமை பொருந்தத் தூவிய துவலையால்

என்றும் பொருள் கொள்ளலாம். துவலையால் என்னும் ஏது சுவை யறுதல், குளிர்தல், உப்பு உறைத்தல் ஆகிய எல்லாவற்ரோடும் இயையும். (60)

6863. முதிர்நெ டுங்கிரி வீழ முழங்குநீர்
எதிரெ ழுந்து நிரந்தர மெய்தலால்
மதிய வன்கதி ரிற்குளிர் வாய்ந்தன
கதிர வன்கனல் வெங்கதிர்க் கற்றையே.

முதிர் நெடுங்கிரி வீழ, முழங்குநீர்
எதிர் எழுந்து நிரந்தரம் எய்தலால்,
மதியவன் கதிரின் குளிர் வாய்ந்தன—
கதிரவன் கனல் வெங்கதிர்க் கற்றையே.

பொ:—முதிர்ந்த நெடிய மலைகள் (கடலில்) விழுந்ததனால் ஒலிக்கின்ற நீர் மேலே எழுந்து எப்பொழுதும் (ஆகாயத்தில்) பொருந்துதலால், சூரியனுடைய சுடுகின்ற வெம்மை மிக்க கிரணத் தொகுதிகள், சந்திரனுடைய கிரணங்களைப்போலக் குளிர்ச்சி யடைந்தன.

கு:—கடலில் மலைகளை இட்டதனால் எழுந்த நீர்த் துவலைகள் இடைவிடாமல் ஆகாயத்திற் படுதலின், சூரியனுடைய கிரணங்களும் சந்திரனுடைய கிரணங்களைப்போலக் குளிர்ச்சி அடைந்தன. நிரந்தரம் - எப்பொழுதும். கனல் கதிர்க் கற்றை, வெம் கதிர்க் கற்றை என இயையும். (61)

6864. நன்கொ டித்து நறுங்கிரி சிந்திய
பொன்கொ டித்துவ லைப்பொதிந் தோடுவ
வன்கொ டிப்பவ ளங்கள் வயங்கலால்
மின்பொ டித்தது போன்றன விண்ணெலாம்.

நன்கு ஒடித்து, நறுங் கிரி சிந்திய
பொன் கொடித் துவலைப் பொதிந்து ஓடுவ,
வன் கொடிப் பவளங்கள் வயங்கலால்,
மின் பொடித்தது போன்றன விண் எலாம்.

பொ:—நறுமணமுள்ள மலை நன்கு பெயர்க்கப்பட்டு (க்கடலில் இடப்படும்பொழுது) சிதறிய பொன் துகள்களின் ஒழுங்கைக் கொண்ட துவலைகளாலே மறைக்கப்பட்டு மேலே செல்வனவாகிய

வலிய பவளக்கொடிகள் விளங்குதலால், ஆகாயமாகிய இடங்களெல்லாம் மின்னைத் தோற்றுவித்தது போன்றன.

கு :—மலைகளைக் கடலிலிட்டபொழுது சிதறிய பொன் துகள்களோடு மேலோங்கிய நீர்த் திவலைகளால் மூடப்பெற்று விளங்கும் பவளக் கொடிகளைத் தன்கண் உடைமையால் விண்ணிடங்களெல்லாம் மின்னலைத் தோற்றுவித்தாற் போன்று விளங்கின என்றவாறு. நன்கு ஒடித்து - நன்கு பெயர்க்கப்பட்டு. கொடி - ஒழுங்கு. பொடித்தல் - தோன்றுதல். (62)

6865. ஓடு மோட்டரி னொன்றின்மு னொன்றுபோய்க்
காடு நாடு மரங்களுங் கற்களும்
நாடு நாட்டு நளிர்கட னாட்டிலோர்
பூடு மாடுத லில்லையிப் பூமியில்.

ஓடும் ஓட்டரின், ஒன்றின்முன் ஒன்றுபோய்,
காடும் நாடும் மரங்களும் கற்களும்
நாடும், நாட்டும், நளிர்கடல் நாட்டில் ஓர்
பூடும் ஆடுதல் இல்லை, இப் பூமியில்.

பொ :—விரைந்து செல்லும் தூதர்களைப் போல ஒரு வானரத்திற்கு முன் ஒரு வானரம் (போட்டியிட்டுச்) சென்று முல்லை நிலத்திலும் மருத நிலத்திலும் உள்ள மரங்களையும் மலைகளையும் தேடும்; (தேடிக் கண்டவற்றைக் கடலில் கொண்டுவந்து) நிலைநிறுத்தும்; (ஆதலின்) குளிர்ந்த கடல் சூழ்ந்த நெய்தல் நிலத்திலும், (அதனையடுத்த) இப்பூமியிலும் ஒரு பூண்டும் காணப்படாததாயிற்று.

கு :—ஓட்டர் - விரைந்தோடும் தூதர். சிலப்பதிகாரம் வேனிற்காதையில் வரும். 'இளங்காற்றூதன்' (8 : 9) என்னும் தொடர்க்குத் தென்றலாகிய தூதன்; இளைய காற்றூதனுமாயிற்று; காற்றூதன் - ஓட்டன் என அடியார்க்கு நல்லார் எழுதிய உரைப்பகுதி ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது, முல்லை நிலத்திலும் மருத நிலத்திலும் உள்ள மரங்களையும் மலைகளையும் வானரங்கள் பெயர்த்துக் கொண்டுபோய்க் கடலில் போட்டமையின் கடல் சூழ்ந்த நெய்தல் நிலத்திலும் இப் பூமியிலும் ஒரு பூண்டும் காணப்படாததாயிற்றென்க. நளிர் - குளிர்ச்சி. (63)

6866. வளர்ப்ப ரப்பும் வனப்பரப் பும்முவர்த்
தரைப்ப ரப்புவ தென்னத் தனித்தனி

உரைப்ப ரப்பு முறுகிரி யொண்கவி
கரைப்ப ரப்புக் கடற்பரப் பானதால்.

வரைப் பரப்பும், வனப் பரப்பும், உவர்த்
தரைப் பரப்புவது என்ன, தனித்தனி
உரைப் பரப்பும் உறுகிரி ஒண்கவி
கரைப் பரப்பு, கடற் பரப்பு ஆனதால்.

பொ :—விளக்கம் அமைந்த வானரங்கள், மலையிடத்தையும் காட்டிடத்தையும் நெய்தல் நிலத்தில் பரப்புகின்றது என்று சொல்லு மாறு தனித்தனியே மிகுதியான மலைகளைப் புகழ் (தோன்றப்) பரப்பும். (அதனால் மேல் எழுந்த கடல் நீர் பாயப்பெற்றுக்) கடற்கரைப் பகுதி யாகிய நிலம் கடற் பகுதியாக மாறியது.

கு :—வானரங்கள் மலைகளையும் காடுகளையும் கடலிலே பரப்புகின் றன என்று சொல்லுமாறு மலைகளைக் காடுகளொடு கடலில் பரப்பும் இவைகளைக் கடலுள் பரப்பியதனால் கடல் நீர் கரையிற் பாய, அதனால் கரை நிலம் கடலாக மாறியது என்பதாம். உரை - புகழ். உறுகிரி - மிக்க மலைகள். (64)

இச் செய்யுள் 41, 52ஆம் எண்ணுள்ள சுவடிகளில் பல்வேறு பாட பேதங்களுடன் பின்வருமாறு காணப்படுகிறது.

6866 (a) மணற்ப ரப்பு மணிப்ப ரப்புமொளி
தணற்ப ரப்புவ போன்றன தான்கவி
உணர்ப்ப ரப்பு முறுகவி யின்குகைக்
கணப்ப ரப்புக் கடற்பரப் பானதே.

(b) வரைப ரப்பு மணற்ப ரப்பு மயில்
திரைப ரப்பு வதென்னத் தனித்தனி
உரைப ரப்பு முறுதனி யொண்கவிக்
கரைப ரப்புங் கடற்பரப் பன்னதால்.

இதன் பின் 52ஆம் எண்ணுள்ள சுவடியில் பின்வருமாறு ஒரு மிகைப்பாடல் காணப்படுகிறது.

(c) இன்ன வாறங்கு எழுபது வெள்ளமும்
அன்ன சேனைத் தலைவரு மாழியைத்
துன்னி நின்று விடாதிடை தூர்த்தலால்
பொன்னி லங்கை தொடுத்தணை புக்கதே.

அணை கட்டி முடித்தமையால் வானரர் பேராரவாரஞ் செய்தல்

6867. உற்ற தாலணை யோங்க விலங்கையை
முற்ற மூன்று பகலிடை முற்றவும்
பெற்ற வார்ப்பு விசும்பு பிளந்ததால்
மற்றி வானம் பிறிதொரு வான்கொலோ.

உற்றதால் அணை ஓங்கல் இலங்கையை,
முற்ற மூன்று பகலிடை; முற்றவும்,
பெற்ற ஆர்ப்பு விசும்பு பிளந்ததால்;
மற்று இ வானம் பிறிது ஒரு வான்கொலோ ?

பொ :—அணை மூன்று நாட்களில் திரிகூடமலையிலிருக்கும் இலங்கையை நன்கு சென்று பொருந்தியது. (அவ்வாறு அணை) முடிந்த அளவிலே (வானரர்கள்பால்) உண்டாகிய ஆரவாரம் ஆகாயத்தைப் பிளந்தது. (இப்பொழுது பிளவின்றிக் காணப்படும்) இந்த வானம் (புதிதாக அமைக்கப்பெற்ற) மற்றொரு வானமோ?

கு :—வானரர்கள் ஆர்த்த ஆர்ப்பினால் வானம் பிளந்ததெனக் கூறிய ஆசிரியர், தாம் நூல் செய்த காலத்தும் தம் நூலைக் கற்கும் பிற்றை நாளிலும் பழுதின்றிக் காணப்பெறும் வானப் பரப்பினைப் 'பிறிதொரு வான்கொலோ' என மக்கள் ஐயுறும் நிலையில் புனைந்துரைத்த திறன் மிகவும் சுவை பயப்பதாகும். இது கவிக்கூற்று. இவ்வானம் என மிக்கு வரற்பாலது எதுகை நோக்கி 'இவானம்' என மிகாதாயிற்று. அணை ஓங்கல் இலங்கையை மூன்று பகலிடை முற்ற உற்றது என்று இயைக்க. முதல் நூலாசிரியராகிய வான்மீகி ஐந்து நாட்களில் அணை கட்டி முடிக்கப்பட்டதென்று கூறியிருக்கவும், கம்பர் மூன்று நாட்களில் முடிந்ததாகக் கூறியது, அணை கட்டுதலில் வானர வீரர்களின் ஆற்றலைப் புலப்படுத்துதல் கருதிப் போலும். (65)

சேதுவின் தோற்றம்

6868. நாடு கின்றதென் வேறொன்று நாயகன்
தோடு சேர்குழ லாடுயர் நீக்குவான்
ஓடு மென்முது கிட்டென வோங்கிய
சேட னென்னப் பொலிந்தது சேதுவே.

நாடுகின்றது என், வேறு ஒன்று ?—நாயகன்
தோடுசேர் குழலாள் துயர் நீக்குவான்,

'ஓடும் என் முதுகிட்டு' என ஓங்கிய
சேடன் என்னப் பொலிந்தது, சேதுவே.

பொ:—யாவர்க்குந் தலைவனாகிய இராமன் (தனக்கு ஏவற்பணி புரியும் உரிமையையுடைய ஆதிசேடனாகிய யானிருக்க) வேறொரு துணையை நாடுவது எதற்கு? பூவிதழ் பொருந்திய கூந்தலையுடையாளான சீதையின் துயரை நீக்குதற் பொருட்டு என் முதுகில் (அடி) இட்டு விரைந்து செல்வான் (ஆக) என்று உட்கொண்டு (கடலின் மேல்) உயர்ந்து கிடந்த ஆதிசேடனென்று சொல்லுமாறு அணை விளங்கியது.

கு:—ஓடும் என்னும் செய்யுமென் முற்று ஓடுவான் என்னும் பொருள் தந்து நின்றது. என - என்று கருதி. அணை இலங்கையளவு நீண்டு கிடந்த தோற்றம், தன்மீது இராமன் நடந்துசெல்வானாக என்னும் கருத்துடன் ஆதிசேடன் தன் முதுகை உயர்த்திக் கிடந்த தோற்றத்தை ஒத்திருந்தது என்பதாம். இது தற்குறிப் பேற்ற அணி. (66)

6869. மெய்யி னீட்டத் திலங்கையா மென்மகள்
பொய்ய னீட்டிய தீமை பொறுக்கலாள்
ஐய னீட்டிய சேனைகண் டன்பினால்
கையை நீட்டிய தன்மையுங் காட்டுமால்.

மெய்யின் ஈட்டத்து இலங்கை ஆம் மென்மகள்,
பொய்யன் ஈட்டிய தீமை பொறுக்கலாள்,
ஐயன் ஈட்டிய சேனை கண்டு, அன்பினால்
கையை நீட்டிய தன்மையும் காட்டுமால்.

பொ:—வாய்மையாகிய செல்வத்தையுடைய இலங்கையாகிய மென்மைத் தன்மை வாய்ந்த பெண், பொய்யனாகிய இராவணன் சம்பாதித்த தீமையைப் பொறுக்காதவளாகித் தலைவனாகிய இராமன் மிகுதியாகக் கொண்டுவந்த சேனையைக் கண்டு, அன்பினாலே (அவனை அழைக்கும் நிலையில்) கையை நீட்டிய தன்மையையும் (அணை) காட்டும்.

கு:—மெய்யின் ஈட்டம் - மெய்யாகிய செல்வம். மெய்யின் நீட்டத்து என்று பிரித்து நீண்ட உடம்பையுடைய என்று பொருள் கொள்ளுதற்கும் இடம் உண்டு. பொய்யன் - பொய்யனாகிய இராவணன். இராவணன் பொய்யன் என்பது, 'மெய் சொல்லா இராவணனை மேலோடி யீடழித்துப், பொய் சொல்லா துயிர்போனான்

புள்ளிருக்கு வேளூரே' (தேவாரம் 2 : 43 : 2) என்பதால் அறியப் படும். இலங்கையாகிய பெண், இராவணன் செய்த தீமையைப் பொறுக்காதவளாகி இராமன் கொண்டுவந்த சேனையைப் பார்த்து அன்பினால் கையை நீட்டிய தோற்றத்தையும் அணை ஒத்திருந்தது என்றவாறு. இது தற்குறிப்பேற்ற அணி. (67)

6870. கான யாறு பரந்த கருங்கடல்
ஞான நாயகன் சேனை நடத்தலால்
ஏனை யாறினி யானல தாரென
வான யாறிம்பர் வந்தது மானுமால்

கான யாறு பரந்த கருங்கடல்,
ஞான நாயகன் சேனை நடத்தலால்,
'ஏனை யாறு, இனி, யான் அலது ஆர்?' என
வான யாறு, இம்பர் வந்தது மானுமால்.

பொ :—ஆகாய கங்கையானது, காட்டாறுகள் பரந்த கருங் கடலிலே ஞானமே உருவான தலைவனாகிய இராமனது சேனை நடக்க வேண்டி யிருத்தலால், இனி யான் அல்லது மற்றை யாறுகள் (உதவி செய்தற்கு) என்ன தகுதியுடையன என்று கருதி இம்மண்ணுலகத்தி லுள்ள (கடலில்) வந்து கிடந்ததையும் (அவ்வணை) ஒக்கும்.

கு :—கடலைக் கடத்தற்கு ஆறு (வழி) வேண்டியிருத்தலால் இராமனுடைய சேனைகள் நடத்தற்கு என்னையல்லாமல் தகுதி யுடைய ஆறுகள் வேறு யாவை உள என்று கருதி, ஆகாயகங்கையே வந்து கிடந்தது போலவும் அணை கிடந்தது என்பதாம். யாறு என்ப தற்கு நதி என்னும் பொருளோடு வழி என்னும் பொருளும் உண்மை யின் அவ்விரு பொருளும் அமைய 'ஏனையாறு இனியானலதாரென'க் கங்கை கருதியதாக நயம்படக் கூறினர். (68)

6871. கற்கி டந்தொளிர் காசினங் காந்தலால்
மற்க டங்கள் வகுத்த வயங்கணை
எற்க டந்த விருளிடை யிந்திரன்
விற்கி டந்தது மென்ன விளங்குமால்.

கல் கிடந்து ஒளிர் காசு இனம் காந்தலால்,
மற்கடங்கள் வகுத்த வயங்கு அணை,

எல் கடந்த இருளிடை, இந்திரன்
வில் கிடந்ததும் என்ன விளங்குமால்.

பொ :—மலையில் கிடந்து விளங்குகின்ற மணித்திரள்கள் ஒளி வீசுதலால், வானரங்களால் கட்டப்பட்ட விளங்குகின்ற அணையானது, சூரியன் மறைந்த இரவிலே இந்திரவில் கிடந்தாற்போலவும் விளங்கும்.

கு :—காசு இனம் - மணித் திரள்கள். காந்துதல் - ஒளி வீசுதல். மற்கடங்கள் - வானரங்கள். அணை தன்கண் கிடந்த பன்னிற மணிகள் பல்வகை ஒளி வீசுதலின் பல்வகை நிறத்தையுடைய இந்திரவில் கிடந்தாற்போன்று விளங்குவதாயிற்று. கிடந்ததும் என்பதிலுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. அணை, வானயாறு இவ்வுலகத்தில் வந்து கிடந்தது போல் தோன்றியதோடு இந்திரவில் வந்து கிடந்தாற்போலவும் தோன்றிற்று என்க. கடல் கரிய வானம் போல் தோன்ற, அதனகத்தமைந்த அணை இந்திர வில் போல விளங்கியது என்பதாம். (69)

சேது கட்டி முடிந்தபின், சுக்கிரீவன், வீடணன் முதலியோர் இராமனிடம் சென்று தெரிவித்தல்

6872. ஆன பேரணை யன்பி னமைத்தனர்
கான வாழ்க்கைக் கவிக்குல நாதனும்
மான வேலை யிலங்கையர் மன்னனும்
ஏனை யோரு மிராமனை யெய்தினர்.

ஆன பேர் அணை அன்பின் அமைத்தனர்;
கான வாழ்க்கைக் கவிக்குல நாதனும்,
மான வேலை இலங்கையர் மன்னனும்,
ஏனையோரும், இராமனை எய்தினர்.

பொ :—(பொலிவுடையது) ஆன பெரிய அணையை அன்பினல் கட்டி முடித்தனர். (முடித்த பின்) காட்டில் வாழ்க்கையையுடைய வானரக் கூட்டங்களுக்குத் தலைவனாகிய சுக்கிரீவனும், பெருமையை யுடைய கடல் (இடையேயுள்ள) இலங்கையர்களுக்கு அரசனாகிய வீடணனும், மற்றையோரும் (அணை கட்டி முடிந்ததை அறிவிக்கும் பொருட்டு) இராமனை அடைந்தனர்.

கு :—கவிக்குலநாதன் - வானரக் கூட்டங்களுக்குத் தலைவனாகிய சுக்கிரீவன். இலங்கையர் மன்னன் - வீடணன். இராமன் இலக்கு

வனைக் கொண்டு வீடணனுக்கு முன்பே மகுடஞ் சூட்டினுனதலின், வீடணன் 'இலங்கையர் மன்னன்' எனப்பட்டான். (வீடணன் அடைக்கலப் படலம் - 144) (70)

6873. எய்தி யோசனை யீண்டொரு நூறுற
ஐயி ரண்டி னகல மமைந்திடச்
செய்த தாலணை யென்பது செப்பினுர்
வைய நாதன் சரணம் வணங்கியே.

எய்தி, 'யோசனை ஈண்டு ஒரு நூறு உற
ஐ-இரண்டின் அகலம் அமைந்திடச்
செய்ததால் அணை' என்பது செப்பினுர்—
வைய நாதன் சரணம் வணங்கியே.

பொ :— அடைந்து, உலகங்களுக்குத் தலைவனுகிய இராமனுடைய பாதங்களை வணங்கி, இக்கடலில் ஒரு நூறு யோசனை நீளம் பொருந்த, பத்து யோசனை அகலம் அமைந்திட அணை செய்யப் பட்டது என்ற செய்தியைச் சொல்லினர்.

கு :—எய்தி, வணங்கி, செப்பினுர் என முடிக்க. வையநாதன் — உலகங்களுக்குத் தலைவனுகிய இராமன். (71)

சேதுபந்தனப் படலம் முற்றிற்று.

8. ஒற்றுக்கேள்விப் படலம்

ஒற்று என்னும் சொல் ஒற்றரையும், அவர் அறிந்து கூறும் செய்தியையும் உணர்த்தி நிற்கும். ஒற்றராவார் தம் அரசனேவலால் தம்நாட்டும் பிறநாட்டும் பகைப்புலத்தும் மாறுவேடத்தோடு மறைந்து தங்கி அங்கங்கு நிகழும் செய்திகளை நுனித்தறிந்து பிறரறியாதவாறு தம் அரசர்க்குத் தெரிவிப்போர். இவர்கள் வேய்கள் என்றும் வழங்கப்படுவர். இவர் அரசாட்சி புரிவார்க்கு இன்றியமையாதவராவர்

"ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்" (581)

என்பது பொய்யாமொழி. இவ் வொற்றரதியல்பும் இவரை அரசர் ஆளுமாறும் திருக்குறளுள் ஓரதிகாரத்தால் விரித்துரைக்கப்பட்டது.

இராவணனால் அனுப்பப்பட்ட ஒற்றர், குரங்குருவொடு சுவேலை மலையில் இராமன் பாடி வீட்டினை அடைந்து இராமன் முதலியோராற்றலும் வானரப்படையின் அளவும் ஆற்றலும் அறிந்து வந்து கூற, இராவணன் கேட்டமை கூறுதலின், இது ஒற்றுக் கேள்விப் படலம் என்று பெயர் வழக்குடையதாயிற்று. இப் படலப் பாடல்கள் 65. இப்படலத்துப் பயின்ற சந்தம் மூன்று.

23, 43-ஆம் சுவடிகளில், 'பெருந்தவம்' என்று தொடங்கும் 13-ஆம் பாடல் முடியச் சுவேலைப் படலம் என்ற தலைப்பிலும் அதன் பின் 26 மிகைப் பாடல்கள் நளனுக்கு முடிசூட்டு படலம் என்ற தலைப்பிலும், அதன்பின் நீலனை நெடிது என்று தொடங்கும் பாடல் முதல் ஒற்றுக் கேள்விப் படலம் என்ற தலைப்பிலும் வரையப்பட்டுள்ளன. 44-ஆம் சுவடியில் பெருந்தவம் என்று தொடங்கும் 13-ஆம் பாடல் முடியச் சுவேலைப் படலம் என்ற தலைப்பின்கீழும் அதன்பின் ஒற்றுக் கேள்விப் படலம் என்ற தலைப்பின்கீழும் எழுதப்பட்டுள்ளன.

நளனைத் தலைவனாகக் கொண்ட வானரர்களால் அணை கட்டி முடிக்கப்பெறுகிறது. அதனைக்கண்ட இராமன் வியந்து வானரரைப் பாராட்டிச் சீதையைப் பெற்றவன்போல மகிழ்ந்து தம்பியோடும் சுக்கிரீவன் முதலியோருடனும் வானரப்படைசூழ அணைமீது சென்று கடலின் தென்கரையில் சுவேல மலையிலிறங்குகிறான். இராமன் கட்டளையால் பாடிவீடு அமைக்கப்படுகிறது. இராமன் தனக்கமைத்த பன்னசாலையில் தங்க, மற்றையோர் தத்தமக்கு அமைத்த பாடி

வீடுகளில் தங்குவாராயினர். இரவு வந்தது. அந்நிலையில் இராவணனால் ஏவப்பட்ட ஒற்றர் குரங்குருவொடு வானரப்படையுள் அதன் அளவறியுமாறு திரிய வீடணன் அவரை அரக்கர் என்று கண்டு பிணித்து இராமன் முன்விட்டு, 'இவர் இராவணன் ஏவ வந்த ஒற்றர்' என்று கூறுகிறான். பேராற்றலனான இராமன் அவர் இராவணன் ஒற்றர் என்ற உண்மைநிலை கண்டும், அவரைக் கொல்லாது, இராவணனுக்குத் தெரிவிக்க வேண்டியவற்றை அவரிடம் கூறி, அவரைத் துன்புறுத்தாது, படை முழுதும் காட்டி அனுப்புமாறு கட்டளையிட அவரும் உய்ந்தோம் என்று செல்வாராயினர்.

ஒற்றரையனுப்பியபின் இராவணன், கடல் இராமனுக்கு அஞ்சியதும், வானரர் கடலில் அணை கண்டதும், அதன் வழியாக அணை வரும் சுவேல மலையை அடைந்து தங்கியதும் அறிந்து, தான் மேல் செய்தக்கவற்றை ஆராய மந்திர சாலையை அடைகிறான். இராவணனுக்குப் பாட்டன் முறையினனான மாலியவான், பலவாறு இராவணனுக்கு உறுதியுரை கூறிச் சீதையை இராமன்பால் விடுதி என, இராவணன் அவனை முனிவானாயினன். அப்போது சேனைத் தலைவன் மாலியவான் கூற்றை மறுத்துரைக்க, வாயில்காவலன் இராவணன்பால் ஒற்றர் வரவு கூறி, அவன் அநுமதியால் ஒற்றரை இராவணன்பாற் செல்லவிட்டனன். வந்த ஒற்றர், இராவணனை வணங்கித் தாம் அறிந்தவைகளையும், இராமன் கூறியவற்றையும் இராவணன்பால் தெரிவித்து, 'நீடு வாழ்க' என்று அவனை வணங்கினர் என்பது இப்படலத்தின் நுவல்பொருட் சுருக்கம்.

பகையரசனால் எவப்பட்ட ஒற்றரைக் கொல்வதே அரசர் மேற்கொள்ளும் முறையாகவும், இராமன், இராவணன்விட்ட ஒற்றரைக் கொல்லாது விட்டமை அவன் பேராற்றலை மேலும் மிகுவிப்பதாயிற்று.

8. ஒற்றுக்கேள்விப் படலம்

இராமன், அணைகட்டி முடிந்தமை கூறிய சுக்கிரீவன் முதலியவரைத் தழுவி அணை காண விரைதல்

6874. ஆண்டகையு மன்பினொடு தானிடை யெழுந்தே
★ நீண்டகையி னாலவரை நெஞ்சினொடு புல்லி
யீண்டவெழு கென்றன னிழைத்தபடி யெல்லாங்
காண்டலதன் மேனெடிய காதன்முதிர் கின்றான்.

ஆண்தகையும், அன்பினொடு தான் இடை எழுந்தே
நீண்ட கையினால் அவரை நெஞ்சினொடு புல்லி
ஈண்ட எழுக என்றனன்; இழைத்த படியெல்லாம்
காண்டலதன்மேல் நெடிய காதல் முதிர்கின்றான்.

பொ:—ஆண்டன்மையினையுடைய இராமனும் தான் இடையே எழுந்து அன்பினோடு (அணைகட்டி முடிந்தமை கூறிய) சுக்கிரீவன் முதலியோரைத் தன் நீண்ட கைகளால் மார்போடு தழுவி, அணை கட்டப்பட்டபடியெல்லாம் காண்பதில் விருப்பம் மிக்கவனாய், 'எல்லாரும் விரைந்து புறப்படுக' என்று கூறுவானாயினன்.

கு:—ஆண்டகையும், அன்பினொடுதான் இடை எழுந்தே நீண்ட கையினால் அவரை நெஞ்சினொடுபுல்லி, (அணை) இழைத்தபடியெல் லாம் காண்டலதன்மேல் நெடிய காதல் முதிர்கின்றவன் (ஆகி) 'ஈண்ட எழுக' என்றனன் என இயைக்க. ஆண்டகை என்றது இராமனை. மூன்று நாளில் அணைகட்டி முடித்தமையின் அவர்மேல் அன்பு மிகுவதாயிற்று. அவர் என்றது சுக்கிரீவன் முதலியவர்களை; இது, சேதுபந்தனப் படலத்தின் இறுதியிரண்டு செய்யுளாலும் புலனாகும். ஈண்ட - விரைய. எழுக என்றனன் என்பது எழுகென் றனன் என நின்றது; விகாரம். காண்டல் - காணுதல். காதல் - விருப்பம். முதிர்கின்றான் என்பது முற்றெச்சம். (1)

இராமன் அணையை அடைதல்

6875. பண்டையுறை யுட்கெதிர் படைக்கடலின் வைகுங்
கொண்டலென வந்தவணை யைக்குறுகி நின்றா
னண்டமுதல் வன்றெருத னுவியனை யாளைக்
கண்டன னெனப்பெரிய காதன்முதிர் கின்றான்.

பண்டை உறையுட்கு எதிர் படைக்கடலின் வைகும்
கொண்டல், எனவந்து, அவ் அணையைக் குறுகி நின்றான்
அண்டமுதல்வன் ஒரு தன் ஆவி அனையாளைக்
கண்டனன் எனப் பெரிய காதல் முதிர்கின்றான்.

பொ :—உலகங்களுக்குத் தலைவனான (திருமாலின் அமிசமாய்த் தோன்றிய) இராமன், தன் பழையவுறைவிடமான கடலுக்கு எதிரே, படைக்கடலுள் தங்கிய மேகம்போல வந்து, ஒப்பற்ற தன் உயிர் போன்றவளாகிய சீதையைக் கண்டவன்போல, மிக்க காதல் முதிரப் பெற்றவனாய், அந்த அணையைக் கிட்டி நின்றான்.

கு :—அண்ட முதல்வன், பண்டையுறையுட்கு எதிர், படைக் கடலின்வைகும் கொண்டலென வந்து, ஒரு தன் ஆவியனையாளைக் கண்டனன் எனப் பெரிய காதல் முதிர்கின்றவன் (ஆகி) அவ் அணையைக் குறுகி நின்றான் என இயைந்து முடிவுகொள்ளும். அண்டம் என்றது உலகத் தொகுதியை. திருமாலான பண்டை நிலை கொண்டு இராமனை அண்ட முதல்வன் என்றார். ‘அண்ட முதனாயகனதாவி யனையாள்’ (சுந்தர. சூடா. 1) என்றார் முன்னும். உறையுள் - உறையும் இடம். வைகுதல் - தங்குதல். முதிர்கின்றான் என்பது முற்றெச்சம். (2)

இராமன் அணையினமைதி கண்டு வியந்து உவந்து பாராட்டுதல்

6876. நின்றுபெரி துன்னியிந்
நெடுங்கட னிரம்பக்
குன்றுகொ டடைத்தணை
குயிற்றியதொர் கொள்கை
யன்றுலகு தந்தமுத
லந்தண னமைத்தா
னென்றபொழு தின்கணுமி
தென்றியலு மென்றான்.

நின்று, பெரிது உன்னி, இந் நெடுங்கடல் நிரம்பக்
குன்றுகொடு அடைத்து, அணை குயிற்றியது ஓர்கொள்கை,
அன்று உலகுதந்த முதல் அந்தணன் அமைத்தான்
என்ற பொழுதின்கணும் இது என்று இயலும்? என்றான்.

பொ :—(இராமன்), அணையைக்கிட்டி நின்று, அந்தப் பெரிய கடல் நிரம்பும்படி மலையால் அடைத்து அணைகண்டதாகிய ஒப்பற்ற செயலை நெடுநேரம் நினைந்து, பண்டு உலகுபடைத்த தலைமையினை யுடைய பிரமனே அமைத்தான் என்றபோதும், இவ்வணை எக்காலத்து முற்றுப் பெறும்! என்று வியந்தான்.

கு :—எழுவாய் முன்பாட்டிலிருந்து கொள்ளத்தகும். நின்று என்பது, முன்பாட்டில், குறுகி நின்றான் என்பதன் அநுவாதம். அணை குயிற்றியதோர் கொள்கை நெடிது உன்னி என்க. குயிற்றுதல் - செய்தல். கொள்கை என்பது செயல் என்று பொருள்பட நின்றது; உலகு படைத்த பிரமனே முன்னின்று அமைத்தாலும், நெடுங்காலம் முயன்று முற்றுவிக்கத்தக்க அணையை வானர வீரர் மூன்று நாளில் முற்றுவித்ததனை வியந்துரைத்தவாறு. (3)

6877. ஊழிமுத ஞயகன் வியப்பினெ டுவந்தா
ஞழமுரை செய்யுமள வோவினிய தொன்றோ
வாழியி னிலங்கைநெடி தத்திசையி ஞமே
லேழுகட லுங்கடி தடைப்பரிவ ரென்றான்.

ஊழிமுதல் நாயகன் வியப்பினொடு உவந்தான்;
ஆழம் உரைசெய்யும் அளவோ! இனி அது ஒன்றோ?
ஆழியின் இலங்கை, நெடிது அத்திசையின் ஆமேல்,
ஏழு கடலும், கடிது அடைப்பர் இவர்' என்றான்.

பொ :—ஊழிக்காலத்தும் அழியாத காரணனும் தலைவனுமான இராமன், இக்கடலின் ஆழம் சொல்லில் அடங்குவதோ (அடங்காது) மேலும் அவ்வாழம் ஒன்றுமட்டுமோ (என்று வியப்பும் உவப்பும் ஒருங்கு எய்தியவனாகி,('இந்தக் கடலிடையுள்ள இலங்கை, (ஏழு கடலுக்கும்) அப்பால் நீண்ட தூரத்ததாயினும், எழு கடலையும் இவர் விரைந்து அடைப்பர்' என்று பாராட்டுவானாயினான்.

கு :—ஊழிமுதல் நாயகன் என்றது இராமனை. இவர் என்றது வானரரை. 'ஆழியில் இலங்கை நெடிதத்திசையினுமேல் ஏழு கடலும் கடிதடைப்பர் இவர்' என்பதனுடன், 'பகையிலங்கை, ஏழு

கடற்கும் அப்புறத்ததாகாதிருந்த திறிவன்றே' (சுந்தர. உருக் காட்டு. 111) என்று முன் பிராட்டி கூற்றாக வந்ததும் நோக்கத் தகும். (4)

இச்செய்யுளின்பின் சில பிரதிகளில் மட்டும் பின்வரும் மிகைச் செய்யுள் காணப்படுகிறது.

6877 (a) என்றுநளனைக்கருணை யிற்றழுவி யன்பா
லன்றுவரு ணன்னுதவு மாரமு மளித்துத்
துன்றுகதிர் பொற்கலனு மற்றுள தொகுத்தே
வென்றியினி யென்றுபடை யோருடன் விரைந்தான்.

இச்செய்யுள் பல பிரதேசங்களிலிருந்து கிடைத்த நல்ல சுவடி களில் காணப்படவில்லை. நடையமைதியும் சிறந்ததாயில்லை. ஆத லால் இதனைக் கம்பர் வாக்காகக் கொண்டு மூலத்தோடு இணைக் காமல் இங்கே பதிக்கலாயிற்று.

இராமன் வானரப் படையுடன் அணைமீது செல்லுதல்

6878. நெற்றியி லரக்கர்பதி செல்லநிறை நன்னூல்
கற்றுணரு மாருதி கடைக்குழை வரத்தன்
வெற்றிபுனை தம்பியொரு பின்புசெல வீரப்
பொற்றிரள் புயக்கரு நிறக்களிறு போனான்.

நெற்றியில் அரக்கர்பதி செல்ல, நிறை நல்நூல்
கற்று உணரும் மாருதி கடைக்குழை வரத் தன்
வெற்றிபுனை தம்பியொரு பின்புசெல, வீரப்
பொன் திரள்புயக் கருநிறக் களிறு போனான்.

பொ:—படையின் முன்னே அரக்கர் வேந்தனான வீடணன் செல்ல, நிறைந்த நல்ல நூல்களைக் கற்றுத் தேர்ந்த அனுமன், படையின் பின்னணியில்வர, வெற்றிமாலை யணிந்த தன் தம்பியாகிய இலக்குவன், தன் பின் வர, வீரத்தையுடைய அழகிய திரண்டகை யமைந்த கரிய யானை போல்பவனான இராமன், (அவ்வணை மீது படையின் இடையே) சென்றான்.

கு:—நெற்றி - படையின் முன்னணி. இராமனால் இலங்கை யரசுரிமை வீடணனுக்கு வழங்கப்பட்டமையின் வீடணனை அரக்கர் பதி என்றார். மாருதி - அனுமன். 'நிறை நன்னூல் கற்றுணரு மாருதி' என்பதனுடன், முன், 'இல்லாதவுலகத்தெங்கும் இங்கிவன் இசைகள் கூரக், கல்லாத கலையும் வேதக் கடலுமே என்னும் காட்சி

சொல்லாலே தோன்றிற்று' (கிட்கிந்தா. அனுமப். 20) என்பதும் நோக்கத்தகும். கடைக்கூழை என்பது கடைக்குழை என நின்றது விகாரம்.

சுக்கிரீவன் விரும்பியபடி அனுமன் தோள் மீது இராமனும், அங்கதன் தோள் மீது இலக்குவனும் அமர்ந்து சென்றனர் என்பது வான்மீகத்துக் கண்டது. (5)

அணைமீது சென்ற வானரப் படையின் தோற்றம்

6879. இருங்கவிகொள் சேனைமணி யாரமிட றித்தன்
மருங்குவளர் தெண்டிரை வயங்குபொழின் மான
வொருங்குநனி போயின துயர்ந்தகரை யூடே
கருங்கடல் புகப்பெருகு காவிரி கடுப்ப.

இருங்கவிகொள் சேனை, மணி ஆரம் இடறித்தன்
மருங்கு வளர் தெண் திரை வயங்கு பொழில் மான,
ஒருங்கு நனி போயினது; உயர்ந்த கரையூடே
கருங்கடல் புகப் பெருகு காவிரி கடுப்ப.

பொ :—இரத்தினங்களையும் ஆரங்களையும் இடறிக் கொண்டு தன் இரு பக்கத்தும் ஓங்கிய அலைகள் சோலைகள் போல் விளங்க, உயர்ந்த கரைகளினிடையே பெரிய கடலிற் புகும்படி பெருகுகின்ற காவிரிபோல, பெரிய வானரங்களைக் கொண்ட படைகள், (அவ்வணை மீது) மிகவும் திரண்டு சென்றன.

கு :—இரு பக்கமும் கடலலைகள் ஓங்கியெழ மணிகளையும் முத்துக்களையும் இடறிக்கொண்டு அணைமீது செல்லும் குரங்குப் படைக்கு, இரு பக்கமும் ஓங்கிய சோலைகளோடு மணிகளையும் ஆரங்களையும் இடறிக்கொண்டு, கரைகளினிடையே கடல்புகப் பெருகும் காவிரி யாறு உவமை. மருங்கு - பக்கம். மான, கடுப்ப என்பவை உவம வுருபுகள். காவிரிக்கு மணி ஆரம் இடறுதலாவது, காவிரி மலையிலிருந்து வருங்கால் அம்மலையிலுள்ள முத்து முதலிய இரத்தினங்களையும் சந்தன மரங்களையும் எற்றி உருட்டிக்கொண்டு வருதலாகும். வானரப் படைக்கு மணி ஆரம் இடறுதலாவது, கடல் அலைகளால் அணைமீது வீசப்பட்ட இரத்தினங்களையும் முத்துக்களையும் இடறிக் கொண்டு செல்லுவதாம். (6)

6880. ஓதிய குறிஞ்சிமுத லாயநில னுள்ள
கோதில வருந்துவன கொள்ளையின் முகந்துற்
றியாதுமொழி யாவகை சுமந்துகட லெய்தப்
போதலினு மன்னபடை பொன்னியென லாகும்.

ஓதிய குறிஞ்சி முதலாய நிலன் உள்ள
கோதுஇல அருந்துவன கொள்ளையின் முகந்து உற்று,
யாதும் ஒழியாவகை சுமந்து, கடல் எய்தப்
போதலினும், அன்ன படை, பொன்னி எனல் ஆகும்.

பொ :—நூல்களிற் கூறப்பட்ட குறிஞ்சி முதலிய நிலங்களில் உள்ள குற்றமற்ற உணவுப் பொருள்களை மிகுதியாக அள்ளிக் கொண்டு, எதுவும் நீங்காதபடி சுமந்து கடலடையச் செல்லுதலாலும், அந்தப் படையினைப் பொன்னி என்று சொல்லுதல் தகும்.

கு :—பலவகை உணவுப் பொருள்களையும் மிகுதியாகச் சுமந்து செல்லும் குரங்குப் படைக்கு, தான் பெருக்கெடுத்துச் செல்லும் வழியிலுள்ள குறிஞ்சி முதலிய நிலங்களில் பொருந்திய பலவகை உணவுப் பொருள்களையும் மிகுதியாக வாரிக்கொண்டு செல்லும் காவிரியாறு உவமை. ‘இலை முதற் பொருள் யாவையும் ஏந்தலால், நிலையுடைக்கவி நீத்தம் அந்நீத்தமே’ (பால. ஆற்றுப். 9.) என்றதும் இங்கு நோக்கத்தகும். குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும். கொள்ளை - மிகுதி. பொன்னி - காவிரி. (7)

அணைமீது வானரப் படை செல்லுங்கால் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகள்

6881. ஆயது நெருங்கவடி யிட்டய விடாமற்
றேயுநெறி மாடுதிரை யூடுவிசை செல்லப்
போயசில பொங்குதொறு பொங்குதொறு பூசற்
பாய்புரவி விண்படர்வ போலினிது பாய்வ.

ஆயது நெருங்க அடியிட்டு, அயல் இடாமல்,
தேயும் நெறி மாடு திரை ஊடு விசை செல்லப்
போயசில, பொங்குதொறு பொங்குதொறு பூசல்
பாய்புரவி விண் படர்வபோல், இனிது பாய்வ.

பொ :—அப்படை நெருங்க அடிவைத்து, (ஒருவர்) அடிவைத்த இடத்தன்றி வேறிடத்து அடிவையாமல் (நடத்தலால்) தேய்ந்த

வழியில், அலைகள் இடையே விரைந்து செல்ல நடந்த சில கவிகள், அலைகள் மிக்கு எழுந்தோறும் எழுந்தோறும் போரில் பாய்ந்து செல்லும் குதிரைகள் வானிற் செல்வனபோல், நன்கு பாய்ந்து செல்வன வாயின.

கு :—கவிப்படை அணைமீது செல்லுங்கால் ஒருவர் அடி வைத்த இடத்தே மற்றவரும் அடிவைத்து (வேறிடத்து அடி வையாமல்) நடத்தலால் தேய்ந்து தடம்பட்ட நெறியிற் செல்லும் சில வானரங்கள், நெறியிடையே கடல் அலைகள் பாய்ந்து வருந்தோறும், போர்க் குதிரைகள் விண்மிசைத் தாவிச் செல்லுதல்போலத் தாவிச் செல்வனவாயின என்றவாறு. (8)

6882. மெய்யிடை நெருங்கவெளி யற்றயலில் வீழும்
பொய்யிடமி லாதபுன லிற்புக லிலாத
யுய்விட மளிக்குமரு ளாளர்முறை யுய்த்தார்
கையிடை கொடுப்பவழி சென்றகரை யில்லை.

மெய் இடை நெருங்க வெளியற்று அயலில் வீழும்
பொய்யிடம் இலாத புனலில் புகல் இலாத,
உய்விடம் அளிக்கும் அருளாளர் முறை உய்த்தார்
கையிடை கொடுப்ப வழிசென்ற கரையில்லை.

பொ :—(அணை மீது செல்லுங்கால்) ஒருவருடலோடு ஒருவர் உடல் நெருங்குதலால், (நிற்க) இடமின்றிப் பக்கத்தே விழும் வெற்றிடம் பெறுதனவும், நீரில் நீந்திச் செல்லும் ஆற்றலற்றனவும் ஆன குரங்குகள், உய்தற்குரிய இடத்தைக் கொடுக்கும் கருணையாளர் தன்மையை மேற்கொண்ட சிலர் இடையே கைகொடுப்பச்சென்று, கரையினையடைந்தன. அவ்வாறு கரையினை அடைந்த குரங்குகள், கணக்கில் அடங்கா.

கு :—வீழ்தல் - விழுதல். பொய்யிடம் - வெற்றிடம். முறை - தன்மை. கரை முன்னது கடற்கரை, பின்னது எல்லை. கூட்டத்தில் அகப்பட்டனவும் செல்லுதற்கு வெற்றிடம் பெறுதனவும் நீரில் நீந்திச் செல்லும் ஆற்றல் அற்றனவுமான பல குரங்குகள் அருளுடைய கவிகள் கைகொடுக்கச் சென்று கரையை அடைந்தன என்றவாறு. பின்னிரண்டடிகளில், பிறவிக் கடலில் வருந்தி, நற்குரவன் அருளால் கையபயங்காட்டி, உய்விக்க அக்கடல் கடந்து உய்திபெறும் உயிர்களியல்பும் தோன்ற வைத்த நயம் நோக்கத்தகும். (9)

வானரர் குடைபிடித்தும் சாமரை வீசியும் இராமனை உபசரித்து வருதல்

6883. இழைத்தனைய வெங்கதிரின் வெஞ்சுட ரிராமன்
மழைத்தமுகி லன்னமணி மேனிவரு டாமற்
றழைத்தநிழ லுற்றகுளிர் சந்தன முயர்ந்த
வழைத்தரு வெடுத்தருகு வந்தன ரநேகர்.

இழைத்தனைய வெம்கதிரின் வெம்சுடர் இராமன்
மழைத்த முகில் அன்ன மணி மேனி வருடாமல்
தழைத்த நிழல் உற்ற குளிர் சந்தனம் உயர்ந்த
வழைத் தரு எடுத்து அருகு வந்தனர் அநேகர்.

பொ :—இழைத்தாற்போன்ற சூரியனுடைய வெவ்விய ஒளியானது இராமனுடைய சூற்கொண்ட மேகம் போன்ற அழகிய திருமேனியிலே படாமல், தழைத்த நிழலுள்ள குளிர்ந்த சந்தன மரங்களையும், ஓங்கிய சுரபுன்னை மரங்களையும் (குடையாகக்) கைக்கொண்டு, இராமன் பக்கத்தே அநேக வானர வீரர் வந்தனர்.

கு :—இழைத்தல் - திரட்டி வைத்தல். மழைத்த முகில்-மழையைத் தன்கட் கொண்ட (சூற்கொண்ட) மேகம். வருடுதல் - பரிசித்தல். வழைத்தரு - சுரபுன்னை மரம். (10)

6884. ஓமநெறி வாணர்மறை வாய்மையொரு தானே
யாமரசன் மைந்தர்திரு மேனியல சாமே
பூமரனி றுத்தவை பொருத்துவ பொருத்திச்
சாமரையின் வீசினர் படைத்தலைவர் தாமே.

ஓம நெறிவாணர் மறை வாய்மை ஒருதானே
ஆம் அரசன் மைந்தர் திருமேனி அலசாமே,
பூ மரன் இறுத்தவை பொருத்துவ பொருத்திச்
சாமரையின் வீசினர் படைத்தலைவர் தாமே.

பொ :—வேள்வி நெறியால் வாழும் அந்தணருடைய வேதங்களிற் கூறப்படும் மெய்ம்மையின் வடிவம் தானொருவனேயான தசரதன் மைந்தராகிய இராமலக்குவர் திருமேனி வருந்தாமல், ஒடிக்கப்பட்ட பூக்களையுடைய மரக்கிளைகளில் மேலும் இணைக்கவேண்டியவற்றை இணைத்துச் சாமரைகளைப் போல(க்கொண்டு) படைத்தலைவர் வீசுவாராயினர்.

கு :—ஓமம் - வேள்வி. (திவா) மறைவாய்மை - வேதங்களிற் கூறப்படும் மெய்ம்மை; "யாம் மெய்யாக்கண்டவற்றுள்" (300) என்று தொடங்கும் குறளில், 'மெய்யுணர்த்துவனவற்றை மெய் என்றார். அவையாவன :—தங்கண் மயக்கம் இன்மையின் பொருள்களை உள்ளவாறு உணரவல்லராய்க் காமவெகுளிகள் இன்மையின், அவற்றை உணர்ந்தவாறே உரைக்கவல்லராய் இறைவர் அருளான் உலகத்தார் உறுதியெய்துதற் பொருட்டுக் கூறிய ஆகமங்கள்' என்று பரிமேலழகர் வரைந்தமையும் இங்கு நோக்கத் தகும். வாய்மை ஒரு தானே ஆம் அரசன் என்றது தசரதனை. அலசுதல் - வருந்துதல்; 'திருவுடம்பலச நோற்கின்றான்' (ஆரண்ய. சூர்ப்பணகைப். 18.) என்பதனுள்ளும், அலசுதல் வருந்துதல் என்னும் பொருளிற் பயின்றமை காணலாம். மரன் - மரம்; போலி. அரசர்க்குச் செய்யும் உபசாரங்களுள், குடை கவித்தலும் சாமரை வீசுதலும் சிறந்தவை. அவற்றுள், இராமனுக்குக் குடை கவித்தமை முன் பாட்டால் பேசப் பட்டது. இச்செய்யுளால் சாமரை வீசுதல் கூறப்பட்டது. (11)

இராமன் கடல் கடந்து கரையடைதல்

6885. அருங்கடக மங்கையி லகற்றியயர் வோடு
மருங்கட வளர்ந்தமுலை மங்கைமன முன்னு
வொருங்கட லுயர்ந்தபடர் தானையொடு மோதத்
திருங்கடல் கடந்துகரை யேறின னிராமன்.

அருங் கடகம் அம்கையில் அகற்றி, அயர்வோடும்,
மருங்கு அட வளர்ந்த முலை மங்கை மனம் உன்னு,
ஒருங்கு அடல் உயர்ந்த படர் தானையொடும், ஓதத்து
இருங்கடல் கடந்து, கரை ஏறினன், இராமன்.

பொ :—இராமன், அருமையான வளைகளை அழகிய கைகளினின்று கழற்றி நீக்கித் தளர்வுற்றவளும், இடையை வருத்தும்படியெழுந்த தனங்களையுடையவளுமான சீதையின் மன நிலையினை நினைந்து, பகைவரை யெல்லாம் ஒரு சேர அழிக்கும் ஆற்றல் மிக்க பரவிய சேனையோடு அலைகளையுடைய பெரிய கடலைக் கடந்து, கரையினை அடைந்தான்.

கு :—கடகம் - வளை. அயர்வோடல் - அயர்வுறல் = தளர்தல். அடல் - அழித்தல். படர்தல் - பரவுதல், ஓதம் - அலை; 'கடலோதம் கால் அலைப்பக் கண் வளரும்' (திவ். இயற்பா. 1. 16) என்னும் அருளிச் செயலுள் ஓதம் அலை என்னும் பொருளிற் பயின்றமை காணலாம். (12)

இராமன் சுவேலமலையில் தங்குதல்

6886. பெருந்தவ முயன்றமரர் பெற்றிடும் வரத்தான்
மருந்தனைய தம்பியொடும் வன்றுணைவ ரோடு
மருந்ததியும் வந்தனைசெ யஞ்சொலிள வஞ்சி
யிருந்தநக ரின்புறனோர் குன்றிடை யிருத்தான்.

பெருந்தவம் முயன்று அமரர் பெற்றிடும் வரத்தால்,
மருந்து அனைய தம்பியொடும், வன் துணைவரோடும்,
அருந்ததியும் வந்தனைசெய் அம்சொல் இளவஞ்சி
இருந்த நகரின் புறன், ஓர் குன்றிடை இறுத்தான்.

பொ:—தேவர் பெரிய தவத்தைச் செய்து பெற்ற வரத்தால், அமுது போல் (பெறுதற்கரிய நலங்களைப் பயப்)பவனாகிய இலக்குவனுடனும், ஆற்றல் வாய்ந்த துணைவருடனும், அருந்ததியும் வணங்கும் தகுதி வாய்ந்த அழகிய மொழியினையுடைய இளைய கொடிபோல்பவளான சீதாபிராட்டி இருந்த இலங்கை நகரின் புறத்தே உள்ள ஒரு மலையில் இராமன் தங்கினான்.

கு:—பெருந்தவம் என்றது சரணாகதியை; தேவர் வணங்கிக் குறையிரக்க, அவர் துயர் துடைத்தற்பொருட்டுத் திருமாலே இராமனாக வந்தானாதலின், தவத்தால் பெற்றிடும் வரத்தால், இறுத்தான் என்க. உடன் பிறப்பின் பெருமை தோன்ற மருந்தனைய தம்பி என்றார். மருந்து - அமுதம். 'மருந்தனைய தங்கை' (ஆரணிய மாரீசன் 58) என்றார் முன்னும், துணைவர் என்றது சுக்கிரீவன் வீடணன் முதலியோரை. அருந்ததி - வசிட்ட முனிவன் மனைவி; கற்புடைய மகளிர்க்கு எடுத்துக் காட்டாக விளங்குபவள். வஞ்சி உவமவாகு பெயராய்ச் சீதையைச் சுட்டி நின்றது. ஓர் குன்று என்பது ஒர் குன்று என நின்றது விகாரம். குன்று என்றது சுவேல மலையை. இறுத்தல் - தங்குதல். இராமன் என்னும் எழுவாய் முன் செய்யுளிலிருந்து கொள்ளலாயிற்று. (13)

52-ஆம் பிரதியில் இச்செய்யுளின் பின் காணப்படும் மிகைப் பாடல் வருமாறு:—

6886 (a) இறுத்தன னேழுபத்து வெள்ளமாம் சேனையோடும்
குறித்திடு மறுபத்தேழு கோடியாம் வீரரோடும்
பொறுத்த மேவேழுதானைத் தலைவர்களோடும் பொய்தீர்
அறத்தினுக் குயிராயென்று மழிவிலா வமலனம்மா.

23; 43-ஆம் சுவடிகளில் இச்செய்யுளுடன் சுவேலைப்படலம் முற்றுகிறது. பின் நளனுக்கு முடிசூட்டு படலம் என்ற தலைப்பின் கீழ்க் காணப்படும் மிகைப்பாடல்கள் வருமாறு:—

6886 (1) என்றுமகிழ் கொண்டிரவி மைந்தனை யிராமன்
வன்றிறலி னுளன் வகுத்தஅணை மானக்
குன்றநெடு நீரின்மிசை நின்றிலகு கொள்கை
நன்றெனமுயன்றதவ மென்கொல் நவில்கென்ருன்.

(2) நவிற்றுதி ரெனக்கருணை வள்ளலெதிர் நாமக்
கவிக்கிறைவ னெய்தியிரு கைமலர் குவித்தே
புவிக்கிறைவ போதினமர் புங்கவ னிடத்தே
உவப்புடனுதித்தவர்கள் ஓர் பதின்ம ரென்பார்.

(3) மலரவனி டத்தில்வரு காசிபன் மரீசி
புலகனுட னத்திரி புலத்தியன் வசிட்டன்
இலகுவிசு வன்பிருகு தக்கனியல் பாகும்
நலமருவு மங்கிர வெனப்புகல்வர் நல்லோர்.

(4) மக்கடனில் ஒன்பதின்மர் வான முதலாக
மிக்கவுல கைத்தர விதித்துவிசு வப்பேர்
தொக்கபிர மற்கொரு தொழிற்றனை விதித்தான்
அக்கண நினைத்தபடி அண்ட முதலாக.

(5) அன்னதொழி லால்விசுவ கன்மனென லானுன்
பொன்னுலகை யாதிய வகுத்திடுதல் போல
நென்னலிகன் மாருதி நெருப்பினி லழிந்த
நன்னகர முன்னையினு நன்குற வளித்தான்.

(6) மூவுலகி னெவ்வெவர்கண் முன்னுமணி மாடம்
ஆவது புரிந்துமய னுகவு மிருந்தான்
தேவரிகன் மாவசுரர் சொற்றமுறை செய்தற்
காவளவில் வானவர்கள் தச்சனென லானுன்.

(7) அன்னவ னியற்கையறி தற்கரிய மேனுட்
பன்னுமறை யந்தணன் விதித்தபடி பார்மேல்
மன்னுமிறை யோரெவரும் வந்தபடி தானே
வுன்னுமவன் மைந்தனள னென்றிட வுதித்தான்.

(8) தாயரொடு தந்தைமகி ழுந்தனையன் வானின்
மேயமதி போலவளர் மெய்யின்மணி மாட
நாயகம தானதிரு வீதியி னடந்தே
ஏயசிறு பாலருட னுடிமனை யெய்தும்.

(9) சிந்தைமகி ழில்வில்வினை யாடுசிறு வன்றேர்
தந்தைவழி பாடுபுரி யுங்கடவு டன்னை
வந்துதிகழ் மாமணி மலர்த்தவிசி னோடே
கந்தமலர் வாவியி னிடைக்கடிதி னிட்டான்.

(10) மற்றைய தினத்தினிறை யெங்கென மருண்டே
பொற்றொடி மடந்தையை விளித்துரை யெனப்போய்
நற்றவ மகச்செயல் நடுக்கியயல் நண்ணிச்
சொற்றன ளெடுத்துவழி பாடுபுரி தூயோன்.

(11) பூசனை புரிந்தவன் வயத்திறை புகாமே
கோசிக மமைத்துமணி மாடமது கோலி
நேசமுற வைத்திடவும் நென்னலென வோடி
ஆசையி னெடுத்தவனும் ஆழ்புனலி னிட்டான்.

(12) இப்படி தினந்தொறு மியற்றுவது கண்டே
மெய்ப்புதல்வ னைச்சின மிகுத்திட வெகுண்டும்
அப்படிசெய் அத்திறம் அயர்த்திலன் இவன்றன்
கைப்படல் மிதக்கவென வோருரை கதித்தான்

(13) அன்றுமுதல் இன்னவன் எடுத்த புனலாழா
என்றரிய மாதவர் இசைத்தபடி இன்னே
குன்றுகொ டடுக்கநிலை நின்றது குணத்தோய்
என்றுநளன் வன்றிற மெடுத்துமு னிசைத்தான்.

(14) சொற்றவை யனைத்தையுங் கேட்டுத் தூய்மறை
கற்றவர் அறிவுறும் கடவுள் இத்தொழில்
முற்றுவித் தனையுள மகிழ மொய்ம்பினோய்
மற்றுனக் குரைப்பதென் முகமன் வாழியாய்.

(15) ஐயனல் லியற்கையெப் பொருளு மன்பினால்
எய்தினர் மகிழ்ந்திட ஈயும் எண்ணினால்
செய்தொழில் மனக்கொளச் செய்த செய்கைகண்
டுய்திறம் நளற்குமன் றுடைமை யாதலான்.

(16) இத்திறம் புரிநளற் கின்பம் எய்தவே
வித்தக வியற்றிட வேண்டு மென்றனன்
உத்தம னுரைப்படி உளுற்றற் கெய்தினர்
முத்திறத் துலகையு மேந்து மொய்ம்பினர்.

(17) இங்கிவை தாதையை யெண்ணு முன்னமே
அங்கவன் வணங்கின னருகி னெய்தினன்
புங்கவ நின்மகற் கினிய பொன்முடி
துங்கமா மணிக்கலன் தருதி தூய்மையாய்.

(18) என்றலு மணிமுடிக் கலன்க ளின்னருத்
துன்றுமா மலர்த்தொடை தூயபொற்றுகில்
குன்றெனக் குவித்தனன் கோலமா மலர்
மன்றல்செய் விதானமு மருங்கமைத்தரோ!

(19) முடிபுனை மண்டப மொன்று முற்றுவித்
திடிநிகர் பல்லிய மியம்ப வானரர்
நெடியவான் கங்கையே முதல நீத்தநீர்
கடிதுகொண் டணைந்தனர் கணத்தினென்பவே.

(20) நளன்றனை விதிமுறை நான மாடுவித்
திளங்கதி ரனைய பொற்றுகிலு மீந்தொளிர்
களங்கனி யனையவ னேவக் கண்ணகன்
வளர்ந்திகழ் மண்டப மருங்கி னெய்தினன்.

(21) ஆனதோர் காலையி னருக்கன் மைந்தனும்
ஏனைய வீரரு மிலங்கை மன்னனும்
வானர ரனைவரு மருங்கு சூழ்வரத்
தேனிமிர் அலங்கலுங் கலனுஞ் சேர்த்தியே.

(22) பொலங்கிரி யனையதோட் டம்பி போந்தொளி
யிலங்கிய மணிமுடி யிருகை யேந்தினன்
அலங்கலந் தோணளற் கன்பிற் சூட்டினன்
குலங்களோ டினிதுவாழ் கென்று கூறியே.

(23) இளையவன் றிருமலர்க் கையி னேந்திய
ஒளிமுடி புனைந்திட வுலக மேழினும்
அளவிலா வுயிர்த்தொகை யனைத்தும் வாழ்த்தியே
நளனியற் றியதவம் நன்றென் றேத்தினர்.

(24) முடிபுனை நளனெழுந் திறைவன் மொய்கழல்
அடிமிசை வணங்கிட வவனுக் கந்தமில்
படிபுக ழாசிகள் பகர்ந்து பார்மிசை
நெடிதுற நின்குல மென நிகழ்த்தினன்.

(25) மற்றைய ரனைவரும் அருள் வழங்கவே
பொற்றிரண் மணிமுடி புனைந்த போர்க்களி
றுற்றடி வணங்கிட வுவந்து தாதையும்
பெற்றனன் விடைகொடு பெயர்ந்து போயினன்.

(26) இன்னணம் நிகழ்ந்தபின் இனிதி னெம்பிரான்
றன்னிகர் சேதுவை நோக்கித் தையலாள்
இன்னறீர்த் திடவெழுந் தருள வெண்ணினன்
பின்னவ ணிகழ்ந்தமை பேசு வாமரோ.

நளனுக்கு முடிசூட்டு படலம் முற்றும்.

46

இராமன் நீலனிடம் படைவீடு அமைக்கும்படி பணித்தல்

6887. நீலனை யினிது நோக்கி
✶ நேமியோன் விரைய நீநம்
பால்வரு சேனைக் கெல்லா
மிழைத்தியாற் பாடி யென்னக்
கால்வரை வணங்கிப் போனான்
கல்லினாற் கடலைக் கட்டி
நூல்வரை வழிசெய் தானுக்
கந்நிலை நொய்திற் சொன்னான்.

நீலனை இனிது நோக்கி, நேமியோன், 'விரைய' நீநம்
பால்வரு சேனைக் கெல்லாம் இழைத்தியால் பாடி ' என்னக்
கால்வரை வணங்கிப் போனான், கல்லினால் கடலைக் கட்டி,
நூல்வரை வழி செய்தானுக்கு அந்நிலை நொய்திற் சொன்னான்.

பொ :—சக்கரப் படையினையுடைய திருமாலின் அமிசமான இராமன், நீலனை இனிதாகப் பார்த்து, 'நீ நம்முடைய வகுப்பமைந்த படைகளுக்கெல்லாம் விரைவில் பாடி வீடமைக்கச் செய்' என்று கூற, அவன், இராமன் அடிகளில் வணங்கிச் சென்று, மலைகளால் கடலை அடைத்து, நூல்களிற் கூறும் முறையால் வழியாகிய அணையைக் கட்டிய நளனுக்கு அப்பணியை விரைந்து தெரிவித்தான்.

கு :—நீலன், வானரப்படைத் தலைவன். நேமியோன் என்றது இராமனை. பால் - பகுப்பு. பாடி - பாசறை. வரை என்பது முறையே இடம், முறை என்னும் பொருளிற் பயின்றது. கல் – மலை. (14)

23, 43 என்னும் சுவடிகளில் இச்செய்யுள் முதலாக ஒற்றுக் கேள்விப்படலம் தொடங்குகிறது.

44-ஆம் சுவடியில் இச்செய்யுள் முதலாக விருதிப்படலம் தொடங்குகிறது.

இச்செய்யுளின்பின் 52-ஆம் பிரதியில் குறிக்கப்பட்ட மிகைச் செய்யுள் வருமாறு :—

6887 (a) கேட்டலும் நளனென் றேதும் கேடிலாத் தச்சன் கேள்வி
வாட்டமில் சிந்தை யான்றன் மனத்தினுங் கடுகிவல்லே
நீட்டுறு மழிவில்லாத யோசனை நிலையதாகக்
காட்டினன் மதிலினோடும் பாசறை கடிதினம்மா.

நளன் படைவீடமைத்தல்

6888. பொன்னினு மணியி னாலு
நான்முகன் புனைந்த பொற்பி
னன்னல மமைய வாங்கி
நால்வகைச் சதுர நாட்டி
யின்னரென் னாத வண்ண
மிறைவற்கும் பிறர்க்கு மெல்லா
நன்னகர் நொய்திற் செய்தான்
றாதையு நாணுக் கொண்டான்.

பொன்னினும் மணியினாலும் நான்முகன் புனைந்த பொற்பின் நல் நலம் அமைய வாங்கி, நால்வகைச் சதுரம் நாட்டி, இன்னர் என்னாத வண்ணம் இறைவற்கும் பிறர்க்கும் எல்லாம் நல்நகர் நொய்தின் செய்தான்; தாதையும் நாணுக் கொண்டான்.

பொ :—சிறந்த அழகமைய (நிலத்தைப்) பிரித்து, நால்வகைச் சதுரமும் நிறுவி, இதில் இருக்கத்தக்கவர் இவர் என்று நினைக்கலாகாதவாறு, அரசனாகிய சுக்கிரீவனுக்கும் மற்றையோர்க்கும் ஒளி பொருந்திய நல்ல பாடி வீடுகளைப் பொன்னாலும் மணிகளாலும் பிரமனியற்றிய தன்மைபோல நளன் விரைவிற் செய்து முடித்தான்; அதுகண்டு, அவனுடைய தந்தையாகிய விசுவகருமாவும் நாணினான்.

கு :—நலம் - அழகு. வாங்கி - பிரித்து. நால்வகைச் சதுரம் - சிற்ப நூல் கூறும் கட்டிட அமைதியில் ஒருவகை; 'நால்வகைச் சதுரம் விதிமுறை நாட்டி' (பால. நகரப். 8.) என்றார், முன்னும். இன்னர் - இப்படிப்பட்ட தகுதியுடையவர். கட்டிட அமைதி கொண்டு இஃது இன்னார் இருக்கை என்று அறியமுடியாதபடி பாடி வீடுகளெல்லாம் நன்கமைக்கப்பட்டன என்றவாறு. இறைவன் என்றது வானர அரசனாகிய சுக்கிரீவனை. நொய்து - விரைவு. தாதை - தந்தை; நளனுக்கு விசுவகன்மா தந்தையாதலின் தாதை என்றார். நளன் அமைத்த பாடி வீடுகளின் அமைதிகண்ட விசுவ கருமா அவ்வீடுகள் தன் படைப்பினும் சிறந்து விளங்குதலால், நாணுவானாயினன். (15)

நளன் இராமனுக்கு இருக்கையமைத்தல்

6889. வில்லினுற் கிருக்கை செய்யும்
விருப்பினுற் பொருப்பின் வீங்குங்
கல்லினுற் கல்லை யொக்கக்
கடாவினுன் கழைக ளான
நெல்லினு லலக்குங் காலு
நிரப்பினுன் றருப்பை யென்னும்
புல்லினுற் றொடுத்து வாசப்
பூவினுல் வேய்ந்து போனுன்.

வில்லினுற்கு இருக்கை செய்யும்
விருப்பினுல், பொருப்பின் வீங்கும்
கல்லினுல் கல்லை ஒக்கக்
கடாவினுன், கழைகளான
நெல்லினுல் அலக்கும் காலும்
நிரப்பினுன், தருப்பை என்னும்
புல்லினுல் தொடுத்து, வாசப்
பூவினுல் வேய்ந்து போனுன்.

பொ :—வில்லையேந்தியவனை இராமனுக்குத் தங்குமிடம் அமைக்கும் ஆசையால், மலையின்கண் மேடாக நின்ற கற்களைக் கல்லால் அடித்து, அழுத்தி, நிலத்தைச் சமப் பரப்பாக்கி, விளைந்த நெல்லினையுடைய மூங்கில்களால், தூணும் வரிச்சும் அமைத்துத் தருப்பை என்னும் புல்லால் பிணைத்து, நறுமணமுடைய பூக்களால் கூரை வேய்ந்தான்.

கு :—பொருப்பின் வீங்கும் கல்லைக் கல்லினுல் ஒக்கக் கடாவினுன் எனவும், ஆன நெல்லின் கழைகளால் எனவும் இயைக்க. கழை - மூங்கில். புல்லினத்தைச் சேர்ந்த கழையினை நெல்லினத்தைச் சேர்ந்ததென்று தொனிக்கும்படி பேசிய கவித்திறம் நோக்கத்தகும். அலக்கு - வரிச்சு. கால் - தறி. மூங்கிலில் நெல் விளைதல் உண்டென்பது, 'சிறியிலை வெதிரினெல் விளையும்மே' (புறம். 109. 4.) என்னும் புறநானூற்றுச் செய்யுட் பகுதியாலும், 'சிறிய இலையையுடைய மூங்கிலினது நெல் விளையும்' என்னும் பழையவுரையாலும் 'நீள் கழை நெல்லும்' (1422) என்னும் சீவக சிந்தாமணிச் செய்யுளடியானும் புலனுகும். (16)

இதன் பின் 52 ல் காணப்படும் மிகைப்பாடல் வருமாறு :—

6889 (a) போயின னமலன் பாதம் பொருக்கென வணங்கி யின்னே
ஆயின தணிகொள் பாடி நகர்முழு தமல வென்றுன்
நாயகன் றனும் வல்லே நோக்கினன் மகிழ்ந்து நன்றென்
றேயின னெவருந் தத்தம் பாசறை யிருக்க வென்றே.

யாவரும் அவரவர்க்கு அமைத்த இருக்கையை அடைதல்

6890. வாயினு மனத்தி னுனும்
வாழ்த்திமன் னுயிர்கட் கெல்லாந்
தாயினு மன்பி னுனைத்
தாளுற வணங்கித் தத்த
மேயின விருக்கை நோக்கி
யெண்டிசை மருங்கும் யாரும்
போயினர் பன்ன சாலை
யிராமனு மினிது புக்கான்.

வாயினும் மனத்தினனும் வாழ்த்தி, மன்னுயிர்கட்கு எல்லாம் தாயினும் அன்பினனைத் தாள் உற வணங்கித் தத்தம் ஏயின இருக்கை நோக்கி எண் திசை மருங்கும் யாரும் போயினர்; பன்னசாலை இராமனும் இனிது புக்கான்.

பொ :—நிலைபெற்ற எல்லாவுயிர்களிடத்தும் தாயினும் அன்புள்ளவனை இராமனை, யாவரும், வாயாலும் மனத்தாலும்வாழ்த்தி, அவன்டிகளில் முடிபணிய வணங்கி, தத்தமக்கு விடுக்கப்பட்ட இடங்களை நோக்கி, எட்டுத் திக்கினும் சென்றனர்; இராமனும் தனக்கு அமைத்த பன்னசாலையில் இனிதாகப் புகுந்தான்.

கு :—யாரும் அன்பினனை வாழ்த்தி வணங்கித் தத்தம் இருக்கை நோக்கி எண்டிசை மருங்கும் போயினர்; இராமனும் பன்னசாலை இனிதுபுக்கான் என இயையும். (17)

சூரியன் அத்தமித்தல்

6891. பப்புநீ ராய வீரர்
பருவரை கடலிற் பாய்ச்சத்
துப்புநீ ராய தூய
சுடர்களுங் கறுக்க வந்திட்

டுப்புநீ ரகத்துத் தோய்ந்த
வொளிநிறம் விளங்க வப்பா
லப்புநீ ராடு வான்போ
லருக்கனு மத்தஞ் சேர்ந்தான்.

பப்பு நீர் ஆய வீரர் பருவரை கடலில் பாய்ச்சத்
துப்பு நீர் ஆய தூய சுடர்களும் கறுக்க வந்திட்டு
உப்பு நீர் அகத்துத் தோய்ந்த ஒளிநிறம் விளங்க, அப்பால்
அப்பு நீர் ஆடுவான் போல் அருக்கனும் அத்தம் சேர்ந்தான்.

பொ :—பரவிய தன்மையினையுடைய வானர வீரர், (அணைகட்டு மாறு) பெரிய மலைகளைக் கடலிலே வீசுதலால், பவளத்தின் ஒளியுடைய செவ்விய கிரணங்களும் கறுக்கும்படி வந்து, கடலின் உப்பு நீர் தோய்ந்த தன் உடலின் (மங்கிய) ஒளி விளங்கும்படி, அப்பாலுள்ள நன்னீரிலே முழுகுபவனைப் போலச் சூரியனும் அத்தகிரியை அடைந்தான்.

கு :—பப்புநீர் - பரவிய இயல்பு. வந்திட்டு - வந்து. உப்புநீர் தோய்ந்த அகத்து ஒளி நிறம் விளங்க என இயைக்க. அகம்-மார்பு; இங்கே உடல் என்று கொள்ள நின்றது. உப்புநீரில் முழுகியவர், தம் உடலிற்படிந்த உவரழுக்கைப் போக்கிக் கொள்ள நன்னீரில் முழுகும் வழக்கமும் இங்கு நினைக்கத்தகும். (18)

சந்திரன் தோன்றுதல்

6892. மாலுறு குடக வானின்
வயங்கிய வந்து தோன்றும்
பாலுறு பசுவெண் டிங்கள்
பங்கய நயனத் தண்ணன்
மேலுறு பகழி தூர்க்க
வெகுண்டனன் விரைவின் வாங்கிக்
காலுற வளைத்த காமன்
வில்லெனக் காட்டிற் றன்றே.

மால் உறு குடக வானின், வயங்கிய வந்து தோன்றும்
பால் உறு பசு வெண் திங்கள், பங்கய நயனத்து அண்ணல்
மேல் உறு பகழி தூர்க்க வெகுண்டனன், விரைவின் வாங்கிக்
கால் உற வளைத்த காமன் வில் எனக் காட்டிற்று அன்று ஏ.

பொ :—பெருமை பொருந்திய மேற்றிசை வானத்தில், விளங்கும்படி வந்து தோன்றிய பால்போலும் வெள்ளிய நிறமுடைய பிறைச் சந்திரன், தாமரை மலர்போலும் கண்களையுடைய பெருமை வாய்ந்த இராமன் மேல், மிக்க அம்புகளைச் சொரியும்படி விரைந்து சினந்து கைக்கொண்டு இரு நுனியும் பொருந்த வளைத்த மன்மதனுடைய வில்லைப்போலத் தோன்றிற்று.

கு :—மால் - பெருமை. குடகவான் - மேற்றிசை வானம். வயங்குதல் - விளங்குதல். அண்ணல் என்றது இராமனை. வெகுண்டனன் - வெகுண்டு ; முற்றெச்சம். (19)

தென்றல் சந்திரன் முதலியவை கொதித்தல்

6893. நூற்றிதழ்க் கமலந் தந்த
நுண்ணறுஞ் சுண்ண முண்ணத்
தீற்றிமென் பனிநீர் தோய்ந்த
சீதளத் தென்ற லென்னுங்
காற்றினு மாலை யான
கனலினுங் காமன் வாளிக்
கூற்றினும் வெம்மை காட்டிக்
கொதித்ததக் குளிர்வெண் டிங்கள்.

நூற்று இதழ்க் கமலம் தந்த
நுண் நறுஞ் சுண்ணம் உண்ணத்
தீற்றி, மென் பனிநீர் தோய்ந்த
சீதளத் தென்றல் என்னும்
காற்றினும் மாலையான கனலினும்
காமன் வாளிக்
கூற்றினும் வெம்மை காட்டிக்
கொதித்தது அக்குளிர் வெண் திங்கள்.

பொ :—குளிர்ந்த வெள்ளிய சந்திரன், நூறு இதழ்களையுடைய தாமரையுதவிய நுண்ணிய நறுமணமுள்ள மகரந்தப் பொடியைத் தன்மீது படியப் பூசிக்கொண்டு, மெல்லிய பனிநீரில் தோய்ந்த குளிர்ந்த தென்றல் என்று சொல்லப்படும் காற்றினைக் காட்டிலும், மாலைக்காலமாகிய நெருப்பைக் காட்டிலும் மன்மதனுடைய அம்புகளாகிய இயமனைக் காட்டிலும், கொடுமையை வெளிப்படுத்திக் கொண்டு வெதும்பியது.

கு :—சுண்ணம் தீற்றி, பனி நீர் தோய்ந்த தென்றல் என்க. விரக நோயுற்றார்க்குத் தென்றலும் மாலையும் மன்மத பாணங்களும் சந்திரனும் துன்பத்தை மிகுவிப்பன. காமநோய் மிக்க இராமன், தென்றலும் மாலையும் மன்மதன் அம்பும் ஆகிய இவற்றால் விளையும் துன்பத்தினும் திங்களால் மிகவும் துன்புறுவானாயினன் என்றவாறு. சுண்ணம் - பொடி. தீற்றுதல் - பூசுதல். குளிர்வெண் திங்கள் கொதித்தது என்க. (20)

இராமன் தோள்மீது நிலாத்தவழும் தோற்றம்

6894. செயிர்ப்பினு மழகு செய்யுந்
திருமுகத் தணங்கைத் தீர்ந்து
துயிற்சுவை மறந்தான் றோளிற்
றூநிலாத் தவழுந் தோற்ற
மயிற்குலம் பிரிந்த மான
மரகத மலைமேல் வன்னி
யுயிர்ப்புடை வெள்ளைப் பிள்ளை
வாள்அரா ஊர்வ போன்ற.

செயிர்ப்பினும் அழகு செய்யும் திருமுகத்து அணங்கைந் தீர்த்து துயில் சுவை மறந்தான் தோளில் தூநிலாத் தவழும் தோற்றம், மயிற்குலம் பிரிந்த மான மரகத மலைமேல் வன்னி உயிர்ப்பு உடை வெள்ளைப் பிள்ளைவாள் அரா ஊர்வ போன்ற.

பொ :—சினந்த நிலையினும் அழகுடையதாக விளங்கும் திருமுகத்தையுடைய சீதையைப் பிரிந்தமையால், உறக்கத்தால் அடையும் இன்பத்தை மறந்த இராமன் தோளில், நல்ல நிலாக் கதிர்கள் தவழும் தோற்றம், மயிற்கூட்டம் நீங்கிய பெரிய மரகத மலைமீது, நெருப்பைப் போலச் சுடும் மூச்சுக் காற்றினையுடைய வெள்ளிய சிறிய பாம்புகள் ஊர்வன போல விளங்கும்.

கு :—செயிர் - சினம். சீதைக்கு மயிலும், இராமன் தோளுக்கு மரகத மலையும், நிலவின் கிரணத்துக்கு வெள்ளைப்பிள்ளை அரவும் உவமை. மயில் - பாம்பைக் கொத்திக் கொல்வது. 'மஞ்ஞை குஞ்சரங்கோளிழைக்கும் பாம்பைப் பிடித்துப் படங்கிழித் தாங்கு' (21) என்பது திருக்கோவையார். மயிலொடு கூடிய நிலையில் மலையில் ஊராத பாம்புகள், மயிலைப் பிரிந்த நிலையில் மலைமீது ஊர்தல் போல சீதையோடு கூடிய நிலையில் இராமன் தோள்மீது தவழ்ந்து வருத் தாத சந்திரகிரணம், சீதையைப் பிரிந்த நிலையில் அவன் தோள்மீது

தவழ்ந்து வருத்துவதாயிற்று என்றவாறு. மானம் - பெருமை. வன்னி - நெருப்பு. உயிர்ப்பு - மூச்சுக் காற்று. (21)

இராமன் விரகதாபத்தால் வருந்துதல்

6895. மன்னெடு நகர மாடே
வரவர வயிரச் செங்கைப்
பொன்னெடுந் திரடோ ளையன்
மெய்யுறப் புழுங்கி நைந்தான்
பன்னெடுங் காதத் தேயுஞ்
சுடவல்ல பவளச் செவ்வா
யந்நெடுங் கருங்கட் டீயை
யணுகினாற் றணிவ துண்டோ.

மன் நெடு நகரம் மாடே
வரவர, வயிரச் செங்கைப்
பொன் நெடுந் திரள் தோள் ஐயன்,
மெய் உறப் புழுங்கி நைந்தான்;
பல் நெடுங் காதத்தேயும்
சுடவல்ல பவளச் செவ்வாய்
அந் நெடுங் கருங்கண் தீயை
அணுகினால் தணிவது உண்டோ?

பொ :—மிகப்பெரிய இலங்கை நகரம் அணித்தாக அணித்தாக, வன்மை வாய்ந்த கைத்தலங்களையும், அழகிய நீண்ட திரண்ட தோள்களையும் உடைய தலைவனான இராமன், உடல் மிகவும் வெதும்பி வருந்தினான்; (தான் இருந்தே இடத்திலிருந்தே) நீண்ட பல காத தூரத்தும் சுடும் ஆற்றலுடைய பவளம்போலும் சிவந்த வாயினையும் அழகிய நீண்ட கரிய கண்களையும் உடைய நெருப்பை அணுகினால் சுடாதிருப்பது உண்டோ!

கு :—நகர் என்றது இலங்கையை. ஐயன் என்றது இராமனை. பவளச் செவ்வாய்க் கருங்கட்டீ என்றது சீதையை. இலங்கையை நெருங்க நெருங்க இராமன் சீதையை நினைந்து விரகத்தால் வருந்துவானாயினன் என்றவாறு. (22)

44-ஆம் பிரதியில் இச்செய்யுளுடன் விகுதிப் படலம் முற்றுப் பெறுகிறது.

குரங்குருவொடு வானரப்படையுள் மறைந்து திரிந்த இராவணன் ஒற்றரை வீடணன் காணுதல்

6896. இற்றிது கால மாக
விலங்கையர் வேந்த னேவ
வொற்றர்வந் தளவு நோக்கிக்
குரங்கென வுழல்கின் றுரைப்
பற்றினா னென்ப மன்னோ
பண்டுதான் பலநாட் செய்த
நற்றவப் பயன்க டுய்ப்ப
முந்துறப் போந்த நம்பி.

இற்று இது காலம் ஆக, இலங்கையர் வேந்தன் ஏவ,
ஒற்றர் வந்து, அளவு நோக்கிக் குரங்கு என உழல்கின்றுரைப்
பற்றினன் என்ப மன்னோ! பண்டு தான் பலநாள் செய்த
நல்தவப் பயன்கள் துய்ப்ப முந்துறப் போந்த நம்பி.

பொ :—காலம் இத்தன்மையினையுடைய இரவாக, இலங்கையில் உள்ளார்க்கு அரசனாகிய இராவணன் ஏவுதலால், ஒற்றர் குரங்குகள் போல (உருமாறி) வந்து, (வானரப் படையின்) அளவு நோக்கித் திரிகின்றவரை, முன்னே தான் பலகாலம் செய்த நல்ல தவத்தின் பயன்களைத் துய்க்கும் பொருட்டு, விரைந்து (இராமன்பால்) வந்தடைந்த சிறந்தோனான வீடணன் (கண்டு) பிணித்தான்.

கு:—இற்று இது - இத்தன்மையுடையதாகிய இரவு. இத்தன்மை யாவது: மாலை, தென்றல், திங்கள் முதலியவற்றோடு இணைந்த நிலை. காலம் இற்றிது ஆக என மாறுக. இலங்கையர் வேந்தன் ஏவ ஒற்றர் குரங்கென வந்து, அளவுநோக்கி யுழல்கின்றவரை, பண்டு தான் பலநாட் செய்த நற்றவப் பயன்கள் துய்ப்பான் முந்துறப் போந்த நம்பி பற்றினன் என இயையும். உழலுதல் - திரிதல். முந்துதல் - விரைதல். நம்பி என்றது வீடணனை. (23)

6897. பேர்வுறு கவியின் சேனைப்
பெருங்கடல் வெள்ளந் தன்னு
ளோர்வுறு மனத்த னாகி
யொற்றரை யுணர்ந்து கொண்டான்

சேர்வுறு பாலின் வேலைச்
சிறுதுளி தெறித்த வேனு
நீரினை வேறு செய்யு
மன்னத்தி னீர ஞனுன்.

பேர்வு உறு கவியின் சேனைப் பெருங் கடல் வெள்ளந் தன்னுள்
ஓர்வு உறும் மனத்தன் ஆகி, ஒற்றரை உணர்ந்து கொண்டான்;
சேர்வுறு பாலின் வேலைச் சிறுதுளி தெறித்த வேனும்
நீரினை வேறு செய்யும் அன்னத்தின் நீரன் ஆனுன்.

பொ :—இடம் பெயர்ந்து செல்லும் இயல்புடைய குரங்குப் படையாகிய பெருங் கடற்பரப்பில், ஆராயும் உள்ளம் உடையவனுய், ஒற்றரை அறிந்துகொண்ட வீடணன், மிகுதியான பாலில் சிறிய துளிகள் (சில) தெறித்தனவாயினும், அவ்வாறு தெறித்த நீரை(ப் பாலினின்று) வேருகப் பிரிக்கும் அன்னத்தின் இயல்புடையனுனுன்.

கு :—ஓர்வு - ஆராய்ச்சி. பாலின் வேலை என்றது பாலின் மிகுதி என்றபடி. சேர்வுறும் நீரினை வேறு செய்யும் என இயைக்க. அன்னத்தின் நீரன் ஆனுன் என்றது வீடணனை. நீர் - தன்மை. அன்னம் பாலிற் கலந்த நீரைப் பிரிக்கவல்லது என்பது கவிமரபு. குரங்குப் படையினிடையே குரங்குருவொடு திரிந்த ஒற்றராகிய அரக்கரைக் குரங்கலாமை கண்டு பிணித்த வீடணனுக்குப் பாலிலே கலந்து பாலாய் நின்ற நீரைப் பாலினின்று பிரிக்கும் அன்னம் உவமை. (24)

6398. பெருமையுஞ் சிறுமை தானு
முற்றுறு பெற்றி யாற்ற
வருமையி னகன்று நீண்ட
விஞ்சையு ளடங்கித் தாமு
முருவமுந் தெரியா வண்ண
மொளித்தன ருறையு மாயத்
திருவரை யொருங்கு காணும்
யோகியு மென்ன லானுன்.

பெருமையும் சிறுமைதானும் முற்றுறு பெற்றி ஆற்ற
அருமையின் அகன்று, நீண்ட விஞ்சையுள் அடங்கித் தாமும்
உருவமும் தெரியா வண்ணம், ஒளித்தனர், உறையும் மாயத்து
இருவரை ஒருங்கு காணும் யோகியும் என்னலானுன்.

பொ :—(அவ்வீடணன்), பெருமையும் சிறுமையும் (ஒன்றில்) முழுதும் பொருந்திய தன்மை, மிகவும் அறிதற்கு அரிதாதலின், (யாவரும் அறியும்படி) கிட்டாமல், பெரிய வேதம் முதலிய கலைகளில் ஒடுங்கி, தாமும் தம் உருவமும் தெரியாதவாறு மாயையுள் மறைந்து தங்கிய ஆச்சரியச் செயலுள்ள சீவனையும் ஈசுவரனையும் ஒருசேரப் பார்க்கும் யோகி என்று சொல்லுதற்கும் தக்கவனானான்.

கு :—பெருமை என்றது பெருமையுடையதனை; அது பரமாத்துமா. சிறுமை என்றது சிறுமையுடையதனை; அது சீவான்மா. பெருமையும் சிறுமையும் முற்றுறு பெற்றியாவது பரமாத்துமாவும் சீவான்மாவும் ஒருங்கியைந்து ஓருடலிற் றங்குந்தன்மை. நீண்ட விஞ்சையுள் அடங்குதலாவது பெரிய வேதங்களிற் கூறப்படும் தகர வித்தை முதலிய கலைகளால் அரிதின் முயன்று காணும்படி மறைந்து தங்குதல். மாயம் - ஆச்சரியத்தை விளைக்கும் செயல். இருவர் என்றது சீவனையும் ஈசுவரனையும். இருவரையும் என உம்மை விரிக்க. இருவரையும் ஒருங்கு காணுதலாவது, சீவனையும் ஈசுவரனையும் ஓருடலுள் ஒரு பொழுதில் ஒருசேரக் காணுதல். யோகி - யோக நிலை கைவந்தவன். யோகமாவது, இயமம் முதலிய எண்வகை யுறுப்புக்களை யுடையதொரு வீட்டு நெறி. யோகி, உடலுள் மறைந்து தங்கிய சீவாத்துமாவாகிய தன்னையும் தன்னுள் மறைந்து தங்கிய பரமாத்துமாவாகிய ஈசுவரனையும், அறிவனாதலின், ஒளித்தனர் உறையும் மாயத்து இருவரை ஒருங்கு காணும் யோகி என்றார். 'அளிக்கு நாயகன் மாயைபுக் கடங்கின னெனினும் களிப்பில் இந்தியத் தியோகியைக் கரக்கிலன்' (2145) என்றார் முன்னும். இருவராய்ச் சிற்றுருவும் பேருருவும் கொள்ளவல்லராய் மந்திரத்திறனாற்றலால் வேற்றுருக் கொண்டு நின்ற ஒற்றரான சுகசாரருடைய உண்மை நிலை கண்ட வீடணனுக்குச் சீவாத்துமா பரமாத்துமா ஆகிய இருவரையும் ஒருங்கு காணும் யோகியை உவமை கூறினார். (25)

இச் செய்யுளின் பின், 52-ஆம் பிரதியிற் குறித்த மிகைப்பாடல் வருமாறு :

6898 (a) அவ்வகை யறிந்து நின்ற வீடண னரியின் வீரர்க்கு
ஒவ்வுற வுருவ மாறி யரக்கர்வந் தமையங் கோத
செவ்விதின் மாயச் செய்கை தெளிந்திடு மாறுதாமே
கைவலி யதனாற் பற்றிக் கொண்டனர் கவியின் வீரர்.

ஒற்றரை வீடணன் காட்ட இராமன் காணுதல்

6899. கூட்டிய விரற்றிண் கையாற்
குரங்குக ளிரங்கக் குத்தி
மீட்டொரு வினைசெய் யாமன்
மாணையின் கொடியால் வீக்கிப்
பூட்டிய கையர் வாயாற்
குருதியே பொழிகின் றுரைக்
காட்டினன் கள்வ ரென்றுக்
கருணையங் கடலுங் கண்டான்.

**கூட்டிய விரல் திண்கையால் குரங்குகள் இரங்கக் குத்தி,
மீட்டு ஒரு வினை செய்யாமல், மாணையின் கொடியால் வீக்கிப்
பூட்டிய கையர் வாயால் குருதியே பொழிகின்றுரைக்
காட்டினன் கள்வர் என்றுக் கருணையங் கடலும் கண்டான்.**

பொ :—சேர்த்து மடக்கிய விரல்களையுடைய கைகளால் குரங்குப் படையினர் கண்டு மனம் இரங்கும்படி குத்தி, மேலும் ஒரு தீங்கும் செய்யாதபடி மாணைக்கொடியால் இணைத்துப் பிணித்த கையினை யுடையவரும், வாயால் இரத்தங் கக்குகின்றவரும் ஆகிய அவ் வொற்றரை, 'வஞ்சகர்' என்று வீடணன் காட்டினன்; பேரருளாளனை இராமனும் அவரைக் கண்டான்.

கு :—ஒற்றர் குரங்குருவிலிருந்தனராதலின், அவரை வீடணன் குத்திப் பிணித்தபோது, படைக் குரங்குகள் அவரைத் தம்மினம் என்று கருதி இரங்கின. ஒரு வினையும் என உம்மை விரிக்க. வினை– தீங்கு. வீக்குதல் - கட்டுதல். (26)

இராமன் குரங்குருவினின்ற ஒற்றரை நலியாது விடுக எனல்

6900. பாம்பிழைப் பள்ளி வள்ளல்
பகைஞரென் றுணரான் பல்லோர்
நோம்பிழை செய்த கொல்லோ
குரங்கென விரங்கி நோக்கித்
தாம்பிழை செய்தா ரேனுந்
தஞ்சமென் றடைந்தார் தம்மை
நாம் பிழை செய்ய லாமோ
நலியலிர் விடுதி ரென்றான்.

பாம்பு இழைப் பள்ளி வள்ளல், பகைஞர்
என்று உணரான், ‘பல்லோர்
நோம் பிழை செய்த கொல்லோ குரங்கு?
என, இரங்கி நோக்கித்
தாம் பிழை செய்தாரேனும், தஞ்சம்
என்று அடைந்தார் தம்மை
நாம் பிழை செய்யல் ஆமோ?
நலியலிர் விடுதிர்’ என்றான்.

பொ :—பாம்பு உண்டாக்கிய பாயலையுடைய வள்ளியோனான இராமன், (வீடணனால் காட்டப்பட்டவரைப்) பகைவர் என்று அறியானாகி, ‘இக்குரங்குகள் பலரும் வருந்தும் தவறுகளைச் செய்தனவோ? என்று அவரை இரக்கத்தோடு பார்த்து, நம்மைத் தஞ்சமென்று அடைந்தவர் தாம் பிழை செய்தாராயினும், அவர் திறத்து நாம் தவறு செய்யலாகாது; வருத்தாது விடுதிர்’ என்றான்.

கு :—சந்த இன்பம் நோக்கி, பாம்பிழைப் பள்ளி எனப் பகரவொற்றிரட்டியது. வீடணனாற் காட்டப்பட்டவரை இராமன், பகைவர் என்று உணராமல், தன் படையிலுள்ள குரங்குகளாகவே கருதினமையால், இவ்வாறு குத்திவருத்திப் பிணிக்கும்படி, இக்குரங்குகள், பெரும் பிழை செய்தனவோ? என்னும் கருத்தால், ‘பகைஞர் என்று உணரான், பல்லோர் நோம்பிழை செய்த கொல்லோ குரங்கு’ என்றும், தஞ்சமென்று அடைந்தவர் பிழை செய்யார்; பிழை செய்தாலும் அவரை நாம் நலியலாகாது என்னும் கருத்தால், ‘தாம் பிழை செய்தாரேனும் தஞ்சமென் றடைந்தார்தம்மை நாம் பிழை செய்யலாமோ? நலியலிர் விடுதிர்’ என்றும் கூறினான். (27)

வீடணன், இவர் இராவணன் ஒற்றராகிய சுகசாரணர் என்று இராமனிடம் கூறுதல்

6901. அகனுறப் பொலிந்த வள்ளல்
கருணையா லமுத கண்ண
னகநிறை கானின் வைகு
நம்மினத் தவரு மல்லர்
தகைநிறை வில்லா வுள்ளத்
திராவணன் றந்த வொற்றர்
சுகனிவ னவனுஞ் சார
னென்பது தெரியச் சொன்னான்.

அகன்உறப் பொலிந்த வள்ளல் கருணையால் அழுத கண்ணன்,
'நகம் நிறை கானின் வைகும் நம் இனத்தவரும் அல்லர்;
தகை நிறைவு இல்லா உள்ளத்து இராவணன் தந்த ஒற்றர்;
சுகன் இவன்; அவனும் சாரன்' என்பது தெரியச் சொன்னான்.

பொ:—வள்ளியோனான இராமனுடைய உள்ளத்தில் மிகவும் விளங்கிய கருணை காரணமாக உருகி அழுத கண்ணினனான வீடணன், 'இவர்கள், மலைகள் நிறைந்த காட்டில் வாழும் நம் நட்பினரான கவிகள் அல்லர். நற்குண நிறைவில்லாத மனத்தினையுடைய இராவணன் வரவிட்ட ஒற்றர்; இவன் சுகன் என்னும் பெயருடையான்: அவனும் சாரன் என்னும் பெயருடையவன்' என்பதனை விளங்கக் கூறினான்.

கு:—வள்ளல் கருணையால் அழுத கண்ணன் என்றது, ஒற்றராகிய அவ் அரக்கரிடத்தும், இராமன் செய்த கருணைத்திறங் கண்டு கசிந்த கண்ணினனான வீடணனை. நகம் - மலை. தகை - நற்பண்புகள். (28)

ஒற்றர் நாங்கள் குரங்குகளே; வீடணன் எங்களைக் கொல்ல வந்த வஞ்சகன் என்று இராமனிடம் கூறுதல்

6902. கல்விக்கண் மிக்கோன் சொல்லக்
கருமன நிருதக் கள்வர்
வல்விற்கை வீர மற்றிவ்
வானரர் வலியை நோக்கி
வெல்விக்கை யரிதென் றெண்ணி
வினையத்தா லெம்மை யெல்லாங்
கொல்விக்க வந்தான் மெய்ம்மை
குரங்குநாங் கொள்க வென்றார்.

கல்விக்கண் மிக்கோன் சொல்லக்
கரு மன நிருதக் கள்வர்,
"வல் வில் கை வீர! மற்று இவ்
வானரர் வலியை நோக்கி,
'வெல்விக்கை அரிது' என்று எண்ணி,
வினையத்தால் எம்மை யெல்லாம்
கொல்விக்க வந்தான்; மெய்ம்மை;
குரங்கு நாம்; கொள்க" என்றார்.

பொ :—கல்வியாகிய கண்ணால் சிறந்தோனான வீடணன், ('இவர் இராவணன் அனுப்ப வந்த ஒற்றர்' என்று இராமனிடம்) சொல்ல, இருண்ட மனமுடைய அரக்கராகிய அக்கள்வர்கள், (இராமனை நோக்கி) 'வலிய வில்லைப் பிடித்த கையினையுடைய வீரனே, இவன், இவ் வானர வீரருடைய ஆற்றலை நினைந்து, இவர்களை இராவணன் வெல்லுமாறு செய்தல் இயலாதென்று எண்ணி, சூழ்ச்சியால் எங்களையெல்லாம் கொல்விக்கக் கருதி வந்தவன்; இது மெய்; நாங்கள் குரங்குகளே; (இதனை நீ) மனக்கொள்ள வேண்டும்' என்று கூறினர்.

கு :—கல்விக் கண் மிக்கான் - கல்வியாகிய கண்ணால் சிறப்புற்றவன்; என்றது வீடணனை. 'கண்ணுடைய ரென்பவர் கற்றோர், (393) என்பது திருக்குறள். 'அறிஞரின் மிக்கான்' (மந்திரப். 99) என்றார் முன்னும். கரு மனம் - இருண்ட மனம். நிருதர் - அரக்கர். வினையம் - சூழ்ச்சி. 'இவர் குரங்குகளல்லர்; இராவணன் வரவிட்ட ஒற்றரே' என்று வீடணன் கூறிய நிலையில், ஒற்றர், வீடணனை, இராமன் முதலியோர் ஐயுறும்படிச் செய்ய நினைந்து, இராமனிடம், 'நாங்கள் குரங்குகளே; இது மெய்; இவன்தான், இந்த வானர வீரர் ஆற்றல் கண்டு, இவருள்ளவரை தன் அண்ணனாகிய இராவணனுக்கு வெற்றியை உண்டாக்கல் இயலாதென்று கருதி, நின்பால் அன்புடையவன்போல் நடித்து எங்களையெல்லாம் சூழ்ச்சியால் கொல்விக்க இங்கு வந்துள்ளான்; இதை நீ மனங்கொள்ள வேண்டும்' என்று கூறினர் என்றவாறு. (29)

இச் செய்யுளின் பின் 52-ஆம் பிரதியிற் கண்ட மிகைப்பாடல் வருமாறு :

6902(a) எனவவ ரியம்பக் கேட்ட இறைவனுக் கிலங்கை வேந்தன்
தனதொரு தம்பி அன்னோர் சாற்றிய வாய்மை மெய்யும்
எனதொரு மனத்தின் வஞ்ச மிருந்ததும் இன்னே காண்டி
நினைவதன் முன்னே விஞ்சை நீக்குவெ னென்று நேர்ந்தான்.

வீடணன் மந்திரத்தால் ஒற்றர் அரக்கருருவொடு நிற்றல்

6903. கள்ளரே காண்டி யென்னா
மந்திரங் கருத்திற் கொண்டான்
றெள்ளிய தெரிக்குந் தெவ்வர்
தீர்வினை சேர்த லோடுந்

துள்ளியி னிரதந் தோய்ந்து
தொன்னிறங் கரந்து வேருய்
வெள்ளிபோ லிருந்த செம்பு
மாமென வேறுபட்டார்.

'கள்ளரே காண்டி' என்று மந்திரம் கருத்திற் கொண்டான்;
தெள்ளிய தெரிக்கும் தெவ்வர், தீர்வினை சேர்தலோடும்
துள்ளியின் இரதம் தோய்ந்து, தொல்நிறம் கரந்து வேருய்
வெள்ளிபோல் இருந்த செம்பும் ஆம் என வேறுபட்டார்.

பொ :—'இவர்கள், மாய வேடத்தினரே; இதனைக் காண்க' என்று (வீடணன், அவர்களுடைய மாயத்தைப் போக்கும்) மந்திரத்தை நினைந்தானுக, (தம் அரசனுக்குத் தாம்) ஐயமறத் தெரிந்து கொண்டவற்றை அறிவிக்கும் (ஒற்றராகிய) பகைவர், தம் மாயச் செயல் நீங்கும் மாற்றுபாயம் நிகழ்ந்த அளவில், துளி வடிவான பாதரசம் படிதலால், தன் பழைய நிறம் மறைந்து வேறுபட்டு (வெள்ளியாய்) வெள்ளியோடு தங்கிய செம்பு, (இரசப் பூச்சு நீங்கப் புடமிட்ட அளவில் வெள்ளி நிறம் நீங்கிச் செம்பானுற்) போல(க் குரக்குரு நீங்கி, அரக்கருருப் பெற்று) வேறுபட்டனர்.

கு: —'கள்வரே காண்டி' என்பது இராமனை நோக்கி வீடணன் கூறியது. அறிந்தவை ஐயப்பாடில்லதே ஒற்று' (திருக்குறள். 587) ஆதலின், 'தெள்ளிய தெரிக்கும் தெவ்வர்' என்ருர். பகைப்புலத்து நின்று வந்த ஒற்றராதலால். தெவ்வர் என்ருர். தீர்வினையாவது ஒற்றருடைய மந்திரசித்தியால் உண்டான குரங்குருவம் நீங்குதற்குரிய மாற்றுச் செயல். துள்ளி – துளி. இரதம் - பாதரசம். பாதரசப் பூச்சினுல் வெண்ணிறமெய்தி, வெள்ளியோடிருந்த செம்பு, புடம் போட்ட அளவில் பாதரசப் பூச்சு நீங்கிப் பழைய செம்பானுற் போல, மாய மந்திர சித்தியால் குரங்குருவெய்திக் குரங்குகளோடு கலந்து குரங்குகளாய் நின்ற அரக்கராகிய ஒற்றர், வீடணன் மேற்கொண்ட மந்திரத்தோடு கூடிய மாற்றுச் செயலால், குரங்கு வடிவம் நீங்கிப் பழைய அரக்கர் வடிவொடு நின்றனர் என்றவாறு. (30)

இராமன், எது கருதி வந்தீர் என ஒற்றரை வினவுதல்

6904. மின்குலா மெயிற்ற ராகி
வெருவந்து வெற்பி னின்ற
வன்கணர் தம்மை நோக்கி
மணிநகை முறுவ ரேன்றப்

புன்கணார் புன்க ணீக்கும்
 புரவலன் போந்த தன்மை
யென்கொலாந் தெரிய வெல்லா
 மியம்புதி ரஞ்ச லென்றான்.

மின் குலாம் எயிற்றர் ஆகி, வெருவந்து வெற்பின் நின்ற
வன்கணார் தம்மை நோக்கி, மணி நகை முறுவல் தோன்றப்
புன்கணார் புன்கண் நீக்கும் புரவலன், 'போந்த தன்மை
என்கொலாம்? தெரிய எல்லாம் இயம்புதிர் அஞ்சல்' என்றான்.

பொ:—துன்பமுற்றாரது துன்பத்தை நீக்கிப் புரப்பவனான இராமன், ஒளி விளங்கும் கோரப் பற்களையுடையராய், அஞ்சி, மலை போன்ற பெரிய வுருவொடு நின்ற கொடியவராகிய 'ஒற்றரைப் பார்த்து, முத்துப் போன்ற பற்களும் புன்சிரிப்பும் வெளிப்பட, 'அஞ்சாதீர்; நீவிர் இங்கு வந்தது ஏன்? எல்லாம் தெரியும்படிக் கூறுமின்' என்றான்.

கு:—புரவலன், வன்கணார்தம்மை நோக்கி, முறுவல் தோன்ற 'அஞ்சல்; போந்த தன்மை என்கொல்? எல்லாம் தெரிய இயம்புதிர், என்றான் என இயைக்க. புன்கண் - துன்பம். ஆம் அசைநிலை. (31)

ஒற்றர் வேய் தெரிந்துரைக்க வந்தோம் எனல்

6905. தாய்தெரிந் துலகு காத்த
 தவத்தியைத் தன்னைக் கொல்லு
நோய்தெரிந் துணரான் றேடிக்
 கொண்டவ னுவல வாற்றின்
வாய்தெரிந் துணரா வண்ணங்
 கழறுவார் வணங்கி மாய
வேய்தெரிந் துரைக்க வந்தோம்
 வினையினல் வீர வென்றார்.

தாய் தெரிந்து உலகுகாத்த
 தவத்தியைத் தன்னைக் கொல்லும்
நோய் தெரிந்து உணரான்
 தேடிக்கொண்டவன் நுவல, ஆற்றின்

வாய் தெரிந்து, உணராவண்ணம்
கழறுவார், வணங்கி, 'மாய
வேய் தெரிந்து உரைக்க வந்தோம்
வினையினல் வீர' என்ருர்.

பொ :—(ஒற்றர்க்குரிய) முறையால், (பகைப்புலத்து நிகழ்ச்சிகளின்) உண்மை கண்டு, பிறர் அறியாதவாறு (தம்மரசனுகிய இராவணனுக்குத்) தெரிவிப்பவரான ஒற்றர், (இராமனை) வணங்கி, 'வீர! எல்லா வுயிர்க்கும் தாயாய், (அவற்றுக்கு நன்மையாவனவற்றை) அறிந்து (உதவிக்) காத்த தவவொழுக்க முடையவளான சீதையைத் தன்னைக் கொல்லும் நோய் என்று ஆராய்ந்துணராமல், தேடிக் கவர்ந்து கொண்டவனுன இராவணன் கூற, எங்கள் தீவினையால், வஞ்சனையால் ஒற்று அறிந்து தெரிவிக்க வந்தோம்' என்று கூறினர்.

கு :—ஆற்றின் வாய் தெரிந்து உணராவண்ணம் கழறுவார் வணங்கி, 'வீர! தாய் ஆய், உலகு காத்த தவத்தியைத் தன்னைக் கொல்லும் நோய் (என்று) தெரிந்துணரான் தேடிக்கொண்டவன் நுவல, வினையினுல் மாயவேய் தெரிந்துரைக்க வந்தோம்' என்ருர் என இயைக்க. தாயாய் உலகு காத்த தவத்தி எனவும், நோய் என்று தெரிந்துணரான் எனவும் முறையே ஆய, என்று என்னும் இரு சொற்கள் வருவித் துரைக்கப்பட்டன. உலகம் என்றது சீவான்மாக்களை. உணரான், முற்றெச்சம். மாயம் - வஞ்சனை. வேய் - ஒற்று. (32)

இதன் பின் 52-ஆம் பிரதியிற் காணப்படும் மிகைச் செய்யுள் வருமாறு :

6905. (a) ஆங்கவர் புகலக்கேட்ட வையனும் அவரைநோக்கி
ஈங்கிது கருமமாக வெய்தினீ ரென்னின் நீர்போய்த்
தீங்குறுந் தசக்கிரீவன் சிந்தையில் தெளியுமாறே
ஓங்கிய வுவகைவார்த்தை உரையுமென் ருேதலுற்ருன்.

இராமன் ஒற்றரிடம் கூறுதல்

6906. எல்லையி லிலங்கைச் செல்வ
மிளையவற் கீந்த தன்மை
சொல்லுதிர் மகர வேலை
கவிக்குல வீரர் தூர்த்துக்

கல்லினிற் கடந்த வாறுங்
கழறுதிர் காலந் தாழ்த்த
வில்லினர் வந்தா ரென்றும்
விளம்புதிர் வினைய மிக்கீர்.

'எல்லை இல் இலங்கைச் செல்வம் இளையவற்கு ஈந்த தன்மை
சொல்லுதிர்; மகர வேலை, கவிக்குல வீரர் தூர்த்துக்
கல்லினில் கடந்த வாறும் கழறுதிர்; "காலம் தாழ்த்த
வில்லினர், வந்தார்" என்றும் விளம்புதிர் வினையம் மிக்கீர்.'

பொ:—'செய்தொழிற் றிறமை மிக்கவரே! (இராவணனிடம்) அளவில்லாத இலங்கைச் செல்வத்தை அவனுடைய தம்பியாகிய வீடணனுக்கு யான் வழங்கிய முறையினைச் சொல்லுமின்; சிறந்த குரங்கு வீரர் கடலை மலைகளையிட்டு மேடாகும்படிச் செய்து (அணை கட்டிக்) கடந்த விதத்தையும் கூறுமின்; இத்தனை காலம் தாமதித்த வில்லாளிகள் வந்து விட்டார்கள் என்றும் விளம்புமின்.'

கு:—இளையவன் என்றது வீடணனை. மகர வேலை - மீன்கள் வாழும் கடல். கவிக்குல வீரர் மகர வேலை கல்லினில் தூர்த்துக் கடந்தவாறும் என இயைக்க. கல் - மலை. கழறுதல் - சொல்லுதல். வில்லினர் என்றது இராம இலக்குவர்களை. வினையம் மிக்கீர் என்பது ஒற்றரைத் தன்முகமாக்கும் இராமன் விளிக்கூற்று. (33)

6907. கொத்துறு தலையான் வைகுங்
குறும்புடை யிலங்கைக் குன்றந்
தத்துறு தடநீர் வேலை
தனிலொரு சிறையிற் றூத
லொத்துற வுணர்ந்தி லாமை
யுயிரொடு முறவி னோடு
மித்துணை யிருந்த தென்னுந்
தன்மையு மியம்பு வீரால்.

'கொத்து உறு தலையான் வைகும்
குறும்பு உடை இலங்கைக் குன்றம்,
தத்து உறு தடநீர் வேலை தனில்,
ஒரு சிறையிற்று ஆதல்,

ஒத்து உற உணர்ந்திலாமை,
உயிரொடும் உறவினோடும்
இத்துணை இருந்தது என்னும்
தன்மையும் இயம்புவீரால்.'

பொ :—'கொத்தாகவுள்ள தலைகளை யுடையவனான இராவணன் தங்கிய அரனொடு கூடிய இலங்கை மலையானது, தாவி வருகின்ற மிக்க நீரையுடைய கடலில், ஒரு பக்கத்தில் இருத்தலை நாங்கள் பொருந்த அறியாமையால், அவன், உயிரோடும் உறவோடும் இவ்வளவு நாள் இருக்க முடிந்தது என்பதனையும் கூறுமின்.'

கு :—குறும்பு - அரண். இலங்கை மலைமீதில் அமைந்தமையின் இலங்கைக் குன்றம் என்றான். தத்துதல் - தாவி வருதல். ஒருசிறை - ஒரு பக்கம். ஒத்துற - பொருந்த. (34)

6908. சண்டங்கொள் வேக மாகத்
தனிவிடை யுவணந் தாங்குந்
துண்டங்கொள் பிறையான் மௌலித்
துளவினா னொடுந் தொல்லை
யண்டங்கொள் தேவர் வந்து
காப்பினு மறமிலா னைக்
கண்டங்கள் பலவுங் காண்ப
னென்பதுங் கழறு வீரால்.

'சண்டம் கொள் வேக மாகத்
தனி விடை, உவணம், தாங்கும்
துண்டம் கொள் பிறையான், மௌலித்
துளவினா னொடும் தொல்லை
அண்டம் கொள் தேவர், வந்து,
காப்பினும், அறம் இலானைக்
கண்டங்கள் பலவும், காண்பன்
என்பதும் கழறுவீரால்.'

பொ :—' வானத்தில் மிக்க வேகமாகச் செல்லும் ஆற்றலுடைய ஒப்பற்ற விடையும், கருடனுமாகிய இவற்றால் தாங்கப்படுகிற பிறைத் துண்டம் அணிந்த சிவபிரானும், துளவணிந்த மகுடத்தையுடைய திருமாலும் ஆகிய இவரோடு, பழைய உலகங்களையாளும் மற்றைத் தேவர்களும், துணையாக வந்து நின்று, காத்தாலும், அறநெறி நில்

லாதவனை இராவணனைப், பல துண்டங்களாகவும் அறுப்பேன் என்பதனையும் அவனிடம் சொல்லுமின்.'

கு :—சண்டம் – வேகம்; கொடுமையும் ஆம். சண்டங்கொள் வேகமாகத் தனி உவணம் எனவும் இயைக்க. தனிவிடை உவணம் தாங்கும் துண்டங்கொள் பிறையான் மௌலித் துளவினன் என்பது முறை நிரனிறை. தொல்லை - பழமை. அண்டம் - உலகம். பிரமன், இராவணனுடைய குலமுதல்வனாதலின், அவன் இராவணனுக்குத் துணை வருதல் கூருமலே அமையும். தொல்லை அண்டம் கொள் தேவர் என்றது இந்திரன் முதலியவர்களை. இராவணன் பிறனில் விழைந்தவனாதலின் அவனை அறமிலான் என்ருன். 'பிறன் பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து, அறம்பொருள் கண்டார்கண் இல்' (141) என்பது திருக்குறள். (35)

6909. தீட்டிய மழுவாள் வீரன்
 ருதையைச் செற்ருேன் சுற்ற
மாட்டிய வண்ண மேதன்
 வருக்கமு மற்று முற்றும்
வீட்டியென் ருதைக் காக
 மெய்ப்பலி விசும்புளோரை
யூட்டுவெ னுயிர்கொண் டென்னும்
 வார்த்தையும் உணர்த்துவீரால்.

தீட்டிய மழுவாள் வீரன்,
 தாதையைச் செற்ருேன் சுற்றம்
மாட்டிய வண்ணமே, தன்
 வருக்கமும், மற்றும் முற்றும்,
வீட்டி, என் தாதைக்காக,
 மெய்ப்பலி, விசும்பு உ(ள்)ளோரை
ஊட்டுவென் உயிர்கொண்டு' என்னும்
 வார்த்தையும் உணர்த்துவீரால்.

பொ :—கூர்மையாக்கப்பட்ட மழுப்படையினை யாளும் வீரனை பரசுராமன், தன் தந்தையைக் கொன்றவனாகிய கார்த்தவீரியனுடைய சுற்றத்தையும் அழித்தவாறு போல, என் தந்தையான சடாயுவின் பொருட்டு, இராவணனுடைய சுற்றத்தையும் பிற படைகளையும் முழுதும் அழித்து, அவனையும் கொன்று,' அவனுடற் பலி

யினைத் தேவர்க்கு ஊட்டுவேன் என்னும் செய்தியையும் அவனிடம் சொல்லுங்கள்.'

கு:—மழு ஆள் வீரன் என்றது பரசுராமனை. பரசுராமன் தாதை- யமதங்கி முனிவன். மாட்டுதல் - அழித்தல். தன் என்பது இராவணனைச் சுட்டியது. வருக்கம் – சுற்றம். வீட்டுதல் - அழித்தல். தாதை - தந்தை; சடாயு. வார்த்தை - செய்தி; சொல்லுமாம். பரசுராமன் தன் தந்தையைக் கொன்ற கார்த்தவீரியன் மக்களைச் சுற்றத்தோடு கொன்றொழித்தது போல, யானும், என் தந்தையாகிய சடாயுவைக் கொன்ற உன்னை உன் சுற்றத்தோடு கொல்வேன்; என்று இராவணனிடம் கூறும்படி ஒற்றரிடம் கூறினான்.

பரசுராமன் கார்த்தவீரியனை அவன் சுற்றத்தோடு கொன்றொழித்த வரலாறு:--கிருதவீரியன் என்பவன் சந்திரவமிசத் தரசருள் ஒருவன். அவன் புதல்வன் கார்த்தவீரியன். இவன், தத்தாத்திரேய முனிவரருளால் பல வரங்களைப் பெற்று, மாகிஷ்மதி என்னும் நகரில் தங்கிப் பல வேள்விகளைச் செய்து கொண்டு வாழ்ந்தபோது, இராவணனையும் போரில் வென்று, இராவணஜித் என்று சிறப்புப் பெயரும் பெற்று விளங்கினான். இவன் ஒரு நாள் காட்டில் வேட்டையாடி இளைத்து, யமதங்கி முனிவரது இருக்கையினை அடைந்தான்; முனிவர் விருந்தூட்டி இவன் இளைப்பை நீக்கினராக, இவன் முனிவர் தேனுவை அவர் இசைவுபெறாது கவர்ந்து சென்றனன். அதனையறிந்த பரசுராமன் கார்த்தவீரியனோடு பொருது அவனுடைய ஆயிரந் தோள்களையும் அறுத்து அவனையும் கொன்றான். அது தெரிந்த கார்த்தவீரியன் மைந்தர், பரசுராமனில்லாத சமயத்தில் தவ நிலையிலிருந்த யமதங்கி முனிவரைக் கொன்று சென்றனர். அதனாற் சினம் உற்ற பரசுராமன் கார்த்தவீரியன் மக்களையும் மற்றை அரசர்களையும் கொன்று களைந்தான்: என்பதாம். (36)

6910. தாழ்விலாத் தவத்தோர் தையல்
 தனியொரு சிறையிற் றங்கச்
சூழ்விலா வஞ்சஞ் சூழ்ந்த
 தன்னைத்தன் சுற்றத் தோடும்
வாழ்வெலாந் தம்பி கொள்ள
 வயங்கெரி நரக மென்னும்
வீழ்விலாச் சிறையின் வைப்பெ
 னென்பதும் விளம்பு வீரால்.

தாழ்வு இலாத் தவத்து ஓர் தையல்,
தனி ஒரு சிறையில் தங்கச்
சூழ்வு இலா வஞ்சம் சூழ்ந்த
தன்னைத் தன் சுற்றத்தோடும்,
வாழ்வு எலாம் தம்பி, கொள்ள,
வயங்கு எரிநரகம் என்னும்
வீழ்வு இலாச் சிறையின், வைப்பென்;
என்பதும் விளம்புவீர்ஆல்.

பொ :—குறைவற்ற கற்புடையவளும் துணையற்றவளுமாகிய சீதை, ஒப்பற்ற தனிச் சிறையிலே தங்கும்படி, நினைக்கத்தகாத வஞ்சனையை எண்ணிய அவ்விராவணனுடைய செல்வ முழுவதையும் அவன் தம்பியாகிய வீடணன் பெற(த் தந்து), அவ்விராவணனை அவன் சுற்றத்தோடும் (கொன்று களைந்து) விளக்கம் மிக்க அக்கினி நரகம் என்னும் அழியாத சிறையில் வைப்பேன் என்பதனையும் அவனிடம் சொல்லுமின்.

கு :—தவம் – கற்பு ; 'தேவி உள்ளத் தருந்தவம் அமையச் சொல்லி' (சுந்தர. திருவடி தொழுத. 9) என்றார் முன்னும். ஒரு தனிச் சிறை என இயையும். 'தனிச் சிறையில் விளர்ப்புற்ற கிளி மொழியாள்' (திருவாய்மொழி. 4-8-5) என்பது அருளிச் செயல். தவத்தோர் தையல் என்றது சீதையை. சூழ்தல் - நினைதல். தம்பி என்றது வீடணனை. வீழ்தல் - அழிதல். (37)

இராமன் கட்டளையால் ஒற்றர் திரும்பிச் செல்லுதல்

6911. நோக்கினிர் தானை யெங்கு
நுழைந்தனி ரினிவே றொன்று
மாக்குவ தில்லை யாயி
னஞ்சலென் றஃதுண் டென்றே
வாக்கினின் மனத்திற் கையின்
மற்றினி நலியா வண்ணம்
போக்குமின் விரைவி னென்று
னுய்ந்தன மென்று போனார்.

'நோக்கினிர் தானையெங்கும்
நுழைந்தனிர்; இனி வேறு ஒன்றும்
ஆக்குவது இல்லையாயின்,
அஞ்சல் என்ற அஃது உண்டு'; என்றே

'வாக்கினின் மனத்தின் கையின்
மற்று இனி நலியாவண்ணம்,
போக்குமின் விரைவின்' என்முன்;
'உய்ந்தனம்' என்று போனார்.

பொ :—'(படை தங்கிய) எல்லா இடங்களிலும் புகுந்து, படையின் அளவை நன்கு கண்டீர்; இனி நீவிர் வேறு ஒரு தீங்கும் செய்வதில்லையாயின், "அஞ்சற்க" என்று யான் கூறிய அபயம் உண்டு' என்று இராமன் ஒற்றரை நோக்கிக் கூறி, வீடணன் முதலியோரை நோக்கி, 'சொல்லாலும் மனத்தாலும் கையாலும் இவ்வொற்றரை இனி (நம் படையிலுள்ளார் யாரும்) நலியாதவாறு, விரைந்து அனுப்புதிர்' என்முன். அவ்வொற்றரும், 'உய்ந்தோம் என்று போயினர்.

கு :—எங்கும் நுழைந்து தானை(யை) நோக்கினிர் என இயைக்க. தானை யென்றது படையின் அளவினை. நுழைந்தனிர் என்பது முற்றெச்சம். அஞ்சல் என்ற அஃது என்பது அஞ்சலென்றஃது என நின்றது விகாரம். மனத்தின் வாக்கினின் மெய்யின் என மாறுக; மனம் மொழி மெய் என்பதே முறையாகலின். கையென்பது மெய் என்பதுபட நின்றது. (38)

52-ஆம் பிரதியில் இச் செய்யுளின் பின் பின்வரும் மிகைப்பாடல் காணப்படுகிறது:—

6911. (a) இன்ன வாறிவர் தம்மையிங் கேவிய
மன்னர் மன்னவ ஞய விராவணன்
அன்ன போதங் களவி லமைச்சரோ
டுன்னு மந்திரத் துற்றதை யோதுவாம்.

இராவணன் மந்திராலோசனை செய்தல்

6912. அரவ மாக்கட லஞ்சிய வச்சமு
முரவு நல்லணை யோட்டிய வூற்றமும்
வரவு நோக்கி யிலங்கையர் மன்னவ
னிரவி னெண்ணிட வேறிருந் தானரோ.

அரவ மாக் கடல் அஞ்சிய அச்சமும்,
உரவு நல்லணை ஓட்டிய ஊற்றமும்,
வரவும், நோக்கி, இலங்கையர் மன்னவன்,
இரவின் எண்ணிட, வேறு இருந்தான் அரோ.

பொ :—இலங்கையிலுள்ளார்க்கு அரசனாகிய இராவணன், (தன் பகைவனாகிய இராமனுக்கு) ஒலியினையுடைய பெரிய கடல் அஞ்சிய அச்சத்தையும், அவன், வலிய நல்ல சேதுவைக் கடலிடையே நெடுகக் கட்டி முடித்த ஆற்றலையும், இலங்கையை யணுக வந்ததனையும் அறிந்து, (அமைச்சருடன்) ஆராயும்பொருட்டு, இரவில் தனியே தங்கினான்.

கு :—அரவம் - ஒலி. உரவு ஊற்றம் என்பவை வலிமை என்னும் பொருளுடையன; 'ஊற்றம் உடையாய்' (திருப்பாவை 21) என்பதனுள், ஊற்றம் வலிமை என்னும் பொருளிற் பயின்றமை காணலாம். 'சக்கரத்தவனெனத் தமியன் ஆயினான்' (அயோத்தியா. மந்திரப். 2) என்பது நோக்கி, 'வேறு இருந்தான்' என்பதற்குத் தனியே தங்கினான் என்று பொருள் உரைக்கலாயிற்று. (39)

6913. வார்கு லாமுலை மாதரு மைந்தரு
மாரு நீங்க வறிஞரொ டேகினன்
சேர்க வென்னினல் லாலிளந் தென்றலுஞ்
சார்கி லாநெடு மந்திர சாலையே.

வார் குலாம் முலை மாதரும் மைந்தரும்
ஆரும் நீங்க அறிஞரொடு ஏகினன்
'சேர்க' என்னின் அல்லால் இளந்தென்றலும்
சார்கிலா நெடு மந்திர சாலையே.

பொ :—கச்சு விளங்குகின்ற தனங்களையுடைய மகளிரும், ஆடவரும், மற்றும் எவரும், தன்னை விட்டு விலகிச் செல்ல, 'வருக' என்று கட்டளையிட்டாலன்றிச் சிறிய தென்றற்காற்றும் புகாத, ஆராய்ச்சிக் கூடத்தில், (இராவணன்) சென்று சேர்ந்தான்.

கு :—வார் - கச்சு; மகளிர் மார்பிலணியும் உடை. குலாவும் என்பது குலாம் என நின்றது விகாரம். குலாவுதல் - விளங்குதல். (40)

6914. உணர்வி னெஞ்சின ருமரு ரைப்பொருள்
புணருங் கேள்விய ரல்லர் பொறியிலர்
கொணருங் கூனர் குறளர் கொழுஞ்சுடர்
துணரு நல்விளக் கேந்தினர் சுற்றினார்.

உணர்வு இல் நெஞ்சினர், ஊமர், உரைப்பொருள்
புணரும் கேள்வியர் அல்லர், பொறிஇலர்,
கொணரும் கூனர், குறளர், கொழுஞ்சுடர்
துணரும் நல்விளக்கு ஏந்தினர், சுற்றினர்.

பொ :—அறிவற்ற மனத்தினரும், ஊமர்களும், சொல்லால் உணர்த்தப்படும் செய்தியை, அறியும ஆற்றல் அற்ற செவிடர்களும், ஆகிய இந்திரியமற்றவர்களும், தலைவன் விரும்பியவற்றைக் கொணரும் கூனர்களும், குறளர்களும், மிக்க ஒளி நிரம்பிய கொத்தாய் அமைந்த நல்ல விளக்குக்களைத் தாங்கிக்கொண்டு (இராவணனைச்) சூழ்ந்து வந்தனர்.

கு :—ஊமர் - ஊமையர். கேள்வியிலர் - செவிடர். பொறி - இந்திரியம். துணர்தல் - கொத்தாய் அமைதல். ஏந்தினர் - முற்றெச்சம். (41)

52-ஆம் பிரதியில் இச்செய்யுளின் பின் காட்டப்பட்ட மிகைச் செய்யுள் வருமாறு :

6914. (௧) சொல்லு மந்திரச் சாலையிற் றூய்மதி
நல்லமைச்சர் நவையறு கேள்வியர்
எல்லை யில்லவர் தங்களை நோக்கியே
அல்லரக்கர் பதியுமங் கோதுவான்.

இராவணன் வினவுதல்

6915. நணியர் வந்து மனிதர் நமக்கினித்
துணியுங் காரியம் யாதெனச் சொல்லினன்
பணியுந் தானவ ராதியர் பன்முடி
மணியி னல்விளங் கும்மணித் தாளினன்.

‘நணியர் வந்து மனிதர்; நமக்கு இனித்
துணியும் காரியம் யாது ?’ எனச் சொல்லினன் ;
பணியும் தானவர் ஆதியர் பல் முடி
மணியினல் விளங்கும் மணித் தாளினன்.

பொ :—வணங்குகின்ற அசுரர் முதலியோருடைய பலவாகிய முடியிலுள்ள இரத்தினங்களால் விளங்கும் அழகிய அடிகளையுடைய இராவணன், (அவையிலுள்ள அறிஞரை நோக்கி), ‘நம் பகைவராகிய மனிதர்கள் வந்து நெருங்கினர் ; நமக்கு ஆராய்ந்து மேற்கொள்ளத்தக்க செயல் யாது?’ என்று கூறினன்.

கு :—தானவர் - அசுரர். தாளினுன், மனிதர் வந்து நணியர்; இனி, நமக்குத் துணியும் காரியம் யாது எனச் சொல்லினுன் என இயைக்க. நணி - அணித்தான இடம். தானவர் முதலியோர் நெருங்கி இராவணனை வணங்குங்கால் அவர் முடிகள் ஒன்ருே டொன்று உராய்தலால், அம்முடிகளிற் பதிந்த மணிகள் இராவணன் அடிமிசை உதிர்ந்து அவனடிகளை விளக்குவனவாயின. (42)

மாலியவான் கூறுதல்

6916. கால வெங்கனல் போலுங் கணைகளால்
வேலை வெந்து நடுங்கி வெயிற்புரை
மாலை கொண்டு வணங்கிய வாறெலாஞ்
சூல மென்னவென் னெஞ்சைத் தொளைக்குமால்.

கால வெம் கனல் போலும் கணைகளால்
வேலை, வெந்து, நடுங்கி, வெயில் புரை
மாலை கொண்டு, வணங்கியவாறு எலாம்,
சூலம் என்ன,என் நெஞ்சைத் தொளைக்கும் ஆல்.

பொ :—'(இராமன் ஏவிய) கொடிய ஊழிக்காலத் தீயை ஒத்த அம்புகளால், கடல், வெந்து, நடுங்கிச் சூரியன் ஒளி போன்ற ஒளியினையுடைய மாணிக்க மாலையை(க் காணிக்கையாக) ஏந்தி (நின்று) இராமனை வணங்கிய செய்தி முழுதும், சூலம்போல என் மனத்தைத் தொளைக்கும்' (என்று மாலியவான் கூறினுன்.)

கு :—இச்செய்யுள் முதல் 47-ஆம் செய்யுள் முடியவுள்ளவை, இராவணனுடைய தாயைப் பெற்ற பாட்டனுன மாலியவான் இராவணனை நோக்கிக் கூறியவை. இப்பாட்டுள் வேலை என்பது கடலரசனுன வருணனை உணர்த்தியது. (43)

6917. கிழிப டக்கடல் கீண்டது மாண்டது
மொழிப டைத்த வலியென மூண்டதோர்
பழிப டைத்த பெரும்பயத் தன்னவன்
வழிகொ டுத்ததென் னுள்ளம் வருத்துமால்.

'கிழிபடக் கடல் கீண்டது ; மாண்டது
மொழி படைத்த வலி'; என மூண்டது ஓர்
பழி படைத்த பெரும் பயத்து அன்னவன்,
வழி கொடுத்தது, என் உள்ளம் வருத்துமால்.

பொ :—'கடல், துணியின் தன்மையடையக் கிழிக்கப்பட்டது; பாராட்டப்பட்ட (அதன்) ஆற்றல் அழிந்துவிட்டது;' என்று உலகம் கூற, வளர்ந்த ஒப்பற்ற பழியைப் பெற்ற மிக்க அச்சத்தினையுடைய அவ்வருணன், (நம் பகைவர் கடந்து வரும்படி) வழி தந்தது என் மனத்தை வருத்தும்.

கு :—கடல் கிழிபடக் கீண்டது; மொழி படைத்த வலி மாண்டது என இயைக்க. கிழி - ஆடை. கீளுதல்-கிழித்தல். மாளுதல்-சாதல். மூளுதல் - வளர்தல்; மிகுதல். அன்னவன் என்றது கடலரசனான வருணனை. (44)

6918. படைத்த மால்வரை யாவும் பறித்து வேர்
துடைத்த வானர வீரர்தந் தோள்களைப்
புடைத்த வாறும் புணரியைப் போக்கற
அடைத்த வாறுமென் னுள்ளத் தடைத்தவால்.

படைத்த மால் வரை யாவும் பறித்து, வேர்
துடைத்த வானர வீரர், தம் தோள்களைப்
புடைத்தவாறும், புணரியைப் போக்குஅற
அடைத்தவாறும் என் உள்ளத்து அடைத்தவால்.

பொ :—இறைவன் படைத்த பெரிய மலைகளையெல்லாம் பிடுங்கி, வேர் அறும்படிச் செய்த வானர வீரர், தம்முடைய தோள்களைத் தட்டிய விதமும், கடலை (நாவாய் செல்லாதபடி அணைகட்டி)த் தடுத்த விதமும் என் மனத்தில் வேறு நினைவு எழாதபடி அடைத்து விட்டன

கு :—புணரி - கடல். அடைத்தல் - தடுத்தல். (45)

6919. காந்து வெஞ்சின வீரர் கணக்கிலார்
தாந்த மாற்றலுக் கேற்ற தரத்தர
வேந்த வெற்பை யொருவன் விரல்களா
லேந்தி யிட்டதென் னுள்ளத்தி லிட்டதால்.

காந்து வெம் சின வீரர் கணக்கு இலார்,
தாம் தம் ஆற்றலுக்கு ஏற்ற தரத் தர,
வேந்த! வெற்பை ஒருவன் விரல்களால்
ஏந்தி இட்டது என் உள்ளத்தில் இட்டதால்.

பொ :—அரசே! கொதிக்கின்ற கொடிய கோபத்தையுடைய அள வற்ற குரக்கு வீரர், தம்தம் வலிமைக்கு ஏற்றனவான மலைகளைக் கொடுக்கக் கொடுக்க, ஒருவனுன நளன், (அவர் தந்த) மலைகளைத் தன் கை விரல்களால் ஏந்திக் கடலில் இட்ட செயல், என் உள்ளத் தில் இட்டதாயிற்று.

கு :—வேந்த! என்பது, மாலியவான் இராவணனை நோக்கி விளித்தது. ஒருவன் என்றது நளனை. (46)

இச்செய்யுளின் பின் 52-ஆம் பிரதியிற் காணப்படும் மிகைப் பாடல் வருமாறு :

6919. (a) ஈதெ லாமுரைத் தென்பய னின்றுபோய்க்
காதி மானுட ரோடு கவிக்குலம்
சாத லாக்குவென் தாஞேர் கணத்தெனும்,
போதில் மாலிய வானும் புகலுவான்.

6920. சுட்ட வாகண்டுந் தொன்னகர் வேலையைத்
தட்ட வாகண்டுந் தாவற்ற தெவ்வரைக்
கட்ட வாகண்டுங் கண்ணெதி ரேவந்து
விட்ட வாகண்டு மேலெண்ண வேண்டுமோ.

சுட்டவா கண்டும் தொல் நகர், வேலையைத்
தட்டவா கண்டும், தா அற்ற தெவ்வரைக்
கட்டவா கண்டும், கண் எதிரே வந்து
விட்டவா கண்டும் மேல் எண்ண வேண்டுமோ?

பொ :—(பகைவர்) நம் பழமையான இலங்கை நகரை (அனுமனால்) எரித்தவாறு கண்டும், கடலைத் தடுத்தவாறு கண்டும், அழி வற்ற (தம்முடைய) பகைவரை யெல்லாம், அவர் களைந்தவாறு கண்டும், நம் கண்ணெதிரே படையொடு வந்துவிட்டவாறு கண்டும், இன்னும் ஆராய வேண்டுமோ?

கு :—தொல் நகர் சுட்டவா கண்டும் என இயைக்க. தட்டல் - தடுத்தல். தா - அழிவு. தெவ்வர் என்றது, இராமனுக்குப் பகைவ ராய் எதிர்ந்த விராதன், கரனுதியர், கவந்தன், மாரீசன் முதலி யோரை; வருணன் பகைவராய் மருகாந்தாரம் என்ற தீவிலிருந்த அசுரரை என்று கூறுவாரும் உண்டு. கட்டல் - களைதல். சுட்ட வாறு, தட்டவாறு, கட்டவாறு, விட்டவாறு என்பவை, சுட்டவா, தட்டவா, கட்டவா, விட்டவா என ஈறு கெட்டு நின்றன. எண்ணு தல் - ஆராய்தல். இனி ஆலோசித்தலால் பயன் இல்லை என்ற வாறு. (47)

இராவணன் மாலியவானைச் சினந்து கூறுதல்

6921. என்று தாயைப் பயந்தோ னியம்பலுந்
திின்று வாயை விழிவழி தீயுக
நன்று நன்றுநம் மந்திர நன்றெனு
வென்றும் வாழ்தி யிளவலொ டேகென்றான்.

என்று தாயைப் பயந்தோன் இயம்பலும்,
தின்று வாயை விழிவழி தீ உக,
'நன்று நன்று நம் மந்திரம் நன்று' எனு,
'என்றும் வாழ்தி இளவலொடு ஏகு' என்றான்.

பொ :—என்று தன் தாயைப் பெற்ற பாட்டனாகிய மாலியவான் கூறலும், (இராவணன்), பல்லைக் கடித்துக் கண்களின் வழியே நெருப்புப் பொறி சிந்த, (அவையோரை நோக்கி) 'நம் ஆலோசனை நன்று நன்று நன்று' என்று கூறி, (மேலும் மாலியவானை நோக்கி) 'நீயும் சிறியவனான வீடணனுடன் போ. என்றும் வாழ்வாய்' என்றான்.

கு :—வாய் ஆகுபெயரால் பல்லை உணர்த்தியது, வாயைத் தின்று என மாறுக. நன்று நன்று நன்று என்றது குறிப்பு மொழியாய் அடுக்கி நின்றது. இளவல் என்றது வீடணனை. பல்லைக் கடித்தலும் விழிவழி தீயுகுத்தலும் வெகுளியால் விளைந்தவை. (48)

மாலியவான் மௌனமுறச் சேனைத் தலைவன் கூறுதல்

6922. ஈன மேகொ லிதமென வெண்ணுரு
மோன மாகி யிருந்தனன் முற்றினு
னுன காலை யடியி னிறைஞ்சிய
சேனை நாத னினையன செப்பினான்.

ஈனமேகொல் இதம்? என எண்ணுரு
மோனம் ஆகி இருந்தனன், முற்றினான்;
ஆன காலை அடியின் இறைஞ்சிய
சேனை நாதன் இனையன செப்பினான்.

பொ :—(இராவணன் வெகுண்டு கூறியது கேட்ட, ஆண்டும் அறிவும் அனுபவமும்) நிரம்பியவனான மாலியவான், 'நல்லது கூறுதல் இழிவாகுமோ?' என்று எண்ணிப் பேசாது ஒடுங்கியிருந்தான்;

அப்போது, இராவணன் அடிகளில் வணங்கிய படைத் தலைவ(ஞன பிரகத்த)ன் இவற்றைச் சொன்னுன்.

கு:—முற்றினுன், 'இதம் ஈனமே கொல்?' என எண்ணுரு, மோனமாகி யிருந்தனன் என இயைக்க. முற்றினுன் என்றது மாலியவானை. முற்றுதல் - முதிர்தல்—நிரம்புதல். (49)

6923. கண்வ யந்தர வேலை கடந்தவத்
திண்மை யொன்று மலாற்றிசை காவல
ரெண்ம ரும்மிவற் கேவல்செய் கின்றவவ்
வுண்மை யொன்று முணர்ந்திலை போலுமால்.

கண் வயம்தர, வேலை கடந்த அத்
திண்மை ஒன்றும் அலால், திசை காவலர்
எண்மரும், இவற்கு ஏவல் செய்கின்ற அவ்
உண்மை ஒன்றும், உணர்ந்திலை போலும் ஆல்.

பொ:—(பகைவர் திறத்துக்) கடலைக் கடந்த அவ் வலிமை ஒன்றும் அல்லாமல், திசைகளில் நின்று உலகங் காக்கும் எண்மரும் இவனுக்கு ஏவல் செய்யும் அவ்வுண்மையைச் சிறிதும் கண் உன் வசமா(கி நிற்)க(க் கண்டு) அறிந்திலை போலும்.

கு:—வேலை கடந்த அத்திண்மை ஒன்றும் அலால், திசை காவலர் எண்மரும் இவற்கு ஏவல் செய்கின்ற அவ்வுண்மை ஒன்றும் கண்வயம்தர உணர்ந்திலை போலும் என இயைக்க. திசை காவலர் எண்மருள் ஒருவஞன வருணன், இராமனுக்கு வழிதந்த தொன்றுமே கண்ட நீ, அவ்வெண்மரும் இராவணனுக்கு அடிமை செய்தலை உன் கண் உன்வசமாக நின்று காணுதது என்? என்று படைத் தலைவன் மாலியவானைப் பரிகசித்துக் கூறினுன் என்றவாறு. வயம் – வசம் இவன் என்பது இராவணனைச் சுட்டியது. (50)

6924. கூசி வானரர் குன்று கொடுங்கடல்
வீசி ஞரெனும் வீரம் விளம்புவாய்
ஊசி வேரோடு மோங்கலை யோங்கிய
வீச ஞேடு மெடுத்தது மில்லையோ.

கூசி, வானரர் குன்று கொடுங்கடல்
வீசினுர் எனும் வீரம் விளம்புவாய்

ஊசி வேரோடும் ஓங்கலே ஓங்கிய
ஈசனேடும் எடுத்ததும் இல்லையோ.

பொ :—நீ (பகைவர்க்கு) அஞ்சினையாய், வானரர் மலைகளைப் பெயர்த்தெடுத்து, வளைந்த கடலில் எறிந்தனர் என்னும் ஒரு வீரச் செயலையே மீட்டும் மீட்டும் கூறுவாயாயினை; இவன் கயிலாய மலையினை ஊசி வேரோடும், அதன்கண் ஓங்கிய சிவபிரானேடும் பேர்த்துத் தாங்கியதில்லையோ ?

கு :—கூசி விளம்புவாய் என முடிவு கொள்ளும். ஊசிவேர் - மூல வேர்; ஆணிவேர். ஓங்கல் - மலே; கயிலாயம். (51)

6925. அதுகொ டென்சில வாரமர் மேலினி
மதிகெ டுந்தகை யோர்வந்து நாமுறை
பதிபு குந்தனர் தம்மைப் படுப்பதோர்
விதிகொ டுந்த விளைந்தது தானென்முன்.

அதுகொடு என் சில; ஆர் அமர்மேல், இனி
மதி கெடும் தகையோர் வந்து, நாம் உறை
பதி புகுந்தனர் தம்மைப் படுப்பது ஓர்
விதி கொடு உந்த விளைந்ததுதான் என்றான்.

பொ :—'அறிவுகேடரான மனிதர், பெரிய போரை மேற்கொண்டு வந்து, நாம் தங்கிய இடத்தே புகுந்தனர்; அவர் வருதலால் நமக்கு விளையும் சில தீங்கு என்னை? (ஒன்றும் இல்லை). அவர் வந்து புகுந்தது, அவரை அழிப்பதான வலிய விதியே கொண்டு செலுத்த நிகழ்ந்தது என்றான்.

கு :—மதிகெடும் தகையோர், ஆரமர் மேல் வந்து, நாம் உறை பதி புகுந்தனர்; இனி அதுகொடு என்சில? (அவர் வந்து புகுந்தது), தம்மைப் படுப்பது ஓர் விதிகொடு உந்த விளைந்ததுதான் என்றான் என இயைக்க. பகைவர் எத்துணை வலியுடையராயினும், தம் நிலம் விட்டு நம் நிலத்துப் புகுந்தமையால் அவர் விரைவில் அழிவது உறுதி என்று படைத்தலைவன் கூறினன் என்றவாறு. (52)

52-ஆம் பிரதியில் இச் செய்யுளின் பின் காணப்படும் மிகைச் செய்யுள் வருமாறு :

6925 (a) என்னும் வாய்மை யியம்புறு போதினின்
முன்னமே சென்ற ஒற்றர் முடுகியெம்
மன்ன வர்க்கெம் வரவுரைப் பீரெனத்
துன்னு காவலர் தம்மிடைச் சொல்லினர்.

வாயில் காவலன் இராவணனிடம் ஒற்றர் வரவு தெரிவித்தல்

6926. முற்று மூடிய கஞ்சுகன் மூட்டிய
வெற்ற னற்பொழி கண்ணினன் வேத்திரம்
பற்று மங்கையி னன்படி காரனின்
றொற்றர் வந்தன ரென்ன வுணர்த்தினான்.

முற்றும் மூடிய கஞ்சுகன், மூட்டிய
வெற்று அனல்பொழி கண்ணினன், வேத்திரம்
பற்றும் அம் கையினன், படிகாரன் நின்று,
'ஒற்றர் வந்தனர்' என்ன உணர்த்தினான்.

பொ :—(படைத் தலைவன் பேசி முடித்த அளவில்) உடல் முழுவதையும் மறைத்த மெய்ப்பை யணிந்தவனும், காரணமில்லாமலே மிகுவித்த நெருப்பைச் சிந்துகின்ற கண்களையுடையவனும், பிரம்பு பற்றிய கையினனுமான வாயில் காவலன், (இராவணன் எதிர்) நின்று; 'ஒற்றர்கள் வந்தனர்' என்று அறிவித்தான்.

கு :—கஞ்சுகம் - மெய்ப்பை—சட்டை. வேத்திரம் – பிரம்பு. படிகாரன் – வாயில் காவலன். 'பரதன் கோயிலுற்றார் படிகாரிர் எம், வரவு கூறுதிர் மன்னவற்கே' (2191) என்பதிலும் படிகாரிர் என்பது வாயில் காவலரே என்னும் பொருளிற் பயின்றமை காணலாம். (53)

இராவணன் கட்டளையால் ஒற்றர் இராவணனை யடைதல்

6927. வாயில் காவலன் கூற வயங்கெரி
மேய வெங்கண் விறல்கொ ளிராக்கதர்
நாயகன் புகுத் திங்கென நன்றெனப்
போய வன்புகுத் தப்புகுந் தாரரோ.

வாயில் காவலன் கூற, வயங்கு எரி
மேய வெங்கண் விறல்கொள் இராக்கதர்
நாயகன், 'புகுத்து இங்கு' என, 'நன்று' எனப்
போய், அவன் புகுத்தப் புகுந்தார் அரோ.

பொ :—வாயில் காவலன், ஒற்றர் வந்தமை கூற, விளக்கம் மிக்க சினமாகிய நெருப்புப் பொருந்திய வெவ்விய கண்களையும், வெற்றியினையும் உடைய அரக்கர் வேந்தனை இராவணன், (வாயில் காவலனை நோக்கி,) 'அவ்வொற்றனை இங்கே புகவிடு' என, அவ்

வாயில் காவலன், 'நல்லது' என்று சென்று, புகவிட, ஒற்றர் இராவணன் இருந்த மண்டபத்துப் புக்கனர்.

கு:—அவன் என்றது வாயில் காவலனை. நன்று என்பது தலைவன் கட்டளைக்கு இசைந்து செல்வோர் கூறும் கூற்று.

இச்செய்யுள் சில பிரதிகளில் இல்லை; எனினும், பல இடங்களி லிருந்து கிடைத்த நல்ல சுவடிகளிலெல்லாம் காணப்படுதலாலும், முன்பின் பாடல்களுடன் இயைபு கோடற்கு இன்றியமையாததாய் வேண்டப்படுதலாலும் இனிய நடையமைதி யுடைமையாலும் மூலத் துடன் சேர்த்து உரையும் வரையலாயிற்று. (54)

ஒற்றர் இராவணனை வணங்குதல்

6928. மனைக்கண் வந்தவன் பாதம் வணங்கினர்
பனைக்கை வன்குரங் கின்படர் சேனையை
நினைக்குந் தோறுந் திடுக்கிடு நெஞ்சினர்
கனைக்குந் தோறு முதிரங்கள் கக்குவார்.

மனைக்கண் வந்து அவன் பாதம் வணங்கினர்
பனைக்கை வன்குரங்கின் படர் சேனையை
நினைக்குந்தோறும் திடுக்கிடும் நெஞ்சினர்
கனைக்குந்தோறும் உதிரங்கள் கக்குவார்.

பொ:—பனை போன்ற வலிய கைகளையுடைய பெரிய குரங்குப் படையை நினைக்குந்தோறும் அஞ்சும் மனத்தினரும், கனைக்குந் தோறும் குருதியைக் கக்குபவருமான ஒற்றர், இராவணன் தங்கிய இடத்தை அடைந்து அவனடிகளை வணங்கினர்.

கு:—படர் - பெருமை; பரப்பும் ஆம். திடுக்கிடல் - அஞ்சுதல். கனைத்தல் - ஒலியெழுப்பல்; பேசுதல் என்று பொருள்பட நின்றது. வானரரால் மொத்துண்டமையால் ஒவ்வொரு சொற் சொல்லுந் தோறும் குருதி கக்குவாராயினர். 'வாயாற் குருதியே பொழிகின் றுரை' (27) என்று முன் கூறியதும் நோக்கத்தகும். (55)

இராவணன் ஒற்றர்பால் வானரப்படையளவு முதலியவற்றை வினவுதல்

6929. வெள்ள வாரி விரிவொடவ் வீடணத்
தள்ள வாரி நிலைமையுந் தாபத

ருள்ள வாறு முரைமினென் ருனுயிர்
கொள்ள வாய்வெரு வுங்கொடுங் கூற்றனன்.

'வெள்ள வாரி விரிவொடு, அவ் வீடணத்
தள்ளவாரி நிலைமையும், தாபதர்
உள்ளவாறும், உரைமின்' என்ருன்; உயிர்
கொள்ள வாய்வெருவும் கொடுங்கூற்று அனன்.

பொ:—உயிரைக் கொள்ள விரும்பி வாய் பிதற்றும் கொடிய கூற்றுவனை ஒத்தவனுன இராவணன், (ஒற்றரை நோக்கி) "கடல் போன்ற (குரங்குப்) படையின் பரப்பும், அந்த வீடணனுகிய சோம் பேறியின் நிலையும் தவத்தினரான இராம இலக்குவர் உள்ளபடியும் கூறுக" என்ருன்.

கு:—வெள்ளவாரி - கடல்; என்றது கடல்போலும் படையினை. தள்ளவாரி - சோம்பேறி (பிங்). கன்னட மொழியில் தள்ளவாரி என்பது சோம்பரை உணர்த்தும் என்பர். தனக்குத் துணையாய்ப் போர்க்குக் கிளர்ந்தெழாது விலகினமையால், தள்ளவாரி என்ருன். தாபதர் உள்ளவாறும் என்றதும் தவமேற்கொண்ட இராம இலக்குவருடைய நினைவும் செயலும் என்றவாறு. உயிர் கொள்ள வாய் வெருவுதலாவது, உயிர் கொள்ளும் விழைவு மிகுதியால், பேசும் மொழியின் உருத் தெரியாதவாறு குழறிப் பேசுதல். (56)

இச் செய்யுளின் பின் 1, 2, 11, 23, 26, 29, 31, 40, 41, 43, 44, 52, 63, 65-ஆம் பிரதிகளிற் காணப்பட்ட மிகைச் செய்யுள் வருமாறு:

6929 (a) என்னச் சாரர் இசைத்தனர் வேலையைக்
கன்ன லொன்றிற் கடந்து கவிக்குலம்
துன்னு பாசறைச் சூழல்க டோறுமே
அன்ன ராகி அரிதின் அடைந்தனம்.

ஒற்றர் கூறுதல்

6930. அடிய மந்நெடுஞ் சேனையை யாசையான்
முடிய நோக்கலுற் ருேமுது வேலையின்
படியை நோக்கியவ் வானம் படர்குறுங்
கடிய வேகக் கலுழனிற் கண்டிலம்.

அடியம் அந்நெடுஞ் சேனையை ஆசையால்
முடிய நோக்கலுற்ருேம்; முதுவேலையின்

படியை நோக்கி, அவ்வானம் படர்குறும்
கடிய வேகக் கலுழனில் கண்டிலம்.

பொ :—பழைய கடல் சூழ்ந்த நிலத்தை நோக்கி வான்மிசைப் பறந்து செல்லும் மிக்க விரைவினையுடைய கருடனைப்போல, உன் தொண்டராகிய நாங்கள், ஆசையோடு, அந்தப் பெரிய குரங்குப் படையை முழுதும் காண முயன்றோம்; கண்டோமில்லை.

கு :—நிலத்தில் உள்ள தன் இரையைக் குறிக்கொண்டே ஆகாயத்தில் விரைந்து பறக்கும் கருடனைப்போல உன் அடியராகிய நாங்களும் குரங்குப் படை முழுவதையும் காணும் குறிக்கோளுடன் விரைந்தும், அப்படையினைக் கடைபோகக் காணுதல் இயலாதாயிற்று என்றவாறு. முதுவேலையின் படியை நோக்கி, வானம்படர்குறும் அக் கடிய வேகக் கலுழனில், அடியம், ஆசையால், அந்நெடுஞ் சேனையை முடிய நோக்கலுற்றேம்; கண்டிலம் என இயைக்க. வேலையின்படி என்பதில் இன் அல்வழிச் சாரியை. (57)

6931. நுவல யாம்வர வேண்டிய நோக்கதோ
கவலை வேலை யெனுங்கரை காண்கிலா
தவல மெய்தி யடைத்துழி யார்த்தெழுந்
துவலை யேவந்து சொல்லிய தில்லையோ.

நுவல யாம் வரவேண்டிய நோக்கதோ
கவலை வேலை எனும் கரை காண்கிலாது
அவலம் எய்தி அடைத்துழி, ஆர்த்து எழும்
துவலையே வந்து சொல்லியது இல்லையோ ?

பொ :—பகைப்படையின் அளவு முதலியவற்றைச் சொல்லுதற்கு நாங்கள் வரும்படி விரும்பிய கருத்துண்டோ? கடல்போன்ற கவலையின் முடிவைக் காணாது, துன்புற்று, அவர்கள், கடலை அடைத்து அணை கண்டபொழுது ஒலித்தெழுந்த நீர்த் திவலையே வந்து அறிவித்ததில்லையோ?

கு :—நோக்கு - கருத்து. வேலையெனும் கவலைக் கரை காண்கிலாது என இயைக்க. கரை - எல்லை; முடிவு. அவலம் - துன்பம். துவலை - நீர்த்துளி. இச் செய்யுளும் இதற்கு முந்திய செய்யுளும் குரங்குப் படையின் மிகுதி கூறியனவாகும். (58)

6932. எல்லை நோக்கவு மெய்தில தாமெனுஞ்
சொல்லை நோக்கிய மானிடன் றோளெனுங்
கல்லை நோக்கிக் கணைகளை நோக்கித்தன்
வில்லை நோக்கலும் வெந்தது வேலையே.

'எல்லை நோக்கவும் எய்தில தாம்' எனும்
சொல்லை நோக்கிய மானிடன் தோள் எனும்
கல்லை நோக்கிக் கணைகளை நோக்கித் தன்
வில்லை நோக்கலும், வெந்தது வேலையே.

பொ :—'இராமன் தன்னிலத்திலே வந்து தன்னை நோக்கி, வரம் கிடக்கவும், (கடலரசு) வந்து உதவவில்லை' என்று உலகம் கூறும் வசைச்சொல்லை நினைந்து, தோள்களாகிய மலைகளை நோக்கித் தன் கையிலுள்ள அம்புகளைப் பார்த்து, வில்லை நோக்கிய அளவில் கடல் வெந்தது.

கு :—எல்லை - இடம். மானிடன் என்றது இராமனை. தோள் முதலியவற்றை நோக்கியது, அவற்றினாற்றல் மதிக்கப்படவில்லை என்ற நினைவினால். 'வில்லை நோக்கலும் வெந்தது வேலையே' என்பது விரைவுயர்வு நவிற்சியணி தழுவிய கூற்று. வேலை வெந்த தென்க. இதனால் இராமனாற்றல் கூறியவாறு. (59)

இச் செய்யுளின் பின் 52-ஆம் பிரதியிற் கண்ட மிகைப்பாடல் வருமாறு :

6932 (a) வருண னஞ்சி வழிகொடுத் தையநின்
சரண மென்றடி தாழ்ந்தவன் றன்பகை
நிருதர் வெள்ள மனந்தம் நிகழ்த்துமுன்
திரிபு ரச்செயல் செய்ததங் கோர்கணை.

6933. தாரு லாமணி மார்பநின் றம்பியே
தேரு லாவு கதிருந் திரிந்துதன்
பேரு லாவு மளவினும் பெற்றன
னீருலாவு மிலங்கை நெடுந்திரு.

தார் உலாம் மணி மார்ப! நின் தம்பியே
தேர் உலாவு கதிரும் திரிந்து, தன்
பேர் உலாவும் அளவினும் பெற்றனன்
நீர் உலாவும் இலங்கை நெடுந்திரு

பொ :—மாலை விளங்கும் அழகிய மார்பினையுடைய அரசே! தேரிலே செல்லும் சூரியனும் சஞ்சரிக்கப்பெற்று, இராமன் பெயரும் விளங்குமளவும் நின் தம்பியே கடல் சூழ்ந்த இலங்கையின் அளவின் மிக்க செல்வத்தைப் பெற்றான்.

கு :—கதிரும் என்ற உம்மையால் மதியும் கொள்ளத்தகும். 'ஆசந்திரார்க்கம்' என்பது வடமொழி வழக்கு. தன் என்பது இராமனைச் சுட்டி நின்றது. தம்பியே என்பதில் ஏகாரம் தேற்றப் பொருளது. 'தேரிலே செல்லும் சூரியனும் விமானத்திலே செல்லும் சந்திரனும் என் பேரும் உள்ளவரை இலங்கை அரசை ஆள்க' என்று இராமனால் வீடணன் முடிசூட்டப் பெற்றான் என்றவாறு. இச் செய்யுளால் இராவணன் வினவிய வீடணன் நிலை ஒற்றரால் கூறப்பட்டது. (60)

6934. சேது பந்தனஞ் செய்தன னென்றதிப்
போது வந்த புதுவலி யோவொரு
தூது வந்தவன் றோள்வலி சொல்லிய
வேது வந்த மிலாத விருக்கவே.

சேது பந்தனம் செய்தனன் என்றது இப்
போது வந்த புதுவலியோ? ஒரு
தூது வந்தவன் தோள்வலி சொல்லிய
ஏது அந்தம் இலாத இருக்கவே.

பொ :—முன்னே தூதனாக வந்த அனுமன் அளவில்லாத காரணத்தால் விளக்கித் தெரிவித்த இராமன் தோளாற்றல் இருக்க, கடலை அணை கட்டித் தடுத்தான் என்றது கொண்டு, அது அவனுக்கு இப்போது புதிதாக வுண்டான வலி என்று எண்ணுதல் தகுமோ?

கு :—இராமன் பேராற்றல், முன்னமே அனுமன் பல ஏதுக்களால் விளக்கிக் கூற நாம் அறிந்தவையே: கடலில் அணை கட்டியது கொண்டு, புதிதாக அறியப்படுவதொன்றன்று என்றவாறு. பந்தனம் – கட்டு. தூதுவந்தவன் என்றது அனுமனை. தூது வந்தவன் அந்தம் இலாத ஏது(க்களால்) சொல்லிய தோள்வலி என இயைக்க. ஏது - காரணம். (61)

6935. மருந்து தேவ ரருந்திய மாலைவா
யிருந்த தானவர் தம்மை யிரவிமுன்

பெருந்திண் மாயற் குணர்த்திய பெற்றியிற்
றெரிந்து காட்டின னும்பி சினத்தினல்.

மருந்து தேவர் அருந்திய மாலைவாய்,
இருந்த தானவர் தம்மை இரவி, முன்
பெருந்திண் மாயற்கு உணர்த்திய பெற்றியில்
தெரிந்து காட்டினன், நும்பி சினத்தினல்.

பொ:—பண்டு, தேவர்கள் அமுதம் உண்டபோது, (அவருடன்) இருந்த அசுரர்களைச் சூரியன் தெரிந்து, பேராற்றலுள்ள திருமாலுக்கு அறிவித்த முறைபோல, உம்முடைய தம்பியாகிய வீடணன், எங்களை அறிந்து, வெகுண்டு, இராமன்பால் கூறினன்.

கு:—பாற்கடலைக் கடைந்து எடுத்த அமுதத்தைத் திருமால் தேவர்க்கு மட்டும் வழங்குதல் கண்ட சைம்மிகேயன் என்னும் அசுரன், தேவர் வரிசையில் தங்கி அமுதுண்ண, அதுகண்ட சூரிய சந்திரர் சைம்மிகேயன் செயலைத் திருமால்பால் தெரிவித்தனர். திருமால் தாம் கைக்கொண்டு அமுது பகிர்ந்து அளித்து வந்த அகப்பையால் அவ்வசுரனைத் தாக்க, அவன் உடல் வேறு, தலை வேறு ஆயினன். எனினும், அமுதுண்டமையால் இறவாத நிலையெய்தி, இரண்டுடல் பெற்று, இராகு, கேது என்னும் இருவராய், சூரிய சந்திரர்களை ஓரோர் காலத்து நலியலாயினன் என்பது புராண கதை. அவன் இராகு கேதுக்களாய் நின்று சூரிய சந்திரர்களை நலிவதைக் கிரகணம் என்று கூறுவர். மருந்து - அமுது. மாலை - சமயம்; 'வரமுனி வஞ்சம் என்று அறிந்த மாலைவாய்' (பால. திருவவதாரப். 51) என்பதனுள்ளும் மாலை சமயம் என்ற பொருளிற் பயின்றமை காணலாம். அசுரன் ஒருவனே ஆயினும், அடியுண்ட பின் இருவராயினமையின், அந்நிலை கொண்டு, தானவர் என்று பன்மையாற் கூறினர். இதுவும் பின்வரும் பாடலும் ஒருதொடர். நும்பி காட்டி விளம்பினன் என முடிவுகொள்ளும். (62)

6936. பற்றி வானர வீரர் பனைக்கையா
லெற்றி யெங்களை யேநெடுந் தோளுறச்
சுற்றி யீர்த்தலைத் துச்சுடர் போலொளிர்
வெற்றி வீரற்குக் காட்டி விளம்பினன்.

பற்றி வானர வீரர் பனைக்கையால்
எற்றி, எங்களை ஏ நெடுந் தோள் உறச்

சுற்றி, ஈர்த்து அலைத்துச் சுடர்போல் ஒளிர்
வெற்றி வீரற்குக் காட்டி விளம்பினான்.

பொ:—எங்களைப் பிடித்துக் குரங்கு வீரர்களுடைய பெரிய கைக ளால் எற்றுவித்து, நீண்ட கைகளை ஒன்றுடனொன்று பொருந்த வளைத்துப் பிணித்து இழுத்து வருத்திச் சூரியனைப்போல விளங்கு கின்ற வெற்றி வீரனை இராமனுக்குக் காட்டி, எங்களைப்பற்றிய விவரமெல்லாம் அவனுக்குத் தெரிவித்தான்.

கு:—எங்களைப்பற்றி, வானர வீரர் பனைக்கையால் எற்றி, நெடுந் தோள் உறச் சுற்றி யீர்த்து அலைத்து என இயைக்க. எங்களையே என்பதில் ஏ அசை. தோள் - கை. சுற்றுதல் - வளைத்துக் கட்டு தல். ஈர்த்தல் - இழுத்தல். அலைத்தல் - வருத்தல். (63)

6937. சரங்க ளிங்கிவற் றாற்பண்டு தானுடை
வரங்கள் சிந்துவெ னென்றனன் மற்றெமைக்
குரங்க லாமை தெரிந்துமக் கொற்றவ
னிரங்க வுய்ந்தன மீதெங்க ளொற்றென்றார்.

"'சரங்கள் இங்கு இவற்றால் பண்டு தான் உடை
வரங்கள் சிந்துவென்' என்றனன்; மற்று எமைக்
குரங்கு அலாமை தெரிந்தும் அக் கொற்றவன்
இரங்க உய்ந்தனம்; ஈது எங்கள் ஒற்று" என்றார்.

பொ:—"வெற்றியாளனான அவ்விராமன், 'என் அம்புகளாகிய இவற்றால், முன்பே இராவணன் பெற்றுடைய வரங்களை யெல்லாம் அழிப்பேன்' என்று கூறினான். மேலும், நாங்கள் குரங்குருவில் திரிந்த அரக்கர் என்று தெரிந்தும் அவன் அருளுதலால், உயிர்பெற் றோம்; 'இது, நாங்கள் ஒற்றி வந்த செய்தி'" என்றனர்.

கு:—அக் கொற்றவன், 'சரங்கள் இங்கு இவற்றால் தானுடை வரங்கள் சிந்துவென்' என்றனன் என இயைக்க. 'சரங்கள் இங்கு இவற்றால் தானுடை(ய) வரங்கள் சிந்துவென்! என்றது, ஒற்றர்பால் இராமன் கூறியது. தான் என்றது இராவணனை. சிந்துதல் - அழித்தல். (64)

6938. மற்றும் யாவையும் வாய்மைய வானவன்
சொற்ற யாவையுஞ் சோர்வின்றிச் சொல்லினர்

குற்றம் யாவையுங் கோளொடு நீங்குக
விற்றை நாண்முத லாயுவுண் டாகென்றார்.

மற்றும் யாவையும் வாய்மைய வானவன்
சொற்ற யாவையும் சோர்வு இன்றிச் சொல்லினார்
'குற்றம் யாவையும் கோளொடு நீங்குக;
இற்றை நாண் முதல் ஆயு உண்டாக' என்றார்.

பொ :—மேலும், தாங்கள் பகைப்புலத்துக் கண்ட எல்லாவற்றையும், தேவனாகிய இராமன் சொல்லிய உண்மையான எல்லாவற்றையும் பிழைபடலின்றித் தெரிவித்தவராய், 'துன்பங்களெல்லாம் அவற்றுக்குக் காரணமான தீமைகளுடன் நீங்குக; இன்று முதல் (மேலும் ஒரு மூன்றரைக்கோடி) வாழ்நாள் உளதாகுக' என்று கூறுவாராயினர்.

கு :—வானவன் என்றது இராமனை. வானவன் சொற்ற வாய்மைய யாவும் என இயைக்க. சோர்வு - பிழை. குற்றம் - துன்பம்; 'குடும்பத்தைக் குற்றம் மறைப்பான் உடம்பு' (1029) என்னும் திருக்குறளில் குற்றம் துன்பம் என்னும் பொருளிற் பயின்றமை காணலாம். கோள் - தீமை; குற்றங்கள் அவற்றுக்குக் காரணமான கோளுடன் நீங்குக என்றவாறு. பணியாளர் தலைவன்பாற் செய்தி சொல்லத் தொடங்கும் நிலையில், அல்லது சொல்லி முடிக்கும் நிலையில் தலைவனை வாழ்த்தும் முறையில் ஒற்றர், தாங்கண்ட செய்திகள் முதலியவற்றை இராவணனிடம் கூறி முடிவில் அவனை வாழ்த்துவாராயினர். (65)

இச் செய்யுளின் பின் 52-ஆம் பிரதியிற் காட்டப்பட்ட மிகைச் செய்யுள் வருமாறு :

6938 (a) செவித்துளை யிருபதூடுந் தீச்சொரிந் தென்னக் கேட்டுப்
புவித்தலங் கிழியவண்டம் பொதிர்வுறத் திசையினின்ற
இபத்திர ளிரியவானத் திமையவர் நடுங்கக் கையாற்
குவித்தடம் புயமேகொட்டிக் கொதித்திடை பகரலுற்றான்.

ஒற்றுக்கேள்விப் படலம் முற்றிற்று

9. இலங்கை காண் படலம்

இராமபிரான் இலக்குவன் முதலியோருடன் சுவேல மலையின் மேல் ஏறி நின்று இலங்கையின் எழில் கண்டு வியந்த செய்தியை விரித்துரைப்பது, இலங்கைகாண் படலம் என்னும் இப்படலமாகும். இது நாற்பத்தெட்டுச் செய்யுட்களையுடையது. இப்படலத்தின் முதலி லுள்ள இருபத்துநான்கு செய்யுட்களும் 11, 18, 23, 26, 40, 43, 52, 60, 61-ஆம் எண்ணுள்ள சுவடிகளில் முன்னுள்ள ஒற்றுக் கேள்விப் படலத்தைச் சார்ந்தனவாக அமைந்துள்ளன. 44, 63 என்னும் எண்ணுள்ள சுவடிகளில் இப்படலத்தின் முதல் இருபத்துநான்கு செய்யுட்களும், 19, 21, 25, 62, 65, 66 என்னும் எண்ணுள்ள சுவடி களில் முதல் இருபத்தைந்து செய்யுட்களும் வேறு சில பிரதிகளில் முதல் இருபத்துமூன்று செய்யுட்களும் செருப்பதி படலம் எனவும் பின்னுள்ள எஞ்சிய செய்யுட்கள் இலங்கைகாண் படலம் எனவும் இரு வேறு படலங்களாகப் பகுக்கப்பெற்றுள்ளன. இராவணனது உள்ளம் செருவிற் (போரிற்) பதிந்த செய்தியை விரித்துக் கூறுதல் பற்றி இப்படலத்தின் முற்பகுதி செருப்பதி படலம் எனக் குறிக்கப் படுவதாயிற்று.

வானர சேனைகளின் மிகுதியினை அறிந்து வந்த ஒற்றர்கள் அங் குள்ள நிலைமையினை இராவணனுக்குக் கூறிச் சென்ற பின்னர், இராவணன் அமைச்சர் முதலிய மந்திரத் தலைவர்களை அழைத்து, இனிச் செய்யத்தக்கது யாது? என வினவினான். அதனைக் கேட்ட சேனைகாவலன் 'இனி நம்மால் மேற்கொள்ளத்தக்கது போரே யாகும். யானே சேனையுடன் சென்று பகைவரைப் பொருது மீள் வேன். எனக்கு விடை தருவாயாக' என்றான். அந்நிலையில் எதிரதாக்காக்கும் நல்லறிவுடைய மாலியவான் என்பான், பகைமேற் கொண்டு வந்த இராமன் முதலியோரது பேராற்றல்களையும் தெய் வத் தன்மையினையும் எடுத்துக் கூறிச் சீதையை இராமனிடம் ஒப்ப டைத்துப் பகைவருடன் சமாதானம் செய்து கொள்வதே இனிச் செய்யத்தக்கதாகும் என இராவணனுக்கு அறிவுறுத்தினான். அது கேட்ட இராவணன் தன்னாற்றலை மிகுத்துக் கூறி, 'மூவுலகத்தோரும் போர் மேற்கொண்டு என்னை எதிர்த்து வரினும் சீதையை விடுவே னல்லேன்' என்றான். இரவு புலர்ந்தது. கதிரவன் தோன்றினான்.

இராமன், தன் பரிவாரங்களோடு சுவேல மலையின் உச்சியில் ஏறி நின்று அரக்கர்கள் வாழும் இலங்கை நகரத்தினைக் கண்டு அந் நகரத்தின் எழில் மிக்க பலவகைக் காட்சிகளையும் தன் தம்பி இலக்-

குவனுக்கு எடுத்துரைத்து வியந்தான். அந்நிலையில் இராவணன் வானர சேனையைக் காணவேண்டி வானளாவ வுயர்ந்த கோபுரத்தின் மீதேறி அதன் மேல் நிலையை அடைந்தான் என்பது இப்படலத்திற் கூறப்படும் செய்தியாகும்.

இப்படலத்தின் முதற்கண் கூறப்பட்ட மாலியவான் அறவுரை, முதல் நூலாகிய வான்மீகத்தில் யுத்த காண்டம் 35-ஆம் சருக்கத்தில் இடம்பெற்றுளது. இராமன், இலக்குவன் முதலியோருடன் சுவேல மலை மீதேறி நின்று இலங்கை நகரைக் கண்ட செய்தி 38, 39-ஆம் சருக்கங்களில் விரித்துரைக்கப்பெற்றுள்ளது.

9. இலங்கை காண் படலம்

இராவணன் வினவச் சேனை காப்பாளன் சொல்லத் தொடங்குதல்

6939. வைதெனக் கொல்லும் விற்கை
 மானிடர் மகர நீரை
நொய்தினி னடைத்து மானத்
 தானையா னுவன்ற நம்மூ
ரெய்தினா ரென்ற போதின்
 வேறினி யெண்ண வேண்டுஞ்
செய்திற னுண்டோ வென்னச்
 சேனைகாப் பாளன் செப்பும்.

வைதெனக் கொல்லும் வில் கை
 மானிடர், மகர நீரை
நொய்தினின் அடைத்து, மானத்
 தானையான் நுவன்ற நம் ஊர்
எய்தினர் என்ற போதின்,
 வேறு இனி எண்ண வேண்டும்
செய்திறன் உண்டோ? என்ன,
 சேனை காப்பாளன் செப்பும்.

பொ :—(ஆற்றல் மிக்க முனிவர்கள் வெகுண்டு) சபித்தாற் போன்று (மாற்றுரைத் தவருது) கொல்லும் (அம்பினைச் செலுத்த வல்ல) வில்லைத் தாங்கிய கையினையுடைய (இராம இலக்குவர் என்னும்) மனிதர்கள் சுரு மீன்களையுடைய கடல் நீரை விரைவில் அணை கட்டி(க் கடந்து) பெருமை பொருந்திய சேனைகளோடும் (வலிய அரணுடையதெனப்) பாராட்டப்பட்ட நமது (இலங்கை) நகரத்தினை அடைந்து விட்டார்கள் என்று சொல்லும் இப்பொழுது (அவர்களது செயலுக்கு) எதிராக இனி (நாம்) எண்ணுதற்குரியனவாகவும் செய்தற்குரியனவாகவும் உள்ள செயல் வகைகள் உண்டோ? என்று (இராவணன்) வினவ (அதற்குச்) சேனை காப்பாளன் (பின்வருமாறு) மறுமொழி கூறத் தொடங்கினன்.

கு :—வைதென-வைதாற்போன்று. வைதல்-சபித்தல்; நிறை மொழி மாந்தராகிய முனிவர் முதலியோர் தம்மை யிகழ்ந்த மாற்ருர்

சாவவும் கெடவும் வெகுண்டு கூறுதல். சாதுக்களாகிய முனிவர்கள் வெகுண்டு கூறும் சாப மொழிகள் அவர்தம் வாயினின்றும் வெளிப்பட்ட அப்பொழுதே மாற்றுரை விரைந்து கொல்லும் ஆற்றலுடையனவாதல் போன்று இராம இலக்குவர் கையிலுள்ள சாபமும் பகைவரை விரைந்து கொல்லும் ஆற்றலுடையனவாம் என்பான், 'வைதெனக் கொல்லும் விற்கை மானிடர்' என்றான். 'வைத வைவின் மராமர மேழ்துளை எய்த எய்தவற்கு' (கம்பர் - தற்சிறப்பு-5) என வரும் தொடர் இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும். மகரம் - சுறுமீன். மகரநீர் - கடல். நொய்தினின் - விரைவில். மானம் - வீரத்தினின்றும் வழுவாத பெருமை. தானை-சேனை. ஆன் என்னும் மூன்றனுருபு ஈண்டு உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. நுவலுதல்- உயர்த்துப் புகழ்தல். தன் கீழ் வாழும் அரக்கரனைவரையும் உளப்படுத்து 'நம்மூர்' என்றான். வேறு இனி எண்ணவேண்டும் திறனுண்டோ, வேறு இனிச் செய்திறனுண்டோ எனத் தனித்தனி இயையும். என்ன - என்று இராவணன் வினவ. சேனை காப்பாளன்- சேனைத் தலைவன்; என்றது, இராவணனுடைய படைத்தலைவனை.

(1)

சேனை காவலன் மறுமொழி

6940. விட்டனை மாதை யென்ற
போதினும் வெருவி வேந்தன்
பட்டதென் றிகழ்வர் விண்ணோர்
பற்றியிப் பகையைத் தீர
வொட்டலாம் போரி லொன்னு
ரொட்டினு மும்பி யொட்டான்
கிட்டிய போது செய்வ
தென்னினிக் கிளத்தல் வேண்டும்.

'விட்டனை மாதை என்ற
போதினும், "வெருவி, வேந்தன்
பட்டது" என்று இகழ்வர்
விண்ணோர்; பற்றி இப்பகையைத் தீர,
ஒட்டல் ஆம் போரில் ஒன்னார்
ஒட்டினும், உம்பி ஒட்டான்;
கிட்டியபோது, செய்வது என்?
இனிக் கிளத்தல் வேண்டும்.

பொ :—(எங்கள் வேந்தனாகிய நீ) சீதையை(ச் சிறையினின்றும்) விடுவித்தாய் என்றபொழுதும் (இச்செயல்) இராவணனாகிய மன்னன் (மாற்றார்க்கு) அஞ்சிச் செய்ததாம் என்று தேவர்கள் (நின்னை) இகழ்ந்துரைப்பார்கள். இங்ஙனம் வந்த பகையை நீக்கத் தொடர்ந்து தாக்கிப் பொரும் போரிலே, பகைவர்கள் சமாதானஞ் செய்துகொள்ள இசைந்தாலும் (அவருடன் கூடியுள்ள) உன் தம்பியாகிய வீடணன் (அதற்கு) உடன்பட மாட்டான். (பகைவர் சேனை நம்மை) நெருங்கிய இச்சமயத்தில் (நம்மாற்) செய்யத்தக்கது யாது? (அதனைச்) சொல்லியருளல் வேண்டும்.

கு :—சீதையை விடுதலாகிய இச்செயல், வேந்தன் வெருவிப் பட்டது என்று விண்ணோர் இகழ்வர் என்க. இப் பகையைத் தீரப் பற்றி ஒட்டல் ஆம் போரில் என இயைக்க. தீர்தல் - விடுதல்; நீக்குதல். ஒட்டுதல் - தாக்குதல். 'ஒன்னார் உறைநிலத்தோ டொட்டல் அரிது' (திருக்குறள் - 499) என்புழி ஒட்டுதல் இப்பொருளில் வந்தமை காணலாம். ஒன்னார் - பகைவர். ஒட்டினும் - (சமாதானஞ் செய்துகொள்ள) இசைந்தாலும். உம்பி - உன் தம்பி; என்றது, இராவணனுக்குத் தம்பியாகிய வீடணனை. ஒட்டான் - உடன்படான். கிட்டுதல் - நெருங்குதல். இராம இலக்குவராகிய பகைவர்கள் நம்மொடு சமாதானத்திற்கு உடன்பட்டாலும் அவர்களை நண்பாக அடைந்த வீடணன் அவர்கள் அவ்வாறு சமாதானஞ் செய்து கொள்ளுதற்கு இசையமாட்டான் என்பான், 'ஒன்னார் ஒட்டினும் உம்பி ஒட்டான்' என்றான். (2)

6941. ஆண்டுசென் றரிக ளோடு
மனிசரை யமரிற் கொன்று
மீண்டுநம் மிருக்கை சேர்து
மென்பது மேற்கொண் டோமே
லீண்டுவந் திறுத்தா ரென்னு
மீதலா துறுதி யுண்டோ
வேண்டிய தெய்தப் பெற்றால்
வெற்றியின் விழுமி தன்றோ.

ஆண்டு சென்று அரிகளோடு
மனிசரை அமரில் கொன்று
மீண்டு நம் இருக்கை சேர்தும்
என்பது மேற்கொண்டோமேல்,

ஈண்டு வந்து இறுத்தார் என்னும்
ஈது அலாது உறுதி உண்டோ?
வேண்டியது எய்தப் பெற்ருல்
வெற்றியின் விழுமிது அன்ரே!

பொ :—(பகைவர் தங்கியிருக்கும்) அவ்விடத்திலேயே சென்று வானர சேனைகளுடன் (இராம இலக்குவராகிய) மனிதரையும் போரிலே கொன்று போக்கி மீண்டு நமது இருப்பிடத்தை யடைவோம் என்றெண்ணிப் பகைவர்மேற் படையுடன்செல்லுதலை மேற்கொள்வோமாஞல் (அப்பகைவர்கள் நம்மை நோக்கி) இங்கேயே வந்து தங்கிவிட்டார்கள் என்னும் இதனைத் தவிர (நம் செயலுக்கு) உறுதி தருவது வேறேதேனும் உளதோ? நம்மால் விரும்பப்பட்டதொன்று (நமது முயற்சியின்றித்) தானே வந்து (நம்மை) அடையப் பெறின், (அது, நாம் பெறக் கருதிய) வெற்றியைக் காட்டிலும் மிக்க பயனுடையதாகுமல்லவா?

கு :—ஆண்டு - (பகைவர்கள் தங்கிய) அவ்விடம். அரிகள் - குரங்குகள்; வானர சேனைகள். மனிசர் என்றது, இராம இலக்குவர்களை. ஈண்டு - (இலங்கை நகரமாகிய) இவ்விடம். இறுத்தல் - தங்குதல். பகைவர்மேற் படையுடன் சென்று அவர்களைப் போரிற் கொன்று வெற்றிபெற எண்ணிய நமக்கு முன்னே அப்பகைவர் தாமே வலிய வந்து அகப்பட்டுக்கொண்ட இச்செயல், நமது விருப்பம் எளிதல் நிறைவேறுதலாகிய பயனை விரைந்தளிப்பதாதலால், இப்பொழுதுண்டாகிய நிகழ்காலப் பயஞகிய இது, இனி நமக்கு ஏற்படவிருக்கும் எதிர்காலப் பயஞகிய வெற்றியைக் காட்டிலும் மிக்க உவகையைத் தரவல்லது என்பான், 'வேண்டியது எய்தப் பெற்ருல் வெற்றியின் விழுமிதன்ரே' என அதனையே வியந்து பாராட்டினுன். வேண்டுதல் - விரும்புதல். எய்தப்பெறுதல் - முயற்சியின்றித் தானே வந்து அடையப் பெறுதல். (3)

6942. ஆயிரம் வெள்ள மான
வரக்கர்தந் தானை யைய
தேயினு மூழி நூறு
வேண்டுமாற் சிறுமை யென்ஞே
நாயினஞ் சீயங் கண்ட
தாமென நடப்ப தல்லா
ளீயுருத் தெழுந்த போது
குரங்கெதிர் நிற்ப துண்டோ.

ஆயிரம் வெள்ளம் ஆன அரக்கர்தம் தானை ஐய!
தேயினும் ஊழி நூறு வேண்டுமால்; சிறுமை என்னோ?
நாயினம் சீயம் கண்டதாம் என நடப்பது அல்லால்
நீ உருத்து எழுந்த போது, குரங்கு எதிர்நிற்பது உண்டோ?

பொ:—எங்கள் தலைவனே! ஆயிரம் வெள்ளம் என்னும் தொகையினவாகிய அரக்கருடைய சேனைகள் (பகைவரால்) அழிய நேரினும் (அவ்வாறழிதற்கும்) நூறு யுகங்கள் (கால நீட்டிப்பு) வேண்டும். (எனவே பகைவர் படையால் நம் சேனைகளுக்கு நேரக்கூடிய) சிறுமை யாதுளது? (பேராற்றல் வாய்ந்த) நீ வெகுண்டு போர்மேற் சென்றபொழுது (பகைவர் சேனையாகிய) குரங்குக் கூட்டங்கள் (நின்னைக் கண்ட அளவில்) எளிய நாய்க் கூட்டங்கள் வலிய சிங்கத்தினைக் கண்டாற் போன்று அஞ்சி ஓடுவதன்றி நின் முன் எதிர்த்து நிற்றலும் உண்டோ?

கு:—வெள்ளம் என்பது பேரெண். தேய்தல் - சிதைந்து அழிதல். பகைவர் சேனைகள் நூறு யுகங்கள் தொடர்ந்து நின்று போர் செய்தாலும் அரக்கர்களாகிய நமது சேனைகள் சிறிதும் அழியமாட்டா என்பான், 'தேயினும் ஊழி நூறு வேண்டும்' என்றான். அரக்கர் சேனையின் அழியாத் தன்மையினையும் ஆயிர வெள்ளம் என்னும் அதன் அளவினையும் வீடணன் இராமனுக்கு எடுத்துரைக்கும் நிலையில்,

"பேயனே னென்பல பிதற்றிப் பேர்த்தவன்
மாயிரு ஞாலத்து வைத்த மாப்படை
தேயினு நாளெலாந் தேய்க்க வேண்டுவ
தாயிர வெள்ளமென் றறிந்த தாழியாய்"

(இலங்கை கேள்விப். 30) என வரும் பாடல் இங்கு ஒப்புநோக்கத் தக்கதாகும். தேய்தல் - சிதைந்து அழிதல். ஆல்-அசை. சிறுமை - அழிவு; கேடு. நீ உருத்து எழுந்தபோது, குரங்கு, நாயினம் சீயம் கண்டதாம் என நடப்பதல்லால் (நின்) எதிர் நிற்பது உண்டோ என இயையும். குரங்கு, சாதியொருமை. உண்டோ என்புழி ஓகாரம் எதிர்மறை. சீயம் - சிங்கம். உருத்து எழுதல் - வெகுண்டு மேற்செல்லுதல். (4)

இச் செய்யுளின் பின் 52 என்னும் எண்ணுள்ள பிரதியில் பின் வருமாறு இரண்டு மிகைப்பாடல்கள் குறிக்கப்பெற்றுள்ளன.

6942. (a) தானை அம் தலைவன் ஈது
சாற்றலும், தறுகண் வெம்போர்க்
கோன் அழன்று உருத்து,
'வீரம் குன்றிய மனிதரோடு

வானரக் குழுவை யெல்லாம்
வயங்கும் என் கரத்தின் வாளால்
ஊன் அறக் குறைப்பென் நாளை,
ஒருகணப் பொழுதில்' என்றான்.

(b) மன்னவர் மன்னன் கூற
மைந்தனும் வணங்கி 'ஐயா!
என்னுடை அடிமை ஏதும்
பிழைத்ததோ? இறைவ! நீ போய்,
"மன்னிய மனிதரோடும்
குரங்கொடும் மலைவென்" என்றால்
பின்னை என் வீரம் என்னும்?'
என்றனன், பேசலுற்றான்.

6943. வந்தவர் தானை யோடு
மறிந்துமாக் கடலில் வீழ்ந்து
சிந்தின ரிரிந்து போகச்
சேனையும் யானுஞ் சென்று
வெந்தொழில் புரியு மாறு
காணுதி விடையீ கென்னு
விந்திரன் முதுகு கண்ட
விராவணற் கேய்ந்த சொன்னான்.

வந்தவர், தானையோடு மறிந்து மாக் கடலில் வீழ்ந்து சிந்தினர் இரிந்து போகச் சேனையும் யானும் சென்று, வெம் தொழில் புரியும் ஆறு காணுதி; விடை ஈக என்னு, இந்திரன் முதுகு கண்ட இராவணற்கு ஏய்ந்த சொன்னான்.

பொ :—(நம்மொடு பொருதற்கு) வந்தவர்களாகிய பகைவர்கள் (தம்முடைய) சேனையுடனே (புறமுதுகிட்டுத்) திரும்பிப் பெரிய கடலிலே விழுந்து சிதறுண்டவர்களாய் நிலைகெட்டோடி யொழியும்படி சேனையும் (சேனைத் தலைவனாகிய) யானும் சென்று கொடிய போர்த் தொழிலைச் செய்யுந் திறத்தினை (எம் வேந்தர் பெருமானாகிய நீ) காண்பாயாக; (போர்மேற் செல்ல எனக்கு) விடையளிப்பாயாக என்று, இந்திரனைப் புறங்கண்ட (பேராற்றல் வாய்ந்தவனாகிய) இராவணனுக்குப் பொருந்திய சொற்களைக் கூறினான்.

கு :—வந்தவர் - போர் செய்தற்கு வந்த இராம இலக்குவர் முதலியோர். தானை என்றது ஈண்டு வானர சேனையினை. மறிதல் -

திரும்பிச் செல்லுதல். மா - பெருமை; கருமை எனினும் அமையும். சிந்துதல் - சிதறுதல். இரிதல் - ஓடுதல். முதுகு காணுதலாவது, பகைவர்கள் புறங்காட்டி யோடுமாறு பொருது வெற்றியடைதல். இராவணற்கு ஏய்ந்த - (இராவணனுடைய ஆற்றலுக்கும் அவன் மன நினைவுக்கும் ஒத்துப்) பொருந்திய சொற்கள். சேனை காப்பாளன் சொன்னான் என முடிக்க. (5)

மாலியவான் அறிவுரை

6944. மதிநெறி யறிவு சான்ற
மாலிய வானல் வாய்மை
பொதுநெறி நிலைய தாகப்
புணர்த்துதல் புலமை யென்று
விதிநெறி நிலைய தாக
விளம்புகின் றோரு மீண்டுச்
செதுநெறி நிலையி னாரே
யென்பது தெரியச் சொல்லும்.

மதிநெறி அறிவு சான்ற மாலியவான், "நல் வாய்மை பொதுநெறி நிலையது ஆகப் புணர்த்துதல் புலமை' என்று, 'விதி நெறி நிலையது ஆக விளம்புகின்றோரும், மீண்டு செது நெறி நிலையினாரே' என்பது தெரியச் சொல்லும்.

பொ :—(இயல்பாகவே கூர்த்த) நன் மதியும் நல்ல நெறியினை அறியவல்ல நூலறிவும் நிரம்பிய மாலியவான் என்பான், நன்மை தரும் மெய்ம்மையினை (உலகினர் யாவர்க்கும்) ஒத்த பொது நெறியில் நிலைத்து வழங்குவதாக (இராவணனது மனத்திற்) பதியும்படி எடுத்துரைத்தல் அறிவுடைமையா மென்றெண்ணி ஊழின் நெறி (தம் பக்கத்தார்க்கே) என்றும் துணை நிற்பதாகச் சொல்கின்ற வீரர்களும் மீளவும் சிதைந்தழியும் கெடு நெறியில் நிற்பவர்களே என்னும் உண்மை (இராவணனுக்கு) விளங்குமாறு எடுத்துரைப்பானாயினான்.

கு :—மதி - இயற்கையறிவு. அறிவு - நூலறிவு. 'மதி நுட்பம் நூலோடுடையார்க்கு' (திருக்குறள் - 636) எனவரும் திருவள்ளுவர் வாய்மொழி இங்கு ஒப்புநோக்கத் தக்கதாகும். சாலுதல் - நிரம்புதல். மாலியவான் என்பான், இராவணனுக்குத் தாய்வழிப் பாட்டன். பொது நெறி நிலையதாகப் புணர்த்துதலாவது, தன் கூற்றாகக் கூறாமல் உலகத்தார் தம்முட் கூறும் மொழிகளாக அவர்தம் கூற்றில் வைத்து உணர்த்துதல். விதிநெறி - ஊழாகிய நெறிமுறை.

நிலையது ஆக நிகழ்த்துகின்றோர் - (பகைவர் பக்கத்திலன்றித்) தமது பக்கத்திலேயே சார்பாக நிலைத்துள்ளதாக எண்ணிச் செருக்குற்றுத் தமது வலியொன்றையே மிகுத்துப் பேசுவோர். "மதி கெடுந் தகையோர், வந்து நாம் உறை, பதி புகுந்தனர் தம்மைப் படுப்பதோர் விதி கொடுந்த விளைந்ததுதான்" (ஒற்றுக்கேள்வி-53) எனச் சேனைத் தலைவன் பேசிய சொல், விதிநெறி மாற்றார் திறத்தன்றித் தம் திறத்தே சாதகமாக அமைந்துளதெனத் தமது வலியொன்றையே மிகுத்துப் பேசும் நிலையில் அமைந்தமை காணலாம். செதுநெறி நிலையினரே-(அன்னோர், போர் ஏற்பட்டால் மாற்றார் முன் எதிர்த்து நிற்கலாற்றாது) சிதையும் கெடு நெறியில் நிற்பவர்களே. செதுத்தல் - சிதைவுற்றழிதல். "செதுமதியார்" (6 - 40 - 6) எனவும், 'செதுமதித்தக்கன்' (3 - 93 - 5) எனவும் வரும் தேவாரத் தொடர்களில் இச்சொல் இப்பொருளில் வழங்குதல் காணலாம். ஏகாரம், தேற்றம். தெரிய - விளங்க. மாலியவான், சொல்லும் என இயையும். (6)

6945. பூசற்கு முயன்று நம்பாற்
பொருதிரைப் புணரி வேலித்
தேசத்துக் கிறைவ னான
தெசரதன் சிறுவ னாகி
மாசற்ற சோதி வெள்ளத்
துச்சியின் வரம்பிற் றோன்றும்
ஈசற்கு மீசன் வந்தா
னென்பதோர் வார்த்தை யிட்டார்.

"'பூசற்கு முயன்று நம்பால்,
பொரு திரைப் புணரி வேலித்
தேசத்துக்கு இறைவன் ஆன
தெசரதன் சிறுவனாகி,
மாசு அற்ற சோதி வெள்ளத்து
உச்சியின் வரம்பில் தோன்றும்
ஈசற்கும் ஈசன் வந்தான்''
என்பதோர் வார்த்தை இட்டார்.

பொ :—குற்றமற்ற பேரொளி வெள்ளத்தினையுடைய விசும்பின் மேலெல்லையாகிய பரமாகாசத்தில் விளங்குகின்ற தேவாதி தேவனாகிய திருமாலே (அரக்கரினத்தாராகிய) நம்பாற் போர் செய்தலை மேற்கொண்டு, கடலை வேலியாகவுடைய நிலத்துக்குத் தலைவனான

தசரதச் சக்கரவர்த்தியின் மைந்தனாகி வந்துள்ளான் என்ற செய்தியினை(ப் பலரும்) ஏற்றிச் சொல்கின்றார்கள்.

கு:—பூசல் - போர். முயலுதல் - மேற்கொள்ளுதல். புணரி - கடல். 'தசரதன்' என்ற பெயர் மோனை நயங் கருதித் 'தெசரதன்' எனத் திரித்து ஆளப்பெற்றது. சிறுவன் - மகன்; என்றது இராமனை. உச்சி - வான முகடு. வரம்பு என்றது அதன் மேற்பட விளங்கும் பரமாகாசத்தை. ஈசற்கும் ஈசன் — தேவாதி தேவன்; என்றது திருமாலை. "அயர்வறும் அமரர்கள் அதிபதி" (திருவாய்மொழி - 1 - 1 - 1) என வரும் அருளிச் செயல் இங்கு நினைக்கத்தக்கதாகும். வார்த்தை - செய்தி. 'ஆட்கொண்ட வார்த்தை யுரைக்குமன்றே விவ் வகலிடமே" (4. 97-7) என வரும் அப்பர் தேவாரத்தில் இச்சொல் இப்பொருளில் வழங்குதல் காணலாம். 'ஈசற்கும் ஈசன், நம்பாற் பூசற்கு முயன்று, தெசரதன் சிறுவனாகி வந்தான்' என்பதோர் வார்த்தை யிட்டார் என இயைத்துரைக்க. இடுதல் - ஏற்றிக் கூறுதல். 'இட்டனர் ஊரார்' (சிலப் – கனாத் - 48) என்புழி இச்சொல் இப்பொருளதாதல் அறிக. (7)

6946. அன்னவற் கிளவ றன்னை
யருமறை பரமென் றோதும்
நன்னிலை நின்று தீர்ந்து
நவையிலா வுயிர்க டோறுந்
தொன்னிலை பிரிந்தா னென்னப்
பலவகை நின்ற தூயோ
னின்னணை யென்ன யாரு
மியம்புவ ரேதி யாதோ.

அன்னவற்கு இளவல் தன்னை,
" அருமறை, 'பரம்' என்று ஓதும்
நல்நிலை நின்று, தீர்ந்து, நவை
இலா உயிர்கள் தோறும்
தொல்நிலை பிரிந்தான் என்னப்
பலவகை நின்ற தூயோன்
இன் அணை " என்ன யாரும்
இயம்புவர்; ஏது யாதோ?

பொ:—அந்த இராமனுக்குத் தம்பியாகிய இலக்குவனை, (யாவராலும் ஓதுதற்கு) அரிய வேதம் பரம் என்று சிறப்பித்துப் போற்றும்

நல்ல (பரத்துவ) நிலையில் நிலைத்து நின்று (அதனின்றும்) நீங்கிக் குற்றமற்ற உயிர்கள் தோறும், தன் பழைய (இறைமைத் தன்மை யாகிய) நிலையினின்றும் தவிர்ந்தான் என்னுமாறு பலவகைப் பிறப் புக்களிலும் (பிறந்து) நின்ற பரிசுத்தனாகிய திருமாலது இனிய படுக்கையாய அநந்தன் என்று யாவரும் கூறுவர். (அன்னோர் அவ் வாறு கூறுதற்குரிய) காரணம் யாதோ?

கு :—அன்னவற்கு – திருமாலின் அவதாரம் எனப் பேசப்படும் அவ் இராமனுக்கு. இளவல்-தம்பி; என்றது இலக்குவனை. இளவல் தன்னை, 'தூயோன் இன் அணை' என்ன யாரும் இயம்புவர் என இயைக்க. அருமறை பரம் என்று ஓதும் நன்னிலை என்றது, இறை வனது பரத்துவ நிலையை. நிற்றல் - நிலைத்திருத்தல். தீர்தல் – விட்டு நீங்குதல். நவை-குற்றம். உயிர்கள்தோறும் நின்ற தூயோன், தொன்னிலை பிரிந்தான் என்னப் பலவகை நின்ற தூயோன் எனத் தனித்தனி இயைத்துப் பொருள் கொள்க. உயிர்கள்தோறும் நிற்றல், அந்தரியாமித்துவ நிலை. பலவகை நிற்றல், பலவகைப் பிறப்புக்களையும் தான் மேற்கொண்டு நிற்றலாகிய அவதார நிலை. திருமாலாகிய இறைவன் தனது பரத்துவ நிலையை அறவே விட்டு விலகினான் எனப் பலரும் கருதுமாறு அந்தந்தப் பிறவியிலுள்ள உயிர்களைப் போலவே நடிக்கின்றானாயினும் அப்பிறப்பினவாகிய உயிர்களுக்குள்ள வினை மாசுகள் அம் முதல்வனைச் சாராவாகலின் அவன் என்றும் தூய்மையுடையவனாகவே திகழ்கின்றான் என்பார், 'தொல் நிலை பிரிந்தான் என்னப் பலவகை நின்ற தூயோன்' என்றார். தூயோன் என்றது திருமாலை. அம்முதல்வன் இனிது அறிதுயில் கொள்ளுதற்கு ஏற்ற மென்மையுடைய படுக்கையாக விளங்கும் ஆதிசேடனாகிய அனந்தனே இப்பொழுது இராமன் தம்பியாகிய இலக்குவனாக அவதரித்தானென்று பலரும் கூறுகின் றார்கள் எனப் பிறர் கூற்றாக வைத்துக் கூறிய மாலியவான், இராவ ணன் தன் சொற் கேட்டுத் தன்னை வெகுளாதவாறு 'ஏது யாதோ' என அக்கொள்கையில் தனக்குத் துணிவு பிறவாமை தோன்ற வினவிய திறம், அவனது சொல் வன்மையினை இனிது புலப்படுத் துவதாகும். (8)

6947. அவ்வவர்க் கமைந்த வில்லுங்
குலவரை யவற்றி னன்ற
வெவ்வலி வேறு வாங்கி
விரிஞ்சனே விதித்த மேனாள்

செவ்வழி நாணுஞ் சேடன்
றெரிகணை யாகச் செய்த
கவ்வயில் கால நேமிக்
கணக்கையுங் கடந்த தென்பார்.

“ ‘அவ்வவர்க்கு அமைந்த வில்லும்,
குலவரை அவற்றின் ஆன்ற
வெவ் வலி வேறு வாங்கி,
விரிஞ்சனே விதித்த, மேல் நாள்;
செவ் வழி நாணும், சேடன்;
தெரிகணை ஆகச் செய்த
கவ்வு அயில், கால நேமிக்
கணக்கையும் கடந்தது” என்பார்.

பொ :—(இராம இலக்குவராகிய) அவரவர்க்குப் பொருந்திய விற் படையும் குலமலைகளில் அமைந்த கொடிய வன்மையை வேறு பிரித் தெடுத்து முற்காலத்தில் நான்முகனே செய்தமைத்தன. (அவ் வில்லின்கண்ணே) நேரிய நெறியிற் கட்டப்பட்டநாண், ஆதிசேடனை ஒத்தது. ஆராய்ந்து செலுத்தும் அம்பாகச் செய்யப்பட்ட (மாற்றா ருயிரைக்) கவர்தற்குரிய கூரிய முனை, காலச் சக்கரத்தின் ஆற்றலின் அளவையும் விஞ்சியதாகும்.

கு :—அவ்வவர் என்றது, இராம இலக்குவராகிய அவர்கள் இருவரையும். குலவரை-எட்டுப் பெருமலைகள். ஆன்ற-அமைந்த. வேறு வாங்குதல் - தனியே பிரித்தெடுத்தல். விரிஞ்சன் - பிரமன். விரிஞ்சனே என்புழி ஏகாரம் சிறப்புணர்த்தி நின்றது. விதித்தல் — படைத்தல். அரன், அரி என்னும் இருவரது ஆற்றல் விளங்கப் பிரமனாற் செய்யப்பட்டுத் திருமால் கையில் இருந்த வில்லே பின்னர் அகத்திய முனிவர் மூலமாக இராமன் பக்கல் வந்தடைந்ததென்பது முன் ஆரணிய காண்டத்திற் கூறப்பெற்றது. அயில் — அம்பின் முனை. காலநேமி — காலத்தை நடத்துஞ் சக்கரம்; அது தடை யின்றி யாண்டும் ஊடுருவிச் செல்லுமாறு போன்று அவர்தம் அம்பும் மாற்றார்மேல் தடையின்றி ஊடுருவிச் செல்லவல்லது என்பான், ‘தெரிகணையாகச் செய்த கவ்வு அயில் கால நேமிக் கணக்கையும் கடந்தது’ என்றான். இனி, காலநேமி என்பது, எதிர்ந்தார்க்கு இறுதிக்காலத்தை விளைக்கவல்ல திருமாலின் சக்கரப்படையாகிய சுதரிசனம் எனினும் பொருந்தும். கணக்கு - அளவு; என்றது ஆற் றலின் அளவினை. கடத்தல் — மேற்படுதல்.

52 என்னும் எண்ணுள்ள பிரதியில் பின்வருமாறு ஒரு மிகைப் பாடல் குறிக்கப் பெற்றுளது :

"இந்திரன் செம்மல் தம்பி, யாவரும் எவரும் போற்றும்
சந்திரன் பதத்து முன்னோன்' என்றனர்; 'சமரை வேட்டு
வந்தனர்; நமது கொற்றம் வஞ்சகம் கடப்பதென்னும்
சுந்தரன் அவனும் இன்னோன்' என்பதும் தெரியச்சொன்னார்.

இச்செய்யுள், 63 என்னும் எண்ணுள்ள பிரதியில் 'வாலிமாமகன்' என்னும் அடுத்த செய்யுளின் பின் அமைந்துளது. (9)

6948. வாலிமா மகன்வந் தானை
வானவர்க் கிறைவ னென்றார்
நீலனை யுலக முண்ணு
நெருப்பினுக் கரச னென்றார்
காலனை யொக்குந் தூதன்
காற்றெனுங் கடவு ளென்றார்
மேலுமொன் றுரைத்தா ரன்னோன்
விரிஞ்சனா மினிமே லென்றார்.

" 'வாலிமா மகன் வந்தானை,
" வானவர்க்கு இறைவன் " என்றார்;
நீலனை,' உலகம் உண்ணும்
நெருப்பினுக்கு அரசன் " என்றார்;
காலனை ஒக்கும் தூதன்
" காற்று எனும் கடவுள் " என்றார்;
மேலும் ஒன்று உரைத்தார்: " அன்னோன்
விரிஞ்சன் ஆம் இனிமேல் " என்றார்.

பொ :—வாலியின் பெருமை மிக்க மைந்தனாகத் தோன்றிய அங்கதனைத் தேவர்கட்கு அரசனாகிய இந்திரன் என்றார்கள். நீலன் என்பவனை (ஊழி யிறுதியில்) உலகத்தை யுண்ணவல்ல அக்கினி தேவன் என்றார்கள். (எதிர்ப்பட்டார் உயிரைக் கவர்ந்து கொள்ளுந் திறத்தில்) கூற்றுவனையொத்த ஆற்றல் மிக்க தூதனாகிய அநுமனை வாயுதேவன் என்று கூறினார்கள். (அவனைக் குறித்து) மேலும் சொன்னார்கள்: அவன் இந்தப் பிறவியின் பின்னே பிரமதேவன் ஆவான் என்றார்கள்.

கு :—வானவர்க்கு இறைவன் - தேவர்கட்கு அரசன்; இந்திரன். நெருப்பினுக்கு அரசன் - அக்கினிதேவன். காலன் - இயமன். தூதன் - இராம தூதனாகிய அநுமன். காற்றெனுங் கடவுள் - வாயு தேவன். அங்கதன், நீலன், அநுமன் என்போர் முறையே இந்தி ரன், அக்கினி, வாயு ஆகிய தேவர்களின் அமிசமாகத் தோன்றியவர் களென்பது பாலகாண்டம் திருவவதாரப் படலத்தில் விரித்துரைக் கப்பட்டது. இலங்கையில் அநுமன் செய்த வீரச் செயல்களை வீடணன் வாயிலாகக் கேட்ட இராமன், அநுமனைப் புகழ்ந்துரைத்து அவனுக்குப் பிரம பதவியை உரிமை செய்தளித்தனன் என்பது,

"என்ன தாக்கிய வலியொடவ் விராவணன் வலியும்
உன்ன தாக்கினை பாக்கிய முருக்கொண்ட தொப்பாய்
முன்ன தாக்கிய மூவுலகாக்கிய முதலோன்
பின்ன தாக்கிய பதநினக் களித்தனென் பெற்றாய்"
(இலங்கை கேள்விப் - 73)

என இராமன் அநுமனை நோக்கிக் கூறும் கூற்றாக அமைந்த செய்யு ளாற் புலனும். (10)

694அ. அப்பத மவனுக் கீந்தா
னரக்கர்வே ரறுப்ப தாக
இப்பதி யெய்தி னவ்
விராமனென் றெவருஞ் சொன்னார்
ஒப்பினு லுரைக்கின் றாரோ
வுண்மையே யுணர்த்தி னாரோ
செப்பியென் குரங்காய் வந்தார்
தனித்தனி தேவ ரென்றார்.

"' அப்பதம் அவனுக்கு ஈந்தான்,
அரக்கர் வேர் அறுப்பதாக
இப்பதி எய்தினன் அவ் இராமன்"
என்று எவரும் சொன்னார்;
ஒப்பினால் உரைக்கின்றாரோ?
உண்மையே உணர்த்தினாரோ?
செப்பி என்? "குரங்காய் வந்தார்
தனித்தனி தேவர்" என்றார்.

பொ:—அந்தப் பிரம பதத்தை அவனுக்குக் கொடுத்த அவ் இராமன், அரக்கர்களை வேரோடும் ஒழிப்பதாக இந்த நகரத்தை அடைந்துள்ளான் என்று பலரும் சொன்னார்கள். (அவர்கள் தேவர்களுக்கும் இராம இலக்குவர் முதலியோர்க்கும் இடையேயமைந்த) ஒத்த தன்மைகளை யெண்ணி (இங்ஙனம் உபசாரமாக)ப் புனைந்துரைக்கின்றார்களோ? அல்லது (அவர்களைத் தேவர்களென்றே) உண்மையாக உணர்ந்து கூறுகின்றார்களோ? தேவர்கள் பலரும் தனித்தனியே வானரர்களாகி வந்துள்ளார்கள் என்று கூறுகின்றார்கள். (இதுபற்றி விரித்துச்) சொல்லி ஆகும் பயன் யாது?

கு :—அப்பதம் - மேலே குறித்த பிரம பதவி. அவன் என்றது அநுமனை. ஒப்பினால் உரைத்தல் - இருதிறப் பொருள்களுக்குமுள்ள வண்ணம், வடிவு, தொழில், பயன் ஆகிய ஒப்புமைத் தன்மைகளை யெண்ணி ஒன்றை மற்றொன்றின் தன்மையுடையதாக உபசரித்துக் கூறுதல். உண்மையே யுரைத்தல் - ஒரு பொருளின் புறத்தோற்றம் முதலியவற்றைக் கண்டு அவ்வளவில் அதனியல்பு அதுவெனக் கொண்டமைந்து விடாமல் அதனகத்தேயுள்ள மெய்யாய பொருள் இதுவெனக் கண்டு உணர்ந்து கூறுதல். உலகத்தார் பலரும் கூறும் இம்மொழிகள் உபசாரமாயினும் சரி, உண்மையேயாயினும் சரி, நம்மை எதிர்த்து வந்த இவ் வானர வீரர்கள் நம்மாற் சாமானியர் எனக் கருதி ஒதுக்கத்தக்க அத்துணை எளியரல்லராதலின் இதுபற்றிப் பரக்கப் பேசிக்கொண்டு காலத்தைக் கழிப்பதற்கு இது சமயம் அல்ல என்பான், 'செப்பி என்?' என்றான். (11)

6950. ஆயது தெரிந்தோர் தங்க
ளச்சமோ வறிவோ யார்க்குஞ்
சேயவ ளெளிய ளென்னுச்
சிந்தையி னிகழ லம்மா
தூயவ ளமிழ்தி னோடுந்
தோன்றினா ளென்றுந் தோன்றாத்
தாயவ ளுலகுக் கெல்லா
மென்பதுஞ் சாற்று கின்றார்.

'ஆயது தெரிந்தோர், தங்கள்
அச்சமோ ? அறிவோ ?'—யார்க்கும்
சேயவள், 'எளியள்' என்னு,
சிந்தையின் இகழல் அம்மா !—

"தூயவள் அமிழ்தி ஞேடும்
தோன்றினுள், என்றும் தோன்ருத்
தாய் அவள், உலகுக்கு எல்லாம்"
என்பதும், சாற்றுகின்ருர்.

பொ:—(மேற்குறித்தவண்ணம் இராம இலக்குவர் முதலியோரைப் பற்றிய) அச்செய்தியை ஆராய்ந்தறிந்தவர்கள் (அவர்களைக் குறித்துத்) தாம் கொண்டுள்ள அச்சத்தாலோ (அன்றிப் பின் விளைவறியும்) தம் அறிவின் திறத்தாலோ "யாவராலும் அணுகுதற்கு அரியளாகிய சீதையை அணுகுதற்கு எளியள் என்று மனத்தாலும் இகழற்க. தூய்மையே யுருவாகிய அவள் (திருப்பாற்கடலில்) அமிழ்தோடு உடன்பிறந்த திருமகளாவாள். உலக உயிர்களுக்கெல்லாம் எக்காலத்தும் கண்ணுக்குப் புலப்படாத தாயாய் நின்று அருள் புரிபவள் அவளே" என்ற செய்தியையும் உடன் கூறுகின்ருர்கள்.

கு:—ஆயது தெரிந்தோர் என்றது, மேற்குறித்தவாறு இராம இலக்குவர் முதலியோரது பிறப்பின் பெற்றியினை ஆராய்ந்தறிந்த அறிஞர்களை. ஆயது தெரிந்தோர், என்பதும் சாற்றுகின்ருர் என இயையும். அவர்கள் சாற்றியது, "யார்க்கும் சேயவள் எளியள் என்னுச் சிந்தையின் இகழல்; தூயவள் அமிழ்தினேடுந் தோன்றினுள்; உலகுக்கு எல்லாம் என்றும் தோன்ருத் தாய் அவள்" என்பதாகும். என்பதும் என்புழி உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. கேட்பித்தற் பொருளில் வரும் அம்ம என்னும் அசைச்சொல் அம்மா என நீண்டது. யார்க்கும் சேயவள்-யாவராலும் அணுகவொண்ணுத சேய்மை நிலையினள். தூரம் என்னும் பொருளில் வழங்கும் சேய்மை என்னும் சொல் நெருங்குதற்கு அருமை என்ற பொருளைத் தந்து நின்றது. இனி, சேயவள் என்பதற்குச் 'செம்மை நிறமுடையவள்' எனப் பொருளுரைப்பின் யார்க்கும் என்பதனேடு இயையாமையறிக. 'தோன்ருத் தாயவள்' என்ற தொடர்க்கு, 'தாய் வயிற்றினின்றும் தோன்ருதவள் (அயோநிஜை) எனப் பொருளுரைத்தலும் உண்டு. ஆயது தெரிந்தோர் இங்ஙனம் சீதையைப் பற்றிக் கூறுதற்கு அன்னேர் இராம இலக்குவரைக் குறித்துத் தாம் கொண்ட அச்சமோ அல்லது இனி அவர்களால் நேரவிருக்கும் விளைவினைத் தாம் முன்னரே உய்த்துணர்ந்தறிந்த அறிவோ காரணமாக இருத்தல் வேண்டும் என்பான், 'தங்கள் அச்சமோ அறிவோ......சாற்றுகின்ருர்' என்ருன். (12)

6951. கானிடை வந்த தேயும்
வானவர் கடாவ வேயாம்
மீனுடை யகழி வேலை
விலங்கன்மே லிலங்கை வேந்தன்
தானுடை வரத்தை யெண்ணித்
தருமத்தின் றலைவர் தாமே
மானுட வடிவங் கொண்டா
ரென்பதோர் வார்த்தை யிட்டார்.

"'கானிடை வந்ததேயும்
வானவர் கடாவவேயாம்;
மீனுடை அகழி வேலை விலங்கல்
மேல் இலங்கை வேந்தன்
தானுடை வரத்தை எண்ணி,
தருமத்தின் தலைவர் தாமே
மானுட வடிவம் கொண்டார்'"
என்பது ஓர் வார்த்தை இட்டார்.

பொ:—(இராம இலக்குவராகிய அவர்கள்) காட்டிற்கு வந்ததும் வானோராகிய தேவர்கள் தூண்டிச் செலுத்தினமையாலேயாம். மீன்களையுடைய கடலினை அகழியாகக் கொண்ட (திரிகூட) மலையின்மேல் அமைந்த இலங்கை மன்னனாகிய இராவணன் (தவத்தாற்) பெற்றுடைய வரத்தின் வன்மையினை யெண்ணி அறத்தின் மூர்த்தியாகிய அவ் இறைவரே (இவ்வாறு இராமனாக) மக்கள் வடிவினை மேற்கொண்டு வந்துள்ளார் என்பதொரு செய்தியையும் (இங்குக்) கொணர்ந்துரைத்தார்கள்.

கு:—கடாவுதல் - செலுத்துதல். இராமன் காட்டினை அடைந்ததற்குக் கைகேசியின் வரம் நேரே காரணமாகத் தோன்றினும், இராமனுக்குச் சிற்றன்னையாகிய அவள் இவ்வாறு இரக்கம் சிறிதுமின்றி அவனைக் காட்டிற்கு அனுப்ப எண்ணினமைக்கு இராவணன் முதலிய அரக்கர்கள் செய்த பாவமும் அரக்கரல்லாத தேவர், முனிவர் முதலியோர் இயற்றிய புண்ணியமுமே உண்மையான காரணங்களாம் என்பது, 'அரக்கர் பாவமும் அல்லவரியற்றிய அறமும், துரக்க நல்லருள் துறந்தனள் தூய்மொழி மடமான்' (கம்பர் - 1573) எனவும், காட்டினையடைந்து இராமனைத் தொழுது நாடாள வருமாறு வற்புறுத்தி யழைத்த பரதனை நோக்கி, 'ஏத்தரும் பெருங்குணத்தி ராமனிவ்வழி, போத்தரும் தாதை சொற்புரக்கும் பூட்சியான், ஆத்தவாண் டேழிரே டேழுமந்நிலம், காத்தலுன் கடனிவை கடமை' (கம்பர் -

2594) எனத் தேவர்கள் வற்புறுத்தினர்களெனவும் ஆசிரியர் கூறுதலாற் புலனும். அரக்கர் வேந்தனாகிய நீ வருந்திச் செய்த பெருந் தவத்தாற் பகைவர்களாற் பொருதழிக்கவொண்ணாத பெரு வரங்களைப் பெற்றுடையாய் ஆதலால், நின்னைப் பொருதழித்தல் பிறரால் இயலாதென்றெண்ணி அறந்தலை நிறுத்தும் தலைவராகிய இறைவரே இங்ஙனம் மக்கள் வடிவுடன் இராமன் எனத் திருவவதாரஞ் செய்து இங்கு வந்துள்ளார் என்று அயலவர் பலரும் கூறுகின்றனர் என்பான், 'இலங்கை வேந்தன் தானுடை வரத்தை யெண்ணித் தருமத்தின் தலைவர் தாமே, மானுட வடிவங் கொண்டார் என்பதோர் வார்த்தை யிட்டார்' என்றான். இடுதல் - தந்து உரைத்தல். (13)

6952 ஆயிர முற்பா தங்க
ளீங்குள வடுத்த வென்றார்
தாயினு முயிர்க்கு நல்லா
ளிருந்துழி யறியத் தக்கோன்
ஏயின தூத னெற்றப்
பற்றுவிட் டிலங்கைத் தெய்வம்
போயின தென்றுஞ் சொன்னார்
புகுந்தது போரு மென்றார்.

" ஆயிரம் உற்பாதங்கள் ஈங்கு
உள அடுத்த" என்றார்;
" தாயினும் உயிர்க்கு நல்லாள்
இருந்துழி அறிய, தக்கோன்
ஏயின தூதன் எற்ற, பற்று
விட்டு, இலங்கைத் தெய்வம்
போயினது" என்றும் சொன்னார்;
" புகுந்தது போரும்" என்றார்.

பொ:—ஆயிரக்கணக்கினவாகிய தீய நிமித்தங்கள் இவ்விலங்கை நகரின்கண்ணே வந்து தோன்றியுள்ளன என்று சொல்கின்றார்கள், உயிர்களுக்கு (ஈன்றெடுத்த) தாயைக் காட்டினும் அருள் சுரந்து நலம் புரியும் பெண்ணினல்லாளாகிய சீதாபிராட்டி உறையும் இடம் இதுவெனக் கண்டறிதற்பொருட்டுப் பெருந்தகையாகிய இராமபிரானால் அனுப்பப்பெற்ற தூதனாகிய அநுமன் தாக்கி எறிந்தமையால், இலங்கை நகரத்தின் காவல் தெய்வம் இந்நகர் காவற்றொடர்பினை

அறவே விட்டு நீங்கி ஓடிப்போய் விட்டதென்றும் சொல்கிறார்கள். (இந்நகர்க்குள்) போரும் புகுந்து விட்டது என்கிறார்கள்.

கு :—ஆயிரம் – பல. உற்பாதம் - பின்னே விளையவிருக்கும் தீமையினை முன்னமே அறிவிக்கும் அடையாளமாகிய தீய நிமித்தம். உயிர்க்குத் தாயினும் நல்லாள் என இயையும். உயிர்க்குத் தாயினும் நல்லாள் என்றது மன்னுயிர்களுக்குப் பெற்ற தாயினும் பெருநலம் புரியும் திருமகளின் அமிசமாகிய சீதாபிராட்டியை. இருந்த+உழி= இருந்துழி எனப் பெயரெச்சத்து அகரம் தொக்கது. உழி - இடம். தக்கோன் என்றது, நற்குணங்கட் கெல்லாம் உறைவிடமாகிய இராமனை. அவனால் ஏவப்பட்ட தூதன், அநுமான். எற்றுதல் - மோதித் தாக்குதல். இலங்கைத் தெய்வம் – இலங்கை மாநகரின் காவல் தெய்வமாகிய இலங்காதேவி. (14)

6953. அம்பினுக் கிலக்க மாவா
ரரசொடு மரக்க ரென்ன
நம்பரத் தடங்கு மெய்ய
னாவினிற் பொய்யி லாதான்
உம்பர்மந் திரிக்கு மேலா
வொருமுழ முயர்ந்த ஞானத்
தம்பியே சாற்றிப் போனா
னென்பதுஞ் சமையச் சொன்னார்.

"'அம்பினுக்கு இலக்கம் ஆவார்
அரசொடும் அரக்கர்' என்ன,
நம் பரத்து அடங்கும் மெய்யன்,
நாவினில் பொய் இலாதான்,
உம்பர் மந்திரிக்கும் மேலா ஒரு
முழம் உயர்ந்த ஞானத்
தம்பியே சாற்றிப் போனான்"
என்பதும் சமையச் சொன்னார்.

பொ :—நமது சார்பிலே தோன்றிய மெய்ம்மையாளனும் நாவின் கண் பொய்ம்மை இல்லாதவனும், தேவர்கட்கு அமைச்சராகிய பிருகற்பதிக்கும் மேலாக ஒரு முழம் உயர்ந்துள்ள பேரறிவினை யுடைய தம்பியும் ஆகிய வீடணனே, 'அரக்கர்கள் தம் மன்னனாகிய இராவணனோடும் (இராம இலக்குவரது) அம்புக்கு இலக்காகி

யழிவர்' என்று சொல்லிச் சென்ருன் என்ற செய்தியையும் பொருந்தச் சொன்ஞர்கள்.

கு :—'அரக்கர் அரசொடும் அம்பினுக்கு இலக்கம் ஆவர்' என்ன, 'தம்பியே சாற்றிப் போஞன்' என்பதும் சமையச் சொன்ஞர் என இயையும். இலக்கம் - இலக்கு ; குறி. நம்பரத்து அடங்கும் மெய்யன்- அரக்கர்களாகிய நமது சார்பில் தோன்றியவன். பரம் - சார்பு. உம்பர் - தேவர். தேவர்க்கு மந்திரியாவான் பிருகற்பதி. பிருகற் பதிக்கும் மேலாக ஞானத்தால் மிக்கு உயர்ந்தவன் இராவண னுக்குத் தம்பியாகிய வீடணன் என்பார், 'உம்பர் மந்திரிக்கு மேலா ஒரு முழம் உயர்ந்த ஞானத் தம்பி' எனச் சிறப்பித்தார். முழம் என் பது நீட்டலளவை. ஞானம் என்பது நீட்டியளக்கத்தக்க உருவப் பொருளன்ருயினும் பொது மக்கள் அதன் மிகுதியைப் புலப்படுத்தும் நிலையிற் கூறும் கூற்ருக ஒரு முழம் உயர்ந்த ஞானம் என்ருர். (15)

6954. ஈதெலா முணர்ந்தே ஞயு
மென்குல மிறுதி யுற்ற
தாதியி னிவஞ லென்று
முன்றன்மே லன்பி ஞலும்
வேதனை நெஞ்சி னெய்த
வெம்பியான் விளைவ சொன்னேன்
சீதையை விடுதி யாயிற்
றீருமித் தீமை யென்ருன்.

'ஈது எலாம் உணர்ந்தேஞயும்,
என்குலம் இறுதி உற்றது
ஆதியின் இவஞல் என்றும்,
உன்தன் மேல் அன்பிஞலும்,
வேதனை நெஞ்சின் எய்த, வெம்பி,
யான் விளைவ சொன்னேன்,
சீதையை விடுதி ஆயின்,
தீரும் இத்தீமை' என்ருன்.

பொ :—(பகைவரைப் பற்றிய) இச்செய்தியனைத்தையும் யான் உள்ளவாறு கேட்டு உணர்ந்தேன் ஆதலாலும், முற்காலத்தில் என் னுடைய அரக்கர்குலம் கெட்டொழிந்தது (திருமால் ஆகிய) இவஞ லேயே என்று கருதியும், (என் குலத் தோன்றலாகிய) உன்மேல் (யான் கொண்டுள்ள) அன்பு காரணமாகவும் என் நெஞ்சிலே (நின்

னைப்பற்றிய) வேதனை தோன்றி வருத்தினமையால் (மனம்) வெதும்பி (இனி) நிகழ விருப்பதனை எடுத்துக் கூறினேன். சீதையை விட்டு விடுவாயானால் (இனி உனக்கு விளைய விருக்கும்) இத்தீமையும் நீங்கி விடும் எனக் கூறி முடித்தான் (மாலியவான்).

கு:—ஈது - பகைவரைக் குறித்த இச்செய்தி. ஆதியில் என் குலம் இறுதியுற்றது இவனால் எனவும், நெஞ்சில் வேதனை எய்த எனவும் இயைத்துரைக்க. ஆதியில் - முற்காலத்தில். என் குலம் - மாலியவான் என்னும் யான் பிறந்த அரக்கர்குலம். இறுதியுறுதல் - முடிவடைதல். இவன் என்றது இராமனாக அவதரித்த திருமாலை. மாலியவான்குலம் திருமாலால் சிதைவுற்றழிந்த செய்தியாவது :— ஹேதி என்ற அரக்கன் மகன் வித்யுத்கேசன். அவன் சாலகடங்கடை என்பவளை மணந்து சுகேசனைப் பெற்றான். சுகேசன் தேவதியை மணந்து மாலியவான், சுமாலி, மாலி என்னும் புதல்வரைப் பெற்றான். அவ்வரக்கர் மூவரும் பிரமனை நோக்கித் தவஞ் செய்து சிறந்த வரங்களைப் பெற்றுத் தென்கடல் நடுவே விசுவகர்மாவால் நிருமித்துக் கொடுக்கப்பெற்ற இலங்கையினை இருப்பிடமாகக் கொண்டு அரக்கர் குலம் பெருக வளமுற்ற வாழ்க்கையில் வாழ்ந்தனர். செல்வத்தாலும் வன்மையாலும் செருக்குற்ற அவ்வரக்கர்கள் பல விடங்களிலுந் திரிந்து தேவர் முதலிய யாவரையும் துன்புறுத்து வாராயினர். அவர்களது துன்பத்திற்கு ஆற்றாத தேவர் முதலியோர் தம்மைக் காத்தருளுமாறு திருமாலைச் சரண்புகத் திருமால் அரக்கர்களைப் பொருது மாலியைக் கொன்றாராக, அவனுடைய தமையன்மாராகிய மாலியவான் சுமாலி இருவரும் தப்பியோடிப் பாதாளத்திற் குடிபுகுந்தனர். பிற்றை நாளில் அரக்கர் குலத்திற் பிறந்த இராவணன், தவத்தால் குபேரனுக்குரிய நகரத்தை வென்று இலங்கையில் தனது அரசினை நிறுவியபோது, அரக்கரிற் பழையோராகிய மாலியவான், சுமாலி முதலிய அனைவரும் இலங்கையில் மீண்டும் குடிபுகுந்தனர் என்பதாம். (16)

மாலியவான் மொழிகளை இராவணன் இகழ்ந்துரைத்தல்

6955. மற்றெலா நிற்க வந்த
மனிதர்வா னரங்கள் வானில்
இற்றைநா ளளவு நின்ற
விமையவ ரென்னுந் தன்மை

சொற்றவா றன்றி யேயுந்
தோற்றிநீ யென்றுஞ் சொன்னாய்
கற்றவா நன்று போவென்
றினையன கழற லுற்றான்.

'மற்று எலாம் நிற்க, அந்த
மனிதர் வானரங்கள், வானில்
இற்றை நாள் அளவும் நின்ற
இமையவர் என்னும் தன்மை
சொற்றவாறு அன்றியேயும்,
"தோற்றி நீ" என்றும் சொன்னாய்
கற்றவா நன்று போ' என்று,
இனையன கழறலுற்றான்.

பொ :—(நீ சொல்லியவற்றுள்) மற்றைய செய்திகளெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். (இப்பொழுது) வந்துள்ள மனிதரும் குரங்குகளும் விண்ணுலகத்தில் இந்நாளளவும் (வாழ்ந்திருந்தும் எனக்கு அஞ்சி ஒடுங்கி) நின்ற தேவர்களேயாவர் என (மாறுபட)க் கூறிய தன்றியும் (அரக்கர் வேந்தனாகிய என்னை நோக்கி) 'நீ (அன்னோர்க்குத்) தோல்வியுறுவாய்' என்றும் கூறினாய். (நீ அறிவு நூல்களைக்) கற்றுணர்ந்த முறை மிகவும் அழகாகவுள்ளது போ' என்று (இராவணன் மாலியவானை நோக்கிப் பின்வரும்) இம்மொழிகளையும் கூறுவானாயினான்.

கு :—தத்தமக்குரிய அறிவு திரு ஆற்றல்களோடு வானுலகில் இந்நாள்வரை இறவாமல் வாழ்ந்திருந்தும் எனக்கு அஞ்சி ஒடுங்கி நின்ற தேவர்கள் இராம இலக்குவர்களாகவும் ஏனை வானரர்களாகவும் வலி குறைந்த இழிந்த யாக்கையினராய் வந்து பிறந்து என்னை வெற்றி கொள்ளும் நிலையிலும் இங்கு வந்துள்ளார்கள் என நீ கூறிய இம்மொழி உலக நூல்களைக் கற்றுணர்ந்தோர் கூறும் அறிவொடுபட்ட மொழிகளாக அமையவில்லையே என இராவணன் மாலியவானை இகழ்ந்துரைத்தனன் என்பதாம். தோற்றி-தோல்வியெய்துவாய். 'நன்று' என்பது இகழ்ச்சிப் பொருள்பட வந்த குறிப்பு மொழி. இனையன என்றது, பின்வரும் ஐந்து செய்யுட்களிலும் இராவணன் தன்னுடைய பேராற்றல் முதலியவற்றை வியந்து பேசுவனவாக அமைந்த மொழிகளை. (17)

6956. பேதைமா னிடவ ரோடு
குரங்கல பிறவே யாக
பூதல வரைப்பி னுகர்
புரத்தினப் புறத்த தாக
காதுவெஞ் செருவேட் டென்னைக்
காந்தினர் கலந்த போதுஞ்
சீதைதன் றிறத்தி னுயி
னமர்த்தொழி றிரம்பு வேனே.

'பேதை மானிடவரோடு
குரங்கு அல, பிறவே ஆக,
பூதல வரைப்பின் நாகர்
புரத்தின் அப்புறத்தது ஆக,
காது வெஞ்செரு வேட்டு, என்னைக்
காந்தினர் கலந்தபோதும்,
சீதைதன் திறத்தின் ஆயின்,
அமர்த் தொழில் திறம்புவேனே ?

பொ :—பேதையராகிய மனிதர்களுடனே குரங்குகள் மட்டுமல்ல பிற (கொடிய) விலங்குகளாகட்டும் நிலவெல்லையினும் நாகருலகத்தினும் (இவற்றுக்கு) அப்பாற்பட்ட பிறவிடங்களிலாகட்டும் தாக்கிப் பொருதற்குரிய வெவ்விய போரினை விரும்பி என்னை உருத்துச் சினந்தவர்களாய் நெருங்கியபோதும் (அவர்கள் செய்யும் போர்) சீதையின் பொருட்டாயின் அப்போர்த் தொழிலிற் பின்னடைவேனே ?

கு :—'எனது பேராற்றலை யுளங்கொளாது இகல்மேற்கொண்டு வந்த இராம இலக்குவராகிய மனிதர்கள் என்னால் தமக்கு நேரும் இறுதியை யுணராத பேதையர் என்பான் 'பேதை மானுடவர்' என்றான். நிலவுலகம், நாகருலகம். அப்புறத்ததாகிய வானுலகம் ஆகிய மூன்றுலகங்களில் வாழ்வாரும் என்னுடன் போர் செய்தலை விரும்பி என்னை நெருங்கிப் போர்செய்தனராயினும், அவரது போரின் நோக்கம் பிறிதொன்றாயிருப்பின் ஒருகால் எனது போர் நிகழ்ச்சியை விட்டுக் கொடுத்தாலும் கொடுப்பேன் ; அவரது போர் முயற்சி என்னிடமிருந்து சீதையை மீட்டுக் கொள்வதாயிருக்குமாயின் அதில் யான் ஒரு பொழுதும் விட்டுக்கொடுத்துப் பின்வாங்க மாட்டேன்' என இராவணன் சீதையைத் திருப்பிக் கொடாமையில் தனக்குள்ள உறுதிப்பாட்டினைப் புலப்படுத்தினான் என்பதாம். திறம்புதல் - பின்னடைதல். இனி, 'சீதை தன் திறத்தன்றாயின் அமர்த் தொழில் திறம்புவேனே' எனப் பாடங் கொண்டு, ("மூவுலகத்

தோரும் போர் மேற்கொண்டு வெகுண்டு என்னை நெருங்கிய நிலையிலும் (அவர்கள் போர் மேற்கொண்டு வந்ததன் நோக்கம்) சீதையைக் குறித்தன்றிப் பிறிதொன்றாயிருக்குமானால் (அவரொடு நிகழும்) போர்த் தொழிலில் நெறி திறம்பி நடப்பேனோ'' எனப் பொருள் கூறி, "சீதையைக் குறித்து நிகழவிருக்கும் இப்போரில் நெறிமுறை பிறழ நேர்ந்தால் அம்முறையற்ற செயலைச் செய்தாயினும் பகைவரைப் புறங்கண்டு சீதையை அடைவேன்'' எனப் பெரு வீரனாகிய இராவணன் நெறி திறம்பாப் போர் முறையில் தனக்குள்ள ஆர்வத்தைக் காட்டிலும் சீதையை யடைவதில் தனக்குள்ள பெருவேட்கையைப் புலப்படுத்தினான்'' என விளக்கங் கூறுதலும் உண்டு. திறம்புதல் - நெறிதவறுதல். (18)

6957. ஒன்றல பகழி யென்கைக்
குரியன வுலக மெல்லாம்
வென்றன வொருவன் செய்த
வினையினும் வலிய வெம்போர்
முன்றரு கென்ற தேவர்
முதுகுபுக் கமரின் முன்னஞ்
சென்றன வின்று வந்த
குரங்கின்மேற் செல்க லாவோ.

'ஒன்று அல, பகழி, என் கைக்கு உரியன; உலகம் எல்லாம் வென்றன; ஒருவன் செய்த வினையினும் வலிய; "வெம்போர் முன் தருக' என்ற தேவர் முதுகுபுக்கு அமரில் முன்னம் சென்றன; இன்று வந்த குரங்கின்மேல் செல்கலாவோ ?

பொ :—என் கையினால் (தொடுத்து எய்தற்கு) உரியனவாய்(என்னிடம்) உள்ள அம்புகள் ஒன்று அல்ல (மிகப் பலவாக உள்ளன); உலகங்களை யெல்லாம் வெற்றி கொண்டன; ஒருவனாற் செய்யப்பட்ட (வினையின் பயனாகிய) ஊழினும் (முந்துற்றுச் சென்று பகைவரைப் பற்றி வருத்தும்) வன்மை வாய்ந்தன ; கொடிய போரை(ச் செய்தற்கு) முற்பட்டு (இசைவு) தருக என்று கூறிய தேவர்களது (உரத்தில் ஆழப் பதிந்த அவ்வளவில் நில்லாது அவர்தம்) முதுகினையும் கடந்து போர்க்களத்தில் முற்பட்டுச் சென்றன ; (அத்தகைய ஆற்றல் வாய்ந்த அந்த அம்புகள்) இப்பொழுது (நம்முன் வலியப் போருக்கு) வந்துள்ள குரங்குகளின்மேல் (ஆழ்ந்து ஊடுருவிச்) செல்லும் ஆற்றலற்றனவாமோ ?

கு :—என் கைக்கு உரியன பகழி, ஒன்று அல ; வென்றன ; வலிய ; சென்றன ; செல்கலாவோ? என இயையும். பகழி-அம்பு. ஒருவனாற் செய்யப்பட்ட வினைப்பயனாகிய ஊழ், அவனை அவனது நிழல்போல் பின் தொடர்ந்து பல பிறவிகளிலும் விடாது வருத்து மாறுபோல, என் கையிலுள்ள அம்புகளும் என் பகைவராயினாரைச் செல்லுமிடந்தோறும் விடாது துரத்திச் சென்று பற்றித் துன் புறுத்தும் வன்மை வாய்ந்தன என்பான், 'ஒருவன் செய்த வினை யினும் வலிய' என்றான். வான் வழியாக உருக்கரந்து செல்லும் ஆற்றல் மிக்க தேவர்களையும் தொடர்ந்து வருத்தும் என் கையிலுள்ள அம்புகள், இன்று என் முன் வந்துள்ள இக்குரங்குகளின் உடம்பின் கண்ணே ஆழ்ந்து ஊடுருவிச் செல்லும் ஆற்றலற்றனவாமோ என் பான், 'இன்று வந்த குரங்கின்மேற் செல்கலாவோ' என வின விளுன். வினு ஓகாரம் எதிர்மறைப் பொருளை யுணர்த்தி நின்றது. (19)

6958. சூலமேய் தடக்கை யண்ண
 லுனுமோர் குரங்காய்த் தோன்றி
ஏலுமே லிடைவ தல்லா
 லென்செய வல்ல னென்னை
வேலைநீர் கடைந்த மேனு
 ளுலகெலாம் வெருவ வந்த
ஆலமோ விழுங்க வென்கை
 யயின்முகப் பகழி யம்மா.

'சூலம் ஏய் தடக் கை அண்ணல்
 தானும், ஓர் குரங்காய்த் தோன்றி
ஏலு மேல், இடைவது அல்லால்
 என்செய வல்லன் என்னை ?
வேலை நீர் கடைந்த மேல் நாள்
 உலகு எலாம் வெருவ வந்த
ஆலமோ விழுங்க, என் கை
 அயில் முகப் பகழி ? அம்மா !

பொ :—சூலப்படை பொருந்திய பெருமை வாய்ந்த கையினை யுடைய சிவபெருமான் தானும் (இங்கு) ஒரு குரங்காகித் தோன்றி(ப் போரில்) எதிரேற்று நிற்பானாயின், (எனக்கு முன்னே நிற்கும் வலி யின்றித்) தோற்று ஓடுவதன்றி என்னை என் செயவல்லான்? என் கையிலுள்ள கூரிய முனையினையுடைய அம்பு (அவன்) விழுங்குதற்கு,

கடலின் நீரைக் கடைந்த முற்காலத்தில் உலகவுயிர்களெல்லாம் அஞ்சியோடும்படி (உருத்தெழுந்து) வந்த ஆலகால நஞ்சென்னும் (அத்துணை எளிமைத்) தன்மையதோ?

கு :—அண்ணல் - தலைவன்; இறைவன். அண்ணல் தானும் ஓர் குரங்காய்த் தோன்றி ஏலுமேல் இடைவது அல்லால் என்னை என்செய வல்லன் எனவும், என்கை அயில்முகப்பகழி (அவன்) விழுங்க ஆலமோ எனவும் இரு தொடராக இயைத்துப் பொருள் கொள்க. ஏலுதல் - போரில் எதிர்ந்து நிற்றல். இடைதல் - தோற்று ஓடுதல். வேலை நீர் என்றது ஈண்டுப் பாற்கடலை. அயில் - கூர்மை. சூலப்படையினைக் கையிலேந்திய சிவபெருமானும் வஞ்சனை யால் தன்னுருக் கரந்து ஒரு குரங்கினுருவில் இங்குத் தோன்றி என்னொடு போர்செய்ய முற்படினும் அவனும் என் முன்னிற்ற லாற்ருது தோற்ருேடி விடுவான் என்பது உறுதியென்றும், தன் கையிலுள்ள அம்பு சிவபெருமானுல் உட்கொள்ளப்பெற்ற ஆலகால நஞ்சினும் கொடியதென்றும் இராவணன் தன் உடல் வலியையும் படைக்கலத் திறனையும் தானே வியந்து கூறினன் என்பதாம். (20)

6959. அறிகிலை போலு மைய
வமரெனக் கஞ்சிப் போன
எறிசுடர் நேமி யான்வந்
தேற்கிலு மென்கை வாளி
பொறிபடச் சுடர்க டீயப்
போவன போக்கி லாத
மறிகடல் கடைய வந்த
மணிகொலாம் மார்பிற் பூண.

“ அறிகிலை போலும், ஐய! அமர் எனக்கு அஞ்சிப் போன
எறி சுடர் நேமியான் வந்து ஏற்கிலும், என் கை வாளி,
பொறி பட, சுடர்கள் தீயப் போவன ; போக்கு இலாத
மறி கடல் கடைய, வந்த மணிகொலாம், மார்பில் பூண ?

பொ :—போரில் எனக்குப் பயந்து ஓடிய ஒளி வீசும் சக்கரப் படையினையுடைய திருமால் (மீண்டும் வலிபெற்று) வந்து (என்னை) எதிரேற்ற போதும் என் கையிலுள்ள அம்புகள், தீப்பொறி தோன்ற வும் (ஞாயிறு திங்கள் ஆகிய) சுடர்கள் தீய்ந்து நீருகவும் (அவனு டைய மார்பின்கண்ணே ஊடுருவிச்) செல்ல வல்லன. யாவராலும் அழிக்கவொண்ணுதன. (அவை திருமாலால்) மார்பில் ஏற்றுக்

கோடற்கு (அலைகள்) மறியும் பாற்கடலைக் கடைந்த நாளில் தோன்றிய கௌத்துவ மணியோ? ஐயனே! (எனது ஆற்றலை) உணர்கின்றிலை போலும்.

கு :—ஐய என்றது, இராவணன் மாலியவானை நோக்கிக் கூறிய விளி. போன என்னும் பெயரெச்சம் நேமியான் என்னும் பெயர் கொண்டு முடிந்தது. எறிசுடர் என்றது நேமிக்கு அடையாய் நின்றது. நேமி - சக்கரம். போக்குதல் - அழித்தல். மணி - கௌத்துவ மணி. தேவரும் அசுரரும் கூடிப் பாற்கடலைக் கடைந்தபொழுது அக்கடலினின்றும் தோன்றிய கௌத்துவம் என்னும் மணியினைத் திருமால் தன் மார்பிற் பூண்டனன் என்பது புராண கதை. என் கை வாளி மார்பிற் பூண மணிகொலாம் என இயைக்க. வாளி - அம்பு. மணிகொலாம் என்றது, திருமாலால் மணியினைப் போன்று தன் மார்பில் விரும்பி யேற்றுக்கொள்ளும் அளவு அத்துணை எளிமையுடையதன்றென்றவாறு. பூணுதல் - மேற்கொள்ளுதல். (21)

6960. கொற்றவா ளிமையோர் கோமான்
குரங்கின துருவங் கொண்டால்
அற்றைநா ளவன்றான் விட்ட
வயிற்படை யறுத்து மாற்ற
இற்றவான் சிறைய வாகி
விழுந்துமே லெழுந்து வீங்காப்
பொற்றைமால் வரைக ளோவென்
புயநெடும் பொருப்பு மென்றான்.

'கொற்ற வாள் இமையோர் கோமான்
குரங்கினது உருவம் கொண்டால்,
அற்றை நாள், அவன்தான் விட்ட
அயிற்படை அறுத்து மாற்ற,
இற்ற வான் சிறைய ஆகி
விழுந்து, மேல் எழுந்து வீங்காப்
பொற்றை மால் வரைகளோ, என்
புயநெடும் பொருப்பும்? என்றான்.

பொ :—வெற்றி பொருந்திய வாட்படையை ஏந்திய வானோர் வேந்தனாகிய இந்திரன் குரங்கினது உருவினைக் கொண்டு (என்னை) எதிர்ப்பானாயின், என்னுடைய தோள்களாகிய நெடிய மலைகளும் அன்றொரு நாள் அவ் விந்திரன் செலுத்திய வச்சிரப் படையானது

அரிந்து போக்க அறுபட்டொழிந்த பெரிய சிறகுகளையுடையவாய்க் கீழே வீழ்ந்து (மீண்டும்) மேலே எழுந்து உயர்ந்து பறத்தற்கியலா தனவாய்ச் சிறு குன்றுகளாகச் சிதைவுற்ற பெரிய மலைகள் ஆகுமோ? என்று (தன் ஆற்றலை வியந்து) கூறினன் (இராவணன்).

கு:—என் புயநெடும் பொருப்பும், பொற்றை மால்வரைகளோ? என இயைக்க. புயநெடும் பொருப்பு - தோள்களாகிய நீண்ட மலை; உருவக அணி. புயம் - தோள். பொருப்பு, வரை என்பன மலையைக் குறித்த பெயர்கள். பொற்றை - சிறு குன்று. மலைகளின் சிறகுகளைத் தன் வச்சிரப்படையால் அறுத்து வீழ்த்திய இந்திரனாலும் என் தோள்களாகிய பெரு மலைகளை வெட்டி வீழ்த்துதல் இயலாத செயல் என்பதாம். முற்காலத்தில் உலகிலுள்ள மலைகள் யாவும் சிறகுடையனவாய் யாண்டும் பறந்து திரிந்து உலகவுயிர்களுக்குப் பேரிடர் விளைத்த நிலையில் தேவர் கோமானாகிய இந்திரன் அம்மலைகளின் சிறகுகளைத் தன் வச்சிரப்படையால் அரிந்து வீழ்த்தினன் என்பது புராண கதை. (22)

52 என்னும் எண்ணுள்ள பிரதியில் இச்செய்யுளின் பின் மிகைப் பாடலாகப் பின்வருமாறு ஒரு செய்யுள் உளது:

6960 (a) "எரிஎனச் சீறி, இவ்வாறு
உரைத்து, இருமருங்கில் நின்ற
நிருதரைக் கணித்து நோக்கி,
'நெடுங்கரி, இரதம், வாசி,
விருதர்கள் ஆதிவெள்ளப் படைத்
தொகை விரைந்து, நாளைப்
பொருதிறம் அமையும்' என்று,
புதுமலர்ச் சேக்கை புக்கான்.

இருள் நீங்குதல்

6961. உள்ளமே தூது செல்ல
வுயிரனு றுறையு ணுடும்
கள்ளமார் மகளிர் சோர
நேமிப்புள் கவற்சி நீங்கக்
கொள்ளைபூண் டமரர் வைகுங்
குன்றையுங் கொடிற்றிற் கொண்ட
வெள்ளநீர் வடிந்த தென்ன
வீங்கிருள் விடிந்த தன்றே.

உள்ளமே தூது செல்ல
　　உயிர் அனுர் உறையுள் நாடும்
கள்ளம் ஆர் மகளிர் சோர,
　　நேமிப்புள் கவற்சி நீங்க,
கொள்ளை பூண்டு அமரர் வைகும்
　　குன்றையும் கொடிற்றில் கொண்ட
வெள்ள நீர் வடிந்தது என்ன,
　　வீங்கு இருள் விடிந்தது அன்றே.

பொ :—தம்முடைய நெஞ்சமே தூதாகச் செல்லத் தம் உயிர்போலும் காதலர் தங்கிய (இரவுக் குறியாகிய) இடத்தினை நாடிச் செல்லும் களவொழுக்கத்தினை யுடையராய மகளிர் மனந் தளர்ந்து வருந்தவும், சக்கரவாகப் பறவைகள் (தம் மனக்) கவலை நீங்கவும் தேவர்கள் கூட்டமாகக் கூடித் தங்கிய (உயர்ந்த மேரு) மலையினையும் தன் கன்னத்திற்குள் அடக்கி (மூடி)யுள்ள (ஊழிப்) பெருவெள்ளமாகிய நீர் வடிந்தாற்போன்று, மிக்குச் செறிந்த இருள் நீங்கிப் (பொழுது) புலர்ந்தது.

கு :—இச்செய்யுள் கவிக்கூற்று. கள்ளம் ஆர் மகளிர் என்றது உலகிற் பிறர் உணராதவாறு களவொழுக்கத்தில் ஒழுகும் மகளிரை. உயிர் அ(ன்)னுர் - அவர்தம் உயிர்போலும் காதலர். உறையுள்-அவர் வந்து உறையும் இரவுக் குறியிடம். தம் ஆருயிர்க் காதலர் வந்து தங்கும்குறியிடத்தை நாடியடைந்து அவரது வருகையை எதிர்பார்த்திருக்கும் களவொழுக்கத்தினராய மகளிர், தமது களவொழுக்கத்திற்குப் பாதுகாப்பா யிருக்கும் இரவு புலர்ந்தமை யெண்ணி மனந் தளர்ந்து வருந்தினர் என்பார், 'உள்ளமே தூது செல்ல உயிரனுர் உறையுள் நாடும் கள்ளமார் மகளிர் சோர' என்ருர். நேமிப்புள் - சக்கரவாகப் பறவை. இரவில் தம் துணையினைப் பிரிந்து கவலும் இப்பறவைகள் தம் துணையொடு கூடி மகிழ்தற்குரிய பகற்பொழுது வந்ததென்று மனக் கவலை நீங்கின என்பார் 'நேமிப்புள் கவற்சி நீங்க' என்ருர். கொள்ளை - கூட்டம். அமரர் - தேவர். வானேரனைவரும் பெருங் கூட்டமாக வந்து தங்கும் பெரிய மேருமலையாதலின் அதனை, 'கொள்ளைபூண் டமரர் வைகும் குன்று' எனக் குறித்தார். அங்ஙனம் அகன்றுயர்ந்த பெரிய மேரு மலையினையும் தன் கன்னத்திற்குள் அடக்கிக் கொள்ளும் நிலையிற் பெருகிய ஊழிப் பெருவெள்ளம் என்பார், 'கொள்ளைபூண் டமரர் வைகுங் குன்றையும் கொடிற்றிற் கொண்ட வெள்ளநீர்' என்ருர். கொடிறு - கன்னம். உறுப்பில்லாத வெள்ளத்தினை உறுப்புடையதுபோற் புனைந்துரைத்தார். ஊழிப் பெருவெள்ளத்தின் நீர் வடிந்தாற்போன்று பேரிருள் விடிந்தது என்றவாறு. அன்று, ஏ என்பன அசை. (23)

கதிரவன் தோன்றுதல்

6962. இன்னதோர் தன்மைத் தாமென்
றெட்டியும் பார்க்க வஞ்சிப்
பொன்மதிற் புறத்து நாளும்
போகின்ருன் போர்மேற் கொண்டு
மன்னவர்க் கரசன் வந்தான்
வலியமா லென்று தானுந்
தொன்னகர் காண்பான் போலக்
கதிரவன் ருேற்றஞ் செய்தான்.

இன்னது ஓர் தன்மைத்து ஆம் என்று
எட்டியும் பார்க்க அஞ்சி,
பொன்மதில் புறத்து நாளும்
போகின்ருன், 'போர் மேற்கொண்டு
மன்னவர்க்கு அரசன் வந்தான்;
வலியமால்' என்று, தானும்
தொல் நகர் காண்பான்போல,—
கதிரவன் தோற்றம் செய்தான்.

பொ :—(அரக்கரது நகராகிய இலங்கை) இத்தகையதொரு தன்மையினை யுடையதாகும் என்று (மதில்மேல்) தன் தலையினை நீட்டி எட்டிப் பார்ப்பதற்குக் கூடப் பயந்து (இலங்கையின்) பொன் மயமான மதிலின் புறத்திலேயே நாள்தோறும் சுற்றிக்கொண்டு செல்பவனுகிய சூரியன், 'வேந்தர் வேந்தனுகிய இராமன் (அரக்க ரொடு) போர் செய்தலை மேற்கொண்டு (இங்கு) வந்துள்ளான் (ஆதலால் நாம் பகையினை வெல்லுதற்குரிய) வன்மையுடையே மாயினேம்' என்று எண்ணித் தானும் தொன்மை வாய்ந்த அவ் இலங்கை நகரினைக் காணப் புகுவான் போன்று (உதய மலையில் வந்து) தோன்றினுன்.

கு :—அஞ்சிப் பொன்மதிற் புறத்து நாளும் போகின்ருனுகிய கதிரவன், வலியமால் என்று தானும் தொன்னகர் காண்பான் போலத் தோற்றஞ் செய்தான் என முடிக்க. தன்னியல்பிலே நிகழ்ந்த கதிரவன் தோற்றத்தை இலங்கை நகரினைக் காணவேண்டும் என் னும் ஆர்வத்தால் நிகழ்ந்ததாக ஆசிரியர் காரணங் கற்பித்துக் கூறினமையின் இஃது ஏதுத் தற்குறிப்பேற்றம் என்னும் அணி யாகும். விசும்பிலியங்கும் கதிரவனும் கடந்து செல்லாவாறு இலங்கை நகரத்தினைக் காவலுடையதாக இராவணன் அமைத்

திருந்தான் என்பது, 'பகலவன் மீதியங்காமைக் காத்த பதியோன்' (2-10-11) என வரும் தேவாரத்தாலும், 'கறங்கு கால் புகா கதிரவ ஞெளிபுகா' (சுந்தர - ஊர்தேடு - 23) என வரும் கம்பர் கூற்றாலும் இனிது புலனும். (24)

இராமன் தன் பரிவாரங்களுடன் சுவேலமலைமேல் ஏறுதல்

6963. அருந்ததி யனைய நங்கை
யவ்வழி யிருந்தா ளென்று
பொருந்திய காத றூண்டப்
பொன்னகர் காண்பான் போலப்
பெருந்துணை வீரர் சுற்றத்
தம்பியும் பின்பு செல்ல
இருந்தமா மலையி னுச்சி
யேறினா னிராம னிப்பால்.

'அருந்ததி அனைய நங்கை அவ்வழி இருந்தாள்' என்று
பொருந்திய காதல் தூண்ட, பொன் நகர் காண்பான் போல,
பெருந் துணை வீரர் சுற்ற, தம்பியும் பின்பு செல்ல,
இருந்த மா மலையின் உச்சி ஏறினன் இராமன், இப்பால்.

பொ :—அருந்ததியினையொத்த கற்புடை நங்கையாகிய சீதை அவ் இலங்கை நகரத்திலே இருந்தாள் என்பது பற்றித் தன் மனத்தே பொருந்திய காதலானது உள் நின்று செலுத்துதலால் பொன் மயமான இலங்கை நகரினைக் காண்பவன் போல(த் தனக்கு)ப் பெருந் துணைவராகவுள்ள (வீடணன் சுக்கிரீவன்) இருவரும் (தன் இரு பக்கத்தும்) சூழ்ந்து வரத் தம்பியாகிய இலக்குவன் பின்னே செல்ல, இராமன் (இலங்கை நகரின்) இப்புறத்தே தான் தங்கியிருந்த பெரிய சுவேலமலையின் உச்சியிலே ஏறினன்.

கு :—தான் ஒறுத்தழிக்க எண்ணிய தீயோர்களாகிய அரக்கர்கள் வாழும் இலங்கை நகரின் அமைப்பினை அறிந்து கொள்ளுதற் பொருட்டுச் சுவேல மலையின் உச்சியில் ஏறிய இராமனை, கற்புடை நங்கையாகிய சீதை அந்நகரில் இருந்தாள் என்று தன் மனத்தெழுந்த தூண்டுதலால் அவளைக் காண்பான் போன்று ஏறினன் எனப் புனைந்துரைத்தமையின் இஃது ஏதுத் தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும். இதுகாறும் இலங்கை நகரின் உள்ளே நிகழ்ந்த இராவணனது செயலை விரித்துரைத்த ஆசிரியர், இனி அந்நகரத்தின் புறத்தே படையுடன் தங்கிய இராமன் செயலைப்

பேசத் தொடங்குகின்றார் ஆதலின் 'இப்பால்' எனப் பிரித்துக் கூறுகின்றார். (25)

மலைமேல் ஏறிய இராமனது தோற்றப் பொலிவு

6964. செருமலி வீர ரெல்லாஞ்
சேர்ந்தனர் மருங்கு செல்ல
இருதிறல் வேந்தர் தாங்கு
மிணைநெடுங் கமலக் கையான்
பொருவலி வயவெஞ் சீயம்
யாவையும் புலியுஞ் சுற்ற
அருவரை யிவர்வ தாங்கோ
ரரியர சனைய னானான்.

செரு மலி வீரர் எல்லாம் சேர்ந்தனர் மருங்கு செல்ல,
இரு திறல் வேந்தர் தாங்கும் இணை நெடுங் கமலக் கையான்,
பொரு வலி வய வெஞ் சீயம் யாவையும் புலியும் சுற்ற,
அரு வரை இவர்வது ஆங்கு ஓர் அரிஅரசு அனையன் ஆனான்.

பொ :—போர்த் திறத்தில் மிகுந்த வீரர் யாவரும் ஒருங்கே கூடியவராய்ப் பக்கங்களிற் செல்ல, ஆற்றல் மிக்க வேந்தர் இருவராலும் பற்றிக் கொள்ளப்பெற்ற தாமரை மலர்போலும் இரண்டு கைகளையுடைய இராமன், போர் செய்தற்குரிய வன்மையும் வெற்றியும் வாய்ந்த சினமிக்க சிங்கங்களும் புலிகளும் சூழ்ந்து வர, ஏறுதற்கரிய (உயர்ந்த) மலைமீது ஏறிச் செல்லும் ஒப்பற்ற இராச சிங்கத்தினையொத்துத் தோன்றினான்.

கு :—இது முதல் நான்கு செய்யுட்கள், சுவேலமலையின் மீது ஏறும் இராமனது இயல்பை விரித்துரைப்பன. செரு - போர்; என்றது ஈண்டுப் போர் செய்யுந் திறத்தினை. இருதிறல் வேந்தர் என்றது, வானர மன்னனாகிய சுக்கிரீவனையும் இலங்கையர் மன்னனாக ஏற்றுக் கொள்ளப்பெற்ற வீடணனையும். இணை - இரண்டு. இவர்தல் - உயர ஏறிச் செல்லுதல். சுவேல மலை மீது ஏறிய இராமனுக்குச் சிங்கத்தின் அரசாகிய இராச சிங்கமும், அவனுடன் செல்லும் இலக்குவன், சுக்கிரீவன், வீடணன் முதலிய பெரு வீரர்களுக்குச் சிங்கங்களும், ஏனை வானர வீரர்களுக்குப் புலிக் கூட்டமும் உவமை. (26)

6965. கதமிகுந் திரைத்துப் பொங்குங்
கனைகட லுலக மெல்லாம்
புதைவுசெய் யிருளிற் பொங்கு
மரக்கர்தம் புரமும் பொற்பும்
சிதைவுசெய் குறியைக் காட்டி
வடதிசைச் சிகரக் குன்றின்
உதயம தொழியத் தோன்று
மொருகரு ஞாயி றொத்தான்.

கதம் மிகுந்து இரைத்துப் பொங்கும்
கனைகடல் உலகம் எல்லாம்
புதைவு செய் இருளின் பொங்கும்
அரக்கர்தம் புரமும், பொற்பும்,
சிதைவு செய் குறியைக் காட்டி
வடதிசைச் சிகரக் குன்றின்,
உதயம் அது ஒழியத் தோன்றும்,
ஒரு கரு ஞாயிறு ஒத்தான்.

பொ :—வெகுளிமிக்கு ஆரவாரித்துப் பொங்கும் தன்மையதாகிய ஒலிக்குங் கடலாற் சூழப்பெற்ற உலகமெல்லாம் (தன்பாற்) புதையுண்டு அழுந்துமாறு செய்யும் (ஊழிக் காலத்துப்) பேரிருளைப் போன்று மிக்குத் தோன்றும் (கரிய) அரக்கர்கள் வாழும் நகரமாகிய இலங்கையும் அதன் பொலிவும் சிதைந்தொழிதலைச் செய்யும் தீக்குறியை(ப் பலரும் காண)க் காட்டி(த்தான் என்றும் தோன்றும்)உதய மலையை விட்டு வட திசையிலுள்ள மலையொன்றின் உச்சியிலே தோன்றியதொரு கருஞ் சூரியனை ஒத்துத் தோன்றினான்.

கு :—சூரியன் தான் உதிக்கவேண்டிய இடத்தைவிட்டு வேறோரிடத்தில் உதித்தலும் தன் நிறத்தில் வேறுபடுதலும் உலகிற்குப் பின்னர் நேரவிருக்கும் தீமைகளைக் காட்டும் உற்பாதங்கள் (தீ நிமித்தங்கள்) ஆகும். ‘அலங்கு கதிர்க்கனலி நால்வயிற்றோன்றினும்’ (புறநானூறு-35) என்பது இங்கு நோக்கத்தக்கது. ஞாயிறு போலும் பேரொளி மிக்க கரிய திருமேனியையுடைய இராமன், இலங்கையின் வடதிசையிலுள்ள சுவேல மலையின்மீது ஏறிய தன்மை, இலங்கை நகரத்தின் அழிவினைப் புலப்படுத்துவதொரு உற்பாதமாகச் சூரியன் கருநிறமுடையனாய் வடதிசை மலையின் உச்சியிலே தோன்றினாலொத்த தோற்றத்தினையுடையதாய் விளங்கியது என்பதாம். இது தன்மைத் தற்குறிப்பேற்றம் என்னும் அணியின்பாற்படும். “செந்தண் கமலக்கண் கை கால் சிவந்தவாயோர் கருநாயிறு, அந்த

மில்லாக் கதிர் பரப்பி யலர்ந்தநொக்கும் அம்மானே" (திருவாய்மொழி - 8-5-7) எனவரும் அருளிச் செயல் இங்கு நோக்கத்தகும். (27)

6966. துமிலத்திண் செருவின் வாளிப்
பெருமழை சொரியத் தோன்றும்
விமலத்திண் சிலைய னாண்டோர்
வெற்பினை மேய வீரன்
அமலத்திண் கரமுங் காலும்
வதனமுங் கண்ணு மான
கமலத்திண் காடு பூத்த
காளமா மேக மொத்தான்.

துமிலத் திண் செருவின் வாளிப்
பெரு மழை சொரியத் தோன்றும்
விமலத் திண் சிலையன், ஆண்டு ஓர்
வெற்பினை மேய வீரன்,
அமலத் திண் கரமும் காலும்
வதனமும் கண்ணும் ஆன,
கமலத் திண் காடு பூத்த
காள மா மேகம் ஒத்தான்.

பொ :—ஆரவாரித்துச் செய்யும் வலிய போரில் அம்புகளாகிய பெரிய மழையைச் சொரியும்படி தோன்றுகின்ற குற்றமற்ற வலிய வில்லினையுடையவனாகி அங்குள்ளதொரு மலையினைப் பொருந்தி நின்ற வீரனாகிய இராமன், தூய்மையும் வன்மையும் வாய்ந்த கை, கால், முகம், கண்கள் ஆகிய செந்தாமரை மலர்கள் திரளாகப் பூக்கப் பெற்ற கரிய மேகத்தை யொத்துத் தோன்றினான்.

கு :—துமிலம் - பேராரவாரம். விமலம், அமலம் என்பன, அழுக்கின்மையாகிய தூய்மை என்னும் பொருளில் வழங்குவன. சிலை-வில். வீரன் என்றது இராமனை. வில்லைப் பெற்றிருத்தல், மழை பொழிதல், வெற்பினை மேவுதல் என்பன வீரனுக்கும் காளமாமுகிலுக்கும் அமைந்த பொதுத் தன்மை. கமலம் - தாமரை. மலர்கள் செறிவுடையனவாய்ப் பூத்தலால் திண்காடு என்றார். காடு - திரள். கமலத் திண்காடு பூத்த காளமாமேகம் என்றது இல்பொருள் உவமை. காளம் - கருமை. "கருமுகில் தாமரைக் காடுபூத்து...வருவபோல்... வந்து தோன்றினான்" (கம்பர். பால. 192) என்புழியும் இவ்வுவமை ஆளப் பெற்றிருத்தல் காணலாம். (28)

6967. மற்குவ டனைய திண்டோண்
மானவன் மான மில்லாக்
கற்குவ டடுக்கி வாரிக்
கடலினைக் கடந்த காட்சி
நற்குவ டனைய வீர
ரீட்டத்தி னடுவ ணின்ருன்
பொற்குவட் டிடையே தோன்று
மரகதக் குன்றம் போன்ருன்.

மல் குவடு அனைய திண் தோள்
மானவன், மானம் இல்லாக்
கல் குவடு அடுக்கி வாரிக்
கடலினைக் கடந்த காட்சி
நல் குவடு அனைய வீரர்
ஈட்டத்தின் நடுவண் நின்ருன்,
பொன் குவட்டிடையே தோன்றும்
மரகதக் குன்றம் போன்ருன்.

பொ :—மற்ருெழிலில் வல்ல மலைச் சிகரத்தைப் போலும் திண்ணிய தோள்களையுடைய பெரியோனுகிய இராமன், அளவற்ற மலை முகடுகளை அடுக்கி நீர்ப் பெருக்கையுடைய கடலைக் கடந்த தோற்றப் பொலிவினையுடைய நல்ல மலை போலும் (வானர) வீரர்களது கூட்டத்தின் நடுவிலே நின்றவன், பொன்மலையின் நடுவிலே தோன்றும் மரகத மலையினை யொத்து விளங்கினுன்.

கு :—'மல் - மற்ருெழில்; மற்போர் 'மல்லலைத் தெழுந்து வீங்கி மலை திரண்டனைய தோளான்' (சீவக - 263) என்புழி மல் என்பது இப் பொருளதாதலறிக. குவடு - மலைச் சிகரம். மானவன் - பெருமையை யுடையவன்; என்றது, மனுகுலத் தோன்றலாகிய இராமனை. மானம் இல்லா – அளவில்லாத. மானம் – அளவு. கற்குவடு அடுக்கி வாரிக் கடலினைக் கடந்த வீரர் எனவும் காட்சி நற்குவடனைய வீரர் எனவும் இயையும். வாரிக் கடல் - நீர்ப் பெருக்கையுடைய கடல். காட்சி - தோற்றப் பொலிவு. ஈட்டம் - கூட்டம். இடை - நடு. வானர வீரர்களுக்குப் பொற்குவடும் அவர்கள் கூட்டத்தின் நடுவிலே நிற்கும் இராமனுக்கு மரகதக் குன்றமும் உவமை. மானவன், நின்ருன், போன்ருன் என முடியும். நின்ருன் என்பது வினையாலணையும் பெயர். இச்செய்யுளின் முதலடியில், 'மானவன் மானமில்லா' என முரண்தொடை அமைந்திருத்தல் காண்க. (29)

மலைமேல் நின்று இலங்கை நகரத்தினைக்கண்ட இராமன் அதன் எழில்மிக்க பலவகைக் காட்சிகளையும் இலக்குவனுக்கு எடுத்துரைத்தல்

6968. அணைநெடுங் கடலிற் றோன்ற
வாறிய சீற்றத் தையன்
பிணைநெடுங் கண்ணி யென்னு
மின்னுயிர் பிரிந்த பின்னைத்
துணைபிரிந் தயரு மன்றிற்
சேவலிற் றுளங்கு கின்றான்
இணைநெடுங் கமலக் கண்ணா
லிலங்கையை யெய்தக் கண்டான்.

அணை நெடுங் கடலில் தோன்ற,
ஆறிய சீற்றத்து ஐயன்,
பிணை நெடுங் கண்ணி என்னும்
இன்னுயிர் பிரிந்த பின்னை,
துணை பிரிந்து அயரும் அன்றிற்
சேவலின் துளங்குகின்றான்,
இணை நெடுங் கமலக் கண்ணால்
இலங்கையை எய்தக் கண்டான்.

பொ :—அணையானது நெடிய கடலிடத்தே (கட்டப் பெற்றுத்) தோன்ற, (அது கண்டு) சீற்றந் தணியப் பெற்ற தலைவனாகிய இராமன், பெண் மானைப் போலும் நீண்ட கண்களையுடையாளாகிய சீதை என்னும் இனிய உயிர் (தன்னை விட்டுப்) பிரிந்த நிலையில், தன் (பெடையாகிய) துணையைப் பிரிந்து வருந்தும் ஆணாகிய அன்றிற் பறவையினை யொத்து வருந்துபவனாகி இரண்டாய் இணைந்த செந்தாமரை மலர் போலும் தன் கண்களால் இலங்கை நகரத்தினை நன்றாக(க் கூர்ந்து) நோக்கினான்.

கு :—ஐயன், துளங்குகின்றான், இலங்கையை எய்தக்கண்டான் என முடியும். துளங்குதல் - வருந்துதல். எய்தக் காணுதல் - நன்றாகக் கூர்ந்து பார்த்தல். நெடுங்கடலில் அணை தோன்ற ஆறிய சீற்றத்து ஐயன் என இயையும். சீற்றம் ஆறிய ஐயன் என்பார் ‘ஆறிய சீற்றத்து ஐயன்’ என்றார். ‘ஆறிய சீற்றத்து ஐயன்’ என்றதனை ‘அருங்கேடன்’ (திருக்குறள்-210) என்புழிப்போலக் கொள்க. சீற்றம் - இலங்கையைக் கடத்தற்குத் தடையாய் நின்ற கடலின்மேற் கொண்ட வெகுளி. ஆறுதல் - தணிதல். அன்றில்

என்பது ஒருவகைப் பறவை. இப்பறவைகள் ஆணும் பெண்ணு மாய் எப்பொழுதும் இணைபிரியாது வாழ்வன எனவும், ஒன்றைவிட் டொன்று பிரிய நேர்ந்தால் உறக்கமின்றி அல்லலுற்று வருந்துவன எனவும் கூறுப. "மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில், துணை யொன்று பிரியினும் துஞ்சா" (அகம் - 42) என வரும் தொடர் இங்கு ஒப்புநோக்கத் தகுவதாகும். சேவல் என்பது, பறவையினத்துள் ஆண்மை குறித்து வழங்கும் மரபுப் பெயர். (30)

இச்செய்யுளின் பின் 52-என்னும் எண்ணுள்ள பிரதியில் பின் வருமாறு ஒருமிகைப் பாடல் காணப்படுகிறது:—

6968. (a) கண்டு அகம் மகிழ்ந்து, ஆங்கு
அண்ணல், கடிநகர் இலங்கை மூதூர்
விண்தலம் அளவும் செம்பொற்
கோபுரம் விளங்கும் வீதி,
மண்டபம், சிகரகோடி, மாளிகை
மலர்க்கா ஆதி
எண்திசை அழகும் நோக்கி,
இளவலுக்கு இயம்புகின்றான்.

இராமன் இலங்கையின் எழில்கண்டு இலக்குவனுக்குக் காட்டுதல்

6969. நந்திரு நகரே யாதி
வேறுள நகர்கட் கெல்லாம்
வந்தபே ருவமை கூறி
வழுத்துவா னமைந்த காலை
இந்திர னிருக்கை யென்ப
ரிலங்கையை யெடுத்துக் காட்டார்
அந்தர முணர்த றேற்றா
ரருங்கவிப் புலவ ரம்மா.

'நம் திரு நகரே ஆதி
வேறு உள நகர்கட்கு எல்லாம்
வந்த பேர் உவமை கூறி
வழுத்துவான் அமைந்த காலை,

இந்திரன் இருக்கை என்பர் ;
இலங்கையை எடுத்துக் காட்டார் ;
அந்தரம் உணர்தல் தேற்றுர்,
அருங் கவிப் புலவர் அம்மா !

பொ :—அரிய பொருள்களமைந்த செய்யுட்களைப் பாடவல்ல புலவர்கள் நமது அயோத்தி முதலிய வேறு வேருகவுள்ள நகரங்கட்கெல்லாம் பொருந்திய உயர்ச்சி வாய்ந்த உவமையினை எடுத்துக் கூறிப் புகழத் தொடங்கியபொழுது (வானவர் வேந்தனுகிய) இந்திரனது (அமராவதி நகரம் என (அந்நகரங்களை)ச் சிறப்பித்துப் போற்றுவர் ; (அமராவதியினும் எத்துணேயோ மடங்கு சிறப்புடையதாகிய) இலங்கை நகரத்தை (உவமையாக) எடுத்துக்காட்டமாட்டாராயினர். (தேவருலகிற்கும் இவ்விலங்கைக்கும் இடையேயமைந்த) வேறுபாட்டினை (அப்புலவர்கள்) தெளிய அறிந்திலர்.

கு :—இது முதற் பதினேழு செய்யுட்கள், சுவேல மலைமீது ஏறி நின்று இலங்கையைக் காணும் இராமன், தன் தம்பியாகிய இலக்குவனை நோக்கி இலங்கையின் எழிலை—எடுத்துக்காட்டி அறிவிக்கும் முறையில் அமைந்தனவாகும். நம் திருநகர் என்றது அயோத்தியை. முன்னின்ற இலக்குவனையும் தன்னேடு உளப்படுத்தி 'நம் திருநகர்' என்றும், நிலவுலகிலுள்ள நகரங்கட்கெல்லாம் முதலில் வைத்து எண்ணத்தக்க தலைமை வாய்ந்த நகரம் அயோத்தி என்பது புலப்பட 'நம் திரு நகரே யாதி வேறுள நகர்கட்கெல்லாம்' என்றும் குறித்தான். வருதல் - பொருந்துதல். பேர் உவமை – சொல்லக் கருதிய பொருளாகிய உவமேயத்தைக் காட்டிலும் உயர்ந்து விளங்குதலாகிய பெருமையுடைய உவமை. "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை" (உவம-3) என்பது தொல்காப்பியம். வழுத்துதல் - புகழ்ந்து போற்றுதல். இந்திரன் இருக்கை - தேவேந்திரன் அரசு வீற்றிருக்கும் அமராவதியென்னும் அழகிய நகரம். எடுத்துக்காட்டுதல் - உயர்வுடைய உவமையாக எடுத்துரைத்தல். அந்தரம் - வேறுபாடு. 'தேவரது அமராவதி நகரத்திற்கும் இவ்விலங்கைக்கும் இடையே அமைந்த தாழ்ச்சியும் உயர்ச்சியுமாகிய இவ்வேறுபாடு குறைந்த அறிவினராலும் எளிதில் அறிந்துகொள்ளத்தக்க இயல்பினதாகவும் அருங்கவிப் புலவராகிய பேரறிவினர் இதனைத் தெளிவாக அறிந்திலரே' என இலங்கையின் பேரெழிலைக் கண்டு இராமன் வியந்தனன் என்பதாம். அம்மா - வியப்பிடைச் சொல். அருங்கவிப் புலவர் அந்தரம் அறியவல்லராயின், நந்திரு நகரே யாதி வேறுள நகர்கட்கெல்லாம் இந்திரனிருக்கையினை உவமை கூறுதலை விடுத்து இவ்விலங்கை நகரத்தினையே உவமையாக எடுத்துக் காட்டுவர் என்பது குறிப்பு. (31)

6970. பழுதற விளங்குஞ் செம்பொற்
றலத்திடைப் பரிதி நாண
முழுதெரி மணியிற் செய்து
முடிந்தன முனைவராலும்
எழுதருந் தகைய வாய
மாளிகை யிழையச் செய்த
தொழிறெரி கிலவாற் றங்கட்
சுடர்மணிக் கற்றை சுற்ற.

பழுது அற விளங்கும் செம்பொன் தலத்திடைப் பரிதி நாண
முழுது எரி மணியின் செய்து முடிந்தன, முனைவராலும்
எழுத அருந் தகைய ஆய மாளிகை, இழையச் செய்த
தொழில் தெரிகிலவால், தங்கண் சுடர்மணிக் கற்றை சுற்ற.

பொ :—குற்றமற விளங்கும் செம்பொன்னலாகிய தலத்தின் கண்ணே கதிரவனும் (ஒளிமழுங்கி) நாணுமாறு ஒளிவீசும் மணிகளைக் கொண்டு முழுவதும் செய்து முடிக்கப் பெற்றனவும், (தத்தம் தொழிற்றிறத்தில்) தேர்ந்து முதிர்ந்த அறிவினையுடையவர்களாலும் எழுதிக்காட்டுதற்கு அரிய அழகினையுடையனவும் ஆகிய மாளிகைகள், தம்மிடத்தே பதிக்கப் பெற்றுள்ள ஒளிமிக்க மணிகளின் கதிர்த் தொகுதிகள் சூழப் பெற்றமையால் (அவற்றின் பொருத்துவாய் தோறும்) இழையச் செய்த (சிறபத்) தொழிற்றிறன் (காண்போரால் எளிதில்) தெரிந்துகொள்ள முடியாத நிலையில் உள்ளன.

கு :—பழுது - குற்றம். செம்பொன்தலம் - செம்பொன்னால் அமைந்த தரை. பருதி – சூரியன். நாணுதல் – ஒளி மழுங்கித் தோன்றுதல். எரிமணி - சுடர்விட்டொளிரும் மணிகள். முழுது— (மாளிகையின் இடங்கள்) முழுவதும். முனைவர் - தத்தம் தொழிலில் முதிர்ந்த அறிவினையுடையார். ஈண்டு எழுதுதல் என்றது, ஒன்றை உருவாகச் செய்தமைப்பதற்கு முன் ஓவியமாக எழுதிக் காட்டுதலை. தகை - அழகு. மாளிகை, தங்கண் சுடர்மணிக் கற்றை சுற்ற, இழையச் செய்த தொழில் தெரிகில என இயையும். ஆல் - அசை. இழையச் செய்த தொழில் என்றது, சுடர்மணிகளைக் கற்களாகக் கொண்டு மாளிகை அமைத்த நிலையில் மணிக் கற்களுடன் இசைப்பிடந்தோறும் பொன் முதலியவற்றால் இயற்றப் பெற்ற பூத்தொழில்களாகிய சிற்ப நுண்வினையினை. பொன் தலத்திலே சுடர் மணிகளைக் கொண்டு அமைக்கப் பெற்ற மாளிகைகள், தம்பாலுள்ள மணிகளின் ஒளிக் கற்றைகளாற் சூழப் பெற்றமையால் புறத்தே நின்று காண்போர் அவற்றிலுள்ள சிற்பநுண் தொழிலினைத் தெளியக் காணு

ணுத நிலையில் உள்ளன என அவற்றின் ஒளிமிகுதியை வியந்துரைத்தமையின், இச் செய்யுள் குணவதிசயம் என்னும் அணியாகும். (32)

6971. விரிகின்ற கதிர வாகி
மிளிர்கின்ற மணிகள் வீசச்
சொரிகின்ற சுடரின் சும்மை
விசும்புறத் தொடருந் தோற்றம்
அரிவென்ற வெற்றி யாற்றன்
மாருதி மடுத்த தீயால்
எரிகின்ற தாயே காணிக்
கொடிநக ரிருந்த தின்னும்.

விரிகின்ற கதிர ஆகி, மிளிர்கின்ற மணிகள் வீச,
சொரிகின்ற சுடரின் சும்மை விசும்புறத் தொடரும் தோற்றம்,
அரி வென்ற வெற்றி ஆற்றல் மாருதி மடுத்த தீயால்
எரிகின்றது ஆயே காண், இக் கொடி நகர் இருந்தது இன்னும்.

பொ :—(நாற்புறமும்) விரிந்து பரவும் கிரணங்களையுடையனவாய் விளங்குகின்ற மணிகள் (மேற்புறத்திலேயும்) ஒளி வீசுதலால் (அவற்றினின்றும்) சொரியப்பெற்ற ஒளித் தொகுதி ஆகாயமளவும் பொருந்தத் தொடரும் காட்சியானது, கொடிகள் கட்டப்பெற்ற இவ் விலங்கை நகரம், பகைவரை வென்ற வெற்றியினையும் வன்மையினையும் உடைய வாயுகுமாரனாகிய அனுமன் கொளுவிய தீயினால் இன்னும் எரிந்து கொண்டிருப்பதாகவே அமைந்துளதைக் காண்பாயாக.

கு :—மாளிகைகளில் அமைந்த மணிகளின் ஒளிக் கற்றைகள் இலங்கைநகரின் நாற்புறமும் பரவி அந்நகரின் மேலேயும் தொடர்ந்து செல்லும் காட்சியானது, அநுமன் சீதையைத் தேடிவந்த அந்நாளில் இலங்கையிலிட்ட தீயினால் அந்நகரம் இன்னும் அவியாது எரிந்து கொண்டிருந்ததனைப் போலுளது என்றவாறு. சும்மை - தொகுதி. எரிகின்றது ஆயே-எரிந்து கொண்டிருப்பதாகவே. (33)

6972. மாசடப் பரந்த மான
மரகதத் தலத்து வைத்த
காசிடைச் சமைந்த மாடங்
கதிர்த்தழைக் கற்றை சுற்ற

ஆசறக் குயின்ற வெள்ளி
யகன்மனை யன்ன மாகப்
பாசடைப் பொய்கை பூத்த
பங்கய நிகர்ப்ப பாராய்.

'மாசு அடப் பரந்த மான மரகதத் தலத்து வைத்த
காசு இடைச் சமைந்த மாடம், கதிர்த் தழைக் கற்றை சுற்ற
ஆசு அறக் குயின்ற வெள்ளி அகல்மனை அன்னம் ஆக,
பாசடைப் பொய்கை பூத்த பங்கயம் நிகர்ப்ப பாராய்!

பொ:—பரவிய (இடத்தினையுடைய) பெருமை வாய்ந்த மரகத மணிப் பாறையாகிய நிலத்திலே நிறுவப்பட்ட, இடையிடையே (செம்) மணிகள் பதிக்கப்பெற்றமைந்த பொன் மாளிகைகள், மிக்குச் செறிதலையுடைய ஒளித் தொகுதிகள் எங்கும் சூழ்ந்து தோன்ற, (அவற்றிடையே) குற்றமற இயற்றப்பட்ட வெள்ளியினாலாகிய இடமகன்ற வளமனைகள் அன்னப் பறவையினை யொத்தமையப் பசிய இலைகளையுடைய பொய்கையின்கண்ணே மலர்ந்த செந்தாமரை மலர்களைப் போன்று விளங்குவனவற்றைக் காண்பாயாக.

கு:—மாசு - இருள். அடுதல் - அழித்துப் போக்குதல். மானம் - பெருமை. மரகதத் தலம் - மரகத மணியால் இயன்ற தரை. பரந்த மான மரகதத் தலத்து மாசு அட வைத்த, காசு இடைச் சமைந்த மாடம். பாசடைப் பொய்கை பூத்த பங்கயம் நிகர்ப்ப என இயைத்துப் பொருள் கொள்க. காசு - பொன்; மணி. ஈண்டு மணி என்றது செந்நிற மணியினை. ஆசு - குற்றம். பசுமை + அடை = பாசடை எனப் புணர்ந்தது. அடை - இலை. சுற்ற, ஆக என்னும் செயவென் எச்சங்கள், 'நிகர்ப்ப' என்னும் பிற கருத்தாவின் வினை கொண்டு முடிந்தன. பசுமை நிறம் வாய்ந்த மரகதமணித்தலம் பசிய இலைகள் படர்ந்த தாமரைப் பொய்கையினையும், அத்தலத்தின்கண்ணே கட்டப் பெற்ற செம்மணி யிழைத்த பொன் மாளிகைகள் அப்பொய்கையிற் பூத்துள்ள செந்தாமரை மலர்களையும், பொன் மாளிகைகளின் இடையே அமைந்த வெள்ளி மாடங்கள் அப்பொய்கையில் வாழும் அன்னப் பறவைகளையும் ஒத்துத் தோன்றின என்பதாம். (34)

6973. தீச்சிகை சிவணுஞ் சோதிச்
செம்மணி செறியச் செய்த
தூச்சுடர் மாட மீண்டித்
துறுதலாற் கருமை தோன்ற

மீச்செலு மேக மெல்லாம்
 விரிசுட ரிலங்கை வேவக்
காய்ச்சிய விரும்பு மானச்
 சேந்தொளி கஞல்வ காணாய்.

தீச்சிகை சிவணுஞ் சோதிச் செம்மணி செறியச் செய்த
தூச் சுடர் மாடம் ஈண்டித் துறுதலால், கருமை தோன்றா
மீச் செலும் மேகம் எல்லாம், விரிசுடர் இலங்கை வேவ,
காய்ச்சிய இரும்பு மானச் சேந்து ஒளி கஞல்வ, காணாய்.

பொ:—அனற் கொழுந்தினையொத்த (மிக்க) ஒளியினையுடைய செம்மணிகள் நெருங்கித் தோன்ற இழைத்துக் கட்டப்பெற்ற தூய ஒளியினையுடைய மாளிகைகள் (பலவாக) நெருங்கி நிறைந்திருத்தலால், கரு நிறத்துடன் தோன்றி விசும்பின்மேற் செல்லும் மேகங்கள் யாவும், விரிந்து பரவும் ஒளியினையுடைய இலங்கை நகரம் (அநுமனால் முன்னர்த் தீக்கொளுவப்பட்டு) எரிந்து வேகும் நிலையில் (அப்பெருந் தீயிற்) காய்ச்சப்பட்ட இரும்பினையொத்துச் செந்நிறம் பெற்று ஒளியுடன் விளங்குவனவற்றைக் காண்பாயாக.

கு:—தீச் சிகை - அனற் கொழுந்து. சிவணுதல் - ஒத்தல். ஈண்டித் துறுதல் - நெருங்கி நிறைதல். தோன்றா - தோன்றி; செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். மீ - மேல். மான - ஒப்ப. கஞலுதல் - விளங்குதல். இலங்கை நகரத்திற் செம்மணிகள் இழைக்கப்பெற்று விளங்கும் மாளிகைகளின் செவ்வொளிப் பிழம்பு விசும்பளவும் படர்ந்து மேற்செல்லுதலால் விண்ணிடத்தே செல்லும் கரிய மேகங்கள் தீயிற் காய்ச்சப்பட்ட இரும்பினைப் போன்று செம்மை நிறம் பெற்று விளங்கின என்பதாம். (35)

6974. விற்படி திரடோள் வீர
 நோக்குதி வெங்கண் யானை
அற்படி நிறத்த வேனு
 மாடகத் தலத்தை யாழக்
கற்படி வயிரத் திண்கா
 னகங்களிற் கல்லிக் கையால்
பொற்பொடி மெய்யின் வீசிப்
 பொன்மலை யென்னப் போவ.

வில் படி திரள் தோள் வீர ! நோக்குதி—வெங் கண் யானை
அல் படி நிறத்த வேனும், ஆடகத் தலத்தை ஆழ,
கல் படி வயிரத் திண் கால் நகங்களின் கல்லி, கையால்
பொன் பொடி மெய்யின் வீசி, பொன் மலை என்னப் போவ.

பொ :—வில் பொருந்தித் தங்கிய திரண்ட தோள்களையுடைய வீரனாகிய இலக்குவனே! சினம் மிக்க கண்களையுடைய யானைகள் இருள் செறிந்தாற்போலும் கருமை நிறமுடையனவாயினும் பொன்னால் அமைந்த நிலத்தினை வன்மை வாய்ந்த வயிரத்தைப் போன்ற திண்மை பொருந்திய தம் காலின் நகங்களால் ஆழமாகப் பறித்து (அதனாற் கிளர்ந்தெழுந்த) பொன் புழுதியினைத் துதிக்கையால் உடம்பின் மேல் வீசிக்கொண்டு பொன்மலை (நடந்தாற்) போன்று நடந்து செல்வனவற்றைக் கூர்ந்து நோக்குவாயாக.

கு :—'வீர! வெங்கண் யானை, ஆடகத்தலத்தைக் கல்படி வயிரத் திண்கால் நகங்களின் ஆழக் கல்லி, கையால் பொன்பொடி மெய்யின் வீசிப் பொன்மலை என்னப் போவ; நோக்குதி' என இயையும். அல் - இருள். ஆடகத்தலம் - பொன்னாலாகிய தரை. ஆடகம் - பொன். கல் என்றது ஈண்டுக் கல்லின் வல்லென்ற தன்மையாகிய வன்மையைச் சுட்டி நின்றது. யானை என்பது, பால்பகா வஃறிணைப் பெயராதலின் போவ எனப் பன்மை வினைகொண்டு முடிந்தது. பொன் படிந்த தரையில் நடக்கும் கருநிற யானைகள், தம் கால்களின் வலிய நகங்களால் அத் தரையினை ஆழக் கல்லி அதனாலுண்டாகிய பொன் புழுதியினைத் துதிக்கையால் வாரித் தம்முடம்பின்மேல் வீசிக்கொண்டமையால் பொன்மலைபோலும் தோற்றப் பொலிவுடையவாயின என்றவாறு. கல்லுதல் - தரையினைக் கீழே பறித்துத் தோண்டுதல். யானைகள் நிலத்தின் புழுதியைத் தம் மெய்யின்மேல் வீசிக்கொள்ளும் இயல்பின வென்பதனை 'உண்ணிற நறும் பொடியை வீசி யொரு பாகம், வெண்ணிற நறும்பொடி புனைந்த மதவேழம்" (பாலகாண்டம் - மிதிலைக். 19) என இவ்வாசிரியர் முன்னரும் கூறியுள்ளமை காண்க. (36)

6975. பூசல்விற் குமர நோக்காய்
புகரற விளங்கும் பொற்பிற்
காசுடைக் கதிரின் கற்றைக்
கால்களாற் கதுவு கின்ற

வீசுபொற் கொடிக ளெல்லாம்
விசும்பினின் விரிந்த மேக
மாசறத் துடைத்தவ் வானம்
விளக்குவ போல்வ மாதோ.

'பூசல் விற்குமர! நோக்காய்
புகர் அற விளங்கும் பொற்பின்
காசுடைக் கதிரின் கற்றைக்
கால்களாற் கதுவு கின்ற
வீசு பொன் கொடிகள் எல்லாம்,
விசும்பினின் விரிந்த மேக
மாசு அறத் துடைத்து, அவ் வானம்
விளக்குவ போல்வ மாதோ!

பொ :—போர்த்தொழிற்குரிய வில்லினையுடைய இளையோனே! குற்றமற விளங்கும் அழகினையும் மணிகள் இழைக்கப்பெற் றுடைமையாலுளதாகிய ஒளித் தொகுதியினையும் உடைய காம்புகளாற் (கவ்விப்) பற்றப்பட்ட (காற்றினால் அலைக்கப்பட்டு) வீசுகின்ற பொன் (பட்டி)னாலாகிய கொடிகளெல்லாம், விண்ணிடத்தே பரவியுள்ள மேகங்களாகிய மாசு நீங்குமாறு துடைத்து அவ்வானப் பரப்பினை விளக்கித் தூய்மை செய்வனபோலுள்ளன. (அவற்றை) நோக்குவாயாக.

கு :—பூசல் - போர். புகர் – குற்றம். காசு - மணி. பொற்பினையும் கதிரின் கற்றையினையும் உடைய கால்கள் என விரித்துரைக்க. கால்கள் - (கொடியின்) காம்புகள். கால்களாற் கதுவுகின்ற பொற் கொடிகள் எனவும், வீசு பொற் கொடிகள் எனவும் தனித்தனி இயையும். கதுவுதல் – (கவ்விப்) பற்றுதல். வீசுதல் - காற்றினால் அசைதல். பொற்கொடி - பொன்மயமான கொடியாடை. விளக்குதல் - மாசு போகத் துடைத்துத் தூய்மை செய்தல். மாது, ஓ என்பன அசை. இலங்கை நகரத்திலுள்ள மாளிகைகளின்மேற் கட்டப்பெற்றுள்ள மணிகள் பதித்த காம்புடன் கூடிய பொற்கொடி யாடைகள் விசும்பிலே பரவிய மேகமாகிய மாசு போக வானத்தைத் துடைத்துத் தூய்மை செய்வனபோற் காணப்பட்டன என்பதாம். (37)

6976. நூல்படத் தொடர்ந்த பைம்பொற்
சித்திர நுனித்த பத்திக்
கோல்படு மனைக ளாய
குலமணி யெவையுங் கூட்டிச்
சால்படுத் தரக்கன் மாடத்
தனிமணி நடுவட் சார்த்தி
மால்கடற் கிறைவன் பூண்ட
மாலைபோன் றுளதிம் மூதூர்.

நூல் படத் தொடர்ந்த பைம் பொன்
சித்திரம் நுனித்த பத்திக்
கோல் படு மனைகள் ஆய
குலமணி எவையும் கூட்டி,
சால் படுத்து அரக்கன் மாடத்
தனி மணி நடுவண் சார்த்தி,
மால் கடற்கு இறைவன் பூண்ட
மாலை போன்று உளது—இம் மூதூர்.

பொ :—தொன்மை வாய்ந்த பேரூராகிய இவ்விலங்கையானது, (சிற்பிகளால் கோணுதலின்றி) நூலிட்டு எல்லை படத் தொடர்ந்து அமைக்கப்பட்டனவும், பசும் பொன்னாலாகிய ஓவியங்கள் நுண்ணறிவின் உணர்ந்து அமைக்கப்பட்டனவும், ஆகிய வரிசையினையுடைய தூரியக்கோலின் (ஓவியச் செய்கை) நலம் வாய்ந்த மாளிகைகள் என்னும் சிறந்த மணிகள் எல்லாவற்றையும் சேர்த்து (ஒரு கோவையாகப்) பொருந்தும்படி வைத்து அரக்கர் கோனாகிய இராவணனது அரண்மனையாகிய நாயக மணியினை நடுவிலே சார வைத்துப் பெரிய கடலரசன் (தான் அழகுபெற) அணிந்துகொண்ட அரதன மாலை போன்று அமைந்துளது.

கு :—நுனித்தல் - கூர்ந்துணர்தல். பத்தி - வரிசை. கோல் - ஓவியம் வரைதற்குக் கருவியாகிய தூரியக்கோல்; ஈண்டு ஆகுபெயராய் அதனால் இயன்ற ஓவியச் செய்கையினைக் குறித்தது. சால் படுத்தல் - பொருந்தும்படி வைத்தல். சாலுதல் - பொருந்துதல். 'இந்திரனே சாலுங்கரி' (திருக்குறள் - 25) என்புழி இச்சொல் இப்பொருளதாதலறிக. இம்மூதூர், மால்கடற்கு இறைவன் பூண்ட மாலை போன்று உளது என முடியும். மால்கடற்கு இறைவன் - கடலரசன். மால்கடற்கு இறைவன், கூட்டி, சால்படுத்து, சார்த்தி, பூண்ட மாலை என இயைக்க. கடலரசன் அரக்கர்களுக்குரிய சிறந்த மாளிகைகளாகிய உயர்ந்த மணிகளையெல்லாம் ஒரு கோவையாகு

மாறு நிரல்படத் தொடுத்து அதன் நடுவே இராவணனது அரண்மனையினை நாயக மணியாக வைத்துத் தான் அணிந்துகொண்ட அரதனமாலை போன்று இலங்கை நகரம் விளங்கியதென்பதாம். (38)

6977. நன்னெறி யறிஞ நோக்காய்
நளிநெடுந் தெருவி னுப்பண்
பன்மணி மாடப் பத்தி
நிழல்படப் படர்வ பண்பால்
தந்நிறந் தெரிகி லாத
வொருநிறஞ் சார்கி லாத
இன்னதோர் குலத்த வென்று
புலப்படா புரவி யெல்லாம்.

நல் நெறி அறிஞ! நோக்காய்—
நளி நெடுந் தெருவின் நாப்பண்
பல் மணி மாடப் பத்தி
நிழல் படப் படர்வ, பண்பால்
தம் நிறம் தெரிகிலாத,
ஒரு நிறம் சார்கிலாத,
இன்னது ஓர் குலத்த என்று
புலப்படா, புரவி எல்லாம்.

பொ :—நல்ல அறநெறியினை யுணர்ந்தவனே! பெருமையுடைய தாய் நீண்டுள்ள தெருவின் நடுவிலே, பல நிற மணிகள் இழைக்கப் பெற்று (இரு புறத்தும்) அமைந்த மாளிகை வரிசையின் ஒளித் தொகுதி (தம் உடம்பிற்) பொருந்தும்படி செல்வனவாகிய குதிரைகள் யாவும் (தம்மேற் படிந்த ஒளியின்) தன்மையால் தமக்கு இயல்பாக வுரிய நிறம் இன்னவென்று தெரியப்படாதனவும் (இஃது இன்ன நிறத்தது என்று குறித்துச் சொல்லுமாறு தமக்கென்று) ஒரு நிறத்தைப் பொருந்தப் பெறுதனவும் ஆகி (இவை) இன்ன சாதியைச் சேர்ந்தவையென்று தெரிந்துகொள்ளுதற்கு இயலாதனவும் ஆயின. (இத்தன்மையினை நீ கூர்ந்து) நோக்குவாயாக.

கு :—இலக்குவன் புலம் வென்ற புன்மையில் காட்சியவனுகி நல்லொழுக்க நெறியில் வழுவாதொழுகும் நல்லறிஞன் என்பது தோன்ற, 'நன்னெறி யறிஞ' என அழைத்தான் இராமன். நளி - பெருமை. நாப்பண் - நடு. நிழல் - ஒளி. படர்தல் - செல்லுதல். இலங்கை நகரில் பல நிற மணிகளால் அமைக்கப்பட்ட மாளிகை

வரிசையினை இருபுறத்தும் பெற்றுள்ள நீண்ட பெரிய வீதியின் நடுவே செல்லும் பல நிறத்தனவாய பல சாதிக் குதிரைகளும் அவ் வீதியின் இருமருங்கும் அமைந்த மாடமாளிகைகளிற் பதிக்கப்பட்டுள்ள பலநிற மணிகளின் ஒளித் தொகுதிகள் ஒருசேரத் தம்மேற் படுதலால் தத்தமக்குரிய இயல்பாகிய நிறம் மாறி, இக்குதிரைகள் இன்ன நிறத்தன எனவும் இன்ன சாதியின எனவும் யாவராலும் தெளிய அறிந்து கொள்ளுதற் கியலாதனவாயின என்பதாம். (39)

6978. வீரநீ பாராய் மெல்லென்
பளிங்கினல் விளங்கு கின்ற
மாரனு மருளச் செய்த
மாளிகை மற்ருேர் சோதி
சேர்தலுந் தெரிவ வன்றேற்
றெரிகில தெரிந்த காட்சி
நீரினு லியன்ற வென்ன
நிழலெழு கின்ற நீர.

'வீர! நீ பாராய்—மெல்லென் பளிங்கினல் விளங்குகின்ற;
மாரனும் மருளச் செய்த மாளிகை, மற்ருேர் சோதி
சேர்தலும் தெரிவ; அன்றேல், தெரிகில; தெரிந்த காட்சி
நீரினல் இயன்ற என்ன நிழல் எழுகின்ற நீர.

பொ:—வீரனே! மெல்லிய பளிங்குக் கற்களினல் விளங்குகின்றனவும் மன்மதனும் மருட்சியடையும் வண்ணம் செய்யப்பட்டனவும் ஆகிய மாளிகைகள், வேருேர் பொருளின் ஒளி பட்ட அளவிலே தம் உருவம் தெரிவன; அங்ஙனம் அன்றேல் (தம் உருவம்) தெரியவொண்ணுதன; (அத்தகைய பளிங்கு மாளிகைகள்) விளங்குந் தோற்றங்கள் நீரினல் அமைந்தன என்னும்படி (தம்பாலுள்ள பொருள்களின்) சாயை (புறத்தே புலப்பட்டுத்) தோன்றும் தன்மையன. (அதனைப்) பார்ப்பாயாக.

கு:—தமக்கென்று ஒரு நிறமில்லாத பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்ட பளிங்கு மாளிகைகள், வேருேர் பொருளின் ஒளி தம்மீது சார்ந்தாலன்றித் தம்முருவம் தெரியாதனவாய்த் தம்மகத்தேயுள்ள பொருள்களின் வடிவும் வண்ணமும் ஆகிய நிழல் புறத்தே நின்று காண்போர்க்கு நன்கு புலப்படும்படி விளங்கும் தோற்றத்தால் அம் மாளிகைகள் தனக்கென நிறமில்லாததாய்த் தம்பாலுள்ள பொருள்களின் நிழல் தோன்றுதற்கு இடந்தருவதாயமைந்த நீரினல் இயற்

றப்பட்டனவோ என்று காண்போர் கருதும்வண்ணம் அமைந்துள்ளன என்பதாம். அழகிற் சிறந்தாரைத் தான் மயங்காது நின்று கண்டு அவர்களைக் கண்ட பிறரையெல்லாம் மயக்கமுடையவராக மாற்றும் ஆற்றல் வாய்ந்த உருவிலியாகிய மன்மதனும் இத்தகைய பளிங்கு மாளிகைகளை எதிர்நின்று காண்பானாயின் இவற்றின் வாயில் முதலியன இன்னவென்றுணராது மருளும் நிலையினனாகும் படி இவை அமைக்கப்பெற்றுள்ளன என்பார், 'மாரனும் மருளச் செய்த மாளிகை' என்றார். மாரன் - மன்மதன். நீர - தன்மையையுடையன; நீர்மை - தன்மை. (40)

6979. கோனிறக் குனிவிற் செங்கைக்
குமரனே குளிர்வெண் டிங்கட்
கானிறக் கதிரின் கற்றை
தெற்றிய வனைய காட்சி
வானிறத் தரளப் பந்தர்
மரகத நடுவண் வைத்த
பானிறப் பரவை வைகும்
பரமனை நிகர்ப்ப பாராய்.

'கோல்நிறக் குனிவில் செங்கைக்
குமரனே! குளிர்வெண் திங்கள்
கால்நிறக் கதிரின் கற்றை
தெற்றிய அனைய காட்சி
வால்நிறத் தரளப் பந்தர்,
மரகதம் நடுவண் வைத்த,
பால்நிறப் பரவை வைகும்
பரமனை நிகர்ப்ப, பாராய்.

பொ:—ஒளியுடைய அம்பினையும் (நாணேற்றி) வளைத்த வில்லினையும் (தாங்கிய) சிவந்த கையினையுடைய இளையோனே! குளிர்ச்சியும் வெண்மையும் வாய்ந்த சந்திரனுடைய வீசுகின்ற ஒளித் தொகுதிகள் இடையிட்டுப் பின்னப்பட்டாலொத்த தோற்றமுடைய வெண்ணிறம் வாய்ந்த முத்துப் பந்தரின் நடுவிலே வைக்கப்பெற்ற மரகதமணிகள், வெள்ளிய பாற்கடலின் நடுவே (அறிதுயில்) அமர்ந்த பரம்பொருளாகிய திருமாலையொத்து விளங்குவனவற்றைக் காண்பாயாக.

கு :—இலக்குவன் பகைவர் வாழும் இலங்கையின் எழில் நலத்தைக் காணும் நிலையிலும் அவ்வழகிய காட்சியில் தன் மனத்தை முழுவதும் ஈடுபடுத்திவிடாது பகைவரை வேரறக்களையும் நிலையில் தன்னுள்ளத்திற் கொண்ட சினந் தணியாதவனாய்த் தன் கையிலுள்ள வில்லை வளைத்து நாணேற்றி அம்பும் வில்லுமாய் நிற்கின்றான் என்பது புலப்பட, 'கோல்நிறக் குனிவிற் செங்கைக் குமரனே' என விளித்தார். 'விற்படி திரடோள்வீர' (36) எனவும், 'பூசல்விற்குமர' (37) எனவும் முன்வந்த விளிகளும், 'கொற்றவான் சிலைக்கைவீர' எனவும், 'வாகைவெஞ் சிலைக்கைவீர' எனவும் 'வீரக் கார்முகக்களிறே' எனவும் பின்வரும் விளிகளும் இக் குறிப்பில் அமைந்தனவேயாகும். கோல் - அம்பு. நிறம் - ஒளி. குனித்தல் - வளைத்தல். காலுதல் - சொரிதல்; ஒளி வீசுதல். தெற்றுதல் - இடையிட்டுப் பின்னுதல். வால் - வெண்மை. தரளம் - முத்து. பரவை - கடல். பால்நிறப்பரவை என்றது பாற்கடலை. வெண்ணிறம் வாய்ந்த முத்துப்பந்தர் பாற்கடலையும், அப்பந்தரின் நடுவே பசிய நிறமுடையதாய் ஒளிரும் மரகதமணி பாற்கடல் நடுவே துயிலமர்ந்த பச்சை மாமலைபோல் மேனியனாகிய திருமாலையும் ஒத்துத் தோன்றின என்க. (41)

6980. கோளவா வரியே றன்ன
குரிசிலே கொள்ள நோக்காய்
நாளவா மின்றோய் மாடத்
தும்பரோர் நாகர் பாவை
காளவா ருறையின் வாங்குங்
கண்ணடி விசும்பிற் கவ்வி
வாளரா விழுங்கிக் காலு
மதியினை நிகர்த்த வண்ணம்.

'கோள் அவாவு அரி ஏறு அன்ன
குரிசிலே! கொள்ள நோக்காய்—
நாள் அவாம் மின்தோய் மாடத்து
உம்பர், ஓர் நாகர் பாவை,
காள வார் உறையின் வாங்கும்
கண்ணடி, விசும்பில் கவ்வி
வாள் அரா விழுங்கிக் காலும்
மதியினை நிகர்த்த வண்ணம்.

பொ :—(கொன்று உயிர்) கொள்ளுதலை விரும்பும் ஆண் சிங்கத்தினையொத்த ஆடவரிற் சிறந்தோனே! விண்மீன்கள் விரும்பி (ப் படியும்) ஒளிபொருந்திய மாளிகையின் மேல்நிலையில் நாகர்குல நங்கையொருத்தி (தன் முகம் பார்த்தற் பொருட்டுக்) கருநிறமுடைய நீண்ட உறையிலிருந்து வெளியே எடுத்த கண்ணுடியானது, விண்ணிடத்தே கொடிய பாம்பு (தன் வாயினுற்) கவ்வி விழுங்கி மீளவும் உமிழ்ந்து வெளிப்படுத்திய சந்திரனையொத்து விளங்குந் தன்மையை மனங்கொள்ளக் (கூர்ந்து) காண்பாயாக.

கு :—கோள் - (கொன்று உயிர்) கொள்ளுதல். அரி - சிங்கம். ஏறு - ஆண். நாள் - விண்மீன். உம்பர் - மேல். காளம் - கருமை. வார் - நீட்சி. உறை என்றது, தூசிபடியாதபடி ஒளியுடைய பொருள்களைப் பொதிந்து வைத்தற்பொருட்டுத் துணி, தோல் முதலியவற்ருல் தைக்கப்பட்ட பையினை. வாங்குதல் - உள்ளிருந்து வெளியே எடுத்தல். கண்ணடி என்றது முகம் பார்த்தற்கென அமைத்த வட்ட வடிவினதாகிய கண்ணுடியினை. விசும்பில் வாளரா கவ்வி விழுங்கிக் காலும் மதி என்க. கவ்வுதல் - பற்றுதல். விழுங்குதல் - உட்கொள்ளுதல். காலுதல் - உமிழ்ந்து வெளிப்படுத்தல். வாள் அரா - கொடிய பாம்பு; என்றது, சந்திரனைப் பற்றுவதாகிய இராகு என்னும் பாம்பினை. காளவார் உறைக்குக் கரும் பாம்பாகிய இராகுவும், அவ்வுறையிலிருந்து வெளிப்பட்ட கண்ணுடிக்கு அப்பாம்பினுல் உமிழப்பட்டு வெளிப்பட்ட சந்திரனும் உவமை. கண்ணடி மதியினை நிகர்த்த வண்ணம் நோக்காய் என இயையும். கொள்ள நோக்குதலாவது, புறத்தே கண்ட காட்சி மனத்திற் பதியும் வண்ணம் கூர்ந்து பார்த்தல். (42)

6981. கொற்றவான் சிலைக்கை வீர
கொடிமிடை மாடக் குன்றை
உற்றவான் கழுத்த வான
வொட்டக மவற்ற தும்பர்ச்
செற்றிய மணிக ளீன்ற
சுடரினைச் செக்கா ரத்தின்
கற்றையந் தளிர்க ளென்னக்
கவ்விய நிமிர்வ காணுய்.

'கொற்ற வான் சிலைக் கைவீர !
கொடி மிடை மாடக் குன்றை
உற்ற வான் கழுத்தவான
ஒட்டகம், அவற்றது உம்பர்ச்
செற்றிய மணிகள் ஈன்ற
சுடரினைச் செக்கா ரத்தின்
கற்றை அம் தளிர்கள் என்னக்
கவ்விய நிமிர்வ, காணாய் !

பொ :—வெற்றி பொருந்திய பெரிய வில்லையேந்திய கையினை யுடைய வீரனே! கொடிகள் நெருங்க(க் கட்ட)ப் பெற்ற குன்றம் போலும் மாடங்களை (எட்டிப்) பொருந்துகின்ற நீண்ட கழுத்தினை யுடையவாகிய ஒட்டகங்கள், அம்மாடங்களின்மேற் பதிக்கப்பெற்ற செம்மணிகள் வீசிய கதிர்த்தொகுதியினைத் தேமாமரத்தின் கொத்துக் களாக அமைந்த அழகிய தளிர்களாம் என எண்ணி (அவற்றைப் பற்றிக்) கவ்வும்பொருட்டுத் தலை நிமிர்வனவற்றைக் காண்பாயாக.

கு :—குன்றம் போலும் உயர்ச்சியுடைய மாடங்களின்மேற் பதித்துள்ள செம்மணிகளினின்றும் தோன்றிய செவ்வொளிக் கற்றை யினைத் தேமா மரத்தில் தளிர்த்த தளிர்க் கொத்துக்களென்று எண்ணி மயங்கிய ஒட்டகங்கள் அவற்றைப் பற்றிக் கவ்வுவனவாய்த் தம் தம் தலையை நிமிர்த்தன என்றது மயக்கவணி. செக்காரம் - தேமாமரம். கவ்விய - கவ்வ. செய்யிய என்னும் வாய்பாட்டு வினை யெச்சம். (43)

6982. வாகைவெஞ் சிலைக்கை வீர
மலர்க்குழல் புலர்த்த மாலைத்
தோகைய ரிட்ட தூமத்
தகிற்புகை முழுதுஞ் சுற்ற
வேகவெங் களிற்றின் வன்றோன்
மெய்யுறப் போர்த்த தையல்
பாகனிற் பொலிந்து தோன்றும்
பவளமா ளிகையைப் பாராய்.

'வாகை வெஞ் சிலைக்கை வீர !
மலர்க்குழல் புலர்த்த, மாலைத்
தோகையர் இட்ட தூமத்து
அகிற் புகை முழுதுஞ் சுற்ற,

வேக வெங் களிற்றின் வன்தோல்
மெய்யுறப் போர்த்த தையல்—
பாகனின் பொலிந்து தோன்றும்
பவள மாளிகையைப் பாராய்!

பொ :—வெற்றி மாலையையணிந்த கொடிய வில்லைக் கையிற் பற்றிய வீரனே! மாலையையணிந்த மயில்போலும் சாயலையுடைய ராய மகளிர் மலரணிந்த தமது கூந்தலின் ஈரம் புலர்த்துதல் வேண்டி நறுமணப் புகையாக இட்ட அகிலின் புகையானது முழுவதும் சூழ்ந்து கொண்டமையால், வெகுளிமிக்க கொடுமை வாய்ந்த யானையின் வலிய தோலினை (உரித்துத் தன்) திருமேனியிற் பொருந்தும்படி போர்த்துக்கொண்ட மாதொரு பாகனாகிய சிவபெருமானைப் போன்று பொலிவுடன் விளங்கும் பவள மாளிகையைக் காண்பாயாக.

கு :—தோகையர் - மயில் போலும் சாயலினையுடையராய இள மகளிர். தோகை - மயில். பவளமணியினால் இயற்றப்பெற்றுள்ள செந்நிற மாளிகை, செம்மேனியம்மானாகிய சிவபெருமானையும், தம் கூந்தலின் ஈரம் புலர்த்தல் வேண்டி மகளிரால் புகைக்கப்பட்டு அம் மாளிகையைச் சூழ்ந்து தோன்றும் புகைப்படலம் அம் முதல்வனது திருமேனியிற் போர்க்கப்பெற்று விளங்கும் கரிய யானைத் தோலினையும் ஒத்துத் தோன்றின என்பதாம். தையல் பாகன் என்பது, உமாதேவியாரை ஒரு பாகத்திற்கொண்டருளிய சிவபெருமானுக் குரியதாய் வழங்கும் திருப்பெயராகும். தையல் - பெண். (44)

6983. காவலன் பயந்த வீரக்
கார்முகக் களிறே கற்ற
தேவர்தந் தச்ச னீலக்
காசினாற் றிருந்தச் செய்த
ஈவது தெரியா வுள்ளத்
திராக்கத ரீட்டி வைத்த
பாவபண் டார மன்ன
செய்குன்றம் பலவும் பாராய்.

காவலன் பயந்த வீரக் கார்முகக் களிறே! கற்ற
தேவர்தம் தச்சன் நீலக் காசினால் திருந்தச் செய்த,
ஈவது தெரியா உள்ளத்து இராக்கதர் ஈட்டி வைத்த
பாவ பண்டாரம் அன்ன செய் குன்றம் பலவும் பாராய்!

பொ :—(தசரதனாகிய) வேந்தன் பெற்ற வீரம்மிக்க வில்லேந்திய ஆண் யானைபோல்பவனே! (சிற்ப நூலினைக்) கற்றுணர்ந்த தெய்வத் தச்சனாகிய விசுவகன்மாவினால் நீலமணிகளைக் கொண்டு திருத்தமுறச் செய்யப்பெற்றனவும், (வறியார்க்கு) ஈதலாகிய அறத்தினை அறியாத (வலிய) நெஞ்சத்தினராகிய அரக்கர்கள் (நெடுங்காலமாகச்) சேமித்து வைத்துள்ள பாவங்களாகிய பொருட் குவியல்களை ஒத்தனவும் ஆகிய செய்குன்றுகள் பலவற்றையும் (கூர்ந்து) காண்பாயாக.

கு :—காவலன் - தசரதன். கார்முகம் - வில். வீரமிக்கதாய் விற்படையினைக் கையிற்கொண்டு பொருவதொரு யானையுளதாயின் அத்தகைய யானையை ஒத்து விளங்குபவன் இலக்குவன் என்பது புலப்படக் 'கார்முகக் களிறு' எனச் சிறப்பித்தார். தேவர்தம் தச்சன் - விசுவகன்மா. நீலக்காசு - நீலமணி. ஈவது - ஈதலாகிய அறம். இரக்கமென்றொரு பொருள் இலாத நெஞ்சினர் இவ் அரக்கர் என்பார், 'ஈவது தெரியாவுள்ளத்து இராக்கதர்' என்றார். பாவபண்டாரம் - பாவங்களாகிய சரக்குப் பொதிகள். செய்குன்றம் - கட்டுமலை. இலங்கை நகரில் தெய்வத் தச்சனால் நீலமணிகளைக்கொண்டு இயற்றப்பட்டுள்ள செய்குன்றுகள், இரக்கமற்ற நெஞ்சினராகிய அரக்கர்கள் நெடுங்காலமாகச் சேமித்து வைத்துள்ள பாவப் பொதிகளை யொத்துத் தோன்றுகின்றன என்றவாறு. தீவினைகளாகிய பாவத்தை நீலநிறத்தினதாகக் கூறுவது கவிஞர் மரபு. 'அருநீல பாவம் அகல' (பெரிய திருமொழி. 3-2-9) என வரும் அருளிச் செயல் இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும். செய்த, அன்ன குன்றம் என இயையும். (45)

6984. பிணைமதர்த் தனைய நோக்கம்
பாழ்படப் பிடியுண் டன்பிற்
றுணைவரைப் பிரிந்து போந்து
மருங்கெனத் துவளு முள்ளப்
பணமயிர்ப் பெய்து மல்குற்
பாவையர் பருவ நோக்குங்
கணமயிற் குழுவி னம்மைக்
காண்கின்றார் தம்மைக் காணாய்.

'பிணை மதர்த்தனைய நோக்கம்
பாழ்பட, பிடியுண்டு, அன்பின்
துணைவரைப் பிரிந்து போந்து,
மருங்கு எனத் துவளும் உள்ளப்

பணம் அயிர்ப்பு எய்தும் அல்குல்
பாவையர், பருவம் நோக்கும்
கண மயில் குழுவின், நம்மைக்
காண்கின்றார் தம்மைக் காணாய் !

பொ :—பெண் மான் மருண்டு நோக்கினாற்போலும் நோக்கம் பொலிவுகெட (அரக்கராற்) சிறைபிடிக்கப்பட்டு(த் தம்) அன்புக்குரிய நாயகரைப் பிரிந்து வந்து (ஒல்கித் தளரும் தமது) இடையினைப் போன்று தளர்ந்து வருந்தும் மனத்தினையும் பாம்பின் படம் என்று ஐயுறத்தக்க அல்குலினையும் உடைய (தேவ) மாதர்கள், (தமது வாட்டந் தீர்தற்குக் கார்காலமாகிய) பருவத்தினை (விருப்புடன்) எதிர்பார்க்கும் திரண்ட மயில்களின் கூட்டம்போன்று (விருப்புடன் நின்று) நம்மைக் காண்கின்றவர்களை (நீ) காண்பாயாக.

கு :—பிணை - பெண்மான். மதர்த்தல் - மருண்டு நோக்குதல்· 'மடமான் மதர்நோக்கும்' (சீவக - 2456) என்றார் திருத்தக்க தேவரும். மருங்கு - இடை. பணம் - பாம்பின் படம். அயிர்ப் பெய்தல் - ஐயுறுதல் ; ஒப்பிட்டு நோக்குதல். கணம் - கூட்டம். அரக்கர்களால் தமக்குண்டாகிய இன்னல்களாகிய வெம்மை தீரத் தமக்கு அருள்மழை பொழிய வந்த கருணைமுகில்களாகிய இராம இலக்குவர்களை ஆர்வமுடன் நோக்கும் தேவமாதர் குழுவுக்கு, வேனில் வெம்மை நீங்க வந்த கார்காலத்தினைக் கண்டு மகிழும் மயில்களின் கூட்டம் உவமை. கார்ப் பருவத்தின் வரவு, மயில்களுக்கு நேர்ந்த வெயில் வெம்மையினை நீக்கி உடம்புக்கும் உள்ளத்திற்கும் குளிர்ச்சி தந்து மகிழ்விப்பதுபோன்று, இராம இலக்குவர்களது வரவு அரக்கர்களால் தேவ மாதர்களுக்கு நேர்ந்த இன்னல்களாகிய வெம் மையைப் போக்கி அவர்கள் தத்தம் கணவரொடு சேர்ந்து மகிழும்படி அவர்கட்கு இன்பப் பெருக்கினை நல்குவதாம் என்பது இவ்வுவமை யாற் புலனும். (46)

6985. நாழ்மலர்த் தெரியல் வீர
நம்படை காண வானத்
தியாழ்மொழித் தெரிவை மாரு
மைந்தரு மேறு கின்றார்
வாழ்வினிச் சமைந்த தன்றே
யென்றுமா நகரை யெல்லாம்
பாழ்படுத் திரியல் போவா
ரொக்கின்ற பரிசு பாராய்.

'நான் மலர்த் தெரியல் வீர!
நம் படை காண, வானத்து
யாழ் மொழித் தெரிவை மாரும்
மைந்தரும் ஏறுகின்றார்,
'வாழ்வு இனிச் சமைந்தது அன்றே'
என்று மா நகரை எல்லாம்
பாழ் படுத்து இரியல் போவார்
ஒக்கின்ற பரிசு பாராய்!

பொ :—அன்றலர்ந்த மலர்களையுடைய மாலையையணிந்த வீரனே! நம்முடைய சேனையைக் காணவேண்டி யாழின் இசை போலும் இனிய மொழியினையுடைய தேவ மாதர்களும் தேவ மைந்தர்களும் வானத்தில் ஏறுகின்றவர்கள், ('அல்லற்பட்டு வருந்திய நமக்கு) இனி நல்வாழ்வு அமைந்து விட்டதல்லவா' என மகிழ்ந்து (தம்மை வருத்திய அரக்கர்க்குரிய) பெரிய இலங்கை நகரையெல்லாம் வெறுமை யுடையதாக்கி ஓடிப்போகின்றவர்களை யொத்து விளங்குந் தன்மையைக் காண்பாயாக.

